அட்வொகேட்

சி. வி. நாயுடுவின்

1959-ம் வருடத்திய மதராஸ் பஞ்சாயத்துகள் சட்ட திட்டங்கள்

மதராஸ் பஞ்சாயத்துகளுடைய

புதியதான கடமைகள்

உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவதும்

ஜனத்தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்துவதும்

காமுல்படிக்கு

பிரஜாக்ஷேமம்

சௌக்கியம்

ஆரோக்கியம்

வித்தியாபிவிருத்தி

முதலியன

ராஜாம்பாதேவி அண்டு கம்பெனி

சி. வி. நாயுடு

அட்வொகேட்

திருவள்ளூர். மதராஸ் அருகாமை.

ஆசிரியர் இந்த புத்தகத்தை தனக்கு உதவியாயிருந்தவரும், மனைவியுமான
ஸ்ரீமதி ராஜாம்பாதேவியாருக்கு அர்பணம் செய்துயிருக்கிறார்.

8-4-66 ஏப்ரல் தேதி
நன்கொண்டைதுப வாகயம்

ஊரக வளர்ச்சித்துறை
விதிகளை வெல்வோம் - ஒரு
நகல் பெறப்பட்டது.
பொதுமக்களின் பயன்பாட்டிற்காக....

௧௦

அட்வொகேட் சி. வி. நாயுடுவின்

1959-ம் வருடத்திய மதராஸ் பஞ்சாயத்துகள் சட்ட திட்டங்கள்

ஜி. ஓ. (மிஸ்). நெம். 159 L.A. தேதி 5-2-1960 படிக்கு

மதராஸ் கவர்ன்மெண்டாரால் எல்லா பஞ்சாயத்துகளும்
வாங்க சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

இதில்

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டமும்
மதராஸ் ஜில்லா அபிவிருத்தி சபைகள் சட்டமும்
அவைகளின் விதிகளும் குறிப்புகளும்
இன்னும் அவசியமான சட்டங்களும், விதிகளும், குறிப்புகளும் உள்ளன.

இவை மதராஸ் கவர்ன்மெண்டாருடைய
தமிழ் மொழி பெயர்ப்புக்கு ஒத்தது.

சி. வி. நாயுடு

அட்வொகேட் மதராஸ் ஹைகோர்ட்

இங்கிலீஷில்' 'லா ஆப் மெட்ராஸ் வில்லேஜ் பஞ்சாயத்து அண்ட் டிஸ்டிரிக்ட் போர்ட்ஸ்,"
"ரூல்ஸ் அண்டர் தி மெட்ராஸ் வில்லேஜ் பஞ்சாயத்து ஆக்ட் " லா ஆப் பப்ளிக்
ஹெல்த் இன் மெட்ராஸ் ஸ்டேட் " தெலுங்கில் மதராஸ் கிராம
பஞ்சாயத்துல ஆக்டுலு" முதலியவைகளுக்கும் ஆசிரியர்

மேலும் இங்கிலீஷில் ஹிந்து வார்சு சட்டத்திற்கும், ஹிந்து விவாக சட்டத்திற்கும்
குறிப்புகள் எழுதியவர்.

தமிழில்—ஏழாம் பதிப்பு — 1960 — விலை ரூபா 17.

காபிரைட் ரிஜிஸ்டர்ட்

இந்த புத்தகத்தின் லாபம் " ராஜாம்பா ஆஸ்பத்திரி"க்கு சேரும்.

ராஜாம்பாதேவி அண்டு கம்பெனி

திருவள்ளூர், மதராஸ் அருகாமை

7-ம் பதிப்புக்கு முன்னுரை

ஜி. ஒ. (மிஸ்) நெம். 159 — L. A. தேதி 5—2—1960 படிக்கு மதராஸ் கவர்ன்மெண்டாரால் எல்லா பஞ்சாயத்துகளும் வாங்க சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

1—1—1960-ல் பூரா மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டம் அமுலுக்கு வந்தது

இந்த சட்டம் 1884-ஷூத்திய மதராஸ் லோகல் போர்டுகள் சட்டத்திலிருந்து வளர்ந்து வருகிறது.

நானும் இதற்கு இங்கிலீஷில் 1924-ம் வருஷம் முதல் 35 வருஷங்களாக லோகல் போர்டுகள், டிஸ்ட்ரிக்ட் போர்டுகள், பஞ்சாயத்துகள் - குறித்து குறிப்புகளை 5 பதிவுகளில் அச்சிட்டிருக்கிறேன். கடைசியாக அச்சிட்ட 5-ம் பதிப்பின் விலை ரூபா 40 ஆகிறது. அதை ஹைகோர்டு ஜட்ஜ்களும், அட்வொகேட்களும், அரசாங்கத்தாரும், இன்ஸ்பெக்டரும், உத்தியோகஸ்தர்களும் உபயோகித்து வருகிறார்கள். தமிழில் 6-பதிப்புகள் அச்சிட்டு அவைகள் செலவு ஆகிவிட்டன. தெலுங்கிலும் 5-பதிப்புகள் அச்சிடப்பட்டது.

இந்த சட்டமும் அநேக இடங்களில் புது வழிகளை காட்டி இருக்கிறது. அவைகளை எல்லாம் குறிப்புகளில் விமர்சை செய்யப்பட்டிருக்கிறது.

இந்த புத்தகத்தை நன்றாகவும், அழகாகவும் அச்சிட்டுக் கொடுத்த மதராஸ், ஜார்ஜ் டவுன், தங்கசாலை (Mint Street) தெருவுக்கு அடுத்த கிருஷ்ணப்ப நாயகன் அக்ரஹாரம் தெருவிலுள்ள "ஜோதி பிரிண்டர்ஸ்" உரிமையாளர், திருவாளர். R. S. இராஜாபாதர் அவர்களுக்கும், இந்த புத்தகத்தை பிரசுரிக்கும் பொழுது உதவி செய்த ஸ்ரீ பெனுகொண்ட தீனதயாலு நாயுடுக்கும், ஸ்ரீ தேவராஜ குப்புசாமிக்கும் நன்றியை செலுத்துகிறேன்.

6-ம் பதிப்பின் முன்னுரை

[ஜீ. ஓ. எம். எஸ். நெ. 725, தேதி 9—4—1952 படிக்கு மதராஸ் அரசாங்கத்தாரால் பஞ்சாயத்துகள் வாங்க சிபார்ஸ் செய்யப்பட்ட உத்தமமான கிரந்தம்.]

முன் பதிப்பு 400 பக்கங்களும் விலை ரூ. 15-ம் உடைத்தாயிருந்தது. இப்பொழுது இந்த புத்தகம் 700 பக்கங்களாக விஸ்தரிக்கப்பட்டது. ஆனாலும் விலை ரூபாய் 16 மாத்திரம் வைக்கப்பட்டது. இதில் எல்லா விதிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. 30 வருஷங்களாக கிராம பஞ்சாயத்துகளுக்கு இந்த புத்தகம் சேவை செய்துக்கொண்டிருக்கிறது. அதற்கு பஞ்சாயத்துகளுடைய ஆதரவே காரணம்.

இஹைவ தைர்ஜிதஸ்ஸர்க : ஏஷாம் ஸாம்யே ஸ்திதம் மந :
நிர்தோஷம் ஹி ஸமம் ப்ரஹ்ம தஸ்மாத் ப்ரமஹணி தே ஸ்திதா :

பகவத்கீதை 5-ம் அத்தியாயம் 19-வது ஸ்லோகம்

யாருடைய மனது, ஸாம்மியத்தில் "என்றால் நம்முடைய பஞ்சாயத்து ஆக்ட் சம்மந்தமாக பொதுமக்களுடைய சமத்தில்" நின்றிருக்கிறதோ, அவர்களால் இந்த உலகத்திலேயே ஜனன மரணங்களை (ஸம்ஸாரத்தை) ஜயித்தவர்கள் ஆகிறார்கள். சமம் என்பது தோஷமில்லாத பிரம்மந்தானே அதனால் அவர்கள் (பண்டிதர்கள்) (சமத்துவமென்கிற) பிரம்மத்திலேயே யிருப்பார்கள்.

ஒவ்வொரு பஞ்சாயத்து மெம்பரும் மக்களிடத்தில் (உலக சம்மந்தமான விஷயங்களில், சமமான எண்ணத்துடனும், செய்கையுடனும் இருப்பாராகில் அவர் ஜனனமரணங்களை இந்த உலகத்திலேயே ஜயித்தவராக யிருப்பார்.

புதிதாக பஞ்சாயத்துகளை குறித்து சுலபமாக அறிய சில விஷயங்களை இங்கு தெரியப்படுத்தி இருக்கிறது, கவனிக்கவும்

1. "பஞ்சாயத்து" என்னும் பதத்தை 8 விதங்களாக உபயோகப்படுத்தியிருக்கிறது, அதை 4-ம் பக்கத்தில், 10-ம் இடமாக அச்சிட்டு இருக்கிறது. அதை உருவு போட்டு நினைவில் வைத்து கொள்ளவேண்டும். பக்கம் 11-ல் 17-ம் இடத்தையும் படிக்கவும்.
2. "பஞ்சாயத்து" எம்மாதிரி ஆனது என்பதை அறிய முக்கியமாக பிரிவு 8 யையும் அதன் குறிப்பையும் பல தடவை படிக்கவேண்டும்.

முதன்மையாக அறிய வேண்டியவை

3. ''பஞ்சாயத்து'' எந்த விஷயங்களை கட்டாயமாக செய்ய வேண்டும் என்பதை 63-வது பிரிவிலும் எந்த விஷயங்களை நிதி இருந்தால் செய்யலாம் என்பதை 64-வது பிரிவிலும் கண்டு இருக்கிறது. இந்த சட்டத்தில் சொல்லாததை எதையும் செய்யக்கூடாது. அப்படி செய்தால் அது பஞ்சாயத்து காரியம் ஆகாது, அதற்கு என்று செலவு செய்யப்பட்ட பணத்தை அங்கத்தினர்கள் கட்டி கொடுக்கும்படி நேரிடும்.
4. ''பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள்'' புதிதாக ஏற்படுத்தப்பட்டவை. அவை பழைய தாலூகா போர்டுகளை போன்றவை. பிரிவுகள் 7, 11 யை பார்க்கவும்.
5. ''ஜில்லா அபிவிருத்தி சபைகள்'' இவைகளை குறித்து 508-ம் பக்கத்தில் பார்க்கவும்.

வாசகர்களுக்கு ஓர் விண்ணப்பம்

1. முதலில், புத்தகத்தின் பொருளடக்கத்தை பல தடவைகளில் வாசித்து, அவைகளை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும், எதையும் வாசிக்காமலே வீண்வாதம் செய்பவர்களுக்கு இந்த புத்தகம் பயன்படாது
2. இரண்டாவதாக, ஒரு பஞ்சாயத்தோ – பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலோ – ஒரு காரியம் செய்து வந்தால், அது எப்படி செய்யவேண்டும், எப்படி செய்கிறது, அவை சட்டத்திற்கு ஒத்ததாக இருக்கிறதா அல்லது வெளிப்பட்டதாக இருக்கிறதா என்பவைகளை எல்லாம் கவனிக்கவேண்டும். அதற்கு முதலில் யுள்ள பொருளடக்கத்தையும், கடைசியில் 498-வது பக்கத்தில் யுள்ள பொருள் அகராதியையும் பல தடவைகளில் பார்த்து கண்டு, அறியவேண்டும். பக்கம் 11-ல் 17-ம் பாராவை பார்க்கவும்.
3, இந்த புத்தகத்தை சிலர் தங்கள் வசத்தில் வைத்துக்கொண்டு பிறருக்கு காட்டாமல் இருப்பது பஞ்சாயத்து தர்மத்திற்கே விரோதமானதாகும்.

கிராம பஞ்சாயத்துகளுக்கு புதிதாக தலைவர்களாக வருகிறவர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள்

1. பஞ்சாயத்து பணத்தை பெற்றுக்கொண்ட உடனே கணக்கில் கொண்டு வரவேண்டும். இவைகளை பாங்கி அல்லது கஜானுக்களில் கட்டவேண்டும். அப்படி செய்யாமல் பஞ்சாயத்தின் கார்யங்களுக்காக என்று செலவு செய்யக்கூடாது. [பிரிவு 139ன் கீழ், விதிகள் 14, 15களை பக்கம் 349-ல் பார்க்கவும்.] கணக்குகள், ரிகார்டுகள், ரிஜிஸ்டர்கள் முதலியவைகளை குறித்து பி. 139 விதி 21–ன் கீழ் பக்கம் 349-ல் பார்க்கவும்.
2. பி. 182 (3)ன் படிக்கு முன்னிருந்த தலைவரிடமிருந்து யாவத்து ரெகார்டுகளையும் பெற்று கொள்ளவேண்டும். பக்கம் 434ஐ பார்க்கவும்.
3. பிரிவு 33(a) படிக்கும் 51-ம் பிரிவு 1-ம் விதி, பக்கம் 108-படிக்கும் மாதத்திற்கு ஒரு தடவையாவது ஒரு மீடிங்கு கூட்டவேண்டும்.
4. அந்த மீட்டிங்கில் முதலாவதாக ஒரு மாதத்தின் வரவு செலவுகளை குறித்தப் பட்டியை வைக்கவேண்டும் [139-வது பிரிவின் கீழ் 45-வது விதியை பக்கம் 355ல் பார்க்கவும்.]
5. அப்போது செய்யும் கட்டு வேலைகள் எதுவரையில் செய்யபட்டவை என்று தெரிவிக்கவேண்டும்.
6. கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டும். (பிரிவு 38)
7. தீர்மானங்கள் குறித்து பேசவேண்டும். (பிரிவு 38)
8. முக்கியமாக தங்களுடைய பஞ்சாயத்தில் ஒவ்வொரு வருஷமும் எப்படி உற்பத்தியை அதிகப்படுத்த முடியும் என்பதை கவனித்து அம்மாதிரி அதிகப்படுத்த முயற்சி செய்யவேண்டும்.

திருவள்ளூர்,
17–2–1960.

சி. வி. நாயுடு,
அட்வொகேட்.

அரசாங்கம் — உத்யோகஸ்தர்கள் — அதிகாரங்கள் யார் யார் எதை நடத்தலாம் என்பது — அதிகாரங்களை பிரித்து கொடுப்பது

பிரிவு 2 (15) பக்கம் 24 — யார் யார் இன்ஸ்பெக்டர் ஆக இருக்கிறுர்கள்

"இன்ஸ்பெக்டர்" என்ற பெயரின்கீழ் அடியில் 1-ம் பத்தியில் உள்ள உத்தியோகஸ்தர்களை, 2-ம் பத்தியில் உள்ள பிரிவுகள் கீழ் யுள்ள அதிகாரங்களை 3-ம் பத்தியிலுள்ள பிரதேசங்களில் செலுத்த நியமிக்கப்பட்டு இருக்கிறுர்கள். [கெஜட் எக்ஸ்டரா ஆர்டினரி—பாகம் I-A, 13—1—1960. ஜி. ஓ. நெ. 73 L.A. 12—1—1960 - S.R.O. No. B. - 86—1960.]

1-ம் பத்தி	2-ம் பத்தி	3-ம் பத்தி
1. டிவலெப்மெண்டு கமிஷனர்.	பிரிவுகள்— 3 (2), 6, 16, 60 (1).	பொதுவாக எல்லா விஷயங்களிலும்
2. அடிஷனல் டிவலெப்மெண்டு கமிஷனர்.	19 (1) - 19 (2) -19 (4) - 19 (6) - 28 (1) - 49 ஷரத் 51 (1) - 51 (2) - 139 (1) - 139 (4) - 145 (1) - 146 (1) - 147 - 148 - 149 - 173 and 180 (1).	பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் விஷயங்களில்
3. கலெக்டர்.	3 (1) - 3 (4) - 8 - 10 (1) - 10 (2) - 15 - 17 (1) - 17 (3) (c) - 18 (1) - 28 (1) - 34 (3) - 49 ஷரத் - 5 11) - 51 (2) - 52(1) - 57(3) - 99 (1) - 99 (2) - 100 (2) (d) 100 (3) (a) - 119 (3) - 139 (1) - 139 (4) - 140 (3) 142 - 145 (1) - 146 (1) - 147 - 148 - 149 - 150 (1) 150 (2) - 150 (12) - 152 (13) - 173 - 180 (1) 188 (2) and 188 (3).	பஞ்சாயத்துகள் விஷயங்களில்

பிரிவு 144 படிக்கு ரிவின்யூ டிவிஷனல் ஆபீஸர்கள் பஞ்சாயத்துகளை மேல் பார்வை செய்வார்கள்

இவர்கள் தங்கள் பிரதேசங்களில் பஞ்சாயத்துகளை பார்வை இடலாம் மேல் விசாரணை செய்யலாம். [கெஜட் பாகம் I-A-E. 11—1—1960—S.R.O. No. B—84 1960.]

பிரிவு 157 படிக்கு அதிகாரங்களை யார் யாருக்கு பிரித்து கொடுத்தது

அரசாங்கம்:—பிரிவு 157 படிக்கு விதிகள் செய்யும் அதிகாரத்தை அரசாங்கம் யாருக்கும் மற்றக்கூடாது. அதேமாதிரியாக அடியில் கண்ட பிரிவுகளில் யுள்ள அதிகாரத்தையும் **அரசாங்கம் தானே வைத்துக் கொண்டு இருக்கிறது.** [கெஜட் எக்ஸ்ட்ரா ஆர்டினெரி பாகம் I-A, 13-1-1960, ஜி. ஓ, நெம்பர் 76. L. A- 12-1-1960-S. R. O. No. B- 87 of 1960.]
1 (3) - 2 (15) - 4 - 5 (1) and (2) - 5 (3) - 7 - 11 :- 19 (2) ஷரத் - 23 (2) - 53 (1)(b) - 53 (4) - 69 - 73 - 111 - 113 (3) - 124 (1) (b) - 130 - 139 (3) - 141 - 144 155 (1) - 155 (5) - 169 (1) and (2).

டிவலெப்மெண்டு கமிஷனருக்கு.—அடியில் கண்ட பிரிவுகளின் கீழ் உள்ள அதிகாரங்களை அரசாங்கம் கொடுத்து இருக்கிறது. [S.R.O. No. B. 88 of 1960.]
3 (3) - 9 (1) - 17 (2) ஷரத் - 20 (2) - 20 (4) - 21 - 101
104 - 125 - 128 - 136 - 140 (6) - 140 (7).

அடிஷனல் டிவலெப்மெண்டு கமிஷனருக்கு.—அடியில் கண்ட பிரிவுகளின் கீழ் உள்ள அதிகாரங்களை அரசாங்கம் கொடுத்து இருங்கிறது. [S.R.O. No. B. 89 of 1960.]
57 (3) - 60 (2) - 121 (5) - 139 (1) - 151 (1), (2) and (12)
153 (13) - 177 (1).

கலெக்டருக்கு.—அடியில் கண்ட அதிகாரங்களை அரசாங்கம் கொடுத்திருக்கிறது. [S.R.O. No. B 90 of 1960.]
40 (1) - 60 (2) - 76 (2) - 77 (2) - 78 - 83 - 84 (2) - 85
86 - 90 - 118 - 121 (5) - 129 - 131 - 132 - 139 (1)
140 (3) - 143 - 154 - 154 (5) - 154 (6) - 177 (1).

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டம்
1958 வருஷத்திய தமிழ் நாட்டின் 35-வது சட்டம்
1—1—1960ல் பூரா சட்டமும் அமுலுக்கு வந்தது
பிரிவு 1 (3) புடிக்கு அமுலுக்கு வரும் விதங்கள்

[செண்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட்டு பாகம் 1-A. எக்ஸ்ட்ரா ஆர்டினரி. தேதி 30—1—1959 S. R. O. NO. B. 1122-1959. ஜி. ஓ. மிஸ். நெ. 2013. 2-A, தேதி 28—11—1959]

பஞ்சாயத்துகள் சட்டத்தை அமுலாக்குவதில் முக்கியமாக நிறைவேற்ற வேண்டிய செயல்கள் 3 விதங்களாக இருக்கின்றன. 1. மொத்த தமிழ்நாட்டில் எல்லா பகுதிகளிலும் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தி முடிப்பது. 2. பிளாக் அபிவிருத்தி சபைகளை ஏற்படுத்தி பஞ்சாயத்து யூனியன்களை அமைப்பது. 3. கிராம அபிவிருத்தி நிர்வாகத்தை மக்களுடைய பிரதிநிதிகளுக்கு மாற்றுவது.

தமிழ் நாடு பூராவிலும் பஞ்சாயத்துகள் யேற்படுத்தப்படும்

எல்லாப் பகுதிகளிலும் பஞ்சாயத்துகளை ஏற்படுத்தி முடிப்பதென்ற முதல் நடவடிக்கை எல்லா இடங்களிலும் 1960 ஜனவரி 1-ல் தொடங்கும். 1960 டிசம்பர் 31-க்குள் இந்த வேலை பூர்த்தியாகும். இத்துடன் தமிழ்நாட்டில் எல்லா கிராமப் பகுதிகளிலும் பஞ்சாயத்துகள் ஏற்பட்டுவிடும்.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு அமைப்புக்கு தேதிகள் நிர்ணயம்

பஞ்சாயத்து யூனியன் அமைப்பு நடவடிக்கையானது. சட்டத்தின் 7-வது பிரிவு 1-வது உப பிரிவில் கண்டுள்ளபடி அரசாங்கத்தால் வெளியிடப்படும் முதல் அறிவிப்புடன் தொடங்கும் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட காலவரம்பாகிய 1961 அக்டோபர் 2-க்குள் பஞ்சாயத்து யூனியன்கள் அமைப்பு வேலைத் திட்டத்தை பூராவாக முடிப்பதற்காக தமிழ்நாட்டின் சமூக அபிவிருத்தி தேசீய நலப்பரப்புத் திட்டப்படி வரையறுக்கப்பட்ட எல்லா அபிவிருத்தி இடங்களையும் 3 பகுதிகளாகப் பிரித்துக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

முதல் பகுதியில் தேசீய நலப்பரப்பு திட்டம் ஏற்கெனவே அமுலாக்கப்பட்டவைகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 75 வட்டாரங்களில் இருக்கும். இரண்டாவது பகுதி அமுலாக்கப்பட்டுள்ள 120 வட்டாரங்களைக் கொண்டதாக இருக்கும். மூன்றுவது பகுதியில் தமிழ்நாட்டின் மற்ற எல்லா வட்டாரங்களும் இடம் பெறும். (அதாவது தேசீய நலப்பரப்புத் திட்டம் அமுலாக்கப்பட வேண்டியுள்ள வட்டாரங்கள் மொத்தம் சுமார் 360) ஆகலாம்.

தேதிகள் நிச்சயித்து இருப்பது

இந்த மூன்று பகுதிகள் விஷயமாக அறிவிப்பு வெளியிடுவதற்கு ஏற்படுத்தியுள்ள உத்தேசமான தேதிகள் விவரம்.

இடங்கள்	சட்டத்தின் 7 (1) பிரிவுப்படிக்கு முதல் அறிவிப்பு தெரிவிக்கும் தேதி	சட்டத்தின் 7 (3) பிரிவுப்படிக்கு நடுக்கால அறிவிப்பு தெரிவிக்கும் தேதி	சட்டத்தின் 11 (3) பிரிவுப் படிக்கு அறிவிக்கும் தேதி
முதல் 75 இடங்கள்	1-1—1960	14—4—1960	2—10—1960
2-வது 120 இடங்கள்	1—7—1960	2—10—1960	15—4—1961
3-வது பகுதி இடங்கள்	14—4—1961	1—7—1961	2—10—1961

முதன் முதலாக 75 பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்படுத்தப்பட்டன

பிரிவு 7 (1) படிக்கு 75 அபிவிருத்தி [பிளாக் டிவலெப்மெண்டு] களுக்கு "பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதி" என்றும் "பஞ்சாயத்து யூனியன்" என்றும் பெயர் செய்யப்பட்டது. [கெஜட்பாகம் 1-A. F-13-1-1960—ஜி. ஓ. மிஸ் நெ. 41-L. A. தேதி. 11-1-1960. S. R. O. No-B-62 of 1960] பிரிவு. 1 (3)ன் கீழ் குறிப்புகளை 20-ம் பக்கத்தில் பார்க்கவும்.

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டம் அமுலுக்கு வரும் விதங்கள்

புதிய பஞ்சாயத்துச் சட்டத்தை அமுலாக்குவது சம்பந்தமான எல்லா நடவடிக்கைகளிலும் திட்டமிட்டபடி பஞ்சாயத்து யூனியன் ஏற்படுவதிலும், பஞ்சாயத்துகள் தீவிரமாகக் கலந்து கொள்ளச் செய்வது அவசியமாகும். தேசீய நலப்பரப்பு திட்டப்படி எற்கெனவே நிறுவப்பட்டுள்ள கமிட்டிகள், வட்டாரத்தின் எல்லா பஞ்சாயத்துதலைவர்களையும் சேர்த்துக் கொள்ளும்படியாக விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. தேசீய நலப்பரப்பு திட்டம் இதுவரை ஏற்படுத்தப்படாமலிருக்கும் மற்ற வட்டாரங்களிலும் இது போல கமிட்டிகள் ஏற்படுத்தப்படும்

இந்த வட்டார ஆலோசனைக் கமிட்டிகளின் அலுவல்களின் விவரம்.—

1. சமுதாய அபிவிருத்தி வேலையில் தேசீய நலப்பரப்பு திட்டத்தின் கீழ் தற்போது வட்டார ஆலோசனைக் கமிட்டிகள் செய்து வரும் வேலைகள் முழுதும்.

2. 1958-ம் ஆண்டின் சென்னை பஞ்சாயத்துகள் சட்டத்தை அமுலாக்குவதில் வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்துகளுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரசார்பு நிறுவனங்களுக்கும் ஆலோசனை கூறுதல்

இவைகள் ஷை கெஜட்டுக்கும் ஜி.ஓ. வுக்கும் சமானமான மொழி பெயர்ப்பு

அட்வொகேட் சி. வி. நாயுடுவின்
இதரமான புத்தகங்கள்

THE LAW OF PANCHAYATS AND DISTRICT BOARDS
2 Volumes in English more than 5000 Cases Cited
Price Rs. 40 Postage Extra

1959-ம் வருத்திய
மதராஸ் பஞ்சாயத்துகள் தேர்தல் விதிகள்
இதில் குறிப்புகளும் 200 கேசுகளும் உண்டு
இதில்

1. அங்கத்தினர்கள் தேர்தல் விதிகளும்
2. தலைவர்கள் - உபதலைவர்கள் தேர்தல் விதிகளும்
3. தேர்தல் விவாதங்களை தீர்ப்பு அளிக்கும் விதிகளும்
4. பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களுக்கு பஞ்சாயத்து மெம்பர்கள் தேர்ந்து எடுத்து அனுப்பும் அங்கத்தினர்களை குறித்த விதிகளும்
5. அக்ராசனர்கள் – கமிட்டி மெம்பர்கள்-முதலியவர்களின் தேர்தல்கள் விதிகளும் உண்டு.

விலை ரூபா. 3 - 00
வி. பி. யில் அனுப்புவது இல்லை.

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டதிட்டங்கள்

பொருளடக்கம்

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டம்*

1958-ம் வருடத்திய தமிழ் நாட்டின் 35-வது சட்டம்

22—1—1959ல் இந்த சட்டம் இந்தியா கவர்ன்மெண்டின் பிரசிடெண்டின் அங்கீகாரம் பெற்றது.

30—1—1959ல் போர்ட் செண்ட் ஜார்ஜ் கெஜட்டில் பாகம் IV-Bல் எக்ஸ்டரா ஆர்டினரியாக அச்சிடப்பட்டது.

30—1—1959ல் பிறப்பிக்கப்பட்ட உத்திரவுகள்படிக்கு ஷ பாகம் Iல், 1-வது பிரிவும் 196-வது பிரிவும் அன்றைக்கே அமலுக்கு கொண்டு வரப்பட்டது. (பக்கம் 20-யை பார்க்கவும்).

1—1—1960ல் பிரிவு 1 (3) படிக்கு மொத்த சட்டமும் அமுலுக்கு வரக்கூடும்

(1) கிராம பஞ்சாயத்துகளும். (2) பட்டணம் பஞ்சாயத்துகளும் (3) பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களும் இந்த புதிய மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டப்படிக்கு அமல் செய்யவேண்டும். பழைய கிராம பஞ்சாயத்துகள் சட்டம் ரத்தாய்விட்டது. ஆகையால் பஞ்சாயத்துகள் மதராசு கிராம கோர்ட் சட்டபடிக்கு சிவில் வியாஜ்யங்களையும், கிரிமினல் கேசுகளையும் நடத்தலாகாது.

இந்த பஞ்சாயத்துகள் சட்டத்தின் சுருக்கம் — 487 — 497

இந்த சட்டத்தின் பொருள் அகராதி — 498 — 507

பக்கங்கள்

தொடக்கமும் - அதன் பொருள் அடக்கமும் ... 1—11

பீடிகை (I—V பாராக்கள்)—பொழிப்புரை ... 12—19

1-ம் அத்தியாயம்—முதன்மையானவை [பிரிவுகள் 1, 2]

பிரிவு

1. சிறு பெயரும், வியாபகமும், தொடக்கமும் ... 19

1961-ம் வருடம் அக்டோபர் மாதம், 2-ம் தேதிக்கு மேற்படாமல் (1) நியமிக்க கூடிய விஸ்தீர்னத்தில் (2) நியமிக்க கூடிய தேதிகளில் அமுலுக்கு வரும்

பக்கம்

2. அர்த்தம் ... 21
(1) கட்டிடம் ... 21
(2) தற்செயலாய் ஏற்படுகிற காலி ஸ்தானம் ... 21
தற்செயல் (காஷுவல்) தேர்தல் 21
(3) அக்ராசனர் (பி. 36, 37) ... 2
(4) கலெக்டர் (பி. 148) ... 22
(5) கமிஷனர் (பி. 44, 45) ... 22
(6) கம்பெனி ... 22
(7) ஜில்லா ... 22
(8) ஜில்லா (பக்கம் 505) அபிவிருத்திச் சபை ... 22
(9) தேர்தல் அதிகாரி ... 22
(10) நிர்வாக அதிகாரி (பி. 43) ... 23
(11) நிர்வாக உத்தியோகஸ்தர் [பி. 33 (2), 40, 41, 42] ... 23

பக்கம்

(12) அரசாங்கம் (பி. 157 (4), 158, 198) ... 23
(13) வீடு ... 23
(14) குடிசை ... 24
(15) இன்ஸ்பெக்டர் [பி. 144, 147, 149, 150, 156, 157] ... 24
(16) கக்கூஸ் ... 24
(17) அங்கத்தினர் (பி. 38) ... 24
(18) சாதாரண காலிஸ்தானம் சாதாரண தேர்தல் [பி. 2 (12)] 24
(19) சொந்தக்காரர் ... 25
(20) பஞ்சாயத்து (பி. 3, 8, 9) ... 25
(21) பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதி [பி. 7 (1) ... 25
(22) பஞ்சாயத்து பட்டணம் (பி. 3, 8, 9) ... 26
(23) பஞ்சாயத்து யூனியன் (பி.7,11) 25

*** மதராஸ் ஜில்லா அபிவிருத்தி சபைகள், சட்டம் விதிகள், குறிப்புகள், சுருக்கம்**

இவைகளை 508 — 523 பக்கங்களில் பார்க்கவும்.

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருளடக்கம்

2. பிரிவு பக்கம்

(24) பஞ்சாயத்து யூனியன் கவுன் சில் (பி. 7, 11) ... 25
(25) பஞ்சாயத்து கிராமம் (பி. 3, 8, 9) ... 26
(26) தலைவர் (பி. 29—35, 149, 150, 152) ... 26
(27) சொந்த (ப்ரைவேட்) பாட்டை 26
(28) பொதுப்பாட்டை [பி. 63 (a) (b) (d), 64 (a) (b), 76, 77, 82, 175] ... 26
(29) வாசஸ்தலம் வசிப்பவர் ... 27

2. பிரிவு பக்கம்

(30) ரெவினியு கிராமம் ... 28
(31) ஷெட்யூலில் கண்ட ஜாதிகள். 28
—விதி—ஷெயார்கள் ... 28
(32) பட்டணம் (பி. 3, 8, 9) ... 29
(33) பட்டணம் பஞ்சாயத்து (பி. 3, 8, 9) ... 29
(34) ஒதுக்கப்படாத காடு (பி. 72). 29
(35) கிராமம், ரெவினியு கிராமம் ... 29
(36) நீர்க்கால் ... 29
(37) வருஷம் ... 29

2-ம் அத்தியாயம் [பிரிவுகள் 3 — 62]

(1) பஞ்சாயத்துக்களையும் (2) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களையும் (3) பட்டண பிரதேசங்களையும் அமைப்பதும் பரிபாலனம் செய்வதும்

(1) பஞ்சாயத்து கிராமங்கள் (2) பஞ்சாயத்து பட்டணங்கள் (3) பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றை அமைப்பது

பக்கம்

3. பஞ்சாயத்து கிராமங்களையும் பஞ்சாயத்து பட்டணங்களையும் அமைப்பது ... 30
4. பட்டணப் பிரதேசங்கள் ... 32
5. குறிப்பிட்ட பட்டண பஞ்சாயத்துப் பிரதேசங்களை முனிசிபாலிட்டிகளாக அமைப்பது ... 33
6. சென்னை ஜில்லா முனிசிபாலிட்டிகளின் சட்டத்திலும், விதிகளிலும் உள்ள ஷரத்துக்களை வியாபிக்கும்படி செய்வது ... 35
7. பஞ்சாயத்து யூனியன்களை ஏற்படுத்துவது ... —

8. கிராமங்களுக்காகவும் — பட்டணங்களுக்காகவும் — பஞ்சாயத்துக்களை— அமைப்பதும் சட்டப்படிக்கான — சபைகளாவதும் ... 37-54

குறிப்புகள் பட்டியில் 34-ஐடங்கள் இருக்கின்றன (பக்கங்கள் 38—54)

விதிகள்,—21-ம் ஐடம், கோர்டு செலவுகள் பற்றி
22-ம் ,, நியாயவாதிகளை நியமிப்பது பற்றி
31-ம் , பஞ்சாயத்துகளுக்கு சப்ளை செய்வது
32-ம் ,, கண்ட்ராக்டுகளில் டெண்டர்கள்
33-ம் ,, குத்தகைகாரர்களுக்கு வஜா செய்வது (கண்ட்ராக்டர்களுக்கு பணம் கொடுப்பது பற்றி பக்கம் 425-யையும் பார்க்கவும்)
34-ம் ,, அசையா பொருளை அடைவது
36-ம் ,. விளம்பரம் அல்லது நோடீஸ் பிரசித்தம் செய்தல்.

பிரிவுகள் 63, 64, 137, 138, 139 கீழ் யுள்ள விதிகளை கட்டாயமாய் படிக்க வேண்டும். அப்போது ஆபீஸ் கணக்குகளை வைப்பது, ரிஜிஸ்டர்களை தயாரிப்பது முதலியவை தெரியவரும்.

பிரிவு 178-ன் கீழ் அதிகப்படி விதிகள் — டெக்னிகல் (Technical) சாங்ஷன், கண்ட்ராக்டர்களுக்கு கொடுப்பது முதலியவை 423—430

9. பஞ்சாயத்துகளை தரம் பிரிப்பது ... 55

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருடக்கம்

பிரிவு | பக்கம்

10. ஒரு பஞ்சாயத்தில் இருக்கவேண்டிய அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கை. 55

விதிகள் — மெம்பர்களின் எண்ணிக்கை குறித்து ...

11. **பஞ்சாயத்து யூனியன்களுக்கு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் அமைப்பதும் அவை சட்டப்படிச் சேர்ந்த சபைகளாயிருப்பதும் (பி, 65, 66, 74, 130 களை பார்க்க)** ... 56

சமுதாய அபிவிருத்திற்கு இருக்கவேண்டிய பொருள் அடக்கம் ... 57

12. ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் இருக்கவேண்டியவர்களின் எண்ணிக்கை. 60

13. சென்னை 1920ம் வருடத்து XIV-வது ஜில்லா போர்டுகள் சட்டமும், 1950-ம் வருடத்து X-வது கிராம பஞ்சாயத்துகள் சட்டமும், 1955-ம் வருடத்து XXX- வது ஜில்லா போர்டுகள் சட்டமும், ரத்தாவது ... 61

அங்கத்தினர்கள்—தேர்தல்கள்—காலமும்

14. பஞ்சாயத்து அங்கத்தினர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் ... 62

விதிகள்.—அவைகளை அனுபந்தத்தில் தனி புத்தகத்தில் பார்க்க. அதன் விலை ரூபா 2·50. குறிப்புகளில் 100 கேசுகளுக்கு மேல் யுள்ளது.

15. ஷெட்யூலில் கண்ட ஜாதிகளைச் சேர்ந்த அங்கத்தினர்களுக்காக ஸ்தானங்களை ஒத்திவைப்பது ... 62

விதிகள்.—பி. 2 (31) யையும் பக்கங்கள் 28, 63களையும் பார்க்கவும்.

16. வார்டுகளாகப் பிரிப்பது ... 64

17. பஞ்சாயத்துகளின் அங்கத்தினர்களின் பதவிக் கால அளவு ... 64

18. சிலவிஷயங்களில் பஞ்சாயத்து அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதும் அந்த அங்கத்தினர்களுடைய பதவிக் கால அளவும் ... 66

விதிகள்.—சில விஷயங்களில் பஞ்சாயத்துக்கள் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பது.

19. பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அங்கத்தினர்கள் பதவி வகிக்கும் கால அளவும் ஸ்தானங்களை பூர்த்தி செய்வதும் ... 67

20. வாக்காளர் ஜாபிதாவைத் தயாரித்து பிரசித்தம் செய்வதும் அதில் சேர்க்கப் படுவதற்கு வேண்டிய யோக்கியதாம்சங்களும் ... 68

விதிகள்.—ஒருவர் பெயர் வாக்காளர் ஜாபிதாவில் இல்லாவிட்டால் அவர் பெயரை வாக்காளர் ஜாபிதாவில் பதிவு செய்துகொள்ள என்ன செய்ய வேண்டும். ... 70

21. வாக்காளர் பட்டியலைத் திருத்த அதிகாரம் ... 71

அங்கத்தினர்களின் யோக்கியதாம்சம், யோக்கியதை குறைவு முதலியன

22. அபேட்சகரின் யோக்கியதாம்சங்கள் ... 71

23. அரசாங்கத்தையும், பிரதேச அதிகார சபைகளையும் சேர்ந்த உத்தியோகங்கள் ஊழியர்கள் ஆகிய இவர்களின் யோக்கியதைக் குறைவு ... 71

24. தேர்தல் சம்பந்தமான குற்றங்கள் செய்து குற்றவாளிகள் என்று தீர்மானிக்கப் பட்டிருக்கும் நண்பர்களின் யோக்கியதைக் குறைவு ... 71

25. அபேட்சகரின் யோக்கியதைக் குறைவுகள் — 72

26. அங்கத்தினர்களின் யோக்கியதைக் குறைவுகள் — 74

விதிகள்.—ஒப்பந்த விஷயமாய் பஞ்சாயத்துகளின் அங்கத்தினர்களுடைய யோக்கியதைக் குறைவு.

27. அங்கத்தினர்களை மறுபடியும் உத்தியோகத்தில் சேர்த்துக் கொள்வது ... 77

28. அங்கத்தினர்களின் யோக்கியதைக் குறைவைப்பற்றிய பிரசினைகளை தீர்மானிக்கும் அதிகாரி ... 78

விதிகள்.—அங்கத்தினர்களின் யோக்கியதைக் குறைவு சம்பந்தமான பிரசினைகளைத் தீர்மானிப்பதற்குரிய நீதி இலாகா அதிகாரி ... 79

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருளடக்கம்

தலைவரும் — உபதலைவரும்

பிரிவு பக்கம்

29. பஞ்சாயத்தின் தலைவரும் — உபதலைவரும் ... 79
30. தலைவரையும் - உபதலைவரையும் தேர்ந்து எடுப்பது ... 80

தேர்தல் விதிகள்.—தனியாக அனுபந்தத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அதன் விலை ரூபா 2·50 குறிப்புகளில் 150 கேசுகளுக்கு மேலே இருக்கின்றன. -ம் பக்கத்தில் பார்க்கவும்.

31. தலைவர் அல்லது உப-தலைவர் தேர்ந்தெடுக்கப் படாதபோது அனுசரிக்க வேண்டிய நடைமுறை ... 81
32. தலைவர் உபதலைவரின் பதவி அற்றுப்போவது ... 81

விதிகள் — பிரசிடெண்டுகளும் வைஸ் - பிரசிடெண்டுகளும், அங்கத்தினர்களும் ராஜினமா செய்வது

33. தலைவரின் அலுவல்கள் ... 81
34. தலைவரின் அலுவல்களை வேறொருவர் செய்யவேண்டியவராய் இருப்பதும், அவைகளை வேறொருவருக்குப் பிரித்துக் கொடுப்பதும், தலைவர் பதவியில் ஏற்படுகிற காலி ஸ்தானங்களைப் பூர்த்தி செய்வதும் ... 82

விதிகள்.—ப்ரஸிடெண்டின் அலுவல்கள் இன்னொருவரைச் சேருவதும் ... 84
தற்காலிக ப்ரெஸிடெண்டின் அலுவல்கள் வரையறைகள் ... 85
ப்ரெஸிடெண்டின் உத்தியோகத்தில் காலிஸ்தானம் ஏற்படுவதைத் தெரிவிப்பது ... 85

35. தலைவரின் அலுவல்களைப் பிரித்துக் கொடுப்பது ... 85

அக்ராசனரும் — உப-அக்ராசனரும்

36. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் அக்கிராசனரும் உப அக்கிராசனரும். 85
37. அக்கிராசனரின் அலுவல்களை வேறொருவர் செய்யவேண்டியிருப்பதும், அவைகளை வேறொருவருக்குப் பிரித்துக் கொடுப்பதும், அக்கிராசனர் பதவியில் ஏற்படுகிற காலி ஸ்தானங்களைப் பூர்த்தி செய்வதும் ... 87

அங்கத்தினர்கள்

38. தனித்தனி அங்கத்தினர்களின் உரிமைகள் ... 88

விதிகள்.—தீர்மானம் செய்யும் விதிகள் ... 90
தலைவரை கேள்விகள் கேட்பதற்கான விதிகள் ... 92

39. தலைவர், உபதலைவர், அக்கிராசனர், உப அக்கிராசனர் அல்லது அங்கத்தினர் எவரும் பிரதிபலன் பெறக்கூடாதென்பது ... 94

விதிகள்.—பஞ்சாயத்துகளின் பிரஸிடென்டுகள், வைஸ் பிரஸிடென்டுகள், அங்கத்தினர்கள் முதலியவர்களுக்குப் பிரயாண வர்த்தனை.

நிர்வாக உத்தியோகஸ்தர் — நிர்வாக அதிகாரி — கமிஷனர்

40. பட்டணம் பஞ்சாயத்துக்களுக்கு நிர்வாக உத்தியோகஸ்தர்களை நியமிப்பது — 95

விதிகள்.—அரசாங்க ஊழியர்களாயிராத நிர்வாக உத்தியோகஸ்தர்கள் விஷயமாய்ப் பஞ்சாயத்துகள் செலுத்தத்தக்க தொகைகள்.

41. நிர்வாக உத்தியோகஸ்தரின் நிர்வாகங்கள் ... 96
42. நிர்வாக உத்தியோகஸ்தரின் அலுவல்களை மற்றவர்கள்செய்ய வேண்டியதாய் இருப்பது ... 97

விதிகள்.—நிர்வாக உத்தியோகஸ்தரின் அலுவல்களை பிரித்துக் கொடுப்பது 97

43. நிர்வாக அதிகாரியின் அலுவல்கள் ... 97

விதிகள்.—நிர்வாக அதிகாரி (வரி; லைசென்ஸ், அனுமதி) விஷயம்பற்றி தகவல் தெரிவிக்கும்படி சம்மன் முலம் கேட்பதற்கு அதிகாரம்—ஹாஜாராகாவிட்டால் 10 ரூபா வரையில் தண்டனை ... 98

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருளடக்கம்

பிரிவு பக்கம்

— பஞ்சாயத்துகளின் நிர்வாக அதிகாரிகள், உத்தியோகஸ்தர்கள் ஆகிய இவர்களின் கையெழுத்துப் பிரதிரூபங்களை உபயோகிப்பது ... 99

... நிர்வாக அதிகாரி தஸ்தாவேஜுகளை ஹாஜர்ப்படுத்துவது. 99

44. கமிஷனர்கள் ... 100

45. அவசரமான சந்தர்ப்பங்களில், நிர்வாக அதிகாரிக்கும், கமிஷனருக்குமுள்ள அதிகாரங்கள் ... 101

விதிகள்.—நிர்வாக அதிகாரியால் செய்யப்பட்ட அவசரகால நியமங்கள் விஷயமாகக் கட்டுப்பாடு ... 102

சபைகளில் அக்கிராசனம் வகிப்பதும்—அதன் நடைமுறைகளும்

46. பஞ்சாயத்து சபைகளில் ஆக்கிராசனம் வகிப்பது ... 103

47. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் கூட்டங்கள் ... 104

48. அங்கத்தினர்கள் எப்போது தர்க்கத்தில் கலந்துகொள்ளக்கூடாதென்பதும் வோட் கொடுக்கக் கூடாதென்பதும் ... 105

49. நடவடிக்கைக் குறிப்புக்கள் 3 தினங்களுக்குள் அனுப்பவும் ... 106

50. ரெகார்டுகளை ஆஜர்ப் படுத்தும்படிக் கேட்க பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்குள்ள அதிகாரம் ... 106

மீட்டிங்குகள் — கூட்டங்கள்

51. பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள், கமிட்டிகள் ஆகிய இவைகளின் நடவடிக்கைகள் ... 107

விதிகள்.—மீட்டிங்குகள் அல்லது கூட்டங்கள் விதிகளின் பொருள் அடக்கம் (15 விதிகள்) ... 107

1-வது விதியின் கீழ் உள்ள குறிப்புகளின் விவரம் ... 108

நடவடிக்கை குறிப்புகளின் ரிகார்டுகளின் நகல்களை கொடுபப்து ... 121

கமிட்டிகள்

52. கூட்டுக் கமிட்டிகளை நியமிப்பது ... 122

விதிகள்.—கூட்டுக் கமிட்டிகளின் அமைப்பு, அதிகாரங்கள், நடைமுறை முதலியவை — 123

—கமிட்டிகள் அமைப்பதும், அவற்றில் வெளியார்களைச் சேர்த்துக்கொள்வதும், அக்கமிட்டிகளுக்கு அலுவல்களை பிரித்துக் கொடுப்பது ... 123

53. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் கமிட்டிகள் (குழு)க்கள் ... 124

பரிபாலன அறிக்கைகள்

54. பஞ்சாயத்துக்களின் பரிபாலன அறிக்கைகள் (பி. 140 பட்ஜெட்) ... 125

விதிகள்.—பரிபாலன (அட்மினிஸ்ட்ரேஷன்) ரிபோர்ட் அறிக்கைகளைக் குறித்த விதிகள் ... 126-132

55. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் பரிபாலன அறிக்கைகள் ... 124

நடவடிக்கைகளைச் சட்ட சம்பந்தமாக்குவது

56. ஒழுங்குப் பிசகு இருப்பது காலி நேரிடுவது முதலியவைகளினுல் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் முதலியவற்றின் நடவடிக்கைகள் செல்லாமற் போகமாட்டா எனபது ... 133

சிப்பந்தி (பி. 57—62)

57. பஞ்சாயத்துக்களுடையவும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுடையவும் சிப்பந்தி ... 134

பி. 57ன்கீழ் குறிப்புகள் பட்டி ... 135

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருளடக்கம்

பிரிவு — பக்கம்

58. உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியர்களின் சேவை நிபந்தனைகள் ... 139

பிரிவு 58-ன் குறிப்புகளின் பட்டி — 140

விதிகள்.—பஞ்சாயத்துகளின் உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள்— தகுதிகள் ஒன்பது ... 141 – 146

விதிகள்.—பஞ்சாயத்துகளின் உத்தியோகஸ்தர்கள்; ஊழியர்கள் இவர்களுடைய தகுதிகள். (9 தகுதிகள்) 141-146

பஞ்சாயத்துகளின் உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் ஆகியவர்களுடைய நடத்தை சேவை நிபந்தனைகள் பட்டி 146-158

பஞ்சாயத்துக்கள் தங்கள் ஆதிக்கத்துக்குட்பட்ட ஸ்தாபனங்களுக்கு விடுமுறைகள் கொடுப்பது பற்றி அரசாங்கம் பி. 178 (1) படிக்கு செய்த விதிகள் ... 159

உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் நன்கொடை (Provident Fund ப்ராவிடெண்ட் பண்டு) அளிப்பது (17 விதிகள்) 159-165

59. பொதுவான உத்தியோகஸ்தரை நியமிப்பது

விதிகள்:—இதை குறித்து (7 விதிகள்) ... 166

60. உத்தியோகஸ்தர்களையும் ஊழியர்களையும் மாற்றுவது ... 167

61. உத்தியோகஸ்தர்களையும் வேலைக்காரர்களையும் தண்டனை செய்ய அதிகாரம்— 167

62. பொது சுகாதார சிப்பந்திக்கு சில பிரிவுகள் பிரயோக படுத்துவது ... 169

3-ம் அத்தியாயம் [பிரிவுகள் 63—114]

1 பஞ்சாயத்துகளின் 2 பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின்

1. அலுவல்களும் 2. அதிகாரங்களும் 3. சொத்தும்

63. பஞ்சாயத்து சில விஷயங்களுக்காக ஏற்பாடு செய்ய கடமைப்பட்டிருப்பது ... 170

விதிகள்.—சொந்தக்காரர்களை சுத்தி செய்வது 177

இடுகாடுகள் முதலியவற்றை ஏற்படுத்தி வைப்பது 173

64. வேறு சில விஷயங்களுக்காக ஏற்பாடு செய்ய பஞ்சாயத்துக்குகள் அதிகாரம் ... 175

விதிகள்— பொது பாட்டைகளில் வளரும் மரங்களை பற்றிய அல்லது பஞ்சாயத்துகளில் சங்கரமித்திருக்கும் மற்ற சொத்தை பற்றிய தாவாவை தீர்மானிப்பது முதலியவை 176

தந்தி இல்லாத ரிசீவிங் செட்டுகளை (ரேடியோக்களை ஏற்படுத்தி பராமித்து வருவதற்கு செலவு 178

65. பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு சில விஷயங்களுக்காக ஏற்பாடு செய்ய கடமை ... 179

விதிகள் — மதராஸ் ராஜதானியில் குடிசை தொழில்களும், கிராம தொழில்களும் ... 182

சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு சேவை திட்டம்

66. சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு திட்டத்தை நிறைவேற்றுவதை பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலிடம் ஒப்படைப்பது (பிரிவுகள் 11, 65, 74, 130, 192களை பார்க்கவும்) ... 181

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருளடக்கம்

பிரிவு பக்க

67. சில விஷயங்களுக்காக ஏற்பாடு செய்ய பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்குள்ள அதிகாரம் ... 192

பொது (தண்ணீர், விளக்கு, மருத்துவசாலை) நன்மைகள்

68. பொதுவான தண்ணீர் கட்டு வேலைகள், இது காடுகள், சுடுகாடுகள் முதலியவை ... 193

69. பொது சாலைகளிலும் பொது இடங்களிலும் விளக்கு போடுவது (139-வது பிரிவின் கீழ் பக்கம் 340-ல் 2-ம் ஷெட்டியூல் பார்க்கவும்)

70 பொதுவான டிஸ்பென்ஸரிகள், சிசு சம்ரக்ஷண சாலைகள் முதலியவற்றை பராமரித்து வருவது (142-வது பக்கம் பார்க்கவும்) ... 193

விதிகள் — இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பஞ்சாயத்துகள் பராமரித்து வரவேண்டிய பொதுவான ஸ்தாபனங்கள் 194

71. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் முதலியவைகளிலிருந்து ஒரு பஞ்சாயத்துக்கு ஸ்தாவர சொத்து, ஒரு ஸ்தபான நிர்வாகம், முதலியவைகளை மாற்றுவது— 194

காடுகள், ட்ரஸ்டுகள் முதலியன

72. காடுகள் ஒதுக்கி வைக்கப்படாதவைகளை பஞ்சாயத்துகளுக்கு மாற்றுவது இந்த அதிகாரத்தை ... 194

விதி.—மேல் விசாரணையில் இருந்து எடுத்து விட்டு இருப்பதற்கு கால அளவு. 195

73. நிதி ஏற்பாடு (டிரஸ்ட்களையும், இனும்களையும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் மேல் விசாரண மானேஜ்மென்டு செய்வதற்கு மாற்றுவதற்கு ரெவினியூ போர்டுக்கு உள்ள அதிகாரம் ... 196

74. பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அலுவல்களை அதிகப் படுத்த அரசாங்கத்தாருக்கு உள்ள அதிகாரம் ... 196

75. நன்கொடைகளையும், டிரஸ்ட் சொத்துகளையும், (பஞ்சாயத்து பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலாவது) ஒப்பு கொள்கிற அதிகாரத்தை பற்றிய வரையறை ... 197

பொது பாட்டைகள் (பிரிவுகள் (76-82)

76. பொது பாட்டைகள் பஞ்சயாத்தில் சங்கிரமிப்பது ... 197

77. பொது சாலைகள் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களிடம் சங்கிரமிப்பது ... 198

78. பொது வழி (ஹைவேஸ்) களில் பஞ்சாயத்திற்கு உள்ள கடமை ... 199

79. அபாயமான கட்டிட விஷயத்தில் முன் எச்சரிக்கை ... 199

80. அப்பாயமான மரங்கள் விஷயத்தில் முன் எச்சரிக்கை ஏற்பாடுகள் ... 200

81. பொதுசாலைக்கு அருகில் உள்ள (கட்டிடங்களுக்கு நிலங்களுக்கும், வேலி போடுவது செடிகளை மரங்களை வெட்டி விடுவது ... 201

82. பொது பாட்டைள், இதர சொத்துகள் மேல் தடங்கல்கள் உண்டாகக்கூடாது, என்று தடுப்பது கிராம கர்ணம் தன் கடமையாக தெரிவிக்கவேண்டும். 202-211

விதிகள் தடங்கல்கள் ஆக்கிரமிப்புகளை எடுத்து விடுவது 14 விதிகள் அவைகளின் அட்டவணை ... 203

சமுதாய சொத்து வரும்படி ஜலசூத்திரங்கள் குடிமராமத்து

83. மீன்பிடிக்கும் பாத்யதை உள்பட சமுதாய சொத்து வரும்படி பஞ்சாயத்தின் இடம் சேரும் ... 211

84. ஜல சூஸ்த்திரங்கள் (கால்வாய்கள், ஊத்துகள் முதலியவை) பஞ்சாயத்துகளிடம் சங்கிரமிப்பது ... 212

விதிகள்— இவை 6 விதிகள் இவை உபயோகிப்பதை தடுப்பதும், உபயோகிப்டதை ஒழுங்கு ஏற்படுத்துவதும் ... 212

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருளடக்கம்

பிரிவு — பக்கம்

85. குடிமராமத்து நீர் பாசன வேலைகளை பஞ்சாயத்துக்கு மாற்றலாம் ... 214
விதிகள் — இவைகளின் மேல் விசாரணை, கட்டணங்களை குறித்த விதிகள் ... 214

புறம் போக்குகள்

86. சிலரயிறறு லாரி புறம்போக்கு நிலங்களில் பஞ்சாயத்துக்கு அதிகாரம் உண்டு ... 215
விதிகள் — புறம்போக்குகளின் உபயோகத்தையும், மேல் விசாரணையும் குறித்த விதிகள் 216
87. எஸ்டேட்களில் உள்ள சில சமுதாய நிலங்களில் பஞ்சாயத்துக்கு அதிகாரம் ... 218
விதிகள் — சமுதாய நிலயங்களின் உபயோகத்தில் பஞ்சாயத்துக்கு அதிகாரம் 218
88. சாக்கடை நீர் முதலியவை பஞ்சாயத்தை சேரும் ... 220
89. பஞ்சாயத்துகளுக்கு நிலம் எடுத்து கொள்வது ... 220
90. யாத்திரை ஸ்தலங்களில் மேல் விசாரணை நடத்தும் நபர்கள் பஞ்சாயத்துக்கு திரவிய சகாயம் செய்வது ... 221
91. பொது கேளிக்கை இடங்களை மூடிவிட பஞ்சாயத்துக்கு அதிகாரம் ... 221
92. அபாய நோய் உள்ள சிறுவர்கள் பள்ளி கூடங்களுக்கு வரலாகாது ... 222
93. அம்மையை கட்டாயமாக குத்துவது ... 222
94 பெரி அம்மை, காலரா வாந்திபேதிகளை பற்றிய தகவல் கொடுக்கவேண்டிய அவர்கள் ... 222
95. அபாயமான குளம் குட்டை, கிணறு முதலியவைகளின் விஷயத்தில் முன் எச்சரிக்கையான ஏற்பாடுகள் ... 223
96. அசுத்தங்களை அல்லது புல் பூண்டுகளை நிலங்கள், கட்டிடங்களில் இருந்து நீக்க அதிகாரம் ... 224
97. அழிந்து விடப்பட்ட கட்டிடங்களின் சாமான்களை உபயோகிக்க அல்லது விற்க கமிஷனருக்கு. நிர்வாக அதிகாரிக்கு அதிகாரம் ... 225
98. அந்த நஷ்ட ஈட்டின் (டாமேஜஸின்) வரையறை ... 225

மார்கெட்டுகள் (பி-99, 105)

99. பொது மார்கெட்டுகள் ... 225
விதிகள்.—மார்கெட்டுகளில் நிர்வாக அதிகாரிக்கு உள்ள அதிகாரங்கள் 227
100. சொந்த மார்கெட்டுகளுக்கு லைசென்ஸ்கள் கொடுப்பது ... 229
விதிகள்.—சொந்த மார்கெட்டின் வருமானத்திலிருந்து கழித்து கொள்ளக் கூடிய செலவுகள் 230
சொந்த மார்கெட்டுகளின் கணக்குகள் அப்பீலுக்கான கால வரையறை ... 232
101. இடங்கள் மார்கெட்டுகளா என்னும் தகராறுகளை அரசாங்கம் தீர்மானிக்கும்— 233
102. சொந்த மார்கெட்டிற்கு லைசென்ஸ் இல்லாவிட்டால் அங்கே விற்பனை செய்யக் கூடாது ... 233
103. பொது பாட்டைகளில் விற்பனை செய்யக் கூடாதென்று தடுப்பது ... 234
104. மார்கெட்டுகளை தரம் பிரிப்பது ... 234
105. சொந்த மார்கெட்டுகளுக்கு உள்ள தனி உரிமையை பஞ்சாயத்து எடுத்து கொள்வது 235

பார வண்டிகள் நிற்கும் இடங்கள் (106, 107)

106. பொதுவான இறங்கும் இடங்கள், பாரவண்டி நிற்கும் இடங்கள் ... 235
விதிகள் — இடங்களை குறித்து விதிகள் 236
107. பாரவண்டி நிற்கும் சொந்த இடங்கள் ... 237

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருளடக்கம்

பிரிவு பக்கம்

ஆடுமாடுகளை அடிக்கும் தொட்டிகள்

108. ஆடுமாடுகளை அடிக்கும் தொட்டிகள் ... 239
109. பிராணிகளை அடிப்பதை குறித்து லைசென்ஸ் கொடுப்பது ... 239
விதிகள்,—இவைகளை குறித்து விதிகள் ... 240

கட்டிடங்களுக்கு இலக்கம் இடுவது

110. கட்டிடங்களுக்கு இலக்கம் இடுவது ... 241
விதிகள்.—கட்டிடங்களுக்கு நெம்பர் கொடுப்பதற்கான அதிகாரி 241

இடங்களை சில காரியங்களுக்கு லைசென்ஸ் இல்லாமல் உபயோகிக்கலாகாது (111—114)

111. இன்ன காரியங்களுக்கு லைசென்ஸ் இல்லாமல் இடங்களை உபயோகிக்கலாகாது ... 242
விதிகள்,—இன்ன காரியங்களை குறித்தது—245
பிரவேசித்து பார்வை இடுவதற்கான அதிகாரம்—247
112. தொழிற்சாலை கட்டவும், யந்திரம் வைக்கவும் அனுமதி ... 249
113. லைசென்ஸ்கள், அனுமதிகள் கொடுப்பது புதுப்பிப்பது, பற்றி விதிகள் அரசாங்கத்திற்கு அதிகாரம் ... 250
விதிகள்.—இதின் படிக்கு விதிகள், 251-254

ஜனங்கள் கூடும் இடங்களுக்கு லைசென்ஸ் கோரும் சட்டம்

114. ஜனங்கள் வழக்கமாய் கூடும் இடங்களை குறித்த சட்டத்தை மாற்றுவது ... 255
14 பிரிவுகள்—விதிகள்,—31—259—267

4-ம் அத்தியாயம் [பிரிவுகள் 115—143]

வரி விதிப்பும்—நிதி விஷயமும்

வரிகளை குறித்த பொது விஷயங்கள் (பக்கங்கள் 269—271 - 276—284)
நிலங்கள்பேரில் அதிக வரி (பி. 115—118)

115. பிரதேச வரி ... 272
116. பிரதேச வரி சர்சார்ஜ் ... 273
விதி.—பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் நிலவரி விதிப்பது -- 273
117. பிரதேச வரியை வசூலிப்பதைப்பற்றிய விதிகள் ... 275
118. நிலவரி ஒப்பனை ... 275

பஞ்சாயத்தினுல் விதிக்கப்படவேண்டிய வரிகள் (பி. 119—123)

119. பஞ்சாயத்தினுல் விதிக்கப்படவேண்டிய வரிகள் ... 275
விதிகள்.—குறிப்பிட்ட காரியங்களுக்கு ஆக விவசாய நிலத்துக்கு வரி. 276
—வரி புஸ்தகங்களையும், வரி விதிப்பு கணக்குகளையும், வரி செலுத்துவோர் பார்வை இடுவது ... 277
—வரி விதிப்பதும், வசூலிப்பது . நிதிகள் (1 முதல் 12 வரை) 278-280
—பொதுவான வரி விதிகளின் குறிப்புகளின் அட்டவணை (6 விதிகள்) ... 281

வீட்டு வரி

120. வீட்டு வரி ... 284
விதிகள்.—வீட்டு வரி விதிப்பதை குறித்த விதிகளின் அட்டவணை (உப விதிகள்) -- 286-300
—வீட்டு வரிகளை வசூலிக்கும் 23 முதல் 33 வரையுள்ள விதிகளை குறித்து பிரிவு 123-ன் கீழ் 317—323 பக்கங்களில் பார்க்கவும்.

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருளடக்கம்

பிரிவு — பக்கம்

தொழில் வரி

121. **தொழில் வரி** ... 301

விதிகள்.—தொழில் வரி விதிப்பு, விதிகளின் பட்டி (8 விதிகள்) — 302—310

—தொழில் வரிகளை வசூலிக்கும் விதிகளை குறித்து, பி. 123-ன் கீழ் பார்க்கவும்.

வண்டி வரி

122. **வண்டி வரி** ... 310

விதிகள்.—வண்டிவரி நிவாரணைகளும் — வரிவிதிப்பு உச்ச வீதங்களும் — குறைந்த பட்ச வரி வீதங்களும் - விதிகள் — 311—314

வரிகள்மேல் அப்பீல்கள் — வரிகளை வசூலிக்கும் விதிகள்

123. வரி விதிப்பை எதிர்த்து அப்பீல்கள் ... 315

விதிகள்.—வீட்டுவரி – தொழில்வரி - களை வசூலிக்கும் விதிகள் 317 – 324

ஸ்டாம்பு சர்சார்ஜ்

124. சொத்தினை இன்னொருவருக்கு மாற்றுகிற விவகாரங்களின்பேரில் தீர்வை ... 325

விதிகள்.— 327 - 329.

125. விளக்குகள் ... 329

126- பஞ்சாயத்துகளுக்குச் சேரவேண்டிய வீட்டு வரியை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தயாரிக்கவும், வரிகளையும், கட்டணங்களையும் வசூல் செய்யும்படி நிர்வாக சிப்பந்திக்கு உத்திரவிடுவதற்கான அதிகாரம் ... 330

விதிகள்.—330.

127. வசூலிக்க முடியாத தொகைகளை அடித்துவிடுவது ... 331

விதிகள்.—331.

கிராண்டுகள் (மான்யங்கள்)

128. பிரதேச கல்வி மானியம் ... 331

129. பிரதேச வரி ஸர்சார்ஜுக்கு இணையான மானியம் ... 332

130. பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதிகளை வகைப் படுத்துவது (பி. 11, 65, 66, 74களை பார்க்கவும் ... 332

131. பிரதேச சாலைகள் (ரோட்டுகள்) மானியம் ... 333

132. கிராம வீட்டு வரிக்கு இணையான மானியம் ... 333

133. சில விஷயங்களில் மானியங்களில் இருந்து தொகை பிடித்து கொள்வது ... 333

பஞ்சாயத்து நிதிகள் [பிரிவுகள் 134—140]

134. பஞ்சாயத்து யூனியன் நிதியையும், பட்டணம் பஞ்சாயத்து யூனியன் நிதியையும், கிராம பஞ்சாயத்து நிதியையும் அமைப்பது ... 333

விதிகள்.—பஞ்சாயத்து நிதிகளை பத்திரமாய் வைப்பதும் முதலீடு செய்வதும், பணம் வாங்கும் விதமும்— 333

135. பஞ்சாயத்து யூனியன் (பொது) நிதி ... 334

136. பஞ்சாயத்து யூனியன் [கல்வி] நிதி ... 336

137. பட்டணம் பஞ்சாயத்து நிதி, கிராம பஞ்சாயத்து நிதி ... 336

138. பெற்றுக்கொள்ளப்பட்ட [வரவு] பணங்களை உபயோகிப்பதும் நிதிகளிலிருந்து செலவு செய்வதும் ... 338

விதிகள்.—குறிப்பிட்ட சீர்திருத்தத்திற்கு செலவு—338

செலவு — கணக்கு புஸ்தகங்களும் — ரிஜிஸ்டர்களும்

139. பஞ்சாயத்து நிதியிலிருந்தும் பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்தும் செய்யப்படும்செலவு ... 339

விதிகள்—1. கட்டாயமானவை என்றுகிலும் யுக்தானுசாரமாய் செய்யக் கூடியவை என்றுகிலும் சில விஷயங்களுக்காகப் பஞ்சாயத்து நிதிகளை ஏற்படுத்தி வைக்க விதிகள் ... 340

பிரிவு பக்கம்

2. வரவு - செலவு - 45 விதிகள்.—341-ம் பக்கத்தில் 45 விதிகளின் அட்டவணையையும் 349-ம் பக்கத்தில் 21-ம் விதியில் சொல்கியுள்ள 14 கணக்கு புத்தகங்கள் ரிஜிஸ்டர்களின் அட்டவணையையும் பார்க்கவும்—அம்மாதிரி 14 ஐடங்கள்.

பட்ஜெட் — ஆடிடர்கள்

140. பட்ஜட்டுகளைத் தயாரித்து அவைகளுக்கு அனுமதிகொடுப்பது [பரிபாவணை அறிக்கை—பி. 54.) ... 356
விதிகள் .—பட்ஜெட்டில் உள்ள இலக்கங்களை மாற்றுவது ... 357
141. [ஆடிட்டர்] தணிக்கை உத்தியோகஸ்தர்களை நியமிப்பது ... 361
விதிகள் :—1, ஆடிட் ரிப்போர்ட்டுகளைப் பிறப்பிப்பதும், பைசல் செய்வது. 362
2. பார்வையிடும் உத்தியோகஸ்தர்கள், மேற்பார்வை செய்யும் உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களுக்குள்ள அதிகாரங்கள் ... 362
142. இதர பிரதேச அதிகார சபைகளால் செய்யப்படும் செலவுக்குத் திரவியசகாயம் செய்வதும் ... 364
143. அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்ட கடன்களையும் முன் பணத்தொகைகளையும் வசூலிப்பது ... 364

5-ம் அத்தியாயம் (பகுதிகள் 144—158)

188, 189

மேல் விசாரணை செய்யும் அதிகாரங்கள்

144. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களையும், பஞ்சாயத்துகளையும் மேற்பார்வையிடும் அதிகாரிகளை நியமிப்பது ... 365
145. பார்வையிடும் அதிகாரிகளுக்குள்ள அதிகாரங்கள் ... 366
146. மேல் விசாரணைசெய்வதன்நிமித்தமாக அதிகாரிகளுக்குள்ள அதிகாரங்கள் ... 368
147. தீர்மானங்களை, லைசென்ஸ்களை [பரிமிதிகளை], உத்திரவுகளை நிறுத்துவதும் ரத்து செய்வதும் ஆன அதிகாரம் ... 369
148. கலெக்டர் இன்ஸ்பெக்டர்களுக்கு உள்ள அவசர அதிகாரங்கள் ... 371
149. பஞ்சாயத்து, தலைவர், அல்லது நிர்வாகஅதிகாரி சட்டமை செய்யத் தவரிப்போனல் நடவடிக்கை எடுத்துக் கொள்ள அதிகாரம் ... 371
150. தலைவர் அல்லது உபதலைவர்களை பதவியிலிருந்து நீக்குவது ... 372
151. அக்கிராசனர் அல்லது உபஅக்கிராசனரை பதவியில் இருந்து நீக்குவது ... 374
152. பஞ்சாயத்துத் தலைவர் அல்லது உபதலைவர்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ... 376
153. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அக்கிராசனர் அல்லது உபஅக்கிராசனர் மீது நம்பிக்கை இல்லாத தீர்மானம் ... 378
154. பஞ்சாயத்துக்களை கலைப்பது ... 380
155. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களை கலைப்பது ... 381
156. ஷ வைகளுக்காக தொழில் செய்யும் அதிகாரிகளின் பொறுப்பும் நிதியும் ... 382
157. அதிகாரங்களை பிரித்துக் கொடுப்பது ... 383
158. அரசாங்கம் புனராலோசனை செய்து உத்தரவுகளை திருத்துவது ... 384

லைசென்ஸ்களை குறித்த பொது விஷயங்கள்

159. லைசென்ஸ்களையும் அனுமதிகளையும் பற்றிய பொதுவான ஷரத்துகள் ... 385
விதிகள் I. இவைகளுடைய நமூனுவும் பொருளடக்கமும் 388
II-இவைகளின் காலவரையறை 390
III-அப்பீல்கள், அவைகளின் காலவரையறை 390
160. அரசாங்கத்தாரும் மார்க்கெட்டுகமிட்டிகளும் லைசென்ஸ்களை பெறவேண்டியதில்லை 390
161. நோடீஸ்கள் உத்தரவுகள் முதலியவைகளை அமுலுக்கு கொண்டு வருவதற்கான அதிகாரம் ... 391

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருளடக்கம்

பிரிவு பக்க

விதிகள்.—நோட்டீஸை அல்லது விளம்பரத்தை பிரசித்தம் செய்யும் விதம் (8-ம் பிரிவின் கீழ் 36-ம் ஐடம் பக்கம் 54ல் பார்க்கவும்)
162. பிரவேசிக்கவும் பார்வையிடவும் அதிகாரங்கள் ... 392
விதிகள் — பக்கங்கள் 247-248 களிலும், பக்கங்கள் 362-363 களிலும் பார்க்கவும்
163. எடைகளையும் முக அளவுகளையும் பரீட்சிப்பது ... 393
164. கிராம பெரித்தனக்காரர்களிடமிருந்தும் கர்ணங்களிடமிருந்தும் தகவலை கேட்க அதிகாரம் ... 394
விதிகள்.—இவைகளை குறித்த அதிகாரம் 394
165. சேரவேண்டிய தொகைகளை வசூலிப்பதற்கு காலவரையறை ... 395

பிராதுகள்—வியாஜ்யங்கள் தேர்தல்கள் இஞ்செக்ஷன்கள்

166. பிராதுகள் தொடர அதிகாரம் பெற்றுள்ள நபர்கள் ... 397
167. குற்றங்கள் விஷயமாய் ராஜி செய்து கொள்வது ... 398
விதிகள்.—ராஜி செய்து கொள்வது 399
168. பிராதுகளைப் பற்றியும், ராஜி விஷயங்களை பற்றியும் பஞ்சாயத்துக்கும் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கும் தெரிவிக்க வேண்டும் என்பது ... 401
169. தலைவர், நிர்வாக அதிகாரி, அக்கிராசனர் கமிஷனர், அங்கத்தினர் பேரில் பிராது தொடர அரசாங்கத்தின்முன் அனுமதிபெற வேண்டும் (பி. 182யை பார்க்கவும்) ... 4[illegible]
170 பஞ்சாயத்துகள் முதலியவைகள் மேல்நஷ்டஈடுமுதலியவைகளுக்காக தாவாக்களை நடத்த முன்னதாக நோட்டீஸ் கொடுக்கவேண்டும் ... 403
171. நல்ல எண்ணத்துடன் செயல்படுகிற அக்கிராசனரையும், கமிஷனரையும் தலைவரையும் நிர்வாக உத்தியோகஸ்தரையும் பாதுகாப்பது ... 405
172. தேர்தல் நடவடிக்கைகளில் இஞ்செக்ஷன் என்னும் உத்தரவு பிறப்பிக்கக் கூடாது ... 406

சர்சார்ஜ்—வரி விதிப்பை குறித்து குற்றம் சொல்வது.

173. சொத்தை இழந்து விட்டாலும், பாழ்பண்ணினாலும், துர்வினியோகம் செய்தாலும், தலைவரும், நிர்வாக அதிகாரியும், அங்கத்தினரும் கமிஷனரும் பொறுப்பாளிகள் ஆவது ... 407
விதிகள்,—சர்சார்ஜ் விதிகள் ... 407
174. வரி விதிப்பு முதலானவைகளை குறித்து குற்றம் சொல்லக்கூடாது என்பது... 410
175. பொது பாட்டைகள் மார்க்கெட்டுகள், கிணறுகள், குளங்கள் முதலியவை எல்லோருக்கும் பயன் படவேண்டும் என்பது ... 413
176. கட்டணங்களை வசூலிக்க குத்தகைக்கு விடுவது ... 414
177. பிரதேச அதிகார சபைகளுக்குள் தகராறுகளை சமரசம் செய்து வைப்பது ... 414

விதிகள் — சகாய சட்டங்கள்

178. விதிகள் செய்ய அரசாங்கத்தாருக்குள்ள அதிகாம் ... 415

அதிகப்படி விதிகள்

விதிகள்.—பொது பாட்டைகள் சந்தைகள் திருவிழாக்கள், சத்திரங்கள், டிஸ்
— பென்சரிகள், நூல் நிலையங்கள் முதலியவற்றை தரம்பிரிப்பது ... 422
— பஞ்சாயத்து வேலைகளை அளப்பதும் தணிக்கை அளப்பதும் ... 423
— பஞ்சாயத்து வேலைகளுக்கு நிர்வாக அனுமதியும் முறைப்படியான அனுமதியும் அளிக்கக்கூடிய அறிக்கைகள் I, II, III விதங்கள். 427
— ஜில்லாபோர்ட் வேலைகளை பஞ்சாயத்துகள் நடத்துவதும் பராமரிப்பதும் ... 429
— பொதுவான அல்லது சொந்தமான நீர் ஊற்றுகளை உபயோகிப்பதின்றும் தடுப்பது அல்லது ஒழுங்கு செய்வது ... 429
மரங்களை சட்டத்தால் அனுமதிக்க படாதவகையில் வெட்டுவது ... 430

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருளடக்கம்

பிரிவு பக்கம்

179. விதிகளை மீறி நடந்தால் தண்டனைகள் ... 430
180. சகாய சட்டங்களும் அவைகளை மீறி நடந்தால் தண்டனைகளும் ... 431
விதிகள்.—பஞ்சாயத்துகள் சகாய தண்டனைகள் சட்டங்களை செய்வது ... 431

தண்டனைகள்

181. II, III ஷெட்யூல்களில் குறிப்பிட்ட தண்டனைகளை குறித்த புதிய ஷரத்துகள். 432
182. யோக்கியதை அற்று இருக்கும் போது பஞ்சாயத்தின் அங்கத்தினராகவோ, தலைவராகவோ, உபதலைவராகவோ அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அங்கத்தினராகவோ, அக்கிராசனராகவோ, உப அக்கிராசனராகவோ செயல் பட்டால் தண்டனை அந்த அதிகாரத்தை ஒப்புவிக்காவிட்டாலும் தண்டனை (பி. 169 யை பார்க்கவும்) ... 434
183. ஒப்பந்தவேலையில் யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் சுயப்பிரயோசனம் அடைந்தால் தண்டனை ... 436
184. நிர்வாக அதிகாரியையாவது, கமிஷனரையாவது, அவருடைய பிரதிநிதியையாவது அக்கிரமமாய் தடுப்பது ... 437
185. பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் முதலியோரை தடுப்பது கூடாது என்பது ... 437
186. நோட்டீஸ் எடுத்து விடுவதை அல்லது கலைத்து விடுவதை தடுப்பது ... 438
187. சங்கதி தெரிவிக்காவிட்டாலும், பொய்யான சங்கதி தெரிவித்தாலும் அதற்கு தண்டனை ... 438

பலவகைப்பட்டவை

188. புதிய பஞ்சாயத்துகளின் விஷயத்தில் பிரத்யேகமான நிபந்தனைகள் ... 439
189. மாற்றப்பட்ட பிரதேசத்தில் இச்சட்டத்தை விஸ்தரிப்பது ... 439
390. பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களை முதல் தடவையாக அமைவது சம்பந்தமாக IV-வது ஷெட்யூலுக்கு உள்படுத்தி இச்சட்டத்தை வாசிக்கவேண்டும் ... 441
191. **கோர்ட்டுகள் அலுவல்களை பஞ்சாயத்துகள் செய்வது நின்றுவிடும்** ... 442

இன்னும் 6 சட்டங்கள்

192. மதராஸ் ஜில்லா முனிசிபாலிடிகள் சட்டம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு பிரயோகப்படும் ... 443
193. மதராஸ் ஆரம்ப கல்வி சட்டம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு பிரயோகப்படும் 443
இச்சட்டத்தின் சுருக்கத்தை பக்கங்கள் 445, 446, 447களில் பார்க்கலாம்.
194. மதராஸ் மோடார் வரி விதிப்பு சட்டம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு பிரயோகப்படும் ... 447
195. மதராஸ் கேளிக்கை வரி சட்டம் மதராஸ் யூனியன்களுக்கு பிரயோகப்படும். 448

மதராஸ் கேளிக்கை வரி சட்டமும், விதிகளும் [449—476]

20 பிரிவுகள் — 54 விதிகள் — 10 நமூனுக்கள் அட்டவணை— 448
பிரிவு 4 A-யும் — அரசாங்கத்தார் உத்திரவுகள் —452-A, 452-B

196. மதராஸ் டிஸ்ட்டிரிக் போர்டுகள் தேர்தல்களை 2—10—1962 வரையில் ஒத்திவைக்கப்பட்டது ... 476
197. லோகல் போர்டுகள், டிஸ்ட்ரிக்ட் போர்டுகளை குறித்தது ... 476
198. அரசாங்கத்தாருக்கு கஷ்டங்களை நிவர்த்திசெய்ய அதிகாரம் ... 477

I-ம் ஷெட்யூல்

பி. 120 (3) படிக்கு வீடுகளுக்கு வரி போடும் விதத்தை குறித்தது ... 477

II-ம் ஷெட்யூல்

சாதாரண அபராத தண்டனைகள் — பி. 181 (1) படிக்கு ... 478

III-ம் ஷெட்யூல்

தொடர்ந்து செய்து வருகிற குற்றங்களுக்காக அபராத தண்டனைகள் ... 480

மதராஸ் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் பொருளடக்கம்

IV-ம் ஷெட்யூல்

இடைக்கால ஷரத்துகள்—26 விதிகள்—அவைகளின் அட்டவணை—481—487

ஷரத்து		பக்கம்
1.	(i) மேற்படி தேதி (ii) பழைய சட்டம் (iii) பஞ்சாயத்து (iv) கிராமம் ...	481
2.	I-வகுப்பு பஞ்சாயத்தை பட்டணம் பஞ்சாயத்து ஆகவும், II வகுப்பு பஞ்சாயத்தை கிராம பஞ்சாயத்து ஆகவும் மாற்றப்பட்டது ...	481
3.	I-வகுப்பு பிரதேசம் "பஞ்சாயத்து பட்டணம்" எனவும் II வகுப்பு பிரதேசம் பஞ்சாயத்து கிராமம்" எனவும் கருதப்படும் ...	482
	...	482
4.	அரசாங்கத்தினர்களின் எண்ணிக்கை முன் மாதிரியே இருக்கவேண்டும் ...	482
5.	இடைக்காலத்தில் மெம்பர்களின் நிலை ...	482
6.	ஒதுக்கி வைக்கப்பட்ட ஸ்தானங்கள் ...	482
7.	வார்டுகள் ...	482
8.	தலைவர்கள்—உபதலைவர்கள் ...	482
9.	தலைவர்கள்—உபதலைவர்களின் காலிஸ்தானங்கள் ...	483
10.	கலைக்கப்பட்ட பஞ்சாயத்துகளை மீண்டும் அமைப்பது	
11.	ஜில்லா போர்டுகளின் - பஞ்சாயத்துகளின் - ஆரம்ப பள்ளிக்கூடங்கள் - ஜங்கம சொத்துக்கள் - பிராவிடெண்டுபண்டு முதலியன. ...	483
	...	484
12.	ஜில்லா போர்டுகள் சிப்பந்திகள்	
13.	சத்திரம் - மருந்துசாலை பிரசவ ஆஸ்பத்திரி சிசு சம்ரக்ஷணசாலை - வாசகசாலை ...	484
	...	484
14.	ஜனன - மரண பதிவு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு மாற்றப்பட்டது ...	
15.	பஞ்சாயத்துகளின் வாசகசாலைகள் பஞ்சாயத்தின் யூனியன் கவுன்சிலுக்கு மாற்றப்பட்டன ...	484
16.	லாண்டு செஸ்ஸை பஞ்சாயத்துகளுக்கும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கும் பங்கிட்டு கொடுக்கப்படும் ...	485
	...	485
17.	ஆரம்ப கல்வி நிதி பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலை சேரும் ...	485
18.	ஆரம்ப கல்வி நிதியை பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் வசூலிக்கும் ...	485
19.	ரயில்வே செஸ்முதலியன பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு சேரும் ...	485
20.	ஜில்லா போர்டுகளின் பொது நிதி பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலை சேரும்...	485
21.	ஜில்லா போர்டின் ஒப்பந்தங்கள் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஒப்பந்தங்கள் ஆகும்	485
22.	பழைய சட்டங்களின் கீழ் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டு போகலாம் ...	486
23.	பழைய சட்டங்களின் கீழ் உள்ள மனுக்கள் விஷயங்கள், அப்பீல்கள் இந்த ஆக்டின் படிக்கும் கிடைக்கும் ...	486
24.	முன் நடவடிக்கைகள் வியவஹாரங்கள் கிரமமாக நடத்தப்பட்டவையாக கருதப்படும் ...	486
25.	நிறுத்தி வைத்த பாபத்துகளை அரசாங்கம் சரிப்படுத்தும் ...	487
26.	இந்த இடைக்கால விஷயங்களில் கஷ்டம் இருந்தால் அரசாங்கம் சரிப்படுத்தும் ...	487
	மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் சுருக்கம் ...	488—497
	மேற்படி சட்டத்தின் பொருள் அகராதி ...	498—507

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் தேர்தல் விதிகளும், குறிப்புகளும் விலை ரூபா 3-00.

மதராஸ் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் பொருள் அடக்கம் முற்றிற்று.

மதராஸ் ஜில்லா அபிவிருத்தி சபைகள் சட்டம்—507—524

1959 ஷூத்திய மதராஸ் பஞ்சாயத்துகள் சட்ட திட்டங்கள்

1958 ஷூத்திய மதராஸ் பஞ்சாயத்துகள் 35-வது சட்டம்

தொடக்கம்

தொடக்கமும் — அதின் பொருளும்

		பக்கம்
1.	நம்முடைய இந்தியா என்கிற பாரத நாட்டின் விளக்கம். ...	1
2.	மதராஸ் என்கிற தமிழ் நாடு. ...	2
3.	தமிழ் மொழி. ...	...
4.	ஜி. ஓக்களும் (அரசாங்கத்தார் உத்திரவுக்களும்) போர்ட்செயிண்ட் ஜார்ஜ் கெஜட்டும். ...	3
5.	பஞ்சாயத்துக்கள் சட்டமும் அங்கத்தினர்களும். ...	...
6.	பஞ்சாயத்துகள் சட்டமும் விதிகளும். ...	...
7.	பஞ்சாயத்துகள் சட்டமும்—அதில்யுள்ளதை விரும்பாமையும். ...	4
8.	பழைய கிராம பஞ்சாயத்துகளும், புதிய கிராம பஞ்சாயத்துகளும், புதிய பட்டணம் பஞ்சாயத்துகளும். ...	...
9.	பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள், ஜில்லா அபிவிருத்தி சபைகள். ...	...
10	"பஞ்சாயத்து" என்கிற பதத்தை இந்த ஆக்ட்டின் படிக்கு எட்டு விதமாக உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. ...	...
11.	தமிழ் நாட்டு பஞ்சாயத்துகளின் பூர்வ சரித்திரம் ...	...
12.	பூர்வ சட்டங்களின் சரித்திரம் ...	5
13.	பஞ்சாயத்துகள் கிராம கோர்டுகள் வேலைகளை செய்யக்கூடாது. ...	...
14.	புதிய பஞ்சாயத்துகளை ஏற்படுத்துவது. ...	...
15.	இந்த சட்டம் அமுலுக்கு வரும் பொழுது ஷெட்யூல் IV ன் விதிகள் படிக்கு நடந்துகொள்ள வேண்டும். ...	...
16.	இந்த ஆக்ட்டின் **ஹேதுக்களும், நோக்கங்களும்.** ...	...
17.	சென்னை 1958ஷூத்திய பஞ்சாயத்துகள் 35-வது சட்டத்தின் முக்கிய அம்சங்கள். ...	11
18.	இங்கிலீஷ் சுருக்கு எழுத்துகளின் விவரணம் ...	11

1. நம்முடைய இந்தியா என்கிற பாரத நாட்டின் விளக்கம் :— இந்தியா உலகத்தில் 7-வது பெரிய நாடு. இதை பார்லிமெண்டு என்னும் பாராளுமன்றம் ஆளுகிறது. இதில் 14 ராஜ்யங்களும் 9 பிரதேசங்களும் உண்டு. தமிழ் நாடு என்னும் மதராஸ் விஸ்தீரண அளவில் 11-வது ராஜ்யம், ஜன தொகையில் 3 வது ராஜ்யம்.

தேசம் ராஜ்யம்	சதுரமைல் விஸ்தீர்ணம்	இதற்கு 100-க்கு	ஜனத்தொகை	சதுரமைல் 1-க்கு ஜன தொகை
இந்தியாவில் ...	1,266,900	100%	35,68,79,394	289
தமிழ்நாடு என்கிற மதராசில் ...	50,174	4%	2,99,74,936	597
கேரளா என்கிற மலையாளத்தில் ...	14,397	1%	35,49,118	907
வங்காளத்தில் ...	33,958	3%	2,63,02,386	774

தமிழ்நாடுநூற்றுக்கு 4 பங்கு நாடாகவும், ஜன தொகையில் மைல் ஒன்றுக்கு 597 ஜன தொகையும் அதாவது 3-வது நாடாகவும் இருக்கிறது.

இப்படி இருந்தும் தமிழ் நாட்டில் தன்வரையில் பஞ்சமில்லாமல் செய்து கொள்ளலாம். அதற்காகத்தான் 1958 ஷூத்திய 35-வது சட்டத்தின் பீடிகையிலேயே முதல் பாராவிலேயே "உணவு உற்பத்தியை ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதிகரிப்ப" வேண்டுமென்று எடுத்துகாட்டி யிருக்கிறது. இதை அடைய தமிழ் நாட்டிற்கு கோதாவரி நதியின் ஜலத்தை கால்வாய்கள்மூலம் கொண்டுவந்து பயிர்செய்தால் கட்டாயமாக தமிழ் நாட்டில் இப்போது உற்பத்தியாகும் பயிர்களை இரட்டத்தனையாக செய்ய முடியும்.

இந்தியா (மத்ய சர்க்காரின்) அரசாங்கத்தில் 15 மந்திரிகள் இருக்கிறார்கள். அதை 2 கோடி மக்களுக்கு ஒரு மந்திரி என்று கணக்கிட்டு அவைகளில் தமிழ் நாட்டுக்கு ஒரு மந்திரி ஸ்தானமாவது கட்டாயம் இருக்கவேண்டும். உத்தர பிரதேசத்தில் 6 கோடி மக்களுக்கு 3 மந்திரி ஸ்தானங்களுக்குமேல் இருக்கக்கூடாது. இப்போது அவர்களுக்கு 7 மந்திரி ஸ்தானங்கள் இருக்கிறது. பம்பாய்க்கு 5 கோட்டி மக்களுக்காக 2 மந்திரி ஸ்தானங்கள்மேல் இருக்கக்கூடாது. இப்போது அவர்களுக்கு 4 மந்திரி ஸ்தானங்கள் இருக்கிறது. மந்திரி ஸ்தானங்களை அடிப்படையிலேயே மாற்றவேண்டும்.

மேலும் மீதி விவகாரங்களிலும், தமிழ் நாட்டு மக்களுக்கு பாதுகாப்பு உள்பட எல்லா மத்ய அரசாங்க துறைகளிலும் பீடிகையில் சொன்னபடிக்கு, ஜனத்தொகைக்கு ஏற்ற படி உத்யோகங்களை கொடுக்கவேண்டும். இவை வட நாட்டுக்காரர்களுக்கும் ஜனத் தொகைக்கு தக்கபடியே இருக்கவேண்டும். அவர்களுக்கு அதிகமாக இருக்கக் கூடாது.

2. மதராஸ் என்கிற தமிழ்நாடு ராஜ்யம் :—இது இந்தியா தேசத்தில் ஒரு பெடரல் (கூட்டு) அரசாங்கம். இது ஒரு சட்டசபை (அசெம்ப்ளி) யாலும் மேல் சட்ட கவுன்சிலாலும் ஆளப்படுகிறது. இவைகள் செய்யும் சட்டங்கள்படிக்கும் பஞ்சாயத்துகளும், முனிசிபாலிடி களும் வேலைகளை செய்யவேண்டுமே தவிர, தங்கள் மனபோக்கின்படிக்கு வேறென்றான வேலை களைசெய்யக்கூடாது, ஆகையால் பட்டணம் பஞ்சாயத்துகளும், கிராம பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும், ஜில்லா அபிவிருத்தி கவுன்சில்களும் கடைசியாக செய்யப்பட்ட 1958 ஷூத்திய 35-வது ஆக்ட்டின்படிக்கு நடந்துகொள்ள வேண்டும். பழைய சட்டம் செல்லாது.

நம் இந்தியா தேசத்தில் உணவு பஞ்சம் நீங்கியபிறகு, அரசாங்கத்தார் தாங்களாகவே பட்டினி யுள்ளவர்களுக்கு வேலை கொடுத்தும், வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்வார்கள். அதுவரையிலும் அவர்களால் பட்டினியாக உள்ளவர்களுக்கு யாதொரு வேலையில்லாத காரணத்துக்காக யாதொரு வேலை யில்லாதவர்களுக்கு கொடுக்கக் கூடிய பென்ஷனும் தரமுடியாது.

கல்லூரி படிப்பு பணக்காரர் பிள்ளைகளுக்கே என்று பட்டம் கட்டியிருக்கிறது போலும். புத்தி கூர்மையுள்ள ஏழை மாணவர்கள் கல்லூரிகளில் படிக்கவும் அல்லது சர்வ (பல்) கலா சாலைகளின் பட்டங்கள் பெறவும் நம் மதராஸ் அரசாங்கம் அக்கறை எடுத்து கொண்டு வழி காட்டியாக இல்லாதது ரொம்பவும் வருந்தத் தக்கதாக இருக்கிறது. ஜப்பானில் ஒரு லட்சம் மக்களுக்கு 586 பேர்கள் பல்கலைக் கழகங்களின் (University Degrees) பட்டங்களையும், அமெரிக்காவில் ஒரு லட்சம் மக்களுக்கு 174 பேர்கள் பல்கலைக் கழகங்களின் பட்டங்களையும், நம் இந்தியாவில் ஒரு லட்சம் மக்களுக்கு 17 பேர்கள் பல்கலைக் கழகங்களின் (யூனிவர்சிடி) பட்டங்கள் பெற்றிருக்கிறார்கள். நாம் எப்போது அங் நாடுகள் மாதிரி வெகு பட்டங்கள் பெற்ற மாணவர்களை நம் நாட்டில் காணப் போகிறோம்! சுயராஜ்யம் வந்து 10 வருடங்கள் ஆய்விட்டன. இன்னும் உணவு பஞ்சமே தீரவில்லை. படிப்பு பஞ்சம் எப்போது தீரும்? 5 ஆண்டு திட்டங்களை தீவிரமாக நிறைவேற்றினால் தீரலாம். [சன்கர் விக்லி.[8-2-1959. பக்கம் 5.]

3. தமிழ் மொழி :—தமிழிலேயே சட்ட சபைகளில் சட்டங்களை நிறை வேற்றும் காலம் வந்த பிறகுதான் தமிழ், தெலுங்கு முதலான பிரதேச பாஷைகளுக்கு மேன்மையும், அபிவிருத் தியும் உண்டாகும். இந்தியில் சட்டத்தை செய்தாலும் அது உபயோக மில்லாமல் போய் விடும். தாய் மொழியான தமிழில் இன்னும் சட்டத்தை செய்ய அதிகாரம் இல்லாதது வருந்த தக்கதாக இருக்கிறது. இந்த சட்டத்தை (ஆக்ட்டை) யும் முதலில் இங்கிலீஷில் பாஸ் (செய்யப்பட்டது). தமிழிலும், தெலுங்கு முதலிய பாஷைகளிலும் இப்போது உள்ள சட்டங்கள் பூராவும் மொழி பெயர்க்கப் பட்டவைகளே ஆகும். அம்மாதிரி மொழி பெயர்ப்புகள் சட்ட சபையின் அங்கீகாரம் பெறவில்லை. ஆகையால் அவைகள் சட்ட அளவுக்கு அதிகாரம் உள்ளவை என்று சொல்ல முடியாது. அவ்வளவு நம்பத் தக்கனவைகளும் அல்ல. [ஜேதா

எ. ராமச்சந்திர, 16. Bom. 689 (698)] ஆனாலும் மொத்த மொழிபெயர்ப்புகளிலும் அரசாங்கத்தாரால் செய்யப்பட்ட மொழி பெயர்ப்பானது. அன்னியாரால் செய்யப் பட்டவைகளைக் காட்டிலும், எடுத்துக் கொள்ளத் தக்கினவைகளாக இருக்கின்றன. [செ சிமான் - எ - ஷிப் நாராயன், 66. I. C. 193 (P. C.) : : ராஜேந்திரா - எ - கோபாலா, A. I. R. 1930, P. C. 242. இந்த புத்தகத்தில் அரசாங்கத்தாருடைய மொழி பெயர்ப்பையே அச்சிட்டிருக்கிறது.

4. ஜி. ஓ. க்களும் (அரசாங்கத்தார் உத்தரவுகளும்), போர்ட் செயிண்ட் ஜார்ஜ் கெஜட்டும் :—ஜி. ஓ. க்கள் என்றால் கவர்ன்மெண்டு உத்தரவுகள். அவை சட்டங்கள் அல்ல. விதிகளும் அல்ல. அவை அரசாங்கத்தாரால் விளக்கப்பட்ட அர்த்தமாகும். அவைகளை கோர்ட்டார் ஒத்துக் கொள்ள வேண்டியது கிடையாது. [பெஜவாடா முனிசிபாலிடி—எ—வெங்கடா A. I. R. 1943, M. 55 : : லக்ஷ்மணசாமி—எ—அப்துல், A. I. R. 1930, M. 703]. எல்லா விதிகளையும் போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரிக்க வேண்டும். அப்படி செய்யாவிட்டால் அவைகளை விதிகள் என்று சொல்லமுடியாது. [பிரிவு. 178 (3)] பார்க்கவும். ஆகையால் கெஜட்டில் பதிப்பது முதன்மையானதாகும். கெஜட்டின் தேதியும், பக்கமும் முக்கியம். ஜி. ஓ. வின் நெம்பரும் தேதியும் அவ்வளவு முக்கியமானது அல்ல. ஆகையால் ஜி. ஓ. ஜி. ஓ. என்னும் பிரமையை விட்டுவிடவேண்டும். வருஷம், கெஜட். பக்கம் எண்ணை (நெம்பர்)ஐ கை பிடிக்க வேண்டும்.

5. பஞ்சாயத்துகள் சட்டமும் அங்கத்தினர்களும்:— பஞ்சாயத்து சட்டத்தின் விஷயங்களை அறிய முடியாதவர், அறிந்து கொள்ளாதவர் பஞ்சாயத்து அங்கத்தினராக இருப்பது மகா பாதகம் ஆகும். இவர்களை கைகாட்டும் பொம்மைகள் என்றும் மக்களின் உரிமைகளை நாசமாக்கும் தேசதுரோகிகள் என்றும் கூறலாம். இப்பேர்ப்பட்டவர்களை அங்கத்தினர்களாக செய்து வைக்கும் கக்ஷியர்களும் தேசதுரோகிகளே ஆவார். சட்டத்தின் நோக்கங்களை பீடிகையின் படிக்கு நடத்துவது அவசியம். இவைகளை நிறைவேற்ற நிபுணர்கள் வேண்டியது இல்லை. இவைகள் சாதாரண அறிவும் அக்கரையும் உள்ள கிராமவாசிகள் செய்யவேண்டிய காரியங்கள் ஆகும். இவர்கள் செய்யும் தீர்மானங்கள் முடிவானவை. இவைகளை சாதாரணமாக கோர்ட்டுகள் மாற்றமாட்டாது. ஆனல் இவைகள் பஞ்சாயத்துகள் சட்டத்திற்கு விரோதமாக யிருந்தால் இவைகளை கோர்டுகள் மாற்றலாம் அப்படி மாற்றுவது மிக மிக குறைவானதாக இருக்கும் [அப்துல்-எ-முச்சூரி சிடி போர்டு. A. I. R. 1931 All. 147] கோர்டார்களும் மற்றவர்களும் அங்கத்தினர்கள் அறிந்து சரியாக காரியங்களை செய்கிறார்கள் என்று முதலில் நம்ப வேண்டியதாக யிருக்கிறது. அவைகள் தவறுதல் என்று சொல்லலாம். ஆனல் தவறுதல் என்று ருஜுபடுத்தும் பாரம் சொல்லுகிறவர் பேரில் தான் இருக்கும் அங்கத்தினர்களையும் சட்டத்தை அறிந்தவர்களாகவே எண்ணவேண்டி இருக்கிறது. [சசுன்வால்-எ-தானுமுனிசிபாலிடி. A. I. R. 1932 Bom. 259].

இச்சட்டத்தின் படிக்கு அரசாங்க விஷயங்களில் பஞ்சாயத்துகள் சீர்த்திருத்தங்கள் எதுவும் செய்ய முடியாது. ஆகையால் இவைகளில் அரசாங்க கக்ஷிகள் இருக்க அவசியமில்லை. ஆனல் அப்படி நடக்கபோகிறதில்லை. பட்டணம் பஞ்சாயத்துகள் முனிசிபாலிடி அங்கத்தினர்களுக்கு மாத்திரம் மதராஸ் மேல் சட்டசபை அங்கத்தினர்களை தேர்ந்தெடுக்கும் பாத்யதை இருப்பதினால் அவர்களில் பெரும்பாலோர் லஞ்சத்திற்கு ஈடுபட்டார்கள், அது ஓட்டு ஒன்றுக்கு ரூபா 300 வரையில் ஏறியிருக்கிறது. ரூபா 50க்கு குறையவில்லை. இந்த மேல் சட்ட சபைக்கு அங்கத்தினரை தேர்ந்தெடுக்கும் பாத்யதையை எல்லா கிராம பஞ்சாயத்து அங்கத்தினர்களுக்குப் கொடுக்கவேண்டும். அந்த ஓட்டுகளை பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஆபீஸில் எடுத்தால் இந்த லஞ்சம் கொடுக்கும் பழக்கம் நீங்கும் என்று எதிர்பார்கிறோம்.

பஞ்சாயத்து சட்டமும்-தண்டனைகளும்.—சட்டத்தில் தண்டனை ஏற்படுத்தா விட்டால் அதை குற்றமாக பாராட்டக்கூடாது. அபராதமும் விதிக்க கூடாது. [கௌரி-எ-பந்து, A. I. R. 1929 All. 394 துகாராம் விட்டல் குறித்து. (1878) 2 Bon. 527].

6. பஞ்சாயத்துகள் சட்டமும், விதிகளும் :—கிராம பஞ்சாயத்துகளும், பட்டணம் பஞ்சாயத்துகளும், பட்டணம் யூனியன் கவுன்ஸல்களும் இந்த சட்டத்தை ஆதாரமாக உள்ளது. இந்த சட்டத்தின் பிரிவு 178-ன்கீழ் செய்யப்பட்ட விதிகளாலும் இன்னும் இதர பிரிவுகளின் கீழ் செய்யப்பட்ட விதிகளாலும் இவைகள் ஆளப்பட்டு வரும். ஆகையால் இந்த ஆக்ட்டு தன்வரையில் பூர்த்தியானது அல்ல. விதிகளையும் இந்த சட்டத்துடன் சேர்த்து வாசிக்க வேண்டும். அவைகள் இந்த புத்தகத்தில் உள்ளன.

7. பஞ்சாயத்துகள் சட்டமும்-அதில் யுள்ளதை விரும்பாமையும்:—விரும்பாமல் இருக்கும் ஒரு வரியோ அனுமதியோ உத்தரவோ தடையோ கிரமபடிக்கு மாற்றி கொள்ளவேண்டும். அப்படிக்கு அன்றி கும்பலாக சேர்ந்து எதிர்த்தால், அதற்கு தக்க தண்டனையும் அடைவதற்கும் தயாராக இருக்க வேண்டும். வேண்டாத விஷயத்தை மாற்றிக் கொள்ள வேண்டு மென்ருல், சட்டத்தையோ, தீர்மானத்தையோ மாற்றி கொள்ள வேண்டும் அல்லது கோர்டுக்கு போய் அங்கு பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும். [ரெக்ஸ்-எ-லண்டன் கவுண்டி கவுன்சில், 1931-2 K. B. 215].

8. பழைய கிராம பஞ்சாயத்துகளும், புதிய கிராம பஞ்சாயத்துகளும், புதிய பட்டணம் பஞ்சாயத்துகளும் :—பழைய ஆக்ட்டில் எல்லா பஞ்சாயத்துகளையும் கிராம பஞ்சாயத்துகள் என்றும் அவைகளில் பெரிதானவைகளை முதல்தர பஞ்சாயத்துகள் என்றும் மீதியை இரண்டாம் தர பஞ்சாயத்துகள் என்றும் வழங்கப்பட்டன. அவைகளையே புதிய சட்டத்தில் பட்டணம் பஞ்சாயத்துகள் எனவும், கிராம பஞ்சாயத்துகள் எனவும் வழங்கப்படும். [பி 190, ஷெட்யூல் IV, விதி. 2—பிரிவு 3, பிரிவு 2 (22), பிரிவு 2 (25) பிரிவு 8].

9. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள், ஜில்லா அபிவிருத்தி சபைகள் :—பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் பிரிவு 11 படிக்கு ஏற்படுத்தப்பட்டவை. ஜில்லா அபிவிருத்தி சபைகள் மதராஸ் 1958 ஷூத்திய 18-வது சட்டத்தினுல் அமைக்கப்பட்டவை. இந்த இரண்டு இனங்களும் சமுதாய அபிவிருத்தின் தேசீய விஸ்திரிப்பு சேவை திட்டம் என்றும் 1-ம் 5-ஆண்டு 2-ம் 5-ஆண்டு, 3-ம் 5-ஆண்டு திட்டம் என்னும் திட்டங்களை போன்றது. முகவுரை (பீடிகை) யின் iii-வது பாராவை யும் 11, 65, 66 பிரிவுகளையும் பார்க்கவும்.

10. " பஞ்சாயத்து " என்கிற பதத்தை இந்த ஆக்ட்டின் படிக்கு எட்டு விதமாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது:—

1. **" பஞ்சாயத்து "** [பி. 2 (20)] என்பது பி. 8 பிரகாரம் ஏற்படுத்தி பரிபாலனம் அல்லது " ஆட்சி " செய்யும் ஒரு " மன்றம் " அல்லது " கழகம் " (" சபை " என்பது பொருத்தமாக இல்லை) இது கிராம பிரதேசத்தை (தலத்தை) ஆளும் ஆட்சிக்கும் பட்டணப் பிரதேசத்தை (தலத்தை) ஆளும் ஆட்சிக்கும் பொதுவான பெயர்.
2. **" பஞ்சாயத்து பட்டணம் "** [பி. 2 (21) இது " பட்டண பஞ்சாயத்தால் " ஆளப்பட்ட பிரதேசம் (தலம்).
3. **" பட்டணம் பஞ்சாயத்து "** [பி. 2 (32)] இது " பஞ்சாயத்து பட்டணத்தை " ஆளும் தல ஆட்சி.
4. **" பஞ்சாயத்து கிராமம் "** [பி. 2 (25)] இது " கிராம பஞ்சாயத்தால் " ஆளப்பட்ட பிரதேசம் (தலம்).
5. **" கிராம பஞ்சாயத்து "** [பி. 7, 8] இது " பஞ்சாயத்து கிராமத்தை " ஆளும் தல ஆட்சி.
6. **" பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதி "** [பி. 2 (21)]. இது சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு சேவை திட்டத்தின் " காரியங்களுக்காக பிளாக் அபிவிருத்தியின் தொகுதியாகயுள்ள பிரதேச விஸ்தீர்ணத்தை " பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதி " என்று கூறப்படும். [பி. 7 (1) (a) பார்க்கவும்.] அந்த " பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதியை " பி. 7 (1) (b) படிக்கு " பஞ்சாயத்து யூனியன் " என்று ஏற்படுத்தப்படும்-பஞ்சாயத்து யூனியன்களைக் குறித்து அடியில் பார்க்கவும்.
7. **" பஞ்சாயத்து யூனியன் "** பி. 2 [23] இது மேல்படி 6-வது ஐடத்தில் (Item) கண்ட பிரதேசத்திற்கே மற்றெரு பேரு ஆகும்.
8. **" பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் "** [பி. 2 (24]. இது பஞ்சாயத்து யூனியன் ஆளும் தல ஆட்சி பிரிவுகள் 11, 12 படிக்கு அமர்ந்து இருக்கும்.

11. தமிழ் நாட்டு பஞ்சாயத்துகளின் பூர்வ சரித்திரம்.—தமிழ் நாட்டில் கிராமங்களில் பஞ்சாயத்து என்னும் 5 பேர் சேர்ந்த மத்யஸ்த ஸ்தாபனங்கள் இருந்து வந்தன அவை கிராமங்களின் பொது நல விஷயங்களையும், சொத்து சண்டை முதலிய விவகார விஷங்களையும் ஜாதி, குடும்பம் -- இவைகளை குறித்த சச்சரவுகளையும், கவனித்து வந்தன. ராஜாக்கள் மாறிக்

கொண்டு வந்தார்கள் ஆனல் கிராமங்களில் விஷயங்களை கிராமத்தாரே பார்த்து வந்தார்கள். அது பரம்பரையாக வந்து கொண்டு இருந்தது.

இங்கிலீஷ் அரசாங்கம் வந்த பிறகு அவைகள் சிதிலமாய் விட்டன. 5 பேராக இருந்தது மாறிவிட்டு கிராம அதிகாரிகளுடைய பெரிய தனத்தின் கீழ் வந்தது.

ஜாதி பிரிவினை—தீண்டாமைகளால் நாடு நாசமாகி விட்டது. இதை குறித்து சித்தர்கள் நூல்களை படிக்கவும்.

12. பூர்வ சட்டங்களின் சரித்திரம்.— 1853-ம் வருடத்தில் இங்கிலீஷ் அரசாங்கம் "லோகல் பண்ட்" என்னும் வரியை நிலவரியின் மேல் அதிக வரியாக போட்டு அதை பொது பாட்டைகளுக்கும், படிப்புக்கும் உபயோகப் படுத்தப்பட்டது. அத்துடன் இன்னும் சில சிறிய வருமானங்கள் சேர்க்கப்பட்டன.

1863–ம் வருடத்தில் ஆரம்பக்கல்வி ஆக்ட்டும்,

1866-ம் வருடத்தில் டிஸ்ட்ரிக்ட் போர்ட் செஸ் ஆக்ட்டும்,

1871-ம் வருடத்தில் லோகல் பண்டு ஆக்ட்டும்,

1884-ம் வருடத்தில் 5-வது ஆக்ட்டாக லோகல் போர்டுகள் ஆக்ட்டும் வந்தன.

1884-ம் வருடத்திய 5-வது ஆக்ட்டு படிக்கு பெரிய கிராமங்களுக்கு யூனியன் போர்டுகள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளில் அதிகாரிகளுக்கு பெரியத்தனம் அதிகமாகயிருந்தது. பிறகு1920-ம் வருடத்திய 14-வது ஆக்ட்டு படிக்கு அங்கத்தினர்களை நேமகம் செய்வது எடுத்துவிடப்பட்டன.

1920-ம் வருடத்தில் 8-வது ஆக மதராஸ் ஆரம்பக்கல்வி ஆக்ட்டும்,

1920-ம் வருடத்தில் *14*-வது ஆக்டாக மதராஸ் லோகல் போர்டுகள் ஆக்ட்டும்-

1927-ம் வருடத்தில் 5-வது ஆக்ட்டாக வேடிக்கைகளுக்கு வரிபோடும் ஆக்ட்டும் வந்தன.

இந்த ஆக்ட்டுகள் 1930-ம் வருடத்திய 11-வது ஆக்ட்டினல் திருத்தப்பட்டன

1930-ம் வருடத்திய 11-வது ஆக்ட்டு படிக்கு பஞ்சாயத்துகள் என்கிற பெயரை புதிதாக யூனியன் போர்டுகளுக்கு கொடுக்கப்பட்டன. அங்கத்தினர்களுக்கு பஞ்சாயத்துதாரர்கள் என்னும் பெயரை கொடுக்கப்பட்டது.

1950-ம் வருடத்திய-10-வது ஆக்ட்டு டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு தனி ஆக்ட்டாகவும், கிராம பஞ்சாயத்துகளுக்கு தனி ஆக்ட்டாகவும் பிரிந்து விட்டது. இந்த ஆக்ட்டு வருவதற்கு முந்தி அட்வொகேட் **சி. வி. நாயுடு அவர்களை பொருக்கு கமிட்டியில் விசாரித்தார்கள்.**

1958-வது வருடத்திய மதராஸ் பஞ்சாயத்துகள் 35-வது ஆக்ட்டினுல் 1920-ம் வருடத்திய 14-வது ஆக்ட் ஆகிய டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் ஆக்ட்டையும், 1950-ம் வருத்திய 10-வது ஆக்டாகிய மதராஸ் கிராம பஞ்சாயத்துகள் ஆக்ட்டையும் ரத்து செய்து விடப்பட்டது. (பிரிவு-13)

13. கிராம கோர்ட்டுகள்:—இவைகளின் வேலைகளை கிராமபஞ்சாயத்துகளும் பட்டணம் பஞ்சாயத்துகளும் பி. 191 படிக்கு செய்யக்கூடாது.

14. புதிய பஞ்சாயத்துகளை ஏற்படுத்துவது:—இதை குறித்து பி. 188-யை பார்க்கவும்.

15. இந்த சட்டம் புதிதாகஅமுலுக்கு வரும்பொழுது ஷெட்யூல் IV-ன் விதிகள் படிக்கு நடந்து கொள்ள வேண்டும்.

16. இந்த ஆக்ட்டின் ஹேதுக்களும் நோக்கங்களும் அவைகளின் பொருளடக்கமும்

(1) இச்சட்டத்தின் நோக்கம்.

(2) டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு பதிலாக பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் ஏற்படுத்தப்பட்டன.

(3) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கு தேர்தல் விவரம்.

(4) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் உடையவும், பஞ்சாயத்துகள் உடையவும் அலுவல்கள்.

(5) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் போட்டியில்லை.

(6) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும் கல்வியும், படிப்பும்.

(7) இந்த ஆக்ட்டின் மூலம் வரும்படிகள் உயர்த்தப் பட்டன.

(8) இந்த ஆக்ட்டு அமுலுக்கு வருவதைக் குறித்து.
(9) தல ஸ்தாபன பரிபாலனத்தை குறித்த வெள்ளை அறிக்கையும், அதின் பேரில் பிர தேச நிதி உபகமிட்டி செய்த சிபார்சுகளும்.
(10) இந்த ஆக்ட்டு 1950ஞுத்திய மதராஸ் கிராம பஞ்சாயத்துகள் ஆக்ட்டையும் 1920ஞுத்திய மதராஸ் டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் ஆக்டையும் தொடருகிறது.
(11) பகுதிகளின் குறிப்புகள்
(12) அதிகாரங்களை பிரித்து கொடுப்பது.
(13) நிதி நினைவு குறிப்பு யாதாஸ்து.
(14) பகுதிகள் பற்றிய குறிப்புகளை அந்தந்த பிரிவுகளின் கீழ் சேர்க்கப்பட்டன.

இந்த ஆக்ட்டின் ஏதுக்களையும் நோக்கங்களையும் பற்றிய விவரணம்

1. இந்த சட்டத்தின் நோக்கம் .— இந்த ராஜ்யத்தின் கிராமாந்தரப் பகுதிகளில் தல நிர்வாக அமைப்பைச் சீரமைப்பதற்கான சட்டரீதியான அடிப்படையை ஏற்படுத்துவதே இம் மசோதாவின் உத்தேசமாகும். சமுதாய அபிவிருத்தித் திட்டத்தைச் சேர்ந்த தேசீய விஸ்தரிப் புச் சேவை திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதில் சமீப காலங்களில் ஏற்பட்ட முன் னேற்றம் தான் இந்தச் சீரமைப்புக்கு அவசியமாயிற்று. இது பற்றிய கொள்கை சம்பந்தமான பொருத்தமான ஆலோசனைகள் **பீடிகையில் பூர்த்தியாகத் தரப்பட்டுள்ளன.** இந்த உத்தேச சீரமைப்பால் ஏற்படுகிற முக்கியமான மாறுதல்களைப்பற்றிய ஒரு சுருக்கம் இந்த விவரணத்தில் தரப்பட்டுள்ளது.

2. டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு பதிலாக பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் ஏற்படுத் தப்பட்டன.—உத்தேச மாறுதல்களில் மிகமுக்கியமான மாறுதல் என்ன வென்றால் ஜில்லா அளவில் ஜில்லா போர்டுகளை எடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக சமுதாய அபிவிருத்தித் திட்டத்தைச் சேர்ந்த தேசீய விஸ்தரிப்புச் சேவைத் திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் தொகுதிகள் அளவில் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களை அமைப்பதேயாகும். இந்த மாறுதலால் இரண்டு நோக்கங்கள் நிறைவேறுமென்று உத்தேசிக்கப்படுகிறது.

முதலாவதாக, மேற்படி அபிவிருத்தித் தொகுதி ஜில்லாவைவிட நிர்வாக ரீதியில் அடக்கமான பிரதேச பொறுப்பு ஒன்றை ஏற்படுத்தும். புதிய பஞ்சாயத்து யூனியன் கவுன் ஸில் அங்கத்தினர்கள் மிக விசாலமான பிரதேசத்திலிருந்துவருகிற ஜில்லாபோர்டு அங்கத் தினர்களைக் காட்டிலும் தங்கள் கூட்டுப் பொறுப்பிலுள்ள பிரதேச விஸ்தீர்ணம் முழுவதற்கு முள்ள தேவைகளையும் வளங்களையும் பற்றித் தாங்களே சென்று விவரமாய்த் தெரிந்துகொள்ள முடியும். ஆகவே கிராம மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தல நிர்வாகம் திறமை யாக நடப்பதற்கும் அதில் தாங்கள் சீரிய பங்கு கொள்வதற்கும் அவர்களுக்கு இந்த மாறுதல் உதவியாயிருக்கும்.

இரண்டாவதாக, தேசீய விஸ்தரிப்புச் சேவை சிப்பந்தி ஸ்தாபனங்கள் அபிவிருத்தித் தொகுதிகளில் ஏற்படுகிறசேவை சம்பந்தமான தேவைகளையனுசரித்து அமைக்கப்பட்டுள்ளது. அந்த சிப்பந்திகளுக்கும் இந்தத் தேவைகளை அனுசரித்தே பயிற்சி யளிக்கப்பட்டுள்ளது. இந்த அபிவிருத்தித் தொகுதிகள் இந்தியாவிலுள்ள சகல ராஜ்யங்களிலும் பொதுவாக ஒரே அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த சிப்பந்தி ஸ்தாபனங்களின் சேவையானது கிராம மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குக் கிடைக்கும்படிச் செய்வது அவசிய மாகும். அபிவிருத்தித் தொகுதியை ஓர் ஆட்சிப் பிரதேச யூனிட்டாகக் கொண்டு தலநிர்வாகத் தைச் சீரமைத்தால் இந்த முடிவை சௌகர்யமாகப் பெறுவதற்குதவியாயிருக்கும்.

3. பஞ்சாயத் யூனியன் கவுன்சில்களுக்கு தேர்தல்கள் விவரம் .— இப்போது ஜில்லா போர்டுகள் முற்றிலும் பஞ்சாயத்துகளுக்குச் சம்பந்தமில்லாத ஒரு தேர்தல் நடைமுறையினால் அமைக்கப்படுகின்றன. ஜில்லா போர்டுகளுக்குப் பதிலாக அமைக்கப்படுகிற பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்கள் பஞ்சாயத்துக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்பது உத்தேசமாகும். இந்த உத்தேசத்துக்கேற்ப பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலில் ஒவ்வொரு பஞ்சாயத்தும் தனித்தனியாகவும் பிரத்தியேகமாகவும் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக் களின் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அங்கத்தினர் பிரதிநிதியாக இருக்க வேண்டுமென்று, இந்த மசோதா வகை செய்கிறது. இந்த மாறுதலால் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கும் பஞ்சாயத்துக்களுக்கு மிடையே நெருங்கிய தொடர்பும் ஒற்றுமை யுணர்ச்சி

யும் ஏற்படுவதுடன் இதன் பலனைத் தங்கள் தங்கள் துறைகளில் அவற்றின் செயல்கள் முன்னிலும் இணக்கமாக நடைபெறுமென்றும் உத்தேசிக்கப்படுகிறது.

4. பஞ்சாயத் யூனியன் கவுன்ஸில்கள் உடையவும் பஞ்சாயத்துக்கள் உடையவும் அலுவல்கள்.—பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் தனித் தனியே கொடுக்க உத்தேசிக்கப்படுகிற அலுவல்கள் முடிவில் இப்போது ஜில்லா போர்டுகளுக் கும் பஞ்சாயத்துக்களுக்கும் கொடுத்துள்ள அலுவல்களைப் போன்றேயிருக்கும். ஆனல், அவை கீழே குறிப்பிட்டுள்ள மாறுதல்களுக்குட்பட்டவையாயிருக்கும் :

முதலாவதாக, இப்போது உயர்தர பாடசாலைகள் ஆஸ்பத்திரிகள், பெரிய ஜில்லா சாலைகள், முசாபரி பங்களாக்கள் ஆகிய இவற்றை ஜில்லா போர்டுகள் நிர்வகித்து வருகின் றன. இந்த ஸ்தாபனங்களின் வேலைகளும் ஜில்லா போர்டு அலுவல்களின் வியாபகத்தி லிருந்து நீக்கப்பட்டு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களிடம் ஒப்படைக்க உத்தேசிக்கப் படுகிறது.

இரண்டாவதாக, சமுதாய அபிவிருத்தி திட்டத்தைச் சேர்ந்த தேசிய விஸ்தரிப்புச் சேவை திட்டத்தை அனுசரித்து இப்போது அபிவிருத்தித் தொகுதிகளின் உற்பத்தி வளங்களை விருத்தி செய்வதற்கான பற்பல ஏற்பாடுகள் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஏற்பாடுகள் ஜில்லா போர்டுகளுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் கொஞ்ச மேனும் சம்பந்த மில்லாதவை. இந்தத் திட்டம் முழுவதையும் நிறைவேற்றுவதற்கான பொறுப்பை பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் சம்மதத்துக்கும் அது ஒத்துக்கொள்கிற நிபந்தனைகளுக்கும் ஷரத்துக் களுக்கும் உட்பட்டு அந்த கவுன்ஸிலிடம் ஒப்படைக்க அரசாங்கத்தாருக்கு சாத்தியமாகிற அதிகாரத்தை இந்த மசோதா அவர்களுக்களிக்கிறது.

5. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் போட்டி இல்லாமல் விஷயங்களை சரிபடுத்தப்பட்டன.—இப்போது ஜில்லா போர்டுகளுக்கும் பஞ்சா யத்துகளுக்கும் சட்ட ரீதியாக ஒதுக்கப்பட்டுள்ள அலுவல்களில் பல ஒன்றையொன்று ஒத்திருக்கின்றன. இவ்வாறு ஒரே மாதிரியான அலுவல்களை இவை செய்வதை நீக்குவதற்கும் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் பஞ்சாயத்து ஆகிய ஒவ்வொன்றுக்குமுள்ள பொறுப்பு வகை யறைகளைத் திட்டவட்டமாக நிர்ணயிப்பதற்கும் அவற்றின் அலுவல்களை மாற்றியமைக்கவும் இப்போது உத்தேசிக்கப்படுகிறது.

6. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும்-கல்வியும் - படிப்பும்.— இவ்வாறு அலுவல் களை மாற்றியமைக்கப்படுவதால் ஏற்படுகிற முக்கியமான ஒரு பலன் என்னவென்ருல், ஆரம் பக் கல்வித் துறை முழுவதற்கும் ஏக போகமான பொறுப்பை பஞ்சாயத்து யூனியன் கவுன் ஸில்களிடம் ஒப்புவிப்பதேயாகும். அவை இப்போது ஜில்லா போர்டுகள், பஞ்சாயத்துக்கள் அல்லது அரசாங்க இலாகாக்களால் நிர்வகித்து வரப்படுகிற) சகல பொது ஆரம்பப் பள்ளிக் கூடங்களையும் பராமரித்து வருவதற்காக பொறுப்பாளியா யிருப்பதுடன் அரசாங்க உதவி பெறும் தனிப்பட்ட ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்காக மான்யங்களைக் கொடுப்பதற்கான பொறுப்பும் அவைகளிடம் ஒப்படைக்கப்படும். ஆரம்பக் கல்வியை திட்ட ரீதியாக அபிவிருத்தி செய்வதற்கான முழுப் பொறுப்பும் ஒவ்வொரு அபிவிருத்தித் தொகுதியிலும் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் மீது அதன் இஷ்டம்போல் கட்டாயமான ஓர் அடிப்படை யில் ஒப்புவிக்கப்படும்.

7. இந்த ஆக்ட்டின் மூலம் வரும்படிகள் உசரப்படுத்தப் பட்டன.— ஜில்லா போர்டு களுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் நிதி ஆதாரங்களை வகுத்துக் கொடுப்பது சம்பந்தமாக இப் போது அமுலிலிருந்து வருகிற திட்டம் போதுமானதாயில்லையென்று நீண்ட காலமாகவே குறை கூறப்பட்டு வருகிறது. பிரதேச வரி விதிப்பு நிதி ஆதாரங்களைப் பற்றிய முழுத்திட்ட மும் ஆரம்பக் கல்விக்கும் இதர நோக்கங்களுக்குமுள்ள அரசாங்க மான்யங்கள் ஆகியவையும் இப்போது பரிசீலனை செய்யப்பட்டு மாற்றப்பட்டுள்ளன. புதிதாக ஒதுக்கப்பட்டுள்ள அலுவல் களை யொட்டி பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களுக்கும் பஞ்சாயத்துக்கும் தேவையா யிருக் கக் கூடிய அதிக பண ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட் டுள்ளன. அரசாங்க மான்யங்கள் சம்பந்தமான புதிய திட்டம் உள்பட வரி விதிப்பு நிதியா தாரம் பற்றிய புதிய ஏற்பாடானது உத்தேசத் தேவைகளை அனுசரித்துத் தக்க பண ஆதாரங் கள் கிடைக்கும்படி வகை செய்யப்பட்டுள்ளது.

8. இந்த ஆக்ட்டு எப்பொழுது அமுலுக்கு வருவதை குறித்தது.— இந்தப் புதிய அமைப்பை ஒரே நாளில் அமுலுக்குக் கொண்டு வந்து விட முடியாது. 1961-ம் ஹூ அக்டோபர்

மாதம் 2-ம் தேதியை லட்சியத் தேதியாக வைத்துக்கொண்டு படிப்படியான ஒரு திட்டத்தை யனுசரித்து அபிவிருத்தித் தொகுதிகளில் இப்புதிய சட்டத்தைப் படிப்படியாக அமுலுக்குக் கொண்டுவர இம் மசோதா வகை செய்கிறது. மேற்படி லட்சியத் தேதிக்குள் இப்போது பஞ்சாயத்துக்களில்லாத சகல கிராமங்களிலும் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்த வேண்டியது மன்றி இந்த ராஜ்யத்தின் சகல அபிவிருத்தித் தொகுதிகளிலும் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களை ஏற்படுத்திவிட வேண்டும். இப்போது ஜில்லா போர்டுகளின் அலுவல்களைக் கவனித்து வருகிற விசேஷ அதிகாரிகள் அந்த அலுவல்களைப் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்கள் மேற்கொள்ளுகிற வரையில் தொடர்ந்து செயலாற்றி வருவதற்காகவும் இம் மசோதா வகை செய்கிறது. [1 (3), 11, 65, 66 பிரிவுகளின் கீழ் குறிப்பை பார்க்கவும்].

9. தல ஸ்தாபன பரிபாலனத்தை குறித்த வெள்ளை அறிக்கையும் அதின் பேரில் பிரதேச நிதி உப கமிட்டி செய்த சிபார்சுகளும்.—இம் மசோதாவில் செய்யப்பட்டுள்ள சகல மாறுதல்களும், இரு சட்ட மன்றங்களிலும் நிறைவேறிய தீர்மானத்தின் மூலம் அமைக்கப் பட்ட சட்ட மன்றக் கமிட்டியால் தல நிர்வாகம் பற்றிய வெள்ளை அறிக்கையைபற்றி பரிசீலனை செய்கையில் மேற்கொண்ட பொதுவான உடன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு செய்யப் பட்டுள்ளன. பிரதேச வரி விதிப்பு, நிதியாதாரங்கள் ஆகியவை சம்பந்தமான பிரேரேபணைகள் மேற்படி சட்ட மன்றக் கமிட்டியாரால் நியமிக்கப்பட்ட பிரதேச நிதி உப கமிட்டியொன்றால் தொகுக்கப்பட்டவையாகும். இந்த பிரேரேபணைகளை பிரதான கமிட்டி பிற்பட்டு ஆலோசனை செய்திருக்கிறது.

10. இந்த ஆக்ட்டு, மதராஸ் கிராம பஞ்சாயத்து ஆக்ட்டையும் மதராஸ் டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் ஆக்ட்டையும் தொடருகிறது.—1950-ம் வருஷத்திய சென்னைக் கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டம், 1920-ம் வருஷத்திய சென்னை ஜில்லா போர்டுகள் சட்டம் ஆகிய ஒன்றிற் குப் பதிலாகத் தன்னிறைவு கொண்ட ஒரு சட்டத்தை ஏற்படுத்தும் வகையில் இம் மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த இரண்டு சட்டங்களிலும் கண்டுள்ள ஏராளமான பிரிவுகள் மாறுதல் எவையுமன்றி இம் மசோதாவின் பகுதிகளாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது.

11. பகுதிகளின் குறிப்புகள்.—பகுதிகள் பற்றிய குறிப்புக்கள் மேற்படி மாறுதல்களைக் கொண்டு வருகிற இம் மசோதாவின் பகுதிகளுக்கு மட்டும் சம்பந்தப்படுபவை யாகும்.

12. அதிகாரங்களைப் பிரித்துக் கொடுப்பது பற்றிய சட்ட நிரூபணம் சம்பந்தமான யாதாஸ்து:—இம் மசோதாவின் 14, 15, 26 (1), 30, 34 (4), 35, 36, 37 (2), 39 (2), 41 (5) (b), 44 (3), 47, 50, 51, 52 (2), 54, 57 (3), 58, 59, 61, 63, 64, 65, 67, 68, 70, 72 (4), 74, 84 (2), 85, 86, 93, 99, 106, 109, 113, 117, 119 (3), 120 முதல் 123 வரை, 124 (3), 125, 126, 138, 139, 162, 167, 178 பகுதிகளில் இம் மசோதாவின் சில ஷரத்துக் களை அவற்றின் கீழ் தக்க விதிக்களைச் செய்வதன் மூலம் அமுலுக்குக் கொண்டு வரும் விதத் தைப் பற்றியும், முறையைப் பற்றியும் நிர்ணயிக்க அரசாங்கத்தாருக்கு அதிகாரம் அளிக்கப் பட்டிருக்கிறது. 3, 6, 16, 57 (3) பகுதிகள் இம் மசோதாவின் சில ஷரத்துக்களை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான அதிகாரங்களைச் செலுத்த இன்ஸ்பெக்டருக்கு அதிகாரம் அளிக்கின் றன. பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்கள் எந்தக் காரியங்களுக்காக அமைக்கப்பட்டுள்ளனவோ அந்தக் காரியங்களை நிறைவேற்றுவதற்காக ரெகுலேஷன்கள் அல்லது சகாயச் சட்டங்களைச் செய்வதற்கு 51, 180-வது பிரிவுகள் அவைகளுக்கு அதிகாரம் அளிக்கின்றன. அரசாங்கத்தார் இந்த உத்தேசச் சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க அதிகாரங் களைத் தங்களுக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகளுக்குப் பிரித்துக் கொடுக்க 107-வது பகுதி அவர் களுக்கு அதிகாரம் கொடுக்கிறது. இந்தச் சட்டம் முதலியவற்றின் ஷரத்தை முதன் முதலாக அமுலுக்குக் கொண்டு வருவதில் கஷ்டம் ஏதாகிலும் ஏற்பட்டால் அதை நிவர்த்திக்க செய்வ தற்காக அரசாங்கத்தார் தங்களுக்கு அவசியமெனத் தோற்றக்கூடிய எதையாகிலும் செய்ய 193-வது பகுதி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. பிரித்துக்கொடுக்கப்பட்ட இந்த அதி காரங்கள் சாதாரண தன்மை வாய்ந்தவையாகும். அவை அசாதாரணத்தன்மை வாய்ந்தவை அல்ல.

13. நிதி யாதாஸ்து நினைவு குறிப்பு :— இந்த ராஜ்யத்திலே பிரஸ்தாப வருஷத்தில் வசூலிக்கப்படுகிற (தண்ணீர்வரி உள்ளிட்ட) மொத்த நில வரியில் பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியின் ஜனத்தொகையில் நபர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் ஏற்படுகிற தொகையை ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலுக்கும் செலுத்தவேண்டுமென்று இம் மசோதா

வின் 118-வது பிரிவில் ஏற்பாடு செய்து இருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலுக்கும் வருஷா வருஷம் பிரதேசக் கல்வி மானியம் ஒன்றையும், பிரதேச ஸெஸ் ஸர்சார்ஜ் நிகர் மானியம் ஒன்றையும் முறையே கொடுப்பதற்காக 128, 129-வது பகுதிகள் ஏற்பாடு செய்கின்றன. பிரதேச சாலை மானியம், கிராம வீட்டு வரி நிகர் மானியம் ஆகியவற்றை முறையே கொடுப்பதற்காக 131, 132-வது பகுதிகள் வகை செய்கின்றன. பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில், பஞ்சாயத்து ஆகியவற்றின் நிதிகள் சம்பந்தமான வரவு செலவு கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக தணிக்கையாளர்களை நியமிக்க 141-வது பிரிவில் ஷரத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்கள், பஞ்சாயத்துக்கள், இவற்றை மேற்பார்வையிடுவதற்காக அதிகாரிகளை நியமிக்க 144-வது பகுதி வகை செய்கிறது. ஆகவே, இச் சட்டத்தின் காரணமாக இந்த ராஜ்ய சஞ்சித நிதியிலிருந்து செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இந்தச் சட்டத்தை நிர்வகிப்பது சம்பந்தமாகப் பிடிக்கக்கூடிய செலவு திட்டவட்டமாக இவ்வளவுதான் ஆகுமென்று இந்தத் தசையில் மதிப்பிட்டுச் சொல்வது சாத்தியமல்ல. ஏனென்ருல், வருஷா வருஷம் பிடிக்கும் செலவு அதிகரிப்பானது இத் திட்டம் படிப்படியாகக் கொண்டுவரப் படுவதையும், பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களும் பிரதேச நிதி ஆதாரங்களைத் திரட்ட எடுத்துக்கொள்ளும் முயற்சிகளையும் பொறுத்து இருக்கும். தல நிர்வாகம் பற்றிய சட்டமன்றக் கமிட்டியின் பிரதேச நிதி உப கமிட்டியார் இந்த மசோதாவில் சொல்லப்பட்டுள்ள நிதி ஆதாரங்களை ஷை உப கமிட்டியார் கருத்தில் கொண்டிருந்த லட்சியங்களையும் திட்டத்தையும் அனுசரித்து வகுத்துக் கொடுப்பது சம்பந்தமான இப் புதிய பிரேரேபணைகள் நிதி பலாபலன்களைப்பற்றி பரிசீலனை செய்தார்கள். அந்தக் கமிட்டியார் தெரிவித்த அபிப்பிராயங்கள் சட்ட மன்றத்தாருக்குத் தெரிவதற்காக கீழே எடுத்து எழுதப்படுகின்றன:-

" இந்த அறிக்கையின் முன் பாகத்தில் ஒதுக்கப்பட்ட பிரதேச வருமானங்களும் அரசாங்க மானியங்களும் சேர்ந்து இந்த ராஜ்ய பஞ்சாயத்துக் கிராமங்களிளெல்லாம் இப்போது நபர் வாரியாக 275 நயாபைசாவாக ஆகிறதென்றும், சராசரியில் இது நபர்வாரியாக 600 நயா பைசாவுக்கு உயர்த்தப்பட உத்தேசிக்கப்படுகிறதென்றும் நாங்கள் விளக்கிச் சொன்னேம். நபர் வாரியாக சுமார் 325 நயா பைசா வரையில் துண்டு விழுகிறதென்றும், இத் துண்டை நிறப்ப வேண்டுமென்றும் நாங்கள் எடுத்துச் சொன்னேம். 'இந்தப் பணம் எங்கிருந்து கிடைக்கும்?' என்ற கேள்வியை எழுப்பினேம். இந்தக் கேள்விக்கு இந்தத் தசையில் பதிலளிப்பது உசிதமாகும்.

முதன் முதலாக, மேற்படி 325 நயா பைசாவில் 'நில வரி ஸெண்டேஜ்' என்கிற வரி விதியைப்பற்றி நாங்கள் தெரிவித்துள்ள பிரேரேபணையின் மூலம் நபர் வாரியாக 100 நயா பைசா கிடைக்கும். இது புதிய நிதி ஆதாரங்களைத் திரட்டுகிற ஒரு பிரச்னை அல்ல; இது ராஜ்ய அரசாங்கத்தாருக்கு இப்போது கிடைக்கும் வருமான இனங்களைப் பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாற்றுவதேயாகும். ராஜ்ய அரசாங்கத்தார் தனிப்பட்ட ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு மானியங்கள் கொடுப்பது சம்பந்தமாக இப்போது அவர்களுக்குள்ள பொறுப்பு அதற்கு நிகரான அளவுக்குக் கணிசமாய் குறைக்கப்படுகிறது. எந்தக் கிராமங்களில் இப்போது பஞ்சாயத்துக்கள் இல்லையோ அங்கே திரட்டப்படப்போகிற புதிய வருமான ஆதாரங்களை இப்போது நாம் விட்டு விடலாம். இந்த வருமான ஆதாரங்கள் மற்ற இடங்களில் கிராமப் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்படுவதன் பலனுக திரட்டப்படலாம். அப்போது இந்த ராஜ்யத்திலுள்ள கிராம ஜனத்தொகை முழுவதற்குமாக கிராமப் பஞ்சாயத்து அபிவிருத்திச் செலவு என்பதற்கு நபர் வாரி 225 நயா பைசா என்கிற ஒரு தொகையைக் கருதலாம். இது இந்த ராஜ்யம் முழுவதற்குமாக, வருஷா வருஷம் 40 கோடிக்கும் 5 கோடிக்கும் இடையில் ஒரு தொகையாகும்.

பட்டணப் பஞ்சாயத்துக்கள் சப்பந்தப் பட்டவரையில்ஆரம்பக்கல்வி சம்பந்தமாக அன்றி மற்றப்படி தற்போதிய நபர்வாரி செலவு அளவில் குறிப்பாக எந்த ஏற்றத்தையோ இறக்கத்தையோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இதற்காகக் கொஞ்சம் தள்ளுபடி செய்துகொண்டுப் பார்த்தால் இந்த ராஜ்யத்தின் கிராம ஜனத்தொகை (அதாவது முனிஸிபல் பிரதேச மல்லாத பிரதேசங்களில் வசிக்கிற ஜனத்தொகை) முழுவதற்குமுரிய பஞ்சாயத்து அபிவிருத்தி செலவின் மொத்தத் தொகை வருஷம் ஒன்றுக்கு சுமார் 5 கோடி ரூபாய் ஆகுமென நாம் தீர்மானிக்கலாம். இந்த மொத்தத் தொகையில் வருஷம் ஒன்றுக்கு $3\frac{1}{2}$ கோடிக்குக் கொஞ்சம் குறைவாக ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்குத் தேவைப்படுகிறது இதில் ஏழைச் சிறுவர்களுக்குப் பள்ளிக்கூட உணவளிப்பதும் உட்படும். தவிர, வருஷம் ஒன்றுக்கு $1\frac{1}{2}$ கோடிக்கு மேல் கிராமங்களில் பிரதேச வசதிகளின் தரங்களை உயர்த்தவும் வேண்டியிருக்கிறது.

நாங்கள் சிபார்சு செய்துள்ள நிதித் திட்டத்தின்படி அதிகமாக்கப்பட்ட பிரதேச வரி விதிப்பின் மூலம் சுமார் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் கிடைக்குமென நாங்கள் எதிர்பார்க்கிரும், தவிர, ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கு பிரதேச சகாயத் தொகையாக வருஷமொன்றுக்கு $\frac{1}{2}$ கோடி ரூபாய்க்குமேல் கிடைக்குமென்றும், பிரதேச வசதிகளுக்காக வருஷமொன்றுக்கு 1 கோடி ரூபாய்க்குக் குறைவாகக் கிடைக்குமென்றும் நாங்கள் எதிர்பார்க்கிரும். இன்னும் உயர்ந்த அளவு செலவு வீதமானது படிப்படியான பஞ்சாயத்து நிர்வாக அமைப்புத் திட்டப் பிரகாரம் வருஷா வருஷம் அபிவிருத்தித் தொகுதிகளில் ஒன்றுக்குப்பின் ஒன்ருகக் கொண்டுவரப்பட வேண்டும்.

நமது நிதித் திட்டத்தின் நிகரான பலன் என்ன வென்ருல், பஞ்சாயத்து அபிவிருத்திச் செலவில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் (ஏறக்குறைய வருஷ மொன்றுக்கு $3\frac{1}{2}$ கோடி ரூபாய்) ராஜ்ய அரசாங்க நிதிகளிலிருந்து வகை செய்ய வேண்டி யிருக்கிறது. இதைத்தான் மேற் சொன்ன கணக்கு எடுத்துக்காட்டுகிறது. ராஜ்ய ரீதியில் புதிய வரி விதிப்பு எதையும் (ஏற்கெனவே நாங்கள் சொல்லியிருக்கிற விவசாய வருமான வரியைத் தவிர) விதிக்க நாங்கள் உத்தேசிக்க வில்லை என்பதைத் தெளிவாகச் சொல்லிவிட விரும்புகிரும். சென்னை ராஜ்யம் தனது அபிவிருத்தித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான நிதி ஆதாரங்களை திரட்டுவதற்கு தன்னுல் இயன்றதை யெல்லாம் செய்து இருக்கிறது என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். புது பஞ்சாயத்து நிர்வாகத்திற்குக் கொடுத்துள்ள விரிவான அதிகாரங் களைச் செலுத்தி அது விதிக்குமென்று நாங்கள் எதிர்பார்க்கிற பிரதேச வரி விதிப்பின் மூலம் ஏராளமான தொகை கிடைக்கும். ஆகவே, மேலும் வரி விதிப்பு செய்வதைத் தவிர்ப்பது அத்தியாவசியமாகும். இரண்டாவது ஐந்து ஆண்டு திட்டத்தின்படி பொருத்தமான தலைப்பு களின் கீழ் (உதாரணமாக ஆரம்பக் கல்வி, சாலைகள் முதலியவற்றின் கீழ்) ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ள வருமான ஆதாரங்கள் (ஷை திட்டத்தின் கீழ் உதவி மூலமாகக் கிடைக்கக் கூடிய மத்திய அரசாங்க மானியங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்ட பிறகு) நாங்கள் சிபார்சு செய்துள்ள சர்க்கார் மான்யங்கள் மீது ஏற்படும் செலவைச் செய்வதற்குப் போது மானவையாகும். ஆகவே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் எஞ்சியுள்ள சில வருஷங் களுக்கு இந்த நிலைமை போதுமான அளவுக்குப் பாதுகாப்பாயுள்ளது.

ஆனுல், பஞ்சாயத்து நிர்வாகத்துக்கு நிதி அளிப்பதற்காக நாங்கள் உத்தேசித்திருக் கிற திட்டமானது நிரந்தரமான தன்மை வாய்ந்ததாகும். நாங்கள் உத்தேசித்துள்ள செல வின் அளவு நிதானமாக அதிகரித்துக் கொண்டே போகும். இச் செலவின் உச்ச வரை யறையை மூன்ருவது திட்டக் கால அளவின்மைய வருஷத்துக்குப் பிறகுதான் அடைய முடியும். நாங்கள் சிபாரிசு செய்துள்ள நிதித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற் காக, ராஜ்ய அரசாங்கத்தாருக்கு மத்திய அரசாங்க மானியங்கள், மூன்ருவது ஐந்தாண்டு திட்டக் கால அளவு பூராவிலும் தொடர்ந்து கிடைக்க வேண்டு மென்பது மிக மிக அத்தியா வசியமாகும். அப்போது தான் நாங்கள் சொல்லி யிருக்கிற பிரகாரம் பஞ்சாயத்து அபிவிருத் திச் செலவில் குறிப்பிட்ட ஒரு பங்கை அடைக்க முடியும். பஞ்சாயத்து அபிவிருத்திக்காக புதிய வருமான ஆதாரங்களைத் திரட்டும் பொறுப்பானது மூன்று இடங்களில் சமமாகப் பங்கிடப்பட்டால் அது நியாயமான பங்கீடாகுமென் று நாங்கள் கருதுகிரும். அந்தப் பொறுப்பில் மூன்றில் ஒரு பங்கு அரசாங்கத்தாரிடமும், மூன்றில் ஒரு பங்கு மத்திய அரசாங் கத்தாரிடமும் பங்கிடப்பட வேண்டும். மூன்ருவது திட்டக்கால அளவில் மத்திய அரசாங்கத் தார் ஏற்கவேண்டிய பங்கு இரண்டாவது ஐந்தாண்டு திட்டக்கால அளவில் அவர்கள் ஏற்கும் பங்கைவிட எந்தச் சந்தர்ப்பத்திலும் சிறியதாய் இருக்கக்கூடாது.

இந்த ராஜ்ய அரசாங்கத்தார் இந்தப் பிரச்னையைக் குறித்து நேரிடையாக மத்திய அரசாங்கத்தாரிடம் ஆலோசனை செய்யவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிரும். அரசியல் அமைப்பின் 36, 40, 45, 46, 47, 48-வது பிரிவுகளில் கண்டுள்ள குறிப்பான ஷரத் துக்களைக் கருதியும், பஞ்சாயத்து நிர்வாகத்தை அபிவிருத்தி செய்வது மிக அவசியமாகு மென்று பிரதம மந்திரி அவர்களும் மத்திய அரசாங்க இதர உயர்தர அதிகாரிகளும் வெவ்வேறு இடங்களில் சொல்லியிருப்பதைக் கருதியும் கூட, நாங்கள் சிபாரிசு செய்துள்ள நிதித் திட்டம் (மத்திய அரசாங்க மானியங்களுக்காக வகை செய்து அதன் முக்கியமான பாகமாய் அமை வது உட்பட) ஏற்றுக்கொள்ளப்பட்டு மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படு மென்று நாங்கள் எ ர்பார்க்கிரும்.''

17. 1958 ஷ்த்திய சென்னை பஞ்சாயத்துகள் சட்டத்தின் முக்கிய அம்சங்கள்

பஞ்சாயத்துகளின் சட்டங்களையும், விதிகளையும் அறியாதவர்களுக்கும், அவைகளின் நடைமுறைகளிடத்தில் அக்கரையுடையவர்களுக்கும் பயன்படுமாறு கீழ்க்கண்ட குறிப்புகள் முதலில் வாசிப்பது நலமென தெரிவிக்கப்படுகிறது.

1. தொடக்கம்—பக்கம்—1.
2. பிரிவு 8 "கிராம பட்டண பஞ்சாயத்துக்களை அமைப்பதும் அவைகள் சட்டப்படிக் கான சபைகள் ஆவதும்" அதின் குறிப்புகள்.
3. பிரிவு 11 "பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களை அமைப்பதும்-அவை சட்டப்படி சேர்ந்த சபைகளாயிருப்பதும்" அதின் குறிப்புகள்.
   இவைகளால் "பஞ்சாயத்துகள்" "பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள்" ஐ குறித்து சுருக்கமாக அறிய முடியும்.

4.	அங்கத்தினர்களின் உரிமைகள்	பிரிவுகள்	38
5.	மீடிங்குகள் (சபைகள்) முதலியன	,,	46-56
6.	எலெக்ஷன்கள் (தேர்தல்கள்)	,,	14.31, 36
7.	வரி விதிப்பு	,,	119-122
8.	லைசென்சுகள் (பரிமிதிகள்)	,,	111-113, 159, 160, 176
9.	தண்டனைகள்	,,	181-187
10.	பிராது தொடரல்	,,	166, 169
11.	வியாஜ்யம் தொடரல்	,,	170-174
12.	வருமானம் - செலவு	,,	134-143
13.	விதிகள் செய்வது	,,	178
14.	உபவிதிகள் செய்வது	,,	180

18. இங்கிலீஷ் சுருக்கு எழுத்துக்களின் விவரணம்.

All or A. = இன்டியன் லா ரிபோர்ட், அலகாபாத்.
A. I. R. = அகில இந்தியா ரிபோர்டர், அலகாபாத்.
Cr. L. J. = கிரிமினல் லா ஜர்னல்.
I. A. = இன்டியன் அபீல்ஸ்.
I. C. = இன்டியன் கேஸெஸ்.
M. L. J. = மதராஸ் லா ஜர்னல்.
M. L. T. = மதராஸ் லா டைம்ஸ்.
L. W = லா வீக்லி.
M. W. N. = மதராஸ் வீக்ளீ நோட்ஸ்.
Andhra = ஆந்திரா;
Assam = அஸ்ஸாம்;
Bom. or B. = பம்பாய்;
Cal or C. = கல்கத்தா;
F. C. = பெடரல் கோர்ட்.
Kerala = கேரளா;
Lah. or L. = லாகூர்;
Mad. or M. = மெட்ராஸ்;
Orissa = ஒரிஸா.
Mys. = மைசூர்.
Oudh. = அயோத்யா.
Patna = பாட்னு.
Punjab = பஞ்சாப்.
Rajas. = ராஜஸ்தான்.
Rangoon = ரங்கூன்.
Sindh. = சிந்து.
Sup. C. = சுப்ரீம் கோர்ட்.

C. V. NAIDU'S
Hindu Marriage Act of 1955
Net Price is Rs. 2·25 nP. Per Copy
Hindu Succession Act of 1956
HINDU MINORITY AND GUARDIANSHIP ACT OF 1956
HINDU ADOPTIONS AND MAINTENANCE ACT OF 1956
Net Price is Rs. 2·25 nP. Per Copy
THE CHEAPEST AND BEST IN THE FIELD.

1959 ஷுத்திய மதராஸ் பஞ்சாயத்துகள் சட்ட திட்டங்கள்

1985 ஷுத்திய மதராஸ் பஞ்சாயத்துகள் 35-வது சட்டம்

MADRAS PANCHAYATS ACT

MADARS ACT 35 OF 1958

AN ACT TO MAKE BETTER PROVISION FOR THE ORGANIZATION OF **VILLAGE AND TOWN PANCHAYATS AND FOR THE CONSTITUTION OF PANCHAYAT UNION COUNCILS**

கிராம, பட்டணம் பஞ்சாயத்துக்களை நிறுவுவதுபற்றி முன்னிலும் சிறந்த ஏற்பாடு செய்வதற்காகவும் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களை அமைப்பதற்காகவுமான சட்டம்.

பீடிகை

I. ஜனத்தொகை அதிகரிப்பதற்கு ஏற்றவகையில் உணவு உற்பத்தியை ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதிகரிப்பதும், ஜனத்தொகை அதிகரிப்பைக் கட்டுப் படுத்துவதும், நாட்டு நலனுக்கு அவசியமாயிருக்கிற படியாலும்.

II. இந்த இரண்டு தேசீயக் காரியங்களை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவேற்றுவதானது கிராமாந்தரங்களில் வேலை வசதி வாய்ப் பினை அபிவிருத்தி செய்தல், கிராம வாழ்க்கை நிலைகளை சீர்திருத்துதல், கிராமப் பகுதிகளில் கலாச்சார, கேளிக்கை வசதிகளை ஏற்படுத்தித்தருதல், இவ்வித மாக கிராம மக்களின் வாழ்க்கை நிலைகளை உயர்த்துதல் ஆகியவற்றை உத் தேசித்து எடுத்துக்கொள்ளப்படும் விரிவான நடவடிக்கைத் திட்டத்தின் பாக மாக மேற்கொள்ளப்படுவதைப் பொறுத்திருக்கிறபடியாலும்.

III. அத்தகைய விரிவான நடவடிக்கைத் திட்டம் சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்புச் சேவைத் திட்டத்தில் வகுத்துக் கொள்ளப்பட்டு சேர்த்துக் கொள் ளப்பட்டிருக்கிற படியாலும், அத் திட்டத்தை அனுசரித்து கிராமப் பகுதிகளில் பல சேவைகள் நிறுவப்பட்டிருக்கிறபடியாலும், கட்டு வேலைகள் நிர்மானிக்கப் பட்டிருக்கிறபடியாலும், இதர வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறபடி யாலும்.

IV. மேற்சொன்ன சேவைகள், கட்டு வேலைகள், இதர வசதிகள் ஆகியவற்றை செவ்வனே வைத்து வருவதற்கும் அவற்றைப் படிப்படியாக மேலும் அபி விருத்தி செய்வதற்கும் பொறுப்பேற்று நிறைவேற்ற முடிவதற்கு ஏற்ற வகை யில் கிராமப் பகுதிகளில் தல நிர்வாக ஸ்தாபனங்களை அமைப்பதற்காகச் சட்டபூர்வமான ஏற்பாடு செய்யவேண்டியிருக்கிற நிலை வந்து விட்டிருக்கிறபடி யாலும்.

V. ராஜ்யமானது கிராமப் பஞ்சாயத்துக்களை அமைக்க ஏற்பாடுகள் செய்து, சுய ஆட்சியின் உறுப்புக்களாக அவை வேலை செய்வதற்கு அவசியமான சக்திகளை யும் அதிகாரங்களையும் அளிக்கவேண்டும் என்பது அரசியலமைப்பில் சொல்லி யுள்ளபடி ராஜ்ய நிர்வாகத்தின் நெறிமுறைக் கோட்பாடுகளில் ஒன்ருய் இருக் றபடியாலும்.

இந்தியக் குடியரசின் ஒன்பதாம் ஆண்டில் பின்வருமாறு சட்டம் இதனல் விதிக்கப்படுவது என்ன வென்ருல்.

இச்சட்டத்தின் சரித்திரம்

சென்னே அஸெம்ப்ளி விதிகளேச சேர்ந்த 92-வது விதியில் கண்ட விலக்கு நிபந்தனே யின்கீழ், அடியிற்கண்ட மசோதாவும் அதன் ஏதுக்களேயும் நோக்கங்களேயும்பற்றிய விவரண மும் எல்லாருக்கும் தெரியும் பொருட்டு. 22-9-1958-ல் இது மதராஸ் அஸெம்ப்ளி, கவுன் சில்களால் பாஸ் செய்யப்பட்ட பிறகு, 22-1-1959-ல் பிரசிடெண்ட் அவர்களின் சம்மதி பெற்றதை 30-1-1959-ல் போர்ட் செயிண்ட் ஜார்ஜ் கெஜட்டில் 1958ஹூத்திய 35-வது ஆக்ட் டாக அச்சிட்டு பிரசித்தம் செய்யப்பட்டது. (**ஹேதுக்களேயும் நோக்கங்களேயும்** (5 முதல் 10 பக்கங்களில் பார்க்கவும்.)

பீடிகையின் பொழிப்புரை

1. கிராம பஞ்சாயத்துகளே
2. பட்டணம் பஞ்சாயத்துகளே நிறுத்துவது பற்றி முன்னிலும் சிறந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.
3. பஞ்சாயத்து யூனியன் கவுன்சிள்களே
4. பட்டணப் பிரதேசங்களே அமைக்கப்படும். இதுவுமன்றி

1958 ஹூத்திய மதருஸ் 18-வது சட்டத்தின் படிக்கு

5. ஜில்லா அபிவிருத்தி சபைகள் ஏற்படுத்தப்படும்,

பாரா I—நாட்டு நலனுக்கு ஜனத்தொகை அதிகரிப்பதற்கு ஏற்ற வகையில்

1. உணவு உற்பத்தியை அதிகரிப்பதும்
2. ஜனத்தொகை அதிகரிப்பைக் கட்டுபடுத்துவதும் அவசியமானவை

பாரா II—இந்த இரண்டு தேசீய காரியங்கள் அவசியமானவை. அவைகளே வெற்றிகரமாக நிறைவேற்ற.

1. கிராமாந்தரங்களில் வேலே வசதி வாய்ப்பினே அபிவிருத்தி செய்தல்.
2. கிராம வாழ்க்கை நிலேகளே சீர்திருத்துதல்.
3. கிராமப் பகுதிகளில் கலாச்சார கேளிக்கை வசதிகளே ஏற்படுத்தித் தருதல்.
4. கிராம மக்களின் வாழ்க்கை நிலேகளே உயர்த்தல். ஆகியவற்றை விரிவான திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

பாரா III—அத்தகைய விரிவான திட்டம் சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு சேவை திட்டத்தில் உள்ளது அதை அனுசரித்து.

1. கிராம பகுதிகளில் பல சேவைகள் நிறுவப்பட்டிருக்கிற படியாலும்
2. கட்டு வேலேகள் நிர்மானிக்கப்பட்டிருக்கிற படியாலும்
3. இதர வசதிகள் செய்துக் கொடுக்கப்பட்டிருக்கிற படியாலும்

பாரா IV—சட்ட பூர்வமாக ஷ காரியங்களே

1. செவ்வனே அபிவிருத்தி செய்வதற்கும்
2. நிறைவேற்றுவதற்கும்
3. தல நிர்வாக ஸ்தானங்களே அமைக்கப்பட வேண்டிய நிலே ஏற்பட்டிருக்கிற படியாலும்

பாரா V—இண்டியன் " அரசியல் அமைப்பில் " (ஆர்டிகல் 40 படிக்கு) கிராம பஞ்சாயத்து களே அமைத்து சுய ஆட்சி புரிய வேண்டும் என்னும் நெறி முறை கோட்பாடுகளில் ஒன்ருக இருக்கிற படியாலும்

இச்சட்டத்தை இந்திய குடியரசின் 9-ம் ஆண்டில் விதிக்கப்பட்டது.

குறிப்பு

பாரா I. (1) **ஜனத்தொகை அதிகரிப்பதற்கு ஏற்ற வகையில் உணவு உற்பத்தியை அதிகரிக்கும்படி செய்யவும் :**—இது சிறந்த கொள்கை, கம்பீரமாக இருக்கிறது. நடைமுறையில் கவனிக்கவேண்டும். செக்ஷன் (பிரிவு) 65 (ற)ன் கீழ் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் " விவசாயத்தையும், விவசாய ஸ்டாக்கு சேமிப்புகளையும் சீர்திருத்துவதும், விவசாய கண் காட்சிகளை நடத்துவதும் " ஒரு கடமை என்று கண்டிருக்கிறது. இதே மாதிரி 1920 ஓுத்திய மதராஸ் லோகல் போர்டுகள் ஆக்ட்டு பிரிவு 112 (1)-ix லும், 1950 ஓுத்திய மதராஸ் கிராம பஞ்சாயத்துகள் ஆக்ட் பிரிவு 50 (i)-லும் சட்ட உடன்பாடு இருந்தன. ஆனால் கிராம பஞ்சாயத்துகள் யாதொரு விவசாய அபிவிருத்தியை செய்ய வசதிகள் இல்லாமையால் சக்தி அற்றவையாக இருந்தன.

இப்போது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் மூலம் விவசாய அபிவிருத்தி செய்யும் கடமையை (நம்முடைய) இந்தியா தேசத்து மத்திய அரசாங்கம் ஒரு கடமையாக ஏற்றுக் கொண்டு இருக்கிறது. மற்றொருபக்கம் ராஜ்ய அரசாங்கத்தின்மேல் பாரம் போட்டிருக்கிறது,

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கு தேசிய விஸ்தரிப்பு திட்டம், சமுதாய அபி விருத்தி திட்டங்களிலிருந்து பணம் கிடைக்கும். அவைகளின் மூலம் உணவு உற்பத்தியை அதிகப்படுத்தலாம் என்று இச்சட்டத்தில் ஆசை காட்டி யிருக்கிறது. அதை அடைய மத்திய (சென்டரல்) அரசாங்கமானது ராஜ்ய (ஸ்டேட்) அரசாங்கங்கள் ஆவது இதுவரையில் வழி ஏற்படுத்தவில்லை. நிலம் யாரிடம் எவ்வளவு, இருக்கலாம் என்று அதாவது 'நில உச்சவரம்பு' ஏற்படுத்தி, அதிகமாகவுள்ள நிலங்களை அரசாங்கமே எடுத்துக்கொண்டு மக்கள் மூலம் பயிர் செய்வதா, அல்லது மக்களே கூட்டுறவு சங்கங்கள் மூலம் பயிர் செய்வதா, அல்லது இப்போது உள்ள மாதிரி வழியும் துறையும் இல்லாமல் தனிப்பட்ட நபர்கள் பயிர் செய்வதா, என்றும், ஒரு விவசாயி நில உயர்வு மிதம் ஏற்பாட்டின்படி எவ்வளவு நிலம்தான் வைத்துக் கொள்ளலாம் என்னும் பிரச்சனைகளை முடிவு செய்யாவிட்டால் உணவு உற்பத்தி இப்போது உள்ளமாதிரி தான் இருக்கும். அதிகமாக உற்பத்தியாகுவது கடினமாகும். அன்னிய நாடுகளில் (அதாவது அமெரிக்கா, ரஷியா, சைனு முதலியவைகளில்) உணவு உற்பத்தி அதிகமாகி வருகின்றன. நம்முடைய தேசமும் பின் தங்கக்கூடாது என்று நாம் பிரமாணம் செய்து கொண்டு அதன்படிக்கு நடந்து கொண்டால்தான் நாம் நம்முடைய சுதந்திரத்தை காப்பாற்றிக்கொள்ள முடியும். நாம் அதிக உணவு உற்பத்தி செய்யாவிட்டால் அந்த தவறுதல் நமதேயாகும். சுரண்டும்நாடுகள் நம்மை அடிமைகளாக செய்துகொள்ள பாடுபடுவது தெரிந்த விஷயமாகும். அவைகளுக்கு காட்டிக் கொடுக்கும் நபர்கள் அதிகாரத்தில் உள்ள வரையில் நம்முடைய தேசமும் முன்னுக்கு வருவது வெகு வெகு கடினம். பிச்சை எடுக்கும் பிழைப்பும், வெளி தேசங்களிடமிருந்து கடன் வாங்கும் பிழைப்பும், நம்முடைய தேசம் கைவிட வேண்டும். நம்முடைய பெரிய கண்ட்ராக்டுகளை வெளி தேசத்தாருக்கு விடக்கூடாது. நம் நாட்டில் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்து, இல்லாத நாடுகளுக்கு இலவசமாக கொடுக்க முயலவேண்டும். அந்நிய நாடுகளின் பொருள்களை நாம் சுரண்டுவதற்கும், நம் தேசத்தின் சுய நலத்திற்காக என்று அந்நிய தேசத்தாருக்கு வேண்டிய வஸ்துகளை நாம் பணத்தின் மூலமாகவோ வலுவின் மூலமாகவோ குறைக்கக் கூடாது.

ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள [1] பஞ்சாயத்து [2] கூட்டுறவு சங்கம் [3] பாடசாலை ஆகிய மூன்றும் ஜனநாயகத்தின் மூன்று தூண்கள்.

பஞ்சாயத்துக்கள் - நில உச்ச வரம்பு - கூட்டுறவுகளை பற்றி பிரதமர் ஜவஹர்லால் நெஹ்ரு 17-12-1958ல் பேசியது.— " நாட்டின் முன்னேற்றம் விவசாய அபிவிருத்தியை முற்றிலும் பொறுத்திருக்கிறது. உணவு இறக்குமதிகளுக்கு அன்னிய செலாவணியை செல விடாமலிருக்கும் பொருட்டு, துரிதமாக உணவுப்பிரச்சினை தீர வேண்டும்.

கூட்டுறவு சங்கங்கள் கிராம பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி செய்யலாம். அச் சங்கங்கள் கடன் உதவி அளிப்பதோடு இல்லாமல், கிராம பொருளாதாரம் முழுவதையும் நிர்வகிக்க வேண்டும். விவசாயிகளுக்கு அனுகூலமாக இந்த கூட்டுறவு சங்கங்கள், பண்டங்கள் கொள்முதல் செய்தும் விற்பனை செய்தும் வரவேண்டும்.

கிராம மக்களே முன்னின்று அவற்றை நடத்த வேண்டும். அதிகாரிகள் உதவியும் ஒத்துழைப்பும் அளிக்கக்கூடும். கூட்டுறவு சங்கங்கள் ஜனநாயத்தின் மூன்று தூண்களில் ஒன்ருகும்.

இரண்டுவிதமான கூட்டுறவு சங்கங்கள் இருக்கலாம் ஒன்றில் விவசாயிகள் தங்கள் நிலங்களை ஒன்று சேர்த்து கூட்டுப் பண்ணை முறையை அனுசரித்து வருமானத்தைப் பகிர்ந்து கொள்ளலாம். இதர முறை விவசாயிகள் ஒன்று சேர்ந்து சாகுபடி செய்தாலும், தத்தம் சாதனங்களையே உபயோகித்து, ஒவ்வொரு வரும் தமது நிலத்தில் விளைவதை எடுத்துக் கொள்வதாகும். எப்படியானாலும், விவசாயிகள் தங்கள் வருமானத்தில் 10 சதவீதத்தை கிராம கூட்டுறவு சங்கத்திலுள்ள பொது நிதிக்கு கொடுக்கவேண்டும்."

உணவு தானிய வர்த்தகத்தை அரசாங்கம் நடத்தும்

பிரதமர் நேரு உணவு தானிய மொத்த வியாபாரத்தை சர்க்கார் ஏற்று நடத்த முடிவு செய்திருப்பதைக் குறிப்பிட்டுவிட்டு, கிராம கூட்டுறவு சங்கங்கள் கூட்டாக உணவு தானிய வர்த்தகத்தை ஏற்று நடத்தும் சட்டம் வருமென்றார்.

கிராம இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த கிராமங்களில் சிறு கைத்தொழில் களை ஆரம்பிப்பது அவசியமென்றும் கூறினர். [ஜனசக்தி மதராஸ் 19-11-1958]

பிரதமர் ஜவாஹர்லால் நேரு பஞ்சாயத்துகளை நிர்வாகத்தில் சேர்த்துக்கொள்ள 27-10-1958ல் டில்லியில் பேசியது.

ஸ்தல சுய ஆட்சி மத்திய கவின்ஸிலின் 4-வது கூட்டத்தைத் துவக்கி வைக்கையில் பிரதமர் நேரு பின்வருமாறு தெரிவித்தார் :—

பஞ்சாயத்துகளும், அதன் மெம்பர்களும் கட்சிப் பிரதி கட்சிச் சண்டைகளையும், சச்சரவுகளையும் வளர்த்து வருவதாகவும் அதன் மூலம் கஷ்டங்களை சிருஷ்டித்து வருவதாக வும் அடிக்கடி குற்றஞ் சாட்டப்படுகிறது. ஆனால் இந்த மாதிரியான முறையில் அணுகு வதை நான் ஏற்கமாட்டேன். ஏனெனில் எனக்கும் பொது மக்களிடம் அபார நம்பிக்கை இருக்கிறது. நமக்கு ஒரு ஸ்தாபனத்தில் நம்பிக்கை இல்லாவிட்டால் நாம் அதன் வளர்ச்சிக்கு உதவி செய்யமாட்டோம். ஒரு தேசம் முன்னேற்றமடைவதற்கு அதன் மக்களிடம் நம்பிக்கை வைத்து அவர்களிடம் பொறுப்பை அளிக்கவேண்டும். அவர்களில் தவறுதல்கள் இருக்க லாம். ஆனல், தவறுதல்களிலிருந்து அவர்கள் நல்ல படிப்பினைகளைக் கற்றுக் கொள்ளுவார் கள். ஒவ்வொரு கட்டத்திலும் நிர்வாகத்தினர் (சர்க்கார்) தலையிட வேண்டியதில்லை. பஞ்சா யத்துகள் பெரிய, அபாயகரமான தவறுகள் செய்யாமல் தடுப்பதங்கு வேண்டிய சில மேற் பார்வை அதிகாரங்களை அரசாங்கம் வைத்துக் கொள்ளலாம். பஞ்சாயத்துகளின் அமைப் பானது அவற்றின் மெம்பர்கள் தாமே சுதந்தரத்துடன் முதன் முயற்சிகளைச் செய்யக் கூடிய வர்களாக இருக்க வேண்டும். மேலிடத்திலிருந்து திணிப்பதெதுவும் வெற்றிகரமாக நடை பெறாது.

தேசம் முன்னேற்றமடைவதற்கு மக்களுக்கு பஞ்சாயத்துகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நிர்வாகத்தில் சரியான பயிற்சி அளிக்க வேண்டும்.

பஞ்சாயத்துகளை மிகப் பெரிதாக அமைக்கக்கூடாது.
மக்களின் உற்சாகத்தைப் பெறும் வழிகள்.

பஞ்சாயத்துகளையும் கூட்டுறவு சங்கங்களையும் கிராமங்களில் அமைத்து இவை பெரிய குடும்பங்களைப் போல அந்நியோன்யமான முறையில் வேலை செய்யும்படி செய்ய வேண்டும். வருமான பலத்திற்குத் தகுந்தாற்போல பஞ்சாயத்துகளின் அளவு இருக்க வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. ஆனால், ஒரு பஞ்சாயத்தில் கூட்டுறவு முறையில் சேர்ந்து வேலை செய்யக்கூடிய மக்களின் எண்ணிக்கைக்கிணங்கவே பஞ்சாயத்துகளின் அளவு இருக்கவேண்டும். இவற்றை மிகப் பெரியதாக அமைக்கக்கூடாது.

ஏனெனில் மக்கள் வழி தவறிப்போய் வெளியார்கள் வந்து அவர்களை தங்கள் நலனுக் குப் பயன்படுத்திக் கொள்ளும் நிலை ஏற்படும். மக்களின் உற்சாகத்தைப் பெறுவதற்கு ஒரே ஒரு வழி உண்டு. **அது யாதெனில் உத்தியோக முறையில் அணுகி அவர்களுடன் பேசுவதை விடவேண்டும். அவர்களை அணுகி சமமான நிலையில் நின்று அவர்களுடன் வேலை செய்ய வேண்டும்.** அவர்களின் விவேகத்தைப் பாராட்டி மதிக்கிறேன், இதனால்தான் நான் சொல்லு

கிறபடி மக்கள் நடக்க முன் வருகிருர்கள். மக்களுக்கு உணர்ச்சியையும், அறிவையும் ஊட்டி அவர்களைக் கண் விழிக்கச் செய்யவேண்டும். **பெரிய அதிகாரியும் சரி, சின்ன அதிகாரியும் சரி சிறிது கால நேரம் வயல்களில் விவசாயிகளுடன் சேர்ந்து வேலை செய்ய வேண்டும். கட்டாய முறையில் கட்டுப்பாடான முறையில் சமூக சேவை செய்யும்படியும் அதிகாரி களைச் செய்வது அவசியம்.** [சுதேசமித்திரன் 31-10-1958]

கிராம அபிவிருத்தி வேலையில் பஞ்சாயத்துகளுக்கு அதிகப்பங்கு இருக்கவேண்டும். சமுதாய திட்ட மந்திரி ஸ்ரீ டே. 29-10-1958-ல் பேசியது.

சட்ட சபைகளுக்கு கீழ் ஜனநாயக ஸ்தாபனங்களை விஸ்தரிப்பது அவசியம்.

கிராம பஞ்சாயத்துகளுக்கு மேலும் அதிக அதிகாரம், நிதி ஒதுக்குவதன் மூலம் அபிவிருத்தி வேலைகளை பரவலாக்க வேண்டுமென்று சமுதாய அபிவிருத்தி மந்திரி எஸ்.கே.டே. ஸ்தல ஸ்தாபன மத்திய குழு கூட்டத்தில் பேசுகையில் வற்புறுத்தினர். 3-வது திட்டத்துக் குள் 510 லட்சம் கிராமப்பஞ்சாயத்துக்கள் ஒவ்வொன்றும் உண்மையில் குடியரசு ஆட்சியாகத் திகழ, தற்போது பெயரளவில் உள்ள பஞ்சாயத்துக்களை திருத்தி அமைத்து வலுப்படுத்த வேண்டுமென்றும் அவர் கூறினர், தற்போதுள்ள ஜனநாயக ஸ்தாபனங்கள் பார்லிமெண்ட் சட்டசபைகளுடன் முடிவடைந்து விடுகின்றன. சட்டசபைக்குக் கீழ் மக்கள் சுதந்தரமாக அபிப்பிராயம் தெரிவிக்க சந்தர்ப்பமளிக்கும் ஸ்தாபனங்கள் எதுவுமில்லை.

ஸ்தல ஸ்தாபனங்களுடைய நலனுக்கு விரோதமாக சர்க்கார் ஸ்தாபனங்களை வலுப் படுத்தும் மனேபாவம் ஏற்பட்டிருப்பது வருந்தத் தக்கது. இதுவே ஸ்தல ஸ்தாபனங்கள் படிப்படியாக அழியக் காரணம். சமுதாய திட்ட யிலாகாவுக்கு அதிக மான்யங்கள் கிடைக் கின்றன, ஆனல், ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கிடைத்துவந்த சிறிய உதவியும் மறைந்து விட்டது. இன்று பணம் செலவிடுவதில் ஒரு பிளாக் டெவலப்மெண்ட் அதிகாரிக்கு கவர்மெண்டு கமிஷனர்களுக்கு யிருந்த அதிகாரங்களைவிட அதிக அதிகாரமுண்டு. சமுதாய அபிவிருத்தி திட்டம் கிராமங்களில் வெகுவாக வெற்றி அடைந்துள்ளது. தற்போதுள்ள சிப் பந்திகளைக்கொண்டு மேலும் பல மக்களுக்கு இத்திட்டத்தின் அனுகூலங்களை விஸ்தரிப்பது சாத்தியமல்ல. தற்போதுள்ள சிப்பந்திகளைக் கொண்டு என் இலாகாபெரிய நிலங்களில் தான் விவசாய உற்பத்தியை அதிகரித்துள்ளது. பெரிய விவசாயிகள் நாட்டில் மொத்தம் 15 முதல் 20 சத விகிதமே யிருக்கின்றனர். எஞ்சிய 85 சத விகித விவசாயிகள் யித்திட்டத் தினல் வசதி பெறவில்லை ஆகவே, இத் திட்டத்தை நிறைவேற்றுவதில் கிராம பஞ்சாயத் துக்கள் பெரும் அளவில் நேரடியாகக் கலந்துகொள்வது அவசியம் என்று ஸ்ரீ டே மேலும் குறிப்பிட்டார். [சுதேசமித்திரன் 31-10-1958.]

ஆசிரியரின் அபிப்ராயம்:—நம்முடைய இந்தியா அரசாங்கம் முதல் 5 ஆண்டு திட்டம் இரண்டாம் 5 ஆண்டு திட்டம், மூன்றும் 5 ஆண்டு திட்டம் என்று திட்டங்கள் போட்டு இந்தியா தேச முழுவதையும் இங்கிலாந்து, ரஷியா, ஜெர்மனி, சைனுஅமெரிக்கா மாதிரியாக மேன்மை யான மனுஷ்ய வாழ்வுயுள்ள நாடாக செய்ய தீர்மானித்து இருக்கிருர்கள். இது வரையில் 9 ஆண்டுகள் கடந்து விட்டன. இத்திட்டங்களை இனி கிராம பஞ்சாயத்துகளும், பட்டண பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும் சட்ட பூர்வமாக நடத்த இந்த சட்டம் ஏற்படுத்தப்பட்டது. இது வரையில் நடந்த திட்டங்களில், சிலர் பலன் அடைந்தார் கள். பலர் அடைய வில்லை. இவை ஆரம்ப திசையில் யிருக்கின்றன. வாஸ்தவத்தில் பார்த்தால் 5 ஆண்டு திட்டங்கள் இல்லாமை காலங்களைக் காட்டிலும் இப்போது மொத்த மக்களுக்கு இந்த 5 ஆண்டு திட்டங்களினல் இன்ன தேவைகள் வேண்டு மென்றும் அவை களை திட்டங்கள் மூலம் அடையலாம் என்னும் நம்பகம் மக்களிடையே ஏற்பட்டு இருக்கிறது.

I (2) ஜனத்தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்துவது.—பிரிவு 65 (c) படிக்கு "குடும்ப கட்டுப்பாட்டில் தாய்மார்களுக்கு ஆலோசனை புரிவதும், உதவி புரிவதும்" பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் கடமைகளில் ஒன்ருகும். நம் மதராஸ் கவர்ண்மெணடு "குடும்ப திட்டம்" என்னும் புத்தகத்தை டாக்டர் யு. கிருஷ்ணராவ் தலைமையின் கீழ் அச் சிட்டு 4 அணுவுக்கு மதராஸ் மவுண்டு ரோடு கவர்ண்மெண்டு பிரஸ்ஸில் விற்கிறது. அதை வாங்கி கட்டாயம் படிக்கவும். இந்த சிகிச்சை பெரும் தாய்மார்களுக்கு ஒரு மரியாதை குறிக் கும் சின்னம் அளிக்கவேண்டும். அவர்களுக்கு 60 வயது ஆனபிறகு திக்கற்றவர்களாக யிருந்தால் ஒரு பென்ஷன் தரவேண்டும்.

II. (1) கிராமங்களில் வேலே வசதி வாய்ப்பிணே அபிவிருத்தி செய்தல்.— வாழ்ப்பிணேயை எப்போதும் இருக்கும்படியாக செய்யவேண்டும். மறுநாள் வேலே கிடைக்குமோ என்னமோ என்கிற திகில் நீங்க வேண்டுமென்ருல், அதற்கு அரசாங்கம் சரியான கட்டு திட்டங்கள் ஏற்படுத்தவேண்டும். தனிப்பட்ட நபர்களால் செய்யக்கூடிய காரியமல்ல. அதற்கு ஆணும், பெண்ணும் படித்து திறமையுடன் தேசத்திற்கென்று வேலே செய்ய வேண்டுமென்ருல் அரசாங்கம் குழந்தைகளுக்கு படிப்பிலும், உணவிலும் பேதமின்றி அவைகளே இலவசமாக கொடுக்கவேண்டும். அவரவர்களின் சக்திக்கு தக்கமாதிரி வேலேகளேயும் காட்ட வேண்டும். தனிப்பட்ட நபர்கள் தங்கள் வரையிலும், தங்களுக்கு வேண்டியவர்கள் வரையிலும் உதவி செய்பவர்களே ஒழிய இதினல் சகலமான பொது மக்களுக்கும் சமஉரிமை உண்டாயிற்று என்பது சுத்த பொய். இதற்கு அரச்சாங்கம் உடனே அக்கரை எடுத்துக் கொள்ளவேண்டும். சட்டத்தில் கம்பீரமாக எடுத்துக்காட்டி யிருக்கிறது போதாது. இதற்கு உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குவதைச் சோதிக்கவேண்டும். அரசாங்க உத்தியோகத்தில் இல்லாதவர்கள் அதை பரிசோதிக்க அவர்களுக்கு ஒரு அதிகாரம் யிருக்கவேண்டும்.

நம் கவர்ண்மெண்டு எல்லா மக்களும் பட்டினி இல்லாமல் செய்வது தன் கடமையாக வைத்துக்கொள்ளவேண்டும். வேலே இல்லாதபொழுது அவர்களுக்கு இங்கிலாண்டில் உள்ள மாதிரி "வேலே இல்லாத கால பென்ஷன் தரவேண்டும்." "வேலே செய்யாதவனுக்கு சாப்பாடு கிடையாது." என்பது நம் அரசாங்கத்தின் கொள்கை ஆக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(2) கிராம வாழ்க்கை நிலேகளே சீர்திருத்தல் :— வாழ்க்கையே மாறுபடுத்த வேண்டு மென்ருல் கிராமத்தாருக்கு வரும்படி அதிகமாகக் கிடைக்கவேண்டும். அவர்கள் வீட்டு தரைகளே சுத்தமாக வைத்துக் கொள்ள சிமிட்டியை பேர்பாதி விலேயில் அவர்களுக்கு தரவேண்டும். வேலேயில்லாமல் இருக்கும் சமயங்களே கவனித்து அவர்களுக்கு தக்கவேலே கிடைக்கும்படி செய்யவேண்டும். இவைகளே அடைய மக்களும் அக்கரை எடுத்து கொள்ள வேண்டும். கோ-ஆபரேடிவ் சுசைடிகளும் (கூட்டுறவு சங்கங்களும்) உதவி செய்யவேண்டும். பஞ்சாயத்துகளும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும் போடும் ரோட்டுகளேயும். கட்டும் கட்டடங்களேயும் அம்மாதிரி கூட்டுறவு சங்கங்களுக்கு காண்ட்ராக்ட்மூலம் கொடுக்கவேண்டும். அந்த சுசைடியில் வேலே செய்யும் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் மெம்பராக இருக்க வேண்டும். அதின் லாபம் வேலே செய்திறவர்களுடையவும், கிராமத்தார்களுடையவும் நன்மைக்கென உபயோகப் படுத்தவேண்டும் சிறிய தொழிற்சாலேகளே ஏற்படுத்திஞல் அதின் சாமான்களே சுலபமாக விற்க ஏற்பாடு செய்ய வேண்டும். 65-வயதானவர்களுக்கு கிழத்தன பெண்ஷன் கொடுக்க வேண்டும்: Minor irrigation என்னும் நீர் பாசனே திட்டத்தை பஞ்சாயத்து எடுத்து கொண்டு வேலே செய்ய வேண்டும். கண்ட்ராக்டர்களுக்கு விடக்கூடாது. அரசாங்கம் முன்னதாக பணத்தை (அட்வான்ஸ்) கொடுக்கவேண்டும். இம்மாதிரி கேரள அரசாங்கம் செய்கிறது. மதராஸ் அரசாங்கமும் பின்பற்றவேண்டும்.

(3) கிராமங்களில் கலாச்சார, கேளிக்கை வசதிகளே ஏற்படுத்தித்தருதல்:— இவை நம் தமிழ் நாட்டில் சுமாராக இருக்கின்றன. அவைகளே மேன்மை படுத்தி தர வேண்டும். மட்டமான நாட்டு பாட்டுகளே நீக்கிக் கொண்டால் நன்ருக யிருக்கும். சங்கீதத்தில் பாஷாவாரி. (மொழிவாரி) சண்டையில்லாமல் யிருக்கவேண்டும். வீணே கோட்டு வாத்தியம் முதலிய வாத்தியங்களே மறுபடியும் முன்னுக்கு கொண்டு வரவேண்டும். வாத்தியங்களுடன் கும்பலாக குழந்தைகள் பாடிக்கொண்டு ஊர்வலம் செய்ய கற்றுக் கொடுக்க வேண்டும். சினிமாக்களேயும் நாடகங்களேயும் தூஷிப்பது நலமன்று.

(4) கிராமங்களின் வாழ்க்கை நிலேகளே உயர்த்துதல் :— இது மேலேயுள்ளது தான். இதைமற்ருெரு விதமாக சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம்.

III (1) சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு சேவை திட்டம்:— இவை நாட்டு நலனுக்காக ஏற்படுத்திய திட்டங்களாகும். இதின் முக்கிய கருத்து இந்தியர்களுக்கு வேண்டிய தேவைகளே போதுமான வரையில் இந்தியாவிலேயே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். பிறநாடுகளின் ஆதரவின் பேரில் பிழைக்கக் கூடாது என்பதாகும். இப்போது நம் தேசத்தில் அம்மாதிரியில்லே. அவைகளே அடைய ஒரு திட்டம் பிளான் வேண்டும். அதை ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை போட்டு அது எது வரையில் சரியாக நடத்தப்பட்டது என்று அப்போதுக்கு அப்போது கணக்கிட்டு வருகிருர்கள் அதற்குத்தான் "தேசீய

விஸ்தரிப்பு சேவை திட்டம் (N. E. S. S. — National Extension Service Scheme) என்றும் "சமுதாய அபிவிருத்தி" என்றும் சொல்வதுண்டு. இவைகளுக் கெல்லாம் நம்முடைய இந்தியா தேசத்தில் நமக்கு வேண்டிய பொருள்கள் எங்கெங்கு எவ்வளவு உற்பத்தி ஆகின்றன. அவைகளை எப்படி அதிகப்படுத்திக் கொள்ளமுடியும் என்பதை இந்த இரண்டு 5-ஆண்டு திட்டங்கள் மூலம் பெறலாம் என்று செய்து வருகிறோம். அதற்கு முக்கியமாக கணக்குப் புள்ளிகள் வேண்டும். முக்கியமாக அரிசி விளையும் தமிழ் நாட்டில் தமிழருக்கு போதுமான அரிசி விளைவு ஆகிறது இல்லை. இதை திட்டங்களை உண்டாக்கும் அதிகாரிகளும் குழுவினர்களும் சரிபடுத்த அக்கரை எடுத்து கொள்ள வேண்டும். கோதாவரிநதி (ஆறு) தண்ணீரை கிருஷ்ணு, குண்டூர், நெல்லூர், சித்தூர், வட ஆற்காடு. தென் ஆற்காடு ஜில்லாகள் மூலம் கொண்டுவந்து கடலூர் என்னும் கூடலூரில் சமுத்திரத்தில் விழும்படி செய்யவேண்டும். அப்போது பாலாறும் நிறைஞ்சி பாயும். செங்கல்பட்டு ஜில்லாவுக்கும் பயிர் செய்வதற்கு வேண்டிய தண்ணீர் கிடைக்கும். யாவத்து ஏரி மராமத்துகளையும் ஆற்றுகால் வாய்க்கால்களை சரிபடுத்துவதும்-பஞ்சாயத்துகளின் கடமையாக இருக்க வேண்டும். இந்த திட்டங்கள் இன்னதென்று அதிகமாக அறிய பிரிவு 11-ன் கீழ் குறிப்புகளையும், பிரிவு 66-ன் கீழ் குறிப்புகளையும் பார்க்கவும்.

(2) மக்களின் உடைகள்:—இவைகள் வேண்டிய அளவுக்கும் இப்போது நம் நாட்டில் செய்யப்பட்டு வருகின்றன. ஆனல் அவைகளுக்கு வேண்டிய மெஷின் யந்திரங்களை நாம் உடனே நம் நாட்டில் செய்ய வேண்டும்

(3) குடியிருக்க வசதிகள்:—அவைகள் போதுமான அளவுக்கு இல்லை. இவைகளுக்கு சிமிட்டியும், மரம், இரும்பு, எழுகு, முதலிய கட்டட சாமான்களையும் நிறைய உற்பத்தி செய்து மக்களுக்கு குறைந்த விலையில் அரசாங்கம் கொடுக்க வேண்டும். இவைகளுக்கு தனிப்பட்ட நபர்களுக்கு லைஸென்சுகள் கொடுப்பதை எடுத்து விட்டால் தான் மக்களுக்கு இவை சுலபமாக கிடைக்கும். குடிக்கும் நல்ல தண்ணீர் சுலபமாக கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்

(4) படிப்பு :— ஏழை பிள்ளைகளுக்கும், செல்வமுள்ளவர்கள் பிள்ளைகளுக்கும் ஒரே விதமான படிப்பு யிருக்க வேண்டும். புத்திகூர்மையும், மக்களுக்கு சேவை செய்ய சக்தியுள்ளவர்களை பொருக்கி காலேஜ் கல்லூரிகளில் இலவசமாக படிக்க வசதிகள் செய்ய வேண்டும். இப் போதுள்ள மாதிரி செல்வ முள்ளவர்கள் பிள்ளைகளுக்குத்தான் காலேஜ் படிப்பு தரமுடியும் என்பதை மாத்த வேண்டும். அந்த படிப்பானது பொருள்களை அதிகமாக அபிவிருத்தி செய்யக் கூடியதாயும், மக்களுடைய ஆரோக்கியம் மேன்மையாக செய்யத் தக்கதாயும் யிருக்கவேண்டும். அதின் கருத்து **எல்லா மக்களையும் பொருளாதார துறையில் சம உரிமை யுள்ளவர்களாக செய்வதேயாகும். இந்த நிலை இந்தியாவுக்கு கிடைத்த பிறகு தான் இந்தியா நிஜமாக சுதந்திரம் அடைந்ததாக சொல்ல முடியும்.** அப்படி பொருளாதார சம உரிமை கிடையாத வரையில் பெரும் பான்மையோர் சிறுபான்மை யோருக்கு பொருளாதார துறையில் தாழ்ந்தவர்களாக யிருக்கிறார்கள், யிருப்பார்கள். இப் போதுள்ள மாதிரி நாடு யிருந்தால் இங்கே மொழிவாரி சச்சரவுகளும் எல்லைப் புரம் சண்டைகளும் இருக்கத்தான் செய்யும். இந்த சண்டைகளுக் கெல்லாம் காரணம் அதிகாரத்தில் யுள்ள நம்ம வர்களே தான். பொருத்தியார் அல்ல. அதிகாரத்தில் யுள்ளவர்கள் பொது மக்களுக்கு பாஷாவாரி பிரிவினைகளை குறித்து தேர்தல்கள் மூலம் தீர்மானித்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்து யிருந்தால் சண்டைகள் இருக்கவே இருக்காது. இன்னும் தாங்கள் கமிஷன் மூலம் வகுத்தது தப்பென்று உணரவில்லையே ! அது தானே ஆச்சரியமாக இருக்கிறது.

(5) வைத்திய உதவி:—இது ஏழை மக்களுக்கு எட்டுவது மிக கடினமாக யிருக்கிறது. வெளி நாட்டு மருந்துகள் விலைகள் முன்னிருந்தவை காட்டிலும் அதிகமாக யிருக்கின்றன. தமிழ் நாட்டில் 18 சித்தர்கள் மருந்துகளை தயாரித்து குறைந்த விலையில் மக்களுக்கு கிடைக்கும்படி செய்யவேண்டும் ஒவ்வொரு பெண்-ஆண் குழந்தைக்கும் 'பஸ்ட் எய்டு' என்னும் "முதலுதவியை" கற்றுக் கொடுக்க வேண்டும். "பிஸியாலஜி" என்னும் மனுஷ்யனுடையவும் ஜந்துக்களுடையவும் உடல்கள் எப்படி உண்டாவது ஜீவிப்பது இறந்து விடுவதுகளைப் பற்றியும் கற்றுக் கொடுக்க வேண்டும் அத்துடன் பிரிவு 65 (௭)ல் யுள்ளபடி குடும்பக்கட்டுப்பாடு என்னும் ஜனத்தொகை அதிகரிப்பதை கட்டுப்படுத்துவதை பற்றியும் சொல்லிக் கொடுக்கவேண்டும். அப்போது பூபாரம் குறைய செய்ததாகும். "நோயுள்ளவர்கள் அநே

கருக்கு இந்தியா தேசத்தில் உதவி செய்ய முடியவில்லை'' என்னும் அவமான வார்த்தையை போக்கடித்துக் கொண்டு ''எல்லா நோய் உள்ளவர்களுக்கும் இந்தியாவில் உதவி புரிகிறார்கள்'' ''அந்நியர்களுக்கும் இலவசமாக சிகிச்சை செய்கிறார்கள்'' என்னும் கௌரவத்தை இந்த திட்டங்கள் மூலம் அடையக் கூடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

(6) தேசமக்களின் போக்கு வரத்து பாதைகள் :— ரயில் வண்டிகள் A ஸ்டீமர்கள்-ஆகாய விமானங்கள்-மோட்டார் பஸ்கள் முதலியன—இவைகள் மூலம் நம்முடைய தேசத்திலிருந்து கோடிக்கணக்காக பணம் வெளி நாடுகளுக்கு போவதை தடுக்க வேண்டும். இந்த இயந்திரங்கள் வண்டிகள் ஸ்டீமர்கள் ஆகாய விமானங்கள் முதலியவைகளை நாமே தயாரிக்க வேண்டும். ஆயிரங்கள் கணக்காக விஞ்ஞானத்தில் தேர்ந்த அறிஞர்களை நம்முடைய கவர்ன்மெண்டு செலவில் அனுப்பி அவர்கள் மூலம் பலனை அடைய வேண்டும்.

(7) தரைப்படை — கப்பற்படை — விமானப்படை :— இவைகளுக்காக யந்திரங்கள், பீரங்கிகள், துப்பாக்கிகள், கைதுப்பாக்கிகள், கைவெடி குண்டுகள், முதலிய ஆயுதங்களை பெற கோடிக்கணக்காக ரூபாய்களை செலவு செய்து வருகிறோம். அவைகளின் மராமத்துக்காகவும், வேண்டிய வெடி மருந்துகளுக்காகவும், வருஷா வருஷம் கோடிக் கணக்கில் பணம் வெளி தேசங்களுக்கு அனுப்புவதை தடுத்து அவைகளை எல்லாம் நம் தேசத்தில் செய்ய வேண்டும். இந்திய படைகளை சேர்க்கும் விஷயத்தில் தென் இந்தியர்களுக்கு அவர்களின் ஜனத்தொகைக்கு தக்கபடி வேலைகளை இந்திய அரசாங்கம் கொடுக்கவில்லை. சமீபத்தில் ராணுவ அதிகாரிகளை பயிற்றுவிக்க 'டிபென்ஸ்' அகாடமிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பட்டியல் வெளியாகியது. பொருக்கி எடுக்கப்பட்ட 251 பேர்களில் தென் இந்தியர்கள் ஆறுபேறு கூட இடம் பெற வில்லை. பெரும்பாலும் பஞ்சாபிகளின் பெயர்களே காணப்பட்டன ஆனந்த விகடன், தேதி 28-12-1958 பக்கம்-13]. இது தானா ஜனநயயகம் ?

(8) சிறிய சிறிய கிராமங்களையும், பட்டணங்களையும் கைவிடக்கூடாது :— அதாவது பெரியப்பட்டணங்களில் உள்ள யாவத்து வசதிகளும் சிறிய கிராமங்களில்உள்ளவர்களுக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டும். முக்கியமாக குழந்தைகளின் படிப்பு விஷயத்தில் (4) வது ஐடத்தில் கண்ட மாதிரி படிப்பு கற்பிக்க வேண்டும். நம்முடைய குழந்தைகள் படிக்புக்கும் இங்கிலாந்து, ஜப்பான், ரஷியா, அமெரிக்கா, குழந்தைகள் படிப்புக்கும் பேத மிருக்கப் கூடாது. கிராமங்களில் பிறந்த ஒவ்வொரு குழந்தையும் 10-வயதுக்குள் மொத்த ஜில்லாவையும், 14-வயதுக்குள் மொத்த தமிழ் நாட்டையும், 15-வயதுக்குள் நம்முடைய இந்தியா தேசத்தில் முக்கியமாயுள்ள எல்லை பகுதிகளையும் கட்டாயம் பார்க்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

இவைதான் முக்கியமாக சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு சேவை திட்டமாகும். இதுதான் மெய்யான ஜனநாயகமாகும். இவைகளை குறித்து பிரிவு 11-ன்கீழும் பிரிவு 66-ன் கீழும் யுள்ள குறிப்புகளை பார்க்கவும்.

அத்தியாயம் 1—முதன்மையானவை—(பிரிவுகள் 1, 2)

1. (1) இச் சட்டம் 1958-ம் ஆண்டுத்திய மதராஸ் பஞ்சாயத்துக்கள் சட்டம் எனப் பெயர் பெறும்.

(2) இது சென்னை ராஜ்யத்தில்

சிறு பெயரும் வியாபகமும் தொடக்கமும்

(i) சென்னை நகரமும்,

(ii) ஜில்லா முனிசீபாலிட்டிகளைக் குறித்த (சென்னை 1920-ம்ஆண்டு (V-வது சட்டமாகிய) சென்னபட்டணத்துச் சட்டம் பிரயோகப்படுகிற முனிசிபாலிட்டிகளும்,

(iii) கன்டோன்மென்டுகளைக் குறித்த (1924-ம் ஆண்டு II-வது மத்தியச் சட்டமாகிய) 1924-ம் ஆண்டுத்திய சட்டம் பிரயோகப்படுகிற கன்டோன்மென்டுகளும்,

(iv) மேட்டூர் பட்டண பிரதேசத்தை குறித்ந மதராஸ் 1941ஆத்திய 11-வது சட்டம்,

(v) கொற்ருலம் பிரதேசத்தை குறித்த மதராஸ் 1954 ஆத்திய 16-வது சட்டம்,

(vi) பவானி சாகர் பிரதேசத்தை குறித்த மதராஸ் 1954 ஆத்திய 25-வது சட்டம்

பிரயோகப்படுகிற பிரதேசங்களும் தவிர மற்றெல்லாப் பிரதேசங்களுக்கும் வியாபிக்கும்.

(3) இது அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலம் நியமிக்கக்கூடிய பிரதேச விஸ்தீர்ணத்தில் 1961-ம்ஆ அக்டோபர்மீ 2-ம் தேதிக்கு மேற்படாமல் அப்படி நியமிக்கக்கூடிய தேதிகளில் அமுலுக்கு வரும்; மேலும் வெவ்வேறு பிரதேசங்களுக்கு இச்சட்டத்தின் வெவ்வேறு உடன்பாடுகள் வெவ்வேறு தேதிகள் நியமிக்கப்படலாம்.

குறிப்பு :

1. (1) **பெயர்.**—இந்த சட்டத்தில் கிராமப் பஞ்சாயத்துகள் மட்டுமன்றி பட்டணப் பஞ்சாயத்துக்கள் விஷயமாகவும் விவகரிப்பதால் இப்போதுள்ள சட்டத்தின் சுருக்கமான பெயராகிய "1950-ம் வருடத்திய சென்னை கிராம பஞ்சாயத்துகள் சட்டம்" என்பது இந்த சட்டத்தில் "1958-ம் வருடத்திய சென்னை பஞ்சாயத்துகள் சட்டம்" என்கிற சிறு பெயரால் பர்த்தி செய்யப்படுகிறது.

பிரிவு 1 (3) னுடையவும், பிரிவு 196னுடையவும் கருத்து.— 961-ம் வருடம் அக்டோபர் மாதம் 2-ம் தேதிக்குள், மொத்த ஜில்லா போர்டுகள் ஆளும் அதிகாரத்தை நீக்கிவிட வேண்டும். (மதராஸ் 1957-ம் வருடத்திய மதராஸ் 13-வது ஆக்ட்டை 1958-ம் வருடத்திய 27-ம் ஆக்டினல் திருத்தப்பட்டது. அதை முன்னதாக 1-ம் அனுபந்தத்தில் பார்க்கவும். பிரிவு 196-யையும் பார்க்கவும்.) இதிற்குள்ளாக பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் ஏற்படுத்திய பிரதேசங்களில் மாத்திரம் ஜில்லா போர்டுகளால், ஆளும் அதிகாரம் நீக்கி விடப்படும். இப்போதுக்கு சுமார் 173 பிளாக் டெவலெப்மெண்டு பிரதேசங்கள் இருக்கின்றன. அம்மாதிரி மொத்த தமிழ் நாட்டுக்கும் சுமார் 358 தொகுதிகள் அதாவது பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பட்டவுடன், 1961-ம் வருடம் அக்டோபர் மாதம் 2-ங் தேதிக்குள் டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் ஆளுகை பூர்த்தியாக நீங்கிவிடும்.

இந்தப் பிரிவு பற்பல பிரதேசங்களில் இச் சட்டத்தின் வெவ்வேறு உடன்பாடுகளை பற்பல தேதிகளில் இச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கத்தாருக்குச் சாத்தியமாக்குகிறது. இச்சட்டம் இந்த ராஜ்யம் முழுவதிலும் 1961-ம் வருடம் அக்டோபர் மாதம் 2-ம் தேதிக்கு முன் அமுலுக்கு கொண்டுவரப் படவேண்டும், என்ருலும் ஓர் எச்சரிக்கை முகமாக மேற்படி லட்சியத் தேதியை ஒரு தடவைக்கு ஒரு வருஷமாக விஸ்தரிக்க ஷரத்து ஒன்று அமைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. [உப பிரிவு (3)யையும், பிரிவு 196யையும் பார்க்கவும்.

1-வது பிரிவு (3) வது உப பிரிவு படிக்கு இந்த சட்டத்தின் பிரிவுகள் 1-ம், 196-ம் 31-1-1959ல் இருந்து அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இது கன்யாகுமாரி ஜில்லாவுக்கும் திருநெல்வேலி ஜில்லாவில் ஷென்கோடா தாலுக்காவுக்கும் வியாபிக்காது. [போர்ட் செயிண்ட் ஜார்ஜ் கெஜட் பாகம் I-A தேதி 31-1-1959 ; G. O. Ms. No. 188 L. A தேதி 30-1-1959 : S. R. O. No. B-79 of 1959].

ஷை சட்டத்தின் படிக்கும் மதராஸ் 1958ஆ த்திய 25-வது சட்டத்தினுல் திருத்தப்பட்ட மதராஸ் 1957 ஆத்திய 13வது சட்டத்தின்படிக்கு மதராஸ் டிஸ்டிரிக்ட் போர்டுகளின் தேர்தல்களை 1961ஆ அக்டோபர்மீ 2-ம் தேதி வரையில் ஒற்றிவைக்கப்பட்டது. [ஷை கெஜட், ஜி. ஓ. 189 L. A. ஷை தேதி - S. R. O. No. B-80 of 1959.]-இந்த சட்டத்தின் ஹேத்துக்கள் நோக்கங்களின் 8-வது பாராவை 7-வது பக்கத்தில் பார்க்கவும். அனுபந்தத்தில் ஷை மதராஸ் டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் ஆக்ட்டையும் பார்க்கவும்.

மதராஸ் நகர முனிசிபல் ஆக்ட் :: டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடிகள் ஆக்ட் :: மதராஸ் டிஸ்ட்ரிக்ட் போர்ட்கள் ஆக்ட் :: பஞ்சாயத்துகள் ஆக்ட்—இவைகளின் விஷயங்கள் சமமானவை :- இவை ஒரே சட்டசபையால் ஏற்படுத்தப்பட்டவை. அவைகளின் விதிகளும் ஒரே மாதிரியானவை. அவைகள் இங்கிலீஷ் ஆக்ட்டுகளையும் தீர்மானங்களையும் ஆதாரமாக கொண்டவை. [கோபாலா,- எ - இப்ராஹீம் = 48 M 509 (FB) = A.I.R. 1925 M 1129 : காரைகுடி முனிசிபாலிடி-எ-திருமலை, A.I.R. 1935 Mad. 657 = 69 M.L.J. 221] இந்த ஆக்ட்டு பொது ஜனங்களுக்கு அநியாயமும் கஷ்டங்களும் இல்லாமல் நிறைவேற்ற வேண்டும். [சிதம்பரம் முனிசிபாலிடி-எ-சுப்பிரமணிய A. I. R. 1928 M. 1157 = 55 M. L. J. 495] இந்த ஆக்ட்டின் படிக்கு குடி ஜனங்கள் தங்களுடைய கிராம காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளவேண்டியது என்பதுதான் அதின் கருத்து. இதற்கு பூர்வ அனுபவசாலிகள் வேண்டும் என்பது கிடையாது. இந்த ஆக்ட்டு இதரர்களுடைய சொத்தை ஈடில்லாமல் பரிகரிக்க ஏற்படுத்தப்பட்டதன்று, [எல்லம்மாள் குறித்து A.I.R. 1928 M. 164 : M திம்மா :-எ-செக்ரடெரி A.I.R. 1924. M, 523] ஒரு ஆக்ட்டில் ஒரு விஷயத்தை மீறி நடந்தாலும் அதற்கு யாதொரு குற்றமும் ஏற்படுத்தா விட்டால் அத்து மீறி நடந்ததற்கு யாதொரு தண்டனையும் செய்யக்கூடாது. [துகாராம் விட்டல் குறித்து [(1878) 2, (Bom. 527)].

2. அர்த்தம்.—இச் சட்டத்திலே, சங்கதியினாலாவது சந்தர்ப்பத்தினாலாவது முரண்பாடு ஒன்றும் இராவிட்டால்—

(1) "கட்டிடம்" என்பதில் யாதொரு வீடு, வெளிப்புறத்து வீடு, கூடாரம், லாயம், கக்கூஸ், கொட்டகை, குடிசை (எட்டடி உயரத்துக்கு மேற்படாத எல்லைச் சுவரைத் தவிர வேறே) சுவர் என்பவைகளும், கல் கட்டிடமாகவாவது, செங்கல், மரம், சேறு, உலோகம் அல்லது வேறே எந்த வகையையாகிலும் சேர்ந்த சாமானைக் கொண்டு கட்டப்பட்டாவது இருக்கிற அப்படிப்பட்ட வேறே யாதொரு கட்டுக்கோப்பு என்பதும் அடங்கும்;

"கட்டிடம்"

குறிப்பு

வீடு — பிரிவு 2 (13)	கட்டிடங்களுக்கு இலக்கமிடல்-பி. 110
கக்கூஸ் — பிரிவு 2 (15)	குடிசை—பி. 2 (14)

பி. 2 (1). ஒரு வெளிச்சுவரானது 8 அடி உயரத்திற்கு மேல் இருக்கும் பட்சத்தில் அது கட்டிடம் ஆகவே கருதப்படும். பஞ்சாயத்து கிராமங்களில் கட்டிடங்களின் விதிகள் ஏற்படுத்திய பிறகு முன் உத்திரவு பெற்றுக்கொண்டு பின்னிட்டுத் தான் கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்று ஏற்படும் பட்சத்தில் வெளிச்சுவர்கள் 8 அடிக்கு உள்பட்டவைகளை கட்டிடங்களில் சேராமையால் அவைகளை உத்திரவு இல்லாமலேயே கட்டலாம் என தோன்றுகிறது. உள் சுவர்கள் 8 அடி உயரத்திற்குமேல் இல்லாவிட்டாலும் கட்டடமாகவே கருதப்படும். [திருமலை திருப்பதி தேவஸ்தானம்-எ-திருப்பதி முனிசிபாலிடி I. L. R. 1942 M. 431 = A.I.R. 1942 M. 256] ஒரு கட்டிடமானது பூமியில் ஸ்திரமாகயில்லாவிடினும் அது சக்கரங்களின் பேரில் வைத்திருந்த போதிலும் அதை கட்டிடம் என்றே கருத வேண்டும். [நந்துமால்-எ-சிம்லா முனிசிபாலிடி A. I. R. 1925 Lah. 252.]

(2) "தற்செயலாய் ஏற்படுகிற காலி ஸ்தானம்" என்பது, காலம் முடிந்து போவதனாலல்லாமல் மற்றப்படி ஏற்படுகிற யாதொரு காலி ஸ்தானமென்று அர்த்தமாகும்; மேலும், "தற்செயல் (காஷுயல்) தேர்தல்" என்பது தற்செயலாய் ஏற்படும் ஒரு காலி ஸ்தானத்தை பூர்த்தி செய்வதற்காக நடத்தப்படுகிற யாதொரு தேர்தல் எனப் பொருள்படும்;

"தற்செயலாய் ஏற்படுகிற காலி ஸ்தானம்"

குறிப்பு

பிரிவு 2 (18) ல் ‘ சாதாரண காலிஸ்தானம் ’ ‘ சாதாரண தேர்தல் ’ பார்க்கவும்.

‘ தற்செயலாய் ஏற்படும் காலிஸ்தானம் ’, ‘ தற்செயல் (காஷுயல்) தேர்தல் ’, ஒரு மெம்பர் ராஜிநாமா செய்வதுனுலேயும், பிரிவு 26 படிக்கு ஒரு மெம்பருக்கு (அங்கத்தினற்கு) யோக்யதை குறைவு உண்டாகிறதனுலும், ஏற்படுகிறது.

“ அக்கிராசனர் ” (3) “அக்கிராசனர்” என்பதுபஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அக்கிராசனர் என்று பொருள்படும்.

36-37 பிரிவுகளைப் பார்க்கவும்.

“ கலெக்டர் ” (4) “ கலெக்டர் ” என்பது, பிரஸ்தாப ரெவினியு ஜில்லாவின் கலெக்டர் எனப் பொருள்படும் ;

148-வது பிரிவை பார்க்கவும்.

“ கமிஷனர் ” (5) “ கமிஷனர் ” என்பது, பஞ்சாயத்து யூனியனின் கமிஷனர் எனப் பொருள்படும் ;

44, 45 பிரிவுகளைப் பார்க்கவும்.

“ கம்பெனி ” (6) “ கம்பெனி ” என்பது, கம்பெனிகளைக் குறித்த (1956-ம் ஞூத்து 1-வது மத்தியச் சட்டமாகிய) 1956-ம் ஞூத்திய சட்டத்தில் அர்த்தம் சொல்லப்பட்டுள்ளபடி ஒரு கம்பெனி எனப் பொருள்படும். மேலும் அதில், ஷை சட்டத்தின் 591-வது பிரிவின் அர்த்தத்துக்குள் இருக்கிற ஒரு அந்நிய கம்பெனியும் அடங்கும் ;

“ ஜில்லா ” (7) “ ஜில்லா ” என்பது, 1958-ம் ஞூத்திய சென்னை ஜில்லா அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின் 3-வது பிரிவைச்சேர்ந்த (1) உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட ரெவினியு ஜில்லா அல்லது ஷை பிரிவின் (2) உட்பிரிவின்படிப் பிறப்பிக்கப்பட்ட யாதொரு விளம்பரங்களின்படி மாற்றப்பட்டுள்ள ஷை பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்படி ஒரு ஜில்லாவாக அமைக்கப்பட்ட பிரதேச விஸ்தீரணம் எனப் பொருள்படும் ;

“ ஜில்லா அபிவிருத்திச் சபை ” (8) “ ஜில்லா அபிவிருத்திச் சபை ” என்பது, 1958-ம்ஞூத்திய சென்னை என்பது, 1958-ம்ஞூத்திய சென்னை ஜில்லா அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின்படி ஸ்தாபிக்கப்பட்ட ஜில்லா அபிவிருத்திச் சபை எனப் பொருள்படும் ;

குறிப்பு

மதராஸ் ஜில்லா அபிவிருத்தி சபைகள்—1958 ஞூத்திய மதராஸ் 18-வது சட்டம்-அனுபந்தத்தில் 1-ம் ஐடம் ஆகயிருக்கிறதை பார்க்கவும்.

“ தேர்தல் அதிகாரி ” (9) “ தேர்தல் அதிகாரி ” என்பது, பிரஸ்தாப பஞ்சாயத்தின் தலைவராகவோ உபதலைவராகவோ, யாதொரு அங்கத்தினராகவோ, பிரஸ்தாப பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அக்கிராசனராகவோ, உப-அக்கிராசனராகவோ யாதொரு அங்கத்தினராகவோ இராமல் நிர்ணயிக்கப்படக்கூடிய வேறே அதிகாரியென்று பொருள்படும் ;

குறிப்பு

தேர்தல் அதிகாரி.—2 (15) பிரிவின்படியுள்ள “ இன்ஸ்பெக்டர் ” தேர்தல் அதிகாரியாக நியமனம் பெறலாம். பிரிவு 178 (2) (ii) ன் கீழ் அரசாங்கம் “ வாக்காளர்களின் பட்டி ” “ தேர்தல்கள் ” முதலியவைகளுக்கு விதிகள் செய்யும். அவைகளின்படிக்கு தேர்தல் அதிகாரி நடந்து கொள்ளவேண்டும்.

இந்தியா அமைப்பு (அரசியல்) (Constitution of India) ஆர்டிகல்கள் 324 முதல் 329 படிக்கு மொத்த இந்தியாவிற்கும் "எலெக்ஷன் கமிஷனர்கள்" மூலமாக எலக்ஷன்கள் நடத்தப்படும். அதன்மூலமாக ஒவ்வொரு ஸ்டேட்டிற்கும் உப கமிஷனர்களும் ஏற்படுத்தி யிருக்கிறது. அவர்கள் ஓட்டர்கள் (வாக்காளர்) ஜாபிதாவை தயாரிப்பார்கள். அவைகளை அனுசரித்து முனிசிபாலிடிகளுக்கும், டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் ஓட்டர்களை பிரித்துகொள்ளப்படும். இதைக் குறித்து பிரிவு 20ன் கீழே விவரமாய் தெரியப் படுத்தி யிருக்கிறது.

(ஜி. ஓ. நெம். 1732; 1—6—1951) படிக்கு இன்ஸ்பெக்டர் தேர்தல் அதிகாரி ஆவார். ஆனல் அரசாங்கத்தார் பொதுவான அல்லது விசேஷ உத்தரவு பிறப்பித்து யாதொரு உத்யோகஸ்தர் அல்லது நபரை ஷெ இன்ஸ்பெக்டருக்கு அதிகப்படியான ஒரு தேர்தல் அதிகாரியாகப் பெயரை குறிப்பிடலாம்

"நிர்வாக அதிகாரி"

(10) "நிர்வாக அதிகாரி" என்பது ஒரு பட்டணம் நிர்வாக உத்தியோகஸ்தருள்ள யாதொரு பஞ்சாயத்தின் விஷயத்தில் அந்த நிர்வாக உத்தியோகஸ்தர் எனவும், அவர் இல்லாவிட்டால் அந்த பஞ்சாயத்தின் தலைவர் எனவும், வேறே கிராம பஞ்சாயத்தின் விஷயத்தில் அதன் தலைவர் எனவும் பொருள்படும்;

43-ம் பிரிவை பார்க்கவும்.

"நிர்வாக உத்தியோகஸ்தர்"

(11) "நிர்வாக உத்தியோகஸ்தர்" என்பது, யாதொரு பட்டணம் பஞ்சாயத்தின் நிர்வாக உத்தியோகஸ்தர் எனப் பொருள்படும்;

33 (2), 40, 41, 42 பிரிவுகளை பார்க்கவும்.

"அரசாங்கம்"

(12) "அரசாங்கம்" என்பது, இந்த (மதராஸ்) ராஜ்ய அரசாங்கம் எனப் பொருள் படும்;

157 (4) 158, 198 பிரிவுகளை பார்க்கவும்.

குறிப்பு

பி. 2 (12) அரசாங்கம்.—அரசாங்கம் பஞ்சாயத்துனுடைய சகல காரியங்களையும் முதலில் இருந்தும், அப்போதுக்கு அப்போதும் கடைசியிலும் மேல்பார்வையிட அதிகாரம் உள்ளது. பி. 158 படிக்கு அரசாங்கம் எப்போது வேண்டுமென்றாலும் ஒரு விஷயத்தை கவனிக்கலாம். பி. 198 படிக்கு இந்த சட்டத்தை உபயோகிப்பதில் கஷ்டங்கள் ஏற்படும் பக்ஷத்தில் அவைகளை நீக்கலாம். இன்ஸ்பெக்டர் [பி. 2 (15)], கலெக்டர் [பி. 2 (4)] முதலியவர்களுக்கும் அரசாங்கம் பெரியதாகும். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் கமிஷனர்களும், பட்டணம் பஞ்சாயத்துகள் நிர்வாக அதிகாரிகளும், உத்யோகஸதர்களும், அக்ராசனர்களும், தலைவர்களும், மெம்பர்களும் அரசாங்கத்திற்கு சட்டபடிஉள்பட்டவர்களாக ஆகிறார்கள்.

"வீடு"

(13) "வீடு" என்பது, வாசஸ்தலமாகவோ மற்றப்படியோ மனிதர்கள் இருப்பதற்குத் தகுதியானதாய் பொதுப் பாதையிலிருந்து முக்கியமான பிரவேச வாயிலைப் பிரத்தியேகமாய் உடையதாயிருக்கும் யாதொரு கட்டிடம் எனப் பொருள்படுவதுமல்லாமல் அதில் யாதொருஷாப் (கடை), வேலைச்சாலை அல்லது கிடங்கு அல்லது பஸ்களை விட்டு வைப்பதற்காகவாவது நிறுத்தி வைப்பதற்காகவாவது பஸ் நிற்கிற இடமாகவாவது உபயோகிக்கப்படுகிற யாதொரு கட்டிடம் என்பதும் அடங்கும்; 120-ம் பிரிவை பார்க்கவும்.

குறிப்பு

கட்டிடம்—பி. 2 (1) வாசஸதலம்—பி. 2 (29)

பொது.—இந்த அர்த்தத்தில் "குடிசை" என்பதை எடுத்துவிடப்பட்டது. அது வீட்டு வரி விஷயத்தில் கவனிக்கத்தக்கது. பிரிவு 120 பார்க்கவும். "குடிசை" என்பதை குறித்து பி. 2 (14) பார்க்கவும்.

வாசஸ்தல மாகவோ, மற்றப் படியோ.—அது வசிக்கும் இடமாக உபயோகிக்கப்படு கிறதோ, அல்லவோ அது அவ்வளவு முக்கியமானதல்ல. ஆதலால் நாடகக் கொட்டகைகள், ஷாப்புகள், பாக்டெரிகள் முதலியவை இதன் கீழ்வரும்.

மனிதர்கள் இருப்பதற்குத் தகுதியானதாய்:—ஆடுமாடுகளை அடைக்கும் பட்டி (பௌண்ட்) மனிதர்கள் வசிப்பதற்கு ஏற்றதாக இல்லாமையால் இந்த உப பிரிவின் அர்த்தத்திற்குள் வராது. பசுக்களின் கொட்டகை மனித வாசத்திற்கு ஏற்றதாயில்லாமை யால், இந்த செக்ஷனில் விவரிக்கப் பட்டபடி வீடு ஆகாது. [ஜி. ஓ. நெ. 1781, L.M. 13—8—1923; கெஜட் Page 379, d. 21—8—1923 No. 715].

(14) "குடிசை" என்பது, முக்கியமாய் மரம், சேறு, இலைகள், புல் அல்லது வைக்கோல், அல்லது விழல் முதலியவைகளினால் கட்டப்படு கிற யாதொரு கட்டிடமென்று பொருள்படும்; மேலும், அதில் இச் சட்டத்தின் காரியங்களுக்காகப் பஞ்சாயத்தார் குடிசை யென்று பிரசித்தம் செய்யக்கூடியதாய் என்ன பரிமாணம் உள்ளதாகவாகிலும் சரி, தாற்காலிகமாய் அமைக்கப்பட்டிருக்கிற யாதொரு கட்டுக்கோப்பு என்பதும் அல்லது என்ன சாமானைக் கொண்டாகிலும் சரிகட்டப்பட்டிருக்கிற யாதொரு சிறிய கட்டிடம் என்பதும் அடங்கும்;

"குடிசை"

குறிப்பு

குடிசை.—குடிசை என்பதை "வீடு" பி. 2 (13)ன் அர்த்தத்தில் சேர்க்கப்படவில்லை. மசோதாவிலும், முன் 1950-வருஷத்து கிராம பஞ்சாயத்து ஆக்டிலும், "வீடு" என்றால் "குடிசை" என்றும் இருந்தது. அதை எடுத்துவிடப்பட்டது. ஆகையால் "குடிசை"க்கு பிரிவு 120 படிக்கு வீட்டுவரி போடக்கூடாது. ஆனால், "குடிசை" என்பதை கண்டிப்பாக இந்த அர்த்தத்தில் இன்னது என்று ஏற்படுத்தாமல் மொழுப்பி யிருக்கிறது.

இச்சட்டத்தின் காரியங்களுக்காக பஞ்சாயத்தால் குடிசை என்று பிரசித்தம் செய்யக் கூடியதாய் என்ன பரிமாணம் உள்ளதாகவாகிலும் சரி.—இதினால் ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஓர் இடம் "குடிசை"யா அல்லவா என்று பிரசித்தம் செய்ய வேண்டும். பஞ்சாயத்துகள் பல. அவைகள் ஒரே மாதிரியாக பிரசித்தம் செய்வது கடினம். இதை அரசாங்கமே விதிகள் மூலம் அல்லது 1-வது ஷெட்யூல் மூலம் நிர்ணயித்தால் சந்தேகங்களுக்கு இடமில்லாமல் யிருக்கும். இதை குறித்து பிரிவு 120லும் கவனிக்க வேண்டும்.

(15) "இன்ஸ்பெக்டர்" என்பது, இச் சட்டத்தின்படி, இன்ஸ்பெக்டருக் குள்ள அதிகாரங்களைச் செலுத்தவோ கடமைகளைச் செய்யவோ அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட யாதொரு உத்தியோகஸ் தர் எனப் பொருள்படும்;

"இன்ஸ்பெக்டர்"

144-147, 149, 150, 156, 157 பிரிவுகளை பார்க்கவும்.

(16) "கக்குஸ்" என்பதில், கொல்லை, என்பதும், தண்ணீர் வேகமாய் விழு வதனால் மலம் அடித்துக்கொண்டு போகிற வாட்டர்—க்ளா ஸெட் என்னும் கக்குஸ் என்பதும், மூத்திரம் பெய்வதற்கான இடம் என்பதும் அடங்கும்;

"கக்குஸ்"

(17) "அங்கத்தினர்" என்பது, சந்தர்ப்பத்துக்கேற்ப ஒரு பஞ்சாயத்தின் அல்லது ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அங்கத் தினர் எனப் பொருள்படும்;

"அங்கத்தினர்"

38-ம் பிரிவை பார்க்கவும்.

(18) "சாதாரண காலிஸ்தானம்" என்பது, காலம் முடிந்து போவதன் மேல் ஏற்படுகிற யாதொரு காலி ஸ்தானமென்று பொருள் படும்; மேலும், "சாதாரண தேர்தல்" என்பது, யாதொரு சாதாரண காலி ஸ்தானத்தை, பூர்த்தி செய்வதற்காக நடத்தப் படுகிற யாதொரு தேர்தல் எனப் பொருள்படும்;

"சாதாரண காலி ஸ்தானம்"

2 (2) பிரிவை பார்க்கவும்.

"சொந்தக்காரர்" (19) "சொந்தக்காரர்" என்பதில்—

(a) தாற்காலிகமாக ஒருவருடைய சொந்தக் கணக்கில் அல்லது மற்றொரு நபரின் சார்பாக ஏஜென்ட், டிரஸ் காரணவன். மானேஜர் அல்லது ரிஸீவர் என்னும் முறைமையில் யாதொரு மத அல்லது தரும காரியங்களுக்காக சொல் எந்த தொடர்பில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்தத் தொடர்பில் வாடகை அல்லது சொத்தின் லாபம் இவற்றைப் பெற அல்லது பெற உரிமையுள்ள யாதொரு நபர் என்பதும் ;

(b) தாற்காலிகமாக சொல் எந்தத் தொடர்பில் உபயோகிக்கப் பட்டிருக்கிறதோ அந்தத் தொடர்பில் (ஜந்து) மிருகம் அல்லது வண்டி இவற்றின் பொறுப்பு வகிக்கிற யாதொரு நபர் என்பதும் அடங்கும் ;

குறிப்பு

பொது.– சொத்து அசையா பொருளாகவும் அல்லது அசையும் பொருளாகவும் இருக்கலாம். எவராவது தற்காலத்தில் அந்த சொத்தை தன் வச படுத்திக்கொண்டோ, அல்லது அதன் வாடகை முதலியவைகளை தாற்காலிகமாக பெற்றுக்கொண்டு இருந்தால் அவர் சட்டப்படி சொந்தக்காரர் ஆகாவிட்டாலும், அவரை இந்த சட்டத்தின் ஷரத்துகளுக்காக "சொந்தகாரர்" என்று இச்சட்டம் கூறுகிறது. அவர் இந்த உப பிரிவில் கண்டபடி எந்த விதமாகவோ இருக்கலாம். அதுபற்றி அவசியமில்லை.

(20) "பஞ்சாயத்து" என்பது, யாதொரு கிராமத்தின் அல்லது பட்டணத்தின் பிரதேச பரிபாலனத்துக்காக, இச் சட்டத்தின்படி அமைக்கப்படுகிற சபை எனப் பொருள்படும் ;

"பஞ்சாயத்து"

குறிப்பு

3, 8, 9 பிரிவுகளை பார்க்கவும்.

பஞ்சாயத்து.—"பஞ்சாயத்து" என்பது வெறும் ஆளும் சபை என்று வாதிப்பது சரியல்ல. அத்துடன் பட்டணம் பஞ்சாயத்து பிரதேசமும், கிராம பஞ்சாயத்து பிரதேசமும் கலந்தே நிற்கும். [முட்லூர் பஞ்சாயத்து போர்ட்-எ.-செங்கல்பட் ரீஜனல் இன்ஸ்பெக்டர் A. I. R 1959 Mad 38. =71 M L. W 687]

(21) "பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதி" என்பது இச் சட்டத்தின் காரியங்களுக்காக அப்போதைக்கப்போது ஒரு பஞ்சாயது அபிவிருத்தித் தொகுதியாக இருக்க வேண்டுமென அரசாங்கத்தாரால் அறிவிக்கப்பட்ட ஒரு பிரதேசம் எனப் பொருள்படும் ;

"பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதி"

7 (1) பிரிவை பார்க்கவும்.

(22) "பஞ்சாயத்து பட்டணம்" என்பது, 9-வது பிரிவின் படி ஒரு பட்டண பஞ்சாயத்து என வகைப்படுத்தப்பட்ட ஒரு பஞ்சாயத்தின் விசாரணை அதிகாரத்திலிருக்கும் யாதொரு பிரதேச விஸ்தீர்ணம் எனப் பொருள் படும் ;

"பஞ்சாயத்து பட்டணம்"

3, 8, 9 பிரிவுகளை பார்க்கவும்.

(23) "பஞ்சாயத்து யூனியன்" என்பது, இச் சட்டத்தின்படி ஒரு பஞ்சாயத்து யூனியனாக அறிவிக்கப்பட்ட யாதொரு பிரதேச விஸ்தீர்ணம் எனப் பொருள்படும் ;

"பஞ்சாயத்து யூனியன்"

7-11 பிரிவுகளை பார்க்கவும்.

(24) "பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்" என்பது, இச் சட்டத்தின்படி ஒரு பஞ்சாயத்து யூனியன் பரிபாலனத்திற்காக அமைக்கப்பட்ட ஒரு சபை எனப் பொருள்படும் ;

"பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்"

7, 11 பிரிவுகளை பார்க்கவும்.

"பஞ்சாயத்து கிராமம்"

(25) "பஞ்சாயத்து கிராமம்" என்பது, ஒரு கிராமப் பஞ்சாயத்தின் விசாரணை அதிகாரத்தில் இருக்கும் யாதொரு பிரதேச விஸ்தீர்ணம் எனப் பொருள்படும்;

3, 8, 9 பிரிவுகளை பார்க்கவும்.

"தலைவர்"

(26) "தலைவர்" என்பது, யாதொரு பஞ்சாயத்தின் தலைவர் எனக் பொருள்படும்;

29-35, 149, 150, 152 பிரிவுகளை பார்க்கவும்.

"சொந்த (ப்ரைவேட்) பாட்டை"

(27) "சொந்த ப்ரைவேட் பாட்டை" என்பது, "பொது பாட்டையா" யிராத யாதொரு தெரு, பாட்டை, சதுக்கம், வெளியிடம், முடுப்குச் சந்து, வழி, வண்டிப்பாட்டை, நடைப்பாதை அல்லது குதிரையேறிச் செல்லும் பாதை எனப் பொருள்படும்; ஆனால், அதில் ஒரு வளவின் சொந்தக்காரர் அந்த வளவுக்குப் போவதற்காகவாவது அதைச் சவுகரியமாய் உபயோகிப்பதற்காகவாவது தம்முடைய சொந்த நிலத்தில் ஏற்படுத்திக் கொண்ட யாதொரு வழி என்பது அடங்காது;

குறிப்பு

பொது.—விழாக்காலத்தில் ஒரு பாதையில் ஒரு பந்தலின் கீழ் நிறுத்தப்பட்டிருக்கும் இரதத்தைப் பார்க்கவும், சேவிக்கவும், செல்லும் ஜனங்கள் நடப்பதற்கும் அநுகூலமாயிருக்கும் படி ஒரு நிலம் விடப்பட்டிருக்கிறது. தர்மகர்த்தாவின் அநுமதியின் பேரில் ஜனங்கள் அந்த நிலத்தின் மீது செல்லுகிறார்கள். வருஷத்தில் சில காலத்தில் நிலத்தின் வழியாக ஜனங்கள் செல்வது தடுக்கப்படுகிறது. அந்நிலம் முழுவதும் கடைக்காரர்கள் தம் கடை கொட்டகைகளை போட்டுக்கொள்ள அவர்களிடமிருந்து ஷெ பெய்த்துகள் (தர்மகர்த்தாக்கள்) சுங்கம் வசூலிக்கிறார்கள். இத்தகைய விஷயத்தில், பொது ஜனங்கள் அந்த நிலத்தின்மீது உரிமையுடன் நடந்து செல்வதற்குரிமை கிடையாது. ஆகையால், அது முனிசிபாலிடியின் பாதையாகாது. முனிசிபாலிடிக்கு உரியதுமாகாது, [குமத் பந்து தாஸ-எ.-கிஷோரிலால் 9 I.C. 562]. பொது ஜனங்களில் சிலருக்கு ஒரு நிலத்தின் மீது செல்ல நிபந்தனையோடு ஏற்பட்ட ஒரு சௌகர்யத்தை முன்னிட்டு அந்த நிலம் பொது ஜனங்களுக்குடையது என்று ஒரு முனிசிபாலிடி சொந்தம் பாராட்ட முன் வருமானல் ஒருவருடைய சொத்தின் உரிமையைப் பத்திரமாய்க் காப்பாற்றிக்கொள்ள முடியாததாகிவிடும். [அலகாபாத் முனிசிபாலிடி—எ. — மணிலால் 20-A 146].

பொது பாட்டை.—பிரிவுகள் 2 (28), 63 (*a*), (*b*), (*d*), 64 (*a*)- (*b*), 76, 77, 78, 82-களை பார்க்கவும்.

"பொதுப் பாட்டை"

(28) "பொதுப் பாட்டை" என்பது, ஜனங்கள் போக்குவரத்தான வழியாயிருந்தாலும் இராவிட்டாலும், அவர்களுக்கு வழிநடைப் பாத்தியதை உண்டாயிருக்கிற யாதொரு தெரு, பாட்டை, சதுக்கம், வெளியிடம், முடுக்குச் சந்து, வழி, வண்டிப்பாட்டை, நடைப் பாதை அல்லது குதிரையேறிச் செல்லும் பாதை எனப் பொருள்படும்; மேலும் அதில்.

(a) பொதுஜன உபயோகத்திற்காகக் கட்டியிருக்கிற யாதொரு வாராவதியின் மேல் போகிற வழி அல்லது மேடான பாதை என்பதும்.

(b) அப்படிப்பட்ட யாதொரு பாட்டை, பொதுஜன உபயோகத்துகாகக் கட்டியிருக்கிற வாராவதி அல்லது மேடான பாதையோடு சேர்ந்த ஒற்றையடிப் பாதை என்பதும்.

(c) அப்படிப்பட்ட யாதொரு பாட்டை, பொதுஜன உபயோகத்திற்காகக் கட்டியிருக்கிற வாராவதி அல்லது மேடான பாதையோடு சேர்ந்திருக்கிற சாக்கடைக்கால்களென்பதும், பிரஸ்தாப வழிக்கும் பக்கத்திலிருக்கிற சொத்தானது தனி நபர்களுக்குரிய

சொத்தாயிருந்தாலும் சரி, இந்த ராஜ்ய அல்லது மத்திய அரசாங்கத்தாருக்குச் சொந்த மான சொத்தாயிருந்தாலும் சரி, அதன் எல்லைகள் வரையிலே ஷி வழியின் இருபக்கங் களிலும் யாதொரு தளவரிசை, தாழ்வாரம் அல்லது வேறே கட்டுக்கோப்பினுல் கவியப் பெற்ருகிலும், கவியப் பெருமலாகிலும் இருக்கிற நிலமென்பதும் அடங்கும் ;

குறிப்பு

பொது பாட்டை.—63 (*a*), (*d*), 64 (*a*), (*b*), 76, 78, 82, 175 பிரிவுகளை பார்க்கவும். "Once a Highway a always a Highway" அதாவது "ஒருதரம் பொது பாட்டையாகயிருந் தால் அது எப்போதும் பொது பாட்டை" என்பது பழமொழியாகும். பொதுப் பாட்டையானது முட்டிச் சந்தாக இருந்தபோதிலும் அதில் பொது ஜனங்கள் நடப்பதற்கு பாத்தியமிருக்கும் பட்சத்தில் அது பொதுப் பாட்டையாகும். பொதுப் பாட்டையானது 76, 77 பிரிவுகள்படிக்கு சங்கிரமிக்கும். ஒரு பொதுப்பாட்டையில் ஒரு பூர்த்தியான அகலத்தில் பொது ஜனங்களுக்கு நடமாட பாத்தியமுண்டு [விசாகப்பட்டணம் முனிசிபாலிடி—எ.—வில்லியம் (1918) 44. I.C. 312=41 M. (528)]. 27 அடி அகலமுள்ள ஒரு பொதுப் பாட்டையில் 9 அடி அகலம் வரையில் ரோடு ரிப்பேருக்காக கூழாங்கற்கள் கொட்டிவைப்பது சரியல்ல. [சுந்தரம்-எ.- மதுரா முனிசிபாலிடி 25 M. 635 (F.B.)]

பப்ளிக் ரோடும், கவர்ன்மெண்டுக்கு பக்கத்தில் இருக்கும் இடமும்.—வியாஜ்யத்தில் யுள்ள இடம் கவர்னமெண்டாருடையதானுலும், அது பப்ளிக் ரோடில் சேர்ந்ததா அல்லது பப்ளிக் ரோடிற்கு சேராமல் வேறுபட்டதா என்று தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் எல்லா பப்ளிக் ரோட்டுகளும் கவர்ன்மெண்டாரால் 76, 77 பிரிவுகள் படிக்கு பஞ்சாயத்துகளில் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களில் சேரும்படி செய்யப்பட்டதாகும். [கன்னய்யா எ.-திலக்கோயிலூர் யூனியன் போர்டு, A.I.R. 1931 Mad. 424=60 M.L.J. 462,)

வாசஸ்தலம், வசிப்பவர்

(29) யாதொரு நபர் யாதொரு வீட்டின் எந்தப் பாகத்தையாகிலும் தூங்குவதற்கான அறையாகச் சில காலங்களில் உபயோகித்தால், அவர் அந்த வீட்டில் தம்முடைய 'வாசஸ்தலத்தை' உடையவராக அல்லது அதில் 'வசிப்பவராக' எண்ணப்படுவார்; மேலும், யாதொரு நபர் எப்போதாகிலும் அப்படிப்பட்ட யாதொரு வீட்டுக்கு இஷ்டப்பட்டால் திரும்பி வரக்கூடியவராயிருந்து, அப்படித் திரும்பி வரும் உத்தேசத்தை விட்டுவிடாதிருப்பதால், அவர் அந்த வீட்டிலிராத காரணத்தினுலேயாவது, வேறே இடத்திலுள்ள இன்னெரு வீட்டில் அவர் வசிப் பதனுலேயாவது, அவர் முதலில் சொன்ன வீட்டிலே வாசம் செய்வது நின்று போய்விட்டதாக எண்ணக்கூடாது ;

குறிப்பு

செ. 2 (29) வாஸஸ்தலம்.—ஒரு வீட்டைத் தூங்குவதற்காக உபயோகிக்க தக்கது மாத்திரம், அதை வாசஸ்தலமாக வசிப்பதவற்காக உபயோகித்துக்கொண்டாரெனத் தீர்மானிப் பதற்கு போதுமானது. தூங்கும் இடத்தை ராத்திரியில் மாத்திரமே உபயோகிக்க வேண்டு மென்பது அவசியமில்லை. தூங்குவதற்காக உபயோகிக்கத் தகுந்ததாக அந்த வீடு இருந்தால் போதும் (ப்ராஸ்ட்—எ.—காஸ்டன் (1929) 2 K.B. 138).

வீட்டில் இராத காரணத்தினுலேயாவது, மற்ரெரு இடத்திலுள்ள இன்னெரு வேறே வீட்டில் வசிப்பதினுலேயாவது அவர் முதலில் சொன்ன வீட்டிலே வாசம் செய்வது நின்று விட்டதாக எண்ணக்கூடாது.—இதனுல் ஏற்படுவது என்னவென்ருல் ஒருவருக்கு அநேக இடங்களில் வாசஸ்தலங்கள் இருக்கக்கூடும். அந்த ஒவ்வொரு இடத்திலேயும் அவருடைய பெயரை வாக்காளராக பதிக்க அவருக்கு அருகதையுண்டு. அவர் எந்தெந்த இடத்தில் தன் னுடைய பெயர் வருகிறதோ அந்த வார்ட்களில் எல்லாம் அபேட்சகராகவோ, மெம்பராகவோ கௌன்ஸிலராகவோ வரலாம். ஆகையினுல் ஒருவருடைய பெயர் வாக்காளர் ஜாபிதாவில் மொத்த மதராஸ் அரசாங்கத்தில் ஓர் இடத்தில் தான் அவருடைய பெயர் பதித்திருக்க வேண்டு மென்பது சரியல்ல. ஆனுல் மொத்த பட்டனத்திலோ, கிராமத்திலோ, மொத்த பஞ்சாயத்து அங்கத்தினர்களை தேர்ந்து எடுக்கும்போது ஒருவருக்கு அநேக வார்டுகளில் பேர்பதித்து யிருந்தாலும் அவர் ஒரு ஓட்டுக்குமேல் உபயோகிக்கக் கூடாது. அப்படி உபயோகித்தால் அவருடைய மொத்த ஓட்டுகளும் செல்லாது. ஆனுல் தனிப்பட்ட உப எலக்ஷன்களில் தன்

ஓட்டுகளை தனித்தனியாக உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஒரு ஜெயிலில் உள்ளவன், அல்லது ஒரு வெளியூரில் உத்தியோகத்தில் உள்ளவன், வாசஸ்தலத்தில் இருப்பதாகக் கருதப்பட மாட்டாது.

" ரெவினியு கிராமம் "

(30) "ரெவினியு கிராமம்" என்பது, ரெவினியு பரிபாலனக் காரியங்களுக்காக, ஒரு ஜில்லாக் கலெக்டரின் பொறுப்பிலிருக்கும் யாதொரு பிரதேச விஸ்தீர்ணம் எனப் பொருள்படும்; ஆனல் அதிலிருந்து:—

(a) ஸெய்ண்ட் ஜார்ஜ் கோட்டை என்னும் கோட்டையும் அதற்கு வெளிப் புறத்திலுள்ள ((glacis) சரியான பூமியும் உட்பட சென்னை நகரத்திலும்,

(b) ஜில்லா முனிசிபாலிடிகளைக் குறித்த (சென்னை 1920-ம் ஹு த்து V-வது சட்டமாகிய) 1920-ம் ஹுத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தின்படி எற்படுத்தப் பட்டிருக்கிற முனிசிபாலிடிகளிலும்,

(c) கண்டோன்மெண்டுகளைக் குறித்த (1924-ம் ஹுத்திய 11-வது (மத்தியச் சட்டமாகிய) 1924-ம் ஹுத்திய சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிற கண்டோன் மென்டுகளிலும் அடங்கியுள்ள விஸ்தீர்ணங்கள் எவையேனும் இருந்தால் அவைகளை விலக்கிவிட வேண்டும்:

" ஷெட்யூலில் கண்ட ஜாதிகள் "

(31) "ஷெட்யூலில் கண்ட ஜாதிகள்" என்பது, இந்திய அரசியலமைப்பில் என்ன அர்த்தம் உள்ளதா யிருக்கிறதோ அதே அர்த்தம் உள்ளதாகும்;

குறிப்பு

பி. 2 (31)ன் கீழ் :—இந்திய (அரசாங்கம்) அமைப்பு [Constitution of India] ஆர்டிகள் 341 (1) படிக்கு இத்திய பிரசிடெண்டு அவர்களுக்கு இன்னர் இந்த ஷெட்யூல் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று ஏற்படுத்த அதிகாரமுண்டு.

மதராஸ் பிரதேசத்திலுள்ள ஷெட்யூல் வகுப்பைச் சேர்ந்தவர்கள் :—

1. ஆதி ஆந்திரா
2. ஆதி திராவிடா
3. ஆதி கர்நாடகா
4. அஜிலா
5. அருணதுத்தியார்
6. பைரா
7. பட்டு
8. பாண்டி
9. பரிக்கி
10. பவுரி
11. பெல்லாரா
12. பையாகியா
13. சச்சடி
14. சக்கிலியன்
15. சாலவாடி
16. சாமார்
17. சண்டால
18. செருமேன்
19. தண்டசி
20. தேவேந்திரா குலத்தோன்
21. தோம் அல்லது தொம்பர, பாடி பானே
22. காசி அல்லது ஹட்டி ரெல்லி சரசங்கி
23. கோடாகலி
24. கோடரி
25. கோட்டா
26. கோஸங்கி
27. ஹாஸ்ய
28. ஹோலிய
29. ஜக்காலி
30. ஜாம்புவான்
31. காடன்
32. கல்லாடி
33. கணக்கன்
34. கரிப்பாலன்
35. கோடலோ
36. கூசா
37. கோரக
38. குடுமி
39. குடும்பன்
40. குரவன்
41. குறிச்சன்
42. மதரி
43. மாதிகா
44. மெய்லா
45. மாலா
46. மாவா தாஸூ
47. மாலசார்
48. மதாங்கி
49. மாவிலான்
50. மோதர்
51. முச்சி
52. முண்டாலா
53. காலக்கேயவா
54. நாயடி
55. பகடை
56. பெயிர்டா
57. பாகி
58. பல்லன்
59. பாம்பாடா
60. பாமிடி
61. பானன்
62. பஞ்சமா
63. பன்னியாண்டி
64. பறையன்
65. பறவன்
66. புலையன்
67. புத்திரை
68. வாணன்
69. ரானேயர்
70. சமங்கரை
71. சாம்பன்
72. சபரி
73. செம்மான்
74. தோட்டி
75. திருவள்ளுவர்
76. வள்ளுவன்
77. வால்மீகி
78. வேட்டுவன்.

சென்டல் (மத்ய) 1956-ம் ஹு த்திய 63-வது சட்டமாகிய ஷெட்யூல் ஜாதிகள் ஷெட்யூல் (பழம்) குடிமக்கள் ஆர்டர்களை திருத்தும் ஆக்ட்டு ஷெட்யூல் I பார்ட். I யையும் பார்க்கவும்.

"பட்டணம்"

(32) "பட்டணம்" என்பது, 3-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி அறிவிக்கப்பட்டதும், ஒரு பட்டண பஞ்சாயத்தின் விசாரணை அதிகாரத்திலிருப்பதுமான யாதொரு பிரதேச விஸ்தீர்ணம் எனப் பொருள்படும்;

3, 8, 9 பிரிவுகளைப் பார்க்கவும்.

"பட்டண பஞ்சாயத்து"

(33) "பட்டண பஞ்சாயத்து" என்பது, 9-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியின்படி வகைப்படுத்தப்பட்ட ஒரு பட்டண பஞ்சாயத்து எனப் பொருள்படும்;

3, 9, 9 பிரிவுகளைப் பார்க்கவும்.

"ஒதுக்கப்படாத காடு"

(34) "ஒதுக்கப்படாத காடு" என்பது, காட்டைக் குறித்த (சென்னை 1882-ம் ஆண்டு 5-வது சட்டமாகிய) 1882-ம் ஆண்டு சென்னப் பட்டணத்துச் சட்டத்தின் 4-வது பிரிவின்படி அறிக்கையிடப்படாத யாதொரு காடு எனப் பொருள்படும்; மேலும் அதில், அரசாங்கத்தார் வசமுள்ள ஒதுக்கி வைக்கப்படாத நிலம் என்பதும் அடங்கும்;

72-ம் பிரிவை பார்க்கவும்

"கிராமம்"
"ரெவின்யூ கிராமம்"

(35) "கிராமம்" என்பது, 3-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி ஒரு பஞ்சாயத்து கிராமம் எனப் பிரசித்தம் செய்யப்பட்டதும் ஒரு கிராமப் பஞ்சாயத்தின் விசாரணை அதிகாரத்திலிருப்பதுமான யாதொரு பிரதேச விஸ்தீர்ணம் எனவும், "ரெவினியு கிராமம்" என்பது, அரசாங்கத்தாரின் ரெவினியு கணக்குகளில் ரெவினியு கிராமம் என அங்கீகரிக்கப்பட்ட யாதொரு பிரதேச விஸ்தீர்ணம் எனவும் பொருள்படும்; ஆனால், அதில்—

(a) ஸெய்ன்ட் ஜார்ஜ் கோட்டை என்னும் கோட்டையும் அதற்கு வெளிப் புறத்திலுள்ள (glacis) சரியான பூமியும் உட்பட சென்னை நகரத்திலும்,

(b) ஜில்லா முனிசிபாலிட்டிகளைக் குறித்த (சென்னை 1920-ம் ஆண்டு V-வது சட்டமாகிய) 1920-ம் ஆண்டு சென்னப்பட்டணத்துச் சட்டத்தின்படி ஏற்படுத்தப் பட்டிருக்கிற முனிசிபாலிடிகளிலும்,

(c) கண்டோன்மென்டுகளைக் குறித்த (1924-ம் ஆண்டு 11-வது மத்தியச் சட்டமாகிய) 1924-ம் ஆண்டு சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிற கண்டோன் மெண்டுகளிலும்,

அடங்கியுள்ள விஸ்தீர்ணங்கள் எவையேனும் இருந்தால் அவைகளை விலக்கி விட வேண்டும்.

குறிப்பு

செ. 2 (35) கிராமம்.—இந்த ஆக்டின் காரியங்களுக்காக கிராமங்களை அமைக்கவும் மாற்றவும் இன்ஸ்பெக்டருக்குள்ள அதிகாரத்தை குறித்து—பி, 3ஐப் பார்க்கவும். அவை பூர்தியான ரிவின்யூ கிராமங்களாக யிருக்க வேண்டுமென்று கட்டாயப் கிடையாது. புது பஞ்சாயத்துகளை ஏற்படுத்தும்பொழுது கவர்ன்மெண்டுக்கும், இன்ஸ்பெக்டருக்கும் விசேஷ ஏற்பாடுகள் மூலம் நடத்துவதற்கு அதிகாரம் உண்டு. பி. 188யை பார்க்கவும். பி. 8-ன் கீழ் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பஞ்சாயத்து அமைக்கப்படவேண்டும். இப்போது ஏற்பட்டுள்ள கிராமங்களும் பஞ்சாயத்துகளும், கிரமப்படி அமைக்கப்பட்டவை யென்று பி. 190ன் கீழும், ஷெட்யூல் IV விதிகள் 2, 3 கீழும் கருதப்படும்.

குக் கிராமங்கள் : ஒரு குக்கிராமத்தை ஒரு பஞ்சாயத்தாக ஏற்படுத்தும் பொழுதும் (2) ஒரு குக்கிராமத்தை மற்றொரு பஞ்சாயத்துடன் சேர்க்கும்பொழுதும், அதனுடைய எல்லை (Boundary)களை கட்டாயம் கொடுக்கவேண்டும். அப்படி செய்யாவிட்டால் வரி விஷயங்களிலும், லைசென்சுகள் விஷயங்களிலும், நிலவரி-ஸ்டாம்பு வரி அடைவதிலும், தகராறுகள் ஏற்படும். இன்ஸ்பெக்டர் 3-ம் பிரிவின் கீழ் செய்யும் அறிவிப்பும் உபயோகமற்றதாகும்.

"நீர்க்கால்" (36) "நீர்க்கால்" என்பது, யாதொரு ஆறு, ஓடை அல்லது இயற்கையாகவாகிலும் செயற்கையாக வாகிலும் உள்ள யாதொரு வாய்க்கால் என்பதும் அடங்கும்;

"வருஷம்" (37) "வருஷம்" என்பது, நிதி வருஷம் எனப் பொருள்படும்.

அத்தியாயம்—2 (பிரிவுகள் 3-62)

பஞ்சாயத்துக்களையும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களையும் அமைப்பதும் பரிபாலனம் செய்வதும்.

பஞ்சாயத்து கிராமங்கள், பஞ்சாயத்து பட்டணங்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றை அமைப்பது.

பஞ்சாயத்து கிராமங்களையும், பஞ்சாயத்து பட்டணங்களையும் அமைப்பது.

3. (1) இன்ஸ்பெக்டர் ஆனவர் விளம்பரம் பிரசுரித்து அதின் மூலமாக.—

(a) இச் சட்டத்தின் நோக்கங்களுக்காக (5000) ஐயாயிரத்திற்கு குறையாத ஜனத்தொகையும் வருஷம் ஒன்றுக்கு (10,000) பத்தாயிரம் ரூபா வருமாணம்யுள்ள ஒரு ரிவின்யூ கிராமம் அல்லது கிராமங்கள், அல்லது ஒரு ரிவின்யூ கிராமத்தின் பகுதி, அல்லது இரண்டு அல்லது அதற்கும் அதிகமான ரிவின்யூ கிராமங்களை தொடர்ந்தாபோல்யுள்ள ஒரு தல பிரதேசத்தை பட்டணம் பஞ்சாயத்து என பிரிக்கவேண்டும்.

(b) இச் சட்டத்தின் கருத்துகளுக்காக (500) ஐந்நூறுக்கு குறையாத ஜனத்தொகையுள்ள ஒரு ரிவுன்யூ கிராமம் அல்லது கிராமங்கள் அல்லது ஒரு ரிவின்யூ கிராமத்தின் பகுதி, அல்லது இரண்டு அல்லது அதற்கும் அதிகமான ரிவின்யூ கிராமங்களை தொடர்ச்சியாகயுள்ள ஒரு தல பிரதேசத்தை கிராம பஞ்சாயத்து என பிரிக்க வேண்டும்.

(c) அத்தகைய பஞ்சாயத்து கிராமம் அல்லது பஞ்சாயத்து பட்டணத்தின் பெயரைக் குறிப்பிடவேண்டும்:

(2) (a) இன்ஸ்பெக்டரானவர், விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக, ஒரு கிராமம் அல்லது பட்டணத்தில் அடங்கியிருக்கிற யாதொரு பிரதேசத்தை விலக்கி விடலாம்; ஆனால், ஷி கிராமத்தின் அல்லது பட்டணத்தின் ஜனத்தொகை அவ்வாறு விலக்கப்பட்ட பிறகு ஐந்நூறுக்குக் குறையாம லிருக்கவேண்டும்.

(b) (a) பகுதியின்படி விலக்கப்பட்ட யாதொரு பிரதேசம் சம்பந்தமாக இன்ஸ்பெக்டரானவர் (1) உட்பிரிவின்படி விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக ஷி பிரதேசத்தில் ஐந்நூறுக்கு குறையாத ஜனத்தொகை இருக்கும் பட்சத்தில் அதை ஒரு கிராமம் அல்லது பட்டணம் என அறிக்கையிட வேண்டும்; அல்லது அதனுடைய ஜனத்தொகை ஐந்நூறுக்கு குறைவாயிருந்தால் அதை (c) (i) பகுதியின்படி பக்கத்திலுள்ள யாதொரு கிராமம் அல்லது பட்டணத்தில் சேர்க்கவேண்டும்.

(c) இன்ஸ்பெக்டரானவர் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக—

(i) யாதொரு கிராமத்திற்கு அல்லது பட்டணத்திற்கு சமீபத்திலிருக்கும் யாதொரு பிரதேச விஸ்தீரணத்தை அக் கிராமத்தில் அல்லது பட்டணத்தில் சேர்க்கலாம்; அல்லது,

(ii) (1) உட்பிரிவின்படிப் பிறப்பிக்கப்பட்ட விளம்பரத்தை ரத்து செய்யலாம்;

(iii) (1) உட்பிரிவின்படிக் குறிப்பிட்ட யாதொரு கிராமத்தின் அல்லது பட்டணத்தின் பெயரை மாற்றலாம்,

(d) (1) உட்பிரிவோடு சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (a) பகுதியின்படி யாவது, (b) பகுதியின்படியாவது அல்லது (c) பகுதியின்படிக்காவது, ஒரு விளம்பரம் வெளியிடுவதற்கு முன்னே இன்ஸ்பெக்டரானவர் அப்படிப்பட்ட விளம்பரம் வெளி யிடுவதினல் பாதிக்கப்படுகிற பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்துக்கள், பிரஸ்தாப உத் தேசத்துக்கு விரோதமாய்க் காரணம் காட்டுவதற்காக, அந்தப் பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்துக்களுக்கு, நியாயமான வாய்ப்பு கொடுத்து அந்தப் பஞ்சாயத்தாவது பஞ் சாயத்துக்களாவது, எந்த விளக்கங்களையாகிலும், ஆட்சேபனையாகிலும், சொல்லிக் கொண்டால் அவைகளைப் பற்றி ஆலோசிக்க வேண்டும்.

(3) ஓராவது உபபிரிவின் அல்லது 2-வது உபபிரிவின் கீழ் செய்யப்பட்ட விளம் பரத்திற்கு, ஒரு பஞ்சாயத்தின் பிரதேசத்தில் வரி கொடுக்கிறவனே, அல்லது வசிக் கிறவனே, அல்லது அந்த விளம்பரத்தில் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தோ, ஆட்சேபிக் கும் பட்சத்தில், அவனாவது அந்த பஞ்சாயத்தாவது அந்த விளம்பரத்தின் உத்திர வின் பேரில் அரசாங்கத்திற்கு குறிப்பிட்ட காலத்திற்குள் அப்பீல் செய்து கொள்ளலாம்.

(4) இன்ஸ்பெக்டரானவர்—

(a) ஏற்பட்டிருப்பது நின்றுபோன யாதொரு பஞ்சாயத்தினிடம் சங்கிரமித் துள்ள சொத்தை ஒருவகை செய்வது விஷயமாகவும் அதன் பொறுப்புகளை நிறை வேற்றுவது விஷயமாகவும்,

(b) யாதொரு பிரதேச விஸ்தீரணம் விஷயமாய் விசாரணை யதிகாரம் செலுத் துவதை விட்டு விட்டிருக்கிற யாதொரு பஞ்சாயத்தினிடம் சங்கிரமித்துள்ள சொத்தின் எந்தப் பாகத்தையேனும் ஒருவகை செய்வது விஷயமாகவும் ஷை சொத்து சம்பந்த மாய் அல்லது ஷை பிரதேச விஸ்தீர்ணத்திலிருந்து ஏற்படுகிற அப் பஞ்சாயத்தின் பொறுப்புகளை நிறைவேற்றுவது விஷயமாகவும் தமக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய உத்தரவுகளைப் பிறப்பிக்கலாம்.

இந்த உட்பிரிவின்படி செய்யப்படுகிற ஓர் உத்திரவிலே, இன்ஸ்பெக்டர் அவசியமெனக் கருதக்கூடியபடி துணையானவையும் தொடர்பான விளைவானவையும் பலனுகைவுள்ளவையுமான ஷரத்துக்கள் அடங்கியிருக்கலாம்; முக்கியமாக அதில் பின் வருமாறு கட்டளையிட்டிருக்கலாம் :—

(i) ஷை பஞ்சாயத்துக்குச் சேரவேண்டிய யாதொரு வரி, கட்டணம் அல்லது இதர தொகையாவது, எந்தப் பிரதேச விஸ்தீரணம் விஷயமாகவேனும் ஒரு பஞ்சாயத்து விசாரணையதிகாரம் செலுத்துவது நின்றுபோய் விட்டிருந்தால், அவ் விஸ்தீரணம் சம்பந்தமாக அந்தப் பஞ்சாயத்துக்குச் சேரவேண்டிய வரி, கட்டணம் அல்லது இதர தொகையாவது ஷை உத்தரவில் குறிப்பிடக்கூடிய அதிகாரிகளுக்குச் செலுத்தப்படத் தக்கவையாகும்.

(ii) அப்படிப்பட்ட யாதொரு வரி, கட்டணம் அல்லது தொகை சம்பந்த மாக ஷை பஞ்சாயத்து இராமற் போய்விட்ட தேதியன்ருவது, சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்தப் பிரதேச விஸ்தீர்ணம் விஷயமாக ஷை பஞ்சாயத்து விசாரணையதிகாரம் செலுத் துவது நின்றுபோன தேதியன்ருவது பைசலாகாமல் நடந்து கொண்டிருக்கிற அப்பீல்கள், மனுக்கள் அல்லது இதர விண்ணப்பங்கள் ஷை உத்தரவில் குறிப்பிடப் படக்கூடிய அதிகாரிகளால் பைசல் செய்யப்படவேண்டும்.

குறிப்பு

இன்ஸ்பெக்டர்-பி. 2 (15)	சொத்து பி. 8 (3)
அறிவிப்பு-பி. 178 (2) (XLVII)	வரி-பி. 119
கிராமம் - பி. 2 (35)	கட்டணம் லைசென்சு பீஸ் முதலியன
பட்டணம் பி. 2 (32)	பி. 111, 112, 159, 176.

பொது.—பிரதேச விஸ்தீர்ணங்களைப் பஞ்சாயத்துக் கிராமங்களென்றும் பஞ்சாயத்துப் பட்டணங்களென்றும் அறிவிக்க இப் பிரிவு வகை செய்கிறது. இப்போது 1-ம் வகுப்புப் பஞ்சாயத்துக்கள் 2-ம் வகுப்புப் பஞ்சாயத்துக்கள் என்று சொல்லப்படுவது இப் புதிய பஞ்சாயத்து நிர்வாக அமைப்பில் முறையே பட்டண பஞ்சாயத்துக்களென்றும் கிராமப் பஞ்சாயத்துக்களென்றும் மாற்றப்பட்டுள்ளன. (IV-ம் ஷெட்யூல்—இடைக்கால ஷரத்துகள்—2,3களைப் பார்க்கவும்). பஞ்சாயத்துகளை 9-ம் பிரிவின்படிக்கு தரம் பிரிக்கப்படும்.

கிராமம்—பட்டணம்.—கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கும் புது பஞ்சாயத்துக்கள் அமைப்பது பற்றி பி. 188யை பார்க்கவும். இப்போது ஏற்பட்டுள்ள கிராமங்களும், பட்டணங்களும் பஞ்சாயத்துகளும் கிரமப்படி அமைக்கப்பட்டவை என்று இந்த சட்டத்தின் கீழ் கருதப்படும். 190-ம் பிரிவையும் ஷெட்யூல் IV ஷரத்துகள் 2, 3 பார்க்கவும். ஒவ்வொரு கிராமத்திற்கும் பட்டணத்திற்கும் ஒரு பஞ்சாயத்து உண்டு. (பி. 8.)

3 (2) (a) பிரிவின்படி ஒரு பஞ்சாயத்து பட்டணம் ஏற்படுவதற்கு குறைந்தது 5000 ஜனத்தொகையும் 10,000 ரூபா வருமானமும் இருக்கவேண்டும். 3(1) (b) பிரிவின்படி கிராம பஞ்சாயத்துக்கு குறைந்தது 500 ஜனத்தொகை இருக்கவேண்டும். (9–ம் பிரிவை பார்க்கவும்.)

இவைகளில் ஒரு பூர்த்தியான ரெவின்யூ கிராமம் யிருக்கவேண்டுமென்று கட்டாயம் இல்லை. ஒரு கிராமத்தின் பகுதியான குக்கிராமத்திற்கும் ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தலாம். அவை சிதறியிருக்கக் கூடாது.

3 (2) (d).—காரணம் காட்டுவதற்கு ஒரு நியாயமான வாய்ப்பு.—இது எழுத்தின் மூலப் அளிக்கப்படாவிட்டால் இந்த பிரகடனம் செல்லாது. [திருகுருங்குடி யூனியன் போர்ட் எ. நாராயண A. I. R. 1928 Mad 126=55. M. L. J. 718 : : செல்வபெருமாள் எ. செக்ரிடரி ஆப் ஸ்டேட். 1910 M. W. N. 271.]

3 (3) இந்த பகுதியை மசோதாவின் பிரகு புதிதாக சேர்க்க பட்டது. இதனல் பஞ்சாயத்து பிரதேசங்களில் யுள்ளவர்களும், பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்துகளை இந்த 3-வது பிரிவினல் அமைப்பும் விஷயமாய் அரசாங்கத்தாருக்கு அறிவித்து கொள்ளலாம் [முட்லூர் பஞ்சர்யத்து—எ.—செங்கல்ப்பட்டு ரீஜனல் இன்ஸ்பெக்டர் A. I. R. 1959 Mad. 38=71 Mad L. W. 504]

3 (4) பஞ்சாயத்துகளை அமைப்பும் தகுதியில் உண்டாகும் ஹக்குகளையும் பாத்யதைகளையும் இதில் கண்டிருக்கிறது.

4. (1) யாதொரு கிராமம் அல்லது பட்டணம் அல்லது அதன் குறிப்பிட்ட யாதொரு பாகம் கைத்தொழில், தொழிலாளர் அல்லது ஸ்தாபனப் பேட்டையாக அல்லது சுகவாசஸ்தலமாக இருந்தால், அந்த கிராமம், பட்டணம் அல்லது அதன் பாகத்தை ஒரு குறித்த பிரேரேபனையை இரண்டு சட்டசபைகளும் செய்யலாம் என்று பாஸ் செய்வாராகில் அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக ஒரு பட்டணப் பிரதேசம் என அறிவிக்கலாம் :

“பட்டணப் பிரதேசங்கள்”

(2) பட்டணப் பிரதேசமென அறிவிக்கப்பட்ட யாதொரு பிரதேச விஷயமாய், அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய் பட்டணம் பிரதேசக் கமிட்டி ஒன்றை அமைக்கலாம்.

(3) இச் சட்டத்தினல் அல்லது அதன்படி யாதொரு பஞ்சாயத்தில் நிலை பெற்றுள்ள எவையேனும் அலுவல்கள் பட்டணப் பிரதேசக் கமிட்டிக்கு மாற்றப்பட்டு அக் கமிட்டியால் செய்யப்பட வேண்டுமென அரசாங்கத்தார் பிறப்பித்த விளம்பரத்தில்

கட்டளேயிட்டிருக்கலாம். மேலும் அதில், அடியிற் கண்டவற்றிற்காக ஏற்பாடு செய்திருக்கலாம் :—

(i) மேற்படி பட்டணப் பிரதேசக் கமிட்டியில் மொத்தம் இருக்கவேண்டிய அங்கத்தினர்களின் எண்ணிக்கை ;

(ii) பட்டணப் பிரதேசக் கமிட்டியின் அங்கத்தினர்களாக யார் யார் இருக்க வேண்டுமென்பது அல்லது அவர்கள் எவ்விதத்தில் தெரிந்தெடுக்கப்பட வேண்டு மென்பது ;

(iii) பட்டணப் பிரதேசக் கமிட்டியின் அக்கிராசனராக யார் இருக்கவேண்டு மென்பது அல்லது அவர் எந்த விதத்தில் தேர்ந்தெடுக்கப் படவேண்டும் அல்லது நியமிக்கப்பட வேண்டுமென்பது ;

(iv) அங்கத்தினர்கள், அக்கிராசனர் ஆகியவர்களின் பதவிக் கால அளவு ;

(v) இன்ன நிர்ப்பந்தங்களுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டு பட்டணப் பிரதேசக் கமிட்டி தன் அலுவல்களைச் செய்யலாமென்பது ;

(vi) பட்டணப் பிரதேசக் கமிட்டியின் நடை முறை ;

(4) இச்சட்டத்தின் அல்லது ஜில்லா முனிசிபாலிடிகளேக் குறித்த (சென்னே 1920-ம் ஒஸ்த்த V-வது சட்டமாகிய) 1920-ம் ஒஸ்த்திய சென்ன பட்டணத்துச் சட்டத்தின் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட எவையேனும் விதிகளின் கீழ் அல்லது சென்னே ராஜ்யத்தில் (1) உட்பிரிவில் சொல்லியுள்ள கிராமம் அல்லது பட்டணம் அல்லது குறிப்பிட்ட யாதொரு பகுதியில் அமுலில் இராமல் வேறு இடங்களில் தாற்காலிகமாய் அமுலில் இருக்கிற வேறு யாதொரு சட்டத்தின் எவையேனும் ஷரத்துக்கள் அரசாங்கத்தார் பிறப்பிக்கும் விளம்பரத்தில் குறிப்பிடக்கூடிய அளவுக்கும், அப்படி குறிப்பிடக்கூடிய மாறுதல்களுக்கும், சேர்க்கைகளுக்கும், நிர்ப்பந்தங்களுக்கும் உட்பட்டு அந்த கிராமம், பட்டணம் அல்லது அதன் பகுதிக்குப் பிரயோகப் படுமென அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலம் கட்டளேயிடலாம்.

குறிப்பு

பட்டணம் பிரதேசங்கள்:—இவை (Industrial) பெறுத்த இயந்திரங்களால் வேலே செய்யும் இடமாகவும், அல்லது பல பல கை தொழில் செய்யும் மக்கள் ஓரிடத்திலேயே கூட்டமாக யிருப்பவர்களாகவும் இருக்கவேண்டும். அல்லது (Labonr) தொழில் செய்யும் மக்கள் ஓரிடத்திலேயே குடியிருப்பவர்களாகவும் இருக்கவேண்டும். அல்லது (Industrial colony) பெரிய பல்கலே கழகங்கள், ஆராய்ச்சி நிலயங்களாக இருக்க வேண்டும் அல்லது (Health Resort) சுகத்திற்காக தனியாக ஏற்படுத்தப்பட்ட பெரிய வாசஸ்தலமாக யிருக்க வேண்டும். அப்படி இல்லா விட்டால் பட்டண பிரதேசம் செய்யப்படாது. 5, 6 பிரிவுகளேயும் பார்க்கவும். அவைகளே எம்மாதிரி ஆளவேண்டு மென்று அரசாங்கம் ஒரு கமிட்டியை (2)-வது உபபிரிவின்படி அமைக்க செய்யும்.—அது (3)வது உப பிரிவின் படிக்கு நடந்து கொள்ள வேண்டும்.

4 (4) இவைகளின் ஆளுகை :—இவைகள் (1) இந்த சட்டத்தின் படிக்கோ, அல்லது (2) மதராஸ் டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடிகள் சட்டத்தின் படிக்கோ, மற்றபடி (3) இந்த மதராஸ் அரசாங்கத்தில் யுள்ள வேறுவிதமான சட்டத்தின் படிக்கோ, மதராஸ் அரசாங்கத்தார் கட்டளே இட்டபடிக்கு இந்த பிரதேசங்களே ஆளவேண்டும்.

குறிப்பிட்ட பட்டண பஞ்சாயத்துப் பிரதேசங்களே முனிசிபாலிட்டிகளாக அமைப்பது.

5. (1) அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக, ஒரு பட்டணப் பஞ்சாயத்து 20,000 மக்களுக்குக் குறையாத ஜனத்தொகை உள்ளதாகவும், ஆண்டு ஒன்றுக்கு மதிப்பிட்டபடி குறைந்த பட்சம் ஒரு லட்சம் ரூபாய் வருமானம் உள்ளதாகவும் இருக்கிறதோ, அந்தப் பிரதேச விஸ்தீர்ணம் முனிசிபாலிட்டிகளேக் குறித்த (சென்னே 1920-ம் ஒஸ்த்து V-வது சட்டமாகிய) 1920-ம் ஒஸ்த்திய சென்னபட்டணத்துச் சட்டத்தின் காரியங்களுக்காக அந்த விளம்பரத்தில் குறிப்பிடக்கூடிய

தேதியன்றும் அத் தேதி முதற்கொண்டும் முனிசிபாலிடியாக அமைக்கப்பட வேண்டும் அல்லது யாதொரு முனிசிபாலிடியில் சேர்க்கப்படவேண்டுமெனக் கட்டளையிடலாம்.

ஆனல் இந்த உபபிரிவின்கீழ் அவ்வாறு விளம்பரம் செய்வதற்கு முந்தி சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கு அந்த பிரேரேபனைக்கு ஆக்ஷேபனை இருந்தால் காரணம் காட்டுவதற்கு ஒரு வாய்ப்பு கொடுக்கவேண்டும்.

(2) அரசாங்கத்தார், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து விண்ணப்பம் ஒன்றைச் செய்துகொள்வதன்பேரில், எந்தப் பிரதேச விஸ்தீர்ணத்தில் யாதொரு பட்டணப் பஞ்சாயத்து இருபதினயிரத்திற்கு குறைந்த ஜனத்தொகை மேல் விசாரணை அதிகாரம் உள்ளதாகவும், ஆனல் ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் வருமான முள்ளதாயுமிருக்கிறதோ அந்த பிரதேச விஸ்தீரணம், ஜில்லா முனிசிபாலிடிகளைக் குறித்த (1920-ம்ஞூத்து V-வது சட்டமாகிய) 1920-ம்ஞூத்திய சென்னபட்டணத்துச் சட்டத்தின் காரியங்களுக்காக அந்த விளம்பரத்தில் குறிப்பிடக்கூடிய தேதியன்றும் அத் தேதி முதற்கொண்டும் முனிசிபாலிடியாக அமைக்கப்படவேண்டுமென அல்லது யாதொரு முனிசிபாலிட்டியில் சேர்க்கப்படவேண்டுமென கட்டளையிடலாம்.

ஆனல், அவ்வாறு கட்டளை பிறப்பிப்பதை பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் ஆட்சேபித்திருந்து அந்த ஆட்சேபனை தகுந்த ஆதாரத்தின் பேரில் செய்து கொள்ளப்பட்டிருக்கிறதென அரசாங்கத்தார் கருதினல், அரசாங்கத்தார் அவ்வாறு கட்டளையிடக்கூடாது.

(3) இச் சட்டம் அமுலில் இருக்கிற யாதொரு பிரதேச விஸ்தீரணம் மேற் சொன்னவாறு யாதொரு முனிசிபாலிடியாக அமைக்கப்பட்டால் அல்லது யாதொரு முனிசிபாலிடியில் சேர்த்துக்கொள்ளப்பட்டால்—

(a) அந்தப் பிரதேச விஸ்தீரணத்தில் பஞ்சாயத்தின் ஆஸ்திகளை அல்லது அதைச் சேர்ந்த ஸ்தாபனங்களை அந்த முனிசிபாலிடியின் கவுன்ஸிலுக்கு மாற்றுவதற்காக அல்லது மற்றபடி ஒருவகைச் செய்வதற்காக அல்லது அத்தகைய ஆஸ்திகள் அல்லது ஸ்தாபனங்கள் சம்பந்தமாய் அத்தகைய பஞ்சாயத்துக்கு எவையேனும் பொறுப்புகளிருந்தால் அவற்றைக்கொடுத்துத் தீர்ப்பதற்காகத் தங்களுக்கு யுக்தமெனத் தோற்றுகிற உத்தரவுகளை அரசாங்கத்தார் பிறப்பிக்கலாம்;

(b) அம்மாதிரி ஜில்லா முனிசிபாலிடி ஏற்படும் தேதியன்று பதவில் யிருக்கும் பஞ்சாயத்து அங்கத்தினர்கள், ஜில்லா முனிசிபாலிடிகளைக் குறித்து (சென்னை 1920-ம் ஞூத்து V-வது சட்டமாகிய) 1920-ம்ஞூத்திய சென்னபட்டணத்துச் சட்டத்தின் கீழ் மேற்சொன்ன முனிசிபாலிடி கவுன்ஸிலின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினரெனக் கருதப்படவேண்டும். அந்த அங்கத்தினர்கள் அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய் இதன் விஷயமாக நிச்சயிக்கக்கூடிய தேதி வரையில் அல்லது அத்தகைய தேதி எதுவும் நிச்சயிக்கப்படாவிட்டால் அவர்கள் மேற்சொன்ன முனிசிபாலிடியின் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் மேற்படிச்சட்டத்தின் கீழ் அவர்களுடைய பதவிக்கால அளவு காலாவதியாகியிருந்திருக்கக்கூடிய தேதி வரையில் தொடர்ந்து பதவி வகிக்க வேண்டும்.

குறிப்பு

பிரிவு 5.—பட்டணப் பஞ்சாயத்துப் பிரதேசங்களை சில சந்தர்ப்பங்களில் முனிசிபாலிடிகளாக அமைக்கவும் அந்தப் பிரதேசங்களிலுள்ள பஞ்சாயத்தின் ஆஸ்திகளையும் பொறுப்புக்களையும் மேற்படி முனிசிபாலிட்டிக்கு மாற்றவும் இதன் விளைவாக ஏற்படும் இதர விஷயங்களுக்காகவும் இப் பிரிவு வகைசெய்கிறது.

ஜில்லா முனிசிபாலிட்டிகளைக்குறித்து 1920ம் ஆண்டு சென்னபட்டணத்துச் சட்டத்திலாவது அதன்படிக்கான ஏதேனும் விதிகளிலாவது கண்ட ஷரத்துக்களை வியாபிக்கும்படிச் செய்வது.

6. (1) இன்ஸ் பெக்டரானவர், பஞ்சாயத்து கேட்டுக் கொள்வதன் மேலாவது மற்றப்படியாவது விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய் ஜில்லா முனிசிபாலிடிகளைக் குறித்த (சென்னை 1920–ஆண்டு V-வது சட்டமாகிய) 1920–ம் ஆண்டு சென்னபட்டணத்துச் சட்டத்திலாகிலும் அதன்படிச் செய்யப்பட்ட எந்த விதிகளிலாகிலும் கண்ட ஷரத்துக்கள் எவையேனும் ஷெ கிராமத்திலாயினும் அதற்குள் குறிப்பிட்ட யாதொரு பிரதேசத்திலாயினும் வியாபித்து அங்கே அமுலிலிருந்து வருமென்றுபிரசித்தம் செய்யலாம்.

(2) அவ்வாறு அறிக்கையிடப்பட்ட ஷரத்துக்களைப் பிரஸ்தாப கிராமத்துக்காவது, பட்டணத்துக்காவது அதில் குறிப்பிட்ட விஸ்தீரணத்துக்காவது இணக்குவதற்காக முக்கியாம்சத்தைப் பாதிக்காமல் அவற்றில் என்ன மாறுதல்களைச் செய்வது அவசியமாயிருக்கக்கூடுமோ அல்லது தகுதியாயிருக்கக்கூடுமோ அந்த மாறுதல்களுடன் அவைகளுக்கு அர்த்தம் பண்ணவேண்டும்.

(3) முந்திய ஷரத்தின் பொதுத் தன்மைக்குப் பாதகமில்லாமல், அப்படி விளம்பரம் செய்யப்பட்ட ஷரத்துகள் ஒரு முனிசிபல் கவுன்ஸிலுக்காவது அல்லது அதன் அக்கிராசனருக்காவது, நிர்வாக அதிகாரிக்காவது சம்பந்தப்பட்ட சகல குறிப்பீடுகளுக்கும் பிரஸ்தாப பஞ்சாயத்துக்கு அல்லது அதன் ப்ரெஸிடென்ட் அல்லது நிர்வாக அதிகாரிக்குச் சம்பந்தப்பட்ட குறிப்பீடுகள் என்றும் ஒரு முனிசிபல் கவுன்ஸிலின் தலைவர் எந்த உத்தியோகஸ்தருக்கேனும் ஊழியருக்கேனும் சம்பந்தப்பட்ட சகல குறிப்பீடுகளுக்கும் ஷெ பஞ்சாயத்தின் பொருத்தமான உத்தியோகஸ்தர் அல்லது ஊழியருக்குச் சம்பந்தப்பட்ட குறிப்பீடுகளென்றும் முனிசிபல் எல்லைகளுக்குச் சம்பந்தப்பட்ட சகல குறிப்பீடுகளுக்கும் சந்தர்பத்துக்கேற்ப ஷெ கிராமத்தின் அல்லது பட்டணத்தின் அல்லது அதில் குறிப்பிடப்பட்ட விஸ்தீரணத்தின் எல்லைகளுக்குச் சம்பந்தப்பட்ட குறிப்பீடுகள் என்றும் அர்த்தம் பண்ணவேண்டும்.

பஞ்சாயத்து யூனியன்களை ஏற்படுத்துவது

7. (1) (a) சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்புச் சேவை திட்டத்தின் காரியங்களுக்காக அபிவிருத்தித் தொகுதியாக அமைந்துள்ள யாதொரு பிரதேச விஸ்தீரணத்தை பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியாக அறிவிக்கவும்.

(b) அத்தகைய பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதி ஒவ்வொன்றிற்காகவும் பஞ்சாயத்து யூனியன் ஒன்றை அமைக்கவும்

தாங்கள் உத்தேசித்திருப்பதாக அரசாங்கத்தார் அவ்வப்போது விளம்பரம் பிரசுரிக்கலாம்.

(2) எந்தப் பிரதேச விஸ்தீரணம் விஷயமாய் அத்தகைய விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதோ அந்தப் பிரதேச விஸ்தீர்ணத்தில் வசிப்பவர் எவராகிலும் அந்த விளம்பரத்தில் கண்டுள்ள எதற்கெனும் தமக்குள்ள ஆட்சேபனையை அந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதிலிருந்து ஆறுவாரத்திற்குள் அரசாங்கத்தாருக்கு எழுதித் தெரிவிக்கலாம் ; அரசாங்கத்தார் அத்தகைய சகல ஆட்சேபனைகளையும் ஆலோசித்துப் பார்க்க வேண்டும்.

(3) விளம்பரம் பிரசுரித்ததிலிருந்து ஆறுவாரங்கள் கழிந்தபிறகும் கொடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற எவையேனும் ஆட்சேபனைகளை ஆலோசித்துப் பார்த்த பிறகும். அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாக—

(a) மேற்படி பிரதேச விஸ்தீரணத்தை பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியென அறிவிக்கலாம்.

(b) அந்தப் பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியை ஒரு பஞ்சாயத்து யூனியன் என அறிவிக்கலாம்.

(c) பஞ்சாயத்து யூனியனின் பெயரைக் குறிப்பிடலாம்.

(4) அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக—

(i) யாதொரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியில் அடங்கி யுள்ள யாதொரு கிராமத்தை அல்லது பட்டணத்தை அதிலிருந்து விலக்கிவிடலாம், அல்லது,

(ii) யாதொரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியின் அருகிலுள்ள யாதொரு கிரரமத்தை அல்லது பட்டணத்தை அதில் சேர்க்கலாம், அல்லது.

(iii) (3) உட்பிரிவின் கீழ் பிறப்பித்த விளம்பரம் ஒன்றை ரத்து செய்யலாம், அல்லது.

(iv) பஞ்சாயத்து யூனியனின் பெயரை மாற்றலாம்.

(5) (4) உட்பிரிவின் கீழ் விளம்பரம் ஒன்றைப் பிறப்பிப்பதற்கு முன் அரசாங்கத்தார் சம்பந்தப்பட்ட ஜில்லா அபிவிருத்திச் சபையைக்கலந்து ஆலோசிக்கவேண்டும்; அத்தகைய விளம்பரம் பிறப்பிக்கப்படுவதனல் பிரதிகூலமாகப் பாதிக்கப்படக்கூடிய பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்கள் அல்லது பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்துகள் அந்த உத்தேசத்திற்கு எதிராகக் காரணங் காட்டுவதற்காக அதற்கு அல்லது அவைகளுக்கு நியாயமான வாய்ப்பொன்றை ஏற்படுத்திக் கொடுத்து அந்தப் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அல்லது கவுன் ஸில்கள், அல்லது பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்துகள் எவையேனும் விளக்கங்கள் அல்லது ஆட்சேபனைகளைக் கூறியிருந்தால் அவற்றை ஆலோசித்துப் பார்க்க வேண்டும்.

(6) (a) அற்றுப்போய்விட்டிருக்கிற பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் ஆஸ்திகளை அல்லது அந்த கவுன்ஸிலைச் சேர்ந்த ஸ்தாபனங்களை ஒருவகைச் செய்வதற்காகவும் அத்தகைய ஆஸ்திகள் அல்லது ஸ்தாபனங்கள் விஷயமாய் அந்தப் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு இருக்கக்கூடிய எவையேனும் பொறுப்புகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்காகவும் அல்லது.

(b) யாதொரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியின் பேரில் அதிகார வரம்பிருப்பது அற்றுப்போயிருக்கிற யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் ஆஸ்திகளின் அல்லது அந்த கவுன்சிலைச் சேர்ந்த ஸ்தாபனங்களின் யாதொரு பகுதிகளை ஒரு வகை செய்வதற்காகவும் அத்தகைய ஆஸ்திகள் அல்லது ஸ்தாபனங்கள் விஷயமாய் அந்தப் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு இருக்கக்கூடிய எவையேனும் பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்காகவும்.

அரசாங்கத்தார் தாங்கள் யுக்தமெனக் கருதுகிற உத்தரவுகளைப் பிறப்பிக்கலாம்.

இந்த உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட உத்தரவில் அரசாங்கத்தார் அவசியமெனக் கருதக்கூடிய துணையான, தொடர்பான, விளைவான ஏற்பாடுகள் கண்டிருக்கலாம், மேலும்.

(i) அந்தப் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்குச் சேரவேண்டியிருக்கிற யாதொரு வரி, கட்டணம் அல்லது இதர தொகை அல்லது யாதொரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியின்பேரில் ஒரு பஞ்சாய்த்து யூனியன் கவுன்ஸிலுக்கு இருக்கிற அதிகார வரம்பு அற்றுப்போய்விட்டிருந்தால், அத் தொகுதி விஷயமாய் அந்த பஞ்சாயந்து யூனியன் கவுன்ஸிலுக்குச் சேரவேண்டியிருக்கிற அந்த வரி, கட்டணம், இதர தொகை அந்த உத்தரவில் குறிப்பிடப்படக்கூடிய அதிகாரிகளிடம் செலுத்தப்படவேண்டுமென்றும்.

(ii) பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் இருப்பது அற்றுப்போய் விட்டிருக்கிற தேதியன்று அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப மேற்படி பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு மேற்படி பஞ்சாயந்து அபிவிருத்தித் தொகுதியின்பேரில் அதிகார வரம்பு இருப்பது அற்றுப்போய்விட்டிருக்கிற தேதியன்று அந்தகைய வரி, கட்டணம் அல்லது தொகை விஷயமாய் பைசலாகாமல் நடந்துகொண்டிருக்கிற அப்பீல்கள், மனுக்கள், அல்லது இதர விண்ணப்பங்கள் அந்த உத்தரவில் குறிப்பிடப்படக்கூடிய அதிகாரிகளால் பைசல் செய்யப்படவேண்டுமென்றும்

அந்த உத்தரவில் குறிப்பாகக் கட்டளையிட்டிருக்கலாம்.

குறிப்பு

பிரிவு 7.—சமுதாய அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமான தேசீய விஸ்தரிப்புச் சேவைத் திட்டத்தின் காரியங்களுக்குரிய அபிவிருத்தித்தொகை ஒன்றுய் அமைக்கிற யாதொரு பிரதேச விஸ்தீரணத்தைப் பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியென்று அறிவிக்கவும் அத்தகைய பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதி ஒவ்வொன்றுக்கும் ஒரு பஞ்சாயத்து யூனியனை அமைக்கவும் இப் பகுதி அரசாங்கத்தாருக்கு அதிகாரமளிக்கிறது. யாதொரு கிராமம் அல்லது பட்டணத்தை யாதொரு பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதியிலிருந்து விலக்கவும் அல்லது சேர்த்துக்கொள்ளவும் ஏற்கென்வே பிறப்பித்த அறிவிப்புக்களை ரத்து செய்வதற்கும்கூட அதிகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. புதிய பகுதியின் கீழ் அறிவிப்புக்களை விடுவதற்கு முன் அனுசரிக்கவேண்டிய நடை முறையையும் அந்த அறிவிப்புகளில் ஏற்பாடு செய்ய வேண்டிய அதன் விளைவான விஷயங்களையும்கூட இந்தப் பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. [மசோதா பகுதி-7யை பார்க்கவும்.]

பொது.—66-வது பிரிவை பார்க்கவும். இந்த பிரிவு 3-ம் பிரிவை போன்றது. 3-வது பிரிவு படிக்கு பஞ்சாயத்து பட்டணங்களையும் பஞ்சாயத்து கிராமங்களையும் ஏற்படுத்தலாம். இந்த 7-வது பிரிவின்படிக்கு, இது வரையிலும் 5 ஆண்டு திட்டங்கள் என்று வழங்கும் "சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு சேவை,திட்டத்தின் தொகுதியை" அரசாங்கத்தார் 7 (1) (a) உப பிரிவின் படிக்கு "பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதி" என்று விளம்பரம் செய்து அதை "பஞ்சாயத்து யூனியன்" ஆக மாத்தலாம். அந்த "பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்தை" ஆள ஒரு ஆக்ஷி கழகம் வேண்டும், அது தான் "பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்" இதை அரசாங்கத்தார் 11-வது பிரிவின் படிக்கு ஏற்படுத்துவார்கள்.

"சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு சேவை திட்டம்.—இது குறித்து அறிய பீடிகையில் பாரா III-ன்கீழ் யுள்ள குறிப்புகளில் 17 முதல் 19 வரையில் பக்கங்களையும், பிரிவுகள் 11, 66களின் கீழ் யுள்ள குறிப்புகளையும், மொத்த தொடக்கத்தையும் கவனிக்கவும்.

பஞ்சாயத்துக்களையும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களையும் அமைப்பது

கிராமங்களுக்காகவும் பட்டணங்களுக்காகவும் பஞ்சாயத்துக்களை அமைப்பதும் அவைகள் 8. (1) ஒவ்வொரு கிராமத்துக்காகவும், ஒவ்வொரு பட்டணத்துக்காகவும், இன்ஸ்பெக்டரால் அது விஷயமாய் பிறப்பிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடக்கூடிய தேதி முதல் ஒரு பஞ்சாயத்து அமைக்கப்படவேண்டும்.

சட்டபடிக் கான சபைகளாவதும் (2) இந்தச் சட்டத்தில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஷை கிராமத்தின் அல்லது பட்டணத்தின் பரிபாலனமானது, அந்தப் பஞ்சாயத்தினிடத்தில் சங்கிரமிக்கும். ஆனல், அந்தப் பஞ்சாயத்து இச் சட்டத்தினுலாவது, வேறே யாதொரு சட்டத்தினுலாவது, அதன்படியாவது, அதன் தலைவருக்காகிலும், அதன் நிர்வாக அதிகாரிக்காகிலும், அல்லது யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்காகிலும், அல்லது யாதொரு இதர அதிகாரிக்காகிலும், வெளிப்படையாய் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட அலுவல்களைச் செய்யப் பாத்தியதையுள்ளதாகமாட்டாது.

(3) ஒவ்வொரு பஞ்சாயத்தும் 3-வது பிரிவின்படி வெளியிடப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற கிராமத்தின் அல்லது பட்டணத்தின் பெயரால் சட்டப்படிக்குண்டான ஒரு சபையாயிருக்கவேண்டும்; மேலும், அது இடைவிடாமல் ஒன்றின்பின் ஒன்றுய் வந்து கொண்டு, பொதுவான முத்திரை உடையதாயும் இருக்க வேண்டும். அல்லாமலும், இச்சட்டத்தினுலாவது மேலே யாதொரு சட்டத்தினுலாவது, அதன்படியாவது ஏற்படுத்தப்பட்ட யாதொரு நிர்ப்பந்தம் அல்லது வரையறைக்குட்பட்டு, அது சட்டப்படிக்கான அதனுடைய பெயரால் வியாஜ்ஜியம் தொடரவும், அல்லது பிறரால் வியாஜ்ஜியம் தொடரப்பெறவும், அசையும் பொருளை அல்லது அசையாப் பொருளை அடையவும், வைத்திருக்கவும், மாற்றவும், ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவும், அது எந்தக் காரியங்களுக்காக ஏற்படுத்தப் பட்டிருக்கிறதோ அந்தக் காரியங்களுக்காக அவசியமாகவாகிலும் தகுதியாகவாகிலும் யுக்தமாகவாகிலும் இருக்கிற சகல விஷயங்களையும் செய்யவும் யோக்கியதை உள்ளதாகும்.

8-ம் பிரிவு குறிப்புகளின் பட்டி

பக்கம்

1. (1) பஞ்சாயத்துகளும் —(2) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும்—இந்த இரண்டு விதமான சபைகளும் ஒரேமாதிரி அமைப்பு யுள்ளவை. 39
2. பொது ... 39
3. பஞ்சாயத்துகளின் அமைப்பு ... 40
4. பஞ்சாயத்துகள் ... ,,
5. தமிழ்நாடு பஞ்சாயத்துகளின் பூர்வ சரித்திரமும் சட்டங்களின் சரித்திரமும் ... ,,
6. பி. 8 (2). இந்த சட்டத்தில் கண்ட நிபந்தனைகளுக் குட்பட்டு ... ,,
7. இந்தச் சட்டத்தின் நிபந்தனைகளும் தேச பரிபாலனமும் ... ,,
8. அலுவல்கள் ... ,,
9. பி. 8 (2). நிர்வாக உத்தியோகஸ்தர் ... 41
10. பி. 8 (3). இடைவிடாமல் ஒன்றன்பின் ஒன்றுய் வந்து கொண்டு ... ,,
11. பெயர் ... ,,
12. வியாஜ்ஜியம் தொடரவும் அல்லது பிறரால் வியாஜ்ஜியம் பெறவும் ... ,,
13. சிவில் கோர்ட்டின் துரைத்தனம்-பொது ... ,,
14. சிவில் கோர்டும், சட்டப் படிப்பகையும் ... ,,
15. சிவில் கோர்டுகளும், கிரிமினல் கோர்ட்டுகளும் ... ,,
16. சிவில் கோர்ட்டுகளும், தனிக் கோர்ட்டுகளும் ... 42
17. சிவில் கோர்ட்டுகளும், இன்ஜங்க்ஷன்களும் ... ,,
18. சிவில் கோர்ட்டுகளும், பஞ்சாயத்து அலுவல்களும், துணிவெண்ணங்களும் ... ,,
19. கோர்ட்டுகளும், பஞ்சாயத்து ஆபீஸ்களும் ... ,,
20. கோர்ட்டுகளும், கால எல்லையும் (நோட்டீஸ்களும்) பி. 165, 170 பக்கம் ... ,,
21. வெளி அனுமதியின்றி பஞ்சாயத்துக்கள் வியாஜ்ஜியங்களுக்கு செய்யக் கூடிய சட்ட செலவுகளுக்கு (பி. 178 (1)) ... ,,
22. வியாஜ்ஜியங்களில் நியமனமும், சில விஷயங்களில் கட்டணங்கள் செலுத்துவதும் L.III-3) பி. 178 (1)ன் ... ,,
23. ஒப்பந்தங்கள் ... 43
24. ஒப்பந்தங்களும் (கண்ட்ராக்டுகளும்) நஷ்ட ஈடுகளும் ... ,,
25. ஒப்பந்தங்களும், செக் மெஷர்மெண்டுகளும் (Check Measurements) ... ,,
26. ஒப்பந்தங்களும், செக்யூரிட்டி டிபாஸிட்டை பறிமுதல் செய்வதும் ... ,,
27. ஒப்பந்தமும், முடிவான நற்சாட்சிப் பத்திரமும் ... ,,
28. ஒப்பந்தமும், நோட்டீஸும், காலவரையறையும் ... ,,
29. ஒப்பந்தத் தொகையும், வட்டியும் ... 44
30. ஒப்பந்தங்களும், பஞ்சாயத்துக்களுக்குச் சேரவேண்டிய தொகைகளும் ... ,,
31. வஸ்துக்கள், சரக்குகள் முதலியவற்றைப் பஞ்சாயத்துக்களுக்கு ஸப்ளை செய்வது ... ,,
32. பஞ்சாயத்துக் கட்டு வேலைகளுக்காக டெண்டர்களை வரவழைப்பதும் ஏற்றுக் கொள்வதும் (IV-14) ... 46
33. குத்தகைதாரர்களுக்கும் கன்ட்ராக்டர்களுக்கும் வஜா செய்வது ... 49
34. அசையும் பொருளை அல்லது அசையாப் பொருளை அடையவும், வைத்திருக்கவும் மாற்றவும். ... 50

ஸ்தாவர சொத்தை அடைவதும் ட்ரான்ஸ்பர் செய்வதும் (மற்றொருவர் பெயருக்கு மாற்றுவதும்) (L-IV-4) விதிகள் பி. 178 (2) (XVIII) படிக்கு

பக்கம்

(1) நிபந்தனைகள் பூர்த்தியானல் ஒழிய யாதொரு பஞ்சாயத்தும் ஸ்தாவர சொத்தை அடையலாகாது.

(2) யாதொரு பஞ்சாயத்துக்கு சொந்தமாய் இராமல் அதனிடம் சங்கிரமித்துள்ள ஸ்தாவர சொத்தைக் குத்தகை மூலமாக அல்லாமல் மற்றப்படி ட்ரான்ஸ்பர் செய்வது

(3) யாதொரு பஞ்சாயத்துக்குச் சொந்தமான ஸ்தாவர சொத்தைக் குத்தகை மூலமாக அல்லாமல் மற்றப்படி ட்ரான்ஸ்பர் செய்வது

(4) யாதொரு பஞ்சாயத்துக்குச் சொந்தமான ஸ்தாவர சொத்தைக் குத்தகை மூலமாக ட்ரான்ஸ்பர் செய்வது

(5) யாதொரு பஞ்சாயத்துக்குச் சொந்தமாயிராமல் அதனிடம் சங்கிரமித்திருப்பதும் பாட்டை ஓரங்களுமாயிராததுமான வேறு யாதொரு சொத்தை அப்பஞ்சாயத்து குத்தகைக்கு விடலாம்.

(6) பாட்டை ஓரங்களையும், தெரு ஓரங்களையும் குத்தகைக்கு விடுவது.

(7) உத்தேசமான ட்ரான்ஸ்பர்களையும், குத்தகைகளையும் பற்றிப் பிரசுரம் செய்வது

(8) ட்ரான்ஸ்பர் செய்யப் பெற்றவர் அல்லது குத்தகைக்காரர் அரசாங்கத்தாருக்கு தீர்வை, நிலவரி, பேஷ்கஷ் அல்லது க்விட். ரெண்ட் செலுத்தவேண்டு மென்னும் நிபந்தனைக்கு ட்ரான்ஸ்பர்களும் குத்தகைகளும் உட்பட்டவையாகு மென்பது

35. அவசியமாகவாகிலும், தகுதியாகவாகிலும், யுக்தமாகவாகிலும் 54

ஷெட்யூல்கள் :

36. விளம்பரம் அல்லது நோட்டிஸைப் பிரசித்தம் செய்யும் விதிகள் 55

குறிப்பு

இந்த 8-ம் பிரிவின் குறிப்பில் உள்ள மொத்த விஷயங்களும் 11-வது பிரிவில் உள்ள பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கும் பொருந்தும்.

கிராமம்— பி.2 (35), 3.
பட்டணம்—பி. 2 (32)
பஞ்சாயத்து—பி. 2 (20)
அறிவிப்பு (Notification)—பி. 78. (2) (XLVII)

தலைவர்—பி. 2 (26), 29-35, 149, 150, 152.
நிர்வாக அதிகாரி—பி. 2 10, 43,
கிராம பஞ்சாயத்தும் லைசென்சும்-பி. 111(2) (i)
பட்டணம் பஞ்சாயத்தும், லைசென்சும் பி. 111 (2) (ii)

1. (1) பஞ்சாயத்துகளும்—(2) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும்—இந்த இரண்டுவிதமான சபைகளும் ஒரே மாதிரி அமைப்பு உள்ளவை.—8-ம் பிரிவு பட்டண பஞ்சாயத்துகளையும், கிராம பஞ்சாயத்துகளையும் அமைப்பது பற்றியும், 11-ம் பிரிவு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களை அமைப்பது பற்றியும் தெரிவிக்கின்றன. இம்மாதிரி இரண்டு சபைகளில் ஒவ்வொன்றும்.

1. சட்டபடிக்குண்டான சபை.
2. இடைவிடாமல் ஒன்றின் ஒன்ருகவும்.
3. பொதுவான முத்திரை யுள்ளதாயும்,
4. அதன் பெயரால் வியாஜ்யங்கள் தொடரவும், பிறரால் வியாஜ்யங்கள் தொடர பெறவும்
5. அசையா, அசையும் பொருள்களை அடையவும்
6. ஒப்பந்தங்கள் செய்துக்கொள்ளவும்
7. தகுதியான சகல விஷயங்களையும் செய்ய யோக்யதை உள்ளதாக இருக்கிறது.

2. பொது—இந்திய பரிபாலனத்து 40-வது ஆர்டிகல் படிக்கு அரசாங்கமானது கிராமப் பட்டண பஞ்சாயத்துகளை ஏற்படுத்தவேண்டும். அவைகள் தங்கள் பிரதேச பரிபாலனத்தை நிறைவேற்ற வேண்டிய அதிகாரங்களை அவைகளுக்கு கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. அதன்படிக்கும் அரசாங்கம் (ஸ்டேட்) சகல அதிகாரங்களையும் அவைகளுக்கு கொடுத்திருக்கிறது. (பீடிகையில் பாரா V-ஐ பார்க்கவும்)

சில பட்டணங்கள் ரொம்பவும் பெரியதாய் விட்டால் அவைகளுக்கு மதராஸ் டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடிகள் சட்டம் 5-வது பிரிவின்படி உபயோகிக்கப்படும். அவைகள் மதராஸ டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடிகள் சட்டம் தங்களுக்கு வேண்டியது இல்லை என்று சொல்லுவதற்கும் இடமில்லை.

சில சமயங்களில் பஞ்சாயத்தின் வேண்டுகோளின் பேரில் மதராஸ் டிஸ்ட்ரிக்ட் முனிசிபல் சட்டத்தை அங்கு உபயோகிக்க அரசாங்கம் அனுமதிக்கும்.

3. பஞ்சாயத்துக்களின் அமைப்பு :—அவைகளுடைய அதிகாரங்களை அடிக்கடி மாற்றுவதனுல் பஞ்சாயத்துகள் மதராஸ் அரசாங்கத்தின் ஏஜெண்டுகளின் ஸ்திதியில் இருக்கிறது. [செக்ரடரி-எ-காக்ராபட் 39 M 351 = 27C I. 723 (2)] ஒரு பஞ்சாயத்து தன் காரியங்களை நிறைவேற்ற எல்லா மெம்பர்களுடைய ஸ்தானங்களும் காலியில்லாமல் பூர்த்தி செய்து இருக்கவேண்டும் என்று நிபந்தனை கிடையாது, காலி யிருந்தபோதிலும் மீதி மெம்பர்கள் எல்லோரும்சேர்ந்து மீட்டிங்கில் பஞ்சாயத்தின் காரியங்களை நிறைவேற்றலாம். [வெங்கட்ராமா எ.-அமீர் சுல்தான் A. I. R. 1923 M. 360 = 70 I. C. 987]

4. பஞ்சாயத்துகள்.—புதுப் பஞ்சாயத்துகள் விஷயத்தில் பிரத்தியேகமான நிபந்தனைகளைக் குறித்து பி. 188, பி. 190, ஷெட்யூல் IVகளை பார்க்கவும். இப்போது ஏற்பட்டுள்ள எல்லா பஞ்சாயத்துகளும் இந்த ஆக்ட்டின் கீழ் அமைக்கப்பட்டதாகக் கருதப்படும். ஒரு பஞ்சாயத்து கிராமத்தின் அல்லது பஞ்சாயத்து பட்டணத்தின் உள்ள நிர்வாகத்தை நடத்த ஏற்பட்ட சபை என்பதே இதுவாகும். பி. 2 (20). பார்க்கவும் : பி. 8 (1) படிக்கு பஞ்சாயத்துகளை அமைக்கப்பட வேண்டும். பஞ்சாயத்துக்களின் தரம் பிரிப்பதைக் குறித்து பி. 9 பார்க்கவும். நிர்வாக உத்தியோகஸ்தர்களை நியமிப்பதை குறித்து பி. 40 பார்க்கவும்.

5. தமிழ்நாட்டு பஞ்சாயத்துகளின் பூர்வ சரித்திரமும்—சட்டங்களின் சரித்திரமும்.—முன்னே 5-ம் பக்கத்தில் பார்க்கவும். "பஞ்சாயத்து" பதம் 8 விதமாக உபயோகப்படுத்தி யிருக்கிறது. 14-ம் பக்கத்தை பார்க்கவும்.

6. பி. 8 (2)—இந்த சட்டத்தில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு :—இத்துடன் 3-வது ஸப்ஸெக்ஷனில் "இச் சட்டத்தினுலாவது வேறே யாதொரு சட்டத்தினுலாவது அதன்படி யாவது யாதொரு நிர்பந்தம் அல்லது வரையறைக்குட்பட்டு" என்னும் கிளாஸ் அல்லது அந்தப் பகுதியைச் சேர்த்து வாசிக்க வேண்டும். இதன்படிக்கு பஞ்சாயத்து போர்டுகளின் அதிகாரங்களை நன்ருக நிர்ணயித்து அதன்படி ருசுப்படுத்த வேண்டும். (ராதா கிருஷ்ண -எ-கண்டுவா முனிசிபாலிடி, 66 M. L. J. 551 P. C). சட்டபடிக்கு வெளிப்படையாக அல்லது உள் அர்த்தத்துடன் ஒரு பஞ்சாயத்துப் போர்டிற்கு ஒரு அதிகாரத்தை கொடாவிட்டால் அதைத் தடுக்கப்பட்டதாகக் கருத வேண்டும். [கும்பகோணம் முனிசிபாலிடி-எ—அப்பாஸ், (1913) 36 M. 113] ஒரு பஞ்சாயத்துப் போர்டுச் சட்டத்திற்கு விரோதமாக நடந்து கொள்ளக் கூடாது. (திம்மரரெட்டி-எ.-செக்ரிடெரி A. I. R. 1924 M. 523 :: சிதம்பரம் முனிசிபாலிடி-எ-திரு நாராயண A.I.R. 1928 M 847 = 51 M-876] பஞ்சாயத்து போர்டுகள் பொது ஜனங்களுக்காக ஏற்படுத்தப்பட்டபடியால் அவைகளின் சட்டம்) பொது ஜனங்களுக்குக் கஷ்டத்தை யாவது அநியாயமாகவாவது உண்டாகும்படி நடத்துவது சரியல்ல. [சிதம்பரம் முனிசிபாலிடி-எ—சுப்பிரமணிய, A. I. R. 1928 M. 1157) இந்தச் சட்டத்தின் நிபந்தனைகள் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தால் ஒப்புக்கொள்ளத் தக்கவை, இல்லாவிடில், ஒப்புக்கொள்ளத் தக்கவை யல்ல, சட்டத்திற்கு விரோதகாக பஞ்சாயத்துகள் நடந்து கொண்டால் சிவில் கோர்ட்டுகள் பிரவேசிக்க அருகதை உள்ளவைகளாகும்.

7. இந்தச் சட்டத்தின் நிபந்தனைகளும்-தேசபரிபாலனமும் :—பஞ்சாயத்துகள் தேச பரிபாலன விஷயத்தில் யோசனைகள் செலுத்தலாம். பஞ்சாயத்து போர்டு கட்டிடங்களையும், அதில் உள்ள நாற்காலி முதலியவைகளையும் தேச பரிபாலனை செய்யும் விஷயத்தில் விவாதிக்கும் கூட்டங்களுக்கும் உபயோகிக்கக் கொடுக்கலாம். அப்போது அவைகளுக்கு எலெக்டிரிக் விசிறிகள் கூட (Electric Fans) உபயோகிக்கலாம். இதனுல் பஞ்சாயத்துப் போர்டுகளுக்கு யாதொரு கெடுதியும் ஏற்படாது. [டெய்லி கெஜட் (Daily Gazette-எ.-கராச்சி முனிசிபாலிடி A. I. R. 1930 S 287 (296)].

8. அலுவல்கள் :—இவைகள் சட்டத்திற்கு உள்பட்டிருக்க வேண்டும். அப்படியின்றி சட்டத்திற்கு விரோதமாக இருக்கும் பட்சத்தில் மேல் அதிகாரிகளும், அரசாங்கமும், சிவில் கோர்ட்டும் அவற்றை ரத்து செய்யலாம்.

பிரெஸிடெண்டின் (தலைவருடைய) அலுவல்களைப் பஞ்சாயத்துச் செய்யக் கூடாது. எக்ஸிக்யூட்டிவ் அல்லது நிர்வாக உத்தியோகஸ்தர்களுடைய காரியங்களை பஞ்சாயத்துச் செய்யக்கூடாது. பட்டணம் பஞ்சாயத்து பிரஸிடெண்டும் நிர்வாக உத்தியோகஸ்தரின் அலுவல்களைச் செய்யக்கூடாது, நிர்வாக உத்தியோகஸ்தரும் பிரஸிடெண்டின் அலுவல்களைச் செய்யக்கூடாது.

9. நிர்வாக உத்தியோகஸ்தர்.—பிரிவு 2 (10)ல் நிர்வாக அதிகாரி என்பது பட்டணம் பஞ்சாயத்துக்கு, நிர்வாக உத்தியோகஸ்தர் என்று கூறியிருக்கிறது. ஆனல் அந்த உத்தியோகஸ்தர் என்பவர் பி. 40, 41, 42 படிக்கு நடந்து கொள்ள வேண்டும். மேலும் பி. 33 (2) படிக்கு அவர் அரசாங்கத்திற்கு எழுதும் மொத்த கடிதங்களையும் தலைவர் மூலம்தான் அனுப்பவேண்டும். நிர்வாக உத்தியோகஸ்தர் தலைவருக்கு விரோதமாக நடந்து கொள்ளக் கூடாது.

10. பி. 8 (3) இடைவிடாமல் ஒன்றன்பின் ஒன்ருய் வந்துகொண்டு :—இதற்கு Body Corporate என்று இங்கிலீஷில் பெயர் சொல்லுவார்கள். இதற்கு எப்போதும் சாவு கிடையாது. இதில் மெம்பர்கள் வந்து கொண்டும், போய்க்கொண்டும் இருப்பார்கள். இதை பிரிவு 154 படிக்கு கலைத்து விட்டாலும் அவை சாகாது. அவர்களுடையவும், மெம்பர்களுடையவும் காரியங்களை அக்காலத்தில் ' ஸ்பெஷல் ஆபீஸர் ' பார்த்து வருவார். அதனுலே தான் இதற்கு ஒன்றன் பின் ஒன்ருய் வருவது என்று சொல்லப்படுகிறது. ஒரு மெம்பர் இல்லாததினுலேயே பஞ்சாயத்தானது தனது காரியத்தை நடத்த சக்தியற்றதாக ஆகாது. அப்படிச் செய்யும் காரியங்களும் சட்டப்படி நடத்தியதாகக் கருதப்படும், பிரிவு 156 பார்க்கவும், வியாஜ்யங்கள், ஈடு நஷ்டங்களை குறித்து அடியில் பார்க்கவும். ஒரு பஞ்சாயத்திற்கு அபராதம் போட முடியாது, ஆனல், அதனுடைய காரியத்தினல் பொது ஜனங்களுக்கு அசுத்தம் ஏற்படும் பட்சத்தில் அதற்கு அபராதம் போடலாம், [இங்கிலீஷ் கேஸ் 5 App. Cases 857, 869, 870] ஒரு முனிசிபாலிடிசெய்த குற்றத்துக்காக அந்தச் சேர்மன் (Chairman) தண்டிக்க முடியாவிட்டாலும் அந்த முனிசிபாலிடியின் பேரில் வியாஜ்யத்தை கிரிமினல் கோர்ட்டில் தொடரலாம், [ஏலூர் முனிசிபல் சேர்மனைக் குறித்து, 1 weir 243] ஒரு முனிசிபாலிடியானது தங்களுடைய மீட்டிங்கில் ஒருவரைக் குறித்து அவதூராகப் பேசும் பட்சத்தில் மொத்த முனிசிபாலிடி பேரிலும் கிரிமினல் கோர்ட்டில் தாவா நடத்தலாம். செக்ஷன் 169-ஐப் பார்க்கவும்.

11. பெயர் : பஞ்சாயத்தின் பெயர் சட்டபடி மாற்றும் வரை சாஸ்வதமான தாகையால் நோட்டிஸ் முதலியவைகள் பஞ்சாயத்தின் பேரிலேயே கொடுக்கவேண்டும். வியாஜ்யங்களும் அதன் பெயரிலேயே தொடர வேண்டும். ஒருக்கால் பஞ்சாயத்தின் தலைவரின் பெயரிலேயே வியாஜ்ஜியங்கள் தொடர்ந்தாலும் அவற்றை, மாற்றிக்கொள்ளலாம் [டாக்கா முனிசிபாலிடி-எ.-கங்காமணி. A. I. R. 1940 Cal 153].

12. வியாஜ்ஜியம் தொடரவும் அல்லது பிறரால் வியாஜ்ஜியம் பெறவும்.—வியாஜ்யம் தொடரவேண்டும் என்ருல் முதலில் மெம்பர்கள் பஞ்சாயத்து மீட்டிங்கில் சேர்ந்து ஒரு தீர்மானம் செய்யவேண்டும். அப்படி இல்லாமல் நிர்வாக அதிகாரி தன் சுயேச்சையாய் தீர்மானம் இல்லாமல் செய்யும் பட்சத்தில் அந்த வியாஜ்யம் செல்லாது. [1944—1 M. L. J. Notes on Recent Cases 31] ஆனல், அன்னியர்கள் பஞ்சாயத்து பேரில் தாவா செய்தபோது நிர்வாக அதிகாரி ஒரு வக்கீலை அமர்த்தி பஞ்சாயத்தின் பாத்யதையைப் பாதுகாக்கச் செய்வதற்கு ஒரு தனிப்பட்டத் தீர்மானம் வேண்டியதில்லை [தி லா-எ-பெஷாவர் முனிசிபாலிடி A. I. R. 1948 Pesh. 76]. பஞ்சாயத்துக்கள் பிரதிவாதிகளாக விருக்கும்போது இரண்டுமாதம் தவணை கொடுக்கவேண்டும் என்று ஸிவில் பரொஸீஜர் கோட் (சி. பி. கோ.) ஆர்டர் 29 ரூல் 1 (a) படிக்குக் கண்டிருக்கிறது. அவசரமாக இருக்கும் சமயங்களில் நிர்வாக அதிகாரி வக்கீல்களை ஏற்படுத்தி கொள்ளலாம். பி. 41 ஐப் பார்க்கவும்.

13. சிவில் கோர்டின் துரைத்தனம், பொது :—ஒரு நபரை சட்டப்படி தடுத்தா லொழிய அவன் தனக்கு ஏற்பட்ட கஷ்டங்களுக்கு சிவில்கோர்ட்டுகளுக்கு பரிகாரத்திற்காக சென்று வியாஜ்ஜியம் தொடரலாம். [சிவில் பரொஸீஜர் கோட், பிரிவு 9-ஐ பார்க்கவும்.]

14. சிவில் கோர்டும், சட்டப்படிப் பகையும்.—ஒருவன் நல்ல எண்ணத்துடன் பஞ்சாயத்திற்கு அனுகூலமான காரியங்களைச் செய்தபோதிலும், அதனல் சட்டபடிக்கு இதரர்களுக்கு கெடுதி உண்டாகிற பட்சத்தில் நியாய சபை தீர்ப்புகள் படிக்கு அந்தக் காரியத்தைப் பகையாகத்தான் (Malice in Law) கருதப்படும். அதற்காக சிவில் கோர்ட்டுகள் ஈடுகட்டிக் கொடுக்கலாம் [கருப்பண்ண எ. குன்னூர் முனிசிபல் சேர்மன். A. I. R. 1936 M. 547=70 M. L. J. 695]

15. சிவில் கோர்ட்டுகளும், கிரிமினல் கோர்ட்டுகளும்.—கிரிமினல் கோர்ட்டு வியாஜ்யங்களை சிவில் கோர்ட்டுகள் பொதுவாக இன்ஜெங்க்ஷன் மூலம் தடுக்கக்கூடாது. சிவில்

கோர்ட்டுகள் பிரர்திியை கிரிமினல் கேஸ் நடத்தக்கூடாது எனத் தடுத்ததினுலேயே மாஜிஸ்டிரேட் கிரிமினல் கேசை நடத்தக்கூடாது என்று ஏற்படாது. மாஜிஸ்டிரேட் உத்திரவு செய்தால் பிராதி மாஜிஸ்டிரேட் முன்பு ஆஜராகிச் சாட்சியம் சொல்லலாம். [எஸ்ஸப்பா குரித்து A. I. R. 1942 Mad. 756]. சிவில் கோர்ட்டுகள் பஞ்சாயத்துக்களை சிரிமினல் வியாஜ்யங்களைத் தொடரக்கூடாது என்று தடுக்கக்கூடாது [ராமா. எ. மதுரை முனிசிபாலிடி A. I. R. 1929 Mad. 344].

16. சிவில் கோர்ட்டுகளும், தனிக்கோர்ட்டுகளும்.—சட்டம் ஏற்படும் பட்சத்தில் சிவில் கோர்ட்டுகளுக்கு பதிலாக தனிக் கோர்ட்டுகள் தான் காரியத்தைச் செய்யவேண்டும். அப்படி தனிக்கோர்ட்டுகள் கவனிக்காவிட்டால், சிவில் கோர்ட்டுகள் பரிசீலனை செய்யலாம் [வெங்கட சிவா-எ-ராமா A I. R. 1926 Mad. 246. :: சாவோத்தம-எ.-சைதாப்பேட்டை முனிசிபாலிடி. A. I. R. 1923 Mad. 475].

17. சிவில் கோர்ட்டுகளும், இன்ஜங்க்ஷன்களும்.—பஞ்சாயத்து நிதியை அனுவசியமாகவோ. சட்ட விரோதமாகவோ உபயோகப்படுத்தும் பட்சத்தில் சிவில் கோர்டுகள் இன்ஜங்க்ஷனுல் தடுக்கலாம். [வாமன்-எ-ஷோலாப்பூர் முனிசிபாலிடி (1891) 22 Bom 646] ஆனுல் பஞ்சாயத்துகள் சட்டபடி காரியங்களை நடத்தும் வரையில் தனிப்பட்ட நபர்களுக்கு கஷ்டங்கள் நேரிட்டாலும் அம்மாதிரி பஞ்சாயத்துக்களை சிவில் கோர்ட்டுகள் தடுக்கக் கூடாது. [ருத்ரப்பா-எ-மதராஸ் கார்ப்பொரேஷன், 34 I. C. 735 = 1916-1 M. W. N. 394].

18. சிவில் கோர்ட்டுகளும், பஞ்சாயத்து அலுவல்களும், துணி எண்ணங்களும் (Presumptions) :—பஞ்சாயத்துகளின் காரியங்களைச் சரிவர நடத்தி வகுகிறது என்ற துணிவெண்ணங்களை மாற்றினுல் ஒழிய, சிவில் கோர்ட்டுகள் பஞ்சாயத்துகள் தங்களுடைய தீர்மானங்களை எப்படி நிறைவேற்றியது என்னும் விஷயங்களில் பிரவேசிக்காது: [மதராஸ் முனிஸிபல் கமிஷனர்,-எ-பார்த்தசாரதி 11 Mad. 341] பஞ்சாயத்துகள் அக்கிரமமாகவும், காரணமில்லாமலும், எதேச்சையாகவும், நடக்கும் பட்சத்தில் அம்மாதிரி பஞ்சாயத்துகளை சிவில் கோர்ட்டுகள் தடுக்கநாம். [பந்தர் தாலுக்கா போர்டு-எ.-மல்லிகார்ஜுன பிரஸாதா, 45 Mad. 156 = 68 I.C. 497].

19. கோர்ட்டுகளும் பஞ்சாயத்து ஆபீஸ்களும்.—ஆபீஸர்கள் மூலமாகச் செய்யக்கூடியவைகளுக்குக் கோர்ட்டுகளுக்குப் போகக்கூடாது. [சமரபுரி-எ-மதராஸ் கார்ப்பொரேஷன் 54 Mad. 1034 = A. I. R. 1931 Mad. 488]

20. கோர்ட்டுகளும், கால எல்லையும் (Limitation) [நோட்டீஸ்களும்] பி. 165, 170 பார்க்கவும்.

21. வெளி அனுமதியின்றி பஞ்சாயத்துக்கள் வியாஜ்யங்களுக்கு செய்யக்கூடிய சட்ட செலவுகளுக்கு வரையறை (ச-V-5) பி. 178 (1) படிக்கு விதி.

எந்தப் பஞ்சாயத்தும், ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தருடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல் யாதொரு தாவா வியாஜ்ஜியம் அல்லது சட்ட நடவடிக்கை சம்பந்தமாக மொத்தத்திலே பத்து ரூபாய்க்கு மேல் செலவு செய்யலாகாது.

விளக்கம் :—ஒரு நீதி மன்றத்தின் யாதொரு டிக்ரி அல்லது உத்திரவின்படி சேர வேண்டிய யாதொரு தொகையைப் பஞ்சாயத்துச் செலுத்துவதற்கு முன் சம்மதம் வேண்டுமென இவ்விதியில் கண்டது எதனுலும் கருதப்படமாட்டாது.

22. வியாஜ்யங்களில் நியாயவாதியின் அட்வொகேட்டின் நியமனமும் சில விஷயங்களில் கட்டணங்கள் செலுத்துவதும், (L-III-3) செ. 178 1ன் படிக்கு விதிகள்

1. அரசாங்கத்தாரும் யாதொரு பஞ்சாயத்தும் ஸிவில் கேஸொ ஒன்றில் கட்சிக்காரர்களாயிருந்து, அந்தப் பஞ்சாயத்தினிடம் சங்கிரமித்துள்ள நிலங்களின் ஸர்வே சரிதானு என்பதே அந்தக்கேஸின் பிரச்னேயாயிருந்து, ஷெ இருதரப்பாருடைய பாத்தியதைகளும் ஒன்று போலவே யிருந்தால், ஷெ பஞ்சாயத்து அரசாங்கத்தார் சார்பாக கலெக்டரால் நியமிக்கப் படுகிற நியாயவாதியைத்தான் தன் சார்பில் அமர்த்திக் கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், ஷெ நியாயவாதிக்குக் கொடுக்கப்படத்தக்க கட்டணமாவது அரசாங்கத்தாராலும் ஷெ பஞ்சாயத்தினுலும் முறையே மூன்றில் இரண்டுபாகம் மூன்றில் ஒரு பாகம் என்னும் வீதாசாரப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

2. 1-வது விதியில் சொல்லப்பட்டவையல்லாத வேறு ஸிவில் கேஸுகளில். அரசாங்கத்தாரும், யாதொரு பஞ்சாயத்தும், கட்சிக்காரர்களாயிருந்து, அவர்களுடைய வாதங்கள் ஒன்றுபோலவே யிருந்தால் ஷி பஞ்சாயத்தானது, அரசாங்கத்தார் சார்பாக நியமிக்கப்படுகிற நியாயவாதியைத்தான் தன் சார்பில் அமர்த்திக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், ஷி நியாயவாதிக்குக் கொடுக்கப்படத் தக்க கட்டணமும் அதன் தொடர்பான இதர செலவுகளும் அரசாங்கத்தார் சார்பிலும் ஷி பஞ்சாயத்தின் சார்பிலுமான நடவடிக்கைகள் ஒன்றுகி விட்டபிறகும் அவ்வாறு ஒன்றுகிவிட்ட நடவடிக்கைகளை அமுல் நடத்துவதிலும் பிடிக்கிற எவையேனும் செலவுகள் அரசாங்கத்தாராலும் ஷி பஞ்சாயத்தினுலும் சமமாகப் பங்கிட்டு ஏற்றுக்கொள்ளப் படவேண்டும்.

3. ஸிவில் கோர்ட்டுகளின் தீர்ப்புகளின் மீது பஞ்சாயத்துக்களால் தாக்கல் செய்யப்படுகிற அப்பீல்களுக்கு இவ்விதிகள் பிரயோகப்படமாட்டா.

23. ஒப்பந்தம்:—ஒப்பந்தங்களில் இருதிறத்தாரும் கலந்திருக்க வேண்டும். அதில் ஒரு தரம் பஞ்சாயத்தாக இருக்கவேண்டும். ஒரு புதிய சட்டம் வந்தால் அதனுல் பழைய ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்படலாம். எல்லா ஒப்பந்தங்களும் சட்டத்திற்கு உட்பட்டிருக்க வேண்டும். சட்டத்தில் இல்லாத விஷயங்களை ஒப்பந்தம் செய்துகொண்டால் அது செல்லாது. ஒரு ஏலமானது ஒரு ஒப்பந்தமாகும். இந்த ஆக்டின்கீழ் ஒப்பந்தத்திற்கு வெறும் முத்திரை போட்டால் போதாது. கையெழுத்தும் (Signature) இருக்கவேண்டும். ஒரு ஒப்பந்தம் அபிப்பிராயத்தில் மாத்திரம் (**Proposal**) இருக்கும்போது முடியாவிட்டால், அதை முடித்துத் தர வேண்டும் என்று வியாஜ்ஜியம் தொடர்ந்தால் அது செல்லாது. ஆனல் ஒரு ஒப்பந்தம் செய்து முடிக்க வேண்டும் என்று ஒரு பஞ்சாயத்து தீர்மானம் செய்த பிறகு ஒப்பந்தக்காரருக்கு அந்த ஒப்பந்தத்தை கொடாவிட்டால் அந்த ஒப்பந்தக்காரர் அவ்வொப்பந்தத்தை தனக்கு கொடுக்க வேண்டும் என்று அல்லது நஷ்ட ஈடை கட்டிக்கொடுக்க வேண்டும் என்றும் வியாஜ்யம் தொடரலாம் [ராமசாமி-எ-தஞ்சாவூர் முனிசிபல் கௌன்சில், (1906) 29 Mad. 360 : : திருவாரூர் முனிஸிபாலிடி-எ.-கன்னுசாமி 53 = 532 = A. I. R. 1930 Mad. 600].

24. ஒப்பந்தங்களும், கன்ட்ராக்டுகளும், நஷ்ட ஈடுகளும்.—ஒரு ஒப்பந்தமானது கையெழுத்துக்கள் முதலியவை சரியாக இல்லாமையால் செல்லத்தக்கது அல்ல என்று ஏற்பட்டாலும் அதை நம்பி பஞ்சாயத்துக்களுக்கு செய்த காரியங்களினுல் பஞ்சாயத்துக்கள் பலனை அடைந்திருந்தால் அந்தப் பஞ்சாயத்துகள் அந்த ஒப்பந்தக்காரர்களுக்கு நஷ்ட ஈடு கட்டிக் கொடுக்க வேண்டியதாகும். [ஹர்நாத்-எ-இந்தர் 44 M.L.J. 383 (P.C.) : : விஜய நகரம் முனிசிபாலிடி-எ.-வெங்கண்ணு, (1879) 2 Mad. 104 : : தர்மாபுரம் முனிசிபாலிடி-எ.-சுல்தான் A.I.R. 1934 Mad. 388 : : ரௌத்தர்-எ-திருநெல்வேலி முனுசிபாலிடி A.I.R. 1938 Mad. 746 : : மதுரா முனுசிபாலிடி எ. அளகிரிசாமி An.L.R. 1939 Mad. 928 = A.I.R. 1939 Mad. 937] ஒரு முதல் வியாஜ்ஜியம் தொடரும் பட்சத்தில் நஷ்ட ஈடுப் பரிகாரத்தைக் கேளாமல் இருந்தபோதிலும், பிறகு அந்தப் பிராதை மாற்றிக்கொள்ள கோர்ட்டார் உத்திரவு கொடுக்கலாம். [சுப்பாராவ்-எ.-வெங்கடாபுரம் பஞ்சாயத்து போர்டு. 1941 Mad. W. N. 885 = 1941-2 M. L. J. 216.

25. ஒப்பந்தங்களும், செக்மெஷர்மெண்டுகளும் (Check-measurment)—ஒப்பந்தத்தில் செக்மெஷர்மெண்ட் ஆனபிறகுதான் ஒப்பந்த பணத்தொகையைக் கொடுப்பது என்று ஏற்பாடு இருக்கும் பட்சத்தில் செக்மெஷர்மெண்டு ஆகாத முன்பு பணம் கேட்டால் செல்லாது. [வாங்தீஸ்வரா-எ.-தென் ஆற்காடு டிஸ்டிரிக்ட் போர்டு A. I. R. 1941 M. 887]

26. ஒப்பந்தங்களும், செக்யூரிடி டிபாஸிட்டை பறிமுதல் செய்வதும் :—செக்யூரிடி டிபாஸிட்டை பறிமுதல் செய்ய சட்டத்தில் ஏற்பாடு கிடையாது. ஆனல் அந்தத் தொகையை பஞ்சாயத்தே வைத்துக்கொள்ள வேண்டும் என்றுல் அதற்குத் தக்க காரணம் வேண்டும். இல்லாவிட்டால் கோர்ட்டு அந்த விஷயத்தில் பிரவேசிக்கலாம். [ரங்கூன் முனிசிபாலிடி எ. சாவில்லி 1942 Rang. 70 A. I. R. :: யுன்னி எ. துளசிராம், A. I. R. 1942 Cal. 362]

27. ஒப்பந்தமும், முடிவான நற்சாட்சிப் பத்திரமும் (Final Certificate).—ஒப்பந்த தொகை பெருவிட்டால் முடிவான நற்சாட்சிப் பத்திர தேதி முதல் மூன்று வருஷத்திற்குள் பெறலாம்.

28. ஒப்பந்தமும், நோட்டீஸும், காலவரையறையும் :—ஒப்பந்த வியாஜ்ஜியங்களுக்கு தனிப்பட்ட நோட்டிசை 170-வது பிரிவின்படிக்கு கொடுக்கவேண்டியது கிடையாது. அதற்

குக் காலாவதி மூன்று வருஷமாகும். 6 மாதமல்ல. உபாத்தியாயர் சம்பளங்களை ஒரு பிரசிடெண்டானவர் கொடாமல் தானே எடுத்துக்கொண்டால் அதை 3 வருஷத்திற்குள் உபாத்தியாயர் பெறலாம். அதற்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டியது கிடையாது. [சந்திரசேகரன்-எ.-நரசிம்மம், A. I. R. 1925. M. 942]

29. ஒப்பந்தத் தொகையும் வட்டியும் :—ஒரு ஒப்பந்தத் தொகையை உடனே கொடாவிட்டால் அதற்கு நூற்றுக்கு ஆறு வட்டி வீதம் (100-க்கு 6 வீதம்) பஞ்சாயத்துக்கள் ஒப்பந்தக்காரருக்குக் கொடுக்க வேண்டும். [பந்தாரி எ. அமிருதசார் முனிசிபாலிடி, A. I. R. 1931 L. 557].

30. ஒப்பந்தங்களும், பஞ்சாயத்துகளுக்குச் சேரவேண்டிய தொகைகளும் :—ஆக்டின்படி இல்லாமல் சாமான்யமாக ஒப்பந்தத்தின் மூலம் பஞ்சாயத்துக்களுக்குப் பணம் சேர வேண்டியிருந்தால் அதை இந்த ஆக்டின் கிழ் உள்ள சுருக்கமான வழியில் வசூலிக்கக் கூடாது. [அஹமத் எ. புங்கனூர் பஞ்சாயத்து போர்டு. I. R. 1932 M. 564 = A. I. R. 1932 M. 660 : : புண்ணிய சாமலோ குறித்து 47 M. 381 = A. I. R. 1924 M 669 : : மஹமத் எ. அனகாபல்லி முனிசிபாலிடி 16 Cr. L. J. 702 = 30 I. C. 750 (M)

31. வஸ்த்துக்கள், சரக்குகள் முதலியவற்றைப் பஞ்சாயத்துகளுக்கு சப்ளை செய்வது விதிகள். செ. 173 (2) xix படி (ரு: XIV-14)

1. வஸ்துக்களையும் சரக்குகளையும் ஸப்ளை செய்வது சம்பந்தமான அல்லது கட்டு வேலைகளைச் செய்து முடிப்பதற்கான சேவை வர்க்கங்கள் அல்லாத இதர சேவை வர்க்கங்கள் சம்பந்தமாக, 300 ரூபாய்க்கு மேற்படாத செலவின் எந்த அளவுவரை டெண்டர்கள் வேண்டாமென்று சொல்லி விடலாமோ அப்த அளவைப் பஞ்சாயத்து நிர்ணயிக்கலாம். டெண்டர்கள் வரவழைக்கப்பட்டால், நிர்வாக அதிகாரி அவற்றை அட்டவணைப்படுத்தி பரிசீலனை செய்து, பிறகு அவற்றின்பேரில் பஞ்சாயத்தின் உத்தரவைப் பெறுவதற்காகத் தமது சிபாரிசுகளுடன் அவற்றைப் பஞ்சாயத்துக்கு முன்னர் வைக்கவேண்டும்.

2. மிகக் குறைவான டெண்டரையே சாதாரணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். மிகக் குறைவான டெண்டரை ஏற்றுக்கொள்வது உசிதமல்லவென்று கருதப்பட்டால் அதற்குண்டான காரணங்களைத் தெளிவாக எழுதிவைத்து தணிக்கைக் காரியங்களுக்காகக் கிடைக்கும் படிச் செய்யவேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட வஸ்துக்கள் சம்பந்தமாக, உதாரணமாக, பேனா காகிதம் முதலிய எழுத்து கருவிகள் சம்பந்தமாக டெண்டர்களை வரவழைப்பதா யிருந்தால், மிகக் குறைவான டெண்டர் ஏற்றுக்கொள்ளப் படுகிறவரையில், ஒப்பிட்டுப் பார்ப்பதற்குரிய விலைகளைப்பற்றி, ஒவ்வொரு வஸ்துவுக்கும் தனித் தனியாகவோ சகல வஸ்துக்களாகவும் கூட்டாகவோ வஸ்துக்களின் குறிப்பிட்ட தொகுதிகளுக்காகவோ ஆலோசித்துப் பார்க்கலாம் : ஆனல், இம் முறைகளில் எதன்படியேனும் மிகக் குறைந்த டெண்டரைத் தெரிந்தெடுக்க பஞ்சாயத்து கொண்டுள்ள உத்தேசத்தைப் பற்றி டெண்டர் நோட்டீஸில் தெளிவாகக் கண்டிருக்கவேண்டும். சகல வஸ்துக்களுக்காகவேனும் வஸ்துக்களின் தொகுதிகளுக்காகவேனும் கூட்டாக டெண்டர் கருதப்படுவதா யிருந்தால், சந்தர்ப்பத்திற்கேற்ப வஸ்துக்கள் எல்லாவற்றின் சம்பந்தமாக அல்லது ஒவ்வொரு தொகுதியின் எல்லா வஸ்துக்கள் சம்பந்தமாக வெகுசாய்த் தேவையா யிருப்பவைகளின் விலையை, ஒவ்வொரு டெண்டரிலும் கொடுத்துள்ள விதங்களை அனுசரித்து கணக்கிட வேண்டும். ஒன்றுக எடுத்துக்கொள்ள உத்தேசித்திருக்கிற சகல வஸ்துக்களிலும் வெகுசாய் தேவையாய் இருப்பவைகளையும் மொத்த விலை எந்த டெண்டரின்படிக் கணக்கிட்டால் மிகக் குறைவாக இருக்கிறதோ அதுவே மிகக் குறைவான டெண்டர் ஆகும்.

3. வஸ்துக்கள் முதலியவற்றை ஸப்ளை செய்வதற்கு டெண்டர் கொடுப்பவர் ஒருவருக்குள்ள திறமையைப்பற்றியும் அவருடைய நேர்மையைப் பற்றியும் ஒன்றும் தெரியா விட்டால், அவருடைய டெண்டரைத் தள்ளிவிட வேண்டுமென்பதில்லை ; ஆயினும் பிரஸ்தாப சந்தர்ப்பங்களை நோக்கும்போது பின்வருமாறு செய்தல் இன்றியமையாததென்று தெரிய வந்தால், பஞ்சாயத்து அவசியமென்று கருதுகிற அதிகப்படியான ஜாமீனை டெண்டர் கொடுப்பவரிடமிருந்து வாங்கிக் கொள்ளவேண்டும்.

4. மிகக் குறைவான டெண்டர் நிராகரிக்கப்பட்டால் அதற்கு, அடுத்து மேலுள்ள டெண்டரையும் கூட நிராகரிப்பதற்குப் போதுமான காரணங்களை எழுதிவைக்க முடிந்தாலன்றி அந்த டெண்டரை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

5. ஒரு டெண்டரில் குறிப்பிடப்பட்ட வீதங்களல்லாத வேறு வீதங்களில், எந்த சந்தர்ப்பத்திலும் அந்த டெண்டரை ஏற்றுக்கொள்ளக் கூடாது.

6. டெண்டர்கள் திறக்கப்பட்ட பிறகு அவற்றைப் பைசல் செய்வதில் தவிர்க்கக் கூடிய தாமதம் எதுவும் இருக்கலாகாது.

7. (1) (முத்திரையிட்ட உறைகளில் இருக்கவேண்டிய) டெண்டர்களை, நிர்வாக அதிகாரியானவர் சாத்தியமான வரையில் மிகவும் வெளிப்படையான தன்மையிலும் பகிரங்கமான முறையிலும்—

(a) சகல விஷயங்களிலும், பிரஸ்தாப ஜில்லாவின் பாஷை அல்லது பாஷைகளில் எழுதப்பட்டு, பஞ்சாயத்து ஆபீஸிலும் நிர்வாக அதிகாரி தகுதியென்று கருதக்கூடிய வேறு இடங்களிலும் ஒட்டப்படும் ஒரு நோட்டீஸ் மூலமாகவும்

(b) உத்தேச விலை 500 ரூபாய்க்கு மேற்பட்டால், ஷ ஜில்லாவில் வழங்கி வருகிற குறைந்தது ஒரு செய்தித் தாளிலேனும் விளம்பரம் செய்வது மூலமாகவும் வரவழைக்க வேண்டும்.

(2) (1) உபவிதியின்படிப் பிரசுரிக்கப்படுகிற நோட்டீஸ் அல்லது விளம்பரம் ஒவ்வொன்றிலும், மற்றவைகளுடன்கூட, அடியிற்கண்ட விஷயங்களும் கண்டிருக்க வேண்டும்; அவை யாவன :—

(a) பற்பல வகைகளைச் சேர்ந்த வஸ்த்துக்களின் அளவுகளை நோட்டீஸிலேயே அல்லது விளம்பரத்திலேயே சவிஸ்தாரமாகச் சொல்ல முடியாவிட்டால், அந்த அளவுகள் பற்றிய ஷெட்யூலின் பிரதி ஒன்று இன்ன நிபந்தனைகளுக்குட்பட்டும் இன்ன உத்தியோகஸ்தரிடமிருந்தும் விலை ஏதாகிலும் இருந்தால் இன்ன விலைக்கும் பெறலாம் என்பது :

(b) சரியாக இன்ன நமூனுப்படி டெண்டர் கொடுத்துக் கொள்ள வேண்டுமென்பது, அதாவது, வெவ்வேறு வஸ்துக்களுக்குரிய விலைகளைக் குறிப்பிட வேண்டுமா என்பதும், அளவுகள் பற்றிய ஷெட்யூலில் சொல்லப்பட்டிருக்கிற ஒவ்வொரு வஸ்து சம்பந்தமாகவும் அல்லது கூட்டாக அத்தகைய வஸ்துக்களின் தொகுதிகளுக்காக டெண்டரின் ஒத்திடப்பட்டுப் பார்ப்பதற்குரிய மதிப்பு பரிசீலனை செய்யப்படுமா என்பதும் ;

(c) எப்போது எங்கே டெண்டர்களை அனுப்பவேண்டும் என்பது ; இது சம்பந்தமாக பஞ்சாயத்து ஆபீஸிலே நோட்டீஸ் பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து, அல்லது (1) உபவிதியைச்சேர்ந்த (b) பகுதியின் கீழ் வரும் விஷயங்களில், செய்திதாள் ஒன்றில் முதல் விளம்பரம் பிரசுரிக்கப்படும் தேதியிலிருந்து பத்து தின கால அளவு கொடுக்க வேண்டும் ;

(d) எப்போது எக்கே டெண்டர்களைத் திறக்க வேண்டுமென்து ;

(e) டெண்டருடன் அனுப்பப்படவேண்டிய அச்சாரப்பணம் இவ்வளவென்பதும், டெண்டர் ஏற்றுக்கொள்ளப் பட்டால் கட்ட வேண்டியிருக்கும் ஜாமீனின் தொகையும், தன்மையும் ;

(f) டெண்டரை ஏற்றுக்கொள்வதற்குத் தகுதியுள்ள அதிகாரி இன்னுர் என்பது;

(g) டெண்டரை ஏற்றுக்கொள்ளத் தகுதி வாய்ந்த அதிகாரியானவர் பெற்றுக் கொள்ளப்பட்ட டெண்டர்களில் எவற்றையேனும் அவைகள் எல்லாவற்றையேனும் காரணம் சொல்லாமலேயே நிராகரிக்கும் உரிமையை தமக்கே வைத்துக் கொண்டிருக்கிருர் என்பது ;

(h) சரியான காரணங்களில்லாமல் தமது டெண்டரை வாபஸ் வாங்கிக் கொள்கிற டெண்டர் கொடுப்பவர் ஒருவர் தாம் பிற்பட்டு அனுப்புகிற டெண்டர்கள் சுருக்க வகையாக நிராகரிக்கப் பெறுவதற்கு உள்ளாவார் என்பது (மேற்படி காரணங்கள் சரியானவையா என்பதை டெண்டரை ஏற்றுக்கொள்ளத் தகுதியுள்ள அதிகாரி தீர்மானிக்கவேண்டும்.)

8. (i) இந்திய ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்டு மூலமாகக் கிரயத்துக்கு வாங்கப்பட்ட ஸ்டோர்ஸ் சாமான்கள்.

(ii) முன்பு யுத்த ஊழியம் செய்தவர் மீண்டும் ஒரு நிலைப்படுத்துவதற்காக அரசாங்கத்தாரால் ஆரம்பிக்கப்பட்ட உலோக வேலைச் சாலைகளிலிருந்தும் தொழிற்சாலைகளிலிருந்தும் வெட்டுமர வேலைச் சாலைகளிலிருந்தும் தொழிற்சாலைகளிலிருந்தும் வருகிற வஸ்துக்கள்.

(iii) துப்பரவு செய்யும் காரியங்களுக்காகவும் மற்ற காரியங்களுக்குமான காளை மாடுகள்.

(iv) அரசாங்கத்தாருடைய அல்லது அவர்களது ஏஜெண்டுகளுடைய உத்தரவுகளின் பேரில் பிறப்பிக்கப்பட்ட ஓர் அனுமதிச் சீட்டு மூலமாக கட்டுப்பாட்டுக்குட்பட்ட விலைகளில் கட்டுப்பாட்டுக்குட்பட்ட வஸ்துக்கள்.

(v) ஸெகண்டரி பாடசாலைகளில் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட பாட முறைகளுக்கான பாட திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற தளவாடப் பொருள்கள்.

(vi) ஸெகண்டரி பாடசாலைகளில் தேகப்பயிற்சிப் பிரிவுகளுக்கு வேண்டியிருக்கிற வஸ்துக்கள்.

(vii) பிரஸ்தாப காலத்தில் அமுலிலிருக்கிற விலை வீதங்களில் பெட்ரோலை வினியோகம் செய்வதற்காகவும் ஸப்ளை பண்ணுவதற்காகவும் தரமான வர்த்தக ஸ்தாபனங்களிலிருந்தோ அவற்றின் அதிகார பூர்வமான ஏஜெண்டுகளிடமிருந்தோ வருகிற அந்த பெட்ரோல்.

ஆகிய இவற்றைக் கிரயத்துக்கு வாங்குவதற்கு இவ்விதிகளில் கண்டதெதுவும் பிரயோகப்படமாட்டாது.

9. முந்திய விதிகளில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாமலே, ரீஜனல் இன்ஸ்பெக்டரானவர், போதுமான காரணத்துக்காக, குறிப்பிட்ட யாதொரு விஷயத்திலாவது வகுப்பைச் சேர்ந்த விஷயங்களிலாவது டெண்டர்கள் வேண்டாமென்று சொல்லிவிட பஞ்சாய்த்துக்கு அனுமதி கொடுக்கறாம் அல்லது மேற்படி விதிகளில் அடங்கியுள்ள ஷரத்துக்களில் எவற்றையேனும் அனுசரிக்காமல் இருப்பதை மன்னித்து விடலாம்.

32. பஞ்சாயத்துக் கட்டு வேலைகளுக்காக டெண்டர்களை வரவழைப்பதும் ஏற்றுக் கொள்வதும். [IV-14] [விதிகள் செக்ஷன்கள் 178 2 XIX படிக்கு]

1. காண்ட்ராக்டரின் பேரில் செய்து முடிக்கவேண்டி யிருப்பதும் காண்ட்ராக்ட் தொகை 300 ரூபாய்க்கு மேற்படுவதுமான ஒவ்வொரு கட்டு வேலை விஷயமாகவும் டெண்டர்களை வரவழைக்க வேண்டும் :

ஆனல், ஹைவேஸ் டிபார்ட்மெண்டார் செய்து முடிப்பதற்கென்று அவர்களிடம் ஒப்புவிக்கப்படுகிற யாதொரு கட்டு வேலையின் விஷயத்தில் டெண்டர்கள் அவசியமில்லையென்று பஞ்சாயத்து தள்ளி விடலாம்.

2. (1) 1-வது விதியின் ஷரத்துக்களுக்குட்பட்டு, பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர் சீல் போட்ட கவர்களில் சாத்தியமானவரையில் மிகவும் பகிரங்கமாகவும் வெளிப்படையாகவும் டெண்டர்களை வரவழைக்க வேண்டும்.

(a) பிரஸ்தாப ஜில்லாவின் முக்கியமான பாஷை அல்லது பாஷை அல்லது பாஷைகளில் எழுதப்பட்டிருப்பதும், பஞ்சாயத்து ஆபீஸ், கிராமச் சாவடி, நிர்வாக அதிகாரி தகுதி யென்று கருதக்கூடிய வேறுஇடங்கள் ஆகிய இவற்றில் ஒட்டப்பட்டிருப்பதுமான ஓர் அறிக்கை மூலமாகவும்,

(b) பிரஸ்தாப கட்டு வேலைக்குப் பிடிக்கும் செலவு 2,000 ரூபாய்க்கு மேற்பட்டால், பிரஸ்தாப ஜில்லாவில் வழங்கும் செய்தித் தாள்களில் ஒன்றிலோ பலவற்றிலோ விளம்பரம் செய்வது மூலமாகவும்,

(2) (1) உபவிதியின்படி பிரசுரிக்கப்படுகிற விளம்பரம் அல்லது அறிக்கை ஒவ்வொன்றிலும் அடியிற்கண்ட தகவல்கள் அடங்கி யிருக்கவேண்டும் :—

(i) கான்ராக்ட் தஸ்தாவேஜுகளை எப்போது, எவ்விடத்தில் பார்வையிடலாம் என்பது ;

(ii) சரியாக இன்னவிதமாய் டெண்டர் செய்துகொள்ள வேண்டுமென்பது ; அதாவது எஸ்டிமேட் வீதங்களுக்கு குறைவாக அல்லது மேற்பட்டு குறிப்பிட்ட ஒரு சத வீதத்தின்படி அது இருக்கவேண்டுமா ? அல்லது ஷெட்யூலில் சேர்க்கப்பட்டுள்ள வேலையின் வொன்றிற்காகவும் திட்டமான வீதங்களைச் சொல்ல வேண்டுமா ? என்பது '

(iii) எப்போது யாருக்கு டெண்டர்களை அனுப்பவேண்டுமென்பது;

(iv) எப்போது எங்கே அவைகள் திறக்கப்படும் என்பது ;

(v) டெண்டருடன் அனுப்பப்பட வேண்டிய அச்சாரம் பணத்தின் தொகையும், டெண்டர் ஏற்றுக்கொள்ளப்பட்டால் கட்டவேண்டிய ஜாமீனின் தொகையும், தன்மையும் ;

(vi) பெற்றுக்கொள்ளப்பட்ட டெண்டர்களில் எவற்றையேனும் அல்லது அவைகள் எல்லாவற்றையும், எக்காரணங்களும் சொல்லாமலேயே நிராகரிக்கிற உரிமையை பஞ்சாயத்து தன்னிடமே வைத்துக்கொள்கிற தென்பது.

3. (1) சரியாக இன்னவிதமாய் டெண்டர் செய்துகொள்ள வேண்டுமென்பதை, அதாவது. எஸ்டிமேட் வீதங்களுக்கு குறைவாக அல்லது மேற்பட்டு குறிப்பிட்ட ஒரு சத வீதப்படி அது இருக்க வேண்டுமா, அல்லது அனுமதிக்கப்பட்ட எஸ்டிமேட்டில் ஏற்பாடு செய்துள்ள வீதங்களுக்குத் தொடர்பில்லாமல் ஷெட்யூலில் சேர்க்கப்பட்டுள்ள ஒவ்வொரு வேலை இனத்திற்காகவும் திட்டமான வீதங்களைச் சொல்லவேண்டுமா என்பதை, எஸ்டிமேட்டுக்கு சாங்கேதிக அனுமதி அளிப்பதற்கு அதிகாரம் வாய்ந்த அதிகாரி ஒவ்வொரு விஷயத்தின் தராதரங்களை அனுசரித்துத் தீர்மானிக்க வேண்டும்.

(2) சதவீத அடிப்படையின்பேரில் டெண்டர்கள் வரவழைக்கப்பட்டால், கன்ட்ராக்டர்கள் சுருக்கமான எஸ்டிமேட்டுகளை மாத்திரம் பரிசோதிப்பதற்கு அனுமதிக்கப்படலாம். சாமான்களின் வாஸ்தவமான விலையைக் காட்டும் தரவுகள் ஸ்டேட்மென்டையும் (data Statment), சாமான்களைக் கொண்டுபோக வேண்டியிருக்கிற எந்த தூரத்தை ஆதாரமாகக் கொண்டு வாஸ்தவத்தில் எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறதோ அந்த தூரத்தையும் கன்ராக்ட்டர்களுக்குக் காட்டவுங் கூடாது. அது கான்ராக்ட் தஸ்தாவேஜுகளைச் சேர்ந்ததாக இருக்கவுங் கூடாது.

4. கான்ட்ராக்டின் பேரில் ஒரு கட்டுவேலையை முடிப்பதற்காக டெண்டர்களை வரவழைப்பதற்கு முன், ஒரு பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர் எஸ்டிமேட்டுக்கு சங்கேதி அனுமதியளிக்கத் தக்கவராயுள்ள அதிகாரியினிடமிருந்து 'கான்ட்ராக்ட் தஸ்தாவேஜுகளைப் பெறவேண்டும்; இந்த தஸ்தாவேஜுகளில் அடியிற்கண்டவை அடங்கி யிருக்கவேண்டும் :—

(1) உத்தேசிக்கப்பட்ட கட்டு வேலையின் பொது அளவுகளைக் காட்டும் வரிப் படங்களின் பூர்த்தியான ஸெட் ஒன்றும், அவசியமாயிருக்கிற வரையில் வெவ்வேறு பாகங்களைப் பற்றிய விவரங்களும்;

(2) பரிமாணமாயுள்ள ஏதாவதொரு விவரக்குறிப்பைப் பார்க்கக்கூடிய தாயிருந்தாலன்றி, செய்யப்பட வேண்டிய வேலை, உபயோகப்பட வேண்டிய சாமான்கள் ஆகிய இவற்றின் பூர்த்தியான ஒரு விவரக்குறிப்பு;

(3) வெவ்வேறு வகைகளைச் சேர்ந்த கட்டு வேலையின் அளவுகளைக் காட்டுகிற ஒரு ஷெட்யூல்; மேலும்,

(4) டெண்டர் செய்பவருடைய டெண்டர் ஒப்புக்கொள்ளப்படுகிற விஷயத்திலே, அவர் அனுசரிக்க வேண்டிய 'கான்ட்ராக்ட் நிபந்தனைகளின்' ஒரு ஸெட்.

5. எந்தக் கட்டு வேலையிலே எஃகு இரும்புக் கட்டு வேலையின் கன்ட்ராக்ட் தொகை 5,000 ரூபாய்க்கு மேற்படுகிறதோ அத்தகைய யாதொரு வேலையிலே, அப்படிப்பட்ட எஃகு இரும்புக்கட்டு வேலை விஷயமாய் தனியாக டெண்டர்களை வரவழைக்க வேண்டும். இப்போது தான், எஃகு இரும்பு வார்ப்பட ஸ்தாபனங்கள் அத்தகைய கட்டு வேலைகளுக்காக போட்டி வீதங்களின்படி டெண்டர் அனுப்ப முடியும்.

விவரணம்.—இவ்விதியின் காரியத்துக்காக எஃகு இரும்புக் கட்டு வேலையின் மதிப்பைக் கணக்கிடுகையில், மீண்டும் பலப்படுத்தப்பட்ட கான்க்ரீட் கட்டு வேலையிலுள்ள எஃகு இரும்பின் மதிப்பைச் சேர்க்கக்கூடாது.

6. டெண்டர் நோட்டீஸில் குறிப்பிட்டுள்ள அச்சாரப் பணம் டெண்டருடன் அனுப்பப்பட்டாலன்றி, அந்த டெண்டர் செல்லத் தக்கதென்று சாதாரணமாகக் கருதக்கூடாது.

அச்சாரப் பணமாக டிபாஸிட் செய்யப்பட்டுள்ள சகல தொகைகளையும் பற்றிய தனியான ஜாபிதா ஒன்றை பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி கையெழுத்திட்டு வைத்து வர வேண்டும்; சுலபமாக பார்த்துத் தெரிந்துகொள்வது வசதியாக இருக்கும்படியாக இவ்வாறு வைத்து வரவேண்டும்.

7. டிபாஸிட் செய்யப்பட வேண்டிய அச்சாரப் பணத்தின் தொகையானது சந்தர்ப்பத்திற்கேற்றபடி, ஒரு கான்ட்ராக்டருடைய டெண்டர் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு நியமிக்கப்பட்ட காலத்துக்குள் அவசியமான ஜாமீனை அவர் கட்டத் தவறிப்போகும் விஷயத்திலாவது, அவருக்குச் சேரவேண்டிய தொகைகள் போதுமான உத்தரவாதம் ஆகிறவரையிலாவது, ஏற்

படக்கூடிய நஷ்டத்தை ஈடு செய்வதற்குப் போதுமான அளவுக்குப் பெரிதாயிருக்க வேண்டும்.

8. நிர்வாக அதிகாரியானவர் இது காரியத்துக்காகவென்று குறிப்பிடப்பட்ட காலத்திலும் இடத்திலும், டெண்டர் அனுப்பியவர்களில் அல்லது அவர்களிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள ஏஜென்டுகளில் யார் அங்கே வந்திருக்கக் கூடுமோ அவர்கள் முன்னிலேயில், டெண்டர்களடங்கிய சீல்போட்ட கவர்களைத் திறக்கவேண்டும். சீல்போட்ட கவர்கள் அவ்வாறு திறக்கப்படுகிற வரையில் நிர்வாக அதிகாரியானவர் அவற்றைத் தமது சொந்தப் பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டும். டெண்டர்களைத் திறந்ததும் நிர்வாக அதிகாரியானவர், ஒவ்வொரு டெண்டரிலும், டெண்டர் அனுப்பியவர் செய்து அத்தாட்சி கையெழுத்திட்டிருக்கக் கூடிய சகல திருத்தங்களுக்கும் இனிஷியல் செய்ய வேண்டும். டெண்டரிலே, அதை அனுப்பியவரால் அத்தாட்சி கையெழுத்திட்டிராத திருத்தங்கள் இருந்தால், டெண்டரைத் திறக்கும்போது அதிலேயே அத்தகைய திருத்தங்களைப்பற்றிய குறிப்பு ஒன்றை எழுதிக்கொள்ள வேண்டும். நிர்வாக அதிகாரியானவர் பெற்றுக்கொள்ளப்பட்ட டென்டர்களின் மொத்த எண்ணிக்கையை ஒவ்வொரு கட்டு வேலைக்கும் எதிரி டெண்டர் ரெஜிஸ்டரில் எழுதிக்கொள்ள வேண்டும்.

9. டெண்டர்கள் திறக்கப்பட்ட பிறகு, அவைகளை அட்டவணைப் படுத்தி, இவ் விதிகளுடன் சேர்க்கப்பட்டுள்ள நமூனுப்படி வைத்து வரப்படும் டெண்டர் ரெஜிஸ்டர் ஒன்றில் எழுதிக்கொள்ள வேண்டும். நிர்வாக அதிகாரியானவர் ரெஜிஸ்டரிலுள்ள பதிவுகளைப் பரிசீலனை செய்து, பிரதம டெண்டர்களை வைத்துப் பார்க்கும்போது மேற்படி அட்டவணை சரியானதென்று உறுதிமொழி கூறவேண்டும். மேற்சொன்ன பிரதம டெண்டர்களைப் பத்திரமாக வைத்திருந்து, தணிக்கைக் காரியங்களுக்காக அவைகள் கிடைக்கும்படிச் செய்யவேண்டும். டெண்டர் ரெஜிஸ்டரையும் டெண்டர்களையும் பைசல் செய்வதற்காக அவற்றைப் பஞ்சாயத்தின் அடுத்தக் கூட்டத்திலே அதற்கு முன் வைக்கவேண்டும்.

10. (1) மிக்க குறைவான டெண்டரையே சாதாரணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். மிகக் குறைவான டெண்டரை ஏற்றுக்கொள்வது உசிதமல்லவென்று கருதப்பட்டால், அதற்குரிய தெளிவான ஒப்புக்கொள்ளகூடிய காரணங்களைப் பஞ்சாயத்து எழுதிவைக்கவேண்டும்.

(2) டெண்டர் அனுப்பியவர் வேலை செய்யும் ஆற்றலைப் பற்றியும் அவருடைய நாணயத்தைப் பற்றியும் ஒன்றும் தெரியாவிட்டால், ய்யுகாரணமாகவே அவருடைய டெண்டரை நிராகரிக்க வேண்டுமென்பதில்லை. ஆயினும் பிரஸ்தாப சந்தர்ப்பங்களைக் கவனிக்கும்போது பின்வருமாறு செய்வது அவசியமென்று தோன்றினல், கான்ராக்ட் தொகையில் 10 சத வீதத்துக்கு மேற்படாமல் பஞ்சாயத்து அவசியமென்று கருதுகிற அதிகப்படியான ஜாமீனை டெண்டர் செய்பவரிடமிருந்து வாங்கிக்கொள்ள வேண்டும்.

(3) மிகக் குறைவானடெண்டர் நிராகரிக்கப்பட்டால் அதற்கு அடுத்துக் குறைவாயுள்ள டெண்டரைப்பற்றி யோசிக்க வேண்டும். அந்த டெண்டரைக் கூட ஏற்றுக்கொள்வது உசிதமல்லவென்று கருதப்பட்டால், அதற்கு அடுத்த உயர்ந்த டெண்டரைப்பற்றி யோசிக்க வேண்டும். இந்த விதியின்படி ஒரு டெண்டர் நிராகரிக்கப்படுகிற ஒவ்வொரு விஷயத்திலும், அதற்குரிய தெளிவான ஒப்புக்கொள்ளக்கூடிய காரணங்களைப் பஞ்சாயத்து எழுதி வைக்க வேண்டும்.

(4) ஒரு டெண்டரில் குறிப்பிட்டுள்ள வீதங்களல்லாது வேறு வீதங்களின்படி அந்த டெண்டரை எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளலாகாது.

(5) டெண்டர்கள் திறக்கப்பட்ட பிறகு அவைகளைப் பைசல் செய்வதில் தவிர்க்கக் கூடிய காலதாமதம் எதுவும் செய்யலாகாது. டெண்டர்கள் திறக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறுவாரங்களுக்கு மேற்பட்ட ஒரு கால அளவுவரை எச்சந்தர்ப்பத்திலும் அவைகள் பைசல் செய்யப்படாமல் இருக்கக்கூடாது.

11. முந்திய விதிகளில் என்ன சொல்லியிருந்தபோதும் பாதகமில்லாமலே இன்ஸ்பெக்டரானவர் போதுமான காரணங்களுக்காக, குறிப்பிட்ட யாதொரு விஷத்திலேனும் வகையைச் சேர்ந்த விஷயங்களிலேனும் டெண்டர் அவசியமில்லையென்று சொல்வதற்காவது, மேற்படி விதிகளில் கண்ட ஷரத்துக்களில் யாதொன்று அனுசரிக்கப்படாமலிருப்பதை மன்னித்து விடுவதற்காவது பஞ்சாயத்துக்கு அனுமதி கொடுக்கலாம்.

12. டெண்டர்கள் வரவழைக்கப்படா விட்டாலும் அவை அவசியமில்லை யென்று கருதப்பட்டாலும், யாதொரு பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர் தெரிந்தெடுக்கிற ஒரு கண்ட்

ராக்டரைக் கொண்டு, சாதாரணமாக அனுமதிக்கப்படுகிற வீதங்களுக்கு மேற்படாத பிரஸ்தாபக கட்டு வேலையைச் செய்து முடிக்க வேண்டும். அவசரத்தை முன்னிட்டோ விசேஷ காரணங்களினாலோ அனுமதிக்கப்பட்ட வீதங்களுக்கு மேற்பட்டுள்ள வீதங்களை வைத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டால், (ஹைவேஸ்) டிவிஷனல் என்ஜினீரிங் சம்மதத்தை முன்னதாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அனுபந்தம்:

(9-வது விதியைப் பார்க்கவும்)

டெண்டர் ரிஜிஸ்டர்.

கட்டு வேலையின் பெயர்.

கான்ட்ராக்டின் மதிப்பீட்டுத் தொகை.

பெற்றுக்கொள்ளப்பட்ட டெண்டர்களின் மொத்த எண்ணிக்கை.

தொடரிலக்கம்.	டெண்டர் அனுப்பியவர் பெயர்.	டெண்டர் சதவீதம்,	டிபாஸிட் தொகை.	பஞ்சாயத்தின் உத்தரவுகள்.
(1)	(2)	(3)	(4)	(5)

ஜே. சிவானந்தம்,
அரசாங்கக் காரியதரிசி

33. குத்தகைதாரர்களுக்கும் கன்ட்ராக்டர்களுக்கும் வஜா செய்வது (III-7) விதிகள். செக்ஷன்கள் 178 (2) (XIX) படிக்கு

1. பஞ்சாயத்துக்களிடமிருந்து வரி விஷயமாய் குத்தகை எடுத்துக்கொண்ட எல்லாரும், பஞ்சாயத்துக்களோடு கான்ட்ராக்ட் செய்துகொண்டிருக்கும் எல்லாரும், அவர்களுடைய குத்தகைகளின் அல்லது கான்ட்ராக்டுகளின் ஷரத்துக்களை கண்டிப்பாக அனுசரித்து நடக்கவேண்டும்; 2-வது, 3-வது விதிகளின் ஷரத்துக்களை அனுசரித்தன்றி மற்றப்படி அவர்களுக்கு எவ்விதமான வஜாக்களும் செய்யப்படமாட்டா.

2. குத்தகைதாரர்களுக்கும் கண்ட்ராக்டர்களுக்கும் வரி வஜாக்கள் செய்வது, அடியிற்கண்ட வரையறைகளுக்கும் மேல் விசாரணைக்கும் உட்பட்டதாகும்; அவையாவன:—

(a) நியாயமாக எதிர் பார்த்திருக்க முடியாத ஓர் அசாதாரணப் புறக்காரணம் நேரிட்டதின் பலனாக, உதாரணமாக குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் ஒரு மார்க்கெட், பெருவாரி நோய் கண்டிருப்பதன் விளைவாகக் கட்டாயமாய் மூடிவைக்கப் படவேண்டியதன் பலனாக குத்தகைதாரர் அல்லது காண்ட்ராக்டர்குத்தகையில் அல்லது கான்ட்ராக்டில் தமக்குரிய பாகத்தை நிறைவேற்ற முடியாதபடி தடுக்கப்படும் விஷயங்களில் மாத்திரமே வரி வஜா செய்யப்படும்.

(b) வஜா செய்யப்படும் தொகையானது குத்தகைதாரர் அல்லது கான்ட்ராக்டர் அத்தகைய அசாதாரண காரணத்தின் விளைவாகக் குத்தகையில் அல்லது கான்ட்ராக்டில் தமக்குரிய பாகத்தை நிறைவேற்ற முடியாத படித் தடுக்கப்பட்ட காலத்துக்கு மேற்படி குத்தகையின்படி அல்லது காண்ட்ராக்டின்படி செலுத்தப்படத்தக்க வீதாசாரத் தொகைக்கு மேற்படலாகாது; மேலும்.

(c) வஜா செய்யப்படும் தொகை ஐம்பது ரூபாய்க்கு மேற்பட்டால், ரீஜனல் இன்ஸ்பெக்டரின் சம்மதத்தை முன்னதாகப் பெறவேண்டும்.

3. குத்தகையில் அல்லது கான்ட்ராக்டில் ஏற்பாடு செய்துள்ள தண்டனைகள் அக்குத்தகையின் அல்லது கான்ட்ராக்டின் ஷரத்துக்களின் பிரகாரம் கண்டிப்பாக நிறைவேற்றப்படும். குத்தகையின் அல்லது கான்ட்ராக்டின்கீழ் பஞ்சாயத்துக்குச் சேர வேண்டிய தொகையைக் காலதாமதம் செய்து செலுத்துவதற்கான தண்டனைகள் வஜா செய்யப்படமாட்டா; ஆனால், சேரவேண்டிய தவணைத் தொகைகள் சுமாராகக் கிரமமாய்ச் செலுத்தப் பட்டிருக்கின்றனவென்று பஞ்சாயத்து அபிப்பிராயப்பட்டு குத்தகையின் அல்லது கன்ட்ராக்டின் கீழ்ப் பஞ்சாயத்துக்குச் சேரவேண்டிய முழுத் தொகையும் குத்தகை அல்லது கான்ட்ராக்ட் சம்பந்

தப்படுகிற கால அளவு முடியம் முன் செலுத்தப்பட்டிருக்கும் விஷயங்களில் மேற்படி தண்டனைகள் வஜா செய்யப்படும்.

ஆனுல் வஜா செய்யப்படும் தொகை ஒவ்வொரு விஷயத்திலும் 50 ரூபாய்க்கு மேற்பட்டால் ரீஜனல் இன்ஸ்பெக்டரின் சம்மதத்தை முன்னதாகப் பெறவேண்டும்.

34. அசையும் பொருளை அல்லது அசையா பொருளை அடையவும், வைத்திருக்கவும், மாற்றவும்.—

ஸ்தாவர சொத்தை அடைவதும், ட்ரான்ஸ்பர் செய்வதும் (மற்றொருவ பெயருக்கு மாற்றுவதும். L-V-I4) விதிகள் பி. 178 (2) (XVIII) படிக்கு

1. (1) அடியிற்கண்ட நிபந்தனைகள் பூர்த்தியானல் ஒழிய, யாதொரு பஞ்சாயத்து ஸ்தாவர சொத்து எதையும் அடையலாகாது ; அந் நிபந்தனைகளாவன :—

(a) பாட்டைகள், பாலங்கள், கல் வெட்டுகள், கல் வெட்டியெடுக்கும் இடங்கள் ஆகிய இந்தக் காரியங்கள் அல்லது வேறு யாதொரு காரியத்திற்காக மேற்படி சொத்து உத்தேசிக்கப்பட்டதா யிருந்தால், அது உத்தேசிக்கப்பட்டுள்ள காரியத்துக்காக சுகாதார ரீதியில் தகுந்ததென்று டிஸ்டிரிக் ஹெல்த் ஆபீஸரால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

(b) உத்தேச செலவு 1,000 ரூபாய் மேற்படுகிற விஷயங்களில் ஷை சொத்தானது அது உத்தேசிக்கப்பட்டுள்ள காரியத்துக்குத் தகுந்ததென்று (ஹைவேஸ்) டிவிஷனல் என்ஜினீரால் அங்கீகரிக்கப்படவேண்டும்.

(c) ஷை சொத்தின் மதிப்பு 1,000 ரூபாய்க்கு மேற்பட்டிருந்து, கல்வி சம்பந்தமான காரியங்களுக்காக அது உத்தேசிக்கப்பட்டால், ஜில்லா கல்வி உத்தியோகஸ்தராலும் கூட அது அங்கீகரிக்கப்படவேண்டும்.

(d) ஷை சொத்தின் மதிப்பு 1,000 ரூபாய்க்கு மேற்பட்டு, ஆஸ்பத்திரிகளுக்காகவும், டிஸ்பென்ஸரிகளுக்காகவும் அது உத்தேசிக்கப்பட்டால், ஜில்லா வைத்திய உத்தி யோகஸ்தராலும் கூட அது அங்கீகரிக்கப்படவேண்டும்,

(e) அதற்காக வென்று கலெக்டருடைய சம்மதம் முன்னதாகப் பெற்றுக் கொள்ளப் பட்டிருந்தாலொழிய, 1894-ம் ஷுத்திய நிலமெடுத்துக் கொள்வது பற்றிய சட்டத்தின் படியின்றி மற்றப்படி ஷை சொத்தை அடையலாகாது.

(f) 1894-ம் ஷுத்திய நிலமெடுத்துக்கொள்வதுபற்றிய சட்டத்தின் படியின்றி மற்றப் படி அடையப்படுகிற நிலங்களின் விஷயத்தில் ரெவென்யூ இலாகாவினிடமிருந்து அதற்கு ஒரு மதிப்புப்போட்டு வாங்கிக்கொள்ள வேண்டும். இதன் பொருட்டு கலெக்டருடைய திட்டமான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல், ஷை மதிப்பீட்டுக்கு மேற்பட்ட எந்தத்தொகையுக் கொடுக்கலாகாது,

(g) கட்டடங்களின் விஷயத்திலே மதிப்பீடு ஒன்றையும் கட்டுக்கோப்பின் உறுதிபற்றிய ஸெர்டிபிகேட் ஒன்றையும் (ஹைவேஸ்) டிவிஷனல் என்ஜினீரிடமிருந்தாவது அந்த டிவிஷனில் என்ஜினீரின் உத்திரவுகளின்படிச் செயலாற்றுகிற (ஹைவேஸ்) அஸிஸ்டென்ட் என்ஜினீரிடமிருந்தாவது பெற்றுக்கொள்ளவேண்டும். இதன் பொருட்டு கலெக்டருடைய திட்டமான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் ஷை மதிப்பீட்டிற்கு மேற்பட்டுள்ள எந்தத் தொகையையும் கொடுக்கலாகாது :

(h) ஷை சொத்தின் ஐவேஜு 200 ரூபாய்க்குக் குறைவாயிராத ஒவ்வொரு விஷயத்திலும் பிரஸ்தாப விவகாரத்தின் தன்மையானது எவ்வித வில்லங்கங்களும் இல்லாமல் ஷை சொத்து சட்டப்படி மற்றொருவருக்கு சென்று விடும்படிச் செய்யக்கூடிய தாயிருந்தாலொழிய, அத்தகைய சொத்து விஷயமாக:ரெஜிஸ்ரேஷன் ஆபீஸிலிருந்து வில்றங்க ஸெர்டிபிகேட் ஒன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டியதுமன்றி, அதை ஷை பஞ்சாயத்தின் சட்ட ஆலோசனையாளர் பரிசீலனை செய்து பார்க்கவும் வேண்டும்.

(2) ஷை சொத்தை பஞ்சாயத்துக்கு மாற்றுகிற பத்திரமானது இவ்விதிகளுடன் சேர்க்கப்பட்டுள்ள 1-ம் செட்யூலில் கண்ட பொருத்தமான நமூனுப்படி இருக்க வேண்டும்: ஆனுல் பிரஸ்தாப சந்தர்ப்பங்களுக்கு வேண்டியிருக்கிறபடி அந்த நமூனுவில் மாறுதல்கள் செய்து கொள்ளலாம்.

(3) ஷை பஞ்சாயத்துப் பெற்றுக்கொண்ட ஒரு டிகிரியை நிறைவேற்றுகையில் விற் பனைக்குக் கொண்டு வரப்பட்ட ஸ்தாவர சொத்தை அது கிரயத்துக்கு:வாங்க வேண்டியிருக்கிற யாதொரு விஷயத்து (1), (2) உபவிதிகளின் ஷரத்துக்கள் பிரயோகப்பட மாட்டா.

2. யாதொரு பஞ்சாயத்துக்குச் சொந்தமாயிராமல் அதனிடம் சங்கிரமித்துள்ள ஸ்தாவர சொத்தைக் குத்தகை மூலமாக அல்லாமல் மற்றப்படி ட்ராஸ்ன்பர் செய்வது— (1) யாதொரு பஞ்சாயத்துக்குச் சொந்தமாயிராமல் அதனிடம் சங்கிரமித்துள்ள் ஸ்தாவர சொத்தானது எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அச் சொத்து பஞ்சாயத்தினிடம் சங்கிரமிக்கும்படிச் செய்யப்பட்டதோ அந்த நிபந்தனைக்கு விரோதமாக டிரான்ஸ்பர் செய்யப்படவுங் கூடாது, அதன் மேல் பொறுப்பு ஏற்படுத்தவுங் கூடாது.

(2) டிரான்ஸ்பர் பத்திரமானது இவ்விதிகளுடன் சேர்க்கப்பட்டிருக்கிற II-ம் செட்யூலில் கண்ட பொருத்தமான நமூனைப்படி இருக்கவேண்டும்; ஆனல் சந்தர்ப்பத்திற்கு வேண்டியிருக்கிறபடி அதில் மாறுதல்கள் செய்துகொள்ளலாம்.

3. யாதொரு பஞ்சாயத்துக்குச் சொந்தமான ஸ்தாவர சொத்தைச் குத்தகைமூலமாக அல்லாமல் மற்றப்படி ட்ரான்ஸ்பர் செய்வது :—(1) யாதொரு பஞ்சாயத்தானது கலெக்டருடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல், தனக்குச் சொந்தமான யாதொரு ஸ்தாவர சொத்தைக் குத்தகை மூலமாகவன்றி மற்றப்படி எவ்விதமாகவேனும் டிரான்ஸ்பர் செய்யவுங் கூடாது. அத்தகைய டிரான்ஸ்பருக்கு அனுமதி அளிக்கவுங் கூடாது. அல்லது அத்தகைய யாதொரு சொத்தின் பேரில் எவ்விதப் பொறுப்பையேனும் ஏற்படுத்தவுங் கூடாது, அவ்வாறு ஏற்படுத்துவதற்கு அனுமதியளிக்கவுங் கூடாது. அவ்வாறு டிரான்ஸ்பர் செய்யப்பட்ட சொத்தின் மதிப்பாவது, எந்தத்தொகைக்கு மேற்சொன்னபடி பொறுப்பு ஏற்படுத்தப்படுகிறதோ, அந்தத் தொகையானது 10,000 ரூபாய்க்கு மேற்பட்டால், பிரஸ்தாப விவகாரத்திற்காக அரசாங்கத்தாருடைய முன் அனுமதியைக் கூடப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

(2) டிரான்ஸ்பர் பத்திரமானது இவ்விதிகளுடன் சேர்க்கப்பட்டிருக்கிற II-ம் ஷெட்யூலில் கண்ட பொருத்தமான நமூனைப்படி இருக்கவேண்டும். ஆனல் சந்தர்ப்பத்திற்கு வேண்டியிருக்கிறபடி அதில் மாறுதல்கள் செய்து கொள்ளலாம்.

4. யாதொரு பஞ்சாயத்துக்குச் சொந்தமான ஸ்தாவர சொத்தைக் குத்தகை மூலமாக ட்ரான்ஸ்பர் செய்வது—(1) யாதொரு பஞ்சாயத்து தனக்குச் சொந்தமான எந்த ஸ்தாவர சொத்தையேனும் குத்தகைக்கு விடலாம் :—

ஆனல், ஷெ குத்தகையின் கால அளவு மூன்று வருஷத்துக்கு மேற்பட்டாலும், இதன் பொருட்டு இன்ஸ்பெக்டருடைய அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் சுண்ணம்பு, செங்கல், மரம், மண் அல்லது வேறே யாதொரு பொருளைக்கொண்டு யாதொரு கட்டடம் அல்லது கட்டுக்கோப்பை ஏற்படுத்திக்கொள்ள பிரஸ்தாப குத்தகை தாரருக்கு அனுமதி கொடுக்கப்பட்டாலும், அத்தகைய எந்தக் குத்தகையும் செல்லாது.

(2) குத்தகை பத்திரமானது இவ்விதிகளுடன் சேர்க்கப்பட்டிருக்கிற III-ம் ஷெட்யூலில் கண்ட III (a) நமூனைப்படி இருக்கவேண்டும், ஆனல் சந்தர்ப்பத்திற்கு வேண்டியிருக்கிறபடி யாதொரு மாறுதல்கள் செய்து கொள்ளலாம்.

5. (1) யாதொரு பஞ்சாயத்துக்குச் சொந்தமாயிராமல் அதனிடம் சங்கிரமித்திருப்பதும் பாட்டை ஓரங்களும் தெரு ஓரங்களுமாயிராததுமான வேறு யாதொரு சொத்தை அப் பஞ்சாயத்து குத்தகைக்கு விடலாம்.

ஆனல்—

(a) எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அச்சொத்து ஷெ பஞ்சாயத்தினிடம் சங்கிரமிக்கும்படி செய்யப்பட்டதோ அந்த நிபந்தனைகளுக்கு விரோதமாகவேனும்.

(b) இன்ஸ்பெக்டருடைய முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் பன்னிரெண்டு மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு கால அளவுக்கேனும் குத்தகை கொடுக்கலாகாது;

மேலும், இதன் பொருட்டு இன்ஸ்பெக்டருடைய அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல், சுண்ணம்பு, செங்கல், மரம், மண் அல்லது வேறு யாதொரு பொருளை கொண்டு யாதொரு கட்டடம் அல்லது கட்டுக்கோப்பு ஏற்படுத்திக்கொள்ளக் குத்தகைதாரருக்கு அனுமதி கொடுக்கப்பட்டால் அத்தகைய எந்தக் குத்தகையும் செல்லாது.

(2) குத்தகைப் பத்திரமானது இவ்விதிகளுடன் சேர்க்கப்பட்டிருக்கிற III-ம் ஷெட்யூலில் கண்ட III (a) நமூனைப்படி இருக்கவேண்டும்; ஆனல் சந்தர்ப்பத்திற்கு வேண்டியிருக்கிறபடி அதில் மாறுதல்கள் செய்துகொள்ளலாம்.

6. (1) பாட்டை ஓரங்களையும் தெரு ஓரங்களையும் குத்தகைக்கு விடுவது.— யாதொரு பஞ்சாயத்தினிடம் சங்கிரமித்துள்ள பாட்டை ஓரங்களையும் தெரு ஓரங்களையும் குத்தகைக்கு விடுவதானால், அடியிற்கண்ட வரையறைகளுக்கும் மேல் விசாரணைக்கும் உட்பட்டு அவ்வாறு விடவேண்டும்:—

(i) குத்தகைக்காக விண்ணப்பம் செய்து கொள்ளுகிற ஒவ்வொருவரும், பிரஸ்தாப நிலம் எவ்வாறு உபயோகிக்கப் படும் என்பதைப் பற்றியும், இன்னகால அளவுக்காக குத்தகை வேண்டியிருக்கிறதென்பதைப் பற்றியுமான, தகவல் தெரிவிக்க வேண்டுமென ஒவ்வொரு பஞ்சாயத்தும் அவரைக் கேட்கவேண்டும். அதன் பேரில் ஏதேனும் கட்டுக்கோப்பு கட்டுவதற்கு உத்தேசிக்கப் பட்டால், அவ்வாறு கட்டுவதில் உபயோகிக்கப் படப்போகும் பொருள்களைப் பற்றிய தகவலும் தெரிவிக்கப்பட வேண்டும்.

(ii) பனையோலை, தென்னையோலை, மூங்கில், இதர பாய்ப் பொருள் அல்லது கோணித்துணி முதலியவை போன்ற, அல்லது அன்றுடம் எடுத்து விடக்கூடிய தன்மை வாய்ந்த தற்காலிகமான பொருள்களைக்கொண்டு ஷை கட்டுக்கோபபு கட்டப்படுவதாயிருந்து குத்தகையின் கால அளவு பன்னிரெண்டு மாதங்களுக்கு மேற்படாவிட்டால் ஷை பஞ்சாயத்து குத்தகை கொடுக்கலாம். குத்தகைக்கும் முன்னதாகக் கட்டணம் ஒன்று விதித்து வாங்கப்பட வேண்டும்.

(iii) (ii) இனத்தில் சொல்லப்பட்டிருப்பவை யல்லாத வேறு பொருள்களைக் கொண்டு கட்டப்படுகிற ஒரு கட்டுக்கோப்புக்கான அல்லது பன்னிரெண்டு மாதங்களுக்குமேற்பட்ட கால அளவுக்கான குத்தகையை, கலெக்டருடைய அங்கீகாரத்தைப் முன்னதாக பெற்றுக்கொள்ளாமல், யாதொரு பஞ்சாயத்து கொடுக்கக்கூடாது கலெக்டரானவர் அவ்வாறு அங்கீகாரம் அளிக்கையில் தாம் அவசியம் என்று கருதக்கூடிய எந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்படி பஞ்சாயத்து குத்தகை கொடுக்கலாமோ அந்த நிபந்தனைகளை ஏற்படுத்தலாம். மேற்படி பஞ்சாயத்து அந்தக் குத்தகையைக் கொடுப்பதற்கு முன் அதில் அங் நிபந்தனைகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். மேற்படி குத்தகை அமுலிலிருக்கிற வரையில் குத்தகைத் தொகையை மேற்படி பஞ்சாயத்துக்கு முன்னதாகச் செலுத்தி விடவேண்டுமென்றும், அந்தத் தொகை செலுத்தப்படா விட்டால் குத்தகை ரத்துச் செய்யப்படுவதற்கு உள்ளாகும் என்றும் ஒவ்வொரு விஷயத்திலும் வெளிப்படையாக நிபந்தனை ஏற்படுத்தவேண்டும்.

(iv) ஒரு தடவையில் மூன்று வருஷத்துக்கு மேற்பட்ட ஒரு கால அளவுக்காகச் சாதாரணமாய் குத்தகை கொடுக்கக்கூடாது. இவ்விதியின்படி கொடுக்கப்பட்ட குத்தகை. ஒன்றைப் புதிப்பிப்பதற்காக கலெக்டருடைய அங்கீகாரம் அவசியமாகமாட்டாது.

(v) நிலத்தின் பேரில் எழுப்பியுள்ள யாதொரு கட்டுக்கோப்பினை பொது நன்மையை முன்னிட்டு, எடுத்துவிடுவது அவசியமென்று மேற்படி பஞ்சாயத்தாவது, கலெக்டராவது, அபிப்பிராயப்பட்டால், குத்தகைதாரருக்கு நஷ்டஈடு கொடுக்காமலேயே குத்தகைபின் கால அளவுக்குள் எப்பொழுதேனும் அக்குத்தகை இறுதி செய்யப்படுவதற்கு உள்ளாகும் என்று (ii) அல்லது (iii) இனத்தின்படிக்கான குத்தகை ஒவ்வொன்றிலும் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருக்கவேண்டும்.

(vi) தெரு ஓரத்தையும் சாகுபடி செய்வதனிமித்தம் குத்தகைக்கு விடக்கூடாது.

(2) குத்தகைப் பத்திரமானது இவ்விதிகளுடன் சேர்க்கப் பட்டிருக்கிற III-ம் ஷெட்யூலில் கண்ட III (b) நமூனைப்படி இருக்கவேண்டும். ஆனல் சந்தர்ப்பத்திற்கு வேண்டியிருக்கிறபடி அதில் மாறுதல்கள் செய்துகொள்ளலாம்.

7. (1) உத்தேசமான ட்ரான்ஸ்பர்களையும் குத்தகைகளையும் பற்றிப் பிரசுரம் செய்வது: 1, 3, 4, 5, அல்லது 6-வது விதியின் கீழ்வரும் ட்ரான்ஸ்பர் அல்லது குத்தகை ஒவ்வொன்றின் விஷயத்திலும் மேற்படி பஞ்சாயத்து உத்தேசிக்கப்பட்ட டிரான்ஸ்பர் அல்லது குத்தகையைக் குறித்து நோட்டிஸ் ஒன்றை பிரசித்தம் செய்யவேண்டும்; ட்ரான்ஸ்பர் செய்யப்படபோகும் அல்லது குத்தகைக்கு விடப்போகும் சொத்துபற்றிய முழுவிவரங்களும் யாருக்கு ட்ரான்ஸ்பர் செய்ய அல்லது குத்தகைக்கு விட உத்தேசித்திருக்கிறதோ அவருடைய பெயரும், ட்ரான்ஸ்பருக்கான ஐவேஜுூம், அல்லது குத்தகையின்படி ஒதுக்கி வைக்கப்பட்ட வாரமும், மேற்படி நோட்டிஸில் கண்டிருக்கவேண்டும். மேற்படி நோட்டிஸானது.—

(a) மேற்படி ட்ரான்ஸ்பருக்கான ஐவேஜு 1,000 ரூபாய்க்கு மேற்பட்டாலும் மேற்படி குத்தகையின் பிரகாரம் ஒத்திவைக்கப்பட்ட வாரம் வருஷமொன்றுக்கு 200 ரூபாய்க்கு மேற்பட்டாலும், பிரஸ்தாப ஜில்லா கெஜட்டிலும்.

(b) (i) மேற்படி பஞ்சாயத்து, கலெக்டர், ரெவின்யு டிவிஷனல் ஆபீஸர் ஆகிய இவர்களின் ஆபீஸிலும்.

(ii) தாலுக்கா ஆபீஸிலும்.

(iii) பிரஸ்தாப சொத்து இருக்கிற கிராமத்தைச்சேர்ந்த கிராமச்சாவடியிலும்.

(iv) ட்ரான்ஸ்பர் செய்யப்படப்போகும் அல்லது குத்தகைக்கு விட இருக்கிற சொத்தின் பேரிலும் முதன்மையான ஓரிடத்திலே ஒட்டுவது மூலமாகவும் பிரசித்தம் செய்யப்பட வேண்டும்.

(2) பகிரங்க ஏலத்தின் மூலமாக அத்தகைய ட்ரான்ஸ்பர் செய்யப்படுகிற அல்லது குத்தகை விடப்படுகிற ஒவ்வொரு.விஷயத்திலும் ட்ரான்ஸ்பர் செய்யப்படபோகும் அல்லது குத்தகைக்குவிட இருக்கிற சொத்தின் முழுவிவரங்களும் கண்டுள்ள நோட்டிஸ் ஒன்றை —

(a) மேற்படி ட்ரான்ஸ் பருக்கானஜ வேஜு 1,000 ரூபாய்க்கு மேற்பட்டாலும் மேற்படி குத்தகையின் பிரகாரம் ஒதுக்கி வைக்கப்பட்ட வாரம் வருஷம் ஒன்றுக்கு 200 ரூபாய்க்கு மேற்பட்டாலும் பிரஸ்தாப ஜில்லா கெஜட்டிலும் மேற்படி பஞ்சாயத்தின் அதிகார வரம்புக்குள் வழங்கிவருகிற ஒன்று அல்லது இரண்டு முதன்மையான ஸ்தல செய்தித்தாள்களிலும்.

(b) (1) உபவிதியைச் சேர்ந்த (b) பகுதியில் குறிப்பிட்டுள்ள விதமாகவும்.

(c) தகுந்த இடங்களில் தண்டோரா போட்டும் பிரசித்தம் செய்யவேண்டும்.

(3) பிரதம குத்தகைதாரர் தமது குத்தகையின் ஷரத்துக்களை நிறைவேற்றத் தவறிப்போனது காரணமாக ஒருநிதி வருஷத்தின்போது கொடுக்கப்பட்ட குத்தகைகளின் விஷயத்தில், (1), (2) உபவிதிகளில் சொல்லியிருக்கிற பிரகாரம் ஜில்லா கெஜட்டில் பிரசுரிப்பது அவசியமில்லையென மேற்படி பஞ்சாயத்து தள்ளிவிடலாம்.

8. ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவர் அல்லது குத்தகைக்காரர் அரசாங்கத்தாருக்கு தீர்வை, நிலவரி, பேஷ்கஷ் அல்லது க்விட்-ரென்ட் செலுத்தவேண்டு மென்னும் நிபந்தனைக்கு ட்ரான்ஸ்பர்களும் குத்தகைகளும் உட்பட்டவையாகுமென்று.— (1) இவ் விதியைச் சேர்ந்த (3), (4) உப-விதிகளின் கீழ் வருகிற விஷயங்களில் தவிர மற்ற விஷயங்களில் மேற்படி பஞ்சாயத்தினல் செய்யப்பட்ட அல்லது விடப்பட்ட யாதொரு ஸ்தாவரசொத்தின் ட்ரான்ஸ்பர் அல்லது குத்தகை எதுவும் மேற்படி சொத்து விஷயமாய்ச் செலுத்தப்படதக்கதென்று கலெக்டர் நிர்ணயிக்கக்கூடிய தீர்வை, நிலவரி, பேஷ்கஷ் அல்லது க்விட்-ரெண்டை ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவர் அல்லது குத்தகைதாரர் செலுத்துவதற்கு உட்பட்டவராயிருக்க வேண்டும் மென்பதும், ஊழிய முதலிய நிபந்தனைகளினின்றும் நிவாரணை செய்யப்பட்ட இனும் நிலங்களுக்குரிய க்விட் ரென்ட் விஷயமாகவும் தனிப்பட்ட முறையில் பேரம் பேசி மேற்படி பஞ்சாயத்தினல் அடையப்பட்ட சொந்த கிராமங்களிலுள்ள நிலங்களுக்குறிய பேஷ்கஷ விஷயமாகவும் அன்றி மற்றபடி மேற்படி தீர்வை, நிலவரி, பேஷ்கஷ் அல்லது க்விட்-ரென்ட் புனராலோசனை செய்து மாற்றுகிற காலத்திலே அமுலிலிருக்கிற விதிகளின் பிரகாரம் அப்போதைக்கப்போது அவ்வாறு புனராலோசனை செய்து மாற்றப்படுவதற்கு உட்பட்ட தாகுமென்பதும் மேற்படி ட்ரான்ஸ்பரின் அல்லது குத்தகையின் நிபந்தனையாயிருந்தாலன்றி அது செல்லாது.

(2) விற்பனை அல்லது பரிவர்த்தனை மூலமாக ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டிராத அல்லது மற்றபடி நிரந்தரமாக பராதீனம் செய்யப்பட்டிராத நிலங்களின் பேரில் விதிக்கப்படத் தக்க தீர்வை, நிலவரி, பேஷ்கஷ் அல்லது க்விட்-ரென்டை பஞ்சாயத்தினிடமிருந்து வசூலிக்க அரசாங்கத்தாருக்குள்ள உரிமைக்கு இவ்விதியில் கண்டதில் எதனுலும் பாதகம் உண்டாக மாட்டாது.

(3) ட்ரான்ஸ்பருக்குப் பிறகு மேற்படி நிலத்தின்மீது விதிக்கப்படத் தக்க தீர்வை, நிலவரி, பேஷ்கஷ் அல்லது குவிட்-ரென்ட் ஏற்கெனவே பஞ்சாயத்தினல் செலுத்தப்பட்டுவந்து மேற்படி நிலம் விற்பனை அல்லது பரிவர்த்தனை மூலமாக ட்ரான்ஸ்பர் செய்யப்படாதிருக்கிற அல்லது நிரந்தரமாகக் குத்தகைக்கு விடப்படாதிருக்கிற அல்லது மற்றபடி நிரந்தரமாகப் பராதீனம் செய்யப்படாதிருக்கிற விஷயங்களில் மேற்படி பஞ்சாயத்தே அந்தத் தீர்வை, நிலவரி, பேஷ்கஷ் அல்லது குவிட்-ரென்டைத் தொடர்ந்து செலுத்தி வர வேண்டும். ட்ரான்ஸ்பர் செய்யப் பெற்றவர்மீது இந்தப் பொறுப்பு சுமத்தப்படலாகாது.

(4) 6-வது விதியின் கீழ் வருகிற குத்தகைகளின் விஷயத்திலே, மேற்படி பஞ்சாயத்து அத்தகைய குத்தகைகள் பற்றிய விவரக் கணக்கு ஒன்றைக் கலெக்டருக்கு அனுப்ப வேண்டும். அதன் பேரில் கலெக்டரானவர் அந்த விவரக் கணக்கிலுள்ள தகவலை ஆதாரமாக

கொண்டு தீர்வை அல்லது நிலவரியை நிச்சயித்து, அதை மேற்படி பஞ்சாயத்தினிடமிருந்து வசூலிக்க வேண்டும்.

ஷெட்யூல் I [2] விதியைப் பார்க்கவும்

நமுனு I (a) விற்பனை மூலமான ட்ரான்ஸ்பர்கள்
,, (b) குத்தகை ,, ,,
, (c) கொதவை ,, ,,
,, (d) தானம் ,, ,,

ஷெட்யூல் II [2] [ii], 3 [2] விதிகளைப் பார்க்கவும்

நமுனு II (a) விற்பனை மூலமாக ட்டான்ஸ்பர்கள்
,, (b) பரிவர்தனை ,, ,,
,, (c) கொதுவை ,, ,,
,, (d) தானம் ,, ,,

நமுனு III (a) குத்தகை மூலமாக ட்ரான்ஸ்பர்கள் [4 (2), 5 (2)] விதிகளைப் பார்க்கவும்.
(b) குத்தகை மூலமாக ட்ரான்ஸ்பர்கள் [6 (2)] விதியைப் பார்க்கவும்.

35. அவசியமாகவாகிலும் தகுதியாகவாகிலும் யுக்தமாகவாகிலும் :—இந்தச் சட்டத்தில் வெளிப்படையாகச் சொல்லாவிடினும், ஒரு காரியமானது பஞ்சாயத்துப் போர்டின் அலுவலுக்கு அவசியமானதாகவும், தகுதியானதாகவும், யுக்தமானதாகவும் இருக்கும் பட்சத்தில் அவைகளையும் பஞ்சாயத்து செய்யலாம். [ஜெஸூர் டிஸ்டிரிக்ட் போர்டு எ சுரேந்திரா **A. I R.** 1937 C. 127]

36. விளம்பரம் அல்லது நோட்டிஸைப் பிரசித்தம் செய்யும் விதம். (I-49) விதிகள் செக்ஷன் 178 (2) (XLVII) படிக்கு.

1. மேற்படி சட்டத்தின் பிரகாரம் அரசாங்கத்தாராவது இன்ஸ்பெக்டராவது பிறப்பிக்கும் ஒவ்வொரு விளம்பரத்தையும் போர்ட் ஸெய்ண்ட் ஜார்ஜ் கெஜெட்டில் பிரசித்தம் செய்ய வேண்டும்.

2. மேற்படி சட்டத்திலாவது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளிலாவது வேறே விதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, அரசாங்கத்தாராவது இன்ஸ்பெக்டராவது பிறப்பித்த ஒரு விளம்பரமாயிராத மேற்படி சட்டத்தின் பிரகாரம் பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு விளம்பரத்தையும் அவ்விளம்பரம் பிரயோகப்படுகிற ஜில்லாவின் அரசாங்க கெஜெட்டில் இங்கிலீஷிலும் அந்த ஜில்லாவின் பிரதான பாஷையிலும் பிரசித்தம் செய்யவேண்டும்.

ஆனால், அரசாங்கத்தார் அத்தகைய யாதொரு விளம்பரம்.

(i) மேற்படி கெஜெட்டில் இங்கிலிஷிலோ பிரஸ்தாப ஜில்லாவின் பிரதான பாஷையிலோ பிரசித்தம் செய்யப்படவேண்டு மென்றுவது.

(ii) மேற்படி கெஜெட்டில் பிரசித்தம் செய்யப்படுவதற்குப் பதிலாக தாங்கள் குறிப்பிடுகிற வேறு யாதொரு விதமாகப் பிரசித்தம் செய்யப்படவேண்டு மென்றுவது.
கட்டளையிட அதிகாரமுள்ளவர்களாவார்கள்.

3. ஒரு பஞ்சாயத்து ஓரிடத்தை ஏதாகிலும் காரியத்துக்காக ஒதுக்கி வைக்கும் போதெல்லாம் அல்லது ஓரிடத்தில் யாதொன்றைச் செய்யக்கூடாது என்று தடுக்கும்போதெல்லாம், நிர்வாக அதிகாரியானவர், அவ்விடம் எதற்காக ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கிறது என்பதையாவது அவ்விடத்தில் தடுக்கப்பட்டிருக்கிற செயலைக் குறிப்பிட்டாவது பிரஸ்தாப பிரதேசத்தின் பிரதான பாஷையில் நோட்டிஸ் ஒன்றை அவ்விடத்தில் ஒட்டிவைக்கும்படிச் செய்ய வேண்டும்.

4. மேற்படி சட்டத்திலாவது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளிலாவது வேறே விதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, மேற்படி சட்டத்தின் பிரகாரம் பொது ஜனங்களுக்கான ஒவ்வொரு நோட்டிஸையும்.

(a) (i) பஞ்சாயத்து ஆபிஸிலும்.

(ii) பிரஸ்தாப கிராமத்தில் சாவடி அல்லது சாவடிகள் எவையேனு மிருந்தால் அவற்றிலும். எல்லாருக்கும் தெரியும் படியான ஓரிடத்தில் அதன் நகலொன்றை ஒட்டிவைப்பது மூலமாகவும்.

(b) அந்தக் கிராமத்தில் தண்டோரா போடுவது மூலமாகவும்.
பிரசித்தம் செய்ய வேண்டும்.

பஞ்சாயத்துகளை தரம் பிரித்ததை மாற்றுவது

9. (1) பிரிவு 3 உபபிரிவு (1)ன் கீழ் விளம்பரம் செய்ததில் கண்ட ஷரத்துகள் அரசாங்கத்தார் அபிப்ராயத்தில் ஒரு பட்டணத்தில் அல்லது கிராமத்தில் இல்லா விட்டால் அந்த பஞ்சாயத்தின் தரத்தை அரசாங்கத்தார் மாற்றிவிடலாம்,

(2) இப் பிரிவின்படி அரசாங்கத்தார் செய்கிற யாதொரு தீர்ப்பு எந்த நீதி மன்றத்திலும் ஆட்சேபிக்கப் படுவதற்கு உள்ளாகமாட்டாது.

குறிப்பு

தரம் பிரிப்பதற்கு முந்தி அரசாங்கம் சமபந்தப்பட்ட பஞ்சாயத்துகளு யாரேனும் ஆக்ஷேபம் உண்டா என்று எழுத்து மூலமாக கேழ்க்கவேண்டியதும் இல்லை.

ஒரு பஞ்சாயத்தில் இருக்க வேண்டிய அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கை

10. (1) யாதொரு பஞ்சாயத்தில் இருக்க வேண்டிய அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையை ஜனத்தொகையை அனுசரித்து நிர்ணயிக்கப் படக்கூடிய பரிமாணத்தின் பிரகாரம் இன்ஸ்பெக்டர் அறிக்கை யிடவேண்டும்.

(2) இன்ஸ்பெக்டரானவர் அப்போதைக்கப்போது விளம்பரம் பிரகரித்து அதன் மூலமாக, (1) உட்பிரிவின்படி அறிக்கை யிடப்பட்ட யாதொரு பஞ்சாயத்துக்குரிய அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையை மாற்றலாம்.

(3) (1) உட்பிரிவின்படி அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கையாவது, (2) உட்பிரிவின்படிக்கான விளம்பரத்தினுல் மாற்றப்பட்ட எண்ணிக்கையாவது ஐந்துக்குக் குறையாமல் அல்லது பதினைந்துக்கு மேற்படாமலிருக்க வேண்டும்.

ஆனுல் (1) உபபிரிவில் செய்த அறிக்கையில் உள்ள எண்ணிக்கையை அல்லது (2) உபபிரிவின்படி மாற்றப் பட்டதை, பிரிவு 15 உபபிரிவு (4)ன் படிக்கு ஒரு அங்கத்தினரை சேர்த்துக் கொண்டால் அந்த எண்ணிக்கையில் ஒன்று அதிகமாக சேர்த்து கொள்ள வேண்டும்.

குறிப்பு

ஒரு பஞ்சாயத்துக்கு பதினைந்து மெம்பர்களுக்கு மேல் இருக்கக்கூடாது. குறைந்த பட்சம் 5 மெம்பர்களாவது இருக்கவேண்டும். பி. 15 (4) படிக்கு ஒரு பஞ்சாயத்தில் ஒரு பெண் மெம்பரும் இல்லாத சமயத்தில் ஓட்டர்கள் ஜாபிதாவில் உள்ள ஒரு ஸ்திரீயை மெம்பராக சேர்த்து கொள்ளலாம். பி. 15 (4) பார்க்கவும்.

மெம்பர்களின் எண்ணிக்கை விதி

ஜனத்தொகை					அங்கத்தினர்கள்
20,000	த்துக்கு	மேல்			15
20,000	,,	கீழ்	15,000	மேல்	14
15,000	,,	,,	12,000	,,	13
12,000	,,	,,	10,000	,,	12
10,000	,,	,,	7,500	,,	10
7,500	,,	,,	5,000	,,	8
5,000	,,	,,	2,500	,,	7
2,500	,,	,,	1,000	,,	6
1,000	,,	,,			5

பஞ்சாயத்து யூனியன்களுக்கு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் அமைப்பதும், அவை சட்டப்படிச் சேர்ந்த சபைகளாயிருப்பதும்

11. (1) இது விஷயமாய் அரசாங்கத்தார் பிறப்பிக்கும் விளம்பரத்தில் குறிப்பிடக் கூடிய தேதியிலிருந்து ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் ஒன்றை அமைக்க வேண்டும்.

(2) இச் சட்டத்தின் ஷரத்துக்களுக்குட்பட்டு, பஞ்சாயத்து யூனியன் நிர்வாகம் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலிடம் நிலைபெறும்; இச்சட்டத்தினால் அல்லது இச் சட்டப்படி அல்லது வேறு யாதொரு சட்டத்தினால் அல்லது அச் சட்டப்படி அதன் அக்கிராசனருக்கு, அல்லது கமிஷனருக்கு, அல்லது பஞ்சாயத்துக்கு, அல்லது வேறு யாதொரு அதிகாரிக்கு வெளிப்படையாக வகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிற அலுவல்களைச் செய்வதற்கு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு உரிமையில்லை.

ஆனால், பஞ்சாயத்து யூனியன் பகுதி எதிலும் பஞ்சாயத்து எதுவும் இரா விட்டாலும், அவ்வாறு இராதவரையிலும் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அந்த பஞ்சாயத்தின் வரி விதிப்பு அதிகாரம், உட்படசகல அதிகாரங்களைச் செலுத்துவதுடன், அதன் கடமைகளைச் செய்யவும், அலுவல்களை நிறைவேற்றவும், வரவுகளைப் பெற்றுக் கொள்ளவும் செலவுகளைச் செய்யவும் வேண்டும்; பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அக்கிராசனரும், கமிஷனரும், பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியின் அத்தகைய பகுதியில் முறையே தலைவருக்குள்ள, நிர்வாக அதிகாரிக்குள்ள அதிகாரங்களைச் செலுத்தவும், கடமைகளைச் செய்யவும், அலுவல்களை நிறைவேற்றவும் வேண்டும்.

(3) ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலும் 7-வது பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிட்டிருக்கிற பஞ்சாயத்து யூனியனின் பெயரால் சட்டப் படிக்குண்டான ஒரு சபையாயிருக்க வேண்டும். மேலும் அது இடைவிடாமல் ஒன்றின் பின் ஒன்றாய் வந்து கொண்டும், பொதுவான முத்திரையுடையதாயும் இருக்க வேண்டும்; அல்லாமலும் இச் சட்டத்தினாலாவது, வேறே யாதொரு சட்டத்தினாலாவது, அதன்படியாவது ஏற்படுத்தப்பட்ட யாதொரு நிர்ப்பந்தம் அல்லது வரையறைக்குட்பட்டு, அது சட்டப்படிக்கான அதனுடைய பெயரால் வியாஜ்ஜியம் தொடரவும் அல்லது பிறரால் வியாஜ்ஜியம் தொடரப்பெறவும், ஜங்கமப்பொருளை, அல்லது ஸ்தாவரப் பொருளை அடையவும், வைத்திருக்கவும், மாற்றவும், ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவும், அவை எந்தக் காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றவோ, அந்தக் காரியங்களுக்கு அவசியமாகவாகிலும் தகுதியாகவாகிலும், யுக்தமாகவாகிலும் இருக்கிற சகல விஷயங்களையும் செய்யவும் தகுதியுள்ளதாகும்.

குறிப்பு

பொது.—இது பிரிவு 8-யை போன்றது (37 - 54 பக்கங்களை பார்க்கவும்)

பிரிவு 8-ல் "பஞ்சாயத்துக்களையும்" "நிர்வாக அதிகாரிகளையும்" "தலைவர்களையும்" குறித்து சொல்லி யிருக்கிறது. இந்த 11-வது பிரிவில் "பஞ்சாயத்துக்கு" பதிலாக "பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலையும்", "நிர்வாக அதிகாரிக்கு" பதிலாக "கமிஷனரையும்" "தலைவருக்கு" பதிலாக "அக்கிராசனரையும்" சொல்லி யிருக்கிறது. ஆகையால் அந்த 8-வது பிரிவின் குறிப்பை இந்த 11-வது பிரிவின் குறிப்பாக வாசகர்கள் ஏத்துக்கொண்டு படிக்கும்படிக்கு வேண்டிக் கொள்கிறோம்.

பஞ்சாயத்து யூனியன்களை 7-ம் பிரிவின்படி செய்யப்படும். அவைகளை பரிபாலனை செய்யும் ஆட்சிகள்தான் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள். இவைகளுக்கு எத்தனை அங்கத்தினர்கள் யிருக்க வேண்டுமென்று ஒரு நிர்ணயம் கிடையாது. பட்டணம் பஞ்சாயத்துகளுக்கு நிர்வாக அதிகாரியுள்ள மாதிரி, பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கு பிரிவுகள் 44, 45 படிக்கு கமிஷனர்கள் இருப்பார்கள். இவர்கள் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் உத்தரவின்படிக்கு நடந்துகொள்ள வேண்டும். [பிரிவு 44 (5) பார்க்கவும்.]

பி. 11 (2), ஷரத்து.—பஞ்சாயத்து எதுவும் இராவிட்டால்.—இதின் கருத்து என்ன வென்றால் எந்த பஞ்சாயத்து இல்லாத கிராமமும் அந்த கிராமத்தாரும் வரி முதலியவைகளைக் கொடுப்பதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. ஆகையால் ஒவ்வொரு கிராமமும் தவருமல் பஞ்சாயத்தை வைத்துக்கொள்ள வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் :—அரசாங்கம் பிரிவு 7-ன்படிக்கு முதலில் எந்த பிர தேசத்தில் சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்புச் சேவை திட்டம் உள்ளதோ, அதை **'பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதி'** என்று அறிவிக்கும். அதுவே பஞ்சாயத்து யூனியன் ஆகும். அந்த பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்தை ஆளும் தல ஆட்சிக்கு **'பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்'** என்று பெயர். இது ஏறக்குறைய டிஸ்டிரிக்ட் (ஜில்லா) போர்டுகள் நடத்திவந்த காரியங்களை நடத்திவரும். இந்த புத்தகத்தின் 5-வது பக்கத்தில் 16-ம் ஐடத்தில் அச்சிட்டுள்ள ஹேத்துகள் நோக்கங்களின் 2-வது பாராவை பார்க்கவும். பிரிவு 65ல் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் செய்யவேண்டிய கடமைகளை தெரியப்படுத்தி யிருக்கிறது.

இவைகளுக்கு பிரிவு 66-படிக்கு 'சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு சேவை திட்டங்களை' நிறைவேற்றுவதை ஒப்படைக்கப்படும். அப்போது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் அதிகமாக செய்யக்கூடிய காரியங்களை இந்த சட்டத்தில் விசதமாக தெரிவிக் கப்படவில்லை. ஆனல் அதை ஆந்திர பிரதேச அரசாங்க மசோதா 1958 ஷூத்திய பில் 47-ல், 2-ம் ஷெட்யூளில் 1958ஷூ டிசம்பர் 2-ந்தேதியில் பிரசித்தம் செய்தபடிக்கு அடியில் கண்ட காரியங்களையும் செய்யவேண்டும்.

இச் சட்டத்தின் பீடிகையின் III-வது பாராவில் சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்புச் சேவை திட்டம் பற்றி 17, 18, 19 பக்கங்களிலுள்ள குறிப்பை பார்க்கவும்

சமுதாய அபிவிருத்திற்கு இருக்க வேண்டிய பொருளடக்கம்

		பக்கம்			பக்கம்
i.	சமுதாய அபிவிருத்தி ...	57	viii.	கூட்டுறவு ...	59
ii.	விவசாயம் (நிலசாகுபடி) ...	,,	ix.	குடிசை தொழில்கள் ...	,,
iii.	கால் நடை பண்ணைகள், மீன் பண்ணைகள் ...	58	x.	ஸ்திரீகளின் நலம் ...	60
iv.	ஆரோக்யமும், நாட்டுபுறங் களின் கலாசாரமும் ...	,,	xi.	சமூஹ நலம் ...	,,
v.	படிப்பு ...	59	xii.	அவசர உதவி ...	,,
vi.	சமூக படிப்பு ...	,,	xiii.	கணக்கு புள்ளி விவரங்கள் ...	,,
vii.	போக்கு வரவு சாதனைகள் ...	,,	xiv.	தன் நம்பிக்கை திட்டம் ...	,,
			xv.	தர்ம சொத்துகள் ...	,,

I. சமுதாய அபிவிருத்தி

பஞ்சாயத்துகளுடையவும், கூட்டுறவு சங்கங்களுடையவும் தானுகவே உண்டான கழகங்கள் உடையவும், இன்னும் பொது ஜனங்களுடையவும் உதவியின் மூலமாகவும் "சமுதாய அபிவிருத்தி" சம்பந்தமான மொத்த அலுவல்களையும் நிறை வேற்றுவது.

II. விவசாயம் (நிலசாகுபடி)

சாகுபடியை வளர்த்துவதற்கு அவசரமான வேலைகளை செய்வது அதில் முக்கியமாக.—

1. மேன்மை செய்யப்பட்ட விதைகளை பெருக்குவதும், வேண்டியவர்களுக்கு கொடுப்பதும்.
2. ரசாயன எருக்களை கொடுப்பது
3. மேல் ரகமான முறைகளையும், வகைகளையும், வழக்கங்களையும், இன்னும் மேல் ரகமான பயிர் செய்யும் கருவிகளையும் மக்களுக்கு அறிய செய்வது
4. பச்சை எரு தழைகளை மக்கள் போதுமான வரையில் அடைவதும், இன்னும் பிழக்கடை எருவுகளை தயார் செய்வதும்
5. பழம், காய்கறி தோட்டங்களை வைப்பதற்கு உதவி செய்வது
6. பூமியின் மண்ணை மாற்றுவதும், பூசாரத்தை காப்பாற்றுவதும்
7. சாகுபடியின் அபிவிருத்திக்காக கடன் கொடுப்பது

8. செடிகளை (மொக்கைகளை) காப்பாற்றும் வழிகளில் பிரசாரம் செய்வதும் உதவி செய்வதும்
9. நேராக காணுவதற்கு நிலங்களில் மேன்மையான பயிர்களை செய்து காட்டுவதும் பயிர் தொழிலில் மேலான வழிகளை தெரியப்படுத்துவதும்
10. பழைய கிணறுகளை புதுப்பித்தும், புதிய கிணறுகளை தோண்டியும், சொந்த குட்டைகளை மராமத்து செய்தும், புதியதாக தோண்டியும், இன்னும் சிறிய தண்ணீர் பாய்ச்சல் சர்பரா கால்வாய்களை அரசாங்கத்தாரின் உதவியால் நல்ல நிலையில் வைத்து அவைகளின் மூலம் அதிகமாக பூமியை நீர் பாய்ச்சலின் கீழ் கொண்டு வருவது
11. சாகுபடிக்காக அதிக மின்சார சக்தியை உபயோகப்படுத்துவது
12. கீழ் நீர் தண்ணீர் உள்ள இடங்களில் கிணறுகளை தோண்டி பில்டர் பாயன்டுகள் (Filter points) வழியாகவும் குழாய்கள் உள்ள கிணறுகள் மூலமாகவும் மேலுக்கு கொண்டு வந்து பயிருகளுக்கு உபயோகப்படுத்துவது
13. செடிகளை நடுவது
14. கிராமக்காடுகளை வளரச் செய்வது

III. கால்நடைப்பண்ணைகள் (அதிகமாகவும் மேன்மையாகவும் வளர்ப்பது) இன்னும் மீன் பண்ணைகள்.

1. உள்நாட்டு கால் நடைகளை மேன்மையாக்குவதற்காக மேல்தரமானதும் பசுக்களின்மேல் பாய்ந்து உற்பத்தி செய்யக்கூடிய காளை மாடுகளை கொண்டு வருவது.
2. செயற்கை கர்ப்பங்களை காளைகளின் இந்திரியங்களினுல் ஏற்படுத்த இடங்களை அமைப்பதும், முதற்சிகிச்சைக்காக இடங்களை ஏற்படுத்துவதும், இன்னும் சிறிய கால்நடை வைத்தியசாலைகளை வைப்பதும்.
3 மேல்தரமான பசு, எருமை, செம்மறி ஆடு, வெள்ளாடு, பன்றி, கோழி, வாத்து பண்ணைகளை உண்டாக்கவும், மேன்மை செய்யவும், புகுத்தவும்.
4. தொத்து நோய்களுக்கு அடிக்கடிக்கு சிகிச்சை செய்வதால் அவைகளை தடைபடுத்தவும்.
5. மேலான ஆடுமாடுகளின் தீவனத்தை புகுத்துவதும்.
6. பால், தயிர், வெண்ணை முதலியவைகளை அதிகப்படுத்துவதும்.
7. மேலான உழவுக்கும், அதிக பாலுக்கும் மேன்மையான கால் நடைகள் வேண்டியதை குறித்து மக்களுக்கு போதிப்பதும்.
8. மீன் பண்ணைகளை ஏற்படுத்துவது.

IV. ஆரோக்கியமும், நாட்டுபுறங்களின் சுகாதாரமும்.

1. இப்போது வைத்தியத்துக்காகவும் ஆரோக்கியத்துக்காகவும் இருக்கும் வைத்திய சுகாதார இலாக்காக்கள் ஜனங்களுக்கு அருகாமையில் இருக்க அதிகப்படுத்துவதும்.
2. ஆரம்ப ஆரோக்கிய இடங்களையும் பிரசவத்துக்கு தகுந்த இடங்களையும் ஏற்படுத்தி நடத்தி வருவதும்.
3. குடிக்க நல்ல ஜலங்கள் கிடைக்கும்படி உண்டாக்குவது.
4. அம்மை (டீகா) குத்துவதை ஸ்திரமாக ஏற்படுத்துவது
5. தொத்து நோய்களை தடுப்பது
6. கிராமங்களுக்கும் வீடுகளுக்கும் சாக்கடைகளை கட்டுவதும், அமிழ்க்கும் (Soaking) குட்டைகளை ஏற்படுத்துவது
7. சுப்ரமான கக்கூசுகளை உபயோகிக்க உதவுவதும், மலத்தை எருவாக உபயோகப்படுத்துவதும்
8. புகையில்லாத அடுப்புகளை கட்டி கொடுப்பதும்
9. அரசாங்க ஆஸ்பத்திரிகளின் வேலைகளை பார்வையிடுவது
10. ஆஸ்பத்திரிகளின் அபிவிருத்திக்காக மக்களை கலந்து கொள்ளும்படி செய்வது
11. தொத்து வியாதியுள்ள சமயங்களில் மக்களுடையவும் பஞ்சாயத்துக்களுடையவும் ஒத்துழைப்பைப் பெறுவது
12. சுத்து பக்கங்களில் சுகாதாரங்களை ஒழுங்காக வைத்துகொள்வது, மக்களுக்கு 1. பலம் (சக்தி) கொடுக்கும் உணவு 2. தாய் பிரசவம்-குழந்தை சுகம் 3. தொத்து வியாதிகள் 4. கற்பத் தடை முதலியவைகளை போதிப்பது.
13. தக்க ஜில்லா அதிகாரிகளின் ஆளுகைக்குள்பட்டு சுகாதாரத்தை பரவ செய்வது.

V. படிப்பு

ஆரம்ப கல்வியையும் ஆதார பள்ளிக்கூடங்களையும் காப்பாற்றுவதும், பரவ செய்வதும், அதில் முக்கியமாக

1. அரசாங்கத்தின் பாடசாலைகளையும், எடுத்துக் கொள்ளப்பட்ட உதவி-பாடசாலைகளையும், மேல் தரம் ஆரம்ப பாடசாலைகளை ஆளுகை செய்வதும்.
2. முதியோர் கல்வி, படிப்புகள் கலைகளையும் முதியோர்களின் படிப்பு சம்பந்தமான இல்லங்களையும் ஏற்படுத்துவது.
3. மக்களின் உதவியுடன் பள்ளிக்கூடங்களுக்கு யுள்ள இடங்களை அதிகப்படுத்துவது.
4. இப்போதுள்ள ஆரம்ப பாடசாலைகளை ஆதார பாடசாலைகளாக மாற்றுவது.
5. குழந்தைகள் 14-வயது அடையும் வரையில் அவர்களுக்கு படிப்பு புகட்ட வேண்டிய அக்கரை எடுத்து கொள்வது.

VI. சமூக படிப்பு

மக்கள் இடையே புது தோற்றத்தை உண்டாக்குவது, அவர்களை தன்னம்பிக்கை யுள்ளவர்களாகவும், கஷ்டத்தை ஏற்றி கொண்டு வேலை செய்கிறவர்களாகவும், சமூக வாழ்கைக்கு உதவுகிறவர்களாகவும் செய்வது முக்கியமாக.

1. செய்திகள், சமூக நிலயங்கள், கேளிகை இடங்களை ஏற்படுத்துவது.
2. இளைஞர் கழகங்களையும், பெண்கள் சபைகளையும், உழைப்பாலர் கிளப்புகள், முதலியவைகளை ஏற்படுத்துவது.
3. வாசக சாலைகளை ஏற்படுத்தி அவைகளை மக்கள் உபயோகிக்கும்படி செய்வது
4. பாது காப்புக்காக மக்களை தயாரிப்பது.
5. தேக வளர்ச்சியையும், கலை வளர்ச்சியையும் அதிகப்படுத்துவது.
6. சுயமாக உண்டாகும் சுகாதார குழுக்களை ஏற்படுத்துவது
7. கிராம சேவகர்களின் சேவையை கற்பிப்பதும் உபயோகப்படுத்தி கொள்வதும்.

VII. போக்குவரவு சாதனைகள்

1. கிராமங்களில் இடையே பாட்டைகளை ஏற்படுத்துவதும் காப்பாத்துவதும்
2. அதற்கு வேண்டிய உதவிகளை செய்வது.

VIII. கூட்டுறவு

பலவிதமான கூட்டுறவு சங்கங்களை ஜனநாயகத்துக்கு ஏற்றபடி பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த உண்டாக்குவதும் அதில் முக்கியமாக.

1. கூடியவரையில் அதிக சங்கியையுள்ள குடும்பங்களுக்கு உதவுகிறதற்கு கொடுக்கல் வாங்கல் சம்பந்தமானதும், தொழில் சம்பந்தமானதும், நீர் பாய்ச்சல் சம்பந்தமானதும், பயிர் சாகுபடி செய்யும் சம்பந்தமானதும், இன்னும் பல காரியங்களுக்கு சம்பந்தமானதுமான கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்துவது.
2. சிக்கனத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக சேமிப்பதையும் புகழ்ச்சி செய்வது.

IX. குடிசைத் தொழில்கள்.

அதிகமானதும் மேலானதுமான தொழில்களை செய்து நல்ல வாய்ப்புகளை உண்டாக்கவும் அதின் மூலமாக ஜீவனத்தின் நிலையை ஓசத்து வதற்காக குடிசை தொழிலையும், கிராமதொழிலையும் சிறு சிறு தொழில்களையும் அபிவிருத்தி செய்வது அதில் முக்கியமாக:—

1. உற்பத்தியும், பயிற்சியும் தரும் பள்ளிகளை ஏற்படுத்தி காப்பாற்றுவதும்.
2. வேலைக் காரருடையவும் தொழில் காரருடையவும் திறமையை விருத்தி செய்வது.
3. மேலான கருவிகளை உபயோகபடுத்தும்படி உதவி செய்வது.
4. காதி இன்னும் கிராம தொழில் கமிஷன் உடையவும் இன்னும் மொத்த இந்தியா போர்டுகளுடையவும் பண உதவி பெற்று நடத்தும் குடிசை தொழில்களையும் கிராம தொழில்களையும் சிறிய கை தொழில்களையும் நடத்தும் திட்டத்தை துவக்குவதும்.

பக்கம் 60-ல் பிரிவு – 12 (1) உப பிரிவில் உள்ள தேர்தலை குறித்த குறிப்புகளுக்காக பக்கங்கள் 85-1, 85-2 களில் உள்ள மதராஸ் 1960-ம் வருடத்திய 17-வது சட்டத்தை பார்க்கவும்.

X. ஸ்திரீகளின் நலம்

பெண்களுடையவும் பிள்ளைகளுடையவும் க்ஷேமத்திற்காக தனியாகயுள்ள திட்டங்களை அமுலு படுத்துவது முக்கியமாக தாய்-சேய் இல்லங்களையும், படிப்பு சம்பந்தமான ஆலயங்களையும், கைதொழில்-தையல் தொழில் அகங்களையும் ஏற்படுத்துவது

XI. சமூஹ நலம்

1. ஷெட்யூல் குலம், ஷெட்யூல் தொகைகளுடைய நலனுக்காக அரசாங்கம் உதவியால் ஏற்படுத்தப்பட்ட மாணவர்களின் (ஆஸ்டல்) இல்லங்களை ஆளுகை செய்வது
2. கிராம வீடுகளின் திட்டத்தை புகுத்துவது
3. நோயுள்ள பிச்சைகாரர்களை காப்பாற்றுவதும், நாடோடிகளாக திரிவதை கட்டுபடுத்துவதும்
4. சுயமாக உண்டான சமூக நல சபைகளை பலப்படுத்துவதும், அவைகளின் செயல்களை இணைப்பதும்
5. (லாகிரிவஸ்த்துக்களை) குடிப்பதை கூடாது என்று பிரசாரம் செய்வதும் அதை தடை செய்வதும்

XII. அவசர உதவி

நெருப்பு, வெள்ளம், தொத்து நோய் பரவியுள்ள ஆபத்துகளை தடை செய்வதற்கு சுயமாக உதவி செய்பவர்களிடம் கலந்து கொள்ள தேவை பொருள்களை அளித்தல்

XIII. கணக்கு புள்ளி விவரங்களை தயாரிப்பது

XIV. தன்னம்பிக்கை திட்டம்

உற்பத்தியை அதிகப்படுத்துவதும் ஜீவித நிலையை உயரும்படி செய்யவும், சுகாதாரத்தை வளர்க்கவும் மக்கள் சுகமாக வாழ தகுதியான திட்டங்களை வகுக்கவும்.

XV. தர்ம சொத்துக்கள்

தர்ம பொருள்களை பெற்றுக்கொண்டு அவைகளின் படிக்கு நடத்துவது

ஒரு பஞ்சாயத்து யூனியனின் கவுன்ஸிலில் இருக்கவேண்டிய அங்கத்தினர்களின் எண்ணிக்கை

12. (1) ஒரு பஞ்சாயத்து யூனியனில் இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஒவ்வொரு பஞ்சாயத்தும் அதன் அங்கத்தினர்களில் ஒருவரை பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அங்கத்தினராக பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு நிர்ணயிக்கப்பட்ட விதிகள் படிக்கு தேர்ந்தெடுக்கவேண்டும்.

ஆனால், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களில் ஸ்திரீகள் அல்லது ஷெட்யூல்டு ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் எவரும் இராவிட்டால், அல்லது அத்தகைய ஸ்திரீகளின் அல்லது ஷெட்யூல்டு ஜாதியினரின் எண்ணிக்கை மூன்றுக்குக் குறைவாயிருந்தால் பஞ்சாயத் யூனியன் கவுன்ஸிலானது அந்தக் கவுன்ஸிலில் மூன்று ஸ்திரீகள் அல்லது ஷெட்யூல்டு ஜாதியினர் மூவருக்குக் குறையாத அளவில் இருக்கும்படிப் பார்த்துக்கொள்ளுவதற்காக அவசியமான எண்ணிக்கையுள்ள ஸ்திரீகளை அல்லது ஷெல்யூல்டு ஜாதியினரை அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளலாம்.

(2) யாதொரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதி முழுவதும் அல்லது அதன் யாதொரு பகுதி அடங்குகிற தேர்தல் தொகுதியைப் பிரதி நிதிக்கிற ராஜ்யச் சட்டசபை அங்கத்தினர் ஒருவர் தமது உத்தியோக முறைமையிலும், இன்னும் ராஜ்ய சட்டசபை கவுன்சில் மெம்பராக தமது உத்யோக முறைமையிலும் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அங்கத்தினர்களாவார்கள், கவுன்ஸில் நடவடிக்கைகளில் கலந்து கொள்ள அவர்கள் உரிமையுள்ளவராவார்; கவுன்ஸிலில் வாக்களிக்கவோ கவுன்ஸிலின் அக்கிராசனராக அல்லது உப அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பெறவோ உரிமை உள்ளவராகார்.

குறிப்பு

பஞ்சாயத்துகளுக்கு 10-வது பிரிவின்படி அங்கத்தினர்கள் உள்ள மாதிரி பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் களுக்கு இத்தனை அங்கத்தினர்கள் இருக்க வேண்டுமென்று நிர்ணயமில்லை.

பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்தில் சில இடங்களில் மாத்திரம் பஞ்சாயத்துகள் இருக்கின்றன. சில இடங்களில் பஞ்சாயத்துகள் இல்லை. இப்போது உள்ள மாதிரி இருக்கும் பக்ஷத்தில் சில பஞ்சாயத்துகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் பஞ்சாயத்துகள் இல்லாத இடங்களையும் ஆளும்படியாக நேரிடுகிறது. ஆகையால் ரொம்பவும் சீக்கிரமாக பஞ்சாயத்துகள் இல்லாத இடங்களிலும் பஞ்சாயத்துகளை ஏற்படுத்திகொள்ள முயற்சிக்க வேண்டும். பி. 11 (2) கீழ் யுள்ள குறிப்பை பார்க்கவும்.

சென்னை 1920-ம் ஆண்டு XIV-வது சட்டமும் 1950-ம்ஆண்டு X-வது சட்டமும், 1955ஆண்டு XXX வது சட்டமும் 1957ம் ஆண்டு XIII-வது சட்டமும் ரத்தாவது

13. இச் சட்டத்தின் கீழ் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலை அமைக்கிற விளம்பரத்தில் குறிப்பிடப் படக்கூடிய தேதியன்றும் அத்தேதி முதற்கொண்டும்.—

(i) ஜில்லா போர்டுகளைக் குறித்த (சென்னை 1920-ம் ஆண்டு XIV-வது சட்டமாகிய) 1920-ம் ஆண்டு சென்னை பட்டணத்து சட்டமும், கிராமப் பஞ்சாயத்துக்களைக் குறித்த (சென்னை 1950-ம் ஆண்டு X-வது சட்டமாகிய) 1950-ம் ஆண்டு சென்னைபட்டணத்துச் சட்டமும், (சென்னை 1955-ம் ஆண்டு XXX-வது சட்டமாகிய) 1955-ம் ஆண்டு சென்னை நிலவரி (உபரிஸர்சார்ஜ்) சட்டமும், ஜில்லா போர்டுகளைக் குறித்த (சென்னை 1957 ஆண்டு XIII-வது சட்டமாகிய) 1957ஆண்டு சட்டமும், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியில் ரத்தாகிவிடும்; அதன்பிறகு அத்தகைய பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதி யாதொரு ஜில்லா போர்டின் அதிகார வரம்பிற்குள் சேர்ந்திருப்பது அற்றுப்போகும்.

(ii) ஜில்லா போர்டுகளைக் குறித்த (சென்னை 1920-ம் ஆண்டு XIV-வது சட்டமாகிய) 1920-ம் ஆண்டு சென்னைபட்டணத்துச் சட்டத்தின் கீழ் ஜில்லா போர்டுக்கென நியமிக்கப்பெற்றவரும், பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதியின் பேரில் விசாரணை அதிகாரம் உள்ளவருமான விசேஷ உத்தியோகஸ்தர், அத் தொகுதியின்பேரில் விசாரணை அதிகாரம் செலுத்துவது அற்றுப்போகும்.

(iii) பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியில் ஷை தேதிக்கு அடுத்து முன்பு யாதொரு பஞ்சாயத்து அல்லது ஜில்லா போர்டு வைத்து வந்த சகல ஆரம்பப் பள்ளிகளும், அப் பள்ளிகளுக்குள்ள ஆஸ்திகளும், பொறுப்புகளும், ஷை தேதியன்றும் அத்தேதி முதற்கொண்டும் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலிடம் மாற்றப்பட்டு நிலைபெறும்.

(iv) ஜில்லா சாலை, ஜில்லா சத்திரம், ஜில்லா மருந்துசாலை, ஜில்லா மார்கெட் ஒவ்வொன்றும் சம்பந்தபட்ட பஞ்சாயத்து யூனியன் கவுனஸிலிடம் நிலைபெறும்.

(v) (vi) பகுதியில் ஏற்பாடு செய்திருக்கிறபடிக்கன்றி மற்றபடி ஜில்லா போர்டுகளைக் குறித்த (சென்னை 1920ம்ஆண்டு XIV-வது சட்டமாகிய) 1920ஆண்டு சென்னபட்டணத்துச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஜில்லா போர்டால் உபயோகிக்கப்படுகிற, அனுபவிக்கப்படுகிற, அல்லது சுவாதீனத்தில் வைத்துக் கொள்ளப் படுகிற, சகல சொத்துக்களும், சகல விதமான உரிமைகளும் ஜில்லா போர்டினால் சொந்தத்தில் வைத்திருக்கப்படுகிற, அல்லது அதில் நிலைபெற்றிருக்கிற, அல்லது அந்த போர்டாரால் டிரஸ்டில் வைத்திருக்கப்படுகிற, அல்லது போர்டுக்காக டிரஸ்டில் வைத்து வரப்படுகிற, சகல விதமான பாத்தியதைகளும் அந்த போர்டுகளுக்கு விரோதமாகச் சட்டப்படி இருந்து வருகிற சகல பொறுப்புகளும் பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதியென அறிவிக்கப்பட்டிருக்கிற பிரதேசத்திற்கு சம்பந்தப்படுகிற வரையிலும் இது விஷயமாய் அரசாங்கத்தார் பொதுவான அல்லது விசேஷ உத்தரவு மூலமாய் பிறப்பிக்கிற கட்டளைக்குட்பட்டும், அந்த சொத்து, உரிமைகள், பாத்தியதைகள், பொறுப்புக்கள் ஆகியவை பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலைச் சேரும்.

விளக்கம்.—ஜில்லா போர்டுக்குச் சேரவேண்டியிருக்கிற சகல வரி பாக்கிகளும், கட்டணபாக்கிகளும், இதர தொகைகளும் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலால் வசூலிக்கப்படத் தக்கதாகும்.

Below S. 14—ஆணை இந்த சட்டத்தின் கீழ் ஒரு நபர் ஒன்றுக்கு மேற்பட்ட பஞ்சாயத்தின் அங்கத்தினராக தேர்ந்தெடுக்க அல்லது சேர்த்துகொள்வதற்கு அர்ஹதையுள்ளவர் ஆக இருக்கலாகாது.

(vi) (a) ஜில்லா போர்டில் அல்லது பஞ்சாயத்தில் நிலைபெற்றுள்ள ஓய்வு விடுதிகளும், முசாபரி பங்களாக்களும், அரசாங்கத்தாருக்கு மாற்றப்பட்டு அவர்களிடம் நிலைபெறும்.

(b) ஒவ்வொரு ஆஸ்பத்திரியும் அரசாங்கத்தாருக்கு மாற்றப்பட்டு அவர்களிடம் நிலைபெறும்.

(c) இது விஷயமாய் அரசாங்கத்தாரால் அறிக்கையிடப்பட்டு ஜில்லா போர்டாரால் வைத்துவரப்படுகிற சகல இடைநிலைப்பள்ளிகளும், வேலைகற்றுக்கொடுக்கும் பள்ளிகளும், கைத்தொழில் பள்ளிகளும், அத்தகைய பள்ளிகளைச் சேர்ந்த ஆஸ்திகளும், பொறுப்புகளும் அரசாங்கத்தார் பொதுவான அல்லது விசேஷ உத்தரவு பிறப்பித்து, அதன் மூலம் குறிப்பிடக்கூடிய அதிகாரியிடம் மாற்றப்பட்டு அவரிடம் நிலை பெறும்.

குறிப்பு

பகுதி 13.—பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்கள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் 1920-ம் வருடத்திய சென்னை ஜில்லா போர்டுகள் சட்டத்தை, 1950 வருடத்திய சென்னை கிராம பஞ்சாயத்துகள் சட்டத்தையும், 1955-ம் வருடத்திய சென்னை நிலவரி (உபரி சர்சார்ஜ்) சட்டத்தையும், ரத்து செய்வதற்காக இப்பகுதி வகை செய்கிறது ; மேலும், விசேஷ அதிகாரிகளின் கடமைகள் அற்றுப் போதல், ஜில்லா போர்டுகளின் ஆஸ்திகளும் பொறுப்புகளும் மாற்றப்படுதல் இப்போது ஜில்லா போர்டுகளிடம் சங்கிரமிக்கிற ஆரம்ப பள்ளி பாடசாலைகள், சத்திரங்கள், மருந்துச் சாலைகள், மார்க்கெட்டுகள், சாலைகள் ஆகியவை பஞ்சாயத்துக் கௌன்ஸில்களுக்கு மாற்றப்படுதல், ஆஸ்பத்திரிகள், ஓய்வு விடுதிகள், முசாபர் பங்களாக்கள் ஆகியவை அரசாங்கத்தாருக்கு மாற்றப்படுதல், மத்தியதரப் பள்ளிக்கூடங்கள், தொழில், பள்ளிக்கூடங்கள், கைத்தொழில் பள்ளிக்கூடங்கள் போன்ற ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களை அது விஷயமாய் அரசாங்கத்தார் குறிப்பிடக்கூடிய அதிகாரிக்கு மாற்றுதல் என்பதை போல மேற்படி ரத்து காரணமாக ஏற்படும் விளைவுகளைப் பற்றியும் இந்தப் பகுதி குறிப்பிடப்படுகிறது. [மசோதா-பகுதி 12]. [பிரிவுகள் 11, 65, 66களைப் பார்க்கவும்.]

பஞ்சாயத்து அங்கத்தினர்களை தேர்ந்து எடுப்பதும், அவர்கள் காலமும்

14. ஷை பஞ்சாயத்தின் அங்கத்தினர்கள் நிர்ணயிக்கப்படக்கூடிய விதமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

பஞ்சாயத்து அங்கத்தினர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்

குறிப்பு

அங்கத்தினர் பி. 2 (17), 38
பஞ்சாயத்து பி. 2 (20),8 | வோட்டர்கள் ஜாபிதா, பி. 20, 21, 178 (2) (ii)

நிர்ணயிக்கப்பட்டபடி தேர்ந்தெடுக்கப்படவேண்டும் :—இச்சட்டத்தின் கீழ், புது தேர்தல் விதிகள் செய்யப்படும் வரையில் நிலைத்துள்ள தேர்தல் விதிகள் சட்டம் அனுமதிக்கிறதாக நினைத்துக் கொள்ளவேண்டும். (பி. 190ஐயும், ஷெட்யூல் IVஐயும் பார்க்கவும்). இதில் "தேர்தல் அதிகாரி" ஒரு தலைவராகவோ, அங்கத்தினராகவோ இருக்கக்கூடாது என்று பி. 2 (9) ல் இருக்கிறது. அங்கத்தினர் விதிகளை அனுபந்தத்தில் அச்சிட்டு இருக்கிறது.

15. (1) ஒவ்வொரு பஞ்சாயத்திலும் இன்ஸ்பெக்டரானவர் நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு, விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக, அந்த கிராமத்திலே அல்லது பட்டணத்திலே ஷெட்யூலில்கண்ட ஜாதியார்களின் ஜனத்தொகையைக் கிரமப்படி கவனித்து, அந்த ஜாதிகளைச் சேர்ந்தவர்களுக்காகத் தாம் தகுதியென்று நினைக்கிற எண்ணிக்கையுள்ள ஸ்தானங்கள் எவற்றையேனும் ஒதுக்கிவைக்கலாம்.

ஷெட்யூலில் கண்ட ஜாதிகளைச் சேர்ந்த அங்கத்தினர்களுக்காக ஸ்தானங்களை ஒதுக்கி வைப்பதும் ஸ்திரிகளை சேர்த்துக் கொள்வதும்

(2) (1) உட்பிரிவின்படி எவ்விதமாக வேனும் ஒதுக்கி வைத்திருப்பதானது, கிராமப் பஞ்சாயத்துக்களைக் குறித்த

சென்னை 1950-ம் ஆண்டு X வது சட்டமாகிய) 1950-ம் ஆண்டு சென்னபட்டணத்துச் சட்டம் செலாவணியாகத் தொடங்கியதிலிருந்து பத்து வருஷ காலம் கழிந்துபோன பிறகு அப் பஞ்சாயத்துக்கு முதன்முதலாகச் சாதாரண தேர்தல்கள் நடத்தப்படுகிற வரையில் மாத்திரமே செலாவணியாகும்.

(3) ஷெட்யூலில் கண்ட எந்த ஜாதியார்களுக்காக யாதொரு பஞ்சாயத்தில் ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த ஜாதியார்களைச் சேர்ந்தவர்கள் அப் பஞ்சாயத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டிராத ஸ்தானங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக நிற்பதற்கு (1) உட்பிரிவில் கண்ட தெதனுலும் தடையேற்படுவதாகக் கருதப்படமாட்டாது.

(4) ஒவ்வொரு பஞ்சாயத்தும், தன் பஞ்சாயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஸ்திரி மெம்பர் இல்லாவிட்டால் அந்த பஞ்சாயத்து அதன் வாக்காளர் ஜாபிதாவில் பெயருள்ள ஒரு ஸ்திரீயை அங்கத்தினராக சேர்த்துக் கொள்ளலாம்.

குறிப்பு

ஷெட்யூல் ஜாதியர்கள் அங்கத்தினர்களாவதற்கு ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பது.— பிரதமர் நேரு அமதாபாத்தில் 17-12-1958ல் சொன்னது : "இந்த ஒதுக்கிவைப்பதை நான் விரும்புவதில்லை. நம்முடைய மக்களில் ஒரு பகுதியாரை மட்டமானவர்களாக எண்ணுவது சரியல்ல. ஒதுக்கிவைப்பதை எடுத்து விடுவதினுலேயே இப்போது தாழ்த்தப்பட்டவர்களுக்கு தரும் உதவிகளை கொடுப்பதுமன்றி இன்னும் அவர்கள் படிப்பின் மூலம் மேலுக்கு வர ஆதரவு கொடுக்க வேண்டும்."

வாஸ்தவத்தில் ஷெட்யூல் ஜாதிகளுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கிவைப்பது ஒரு ஆதரவாக இருக்கிறது. ஒதுக்கிவைப்பதை எடுத்து விட்டால் அவர்களுக்கு கொடுக்கும் சகாயங்களில் ஒன்றை வாபஸ் பெற்றுக்கொண்டதாகும் என்று கருதவேண்டும். முக்கியமாக ஷெட்யூல் ஜாதி மக்களுக்கு பியூன் மேஸ்திரி தாழ்ந்த வேலைகளையும் கொடுப்பதில்லை.

இன்னும் ஷெட்யூல் ஜாதிகள் தங்களுடன் சமமாக உட்காரக்கூடாது என்று சொல்லும் மக்கள் இருக்கிறுர்கள். [ராமகுலாம் குறித்து, A. I. R. 1925 All. 461.] பி. 2 (31) பார்க்கவும். ஆகையால் ஷெட்யூல் ஜாதிகளுக்கு கொடுத்திருக்கும் பாதுகாப்புகள் போதாது என்று தெரிவிக்கிறேம்.

பொது :—ஒரு மெம்பர் பஞ்சாயத்து போர்டின் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த மற்றொரு மெம்பரை உட்கார மறுப்பதுடன், மற்ற மெம்பர்களும் அவ்வாறு செய்ய புத்திமதியைப் புகட்டுகிறுர், அந்த மறுப்பும், அந்த புத்திமதி அல்லது துர்ப்போதனையும் கவர்ன்மெண்டின் நல்ல எண்ணங்களை தடுத்தாலும், அது இண்டியன் பினல்கோர்ட் பிரிவு 186-ன் கீழ் குற்றம் ஆகாது. [ராம் குலாம் குறித்து 47A-579 = A. I. R. 1925 A. 461]

பி. 15 (2) 1949-ம் வருஷத்திய "இந்திய அரசியல் அமைப்பு" (The Constitute of India) ல் ஆர்டிகல் 334-ன் கீழ், முதல் பத்து வருஷகாலம் கழித்த பிறகு அமுலில் இருக்காது. இவர்களின் இடச்சேமிப்பு எடுத்து விடப்படும். பி. 2 (31) "ஷெட்யூல்டு கேஸ்ட்ஸ்" பார்க்கவும் அதின் ஆர்டிகல் 341 கீழ் இந்திய தேச பிரஸிடெண்ட் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களை இன்னுர் இன்னுர் என்று குறித்து சொல்லலாம். ஆர்டிகல் 336 (24) ஐப் பார்க்கவும்.

பி. 15 (4) ஸ்திரீ அங்கத்தினர்கள்—இதை புதிதாக சேர்க்கப்பட்டது. எமது அபிப்பிராயத்தில் ஸ்திரீகளுக்கு ஒரு பஞ்சாயத்தில் 2-ல் 1 வீதம் அதாவது பேர்பாதி ஸ்தானங்கள் ஒதுக்கி வைத்தால் நன்றுக இருக்கும்.

ஷெட்யூல்டு ஜாதிகளைச் சேர்ந்தவர்களுக்கென்று ஸ்தானங்களை ஒதுக்கிவைப்பது.

விதி பி. 15 (I) ன் கீழ் (க-II-2)

1. ஒரு பஞ்சாயத்திலே ஷெட்யூல்டு ஜாதிகளைச் சேர்ந்தவர்களுக்கென்று ஒதுக்கி வைக்கப்படும் ஸ்தானங்களின் மொத்த எண்ணிக்கை அந்தப் பஞ்சாயத்திலுள்ள அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பங்குக்கு மேற்படக்கூடாது—. பிரிவு 10 பார்க்கவும்.

2. கடந்த ஜனத்தொகைக் கணக்கெடுப்பில் பிரஸ்தாப கிராமத்தில் இருந்த ஷெட்யூல்டு ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் அக் கிராமத்தின் மொத்த ஜனத்தொகையில் பாதிக்கு மேற்பட்டிருந்தால் அவர்களுக்கு அத்தகைய கிராமத்திலுள்ள பஞ்சாயத்தில் ஸ்தானம் ஒதுக்கி வைக்கப் படமாட்டாது.

16. யாதொரு பஞ்சாயத்துக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் காரியத்துக்காக இன்ஸ்பெக்டரானவர் யாதொரு பஞ்சாயத்து இருந்தால் அதைக் கலந்தாலோசித்து பிறகு, விளம்பர மூலமாக அக் கிராமத்தை அல்லது பட்டணத்தை வார்டுகளாகப் பிரித்து, நிர்ணயிக்கக்கூடிய படியுள்ள பரிமாணத்தை அனுசரித்து, ஒவ்வொரு வார்டிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய அங்கத்தினர்களின் எண்ணிக்கையை நிச்சயிக்கவேண்டும்.

வார்டுகளாகப் பிரிப்பது

குறிப்பு

பொது.—வார்டுகளாகப் பிரிக்கப்படாத பஞ்சாயத்துப் பகுதிகளே இருக்க முடியாது. 2 வார்டுகளுக்குக் குறையாமல் வகுப்பு கிராம பஞ்சாயத்துகளும், 5 வார்டுகளுக்குக் குறையாமல் டவுன் பஞ்சாயத்துக்களும் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். முனிசிபாலிடியைப் போன்றும் பெரியதாய் நிர்வாக அதிகாரிகளுடன் கூடியதாக பட்டண பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இப் பஞ்சாயத்துகள் ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு மெம்பர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறது. இன்ஸ்பெக்டரானவர் பழைய பஞ்சாயத்துகளை பழைய மாதிரியே வார்டுகளுக்கு மெம்பர்களை ஏற்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [பி: 190 ஷெட்யூல் IV பார்க்கவும்]

சாதாரணமாக ஒரு வார்டுக்கு ஒரு மெம்பர் இருக்கவேண்டும் என்பதுதான் முக்கிய கருத்தாகும். மேலும் தேர்தல்களை மர்மமாக நடத்தவேண்டும். வார்டுகள் சங்கியை குறைந்து மெம்பர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் ஒரு வார்டுக்கு அனேகமான மெம்பர்களை தேர்ந்தெடுக்கும்படி நேரிடும், அப்படி இல்லாமல் இருக்க பார்த்து வார்டுகளை பிரிக்கவேண்டும். இந்த சட்டத்தின்படிக்கு அம்மாதிரி செய்ய சாத்தியமில்லை. ஆனல் கேரள பஞ்சாயத்துகள் ஆக்ட்டு பிரிவு 10 படிக்கு சாதாரணமாக ஒவ்வொரு மெம்பருக்கு ஒரு வார்டு இருக்கவேண்டும். முந்திய மதராஸ் லோகல் போர்டுகள் ஆக்ட்டு பிரிவுகள் 48, 49 களில் அம்மாதிரிதான் இருந்தது.

17. 1] ஒவ்வொரு பஞ்சாயத்தையும் சேர்ந்தவர்களும், சாதாரண தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுமான அங்கத்தினர்கள் பதவி வகிக்கிற கால அளவானது, இச் சட்டத்தில் வேறே விதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருந்தாலொழிய, அல்லது இந்தச் சட்டத்தின்படி வேறே விதமாய் நிர்ணயிக்கப் படக்கூடிய படிக்கன்றி மற்றப்படி, காலி ஸ்தானங்கள் ஏற்படுகிற தேதியன்று நடுப் பகலில் ஆரம்பிக்கிற ஐந்து வருஷ காலமாகும்.

(பஞ்சாயத்துகளின்) அங்கத்தினர்களின் பதவிக் கால அளவு

ஆனல், இன்ஸ்பெக்டரானவர் போதுமான காரணத்துக்காக, விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய், மொத்தமாக யாதொரு பஞ்சாயத்து அங்கத்தினர்களின் பதவிக் கால அளவானது மூன்று மாதங்களுக்கு மேற்படாமல் அந்த விளம்பரத்தில் குறிப்பிடக்கூடிய கால அளவுக்கு அதிகப்படுத்தப்படவேண்டுமென்றே, குறைக்கப்பட வேண்டுமென்றே கட்டளையிடலாம். ஷை காரணத்தை அந்த விளம்பரத்தில் குறிப்பிட வேண்டும்.

(2) யாதொரு பஞ்சாயத்தைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அங்கத்தினரின் பதவியில் ஏற்படும் சாதாரண காலி ஸ்தானங்கள் சாதாரண தேர்தல்களிலே பூர்த்தி செய்யப்படவேண்டும்; அந்த தேர்தல்கள், ஷை காலி ஸ்தானங்கள் ஏற்படுவதற்கு முன் மூன்று மாதங்களுக்குள் தேர்தல் அதிகாரிக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய தினம் அல்லது தினங்களில் நடக்கவேண்டுமென்று அவரால் நிச்சயிக்கப்படும்.

ஆனுல் அரசாங்கத்தார் போதுமான காரணத்துக்காக ஷ காலி ஸ்தானம் ஏற்பட்டதற்குப் பிறகு யாதொரு சாதாரண தேர்தலை நடத்தும்படிக் கட்டளையிடலாம் அல்லது அவ்வாறு நடத்துவதற்கு அனுமதி கொடுக்கலாம்.

(3) (a) யாதொரு பஞ்சாயத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் பதவியில் தற்செயலாக நேரிடுகிற காலி ஸ்தானம் ஒவ்வொன்றைப் பற்றியும் அதன் நிர்வாக அதிகாரியானவர் நிர்ணயிக்கப்படக்கூடிய காலத்துக்குள் தெரிவிக்கவேண்டும்.

(b) தற்செயலாய் நேரிட்ட காலி ஸ்தானத்தில் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு பஞ்சாயத்து அங்கத்தினரானவர் உடனே பதவி வகிக்கத் தொடங்க வேண்டும். ஆனுல், அவர் எந்த அங்கத்தினருக்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருரோ அந்த அங்கத்தினர் ஷ காலி ஸ்தானம் நேரிட்டிராவிட்டால் எவ்வளவு காலம் பதவி வகிக்கப் பாத்தியதை உள்ளவரா யிருப்பாரோ அவ்வளவு காலம் மாத்திரமே பதவி வகிக்க வேண்டும்.

(c) இன்ஸ்பெக்டர் வேறேவிதமாகக் கட்டளையிட்டாலொழிய யாதொரு பஞ் சாயத்தின் அங்கத்தினர்கள் காலங்கடந்து போவதனுல் பதவியை விட்டு விலகும் தேதிக்கு முன்புள்ள மூன்றுமாத காலத்துக்குள் அந்தப் பஞ்சாயத்துக்குத் தற்செயல் தேர்தல் எதையும் நடத்தக்கூடாது.

(4) யாதொரு பஞ்சாயத்து அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகப்படுத் தப்பட்டால், அதிகப்படியான ஸ்தானங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் களாவது, அவர்களுக்குப் பதிலாகத் தற்செயலான காலி ஸ்தானங்களில் தேர்ந்தெடுக் கப்பட்ட அங்கத்தினர்களாவது அடுத்து முந்திய சாதாரண தேர்தல்களிலே பிரதம ஸ்தானங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் பதவியைக் காலிசெய்கிற தேதி வரையில் பதவி வகிக்கவேண்டும்.

(5) பிரிவு 15 உபபிரிவு (4)–ன் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட நபர் சாதாரண அல்லது தற்செயலாய் ஏற்பட்ட காலி ஸ்தானத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத் தினர் எதுவரையில் அங்கத்தினராக இருக்க முடியுமோ அதுவரையில் அங்கத்தினராக இருக்கலாம்.

குறிப்பு

அங்கத்தினர்கள் பி. 2 (17), 14, 38
பஞ்சாயத்து பி. 2 (20), 8
சாதாரண எலெக்ஷன்கள் பி. 2 (18)
எலெக்ஷன் அதிகாரி பி. 2 (9)
கவர்ன்மெண்டு செ. 2 [12], 158, 178
தற்செயலாய் ஏற்படுகிற காலியிடம் பி. 2 (2)
இன்ஸ்பெக்டர் பி. 2 (15), 147
நிர்வாக அதிகாரி பி. 2 (10)

பி. 17 மெம்பர்களின் ஆபீஸின் கால அளவு:— சாதாரண எலெக்ஷன் மூலம் மெம்பர் களின் காலமளவானது கீழ்கண்ட நிபந்தனைகளின்படி ஐந்து வருஷங்கள் எனப்பட்டது. (1) இன்ஸ்பெக்டர்.மூன்று மாதங்கள் வரையில் இதை அதிகரிக்கவும், குறைக்கவும் செய்யலாம் (2) காலி ஸ்தானங்கள் ஏற்பட்டபொழுது எலெக்ஷன் நடத்தலாமென்று கவர்ன்மெண்டு உத் திரவு இடலாம். ஒரு மெம்பரின் கால அளவானது அவருடைய (1) ராஜி நாமாவாலேயே முடிவு பெறலாம். (2) அல்லது முற்றிலும் அருகதையற்றவனுயிருக்கலாம் [பி. 26. (3) அல்லது அரசாங்கத்தார் பஞ்சாயத்துகளைக் கலைத்து விட்டு ஆபீசர் மூலமாக நடத்தலாம். பிரிவுகள் 150, 154 ஐப் பார்க்கவும். (4) இன்ஸ்பெக்டரால் நீக்கப்படுவதால் மெம்பர்களின் உரிமை களைக் குறித்து செ. 38-ஐப் பார்க்கவும்.

ஐந்து வருஷம்:— 3 ஷுகளை ஐந்து வருஷங்களாக மாற்றியது இழிவான எண்ணமாகும் “ தேர்தல்கள் ஜனநாயகத்தில் ஊக்கத்தை உண்டுபண்ணும் ” என்பதில் நம்பகம் இல்லாததே இதற்கு முக்கிய காரணமாகும். ஐந்து வருஷங்களை மூன்று ஷுகளாக மாற்றினுல் நாட்டுக்கு நலன் செய்ததாகும்.

தேர்தல்களின் காலம் பஞ்சாயத்து களிலும் முனிசிபாலிடி களிலும் நீடித்தால் அதிக லஞ்சத்திற்கு வழி காட்டும். ஓட்டர்களுக்கும் (வாக்காளர்களுக்கும்) உச்சாகமும், உணர்ச்சி

யும், அக்கரையும் குறைந்துவிடும். அங்கத்தினர்களுக்கும் ஜவாப்தாரி தனமும்; உடன்பாடும் இல்லாமல் போய்விடும். தேர்தல் (எலெக்ஷன்) கள் மூலம் முதியோருக்கும், படிப்பில்லாதவர்களுக்கும் அரசியல் அறிவை குறைந்த காலத்தில் உண்டாக்குவதாகும். தேர்தல்கள் எவ்வளவு அதிகமாகவும், கொதிப்பாகவும் இருக்கின்றனவோ அவ்வளவு பஞ்சாயத்துகள் விஷயத்தில் ஊக்கம் உண்டாக்கும் என்று அறியவும். போட்டி இல்லாமலே ஒருவர் அங்கத்தினராக ஆனுல், வாக்காளர்களுக்கு ஒன்றுமே தெரியாமல் போய்விடும். அந்த வாக்காளர்கள் அந்த தேர்தலின் அறிவை இழந்து விட்டவர்கள் ஆவார்கள். எதிர் தரப்பில் நின்று தேர்தல்களில் போராடுகிறவர்களையும் தேசபக்தர்களாக கருதவேண்டும். அவர்கள் தோற்றுலும் தேசத்திற்கு நன்மை செய்தவர்களே ஆவார். அவர்கள் இல்லாவிட்டால் தேர்தல்கள் நடக்காது. வாக்காளர்களுக்கு மதிப்பு உண்டாக்கியவர்களும், எதிரில் நின்று தோற்றவர்களே ஆகும். ஆகையால் அவர்களுடைய கொள்கை எம்மாதிரி இருந்தபோதிலும், அவர்களை தெய்வங்களாக மதிக்க வேண்டும்.

சில விஷயங்களில் பஞ்சாயத்து அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதும் அந்த அங்கத்தினர்களுடைய பதவிக்கால அளவும்.

18. (1) சாதாரணமான அல்லது தற்செயலான தேர்தலில், சந்தர்ப்பத்துக்கேற்றப்படி பிரஸ்தாப காலி ஸ்தானத்தையாவது ஏதேனும் ஒன்று செய்வதற்காக எவரும் தேர்ந்தெடுக்கப் படாவிட்டால், இன்ஸ்பெக்டாானவர் நிச்சயிக்கக்கூடிய தினத்தன்று புதிதாய் தேர்தல் ஒன்று நடத்தவேண்டும்.

(2) அப்படிப்பட்ட புதிய தேர்தலில்கூட சந்தர்ப்பத்துக்கேற்றவாறு ஷை காலி ஸ்தானத்தையாவது காலி ஸ்தானங்களில் எதையாவது பூர்த்தி செய்வதற்காக எவரும் தேர்ந்தெடுக்கப் படாவிட்டால், ஷை பஞ்சாயத்து அந்தக் காலி ஸ்தானத்தைப் பூர்த்தி செய்வதற்காகத் தகுந்த ஒருவரை நிர்ணயிக்கப்பட்ட விதமாகத் தேர்ந்தெடுக்கலாம்.

(3) இப் பிரிவின்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட யாதொரு பஞ்சாயத்து அங்கத்தினர்களின் பதவிக் கால அளவானது, சந்தர்ப்பத்துக் கேற்ப சாதாரணமான அல்லது தற்செயலான தேர்தலில் அந்த அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் ஷை பதவிக் கால அளவு எப்போது காலங்கடந்து போயிருக்குமோ அப்போது காலங்கடந்து போகும்.

குறிப்பு

சாதாரண காலி ஸ்தானம் செ. 2 (18)	பஞ்சாயத்து பி. 2 (20), 8
தற்செயலாய் ஏற்படுகிற காலி ஸ்தானம் பி. 2 (2)	அருகதையுள்ள மெம்பர் பி. 36
இன்ஸ்பெக்டர் செ. 2 (15), 146, 150	ஆபீஸின் கால அளவு பி. 10

பொது:—ஒரு மெம்பரும் தேர்ந்தெடுக்கப்படா விட்டால் அநேக சந்தர்ப்பங்களில் எலெக்ஷன் நடப்பதுண்டு. நடந்து கொண்டிருக்கும் எலெக்ஷனின் முடிவிற்காக ஒருவன் அதன் முடிவு தேதி முடியும் வரையில் பார்க்க வேண்டும். [சுப்பிரமணியன் ஏ. கோயம்புத்தூர் முனிஸிபாலிடி 53 M. L. J. 816 = A. I. R. 1928 M. 141]

சில விஷயங்களில் பஞ்சாயத்துக்கள் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பது 178 (2)ன் கீழ் விதி (க.III.3)

தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விதிகளில் ஏற்பாடு செய்திருக்கிற விதமாக யாதொரு பஞ்சாயத்து அங்கத்தினர் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும். பிரிவு 30, அதன் குறிப்பையும் பார்க்கவும்.

19. (1) ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அங்கத்தினர்களின் பதவிக் காலமானது, இந்தச்சட்டத்தில் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருந்தாலொழிய, இன்ஸ்பெக்டரால் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் விஷயத்திலும் ஏற்படுத்தப்பட்ட தேதியிலிருந்து ஐந்து வருடங்களாகும்.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அங்கத்தினர்கள் பதவி வகிக்கும் கால அளவும் ஸ்தானங்களை பூர்த்தி செய்வதும்.

(2) ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் ஒரு அங்கத்தினரின் பதவியில் நேரிடுகிற காலி ஸ்தானங்களைச் சாதாரண தேர்தல்களில் பூர்த்தி செய்யவேண்டும். அந்தக் காலி ஸ்தானங்களுக்கு தகுதியாகத் தோற்றுகிற தினங்களில் ஷை தேர்தல்கள் நடக்கும்படி இன்ஸ்பெக்டர் அவைகளை நிச்சயிக்க வேண்டும்.

ஆனல், போதுமான காரணத்தைக்கொண்டு அரசாங்கத்தார், அப்போதுக்கு அப்போது யாதொரு சாதாரண தேர்தல் நடத்தும்படிக் கட்டளையிடலாம் அல்லது அப்படிப்பட்ட தேர்தல் நடத்த அனுமதி கொடுக்கலாம்:

(3) யாதொரு காலி நேரிட்ட பிறகு நடத்தப்படும் சாதாரண தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் ஓர் அங்கத்தினர் உடனே பதவி வகிக்கத் தொடங்கவேண்டும்; ஆனல் அவர் ஷை காலி நேரிடுவதற்கு முன் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் எவ்வளவு காலம் பதவி வகிக்கத் தகுதியுள்ளவராயிருந்திருப்பாரோ அவ்வளவு காலம் மாத்திரமே பதவி வகிக்கவேண்டும்.

(4) ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அங்கத்தினர் ஒருவர், பதவியில் தற்செயலாய் நேரிடும் யாதொரு காலியைத் தற்செயல் தேர்தலில் பூர்த்தி செய்ய வேண்டும். அந்தக் காலி ஏற்பட்ட பிறகு கூடிய சீக்கிரத்திலே ஷை தேர்தல் நடக்கும்படியாய் இன்ஸ்பெக்டர் நிச்சயிக்கவேண்டும்;

ஆனல், சாதாரணமாய் (அங்கத்தினர்) ஸ்தானத்தை விட்டு நீங்கவேண்டிய தேதிக்கு முன் மூன்றுமாத காலத்துக்குள் நேரிடும் யாதொரு காலிஸ்தானத்தைப் பூர்த்தி செய்வதற்காக தற்செயல் தேர்தல் நடத்தக்கூடாது; அடுத்தாற்போல் நடக்கும் சாதாரண தேர்தலில் அந்தக் காலிஸ்தானத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்.

(5) தற்செயலாய் யாதொரு காலி நேரிடுவதன்மேல் தேர்ந்தெடுக்கப்படும் யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அங்கத்தினரானவர், உடனே பதவி வகிக்கத் தொடங்கவேண்டும்; ஆனல், அவர் எந்த அங்கத்தினருடைய ஸ்தானத்தில் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருரோ அந்த அங்கத்தினர் காலி நேரிடாமலிருந்தால் எவ்வளவு காலம் பதவி வகிக்க உரிமையுடையவரா யிருந்திருப்பாரோ அவ்வளவு காலம் மாத்திரமே பதவி வகிக்கவேண்டும்.

(6) இந்த பிரிவின்படி நடத்தப்பட்ட ஒரு சாதாரண அல்லது தற்செயலான தேர்தலில் அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப் படாவிட்டால் இன்ஸ்பெக்டர் நிச்சயிக்கக் கூடிய அத்தகைய தேதியன்று ஒரு புதிய தேர்தல் நடத்தப்படவேண்டும்.

(7) அத்தகைய புதிய தேர்தலில் அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்படா விட்டால், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் நிர்ணயிக்கப்பட்ட விதமாக காலிஸ்தானத்தை நிரப்புவதற்காக தகுதி உள்ள நபரைத் தேர்ந்தெடுக்கலாம்.

(8) (6) அல்லது (7) உட்பிரிவின்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது 12-வது பிரிவின்படி சேர்த்துக்கொள்ளப்பட்ட ஓர் அங்கத்தினரின் பதவிக் கால அளவானது சந்தர்ப்பத்துக்கேற்ப சாதாரண அல்லது தற்செயலான தேர்தலில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் எப்பொழுது முடிவடையுமோ அப்பொழுது முடிவடையும்.

குறிப்பு

இது 17-வது பிரிவை போன்றது. பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலின் அங்கத்தினருடைய பதவிக் கால அளவைப்பற்றியும் சாதாரண, தற்காலிக காலிஸ்தானங்களை நிரப்

பும் விதத்தைப் பற்றியும் இந்தப் பிரிவில் குறிப்பிடப்படுகிறது, இந்தப் பிரிவு பிரகாரம் அங்கத்தினருடைய பதவிக் கால அளவு ஐந்து வருஷ காலமாகும். ஒரு "தற்செயலாய் ஏற்பட்ட காலிஸ்தானம்" 6 மாதத்திற்குள்ளாக ஏற்படுமாகில் அதில் அந்த "தற்செயலான காலிஸ்தானத்திற்கு யாதொரு தேர்தலும் நடத்தக்கூடாது. பி. 19 (4) பார்க்கவும்.

ஐந்தாண்டாக யுள்ளதை 3 ஆண்டுகளாக மாற்றினுல் மக்களிடையில் அரசியல் ஞானம் அதிகப்படும் என்பதில் ஐயமில்லை. ஐந்துவருஷங்களாகயிருந்தால் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் காரியங்களில் மக்களுக்கு புத்தி மழுக்கமாகத்தான் இருக்கும். அதினுல் அக்கரையும் குறைந்து விடும்.

வாக்காளர் ஜாபிதாவைத் தயாரித்துப் பிரசித்தம் செய்வதும் அதில் சேர்க்கப்படுவதற்கு வேண்டிய யோக்கியதாம்சங்களும்.

20. (1) யாதொரு லெஜிஸ்லெடிவ் அஸெம்ப்ளியின் யாதொரு தேர்வுத் தொகுதிக்குரிய வாக்காளர் ஜாபிதாவில், எந்தப் பாகம் ஷை கிராமதுக்காவது, பட்டணதுக்காவது அல்லது ஷை கிராமத்தின் அல்லது பட்டணத்தின் யாதொரு பாகத்துக்காவது சம்பந்தப் பட்டதாயிருக்கிறதோ அந்தப்பாகத்தில் தம்முடைய பெயர் சேர்க்கப்பெற்றிருக்கிற ஒவ்வொரு நபரும் ஷை பஞ்சாயத்துக் குரிய வாக்காளர் ஜாபிதாவில் சேர்க்கப்படுவதற்குப் பாத்தியதை யுள்ளவராவார்; வேறே எந்த நபரும் அதில் சேர்க்கப் படுவதற்குப் பாத்தியதையுள்ளவராகமாட்டார்.

விளக்கம் :— கிராமத்திற்கு அல்லது பட்டணதிற்குச் சம்பந்தப்பட்ட வாக்காளர் ஜாபிதாவின் முக்கியமான பாகமில்லாத ஒரு அஸெம்ப்ளி தொகுதி விஷயத்தில், கிராமம் அல்லது பட்டணம் அடங்கியுள்ள ரெஜிஸ்ட்ரேஷன் பிரதேசத்தின் கீழ் வாக்காளர் ஜாபிதாவில் யாருடைய பெயர்கள் எழுதப்பட்டிருக்கிறதோ அத்தகைய வாக்காளர் ஜாபிதாவில் எழுதப்பட்டுள்ள யாருடைய விலாசங்கள் ஷை கிராமத்திலோ, பட்டணத்திலோ அமைக்கப்பட்டிருக்கின்றனவோ, அத்தகைய சகல நபர்களும் இச் சட்டத்தின் காரியங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படத் தகுதியுள்ளவர்களாவார்கள்.

(2) கிராமம் அல்லது பட்டணம் கொண்ட அல்லது ஷை கிராமம் அல்லது பட்டணத்தின் யாதொரு பாகம் அடங்கிய அஸெம்பளி தொகுதியின் வாக்காளர் ஜாபிதா, மக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதைப்பற்றிய (1950-வருஷத்து XLIII-வது மத்தியச் சட்டமாகிய) 1950-வருஷத்திய சட்டத்தை அனுசரித்துப் பிரசித்தம் செய்யப் பட்ட, மாற்றியமைக்கப்பட்ட அல்லது திருத்தப்பட்ட பிறகு கூடிய சீக்கிரத்தில், இது சார்பாக நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியால் அதிகாரம் கொடுக்கப்பட்ட யாதொரு நபர் அரசாங்கத்தார் கட்டளையிடக்கூடிய விதமாக சந்தர்ப்பத்துக்கேற்ற பஞ்சாயத்தின் வாக்காளர் ஜாபிதாவாக அல்லது அத்தகைய ஜாபிதாவின் மாற்றங்களாக, கிராமம் அல்லது பட்டணம் இவற்றிற்கு சம்பந்தப்பட்ட ஷை பட்டியல்களின் பாகங்களை அல்லது அவற்றின் மாற்றங்களைப் பிரசித்தம் செய்யவேண்டும்.

(3) பஞ்சாயத்துக்குரிய வாக்காளர் ஜாபிதாவை ஒவ்வொரு வார்டுக்காகவும் தனி தனிப் பாகங்களாகப் பிரிக்கவேண்டும்.

(4) (2) உட்பிரிவின்படிப் பஞ்சாயத்தின் வாக்காளர் பட்டியல் அல்லது அதன் யாதொரு மாற்றங்கள் பிரசித்தம் செய்யப்பட்ட பிறகு, கிராமம் அல்லது பட்டணம் முதன் முதலாக வார்டுகளாகப் பிரிக்கப்பட்டால், அல்லது கிராமம் அல்லது பட்டணத்தை வார்டுகளாகப் பிரிக்கப்பட்டதை மாற்றினுல் அல்லது, கிராமத்தின் அல்லது பட்டணத்தின் எல்லைகளை மாற்றினுல், நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியானவர் சந்தர்ப் பத்துக்கேற்ப கிராமம் அல்லது பட்டணத்தின் பிரிவை வார்டுகளாகப் பிரித்ததை அல்லது வார்டுகளின் மாற்றங்களை அல்லது எல்லைகளின் மாற்றங்களை அமுலுக்குக் கொண்டுவர, அரசாங்கத்தார் கட்டளையிடக்கூடிய விதமாக பஞ்சாயத்தின் வாக்காளர் ஜாபிதாவை அல்லது ஷை ஜாபிதாவின் யாதொரு பாகத்தைத் திருத்தி அமைத்து மீண்டும் பிரசித்தப் படுத்துவதற்கு அதிகாரமளிக்கலாம்.

(5) ஷை பஞ்சாயத்துக்குரிய வாக்காளர் ஜாபிதாவில் தம்முடைய பெயர் கண்டுள்ள ஒவ்வொரு நபரும், அந்த ஜாபிதா செலாவாணியாய்க் கொண்டிருக்கிற வரையிலும் அது எப்போதாகிலும் திருத்தி எழுதப்பட்டிருந்தால் அதற்குட்பட்டும், இச் சட்டத்தில் கண்ட இதர ஷரத்துக்களுக்குட்பட்டும் யாதொரு தேர்தலில் வோட்டு கொடுக்கப் பாத்தியதையுள்ளவராவர். ஷை ஜாபிதாவில் தம்முடைய பெயர் கண்டிராத எந்த நபரும் யாதொரு தேர்தலில் வாக்களிக்கக் கூடாது.

விளக்கம்.—இப் பிரிவிலும், 21 வது பிரிவிலும், "அஸெம்ப்ளி தொகுதி" என்னும் சொற்றொடர், மதராஸ் லெஜிஸ்லேடிவ் அசெம்ளியின் ஒரு தேர்வுத் தொகுதி எனப் பொருள்படும்.

குறிப்பு

பி. 20. (1.) வாக்காளர் (வோட்டர்கள்) ஜாபிதா.—21 வயதுக்கு மேல் பட்டவர்களுக்கும், 180 நாள் குறையாமல் வாசம் செய்தவர்களுக்கும் ஓட்டு உரிமை உண்டு. பி. 110 படிக்கு கிராமத்திலுள்ள கட்டிடங்களுக்கு நெம்பர்கள் (எண்கள்) கட்டாயமாக போடப்பட்டிருக்கிறது. அந்த நெம்பர்களே அந்த கிராமத்தில் ஓட்டு பதிவு செய்யப்பட்ட ஜாபிதாவில் உள்ள ஓட்டரின் மேல் விலாசம் ஆகும். அதன் படிக்கு இதுவரையில் நடந்த மதராஸ் லெஜீஸ்லேடிவ் அசெம்பளி (ராஜ்ய சட்ட சபைக்கும்) டில்லி சட்ட சபைக்கும் தேர்தல்கள் நடந்தன. இனி அவைகளை பஞ்சாயத்துகளின் விஸ்தீரணங்களுக்கும் பிரித்திருக்கிறார்கள். இதில் மதம், சாதி, பால் முதலியவைகளுக்கு யாதொரு தனிப்பட்ட பாத்யதை கிடையாது (இந்திய அரசியல் ஆர்டிகிள்கள் 325, 328). ஓட்டர்கள் ஜாபிதா நியாயமானதென்று மதிக்கப்பட வேண்டும். அதில் அடங்கிய பெயர்கள் உள்ள அனைவரும் ஓட்டுப்போட உரித்தானவர்கள். ஒருவன் ஓட்டை கொடுப்பதற்கு முன்னால் அவன் பெயரை அவனுக்கு நோட்டீஸ் கொடுக்காமல் நீக்கப்பட்டால் அது ஒரு ஒழுங்கற்றதாயிருந்து எலெக்ஷனையே முறிவிக்க காரணமாய் நிற்கும். [தத்தாத்ரேயா-எ.-ஷாமாராவ், ஷோலாப்பூர் Dt. (N.M.R.) J 3. I.EP. 193 (202)] எலெக்ஷன் சமயங்களில் ஓட்டர்கள் ஜாபிதாவை குறித்து கேள்விகள் கிளப்புவது சட்டவிரோதமானது. எலெக்ஷன் காரியங்களில் அத்தகைய கேள்விகள் கேட்கக்கூடாது. [பழனிசாமி-எ-சீனிவாசரங்கா, 47 M. L. J. 795 = A. I. R. 1925 M 160 : : ஜனார்த்தனம்-எ.-வெர்கீஸ, A. I. R. 1925 M. 707 :: அப்பாசாமி-எ.-எத்திராஜுலு, A. I. R. 1926 M. 1043 : : சுப்பிரமண்யம்-எ.-குடியாத்தம் முனிஸிபாலிடி, A. I. R. 1926 M. 204] ஓடர்கள் ஜாபிதா தயார் செய்யும் பொழுது அஜாக்கிரதையாக இருந்து விட்டு, ஓட்டு எடுக்கும் சமயத்திற்கு முந்தி சிவில் கோர்ட்டுக்கு சென்றால் அது செல்லாது [அமுல்தார் குறித்து 46 Cal. 132]. பி. 172 ஐ பார்க்கவும்.

ஓட்டுக்கொடுக்கும்போது அவருக்கு 21 வயது பூர்த்தியாகிவிட்டதா, இல்லையா, அவர் 180 நாள் வரையில் பஞ்சாயத்து போர்டு எல்லைக்குள் வாசஸ்தலத்தை வைத்திருந்தாரா, இல்லையா என்பதை குறித்து சர்ச்சை செய்யக்கூடாது. இத்தனை நிபந்தனைகள் இருந்தும் சில பஞ்சாயத்துகளில் ஓட்டர்களின் பெயர்களை நோடீஸ் கொடுக்காமலே எடுத்து விடப்பட்டிருக்கிறது. ஓட்டு உரிமையை யாராலும் தடுக்க முடியாது என்னும் ஜனநாயகப் பொருளை ஞாபகம் வைத்துக் கொண்டால் இம்மாதிரியான கெடுதிகள் நேரிடாது. காரணம் தெரியப்படுத்தாமல் ஒரு ஓட்டரின் பெயரை ஜாபிதாவிலிருந்து எடுத்து விட்டால் அந்த ஜாபிதா தயாரித்தவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும். கள்ள நோட்டுகளை போடுகிறவர்கள் மாதிரி அவர்களை கருதவேண்டும். அப்போது தான் ஓட்டர் ஜாபிதாக்களை தயாரிப்பதில் உள்ள களங்கங்கள் நீங்கும்.

அடியில் கண்ட மாதிரி நாங்கள் முன்குறிப்புகளில் கண்டிருந்தோம். அதை அனுசரித்து இந்த சட்டத்தின் மசோதா (Bill)ல் இருந்த (2) உப பிரிவை எடுத்துவிட்டார்கள். அதினால் எங்கள் குறிப்பில் உள்ள விளக்கம் அங்கீகரிக்கப்பட்டது. "ஒரு வோட்டருக்கு மதராஸிலும், ஒரு டிஸ்ட்ரிக்ட் முனிஸிபாலிடியிலும், மற்றொரு கிராமத்திலும் மற்றொரு ஸ்டேட்டிலும் வாசஸ்தலங்கள் இருக்கும் பக்ஷத்தில், அவருடைய பெயரை மேற்படி இடங்களில் பதிவுசெய்து கொள்ளலாம், மதராஸிலும் சரி, முனிஸிபாலிடியிலும் சரி, கிராமத்திலும் சரி எத்தனை வாசஸ்தலங்கள் இருந்தாலும் மதராஸிலும், அதே மாதிரி ஒரு டிஸ்ட்ரிக்ட் முனிஸிபாலிடியிலும், கிராமத்திலும் தன் பெயரை பதிவு செய்து கொள்ளலாம். ஒருவருக்கு பல வார்டுகளில் பிரிவு 2 (29) படிக்கு பல வாசஸ்தலங்கள் யிருந்தால் அப்படிப்பட்ட வார்டுகளில் தன் பெயரை பதிவு செய்து கொள்ளலாம்."

பி. 20 (3).—ஒருவருடைய பெயர் அனேக வார்ட்களில் இருந்தபோதிலும் அவருடைய வோட்டானது உபயோகமில்லாமல் போகாது. ஆனல் ஒரு பஞ்சாயத்தின் பொது தேர்தல் நடக்கும்பொழுது, ஒரு வோட்டரின் பெயர் அனேக வார்ட்களில் இருப்பதினுலேயே அவர் அந்த பொது தேர்தலில் ஒரு வோட்டுக்கு மேல் வோட்டுக்கொடுக்ககூடாது அவர் ஒரு வோட்டுக்கு மேல் அதிகமாக ஓட்டுக்கொடுப்பாராகில் அவருடைய மொத்த வோட்டுக்களும் செல்லத்தக்கினவைகள் அல்ல [1951 ஞூத்திய 43-வது ஆக்ட் மக்கள் பிரதி நிதித்வ ஆக்ட் செ 65 (4)] ஒருவருடைய பெயர் வோட்டர்கள் ஜாபிதாவில் இரண்டு இடங்களில் இருந்தன. அது ஓர் இடத்தில்தான் இருக்கவேண்டும் என்று சரி செய்யும் பொழுது தவறுதலாக இரண்டு இடங்களில் இருந்த அவருடைய பெயரை எடுத்து விடப்பட்டது. அம் மாதிரி எடுத்தது குமாஸ்தா தப்பு என்றும், அதை ஜாபிதாவில் உள்ளதாக எண்ணவேண்டும் என்றும் தீர்ப்பு செய்யப்பட்டது [அப்பாசாமி-எ-எதிராஜலு, **A. I. R.** 1926 M. 1043].

பி. 20 (5) மதராஸ் சட்ட சபையான அசெம்ப்ளியின் வாக்காளர் (ஓட்டர்) ஜாபிதாவை பஞ்சாயத்துகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. இதனல் பஞ்சாயத்துகளுக்கு ஜாபிதா தயாரிக்கும் சிலவு குறைக்கப்பட்டது. பஞ்சாயத்துகளின் ஜாபிதா பூர்த்தியாக யுள்ளதாகும். 21-வயதுக்கு மேற்பட்ட ஆணும் பெண்ணும் ஓட்டராக யிருக்கவேண்டும். இந்த ஓட்டர் ஜாபிதாவில் உள்ள பெயரை 21-வது பிரிவில் சொல்லப்பட்ட அதிகாரி நோட்டீஸ் கொடுக்காமலே எடுத்துவிடக் கூடாது. கை பிசகாகவோ, அச்சு பிசகாகவோ நோட்டீஸ் கொடாமல் ஒரு பெயரை எடுத்துவிடும் பக்ஷத்தில் அந்த அதிகாரியை வேலையிலிருந்து நீக்குவது அல்லாமல் தண்டனை செய்யவேண்டும். அப்போதுதான் ஓட்டர் ஜாபிதாக்களை தயாரிப்பதில் உள்ள மோச நடவடிக்கை நீங்கும். ஒரு ஓட்டருக்கு நோட்டீஸ் மூலம் தெரிவிக்காமலே ஆபீஸ் விளம்பர பலகையிலும் கிராம சாவடியிலும் ஒட்டி வைத்தோம் என்பது போதாது. இதற்காக டில்லியில் உள்ள சுப்ரீம் கோர்ட் வரையிலும் வியாஜ்யம் நடத்தலாம். அம்மாதிரி ஒருவர் பெயரை எடுத்து விடுவது ஒருவருடைய உரிமையை எடுத்து விட்டதாக கருத வேண்டும். [ஆஜ்மீர் சீப் கமிஷனர்-எ-ராத்ய் ஷாம், **A. I. R.** 1957 S.C. 304]. ஓட்டர்களாக விரும்புகிறவர்களும் இது விஷயமாக ஓட்டர் ஜாபிதாக்களை பிரசித்தம் செய்யும் போதெல்லாம் கவனிக்கவேண்டியது அவசியமாகும்.

ஒருவர் பெயர் வாக்காளர் ஜாபிதாவில் இல்லாவிட்டால் தன் பெயரை வாக்காளர் ஜாபிதாவில் பதிவு செய்துகொள்ள என்ன செய்ய வேண்டும்.—

ரிப்பிரஸன்டேஷன் ஆப் பீப்புல் ஆக்ட்டு (மக்களின் பிரதிநிதியாகிய சட்டத்தின்) 23-வது பிரிவின் கீழ் செய்யப்பட்ட விதிகளின் படிக்கு ஒருவருடைய பெயரை வாக்காளர் ஜாபிதாவில் பதிப்பித்துக் கொள்ளலாம்.

1. அந்த மனுவை "மதராஸ் லெஜிஸ்லேடிவ் அசெம்ப்ளியின் ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸர்" என்பவருக்கு சேர்ப்பிக்க வேண்டும். இந்த பதிவு செய்யும் உத்யோகஸ்தர் சாதாரணமாக ரெவின்யூ இலாக்கா, தாசில்தாரராகவோ, அல்லது டெபுடி தாசில்தாரராகவோ இருப்பார்.

2. அந்த மனுவை கோர்ட்டு பீஸ் அல்லாத ஒருரூபா (நான்-ஜுடிஸியல்) ஸ்டாம்பு பத்திரத்தில் எழுதவேண்டும்.

3. அந்த மனுவில் அடியில் கண்ட விஷயங்கள் கண்டிருக்க வேண்டும்.

(1) எந்த மதராஸ் அசெம்ப்ளி தொகுதியில் தன் பெயர் இருக்க வேண்டுமோ அதின் பெயர்.—(2) மனுதாரருடைய பெயரும் விலாசமும், (3) மனுதார் குடியிருக்கும் இடமும், (4) மனுதாரருடைய வயதும், (5) மனுதாரருடைய தாயாருடைய; அல்லது தகப்பனுருடைய அல்லது புருஷனுடைய பெயர், (6) மனுதாரர் 180 நாளுக்கு மேல் ஒரு குறித்த இடத்தில் வாசஸ்தலம் உள்ளவருக தெரியப்படுத்த வேண்டும். (7) கடைசியாக ஒரு டிக்ளரேஷன் அதாவது உறுதி மொழி அடியில் கண்ட மாதிரி இருக்கவேண்டும். நானகிய ———— இன்னருக்கு யாதொரு சட்டபடிக்கும் மதராஸ் அசெம்ப்ளி வாக்காளராக இருப்பதற்கு யாதொரு யோக்கியதாம்சமும் இல்லாமல் போகவில்லை என்று உறுதியாக சொல்லுகிறேன்.

இம்மாதிரி ஒரு மனுவை ஸ்டாம்பு பத்திரத்தில் எழுதி தாசில்தாருக்கோ அல்லது டெபுட்டி தாசில்தாருக்கோ வேண்டிய பொழுது உடனடியாக இந்த பத்திர மனுவை கொடுத்தால் அவர் உடனே 7-நாள் கெடுவு கொடுத்து நோட்டீஸ் போர்டில் விளம்பரம் செய்ய வேண்டும். அவர் இன்னும் சுருக்கமாக பதிவு செய்துக்கொள்ள ஏற்பாடு செய்வார்.

21. 20-வது பிரிவில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாமலே, நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியானவர், தாம் தகுதியெனக் கருதுகிற பிரகாரம் விசாரணை செய்த பிறகு அரசாங்கத்தார் கட்டளையிடக்கூடிய விதமாக, பொருத்தமான அஸெம்ப்ளி தொகுதியின் வாக்காளர் ஜாபிதாவுக்கு அனுசரணையாகக் கொண்டுவரும் காரியத்துக்காக யாதொரு பஞ்சாயத்தின் வாக்காளர்பட்டியலில் செய்யப்படும் திருத்தங்களைப் பிரசுரிக்கவேண்டும்.

வாக்காளர் பட்டியலைத் திருத்த அதிகாரம்

குறிப்பு

நிர்ணயிக்கப்பட்ட அதிகாரி புதிதாக யாதொரு பெயர்களையும் சேர்க்கக்கூடாது. அதை தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தார்தான் செய்யவேண்டும். பி. 20ன் கீழ் குறிப்பை பார்க்கவும்.

அபேக்ஷகர்களுடையவும், அங்கத்தினர்களுடைய யோக்கியதாம்சம், யோக்கியதை குறைவு முதலியன

22. யாதொரு நபரின் பெயர் யாதொரு பஞ்சாயத்துக்குரிய வாக்காளர் ஜாபிதாவில் இருந்தாலொழிய அவர் அந்தப் பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் ஓர் அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யோக்கியதை பெற்றவராக மாட்டார்.

அபேக்ஷகர்களின் யோக்யதாம்சங்கள்

23. (1) கிராமப் பெரியதனக்காரர், கர்ணம் அல்லது கிராம ஊழியர் எவரும் இந்த ராஜ்ய அல்லது மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த அல்லது யாதொரு பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் கவுன்சில், முனிசிபல் கவுன்சில் அல்லது சென்னைக் கார்பொரேஷனைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரும் ஓர் அங்கத்தினராக யோக்கியதைப் பதவி பெற்றவராகமாட்டார்.

அரசாங்கத்தையும் பிரதேச அதிகார சபைகளையும் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள், ஊழியக்காரர்கள், ஆகிய இவர்களின் யோக்கியதைக் குறைவு

(2) ஓர் தேர்தலுக்கு முன்பாவது, பிறகாவது யாதொரு நபர் இந்தப் பிரிவின்படி யோக்கியதை யற்றவராக இருக்கிறாரா இல்லையா என்னும் விஷயமாய் பிரச்சினை ஏதாகிலும் ஏற்பட்டால் அப்பிரச்சினையை அரசாங்காத்தாரின் ஆலோசனைக்கு அனுப்பவேண்டும். அவர்கள் செய்கிற தீர்மானம் முடிவானதாகும்.

குறிப்பு

ஒரு கூட்டுறவு சங்கத்தின் சம்பளம் பெறும் அலுவலர் ஒரு அபேட்சகராக யிருக்க யோக்யதை குறைவானவர் என்றும் இருந்தால் நலமாக இருக்கும்.

24. இந்தியத் தண்டனைச் சட்டத்தை மத்திய அரசாங்கத்தின் 1860-ஆவது ஆண்டின் 45-வது சட்டத்தைச் சேர்ந்த IX-A அத்தியாயத்தின்படி யாவது தேர்தல் இரகசியத்தை வெளிப்படுத்துவதற்குச் சம்பந்தப்பட்ட யாதொரு சட்டம் அல்லது விதியின்படியாவது தண்டிக்கப்படத் தக்க ஒரு குற்றத்தைச் செய்து குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு நபரும் அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட தேதி முதல் ஐந்து வருஷ காலத்துக்காகிலும் அதற்குக் குறைவாய்ப் பிரஸ்தாப கோர்டார் உத்தரவு மூலமாய் நிர்ணயிக்கக் கூடிய கால அளவுக்காகிலும் இச்சட்டம் பிரயோகப்படுகிற யாதொரு தேர்தலில் வாக்களிப்பதற்கோ தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ யாதொரு பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் அங்கத்தினர் பதவியை வகிப்பதற்கோ யோக்கியதை யற்றவராவார்.

தேர்தல் சம்பந்தமான குற்றங்கள் செய்து குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்டிருக்கும் நபர்களின் யோக்கியதைக் குறைவு.

குறிப்பு

இந்திய தண்டனே சட்டம் (இண்டின்பினல் கோட்) அத்தியாயம் IXன்படி :— விளக்கம் IX-ம் அத்தியாயத்தில் பிரிவுகள் 171—A முதல் 171-I வரையில் 9 இருக்கின்றன. அவை :: பிரிவு 171-Aல் "அபேக்ஷகர் "—" தேர்தல் உரிமை" :: 171-Bல் " லஞ்சம் "::171-Cல் "தகாத செல்வாக்கு" :: 171-Dல் " ஆள்மாராட்டம்" :: 171-Eல் "லஞ்சத்திற்கு தண்டனே" :: 171-Fல் " தகாத செல்வாக்குக்கும் ஆள்மாராட்டத்திற்கும் தண்டனே "—171-Gல் " தேர்தல் சம்பந்தமான பொய் பிரசாரம்" :: 171—Hல் "தேர்தல் சம்பந்தமாக சட்ட விரோதமாக கொடுத்தலும்" 171—Iல் " தேர்தல் கணக்குகளே வைத்துக்கொள்ளாமல் தவறி போவது "—குறித்து சொல்லுகின்றன. இவைகளின் விஷயமாக தண்டனே அடைந்தவர்களுக்கு இந்த 24-பிரிவு பொருந்தும். அப்பேர்பட்டவர்கள் 5-வருடங்கள் வரையில் தேர்தல்களில் அபேட்சகர்களாக நிற்கக் கூடாது.

அபேட்சகரின் யோக்யதைக் குறைவுகள்

25. (1) யாதொரு நபருக்கு ஒழுக்கத்தவறு காரணமாக ஏற்பட்டிராத குற்றமல்லாத வேறே யாதொரு குற்றத்துக்காக எந்தக் கிரிமினல் கோர்ட்டாராவது காவல் தண்டனே விதிக்கப்பட்டிருந்து (அந்தத் தண்டனே மாற்றப்படாம லிருந்தாலும், அவர் இந்தத் தண்டனேயை அனுபவித்துக் கொண்டிருக்கிற போதும் அந்தத் தண்டனே முடிவான தேதி முதல் ஐந்து வருஷகாலம் வரையிலும் ஓர் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யோக்கியதை யற்றவராவார் :

(2) யாதொரு நபர் நேமகம் செய்யப்படுகிற அல்லது தேர்ந்தெடுக்கப்படுகிற தினத்திலே.—

(a) புத்தி சுவாதீனமில்லாதவராகவாவது, செவிட்டு ஊமை யாகவாவது, குஷ்டரோகியாகவாவது இருந்தாலும்.

(b) கடனிறுக்கச் சக்தியற்றவரென்று தீர்மானிக்கும்படி விண்ணப்பம் செய்துகொண்டவராயிருந்தாலும் கடனிறுக்கச் சக்தியற்றவராயிருந்து அப்படிச் சக்தியற்றவராயிருக்கும் நிலைமையிலிருந்து விடுதலை பெருமலிருந்தாலும்.

(c) யாதொரு கம்பெனியில் (டைரெக்டரைத் தவிர வேறே) பங்குக்காரராக வல்லாமல் பிரஸ்தாப பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலோடு செய்யப்பட்டு இன்னும் அமுலிருக்கிற யாதொரு ஒப்பந்தத்திலாவது அதற்காகச் செய்யப்பட்டுவருகிற யாதொரு வேலையிலாவது பற்றுள்ளவராயிருந்தாலும்.

(d) ஷை பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் சார்பாகச் சம்பளம் பெறுகிற நியாயவாதியாய் அமர்த்திக்கொள்ளப்பட்டோ அல்லது அந்தப் பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு விரோதமாய் நியாயவாதியாக அமர்த்திக்கொள்ளப்பட்டோ இருந்தாலும்.

(e) (1898-ம்ஞுத்து V-வது மத்தியச் சட்டமாகிய) 1898-ம்ஞுத்திய கிரிமினல் வழக்குமுறைச் சட்டத்தின்படி பிரஸ்தாப கிராமத்தின் அல்லது பட்டணத்தின் யாதொரு பாகம் விஷயமாய் விசாரணே அதிகாரமுள்ள ஒரு கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தாலும்.

(f) ஏற்கெனவே சந்தர்ப்பத்துக்கேற்ப ஷை பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அங்கத்தினராயிருந்து, அவருடைய பதவிக் காலமானது அவரை மறுபடியும் தேர்ந்தெடுப்பது செலாவணியாவதற்கு முன்னே முடிவாகாமலிருந்தாலும், ஏற்கெனவே சந்தர்ப்பத்துக்கேற்ப ஷை பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்து அவருடைய பதவிக் காலம் இன்னும் ஆரம்பமாகாமலிருந்தாலும் ; அல்லது

(g) முந்திய வருஷம் உட்பட அந்த வருஷம்வரையில் ஷை பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு (ட்ரஸ்டி ஹோதாவிலன்றி) மற்றப்படி, எவ்வித பாக்கித் தொகையாவது செலுத்த வேண்டியவராயிருந்து, அது சம்பந்தமாய்

யாதொரு பில்லாகிலும், நோட்டீஸாகிலும், அவரிடம் கிரமப்படிச் சேர்ப்பிக்கப்பட்டிருந்து, ஷ தொகை செலுத்துவதற்காக அதில் கால அளவு ஏதேனும் குறிப்பிடப்பட்டிருந்தால் அந்தக் கால அளவு கழிந்துபோயிருந்தாலும்,

அவர் ஓர் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யோக்கியதையற்றவராவார்.

குறிப்பு

அங்கத்தினர்—பி. 2 (17), பி. 38
ஒப்பந்தம் பி. 4 (3) (i) பக்கம் 43
கம்பெனி பி. 2. (6)
ஒரு உத்தியோகஸ்தர் அல்லது வேலையாள் பி. 57-62.
அங்கத்தினரின் பதவி கால அளவு பி. 17. 19.

பி. 25. (1) **பொது** :—அரசாங்க விஷயமாய், குற்றங்கள் ஏற்படும் விஷயத்தில் அதனல் அபேட்சகராக இருப்பது தடுக்கக் கூடாது என்று மதருஸ் டிஸ்டிரிக்ட் போர்டு ஆக்ட் 55-வது செக்ஷனில் வெளிப்படையாக இருக்கிறது. இதனல் இந்த ஆக்டின்படி மதருஸ் அரசாங்கம் அரசாங்க விஷயத்தில் தங்களுக்கு எதிரிகளாக இருப்பவர்களே மெம்பர்களாக இருப்பதை தடுப்பார்கள் என்ற சந்தேகத்திற்கு இடமாயிருக்கிறது

பி. 25. (1) **அருகதை இல்லாமை** :—இது நேமகச் சீட்டு கொடுக்கும் காலத்தில் உள்ளதை குறிக்கும். எலக்ஷன் காலத்தில் உள்ளதை குறிக்காது. எலக்ஷன்களே குறித்து ஏற்படுத்தும் விதிகளும், சிவில் கோர்ட்டுகளும் தான் எலக்ஷன் சம்பந்தமான இந்த செக்ஷனில் உள்ள விஷயத்தை தீர்மானிக்க அருகதை உள்ளவர்கள். [செல்வரங்கராஜு-எ.-துரைசாமி 52 M. 732 = A. I. R. 1929 M. 727 (F. B) :: கோபாலா எ. மகம்மது இப்ரஹிம், A. I. R. 1929 M, 1119 (F. B.)

பி. 25 (2) (a) **புத்தி ஸ்வாதீனம் இல்லாமை** :—புத்தி சுவாதீனம் இருக்கும்பொழுது ஓட்டும் செய்யலாம். மற்ற யாவத்து காரியங்களையும் செய்யலாம்.

செவிடும்-ஊமையும் :—இரண்டும் கலந்து இருந்தால்தான் ஓட்டு கொடுக்கக்கூடாது. வெறும் செவிடும் வெறும் ஊமையும் ஓட்டு கொடுக்கலாம்.

குஷ்டரோகம் :—இதை பார்வையிலேயே குஷ்டரோகம் என்று சொல்ல முடியாததாகயிருந்தால் அதை குஷ்டரோகமெனக் கூடாது. அப்பேர்ப்பட்டவர்கள் ஓட்டு செய்யலாம். நேமக சீட்டு காலத்திலும், ஓட்டு கொடுக்கும் காலத்திலும் ஒரு ஓட்டரை குஷ்டரோகி என்று குறிப்பது இண்டியன் தண்டனே சட்டசபைக்கு அவதூர் ஆகாது. [தொரசாமி எ. கன்னியப்பன் I. R. 1931 Mad. 588 = A. I. R. Mad. 487.

பி. 25 (2) (b) திவாலா இன்ஸால்மெண்டு ஆக இருந்து மனுபோட்டு கொண்டாலும், பிறகு (டிஸ்சார்ஜ்) விடுதலே ஆய் விட்டால் அவர் அபேக்ஷகராக யிருக்கலாம். [பரமேஸ்வரா எ. பாரேல்லி முனிசிபல் போர்டு I. R. 1931 All 765 :: சின்னேயா எ. சுப்பிரமணியம் A. I. R. 1941 Mad. 22]

பி: 25 (2) (c) **பொது.**—முன்னிருந்தமாதிரி ஒப்பந்தத்தில் பற்றுள்ளவராக இருந்தாலும், இந்த ஆக்டின் பிரகாரம் செய்யப்படும் ரூல் (விதி)களில் அனுமதிக்கப் பட்டிருந்தால் அது அபேட்சகரின் யோக்யதையைக் குறைக்காது என்று இருந்தது. இப்போது இந்த ஷரத்து எடுத்து விடப்பட்டது. ஆகையால் கண்ட்ராக்டுகள், ஒப்பந்தங்கள் விஷயத்தில் அபேட்சகர்கள் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும். பி. 8 (3) பக்கம் 43ல் "ஒப்பந்தம்" பார்க்கவும். கண்ட்ராக்டின் பூரா தொகையும் கொடுத்த பிறகு, அல்லது எழுத்து மூலமாக பரிஷ்காரம் செய்தபொழுது ஏதோ பஞ்சாயத்தோ, அல்லது ஆடிடரோ ஆக்ஷேபிக்கலாம் என்று அபேக்ஷகராக இருக்க அருகதை இல்லே என்று சொல்லலாகாது. [ஆதிகேசவன்-எ-எ—ஏகாம்பர A.I.R. 1939 Mad 473.]

பி. 25(1) (c)ன் கீழ் : ஒப்பந்தத்திலாவது பற்றுள்ளவராயிருந்தாலும் :—ஒரு அபேட்சகர் ஆனவர் கன்ட்ராக்டராக இருக்கும் பட்சத்தில் அவர் அபேட்சகராக இருப்பதற்கு அருகதையற்றவர், [ஸ்டுவர்ட் சாமுவேல் குறித்து (1912) 19 I. C. 765 (P. C.) :: சத்யேந்திரா-எ-டாக்கா முனிசிபல் கௌன்சில், A. I. R. 1931 C. 288 = I.R. 1931 C. 593]. பற்றுதல் என்றல்

லாப சம்பந்தமான பணம் பற்றுதலேயே யாகும். அதை ஒவ்வொரு கேஸிலிருந்தும் அறிய வேண்டும். [நாபத் பிரஸாத் குறித்து A.I.R. 1930 All, 38 = 51 A. 864] பிரத்தியார் (அயலார்) பேரில் கான்ட்ராக்ட் நாமகார்த்தமாக எடுத்தது தெரியும் பட்சத்தில் அவர் அபேட்சகராக நிற்க அருகதையற்றவர். [பாநாகல் எ.-கிளார்க் (1900) 1. K. B. 289] ஒரு அபேட்சகர் ஒரு ஒப்பந்தக்காரருக்கு ஜாமீன் தாராக இருக்கும் பட்சத்தில் அவர் அந்த ஒப்பந்த பணத்தில் பற்றுதல் உள்ளவராகிருர். அதனுல் அருகதை யில்லாதவராயும் போய்விடுவார். ஒரு இந்து ஏக குடும்பத்தில் சேர்ந்த ஒருவர் மெம்பராக இருக்கும்போது அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மற்ருெருவர் அபேட்சகராக ஒரே பஞ்சாயத்தில் நிற்பாராகில் அவர் இரண்டு பேருக்கும் பணம் பற்றுதல் இருப்பதினுல் இரண்டு பேர்களும் அபேட்சர்களாக இருக்க அருகதை அற்றவர்கள். மெம்பராக விருப்பவரின் மெம்பர் பதவியும் போய்விடும். ஒரு ஒப்பந்தக்காரர் ஏதாவது ஒரு மெம்பரிடத்தில் செங்கல்களை வாங்கியதினுலேயே அந்த மெம்பருக்கு அந்த ஒப்பந்த பணத்தில் பற்றுதல் உண்டாயிற்று என்று சொல்லமுடியாது. ஏனெனில், மெம்பரிடத்தில் அநேகம் பேர் செங்கல் வாங்குவது மாதிரி ஒப்பந்தக்காரரும் வாங்கினுர். அதனுலேயே மெம்பருக்கு பணம் பற்றுதல் உண்டாயிற்று என்று சொல்லக்கூடாது. [சகூர்-ஏ ரங்கூன் முனிசிபாலிடி., A.I.R. 1925 Rang. 367]. முந்தி இந்த பகுதி பி. 26 (d) மாதிரி யிருந்தது. இப் போது யாதொரு ஒப்பந்த பற்றுதலை இருந்தாலும் ஒற்றுக் கொள்ளப்படமாட்டாது.

பி. 25 (2) (d) :—பஞ்சாயத்திற்கு அல்லது அதற்கு எதிராக நியாயவாதி (அட்வகேட்) யாயிருந்தால் அபேட்சராக நிற்கமுடியாது. சிவில் வியாஜ்ஜியங்களில் வியாஜ்ஜியம் முடிந்த பிறகு நியாயவாதியாக இருக்க நேரிடும். (ஸிவில் ப்ரொஸிஜர் கோடு. ஆர்டர் 3. ரூல் 4] கிரிமினல் கேஸ்களில் கேஸ் முடிந்ததும் நியாயவாதிக்கும், கக்ஷிக்காரருக்கும் சம்பந்தங்கிடையாது. நியாயவாதி வாதி பஞ்சாயத்துக்காக பீஸ் இல்லாமல் கேசை நடத்தினுல் அப்போது அவர் அபேக்ஷகராக நிற்கலாம்.

பி. 25 (2) (e) :—கௌரவ மாஜிஸ்திரேட்டுனுடைய ராஜிநாமாவை அங்கீகாரம் செய்கிற வரையில் அபேட்சர்களாக நிற்கக்கூடாது. [ஸ்ரீனிவாசலு-எ.-குப்புசாமி A. I. R. 1928 M. 253 : : ஏகாம்பரா-எ.-மதராஸ் கார்ப்பரேஷன் 1925 M. W. N.] 842 = A. L. 1927 M. 22.] கிராம கோர்ட்டு மேஜிஸ்ட்ரேட்டு அபேக்ஷகராக நிற்கலாம்.

பி. 25 (2) (f) :—புது ஆபீஸானது வருவதற்கு முன்னுல் ராஜினுமா செய்து விட்டாலும் அல்லது அந்த புது ஆபீஸ் தற்போதைய ஆபீஸின் முடிவிற்கு அப்புறம் தொடங்குவதற்கு இருந்தால் அப்போது அந்த அருகதையற்ற தன்மை வராது. [செவுக பாண்டியர்-எ.-ஸ்ரீராம தேசிகர் 52 M. L. J. 309 = A. I. R. 1927. M. 546.]

பி. 25 (2) (g) : **முந்திய வருஷம் உட்பட அந்த வருஷம் வரையில்.**—இப்போதுள்ள சட்டபடிக்கு முந்திய வருஷம் அல்லது வருஷங்கள் வரியையும், இந்த வருஷம் வரியையும் கட்டி ஆகவேண்டும். ஆகையால் அபேக்ஷகர்களாக நிற்க விரும்புகிறவர்கள் கால அளவுக்குள் செலுத்தவேண்டிய பாக்கி துகைகளை கட்டுவது அவசியமாகும். அப்படி கட்டாவிட்டாலும் நேமக சீட்டு விசாரணை (Scrutiny) க்கு எடுத்து கொள்வதற்கு முந்திகட்டினுலும் அர்ஹதை நிற்கும்.

26. 28-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு யாதொரு அங்கத்தினர்.—

அங்கத்தினர்களின் யோக்கியதைக் குறைவுகள்

(a) 25-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் விவரிக்கப்பட்டிருக்கிற குற்றத்துக்காக அதில் விவரிக்கப் பட்டிருக்கிற தண்டனையை யாதொரு கிரிமினல் கோர்ட்டாரால் விதிக்கப்பட்டாலும்

(b) புத்தி சுவாதீனமற்றவராகவாவது, செவிட்டு - ஊமை அல்லது குஷ்ட ரோகியாகவாவது ஆய்விட்டாலும் ;

(c) கடனிறுக்கச் சக்தியற்றவரென்று தீர்மானிக்கும்படி விண்ணப்பம் செய்து கொண்டாலும், அந்தப்படித் தீர்மானிக்கப்பட்டாலும் ;

(d) ஒரு கம்பெனியில் (டைரெக்டரைத் தவிர வேறே) யாதொரு பங்குக்காரராக வல்லாமல் மற்றப்படி அல்லது இச் சட்டத்தின்படிச் செய்யப்படும் விதிகளினுல் அனுமதிக்கப்பட்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி பிரஸ்தாப பஞ்சாயத்தோடு அல்லது பஞ்சா

யத்து யூனியன் கவுன்ஸிலோடு செய்யப்பட்டு இன்னும் அமுலிலிருக்கிற யாதொரு ஒப்பந்தத்திலாகிலும் அதற்காகச் செய்யப்பட்டு வருகிற யாதொரு வேலையிலாகிலும் எவ்வித பற்று உள்ளவராகயிருந்தாலும் ;

(e) ஷை பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் சார்பாக அல்லது அந்தப் பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு விரோதமாய் நியாயவாதியாய் வேலை ஏற்றுக்கொண்டாலும்.

(f) இச்சட்டத்தின்படி ஓர் உத்தியோகஸ்தராகவோ ஊழியராகவோ நியமிக்கப்பட்டாலும் ;

(g) (1898-ம்ஞூத்து V-வது மத்தியச் சட்டமாகிய) 1898-ம்ஞூத்திய கிரிமினல் வழக்குமுறைச் சட்டத்தின்படிப் பிரஸ்தாப கிராமத்தின் அல்லது பட்டணத்தின் யாதொரு பாகம் விஷயமாய் விசாரணை யதிகாரமுள்ள ஒரு கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாக நியமிக்கப்பட்டாலும் ;

(h) சந்தர்ப்பத்துக்கேற்ப பிரஸ்தாப கிராமத்தில் அல்லது பட்டணத்தில் வசிப்பது நின்றுபோய்விட்டாலும் ;

(i) ஷை பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு (ட்ரஸ்டி ஹோதாவிலன்றி மற்றப்படி) எவ்வித பாக்கித் தொகையாகிலும் செலுத்த வேண்டியவராயிருந்து, இச்சட்டத்தின்படிச் செய்யப்பட்ட விதிகளை அனுசரித்து, ஒரு பில், அல்லது நோட்டிஸ், அவருக்குச் சேர்ப்பிக்கப்பட்ட பிறகு, மூன்று மாதத்துக்குள்ளாவது, அல்லது எந்த பாக்கித் தொகை விஷயமாய் ஷை விதிகளின்படி, யாதொரு பில் அல்லது நோட்டிஸ், சேர்ப்பிக்கவேண்டியதில்லையோ அப்படிப்பட்ட பாக்கித் தொகை விஷயத்தில், அந்தப் பாக்கித் தொகையைச் செலுத்தும்படிக் கேட்டிருக்கும் நோட்டிஸை, நிர்வாக அதிகாரியால் அவருக்குக் கிரமமாய்ச் சேர்ப்பிக்கப்பட்டானபிறகு (கூடிய சீக்கிரத்தில் ஷை பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி அல்லது கமிஷனர் இந்த நோட்டிஸைச் சேர்ப்பிக்கக் கடமைப்பட்டவராவர்) மூன்று மாதத்துக்குள்ளாவது அதைச் செலுத்தத் தவறிப்போனாலும் ; அல்லது.

(j) சந்தர்ப்பத்துக்கேற்றபடி, அவருடைய உத்தியோகக் கால அளவு ஆரம்பித்த தேதியிலிருந்தாவது, அவர் கடைசியாய் வந்திருந்த சபையின் தேதியிலிருந்தாவது, 27-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி அவரை மறுபடியும் அங்கத்தினர் பதவியில் சேர்த்துக்கொண்ட தேதியிலிருந்தாவது, கணக்கிடப்படுகிற தொடர்ச்சியான மூன்று மாத கால அளவுக்கு, சந்தர்ப்பத்துக்கேற்ப ஷை பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் சபைகளுக்கு வராமலிருந்துவிட்டாலும், அல்லது மேலே கண்ட காலஅளவுக்குள் மூன்றுக்குக் குறைவான சபைகள் நடத்தப்பட்டிருக்கிற பட்சத்திலே, ஷை தேதிக்குப் பிறகு நடத்தப்படுகிற தொடர்ச்சியான மூன்று சபைகளுக்கு வராமலிருந்து விட்டாலும் ;

அவர் ஓர் அங்கத்தினர் என்னும் முறைமையில் பதவி வகிப்பதினின்றும் நீங்கினவராவார் :

ஆனால், இந்தப் பகுதியில் கண்ட விஷயத்திலே—

(i) எந்தக் கூட்டத்துக்கு ஓர் அங்கத்தினர் வராமல் போய் விட்டாரோ அந்தக் கூட்டத்தைப் பற்றி அவருக்குக் கிரமமான நோட்டிஸ் கொடுக்கப்பட்டிரா விட்டாலும்,

(ii) ஒரு சாதாரண கூட்டத்துக்காகவென்று நிர்ணயிக்கப்பட்ட நோட்டிஸுக்கான காலத்தைவிடச் சுருங்கிய கால நோட்டிஸ் கொடுத்த பிறகு ஷை கூட்டம் நடத்தப்பட்டாலும்,

(iii) அங்கத்தினர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் ஷை கூட்டம் நடத்தப்பட்டாலும்,

அக்கூட்டத்தை இப் பகுதியின்படி அவருக்கு விரோதமாகக் கணக்கிடக்கூடாது.

குறிப்பு

பொது:—மெம்பர்கள் 28-வது பிரிவு படிக்கு மனுபோடாமல் விட்டதினுலேயே மெம்பர்களாக இருப்பதாக அபிப்பிராயப்படுவது சரியல்ல. பி. 28 படிக்கு யாராவது மனுப் போட்டிருந்தால் அப்போது பி. 27 படி பூர்த்தியாகாவிட்டாலும் நியாயாதிபதியின் தீர்மானத்திற்கு உட்பட்டதாயிருக்கும். [சுப்பராய எ. முத்துக்குமாரசாமி A. I. R. 1920 M 1001 = 51 M. L. J. 265.

பி. 26 (d) ஒரு ஒப்பந்தத்தில் பற்றுதல் இருந்தால்:—பி. 8 (3) ன் கீழ் 'ஒப்பந்தம்,' பக்கம் 43ல் பார்க்கவும். பஞ்சாயத்துக்களுக்காக பஞ்சாயத்துக்கள் பேரிலேயே ஒரு பிரஸிடெண்டாவது மெம்பராவது ஒப்பந்தத்தை நடத்தும்பொழுது அவர்களை இந்த பிரிவு பாதிக்காது.

பி. 26 (d) ன் கீழ் விதி. (க-V-5.)

இதே விதிகள் முந்தி பி. 25 (2) (c) க்கும் பொருந்தியிருந்தது. ஆனல் அந்த பி. 25 (2) (c) ல் " இச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளால் அனுமதிக்கப்பட்டிருக்கிறபடிக் கன்றி " என்ற வார்த்தை எடுத்து விடப்பட்டது. இந்த பி. 26 (d) யிலும் எடுத்து விட்டு இருக்க வேண்டும். அப்படி செய்யவில்லை. ஆகையால் அங்கத்தினர் வரையில் அடியில்கண்ட விதிகள் செல்லத்தக்கதாகும்.

பி. 26 (d). இச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளால் அனுமதிக்கப்பட்டிருக்கிற படிக்கு அன்றி—அந்த விதிகளை இதனடியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒப்பந்த விஷயமாய் பஞ்சாயத்துகளின் அங்கத்தினர்களுக்கும் யோக்கியதைக் குறைவு.

ஒரு பஞ்சாயத்து அங்கத்தினர் எவரும் :—

(i) ஸ்தாவர சொத்துக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு குத்தகை, விற்பனை அல்லது கிரயத்திலாவது அதற்கான ஒரு உடன்படிக்கையிலாவது,

(ii) பணக் கடனுக்கான யாதொரு உடன்படிக்கையிலாவது பணம் மட்டும் செலுத்துவதற்கான யாதொரு ஈட்டிலாவது.

(iii) மேற்படி பஞ்சாயத்தின் விவகாரங்களுக்குச் சம்பந்தப்பட்ட ஒரு விளம்பர பிரசுரிக்கப்பட்டுள்ள யாதொரு செய்தித்தாளிலாவது.

(iv) தாம் கிரமமாக வியாபாரம் செய்து வருகிற பொருள்கள் எவற்றையேனும் ஷெ பஞ்சாயத்துக்கு விற்பனை செய்வதிலாவது, அப் பஞ்சாயத்தினிடமிருந்து பொருள்கள் எதையேனும் கிரயத்துக்கு வாங்குவதிலாவது—இவ்விரு விஷயங்களில் எதிலும் மதிப்பானது யாதொரு வருஷத்திலே ஒப்பந்த காலத்திலாகிலும் வேலை நடந்துவரும் காலத்திலாகிலும் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால்—அந்த நபர் அல்லது அங்கத்தினருக்கு யாதொரு பங்கு அல்லது அக்கறை இருக்கிற தென்னும் காரணத்தினுல், அப்படிப்பட்ட ஒப்பந்தம் அல்லது வேலையில் அக்கறை அடைகிருரென்றும் ஏதுவின்பேரில் அங்கத்தினர் என்னும் முறையும் பதவியற்றவர் ஆகமாட்டார்.

பி. 26 (i) வரிகளின் பாக்கிகள்:—பி. 25 (2)-ஐ பார்க்கவும். இது காரணமுள்ளதாயும், நியாயமானதுமான அருகதையற்ற தன்மை, அடிக்கடி தவறி விடும் மெம்பர்களுக்கு ஊக்கம் அளிக்கிறது. வரிகளை குறித்த பில்கள் வகையருக்களை சட்டப்படி மெம்பர்களுக்கு கொடுத்திருக்க வேண்டும். செ. பி. 161 படிக்கு எல்லா சந்தேகங்களையும் நிவர்த்தித்து இது ருசுப் படுத்தப்பட வேண்டும். வரிகளின் பில்கள் முதலியவை கொடுத்திருந்தால் அப்பணத்தை பெற்றுக்கொள்ளா விட்டால், மணியார்டர் மூலம் மெம்பர்கள் அனுப்புவதற்குக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். தன்னிடமே பணத்தை வைத்துக்கொண்டு பிறகு அதைப் பற்றிப் புகார் செய்வதில் அர்த்தமே யில்லை. அடிக்கடி மெம்பர்களைக் கண்டு அவர்களுடைய பாக்கிகளை வசூலிக்க, வசூல் செய்வோரிடம் புத்திமதி புகலவேண்டியது சோதிக்கும் உத்தியோகஸ்தரின் கடமையாகும். வரி கொடாமல் மூன்று மாதங்கள் கடந்து விட்டபோது அதே மெம்பராயிருக்க அருகதையற்ற தன்மை தானுகவே மெம்பரிடம் ஒட்டிக் கொள்ளுகிறது. மறுபடியும் மெம்பராக வருவதற்கு வழியானது புதிதான எலெக்ஷன் மூலம் வருவதேயாகும். இந்த விஷயத்தில் 27-வது பிரிவின்படி மறுபடியும் சேர்த்துக் கொள்வதுபோல் ஒன்றுங்கிடையாது.

பி. 26 (J) பொது.—ஹாஜராகாத விஷயங்களில் வரிசையாக 3 மாதங்கள் வராவிட்டால் 3 விதங்களாக ஒரு மெம்பருக்கு யோக்யதை குறைவு உண்டாகிறது. (1) முதலிலிருந்து (2) பி 28-ன் கீழ் மறுபடியும் மெம்பராக ஒட்ட வைத்தபொழுது, (3) மெம்பர் கடைசியில் ஹாஜராகிய தேதியிலிருந்து. ஆனல் மேற்படி சந்தர்ப்பங்களிலும் கிளாஜ் (J)-க்குயுள்ள 3 நிபந்தனைகளுக்கு உள்பட்டு இருக்க வேண்டும். இதனுடைய கணக்கை முதலிலிருந்து முன்னுக்கு கொண்டுபோக வேண்டுமே ஒழிய முடிந்த தேதியிலிருந்து பின்னிட்டு கணக்கிடக் கூடாது. ராமனுதன் குறித்து A. I. R. 1931 Mad. 138.

பி. 26 (J) வராமலிருத்தல்.—ஒரு மெம்பர் சபைக்கு வந்திருக்க வேண்டும். அவர் வேறே எங்கேயாவது இருந்துகொண்டு அவர் வந்தாரென்று பாவிப்பதில் அர்த்தமில்லை. அவர் சபைக்கு வந்திருந்ததாக கையெழுத்தைப் பெற்றுச் செல்லுதல் நம் தேசத்தில் வெகு சகஜம். அத்தகைய சரியில்லாத பழக்கங்களை விலக்கப்பட வேண்டும். அம்மாதிரி கையெழுத்து வாங்குவது போர்ஜரி ஆகும்.

தொடர்ச்சியான மாதங்கள்: அடுத்த சபைகள்:—தொடர்ச்சி என்பது ஒரு முக்கியமான விஷயம். தொடர்ச்சி என்பது இல்லாவிட்டால் அப்புறம் அருகதையற்ற தன்மை என்பதே கிடையாது, இத்தகைய சமயங்களில் பி. 27 (2) படிக்கு மறுபடியும் சேர்த்துக் கொள்ளுதல் அனுசரிக்கப்பட முடியும். பி. 27 (2) ஐ. பார்க்கவும்.

பி. 26 (J) அக்கூட்டத்தை இப்பகுதியின்படி கணக்கிடக்கூடாது. ஒரு மெம்பர் இந்த பகுதியில் கண்ட மீட்டிங்குகளுக்கு வந்து இருந்தபோதிலும் அதை கணக்கில் வைத்துக் கொள்ளக் கூடாது. [பெரியசாமி-எ-திருவாயூர் பஞ்சாயத்து போர்டு A. I. R. 1950 Mad 667].

அங்கத்தினர்களை மறுபடியும் உத்தியோகத்தில் சேர்த்துக் கொள்வது

27. (1) 24-வது பிரிவின்படியாவது, 26-வது பிரிவைச் சேர்ந்த (a) பகுதியின்படியாவது யாதொரு நபர் அங்கத்தினரா யிருப்பதினின்றும் நீங்கினவராகும் பட்சத்தில், அந்தத் தண்டனை அப்பீலில் ஆகிலும், அல்லது புனர் விசாரணையிலாகிலும் ரத்து செய்யப்பட்டாலும், அந்தப்படி ரத்து செய்கிறபோதும் மறுபடியும் உத்தியோகத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்; அவர் எவ்வளவு காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாரோ அந்தக் காலத்திலே, மேற் சொன்னவாறு மறுபடியும் சேர்த்துக்கொண்ட தேதியில் கழிவாகாமலிருக்கிற பாகத்துக்கு அவரை அந்தப்படிச் சேர்த்துக் கொள்ளவேண்டும். அன்றியும், ஷி காலி ஸ்தானத்தைப் பூர்த்தி செய்வதற்காக இடைக்காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட யாதொரு நபர் (அங்கத்தினராயிருப்பதனின்றும் நீங்கினவராகும் நபர்) மேலே கண்டபடி மறுபடியும் உத்தியோகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதன் மேல், பதவியைக் காலி செய்து விட வேண்டும்.

(2) 26–வது பிரிவில் கண்ட (j) பகுதியின்படி யாதொரு நபர் அங்கத்தினராயிருப்பதினின்றும் நீங்கினல் நிர்வாக அதிகாரி அல்லது கமிஷனரானவர், அது விஷயத்தை அந்த நபருக்கு உடனே எழுத்து மூலமாய்த் தெரிவிக்க வேண்டியதுமல்லாமல், பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அடுத்த சபையில் இதை அதற்குத் தெரிவிக்கவும் வேண்டும், சந்தர்ப்பத்துக்கேற்ப பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அடுத்த சபையின் தேதியன்ருவது அதற்கு முன்பாவது, அந்தப்படித் தெரிவிக்கப்பட்ட சங்கதி ஷி நபருக்கு வந்து சேர்ந்ததிலிருந்து பதினைந்து தினங்களுக்குள்ளாவது அவர் தம்மை மறுபடியும் சேர்த்துக்கொள்ளும்படித் தாமாகவே சந்தர்ப்பத்துக் கேற்ப பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு விண்ணப்பம் செய்துகொண்டால், சந்தர்ப்பத்திற்கேற்ப பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அந்த விண்ணப்பம் வந்து சேர்ந்த பிறகு அடுத்தாற்போல் கூடும் சபையிலே அவரை மறுபடியும் அவருடைய அங்கத்தினர் பதவியில் சேர்த்துக் கொள்ளலாம்;

ஆனல், யாதொரு அங்கத்தினரின் பதவி கால அளவில் அவரை இரண்டு தடவைக்கு மேற்பட்டு அவ்வாறு மறுபடியும் சேர்த்துக் கொள்ளக்கூடாது.

குறிப்பு

பி. 27 (2); நிர்வாக அதிகாரி அல்லது கமிஷனர் உடனே எழுத்தின் மூலம் விஷயத்தைத் தெரிவிக்கவேண்டும்.—நிர்வாக அதிகாரி உடனே தெரிவிப்பார். இல்லாவிடில், இந்த ஆக்டின் பி. 187-ன் கீழ் அவர் தண்டனைக்குட்படுவார். ஒரு தகவலும் கொடுக்கப்படா விட்டால், உரித்தான மெம்பர் தொடர்ந்து மெம்பராவார். மற்ற மெம்பர்கள் பி. 38-ன் கீழ் நிர்வாக அதிகாரியை சர்சை செய்யலாம். அல்லது இன்ஸ்பெக்டர், கவர்ன்மெண்டு போன்றவர்களுக்கு பொது ஜனங்கள் கூட எழுதலாம். அந்த நிர்வாக அதிகாரி பஞ்சாயத்துக்கு அடுத்த சபையிலும் மேற்படி தகவலைக் குறித்து தெரிவிக்கலாம்.

செ. 27 (2) சபை.—பி. 26 (J) யில் " சபை " யைக் குறித்துப் பார்க்கவும்.

மறுபடியும் சேர்த்துக்கொள்வது:—பஞ்சாயத்தானது ஒரு மெம்பரைக் கட்டாயம் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கிடையாது. மெம்பரைச் சேர்த்துக் கொள்ளாமல் அவருடைய அருகதை யற்றதை ஸ்திரப்படுத்தலாம், ஒரு மெம்பரை அடுத்த சபையில் சேர்த்துக் கொள்ளாவிட்டால் அவரைச் சேர்த்துக்கொள்ளவில்லை என்று கருத வேண்டும். அதற்குப் பதிலாக மற்றொரு சபையில் சேர்த்துக்கொள்ளுதல் பற்றி யோசிக்கப்படும் என்று தீர்மானித்தால் அது பஞ்சாயத்திற்குள்ள அதிகாரங்களை மீறினதாகும். அதனால் அடுத்த சபையில் சேர்த்துக் கொண்டாலும் செல்லாது. [வைத்தியநாதா-எ-முருகய்யன், A. I. R. 1928 M. 1077 = 1928 M. W. N. 549]

ஒரு நின்றுவிட்ட மெம்பரை மறுபடியும் இந்த செக்ஷனின் கீழ் பஞ்சாயத்து தீர்மான வழியாக சேர்த்துக் கொள்ளப்படா விட்டால் அவரை மெம்பராக எண்ணக்கூடாது. [பெரியசாமி-எ-திருவையார் பஞ்சாயத்து போர்டு, A. I. R. 1951 Mad. 667].

பி. 27. (2) உபநியமம் (Proviso)— ஒரு மெம்பர் இரண்டு முறைகள் மறுபடியும் சேர்க்கப்பெற்றால் பிறகு அவர் மெம்பராகவே முடியாது. பி. 154, 155-ன் கீழ் அப்பேர்ப்பட்ட பஞ்சாயத்துத் தவிர்க்கப் படலாம் அல்லது கலைக்கப்படலாம்.

அங்கத்தினர்களின் யோக்கியதைக் குறைவைப்பற்றிய பிரசினைகளைத் தீர்மானிக்கும் அதிகாரி:

28. (1) யாதொரு பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் யாதொரு நபர், 22, 24, 25 அல்லது 26-வது பிரிவின் யோக்கியதை பெருதவராயிருக்கிருரென்ருவது, யோக்கியதையற்றவராய் விட்டிருக்கிருரென்ருவது, சொல்லப்பட்டு, அந்தப்படி சொல்லப்பட்டதை அவர் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், யாதொரு அங்கத்தினருக்கே தாம் 24, 25 அல்லது 26-வது பிரிவின்படி யோக்கியதை பெருதவராயிருக்கிருரா, இல்லையா, என்பதைக் குறித்தாவது, யோக்கியதையற்றவராய் விட்டிருக்கிருரா, இல்லையா, என்பதைக் குறித்தாவது சந்தேகம் உண்டானாலும், அப்படிப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அந்த அங்கத்தினராகிலும், வேறே யாதொரு அங்கத்தினராகிலும், நிர்ணயிக்கப்பட்ட நியாய விசாரணை அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம். சந்தர்ப்பத்துக்கேற்ப பஞ்சாயத்தாவது, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலாவது, இன்ஸ்பெக்டராவது கட்டளையிட்டால், சந்தர்ப்பத்துக்கேற்ப நிர்வாக அதிகாரி அல்லது கமிஷனர் அந்தப் படியே விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். ஷை நியாய விசாரணை அதிகாரியினுடைய தீர்மானம் முடிவானதாகும்.

(2) அந்தப்படித் தீர்மானம் செய்யப்படுகிற வரையிலே, ஷை அங்கத்தினர் தாம் யோக்கியதை பெற்றிருப்பவராயிருந்தால் அல்லது யோக்கியதை யற்றவராயிரா விட்டால் எப்படியோ அப்படியே நடக்கப் பாத்தியதையுள்ளவராவர்.

குறிப்பு

பொது.—இந்த பி. 28-ன் கீழ் டிஸ்ட்ரிக்ட் முனிசீப்புக்கு மனுபோட்டுக்கொள்ள வேண்டும் [ராமகிருஷ்ண-எ-சோமேஸ்வர, A. I. R. 1953 Mad. 560 = 1953 M. W. N. 182.]

செ. 28. (1) ன் கீழ் விதி - (க-VI-6) அங்கத்தினர்களின் யோக்கியதைக் குறைவு சம்பந்தமான பிரசினைகளைத் தீர்மானிப்பதற்குரிய நீதி இலாகா அதிகாரி

மேற்படி சட்டத்தின் 28 (1) பிரிவின்படி விண்ணப்பங்கள் செய்து கொள்ளப்படலாகும் நீதி இலாகா அதிகாரி சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து ஆபீஸ் எந்த இடத்திலிருக்கிறதோ அந்த இடம் விஷயமாய்ப் பிரதேச விசாரணை யதிகாரம் வகிக்கிற ஜில்லா முன்சிப் ஆவார் : அல்லது அப்படிப்பட்ட ஜில்லா முன்சிப் ஒருவருக்குமேற்பட்டிருந்தால், பிரதான ஜில்லா முன்சிப்ஆவார்.

ஆனல், அத்தகைய விண்ணப்பம் ஒன்றைப் பிரஸ்தாப ஜில்லாவிலுள்ள வேறு எந்த ஜில்லா முன்சிப்புக்கேனும் மாற்ற ஜில்லா நீதிபதிக்கு அதிகார முண்டு.

(1) ஜில்லா (டிஸ்ட்ரிக்ட்) முனிசிப்.—விதியைப் பார்க்கவும் பி. 28 (1) ன் படிக்கு இவருடைய தீர்மானம் முடிவானதாகும். சிவில் ப்ரொசீடர் கோர்ட் பி. 115 படிக்கு ரிவிஷன் இல்லாமல் போனுலும் இண்டியா அரசியல் (Constitution of India) ஆர்டிகல் 227 படிக்கு ஹைகோர்டுக்கு மனுபோட்டுக் கொள்ளலாம். **(2)** இந்த சப் செக்ஷனல் வெளிப் படையாக அருஹதையை தாரவாத்துக்கொண்ட ஒரு மெம்பர் இந்த பிரிவின் படிக்கு மனுபோட்டுக் கொண்டதனுலேயே மெம்பராக இருக்கிறதாக எண்ணக்கூடாது. [சுப்பராய-எ-முத்துசாமி **A. I. R.** 1926 Mad. 1001]. மனுபோட்டதினுல் மனுவின் மூலம் யார்பேரில் புகார் செய்யப் பட்டதோ அவரை மனு முடியும் வரையில் இன்ஜெக்னல் தடை செய்யக்கூடாது [கோபால கிருஷ்ண-எ-விளங்க A. I. R. 1926 **Mad.** 132.]

ஒரு அருகதை அற்ற மெம்பர் இருப்பதைக் குறித்து மெம்பர்களும், பிரஸிடெண் டும், நிர்வாக உத்தியோகஸ்தரும் அக்கறை எடுத்துக்கொள்ளா விட்டால் பொது ஜனங்கள் இன்ஸ்பெக்டருக்கு எழுதி அவர் மூலமாக பஞ்சாயத்து அல்லது நிர்வாக அதிகாரி அந்த அருகதையில்லாத மெம்பரைக் குறித்து தாவா செய்யும்படிச் செய்யலாம்.

தலைவரும் உப-தலைவரும்.

பஞ்சாயத்தின் தலை வரும், உப-தலைவரும்

29. பஞ்சாயத்து ஒவ்வொன்றுக்கும் ஒரு தலைவரும் ஓர் உப-தலைவரும் இருக்க வேண்டும்.

குறிப்பு

பொது.—ஒவ்வொரு சபையிலும் தலைவர்தான் அக்கிராசனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். பி. 46 (1) யை பார்க்கவும். தலைவரானவர் கிராமங்களில் அவரே நிர்வாக உத்தி யோகஸ்தராகவும் இருப்பார். ரிகார்டுகளையும் தன்பின் வந்த தலைவரிடம் கொடுத்துவிட வேண்டும். அப்படி செய்ய தவறினல் குற்றவாளி ஆவார். பி. 182 (3) யை பார்க்கவும். பிரஸி டெண்டை இன்ஸ்பெக்டரானவர் அந்தப் பதவியிலிருந்து நீக்கிவிடலாம். (பி. 150). பிரஸி டெண்டானவர் நிர்வாக உத்தியோகஸ்தர் இருக்கும்போது அவருடைய வேலையைச் செய்யக் கூடாது. பி. 8. 42, 43-களைப் பார்க்கவும் பிரஸிடெண்டு நல்லெண்ணத்துடன் செய்யும் காரியங்களுக்கு பஞ்சாயத்து ஜவாபுதாரியே யொழிய அவர் ஜவாபுதாரியாகமாட்டார். செ. 170-ஐப் பார்க்கவும். பஞ்சாயத்தின் சொத்துக்களை பாழு பண்ணும் பட்சத்தில் அவர் ஜவாப் தாரியாவார். பி. 173-ஐப் பார்க்கவும். சர்சார்ஜ் விதிகளை பார்க்கவும். ஒரு பிரஸிடெண்டின் பேரில் தாவாசெய்வதாக இருந்தால் அவருக்கு செ. 171 பிரகாரம் நோட்டீஸ் கொடுக்கவேண் டும். ஒரு பிரஸிடெண்டானவர் பொது நல ஊழியனுக கருதப்படுவார். [அப்துல் காதர் குறித்து 1916-1 M W. N. 384 = 33 **I. C.** 648] பிரஸிடெண்டாவது வைஸ்-பிரஸிடெண்டா வது பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தரல்லர். [பழனியப்பா எ. கிருஷ்ணசாமி **A. I. R.** 1925 **M.** 877 = 48 **M. I. J.** 696] பிரஸிடெண்டானவர் யாதொரு பிரதிபலனும் அடையக்கூடாது. பி. 39-ஐப் பார்க்கவும். பஞ்சாயத்து விஷயமாய் ஏதாவது சிவில் வியாஜ்யம் அல்லது கிரி மினல் கேஸ் இருந்தால் அவை பஞ்சாயத்தின் பேரில் செய்யவேண்டுமே தவிர, பிரஸிடெண் டின்பேரில் செய்யக்கூடாது [எல்லூர் முனிசிபல் கௌன்சில் சேர்மன் குறித்து 1 Weir 243] ஒரு பஞ்சாயத்துப் போர்டின் சிப்பந்திகளை யாராவது அவதூறு சொன்னல் அதைக் குறித்து பிரஸிடெண்டு தாவா செய்தால் செல்லாது [பீகம் எ மூர் 26 M. 43 = 12 **M. L. J.** 413]. ஒரு பிரஸிடெண்டின் பேரில் ஒரு பஞ்சாயத்து விஷயமாய் ஒரு கிரிமினல் கேஸ் செய்யவேண்டு மென்ருல் கவர்ன் மெண்டின் முன் அநுமதியைப் பெறவேண்டும். செ. 169 ஐப் பார்க்கவும். தலைவராக இல்லாத பொழுது தலைவராக நடந்து கொண்டால் அவர் பி. 182 படிக்கு குற்றவாளி

ஆவார். அவர் பிரசிடெண்டாக நீங்கிய உடன் விதிகள்படிக்கு நடந்து கொள்ள வேண்டும். பி. 183 (3) யை பார்க்கவும்.

பிரஸிடெண்டுகளின் மீது வியாஜ்யம் தொடர எப்போது அனுமதி வேண்டும் எப்போது அனுமதி வேண்டாம் ?—ஒரு அபேட்சகருக்கு ஓட்டு கொடுக்கவோ அல்லது யாருக்கும் ஓட்டு கொடுக்காமலிருககவோ ஒரு ஓட்டரை தூண்டும் பொருட்டு அவரது சொத்துக்கு நஷ்டம் உண்டாக்குவதாக பயப்படுத்தியதால் ஒரு முனிசிபல் சேர்மனின்மீது குற்றம் சாட்டப்பட்டது. இவ் விஷயத்தில் அரசாங்கத்தின் அனுமதி தேவையில்லையென தீர் மானிக்கப்பட்டது. ஒரு ஓட்டருக்கு கஷ்டம் உண்டாக்குவதாக பயப்படுத்துவது ஒரு பொது ஜன ஊழியராலே செய்யக்கூடிய குற்றமாகவாவது அல்லது செய்யப்பட்ட குற்றத்தினுடைய இந்த அம்சம் ஒரு முனிசிபாலிடியினுடைய சேர்மனுலேயே செய்யக்கூடியதெனவாவது நிர் ணயிக்க முடியாது. [ராஜாராவ்-எ.-ராமசாமி, 50 Mad. 754 = A. I. R. 1927 M. 566 = 52 M. L. J. 647.] தன்னுல் ஒரு பொதுப்பாட்டையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு தடையை விலக்கும் போது, தற்போதைய பஞ்சாயத்தின் ஒரு யூனியன் சேர்மன் திட்டியதாக ஒருவர் பிராது கொடுத்து அவர்மீது வியாஜ்யம் கொடுத்தார். அவர் தடையை விலக்கியது ஒரு பொதுஜன ஊழியராகவே யாயினும், அவர் துர்பாஷையை பிரயோகித்தது அந்த ஹோதாவில் ஆகாது. ஆகையால் கிரிமினல் ப்ரொசிஜர் கோட், செ. 197-ன்படி துர்ப்பாஷையை உபயோகித்ததற்காக வியாஜ்யம் தொடர அனுமதி தேவை யில்லையென தீர்மானிக்கப்பட்டது [அப்துல் ரஹிமான் குறித்த 17 Cr. L.J. 462 = 36 I.C. 142]. ஓட் கொடுப்பதிலிருந்து சிலரை துராக்ருதமாக தடுக்கும் பொருட்டு, அவர்கள் பொதுப்பாட்டைகளில் அக்ரமமாக ஆக்ரமிப்புகளை ஏற்படுத்திய தாக அவர்கள்மீது பொய் வியாஜ்யம் தொடர்வதாக ஒரு முனிசிபல் சேர்மன் பயப்படுத்தினுர் என்று அவர் மீது வியாஜ்யம் செய்ய அதற்கு அரசாங்கத்தின் அனுமதி தேவையில்லை. கவர்ன்மெண்டாரால் அல்லாமல் மற்றபடி அவரை உத்தியோகத்திலிருந்து விலக்கிவிட முடியா தென்பது சந்தேகமில்லாத விஷயம் (1 Weir 234).

ஒரு பிரசிடெண்டுக்கு இருக்கவேண்டிய முக்கிய குணங்கள்.—சமயோசித சாமர்த்தி யம், எளிதில் கலக்கமுருத நெஞ்சம், சுலபமாக கோபம் வராத தன்மை இவைகளோடு தன் உத்தியோகத்தின் மதிப்பை தகுந்தபடி உணரக் கூடிய சக்தி, இவ்வளவும் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு தலைவருக்கு இருக்கவேண்டும். பலரை ஆளக்கூடிய சக்தியுடைய தன்மை உத்திர வாதங்களை உணரக்கூடியவர் அந்த ஸ்தானத்திற்கு சாதாரணமாக தகுந்தவர். மேற்கூறப் பட்ட குணங்களோடு பொது அறிவும், விவாதிக்கப்படவேண்டிய விஷயங்களில் முக்கியமான பழக்கமும், தலைவருக்கு இருக்குமாயின் அவரைத் தேர்ந்தெடுப்பதற்கு இவைகளே போதுமான காரணங்களாகிவிடும்.

ஒருவன் அறிந்து பிரஸிடெண்டாகவோ, வைஸ்-பிரஸி டெண்டாகவோ மெம்பராகவோ இல்லாத சமயத்தில் அம்மாதிரி நடந்துகொண்டால் அவன் பி. 182 படிக்குத் தண்டனைக் குட்படுவான். ப்ரசிடெண்டும் வைஸ் பிரசிடெண்டும் மெம்பரும் பிரதிபலன் அடையக்கூடாது பி. 39 யைப் பார்க்கவும்.

ப்ரெசிடெண்டுகளும், வைஸ்-ப்ரெசிடெண்டுகளும் அங்கத்தினர்களும் ராஜினுமா செய்வதுபற்றி—பி. 32 ன் கீழ் பார்க்கவும்.

தலைவர்களின் கை எழுத்து ரூபங்களை பற்றி.—பி. 40 ன் கீழ் பார்க்கவும்.

30. பஞ்சாயத்தின் அங்கத்தினர்களிலிருந்து நிர்ணயிக்கப்படக்கூடிய நடை முறையை அனுசரித்து தலைவரும் உப-தலைவரும் தேர்ந் தெடுக்கப்பட வேண்டும்.

தலைவரையும் உப-தலைவரையும் தேர்ந்தெடுப்பது

குறிப்பு

தலைவர், உபதலைவர்— பி. 29.

நிர்ணயிக்கப்படக்கூடிய நடைமுறை.—இது பி. 2 (29)ல் யுள்ள "தேர்தல் அதிகாரி"க் கும், பி. 178ல் யுள்ள "விதிகள் செய்ய அரசாங்கத்தாருக்குள்ள அதிகார"த்திற்கும் உள்பட்டு இருக்கவேண்டும். அம்மாதிரி விதிகள் இன்னும் 7—2—1959 வரையில் செய்யப் படவில்லை. அவைகளை அனுபந்தத்தில் அச்சிடுவோம்.

தலைவர் அல்லது உப-தலைவர் தேர்ந்தெடுக்கப்படாதபோது அனுசரிக்கப்பட வேண்டிய நடைமுறை

31. 30-வது பிரிவின்படி நடத்தப்பட்ட ஒரு தேர்தலில் தலைவர் அல்லது உப-தலைவர் தேர்ந்தெடுக்கப்படா விட்டால், சந்தர்ப்பத்துக்கேற்ப தலைவர் அல்லது உப-தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக மறுமுறை ஒரு தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

தலைவர், உப-தலைவரின் பதவி அற்றுப்போவது

32. (1) தலைவர் ஓர் அங்கத்தினர் என்னும் முறைமையில் அவருடைய பதவிக் கால அளவு கழிந்து போவதன் பேரிலும், வேறு விதமாக ஓர் அங்கத்தினராக இருப்பதனின்று நின்று போவதன் பேரிலும், அவர் அந்த முறைமையில் பதவி வகிப்பது நின்று போகும்.

(2) உப-தலைவர் அங்கத்தினர் என்னும் முறைமையில் அவருடைய பதவிக் கால அளவு கழிந்து போவதன் பேரிலும், அல்லது வேறு விதமாக அவர் அங்கத்தினராயிருப்பது நின்று போவதன், பேரிலும் அல்லது தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்படுவதன் பேரிலும், அந்த முறைமையில் உத்தியோகம் வகிப்பது நின்றுபோகும்.

(3) தலைவர் அல்லது உப-தலைவர் யாதொரு இதர பஞ்சாயத்தின் தலைவராகவோ உப-தலைவராகவோ, யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அக்கிராசனராகவோ, உப-அக்கிராசன ராகவோ தேர்ந்தெடுக்கப்படுவதன் பேரில், அவர் அந்த முறையில் உத்தியோகம் வகிப்பது நின்றுபோகும்.

குறிப்பு

ஒருவன் அறிந்து பிரஸிடெண்டாகவோ, வைஸ்-பிரஸிடெண்டாகவோ மெம்பராகவோ இல்லாத சமயத்தில் அம்மாதிரி நடந்து கொண்டால், அவன் பி. 182 படிக்குத் தண்டனைக் குட்படுவான். பிரசிடெண்டும். வைஸ் பிரசிடெண்டும் மெம்பரும் பிரதிபலன் அடையக் கூடாது பி. 39 பார்க்கவும்.

பிரசிடென்டுகளும், வைஸ்-பிரசிடென்டுகளும் அங்கத்தினர்களும் ராஜினமா செய்வது. பி. 178 (2) (V) கீழ் விதி

1. ப்ரெசிடென்டு அல்லாத வேறெந்த அங்கத்தினரேனும் ப்ரெசிடென்டுக்கு எழுத்து மூலமான நோட்டிஸ் கொடுத்து அதன் மூலமாய்த் தமது பதவியை ராஜினமா செய்யலாம். அந்த ராஜினமாவை ப்ரெசிடென்ட் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து அது அமுலுக்கு வரத் தொடங்கும்.

2. ப்ரெசிடென்டானவர் பஞ்சாயத்துக்கு எழுத்து மூலமான நோட்டிஸ் கொடுத்து அதன் மூலமாய்த் தமது பதவியை ராஜினமா செய்யலாம். அந்த ராஜினமாவைப் பஞ்சாயத்துக் கூட்டமொன்றில் வைக்கும் தேதியிலிருந்து அது அமுலுக்கு வரத் தொடங்கும்.

தலைவரின் அலுவல்கள்

33. (1) தலைவரானவர்—

(a) பஞ்சாயத்தின் சபைகளைக் கூட்டவேண்டும்.

(b) பஞ்சாயத்து தஸ்தாவேஜுகளைத் தாராளமாய் பார்வையிடக்கூடியவராயிருக்க வேண்டும்.

(c) இச் சட்டத்தினல் தலைவருக்கு விசேஷமாக விதிக்கப்பட்டிருக்கிற சகல கடமைகளையும் செய்யவும் கொடுக்கப்பட்டிருக்கிற சகல அதிகாரங்களையும் செலுத்தவும் வேண்டும்.

(2) தலைவர் மூலமாகவன்றி பஞ்சாயத்துக்கும் அரசாங்கத்தாருக்கும் இடையே ஆபீஸ் சம்பந்தமாய் எந்த கடித போக்கு வரத்தும் நடைபெறக்கூடாது. தலைவர் நிர்வாக உத்தியோகஸ்தரால் அரசாங்கத் தாருக்காவது, அரசாங்கத்தாரால் நிர்வாக உத்தியோகஸ்தருக்காவது தமது மூலமாய் அனுப்பப்பட்ட கடிதங்களை அவர்களுக்கு அனுப்ப கடமைப்பட்டவர் ஆவார்.

குறிப்பு

தலைவர் பி. 2 (26) 29, 37, 39	சபைகள் (மீட்டிங்குகள்)—பி. 46
தலைவர்கள், தேர்தல்கள் எலெக்ஷன் பி. 29, 30	பஞ்சாயத்து—பி. 2 (20), 8
	கடமைகள்—அதிகாரங்கள்—பி. 8 (2), 63, 64

பி. 33 (1) (c) தஸ்தாவேஜுகள்.—அட்டவணைகள் (ரிஜிஸ்தர்கள், அதாவது ரிகார்டு சம்பந்தமாய் தயாரிக்கப்பட்ட புஸ்தகங்கள்)-கையெழுத்துகள், ஒருவருக்கொருவர் எழுதிக் கொள்ளும் கடிதங்களின் பிரதிகள், கோர்ட்டு, சப் ரிஜிஸ்டிரார் ஆபீஸ் போன்றவற்றின் பத்திரங்கள் முதலிய யாவும் தஸ்தாவேஜுகள் என்றழைக்கப்படும். ஒரு அறிவிக்கப்பட்ட பட்டண பஞ்சாயத்தில் ஒரு நிர்வாக அதிகாரி அமர்த்தப்பட்டாலுங்கூட பிரஸிடெண்டு தஸ்தாவேஜுகளை தாராளமாய்ப் பார்வையிடலாம். பிரஸிடெண்டுகளுக்குத் தாராளமாய்ப் பார்வையிட நிர்வாக உத்யோகஸ்தர்கள் தஸ்தாவேஜுகளைக் காட்ட மறுத்தால் பிரமாதமான விசாரணை ஒன்றை இன்ஸ்பெக்டர் எடுத்துக்கொள்வார். அநாவசியமாக பிரஸிடெண்டுகளிடம் சண்டையிடுவதைக் காட்டிலும் தமது சௌகர்யம் பொருட்டு, நிர்வாக உத்தியோகஸ்தர்கள் பிரஸிடெண்டுகளுக்கு தஸ்தாவேஜுகளைத் தாராளமாய் பார்வையிட அனுமதிக்கப்பட வேண்டும். அதுபோலவே மெம்பர்களையும் ஆபீஸ் நேரங்களில் தஸ்தாவேஜுகளைத் தாராளமாய்ப் பார்க்கவிட வேண்டும். [செ. 38 (3) தஸ்தாவேஜுகளை காண்பிக்கும்படி செய்யப் பஞ்சாயத்திற்கு அதிகாரம் உண்டு (பி. 50)

முன் 1950ம் வருஷத்திய சட்டத்தில் உபதலைவரை தேர்ந்தெடுக்க ஏற்பாடுகளை தலைவர் செய்யவேண்டிய கடமையாக இருந்தது. அதை இந்த பிரிவில் எடுத்து விடப்பட்டது. அதை பின்னிட்டு விதிகளில் கவனிக்கலாம்.

பி. 33 (2) பஞ்சாயத்துக்கும், அரசாங்கத்திற்கும் உள்ள கடித போக்குவருத்தை தலைவர் மூலம் நிர்வாக உத்யோகி அனுப்பவேண்டும் :-இது ஒரு (eye-wash) ஏமாற்றம் ஆகும் அரசாங்கத்திற்கும் பஞ்சாயத்திற்கும் நேரடியாக கடித போக்குவருத்து வருஷத்திற்கு ஒரு முறைக்கூட இருக்காது. இந்த விஷயத்தில் மதராஸ் ராஜ்ய சட்டசபைகள் அங்கத்தினர்கள் தலைவர்களுக்கு அதிக மதிப்பும், செல்வாக்கும் உண்டாக்க எண்ணி இந்த (2)ம் உப பிரிவைச் சேர்த்தார்கள். அது பயனற்றதாக போய் விட்டது. அது கேரள பஞ்சாயத்து சட்டம் 38-ம் பிரிவின்படிக்கு, அரசாங்கம் உள்பட நிர்ணயிக்கப்பட்ட எல்லா அதிகாரிகளிடம் அனுப்பும் போக்கு வருத்து கடிதங்களை நிர்வாக உத்தியோகஸ்தர் தலைவர்மூலம் அனுப்பவேண்டும் என்று இருந்தால் கண்யமாக யிருக்கும். இதை கேரள சட்டத்தின்படிக்கு உடனே மாற்றினால் நன்றாக இருக்கும். அப்போதுதான் பட்டண பஞ்சாயத்து தலைவர்களுக்கும் இன்னது பட்டணம் பஞ்சாயத்துகளில் நடக்கிறதென்று தெரியும். அப்போது பட்டண பஞ்சாயத்துகளில் மக்குகள் தலைவர்களாக யிருப்பது குறைந்துவிடும். அப்படி சொல்வதினால் ஜில்லா முனிசிபாலிடிகளிலும் இப்பவும் மக்குகள் சேர்மன்களாக இல்லை என்று சொல்ல முடியாது.

தலைவரின் அலுவல்களை வேறொருவர் செய்ய வேண்டியவராய் இருப்பதும், அவைகளை வேறொருவருக்குப் பிரித்துக் கொடுப்பதும், தலைவர் பதவியில் ஏற்படுகிற காலி ஸ்தானங்களைப் பூர்த்தி செய்வதும்

34. (1) தலைவர் பதவி காலியாயிருந்தால் புதிய தலைவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதாகப் பிரசித்தம் செய்யப்பட்டு, அவர் பதவி வகிக்கத் தொடங்குகிற வரையில், தலைவர் அலுவல்களை உப-தலைவர் செய்ய வேண்டும்.

(2) தலைவரானவர் முப்பது தினங்களுக்கு மேற்பட்டு விசாரணை அதிகாரப் பிரதேசத்தில் தொடர்ச்சியாய் இராமல் போய் விட்டாலும், (வேலை செய்வதற்குச்), சக்தியற்றவராய் விட்டாலும் அவருடைய அலுவல்களை மேலே கண்டபடி அவர் இராமற் போய்விட்ட அல்லது சக்தியற்றவராய் விட்ட காலத்தில், நிர்ணயிக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்களில் தவிர மற்ற சந்தர்ப்பங்களில், உப-தலைவர் செய்ய வேண்டியவராவார்.

(3) தலைவர் பதவி காலியாயிருந்து அல்லது தலைவர் முப்பது தினங்களுக்கு மேற்பட்டு விசாரணை அதிகாரப் பிரதேசத்தில் தொடர்ச்சியாய் இராமற் போய்விட்டிருந்து அல்லது அவர் (வேலை செய்வதற்குச்) சக்தியற்றவராய்

விட்டிருந்து உப-தலைவரின் பதவி காலியாயிருந்தாலும், அல்லது உப-தலைவர் முப்பது தினங்களுக்கு மேற்பட்டு விசாரணை அதிகாரப் பிரதேசத்தில் தொடர்ச்சியாய் இராமல் போய் விட்டாலும், அல்லது அவர் (வேலை செய்வதற்கு) சக்தியற்றவராய் விட்டாலும், தலைவரின் அலுவல்களை இது விஷயமாய் இன்ஸ்பெக்டரால் நியமிக்கப்படும் பஞ்சாயத்து அங்கத்தினர் ஒருவர் செய்ய வேண்டியவராவார்.

ஒரு பஞ்சாயத்தின் அங்கத்தினர் அல்லது அவ்வாறு நியமிக்கப்பட்ட ஒருநபர் (இவர் தற்காலிகமாகத் தலைவர் என அழைக்கப்படுவார்). சந்தர்ப்பத்துக்கேற்ப புதிய தலைவர் அல்லது உப-தலைவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகப் பிரசித்தம் செய்யப்பட்டு அவர் தலைவர் பதவி வகிக்கிற வரையிலாவது, தலைவர் அல்லது உப-தலைவர் விசாரணை அதிகாரப் பிரதேசத்துக்குத் திரும்பி வருகிற வரையிலாவது, தம்முடைய அசமர்த்ததையினின்றும் (அதாவது இயலாமையில் இருந்து) குணமடைகிற வரையிலாவது, நிர்ணயிக்கப்படக் கூடிய வரையறைகளுக்கும், திட்டங்களுக்கும் உட்பட்டு, தலைவரின் அலுவல்களைச் செய்ய வேண்டும்.

(4) தலைவர் பதவியில் நேரிடுகிற யாதொரு காலியைப்பற்றி நிர்ணயிக்கப்படக் கூடிய நபராலும் அப்படி நிர்ணயிக்கப்படக்கூடிய காலத்துக்குள்ளும் தேர்தல் அதிகாரிக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். அந்த தேர்தல் அதிகாரி தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஏற்பாடு செய்ய வேண்டும்.

(5) (1), (2), (3) உட்பிரிவுகளிலே தலைவரின் அலுவல்களுக்குச் சம்பந்தப்பட்ட குறிப்பீட்டில் அவர் நிர்வாக அதிகாரியாகவுங்கூட இருக்கும் பட்சத்தில் நிர்வாக அதிகாரியாக அவருக்குள்ள அலுவல்களுக்குச் சம்பந்தப்பட்ட ஒரு குறிப்பீடும் அடங்குவதாகக் கருதப்படும்.

(6) தலைவர் (2) உட்பிரிவின்படி உப-தலைவர் செய்யவேண்டியதாயிருக்கிற எந்த அலுவல்களேனும் செய்யப்படுவதையாவது நிறை வேற்றப்படுவதையாவது மேல் விசாரணை புரிந்து புனராலோசனை செய்ய அதிகாரம் உடையவராவார்.

குறிப்பு

தலைவர்—பி. 2 (27), 8, 29— 37
வைஸ்-பிரஸிடெண்டு பி. 30
பிரஸிடெண்டின் வேலைகள் 43
மெம்பர் பி. 2 (17), பி. 33 38
இன்ஸ்பெக்டர் பி. 2 பி, 144, 145, 146
எலெக்ஷன் அதிகாரி பி. 2 (9)
விதிகள் பி. 178
நிர்வாக அதிகாரி செ. (10) 41, 42
புனராலோசனை செய்து திருத்துவது செ. 158.

பொது : பிரஸிடெண்டு ஸ்தானம் காலியாக இருக்கும்பொழுது வைஸ்-பிரஸிடெண்டு எதை நடத்தினாலும் அதைப் பிரஸிடெண்டு சாமான்யமாக மாற்றக்கூடாது. பிரஸிடெண்டு இருக்கும்போது அவருடைய அலுவல்கள் வைஸ்-பிரஸிடெண்டிற்குக் கொடுக்கப்பட்டாலும், அல்லது வைஸ்-பிரஸிடெண்டே அடைந்தாலும், அந்த சந்தர்ப்பத்தில் பிரஸிடெண்டானவர் வைஸ்-பிரஸிடெண்டின் உத்திரவுகளை மாற்றலாம். சப்-செக்ஷன்கள் (1) (6) களைக் கவனித்துப் பார்க்கவும். ஒரு பிரஸிடெண்டின் ஸ்தானம் காலியாகயுள்ளபோது வைஸ்-பிரஸிடெண்டு தான் இருந்து யாவற்றையும் நடத்தவேண்டும். வைஸ்-பிரஸிடெண்டின் ஸ்தானமும் காலியாயுள்ளபொழுது மெம்பர்களில்ஒருவரை இன்ஸ்பெக்டர் தற்காலிக பிரஸிடெண்டாக நியமிப்பார். அப்படி ஒரு தகுந்த மெம்பர் இல்லாதபொழுது இன்ஸ்பெக்டர் வெளியாரான ஒருவரை தலைவரின் அலுவல்களை நிறைவேற்ற ஏற்படுத்தலாம். (3)-ம் உப பிரிவை பார்க்கவும்.

இது பிரிவு 35-க்கு மாத்திரம் பொருந்தும்.

I. ப்ரெஸிடென்டின் அலுவல்கள் இன்னொருவரைச் சேருவதும் (அவற்றை இன்னொருவருக்குப் பிரித்துக் கொடுப்பதும்) விதிகள் பி. 34 படிக்கு-மொத்தம் 1 முதல் 10

1. ப்ரெஸிடெண்டானவர் தமது விசாரணை அதிகாரப் பிரதேசத்தைவிட்டு சென்னை ராஜ்யத்துக்குள் பிரஸ்தாப பஞ்சாயத்துக்குச் சம்பந்தப்பட்ட காரியமாக வெளியில் போயிருந்தால், அவருடைய அலுவல்கள், வைஸ்-ப்ரெஸிடெண்டுக்கு அலுவல்கள் எந்த அளவுக்கேனும் பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்தால் அந்த அளவுக்கன்றி மற்றப்படி, மேற்படி சட்டத்தின் 34-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்படி ஷ வைஸ்-ப்ரெஸிடெண்டைச் சேரமாட்டா.

குறிப்பு

பிரஸிடெண்டு மதருஸ் ராஜ்யத்தில் இருக்கும்வரையில் வைஸ்-பிரெஸிடெண்டு, பிரஸிடெண்டால் கொடுக்கப்பட்ட காரியங்கள்தான் செய்யவேண்டும். பிரெஸிடெண்டு யாதொரு காரியத்தையும் கொடாவிட்டால் வைஸ்-பிரெஸிடெண்டு யாதொன்றும் செய்வதற்கில்லையென்று ஏற்படுகிறது அம்மாதிரி 15 நாள் வரையில் தான் இருக்க முடியும், 15 நாள் பிறகும் பிரஸிடெண்டு கிராமத்திற்கு வராவிட்டால் வைஸ்-பிரஸிடெண்டு எல்லா காரியங்களும் செய்யலாமென்று செக்ஷன் 34 (2) படிக்கு ஏற்படுகிறது. 15 நாள் ஆன பிறகு வைஸ்-பிரஸிடெண்டுக்கு அதிகாரம் வரும் பக்ஷத்தில் வைஸ்-பிரஸிடெண்டு சகல காரியங்களையும் பிரஸிடெண்டு போலவே செய்யலாம்.

2. ஷ சட்டத்தின் 34-வது பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவின் பிரகாரம் பிரஸிடெண்ட் தாம் நிர்வாக அதிகாரியாகவும் இருக்கும் விஷயத்தில் நிர்வாக, அதிகாரியென்ற முறைமையில் தமக்குள்ள அலுவல்கள் உள்ளிட்ட தம் அலுவல்களில் எவற்றை வைஸ்-ப்ரஸிடெண்டுக்கோ யாதொரு அங்கத்தினருக்கோ பிரித்துக் கொடுக்கக் கூடாதெனப் பஞ்சாயத்து வெளிப்படையாய்த் தடுக்கிறதோ அவற்றை அவ்வாறு பிரித்துக் கொடுக்கலாகாது.

குறிப்பு

பிரஸிடெண்டு இருக்கும் காலத்திலும் வைஸ்-பிரஸிடெண்டுக்கு தன்னுடைய அலுவல்களில், எதை வேணுமென்ருலும், பிரஸிடெண்டு கொடுத்து விடலாம். ஆனல் பஞ்சாயத்து அம்மாதிரி கொடுக்கக்கூடாது என்று தீர்மானம் செய்தால் பிரஸிடெண்ட் கொடுக்கக்கூடாது. 3, 4, 5 விதிகள் படிக்கு ஒரு மெம்பருக்கு ஒரு வருஷத்தில் 90 நாளைக்கு மேல் யாதொரு அலுவலும் கொடுக்கக்கூடாது.

3. ப்ரெஸிடெண்ட் நிர்வாக அதிகாரியாகவும் இருக்கையில் நிர்வாக அதிகாரி என்ற முறைமையில் அவருக்குள்ள அலுவல்கள் உட்பட ப்ரெஸிடெண்டுக்குறிய அலுவல்கள் எந்த அங்கத்தினருக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அவரை அப்படிப் பிரித்துக் கொடுத்திருக்கும் காலத்தில் பிரதிநிதியாயுள்ள ப்ரெஸிடெண்ட் (ப்ரெஸிடெண்ட்-டெலிகேட்) என்றமைக்க வேண்டும்.

4. ப்ரெஸிடெண்ட் யாதொரு அங்கத்தினருக்கு அதிகாரம் பிரித்துக் கொடுப்பது சம்பந்தமாகப் பிறப்பித்த ஓர் உத்தரவு செலாவணியாய் கொண்டிருக்கையில் செலாவணியிலிருக்கும் அவ் வுத்தரவு எந்த அங்கத்தினருக்குச் சாதகமாகப் பிறப்பிக்கப்பட்டதோ அந்த அங்கத்தினரை தவிர வேறு யாதொரு அங்கத்தினருக்குச் சாதகமாக எந்த அலுவல்களையேனும் பிரித்துக் கொடுப்பது சம்பந்தமான பின்னுமொடு உத்தரவைப் பிறப்பிக்கக் கூடாது.

5. ப்ரெஸிடெண்ட் ஓர் அங்கத்தினருக்கு யாதொரு வருஷத்திலே மொத்தத்தில் தொண்ணூறு தினங்களுக்கு மேற்பட்ட ஒரு கால அளவுக்குப் பஞ்சாயத்தின் விசேஷ அனுமதியைப் பெருமல் அதிகாரம் எதையும் பிரித்துக் கொடுக்கக் கூடாது.

6. ப்ரெஸிடெண்ட் யாதொரு அங்கத்தினருக்கு அதிகாரம் பிரித்துக் கொடுப்பது சம்பந்தமாகப் பிறப்பித்த ஒவ்வொரு உத்தரவையும் பஞ்சாயத்துக்கு அதனுடைய அடுத்த கூட்டத்திலும், சம்பந்தப்பட்ட ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸருக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

7. ப்ரெஸிடெண்ட் தமது அலுவல்களை வைஸ்-ப்ரெஸிடெண்டுக்குப் பிரித்துக் கொடுப்பது சம்பந்தமாக 3 முதல் 6 வரையிலுள்ள விதிகளின் நிபந்தனைகள் பிரயோகப்படமாட்டா.

பக்கம் 85 பிரிவு 36-க்கு பதிலாக அடியில் யுள்ள சட்டத்தை பஞ்சாயத்து கூட்டு மன்றத்தின் முதன் அமைப்பில் படித்துக்கொள்ளவும்.

L. A. BILL No. 19 OF 1960 — (சட்ட சபை மசோதா 19, 1960)

MADRAS ACT 17 OF 1960

1960 ஆம் ஆண்டு தமிழ் நாட்டின் 17-வது சட்டம்

இந்த சட்டத்தை 1960-ஆம் செப்டெம்பர் மாதம் 17-ந் தேதியில் கெஜட்டு பாகம்—IV செக்ஷன் 4-ல் பிரசுரிக்கப்பட்டது.

AN ACT TO MAKE SPECIAL PROVISIONS FOR THE FIRST CONSTITUTION OF PANCHAYAT UNION COUNCILS UNDER THE MADRAS PANCHAYATS ACT, 35 OF 1958.

1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின்படி பஞ்சாயத்து கூட்டு மன்றங்களை முதன்முறையாய் அமைப்பதன் பொருட்டு சிறப்பு விதிகளைச் செய்வதற்கான சட்டம்.

1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின்படி (சென்னைச் சட்டம் 35/1958) பஞ்சாயத்து கூட்டு மன்றங்களை முதன் முறையாய் அமைப்பதற்காகச் சிறப்பு விதிகள் செய்வது பொருத்தமாயுள்ளபடியால்,

இந்தியக் குடியரசின் பதினொன்றும் ஆண்டில் பின்வருமாறு சட்டமியற்றப் படுவதாக :—

1. சுருங்கிய பெயர்.—இச் சட்டம், 1960-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் (முதன்முறையாக அமைப்பதற்கான சிறப்பு விதிகள்) சட்டம் எனப் பெயர் பெறும்,

2. முதல் பஞ்சாயத்து கூட்டு மன்றங்களின் அமைப்பும், அவற்றின் உறுப்பினர் களுடைய எண்ணிக்கையும் அவை நீடித்துள்ள கால அளவும்.—

(1) 1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டம் (சென்னைச் சட்டம் 35/1958) (இச் சட்டம் இதன்பின்னர் ஷை சட்டம் எனக் குறிப்பிடப்படுகிறது) என்ன சொல்லியிருப்பினும், ஆனால் (2) உட்பிரிவுக்குட்பட்டு—

(a) ஒரு பஞ்சாயத்து கூட்டுக்காக ஷை சட்டத்தின் கீழ் முதன் முறையாக அமைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து கூட்டு மன்றம் ஒன்றில் அந்தப் பஞ்சாயத்து கூட்டில் உள்ள பஞ்சாயத்துக்களின் தலைவர்கள் உறுப்பினர்களாய் இருக்கவேண்டும். இவர்கள் ஷை பஞ்சாயத்து கூட்டு மன்றத்தை அமைத்து ஷை சட்டத்தின் 11-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் வெளியான விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள தேதியன்று ஷை பஞ்சாயத்துத் தலைவர்களாகப் பதவி வகித்துவரவேண்டும் ; மேலும்,

(b) (a) பகுதியில் குறிப்பிட்டுள்ள பஞ்சாயத்து கூட்டு மன்ற உறுப்பினர் களின் பதவிக்கால அளவு, இம் மாநில அரசாங்கத்தால் அல்லது இது விஷயமாய் அவர்களிடமிருந்து அனுமதி பெற்றிருக்கிற ஓர் அதிகாரியால் விளம்பரம் மூலமாக, நிச்சயிக்கப்படக்கூடியதாய் இருக்க வேண்டும்.

(c) யாதொரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் அக்ராசனராகவோ, உப-அக்ராசனராகவோ தேர்ந்தெடுக்கப் படுவதினாலேயே தலைவர் அந்த முறையில் உத்தியோகம் வகிப்பது நின்று போகாது.

(2) (1) உட்பிரிவில் ஏற்பாடுசெய்திருக்கிறபடியன்றி மற்றப்படி, ஷ சட்டத்தின் எல்லா ஷரத்துக்களும் அந்த உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள பஞ்சாயத்து கூட்டு மன்றத்துக்கும் அந்தப் பஞ்சாயத்து யூனியன் மன்ற உறுப்பினர்களுக்கும் பயன்படும்.

காரிய-காரண விளக்கம்

1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின், கீழ் (சென்னைச் சட்டம் 35/1958) 1960, 1961-ம் ஆண்டுகளில் அமைக்கப்படவிருக்கிற பஞ்சாயத்து கூட்டு மன்றங்களுக்கு முதல் தடவையாக நடக்கும் தேர்தல்கள் அந்த மன்றங்களுக்கு இனிமேல் நடக்கப்போகும் தேர்தல்களிலிருந்து மாறுபட்டவையாகும். சுமார் 10,000 கிராமங்களில் பஞ்சாயத்துக்களின் தலைவர்களும் உப தலைவர்களும் முன்னரே தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டனர், இதனால் முதல் தேர்தல்கள் சிறப்பாக ஒரு பிரசினையை எழுப்புகின்றன. எஞ்சிய கிராமங்களிலும் இந்த ஆண்டில் பஞ்சாயத்து கூட்டு மன்ற உறுப்பினர்களின் தேர்தலுக்கு முன்னரே தேர்தல்களை நடத்த வேண்டியுள்ளது. சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின்படி, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் பஞ்சாயத்துத் தலைவரையும் உப தலைவரையும் தேர்ந்தெடுத்த வெகு நாளைக்குப் பிறகு பஞ்சாயத்து கூட்டு மன்ற உறுப்பினர் ஒருவரை தேர்ந்தெடுக்கும்படி அப் பஞ்சாயத்தைக் கேட்பது தவிர்க்க முடியாமல் உள்ளது. ஆகவே மீண்டும் தேர்தல் நடத்துவதைத் தவிர்ப்பதற்காக, பஞ்சாயத்துத் தலைவர் தம் அலுவல் காரணமாக பஞ்சாயத்து கூட்டு மன்ற உறுப்பினர் என அறிவிக்கப்படலாம் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1960, 1961-ம் ஆண்டுகளில் முதன் முறையாக அமைக்கப்படவிருக்கிற பஞ்சாயத்து கூட்டுகளைப் பொறுத்த வரையில் மட்டும் மேற்சொன்ன நோக்கத்தை நிறைவேற்றுவதே இம் மசோதாவின் உத்தேசமாகும். பஞ்சாயத்து கூட்டு மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது பற்றி சென்னை பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் ஷரத்துக்கள் இனிமேல் மீண்டும் அமைக்கப்பட விருக்கிற பஞ்சாயத்து கூட்டுகள் விஷயத்தில் அப்படியே அமுலுக்கு வரும். [மதராஸ் செயின்ட் ஜார்ஜ் கோட்டை பாகம் IV-A சப்ளிமெண்டு, தேதி 15-6-1960.]

விளம்பரம்

தேர்தல் விதிகளை அச்சிடவில்லை

காரணம் - அதை சமீபத்தில் மாற்ற போகிறுர்கள்

IN ENGLISH

The Madras Panchayats Act of 1958 with commentaries

will not be printed now as we have not yet received orders for 500 copies

பஞ்சாயத்துகள் விஷயத்தை பஞ்சாயத்துகள் சட்டத்துடனும் விதிகள் உடனும் சுப்ரீம் கோர்டு, ஹைகோர்டுகள் கேசுகளுடன் சேர்த்து வாசிக்கவேண்டும். இது மாறிகொண்டே இருக்கும். வசன காவியங்கள் செலாவனி ஆகாது. அறியவும்

Hindu Succession Act Ect., ... Rs. 2—4—0

Hindu Marriage Act ... Rs. 2-4-0

RAJAMBA DEVI & CO.,

BOOK - SHELLERS & PUBLISHERS

11-12, MOTILAL STREET, TIRUVALLUR.

(*Near*) MADRAS.

II. தற்காலிக ப்ரெஸிடென்டின் அலுவல்கள்—வரையறைகள்

8. ஷெ சட்டத்தின் 34 (3) பிரிவின்படி நியமிக்கப்பட்ட தற்காலிக ப்ரெசிடென்டான வர், வந்த ப்ரெசிடென்ட் நிர்வாக அதிகாரியாகவுமிருந்தால், பிரஸ்தாப பஞ்சாயத்தைச் சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரரை நியமிப்பது அல்லது அவருக்கு உத்யோக உயர்வு கொடுப்பது அல்லது அவரைத் தண்டிப்பது சம்பந்தமாக ப்ரெசிடென்டுக் குரிய அலுவல்களில் எவற்றையும் செய்யக்கூடாது.

III. ப்ரெஸிடென்ட் உத்யோகத்தில் காலி ஸ்தானம் ஏற்படுவதைத் தெரிவிப்பது-பி. 34 (4)

9. நிர்வாக உத்தியோகஸ்தராவது, நிர்வாக உத்யோகஸ்தர் எவரும் இராவிட்டால் வைஸ்-ப்ரெஸிடென்டாவது, வைஸ்-ப்ரெசிடென்ட் உத்தியோகத்தில் காலிஸ்தானம் ஏற்பட்டி ருந்தால் அல்லது வைஸ்-ப்ரெஸிடென்ட் தொடர்ச்சியாய்ப் பதினைந்து தினங்களுக்கு மேற்பட்டு விசாரணை அதிகாரப் பிரதேசத்தைவிட்டுச் சென்றிருந்தால் அல்லது சக்தியற்றவராக்கப்பட் டிருந்தால் பஞ்சாயத்து ஆபீஸ் இருக்கிற ரெவினியு கிராமத்தின் பெரியதனக்காரராவது ப்ரெசி டென்ட் உத்தியோகத்தில் ஏற்படுகிற காலிஸ்தானம் ஒவ்வொன்றையும் பற்றித் தேர்தல் அதி காரிக்கு ரிப்போர்ட் செய்யவேண்டும்.

10. 9-வது வீதியில் குறிப்பிட்டுள்ள ரிப்போர்ட்டை காலிஸ்தானம் ஏற்படுகிற தேதியி லிருந்து மூன்று தினங்களுக்குள் அனுப்பவேண்டும்.

தலைவரின் அலுவல்களைப் பிரித்துக் கொடுப்பது

35. நிர்ணயிக்கப்படக்கூடிய வரயறைகளுக்கும் மேல் விசாரணைக்கும் உட்பட்டு, தலைவர் எழுதியுள்ள உத்தரவு மூலமாக, தம்முடைய அலு வல்களில் எதையாகிலும், உப-தலைவருக்கோ உபதலைவர் இல்லாத விடத்து யாதொரு இதர அங்கத்தினருக்குப் பிரித் துக் கொடுக்கலாம். ஆனால், மேலே கண்டபடி பிரித்துக் கொடுக்கப்பட்ட எந்த அலுவல்களையாவது, நிறைவேற்றுவதோ, செய்வதோ, உப-தலைவரால் விதிக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்ட தாகும். மேலும், அது அவருடைய மேல் விசாரணைக்கும் அவரால் புனர் விமரிசை செய்து திருத்தப்படுவதற்கும் உட்பட்டதாகும்.

ஆனல் தலைவரை தன் அலுவல்களை தெளிவாக யாருக்கும் பிரித்து கொடுக்கக் கூடாதென்று பஞ்சாயத்து தடை செய்து இருக்கும் பக்ஷத்தில் அவர் தன் அலுவல் களை யாருக்கும் பிரித்து கொடுக்கக்கூடாது.

குறிப்பு

தலைவர் தானகவே தனக்குள்ள அதிகாரங்களை இந்த பிரிவின்படி பிரித்துகொடுக்கலாம். அவைகளை உபதலைவருக்கும் கொடுக்கலாம் அல்லது ஒரு அங்கத்தினருக்கும் கொடுக்கலாம். அவைகளை எல்லாம் தலைவர் பார்வை இடலாம். மாற்றவும் மாற்றலாம்.

அக்ராசனரும் உப-அக்ராசனரும்.

36. (1) ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கும் ஓர் அக்கிரா சனரும், உப அக்கிராசனரும் இருக்க வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் அக் கிராசனரும் உப அக்கிரா சனரும்

(2) பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் உத்தியோக முறையில் அங்கத்தினராயிராத மற்ற அங்கத்தினர்களிலிருந்து நிர்ணயிக்கப்படக்கூடிய நடைமுறைகளை அனுசரித்து அக்கிரா சனரும் உப அக்கிராசனரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இப்பிரிவின்படி நடந்த ஒருதேர்தலில் அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனர் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், சந்தர்ப்பத்துக்கேற்ப அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனரைத் தேர்ந்தெடுக்க ஒரு புதிய தேர்தல் நடத்தப்படவேண்டும்.

(3) அக்கிராசனரானவர்—

(a) பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் சபைகளைக் கூட்டவேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படிக்கும் அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளின் படிக்கும் அக்கிராசனருக்குப் பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அல்லது கொடுக்கப்பட்டிருக்கும் சகல கடமைகளையும் செய்து சகல அதிகாரங்களையும் செலுத்தவேண்டும்.

(4) பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலைச் சேர்ந்த சகல ரெகார்டுகளும் அக்கிராசனர் தாராளமாய்ப் பார்க்கக் கூடியபடி இருக்கவேண்டும். மேலும், அக்கிராசனர் மூலமாகவன்றி கவுன்ஸிலுக்கும் அரசாங்கத்தாருக்கும் இடையே ஆபீஸ் சம்பந்தமாய் எந்தக் கடிதப் போக்குவரத்தும் நடைபெறக் கூடாது. அக்கிராசனர் கமிஷனரால் அரசாங்கத்தாருக்காவது, அரசாங்கத்தாரால் கமிஷனருக்காவது தமது மூலமாய் அனுப்பப்படும் கடிதங்களை அனுப்பக் கடமைப்பட்டவராவார்.

(5) அக்கிராசனர், பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் ஒவ்வொரு கமிட்டியிலும் தம்முடைய உத்தியோக முறைமையில் அங்கத்தினராயிருப்பார்.

(6) அக்கிராசனர், ஓர் அங்கத்தினர் என்ற முறைமையில் பதவி கால அளவு காலாவதியாகிவிட்டால் அல்லது மற்றபடி ஓர் அங்கத்தினராக இருப்பது அற்றுவிட்டால் அக்கிராசனர் என்ற முறைமையில் தமது பதவியைக் காலி செய்ததாகக் கருதப்படுவார்.

(7) உப அக்கிராசனர்—

(i) ஓர் அங்கத்தினர் என்ற முறைமையில் பதவிக் கால அளவு காலாவதியாகிவிட்டால் அல்லது மற்றபடி ஓர் அங்கத்தினராக இருப்பது அற்றுவிட்டால், அல்லது,

(ii) ஓர் அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால்,

தமது பதவியைக் காலி செய்ததாகக் கருதப்படுவார்.

குறிப்பு

பகுதிகள் 36 37.—பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில் ஒவ்வொன்றுக்கும் அக்கிராசனம், உப அக்கிராசனர் இவர்களை தேர்ந்தெடுக்கவும் அவர்களுடைய பதவியில் காலி ஸ்தானங்களேற்பட்டால் அவற்றை நிரப்பவும் அவர்களுடைய அலுவல்களை இன்னுரைச் சேருமென்றும் இன்னுருக்குப் பிரித்துக் கொடுக்கப்படும் என்றும் சொல்லவும் அவர்களுடைய கடமைகள், அதிகாரங்கள் இன்னவை என்று குறிப்பிடவும் இந்தப் பகுதிகளில் ஷரத்து கண்டிருக்கிறது.

அக்ராசனர்-உப அக்ராசனர்.— தலைவரும், உபதலைவரும் ஒரு பஞ்சாயத்துக்கு எப்படி பாத்யதை யுள்ளவர்களோ, அதேமாதிரியான பாத்யதையை பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் அக்ராசனரும்-உப அக்ராசனரும் உடையவர்கள் ஆவார். 29 முதல் 35 வரையிலுள்ள பிரிவுகளும் அவைகளின் கீழ் உள்ள குறிப்புகளும் அக்ராசனர்-உப அக்ராசனர் சம்பந்தமான பிரிவுகள் 36, 37க்கு பொருந்தியதாகும்.

பி. 36 (2) இவர்களை தேர்ந்தெடுக்கும் விதிகள் இனி செய்யப்படும் அவைகளும் பஞ்சாயத்து தலைவர்களையும் உப தலைவர்களையும் தேர்ந்தெடுக்கும் விதிகளாக யிருக்கும்.

பி. 36 (3) இது பி. 33 மாதிரியுள்ளதை கவனிக்கவும்.

பி. 36 (4) இம்மாதிரி கடிதங்கள் வருஷத்திற்கு ஒரு முறை உண்டாக்குவது கடினமாகும். இதனுல் அக்ராசனுதிபதிக்கு யாதொரு நம்பகமும் கௌரவமும் தந்ததாக என்ன நியாயமில்லை. மேல் பதவியில் உள்ள உத்யோகஸ்தர்களுக் கெல்லாம் எழுதும் கடிதங்களை அக்ராசனர் மூலம் தான் கேரளத்தில் உள்ள மாதிரி போக வேண்டுமென்றிருந்தால் அப்போது அது ஜனனுயகம் ஆகும். இப்போது சொல்வதற்கு இல்லை.

பி. 36 (5) இங்கே பி. 53 பார்க்கவும்.

பி. 36 (6) (7 இது பி. 32யை போன்றது.

பி. 36-(2)-ன் கீழ் விதிகள்

மதராஸ் பஞ்சாயத்து கூட்டு மன்றங்களின் (அக்கிராசனருடையவும்—உப அக்கிராசனருடையவும்—தேர்தல்) விதிகள் 1960

(ஜி. ஓ. மிஸ். நெம்பர் 1611, எல். எ. தேதி 27 செப்டம்பர் 1960.)

இவை 36 (2)-வது பிரிவின் கீழ் செய்யப்பட்டவை.

1. இந்த விதிகளை மதராஸ் பஞ்சாயத்து கூட்டு மன்றங்களின்—(அக்கிராசனருடைய வும் உப-அக்கிராசனருடையவும்—தேர்தல்) விதிகள் 1960 என்று கூறலாம்.

அக்கிராசனர் உப-அக்கிராசனர் தேர்தல் விதிகள்

2. அக்கிராசனருடையவும்—உப-அக்கிராசனருடையவும் தேர்தலை அதற்கென்று தனியாக கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் பஞ்சாயத்து கூட்டு ஆபீசில் (அலுவலகத்தில்) நடத்த வேண்டும்.

3. (1) ஒரு பஞ்சாயத்து கூட்டு மன்றத்தின் அக்கிராசனாதிபதியின் தேர்தலுக்காக நடத்தப்படும் கூட்டத்தை—அந்தபதவி காலி ஆனபொழுது, கூடிய விரைவில்

(a) ஒரு பஞ்சாயத்து கூட்டு புதியதாக உண்டாக்கியபொழுதும் அல்லது ஒரு சாதாரண காலி ஸ்தானத்தை நிரவவேண்டியபொழுதும், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் அவர்களால் மேலும்.

(b) மீதி எல்லா கேசுகளிலும் உப-அக்கிராசனாதிபதியாலும் மேலும் உப-அக்கிராச னாதிபதியின் பதவி காலியாக இருந்தாலும் அல்லது அவர் 15-ந்து நாளைக்கு மேல் பஞ்சா யத்து கூட்டு மன்றத்தின் வரம்புக்குள் ஆஜராக இல்லாவிட்டாலும், அல்லது சக்தி அற்றவனாக இருந்தாலும்—ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் அவர்களால் கூட்டம் கூட்டப் படவேண்டும்.

(2) ஒரு உப-அக்கிராசனாதிபதியின் தேர்தலுக்கான கூட்டத்தை அது காலியான கூடிய விரைவில் அக்கிராசனாதிபதி அவர்களால் கூட்டப்படவேண்டும்.

(3) கூட்டத்தினுடைய நாளையும் மணியையும் கூட்டத்தேதியிலிருந்து 7 பூர்த்தியான பிறகு நாட்களுக்கு முந்தியே அறிக்கையில் தெரியப்படுத்தவேண்டும்.

4. (1) பஞ்சாயத்து கூட்டு மன்றத்தின் அக்கிராசனரை தேர்ந்தெடுக்கும் கூட்டத்தில்

(i) ஒரு பஞ்சாயத்து கூட்டு மன்றம் புதியதாக ஏற்படுத்திய சமயத்தில் அல்லது ஒரு காலிஸ்தானத்தை நிரவவேண்டிய சமயத்திலும், ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் அவர்களும்,

(ii) மீதி சமயங்களில் உப-அக்கிராசனாதிபதியாலும்—மேலும் உப-அக்கிரா சனாதி பதவி காலியாக இருக்குமாகிலும், அல்லது அவர் பஞ்சாயத்து கூட்டு மன்ற வரம்புக்குள் 15-நாள் ஆஜராக இல்லாமல் இருந்தாலும்—ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் அவர்களும்.

(iii) மேலும் அந்த தேர்தலில் உப-அக்கிராசனாதிபதி ஒரு அபேட்சகராக இருந் தாலும், அல்லது அவர் அந்த கூட்டத்தில் இல்லாதபொழுதும், அந்த தேர்தலில் அபேட் சகராக நிற்காத ஒரு அங்கத்தினரை அந்த சமயத்திற்கு அந்த தேர்தலை நடத்த அங்கே ஆஜராகியிருக்கும் அங்கத்தினர்களால் ஏற்படுத்தப்பட்ட அங்கத்தினரும்—கூட்டத்தின் தலைவராக இருக்கவேண்டும்.

(2) உப-அக்கிராசனாதிபதியை தேர்ந்து எடுக்கும் கூட்டத்திற்கு அக்கிராசனாதிபதி தலைமை தாங்கவேண்டும். அவர் இல்லாவிட்டால், தேர்தலுக்கு அபேட்சகராக நிற்காத ஒரு அங்கத்தினரை அந்த தேர்தலுக்கு என்று ஆஜராகியுள்ள அங்கத்தினர்கள் ஏற்படுத் திக்கொள்ள வேண்டும்.

(3) இந்த விதிகளில் '' கூட்டத்தின் தலைவர்'' என்றால் ''ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் ''அக்கிராசனாதிபதி'' ''உப-அக்கிராசனாதிபதி'' அல்லது ''விதிகளின் படிக்கு அக்கிரா சனாதிபதி அல்லது உப-அக்கிராசனாதிபதியின் தேர்தலுக்கு என்று பொருக்கப்பட்ட அங் கத்தினர்'' என்று பொருள்படும்.

5 அக்கிராசனாதிபதியாகவோ தேர்ந்தெடுக்க விரும்பும் ஒவ்வொரு அபேட்சகரையும் எழுத்து மூலமாக நேமகம் செய்யப்படவேண்டும். அந்த நேமகச் சீட்டில் பஞ்சாயத்து கூட்டு மன்றத்தின் இரண்டு அங்கத்தினர்கள்—அவர்களில் ஒருவர் பிரேரேபிப்பவராக வும் மற்றொருவர் ஆமோதிப்பவராகவும்—கையெழுத்து செய்து இருக்கவேண்டும். பிரே ரேபிக்கிறவர், அவர் ஒரு அபேட்சகரின் பெயரை பிரேரேபிக்கும் போது கூட்டத்தின் தலைவருக்கு ஒரு அபேட்சகரின் உறுதி மொழி கொடுக்கவேண்டும். அந்த உறுதி மொழி யில் அந்த அபேட்சகர் ஒரு அக்கிராசனாதிபதியாகவோ, உப-அக்கிராசனாதிபதியாகவோ இருக்க விரும்புகிறார் என்று அவராலும் அபேட்சகராலும் ஆமோதிக்கிறவராலும் கை யெழுத்துபோட்டு இருக்கவேண்டும்.

6. பிரேரேபிக்கப்பட்டதும், ஆமோதிக்கப்பட்டதும் ஆன அபேட்சகர்களின் பெயர்களை கூட்டத்தின் தலைவரால் அந்த கூட்டத்தில் இருக்கும் அங்கத்தினர்களுக்கு படித்து காட்டவேண்டும்.

7. பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அக்கிராசனாதிபதியின் பதவிக்கு ஒரே ஒரு அபேட்ச கர் நியமிக்கப்பட்டு இருந்தால், அப்போது வோட்டு எடுப்பது கிடையாது. அந்த அபேட்ச கரை அக்கிராசனாதிபதியாகவோ, உப-அக்கிராசனாதிபதியாகவோ கிரமப்படிக்கு தேர்ந்து எடுத்ததாக பகிரங்கப் படுத்த வேண்டும்.

8. அபேட்சகர்களின் எண்ணிக்கை 1-க்கு மேல் இருந்தால், இந்த விதிகளில் உள்ளபடி அந்த கூட்டத்தில் உள்ள அங்கத்தினர்களின் வோட்டுகளை ரகசியமாக பின்வரும் விதிகள் படிக்கு தேர்ந்து எடுக்க வேண்டும்.

9. கூட்டத்தின் தலைவர், கூட்டம் நடக்கும் இடத்தில் அங்கத்தினர்கள் பார்க்காமல் ரகசி யமாக வோட்டு செய்வதற்கு ஒரு தடுக்கப்பட்ட அறையை ஏற்படுத்தவேண்டும். கூட் டத்தின் தலைவர், கூட்டத்தின் தலைவருடையவும், அங்கத்தினர்களுடையவும் பார்வையில் ஒரு வோட்டு சீட்டுகளை பெரும் பெட்டியை வைக்கவேண்டும். அந்த வோட்டு பெட்டியில் வோட்டு சீட்டுகளை நுழைக்க முடியாதாகவும், ஆனால் அதிலிருந்து சாவிபோட்டு அல்லது திறந்தால் அன்றி அதிலிருந்து வோட்டு சீட்டுகளை எடுக்க முடியாமல் இருக்கும்படி அந்த வோட்டு பெட்டியை செய்யவேண்டும்.

10. வோட்டு எடுப்பதற்கு முந்தி வோட்டு பெட்டிகாலியாக இருப்பதாக அங்கிருக்கும் அங் கத்தினர்களுக்கு பார்வையிட காட்டி அந்த பெட்டியை பூட்டி அதன்மீது ஒரு சீல்வைக்க வேண்டும். அந்த சீலை உடைக்காமல் அந்த பெட்டியை திறக்க முடியாமல் வைக்க வேண்டும்.

11. வோட்டுச் செய்ய விரும்பும் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஒரு வோட்டுச் சீட்டை கொடுக்கவேண்டும். அந்த பேப்பரில் இங்கிலீஷிலும் (ஆங்கிலத்திலும்) தமிழிலும் எல்லா அபேட்சகர்களின் பெயர்களை தெரியும்படியாக அடியில் கண்ட மாதிரி விட்டு எழுத வேண்டும்.

வோட்டு சீட்டு

..............பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அக்கிராசனாதிபதி அல்லது உப-அக்கிராசனாதிபதி யின்தேர்தலுக்காக கிரமப்படி ஏற்படுத்தப்பட்ட அபேட்சகர்களின் பெயர்கள்.

A. எ. B பி. C. சி. D. டி.

இந்த வோட்டு சீட்டை அங்கத்தினருக்கு-கொடுப்பதற்கு முந்தி அதில் தலைவரின் கையெழுத்தை போட்டிருக்கவேண்டும்.

12. அங்கத்தினர் வோட்டு பேப்பரை பெற்றுக் கொண்டதும், வோட்டு பதிவு செய்வதற்காக தனியாக ஏற்படுத்திய அறையில் சென்று அவர் யாருக்கு வோட்டு செய்ய விரும்புகிறாரோ அந்த அபேட்சகரின் பெயருக்கு நேராக ஒரு கிராஸ் குறியை அந்த வோட்டு சீட்டில் வைக்கவேண்டும். அந்த வோட்டின் அறையை விட்டு வெளியே வருவதற்கு முந்தி அந்த வோட்டு சீட்டில் உள்ள குறியை தெரியாமல் இருக்கும்படி மடித்து அதை கூட்டத்தின் தலைவரின் முந்தி இருக்கும் வோட்டு பெட்டியில் போட வேண்டும்.

13. கூட்டத்தின் தலைவர் தேர்தலின் ரகசியத்தை உறுதிப்படுத்துவதற்காக முன்னதாக வோட்டு செய்த அங்கத்தினர்களை பின்னிட்டு வோட்டு செய்யவேண்டிய மெம்பர்களுடன் கலக்காமல் இருப்பதற்காக தக்க ஏற்பாடுகளை செய்யவேண்டும் வோட்டு சீட்டுகள் அநேக மாதிரிகளாக இருந்தால் அது தேர்தலின் ரகசியத்தை மீறியதாக கருதப்படும்.

14. (1) படிக்க தெரியாமையாலோ, குருடாக இருப்பதினாலேயோ, அல்லது சரீர பலஹீனத்தினாலேயோ ஒரு அங்கத்தினர் வோட்டு சீட்டைப் படித்து வோட்டு சீட்டின் பேரில் குறியை வைக்கவும் சக்தியற்றவராய் இருந்து, வோட்டு செய்ய உதவி செய்ய கோருவாராகில் தேர்தல் உத்தியோகஸ்தர், வோட்டரின் இஷ்டப்படிக்கு வோட்டு சீட்டில் குறியிட்டு, அந்த குறியை தெரியாதபடிக்கு அந்த வோட்டுசீட்டை மடிக்கவேண்டும்.

(2) வோட்டர் பிறகு தானாகவோ, அல்லது தேர்தல் உத்தியோகஸ்தரின் உதவியினாலேயோ, அந்த வோட்டு சீட்டை வோட்டு பெட்டியில் போட வேண்டும்.

(3) இந்த விதியின்கீழ் தேர்தல் அதிகாரி நடந்து கொள்ளும்போது எவ்வளவுக்கு எவ்வளவு ரகசியமாக தேர்தல் விஷயத்தை மர்மமாக வைத்துக்கொண்டு அதன் விஷயத்திற்காக ஒரு ரிகார்ட் (எழுத்து மூலமாக) வைத்துக்கொள்ளவேண்டும். ஆனால் அந்த ரிகார்ட்டில் வோட்டு எப்படிக்கு கொடுக்கப்பட்டது என்பது கண்டிருக்கக் கூடாது.

15: அங்கத்தினர்கள் வோட்டு செய்வது முடிந்த பிறகு அங்கிருக்கும் அங்கத்தினர்களின் பார்வையில் கூட்டத்தின் தலைவர் வோட்டு பெட்டியை திறந்து அதிலிருந்து வோட்டு சீட்டுகளை எடுத்து ஒவ்வொரு அபேட்சகரால் பெற்ற வோட்டுகளின் எண்ணிக்கைகளின் ஜாபிதாவை தயாரிக்க வேண்டும்.

16. எந்த வோட்டு சீட்டில்

(a) ஒரு கிராஸ் மார்க்கு குறி இல்லையோ,

(b) ஒரு அபேட்சகருக்கு அதிகமாக மற்றொரு அபேட்சகருக்கும் ஒரு குறி போட்டிருக்கிறதோ அல்லது எந்த அபேட்சகருக்கு அந்த குறி போடப்பட்டதென்று சந்தேகமாக யிருக்கிறதோ,

(c) ஒரு கிராஸ் குறியும் மற்றொரு குறியும் ஒரு அபேட்சகருடைய பெயருக்கு எதிரில் இருந்தாலும்.

(d) யாதொரு குறியினால் ஒரு வோட்டரை கண்டு பிடிக்க முடியுமோ அம்மாதிரியான குறி இருந்தாலும், அந்த மாதிரியான வோட்டு சீட்டு செல்லத் தக்கினதல்ல.

17. (1) இரண்டு அபேட்சகர்கள் இருக்கும்போது எந்த அபேட்சகர் அதிகமான வோட்டுகள் பெற்றிருக்கிறாரோ அவரை தேர்ந்தெடுத்ததாக பிரசித்தம் செய்யவேண்டும். இந்த இரண்டு அபேட்சகர்களின் வோட்டுசீட்டுகள் சமமாக இருந்து அத்துடன் அந்த இரண்டு அபேட்சகர்களில் ஒருவருக்கு ஒரு வோட்டு அதிகமாக இருந்தால், அவர் தேர்ந்து எடுக்கப்பட்டதாக பிரசித்தம் செய்யவேண்டியதாய் இருந்தால் கூட்டத்தின் தலைவர் அங்கே உள்ள அங்கத்தினர்களின் முன்னில் எந்த அபேட்சகருக்கு அந்த அதிகமான வோட்டை அளிப்பதென்று அறிய சீட்டு குலுக்கி போட்டு தீர்ப்பு கூறவேண்டும்.

(2) மூன்று அபேட்சகர்களாக இருக்கும்போது அவர்களில் ஒருவர் வோட்டுகளில் பேர்பாதிக்குமேல் வோட்டுகளை பெற்றிருந்தால் அவரை கிரமப்படிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டவரென்று பிரசித்தம் செய்யவேண்டும். அவர்களில் யாருக்கும் பேர்பாதிக்குமேல் வோட்டுக்கள் கிடைக்காவிட்டால், அவர்களில் யாருக்கு குறைந்த வோட்டுகள் உள்ளதோ அவரை நீக்கிவிட்டு ஒரு இரண்டாவது தேர்தல் நடத்தவேண்டும். எல்லா அபேட்சர்களுக்கும் வோட்டுகள் சமமாக கிடைத்திருந்தால் கூட்டத்தின் தலைவர் அங்கத் தினர்களின் எதிரில் சீட்டு குலுக்கிபோட்டு ஒருவரை நீக்கி விடவேண்டும். இரண்டா வது தேர்தல் நடத்த வேண்டும். அதின் முடிவை (1)–வது உபவிதியில் உள்ள ஷரத்துக் கள் படிக்கு பிரசித்தம் செய்யவேண்டும்.

(3) மூன்று அபேட்சகர்களுக்குமேல் அதிகமாக இருக்கும்போது அவர்களில் ஒருவர் வோட்டுகளில் பேர்பாதிக்குமேல் வோட்டுகள் பெற்றிருந்தால் அவரை கிரமப்படிக்கு தேர்ந்து எடுக்கப்பட்டவரென்று பிரசித்தம் செய்யவேண்டும். அபேட்சர்களில் பேர்பாதி வோட்டுகளுக்குமேல் யாரும் பெற்று இராவிட்டால் அவர்களில் முதலில் அதிக வோட்டு பெற்றிருக்கிறவருக்கும். இரண்டாவதாக அதிகவோட்டு பெற்றிருக்கிறவருக்கும்—இரண் டாவது தேர்தல் நடத்த வேண்டும். இந்த இரண்டு அபேட்சகர்களுக்குமேல் உள்ளவர் களுக்கு சமவோட்டுகளிருந்தால், அதாவது யாருக்கு இரண்டாவதாக அதிக வோட்டு கள் கிடைத்ததாக அறியவேண்டியிருக்கிறதோ அப்போது கூட்டத்தின் தலைவர் அங் கிருக்கும் அங்கத்தினர்களின் எதிரில் சீட்டுகள் குலுக்கி போட்டு அதில் யாருடைய பெயர் முதலில் வருகிறதோ அவரை இரண்டாவதாக அதிகமான வோட்டுகளை பெற்றவ ராக கருதப்பட வேண்டும். இரண்டாவது தேர்தல் நடத்தி அந்த முடிவை ஓராவது விதி யில் கண்ட ஷரத்துகள்படிக்கு பிரசித்தம் செய்யவேண்டும்.

18. கூட்டம் முடிந்த உடன் கூட்டத்தின் தலைவர்

(a) கூட்டத்தின் நடவடிக்கைகளின் விஷயத்தை (ரிக்கார்டு) தயார் செய்து கை யொப்பம் இடவேண்டும். அதில் திருத்தங்கள் இருந்தால் முதல் எழுத்துக்கள் (இனிஷ யல்ஸ்) அங்கே வைக்கவேண்டும். ஏதாவது ஒரு அங்கத்தினர், அந்த ரிக்கார்டில் கை யொப்பம் போட விரும்பினல், அவர் அதில் கையொப்பம் செய்ய அனுமதிக்கவேண்டும்.

(b) அந்த தேர்தலின் முடிவை இன்ஸ்பெக்டர் அவர்களுக்கும், அரசாங்கத் தாரால் பொதுவான அல்லது தனியான உத்திரவினல் குறிப்பிடப்பட்ட உத்தியோகஸ் தருக்கு அல்லது அதிகாரிக்கு அனுப்பவேண்டும்,

(c) பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தின் நோட்டீஸ் போர்ட்டில் தேர்ந்து எடுக்கப்பட்ட அக்கிராசனதிபதி அல்லது உப-அக்கிராசனதிபதியின் பெயரை ஒரு விளம் பரத்தில் எழுதி கையொப்பமிட்டு பிரசுரிக்க வேண்டும். மேலும் அரசாங்கத்தார் பொது வாக அல்லது தனியாக குறிப்பிட்ட உத்திரவுபடிக்கு இந்த விளம்பரத்தை பிரசுரிக்க வேண்டும்.

19. (1) கூட்டத்தின் தலைவர் அதன் பிறகு வோட்டு சீட்டுகளை தனிப்பட்ட பொட்டலமாக பாக் கெட்டாக செய்து அந்த பொட்டலத்திற்கு முத்திரையிட்டு அதன்பேரில் அதின் பொருளடக்கத்தையும் எந்த தேர்தலுக்கு சம்மந்தமான தென்றும் அதனுடைய தேதியை யும் குறிப்பிட்டு இருக்கவேண்டும்.

(2) அந்த பொட்டலங்களை திறக்கக் கூடாது. மேலும் ஒரு தேர்தல் அல்லது தகுதி யான கோர்ட்டின் உத்தரவின்றி அவைகளின் பொருளடக்கத்தை பார்வையிடவும், அல்லது வெளிகொண்டுவரவும் கூடாது.

(3) அந்த பொட்டலங்களை ஒரு பத்திரமான இடத்தில் பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ் அலுவலகத்தில் ஒரு வருடம் வரையில் வைத்துக் கொண்டு இருக்கவேண்டும். அதன் பிறகு தகுதியான கோர்ட்டாரால் மற்றப்படி உத்திரவிட்டாலன்றி கலைத்து நாசம் செய்து விட வேண்டும்.

அக்கிராசனரின் அலுவல்களை வேறொருவர் செய்ய வேண்டியிருப்பதும், அவைகளை வேறொருவருக்குப் பிரித்துக் கொடுப்பதும், அக்கிராசனர் பதவியில் ஏற்படுகிற காலி ஸ்தானங்களைப் பூர்த்தி செய்வதும்.

37. (1) அக்கிராசனர் பதவி காலியாயிருந்தால், புதிய அக்கிராசனர் ஒருவர் பதவி ஏற்றுக்கொள்ளுகிற வரையில், அக்கிராசனரின் அலுவல்களை உப-அக்கிராசனர் செய்யவேண்டும்.

(2) அக்கிராசனர் பதவி காலியாயிருந்து, உப-அக்கிராசனர் பதவியில் காலியிருந்தாலும் அல்லது உப-அக்கிராசனர் முப்பது தினங்களுக்கு மேற்பட்டு விசாரணை அதிகாரப் பிரதேசத்தில் தொடர்ச்சியாய் இராமற்போய்விட்டிருந்தால் அல்லது அவர் வேலை செய்யச் சக்தியற்றவராய் விட்டிருந்தாலும், ரெவினியு டிவிஷனல் உத்தியோகஸ்தரானவர், அங்கத்தினர்களுக்கு ஏழு முழு நாட்களுக்குக் குறையாத நோட்டிஸ் கொடுத்த பிறகு, ஓர் அக்கிராசனரைத் தேர்ந்தெடுப்பதற்காகச் சபை கூட்டவேண்டும்; மேலும், ரெவினியு டிவிஷனல் உத்தியோகஸ்தரானவர், புதிய அக்கிராசனர் அல்லது உப-அக்கிராசனர் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி ஏற்கிற வரையிலாவது, உப-அக்கிராசனர் விசாரணை அதிகாரப் பிரதேசத்துக்கு திரும்பி வருகிற வரையிலாவது, தம்முடைய அசமர்த்தையினின்று குணமடைகிற வரையிலாவது, இச் சட்டத்திலும், அதன்படிச் செய்யப்பட்ட விதிகள் அல்லது விளம்பரங்களிலும் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாமலே, பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் உத்தியோக முறை அங்கத்தினராகவும் அக்கிராசனராகவும் இருக்கவேண்டும்.

(3) (பதவிக் காலம் முடிந்து) வெளியே போகும் அக்கிராசனரும் உப அக்கிராசனரும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரிமையுள்ளவராவார்.

(4) அக்கிராசனர் எழுத்து மூலமான உத்தரவினால் அவருடைய அலுவல்களில் எதையாவது உப அக்கிராசனருக்குப் பிரித்துக் கொடுக்கலாம்.

ஆனால், பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் வெளிப்படையாகத் தடை செய்யும் யாதொரு அலுவல்களை அவர் பிரித்துக் கொடுக்கக்கூடாது.

(5) அக்கிராசனர் விசாரணை அதிகாரப் பிரதேசத்திலிருந்து தொடர்ச்சியாய் முப்பது தினங்களுக்கு மேற்பட்டிராமல் போய்விட்டாலும் அல்லது, அவர் (வேலை செய்வதற்கு) சக்தியற்றவராய்விட்டாலும், அப்படி அவர் இல்லாத காலத்திலும், அல்லது அவருடைய அசமர்த்ததை காலத்திலும், நிர்ணயிக்கப்படக்கூடியபடியுள்ள அத்தகைய சந்தர்ப்பங்களிலன்றி மற்றப்படி அவருடைய அலுவல்கள் உப அக்கிராசனரால் செய்யப்பட வேண்டும்.

(6) உப-அக்கிராசனரும் விசாரணை அதிகார பிரதேசத்தில் முப்பது தினங்களுக்கு மேற்பட்டு தொடர்ச்சியாய் இராமல் போய்விட்டாலும், அவர் (வேலை செய்வதற்குச்) சக்தியற்றவராய் விட்டாலும், அல்லது உப அக்கிராசனரின் உத்தியோகம் காலியாக இருந்தாலும், எழுத்து மூலமாக அவருடைய அலுவல்களை அக்கிராசனரானவர், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் யாதொரு அங்கத்தினருக்கு பிரித்துக் கொடுக்க வேண்டும். அவ்வாறு பிரித்துக் கொடுக்கப்படும் காலத்தில் அவர் 'சேர்மன் டெலிகேட்' என அழைக்கப்படுவார்.

ஆனால்—

(i) இந்த உட்பிரிவின்படிப் பிரித்துக் கொடுப்பதைப்பற்றிய ஓர் உத்தரவு அமுலிலிருக்கையில், தற்போதுள்ள உத்தரவு எந்த அங்கத்தினர் சார்பாகச் செய்யப்பட்டதோ அந்த அங்கத்தினரைத் தவிர வேறு யாதொரு அங்கத்தினர் சார்பாக, யாதொரு அலுவல் பிரித்துக் கொடுக்கும் உத்தரவு எதுவும் செய்யப்படலாகாது.

(ii) இந்த உத்தரவின்படி, பிரித்துக் கொடுப்பதானது, பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் விசேஷ அனுமதியின்றி, எந்த வருஷத்திலும் மொத்தத்தில் 90 தினங்களுக்கு மேற்பட்ட யாதொரு கால அளவுக்குச் செய்யப்படக்கூடாது.

(iii) இந்த உட்பிரிவின்படிச் செய்யப்பட்ட ஒவ்வொரு உத்தரவும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அடுத்த கூட்டத்தில் அறிவிக்கப்பட வேண்டும்.

(7) இந்த உட்பிரிவின்படிப் பிரித்துக் கொடுக்கப்பட்ட யாதொரு அலுவல்களைச் செய்வதோ நிறைவேற்றுவதோ, அக்கிராசனரால் விதிக்கப்படக்கூடிய நிர்ப்பந்தங்களுக்கும் வரையறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டவை யாகும்.

குறிப்பு

பொது.—இந்த பிரிவு 34-ம் பிரிவை போன்றது.

பி. 37 (2) 24-ம் பிரிவில் மற்றொரு மெம்பரை தலைவராகவோ உப தலைவராகவோ காரியங்களை நிறை வேற்றும்படி செய்யலாம் என்று இருக்கின்றது. ஆனால் இந்த பிரிவின் படிக்கு அம்மாதிரியான சமயத்தில் ரெவினியூ டிவிஷனல் உத்யோகஸ்தர் அக்ராசனர், உப அக்ராசனர் ஆகியவர்களின் காரியங்களை நடுத்துவார். இது தான் பேதம்.

அங்கத்தினர்கள்.

தனித்தனி அங்கத்தினர்களின் உரிமைகள்.

38. (1) எந்த அங்கத்தினராகிலும் பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் வேலை நிறைவேற்றப்படுகையில், காணப்படுகிற யாதொரு அஜாக்கிரதையைக் குறித்தாவது, பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் சொத்துக்கு உண்டாகும் யாதொரு சேதத்தைக் குறித்தாவது, யாதொரு பிரதேசத்துக்கு வேண்டியிருப்பவைகளைக் குறித்தாவது, கவனம் செலுத்தும்படி சந்தர்ப்பத்துக்கேற்ப, நிர்வாக அதிகாரிக்கு அல்லது கமிஷனருக்குச்சொல்லலாம். மேலும் அவர் உசிதமாகத் தோற்றக்கூடிய எந்த சீர்திருத்தங்களை யாகிலும் எடுத்துக் கூறலாம்.

(2) ஒவ்வொரு அங்கத்தினரும் நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு சந்தர்ப்பத்துக்கேற்ப பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் பரிபாலனத்துக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களைக் குறித்து தீர்மானங்களைக் கொண்டு வரவும், தலைவரை அல்லது அக்கிராசனரைக் கேள்வி கேட்கவும், உரிமையுடையவராவார்.

(3) ஒவ்வொரு அங்கத்தினரும் நிர்வாக அதிகாரிக்கு அல்லது கமிஷனருக்குச் சரியானபடி நோட்டிஸ் கொடுத்த பிறகு ஆபீஸ் திறந்திருக்கும் மணி நேரங்களில் சந்தர்ப்பத்துக்கேற்ப பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் ரெகார்டுகளைப் பார்வையிடலாகும். ஆனால் நிர்வாக அதிகாரி அல்லது கமிஷனர் அந்தப்படி பார்வை யிடுவதைத் தடுப்பதற்குரிய காரணங்கள் இருந்தால் அவைகளை எழுதிக்கொடுத்து அந்தப்படித் தடுக்கலாம்.

குறிப்பு

விஸ்வாச பிரமானத்தை அங்கத்தினர் முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும்

அங்கத்தினர்கள் முதலில் இந்தியாவுக்கும், சட்டத்தினல் ஏற்படுத்திய இந்தியா அரசியலுக்கும் விஸ்வாசம் உண்டு என்று பிரமாணம் உறுதிமொழி கூறிய பிறகுதான் அங்கத்தினராக நடந்து கொள்ள முடியும்.—அப்படி பிரமாணம் செய்யாமல், அவர் அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப் பட்டாலும், அவர் அங்கத்தினர் என்று செய்யும் எந்த காரியமும் செல்லத்தக்கினது அல்ல. ஒரு அங்கத்தினர் விஸ்வாச பிரமாணம் செய்யாமல் அங்கத்தினர் ஸ்தானத்தை வகிக்க முடியாது. சபையின் நடவடிக்கைகளிலும் கலந்து கொள்ள முடியாது. அப்படி செய்யும் பக்ஷத்தில் மெம்பர் இல்லாத போது செய்ததாக கருதப்படும். [ராஜாபாதர்-எ-விஸ்வநாத, A. I. R. 1924 Mad. 515]. ஒரு வைஸ் பிரசிடெண்ட் (உபதலைவர்) தேர்தலில் பிரமானம் எடுத்துக் கொள்ளாமல் கொடுத்த ஓட்டுகள் செல்லத்தக்கினவை அல்ல என்றும் அந்த தேர்தலை ரத்து செய்யப்பட்டது. [துவாரகா-எ-கிருஷ்ணன். **A. I. R.** 1926 M. 1152.]

38-வது பிரிவின் கீழ் உள்ள குறிப்புகளின் பட்டி.

1. விஸ்வாச பிரமாணம் இருக்கவேண்டிய முறை.
2. அங்கத்தினர்கள் ராஜிநாமா செய்வது குறித்து.
3. அங்கத்தினர்கள் பிரதிபலன் அடையக்கூடாது,
4. அங்கத்தினர்களின் பிரயாண சிலவுகளை குறித்து.
5. அங்கத்தினர்.
6. ஒரு கூட்டத்தில் அவதூறான சொற்களை உபயோகித்தல்.
7. தீர்மானங்கள்.
8. கேள்விகள் கேட்பது.

1. விசுவாச பிரமாணம் இருக்க வேண்டிய முறை.—நான் இன்னர் என்று தன் பெயரை சொல்லிக் கொள்ளவேண்டும்) பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினராய் இருக்கிறேன் நான் இந்தியா தேசத்திற்கும் சட்ட பூர்வகமாக செய்யப்பட்ட இந்திய அரசியலுக்கும் உண்மையான விஸ்வாசம் உள்ளவன் ஆக இருக்கிறேன். நான் இனி செய்யவேண்டிய கடமைகளை உண்மையாக நடத்தி வருவேன் (மெமராண்டம் நெ. 7192 1-B, L. A., தேதி 24 பிப்ரவரி 1950). மதராஸ் 1922-ஆம் ஹுத்திய 2-வது விசுவாச சட்டத்தையும் பார்க்கவும்.

2. அங்கத்தினர் ராஜிநாமா செய்வது குறித்து.—பி. 32ன் கீழ் பார்க்கவும்.

3. அங்கத்தினர்கள் பிரதி பலன் அடையக்கூடாது.—பி. 39 பார்க்கவும் ஆனல் பிரயாண செலவு பிரதி பலனில் சேராது.

4. அங்கத்தினர்களின் பிரயாண சிலவுகளை குறித்து.—பி. 39 பார்க்கவும்.

5. அங்கத்தினர் (மெம்பர்).—எல்லா மெம்பர்களும் இப்போது தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள், (பி. 14) நிர்வாக அதிகாரி (அதாவது ப்ரெஸிடெண்ட் அல்லது நிர்வாக உத்யோகஸ்தர்) அலுவல்களை மெம்பர்கள் மேற்கொள்ளக்கூடாது. செ. 8-ஐ பார்க்கவும். மெம்பர்கள் தம் அபிப்பிராயங்களை எவ்வளவு நேர்த்தியானதாக இருந்தாலும், தம் அபிப்பிராயங்களை ஆதரிப்பவர்கள் குறைவாகவிருந்தால், அவைகளைத் தீர்மானமாகச் செய்துக் கொள்ள முடியாது. தனியாக ஒரு மெம்பர் யாதொரு காரியமும் செய்ய முடியாது. பேபர்களைச் சுற்றியனுப்புவதும், அவைகளின் மீது அவர்கள் தெரிவிக்கும் அபிப்பிராயங்களின்மீதும் நடவடிக்கை எடுத்துக்கொள்வதும் கூடாது. [மரோட் எ. நாக்பூர் முனிசிபல் கமிட்டி, A. I. R. 1926 N. 281.] ஒரு பஞ்சாயத்துப் போர்டு மெம்பர் தன் உத்தியோக சம்பந்தமாக ஏற்பட்ட கடமையைச் சாதிப்பதற்காக செய்யும் காரியத்தில் தவறு செய்துவிட்டதாக அவர்மீது குற்றஞ் சாட்டி தாவா செய்யும் பட்சத்தில் மதராஸ் கவர்ன்மெண்டின் முன் அனுமதியின்றி எந்தக் கோர்ட்டும் அதை விசாரிக்கக் கூடாது. செ, 169-ஐ பார்க்கவும். மெம்பர்களுக்கு தமது கூட்டாளி மெம்பர்களின் நடத்தையைக் கண்டிப்பதற்காகவாவது அல்லது அவர்களின் மீது தீர்ப்புச் சொல்வதற்காகவாவது அதிகாரம் கிடையாது. மெம்பர்கள் தாங்கள் தனிப்பட்ட முறையில் அன்றி சமுதாய ரீதியாக தமக்கேற்பட்ட காரியத்தைச் செய்வதில் ஏதாவது தவறு ஏற்பட்டால் அதற்காக அவர் பேரில் யாதொருதாவாவும் செய்யக் கூடாது. பி. 171-ஐப் பார்க்கவும். ஒருவர் மெம்பராக இல்லாத பொழுது மெம்பர் என்று என்பித்து நடந்து கொண்டால் அது பி. 182-படிக்கு குற்றமாகும். ஒருவர் மெம்பரா இல்லையா என்று சந்தேகமிருக்கும்போது, பி. 28ன் கீழ் மனு போட்டுயிருந்தால், அந்த மனு முடியும் வரையில் அவர் மெம்பராக இருக்க பாத்யதை யுள்ளவராவார். ஒரு மெம்பர் யாதொரு பிரதி பலனையும் அடையக்கூடாது (பி. 39) ஒரு அங்கத்தினர் தனது காரியங்களை குறித்து மீடிங்கில் பேசலாம்.

6. ஒரு கூட்டத்தில் அவதூறான சொற்களை உபயோகித்தல்.—வாதியும், பிரதிவாதியும் ஒரு தேர்தலில் போட்டி அபேட்சகர்களாயிருந்தார்கள். வாதி பிரதி வாதியை துஷ்டன் என்றும், சந்தேகிக்கக்கூடிய நடையை யுடையவனென்றும் திட்டினன். பிரதிவாதி வாதியை குடிகாரன் என்று எதிர்த்து திட்டினர், கூட்டத்தில் பிரதிவாதி பஞ்சாயத்துதாரர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேர்தல் நடந்தபின் சில ஜனங்களால் உள்ளே நடந்த தென்னவென்று பிரதிவாதியை கேட்டதற்கு, தான் 'வாதியை குடிகாரன்' என்று சொன்னேன் என்ருர். பிரதிவாதியால் உபயோகிக்கப்பட்ட சொல் லிஷயமாக மான நஷ்டதாவாவை வாதிதொடுத்தார். கூட்டத்தில் நடந்தது விவாதத்தின் போக்கில் உபயோகிக்கப்பட்டது ஆகையால், வாதியின் தாவாவைத் தள்ளிவிட வேண்டுமென்றும், ஆனல் கூட்டம் முடிந்த பின் கூட்டத்

திற்கு வெளியே உபயோகிக்கப்பட்ட வார்த்தைகளுக்காக மான நஷ்டத்திற்காக ஈடு கோர வாதிக்கு உரிமை யுண்டெனவுந் தீர்ப்பு கூறப்பட்டது [சுப்பாராயுடு-எ-ஸ்ரீனிவாசா A. I. R. 1927 M. 329 = 25 M. L. J. 87] சட்டத்திற்கு விரோதமாக ஒரு மெம்பர் முனிஸிபல் குத்தகையில் பிரவேசித்திருக்கிருர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டு டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட், லோகல் கவர்ன்மெண்டின் முன் அனுமதியில்லாமல் விசாரணை நடத்தும்படி உத்திரவிட்டதும் அல்லாமல், அவர் வீட்டில் பரிசோதனை போடும்படியும் ஏற்பாடு செய்தார்—இது விஷயத்தில் சொல்லப்பட்ட தீர்ப்பாவது : இது விஷயத்தில் அனுசரிக்கப்பட்ட நடைமுறை கிரிமினல் புரோஸீஜர் கோட் பி. 197-க்கு விரோதமா யிருப்பதால் குற்றஞ் சாட்டப்பட்டதை, தள்ளிவிடப்பட்டது. மாஜிஸ்ரேட்டின் செய்கை நீதி வாயிலான தல்லாமல் தன் அதிகார தோரணையில் செய்யப்பட்டதாக இருந்தாலும் ஹைகோர்ட்டு இவ்விஷயத்தில் பிரவேசிக்கக்கூடும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. [பெயரான—எ.—சக்ரவர்த்தி A. I. R. 1938 A. 756] ஆனல் இப்போது ஒரு மெம்பரின் மீது வியாஜ்யம் தொடுப்பதற்கு முன் கவர்ன்மெண்டின் உத்திரவு அவசியமாயிருக்கிறது. பி. 169-யைப் பார்க்கவும்.

7. தீர்மான விதிகளின் அட்டவணை.

1. தெளிவான 10 நாள் நோட்டீஸ் கொடுத்து தீர்மானங்கள் கொண்டுவா.—
2. தீர்மானம் நியாய முள்ளதாக இருக்க.
3. பிரிஸிடெண்டு தீர்மானத்தை அனுமதிக்கவேண்டும்.
4 தீர்மானம் நிரலில் இருக்கவேண்டும்.
5. மெம்பர் தீர்மானத்தை வாபீஸ் பெறலாம் அல்லது பிரேரேபிக்கலாம்.
6. பிரேரேபிக்கிறவர் 30 நிமிஷம் பேசலாம் மற்றவர் 15 நிமிஷம் பேசலாம்.
7. தீர்மானத்தை யோசிப்பது.
8. தீர்மானத்தை திருத்துவது.
9. தீர்மானத்தை பிரேரேபித்த பிறகு உத்திரவின்றி வாபீஸ் பெறக்கூடாது.
10. தீர்மானம் திருத்தங்களின் பேரில் ஓட்டு விடுவது.
11. தீர்மானத்தை பிரித்து ஓட்டுக்கு விடுவது.
12. பிரஸிடெண்டின் அர்த்தம்.

பி. 38 (2) படிக்கு தீர்மானங்களை பஞ்சாயத்துகளின் கூட்டங்களில் பிரேரேபிப்பதற்கு ஆன பி. 38 (2) படிக்கு விதிகள்

1. தெளிவான 10 நாள் நோட்டீஸ் கொடுத்து தீர்மானங்கள் கொண்டுவர.--யாதொரு தீர்மானத்தைப் பிரேரேபிக்க விரும்புகிற பஞ்சாயத்து அங்கத்தினர் ஒருவர் தமது உத்தேசத்தைத் தெளிவாகக் குறைந்தது பத்து நாள் நோட்டீஸாவது கொடுத்து பிரெஸிடென்டுக்கு எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டும்; அந்த நோட்டீஸில் அவர் பிரேரேபிக்க விரும்புகிற தீர்மானத்தின் நகல் ஒன்று அடங்கியிருக்க வேண்டும்,

ஆனல் பிரெஸிடென்ட் இன்னும் குறைந்த கால நோட்டீஸ் கொடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்றை நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்வதற்கு அனுமதி கொடுக்கலாம்.

2. தீர்மானம் நியாயமுள்ளதாக இருக்க.— எனினும், அடியிற்கண்ட திட்டங்களை அனுசரித்திராத எந்தத் தீர்மானமும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க தாகாது; அவையாவன.—

(a) அது தெளிவாகவும் சரியானதாகவும் சொல்லப்பட்டிருப்பதுடன் திட்டமான பிரசினை ஒன்றை எழுப்பவும் வேண்டும்;

(b) அதில் வாதங்களோ அனுமானங்களோ கேலி வார்த்தைகளோ அவதூருன ஸ்டேட்மென்டுகளோ அடங்கியிருக்கக்கூடாது; மேலும் அதில், நபர்களுடைய உத்தியோக பூர்வமான அல்லது பொதுத் தன்மையுள்ள முறைமையை யொட்டியன்றி மற்றப்படி அவர்களுடைய நடத்தையைப் பற்றியேனும் ஒழுக்கத்தைப் பற்றியேனும் குறிப்பிட்டிருக்கக்கூடாது.

3. பிரசிடெண்டு தீர்மானத்தை அனுமதிக்க வேண்டும்.—யாதொரு தீர்மானம் அனுமதிக்கப்படத்தக்கதா என்பதைப் பிரஸிடென்ட் தீர்மானிக்க வேண்டும்; எந்தத் தீர்மான

மாவது மேற்படி சட்டத்தின் நிபந்தனைகளையேனும் அதன்படி செய்யப்பட்ட விதிகளையேனும் மீறுகிறதென்று அவர் கருதினால் அதை அவர் தள்ளிவிட வேண்டும்; அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

ஆனால், பிரஸிடென்ட் ஒரு தீர்மானம், மேற்படி பஞ்சாயத்தின் பரிபாலத்துக்கு சம்பந்தப்படாதென்றும் விரும்பத்தகாத அல்லது வகுப்புவாத சர்ச்சைக்குக் காரணமாயிருக்குமென்றும் தாம் கருதினால், அந்தத் தீர்மானத்தை அவர் இன்ஸ்பெக்டருடைய ஆலோசனைக்கு அனுப்பி, அதை ஏற்றுக்கொள்ளலாமா என்பது விஷயமாக அவருடைய உத்தரவைப் பெற வேண்டும்.

4. தீர்மானம் நிரலில் இருக்கவேண்டும்.—பிரஸிடென்ட் அனுமதித்திருக்கிற தீர்மானம் ஒன்றைக் கூட்டத்துக்கான நோட்டீஸிலே நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

5. மெம்பர் தீர்மானத்தை வாபீஸ் பெறலாம் அல்லது பிரேரேபிக்கலாம்—(1) நிகழ்ச்சி நிரலில் எந்த அங்கத்தினர் பெயரில் தீர்மானம் ஒன்று கண்டிருக்கிறதோ அந்த அங்கத்தினரைக் கூப்பிட்டபோது, அவர்—

(a) அத் தீர்மானத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும்; அத்தகைய சந்தர்ப்பத்தில் அது சம்பந்தமான ஸ்டேட்மென்ட் ஒன்றை மட்டும் அவர் கொடுத்தால் போதுமானது; அல்லது,

(b) அத் தீர்மானத்தைப் பிரேரேபிக்க வேண்டும்.

(2) மேற்படி அங்கத்தினரைக் கூப்பிட்டபோது அவர் வராமலிருந்தால் அல்லது தீர்மானத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள உத்தேசித்திருந்தால் அல்லது அதைப் பிரேரேபிக்க விரும்பாமலிருந்தால் அல்லது பிரஸ்தாப கூட்டத்துக்கு முன்பே அவர் அங்கத்தினராயிராமற் போயிருந்தால், அந்தக் கூட்டத்தில் ஹாஜராகியுள்ள எந்த அங்கத்தினரேனும் அத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கலாம்; எந்த அங்கத்தினரும் அதைப் பிரேரேபிக்கவில்லை யென்றால், அது வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(3) பிரேரேபிக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு தீர்மானமும் ஆமோதிக்கப்பட வேண்டும்; இல்லையென்றால் அதைப்பற்றி விவாதிக்கக்கூடாது.

குறிப்பு

விதி 5 (1). விதி 9 (1) ஐப் பார்க்கவும் ஒரு மெம்பர் ஒரு தீர்மானத்தை பிரேரேபிக்காமல் வாபஸ் பெறலாம். அப்பொழுது ஒரு ஸ்டேட்மெண்ட் (விகதம்) ஒன்றை கொடுக்கலாம். ஆனால் ஒரு தீர்மானத்தை பிரேரேபித்த பிறகு பஞ்சாயத்தின் உத்தரவு இல்லாமல் வாபீஸ் பெற முடியாது.

6. பிரேரேபிக்கிறவர் 30 நிமிஷம் பேசலாம், மற்றவர் 15 நிமிஷம் பேசலாம்.— எந்த அங்கத்தினரும், பிரஸிடென்டின் அனுமதியைப் பெற்றுக் கொண்டாலன்றி மற்றப்படி பதினைந்து நிமிஷங்களுக்கு மேல் பேசக்கூடாது;

ஆனால், ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்தவர், அதைப் பிரேரேபிக்கும்பொழுது, முப்பது நிமிஷங்கள் பேசலாம்.

7. தீர்மானத்தை யோசிப்பது.— ஒரு தீர்மானத்தைப் பற்றிய விவாதம் கண்டிப்பாக அத்தீர்மானத்தின் விஷயத்தைப் பற்றித்தான் இருக்கவேண்டும்.

8. தீர்மானத்தைத் திருத்துவது.—ஒரு தீர்மானம் விவாதத்திலிருக்கையில், எந்த அங்கத்தினராகிலும், 2-வது, 3-வது, 6-வது 7-வது விதிகளுக்குட்பட்டு, அத் தீர்மானத்துக்குத் திருத்தமொன்றைப் பிரேரேபிக்கலாம்.

9. தீர்மானத்தை பிரேரேபித்த பிறகு உத்தரவின்றி வாபீஸ் பெறக்கூடாது.:—(1) ஒரு திருத்தத்தை அல்லது ஒரு திருத்தத்துக்குத் திருத்தத்தைப் பிரேரேபிக்கிற யாதொரு அங்கத்தினர் பஞ்சாயத்தின் அனுமதியின்றி மற்றப்படி அதை வாபஸ் பெற்றுக் கொள்ளக் கூடாது.

(2) வாபஸ் பெற்றுக்கொள்ள அனுமதி கோரும் பிரேரேபணையின் பேரில் பிரஸிடென்டின் அனுமதியின்றி மற்றப்படி விவாதம் எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது.

10. தீர்மானம்: திருத்தங்களின்பேரில் ஓட்டு விடுவது.—(1) எந்தத் தீர்மானத்துக்காவது ஒருதிருத்தம் பிரேரேபிக்கப்பட்டால், அல்லது அப்படிப்பட்ட இரண்டு அல்லது அதற்கு

மேற்பட்ட திருத்தங்கள் பிரேரேபிக்கப்பட்டால், பிரஸிடென் டானவர், அது விஷயமாய்ப் பஞ்சாயத்தின் கருத்தை யறிவதற்கு முன் அப் பஞ்சாயத்துக்குப் பிரதம பிரேரேபணையின் ஷரத்துக்களையும் அதில் செய்ய உத்தேசிக்கப்படும் திருத்தம் அல்லது திருத்தங்களின் ஷரத்துக்களையும் எடுத்துச் சொல்லவேண்டும் அல்லது அவற்றை வாசிக்க வேண்டும்.

(2) சாதாரணமாகத் திருத்தங்கள் எந்த வரிசைக் கிரமத்தில் பிரேரேபிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த வரிசைக் கிரமத்தில் பிரஸிடென்ட் அவற்றை வோட்டுக்கு விடவேண்டும்; திருத்தங்கள் எல்லாம் தோல்வியடைந்திருந்தால் கடைசியாக பிரதம பிரேரேபணையை வோட்டுக்கு விடவேண்டும். ஆனல், அவர் எவ்விஷயத்திலாவது தமக்கு யுத்தமாகத் தோற்றுகிறபடி பிரதம பிரேரேபணையையும் திருத்தங்களையும் தாம் தகுதியென்று கருதுகிற வரிசைக் கிரமத்தில் வோட்டுக்கு விடலாம்.

11. **தீர்மானத்தை பிரித்து ஓட்டுக்கு விடுவது.**—பலவிஷயங்கள் அடங்கியுள்ளயாதொரு தீர்மானம் விவாதிக்கப்பட்டிருந்தால், பிரஸிடென்ட் தமக்கு யுத்தமாகத் தோற்றுகிறபடி அத் தீர்மானத்தைப் பிரித்து, ஒவ்வொரு விஷயத்தையுமாவது எந்த விஷயத்தையாவது தாம் தகுதி யென்று கருதுகிறபடி தனித்தனியாக வோட்டுக்கு விடலாம்.

12. **பிரஸிடென்டின் அர்த்தம்.**—இந்தவிதிகளிலே 'பிரஸிடென்ட்' என்பதில் மேற்படி சட்டத்தின் 34-வது பிரிவைச் சேர்ந்த (1), (2), (3), (5) உட் பிரிவுகளின்படி பிரஸ்தாப காலத்தில் பிரஸிடென்ட் உத்தியோகத்தின் பொறுப்பு வகிக்கிற நபர் என்பதும் அடங்கும்.

8. தலைவரை கேள்விகள் கேட்பதற்கான விதிகளின் அட்டவணை.

1. பஞ்சாயத்தின் பரிபாலனையை குறித்து கேள்விகள்.—
2. தெளிவான பத்து நாள் நோட்டீஸ் கொடுத்து கேள்விகள் கேட்க.
3. கேள்விகள் நியாயமாய் இருக்க.
4. பிரசிடெண்ட் கேள்விகளை அனுமதிக்க.
5. கேள்விகள் நிகழ்ச்சி நிரலில் இருக்க.
6. ஸப்ளி மெண்டரி. (அதாவது அதிகப்படியாக கேழ்ப்பது).
7. விவாதம் இருக்கக்கூடாது.
8. கேள்விகளும் பதில்களும் எழுத்தில் இருக்கவேண்டும்.
9. பிரஸிடெண்ட் அர்த்தம்.

ப்ரஸிடெண்டை கேள்விகள் கேட்பது பி. 38 (2) படிக்கு விதிகள்.

பஞ்சாயத்து அங்கத்தினர்கள் பிரசிடெண்டைக் கேள்விகள் கேட்பதுபற்றி விதிகள் :

1. **பஞ்சாயத்தின் பரிபாலனையை குறித்து கேள்விகள் :**—ஒருபஞ்சாயத்தின் கூட்டமொன்றில் அப்பஞ்சாயத்தின் பரிபாலனத்துக்குச் சம்பந்தப்படாத எந்த விஷயங்களைப்பற்றியும் கேள்வி கேட்பதோ பதிலளிப்பதோ கூடாது; உண்மை பற்றிய சங்கதிகளைத் தவிர மற்ற எதைப் பற்றியும் கேள்வி கேட்க கூடாது. அதற்கான பதில், உண்மை பற்றிய தகவலைக் குறித்ததாகமட்டுமே இருக்கவேண்டும். இவ்வாறு ஏற்பாடு செய்துள்ளபடிக்கன்றி மற்றப்படி, யாதொரு பஞ்சாயத்தின் எந்த அங்கத்தினரும் அடியிற்கண்ட திட்டங்களுக்கும் வரையறைகளுக்கு முட்பட்டு எந்தக் கேள்வியையும் கேட்கலாம்.

2. **தெளிவான பத்து நாள் நோட்டீஸ் கொடுத்து கேள்விகள் கேட்க :**— கேள்வி கேட்க விரும்புகிற யாதொரு பஞ்சாயத்து அங்கத்தினர் ஒருவர் குறைந்த பட்சம் தெளிவாகப் பத்து நாள் நோட்டீஸாவது கொடுத்து பிரசிடென்டுக்கு தமது உத்தேசத்தை எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும் ; அந்த நோட்டீஸில் அவர் கேட்க விரும்புகிற கேள்வியின் பிரதியொன்று அடங்கி யிருக்கவேண்டும்.

3. கேள்விகள் நியாயமாய் இருக்க :— ஒரு கேள்வி அனுமதிக்கப்படக் கூடியதா யிருக்கும் பொருட்டு அது அடியிற்கண்ட திட்டங்களைப் பூர்த்தி செய்யவேண்டும்; அவை யாவன :—

(1) கேள்வி புரிந்துகொள்ளக் கூடியதாயிருப்பதற்கு அத்தியாவசியமா யிராத எந்தப் பெயர் அல்லது ஸ்டேட்மெண்டையும் அது வெளியிடக் கூடாது.

(2) ஒரு கேள்வியில் ஸ்டேட்மெண்ட் ஒன்று அடங்கியிருந்தால், அக் கேள்வியைக் கேட்கும் அங்கத்தினர் அந்த ஸ்டேட்மெண்ட் சரியானதுதானு என்பதைப் பற்றித் தம்மையே பொறுப்பாளியாக்கி கொள்ளவேண்டும் :

(3) அதில் வாதங்களோ அனுமானங்களோ கேலி வார்த்தைகளோ அவதூருன ஸ்டேட்மெண்டுகளோ அடங்கியிருக்கக் கூடாது ;

(4) அபிப்பிராயம் கூறும்படி அதில் கேட்டிருக்கவுங் கூடாது. கருத்துகளாக வுள்ள சட்டப் பிரச்சினையோ உத்தேசமான ஒரு பிரேரேபணையையோ தீர்க்கும்படி அதில் கேட்டிருக் கவுங் கூடாது ;

(5) யாதொரு நபருடைய உத்தியோக பூர்வமான அல்லது பொதுத் தன்மையுள்ள முறைமையை யொட்டின்றி மற்றப்படி அவருடைய ஒழுக்கம் அல்லது நடத்தையைப் பற்றி அதில் கேட்டிருக்கக் கூடாது ;

(6) அது அதிக நீளமாயிருக்கக் கூடாது ;

(7) ஒருதரம் முழுவதும் பதிலளிக்கப்பட்ட ஒரு கேள்வியை மீண்டும் கேட்கக்கூடாது

4 பிரசிடென்ட் கேள்விகளை அனுமதிக்க :—ஒரு கேள்வி அனுமதிக்கப்படத் தக்கதா என்பதைப் பிரஸிடென்ட் தீர்மானித்து, அடுத்துவரும் எக் கூட்டத்துக்காக வென்று அது 2-வது விதியின்படி உரிய காலத்துக்குள் கேட்கப்பட்டதோ அக் கூட்டத்துக்காக நிச்சயிக்கப் பட்ட தேதிக்கு முன் அதை அனுமதிக்க வேண்டும். அல்லது தள்ளிவிட வேண்டும். யாதொரு கேள்வியானது கேள்வி கேட்கும் உரிமையை துஷ்பிரயோகம் செய்வதாகுமென தாம் அபிப் பிராயப்பட்டாலும், பொது நன்மையை உத்தேசித்து அதற்குப் பொறுத்தமாகப் பதிலளிக்க முடியாது என்று தாம் அபிப்பிராயப்பட்டாலும் அவர் அதைத் தள்ளிவிடலாம்; மேலும் எந்த கேள்வியானது பிரஸ்தாப விதிகளை மீறுகிறதென்று தாம் அபிப்பிராயப்படுகிருரோ அந்த கேள்வியை அவர் தள்ளிவிட வேண்டும். அப்படிப்பட்ட விஷயத்தில் பஞ்சாயத்தின் நட வடிக்கை குறிப்புகளில் அந்த கேள்வியைப் பதிவு செய்யக்கூடாது.

5. கேள்விகள் நிகழ்ச்சி நிரலில் இருக்க :—அனுமதித்த கேள்விகளைப் பிரஸ்தாப தினத்துக்குரிய நிகழ்ச்சி நிரலில் பதிவு செய்துகொள்ள வேண்டும். அக்கேள்வி கேட்ட அங்கத்தினர் அதை முன்னதாகவே வாபஸ் பெற்றுக்கொள்ளாவிட்டால். நிகழ்ச்சி நிரலில் அக்கேள்வி எந்த வரிசைக் கிரமத்தில் இருக்கிறதோ அந்த வரிசைக் கிரமப்படி பிரஸ்தாப கூட்டத்தில் வேறு எந்த வேலையையும் கவனிப்பதற்கு முன்னமேயே அப்படிப் பதிவு செய்யப் பட்ட ஒவ்வொரு கேள்விக்கும் ப்ரெஸிடெண்ட் பதிலளிக்க வேண்டும்.

ஆனல், ப்ரெஸிடென்ட், தாம் யுக்தமென்று கருதினல், நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள கேள்வியொன்று வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பாதகமில்லாமலே, பொது நன்மையை உத்தேசித்து அக் கேள்விக்குப் பதில் அளிக்கலாம்.

6. ஸப்ளிமென்டரி :—உண்மை பற்றிய எந்த விஷயத்தைக் குறித்துப் பதில் கொடுக் கப்படுகிறதோ அந்த விஷயத்தைப் பின்னும் தெளிவாக்குவதற்காக எந்த அங்கத்தினரும் ஸப்ளிமென்டரி (அதிக படியான) கேள்வியொன்றைக் கேட்கலாம்.

ஆனல், ப்ரெஸிடென்ட், யாதொரு ஸப்ளிமென்டரி கேள்வியானது மேற்சொன்ன கேள்விகளின் பொருளுக்குச் சம்பந்தப்பட்ட விதிகளை மீறுகிறதென்று தாம் அபிப்பிராயப் பட்டால் அதைத் தள்ளிவிட வேண்டும்.

மேலும், நோட்டீஸ் இல்லாமல் கேட்கப்பட்ட ஸப்ளிமென்டரி கேள்வி யொன்றுக்கு அவர் பதிலளிக்க மறுக்கலாம்; அப்படிப்பட்ட விஷயத்தில், பஞ்சாயத்தின் பிற்பட்ட ஒரு கூட்டத் தில், அதை ஒரு புதிய கேள்வி ரூபத்தில் தான் கேட்கலாம்.

7. விவாதம் இருக்கக்கூடாது .—இந்த விதிகளின்படிக் கேட்கப்பட்ட எந்தக் கேள்வி விஷயமாகவும் அல்லது ஒரு கேள்விக்குக் கொடுக்கப்பட்ட எந்த பதில் விஷயமாகவும் எவ்வித விவாதமும் அனுமதிக்கப்படமாட்டாது.

8. கேள்விகளும் பதில்களும் எழுத்தில் இருக்க வேண்டும்.—கேட்கப்பட்ட கேள்வியையும் அதற்குக் கொடுக்கப்பட்ட பதிலையும் பஞ்சாயத்தின் நடவடிக்கைக் குறிப்புகளில் பதிவு செய்ய வேண்டும்.

9. பிரஸிடென்ட் அர்த்தம்.—இந்த விதிகளில் 'ப்ரெஸிடென்ட்' என்பதில் மேற்படி சட்டத்தின் 34-வது பிரிவைச் சேர்ந்த (1), (2), (3), (5) உட் பிரிவுகளின்படி பிரஸ்தாப காலத்தில் ப்ரெஸிடென்ட் உத்தியோகத்தின் பொறுப்பு வகிக்கிற நபரென்பதும் அடங்கும். இதனடியில் "தீர்மானங்களின்" கீழ் 12-வது விதியைப் பார்க்கவும்.

தலைவர், உப-தலைவர், அக்கிராசனர், உப-அக்கிராசனர் அல்லதுஅங்கத்தினர் எவரும் பிரதிபலன் பெறக்கூடாதென்பது

39. தலைவர், உப-தலைவர், அக்கிராசனர், உப-அக்கிராசனர் அல்லது அங்கத்தினர் எவரும் தாம் அவ்வாறு இருக்கிறரென்னும் ஹோதாவிலாகிலும் அல்லது வேறு எந்த ஹோதாவிலாகிலும் செய்திருக்கிற ஊழியத்துக்காக, பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் வசத்திலிருக்கிற அல்லது மேல் விசாரணையிலிருக்கிற நிதியிலிருந்து யாதொரு சம்பளமோ அல்லது வேறே பிரதிபலனே பெறவுங்கூடாது, அது அவருக்குக் கொடுக்கப்படவுங்கூடாது.

குறிப்பு

பஞ்சாயத்துக்களின் பிரசிடென்டுகள், வைஸ்பிரசிடென்டுகள், அங்கத்தினர்கள் முதலியவர்களுக்குப் பிரயாண வர்த்தனை. பி. 178 (1) படிக்கு விதிகள்

விளம்பரம்—33 தேதி 21—4—1951

1. (a) பிரஸிடென்டுகள்; வைஸ்-பிரஸிடென்டுகள், தற்காலிக பிரஸிடென்டுகள், பிரஸிடென்டாக நேமகம் செய்யப்பட்டவர்கள் ஆகிய இவர்கள் உட்பட பஞ்சாயத்துகளின் அங்கத்தினர்களுக்கும்.

(b) மேற்படி சட்டத்தின் 48 (5) பிரிவின்படி பஞ்சாயத்துக்களின் விசேஷ உத்தியோகஸ்தர்களல்லாதவர்களுக்கும்.

(c) மேற்படி சட்டத்தின் 112 (2) (iv) பிரிவின்படி செய்யப்பட்ட விதிகளை அனுசரித்து பஞ்சாயத்துக்களின் கமிட்டிகளினுடைய அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்ட வெளியார்களுக்கும்.

(d) மேற்படி சட்டத்தின் 132 (2) (b) பிரிவின்படி பஞ்சாயத்துக் கோர்ட்டாக அமையும்படி இன்ஸ்பெக்டரால் நியமிக்கப்பட்ட அங்கத்தினர்களுக்கும்.

செலுத்தப்படத்தக்க பிரயாண வர்த்தனைகள் அப்போதைக்கப்போது திருத்தப்பட்டபடியுள்ள பிரயாண வர்த்தனையைக் குறித்த சென்னைப் பட்டணத்து விதிகளின் நிபந்தனைகளினுல், 2-வது, 3-வது விதிகளில் குறிப்பிட்டுள்ள மாற்றங்களுக்கும் வரையறைகளுக்கும், உட்பட்டு முறைப்படுத்தப்படும்.

2. 1-வது விதியைச் சேர்ந்த (a), (b), (c), (d) பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் கீழே குறிப்பிட்டிருக்கிற விதங்களின்படி பிரயாண வர்த்தனைப் பெற பாத்தியதை உள்ளவர்களாவார்கள் :—

ரயில்வே அல்லது ஸ்டீமர் பிரயாணம்—ஒரு மூன்றும் வகுப்புக் கட்டணம்.

அன்றுடப்படியும் ஒரு மைலுக்குரிய கட்டணமும்—ஒரு ரூபாய் உச்ச அன்றுடப் படிக்கும், பாட்டை மூலமாகவோ கால்வாய் மூலமாகவோ பிரயாணம் செய்வதற்காக மைலொன்றுக்கு 2 அணு உச்சக் கட்டணத்துக்கும் உட்பட்டு பிரயாண வர்த்தனையை அனுமதிக்கத் தகுதி வாய்ந்த அதிகாரி நிச்சயிக்கக்கூடிய வரையறைகளுக்குள் வாஸ்தவமாய்ப் பிடித்த செலவுகள்.

மேற்சொன்ன வீதங்கள் பிரயாண வர்த்தனையைக் குறித்த சென்னப் பட்டணத்து விதிகளின் (மதருஸ் மானுவல் ஆப் ஸ்பெஷல் பே அண்ட் அலவன்ஸஸ் என்னும் புஸ்தகத்தின் 2-ம் பாகம் வால்யூம் (1) 1-ம் அனுபந்தத்தில் விதிக்கப்பட்டுள்ள வீதங்களைப் போலவே அந்த விதிகளின் 41-வது விதியினுல் முறைப்படுத்தப்படும்.

நிர்வாக உத்தியோகஸ்தர்.

பட்டணம் பஞ்சாயத்துக்களுக்கு நிர்வாக உத்தியோகஸ்தர்களை நியமிப்பது.

40. (1) அரசாங்கத்தாரால் வொருபட்டணம் பஞ்சாயத்துக்காக முழுக்கால நிர்வாக உத்தியோகஸ்தர் ஒருவரை அவர்கள் நியமிக்க வேண்டும்.

(2) ஒவ்வொரு கிராம பஞ்சாயத்தின் விஷயத்திலும் பஞ்சாயத்தின் தலைவரானவர் நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு, நிர்வாக உத்தியோகஸ்தரின் அலுவல்களைச்செய்யவேண்டும்.

(3) வேரே விதமாய் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, (1) உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட நிர்வாக உத்தியோகஸ்தர் எவரும் அரசாங்கத்தாரின் அனுமதியில்லாமல் தமது உத்தியோகத்துக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு வேலையைச் செய்ய ஏற்றுக்கொள்ளக்கூடாது.

(4) பஞ்சாயத்தார் அரசாங்கத்தாரால் அப்போதைக்கப்போது நிச்சயிக்கப் படக்கூடிய சம்பளத்தையும், வர்த்தனைகளையும் நிர்வாக உத்தியோகஸ்தருக்குக்கொடுக்க வேண்டும்.

(5) பஞ்சாயத்தார்.—

(a) நிர்வாக உத்தியோகஸ்தரானவர் அரசாங்க உத்தியோகத்தி லிருக்கும் பட்சத்தில், அரசாங்கத்தின்கீழ்ச் செய்யப்படும் அவருடைய ஊழியத்துக்குச் சம்பந்தப் பட்ட திட்டங்களின்படி அவருடைய ரஜா வர்த்தனை விஷயமாகவும், பென்ஷன் விஷயமாகவும், ப்ராவிடென்ட் பண்ட் என்னும் எதிர்காலச் சகாய நிதி விஷயமாகவும் அவரால் அல்லது அவர் சார்பில் எவ்வளவு தொகை கொடுக்கப்பட வேண்டியிருக்கக் கூடுமோ அந்தத் தொகையைக் கொடுத்துதவவேண்டும்,

(b) நிர்வாக உத்தியோகஸ்தரானவர், அரசாங்க ஊழியத்திலிராத பட்சத்திலே, அவருடைய ரஜா வர்த்தனைகள், பென்ஷன், ப்ராவிடென்ட் பண்ட் ஆகிய இவைகளின்பொருட்டு இது விஷயமாய் நிர்ணயிக்கக்கூடிய தொகையையும் கொடுத்துதவவேண்டும்.

(6). (1) உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட நிர்வாக உத்தியோகஸ்தர்களைத் தரம் பிரிப்பது, தெரிந்தெடுத்து நியமிக்கிற முறைகள், அவர்களுடைய ஊழியத் திட்டங்கள், அவர்களுடைய சம்பளமும், வர்த்தனைகளும், ஒழுக்கமும், நடத்தையும் ஆகிய இவைகளைக் குறித்து ஒழுங்கேற்படுத்த அரசாங்கத்தாருக்கு அதிகாரமுண்டு.

குறிப்பு

கவர்ன்மெண்ட் பி. 2 (10),158, 198
பஞ்சாயத்து—பி. 2 (20), 8
தலைவர்—பி. 2 (26) 29 - 35 வரை
விதிகள்—பி. 178
நிர்வாக உத்தியோகஸ்தர் பி. 2 (11), 40, 41, 42

நிர்வாக உத்தியோகஸ்தர்.—இவரை பட்டணம் பஞ்சாயத்துக்கு மாத்திரம் ஏற்படுத்துவார்கள். அப்போது இவர் பி. 41, 44.க்கும், பி. 33 (2) படிக்கும் நடந்து கொள்ளவேண்டும். பி. 33 (2) ன் கீழ்யுள்ள குறிப்பை பார்க்கவும். இவர் இன்ஸ்பெக்டர், ஜில்லா கலெக்டர், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர், டிஸ்ட்ரிக்டர் பஞ்சாயத்து ஆபீஸர்களுடன் உள்ள கடிதப் போக்கு வரத்தையும் தலைவர் மூலமாக அனுப்புவதாக இருக்கவேண்டும். அது தான் ஜன நாயக முறையாகும். பஞ்சாயத்து வேலைகள் தவிர மற்ற எந்த வேலையையும், பஞ்சாயத்தினுடையவும், கவர்ன்மெண்டு உத்திரவும் இல்லாமல், செய்யக்கூடாது. இவருடைய அலுவல்களை பி. 41-ல் கண்டிருக்கிறது. பி. 42 படிக்கு இவர் அலுவல்களை இவர் இல்லாத சமயங்களில் பட்டணம் பஞ்சாயத்து தலைவர் தான் செய்ய வேண்டும். கிராம பஞ்சாயத்து தலைவர்கள் நிர்வாக உத்தியோகஸ்தரின் அலுவல்களையும் பி. 33, 43-கள் படிக்கு தலைவர்களுடைய அலுவல்களையும் சேர்த்து செய்ய வேண்டும். நிர்வாக உத்தியோகஸ்தர் அலுவல்களை அவர் இல்லாத சமயத்திலும், சக்தியற்றவராயுள்ள பொழுதும் அவர் வேலையை பட்டணம்

பஞ்சாயத்து தலைவர்தான் செய்ய வேண்டும். பி. 42-ஜ பார்க்கவும். அவரும் இல்லாதபொழுது உப தலைவர் நடத்த வேண்டும். அவரும் இல்லாதபொழுது நியமிக்கப்பட்ட அங்கத்தினர் பார்க்கலாம். பி. 34 பார்க்கவும். இவர்கள் தவிர அன்னியர்கள் யாரும் இந்த அலுவல்களை செய்யக்கூடாது. [நடேசன் குறித்து (1916) 40 Mad. 125 = 38 I. C. 847.] பிரிவு 43 (a) ஷரத்துபடிக்கு பிரசிடெண்டு தனியாக எழுத வேண்டுமோ ஒழிய நிர்வாக அதிகாரி மூலம் யாதொன்றும் எழுத முடியாது. இந்த பிரிவும் அனுவசியமாக பட்டண பஞ்சாயத்து தலைவர் களுக்கு தக்க பொறுப்பு கொடுக்காதது வருந்த தக்கதாக இருக்கிறது.

அரசாங்க ஊழியர்களாயிராத நிர்வாக உத்தியோகஸ்தர்கள் விஷயமாய்ப் பஞ்சாயத்துக்கள் செலுத்தத்தக்க சகாயத் தொகைகள். பி. 40 (5) (b)— விளம்பரம்—II தேதி 4—6—1951

1. யாதொரு பஞ்சாயத்தில் நிர்வாக உத்தியோகஸ்தராக நியமனம் செய்யப்பட்டுள்ள நபர், ஒரு முனிசிபாலிட்டி அல்லது ஜில்லா போர்டு அல்லது பஞ்சாயத்தின் சேவையில் யாதொரு நிலையான உத்தியோகத்திலே இருந்தால், அவ்வாறு நிலையான உத்தியோகத்திலே அவர் இருக்கும் வரையில், அப் பஞ்சாயத்து அடியிற்கண்ட சகாயத் தொகைகளைச் செலுத்த வேண்டும் :—

(a) அவருடைய ரஜா வர்த்தனையினிமித்தம், அப்போதைக்கப்போது, அவர் பெற்றுக்கொண்ட சம்பளத்தில் பன்னிரண்டரை சதவீதம்; ஆனால், 1933-ம் வருஷத்திய சென்னை ரஜா விதிகளின் பிரயோகத்துக்குட்பட்டவர்கள் விஷயத்தில், பெற்றுக்கொண்ட சம்பளத்தில் 11 சதவீதம் மாத்திரமே செலுத்தப் படத்தக்கதாகும்;

(b) சம்பந்தப்பட்ட முனிசிபாலிடியின் அல்லது ஜில்லா போர்டின் அல்லது பஞ்சாயத்தின் பிராவிடென்ட்பண்ட் விதிகளின் பிரகாரம், அவரிடமிருந்து வசூலிக்கப்பட்டதொகை விஷயமாய் அது செலுத்தத்தக்க சகாயத் தொகைக்குச் சமமான ஒரு தொகை; அல்லது எந்த நிலையான உத்தியோகத்தை அவர் வகிக்கிறாரோ அது விஷயமாய் ஸிவில் ஸெர்விஸஸ் ரெகுலேஷன்களை சேர்ந்த 802-வது பிரிவின் நிபந்தனைகளின் பிரகாரம் அரசாங்கத்தாருக்கு பென்ஷன் சகாயத் தொகை ஒன்று செலுத்தப்பட்டால், அத்தகைய சகாயத் தொகைக்குச் சமமான ஒரு தொகை.

2. அந்த நிர்வாக உத்தியோகஸ்தர் நிலையான உத்தியோகம் வகிக்கும் பிரதேச அதிகார சபை 1-வது விதியில் குறிப்பிட்டுள்ள சகாயத் தொகைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்; எந்தப் பஞ்சாயத்தின் நிர்வாக உத்தியோகஸ்தராக அவர் இருக்கிறாரோ, அந்த பஞ்சாயத்து மேற்படி சகாயத் தொகைகளை சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைக்குச் செலுத்த வேண்டும்.

3. யாதொரு பஞ்சாயத்தில் நிர்வாக உத்தியோகஸ்தர், தாம் அந்த உத்தியோகத்துக்கு நியமனம் செய்யப்பட்ட காலத்தில் வேறு யாதொரு நிலையான உத்தியோகத்திலிராமலிருந்தால், அவருக்குச் செலுத்தப்படத்தக்க ரஜா வர்த்தனைகளை, முதல் தடவையில் ரஜாவில் செல்வதற்கு அடுத்து, முன்பாக அவர் எந்தப் பஞ்சாயத்தின் நிர்வாக உத்தியோகஸ்தராக இருந்தாரோ அந்தப் பஞ்சாயத்தின் நிதிகளிலிருந்து கொடுக்கவேண்டும்; அவர் அதற்கு முன்பாக சேவை செய்திருக்கிற பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்துக்குள் அத்தகைய ரஜா வர்த்தனைகளுக்கு இன்ஸ்பெக்டர் நிச்சயிக்கக்கூடிய சங்கியா பரிமாணப்படி சகாயத் தொகை செலுத்தவேண்டும். சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்துக்கள், அந்த நிர்வாக உத்தியோகஸ்தரது ரஜா காலத்தில், அவருடைய ரஜா வர்த்தனைகளுக்காக சகாயத் தொகை செலுத்திய கால அளவின் சங்கியா பரிமாணப்படியுள்ள ஒரு சகாயத் தொகையை அது அல்லது அவை அவருடைய பிரெசிடன்ட் பண்டு கணக்குக்குச் செலுத்தவும் வேண்டும். மீதிகளுக்கு செ. 30-யைப் பார்க்கவும்.

41. நிர்வாக உத்தியோகஸ்தரானவர்.

நிர்வாக உத்தியோகஸ்தரின் நிர்வாகங்கள்

(a) பஞ்சாயத்தின் அல்லது அதன் யாதொரு கமிட்டியின் சபைகளில் வந்திருக்கவும், யாதொரு தீர்மானத்தைப் பிரேரேபிப்பதற்கான அல்லது வோட்டுக் கொடுப்பதற்கான உரிமையில்லாமல் அந்தச் சபைகளில் நடக்கிற விவாதங்களில் கலந்து கொள்ளவும் பாத்தியதை உள்ளவராவார்.

(b) பஞ்சாயத்தின் அல்லது அதன் யாதொரு கமிட்டியின் எந்தச் சபைக் காகிலும் வந்திருக்கும்படித் தலைமை வகிக்கும் உத்தியோகஸ்தரால் கேட்டுக்கொள்ளப் பட்டால், அப்படியே வந்திருக்கவேண்டும்.

நிர்வாக உத்தியோகஸ் தரின் அலுவல்களை மற்ற வர்கள் செய்யவேண்டி யதா யிருப்பது

42. நிர்வாக உத்தியோகஸ்தர் வராமலிருப்பது, நோய் அல்லது இதர காரண மாக அவருடைய அலுவல்களைச் செய்ய இயலாவிட்டால், நிர்ணயிக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும், மேற்பார்வைக் கும் உட்பட்டு தலைவர், நிர்வாக உத்தியோகஸ்தர் தம்முடைய அலுவல்களைத் திரும்பச் செய்கிற தேதிவரை அவருடைய அலுவல்களைச் செய்யவேண்டும்.

குறிப்பு

பி. 40-ன் கீழ் "நிர்வாக உத்தியோகஸ்தர்" என்னும் தலைப்பிலுள்ள குறிப்பை பார்க் கவும். பி. 43-ன் கீழ் உள்ள குறிப்புகளையும் பார்க்கவும்.

பி. 42 படிக்கு விதிகள்.

நிர்வாக உத்தியோகஸ்தரின் அலுவல்களைப் பிரித்துக் கொடுப்பது.

1. நிர்வாக உத்தியோகஸ்தர், அரசாங்கத்தாராலாவது, இன்ஸ்பெக்டராலாவது; பஞ்சாயத்தினாலாவது பிறப்பிக்கப்பட்ட எவையேனும், கட்டளைகளுக்கு அல்லது விதிக்கப்பட்ட எவையேனும், வரையறைகளுக்குட்பட்டு, தாம் காஷுயல் லீவ் என்னும் ரஜாவில் செல்லும் போதெல்லாம், அல்லது தமது இடத்தைவிட்டு வெளியூருக்குச் செல்லும் போதெல்லாம், அல்லது மற்றப்படி தமது கடமைகளைச் செய்ய முடியாதபோதெல்லாம், எழுதியுள்ள உத்தரவு மூலமாக, தமது அலுவல்களைப் பிரித்துக் கொடுக்கலாம்.

2. அப்படிப் பிரித்துக் கொடுக்கும்போது, வாலாயமான வேலையைப் பைசல் செய் வதற்காகத் தேவையாயிருக்கிற எந்தக் கட்டளை களையேனும்கூட அவசியமானுல் அதனுடன் பிறப்பிக்கலாம்.

3. ஷை அதிகப்படியான கட்டளைகள் எவையேனுமிருந்தால் அவை சகிதமாக (அலுவல்களை)ப் பிரித்துக் கொடுப்பது சம்பந்தமாய் இவ் விதிகளின்படி பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு உத்தரவையும் சம்பந்தப்பட்ட ப்ரெஸிடென்ட் பஞ்சாயத்து, ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தர் ஆகிய இவர்களுக்கு உடனடியாகத் தெரிவிக்கவேண்டும்.

நிர்வாக அதிகாரியின் அதிகாரங்களும், கடமைகளும்.

43. நிர்வாக அதிகாரியானவர்.—

நிர்வாக அதிகாரியின் அலுவல்கள்

(a) பஞ்சாயத்தின் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும்.

ஆனுல், ஒரு தீர்மானம் சட்டப்படி நிறைவேற்றப்பட்டிருக்க வில்லையென்ரு வது, இச் சட்டத்தினுல் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை மீறி யிருக்கிறதென்ருவது இதை அமுலுக்குக் கொண்டுவந்தால் மனித உயிருக்கேனும், ஆரோக்கியத்துக்கேனும் பொதுஜனப் பாதுகாப்புக்கேனும் வெகுவாய் அபாயம் நேரிடக்கூடுமென்ருவது தலைவர் கருதினுல், நிர்வாக அதிகாரியானவர் அரசாங்கத்தாரின் உத்தரவுகளைப் பெறுவதற்காக அவ் விஷயத்தை அவர்களுடைய ஆலோசனைக்கு அனுப்பவேண்டும். அவர்களுடைய தீர்மானம் முடிவானதாகும்.

(b) பஞ்சாயத்தின் சகல உத்தியோகஸ்தர்கள் விஷயமாகவும், ஊழியக் காரர்கள் விஷயமாகவும் மேல் விசாரணை செய்யவேண்டும் ;

(c) இச் சட்டத்தினுலாவது, அதன்படியாகவாவது நிர்வாக அதிகாரிக்குப் பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சகல கடமைகளையும், கொடுக்கப்பட்டிருக்கிற சகல அதிகாரங்களையும் செலுத்தவேண்டும். மேலும், இச் சட்டத்தினுலாவது, அதன்

படியாவது ஏற்படுத்தப்படுகிற சகல வரையறைகளுக்கும், திட்டங்களுக்கும் உட்பட்டு இச் சட்டத்தின் நிபந்தனைகளை அமுலுக்குக் கொண்டுவருகிற காரியத்துக்காக நிர்வாக அதிகாரத்தைச் செலுத்துவதுமல்லாமல் இச் சட்டத்தின் காரியங்கள் கிரமமாய் நிறைவேறுவதற்கு நேராக உத்தரவாதத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

குறிப்பு

தீர்மானங்கள்—பி. 38 (2), 147
பஞ்சாயத்து—பி. 2 (20), பி. 8
தலைவர்—பி. 2 (26), பி. 29-35
அதிகாரங்கள்—பி. 8 (2)
அரசாங்கம்—பி. 2 (12)
மேல் விசாரணை—பி. 144-158
உத்தியோகஸ்தர்களும், வேலைக்காரர்களும்—பி. 57.

பி. 43. (b) நிர்வாக அதிகாரி மேல் விசாரணை செய்ய :— பிரிவு 2 (10) படிக்கு "நிர்வாக அதிகாரி" என்பது பட்டணம் பஞ்சாயத்துகளில் "நிர்வாக உத்தியோகஸ்தர்" என்றும், கிராம பஞ்சாயத்துகளில் தலைவர் என்றும் அறியவும். இவர் பஞ்சாயத்தினுடைய உத்தியோகஸ்தர்களுக்கும், சிப்பந்திகளுக்கும் 'லீவு' கொடுக்கலாம். அவர்களைக் கண்டிக்கலாம். அபராதமும் போடலாம். இந்த காரியங்களை நிர்வாக உத்தியோகஸ்தர் இல்லாத பஞ்சாயத்துகளில் பிரஸிடெண்ட் நிர்வாக அதிகாரி ஹோதாவில் செய்வார் பி. 40 (2). பிரிவு 62 யையும் பார்க்கவும்.

பி. 43. (c) :—சிவில் கோர்ட்டுகளுக்கு நிர்வாக உத்தியோகஸ்தர் கிரமமாக நடந்து கொண்டாரா, இல்லையா வென்பதை விசாரிக்க அதிகாரமுண்டு [மகம்மது எ.-இமாம் .A. I. R. 1948 P. C. 33] இச்சட்டத்தின் நிபந்தனைகளை அமுலுக்குக் கொண்டுவர நிர்வாக உத்தியோகஸ்தருக்கு அதிகாரமுண்டு. நிர்வாக உத்தியோகஸ்தருக்கோ, அல்லது பஞ்சாயத்துக்கோ, ஒரு கிராமவாசி ஒரு கடிதம் எழுதும் பட்டத்தில் கிரமமான விலாசமில்லை யென்று வீணாகக் காலம் போக்கி அந்தக் கடிதத்தைத் திருப்புதல் கூடாது. அந்தக் கிராமவாசியை கூடியவரையில் நேராக வரவழைத்து அக்கடிதத்தையோ, மனுவையோ திருத்தி உடனுக்குடனே காரியத்தை முடிப்பதுதான் ஒரு நிர்வாக உத்தியோகஸ்தரின் திறமையாகும். ஒரு பஞ்சாயத்து உத்தியோகஸ்தர் ஒரு நியாய வாதியாக (Lawyer) இருக்க வேண்டுமென்பது கிடையாது. தன்னால் கூடிய அளவுக்குச் சட்டப்படி நன்மை செய்யாமல் இருக்கக் கூடாது. [ஷம் தாசனி குறித்து A.I.R. 1936 Bom. 46] அவர்தன் காரியங்களைச் சரிவர நடத்தி வருகிற வரையில் அவர்மேல் யாதொரு தாவாவும் செய்யக் கூடாது. [சையத் ஆன்வார் - எ. - வெங்கடராம A. I. R. 16 M. 296] அம்மாதிரி ஏதாவது தாவா செய்ய வேண்டியிருந்தால் அதைப் பஞ்சாயத்தின் பேரில் தொடர வேண்டும். 170, 171 பார்க்கவும், நிர்வாக உத்தியோகஸ்தர் கிரமமாய் நடந்து கொள்ளாவிடில் அவர் பேரிலும் தாவா செய்யலாம். [அண்ணாஜி -:எ. - சுப்பிரமணியா 13 M. 442] ஒரு நிர்வாக உத்தியோகஸ்தர் ஒரு லைசென்ஸைக் கொடுப்பதற்கும், கொடாமல் நிராகரிப்பதற்கும் பாத்யதை யுள்ளவர் ஆவார். ஆனால் அவர்பேரில் யாதொரு வியாஜ்யமும் தொடரக்கூடாது வியாஜ்ஜியம் தொடரவேண்டியிருந்தால் பஞ்சாயத்தின் பேரில் தான் தொடர வேண்டும். [முனியம்மா - எ. - மதருஸ் முனிசிபாலிடி 8 M. H. C. 151] அவசியமாக இருந்தால் ஒரு கேசை நடத்தும் விஷயத்தில் ஒரு வக்கீலை ஏற்படுத்தலாம். பின்னிட்டு அது சரியல்ல என்று பஞ்சாயத்து ஆட்சேபிப்பது யோக்யமானதல்ல. ஆகையால், அந்த நியாயவாதியின் செலவுகளை பஞ்சாயத்து கொடுத்தாக வேண்டும். [வெங்கட சுப்பாராவ்-எ-ரேபெல்லி தாலுகா போர்டு A. I. R. 1926 M 981 (1) = 56 M. L. J. 110] ஹை கோர்ட்டு ஒரு இஞ்செக்ஷன் கேஸில் ஒரு நிர்வாக உத்தியோகஸ்தர் மேல் கோர்ட்க்கு அப்பீல் செய்யாதது சரியல்ல என்று எச்சரித்திருக்கிறது. [எஸ்ஸப்பா குறித்து A.I.R. 1942 M. 755.]

விதிகள்

யாதொரு விஷயம் பற்றி தகவல் தெரிவிக்கும்படி கேட்பது முதலியவை சம்பந்தமாக நிர்வாக அதிகாரிக்குள்ள அதிகாரம்

பி. 178 (2) (XXV) படிக்கு செய்யப்பட்ட விதிகள்-விளம்-41 தேதி 24-3-1951

1. ஒரு பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர், வரி விதிப்பது, பார்வையிடுவது அல்லது மேற்படி சட்டத்தின் நிபந்தனைகளின்படி யாதொரு லைசென்ஸ் அல்லது அனுமதி கொடுப்பது சம்பந்தமான எந்தப் பிரசினை விஷயமாகவும், யாதொரு நபர் தமக்கு முன்

ஹாஜராகி சந்தர்ப்பத்துக் கேற்றபடி சாட்சியம் கொடுப்பதற்கோ, அல்லது தஸ்தவேஜுகளைக்கொண்டு வந்து காட்டுவதற்கோ, அவருக்கு ஸம்மன் அனுப்பி வரவழைக்கலாம்.

2. நிர்வாக அதிகாரி 1-வது விதியின் பிரகாரம் அனுப்பிய ஸம்மனுக்கு எவரேனும் கீழ்ப்படியத் தவறினுல், அவருக்குப் பத்து ரூபாய் வரை அபராத தண்டனை விதிக்கப்படத் தக்கதாகும்.

குறிப்பு

எக்ஸிக்யூடிவ் ஆபீஸர்கள் தங்களுக்கு அதிகாரம் யிருக்கிறதென்று அனுவசியமாக ஊராரை அதிக தொந்திரவு செய்யக்கூடாது. தாங்களாகவே சுலபமாய் அறியக்கூடிய விஷயங்களுக்கு யாருக்கும் நோட்டீஸ் கொடுக்கக்கூடாது. அப்படிச் செய்யும் பக்ஷத்தில் அது கெட்ட எண்ணத்துடன் செய்ததாக கருதப்படும். ஆகையால் அப்பேர்ப்பட்ட சமயங்களில் கேஸ் போட்டால் அதை அங்கீகாரம் செய்யக்கூடாது. அது நோட்டீஸ் கொடுத்து ருஜு செய்யவேண்டிய பாரம் நிர்வாக அதிகாரி பேரில் இருக்க வேணும்.

ருஜுபாரம் சாக்ஷியம் :—இந்த ரூலின் கீழ் வரும் குற்றத்தைக் குறித்து 2-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்தான் விசாரணை செய்ய வேண்டும். ருஜுப்படுத்த வேண்டிய பாரம், எக்ஸிகியூடிவ் ஆபீஸரின் பேரில்தானிருக்கிறது. அவர் முன்னதாக யோசித்து, அவசரப்படாமல் கிரிமினல் தாவா செய்ய வேண்டும். இந்த விதியானது ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸரின் சாங்ஷன் பேரில் தாவா செய்யவேண்டுமென்று யிருந்தால் நலமாக யிருக்கும்.

பத்து ரூபா தண்டனை :—இதை குறித்து கிரிமினல் ப்ரொசீடர் கோடின் படிக்கு நியமிக்கப்பட்ட மாஜிஸ்ட்ரேட் விசாரித்து அவர் தண்டனையை விதிக்க வேண்டும். நிர்வாக அதிகாரி தன் இஷடம்போல் அபராதம் விதித்து வசூலிக்கக்கூடாது.

விதிகள்

பஞ்சாயத்துகளின் நிர்வாக அதிகாரிகள், உத்தியோகஸ்தர்கள் ஆகிய இவர்களின் கையெழுத்துப் பிரதி ரூபங்களை உபயோகிப்பது.

பி. 178 (2) (XXVI) படிக்கு விதிகள்-விளம் - 42-தேதி 24-3-1951.

1. பஞ்சாயத்தைச் சேர்ந்த நிர்வாக அதிகாரியின் அல்லது யாதொரு உத்தியோகஸ்தரின் கையெழுத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்று ஷை சட்டத்திலாவது அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச் சட்டம் அல்லது ரெகுலேஷனிலாவது சொல்லியிருக்கிற லைஸென்ஸ், அனுமதி, நோட்டீஸ், பில், ஷெட்யூல், ஸம்மன் அல்லது இதர தஸ்தாவேஜு ஒவ்வொன்றிலும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஷை நிர்வாக அதிகாரியின் அல்லது ஷை உத்தியோகஸ்தரின் கையெழுத்துப் பிரதி ரூபம் முத்திரையிடப்பட்டிருந்தால், அந்த லைஸென்ஸ் அனுமதி முதலியவை சரிவரக் கையெழுத்துப் போடப்பட்டிருப் பவையாகக் கருதப்படும்.

2. 1-வது விதியில் கண்டதெதுவும், பஞ்சாயத்து நிதியின் பேரில் எழுதப்படுகிற ஒரு செக் விஷயமாகவோ பஞ்சாயத்து செய்துகொண்ட ஒரு ஒப்பந்தப் பத்திரம் விஷயமாகவோ பிரயோகப்படுவதாகக் கருதப்படமாட்டாது.

நிர்வாக அதிகாரி தஸ்தாவேஜுகளை ஹாஜர்ப்படுத்துவது - பி. 50-யை பார்க்கவும் விதி - விளம் - XII தேதி 24-3-1951

நிர்வாக அதிகாரியானவர் தம் பொறுப்பிலுள்ள எந்த தஸ்தாவேஜியையேனும் ஹாஜர்ப்படுத்தும்படி பஞ்சாயத்துப் பிறப்பிக்கும் ஒவ்வொரு உத்தரவையும் அனுசரித்து நடக்க வேண்டும்; ஆனுல், அவ் வுத்தரவை உடனடியாக அனுசரித்து நடப்பதனுல் பஞ்சாயத்தின் நன்மைக்கோ, பொதுஜன நன்மைக்கோ, பாதகமாய் இருக்குமென்று தாம் கருதினுல், அவர் அவ்வாறு அனுசரித்து நடக்கவேண்டியதில்லை; பிந்திய விஷயத்தில், அப்படிக் கண்டுள்ள எழுத்து மூலமான உறுதி மொழியொன்றை அவர் கொடுக்கவேண்டியதுமன்றி, பஞ்சாயத்து அடியிற் கண்டபடி கட்டளையிட்டால், அப் பிரச்சினையை ரீஜனல் இன்ஸ்பெக்டருடைய, அல்லது இது விஷயமாய் அவர் அதிகாரம் கொடுக்கக்கூடிய உத்தியோகஸ்தருடைய ஆலோசனைக் கனுப்ப வேண்டும்; அவருடைய முடிவானதாகும்.

கமிஷனர்

44. (1) ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்காகவும் ஒரு கமிஷனர் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட வேண்டும். அத்தகைய கமிஷனர், சாதாரணமாக, பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதிக்காக, தேசீய விஸ்தரிப்பு சேவைத் திட்டத்தை அனுசரித்து, நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகஸ்தராக இருக்கவேண்டும்.

கமிஷனர்கள்

(2) யாதொரு கமிஷனருக்குக் கொடுக்கப்பட்ட சம்பளம், வர்த்தனைகள் சம்பந்தமாக அல்லது அவருடைய ரஜா வர்த்தனை, பென்ஷன், ப்ரஸிடென்ட் பண்டு என்னும் சகாய நிதி சம்பந்தமாக பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலிலிருந்து பணம் எதையும் வசூல் செய்யக்கூடாது,

(3) (1) உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட நிர்வாக கமிஷனர்களை தெரிந்தெடுத்து நியமிக்கிற முறைகள், அவர்களுடைய ஊழியத் திட்டங்கள், அவர்களுடைய சம்பளமும், வர்த்தனைகளும் ஒழுக்கமும், நடத்தையும் ஆகிய இவைகளைக் குறித்து ஒழுங்கேற்படுத்த அரசாங்கத்தாருக்கு அதிகாரமுண்டு.

(4) கமிஷனரானவர்—

(a) பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அல்லது அதன் யாதொரு கமிட்டியின் சபைகளில் வந்திருக்கவும், யாதொரு தீர்மானத்தைப் பிரேரேபிப்பதற்கான அல்லது வோட்டுக் கொடுப்பதற்கான உரிமையில்லமாமல் அந்தச் சபைகளில் நடக்கிற விவாதங்களில் கலந்து கொள்ளவும் பாத்தியதை உள்ளவராவார் ;

(b) பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அல்லது அதன் யாதொரு கமிட்டியின் எந்தச் சபைக்காகிலும் வந்திருக்கும்படி அக்கிராசனரால் கேட்டுக் கொள்ளப்பட்டால் அப்படியே வந்திருக்க வேண்டும்.

(c) பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் ;

(d) ஷை சபையின் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட அபிவிருத்தி சம்பந்தமாகவும், கவுன்சில் கட்டளையிடக்கூடிய வரி வசூல் சம்பந்தமாகவும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு குறித்த காலத்துக் கொருமுறை அறிக்கைகளை அனுப்ப வேண்டும் ;

(e) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் உத்தியோகஸ்தர்களையும், ஊழியர்களையும் மேல் விசாரணை செய்வது.

(f) இச் சட்டத்தின்படி கமிஷனருக்குப் பிரத்தியேகமாய் விதிக்கப்பட்டுள்ள கடமைகளையும், நிறைவேற்றுவதோடு கொடுக்கப்பட்ட சகல அதிகாரங்களையும் செலுத்த வேண்டும். அவ்வாறு இதன் பின்னல், வெளிப்படையாய் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அனுமதிக்கும், இதில் பின்னல் விதிக்கப்பட்ட மற்ற எல்லா நிர்ப்பந்தங்களுக்கும், வரையறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும்கூட உட்பட்டு இந்தச் சட்டத்தின் ஷரத்துக்களை நிறைவேற்றும் காரியங்களுக்காக, நிர்வாக அதிகாரத்தைச் செலுத்த வேண்டும். மேலும், இந்தச் சட்டத்தின் காரியங்களைச் சரியாக நிறைவேற்றுவதற்கு நேரடிப் பொறுப்பு வகிக்க வேண்டும்.

(5) பிரிவு 11-ன் (2) உப பிரிவில் ஏதேனும் இருந்த போதிலும், இந்த சட்டத்தின் ஷரத்துகளுக்கு உள்பட்டும் அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளுக்கு உள்பட்டும், கமிஷனருக்கு இந்த சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட அலுவல்களை நடத்துவதில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தனக்கு யுக்தம் என்று தோன்றுகிறபடி அவர் அவ்வாறு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்ட திட்டங்களை உத்தரவிடலாம்.

ஆனல் சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு சேவை திட்டத்தை அல்லது மற்றொரு திட்டத்தை தனிப்படையாக அரசாங்கத்தாரால் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தால், பஞ்சாயத்து யூனியன்கவுன்சிலால்

அத்தகைய திட்டங்களை குறித்து கமிஷனருக்கு கொடுக்கும் வழிகாட்டிகள் மேற்படி திட்டங்களின் ஒப்புதலையின் நிபந்தனைகளையும், ஷரத்துகளையும் ஊர்ஜிதம் செய்வதாக இருக்கவேண்டும்.

(6) அரசாங்கத்தாரால் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலால் கொடுக்கப்பட்ட யாதொரு கட்டளைகள் விதிக்கப்பட்ட வரையறைகளுக்கும் உட்பட்டு, கமிஷனரானவர், ஒரு எழுத்து மூலமான உத்தரவினால், அவருடைய எந்த அலுவல்களை யாவது, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் யாதொரு உத்தியோகஸ்தருக்கு அல்லது ஊழியருக்கு, அல்லது யாதொரு அரசாங்க ஊழியக்காரருக்குப் பிரித்துக் கொடுக்கலாம். மேலே கண்டபடி பிரித்துக் கொடுக்கப்பட்ட எந்த அலுவல்களையாவது நிறைவேற்றுவதோ, செய்வதோ கமிஷனரால் விதிக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும். மேலும் அது, அவருடைய மேல் விசாரணைக்கும், அவரால் புனர் விமரிசை செய்து திருத்தப்படுவதற்கும் உட்பட்டதாகும்.

குறிப்பு

பி. 44. (1)—பஞ்சாயத்து யூனியன்களுக்கு கமிஷனர்களை நியமித்து அவர்களுடைய கடமைகள், அதிகாரங்கள் இன்னவை என்பதை இப் பகுதிகளில் வகை செய்து இருக்கிறது. தொகுதி அபிவிருத்தி அதிகாரிகள் சாதாரணமாக கமிஷனர்களாக நியமிக்கப்படுவார்களென இதில் சொல்லியிருக்கிறது.

பி. 44. (4)—இது பி. 41. பி. 43களை போன்றது.

பி. 44. (5)—பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் குறிப்பிட்ட உத்தரவுகளை நிறைவேற்றவேண்டுமென்று கமிஷனருக்கு தெரிவிக்கலாம். அவர் அதற்கு விரோதமாக நடந்து கொள்ளக் கூடாது. அப்படி நடந்து கொள்வதாக ஏற்படும் பக்ஷத்தில் அது இந்த உபபிரிவின் ஷரத்து படிக்கு கிரமமானதாக யிருக்கவேண்டும். இல்லாவிட்டால் கமிஷனர் சட்டத்தை மீறி நடக்கிறவராக கருதப்படுவார்.

சமுதாய அபிவிருத்தியின் தேசிய விஸ்தரிப்பின் சேவை திட்டம்.—பீடிகை, பாரா III குறிப்பு பக்கங்கள் 17, 18, 19; பி. 11 குறிப்பு பக்கங்கள் 57—60; பி. 66-ன் கீழ் குறிப்புகளையும் பார்க்கவும். (5) உப-பிரிவில் கொடுக்கப்படும் வழிகாட்டிகள் அரசாங்கத்தாரின் நிபந்தனைகளுக்கு முரன்பாடாக இருக்கக்கூடாது.

பி, 44. (6).—61-வது பிரிவை பார்க்கவும்.

அவசரமான சந்தர்ப்பங்களில், நிர்வாக அதிகாரிக்கும், கமிஷனருக்கு,முள்ள அதிகாரங்கள்.

45. யாதொரு வேலையைச் செய்து முடிப்பதற்காகவாவது, யாதொரு காரியத்தைச் செய்வதற்காகவாவது, சந்தர்ப்பத்துக்கேற்ப பஞ்சாயத்தின், அல்லது பஞ்சாயத்து கவுன்சிலின் யூனியனின் அனுமதி வேண்டியிருந்து, அந்த வேலையை அல்லது காரியத்தை உடனேசெய்து முடிப்பது, அல்லது செய்வது பொது ஜனங்களின் சேவைக்கு, அல்லது க்ஷேமத்துக்கு, அவசியமானதென்று நிர்வாகஉத்தியோகஸ்தர், அல்லது கமிஷனர், அபிப்பிராயப்பட்டால், அவர் அவசரசந்தர்ப்பங்களில் அப்படிப்பட்ட, காரியத்தைச் செய்யும்படியாவது கட்டளையிடலாம்; மேலும் அவர், அப்படிப்பட்ட வேலையைச் செய்து முடிக்கவாயினும், அப்படிப்பட்ட காரியத்தைச் செய்யவாயினும் பிடித்த செலவை சந்தர்ப்பத்துக்கேற்ப பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து கொடுக்கும்படிக் கட்டளையிடலாம்.

ஆனால்—

(a) குறித்த யாதொரு வேலையைச் செய்து முடிக்கக்கூடாதென்ருவது, குறித்த யாதொரு காரியத்தைச் செய்யக் கூடாதென்ருவது பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் செய்திருக்கும் யாதொரு உத்தரவுக்கு விரோதமாய் அவர் இந்தப் பிரிவின்படி நடக்கக் கூடாது; மேலும்,

(b) இந்தப் பிரிவின்படி நடத்தப்பட்ட காரியத்தைக் குறித்தும், அதற்குண்டான காரணங்களைக் குறித்து அவர் பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு அதன் அடுத்த சபையிலே அறிவிக்க வேண்டும்.

குறிப்பு

நிர்வாக அதிகாரி—பி. 2. (10) பி. 43	பஞ்சாயத்து பி. 2. (20) பி. 8.
வேலை—பி. 42	பஞ்சாயத்து நிதி—பி. 134.

பொது :—பி. (a) (b). கண்ட ஷரத்துகளுக்குட்பட்டு ஒரு நிர்வாக உத்தியோகஸ்தர் பஞ்சாயத்தின் உத்திரவில்லாமலே அவசரமான காலங்களில் பஞ்சாயத்துக் காரியங்களை நிறைவேற்றலாம். அவசரமான காரியமா இல்லையாவென்பது அந்தந்த காரியத்தை அனுசரித்திருக்கும். [தேஸ் குறித்து **A. I. R. 1930 L. 781**] ஒரு வக்கீலை ஏற்பாடு செய்வது அவசரமாயிருக்கலாம். ஒரு டோல்கேட் (**Tollgate**) ஏற்படுத்துவது அவ்வளவு அவசரமானதல்ல. [மெஸ்ரிகான் எ. கர்னூல் டிஸ்டிரிக்ட் போர்டு **51. M. L. J. 690 = A. I. R. 1926 M. 173**]. இதே மாதிரியாக பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் கமிஷனரும் நடந்து கொள்ளலாம்.

தனது அபிப்பிராயம் :—இந்த மாதிரி அபிப்பிராய விஷயங்களில் சாமானியமாக கோர்ட்டுகள் பிரவேசிக்காது. ஆனல், வேண்டுமென்றும், கொடுங்கோன்மையானதும், சட்ட விரோதமானதுமான அபிப்பிராயமாகயிருந்தால், சிவில் கோர்ட்டுகள் பிரவேசிக்கலாம். [பந்தர் தாலூகா போர்டு—எ. மல்லிகார்ஜுனு 45 M.156 = 61. I. C. 497] : : [சங்கரப்ப—எ—பாம்பே அரசாங்கம் **A. I. R. 1957 Bom. 55**] பொது ஜனங்களின் க்ஷேமத்தைக் குறித்து இந்தக் காரியங்கள் செய்ததாக இருக்கவேண்டும். அப்படி யில்லாவிட்டால் பொது ஜனங்களும் பஞ்சாயத்தும் ஆக்ஷேபிக்கலாம். நிர்வாக உத்தியோகஸ்தரோ, கலெக்டரோ கிரமப்படி நடந்து கொண்டிருந்தால், அவர்களை பி. 156, 173 காப்பாற்றும்.

நிர்வாக அதிகாரியால் செய்யப்பட்ட அவசரகால நியமனங்கள் விஷயமாகக் கட்டுப்பாடு, விதிகள் (IV—2,) தேதி 2—4—1952

1. மேற்படி சட்டத்தின் 45 (1) பிரிவில்கண்ட விலக்கு நிபந்தனையில் கொடுத்துள்ள அதிகாரங்களை நிர்வாக அதிகாரியானவர் அடியிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டுச் செலுத்த வேண்டும் ; அவையாவன :—

(1) குறிப்பிட்ட யாதொரு வேலைக்காக அதிகப்படியான உத்தியோகஸ்தர்களையும், ஊழியர்களையும் தற்காலிகமாக அமர்த்திக் கொள்ளுதல், பஞ்சாயத்தின் யாதொரு தீர்மானத்தினலோ ரீஜனல் இன்ஸ்பெக்டராலோ, இன்ஸ்பெக்டராலோ, தடுக்கப்பட்டிருத்தல் ஆகாது ;

(2) நிர்வாக அதிகாரியானவர், ஒவ்வொரு நியமனத்தைப் பற்றியும், மேற்படி அதிகாரங்களைச் செலுத்தியதற்கான எல்லாக் காரணங்களையும் பஞ்சாயத்துக்கு அதன் அடுத்த கூட்டத்திலும், சம்பந்தப்பட்ட ரீஜனல் இன்ஸ்பெக்டருக்கு உடனடியாகவும் ரிபோர்ட் செய்யவேண்டும்.

2. பிரஸ்தாப நியமனத்தைப் பற்றி 1-வது விதியின்படி பஞ்சாயத்துக்கு ரிபோர்ட் செய்யப்பட்ட தேதிக்குமுன், அந்த நியமனம் அற்றுப்போகாதிருந்து, அந் நியமனத்தைத் தொடர்ந்து வைத்திருக்கவேண்டுமெனப் பஞ்சாயத்து தீர்மானித்தால், நிர்வாக அதிகாரியானவர் அந் நியமனத்தைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கு மேற்படி சட்டத்தில் கண்ட 45 (1) பிரிவின்படி வேண்டியுள்ள அனுமதிக்காக பிரஸ்தாப ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர் மூலமாக, இன்ஸ்பெக்டருக்கு உடனே விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். ஆயினும் மேற்படி நியமனத்தை அறுதி செய்துவிட வேண்டுமெனப் பஞ்சாயத்து தீர்மானித்தால், நிர்வாக அதிகாரியானவர் அத்தீர்மானத்தை நிறைவேற்றவேண்டும் ; ஆனல், அந்த நியமனத்தை தமது சொந்தப் பொறுப்பில் தொடர்ந்து வைத்திருக்க அவர் கருதினல் மேற்சொன்னவாறு நிறைவேற்ற வேண்டியதில்லை ; அவர் அப்படிக் கருதுவதற்கான காரணங்களை எழுதிவைக்க வேண்டும் ; அவர் அவ்வாறு கருதுகிற விஷயத்தில், அத்தகைய அனுமதிக்காக ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர் மூலமாக இன்ஸ்பெக்டருக்கு உடனடியாக விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும்.

3. நிர்வாக அதிகாரியினுல் தாற்காலிகமாக நியமிக்கப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தரின் அல்லது ஊழியரின் சம்பளமும் வர்த்தனைகளும் கிரமமாக நியமிக்கப்பட்ட ஓர் உத்தியோகஸ்தருக்கோ, ஊழியருக்கோ கொடுக்கப்படத்தக்க வீதங்களுக்கு மேற்படலாகாது.

சபைகளில் அக்கிராசனம் வகிப்பதும் - அதன் நடைமுறைகளும் (பி. 46 - 53)

பஞ்சாயத்து சபைகளில் அக்கிராசனம் வகிப்பது.

46. (1) யாதொரு பஞ்சாயத்தின் ஒவ்வொரு சபையிலும் தலைவர் அக்கிராசனம் வகிக்க வேண்டும்; அவர் இராத பட்சத்திலே, உப-தலைவர் அக்கிராசனம் வகிக்க வேண்டும். தலைவர், உப-தலைவர் ஆகிய இருவரும் இராத பட்சத்தில், அந்தச் சமயத்திலே, அக்கிராசனம் வகிப்பதற்காக, அந்தச் சபையிலிருக்கும் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற ஓர் அங்கத்தினர் அக்கிராசனம் வகிக்க வேண்டும்,

(2) தலைவர் சபையில் ஒழுங்கு தவருதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது மல்லாமல் சபைகளிலாகிலும், அவைகள் சம்பந்தமாகவாகிலும், ஏற்படுகிற ஒழுங்கைப் பற்றிய சகல விஷயங்களையும், தீர்மானிக்கவும் வேண்டும். ஒழுங்கைப் பற்றிய யாதொரு விஷயத்தைக் குறித்துத் தர்க்கம் எதுவும் நடக்கக்கூடாது; மேலும், ஒழுங்கைப்பற்றிய யாதொரு விஷயமாய் தலைவர் செய்கிற தீர்மானமானது முடிவானதாகும்.

(3) பிரஸ்தாப சமயத்தில் அக்கிராசனம் வகிக்கிற உப-தலைவர் அல்லது அங்கத்தினர் அந்தச் சபையிலும் அவர் அதில் அக்கிராசனம் வகிக்கிற கால அளவிலும் தலைவருக்குள்ள சகல அதிகாரங்களையும் உடையவராயிருப்பார்.

குறிப்பு

சபைகள் (மீடிங்குகள்) பி. 51.	வைஸ்-பிரஸிடெண்டு—பி. 29.
பஞ்சாயத்து—பி. 2. (20), 8	அங்கத்தினர்—பி. 2. (17), 14, 38.
தலைவர்—பி. 29-35	கடைசி—பி. 8. (3).

பி. 46. (1) ஒவ்வொரு சபையிலும் தலைவர் அக்கிராசனம் வகிக்க வேண்டும்.— பிரசிடெண்டு இல்லாத சமயத்தில் வைஸ்-பிரசிடெண்டும், இருவருமில்லாத சமயத்தில் ஒரு மெம்பரும் கிரமப்படி அக்கிராசனம் வகிக்க வேண்டும். அப்படியில்லாவிட்டால் எல்லாம் குழப்பம் ஆகும். அதனுல் பஞ்சாயத்து மூலமாக உத்திரவு செய்யவேண்டிய பணத் தொகைகள் இல்லாமல் போய்விடும். ஒரு பஞ்சாயத்துக் காரியங்களும் நிறைவேருமல் போய்விடும். ஒரு பஞ்சாயத்துச் சபையில் மெம்பரல்லாத ஒருவர் அக்கிராசனம் வகித்தால் அது பஞ்சாயத்துச் சபையாகாது. அவர்கள் ஏதாவது தீர்மானம் செய்திருந்து அதன்படிக்கு கிராம வாசிகள் நடந்து கொள்ளாவிட்டால் அது குற்றமாகாது. [சந்தா குறித்து 46 P. R. 1905 Cr.] ஒரு வைஸ்-பிரசிடெண்டோ அல்லது ஒரு மெம்பரோ அக்கிராசனம் வகித்து இருக்கும்போது சபைக்கு பிரசிடெண்டு வரும் பட்சத்தில் அந்த அக்ராசனுதிபதி தன் அக்ராசனப் பதவியை அந்த பிரெசிடெண்டிடம் கொடுத்து விடவேண்டும். அதே மாதிரியாக ஒரு பிரசிடெண்டு ஸ்சானம் காலியாயுள்ளபோது ஒரு வைஸ்-பிரசிடெண்டு மாத்திரம் பஞ்சாயத்துக் காரியங்களை நிறைவேற்றிவரும் சமயத்தில் அவரும் சபைக்கு வராமல் இருக்கும் போது சபை ஆரம்பிக்கும் பட்சத்தில் ஒரு மெம்பர்தான் அக்கிராசனம் வகிக்க வேண்டும். அச்சமயத்தில் வைஸ்-பிரசிடெண்டு வரும் பட்சத்தில் தான் அக்கிராசனப் பதவியை காலி செய்யவேண்டும். பிரசிடெண்டு அல்லது வைஸ்-பிரசிடெண்டு பதவி யேற்றுக் கொண்டு சபையை தொடர்ந்து நடத்தவேண்டும்.

பி. 46. (1) சபை தலைவரின் கடமைகள்.— சபையில் ஒழுங்கு படுத்துவதும் பஞ்சாயத்தின் காரியத்தைக் கிரமமாய் நடத்துவதும், மெம்பர்களின் அபிப்பிராயத்தை சரியாக அறிந்தும், சபையை நடத்த வேண்டியது பிரசிடெண்டின் கடமையாகும். அவர் இஷ்டப் பிரகாரம் சபையை ஒத்திவைக்கவோ, நிறுத்திவைக்கவோ அதிகாரமில்லை. அவர் ஒத்தி வைக்கும் பட்சத்தில் மீதியுள்ள மெம்பர்கள் பெரும்பான்மை யோராயின் எந்த விஷயத்திற்காக அந்த சபை கூட்டப்பட்டதோ, அதற்காகக் கிரமப்படி நோட்டீஸ் கொடுத்திருந்தால், அந்த விஷயத்தை ஆலோசிக்கலாம். அப்போது அவர்களில் ஒருவர் அக்கிராசனம் வகித்து

காரியத்தை நடத்தலாம். அது சட்டப்படிச் செல்லத்தக்கின சபையாகும். [கோபால் நாராயண - எ. - ஷண்முகப்பா A. I. R. 1927 Bom. 603] பிரசிடெண்டானவர் பெரும்பான்மை யோருடைய அபிப்பிராயத்தை நிறைவேற்றுவதற்காகத் தலைமை வகித்து இருக்கிறுரென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். அவருடையதும் சிறுபான்மையோருடையதும் அபிப்பிராயங் களையும் தள்ளப்பட்டதாகக் கருதவேண்டும். சபையைச் சப்தமில்லாமலும், மரியாதையுடனும் நடத்தவேண்டும். பிரசிடெண்டும் மெம்பர்களிடமிருந்து மரியாதை அடையவேண்டும். பிரசிடெண்டு ஸ்திரமாக இருக்கவேண்டும். அக்கிராசனம் வகிப்பவர் அநாவசியமான சங்கதிகளைப் பேசும்படி இடங் கொடுக்கலாகாது. சபையில் வீண் கலகங்கள் நடக்கும் பட்சத்தில் சபையைத் தள்ளி வைக்கலாம்.

இராதபட்சத்தில்.—குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட இடத்தில் ஆஜராயிராவிட் டால் என்பதைக் காட்டுகிறது. "அந்தச் சமயத்தில்" என்னும் பதம் காலத்தைக் காட்டுகிறது. "இராத பட்சத்தில்" என்னும் பதங்கள், ஆபீஸிலாவது அல்லது அவரது இலாகாவிலாவது இராதபட்சத்தில் என்கிற பொருள் ஒருக்காலும் ஏற்படாது. [செல்லசாமி கோனர் - ஏ. - கொருசல் சங்கை காயாகார். A. I. R. 1927 M. 935=103 I. C. 821.]

யாதொரு விஷயத்திற்கும் கோர்ட்டுக்குப் போகாமல் பஞ்சாயத்துக்களும், அதன் மெம்பர்களும், பொது ஜனங்களும், கூடிய வரையில் உத்தியோகஸ்தர்கள் மூலமாகவும், இன்ஸ்பெக்டர் போன்ற கவர்ன்மெண்ட் சிப்பந்திகள் மூலமாகவும் பரிகாரம் தேடிக் கொள்வது மேலானதாகும் என்பது எமது அபிப்பிராயம். கோர்ட்டுகளுக்கு போனுல் காலதாமதம் ஏற்படும்.

47. (1) ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலும், (2) உட்பிரிவின் ஷரத் துக்களுக்குட்பட்டு அத்தகைய காலங்களிலும், இடங்களிலும், சபை கூடி, சபைக் கூட்டங்களில் (கூட்டங்களில் நிர்வாகச் சிற் றெண உட்பட) அலுவல்களின் விவகாரம் சம்பந்தமாக நிர் ணயிக்கப்படக்கூடிய அத்தகைய நடவடிக்கை முறையின் விதி களை அனுசரிக்க வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் கூட்டங்கள்.

ஆனுல், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் யாதொரு இரண்டு கூட்டங்களி னிடையே அறுபது நாட்களுக்கு மேல் கழிந்திருக்கக்கூடாது.

(2) பஞ்சாயத்து யூனியனின் ஒவ்வொரு சபையிலும், அக்கிராசனர் அக்கிரா சனம் வகிக்க வேண்டும். அவர் இராத பட்சத்திலே உப-அக்கிராசனர் அக்கிராசனம் வகிக்க வேண்டும். அக்கிராசனர், உப-அக்கிராசனர் ஆகிய இருவரும் இராதபட்சத் திலே, அந்தச் சமயத்தில், அக்கிராசனம் வகிப்பதற்காக அந்தச் சபையிலிருக்கும் அங்கத்தினர்களால் தெரிந்தெடுக்கப்படுகிற ஓர் அங்கத்தினர் அக்கிராசனம் வகிக்க வேண்டும்.

(3) அக்கிராசனர், சபையில் ஒழுங்கு தவருதபடி பார்த்து கொள்ள வேண்டி யதுமல்லாமல், சபைகளிலாகிலும் அவைகள் சம்பந்தமாக வாகிலும் ஏற்படுகிற ஒழுங் கைப்பற்றிய சகல விஷயங்களையும் தீர்மானிக்கவும் வேண்டும். ஒழுங்கைப்பற்றிய யாதொரு விஷயத்தைக் குறித்துத் தர்க்கம் எதுவும் நடத்தக்கூடாது; மேலும் ஒழுங் கைப்பற்றிய யாதொரு விஷயமாய், அக்கிராசனர் செய்கிற தீர்மானமானது, இச் சட் டத்தில் வேறேவிதமாய் வெளிப்படையாக ஏற்பாடு செய்திருந்தாலொழிய அறுதி யானதாகும்.

(4) பிரஸ்தாப சமயத்தில் அக்கிராசனம் வகிக்கிற உப-அக்கிராசனர் அல்லது அங்கத்தினர் அந்தச் சபையிலும் அவர் அதில் அக்கிராசனம் வகிக்கிற கால அள விலும் அக்கிராசனரின் சகல அதிகாரங்களையும் உடையவராயிருப்பார்.

குறிப்பு

பிரிவு **47.** (1):—பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்களின் கூட்டங்களை நடத்துவது சம்பந்தமாக அவசியமான ஷரத்துக்கள் இப்பிரிவில் கண்டிருக்கின்றன. இதற்கு தனியாக விதிகளை அரசாங்கத்தார் செய்யலாம், அல்லது 46, 51-வது பிரிவுகளின்கீழ் உள்ள விதிகளை உபயோகித்துக் கொள்ளலாம்.

60 நாட்களுக்குமேல் கழிந்திருக்கக்கூடாது.--சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்கள் இதை கவனித்து செய்யவேண்டும். ஒரு வருஷத்திற்கு நிகழ்ச்சி நிரல் (Programme). முன்னதாக தயாரித்து ஊர்ஜிதம் செய்துக் கொண்டால் நன்றாக இருக்கும். மீதி விஷயங்களுக்கு 46-ம் பிரிவையும் அதன் குறிப்பையும் பார்க்கவும்.

அங்கத்தினர்கள் எப்போது தர்க்கத்தில் கலந்து கொள்ளக் கூடாதென்பதும் வோட் கொடுக்கக் கூடா தென்பதும்

48. (1) பஞ்சாயத்து, அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அல்லது அதன் யாதொரு கமிட்டியின் சபையிலாவது, ஆலோசனைக்கு வரும் எந்த விஷயமாகிலும், பொது ஜனங்களுக்குப் பொதுவாய் சம்பந்தப்படக்கூடியதைத் தவிர, யாதொரு அங்கத்தினருக்கே யாகிலும், அவருடன் இருக்கும் பங்குக்காரருக்காகிலும், அவ் விஷயத்தில் நேராகவாவது, நேராகவல்லாமல் மற்றப்படி யாவது, திரவிய சம்பந்தமாய் எவ்வித பாத்தியதையேனும் இருக்கிற பட்சத்திலே, அப்படிப்பட்ட விஷயத்தைப்பற்றி தர்க்கம் நடக்கும்போது, ஷை அங்கத்தினர் வோட்டு கொடுக்கவுங்கூடாது, அந்தத் தர்க்கத்திலே கலந்து கொள்ளவுங்கூடாது.

(2) சந்தர்ப்பத்துக்கேற்ப தலைவர் அல்லது அக்கிராசனர் எந்த விஷயத்தில் யாதொரு அங்கத்தினருக்கு அப்படிப்பட்ட பாத்தியதை இருப்பதாகத் தாம் நம்புகிறரோ, அப்படிப்பட்ட யாதொரு விஷயத்தைப்பற்றி தர்க்கம் நடக்கும்போது அந்த அங்கத்தினரை அவ் விஷயத்தைப்பற்றி வோட் கொடுக்கக்கூடாதென்றோ, அல்லது அதுபற்றி நடக்கும் தர்க்கத்தில் கலந்து கொள்ளக்கூடாதென்றோ, தடுக்கலாம். அல்லது இந்தத் தர்க்கம் நடந்து கொண்டிருக்கும்பொழுது சபையில் இருக்கக்கூடாதென்று அவர் உத்தரவு செய்யலாம்.

(3) அந்த அங்கத்தினர் தலைவர் அல்லது அக்கிராசனர் செய்த தீர்மானத்தை ஆட்சேபிக்கலாம்; அதன் பேரில், தலைவர் அல்லது அக்கிராசனர் அவ் விஷயத்தைச் சபையாருக்குத் தெரிவிக்க வேண்டும். சபையாரின் தீர்மானம் முடிவானதாகும்.

(4) தர்க்கம் நடந்து கொண்டிருக்கும் யாதொரு விஷயத்தில் தலைவர் அல்லது அக்கிராசனருக்கு அப்படிப்பட்ட திரவிய சம்பந்தமான பாத்தியதை எதுவாகிலும் இருப்பதாக அந்தச் சபைக்கு வந்திருக்கும் யாதொரு அங்கத்தினர் நம்புகிற பட்சத்திலே, அந்தப்படி கண்ட ஒரு பிரேரேபணை சபையாரால் அங்கீகரிக்கப்பட்டால் ஷை தர்க்கம்; நடந்து கொண்டிருக்கும்போது அந்தச் சபையில் இருக்கக்கூடாதென்று தலைவர் அல்லது அக்கிராசனர் கோரப்படலாம்.

(5) சம்பந்தப்பட்ட அங்கத்தினர் (3) உட்பிரிவில் குறிப்பிட்ட விஷயத்தைக் குறித்து வோட்டுக் கொடுக்க உரிமையுள்ளவராக மாட்டார்; மேலும் சம்பந்தப்பட்ட தலைவர் அல்லது அக்கிராசனர் (4) உட்பிரிவில் குறிப்பிட்ட பிரேரேபணையைக் குறித்து வோட்டுக் கொடுக்க உரிமையுள்ளவராக மாட்டார்.

விளக்கம்.—இந்தப் பிரிவில் "தலைவர்", "அக்கிராசனர்" என்னும் சொற்றொடரில், ஒரு "உப தலைவர், உப-அக்கிராசனர் அல்லது அந்தச் சமயத்தில்அக்கிராசனம் வகிக்கும் ஒரு அங்கத்தினர்" என்பதும் அடங்கும்,

குறிப்பு

பி. 48. (1) திரவிய சம்பந்தமான பாத்யதை.—இது நேரடியாக யிருக்க வேண்டியதில்லை. மறைமுகமாக யிருந்தாலும் அந்த மெம்பர் அந்த ஆலோசனையில் பங்கெடுத்து கொள்ளக்கூடாது. மீடிங்கில் ஓட்டு எடுக்கும் விஷயத்தில் சட்டபடி நடக்காவிட்டால் பாதிக்கப் பட்ட பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் பேரில் தாவா செய்யலாம். [நாரிமேன்-எ-பாம்பே முனிசிபல் கார்பொரேஷன், A. I. R. 1923 Bom. 305 :: ரஹ்டோகுறித்து A. I. R. 1925 Lah. 146 : ஸ்ரீனிவாச-எ.-சுப்ரமணியன் 61 M. L. J. 724 (733).]

இது சம்பந்தமாக பிரிவு 51-ன் கீழ் யுள்ள மீட்டிங் நடவடிக்கை விதிகளில் 11-வது விதி "பணப் பற்றுதல் உள்ள மெம்பர்கள் மீடிங்கில் கலந்து கொள்ளக்கூடாது" என்பதையும் பார்க்கவும் மேலும் பி. 25 (1) (c)-பி. 26 (d) களின் கீழ் குறிப்புகளை பார்க்கவும்.

விஷயம்.—பஞ்சாயத்தையோ, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலேயோ குறித்த விஷயமாக யிருக்க வேண்டும். [பி. 8-பி. 11- பி. 134-140 களை பார்க்கவும்]. ஒரு அங்கத்தினருக்கோ தலைவருக்கோ "திரவிய சகாய பாத்யதை" உண்டா இல்லையா என்று ஓட்டு எடுக்கும்போது அந்த மெம்பராவது, தலைவராவது ஓட்டு கொடுக்கக்கூடாது.

நடவடிக்கைக் குறிப்புகள் 3 தினங்களுக்குள் அனுப்பவும்

49. யாதொரு பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் ஒவ்வொரு சபையிலும் நடந்த நட்வடிக்கைக் குறிப்புகளுக்கு ஒரு நகலேயும் ஷ கூட்டம் முடிவானதிலிருந்து 48 மணி நேரத்துக்குள், அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்த எந்த அங்கத்தினரிடமிருந்தாகிலும் வரப்பெற்றுக் கொள்ளப்படுகிற சகல அபிப்பிராய பேதக் குறிப்புகளுக்கும், ஒரு நகலேயும் சந்தர்ப்பத்துக்கேற்ப தலைவர் அல்லது அக்கிராசனர் அந்தக்கூட்டத்தின் தேதியிலிருந்து 3 தினங்களுக்குள் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டும்.

ஆனல், பொதுவாகவே குறிப்பிட்ட எந்த வகுப்புகளேயாவது சேர்ந்த விஷயங்களிலோ ஷ நடவடிக்கைக் குறிப்புக்களேத் தம்மிடமிருந்து இது விஷயமாய் அதிகாரம் பெற்றிருக்கிற யாதொரு உத்தியோகஸ்தருக்கு அனுப்ப வேண்டுமென்று இன்ஸ்பெக்டர் கட்டளே யிடலாம்.

குறிப்பு

சபை—பி. 51
பஞ்சாயத்து—பி. 2 (20). பி. 8
மெம்பர்—பி. 2 (17) பி. 14. பி. 38,
இன்ஸ்பெக்டர்—பி. 2 (15), பி. 145
தலைவர்—பி. 29-35

பி. 49. நடவடிக்கைக் குறிப்புகள்.—இவைகளேச் சபையில் எழுதிய பிறகு பிரசிடென்டாக அக்கிராசனம் வகிப்பவர் படித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு மெம்பருக்கும் இந்தக் குறிப்பைப் பார்க்க அதிகாரமுண்டு. இந்தக் குறிப்புதான் தீர்மானத்திற்கு ஆதாரமாகும். இந்தக் குறிப்பு பஞ்சாயத்துச் சபையில் நடக்கும் தீர்மானங்களுக்குச் சரியானது அல்லவென்று ஒரு மெம்பர் தெரியப்படுத்த வேண்டுமென்றுல் அவர் 48 மணி நேரத்திற்குள் அந்த வேறுபட்ட அபிப்பிராயத்தை பிரசிடெண்டிற்கு அனுப்பவேண்டும். பிரசிடெண்டு அதை இன்ஸ்பெக்டருக்கு அனுப்ப வேண்டும். பி. 51ன் கீழ் விதி 10யை 118-ம் பக்கத்தில் பார்க்கவும.

ஒரு முனிஸிபாலிடியின் தீர்மானம் சட்டப்படி சாங்ஷன் செய்யப்படாமல் போனல் அந்த தீர்மானத்திற்கு விரோத மாக நடந்ததாக குற்றம் சாட்டப் பட்டால் அது செல்லாது [ஹரிசான்தாஸ் - எ. - என்பார். 14 Cr. L. J. 576 = 21 I. C. 176 (All.)

அக்கிராசனம் வகிக்கும் மெம்பரிடத்தில் நம்பிக்கைக் குறைவு, அல்லது சபையில் நடப்பவைகளேச் சரியாக குறிப்பிடவில்லே என்ற சந்தேகம் இவைகளே ஒழிக்க ஒவ்வொரு மெம்பருக்கும் இந்த செக்ஷன் கொடுத்திருக்கிறது. ஸ்வதந்தரமாகும், இதைப் பொது ஜனங்களின் நன்மையைக் கோரும் மெம்பரின் அபிப்ராயம் பெரும்பான்மையோரின் அபிப்பிராயத்திற்கு வேருயிருந்த போதிலும் பொருட்படுத்தாது தைரியமாய் எடுத்துப் பேசி அதை எழுதி அனுப்புவது அவரது கடமை.

ஜில்லா கலெக்டர்.—முனிசிபாலிடியின் நடவடிக்கை குறிப்பைப் பெறும் பாத்தியதையை மட்டும் பெற்றிருக்கும் ஜில்லாக் கலெக்டர், ஒரு முனிசிபாலிடியின் உத்தியோகஸ்தரை அந்த முனிஸிபாலிடியார் நிறுத்திவிட்டதாக செய்த தீர்மானத்தின்மேல் செய்த அப்பீல் விசாரிக்க அந்தக் கலெக்டருக்கு அதிகாரமுண்டு (டெஜ் நாராயண் சிங் - எ. - எம்பரர், 61 61 I. C. 515 (Part.) இந்த விதிகளின் கீழ் நடவடிக்கை நடத்தும் ஒரு ஜில்லா கலெக்டர் கோர்டாக பாவிக்கப்படமாட்டார். [சிங்காரவேலு முதலியார் எ. வரதராஜ முதலியார், 10 Cr. L. J. 9].

ரெகார்டுகளே ஆஜர்ப் படுத்தும்படிக் கேட்க பஞ்சாயத்து, அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்குள்ள அதிகாரம்.

50. யாதொரு பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் சந்தர்ப்பத்துக்கேற்ப அதன் நிர்வாக அதிகாரி அல்லது கமிஷனர் வசத்திலுள்ள தஸ்தாவேஜு ஆஜர்ப்படுத்தும்படி அவரைக் கேட்கலாம். அவர் நிர்ணயிக்கக்கூடிய விதிகளுக்குட்பட்டு, மேலே கண்ட பிரகாரம் ஒவ்வொரு தடவையும் கேட்கப்படுகிறபடி நடந்து கொள்ள வேண்டும்.

குறிப்பு

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்—பி. 2 (24) பி. 11.
பஞ்சாயத்து—செ. 2 (20), பி. 8
நிர்வாக அதிகாரி—செ. 2 (11), பி. 43
விதிகள்—செ. 178.

பி. 50ன் பொது,—பி. 38 (3) படிக்கு ஒவ்வொரு மெம்பருக்கும் பஞ்சாயத்து ரிகார்டுகளைப் பார்க்க அதிகார முண்டு. அது மாதிரி பார்க்க நிர்வாக உத்தியோகஸ்தர் காட்டாவிட்டால் பஞ்சாயத்து அந்த ரிகார்டுகளைக் காட்டவேண்டுமென்று இந்த பிரிவின்படிக்கு தீர்மானிக்கலாம். அதன் நிர்வாக உத்யோகஸ்தர் ஆதற்காக ஏற்படுத்தப்படும் விதிகளை அனுசரித்து அவைகளைக் காட்டவேண்டும். இதன் விதிகளை பி. 43 கீழ் விதி- I-XII தேதி 24-3-1951யை பார்க்கவும். ரிகார்டுகளின் நகல்களை குறித்து பி. 51ன் கீழ் 15-ம் விதியை பார்க்கவும்.

பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள், கமிட்டிகள் ஆகிய இவைகளின் நடவடிக்கைகள்

51. (1) ஒவ்வொரு பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள், அவற்றின் கமிட்டிகள், இவற்றின் நடவடிக்கைகளும், நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளையும், அந்த விதிகளுக்காவது, இச் சட்டத்தின் நிபந்தனைகளுக்காவது, முரண்படாமல் சந்தர்ப்பத்துக்கேற்ப அந்தப்பஞ்சாயத்தால், அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலால், இன்ஸ்பெக்டரின் அங்கீகாரத்தைப் பெற்று செய்யப்படுகிற ரெகுலேஷன்களையும் அனுசரித்திருக்க வேண்டும்.

(2) இன்ஸ்பெக்டரானவர் யாதொரு ரெகுலேஷனை அல்லது அதன் ஒரு பாகத்தை மறுபடியும் யோசிப்பதற்கும், மறுபடியும் அனுப்புவதற்கும் சந்தர்ப்பத்திற்கேற்ப பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு திருப்பிவிடலாம்.

ஆனல் எது எப்படி இருந்தபோதிலும் யாதொரு ரெகுலேஷன் ஆனது இந்த சட்டத்தின் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளின் ஷரத்துகளை மருதளித்திருந்தால் இன்ஸ்பெக்டரானவர் அந்த ரெகுலேஷனுக்கு எதையாவது சேர்க்கலாம், அதிலிருந்து எதையாவது எடுத்து விடலாம், அல்லது அதை மாற்றிவிடலாம்.

குறிப்பு

நடவடிக்கைகள்—பி. 46.
பஞ்சாயத்து—செ. 2 (20) பி. 8.
விதிகள்—செ. 178
இன்ஸ்பெக்டர்—பி. 2 (15) பி. 144
மெம்பர்—பி. 14, பி. 38
பிரசிடெண்டு— பி. 29—35
சபையில் அக்கிராசனம் பி. 46

மீட்டிங்குகள் அல்லது கூட்டங்கள் விதிகளின் அடக்கம்

விதிகளின் எண்		பக்கம்
1.	பஞ்சாயத்தின் மீட்டிங் நடவடிக்கைகள்—ஆபீஸ் முதலியன ...	108
2.	விடுமுறை தினத்தில் மீடிங்கு இல்லை. ...	113
3.	தெளிவான தினங்கள் தேவை—அவசர மீட்டிங்குகள். ...	,,
4.	வேண்டுக்கோள் மீடிங்கு. ...	115
5.	மக்கள் மீட்டிங்குகளை பார்வை இடலாம். ...	116
6.	பெரும்பாலான அங்கத்தினரால் தீர்மானிக்க வேண்டும்—சாதக பாதக மெம்பர்கள் பெயர்களை பதிவு செய்ய வேண்டும். ...	,,
7.	3-ல் 1 பங்கு அங்கத்தின்ர்கள் ஹாஜரானல் சபை நடத்தலாம் ...	117
8.	குறித்த காலத்திற்கு பிறகும் அரை மணி நேரம் வரையில் தாமதிக்கலாம்.	,,
9.	தீர்மானம் ஆன பிறகு 3 மாதத்திற்குள் அதை மாற்றும் வழி. ...	118

மீட்டிங்குகள்—கூட்டங்கள்—விதிகளின் அடக்கம்

பக்கம்

10. நடவடிக்கைகளை இங்கிலீஷில் அல்லது கிராமத்தின் முக்கிய பாஷையில் ஒரு புத்தகத்தில் எழுதி, அக்ராசனதிபதி கையொப்ப மிட வேண்டும். அதை வரி கொடுப்போர் எல்லோரும் பார்க்கலாம். ... 118
11. பணப்பற்றுதல் உள்ள மெம்பர்கள் மீடிங்கில் கலந்துக்கொள்ள கூடாது... 119
12. சில விதிகள் கமிட்டிகளுக்கும் பொருந்தும். ... 120
13. கமிட்டியின் குறிப்புகளை 3 தினத்திற்குள் அனுப்பவேண்டும். ... ,,
14. கமிட்டிகளும் பஞ்சாயத்தின், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் சிப்பந்திகளை உபயோக படுத்தி கொள்ளலாம். ... ,,
15. நிர்வாக உத்தியோகஸ்தரிடம் பஞ்சாயத்தின் நடவடிக்கைகளும், ,, ரிகார்டுகளும் இருக்க வேண்டும். ... ,,
அவைகளின் காபிகளை நற்சாட்சியுடன் அவர் கொடுக்கலாம் ... 121
கடைசி விதி-நடவடிக்கைகளின் நகல்களை கொடுப்பது.

(மீட்டிங்) சபைகளில் வல்லவனகயிருக்க அடியிற்கண்ட (1) விதிகளையும் (2) குறிப்புகளையும் கட்டாயம் அறியவேண்டும்

பஞ்சாயத்கதுள் - கமிட்டிகள் சபைகளின் நடவடிக்கைகள் பி. 51 படிக்கு விதிகள் விளம்பரம் XIII தேதி 24—3—1950

பஞ்சாயத்துகள், பஞ்சாயத்துக்களின் கமிட்டிகள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் ஆகிய இவற்றின் நடவடிக்கைகள்.

1-ம் விதி

பஞ்சாயத்தின் மீட்டிங் நடவடிக்கைகள் ஆபீஸ முதலியன

1. ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஆபீஸ் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்; அங்கே அது ஏற்பாடு செய்யக்கூடிய தினங்களிலும் காலங்களிலும் பிரெசிடென்ட் கூட்டங்கள் கூட்டுந்தோறும் இதர காலங்களிலும் வேலை நடத்துவதற்காக ஒவ்வொரு மாதத்திலும் குறைந்தது ஒரு தடவையாவது கூடவேண்டும்.

1-வது விதியின் கீழ் உள்ள குறிப்புகளின் விவரம்

பக்கம்

1. ஆபீசும், அங்கே கூடவேண்டும் 109
2. கூடுவது ,,
3. கூடுவது, பஞ்சாயத்துகளின் மீட்டிங்குகள் ,,
4. மீட்டிங்குகள் வாய்தா, தள்ளிவைப்பது அல்லது கலைத்து வைப்பது ,,
5. மீட்டிங்கு: சாதாரணமானது பிரத்தியேகமானது 110
6. மீட்டிங்கு: தேர்தல் ,,
7. ,, மெம்பர்கள் ,,
8. ,, அவதூர் வார்த்தைகள் ,,
9. ,, எப்படி ஆரம்பிப்பது 8
10. ,, நடவடிக்கைகள் ,,
11. ,, பிரேரேபணை ,,
12. ,, நின்று பேச வேண்டும் ,,
13. ,, தீர்மானம் பிரேரேபிக்கிறவர் ஆமோதிப்பவர் ,,
14. ,, பேச விரும்பும் மெம்பர் 111
15. ,, திருத்தம் ,,
16. ,, திருத்தத்திற்கு திருத்தம் ,,
17. ,, ஒழுங்கு படுத்தல் ,,

பக்கம்

18. மீடிங்கு: முந்திய கேள்வி 111
19. ,, முடிவு கட்டுவது ,,
20. ,, வாபீஸ் பெறுவது ,,
21. ,, ஓட்டு கொடுப்பது ,,
22. ,, இரண்டாவது (காஸ்டிங்) ஓட் 112
23. ,, பேரைக் குறிப்பது 9
24. ,, மெம்பர்களின் ஆக்ஷேபணையை பதிவுபடுத்துவது ,,
25. ,, மெம்பர்களின் ஓட்டுகள் ,,
26. ,, நோடீஸ் ,,
27. ,, பிரசிடென்டு சபைக்கு தலைமையிலிருந்து நடவடிக்கைகளை இன்ஸ்பெக்டருக்கு அனுப்ப வேண்டும் ,,
28. ,, ஏற்பாடு செய்யக்கூடிய தினங்களிலும் 113
29. ,, பிரசிடெண்டு ,,
30. ,, வேலை நடத்துவதற்காக
31. ,, குறைந்தது மாதத்திற்கு ஒரு முறை ,,

மீட்டிங்குகள் - கூட்டங்களின் விதிகள்

1. **ஆபீஸூம் :—அங்கே கூடவேண்டும் :**—எல்லா பஞ்சாயத்துகளுக்கும் பஞ்சாயத்து மெம்பர்கள் சேர்ந்து நடத்துவதற்கு வேண்டிய ஹால்கள் (கூடங்கள்) கிடையாது. அதனால் ஆபீஸுகளுக்கு வெளியே கூட்டங்கள் நடத்த வேண்டியிருக்கிறது. அதற்காக "சமீபத்தில் அல்லது வெளியில்" என்று இந்த விதியுடன் சேர்த்துத் திருத்தவேண்டும். ஒரு கூட்டம் ஒரு இடத்தில் நடக்கும் என்று யாவத்து மெம்பர்களுக்கும் தெரியப்படுத்தி, மற்றொரு இடத்தில் நடத்தினதால் யாதொரு மெம்பருக்கும் தெரியாமல் போய் விட்டப்படியால் அந்தக் கூட்டம்செல்லத்தக்கது ஆகமாட்டாது [துவாரதநாத்-எ.-சந்திரமோஹன் A I.R. 1926-C. 665]. ஆபீசு பெரியதாகயிருந்து அதற்கு மின்சார விசிறிகளும் மேலான நாற்காலிகளும் இருந்த போதிலும் அதைப்பொது விஷயங்களுக்கு பிரசிடென்டு கொடுக்கலாம் என்று தோன்றுகிறது. [டெய்லி கெஜட்-எ.-கராச்சி முனிசிபாலிடி A. I. R. 1930 S. 287 (297).]

2. **கூடுவது:**—இதை கட்டாய விதி என்பதைக் கவனிக்கவும். சிறிய பஞ்சாயத்துகளுக்கு சிப்பந்திகள் இல்லாமையால் மாதந்தோறும் நோடீசுகள் கொடுத்து கூட்டங்கள் நடத்துவது கஷ்டமாயிருக்கிறது. அநேக மாதங்களுக்கு மீட்டிங்குகளே நடத்துவதில்லை. அதனல் பி. 26 படிக்கு மெம்பர்கள் தங்களுடைய பதவிகளை இழந்து விடும்படியாக நேரிடுகிறது. இது நிர்வாக உத்தியோகஸ்தரின் குற்றமாகும். பி. 187யை பார்க்கவும். இதன் கீழ் தலைப்புகள் "ஒவ்வொரு மாதத்திலும் குறைந்தது" "ஒரு தடவை வேலை நடத்துவதற்காக," பார்க்கவும்.

3. **மீட்டிங் : பஞ்சாயத்தின் பொது:**—பஞ்சாயத்தின் கூட்டங்கள் ஆக்ட், விதிகள் (Rules), உப விதிகள் (பை-லாஸ்) ரெகுலேஷன்கள் கவர்ன்மென்டு உத்திரவுகள்படிக்கு நடத்த வேண்டும். அப்படி நடத்தத் தவறினல் அவைகள் செல்லத்தக்கனவைகள் அல்ல. மீட்டிங்குகளைக் குறித்து இருக்கும் பொது புஸ்தகங்கள் நன்ருக இருந்த போதிலும், அவைகளுக்கும் ஆக்ட் முதலியவைகளுக்கும் பேதங்கள் உள்ளபொழுது. ஆக்ட் முதலியவைகள் படிக்கு நடத்திய மீட்டிங்குகள் தான் செலாவணி ஆகும். மீட்டிங்குகளுக்கு வராமல் தனித் தனியாக மெம்பர்களிடம் கையெழுத்துகள் வாங்கி மீட்டிங்கு நடந்த மாதிரி காண்பிப்பது சட்ட விரோதமாகும். அம்மாதிரி நடத்திய எல்லா காரியங்களும் செல்லத் தக்கவைகள் அல்ல ["சிவ சங்கரன் இன் ரீ 56 M. L. J. 156 = A. I. R. 1929 M. 8 : : மாருதிராவ்,-எ-நாகபூர் முனிசிபாலிடி A.I.R. 1926 N 281 :: அக்ஷயகுமார்,-எ-போகர முனிசிபாலிடி, A. I. R- 1923 C 675]. சாதாரணமாக ஒரு மீட்டிங்கு கிரமப்படி நடத்தியதாக கருதப்படும். [பரசுராம், எ-தாதா இண்டஸ்டிரியல் பாங்கி A. I. R. 1925 B 49.]

4. **மீட்டிங்குகள் தள்ளிவைப்பது கலைத்து வைப்பது :**—6-வது விதிப்படிக்கு மீட்டிங்கில் கோரம் உள்ளபொழுது அந்த விஷயத்தை மாத்திரம் தள்ளிவைக்கலாமே யொழிய புதிய விஷயங்களைக் கவனிக்க வேண்டுமென்ருல் புதிதாக எல்லா மெம்பர்களுக்கும் நோடீஸ் கொடுத்து அந்தப் புதிய மீட்டிங்கில்தான் யோசிக்க வேண்டும். [G. O. No. 1610 L & M 3-5.1932) : : நீலகண்ட,-எ.-முராரி 1928 B 272] ஒரு தாற்காலீக பிரசிடென்டு, வைஸ்-பிரசிடென்டின் கூட்டத்துக்காக ஒரு தேதியைக் குறிப்பிட்டு நோடீஸ் அனுப்பினர். பிறகு தன் இஷ்டம் போல் தேதியை மாற்றி வைத்தார். அம்மாதிரி மாற்றி வைப்பதற்கு அவருக்கு அதிகாரம் இல்லையென்றும் அந்த தேதியிலேயே கூடிய மெம்பர்கள் தேர்தல் நடத்தியது சரியென்றும் தீர்மானிக்கப்பட்டது. (சங்கப்பா-எ-சுப்பா நாயுடு, A.I.R. 1936 M. 561 : : கோபால நாராயன்-எ-ஷண்முகப்பா, A. I. R. 1927 B 603) ஒரு பஞ்சாயத்தின் மீட்டிங்கை தள்ளி வைப்பது பஞ்சாயத்தில்தான் இருக்கிறது. (சுப்பிரமணியா எ-யுனைட்டெட் இந்தியா லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனி, 55 M. L J. (385)] (400) = A. I. R. 1928 M 1215] பிரசிடென்டு ஒருவருக்கே அந்த பாத்தியதை கிடையாது தள்ளி வைக்கப்பட்ட மீட்டிங் அதற்கு முந்திய மீட்டிங்கின் தொடர்பே ஆகும். முந்திய மீடடிங்கிலேயே கோரம் இல்லாதபொழுது தள்ளி வைத்த தேதி, மீட்டிங்கில் கோரம் இருந்த போதிலும் அது அந்த விஷயம் 3 நாள் கெடுவு கொடுத்துத் தெரியப்படுத்தாவிட்டால் அந்த மீட்டிங்கு செல்லாது, [துவாரகாச்சாரி எ-ஸ்ரீ கிருஷ்ணன் A. I R. 1925 M 1152] ஒரு மீட்டிங்கை நடத்துவதற்கு சரியான நபர் இல்லாதபொழுது எப்படியோ அப்படி எல்லா மெம்பர்களும் சேர்ந்து பஞ்சாயத்தின் தீர்மானங்கள் என்று செய்தபொழுதிலும் அந்த மீட்டிங் நடவடிக்கைகள் சரியானவை என்று தோன்றவில்லை. ஆனல் அடியில் கண்ட மீட்டிங்கை சரியானது என்று கருதப்பட்டிருக்கிறது. (பசையா நருந்தயா-எ-முருகையா A. I. R. 1926 B 576) : :

மீட்டிங்குகள்—கூட்டங்களின் விதிகள்

5. மீட்டிங் :: சாதாரணம், ஸ்பெஷல் (பிரத்யேகம்):—சாதாரண மீட்டிங்குகளில் இன்னது நடக்கப் போகிறது என்று தெரியப்படுத்தினல் போதுமானது. [மஹமத் முஷ்டாபா -எ.-பேரிலி டிஸ்டிரிக்ட் போர்ட்டு A. I. R. 1935 A. 663]. ஆனல் ஒரு தனிப்பட்ட என்ற அந்த மொத்த விஷயத்தையும் தெரியப்படுத்த வேண்டுமென் றிருந்தால் அந்த மீட்டிங்கை சட்டபடிக்கு அந்த பெயரால் தெரியப்படுத்த வேண்டும் [நடேசன் இன்ரீ 48 M. 135 = 38 M.L.J. 384 = 38 I. C. 847 (856)] அப்படி நடத்தா விட்டால் அந்த மீட்டிங்கு செல்லத்தக்கினது அல்ல.

6, மீட்டிங் : (தேர்தல்) எலெக்ஷன் கூட்டங்கள், சாதாரண மீட்டிங்குகள் மாதிரி அன்று. [விடோபா-எ-கோவிந்த ராவ் An. I. R. 1933 N. 34 (348) = A I.R. 1933 N. 193.)]

7. மீட்டிங்களும் மெம்பர்களும் : பிரிவு 38 (1) ன் கீழ் "மெம்பர்" என்னும் தலைப்பை பார்க்கவும்.

8. கூட்டங்களும் அவதூறு வார்த்தைகளும் : பிரிவு 38ன் கீழ் "ஒரு கூட்டத்தில் அவதூரான சொற்களை உபயோகித்தல் என்னும் தலப்பை பார்க்கவும்.

9. கூட்டங்கள் எப்படி ஆரம்பிப்பது : மீட்டிங் ஆரம்பிப்பதற்கு முந்தி மீட்டிங்கின் தலைவர் மெம்பர்களால் கொடுக்கப்பட்ட பிரச்னைகளுக்கு பதில் அளித்து மிகுதி விஷயங்கள் விசாரிப்பதற்கு முன் அதை மீட்டிங்கின் "மினிட்ஸ்" புஸ்தகத்தில் எழுத வேண்டும். தலைவரை பிரச்னை செய்வதை குறித்துபிரிவு 38ன் கீழ் காணலாம். அதே மாதிரியாகத் தீர்மானங்கள் செய்வதை குறித்த விதிகள் அடுத்தாற்போல் இருக்கின்றன அவைகளை கவனிக்கவும் "மினிட்ஸ்" புஸ்தகம் என்பது இன்னது என்று அறிய 49-ம் பிரிவை 106-ம் பக்கத்திலும் 10-வது விதி (ரூலை) யையும்பார்க்கவும்.

10: மீட்டிங் நடவடிக்கைகள் : இதனடியில் வேலை (விஷயங்கள்) யின் நடவடிக்கைகள் என்னும் தலைப்பை இந்த ஓராவது விதியின் குறிப்புகளில் கடைசியாக உள்ளத்துக்குக் கொஞ்சம் தள்ளிப்பார்க்கவும். சாதாரணமாக வேற்றுமை இல்லாத பிரச்னைகளை முன்னதாக நடத்துவது வழக்கம். கட்சி உள்ள தீர்மானங்களை பின்னிட்டு எடுத்துக்கொண்டு யோசிக்கலாம். மெம்பர்கள் எந்த விஷயத்தையாவது முன்னதாக யோசிக்கவேணும் என்று எண்ணினல் அம் மாதிரியாகவும் செய்யலாம்.

11. பிரேரேபணை : 6-வது விதி (ஐ) பார்க்கவும். ஒரு விஷயம் எடுத்துக் கொண்ட போது அது நிகரமாக இருக்க வேண்டும். எல்லா தீர்மானங்களும் திருத்தங்களும் நேர்மையாக இருக்கவேண்டும். 4 ஒரு தலைவர் ஒரு விஷயத்தை சரியல்லவென்று தள்ளி விட்டபொழுது அந்த மெம்பரை இன்ஸ்பெக்டரை விசாரிக்கும்படி அல்லது சிவில் கோர்ட்டாரை விசாரிக்கும்படி மனு செய்து கொள்ளலாமே ஒழிய தானகவே அங்கிருக்கும் மெம்பர்களுக்குத் தெரியப்படுத்தி அவர்களில் பெரும்பான்மையோர் அங்கீகாரம் செய்து கொண்டாலும் அந்தத் தீர்மானம் சட்டப்படி நடத்தியதாக ஒத்துக்கொள்ள முடியாது. [பவுன் மோஹன்-எ,-டாக்கா முனிசிபாலிடி, A. I. R. 1929 P. C. 272.]

12 மீட்டிங்-நின்று பேசவேண்டும் : இதனல் வந்திருக்கும் மெம்பர்களுக்கும் கௌரவமும் மதிப்பும் உண்டாகும். தலைவரை தன்னுடைய பெயரால் அல்லது கிராமத்தில் சொல்லக்கூடிய மற்றெரு பெயரால் கூப்பிடக் கூடாது. "தலைவர் அவர்களே" அல்லது "ஐயா" என்று சொல்ல வேண்டும்.

13. மீட்டிங்-தீர்மானம்—பிரேரேபிக்கிறவர்-ஆமோதிக்கிறவர் :—முதலில் உள்ளதுக்கு பிரேரேபணை (Ptoposal) என்று பெயர். அது முடிந்த பிறகு தீர்மானம் (Resolution) என்று ஆகும். அதை பிரசிடெண்ட் ஆனவர் ஒப்புக்கொண்டால் மீட்டிங்கில் யோசிக்கலாம். பிரசிடெண்ட் ஒத்துக்கொள்ளா விட்டால் அதை யோசிக்க முடியாது. அது தப்பு என்று எண்ணும் மெம்பர்கள் இன்ஸ்பெக்டருக்கும், ரீஜினல் ஆபீஸர், டிப்டி ரீஜினல் ஆபீஸர், பஞ்சாயத்து ஆபீசர், டிப்டி பஞ்சாயத் ஆபீஸர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள வேண்டும். பிரேரேபணை கொண்டு வந்த மெம்பர் முதலில் தானகவே வாபீஸ் பெற்றுக்கொள்ளலாம். 1-ம் விதியில் ஆபீஸைப் பற்றி எழுதியிருப்பதைக் கவனிக்கவும். பிரேரேபணையைக் கொண்டு வந்தவர் அல்லாமல் மற்றெரு மெம்பர் ஆமோதிக்க வேண்டும். அப்படி யில்லா விட்டால் அதை யோசிக்கக் கூடாது. தீர்மான விதிகளில் விதி 5 (3) பார்க்கவும். தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் 30

நிமிஷம் பேசலாம். மிகுதிப் பேர் 15 நிமிஷங்களுக்கு மேல் பேசக்கூடாது. விதி 6-ஐப் பார்க்கவும். யோசிக்கும்பொழுதுப் பிரேரேபணையை (தீர்மானம்) பற்றிப் பேசவேணும். அனுவசியமான விஷயங்களைப் பேசக்கூடாது. விதி 7 பார்க்கவும் தீர்மானத்தை ஆமோதிக்கிறவர் உடனே பேச வேண்டியதில்லை. பின்னிட்டுப் பேசலாம். முதலில் ஆமோதிக்கிறேன் என்று சொன்னால் போதுமானது.

14 மீட்டிங்கில் பேச விரும்பும் மெம்பர் : மீட்டிங்கில் ஒவ்வொரு மெம்பருங்கும் பேச அதிகாரம் உண்டு. முன்னதாக யார் எழுந்து நிற்கிருரோ அவர்தான் பேசவேண்டும். யார் முன் பேசுவது என்று தகராறு உண்டான பொழுது பிரஸிடெண்ட் குறித்த மெம்பர் பேச வேண்டும்.

15. மீட்டிங் திருத்தம் : பிரேரேபணை (தீர்மானத்தை) யோசிக்கும் பொழுது அதற்கு திருத்தம் கொண்டுவரலாம். அதை மற்றெரு மெம்பர் ஆமோதிக்காவிட்டால் அது யோசிக்கப்படமாட்டாது. ஆமோதிக்கும் மெம்பர் திருத்தம் விஷயத்தில் உடனே பேசவேண்டும். ஒரு திருத்தம் வந்தவுடன் பிரேரேபணையின் பேரில் யோசிப்பதை நிறுத்திவைத்து இத் திருத்தத்தை யோசித்து முடிவுகட்டி பிறகு பிரேரேபணை (தீர்மரனத்தை) குறித்துப் பேச வேண்டும். இது வரையில் பிரேரேபணையின் பேரில் பேசியவர்கள் மறுபடியும் திருத்தத்தின் பேரில் பேசலாம். ஒரு சரியான திருத்தத்தைப் பிரசிடெண்ட் தள்ளிவிடும் பக்ஷத்தில் மொத்த தீர்மானமும் செல்லத்தக்கினது அல்ல ஒரு திருத்தமானது மொத்தத் தீர்மானத்தையே மாற்றி ஒரு புதிய தீர்மானமாக செய்துவிடும் பக்ஷந்தில் அந்தத் திருத்தத்தை அங்கீகாரம் செய்துக்கொள்ளக்கூடாது. [பரசுராம்—எ—தாத்தா இண்டஸ்டிரியல் பாங்கி A. I. R. 1925 B 49]. ஒரு தீர்மானமானது முதலில் கொண்டு வந்த மாதிரியே மாறுதல் இல்லாமல் இருக்க வேண்டும் என்பது கிடையாது. [நடேசன் இன்ரீ 40 M 125 = 31 M. L. J. 634 = 38 I. C. 847 (870—871)]

16 மீட்டிங் திருத்தத்துக்குத் திருத்தம் : திருத்தத்துக்குத் திருத்தம் வந்த பொழுது பிரேரேபணையையும், திருத்தத்தையும் நிறுக்திவைத்து திருத்தத்தின் திருத்தத்தை முடிவு கட்டி பிறகு திருத்தங்களையெல்லாம் ஒன்றின் பின் ஒன்ருக கிரமப்படி முடித்து அந்த திருத்தங்களால் பிறகு திருத்தப்பட்ட பிரேரேபணையை ஓட்டுக்கு விடவேண்டும்.

17. மீட்டிங் ஒழுங்கு படுத்தல் : அதாவது ஒரு பிரச்னே, அல்லது விஷயம், திருத்தம் இவைகள் கிரமமானதா, சட்ட ஸம்மதமானதா என்பதை எப்போதாவது ஒரு மெம்பர் கேட்கலாம். அதைப் பிரசிடெண்ட் பரிசீலனே செய்து தீர்மானிக்க வேண்டும். ஒரு ஒழுங்கு படுத்தும் கேள்வி வந்த பொழுது மீதி பிரேரேபணை, திருத்தம், திருத்தத்துக்கு திருத்தம், முதலியவைகளை நிறுத்திவைத்து ஒழுங்கு விஷயத்தை முன்னதாகவே கவனிக்கவேண்டும். பி. 46 (2)யை பார்க்கவும்.

18. மீட்டிங் முந்திய கேள்வி: அதாவது ஒரு தீர்மானம் "பிரேரேபனே" நடக்கும் பொழுகு அதைத் தள்ளிவைப்பது இதற்கு வழக்கத்தின்படி "முத்தி கேள்வி" என்று பெயர். அதாவது பின் தங்கிப்போய் விட்டது, அதை யோசிக்க வேண்டியதில்லை என்று அர்த்தம் ஆகிறது. இந்த முன் பிரச்னே (கேள்வி) என்பது நிறைவேற்றினல் மொத்த தீர்மானமும் திருத்தமும் முதலியவைகளும் யோசிக்கப்படாது.

I9. மீட்டிங் முடிவு கட்டுவது : ஒரு தீர்மானத்தின் பேரில் வாதங்கள் பெருகிப் போகும் சமயத்தில் ஒரு மெம்பர் அந்த விஷயத்தை ஓட்டுக்கு விடவேண்டும் என்று தெரியப் படுத்தலாம். உடனே பிரஸிடெண்ட் முடிவு கட்டலாமா என்னும் விஷயத்தை மீட்டிங்கில் ஓட்டுக்கு விடலாம். மீட்டிங்கில் அது நிறைவேறிப்போனல் அதன்மேல் பிரசங்கங்களுக்கு இடம்கொடாமல் உடனே மீட்டிங்கின் முன்பு இருக்கும் தீர்மானத்தை ஓட்டுக்கு விடவேண்டும்.

20. மீட்டிங்-வாபீஸ் பெருவது : ஒரு மீட்டிங்கில் பிரேரேபணையைப் பிரேரேபிப்பவர் அந்த பிரேரேபணை மெம்பர்களின் யோசனேக்கு வந்த பிறகு மெம்பர்கள் அனுமதியின்றி அந்தப் பிரேரேபணையை வாபீஸ் பெற முடியாது. தீர்மான விதிகள் 6, 9-ஐ பார்க்கவும்.

21, மீட்டிங்—ஓட்டு கொடுப்பது : தீர்மான விதிகள் 10, 11 பார்க்கவும் தீர்மானத்தை ஒத்துக்கொள்ளுகிறவர்கள் யார் என்றும், விரோதமாக உள்ளவர்கள் யார் என்றும்,

அக்கரையில்லாதவர்கள் யார் என்றும், பிரஸிடெண்ட் அறியவேண்டும். அதற்குக் கை தூக்கினுல் போதுமானது. பெரும்பான்மையோர் தீர்மானத்துக்கு அனுகூலமாய் ஓட்டு கொடுக்கும் பக்ஷத்தில், அந்த தீர்மானம் நிறைவேறியதாகும். அப்படி பெரும்பான்மையோர் கொடாவிட்டால் அந்த தீர்மானம் தள்ளிவிட்டதாகும். ஒரு மெம்பர் பெரும்பான்மை யோரில் சேர்ந்தாலும் சரி சிறுபான்மையோரில் சேர்ந்தாலும்சரி அக்கரை யில்லாதவர்களில் சேர்ந்தாலும் சரி பிரஸிடெண்ட் அவர்கள் ஓட்டைப் பதிவு செய்து கொள்ளாவிட்டால் அந்த மெம்பர், சிவில் கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்யலாம். [ஸ்ரீனிவாஸன்—எ—சுப்பரமணியம் 61 M.L.J. 724 (732) = I. R. 1932 M. 257.]

22. மீட்டிங்—இரண்டாவது (காஸ்டிங்) ஓட் : பிரஸிடெண்ட்டுக்கு எல்லா மெம்பர்களுக்கும் உள்ள மாதிரி ஒரு ஓட்டு உண்டு. அப்படி அவர் தன்னுடைய ஓட்டைக் கொடுத்தும் தீர்மானத்துக்கு வேண்டியவர்களும் வேண்டாதவர்களும் சமமாக இருக்கும் பொழுது பிரசிடெண்ட் வேண்டும் என்றுல் தன்னுடைய இரண்டாவது (காஸ்டிங்) வோட்டை கொடுத்து அதை நிறைவேற்றுவதோ, தள்ளிவிடுவதாகவோ செய்ய வேண்டும். தீர்மான விதிகளின் 6 விதியைப் பார்க்கவும்.

23. மீட்டிங்கில் பெயரைக் குறிப்பது : ஒரு மீட்டிங்கில். வோட்டுக் கொடுத்தவர்கள், பெயர்களை, வேண்டியவர்கள், இன்னின்னுர். வேண்டாதவர்கள், அக்கரையில்லாதவர்கள் இன்னுர் என்று யாராவது ஒரு மெம்பர் போல் கேட்டால், பிரசிடெண்டு, பெயர்களை குறித்து பதிவு செய்ய வேண்டும். பிரசிடெண்ட் அப்படி செய்யாவிட்டால் அது தப்பிதமாகும். போல் (Poll) என்பது மெம்பர்களைப் பெயரிட்டு, கூப்பிட்டு, அபிப்பிராயங்களை தனித்தனியாக நேரில் கேட்டு, மினிட்ஸ் புத்தகத்தில் பதிவு செய்யவேண்டும்.

24. மீட்டிங்கில் மெம்பர்களின் ஆட்சேபணையைப் பதிவு படுத்துவது :— ஒரு மெம்பர் தன்னுடைய அபிப்பிராயத்தை ஒரு தீர்மானத்தைப் பற்றியோ, திருத்தத்தைப் பற்றியோ மினிட் புஸ்தகத்தில் வேண்டும் என்றுல் அதை பிரசிடெண்டு பதிவு செய்துகொள்ள வேண்டும். 10. (3) விதியை பார்க்கவும்.

25. மீட்டிங்கும்—மெம்பர்களின் ஓட்டுகள் : ஒரு மீட்டிங்கில் சரியான மெம்பர் தான் வோட்டு செய்யவேண்டும். [தெய்வசிகாமணி - எ. - ஸேதுரத்னம் A. I. R. 1935 M. 1034]. செ. 38 (1)ன் கீழ், மெம்பர் என்னும் தலைப்பையும். செ. 48 (1) யாதொரு மெம்பரும் வோட் செய்யக்கூடாது என்பதையும் பார்க்கவும்.

26. மீட்டிங்–நோட்டீஸ் : இவ் விதிகளில் விதி 3 (1)யை 113-ம் பக்கத்தில் பார்க்கவும்.

27. மீட்டிங்—பிரசிடெண்டு சபைக்கு தலைவராக இருந்து நடவடிக்கைகளை இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டும். செ. 46 (b) படிக்கு பிரசிடெண்டு அல்லது வைஸ்-பிரசிடெண்டு ; செ. 47 (3) படிக்கு இன்ஸ்பெக்டரால் ஏற்படுத்தப்பட்ட மெம்பர். பி. 154 படிக்கு ஸ்பெஷல் ஆபீஸர் கூட்டங்களை சேர்க்கவேண்டும். அன்னியர்களால் அந்த கூட்டங்கள் சேர்க்கப்பட்டால் அவை சட்டப்படிக்கு செல்லத் தக்கினவைகள் அல்ல. [அபாயி சீதாராம் எ. டிரயம்பக் முனிசிபாலிடி, 28. B. 66 :: பக்தவத்ஸலு-எ.-ராமானுஜம் A.I.R. 1933 M. 326 = An L R. 1930. Mad. 197]. பிரசிடெண்ட் ஆனவர் மூன்று மாதம் வரையில் மீட்டிங்குகளை கூப்பிடாவிட்டால் பி. 26 (8) படிக்கு மெம்பர்கள் தங்களுடைய மெம்பர் பதவிகளை இழந்து விடும்படி நேரிடுகிறது. அதற்காக பிரசிடெண்டுகளை பி. 187 படிக்கு தண்டிக்கலாம் என்று தோன்றுகிறது. விதி (ரூல்) 4 (2) படிக்கு பிரசிடெண்டு இல்லாமலே ஒரு மீட்டிங்கை கூட்டலாம். அது ஒரு விலக்காகும். ஒரு மீட்டிங்கில் வெளியார் ஒருவரால் தலைமை வகித்து ஒரு உத்தரவு செய்தால், அந்த உத்தரவுக்கு விரோதமாக நடந்து கொண்டாலும் அது குற்றமாக மாட்டாது. [சந்தா இன் ரீ 46 P. R. 1905 (Cr.)] பி. 46, 49-களை பார்க்கவும், பிரசிடெண்டு மீட்டிங்கு நடந்த 48 மணி நேரத்துக்குள் மெம்பர்களுடைய ஆட்சேபனைகளுடன் மீட்டிங்கின் நடவடிக்கைகளின் பதிவுகளுடைய நகலை இன்ஸ்பெக்டருக்கோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தருக்கோ 3-நாள்களுக்குள் அனுப்ப வேண்டும்.

28. ஏற்பாடு செய்யக்கூடிய தினங்களிலும் : இந்த பொருப்பை பஞ்சாயத்து போர்டுகளுக்கு விட்டு விடுவதை காட்டிலும் கவர்ன்மெண்டாரே ஒவ்வொரு மாதமும் **முதல் திங்கள் கிழமையில்** கட்டாயமாக மீட்டிங் நடத்த வேண்டும் என்றும் அந்த நாள் விடுமுறை நாளாக இருக்கும் பக்ஷத்தில் அடுத்த நாளில் மீட்டிங் நடத்த வேண்டியது என்றும் விதியை

செய்யவேண்டும். அப்படி அந்த கிரமப்படிக்கு மீட்டிங்கை நடத்தாவிட்டால் அடுத்த நாளில் செவ்வாய்க்கிழமையில் யாதொரு தனி மெம்பரோ 3 நாள் நோட்டீஸ் கொடுத்து மீட்டிங்கை நடத்தலாம் இம்மாதிரி 3 மீட்டிங்குகளை பிரசிடெண்டோ வைஸ்-பிரசிடெண்டோ நடத்தாமல் விட்டு விட்டால், அவர்கள் தங்களுடைய மெம்பர் பதவிகளை இழந்து விட்டதாக கருதவேண்டும். பிரசிடெண்டுகள் தங்களுக்கு விரோதமாக இருக்கும் மெம்பர்கள் ஊரில் இல்லாத பொழுது வேணும் என்று மீட்டிங்குகள் வைத்துக்கொண்டு அவர்களை மெம்பர் பதவியிலிருந்து நீக்கு கிருர்கள், நீக்க பார்க்கிருர்கள் என்னும் குற்றம் நீங்கி விடும். இதனடியில் "குறைந்தது மாதத்திற்கு ஒரு முறை" என்னும் தலைப்பின் கீழ் பார்க்கவும். சிலர் ஓட்டர்களாக இருப்பதை யும், எடுத்துவிடுகிருர்கள். பிரிவுகள் 20, 21-யை பார்க்கவும்.

29. பிரசிடெண்ட், மாதத்திற்கு ஒரு முறையை காட்டிலும் அதிகமாக இதர காலங்களிலும் கூட்டங்களை கூட்டலாம். மேலே "மீட்டிங்குகள் : தலைவராக இருந்து" என்னும் தலைப்பைப் பார்க்கவும்.

30. வேலை நடத்துவதற்காக : ஒரு ஸ்தாபனத்தின் நடவடிக்கைகள் சரியில்லை யென்று சொல்லுகிறவர் அவரே அதை ருஜுப்படுத்த வேண்டும். [ராதாகிருஷ்ணன்-எ.-கண்டுவர முனிசிபல் கமிட்டி A. I. R. 1934 P. O. 62=66 (M. L. J. P.C.) 551)] கோர மில்லாமல் செய்த நடவடிக்கைகள் செல்லாது. கோரம் என்பதைக் குறித்து விதிகள் 7-ம், 8-ம் பார்க்கவும். ஒரு வைஸ்-பிரசிடெண்டை தேர்ந்து எடுப்பது ஒரு பஞ்சாயத்து போர்டின் வேலையாகும். [செக்ரிடரி ஆப் ஸ்டேட்-எ-முருகேசா A. I R. 1929 M. 448] மீட்டிங் நோட்டீசில் என்ன வேலை யென்று கண்டிருக்க வேண்டும். சாதாரண மீட்டிங்குகளுக்கு வேலையின் சாராம்சம் இருந்தால் போதுமானது. தேர்தல்கள் பிரத்தியேக (Special) மீட்டிங்கு களில் இன்ன விஷயம் நடக்கப்போகிறது என்றும், எந்த பிரிவின் கீழ் நடக்கப்போகிறது என்பதையும் தெளிவாக தெரியப்படுத்த வேண்டும். இன்னும் அந்த மீட்டிங்கை தனிப்பட்ட தேர்தல் பெயரால் தெரியப்படுத்த வேண்டும். [நடேசன் இன் ரீ 40 Mad. 125=38 I. C. 847 (M) :. நீலகண்டதேவராவ்-எ.-முராரி கோவிந்த, A.I.R. 1923 B. 272], ஒரு நடவடிக்கையானதை பிரசிடெண்டு ஆனவர் சரிவர நடத்தாவிட்டால், அதைக் கோர்ட்டார் விசாரிக்கலாம். [தணிகாசலம் இன் ரீ A. I. R. 1924 M 868=20 L. W. 589] ஒவ்வொரு மெம்பருக்கும் நோட்டீஸ் கொடுத்ததினுலேயே ஒரு தீர்மானம் நிறைவேற்றியதாக எண்ணப்படாது. வேலை யென்ருல் பஞ்சாயத் போர்ட் வேலை யென்ருகும். அதனுல் பொருளாதார விஷயங்களான, பஞ்ச நிவாரணை, வேலையில்லாத திண்டாட்டத்தை நீக்குவது, அரசாங்க விஷயத்தில் அனுதாபம் காட்டுவது அவசியம் என்று நேரிட்டால் அரசாங்கத்தின் தவறுதல்களை எடுத்து காட்டுவது, பஞ்சாயத்துக்கள் யோசிக்கக் கூடாது என்றும் தடுக்கப்படவில்லை என்றும் அறியவும்.

31. குறைந்தது மாதத்திற்கு ஒருமுறை : இதற்கு மேலே ஏற்பாடு செய்யக் கூடிய தினங்கள் என்றும் தலைப்பை பார்க்கவும். மீட்டிங்குகளை ஒவ்வொரு மாதமும் வைக்காமல் தாருமாராக வைத்தால் பஞ்சாயத்தில் விஷயங்களும், தாருமாராக போய்விடும்.

2-ம் விதி

2. பஞ்சாயத்து விடுமுறையாக அனுஷ்டிக்கும் எந்த தினத்திலும் எக் கூட்டத்தையும் நடத்தக் கூடாது.

விடுமுறை தினத்தில் மீடிங்கு இல்லை

விடுமுறை நாள்கள் தவிர மீதி நாள்களில் மீட்டிங்குகளை எந்த நேரத்திலாவது இரவுகளிலாவது நடத்தலாம்.

3-ம் விதி

3. (1) கூட்டம் கூட்டப்படவேண்டிய தினத்தையும் காலத்தையும், அதில் நடத்தப்பட வேண்டிய வேலையையும் பற்றிய நோட்டீஸ் கூட்டம் கூடுகிற தினத்துக்குத் தெளிவாகக் குறைந்தது மூன்று நாள் முந்தியாவது கொடுக்கப்பட்டிருந்தாலொழிய எந்தக் கூட்டமும் நடத்தப்படக் கூடாது.

தெளிவான தினங்கள் நோட்டீஸ் தேவை : அவசர மீட்டிங்குகள்

(2) அவசர சந்தர்ப்பங்களில் (1) உப-விதியில் குறிப்பிட் டுள்ள காலத்தை விடக் குறைவான காலமுள்ள நோட்டீஸ் கொடுத்து பிரசிடெண்ட் ஒரு கூட்டத்தைக் கூட்டலாம்.

குறிப்பு

பொது :—ஓராவது " உப-விதியில் தெளிவாக குறைந்தது மூன்று நாள் முந்தியாவது கொடுக்கப்பட்டிருந்தாலொழிய எந்தக் கூட்டமும் நடத்தப்படக் கூடாது என்பதை கவனிக்கவும். இதனுல் 3-நாள் நோட்டீஸ் கொடுக்க வேண்டியது அவசியமென்று உறுதிப்படுத்தித் தெரியப்படுத்தப்பட்டது. [ஜோஷி காளிதாஸ்-எ.-டாக்கோர் டவுன் முனிசிபாலிடி, 7 B 399), 3-நாள் நோட்டீஸ் இல்லாமலே ஒரு மீட்டிங்கை நடத்தினுல் அந்த மீட்டிங் செல்லத்தக்கினது அல்ல, அப்படி நோடீஸ் இல்லாமை என்னும் தோஷம் எப்பொழுதும் நீங்காது. அவசர மீட்டிங்குகளுக்கு குறைந்த காலம் போதுமென்று 2-வது உப விதியில் கண்டிருக்கிறது. " அவசர " மென்பது என்னதென்று ருஜுப்படுத்தும் பாத்தியம் பிரசிடெண்டினுடையது ஆகும். அவசர மீட்டிங்குகளில் ஒரு மெம்பர் ஆஜராகாவிட்டாலும் பி. 26 (j) படிக்கு அவர் மெம்பர் பதவியை இழந்துவிட மாட்டார். ஆனுல் 3 நாள் கொடுத்த சாதாரண மீட்டிங்குகளில் ஒரு மெம்பர் ஆஜராகாமலிருந்தால், அது பி. 26 17 (j) படிக்கு அந்த மெம்பரை தன் பதவியிலிருந்து நீக்குவதற்கு காரணமாகும்.

3 (1) நோட்டீஸ் :—கிராமங்களில் கட்சிகள் அதிகமாக இருப்பதினுலும் ஒருவருக்கொருவரை மீட்டிங்குகளில் வருவதை தடுத்து, அவர்களை மெம்பர்கள் பதவியை இழந்து விடும்படி செய்ய எண்ணுகிறது வழங்கி வருகிறது. இதுகளை போக்க ஓராவது விதியின் குறிப்பு 30-ஐப் பார்க்கவும். அநேக கிராமங்களில் தபால் ஆபீசு கிடையாது. ஆகையால் நோட்டீஸ்களை ஒரு புஸ்தகத்தில் எழுதி எல்லா மெம்பர்களுக்கும் காட்டி அவருடைய கையெழுத்து வாங்கிக் கொண்டு வருவது வழக்கமாக இருக்கிறது. அதற்காக ஒரு தரம் போன பொழுது மெம்பர் இல்லை என்று அவருக்கு மீட்டிங்கின் விஷயம் எட்டும்படியாக முயற்சி செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அந்த மீட்டிங் செல்லத்தக்கதல்ல. [கண்வா முனிசிபல் கமிட்டி-எ.-ராதாகிருஷ்ணன் A. I. R. 1930 N. 157 (164)] சாதாரணமாக 3 நாள் நோட்டீஸை கிரமமாக கொடுத்து மீட்டிங் நடத்தியதாகக் கருதப்படும். [இந்தியன் சாக்ஷியம் ஆக்ட் பி. 114 (c)]. சில சமயங்களில் நோட்டீஸ் இல்லாமலே ஒரு மெம்பரும் தவருமல் எல்லா மெம்பர்களும் சேர்ந்து ஒரு தீர்மானம் செய்வார்களாகில் அந்த நடவடிக்கை கிரமமாக நடத்தியதாகக் கருதப்படும். ஏனெனில் அதில் எல்லா மெம்பர்களும் கலந்து கொண்டிருக்கிருர்கள். ஒரு மெம்பர் தாம் மீட்டிங்கில் கலந்துகொள்ள சாத்தியமில்லையென்றும் தனக்கு நோட்டீஸ் அனுப்பவேண்டியதில்லை என்று சொன்னுலும் அவருக்கு நோட்டீஸ் அனுப்பித்தான் ஆகவேண்டும். அப்படி நோட்டீஸ் கொடுக்காவிட்டால் அந்த மீட்டிங்கில் நடந்த, மொத்த நடவடிக்கைகளும் செல்லத் தக்கினவைகளல்ல நோட்டீஸ்கள் வெளிப்படையாகவும், திருப்திகரமாகவும், சூதுமார்க்கம் இல்லாமலும் இருக்கவேண்டும். ஒரு நோட்டீஸ் 3 நாள்களுக்குள் கொடுக்க தவறிப்போன பொழுது அதே விஷயமாக 3 நாள் நோட்டீஸ் கொடுத்து அந்த தீர்மானத்தையே நிறைவேற்றும் பக்ஷத்தில் அடுத்த தீர்மானம் செல்லத்தக்கினதாகும். ஒரு மெம்பருக்கு ஒரு ரெஜிஸ்டர்ட் நோட்டீஸ் கொடுத்தால் போதுமானது. அது அவருக்குச் சேர்ந்ததா இல்லையா என்பதைக் குறித்து அவசியமில்லை. ஒரு பஞ்சாயத் மெம்பருக்கு சாதாரண தபால் மூலமாகவோ, நேராகவோ நோட்டிஸ் கொடுத்தால் போதுமானது. தபால் ரெஜிஸ்டர் மூலம் அனுப்ப வேண்டுமென்ற அவசியம் கிடையாது. போஸ்டல் சர்டிபிகேட் இருந்தால் போதுமானது [கோபல்நாராயன்—எ.—லிங்கப்பா A.I.R. 1927 Bom. 603.]

தினத்தையும் காலத்தையும்,—தினம் என்ருல் இரவு 12 மணி முதல் அடுத்த நாள் இரவு 12 மணி வரையில் உள்ள 24 மணி நேரம் தினமாகும். [பாக்டரி ஆக்ட் செ. 2 (d)]. விடுமுறை தினங்கள் தவிர மீதி தினங்களில் எப்போதுவேண்டும் என்ருலும் மீட்டிங்குகளை வைத்துக் கொள்ளலாம்.

தெளிவான நாள் :—தெளிவான நாள் என்ருல் பூர்த்தியான நாட்கள் என்று அறியவும். இதில் நோட்டீஸ் கொடுத்த நாளும், மீட்டிங் வைத்துக்கொள்ளும் நாளும் சேராது. மொத்தத்தில் கணக்கிடும் பக்ஷத்தில் 5 நாளாக முடியும்.

4-ம் விதி

வேண்டுகோள் (ஸ்பெஷல்) மீட்டிங்கு

4. (1) பிரசிடெண்டானவர் பஞ்சாயத்தில் பிரஸ்தாப காலத்திலிருக்கிற அங்கத்தினர்களில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாத அங்கத்தினர்கள் எழுத்து மூலமாகச் செய்துகொள்ளும் வேண்டுகோளின் பேரில், அப்பஞ்சாயத்தின் கூட்டம் ஒன்றைக் கூட்டலாம். ஆனால், அந்த வேண்டுகோளில் கூட்டம் நடத்தப்படப் போகும். (பஞ்சாயத்தினால் விடுமுறையாக அனுஷ்டிக்கப்படுகிற தினமாய் இராத) தினத்தைப் பற்றியும் அதன் காரியத்தைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கவேண்டும். இந்த வேண்டுகோளை கூட்ட வேண்டிய தினத்துக்குத் தெளிவாகக் குறைந்தது பத்து நாள் முந்தி(யாவது) பஞ்சாயத்து ஆபீஸிலே ஆபீஸ் நேரத்தில் பிரசிடெண்ட், நிர்வாக உத்தியோகஸ்தர் அல்லது அப்போது ஆபீஸின் பொறுப்பு வகிக்கக்கூடிய வேறு யாதொரு நபரிடம் ஒப்புவிக்கவேண்டும்.

(2) அவ் வேண்டுகோளை ஒப்புவித்ததிலிருந்து நாற்பத்தெட்டு மணி நேரத்துக்குள் பிரெசிடெண்ட் அதில் குறிப்பிடப்பட்ட தினம் ஒன்று அல்லது அதற்குப் பிறகு மூன்று தினங்களுக்குள் கூட்டம் ஒன்றைக் கூட்டத் தவறிவிட்டால், அவ் வேண்டுகோளில் கையெழுத்திட்ட அங்கத்தினர்கள் பஞ்சாயத்தின் மற்ற அங்கத்தினர்களுக்கு 3-வது விதியைச் சேர்ந்த (1) உபவிதியில் நிபந்தனைகண்டிருக்கிற நோட்டீஸைக் கொடுத்து அக்கூட்டத்தைக்கூட்டலாம்.

(3) (1) உப-விதியின்படிக்கான அல்லது (2) உப-விதியின்படிக்கான கூட்டம் எதையும் பஞ்சாயத்து ஆபீஸ் இருக்கிற இடத்திலன்றி மற்றெந்த இடத்திலும் கூட்டக் கூடாது.

குறிப்பு

பொது:—(1) ப்ரசிடெண்ட் அசிரத்தையாய் இருக்கும்பொழுதோ (2) மீட்டிங்கை தானுகவே கூடாதபொழுது (3) மெம்பர்கள் வேண்டும் என்ற பொழுது ஏற்படுத்திக்கொள்ளும் மீட்டிங்குக்கு வேண்டுகோள் மீட்டிங் என்றுசொல்லலாம். (1) வேண்டுகோளை எழுத்துமூலமாக பிரசிடெண்டுக்கு தெரியப்படுத்தவேண்டும். (2)அந்த வேண்டுகோளில்(விஷயத்தை)காரியத்தை வெளிப்படையாய் கண்டிருக்க வேண்டும். (3) அதில் அந்த பஞ்சாயத்தில் அந்த காலத்தில் இருக்கிற அங்கத்தினர்களில் மூன்றில் ஒருபங்கு குறையாமல் கையெழுத்து செய்யவேண்டும், (4) அந்த நோட்டீஸில், நோட்டீஸ் பிரஸிடெண்டுக்கு சேர்பித்த தேதியும் மீட்டிங் நடத்த வேண்டிய தேதியும் தவிர இவைகளின் நடுவில் தெளிவான (பூர்த்தியான) 10 நாள் கெடுவு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த நோட்டீஸ் செல்லும். அந்த மீட்டிங் நடத்தவேண்டிய நாள் விடுமுறை நாளாகயிருக்கக்கூடாது.

ஆபீஸில் ஆபீஸ் நேரத்தில் :—இதனால் ஏற்படுவது என்னவென்றால் விடுமுறை நாட்களில் வேண்டுகோள் நோட்டீஸைச் சேர்ப்பிக்கக்கூடாது என்பதுதான். இந்த ஆபீஸ் நேரத்தில் என்பது அனுவசியமென்று ஏற்படுகிறது. ஒரு வேண்டுகோளைத் தபால் மூலம் அனுப்பிய பொழுது கெட்ட யோசனை உள்ளவர்கள் அது ஆபீஸ் நேரத்தில் தங்கள் கையில் சேரவில்லை என்று வேண்டுகோள் மீட்டிங்கை சேர்க்காமலிருக்கலாம். விடுமுறை நாள் அல்லாததும், ஆபீஸ் நேரம் இல்லாத காலத்தில் பிரசிடெண்டினிடமோ, எக்ஸியூடிவ் ஆபீஸரிடமோ (நிர்வாக உத்தியோகஸ்தர்) இடமோ ஏன் சேர்ப்பிக்கக்கூடாது ?

விதி 4 (2)—48 மணி நேரம் :—இந்த 48 மணி நேரத்திற்குள் வேண்டுகோள் நோட்டீஸில் முதல் கையெழுத்து போட்டவருக்கு பிரசிடெண்டுதான் வேண்டுகோள் நோட்டீஸில் குறிப்பிட்ட தேதியிலே அல்லது அதற்கு அடுத்தாற்போல் 3 தினத்திற்குள் மீட்டிங் வைப்பதாக தெரிவிக்க வேண்டும். அந்த நோட்டீஸையும் 48 மணி நேரத்திற்குள் முதல் கையெழுத்து போட்டவருக்கு சேர்ப்பிக்க வேண்டும், அப்படி சேர்பிக்காவிட்டால் வேண்டுகோள் நோட்டீஸில் கையெழுத்துப் போட்டிருக்கும் மெம்பர்கள் மீதி மெம்பர்களுக்கு தெரியப்படுத்தி அவர்கள் மீட்டிங்கை நடத்தலாம். அப்பொழுது அவர்கள் மீதி மெம்பர்களுக்கு 3 நாள் நோட்டீஸ் கொடுத்தால் போதுமானது. அந்த மீட்டிங்கில் பிரசிடெண்டோ வைஸ்-பிரசிடெண்டோ வந்திருந்திருப்பாராகில் அவர்கள் தான் தலைமை வைக்க வேண்டும். அப்பொழுது தலைமை வகிக்கிறவர் வேணுமென்று அந்த மீட்டிங்கை தள்ளிவைக்க அதிகாரமற்றவராக கருதவேண்டும். ஓராவது விதியின்கீழ் மீட்டிங் தள்ளிவைக்கும் விஷயத்தைப் பற்றியும் பார்க்கவும்.

மீட்டிங்குகள் - கூட்டங்களின் - விதிகள்

விதி 4 (3) :—பஞ்சாயத்து ஆபீஸ் இருக்கிற இடத்தில் அன்றி மற்றஇடத்தில் கூட்டக் கூடாது. ஒருகுறித்த தினத்தில் பிரசிடெண்டோ, வைஸ்-பிரசிடெண்டோ, எக்ஸிகூடிவ் ஆபீசரோ (நிர்வாக அதிகாரியோ) வேண்டும் என்று ஆபீஸ் கதவை மூடிக்கொண்டு போய்விட்டாலும் சரி அல்லது ஆபீஸானது சிறியதாகயிருக்கும் பக்ஷத்தில் கூட்டத்தை அதன் பக்கத்தில் அல்லது மற்ருெரு கட்டிடத்தில் நடத்தியதனுல்அந்த மீட்டிங்கின் நடவடிக்கைகள் செல்லத் தக்கினவைகளல்ல என்று சொல்லக்கூடாது. இதன் கருத்து யென்னவென்ருல், பிரசிடெண்ட் முதலியோர், அவர்களுக்கு அனுகூலமாகச் செய்துக்கொண்ட தப்பிதங்களை தங்களுக்கு அனுகூலமாக கோர்ட்டுகளில் வாதித்தால் செல்லாது. [சுப்பரமணியா எ. யுனைடெட் லைப் இன்ஷுரன்ஸ் கம்பெனி 55 M. L. J. 385 (400) = A. I. R. 1928 M. 1215 : : கும்பகோணம் முனிசிபாலிடி எ. கிருஷ்ணம்மா 66 M. L. J. 409 411 = A. I. R. 1934 M. 136.)

5-ம் விதி

மக்கள் மீட்டிங்குகளை பார்வை இடலாம்

5. பஞ்சாயத்துக் கூட்டங்களெல்லாம் பொது ஜனங்கள் தாராளமாக வரக்கூடியபடி இருக்கவேண்டும்; ஆனல், அக்கிராசனம் வகிக்கும் அங்கத்தினர், குறித்த யாதொரு விஷயத்தில் பொதுவாகப் பொது ஜனங்களோ குறித்த யாதொரு நபரோ அங்கிருந்து வெளியேற வேண்டுமென்று கட்டளை யிடலாம்.

குறிப்பு

பொது :—சில பஞ்சாயத்தின் மீட்டிங்குகளின் நடவடிக்கைகளைப் பார்க்கப் பொது ஜனங்களுக்கு இடம் ஏற்படுத்துவது இல்லை. அது பொது ஜனங்களின் அரசியல் வாழ்க்கையில் நம்பகமில்லாதது என்று ஏற்படுகிறது. அந்த தோஷத்தை நீக்க உடனே பஞ்சாயத்துகள் வேண்டிய ஆசனங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று கோரப்படுகிறது. ஏதோஒரு விஷயத்தில் தான் பொது ஜனங்கள் இருக்கக்கூடாது என்று தடுக்கலாமேயொழிய மொத்த மீட்டிங்குகளிலும் இருக்கக்கூடாது என்று தடுக்கக்கூடாது.

6-ம் விதி

பெரும்பாலரால் தீர்மானித்தால் சாதகபாதக மெம்பர்கள் பெயர்கள் பதிவுசெய்ய

6. யாதொரு கூட்டத்தில் பஞ்சாயத்துக்கு முன்பு தரக்கூடிய சகல பிரச்னைகளும், அக்கூட்டத்தில் ஹாஜராகி வோட் கொடுக்கிற அங்கத்தினர்களில் பெரும்பாலரால் தீர்மானிக்கப்பட வேண்டும். வோட்டுகள் சமமாயிருக்கும் விஷயத்தில் அக்கிராசனம் வகிக்கும் அங்கத்தினருக்கு இரண்டாவது வோட் அல்லது நிர்ணய வோட் ஒன்று உண்டு. அதை அவர் செலுத்தவும் வேண்டும். யாதொரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் படாவிட்டால், அதற்குச் சாதகமாகவும் அதற்கு பாதகமாகவும் வோட் செய்யும் அங்கத்தினர்களின் பெயர்களை எழுதிக்கொள்ள வேண்டும்.

குறிப்புகள்

பிரச்னைகள்:—பிரச்னைகளை மீட்டிங்குகளில் யோசனைசெய்து தீர்மானிக்க வேண்டுமே ஒழிய, தனித்தனி நபர்கள் மீட்டிங் கூடாமல் கையெழுத்துபோட்டு தீர்மானம் செய்தால் அது செல்லத்தக்கதல்ல. ஓராவது விதியின் கீழ் 3-வது குறிப்பைப் பார்க்கவும். இந்த பிரச்னைகளை மீட்டிங்குகளில் செய்தார்கள் என்பது அறிய மீட்டிங்கின் நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் கண்டு அறியவேண்டும். ஒரு மீட்டிங்கில் பிரசிடெண்டால் செய்யப்பட்ட தப்பான உத்தரவை சரி என்று மெம்பர்கள் ஒத்துக்கொண்டாலும் அந்த உத்தரவானது இந்த மதருஸ் பஞ்சாயத்துகள் ஆக்டுக்கு விரோதமாக இருக்குமாகில் அந்த தோஷம் நீங்காது,

பெரும்பாலோரால் தீர்மானிக்கப்பட வேண்டும்.—விதி 7 படிக்கு ஒரு மீட்டிங்குக்கு அப்போது இருக்கிற அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்காவது ஆஜராகி யிருந்தால் மீட்டிங்கை நடத்தலாம். அதற்கு திருஷ்டாந்தமாக ஒரு பஞ்சாயத்துக்கு 12 மெம்பர்கள் இருக்கவேண்டி இருக்க, அப்போது 9 மெம்பர்களே இருந்தார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்களில் மூன்றில் ஒரு பங்கு அதாவது மூன்று மெம்பர்கள் சேர்ந்தால் மீட்டிங்கை நடத்தலாம். ஒரு மீட்டிங்கில் 4 பேர் வந்ததாக எண்ணிக்கொள்ளுங்கள், அதில் 3 பேர் ஓட்டு கொடுத்தால் பெரும்பான்மையோர் ஆவார்கள். 2 பேர் ஒரு பக்கமும், மற்ற

2 பேர் ஒருபக்கமாக இருந்தால், பிரசிடெண்டின் இரண்டாவது (காஸ்டிங்) வோட்டால் அதைப் பெரும் பான்மையாகச் செய்து தீர்மானிக்கலாம். பெரும்பான்மையோர் சிறுபான்மையோர் என்னும் மெம்பர்களில் அக்கரையில்லாத (நாட்ரல்) மெம்பர்களைக் கணக்கில் சேர்த்துக் கொள்வதில்லை. ஒவ்வொரு பிரச்னையும் தனித் தனியாக வோட்டுக்கு விட வேண்டும். 2, 3 பிரச்னைகளை ஏக காலத்தில் ஓட்டுக்கு விடக்கூடாது. [ஹரிநந்தன்-எ.-காம்பா An I. R. 1934 A 551 (557) = A. I. R. 1934 A. 376.] ஓராவது விதியின் கீழ் 21-வது குறிப்பு "ஓட்டுக் கொடுப்பது" என்னும் தலைப்பைப் பார்க்கவும்.

சாதகமாகவும் பாதகமாகவும்—அங்கத்தினரின் பெயர்கள்.—இம்மாதிரி பெயர்களைக் குறிப்பிட்டு எழுதுவதனால் ரொம்பவும் அனுகூலம் உண்டு. பின்னிட்டு ஆடிட்டர்கள் கணக்கு களைப் பரிசோதிக்கும் பொழுது ஒரு தொகையை அனாவசியமாகவோ அல்லது துஷ்பிர யோஜனமாகவோ உபயோகித்ததாக ஏற்படும் பொழுது அந்தத் தீர்மானத்துக்குச் சாதக மாக இருந்த மெம்பர்களை மாத்திரம் ஸர்சார்ஜ் அதாவது நஷ்டஈடு கட்டி கொடுக்கும்படி செய்யலாம். ஒரு தீர்மானத்திற்கு சாதகமானவர்கள் எத்தனை பேர்கள் பாதகமானவர்கள் எத்தனை பேர் பாதகமானவர்கள் என்று எழுதாவிட்டால் மொத்தப் பஞ்சாயத்து மெம்பர்களும் அந்த நஷ்டத்தைக் கட்டிக்கொடுக்க வேண்டியதாகும்.

7-ம் விதி

3ல் 1 பங்கு மெம்பர்கள் ஹாஜரானால் மீடிங்கு நடத்தலாம்

7. எந்தப் பஞ்சாயத்தின் கூட்டத்திலும், அந்தப் பஞ்சாயத்தில் அப்போது இருக்கிற அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் குறைந்தது மூன்றில ஒரு பங்கினராவது ஹாஜராகி யிருந்தாலொழிய அதில் எந்த வேலையை யும் நடத்தக்கூடாது.

குறிப்பு

அப்போது இருக்கிற அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் குறைந்தது மூன்றில் ஒரு பங்கினர் :—"அப்போது" என்கிற பதத்தைக் கவனிக்க வேண்டும். ஒரு பஞ்சாயத் திற்கு 15 மெம்பர்களில் 3 ஸ்தானங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தால், அப்போது மெம்பர் கள் 12 பேர்கள்தான் இருப்பார்கள். அதில் 1/3 பாகமாகிய 4 மெம்பர்கள் வந்திருந்தால் "கோரம்" அல்லது நிர்வாகத்திற்குவேண்டிய சங்கியை வந்திருப்பதாக எண்ணவேண்டும். கோரமில்லாவிட்டால் ஒரு மீட்டிங்கும் ஆரம்பிக்கக்கூடாது. அப்படி ஆரம்பித்து நடத்தினாலும் அது செல்லாது. கோரம் இல்லாத மீட்டிங்கில் நிறை வேறிய தீர்மானம் செல்லாது. [ஸட் ராட்சி-எ.-கான்பூர் முனிசிபாலிடி (1899) 21 A 348.

8-ம் விதி

குறித்த காலத்திற்கு பிறகும் ½ மணி நேரம் வரையில் தாமதிக்க லாம்

8. யாதொரு கூட்டத்துக்குக் குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு அரைமணி நேரத் துக்குள் க்வோரம் (அங்கத்தினர்களின் சிற்றெண்) ஏற்படாவிட் டால், ஹாஜராகியிருக்கும் அங்கத்தினர்கள் எல்லாரும் இன்னும் கொஞ்ச நேரம் காத்திருக்க ஒப்புக்கொண்டாலொழிய, அக்கூட்டம் ஒத்திப்போடப்படும்.

குறிப்பு

பொது :—எல்லா மெம்பர்களும் குறிப்பிட்ட காலத்தில் கூடுவாராகில் நன்றாக இருக் கும். நம்முடைய தரித்திர தேசத்தில் எல்லோருக்கும் கெடிகாரங்கள் கிடைத்து இருக்குமாகில் மெம்பர்கள் காலத்தைத் தப்பி வந்தால் தோஷம் கூறுவதில் பயனுண்டு. அவை அப்படி இருக்க கெடியாரமுள்ள மெம்பர் சரியான காலத்துக்கு வந்து பிறகும், அரைமணி நேரம் காத்திருந் தும் மீட்டிங்கு கூடாவிட்டால், அது அவருடைய பிசகு அன்று. அவர் அரைமணி நேரம் சென்ற பிறகு வெளியே போன பிறகு, மீட்டிங்கை கூட்டினால் அது சட்ட விரோதமாகும். அந்த மெம்பர் காலத்தில் வந்ததற்கு அவருக்கு ஒரு தண்டனை விதித்ததாகவும் ஏற்படுகிறது. அம் மாதிரியான சமயங்களில் 3 தினங்கள் தெளிவான நோட்டீஸ் கொடுத்து வேறு மீட்டிங்கு தான் நடத்தவேண்டும். மீடிங்கு நடந்து கொண்டிருக்கையில் சில மெம்பர்கள் எழுந்து போய் விட்டதினால், க்வோரம் இல்லாமல் போனால் அந்த மீட்டிங்கை மேல் கொண்டு நடத்திக் கொண்டு போகலாம். ஆனால் யாராவது ஒரு மெம்பர் க்வோரம் இல்லை என்று பிரஸிடெண்

டிற்குத் தெரிவிப்பாராகில் அப்போது பிரஸிடெண்ட் அல்லது அப்போது அந்த மீட்டிங் குக்கு அக்கிராஸனத்தில் இருக்கிறவர் மீட்டிங்கை முடித்துவிடவேண்டும். அப்படி க்வோரம் இல்லை என்று ஒரு மெம்பரால் தெரிவித்த உடனே வெளியே சென்றிருந்த மெம்பர்கள் திரும்பி வந்தால் அந்த மீட்டிங்கைத் தொடர்ந்து நடத்தலாம். வோட்டுகள் எடுக்கும் சமயத்தில் இந்த க்வோரத்தை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். மீடிங்குக்கு வந்திருந்தும் வோட்டு செய்யா மலிருந்தால் க்வோரத்திற்காக அவர்களையும் எண்ணிக்கையில் சேர்த்துக்கொள்ளப்படும்.

9-ம் விதி

தீர்மானம் ஆனபிறகு 3 மாதத்திற்குள் அதை மாற்றும் வழி

9. ஒரு பஞ்சாயத்தின் தீர்மானம் எதையும் அது நிறைவேற்றப்பட்ட பிறகு மூன்று மாதத்துக்குள் மாற்றவோ ரத்து செய்யவோ கூடாது; ஆனால், அது விஷயமாய்ப் பிரத்தியேகமாகக் கூட்டப்பட்ட கூட்டம் ஒன்றில் மேற்படி பஞ்சாயத்தில் அனுமதிக்கப்பட்ட அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் பாதிக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலமாக அவ்வாறு அதை மாற்றலாம் அல்லது ரத்து செய்யலாம்.

குறிப்பு

பொது :—நிறைவேறிய தீர்மானத்தை அது நிறைவேறிய மூன்று மாதத்திற்குப் பிறகு சாதாரண சபையில் திருத்தவோ, ரத்தோ செய்யலாம். அதற்குள் செய்யவேண்டு மானல் விசேஷ சபையொன்று கூட்டவேண்டும். அதைத் திருத்த அல்லது ரத்து செய்ய அந்த போர்டின் ஏற்பட்ட சங்கியையில் பாதி மெம்பர்களுக்குமேல் ஓட்டுக் கொடுக்க வேண்டும். ஒரு போர்டிற்கு ஏற்பட்ட சங்கியை 15; ஆனல் அதில் அப்போது இருப்பவர் கள் 12; அதில் 8 பேர் வோட் செய்யவேண்டும்.

ஒப்பந்தத்தைப்பற்றி தீர்மானம் .—ஒப்பந்தத்தைப் பற்றி ஓர் தீர்மானம் நிறைவேறிய பின் அதன்படி கொடுக்கப்பட்ட ஒப்பந்தம் நியாய சம்மதமாகும் (முத்து ராமலிங்க சேதுபதி எ. இந்தியா மந்திரி. A. I. R. 1926 Mad. 341 = 92 I. C. 311) ஒப்பந்தம் கொடுக்கப்பட்டபின் அந்த தீர்மானத்தை ரத்து செய்யலாமா அல்லது திருத்தலாமா ?

தேர்தல் தீர்மானம் :—சபையில் தேர்ந்தெடுக்கப்படும் தேர்தல்கள் எல்லாம் தீர்மா னங்களேயாகும். தலைவர்கள் உபதலைவர்கள் தேர்தல்கள் சபையில் நடத்தப்படுகிறது. ஒருவரால் பிரேரேபிக்கப்பட்டு, மற்றொருவரால் ஆமோதிக்கப்பட்டு. யாருக்கு அதிக வோட்டுகள் கிடைக்கின்றதோ. அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக கருதப்படுவார். [இந்தியா மந்திரி - எ. : முருகேச முதலியார், A. I. R. 1929 Mad. 443 = 109 I. . 780]. மேற்கூறிய தீர்ப்புப்படி மீடிங்கில் நடக்கும் தேர்தலானது சபையின் தீர்மானமாகையால், புதிய திருத்தப்படி மதராஸ் கவர்ன்மெண்டார் ரத்து செய்ய முடியாவிட்டாலும் 9-வது விதிப்படி பஞ்சாயத்து போர்டே, மூன்று மாதத்திற்குள் விசேஷக் கூட்டத்திலோ அல்லது 4-வது மாதத்தில் சாதாரணக் கூட்டத் திலோ அந்தத் தீர்மானத்தை ரத்து செய்யலாமா? அவைகள் எலெக்ஷன்கள் சம்பந்த மானவை ஆகையால் அவைகளைத் தேர்தல் கோர்ட்டுகள் தான் தீர்மானிக்க வேண்டும்.

10-வது விதி

நடவடிக்கைகளை இங்கிலீஷில் அல்லது கிராமத்தின் முக்கிய பாஷையில் ஒரு புத்தகத்தில் எழுதி, அக்கிராஸனதிபதி கையொப்பமிட வேண்டும். அதை வரி கொடுப்போர் எல்லோரும் பார்க்கலாம்.

10. யாதொரு பஞ்சாயத்தின் நடவடிக்கைகள் இங்கிலீஷிலாவது பிரஸ்தாப கிராமத் தின் பிரதான பாஷையிலாவது இருக்கலாம், ஆனல், இங்கிலீஷ் இந்த ராஜ்யத்துக்குள் ராஜாங்க காரியங்களுக்காக முன்போலவே உபயோகிக்கப்பட்டுவருகிற வரையில்தான் இது காரியத்துக்காக அதை உபயோகிக்க வேண்டும். ஒவ்வொரு கூட்டத்தின் நடவடிக் கைக் குறிப்புகளையும் இது காரியத்துக்காக வைத்து வரப்பட வேண்டிய புஸ்தக மொன்றில் எழுதிப் பதிந்துகொள்ள வேண்டும்; அதில் அக்கிராசனம் வகிக்கும் அங்கத்தினராவது அவர் வந்திரா விட்டால் அங்கே ஆஜராகியிருக்கிற அங்கத்தினர்களில் எவராவது கையெழுத்து செய்யவேண்டும். ஷ நடவடிக்கைக் குறிப்புகளை இச் சட்டத்தின்படி ஷ பஞ்சாயத்துக்கு யாதொரு வரி செலுத்துகிற எவரும் பஞ்சாயத்து ஆபீஸில் நியாயமான சகல காலங்களிலும் கட்டணமின்றிப் பார்வையிடும் பொருட்டு வைத்திருக்க வேண்டும்.

குறிப்பு

நடவடிக்கைக் குறிப்புகள்.—நடவடிக்கை குறிப்புகளை எழுதும்போதும், பின்னிட்டும் மெம்பர்கள் குறிப்புப் புஸ்தகத்தைப் பார்க்கலாம். சபையில் நடக்கும் நடவடிக்கைகளையும், தீர்மானங்களையும் அப்போதைக்கப்போது இலக்கமிட்டுள்ள தனித்தனி காகிதங்கள் சேர்த்து தைத்து ஒரு குறிப்பு புஸ்தகத்தில் எழுதி வைப்பது நலம். சபை நடவடிக்கையில் எவ்வளவோ திருத்தங்கள் ஏற்படக்கூடும். குறிப்பை எழுதும்போது ஒரு மெம்பர் பிரசிடெண்ட் என்ன எழுதி வருகிறார் என்று கேட்டால், அவர் உடனேயாவது அல்லது எழுதி முடித்த பிரகாவது படித்து காட்டுவது உத்தமம். குறிப்பு புஸ்தகத்தை பொது ஜனங்கள் பார்க்க அருகதை உடையவர்களே என்று ஏற்படுகையில், போர்டின் மெம்பராகிய ஒருவருக்கு அதைப் பார்க்க பூரண சுதந்திரமுண்டு. சபை முடிந்த உடன் நன்றாய் தைத்த புஸ்தகத்தில் சபை நிகழ்ச்சியை எழுதிவைக்க வேண்டும். புஸ்தகத்தில் அடித்தல் திருத்தல்களுக்கு பிரசிடெண்ட் கையெழுத்து இடவேண்டும். சபையின் நடவடிக்கைகள் சரியானவைகளல்ல வென்று நிரூபிக்கும் வரையில் அது நியாயமானவையானதும், செல்லத்தக்கினதுமாகும். (பரசுராம் எ. டாடா இன்டஸ்ரியல் பாங்க், A. I. R. 1925 B 49).

பிரசிடெண்ட் கையொப்பமிட வேண்டும்.—பிரசிடெண்ட் அல்லது சபையில் அக்கிராசனம் வகிக்கும் மெம்பர் வேறு அவசரமான அலுவலிருந்தால், சபை முடியும் வரையில் இருந்தாக வேண்டும் மென்பதில்லை, கடைசி வரையிலிருக்கும் மெம்பர் மட்டும் கையெழுத்து போட்டால் போதுமானது.

எந்த நபரும் பார்வையிடுவது சாத்தியமாக வேண்டும்.—பிரசிடெண்டும் ஆபீஸ் சிப்பந்திகளும், ஒன்று சேர்ந்து பொது ஜனங்களின் பார்வைக்கு குறிப்புப் புஸ்தகத்தைக் காட்டாமல் மறுத்து வருகிறார்கள். தனது பொறுப்பை அறியாது வேலை செய்யும் பிரசிடெண்டுகள் இம்மாதிரி செய்தால் அவர்களை பி. 187 படிக்கு தண்டிக்கலாம். அல்லது அவரை பிரசிடெண்ட் பதவியிலிருந்து பி. 149, 150 கள் படிக்கு நீக்கிவிடலாம். குறிப்புப் புஸ்தகத்தை ஓட்டு கொடுக்கும் பாத்தியதையுடைய ஓட்டருக்குக் காட்டும்படி உத்திரவிட சிவில் கோர்ட்டுகளுக்கு அதிகாரம் உண்டு. (தணிகாசலம் இன் ரி 20 L. W. 589 = A. I. R. 1928 M. 868).

11-ம் விதி

பணப்பற்றுதல் உள்ள மெம்பர்கள் மீடிங்கில் கலந்து கொள்ளக் கூடாது

11. (1) பஞ்சாயத்தின் யாதொரு கூட்டத்தில் ஆலோசனைக்கு வருகிற ஒரு பிரச்னையானது சாதாரணமாகப் பொது ஜனங்களுக்குப் பிரயோகப்படுவதைத் தவிர்த்து, ஓர் அங்கத்தினர் தாமாகவேயாவது, தமது பாகஸ்தர் மூலமாகவாவது, நேர் முகமாகவோ மறைமுகமாகவோ, பண ரூபமான யாதொரு பற்று உள்ளவராயிருக்கும் ஒரு பிரசினையாயிருந்தால், அந்த பிரசினை பற்றிய விவாதத்தில் அந்த அங்கத்தினர் வோட்டு கொடுக்கவோ கலந்து கொள்ளவோ கூடாது.

(2) பிரசிடெண்டானவர் எந்தப் பிரசினையில் ஓர் அங்கத்தினர் அத்தகைய பண ரூபமான பற்று உள்ளவராய் இருக்கிறாரென்று தாம் நம்புகிறாரோ அந்தப் பிரசினை பற்றிய விவாதத்தில் அவர் வோட்டு கொடுப்பதினின்றாவது கலந்து கொள்வதினின்றாவது தடுக்கலாம் அல்லது அந்த விவாதத்தின்போது மேற்படி அங்கத்தினர் இருக்கலாகாதென அவருக்குக் கட்டளையிடலாம்.

(3) மேற்படி அங்கத்தினர் பிரசிடெண்டின் தீர்மானத்தை ஆட்சேபிக்கலாம்; அதன் பேரில் பிரசிடெண்ட் அப் பிரசினையைக் கூட்டத்தின் தீர்மானத்துக்கு விடவேண்டும், கூட்டத்தின் தீர்மானம் முடிவானதாகும்.

(4) கூட்டத்தில் ஆஜராகியிருக்கிற யாதொரு அங்கத்தினர் விவாதத்திலிருக்கிற ஒரு பிரசினையில் பிரசிடெண்ட் அத்தகைய பண ரூபமான யாதொரு பற்று உடையவராய் இருக்கிறாரென்று நம்பினால் இது விஷயமாக ஒரு பிரேரபணை நிறைவேற்றப்பட்டால், அந்த விவாதத்தின்போது பிரசிடெண்ட் கூட்டத்திற்கு வராமலிருக்க வேண்டுமென அவருக்குச் சொல்லலாம்

(5) (3) உப-விதியில் குறிப்பிட்டுள்ள பிரசினையின் பேரில் வோட்டு கொடுக்க சம்பந்தப்பட்ட அங்கத்தினர் பாத்தியதை உள்ளவராகமாட்டார்; (4) உப-விதியில் குறிப்

பிட்டுள்ள பிரேரேபணையின் பேரில் வோட்டுக் கொடுக்க சம்பந்தப்பட்ட பிரெஸிடெண்ட் பாத்தியதை உள்ளவராக மாட்டார்.

விவரணம்:—இவ் விதியில் " பிரெஸிடென்ட் " என்பதில் ஒரு வைஸ் ப்ரெஸிடென்ட் அல்லது பஞ்சாயத்தின் ஒரு கூட்டத்தில் பிரஸ்தாப காலத்தில் அக்கிராசனம் வகிக்கிற அங்கத்தினர் என்பதும் அடங்கும்.

குறிப்பு

இந்த 11-வது விதியின் குறிப்புகளுக்காக பிரிவு 48-ன் கீழ் பக்கம் 105-ல் உள்ள குறிப்பை பார்க்கவும்.

12-ம் விதி

II. பஞ்சாயத்துக் கமிட்டிகளின் நடவடிக்கைகள்

12. 1-வது, 3-வது, 6-வது, 7-வது, 8-வது, 10-வது, 11-வதுவிதிகள் பஞ்சாயத்தின் ஒரு கமிட்டியினுடைய நடவடிக்கைகள் விஷயமாக அவசியமான மாறுதல்களுடன் பிரயோகப்படும்; பஞ்சாயத்து, அதன் அங்கத்தினர்கள் அல்லது அதன் ப்ரெஸிடென்டுக்குச் சம்பந்தப்பட்ட சகல உதகரிப்புகளுக்கும் ஷ கமிட்டி அல்லது அதன் அங்கத்தினர்கள் அல்லது அக்கிராசனருக்குச் சம்பந்தப்பட்ட உதகரிப்புகளாக அவசியமான போதெல்லாம் அர்த்தம் பண்ணவேண்டும்.

சில விதிகள் கமிட்டிகளுக்கும் பொருந்தும்

13-ம் விதி

13. பஞ்சாயத்துக் கமிட்டியினுடைய ஒவ்வொரு கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகளின் பிரதியொன்றை அக் கூட்டத்தின் தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் கமிட்டியின் அக்கிராசனர் பஞ்சாயத்தின் ப்ரெஸிடெண்டுக்கு அனுப்பவேண்டும்; பிரஸிடெண்ட் தாம் அதைப் பெற்றுக்கொண்ட பிறகு நடக்கும் பஞ்சாயத்தின் முதல் கூட்டத்தில் அப் பஞ்சாயத்துக்கு முன் அதை வைக்க வேண்டும்.

கமிட்டிகளின் நடவடிக்கைகளை 3 தினத்திற்குள் அனுப்ப வேண்டும்

குறிப்பு

பொது.—கமிட்டியின் நடவடிக்கைகள் சபையின் நடவடிக்கை போலாகும். 6-வது விதியின் குறிப்பைப் பார்க்கவும், கமிட்டியின் நடவடிக்கையின்போது கமிட்டி மெம்பர்கள் நின்று பேசவேண்டு மென்பதில்லை.

14. பஞ்சாயத்துக் கமிட்டி ஒவ்வொன்றும், கமிட்டியின் வேலையை நடத்தவும் அது எந்தக் காரியங்களுக்காக அமைக்கப் பட்டிருக்கிறதோ அந்தக் காரியங்களை நிறைவேற்றவும் பஞ்சாயத்து சிப்பந்திகளின் சேவையைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

கமிட்டிகளும், பஞ்சாயத்தின் சிப்பந்திகளை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்

15-ம் விதி

15. பொது.—பஞ்சாயத்தையும் அதன் எந்தக் கமிட்டிகளையேனும் சேர்ந்த நடவடிக்கைக் குறிப்புகளையும் ரெகார்டுகளையும், நிர்வாக அதிகாரி தம் பொறுப்பில் வைத்திருக்க வேண்டும்; மேலும் அவர், அத்தகைய எவையேனும் நடவடிக்கைக் குறிப்புகள் அல்லது ரெகார்டுகளின் நகல்களை பி. 178 (2) (XXVII) படிக்கு நிச்சயிக்கக் கூடிய கட்டணங்கள் செலுத்தப்படுவதன் பேரில் கொடுக்கலாம். இந்த நகல்கள் விஷயமாய் 1872ம் வருஷத்திய இந்திய சாட்சியச் சட்டத்தின் 76-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறபடி நிர்வாக அதிகாரி உறுதிமொழி கூறவேண்டும்; அப்படி உறுதிமொழி கூறப்பட்ட நகல்களை, மேற்படி சட்டத்தின் 78-வது பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவின்படி யாதொரு முனிசிபல் சபையின் நடவடிக்கைக் குறிப்புகள், அச் சபையின் நடவடிக்கைகளை எண்பிப்பதற்காக உபயோகிக்கப்படுமாறு போலவே பஞ்சாயத்தின் அல்லது கமிட்டியின் நடவடிக்கைக் குறிப்புகளையோ ரெகார்டுகளையோ எண்பிக்க உபயோகிக்கலாம்.

நிர்வாக உத்தியோகஸ்தரிடம் பஞ்சாயத்தின் நடவடிக்கைகளும், ரிகார்டுகளும் இருக்க வேண்டும். அவைகளின் காபிகளை நற்சாட்சியுடன் அவர் கொடுக்கலாம்

குறிப்பு

பஞ்சாயத்து நடவடிக்கைகளும், ரெகார்டுகளும், ஒரு நடவடிக்கை புஸ்தகத்தில் ஒரு தீர்மானம் இல்லாவிட்டால் அந்த தீர்மானம் நடக்கவில்லே யென்று ஏற்படும் (அட்சயகுமார் எ-போக்ரா முனிசிபாலிடி A. I. R. 1923 C. 675.) முனிசிபல் ரெஜிஸ்டர்களும், சர்வே பிளான் களும், அம்மை குத்தும் ரெஜிஸ்டர்களும், வரி புஸ்தகங்கள் முதலியவைகள் பஞ்சாயத்தின் ரிகார்டுகளாகும். அந்த நகல்களை எழுதி கொடுக்கும்போது அவைகளின் அடிப்பாகத்தில் அந்த நகலானது அசலுடன் சரியிட்டு பார்க்கப்பட்ட வாஸ்தவமான நகல் என்றும் தெரியப் படுத்தி நகல் கொடுக்கிறவர் கையெழுத்தையும், தேதியும், போட்டுக் கொடுக்கவேண்டும், கோர்ட் விசாரணைகளில் இந்த நகல்களைத் தாக்கல் செய்தால் போதுமானது.

விதி 15. கட்டணம் செலுத்துவதின் மேல்.—குறிப்புகளின் நகல்கள் போர்ட்டுகளில் உபயோகிக்கும் ஸ்டாம்பு கடிதங்களில் எழுதிக் கொடுப்பதில்லே ஜில்லா போர்டார் நிர்ண யிக்கும் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு குறிப்புகளின் நகல்கள் கொடுக்கலாம்

போர்டின் ரெகார்டுகள்.—ஒரு முனிசிபல் சபையின் நடவடிக்கைகள் பொது தஸ்தா வேஜ் ஆகும். அதற்கு நகல் கொடுக்கும் அதிகாரமுடையவர் பொது உத்தியோகஸ்தராவார் [19 A. 293 (F. B) = 17 A. W. N. 61.] ஜில்லா உத்தியோகஸ்தர்களுக்குள் நடக்கும் கடிதப் போக்குவரத்துக்கள் பொது தஸ்தாவேஜுகளாகும். [பிரதி சிங் எ. கோர்ட் ஆப் வார்ட்ஸ், 22 W. R. 25.] குறிப்புப் புத்தகத்தை ஆஜர்படுத்த அதில் பிரஸ்தாபத்திலிருக்கும் தீர்மானம் எழுதப்படாமலிருந்தால் அவ்விஷயம் சபையின் பிரஸ்தாபத்திற்கு வரவில்லே என்பது தாத் பர்யம். [அக்ஷே குமார் சந்த் எ. பொக்ரா முனிசிபாலிடி, 37 C. L. J. 589 = 75 I. C. 506 = A. I. R. 1923 Cal. 675] முனிசிபாலிடியின் ரிஜிஸ்டர்களும் சர்வே ப்ளான்களும் அப்போ தைய முனிசிபாலிடியின் நிலைமையை காட்டுமே யொழிய சொத்துக்குள்ள பாத்தியதையா வது சொந்தத்தையாவது காட்டாது. [(51 A. L. J. Notes on Recent Cases P. 7)].

விதிகள் I—விளம்பரம் 43 தேதி 25—3—1950

நடவடிக்கைக் குறிப்புகளின் அல்லது ரெகார்டுகளின் நகல்களைக் கொடுப்பது

1. ஒரு பஞ்சாயத்தின் நடவடிக்கை குறிப்புகளுக்காவது, ரெகார்டுகளுக்காவது, நகல் களை, அல்லது அவைகளிலிருந்து எக்ஸ்ட்ராக்டுகளைக், கொடுக்கும்படி கேட்கும் ஒருவர் (தமது முழுப் பெயரையும் விலாசத்தையும், ஷெ நடவடிக்கைகள் குறிப்புகள் அல்லது ரெகார்டுகளைப் பற்றி எவ்வளவு சரியான விவரத்தைக் கொடுக்க முடியுமோ அவ்வளவு சரியான விவரத்தை யும் கொடுத்து) பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரிக்கு விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும். எந்த நடவடிக்கைக் குறிப்புகளுக்கு அல்லது ரெகார்டுகளுக்கு நகல்களுக்காவது அவற்றி லிருந்து எக்ஸ்ட்ராக்டுகளுக்காவது விண்ணப்பம் செய்து கொள்ளப்படுகிறதோ அந்த நட வடிக்கைக் குறிப்புகள் அல்லது ரெகார்டுகள் நடைமுதல் காலண்டர் வருஷத்துக்கு முந்திய யாதொரு வருஷத்துக்குச் சம்பந்தப்பட்டதாயிருந்தால், அவ் விண்ணப்பம் அனுமதிக்கப்பட்ட வுடன் கூடிய சீக்கிரத்தில் கீழே குறிப்பிட்டுள்ள வீதப்படி தேடிப் பார்ப்பதற்கான கட்டணம் ஒன்றைப் பஞ்சாயத்துக்கு அனுப்ப வேண்டும்.

(a) ஏதாவது ஒரு வருஷத்துக்குச் சம்பந்தப்பட்ட ரெகார்டுகளைத் தேடிப் பார்ப்பதற்காக, ஒரே ஒரு தஸ்தா வேஜு அல்லது பதிவுக்காக	எட்டணு.
(b) அதிகப்படியான ஒவ்வொரு வருஷத்துக்கும் சம்பந்தப்பட்ட ரெகார்டுகளைத் தேடிப்பார்ப்பதற்காக	நான்கணு.

(1) எந்த நடவடிக்கைக் குறிப்பு, அல்லது ரெகார்டின் நகல், அல்லது எக்ஸ்ட் ராக்டு, வேண்டியிருக்கிறதோ அந்த நடிவடிக்கைக் குறிப்பு அல்லது ரெகார்டு விஷயமாக தனித்தனி விண்ணப்பம் கொடுத்துக்கொள்ள வேண்டியதில்லே.

(2) கடிதங்கள், கணக்குகள், அல்லது இதரதஸ்தாவேஜுகளின் உள்ளடக்கங்கள் அல்லது அனுபந்தங்கள், அவை சம்பந்தப்படுகிற தஸ்தாவேஜுகளின் பாகமாகும்; தேடிப் பார்க்கும் காரியங்களுக்காக அவற்றைப் பிரத்தியேகமான தஸ்தாவேஜுகளாய்க் கணக்கிடக் கூடாது.

2. ஷ ரெகார்டு கிடைக்கா விட்டால், செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது. ஆனால் விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்ட தஸ்தாவேஜைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று கண்டுள்ள ஸெர்டிபிகேட் ஒன்று விண்ணப்பதாரருக்குக் கொடுக்கப்படும்.

3. (1) அந்த ரெகார்டு கிடைத்து, நிர்வாக அதிகாரியானவர் அதற்கு நகல்களை யேனும், அதிலிருந்து எக்ஸ்ட்ராக்டுகளையேனும், கொடுக்க விரும்பினால், விண்ணப்பத்தாரர் **பிரதி 175 சொற்கள் அல்லது அவற்றின் பாகத்துக்காக மூன்றணா கட்டணத்தை ரொக்கமாக டெபாசிட் செய்யவேண்டும்.**

(2) இலக்கங்களுக்கு நகலெடுக்க வேண்டியிருக்கிற ஸ்டேட்மென்டுகளின் விஷயத்தில் அல்லது ரெஜிஸ்டர்களின் எக்ஸ்ட்ராக்டுகள் விஷயத்தில், **ஐந்து இலக்கங்களை ஒரு சொல்லுக்குச் சமமாகக் கருதவேண்டும்.**

(3) உருவப் படங்கள் அல்லது நக்ஷாக்கள் விஷயத்தில், நிர்வாக அதிகாரியானவர் பிரஸ்தாப பஞ்சாயத்துக் கட்டு வேலைகளைத் தம் பொறுப்பில் வைத்திருக்கிற என்ஜினீரிங் சிப்பந்தியைக் கலந்தாலோசித்து நியாயமான ஒரு கட்டணத்தை நிச்சயிக்க வேண்டும்.

4. ஷ நடவடிக்கைக் குறிப்பு அல்லது ரெகார்டுக்கு நகல் அல்லது அதிலிருந்து எக்ஸ்ட்ராக்டுக்காக விதிக்கப் படத்தக்க கட்டணங்களை நிர்வாக அதிகாரி விண்ணப்பத்தாரருக்குத் தெரிவிக்க வேண்டும். அக் கட்டணத்தைப் பெற்றுக்கொள்வதன் மேல் அவர் மேற்படி நகல்கள், எக்ஸ்ட்ராக்டுகள் அல்லது ட்ரேஸிங்குகளைத் தயாரிக்கும்படிச் செய்ய வேண்டும். பின்னர் மேற்படி நகல்கள், அல்லது எக்ஸ்ட்ராக்டுகள், ஆபீசில் பரிசீலனை செய்யப்பட்ட பிறகு உண்மையானவை என்று அவரால் உறுதி கூறப்படவேண்டும்; விண்ணப்பத்தாரர் அவற்றைப் பெற்றுக்கொள்ள நேரில் வந்தால் அவரிடம் அதைக் கொடுக்க வேண்டும் அல்லது, இது காரியத்துக்காக அவசியமான தபால் ஸ்டாம்புகளை விண்ணப்பதாரர் கொடுத்திருந்தால் அதை அவருக்குத் தபாலில் அனுப்ப வேண்டும்.

5. தேடிப் பார்ப்பதிற்கான கட்டணம் அல்லது நகல் எடுப்பதற்கான கட்டணத்தை டிபாசிட் செய்கிற ஒவ்வொருவருக்கும் நிர்வாக அதிகாரியாவது இது விஷயமாய் அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற யாதொரு நபராவது கையெழுத்து செய்த ரசீது ஒன்றைக் கொடுக்க வேண்டும்.

6. யாதொரு நடவடிக்கைக் குறிப்பு அல்லது ரெகார்டுக்கு நகல் அல்லது அதிலிருந்து எக்ஸ்ட்ராக்டுகளைக் கொடுப்பது ஆட்சேபகரமானதென்று நிர்வாக அதிகாரி கருதினால், அவர் மேற்படி விண்ணப்பத்தில் அடியிற்கண்டபடி செய்வதற்கான காரணங்களைச் சுருக்கமாகக் கண்டுள்ள எண்டார்ஸ்மென்ட் ஒன்றை எழுதி அவ்விண்ணப்பத்தை நிராகரிக்கவேண்டும்.

கூட்டுக் கமிட்டிகளை நியமிப்பது.

52. **(1) யாதொரு பஞ்சாயத்து எந்தக் காரியத்துக்காகத் தானும் வேறே ஒரு பிரதேச அதிகார சபை அல்லது அதற்கு மேற்பட்ட பிரதேச அதிகார சபைகளுடன் கூட்டாக உத்தரவாதிகளாய் இருக்கின்றனவோ அப்படிப்பட்ட யாதொரு காரியத்துக்காக ஒரு கூட்டு கமிட்டி ஏற்படுத்துவதில் ஷ சபை அல்லது சபைகளுடன் சேரலாம்; மேலும், இன்ஸ்பெக்டர் அந்தப்படி உத்தரவு செய்தால் அந்தப் பஞ்சாயத்து அப்படியே சேரவேண்டும்.**

(2) யாதொரு கூட்டுக் கமிட்டியின் அமைப்பும் அதிகாரங்களும் நடவடிக்கை முறையும் அந்தக் கமிட்டி விஷயமாகச் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகளுக்குள் உண்டாகும் அபிப்பிராய பேதங்களை தீர்த்து வைக்கிற முறையும் நிர்ணயிக்கப்படக் கூடிய விதிகளை அனுசரித்திருக்க வேண்டும்.

குறிப்பு :

பஞ்சாயத்து—பி. 2 (20) பி. 8	விதிகள்—செ. 178.
இன்ஸ்பெக்டர்—பி. 2 (15) பி. 145—157	

பி. 51-ன் கீழ் கமிட்டிகள் சபைகளை குறித்து விதிகள் 12, 13, 14 விதிகளை 120-பக்கத்தில் பார்க்கவும்.

கமிட்டிகளை கிரமமாக செய்யக்கூடிய காரியங்களுக்கு ஏற்படுத்தியதாக கருதவேண்டும் [வெங்கடேஸ்வர-எ-மதராஸ் ராஜாங்கம் A. I. R. 1952 Mad 608.]

விதிகள் - விளம் - 14 - தேதி 24—3—1950

கூட்டுக் கமிட்டிகளின் அமைப்பு, அதிகாரங்கள், நடைமுறை முதலியவை

1. ஒரு கூட்டுக் கமிட்டியில் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகாரி சபைகளின் அங்கத்தினர்களாயிராமல் ஆனல், அக் கமிட்டியில் சேவை செய்ய விசேஷ யோக்யதாம்சங்களோ விசேஷ அக்கரையோ பெற்றிருப்பதாக மேற்படிசபைகள் அபிப்ராயப்படுகிற நபர்கள் அடங்கி இருக்கலாம்.

ஆனல், அவர்களின் எண்ணிக்கை கூட்டுக் கமிட்டியைச் சேர்ந்த அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்குக்கு மேற்படக் கூடாது.

2, ஒரு கூட்டுக் கமிட்டியின் அமைப்பானது ரெகுலேஷன்களை அனுசரித்து இருக்க வேண்டும், இந்த ரெகுலேஷன்கள் 5-வது, 6-வது விதிகளில் குறிப்பிட்டுள்ள விஷயங்களில் தவிர மற்றப்படி—சம்பந்தப்பட்ட பிரதேச அதிகாரசபைகள் ஒவ்வொன்றினுலும் அங்கீகரிக்கப் பட்டாலொழிய—அமுலுக்கு வரமாட்டா.

3. இந்த ரெகுலேஷன்கள் :—

(a) கூட்டுக் கமிட்டியின் அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையையும்.

(b) சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகளின் அங்கத்தினர்களாய் இருக்கவேண்டியவர்களின் எண்ணிக்கையையும் வெளியார்களாய் இருக்கக்கூடியவர்களின் எண்ணிக்கையையும்.

(c) கூட்டுக் கமிட்டியின் அங்கத்தினர்களாய் இருக்கவேண்டியவர்களையும் அல்லது அவர்கள் எந்த விதமாகத் தேர்ந்தெடுக்கவேண்டும் அல்லது நியமிக்கவேண்டும் என்பதையும்,

(d) கூட்டுக்கமிட்டியின் அக்கிராசனராய் இருக்க வேண்டியவரையும் அல்லது அவரை எந்த விதமாகத் தேர்ந்தெடுக்கவேண்டும் அல்லது நியமிக்கவேண்டும் என்பதையும்,

(e) அங்கத்தினர்கள், அக்கிராசனர் ஆகிய இவர்களின் உத்தியோக கால அளவையும்,

(f) சம்பந்தப்பட்ட பிரதேச அதிகாரசபை ஒன்றினுலாவது பலவற்றினுலாவது செலுத்தப்படத் தக்க அதிகாரங்களாயுள்ள எவ் வதிகாரங்களை கூட்டுக்கமிட்டி செலுத்தலாம் என்பதையும்,

(g) கூட்டுக் கமிட்டியின் நடைமுறையையும் நிச்சயிக்கவேண்டும்.

4. 2-வது, 3-வது விதிகளின்படி செய்யப்பட்ட ரெகுலேஷன்கள் மாற்றப்படலாம் அல்லது ரத்து செய்யப்படலாம் ; ஆனல், சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகள் எல்லாம் அவ்வாறு மாற்றுவதற்கேனும் ரத்து செய்வதற்கேனும் அங்கீகாரம் அளிக்கவேண்டும்.

5. 39-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி இன்ஸ்பெக்டர் நடவடிக்கை எடுத்துக்கொண்டால், அவர் 2-வது, 3-வது விதிகளில் குறிப்பிட்டுள்ள விஷயங்கள் எல்லாவற்றைப் பற்றியாவது அவற்றில் யாதொன்றைப் பற்றியுமாவது தாம் அவசியமென்று அல்லது உசிதமென்று கருதும் கட்டளைகளைப் பிறப்பிக்கலாம்.

6. மேற்சொன்ன விதிகளில் எவற்றின்படியாவது பிரதேச அதிகார சபைகளுக்குள் அபிப்பிராய பேதம் எதுவேனும் ஏற்பட்டால், அதை இன்ஸ்பெக்டருடைய ஆலோசனைக்கு அனுப்ப வேண்டும் ; அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

7. சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகளில் ஒன்று ஒரு கன்டோன்மென்ட் அதிகார சபையாயிருந்தால் அல்லது ஒரு பெரிய ரேவின் ரேவு அதிகார சபையாய் இருந்தால், 39-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படியாவது மேற்சொன்ன விதிகளில் எவற்றின்படியாவது இன்ஸ்பெக்டருக்குள்ள அதிகாரங்கள் இந்த ராஜ்ய அரசாங்கத்தார் மூலமாகப் பெறப்படுகிற மத்திய அரசாங்கத்தாரின் சம்மதத்தின்பேரில் தான் செலுத்தப்படத் தக்கவையாகும்.

விதிகள் - விளம் - 36 தேதி 24—3—1950

கமிட்டிகளை அமைப்பதும், அவற்றில் வெளியார்களைச் சேர்த்துக் கொள்வதும், அக்கமிட்டிகளுக்கு அலுவல்களைப் பிரித்துக்கொடுப்பது

1. (1) ஒருபஞ்சாயத்து, கமிட்டிகளுக்கு பிரித்துக் கொடுக்கக்கூடிய அதிகாரங்களைச்செலுத்துவதற்காக அல்லது கடமைகளை நிறைவேற்றுவதற்காக அல்லது அலுவல்களைச் செய்வதற்காகவும் அக்கமிட்டிகளை அமைக்கலாம்.

(2) ஒரு பஞ்சாயத்து, கமிட்டிகளின் ஆலோசனைக்கு அனுப்பப்படக் கூடிய எந்த விஷயங்களையேனும் விசாரணை செய்து அவற்றைப்பற்றி ரிப்போர்ட் பண்ணுவதற்காக அல்லது ஆலோசனை கூறுவதற்காகவும்கூட கமிட்டிகளை அமைக்கலாம்.

2. ஒரு பஞ்சாயத்தில் அனுமதிக்கப்பட்ட அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையில் ஒரு பாதிக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப்பட்ட தீர்மானம் ஒன்றின் மூலமாக அப்பஞ்சாயத்தின் அங்கத்தினர்களாயிராமல், ஆனல் அக்கமிட்டியில் சேவை செய்வதற்கான விசேஷ யோக்கியதாம்சங்களையோ விசேஷ அக்கரையோ பெற்றிருப்பதாக அப்பஞ்சாயத்து கருதக்கூடிய எந்த நபர்களையேனும் 1-வது விதியின் பிரகாரம் அமைக்கப்பட்ட ஒருகமிட்டியின் அங்கத்தினர்களாக அப்பஞ்சாயத்து நியமிக்கலாம். ஆனல், அந்த நபர்களின் எண்ணிக்கையானது அக்கமிட்டியின் அங்கத்தினர்களுடைய மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்குக்கு மேற்படக்கூடாது.

3. பஞ்சாயத்து அங்கத்தினர்களின் அலுவல்களுக்கும், அதிகாரங்களுக்கும், பொறுப்புகளுக்கும் யோக்கியதைக் குறைவுகளுக்கும், அசமர்த்தவைகளுக்கும் சம்பந்தப்படுகிற மேற்படி சட்டத்தின் சகல நிபந்தனைகளும் பஞ்சாயத்து அங்கத்தினர்களாயிராத கமிட்டி அங்கத்தினர்களுக்கும் கூடிய வரையில் பிரயோகப்படத்தக்கவையாகும்.

4. பிரசிடெண்ட் தாம் வகிக்கும் உத்தியோகம் காரணமாக, 1-வது விதியின்படி அமைக்கப்பட்ட ஒவ்வொரு கமிட்டியின் அங்கத்தினரும் அக்கிராசனரும் ஆவார்.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் கமிட்டிகள் (குழு)க்கள்.

53. (1) (a) உத்தியோகங்களில்—அமர்த்திவைக்கும் கமிட்டி ஒன்று இருக்க வேண்டும். அதில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அக்கிராசனரும், கமிஷனரும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அங்கத்தினர்களால் வருடத்திற்கு ஒரு முறை தேர்ந்து எடுக்கப்பட்ட ஒரு அங்கத்தினரும் இருப்பார்கள். இந்த கமிட்டியினுடைய அக்கிராசனரும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அக்கிராசனரே ஆவார். 58-வது பிரிவின் ஷரத்துகளுக்கும், அரசாங்கத்தாரால் இது விஷயமாய் செய்யப்பட்ட விதிகளுக்கும் உட்பட்டு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் பண்டிருந்து பஞ்சாயத்து யூனியன் போஸ்டு அதாவது (உத்தியோகங்கள் அல்லது வேலைகள்) களுக்கு சம்பளம் கொடுக்கும் படியான அப்பாயிண்ட்மெண்ட் வேலைகளை ஷை கமிட்டியின் அனுமதியின் பேரில் செய்ய வேண்டும்.

(b) ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு படிப்பு (கல்வி) கமிட்டியும் ஒரு பொது கருத்துகள் கமிட்டியும் இருக்கவேண்டும். இந்த சட்டத்தின் கீழ் உள்ள கடமைகளையும், அலுவல்களையும், நேர்மையாக செய்வதற்கு அவசியம் என்று அரசாங்கம் விரும்பினல் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஆனது இன்னும் இதரமான கூட்டங்களை ஏற்படுத்த வேண்டும். இன்னும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தானகவே இதர கமிட்டிகளையும் ஏற்படுத்தலாம். ஒவ்வொரு கமிட்டியிலும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலினல் குறிப்பிட்ட எண்ணுள்ள அங்கத்தினர்கள் இருக்கவேண்டும். அக்கிராசனரும் உத்தியோக முறைமையில் அதில் சேர்ந்திருப்பார். அக்கிராசனரை தவிர ஒவ்வொரு கமிட்டியின் அங்கத்தினர்களை பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

(2) பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு யுக்தமென்று தோன்றுகிற படிக்கு பஞ்சாயத்து (1) வது பிரிவில் கண்ட எந்த கமிட்டிக்காகிலும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அங்கத்தினர்கள் அல்லாதவர்களையும் சேர்த்து கொள்ளலாம்.

ஆனல் இந்த உப பிரிவின் கீழ் சேர்த்துக் கொள்ளப் பட்டவர்களின் தொகையானது ஒரு கமிட்டியில் உள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் 3-ல் 1 பங்குக்கு மேல் இருக்கக்கூடாது.

(3) இது விஷயமாய் அரசாங்கம் செய்யும் விதிகளுக்குட்பட்டு (1) உப பிரிவின் கீழ் ஏற்படுத்திய ஒவ்வொரு கமிட்டியின் கடமைகளையும் அதிகாரங்களையும் நிச்சயிக்க பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அப்போதுக்கப்போது ரெகுலேஷன்களை செய்ய அதிகாரம் உள்ளதாகும்.

குறிப்பு

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் கமிட்டிகள் :—பகுதி 53—பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்கள், தங்கள் கடமைகளையும் அலுவல்களையும் திறம்பட செய்வதற்காக கமிட்டிகளை நியமிப்பதை இப்பகுதி சாத்தியமாக்குகிறது. இவைகளுக்கு முக்கியமானவை மூன்றும்.

(1) உத்யோகஸ்தரை நியமிக்கும் கமிட்டி.

(2) கல்வி கமிட்டி.

(3) பொதுவான நோக்கங்கள் கமிட்டி.

இன்னும் மற்றபடி வேறு கமிட்டிகளையும் ஏற்படுத்தலாம். இந்த கமிட்டிகளில் அங்கியரையும் சேர்த்து கொள்ளலாம். ஆனல் அவர்களுடைய எண்ணிக்கை அங்கத்தினர்களின் 3-ல் 1 பங்குக்கு மேல் இருக்கக்கூடாது. பி. 52-யும், அதன் கீழ் குறிப்பையும், விதிகளையும் பார்க்கவும்.

பரிபாலன அறிக்கைகள்

பஞ்சாயத்துக்களின் பரிபாலன அறிக்கைகள்

54. (1) ஒவ்வொரு பஞ்சாயத்தும் பிரதி வருஷத்துக்காகவும் அதன் பரிபாலனத்தைக் குறித்த அறிக்கை ஒன்றை அந்த வருஷம் முடிவடைந்த பிறகு கூடிய சீக்கிரத்தில் நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு மேற்படாமலும் நிர்ணயிக்கப்படக்கூடிய நமூனுப்படியும் அப்படி நிர்ணயிக்கப்படக்கூடிய விவரங்கள் சகிதமாகவும் அவ்வாறு நிர்ணயிக்கப்படக்கூடிய அதிகாரி மூலமாகவும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு அனுப்பவேண்டும்,

(2) நிர்வாக அதிகாரி அந்த அறிக்கையைத் தயாரிக்க வேண்டும். பஞ்சாயத்து அதைக் குறித்து ஆலோசனை பண்ணி அதன்பேரில் அது தீர்மானங்கள் எவையேனும் செய்தால் அந்தத் தீர்மானங்கள் சகிதமாய் அதைப் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு அனுப்பவேண்டும்.

குறிப்பு

பஞ்சாயத்து—பி. 2 (20), பி. 8
இன்ஸ்பெக்டர்—பி. 2 (15) பி. 145—157
நிர்வாக அதிகாரி—பி. 2 (10) பி. 43.
தீர்மானங்கள்—பி. 38 (2).
அரசாங்கம்—செ. 2 (12).

பொது :—ஏப்ரல் மாதம் முதல் அடுத்த வருஷம் மார்ச்சு மாதல் 31-ந் தேதி வரையில் நடந்த பரிபாலன விஷயத்தை குறித்து ஒவ்வொரு பஞ்சாயத்தும் வருஷம் ஒன்றிற்கு ஒரு தடவை ஒரு பரிபாலன அறிக்கை அனுப்ப வேண்டும். நிர்வாக அதிகாரி இவ்வறிக்கையைத் தயாரிக்க வேண்டும். அதை மெம்பர்கள் தங்கள் சபையில் கவனித்து அப்படியே அல்லது மாற்றி கடைசியில் நிர்ணயிக்கப்படக் கூடிய அதிகாரி மூலமாக பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு அனுப்ப வேண்டும். மெம்பர்கள் இதில் அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். இதன் விதிகளை அடியில் அச்சிடப்பட்டிருக்கின்றன. இவைகளின் மாறுதல்கள் அப்போதுக்கப்போது வந்து கொண்டிருக்கும். அவைகளை கவனித்து மாற்றிக் கொள்ளலாம்.

பரிபாலன (அட்மினிஸ்ட்ரேஷன்) ரிபோர்ட் அறிக்கைகளைக் குறித்த விதிகளின் அனுபந்தத்தின் பொருள் அடக்கம்

I. அமைப்பும் நிர்வாகமும்.
II. போக்குவரத்து மார்க்கங்கள்.
III. விளக்குப் போடுவது.
IV. கல்வி.
V. பொதுஜன தேகாரோக்கியம்
VI. லாபகரமான முயற்சிகள்.
VII. பொது வருமானங்கள்.
VIII. திரவிய நிலைமை.
XI. பலவகைப்பட்டவை.
X. பொது நிர்வாகம்.

பரிபாலன (அட்மினிஸ்ட்ரேஷன் ரிபோர்ட்) அறிக்கைகளைத் தயாரிப்பதும் அனுப்புவதும்.

பி. 54 (1)-ன் கீழ் விதிகள். விளம்பரம் 6-ந் தேதி

1. பஞ்சாயத்து ஒவ்வொன்றினுடைய நிர்வாக அதிகாரியும், பிரதி வருஷமும் முடிந்த பிறகு அப் பஞ்சாயத்தினுடைய பரிபாலன அறிக்கையை, இரண்டு பாகங்களில் தயாரிக்க வேண்டும்; அவையாவன :—(i) இவ் விதிகளுடன் சேர்க்கப்பட்டிருக்கிற கேள்வித்தாளில் குறிப்பிட்டிருக்கும் விவரங்களைக் கொண்ட அசல் அறிக்கை; (ii) அரசாங்கத்தார் அப் போதைக்கப்போது ஏற்படுத்தக்கூடிய நமுனைப்படியுள்ள வருஷாந்திரக் கணக்கு.

2. பஞ்சாயத்தானது பரிபாலன அறிக்கையின் இரண்டு பிரதிகளை அந்த அறிக்கை சம்பந்தப்படுகிற வருஷத்து அடுத்துவரும் வருஷத்தின் மே மாதம் 1-ம் தேதிக்கு மேற்படாமல்,

ரீஜனல் இன்ஸ்பெக்டர் மூலமாகவும் ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர் மூலமாகவும் இன்ஸ்பெக்டருக்கு அனுப்ப வேண்டும்.

ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸரானவர், புள்ளி விவரங்களை ஒருங்கிணைத்து தமது பிரதேசத்துக்கான ஒருங்கிணைத்த அறிக்கையொன்றையும், பரிபாலன அறிக்கையின் பிரதி ஒன்றையும் மேற்படி வருஷத்தின் மே மாதம் 15-ம் தேதிக்கு மேற்படாமல் ரீஜனல் இன்ஸ்பெக்டருக்கு அனுப்ப வேண்டும்.

ரீஜனல் இன்ஸ்பெக்டரானவர் ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர்களால் அனுப்பப்பட்ட புள்ளி விவரங்களை ஒருங்கிணைத்துத் தமது ரேஞ்சுக்கான ஒருங்கிணைத்த அறிக்கையொன்றை மேற்படி வருஷத்தின் ஜுலை மாதம் 15-ம் தேதிக்கு மேற்படாமல் இன்ஸ்பெக்டருக்கு அனுப்ப வேண்டும்.

இன்ஸ்பெக்டரானவர், ரீஜனல் இன்ஸ்பெக்டர்களிடமிருந்து ஒருங்கிணைந்த அறிக்கைகள் வந்துசேர்ந்த பிறகு கூடிய சீக்கிரத்தில் இந்த ராஜ்யத்திலுள்ள பஞ்சாயத்துக்கள் எல்லாவற்றிற்குமான பொது அறிக்கையை அரசாங்கத்தாருக்கு அனுப்பவேண்டும்.

N.B.—இந்த சதுரத்தில் உள்ளதை அரசாங்கம் இந்த 1958ஷூத்திய 35-வது சட்டத்தின் படிக்கு மாற்றிவிடலாம்.

அனுபந்தம்

.........ஜில்லா.........தாலூக்கா.........பஞ்சாயத்தினுடைய 1955-ம் வருஷத்திய பரிபாலன அறிக்கை

I. அமைப்பும் நிர்வாகமும்

(1) (a) பஞ்சாயத்தை அமைத்துப் பிறப்பித்த உத்தரவின் இலக்கமும் தேதியும் என்ன?

(b) இவ் வருஷத்திலே விசாரணையதிகாரப் பிரதேசத்தில் மாறுதல் ஏதாகிலும் இருந்ததா? உத்தரவின் இலக்கத்தையும் தேதியையும் குறிப்பிடவும்.

(c) இப் பஞ்சாயத்து பட்டணம் பஞ்சாயத்தா, கிராம பஞ்சாயத்தா? கிடைக்கக்கூடிய கடைசி ஜன சங்கியை இலக்கங்களின்படி அதன் ஜனத்தொகை என்ன?

(2) (a) பஞ்சாயத்தில் இருக்கவேண்டுமென அனுமதிக்கப்பட்ட அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கை என்ன?

(b) இவ் வருஷத்தில் அந்த மொத்த எண்ணிக்கையிலே மாறுதல் ஏதாகிலும் இருந்ததா?

(c) இவ் வருஷத்தில் வார்டுகளை மாற்றியமைக்குமாறு உத்தரவு செய்யப்பட்டதா?

(d) ஷெட்யூல்டு ஜாதியார்களுக்காக ஸ்தாபனங்கள் எவையேனும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தால் அவைகளின் எண்ணிக்கை, இவ் வருஷத்திலே இந்த எண்ணிக்கை மாற்றப்பட்டதா?

(e) அங்கத்தினர்களின் சாதாரண அல்லது தற்செயலான தேர்தல் ஏதாகிலும் இவ் வருஷம் நடந்ததா ? தேர்தல் தகராறு ஏதாகிலும் இருந்ததா ?

(f) தற்செயலான அல்லது சாதாரண காலி ஸ்தானங்கள் ஏற்பட்டிருந்தால் அவைகளை நிரப்புவதற்குக் கால தாமதம் ஏதாகிலும் ஏற்பட்டதா ? அப்படியானுல், அதற்குக் காரணங்கள் யாவை ?

(3) தலைவரும், உபதலைவரும், அங்கத்தினர்களும்—

(a) இவ் வருஷத்தில் தலைவரின் அல்லது உபதலைவரின் தேர்தல் ஏதாகிலும் நடந்ததா ? தேர்தல் தகராறு ஏதாகிலும் ஏற்பட்டதா ?

(b) தலைவராவது உபதலைவராவது இவ் வருஷம் பதவியிலிருந்து நீக்கப்பட்டாரா ?

(c) தலைவர் பதவி விஷயமாய் உபதலைவர் பொறுப்பு வகித்தாரா ? அல்லது தாற்காலிகமாகத் தலைவர் எவரேனும் நியமிக்கப்பட்டாரா ? அப்படியானுல் எவ்வளவு காலத்துக்கு ?

(d) இவ் வருஷம் எந்த அங்கத்தினரேனும் பதவியிலிருந்து நீக்கப்பட்டாரா ?

(4) கூட்டங்கள்:—

(a) பஞ்சாயத்துக்களின் நடவடிக்கைகளுக்குச் சம்பந்தப்பட்ட விதிகளைச்சேர்ந்த 3 (1), 3 (2), 4 (1) விதிகளின்படி இவ்வருஷம் எத்தனை கூட்டங்கள் நடத்தப்பட்டன ? அத்தகைய கூட்டங்களில் சாதாரணக் கூட்டங்களும், அவசரக் கூட்டங்களும், விசேஷக் கூட்டங்களும் எத்தனை ?

(b) க்வோரம், (நிர்வாகச்சிற்றெண்) இல்லாததால் எத்தனை கூட்டங்கள் ஒத்தி போடப்பட்டன ?

(5) இவ் வருஷத்தில் கமிட்டி ஏதாகிலும் அமைக்கப்பட்டதா ? அப்படியானுல், எக் காரியத்துக்காக ?

(6) (a) நிர்வாகம் :—பஞ்சாயத்து ஆபீஸ் எங்கே இருக்கிறது ? கட்டிடம் சொந்தமானதா, வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதா ? வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாயிருந்தால், கொடுக்கப்படுகிற வாடகைத் தொகை எவ்வளவு ? எல்லா சமூகத்தினரும் அங்கே போகக் கூடியவர்களாக இருக்கிருர்களா ?

(b) நிர்ணயிக்கப்பட்ட ரெஜிஸ்டர்களும், நமூனுக்களும் வைத்து வரப்படுகின்றனவா ?

(c) முழுக்கால நிர்வாக உத்தியோகஸ்தர் ஒருவர் நியமிக்கப்படுவதற்குரியதென்ற பஞ்சாயத்து அறிக்கை யிடப்பட்டிருக்கிறதா ? அந்த அறிக்கை பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் இலக்கமும் தேதியும் என்ன ? இவ்வருஷம் முழுவதிலும் பஞ்சாயத்துக்கு நிர்வாக உத்தியோகஸ்தர் ஒருவர் இருந்தாரா ? இல்லையென்ருல் பஞ்சாயத்து நிர்வாக உத்தியோகஸ்தருடைய பொறுப்பிலே வாஸ்தவமாக இருந்த கால அளவு அல்லது அளவுகளை குறிப்பிடவும்.

(d) (i) சிப்பந்தி :—அமர்த்திக் கொள்ளப்பட்டிருக்கிற குமாஸ்தாக்களின் எண்ணிக்கை என்ன ? சம்பள விதத்தில் அமர்த்திக் கொள்ளப்பட்டிருக்கிருர்களா ?

(ii) குமாஸ்தாக்களின் எண்ணிக்கையும், சம்பள வீதங்களும் இன்ஸ்பெக்டருடைய அல்லது அவரது பிரதிநிதியினுடைய உத்தரவுகளை அனுசரித்திருக்கின்றனவா ?

(iii) இப் பஞ்சாயத்து வேருெரு பஞ்சாயத்துடன் சேர்ந்து பொதுவாக யாதொரு என்ஜினீரிங் அல்லது இதர சிப்பந்தியை வேலைக்கு வைத்து கொண்டிருக்கிறதா ? அப்படியானுல், அத்தகைய சிப்பந்தியின், விவரங்களையும், அதற்குப் பிடித்த செலவில் பஞ்சாயத்து ஏற்றுக்கொண்ட விகிதாசாரம் பற்றிய தகவலையும் தெரிவிக்கவும்.

II. போக்குவரத்து மார்க்கங்கள்

(1) (a) இவ் வருஷத்தில் பாட்டைகள் எவையேனும் புதிதாக ஏற்படுத்தப்பட்டனவா? அல்லது பாலங்களும் மதகுகளும் கட்டப்பட்டனவா ? என்ன செலவில் ? என்ன முகாந்திரத்திலிருந்து அவைகளுக்குச் செலவிடப் பணம் கிடைத்தது ?

(b) பஞ்சாயத்து பராமரித்து வருகிற பாட்டைகள் தெருக்கள் இவற்றின் மொத்த நீளம் என்ன ?

(c) இவ் வருஷத் தொடக்கத்தில் எடுபடாமலிருந்த ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை.

(d) இவ் வருஷத்தில் பைசல் செய்யப்பட்ட ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை.

(e) இவ் வருஷத்தில் முடிவு செய்யப்பட்ட ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை என்ன ?

(f) இவ் வருஷ முடிவில் எடுபடாமலிருக்கிற ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை.

(g) பாட்டைகளின் பொதுவான நிலை என்ன ?

(h) பொதுப்பாட்டை, சாக்கடைக்குழி, ஜலதாரை, ஜலதாரைக் கட்டிட வேலை, டன்னல் அல்லது மதகு ஏதாகிலும் மேற்படி சட்டத்தின் பிரயோகத்தினின்றும், விலக்கப்பட்டதா ?

(2) கிராமத்திலே கால்வாய்களும் ஓடத்துறைகளும் எவையேனும் இருக்கின்றனவா ? அவைகளின் நிர்வாகம் பஞ்சாயத்துக்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதா ? இந்த ஆதாரத்திலிருந்து கிடைக்கிற வருமானம் என்ன ?

(3) சாலை மரங்களின் பலன்களைச் சேகரிக்கும் உரிமை குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறதா ? வருமானமும் செலவும் என்ன ?

III. விளக்குப் போடுவது

(1) கிராமத்திலே மின்சாரம் உபயோகத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா ?

(2) பஞ்சாயத்து வைத்திருக்கிற மின்சார விளக்குகள், மண்ணெண்ணெய் விளக்குகள், பெட்ரோமாக்ஸ் அல்லது காஸ் (Gas) விளக்குகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும். மொத்த செலவு என்ன ?

(3) கிராமப் பஞ்சாயத்துக்களைக் குறித்த 1950-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தில் கண்ட 63 (3) (b) பிரிவின் படி விளக்குப் போடுவதற்குப் பிடிக்கும் செலவை ஈடு செய்வதென்னும் குறிப்பிட்ட காரியத்துக்காக விவசாய நிலத்தின்பேரில் வரி ஏதாகிலும் விதிக்கப்படுகிறதா ? அப்படியானல், அதிலிருந்து கிடைக்கிற வருமானம் என்ன ? ஷை கேள்வி இந்த சட்டத்திற்கு பொருத்தமில்லை.

IV. கல்வி

(1) கிராமத்திலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை என்ன ? அவற்றை யார் நடத்துகிருர்கள் ? அவை போதுமானவையா ? பாடசாலைகளுக்குப் போகும் சிறுவர்கள், சிறுமிகள் இவர்களின் மொத்த எண்ணிக்கை என்ன ?

(2) (a) பஞ்சாயத்து தானே சொந்தத்தில் ஒரு பாடசாலை நடத்துகிறதா ? பாடசாலையில் படிக்கிற பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை என்ன ? அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கிற உபாத்தியாயர்களின் எண்ணிக்கை என்ன ? அதற்கென்று சொந்தமான ஒரு கட்டிடம் இருக்கிறதா ? அதற்கு வேண்டிய முஸ்தீபு செய்யப்பட்டிருக்கிறதா ?

(b) ஷெட்யூல்டு ஜாதிகளைச் சேர்ந்த பிள்ளைகள் எத்தனை பேர் பஞ்சாயத்துப் பாடசாலையில் படிக்கிருர்கள் ?

(c) இந்தப் பஞ்சாயத்து வேருெரு பஞ்சாயத்துடன் சேர்ந்து பொதுவான ஆரம்பப் பாடசாலையொன்றை நடத்தி வருகின்றதா ?

(3) கிராமத்திலே கட்டாயக் கல்விமுறை அமுலிலிருக்கிறதா ?

(4) நூல் நிலையம் ஒன்றை பஞ்சாயத்து வைத்திருக்கின்றதா ? சேகரித்து வைக்கப்பட்டுள்ள புஸ்தகங்களின் மொத்த எண்ணிக்கையும் மதிப்பும் என்ன ?

(5) கிராமத்திலே வாசகசாலை ஏதாகிலும் இருக்கிறதா ? அங்கே வாசிப்பதற்குக் கொடுக்கப்படுகிற பத்திரிகைகள் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கவும்.

(6) கிராமத்திலே முதியோர் பாடசாலையாவது இராப்பாடசாலையாவது இருக்கிறதா ? அப்படியானல், எத்தனை ? அவை யாரால் நடத்தப்படுகின்றன ? இவ் வருஷத்தில் இப் பாடசாலைகளில் படித்தவர்களில் மொத்த எண்ணிக்கை என்ன ? எழுதப் படிக்கத் தெரியாத முதியவர்கள் எவர்களேனும் இப் பஞ்சாயத்திலே இவ் வருஷத்தில் எழுதப் படிக்க தெரிந்து கொண்டார்களா ? அப்படியானல் எத்தனை பேர் ? முதியோர் கல்விக்காக இப் பஞ்சாயத்து பணம் ஏதாகிலும் செலவழித்ததா ? அப்படியானல், எவ்வளவு ?

V. பொதுஜன தேகாரோக்கியம்

(1) தெருக்கள் :— தெருக்கள் கிரமமாகப் பெருக்கப்படுகின்றனவா ? பெருக்கு பவர்கள் எத்தனை பேர் வேலைக்கு அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள் ? என்ன செலவில் ?

(2) கக்கூசுகள்:—பொது கக்கூசுகள் எவையேனும் இருக்கின்றனவா? அப்படியானால் எத்தனை ?

(3) ஜலவசதி :—(a) குடி தண்ணீர் ஆதாரங்கள் என்னென்ன இருக்கின்றன ? அவை போதுமானவையா ?

(b) அவைகள் அசுசி ஆக்கப்படுவதினின்றும் தடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றனவா ?

(c) பிராதுகள் எவையேனும் தொடரப்பட்டனவா ? அப்படியானால் எத்தனை ?

(4) சாக்கடைக்கால் ஏற்பாடு :—பஞ்சாயத்தில் சாக்கடைகள் எவையேனும் இருக் கின்றனவா ? அவைகள் கிரமமாக சுத்தம் செய்யப்பட்டு சரியாக வைத்திருக்கப்படுகின் றனவா ? சாக்கடைகள் இராவிட்டால், அழுக்குத் தண்ணீரை ஒருவகை செய்வதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன ?

(5) பட்டணங்களில் நடக்கும் அசங்கியங்கள் அல்லது சங்கடங்களைக் குறித்த 1889-ம் வருஷத்திய சட்டம் கிராமத்திலே அமுலிலிருக்கிறதா ? அப்படியானால் பிராதுகளின் எண்ணிக்கை என்ன ? விதித்து வசூலிக்கப்பட்ட அபராதங்களின் தொகை என்ன ?

(6) 1899-ம் வருஷத்திய சென்னை ஜனன மரண பதிவுச் சட்டம் கிராமத்திலே அமுலிலிருக்கிறதா ?

(7) சந்தைகளும் திருவிழாக்களும் :—(a) முக்கியமான சந்தைகளும் திருவிழாக் களும் யாவை ?

(b) அத்தகைய சந்தைகள், திருவிழாக்களின்போது என்ன சுகாதார ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன ? அப்படியானால் யாரால் என்ன செலவில் செய்யப்படுகின்றன ?

(8) பெருவாரி வியாதிகள்:—இவ் வருஷத்திலே பெருவாரி வியாதிகள் எவையேனும் கண்டனவா ? பஞ்சாயத்து எடுத்துக்கொண்ட தடை ஏற்பாடுகள் யாவை ?

(9) அபாயமானவையும் அருவெறுப்பானவையுமான தொழில்கள்:—

(a) கைத்தொழில் பிரதேசம் எதையேனும் பஞ்சாயத்து அறிக்கையிட்டு இருக் கிறதா ?

(b) பஞ்சாயத்தின் மேல் விசாரணைக்குட்பட்ட தொழில்கள் யாவை ?

(c) இவ்வருஷத்தில் எத்தனை லைசென்ஸுகள் கொடுக்கப்பட்டன ? அவற்றி லிருந்து கிடைத்த வருமானம் எவ்வளவு ?

(d) சகாயச்சட்டங்கள் (பை - லாஸ்) எவற்றையேனும் பஞ்சாயத்து செய்திருக் கிறதா ?

(10) (a) வைத்திய உதவி:—ஆஸ்பத்திரி அல்லது டிஸ்பென்ஸரி ஏதாகிலும் கிராமத் தில் இருக்கிறதா ?

(b) டிஸ்பென்ஸரி எதையேனும் பஞ்சாயத்து நடத்தி வருகிறதா ? அப்படியானால் அதில் எத்தனைபேர் வேலைக்கு அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள் ?

(c) இந்தப் பஞ்சாயத்து வேறொரு பஞ்சாயத்துடன் சேர்ந்து பொதுவான ஆஸ் பத்திரி, டிஸ்பென்ஸரி அல்லது ஆரோக்கியவாசம் எதையேனும் நடத்தி வருகிறதா ?

(11) குப்பை எடுப்பதற்கான தனிப்பட்ட ஊழியவர்க்கத்தை பஞ்சாயத்து வைத்திருக் கிறதா ? அப்படியானால் அது தன்னைத்தானே ஆதரித்துக்கொள்ளக் கூடியவாறு இருக் கிறதா ?

(12) பொதுமக்கள் வழக்கமாகக் கூடுகிற இடங்களைக் குறித்த 1888-ம் வருஷத்திய சட்டமாவது, வஸ்துக்களைக் கலப்படம் செய்வதை தடுப்பதைக் குறித்த 1918-ம் வரு ஷத்திய சென்னப்பட்டணத்துச் சட்டமாவது, ஜில்லா முனிசிபாலிட்டிகளைக்குறித்த 1920-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தின் ஷரத்துக்களில் எதுவாவது, 1920-ம் வரு ஷத்திய சென்னை பட்டண நிர்மாண சட்டமாவது இப் பிரதேசத்துக்கு வியாபிக்கும்படிச் செய்யப்பட்டிருக்கிறதா ?

VI. லாபகரமான முயற்சிகள்

(1) பஞ்சாயத்து இவ் வருஷத்திலே மார்க்கெட்டுகள் அல்லது பாரவண்டி நிற்குமிடங்கள் அல்லது ஆடு மாடு அடிக்கும் தொட்டிகள் எவற்றையேனும் புதிதாக ஏற்படுத்தியிருக்கிறதா ?

(2) (a) மார்க்கெட்டுகள்:—கிராமத்திலே பொது மார்க்கெட்டுகள் எத்தனை இருக்கின்றன ? பஞ்சாயத்து எவ்வையாகிலும் நடத்தி வருகிறதா ? ஸ்டால்கள் எவற்றையேனும் அது கட்டி இருக்கிறதா ? அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் என்ன ?

(b) ஜில்லா போர்டு மார்க்கெட்டுகளாகத் தாம் பிரிக்கப் பட்டுள்ள மார்க்கெட்டுகளின் நிமித்தம் பிரஸ்தாப ஜில்லா போர்டினிடமிருந்து பஞ்சாயத்து சகாய தொகை பெற்று வருகிறதா ?

(c) (தனிப்பட்டவர்களுக்கு)ச் சொந்தமான மார்க்கெட்டுகள் எவையேனும் இருக்கின்றனவா ? அப்படியானல், அவற்றின் எண்ணிக்கை என்ன ? அவற்றிற்கு விதிக்கப்பட்ட லைஸென்ஸ் கட்டணம் மூலமாகக் கிடைக்கிற வருமானம் என்ன ? இவ் வருஷத்தில் (தனிப்பட்டவர்களுக்குச்) சொந்தமான மார்க்கெட்டுகள் எவையேனும் மூடப்பட்டனவா? அப்படியானல் அவற்றிற்கு பதிலாக பொது மார்க்கெட்டுகள் ஏற்படுத்தப்பட்டனவா ?

(3) பாரவண்டி நிற்குமிடங்கள்—பாரவண்டி நிற்குமிடம் எதையேனும் பஞ்சாயத்து வைத்திருக்கிறதா ? கட்டணங்களை வசூலிக்கும் முறை யாது ? அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் என்ன ? சிப்பந்திச் செலவு என்ன ?

(4) ஆடு மாடு அடிக்கும் தொட்டிகள்—ஆடு மாடு அடிப்பதற்காக எத்தனை தொட்டிகளைப் பஞ்சாயத்து வைத்திருக்கிறது ? அவற்றிலிருந்து கிடைக்கும் நிகர வருமானத்தைக் குறிப்பிடவும்.

(5) சத்திரம் சாவடிகள்—பஞ்சாயத்தின் மேல்விசாரணைக்குட்பட்ட சத்திரம் சாவடிகள் எவையேனும் இருக்கின்றனவா ? அப்படியானல், கிடைக்கிற வருமானம் எவ்வளவு ? அவற்றிற்காகப் பிடிக்கும் செலவு என்ன ?

(6) குடிசைத்தொழில்கள்—இவற்றைச் சீர்திருத்துவதற்காக ஏற்பாடுகள் எவற்றையேனும் பஞ்சாயத்து செய்திருந்தால் அவற்றை விவரமாகச் சொல்லவும்.

(7) பஞ்சாயத்தின் மேல்விசாரணைக்குட்பட்ட ஒதுக்கப்படாத காட்டுக்காக வாடகை ஏதாகிலும் செலுத்தப்படுகிறதா ? அப்படியானல் தொகையையும், கிடைக்கிற வருமானத்தையும் பிடிக்கிற வேறு செலவையும் குறிப்பிடவும்.

(8) கலவை உரம் தயாரிக்கப்படுகிறதா ? அப்படியானல் அதிலிருந்து கிடைக்கிற வருமானத்தைக் குறிப்பிடவும்.

(9) இவ் வருஷத்தில் எத்தனை மரங்கள் நடப்பட்டன ?

VII. பொது வருமானங்கள்.

(1) (a) வரிகள்— வீட்டு வரி, தொழில் வரி, வண்டி வரி இவை விதிக்கப்படுகிற வீதங்களைப்பற்றிய விவரங்களையும், இவ் வருஷத்திலே ஒவ்வொரு தலைப்பின் கீழும் வசூலிக்கப்பட்ட தொகைகளையும் குறிப்பிடவும்.

(b) வரியை வசூலிப்பதற்காகப் பலவந்தமான ப்ராஸஸ் என்னும் கட்டளைகள் இத்தனை பிறப்பிக்கப்பட்ட தென்பதைக் குறிப்பிடவும்.

(c) யாதொரு வரி அல்லது கட்டணங்களை வசூலிக்கும் வேலை கிராமப் பெரிய தனக்காரரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதா ?

(2) (a) பலவிதமான வருமானம்:—கிராமத்திலே விதிக்கப்படுவதும், ஜில்லா போர்டுகளைக் குறித்த 1920-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தில் கண்ட 82-வது பிரிவின்படி பஞ்சாயத்துக்குச் சேரவேண்டியதுமான நிலவரியில் பஞ்சாயத்துக்குள்ள பங்கு.

(b) கிராமப் பஞ்சாயத்துக்களைக் குறித்த 1950-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தில் கண்ட 63 (3) (a) பிரிவின்படி நிலவரி ஏதாகிலும் விதிக்கப்பட்டால் அந்த நிலவரி.

(c) 63 (3) (b) பிரிவின்படி விவசாய நிலங்களுக்கு வரி ஏதாகிலும் விதிக்கப்பட்டால் அந்த வரி.

(d) கிராமப் பஞ்சாயத்துகளைக் குறித்த 1950-ம் வருஷத்திய சென்ன பட்டணத்துச் சட்டத்தில் கண்ட 63 (3) (d) பிரிவின்படி வியாபார விளைபொருளுக்குக் கட்டணங்கள் எவையேனும் விதிக்கப்படாமல் அக் கட்டணங்கள்.

(e) சொத்தின் ட்ரான்ஸ்பர்கள் மீதான தீர்வையிலிருந்து கிடைக்கிறவருமானம்.

(f) மீன் பிடி துறைகளிலிருந்து கிடைக்கிற வருமானம் ?

(g) சமுதாயப் புறம்போக்குகளிலிருந்து கிடைக்கின்ற வருமானம்.

(h) நிதி ஏற்பாடுகளிலிருந்தும் ட்ரஸ்டுகளிலிருந்தும் கிடைக்கின்ற வருமானம்.

(i) கிராமப் பஞ்சாயத்துக்களை குறித்த 1950-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தில் கண்ட 71-வது பிரிவின்படிக்கான அரசாங்க கிராண்டுகள்.

(j) அரசாங்கத்தார் கொடுக்கும் எவையேனும் எக்ஸ்கிராஷியா கிராண்டுகள்.

(k) வேறு ஏதாகிலும் வருமானம்.

(3) (a) ஜில்லா போர்டு சகாயத் தொகை ஏதேனும் கொடுத்தால் அதன் அளவு, எதற்காக அதைக் கொடுக்கிறதென்பது.

(b) தனிப்பட்ட நபர்கள் சகாயத் தொகை ஏதேனும் கொடுத்தால் அதன் அளவும், எக் காரியத்துக்காக அதைக் கொடுக்கிறார்களென்பதும்.

(4) வியாபார விளைபொருள்களின் மார்க்கெட்டுகளைக் குறித்த 1933-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தில் கண்ட 11 (3) பிரிவின்படி யாதொரு மார்க்கெட் கமிட்டி பணம் ஏதாகிலும் செலுத்தினால் அந்தப் பணம்.

VIII. திரவிய நிலைமை

(1) (a) பஞ்சாயத்து நிதி சேவிங்ஸ் பாங்கிலாவது அங்கீகாரமாய் வேறு விதத்திலாவது சேமித்து வைக்கப்படுகிறதா ?

(b) பஞ்சாயத்து நிதி முதலீடு செய்யப்பட்டிருந்தால் அதைப்பற்றிய விவரங்களை தெரிவிக்கவும்; அத்தகைய முதலீட்டுக்கு ஆதாரமாக உள்ள உத்திரவையும் குறிப்பிடவும்

(2) பஞ்சாயத்துக் கணக்குகள் கடைசியாக எப்போது தணிக்கை செய்யப்பட்டது ? தணிக்கையின் முடிவு என்ன ?

(3) இவ் வருஷத்திலே வரவுகளையும் பொறுப்புகளையும் பற்றிய சுருக்கமான சங்கிரகம் ஒன்றையும் ஆரம்ப ரொக்கக் கையிருப்பையும் முடிவான ரொக்கக் கையிருப்பையும் கொடுக்கவும். (தணிக்கை ஏற்கெனவே பூர்த்தி செய்யப்பட்டிருந்தால்) அறிக்கைக்குச் சம்பந்தப்பட்ட வருஷத்துக்குரிய தணிக்கை அறிக்கையில் கண்டுள்ள தலைப்புகளையும் தொகைகளையும் இங்கே எழுதவேண்டும்.

IX. பலவகைப்பட்டவை

(1) சிவில், கிரிமினல் விசாரணை யதிகாரம் :—

(a) இவ் வருஷத்தில் பைஸல் செய்யப்பட்ட சிவில் வழக்குகளின் எண்ணிக்கை என்ன ?

(b) பஞ்சாயத்தினிடம் கிரிமினல் விசாரணை யதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதா அப்படியானால், இவ் வருஷத்தில் விசாரிக்கப்பட்ட கிரிமினல் வழக்குகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும்.

Note :— மதராஸ் கிராம கோர்ட்டுகள் ஆக்ட் 4-வது பாகத்தில் கண்ட காரணங்களுக்காக யாதொரு ஒப்படைப்பும் வேண்டியதில்லை.

(c) கிராமக் கோர்டுகளைக் குறித்த 1888-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிராத யாதொரு சிவில் அல்லது கிரிமினல் விசாரணை யதிகாரம் இவ் வருஷத்தில் பஞ்சாயத்து கோர்ட்டுக்கு கொடுக்கப்பட்டதா ?

(2) பதிவு வேலை நிர்வாக உத்தியோகஸ்தர்களுடைய பஞ்சாயத்துக்களின் (விஷயத்தில்)—

(a) பதிவு வேலையை மேற்கொள்வதற்கு நிர்வாக உத்தியோகஸ்தருக்குக் கிரமப்படி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

(b) முத்திரைத் தீர்வையினின்றும் பதிவுக் கட்டணங்களின்றும் நிவாரணை அளிக்கப் பெற்றுள்ளவையும் இவ் வருஷத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளவையுமான தஸ்தாவேஜுகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும்.

(c) இவ் வருஷத்தில் பதிவு செய்யப்பட்ட அற்பத் தன்மையுள்ள தஸ்தாவேஜுகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும். இவ் வருஷத்தில் வரப்பெற்று, அரசாங்கத்துக்கு வரவு வைக்கப்பட்டுள்ள பதிவுக் கட்டணங்களின் தொகை யாது ?

இந்த சதுரத்தில் உள்ளதை அரசாங்கம் எடுத்துவிடலாம்.

(3) ஒதுக்கி வைக்கப்பட்டிராத காடு எதுவேனும் இவ் வருஷத்தில் பஞ்சாயத்தின் மேல் விசாரணையிலிருந்து எடுத்து விடப்பட்டதா ?

(4) பஞ்சாயத்தின் நிர்வாகத்துக்கு மாற்றப்பட்டுள்ள ஸ்தாபனங்கள் அல்லது கட்டிட வேலைகள் எவையேனும் இருக்கின்றனவா ?

(5) தருமநிதி ஏற்பாடுகள் அல்லது இனுங்கள் எவையேனும் பஞ்சாயத்தின் நிர்வாகத்துக்கும் மேற்பார்வைக்கும் உட்பட்டிருக்கின்றனவா ?

(6) இவ் வருஷத்தில் நன்கொடை எதுவேனும் ஏற்றுக்கொள்ளப்பட்டதா ? அப்படியானல், விவரங்களைத் தெரிவிக்கவும்.

(7) டிரஸ்டுகள் எவையேனும் பஞ்சாயத்தின் நிர்வாகத்துக்குட் பட்டிருக்கின்றனவா ?

(8) யாதொரு கிராம பாசனக்கட்டிட வேலையின் பாதுகாப்பும் பராமரிப்பதாவது நீர் பாசன முறைகளின் நிர்வாகமாவது பாசனத் தண்ணீரின் வினியோகத்தை முறைப்படுத்தும் அதிகாரமாவது பஞ்சாயத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறதா ?

(9) யாதொரு புறம்போக்கு மேய்ச்சல் நிலம், போராடிக்களம், சுடுகாடு, இடுகாடு, கால் நடைக் கொட்டில், பாரவண்டி நிற்குமிடம், தோப்பு ஆகிய இவை இவ் வருஷத்திலே சட்டத்தின் பிரயோகத்தினின்றும் கலெக்டரால் விலக்கப்பட்டனவா ?

X. பொது நிர்வாகம்

(1) இவ் வருஷத்திலே பஞ்சாயத்து நிராகரிக்கப்பட்டு அதன் அலுவல்களை அரசாங்கத்தாரே செய்தார்களா ? இவ் வருஷத்திலே பஞ்சாயத்து கலைக்கப்பட்டதா ? அப்படியானல், கால அளவைக் குறிப்பிடவும்.

(2) முறையே கிராம பஞ்சாயத்துக்களைக் குறித்த 1950-ம் வருஷத்திய சென்னப் பட்டணத்துச் சட்டத்தில் கண்ட 31-வது பிரிவின் படிக்கான அல்லது 44-வது பிரிவின் படிக்கான அவசரக்கால அதிகாரங்களை நிர்வாக அதிகாரியாவது கலெக்டராவது இன்ஸ்பெக்டராவது செலுத்துவதற்கு ஏதாகிலும் சந்தர்ப்பம் நேரிட்டதா ?

(3) இவ் வருஷத்திலே தீர்மானம், லைசென்ஸ் அல்லது, அனுமதி ஏதாகிலும் ரத்து செய்யப்பட்டதா ?

(4) பஞ்சாயத்தாராவது தலைவராவது நிர்வாக அதிகாரியாவது யாதொரு கடமையைச் செய்யத்தவறிப் போனதனல் அதை செய்யும்படி இன்ஸ்பெக்டர் அல்லது வேறு தகுந்த அதிகாரி கட்டளையிடுவதற்குச் சந்தர்ப்பம் ஏதாகிலும் ஏற்பட்டதா ?

(5) குடிமராமத்து செய்து முடிக்கப்பட்டதா ?

(6) எடைகளும் அளவைகளும் பரிசோதிக்கப்படுகின்றனவா ?

(7) சகாயச் சட்டங்கள் எவையேனும் செய்யப்பட்டனவா ? அப்படியானல், அவற்றின் தன்மையைக் குறிப்பிடவும்.

(8) பொதுக் குறிப்புகள் எவையேனும் இருந்தால் அவை.

பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களின் பரிபாலன அறிக்கைகள்

55. (1) ஷை பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஒவ்வொன்றும் பிரதி வருஷத்திற்காகவும் அதன் பரிபாலனத்தையும் அந்தப் பஞ்சாயத்து யூனியனிலுள்ள சகல பஞ்சாயத்துக்களின் பரிபாலனத்தையும் குறித்த ஒருங்கிணைந்த அறிக்கை ஒன்றை அந்த வருஷம் முடிவடைந்த பிறகு கூடிய சீக்கிரத்திலும் நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு மேற்படாமலும் நிர்ணயிக்கப்படக்கூடிய நமூனப்படியும் அப்படி நிர்ணயிக்கப்படக்கூடிய விவரங்கள் சகிதமாகவும் அவ்வாறு நிர்ணயிக்கப்படக்கூடிய அதிகாரி மூலமாகவும் கலெக்டருக்கு அனுப்பவேண்டும்.

(2) கமிஷனர் அந்த அறிக்கையைத் தயாரிக்க வேண்டும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அதைக் குறித்து ஆலோசனை பண்ணி, அதன் பேரில் தன்னுடைய தீர்மானம் சகிதமாக அதைக் கலெக்டருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

(3) கலெக்டர் அந்த ஜில்லாவிலுள்ள பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றின் பரிபாலனத்தைப் பற்றிய பொதுவான அறிக்கை ஒன்றைத் தயாரித்து அதை ஜில்லா அபிவிருத்திச் சபையின் முன்வைப்பதுடன்

அதையும் ஜில்லா அபிவிருத்திச் சபையின் தீர்மானத்தின் நகலையும் சேர்த்து, நிர்ணயிக்கப்படக்கூடிய தேதிக்கு முன் அரசாங்கத்தாருக்கு அனுப்பிவைக்கவேண்டும். அவர் அந்த அறிக்கையின் நகல் ஒன்றையும் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

(4) அந்த அறிக்கையும் அதன் பேரில் செய்யப்பட்ட தீர்மானமும் அரசாங்கத்தார் சட்டளையிடக்கூடிய விதத்தில் பிரசித்தம் செய்யவேண்டும்.

குறிப்பு

பகுதி 55.—பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் தனது சொந்த நிர்வாகம் பற்றியும் அந்த பஞ்சாயத்து யூனியனிலுள்ள சகல பஞ்சாயத்துக்கள் நிர்வாகம் பற்றியும் ஒருங்கிணைந்த நிர்வாக அறிக்கை ஒன்றை அது ஜில்லா கலெக்டருக்கு சமர்ப்பிக்கவேண்டுமென்று இந்தப் பகுதியில் சொல்லியிருக்கிறது.

நடவடிக்கைகளைச் சட்ட சம்பந்தமாக்குவது

ஒழுங்குப் பிசகு இருப்பது காலி நேரிடுவது முதலியவைகளினால் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் முதலியவற்றின் நடவடிக்கைகள் செல்லாமற்போகமாட்டா என்பது

56. யாதொரு பஞ்சாயத்தாவது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலாவது அதன் யாதொரு கமிட்டியாவது அந்தப் பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் தலைவராகவாகிலும், உப-தலைவராகவாகிலும், அக்கிராசனராகவாகிலும், உப-அக்கிராசனராகவாகிலும், அங்கத்தினராகவாகிலும் செய்யப்படுகிற யாதொரு நபராவது யாதொரு கமிட்டியின் அக்கிராசனராவது அங்கத்தினராவது செய்கிற எந்தக் காரியமும், அந்தப் பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அல்லது கமிட்டி ஏற்படுத்தப்பட்டதில் ஒரு குறைவு இருந்ததென்னும் காரணத்தினால் மாத்திரமேயாகிலும், அந்தப் பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் தலைவர், உப-தலைவர், அக்கிராசனர், உப-அக்கிராசனர் அல்லது அங்கத்தினர் அல்லது யாதொரு கமிட்டியின் அக்கிராசனர் அல்லது அங்கத்தினர் யாதொரு தகுதிக் குறைவு காரணமாகவோ, அவரைத் தேர்ந்தெடுத்ததில் யாதொரு கிரமப்பிசகு அல்லது சட்ட விரோதமான விஷயம் ஏற்பட்டிருந்த காரணமாகவோ அந்த பதவியை வகிக்கவேனும், அதில் இன்னும் இருக்கவேனும் பாத்தியதை உடையவராக இல்லை என்னும் காரணத்தின் மேலாகிலும், அந்தப் பஞ்சாயத்தின், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அல்லது கமிட்டியின் தலைவர், உப-தலைவர், அக்கிராசனர், உப-அக்கிராசனர் அல்லது அங்கத்தினரின் உத்தியோகத்தில் யாதொரு காலி ஸ்தானம் ஏற்பட்டிருந்த காலத்திலே அந்தக் காரியம் செய்யப்பட்டதென்னும் காரணமாகவாகிலும், சட்ட சம்பந்தமற்றதாய் விடுவதாகக் கருதப்படமாட்டாது.

குறிப்பு

பொது.—மெம்பராயிருக்க அருகதையில்லாதவர் சபையில் கலந்துகொள்வதால் சபையின் நடவடிக்கைகள் செல்லுபடியாகாமல் போவதை தடுப்பதற்காக இந்த செக்ஷன் ஏற்பட்டது. [சுப்பராய கவுண்டன்-எ-.முத்து குமாரசாமி கவுண்டன், 51 M. L. J. 265= A. I. R. 1926 Mad. 1001].

வரிகள்:—லோகல் போர்டின் அமைப்பு அல்லது சபைகளில் குறைவு இவைகளைப் பற்றி இந்த செக்ஷன் கூறுகிறது. வரி விதிக்கும் பாத்யதையுடைய முனிசிபாலிடியார் தாங்கள் விதித்திருக்கும் வரி நியாய வரம்பிற்கு மீறியதா என்பதை விசாரிக்க சிவில் கோர்ட்டிற்கு இருக்கும் அதிகாரத்தை இந்த செக்ஷன் எடுத்துவிடவில்லை. [பக்மல் ஜின்னிங் பாக்டரி-எ.-முனிசிபல் கமிட்டி (அகன்), A. I. R. 1930 N. 153].

பஞ்சாயத்துகளுடைய நடவடிக்கைகள்:—வைஸ்-பிரசிடெண்ட் தேர்தல் லோகல் போர்டின் சாதாரண நடவடிக்கைகளில் ஒன்று அல்லாததால் அது இந்த செக்ஷன் கீழ் வராது. [வைத்தியநாத-எ.-முருகப்பன்—A. I. R. 1928 Mad. 1077=1928 M. W. N, 549]. அப்படியிருந்தால் எலெக்ஷன் மனு அனுவசியமானதாகி விடும். [கந்தசாமி-எ.-பௌகீஸ், A. I. R. 1926 Mad. 396].

சட்ட சம்மதமற்றதாய் கருதப்படமாட்டாது :—(1) பஞ்சாயத்தின் அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் குறைவு இருப்பதாலும் (2) பிரசிடெண்ட் முதலியவர்கள் எலெக்ஷனில் நியாய விரோதமாவது; தவறுதலாவது இருப்பதால் மேற்படி உத்தியோகம் வகிக்க அருகதை யில்லாமலிருப்பதாலும், (3) அல்லது மேற்கூறிய உத்தியோகம் எப்போதாவது காலியாய் இருக்கும்போது அந்த காரியம் செய்யப்பட்டிருக்கிறதென்ற ஹேதுவினலாகிலும் செல்லாமற் போய் விடுவதாக எண்ணப்படமாட்டாது. மேலே சொல்லப்பட்ட மூன்று குறைவுகளாவது அல்லது அதில் யாதொரு ஒரு குறைவுகளாவது இருந்தாலும், சட்டப்படி செய்யப்பட்ட காரியங்கள் செல்லாமற் போகமாட்டாது. [செ. 8 (2) பார்க்கவும்].

பிரசிடெண்ட், மெம்பர் எலெக்ஷனில் தவறு, சட்ட விரோதமா யிருப்பதால் மேற்கூறிய உத்தியோகத்தை வகிக்க அருகதையுடையவர் அல்ல என்பது.—லோகல் போர்ட் ஆக்டில் சொல்லப்பட்ட மெம்பர், பிரசிடெண்ட், வைஸ்-பிரசிடெண்ட் என்பது அந்த ஆக்டின் விதிப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர், பிரசிடெண்ட், வைஸ்-பிரசிடெண்ட் என்பது பொருள். [தெய்வசிகாமணி-எ.-சேதுரத்தின் **A.I.R. 1925 Mad. 1034**]. சபையில் முதலில் பிரசிடெண்டாவது வைஸ்-பிரசிடெண்டாவது இல்லாமலிருக்கையில் அக்கிராசனம் வகிக்கும் மெம்பர், அவர்கள் சபையின் மத்தியில் வந்தால் அக்கிராசனம் வகிக்கும் மெம்பர் அக்கிராசனத்தை காலி செய்யாமல் நடவடிக்கைகளை நடத்தினல், அது சட்ட விரோதமாகமாட்டாது. [பசவ நருந்தைய்ய-எ.-முருகய்ய, **A. I. R. 1926 B. 576**].

எலெக்ஷனில் ஒழுங்கீனம் அல்லது சட்ட விரோதம் :—எலெக்ஷன் முடிவு கூறிய உடனே பிரசித்தம் செய்யப்படவேண்டும். பிறகுதான் சட்டப்படி மெம்பர் வைஸ்-பிரசிடெண்ட், பிரசிடெண்ட் என்று எண்ணப்படுவார்கள். அப்படி எலெக்ஷன் செய்யப்பட்ட நியாயத்தை அதிருப்தி அடைந்த நபர் எலெக்ஷன் மனு மூலமாய் ஆக்ஷேபிக்கலாம். அந்த மனு முடிவடையும் வரையில் எலெக்ஷன் செய்யப்பட்ட நபரே நியாயமான மெம்பர் என்று கருதப்படுவார். அப்படிப்பட்ட மெம்பரின் உதவியோடு லோகல் போர்டில் நடந்த நடவடிக்கைகள் சொல்லாமற் போகமாட்டாது.

மெம்பர் ஸ்தானம் காலியாயிருப்பதினலாவது :—ஒரு லோகல் போர்ட் பிரசிடெண்ட் எலெக்ஷன் காலத்தில் அந்த சபையிலிருக்கவேண்டிய மொத்த சங்கியை 20-க்கு 19 மெம்பர்கள் இருந்ததால் அந்த பிரசிடெண்ட் எலெக்ஷன் செல்லுபடியாகக் கூடியதல்ல என்று வழக்கு தொடரப்பட்டது. அதில் அந்த எலெக்ஷன் நியாயமானதென்று தீர்மானிக்கப்பட்டது. மேலும் லோகல் போர்ட் ஆக்டுகளும், பிரதேச கவர்ன்மெண்டாரின் பிரசுரங்களும், லோகல் போர்டின் அமைப்பைக் கூறுகின்றனவே யொழிய, மெம்பர்களின் உத்தியோக விஷயங்களைப் பற்றி கூறவில்லை. நியாயமாய் அமைக்கப்பட்ட லோகல் போர்ட் என்பதற்கு முதல் முதலில் அமைக்கப்பட்ட லோகல் போர்டிலுள்ள ஒவ்வொரு மெம்பர் ஸ்தானமும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டுமென்கிற அவசியமுமில்லை. மெம்பர்கள் ஸ்தானங்கள் காலியாயிருப்பதால் லோகல் போர்ட் தன் நிர்வாகத்தை நடத்த அருகதை அற்றது என்று கூறமுடியாது. [வெங்கடராம-எ.-அமத் சுல்தான், **A. I. R. 1923 Mad. 360.**]

சிப்பந்தி பிரிவுகள் (57-62)

பஞ்சாயத்துக்களுடைய வும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுடையவும் சிப்பந்தி

57. (1) பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் ஆகியவற்றின் உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் ஆகியவர்களின் எண்ணிக்கையையும், உத்தியோகப் பெயர்களையும், தரங்களையும், அவர்களுக்குக் கொடுக்கப்படத்தக்க சம்பளங்களையும், கட்டணங்களையும், படிகளையும், நிச்சயிப்பதற்கான அல்லது மாற்றுவதற்கான எல்லா உத்தேசங்களுக்கும், சந்தர்ப்பத்திற்கேற்ப, அந்தப் பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

(2) நிர்வாக அதிகாரி அல்லது கமிஷனர் அத்தகைய உத்தேசங்களை ஆலோசிக்க வேண்டுமென்று சொன்னல்மட்டுமே சந்தர்ப்பத்திற்கேற்ப பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அவற்றை ஆலோசிக்க வேண்டும்; மேலும், பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அந்த உத்தேசங்களுக்கு மாறுதல்களுடனே மாறுதல்கள் எவையுமின்றியோ அங்கீகாரம் கொடுக்கலாம்.

ஆனால், அந்தப் பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் ஐந்து வருஷங்களுக்கு மேலாக நிலேயான சேவையிலிருந்து வருபவரும், மாதம் ஒன்றுக்கு ஐம்பது ரூபாய்க்குக் குறையாமல் சம்பளம் பெறுபவருமான, அதன் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரையேனும், பிரதிகூலமாகப் பாதிக்கிற உத்தேசம் எதுவும் அது காரியத்துக்காக கூட்டப்பட்ட விசேஷக் கூட்டத்திலன்றி மற்றபடி ஆலோசிக்கப்படக் கூடாது; அப்போது, பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் இருக்கிற அங்கத்தினர்களில் பேர்பாதியினராவது அதற்குச் சம்மதம் கொடுத்தா லொழிய அத்தகைய உத்தேசம் எதுவும் நிறை வேற்றலாகாது.

(3) (1), (2) உட்பிரிவுகளில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில் லாமலே, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் விஷயத்தில் அரசாங்கத்தாரும், பஞ்சா யத்துக்களின் விஷயத்தில் இன்ஸ்பெக்டரும், யாதொரு பஞ்சாயத்து அல்லது பஞ்சா யத்து யூனியன் கவுன்சிலின் உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள். ஆகியவர்களின் அல்லது அத்தகைய உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் ஆகியவர்களில் யாதொரு வகையினரின் எண்ணிக்கையையும், உத்தியோகப் பெயர்களேயும், தரங்களேயும், அவர் களுக்குக் கொடுக்கப்படத்தக்க சம்பளங்களேயும், கட்டணங்களேயும், படிகளேயும் நிச் சயிப்பதற்கு அல்லது மாற்றுவதற்கு அதிகாரம் வாய்ந்தவர்களாவார்கள் அவ்வாறு நிச்சயிக்கப்பட்ட அல்லது மாற்றப்பட்ட எண்ணிக்கையை, உத்தியோகப் பெயர்களே தரங்களே, சம்பளங்களே, கட்டணங்களே அல்லது படிகளே பஞ்சாயத்து யூனியன் கவுன் சிலின் விஷயத்தில் அரசாங்கத்தின், பஞ்சாயத்துக்களின் விஷயத்தில் இன்ஸ்பெக்ட ரின் முன் அங்கீகாரத்துடனின்றி மற்றபடி பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனி யன் கவுன்சில் மாற்றக்கூடாது.

பி. 57ன் கீழ் குறிப்புகள் பட்டி

		பக்கம்
பிரிவுகள் 57 முதல் 62 வரையில் உள்ளவைகளே குறித்து பொது	...	136
பி. 57 (1) இன்ஸ்பெக்டர் நிர்ணயிப்பார்	...	,,
பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள்	...	,,
ரெகுலேஷன் செய்ய அதிகாரம் கொடுத்தது பிசகானது	...	,,
உத்யோகஸ்தர்களும் சிப்பந்திகளும்	...	,,
சிப்பந்திகளும் :: ரெவின்யூ உத்யோகஸ்தர்களும் :: கிராம முனிசீபு :: கிராம கர்ணம்	...	,,
சிப்பந்திகளும் போலீசும்	...	137
சிப்பந்திகள் - பஞ்சாயத்து கட்டடங்களில் இருப்பது	...	138
சிப்பந்திகளும் - ரிகார்டு தலே திருடுவது	...	,,
சிப்பந்திகள் — பஞ்சாயத்து தொகையை அபகரிப்பது	...	,,
சிப்பந்திகளும் தேர்தல்களும்	...	,,
சிப்பந்திகள் — அவர்கள் செய்யும் காரியங்களுக்கு ஜவாப்தாரி அல்ல	...	,,
கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர்கள் சக்தியும் பஞ்சாயத்து சிப்பந்திகள் சக்தியும்	...	,,
உத்யோகஸ்தர்களும் :; நிர்வாக உத்யோகஸ்தரும்	...	,,
சம்பளங்கள் :: கட்டணங்கள்	...	139
பி. 57 (2) நிர்வாக உத்யோகஸ்தர்கள் கமிஷனர்கள்	...	,,
	...	,,

குறிப்பு

விதிகள்—பி. 178
இன்ஸ்பெக்டர்—பி. 2 (15), பி. 144
பஞ்சாயத்து—பி 2 (20), பி. 8
பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்—பி. 11
நிர்வாக உத்தியோகஸ்தர்—பி. 2 (11), பி. 40
கமிஷனர்—பி. 2 (5), பி. 44
அவசரம்—பி. 45, பி. 148
நிர்வாக அதிகாரி—பி. 2 (10)

பிரிவுகள் 57 முதல் 62 வரையில் உள்ளவைகளைக் குறித்து

பொது.—பி. 58 படிக்கு அரசாங்கம் பஞ்சாயத்துகளுக்கும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் சிப்பந்திகளுக்கும் விதிகள் செய்யும். நிர்வாக உத்தியோகஸ்தர்களைக் குறித்து பிரிவு 40(6)ன் கீழும்—கமிஷனர்களை குறித்து பிரிவு 44 (3) ன் கீழும் விதிகளை செய்யும். அவைகளின் படிக்கு நிர்வாக உத்தியோகஸ்தர்களும், கமிஷனர்களும், பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும் நடந்து கொள்ள வேண்டும். பி. 58 யை பார்க்கவும். இந்தப் பிரிவு பஞ்சாயத்து உத்தியோகஸ்தர்களையும், சிப்பந்திகளையும் குறித்துத் தெரிவிக்கிறது. (பி. 144, பி. 145, பி. 146) மேற் பார்வையிடும் இன்ஸ்பெக்டர், ரீஜினல் இன்ஸ்பெக்டர், கலெக்டர், டிஸ்ட்ரிக்ட் பஞ்சாயத் ஆபீஸர் டிபுடி பஞ்சாயத் ஆபீஸர் முதலியவர்களைக் குறித்துத் தெரியப் படுத்துகிறது.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் சுமார் 358 இருக்கும் அவைகளுக்கு ரிகுலேஷன்கள் செய்ய அதிகாரம் கொடுத்தது பிசகு ஆக முடியும்

2, 3 பஞ்சாயத்துகளுக்கு ஒரே ஆபீசரை நியமித்து கொள்ளலாம் என்று அரசாங்கம் விதிகளை ஏற்படுத்தியிருக்கிறது. அதன் படிக்கு நடந்து கொள்ள வேண்டும். பி. 59 யை பார்க்கவும். ஆபீஸர்களையும். குமாஸ்தாக்களையும் யார் மாற்றுவது என்பதை குறித்து பி. 60-லும் அவர்களை யார் தண்டிக்கலாம் என்பதை குறித்து பி. 61 லும் யிருக்கிறது. பஞ்சாயத்துடையவும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுடையவும் உத்தியோகஸ்தர்கள் குமாஸ்தாக்கள் முதலியவர்களுடைய வேலை திட்டங்களை குறித்து பி. 58-ல் கண்டிருக்கிறது. 5 வருஷ காலமாக ரூபா 50-க்கு மேல் சம்பளம் வாங்கும் குமாஸ்தாக்களை குறைக்க அதை ஒரு தனிப்பட்ட மீடிங்கில் வைக்க வேண்டும். அப்போது பேர் பாதிக்கு மேல் உள்ள மெம்பர்கள் அதை ஒத்துக்கொள்ள வேண்டும். பி. 57 (3) யை பார்க்கவும் இவைகளுக்கு உட்பட்டு பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும் சிப்பந்திகளுடைய விஷயங்களை குறித்து யோசிக்கலாம் அவைகளை மீடிங்குகளில் அவைகளாகவே கொண்டு வந்து சிப்பந்தி விஷயங்களை தீர்மானங்கள் செய்யக்கூடாது. அவைகள் எக்ஸிகுடிவ் உத்தியோகஸ்தர் அல்லது கமிஷனர் மூலமாக கொண்டு வந்த பிறகுதான் பஞ்சாயத்துகளும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும் யோசிக்கலாம் [பி. 57 (2) யை பார்க்கவும்.]

பி. 57 (1) : இன்ஸ்பெக்டர் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் எத்தனை உத்தியோகஸ்தர் இருக்க வேண்டுமென்றும், அவர்களுடைய சம்பளம் முதலானவற்றையும் நிர்ணயிக்கலாம். பி. 57 (3) யை பார்க்கவும். பஞ்சாயத்தின் நிர்வாக உத்தியோகஸ்தர் பி. 40-ன்படி கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படுகிறார். அவருடைய சம்பளத்தைப் பஞ்சாயத்து நிதியிலிருந்து கொடுக்கப் பெறுகிறார். இன்ஸ்பெக்டரும், மீதி ஆபீஸர்களும் கவர்ன்மெண்டாரால் செ. 144 (1)-ன் கீழ் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களின் சம்பளத்தை மதராஸ் கவர்ன்மெண்டு கொடுக்கிறது. பஞ்சாயத்துச் சிப்பந்திகளின் சம்பளத்தை பஞ்சாயத்து நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது. [பி. 139 (2) (ii)] ஒரு பஞ்சாயத்து தானாகவே தன்னுடைய ஸ்தாபனத்தைக் குறைக்கவோ, அதிகரிக்கவோ முதலில் அதிகாரம் கிடையாது. அதைக் குறித்து நிர்வாக உத்தியோகஸ்தர்தான் முதலில் தெரிவிக்க வேண்டும். அதன்பேரில் பஞ்சாயத்து கவனிக்க நேரிடும். சாதாரணமாக ஒரு பஞ்சாயத்து தன் சிப்பந்திகளின் சம்பளத்தை நடந்துபோன காலத்திலிருந்து தள்ளிவைக்க அதிகாரமில்லை. [மாணிக்கம்-எ.-திருச்சினாப்பள்ளி முனிசிபாலிடி A. I. R. 1928 M. 321]. நிர்வாக உத்தியோகஸ்தர் ஸ்தாபன விஷயமாக சரிவர நடந்து கொள்ளாவிட்டால் பொது ஜனங்கள் இன்ஸ்பெக்டருக்குத் தெரியப்படுத்திக் கொள்ளலாம். இன்ஸ்பெக்டரும், அவர் கீழுள்ள உத்தியோகஸ்தர்களும் அப்போது அதை கவனிப்பார்கள்.

உத்தியோகஸ்தர்களும்; சிப்பந்திகளும்.—ஒருவன் தற்காலிகமாக அதாவது அந்த நேரத்திற்கு ஒரு உத்தியோகத்தில் ஏற்படுத்தப் பட்டிருந்தால் அவனை வேலையிலிருந்து நினைத்தபோது எடுத்து விடலாம். ஸ்தரமாக உள்ள உத்தியோகஸ்தரின் நடவடிக்கை கெட்டதாயிருந்தால்தான் அவனை நீக்கவேண்டும். [மானெக்ஜி-எ.-பம்பாய் முனிசிபல் கமிஷனர் 32 Bom. L. R. 463] உத்தியோகஸ்தர்கள் அவர்களுடைய வேலைகளுக்காக இருப்பதாக எண்ணக் கூடாது. அவர்கள் பொது ஜனங்களைப் பந்தப்படுத்துகிறபடியால் அவர்களுடைய நன்மைக்காகத்தான் உத்தியோகஸ்தர்கள் இருப்பதாக எண்ண வேண்டும். [வெங்கடாஜலம்-எ.-மதராஸ் கார்ப்பரேஷன் A. I. R. 1934 M. 70 (72)=

65 M. L. J. 860]. உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய ஸ்தானங்களில் வேலையைச் செய்யாமல் தூங்கிக் கொண்டிருக்கக் கூடாது அவர்கள் தாமதமாகச் செய்யும் வேலையை மன்னித்து விடுவார்கள் என்றும் எண்ணக் கூடாது; அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றத்தான் பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும், இருக்கிறார்களென்றுங் கருதக்கூடாது. நாளாகி விட்டதனாலும், அல்லது, சந்தர்ப்பங்கள் மாறி விட்டதனாலும், அவர்களின் நடவடிக்கை தப்பாக இருக்குங் காலத்தில் சரியானதென்று எண்ணக்கூடாது [தேவகாபாய்-எ-பாம்பே முனிசிபாலிடி (1904) 6 Bom. L. R. 1028] ஒரு முனிஸிபாலிடி உத்தியோகஸ்தரை அவதூறு செய்ததற்கு அந்த உத்தியோகஸ்தர் தாவா செய்துகொள்ள வேண்டுமே யொழிய, தலைவர் செய்தால் செல்லாது. [பீ கேம்ப் எ. மூர் 26 M. 43 = 13 M L. J. 413] ஆகையால், எப்போதாவது கீழ் சிப்பந்திகளை அவதூறு செய்தார்களானால், அவர்கள் மாஜிஸ்டிரேட்டிடம் தாமாகவே சென்று தெரிவிக்க வேண்டும்.

பழய 1884-ம் வருடத்திய 5-வது ஆக்ட்டில் லோகல் போர்டுகள் உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளும், இன்டியன் பீனல் கோட், பி. 21 படிக்கு "பொது ஜன ஊழியர்கள்" என்று சொல்லி இருந்தது. அந்த ஆக்ட்டை 1920-வது வருடத்திய 14-வது ஆக்ட்டினால் ரத்து செய்யப்பட்டது. அப்போது 1920-ம் ஆக்ட்டில் லோகல் போர்டுகள் உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளும் "பொதுஜன ஊழியர்கள்" என்று சொல்லப்படவில்லை. அதனால் ஒரு பஞ்சாயத்து போர்டின் சேனிடரி (ஆரோக்கிய) இன்ஸ்பெக்டர் "பொதுஜன ஊழியர்" அல்ல என்று தீர்மானிக்கப்பட்டது [சுப்ரமணியா-எ-பொன்னையா, A. I. R. 1939 Mad. 569 = 1939 M. W. N. 469 = 40 Cr. L. J. 822.]

பி. 57.— மதராஸ் டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடிகள் சிப்பந்திகளை இண்டியன் பினல் கோர்ட் பிரிவு 21 படிக்கு "பப்ளிக் சர்வென்ட் - பொது ஊழியர்" என்று சொல்லிய படிக்கு பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் சிப்பந்திகளையும் பொது ஊழியர் என்று மறுபடியும் சட்டத்தில் புகுத்தினால் சட்ட ரீதியாகவும், கண்யமாகவும் இருக்கும்.

பஞ்சாயத்து : பஞ்சாயத் யூனியன் கவுன்சில் : சிப்பந்திகளும் : கிராம முனிசீபு : கிராம கர்ணம் : ரிவின்யூ உத்தியோகஸ்தர்களும்— இதுவரையில் ரெவின்யூ தரப்பார் பஞ்சாயத்துகளையும், முனிசிபாலிடிகளையும், மாற்றான்தாய் பிள்ளைகளாக பார்த்து வந்தது. இப்போது சட்ட ரீதியாக ரிவின்யூ டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்கள் பஞ்சாயத்துகளுக்கும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும் கமிஷனர்களுக்கும் அவர்களுடைய உதவி வேண்டுமென்று கேட்ட பொழுது ரிவின்யூ தரப்பார் உதவி செய்து ஆகவேண்டும். கிராம கர்ணம் தன்னுடைய கடமையாக பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் சொத்துகளின்மேல்(ஆக்ரமிப்புகள்) தடங்கல்கள் ஏற்பட்டு இருந்தால், அவைகளை குறித்து நிர்வாக உத்தியோகஸ்தருக்கும், கமிஷனருக்கும் பிரிவு 82 (2) படிக்கு (ரிபோர்ட்டு செய்ய) தெரியப்படுத்தவேண்டும். மீதி விஷயங்களுக்கு பி. 82 (2)யை பார்க்கவும். பி 126 ன் கீழ் நிர்வாக அதிகாரியும், கமிஷனரும் ஐந்து வருஷங்களுக்கு ஒருமுறை வீட்டுவரி விதிப்பு ரிஜிஸ்டர் தயாரித்து கொடுக்க உத்தரவிடலாம். பி. 164 படிக்கு கிராம பெரியதனகாரரிடமிருந்தும், கர்ணத்தினிடமிருந்தும் நிர்வாக அதிகாரியும், கமிஷனரும் ரிவின்யூ கிராமத்தைபற்றியும், அதில் இருக்கிற யாதொரு நபர் அல்லது சொத்து விஷயமாக வேனும் தமக்கு தகவல் கொடுக்கும்படி கேட்கலாம். கால அளவுக்குள் கொடாவிட்டால் அதை அப்போதுக்கு அப்போது அந்த கால அளவை அதிகப்படுத்தலாம். பி. 178 (2) (XL - 40) படிக்கு பஞ்சாயத்துகள். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் சம்பந்தமாக கிராம உத்யோகஸ்தர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைப் பற்றி அரசாங்கம் விதிகளை செய்யலாம் கேரள (மலேயாள) ராஜ்யம் மசோதா பில் (L. A. No. 48 of 1958, தேதி 12-11-1958) கெஜட் எக்ஸ்ட்ரா ஆர்டினரி, வால்யூம் III, நெம்பர் 125 பக்கம் 70 "ஹேதுகள்—காரணங்கள்" படிக்கு, கிராம உத்யோகஸ்தர்கள் நடத்தும் கோர்ட்டு கேஸுகள் தவிர மீதி சகல விதமான காரியங்களையும் பஞ்சாயத்துகளுக்கு ஒப்படைக்கப்படும். ரிவின்யூ தரப்பின் நிலவரி வசூல் செய்வது, ரிவின்யூ ரிஜிஸ்டர்களை தயாரிப்பது, சமுதாய - அபிவிருத்தியின் - தேசீய விஸ்தரிப்பு சேவா திட்டத்தை நிறைவேற்றுவது முதலியவை கிராம பஞ்சாயத்துகளுக்கே அந்த மசோதாவின் பீடிகையின் படிக்கும், பகுதி 59 (2) படிக்கும் ஒப்பு விக்கப்படும். ஒரு கிராமத்தில் பஞ்சாயத்துதான் முக்கியமானதாக இருக்கவேண்டும். அதற்கு சம்பந்தம் இல்லாமலும், அதற்கு தெரியாமலும், கிராமத்தில் மற்ற யாதொரு காரியமும் செய்யக்கூடாது. கிராம உத்யோகஸ்தர்கள், பஞ்சாயத்தின் உத்யோகஸ்தர்களும்,

ஊழியர்களும் ஆவார்கள். பஞ்சாயத்து மூலம்தான் அரசாங்கத்துக்கு யாதொரு விஷயமும் தெரிவிக்கப்படும். இது சட்ட ரீதியில் எப்படி முடியுமென்று வாசகர்கள் கவனித்து வர வேண்டும்.

பஞ்சாயத்துகள் சிப்பந்திகளும் — போலீசும்.—தமிழ் நாட்டில் பஞ்சாயத்துகள் விஷயமென்றால் போலீசார் **தனிப்பட்ட** அக்கரை எடுத்து கொள்வதில்லை. ஏனோ தானோ என்று இருக்கிறார்கள். அதேமாதிரிதான் இப்போதும் கேரள ராஜ்யத்தில் இருக்கிறது. அதை சரிப்படுத்த கேரள ராஜ்யத்தில் ஷெ மசோதா பில்லின் பகுதி 119 யை கொண்டுவர யோசிக்கிறது. அதாவது "பி. 119 (1) ஒவ்வொரு போலீஸ் உத்தியோகஸ்தரின் கடமை யாதெனில் (a) தாமதம் செய்யாமல் உடனுக்குடனே பஞ்சாயத்து விஷயமாய் யாதொரு குற்றம் நடந்தால் அதை நிர்வாக அதிகாரிக்கும், தெரியப்படுத்த வேண்டும். (b) தலைவருக்கும், நிர்வாக அதிகாரிக்கும், அவர்கள் வேண்டியபொழுது உதவி செய்யவேண்டும். (2) யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தர் ஆவது தன் கடமையை செய்ய தவறினாலும், செய்யமாட்டேன் என்றாலும் அவர் தற்காலத்தில் உள்ள போலீஸ் சட்டத்தின்கீழ் குற்றம் செய்தவராக கருதப்படுவார்." தமிழ் நாட்டிலும் பஞ்சாயத்துகளுக்கு போலீசார் கட்டாயமாகவும், தங்கள் கடமையாகவும் உதவி செய்ய வேண்டுமென்று மதராஸ் அரசாங்கம் கூடிய சீக்கிரத்தில் சட்டத்தை ஏற்படுத்துமென்று எதிர்பார்க்கிறோம். இந்த போலீஸ் வேலையை (ஹெல்த்) ஆரோக்ய சானிடரி இன்ஸ்பெக்டருக்கு கொடுக்கலாமா என்பதை குறித்து யோசிக்கவும்.

சிப்பந்திகள்:—பஞ்சாயத்துக் கட்டடங்களில் இருப்பது—பஞ்சாயத்து வேலையின் சம்பந்தமாக பஞ்சாயத்துக் கட்டடங்களில் வாசம்செய்யும் பட்சத்தில் வேலை முடிந்ததும் அந்தக் கட்டடத்தைக் காலி செய்யவேண்டும். செய்யாவிட்டால் போலீசாரைக் கொண்டு வெளியேற்றலாம். அதற்காக சிவில் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டியதில்லை. அப்படியல்லாமல், ஒரு பஞ்சாயத்துக் கட்டடத்தில் குடக்கூலிக்கு சாதாரணமாக இருக்கும் பட்சத்தில் கிரமப்படி சிவில் கோர்ட்டுக்குப் போய்தான் அவரை வெளிப்படுத்த வேண்டும். [கல்கத்தா கார்ப்பொரேஷன்-எ-பெங்கால்-மாகாணம். 44 C. W. N. 1128.]

உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளும், — ரிகார்டுகளைத் திருடுவது — ஒரு ஆபீஸின் தலைவருடைய உத்திரவின்றி ஒரு குமஸ்தா இன்னொரு குமஸ்தாவிடமிருந்து ரிகார்ட் பெற்றுக்கொண்டு, எதிரிக் கட்சிக்காரனுக்குக் காண்பிக்கும் பட்சத்தில் அதைச் சட்டப்படி திருட்டுத்தனமாக எண்ணப்படும். [வல்லபராம் குறித்து A. I. R. 1926 Bom 122]

உத்தியோகஸ்தர்களும் சிப்பந்திகளும்:—பஞ்சாயத்துத் தொகையை அபகரித்தல் — தண்டனை.—அவர்கள் அப்படி அபகரித்தால் குற்றவாளியாவார்கள். அதற்குத் தண்டனையுண்டு. மேலும், அவர்களிடமிருந்து மூன்று வருஷத்திற்குள் சிவில் கோர்ட்டு மூலமாக மேற்படி தொகைகளை வசூலித்துக் கொள்ளலாம். உத்தியோகத்தில் வெகு காலமிருந்து இம்மாதிரி குற்றஞ் செய்தால் அவனுக்கு அதிக தண்டனை கொடுக்க வேண்டுமென்று தீர்மானமாகியிருக்கிறது, [அன்வருல்லா குறித்து A. I. R. 1934 All. 173 : : மன்சூராலி குறித்து A.I.R 1939 L. I]

உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளும் எலக்ஷன் (தேர்தல்) கூடிய வரையில் எலெக்ஷன் விஷயங்களில் உத்தியோகஸ்தர்கள் பிரவேசிக்கக் கூடாது. [போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட் 1936-ம் வருஷம் Part 1-A., பக்கம் 636. நெ, 1292 தேதி 17-11-1936]

உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளும்.— அவர்கள் செய்யும் காரியங்களுக்கு ஜவாப்தாரியா ?—அவர்கள் சட்டப்படி நடந்து கொண்டால் பஞ்சாயத்துத் தான் ஜவாப்தாரியாகும் அவர்கள் விரோதத்தினால் வேண்டுமென்று தப்புக் காரியங்களைச் செய்தால் அப்போது பஞ்சாயத்து ஜவாப்புதாரியாகாது. [காசி (பெனாரஸ்) முனிஸிபல் போர்டு-எ-பீஹாரி, A. I. R. 1926 A. 538 (541) = 48 A 560.]

கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளும், பஞ்சாயத்துகளின் உத்தியோகஸ்தர்களும் அவர்களுடைய சக்தியும், யோக்யதாம்சங்களும்.—மொத்தத்தில் முனிஸிபல், டிஸ்டிரிக்ட் போர்ட், பஞ்சாயத் உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளும் கவர்ன்மெண்டு வேலைக்காரர்களை விடக் குறைந்த திறமையுள்ளவர்களோ, அல்லது, புத்திசாலிகளோ அல்லா. சமயம் வாய்க்கும்போது இவர்களும் நன்றாகவே வேலை செய்து கொண்டு வருகிறார்

கள். எந்த இடத்தில் பணம் வாங்குவதற்கு அதிக சந்தர்ப்பங்கள் மாமூலாய் யிருக்கிறதோ, அந்த இடங்களில் தவிர மீதி இடங்களில் லஞ்சம் அடைவது மிகவும் குறைவாக உள்ளது. அது கீழ் கண்டவாறு இருக்கின்றன (1) இஞ்சினீரிங் (2) கலால், சுங்கவரி (3) ரெவின்யூ (4) போலீஸ் (5) காட்டு இலாகா (6) சுகாதாரம் (7) கோர்டுகள் முதலியன. எது வரையில் சம்பளங்களில் உயர்வும் தாழ்வும் அதிகமாக இருக்கிறதோ, எதுவரையில் கவர்ன்மெண்டு பொது உடைமை அடையாமல் இருக்கிறதோ, அதுவரையில் இந்த லஞ்சப் பிசாசு இருந்து கொண்டுதான் இருக்கும். உத்தியோகஸ்தர்களும் சிப்பந்திகளும் (Private Enterprise) என்றும் தனிப்பட்ட ஊக்கம் என்னும் சுயநலத்தைக் கருதி ஜனங்களுக்கு அவசியமான தின சரி வஸ்துக்கள் இல்லாமல்செய்யக்கூடாது,

உத்தியோகஸ்தர்களும் சிப்பந்திகளும், நிர்வாக உத்தியோகஸ்தரும்.—நிர்வாக உத்தி யோகஸ்தரை பி. 40 (1) படிக்கு கவர்ன்மெண்டார் நியமிக்கிறார்கள். அவருடைய சம்பளத் தைப் பஞ்சாயத்து கொடுக்கிறது. மேற்படி அபிப்ராயத்தை 6-ம் பதிப்பில் 260-ம் பக்கத்தில் வெளிப்படுத்தினோம் அது இந்த புதிய சட்டத்தின் படிக்கு நிறைவேற்றலாம் "ஆனால், எங் களது அபிப்பிராயத்தில் அவரை கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தராக எண்ணுவதல்லாமல் அவரை முனிஸிபல் கமிஷனராகவும், டிப்டி பஞ்சாயத்து ஆபிசராகவும், டிஸ்ட்ரிக்ட் பஞ்சாயத் ஆபீஸர் ஆகவும் ஏற்படுத்தவேண்டும்."

சம்பளங்கள் கட்டணங்கள் :—ஒரு குமாஸ்தாவுக்குச் சம்பளம் கொடுத்தாகிவிட்டது. ஆனால், அதற்குக் கவர்ன்மெண்டின் சாங்க்ஷன் (Sanction) வாங்கியிருக்க வேண்டும். ஆனால் முனிசிபல் கமிட்டியானது (பஞ்சாயத்து மாதிரி) சாங்க்ஷனுக்காக கமிஷனர் மூலம் கவர்ன்மெண்டிற்குக் கடிதம் அனுப்பித்தது. கமிஷனர் அந்தக் கடிதத்தை அனுப்பாமல் தானே நிறுத்திக் கொண்டார். பிறகு ஆடிட்டரானவர் சாங்க்ஷன் இல்லாமையால் குமாஸ் தாவுக்குச் சம்பளம் கொடுத்தது சரியல்லவென்று ஆக்ஷேபித்தார். கமிட்டியானது குமாஸ் தாவைத் தான் வாங்கிய சம்பளத்தைத் திருப்பிக் கொடுக்கும்படிக்குத் தாவா செய்தது. அதன் பேரில் கோர்ட்டார் சாங்க்ஷன் வாங்குவது கமிட்டியினுடைய காரியமென்றும் அதற்காகக் கவர்ன்மெண்டாருக்கு கமிஷனர் கமிட்டியின் கடிதம் அனுப்பாதது கமிட்டியினுடைய தப்பென்றும் அதனால் மேற்படி சம்பளத்தை திருப்பிக் கொடுக்கவேண்டியது இல்லை என்று கூறப்பட்டது [வாமன்-எ.-மூர்டிஸாபூர் முனிசிபாலிடி A. I. R. 1929 N. 213]. ஒரு பஞ்சா யத்தின் பிரசிடெண்டு ஒரு வாத்தியாரின் சம்பளத்தை வாங்கித் தானே வைத்துக்கொண்டு அந்த வாத்தியாருக்குக் கொடாவிட்டால் அந்த வாத்தியார் சம்பளத்தைப் பெற மூன்று வருஷங்களுக்குள் தாவா செய்யலாம். பி. 170-ப் படிக்கு ஆறு மாதகால தோஷத்தால் பாதிக்கப்படுமென்பது கிடையாது. ஏற்படுத்திய அளவுக்கு அதிகமாகச் சம்பளம் கொடுத் தால் மெம்பர்கள் அதைத் திருப்பிக் கொடுக்கும்படி நேரிடும். [வூல்விச் கார்ப்பரேஷன்-எ.- ராபர்ட்ஸ் 53 M. L. J. 147 (Editorial)]

பி. 57 (2) நிர்வாக உத்தியோகஸ்தர்கள் கமிஷனர்கள்.—(1)-வது உப-பிரிவில் கண்டுள்ள மொத்த பிரேரேபணைகள் இவர்கள் மூலமாக மீட்டிங்குகளுக்கு கொண்டுவந்தால் தான் தலைவர்கள் அங்கத்தினர்கள் யோசிக்கலாம். அப்படி ஒரு பட்டணம் பஞ்சாயத்தின் தலைவர் இந்த பிரிவின் கீழ் ஒரு தீர்மானத்தை நிர்வாக உத்தியோகஸ்தர் ஒத்துக்கொள்ளா விட்டால் அதைக் கொண்டு வரமுடியாது. அதை நிறைவேற்றினாலும் செல்லாது. அதே மாதிரி கமிஷனருடைய ஒப்புதலை இல்லாமல் ஒரு அக்கிராசனர் ஒரு தீர்மானம் கொண்டுவர முடியாது. கிராம பஞ்சாயத்துகளில் தலைவரே நிர்வாக உத்தியோகஸ்தர் வேலையை பார்க்கிறபடியால் சிப்பந்திகள் விஷயமாய் அவர் மீட்டிங்குகளுக்கு கொண்டுவரும் தீர்மானங் கள்தான் செல்லும்.

உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியர்களின் சேவை நிபந்தனைகள்

58. (1) நிர்வாக உத்யோகஸ்தர்களையும், கமிஷனர்களையும் தவிர பஞ்சாயத்துக் கள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள், உத்தியோகஸ்தர் கள், ஊழியர்கள் ஆகியவர்களை நியமிக்கக்கூடிய அதிகாரிகள் விஷயமாகவும், அத்தகைய உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் ஆகியவர்களை வகைப்படுத்துவது, வேலைக்கு எடுப்பது, அவர் களின் சம்பளமும், படிகளும், ஒழுங்கும், நடத்தையும், சேவை நிபந்தனைகள் ஆகியவை விஷயமாகவும் விதிகள்செய்ய அரசாங்கத்தாருக்கு அதிகாரம் உண்டு.

சிப்பந்தி (57 - 62)

அத்தகைய பஞ்சாயத்துக்களின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் நிர்வாக உத்யோகஸ்தர்கள், கமிஷனர்கள் ஆகியவர்கள் நீங்கலாக யாதொரு வகையைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களை அல்லது ஊழியர்களை ராஜ்ய முழுதுக்கும் அல்லது அதன் யாதொரு பாகத்துக்குத் தனிப்பட்ட சேவை வர்க்கமாக அமைப்பதற்கு அத்தகைய விதிகள் ஏற்பாடு செய்யலாம்.

(2) இந்த சட்டத்தின் ஷரத்துகளுக்கும், அரசாங்கத்தார் செய்யும் விதிகளுக்கும் உட்பட்டு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில், அதன் உத்தியோகஸ்தர், வேலைக்காரர்கள் ஆன சிப்பந்திகளின் சம்பந்தமாய்

(a) எம்மாதிரி ஜாமின் எவ்வளவு தொகைக்கு கொடுக்க வேண்டும் என்பது,

(b) கல்வி முதலிய யோக்கியதாம்சங்களை குறிப்பது,

(c) விடுமுறைகள், (லீவ்கள்) லீவ்களின் படிவர்த்தனை, பதிவு செய்வதற்கு படிவர்த்தனை பிரயாண படிவர்த்தனை குறித்து,

(d) பென்ஷன்கள், இனமாக கொடுக்கும் தொகைகளை குறித்து

(e) வருங்கால வைப்பு (ப்ராவிடென்ட் பண்ட்)களை ஏற்படுத்தி, காப்பாற்றுவது, அதற்கு உதவி தொகை (கண்ட்ரிபூஷன்)களை கட்டாயம் கட்டும்படி செய்வது,

(f) ஒழுக்கத்தை சரிபடுத்துவது இன்னும்

(g) மொத்தமாக பணியாத்துகளின் ஷரத்துகளை ஏற்படுத்துவதை குறித்தும்

ரெகுலேஷன் உபவிதிகள் செய்யலாம்

(i) ஆனால் ஒரு லீவு (நாள்களின்) தொகை, லீவின் வர்த்தனைகள், பிரயாண வர்த்தனைகள், பென்ஷன், ரெகுலேஷன்களால் இனமாக கொடுக்கப்படும். தொகைகள் எந்த சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தாரின் தனிப்பட்ட உத்தரவு இல்லாமல் அரசாங்கத்தாரால் அதே தரத்தில் இருக்கும் தங்களுடைய ஊழியர்களுக்கு கொடுக்கும் வர்த்தனைகளைக் காட்டிலும் அதிகமாக இருக்கக்கூடாது.

(ii) வர்த்தனைகள் கொடுப்பது, லீவு அதிகப்படியாக கொடுப்பது, உத்தியோகத்தில் வைத்துக் கொள்வது அல்லது வேலையிலிருந்து நீக்கிவிடுவது இவைகள் அரசாங்கத்தாருடைய ஊழியர்களுக்கு ஏற்படுத்தியுள்ள ஷரத்துகளைக் காட்டிலும் அதிக சலுகைகள் கொடுப்பதாக இருக்கக்கூடாது.

பிரிவு 58-ன் குறிப்புகளின் பட்டி

		பக்கம்
பி. 58 (1) ஒழுக்கமும், நடத்தையும்	...	140
சேவை நிபந்தனைகள்	...	,,
பஞ்சாயத்துகளின் உத்யோகஸ்தரின் தகுதிகள் இதில் 9 வித உத்யோகஸ்தர்களுக்கு இருக்க வேண்டிய படிப்பு முதலியன கண்டிருக்கிறது...	...	,,
உத்யோகஸ்தர்கள், ஊழியர்கள் ஆகியவர்களுடைய நடத்தை குறித்து, பட்டியும், 22 விதிகளும் அனுபந்தங்களும்	.	145—158
பி. 58 (2) (a) ரெகுலேஷன்களை பற்றியது	...	,,
பி. 58 (2) (b) விதிகள்	...	
பி. 58 (2) (c) ரஜாவர்தனை	..	
விடுமுறை நாட்கள் கொடுப்பது	...	,,
பி. 58 (2) (d) பென்ஷன்	...	159
பி. 58 (2) (e) (நன்கொடை பிராவிடெண்டு பண்டு) உத்யோகஸ்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் அளிப்பது பற்றி 17 விதிகள் 2 அனுபந்தங்கள் முதலியன	...	,,

குறிப்பு

பி, 58 (1) ஒழுக்கமும் நடத்தையும் — ஒரு குமாஸ்தாவின் பேரில் தப்பு சாத்திய போது அத்துடன் அதற்கு முந்தி மன்னித்துவிட்ட தப்புகளைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது. ஆனால், கடைசியில் முடிவிற்கு வரும்போது அவைகளையும் யோசிக்கலாம். [மதுரா தேவஸ்தானம்-எ-சுந்தரா A. I. R. 1926 M. 57] ஜாமீன் கொடுத்த நபர் அபகரித்தானென்று தன்னுடைய ஜாமீனை வாபீஸ் பெறவேண்டும். அப்படி பெற்றாலும், வாபீஸ் தேதிக்கு பிறகு செல்லுமே யொழிய, அதுவரையில் அபகரிக்கப்பட்ட தொகையை ஜாமீன்தாரர் கட்டித் தரவேண்டும்.

பி. 58 (1) சேவை நிபந்தனைகள்.—ஒரு ஸ்தல ஸ்தாபனமானது கவர்ன்மெண்டாரால் செய்யப்பட்ட விதிகள் பிரகாரம் நடந்துகொள்ள வேண்டும் [பாஸ்கர்-எ-நாஸிக் முனிஸிபாலிடி A. I. R. 1947 Bom. 78] ஒரு பஞ்சாயத்துக் குமாஸ்தா வரி வசூலிப்பதற்காக ஒருவர் ஜாமீன் கொடுத்திருக்கும் பொழுது அந்த குமாஸ்தா அப்பணத்தை அபகரித்து விடுவானாகில் அது ஜாமீன் தாரரைப் பாதிக்கும். பஞ்சாயத்து மேலதிகாரிகள் மேற்பார்வை யிடாமையால் அம்மாதிரி நடந்ததென்று ஜமீன்தாரர் வாதஞ்செய்தால் அது செல்லாது. [அஹ்யான் எ. வாகேமா முனிஸிபல் கமிட்டி A. I. R. 1938 R. 90] நிர்வாக உத்யோகஸ்தர் ஜாமீன் பெற வேண்டிய வேலைகளுக்கு ஜாமீன் பெறாமல் ஒருவனை நியமித்து, அதனால் நஷ்டம் வந்தால் அதை நிர்வாக உத்தியோகஸ்தர் கட்டிக் கொடுக்குமாறு நேரிடும், [மானேக்ஜீ எ. பாம்பே முனிஸிபாலிடி 32 Bom. L, R. 463 :: சுக்கூர் டிஸ்டிரிக்ட் லோகல் போர்டு-எ-நாவல்ராய் A. I. R. 1939 S 150] நிர்வாக அதிகாரி தன் கீழ்ப்பட்ட சிப்பந்திகளை நியமிக்கலாம், ஒரு உத்தியோக நியமனமானது நேராகவும், வெளிப்படையாகவும் இருக்கவேண்டுமேயொழிய சந்தர்ப்பத்தை யனுசரித்து நியமனம் என்று சொல்லக்கூடாது. [கள்ளிக்கோட்டை முனிஸிபாலிடி-எ-கேசவா A. I. R. 1925 M. 943] நிர்வாக உத்தியோகஸ்தர் விதிகள் படிக்குத்தான் நியமிக்கலாம். அவைகளுக்கு மாறாக இருக்கும் பக்ஷத்தில் அந்த நஷ்ட ஈட்டை அவரே கட்டிக் கொடுக்க நேரிடும், [யூவின்-எ-செக்ர டெரி ஆப் ஸ்டேட் A. I. R. 1940 L. 8]

பஞ்சாயத்துகளின் உத்தியோகஸ்தர்கள் ஊழியர்கள்—தகுதிகள்

		பக்கம்
i.	பரிவார உத்தியோகஸ்தர்கள், அட்டெண்டர்கள், பில் கலெக்டர்கள் ...	141
ii.	வைத்தியர் உத்தியோகஸ்தர்களும், கீழ் உத்தியோகஸ்தர்கள் ...	142
iii.	ஆயுர்வேத, யூனானி, சித்த வைத்திய, ஆஸ்பத்திரிகள் டிஸ்பென்சரிகளின் உத்தியோகஸ்தர்கள். ...	,,
iv.	ஷி கம்பவுண்டர்களும், நர்சிங் ஆர்டர்லிகளும் ...	143
v.	மற்றுமுள்ள கம்பவுண்டர்கள், பிரசவ மருத்துவ உதவியாட்கள் ...	,,
vi.	ஆரம்ப பாடசாலைகளில் நெசவு போதகாசிரியர்களும், நூற்பு வேலை போதகாசிரியர்களும் ...	144
vii.	ஆரம்ப பாடசாலை உபாத்தியாயர்கள். ...	,,
viii.	மிருக வைத்திய ஸர்ஜன்கள். ...	145
ix.	ஸர்வேயர்கள். ...	,,

பஞ்சாயத்துகளின் உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் இவர்களுடைய தகுதிகள்.

பி. 58 (1) விதிகள் (IV—விளம்பரம்—4 ; தேதி 2—4—1952)

I. பரிவார உத்தியோகங்கள் : அட்டெண்டர்கள், பில் கலெக்டர்கள்.

அடியிற்கண்ட அட்டவணையின். (2) பத்தியிலுள்ள பொருத்தமான பதிவில் கண்டுள்ள தகுதிகளை ஒருவர் பெற்றிருந்தாலன்றி அதன் (1) பத்தியில் குறிப்பிட்டிருப்பவையும் ஒரு பஞ்சாயத்துக்கு உட்பட்டிருப்பவையுமான பதவிகளில் எதற்கும் அவர் நியமிக்கப்படலாகாது :—

அட்டவணை—விவரம்—தொகுதிகள்.

(1) பரிவாரப் பதவிகள் :—சென்னைப் பல்கலைக் கழகத்தின் மெட்ரிகுலேஷன் பரீட்சை அல்லது அரசாங்கத்தினுடைய அதிகாரத்தின்படிக் கொடுக்கப்படுகிற பூர்த்தியான செகண்டரி ஸ்கூல் லீவிங் செர்டிபிகேட் அல்லது அதற்குச் சமமானதும் ;அனுபந்தத்தில் சொல்லப்பட்டுள்ள வேறு இந்தியப் பல்கலைக் கழகங்களுள் ஒன்றினால் நடத்தப்படுகிறதுமான பரீட்சை அல்லது கல்வி பற்றிய இந்திய ராணுவ விசேஷ செர்டிபிகேட்,

(2) அட்டெண்டர்கள் :—அங்கீகாரமான ஒரு செகண்டரி பாடசாலையில் மூன்ருவது பாரம் தேறியிருப்பது.

(3) பில் கலெக்டர்கள் :—அங்கீகாரமான ஒரு செகண்டரி பாடசாலையில் மூன்ருவது பாரம் தேறியிருப்பது.

அனுபந்தம்—இந்தியப் பல்கலைக் கழகங்கள்.

(1) அலகாபாத் (2) பம்பாய் (3) கல்கத்தா (4) டெல்லி (5) லக்ஷ்மணபுரி (6) நாக்பூர் (7) பாட்ன பல்கலைக் கழகங்கள்.

(8) அலிகார் (9) ஆந்திரம் (10) அண்ணுமலை (11) காசி ஹிந்து, (12) மைசூர் (13) ஊஸ்மானியா (14) உட்கல்.

II. வைத்திய உத்தியோகஸ்தர்களும் கீழ் உத்தியோகஸ்தர்களும்.

சந்தர்ப்பத்துக்கேற்ப அஸிஸ்டெண்ட் சர்ஜன், சப்-அஸிஸ்டெண்ட் சர்ஜன், நர்ஸ் அல்லது நர்ஸிங் ஆர்டர்லியாக அரசாங்க ஊழியத்தில் சேர்த்துக் கொள்ளப்படத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு பிரஸ்தாப காலத்தில் அமுலிலிருக்கிற தகுதிகளை ஒருவர் பெற்றிருந்தாலொழிய ஒரு பஞ்சாயத்தின் கீழ் (i) அஸிஸ்டெண்ட் சர்ஜனுக. (ii) சப்-அஸிஸ்டெண்ட் சர்ஜனுக, (iii) நர்சாக அல்லது (v) நர்ஸிங் ஆர்டர்லியாக அவர் நியமிக்கப்படலாகாது :

ஆனல், ஆயுர்வேத, யூனனி, சித்த அல்லது ஹோமியோபதி ஆஸ்பத்திரிகள் அல்லது டிஸ்பென்சரிகள் விஷயத்தில் நாட்டு மருத்துவ கௌரவ டைரெக்டரும், வேறு யாதொரு வைத்திய ஸ்தாபனத்தின் விஷயத்தில் வைத்திய ஊழிய வர்க்கங்களின் டைரெக்டரும், இவ் விதியின்படி அவ்வாறு நியமிக்கப்படுவதற்குத் தகுதி பெற்றிராத ஒருவரை நர்ஸிங் ஆர்டர்லியாக நியமிப்பதற்கு அனுமதி கொடுக்கலாம்; ஆனல் அவருடைய சம்பள வீதமானது, அரசாங்க ஊழியத்திலிருப்பவரும் தகுதி பெற்றிராதவருமான நர்ஸிங் ஆர்டர்லி ஒருவருக்குப் பிரஸ்தாப காலத்தில் கொடுக்கப்பட்டத்தக்க வீதத்துக்கு மேற்படலாகாது என்னும் நிபந்தனைக்கு உட்பட்டுத்தான் அவ்வாறு அனுமதி கொடுத்தல் வேண்டும் :

மேலும், பஞ்சாயத்துக்கள் நடத்திவரும் கிரமமான டிஸ்பென்சரிகளின் பொறுப்பு வகிப்பதற்கென்று நியமிக்கப்பட்ட கிராம வைத்தியர்கள் விஷயத்தில் அரசாங்கத்தாரால் விலக்களிக்கப்பட்டிருப்பவர்கள் விஷயத்தில் தவிர மற்றவர்கள் விஷயத்தில், வயது வரையறை 35 என்று நிச்சயிக்கப்படும் :

அன்றியும், பஞ்சாயத்துக்கள் நடத்திவரும் கிரமமான டிஸ்பென்சரிகளின் அல்லது ஆஸ்பத்திரிகளின் பொறுப்பு வகிக்கிற அஸிஸ்டெண்ட் சர்ஜன்களாகவும் சப்-அஸிஸ்டெண்ட் சர்ஜன்களாகவும் நியமிக்கப்படுவதற்கான அபேட்சகர்களின் விஷயத்தில் நிர்ணயிக்கப்பட்ட வயது வரையறையினின்றும் விலக்களிக்க அரசாங்கத்தார் அதிகாரம் உடையவர்களாவார்கள்.

III. ஆயுர்வேத யுனனி அல்லது சித்த ஆஸ்பத்திரிகள் அல்லது டிஸ்பென்ஸரிகளில் உள்ள வைத்திய உத்தியோகஸ்தர்கள்.

ஒருவர்—

(i) நாட்டு வைத்தியர்களைப் பதிவு செய்வதற்கான விதிகளைச் சேர்ந்த 2-வது விதியில் குறிப்பிட்டிருக்கிற "A" வகுப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி மற்றப்படியும்,

(ii) நியமன தேதியன்று, அவர் ஆணாயிருந்தால் 27 வயதும் அவர் பெண்ணாயிருந்தால் 30 வயதும் அடையாதவராயிருந்தாலன்றி மற்றப்படியும், அரசாங்கத்தார் பொதுவான அல்லது விசேஷ உத்தரவு மூலமாக அளிக்கும் அனுமதியின்றி, யாதொரு பஞ்சாயத்தின் பரிபாலன ஆதிக்கத்தின் கீழுள்ள ஓர் ஆயுர்வேத, யுனானி அல்லது சித்த ஆஸ்பத்திரியில் அல்லது டிஸ்பென்ஸரியில் வைத்திய உத்தியோகஸ்தராக நியமிக்கப்படலாகாது.

ஆனால்—

(1) ஷெட்யூல்டு ஜாதிகளைச் சேர்ந்த ஒரு ஆண் விஷயத்தில், வயது வரையறை 30 ஆகும்;

(2) ஒரு பஞ்சாயத்தின் கீழ் ஆயுர்வேத, யுனானி அல்லது சித்த மருத்துவ ரீதியில் நடத்தப்படுகிற ஒரு கிராம டிஸ்பென்ஸரியின் பொறுப்பு வகிப்பவரும் ஒரு பஞ்சாயத்தின் கீழ் அதே மருத்துவ ரீதியில் நடத்தப்படுகிற ஒரு கிரமமான டிஸ்பென்ஸரியில் ஒரு வைத்திய உத்தியோகஸ்தராக நியமிக்கப்படுபவருமான ஒரு வைத்தியரின் விஷயத்தில் வயது வரையறை, அரசாங்கத்தாரால் விலக்கு அளிக்கப் பெற்றுள்ளவர்கள் விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களில், 35 ஆகும்.

IV. கம்பவுண்டர்களும் பிரசவ மருத்துவ உதவியாட்களும்.

1. கம்பவுண்டராக அரசாங்க ஊழியத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குத் தெரிந்தெடுக்கப்படுவதற்காக பிரஸ்தாப காலத்தில் விதிக்கப்பட்டிருக்கிற—தகுதிகளை ஒருவர் பெற்றிருந்தாலன்றி, ஒரு பஞ்சாயத்தின் கீழ் கம்பவுண்டராக அவரை நியமிக்கலாகாது;

ஆனால், கிராம டிஸ்பென்ஸரிகளில் உள்ளவர்களும் பஞ்சாயத்துக்கள் நடத்துகிற கிரமமான லோகல் பண்டு டிஸ்பென்ஸரிகளுக்கு நியமிக்கப்படுபவர்களுமான கம்பவுண்டர்கள் விஷயத்தில் வயது வரையறை, அரசாங்கத்தாரால் விலக்கு அளிக்கப் பெற்றுள்ளவர்கள் விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களில், 45 என்று நிச்சயிக்கப்படும்.

2. கம்பவுண்டர்களாக செய்யப்படுகிற நியமனம்—

(i) கம்பவுண்டர்களாக நியமிக்கப்படுவதற்கு முற்றும் யோக்கியதாம்சம் உடையவர்களும் தகுதி வாய்ந்தவர்களுமான நர்ஸிங் ஆர்டெர்லிகளின் வகையிலிருந்து டிரான்ஸ்பர் பண்ணுவது மூலமாகச் செய்யப்பட வேண்டும்; அல்லது.

(ii) அத்தகைய நர்ஸிங் ஆர்டெர்லி எவரும் நியமனத்துக்குக் கிடைக்கா விட்டால், நேரடியாக தேர்ந்தெடுத்து நியமிப்பது மூலமாக செய்யப்பட வேண்டும்.

3. பிரசவ மருத்துவ உதவியாளராக அரசாங்க ஊழியத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தெரிந்தெடுக்கப்படுவதற்காக பிரஸ்தாப காலத்தில் விதிக்கப்பட்டிருக்கிற தகுதிகளை அவர் பெற்றிருந்தாலொழிய, அவர் அரசாங்கத்தார் பொதுவான அல்லது விசேஷ உத்தரவு மூலமாக அளிக்கும் அனுமதியின்றி, ஒரு பஞ்சாயத்தின் கீழ் பிரசவ மருத்துவ உதவியாளராக நியமிக்கப்படலாகாது.

விலக்கு:—ஒரு பஞ்சாயத்தின் கீழ் பிரசவ-சிசு-சம்ரட்சணை நிலையம் ஒன்றின் பொறுப்பு வகிப்பதற்காகவென்று நியமிக்கப்பட்ட பிரசவ மருத்துவ உதவியான ஒருவருக்கு இவ்விதியில் உள்ளது எதுவும் பிரயோகப்படமாட்டாது.

V. ஆயுர்வேத, சித்த அல்லது யுனானி ஆஸ்பத்திரிகளில் அல்லது டிஸ்பென்ஸரிகளில் உள்ள கம்பவுண்டர்களும் நர்ஸிங் ஆர்டெர்லிகளும்,

1. ஒருவர்—

(1) சந்தர்ப்பத்திற்கேற்ப ஆயுர்வேத, சித்த அல்லது யுனானி மருத்துவ முறையில் தகுதிபெற்ற கம்பவுண்டர் என்று கண்டு நாட்டு மருத்துவத்தில் அரசாங்கத் தேர்வுக் குழுவினரால் கொடுக்கப்பட்ட டிப்ளோமாவை வைத்திருந்தாலன்றி மற்றப்படியும்.

(2) அங்கீகாரமான ஒரு பாடசாலையின் III-ம் பாரத்தில், படிக்கிற ஒரு மாணவனிடம் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு இங்கிலீஷ் எழுதவும் படிக்கவும் கூடியவராயிருந்தாலன்றி மற்றப்படியும்.

ஒரு பஞ்சாயத்தின் பரிபாலன ஆதிக்கத்துக்குட்பட்ட ஓர் ஆயுர்வேத சித்த அல்லது யுனானி ஆஸ்பத்திரியில் அல்லது டிஸ்பென்ஸரியில் அவர் கம்பவுண்டராக நியமிக்கப்படலாகாது.

2. ஒருவர்—

(1) நாட்டு வைத்தியக் கல்லூரியின் பிரின்ஸிபாலினல் அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஆயுர்வேத, சித்த அல்லது யுனனி ஆஸ்பத்திரி அல்லது டிஸ்பென்ஸரியில் ஒரு வருஷத்திற்கு குறையாத கால அளவுக்கு சம்பளம் கொடுக்கப்பெற்ற அல்லது சம்பளம் கொடுக்கப்பெருத அப்ரென்டிஸாக பூர்த்தியாய் பயிற்சி பெற்றிருந்தாலன்றி மற்றபடியும்.

(2) அங்கீகாரமான ஒரு ப்ரைமரி பாடசாலையில் V-ம் வகுப்பில் தேதியிருந்தாலன்றி மற்றப்படியும்.

ஒரு பஞ்சாயத்தின் பரிபாலன ஆதிக்கத்துக்குட்பட்ட ஓர் ஆயுர்வேத, சித்த அல்லது யுனனி ஆஸ்பத்திரியில் அல்லது டிஸ்பென்ஸரியில் நர்ஸிங் ஆர்டர்லியாக அவர் நியமிக்கப்படலாகாது.

3. ஒருவர் கீழ்கண்டவாறு நியமனமாகும் தேதியன்று 30 வயது அடைந்திருந்தால், அவர் ஒரு பஞ்சாயத்தில் பரிபாலன ஆதிக்கத்துக்குட்பட்ட ஓர் ஆயுர்வேத, சித்த அல்லது யூனனி ஆஸ்பத்திரியிலாவது டிஸ்பென்ஸரியிலாவது கம்பவுண்டராகவோ நர்ஸிங் ஆர்டர்லியாகவோ நியமிக்கப்படலாகாது;

ஆனல், கிராம டிஸ்பென்ஸரிகளில் உள்ள கம்பவுண்டர்கள் நாட்டு மருத்துவ முறையில் நடத்தப்படுபவையும் பஞ்சாயத்துக்களால் வைத்து வரப்படுபவையுமான டிஸ்பென்ஸரிகளில் நியமிக்கப்பட்டால், அவர்கள் விஷயத்தில் வயது வரையறையானது அரசாங்கத்தாரால் விலக்கு அளிக்கப் பெற்றுள்ளவர்கள் விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களில் 35 என்று நிச்சயிக்கப்படும்.

VI. ஆரம்ப பாடசாலைகளில் அமர்த்திக் கொள்ளப்படுகிற நெசவு போதகாசிரியர்களும், நூற்பு வேலை போதகாசிரியர்களும்.

நெசவுத் தொழிலில் அரசாங்க டெக்னிகல் பரிட்சையிலே லோயர் கிரேடில் ஒருவர் தேறியிருந்தாலன்றி அல்லது நூற்புவேலை போதகாசிரியர் பாட திட்டத்திலே அரசாங்க நெசவு ஸ்தாபனத்தின் ஸெர்டிபிகேட்டை அவர் பெற்றிருந்தாலன்றி ஒரு பஞ்சாயத்தினல் நடத்தப்படுகிற ஓர் ஆரம்பப் பாடசாலையிலே நெசவு போதகாசிரியராகவோ நூற்பு வேலை போதகாசிரியராகவோ அவர் நியமிக்கப்படலாகாது.

ஆனல், தகுதிபெற்ற ஒரு அபேட்சகர் கிடைக்கிறவரையில், பாடசாலைகளின் டெப்புடி இன்ஸ்பெக்டருடன் கலந்தாலோசித்து, தகுதி பெருத ஒருவரை நியமிக்கலாம்.

VII. ஆரம்பப் பாடசாலைகளில் இருக்கிற உபாத்தியாயர்கள்.

1. (1), (2), (3) உபவிதிகளில் வேறுவிதமாக ஏற்பாடு செய்திருக்கிறபடி யன்றி மற்றப்படி, ஒரு பஞ்சாயத்தினல் நடத்தப்படுகிற ஓர் ஆரம்பப் பாடசாலையிலே, உபாத்தியாயர் பதவிக்கு நியமிக்கப்படுகிற ஒவ்வொருவரும் ஆரம்ப பாடசாலைகளுக்கு அங்கீகாரம் அளிப்பதற்கான விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகளைப் பெற்றிருக்கவேண்டும்.

ஆனல், லோயர் எலிமென்டரி கிரேடைச் சேர்ந்த பயிற்சி பெற்ற உபாத்தியாயர் ஸெர்டிபிகேட் ஒன்றைப் பெற்றிருக்கிற ஒருவர், சம்பந்தப்பட்ட ஜில்லா கல்வி அதிகாரியின் முன்சம்மதத்துடனன்றி மற்றபடி, ஆரம்பப் பாடசாலை எதிலும் நியமிக்கப்படலாகாது.

மேற்படி விலக்கு நிபந்தனையில் குறிப்பிட்டிருக்கிற தகுதிகளைக் காட்டிலும் உயர்ந்த தகுதிகள் பெற்றுள்ளவர் எவரும் பிரஸ்தாப பதவிக்கு நியமிக்கப்படுவதற்குக் கிடைக்கவில்லை என்று கண்டு சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர் கொடுக்கும் ஸெர்டிபிகேட் ஒன்றை, அந்த விலக்கு நிபந்தனையின்படி அளிக்கப்படுகிற சம்மதம் ஒவ்வொன்றுடனும் அனுப்பப்படவேண்டும்.

(2) (1) உப - விதியில் குறிப்பிட்டிருக்கிற தகுதிகளைப் பெற்றிராத ஒருவர், அதில் குறிப்பிட்டிருக்கிற எந்தப் பதவிக்கேனும், சம்பந்தப்பட்ட ஜில்லா கல்வி அதிகாரியின் முன் சம்மதத்துடன் நியமிக்கப்படலாம்.

(2) உப - விதியில் குறிப்பிட்டிருக்கிற தகுதிகளைப் பெற்றிருக்கிற எவரும் ப்ரஸ்தாப பதவிக்கு நியமிக்கப்படுவதற்குக் கிடைக்கவில்லையென்று சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர் கொடுக்கும் சர்டிபிகேட் ஒன்றை இந்த உப - விதியின்படி அளிக்கப்படுகிற சம்மதம்

ஒவ்வொன்றுடனும் அனுப்பப்படவேண்டும். அத்தகைய சம்மதம் ஒரு வருஷத்துக்குமேல் அமுலிலிருக்காது.

(3) உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பின்வருமாறு செய்வது அவசியமாயிருந்தால் விசேஷ சந்தர்ப்பங்களில், பயிற்சிபெருத ஒருவரை ஜில்லா கல்வி அதிகாரி சம்மதத்துடன் ஒரு சமயத்தில் ஒரு வருஷத்துக்கு மேற்படாத காலம்வரை ஆரம்பப் பாடசாலை யின் முன் ஒன்றில் உபாத்தியாயராக நியமிக்கலாம். ஆனல், III-வது பாரத்தில் தேறி யிருப்பதற்குக் குறையாத பொதுக் கல்வித்தகுதியை அவர் பெற்றிருக்கவேண்டியதுமல்லாமல் பாடசாலை இருக்கிற பிரதேசத்தைச் சேர்ந்தவராகவும் அவர் இருக்கவேண்டும்,

(4) 17 வயது அடைந்திராத எவரும், ஒரு பஞ்சாயத்தினுல் நடத்தப்படுகிற பாடசாலை ஒன்றில் உபாத்தியாயர் பதவிக்கு நியமிக்கப்பட தகுதியுள்ளவர் ஆகார்,

2. (1) பெண் ஒருவர் ஆண் பிள்ளைகள் பாடசாலையில் உபாத்தியாயினியாக நியமிக்கப் பெறுவதற்கோ மாற்றப் பெறுவதற்கோ தகுதியுள்ளவர் ஆவார்.

(2) ஆடவர் ஒருவர் –(a) 30 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தாலன்றி மற்றப்படி யும், (b) 1-வது விதியைச்சேர்ந்த (1) உபவிதியின்படி தகுதி பெற்றுள்ள ஓர் உபாத்தியாயினி நியமனத்துக்குக் கிடைக்காவிட்டாலன்றி மற்றப்படியும்.

ஒரு பெண் பாடசாலைக்கு உபாத்தியராக நியமிக்கப்படுவதற்கோ, மாற்றப்படு வதற்கோ தகுதியுள்ளவராகமாட்டார்,

3. இவ்விதிகளின் ஏற்பாடு செய்துள்ளபடியன்றி மற்றப்படி தகுதி பெருமல் நியமிக் கப்பட்ட உபாத்தியாயர் விஷயமாகப் பிடித்த யாதொரு செலவு, அந்த நியமனத்தைச் செய்கிற அதிகாரியின் பேரில் ஸர்சார்ஜாக விதிக்கப்படத்தக்கதாகும்.

4. பண்டிதர் அல்லது முன்சி, தேகப்பயிற்சி ஆசிரியர், தையல் போதகாசிரியர் அல் லது சித்திரம் வரையச்சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர் எவரும், அரசாங்கத்தாருடைய முற் சம்மதமில்லாமல், யாதொரு பஞ்சாயத்தினுல் நடத்தப்படுகிற ஓர் ஆரம்ப பாடசாலையில் அத் தகைய முறைமையில் பிரத்தியேகமாக நியமிக்கப்படலாகாது.

VIII. மிருகவைத்திய ஸர்ஜன்கள்.

ஒருவர்—(i) 32-வயது அடையாமலிருந்தாலன்றி மற்றப்படியும்.

(ii) வயதுக்குச் சம்பந்தப்பட்ட தகுதி நீங்கலாக, 'சென்னை மிருக வைத்திய கீழுத்தி யோக வர்க்கம்—வகுப்பு I-மிருகவைத்திய அமுலிலிருக்கிற வேறு தகுதிகளைப் பெற்றிருந்தா லன்றி மற்றபடியும்.

பிராணி வளர்ப்பு டைரெக்டருடன் கலந்து ஆலோசித்த பிறகன்றி மற்றப்படியும் ஒரு பஞ்சாயத்தின்கீழ் மிருக வைத்திய ஸர்ஜனுக அவர் நியமிக்கப்படலாகாது.

IX. ஸர்வேயர்கள்

ஒரு பஞ்சாயத்தினுல் ஸர்வேயராக நியமிக்கப்படுகிற ஒருவர், தமது பெரபேஷன் கால அளவுக்குள், கீழ்க்கண்ட அனுபந்தத்தில் குறிப்பிட்டிருக்கிற டெப்புடி ஸர்வேயர் பரீட்சையில் தேறவேண்டும்.

ஆனல், கிண்டி என்ஜினீரிங் காலேஜில் கொடுக்கப்படுகிற அப்பர் அல்லது லோயர் ஸபார்டினேட் செர்டிபிகேட் வைத்திருக்கிற ஒருவருக்கு இவ் விதியில் உள்ளதெதுவும் பிரயோ கப்படமாட்டாது. ஆயினும், அவர் மேற்படி டெப்யுடி சர்வேயர் பரீட்சையில் தேறுகிற வரை யில் ஒரு பஞ்சாயத்தின் கீழ் சர்வேயராக தமது உத்தியோகத்தில் ஊர்ஜிதம் செய்யப்படு வதற்கு அவர் தகுதியுள்ளவராகார்,

அனுபந்தம்

டெப்புடி ஸர்வேயர் பரீட்சை

1. கணக்கு—தசாம்ச பின்னங்கள், இருபடி மூலம் ஆகிய இவை வரையில்.
2. கையெழுத்தும், சொல்லி எழுதுவித்தலும்.
3. கிராமக் கர்ணங்களுக்கான நில சர்வே என்னும் தலைப்புள்ள புஸ்தகம் முழுவதும்.
4. சர்வே மானுயல், 1923—
5. போர்டாரின் நிலையுத்தரவு நெ. 34—A. B. C. III, IV, V, VI, VII, X, XI, XII, XV, XVI. அனுபந்தங்கள் நீங்கலாக.

விதிகள்

பஞ்சாயத்துகளின் உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் ஆகியவர்களுடைய நடத்தை

விளம்பரம்—3, தேதி 4—6—1951

(இதில் நிர்வாக உத்தியோகஸ்தர் - கமிஷனர்களை சேர்க்கப்படவில்லை)

1. பரிசு - நன்கொடை - வெகுமதி 147
2. சந்தா தொகைகள் 148
3. பணம் பெற்றுக்கொள்வது நிமித்தமாக ராஜிநாமா செய்வது ... ,,
4. பஞ்சாயத்துகளின் உத்தியோகஸ்தர்களும் கை பற்றில் வைத்திருக்கிற அல்லது அடைந்த ஸ்தாவர சொத்து விஷயமாய் மேல் விசாரணை செய்வது ... ... ,,
5. கம்பெனிகளை ஏற்படுத்துவதும் அவைகளை நிர்வகித்துவருவதும் ... 150
6. சொந்த வியாபாரம் அல்லது உத்தியோகம் ... ... ,,
7. கண்ட்ராக்டர்களுடன் பணம் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் நடத்துவது. 152
8. கடனிருக்க சக்தியில்லாமையும் (இன்சால்வென்சி) வாலாயமாய்க் கடனுளியா இருப்பது ... ... ,,
9. ஆபீஸ் தஸ்தாவேஜுகளையாவது தகவலையாவது மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவது ... ... ,,
10. பத்திரிகைகளுடன் தொடர்பு வைத்துக் கொள்வது ... ... ,,
11. தஸ்தாவேஜுகளை பிரசுரம் செய்வது விஷயமாகவும் பத்திரிகைகளுக்கு செய்திகள் அனுப்புவது விஷயமாகவும் விதிக்கப்படும் வரையறைகள். ,,
12. கமிட்டிகளுக்கு முன் சாட்சியம் கொடுப்பது 153
13. தேர்தல்களில் பங்கெடுத்துக் கொள்வது ... ... ,,
14. அரசியலில் பங்கெடுத்துக் கொள்வது ... ... ,,
15. உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் இவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் செய்யும் காரியங்களுக்காக அவர்கள் பொறுப்பாளியாவது. 154
16. பஞ்சாயத்து உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியர்கள் அந்த முறையில் தாங்கள் செய்த காரியங்களையும் தங்களது ஒழுக்கத்தையும் எடுத்துச்சொல்லி ஸ்தாபிப்பது ,,
17. சஸ்பென்ஷனில் இருக்கும்போது விலாசம் கொடுக்கவேண்டும் என்பது. ,,
18. (உத்தியோக சம்பந்தமான) தமது பற்றை அதிகப்படுத்தும்படி மேலதிகாரிகளை தூண்டுவது ... ... ,,
19. மேலதிகாரிகளுக்கு கடிதங்கள் எழுதுவது அல்லது அவர்களைப் பேட்டி காண்பது ... ... ,,
20. பஞ்சாயத்துகளின் உத்தியோகஸ்தர்களையும் ஊழியர்களையும் கவுரவிப்பதற்கான பொது நிகழ்ச்சிகள் 155
21. உத்தியோகஸ்தர் அல்லாத ஒருவர் அங்கத்தினர் இல்லாத ஒருவர் சங்கத்தில் இருந்தால் அதில் அங்கத்தினராய் இருக்கக்கூடாது ... ,,
22. அரசாங்கம் முதலியவற்றின் கொள்கை அல்லது நடவடிக்கையைப் பற்றி விவாதிப்பது 156

அனுபந்தம் A

ஸ்தாவர சொத்தை பற்றிய ஸ்டேட் மென்ட்

அனுபந்தம் B

ஸ்தாவர சொத்தில் யுள்ள பாத்யதை

விதிகள், செ. 58 (1) படிக்கு
பஞ்சாயத்துக்களின் உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் ஆகியவர்களுடைய நடத்தை சேவை நிபந்தனைகள். (III-3)

1. **பரிசு, நன்கொடை, வெகுமதி :—**(1) இந்த விதிகளில் வேறுவிதமாக நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றபடி, ஒரு பஞ்சாயத்தின் யாதொரு உத்தியோகஸ்தராவது, ஊழியராவது, நிர்வாக உத்தியோகஸ்தரின் முன் அனுமதியுடனன்றி மற்றப்படி, தமது உறவினராயிராத ஒருவரிடமிருந்து தமக்காகவோ, வேறு ஒருவரின் சார்பாகவோ, நேர்முகமாகவுஞ் சரி, மறைமுகமாகவுஞ் சரி, யாதொரு பரிசு, நன்கொடை அல்லது வெகுமதியை யாவது அல்லது பரிசு, நன்கொடை அல்லது வெகுமதி அளிப்பையாவது, ஏற்றுக்கொள்ளக் கூடாது ; அல்லது தமது குடும்பத்தினர் எவரையும் அவ்வாறு ஏற்றுக்கொள்ள அனுமதி அளிக்கக்கூடாது.

(2) அரசாங்கத்தாரால் பிறப்பிக்கப்படும் யாதொரு பொது அல்லது விசேஷ உத்தரவின் நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒரு பஞ்சாயத்தின் யாதொரு உத்தியோகஸ்தராவது, ஊழியராவது, எவரிடமிருந்தாகிலும் புஷ்பங்கள், பழங்கள், போன்ற சொற்ப மதிப்புள்ள வஸ்துக்களைப் பரிசாக ஏற்றுக்கொள்ளலாம் ; எனினும், ஒரு பஞ்சாயத்தின் சகல உத்தியோகஸ்தர்களும், ஊழியர்களும், இவ்வாறு பரிசுகள் கொடுப்பதைத் தடுக்க தங்களாலான முயற்சிகளையெல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

(3) அரசாங்கத்தாரால் பிறப்பிக்கப்படும் யாதொரு பொது, அல்லது விசேஷ உத்தரவின் நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒரு பஞ்சாயத்தின் யாதொரு உத்தியோகஸ்தராவது, ஊழியராவது, ஒரு விவாகத்தின் எல்லா சந்தர்ப்பங்களையும் அனுசரித்து நியாயமான மதிப்புடைய ஒரு விவாகப் பரிசை, நெருங்கிய நண்பராயிருக்கும் ஒருவரிடமிருந்து ஏற்றுக் கொள்ளலாம், அல்லது தமது குடும்பத்தினர் எவரையாவது அவ்வாறு ஏற்றுக்கொள்ள அனுமதிக்கலாம், ஒரு பஞ்சாயத்தின் சகல உத்தியோகஸ்தர்களும் ஊழியர்களும் இவ்வாறு பரிசுகள் கொடுப்பதைத் தடுக்க தங்களாலான முயற்சிகளையெல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டும் ; அவ்வாறு ஏற்றுக்கொண்டதையோ, ஏற்றுக்கொள்ள அனுமதியளித்ததையோ, நிர்வாக உத்தியோகஸ்தருக்குத் தெரியப்படுத்தவேண்டும் ; நிர்வாக உத்தியோகஸ்தர் அந்தப் பரிசைப் பரிசளித்தவருக்கே திருப்பிக் கொடுத்துவிடவேண்டுமென்றுகேட்டால் அதை அவ்வாறே அவரிடம் கொடுத்து விடவேண்டும்.

(4) ஒரு பஞ்சாயத்தின் யாதொரு உத்யோகஸ்தராவது, ஊழியராவது, ஒருவரிடமிருந்து கண்யமான மதிப்புள்ள ஒரு பரிசை, அதிகத் துன்பமளிக்காது, பெற மறுக்க முடியாமற் போனல், அவர் அதை ஏற்றுக்கொள்ளலாம் ; ஆனல், பஞ்சாயத்து வேறு விதமாகக் கட்டளையிட்டிருந்தாலொழிய, அப்பரிசை அந்தப் பஞ்சாயத்திடம் ஒப்புவித்துவிடவேண்டும்.

(5) அரசாங்கத்தாரால் பிறப்பிக்கப்பட்ட யாதொரு பொது, அல்லது விசேஷ உத்தரவின் நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒரு பஞ்சாயத்தின் மெடிகல் ஆபீஸராவது, கால்நடை வைத்திய உத்தியோகஸ்தராவது, அவருடைய வைத்திய சேவைக்காக யாதொரு நபரால் அல்லது சபையாரால் நல்லெண்ணத்துடன் கொடுக்கப்படும் எந்தப் பரிசு, நன்கொடை அல்லது வெகுமதியையாகிலும் ஏற்றுக்கொள்ளலாம்.

ஆனல், கால்நடை வைத்திய உத்தியோகஸ்தர் எவரும், தொத்து வியாதிகளைத் தடுக்க, பிராணிகளுக்கு இனகுலேஷன் செய்ததற்காக பரிசு, நன்கொடை, அல்லது வெகுமதி எதையும் ஏற்றுக்கொள்ளலாகாது.

(6) பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரும், பிறருக்குச் சொந்தமான வண்டிகள் அல்லது பிராணிகளை வாலாயமாக உபயோகிக்கக் கூடாது' அல்லது வாடகைக்கு ஓட்டப்படும் எந்த வண்டியிலும் இலவசமாகப் பிரயாணம் செய்யலாகாது.

2. சந்தா தொகைகள் :—ஒரு பஞ்சாயத்தின் யாதொரு உத்தியோகஸ்தராவது ஊழியராவது, எந்தப் பொதுஜன அல்லது உள்ளூர் காரியத்துக்காகவும் சந்தாத் தொகைகள் வசூலிப்பதில் எவ்விதமான பங்கும் எடுத்துக்கொள்ளக் கூடாது.

ஆனல், நிர்வாக உத்தியோகஸ்தரானவர்; ஆண் பிள்ளைகளுக்கான எலிமெண்டரி பாடசாலை ஆசிரியர்களின் விஷயத்தில் பாடசாலைகளின் ஸீனியர் டெப்புடி இன்ஸ்பெக்டரைக் கலந்தாலோசித்த பிறகு, பெண் பிள்ளைகளுக்கான எலிமெண்டரி பாடசாலை ஆசிரியர்களின் விஷயத்தில் பாடசாலைகளின் சப்-அஸிஸ்டண்ட் இன்ஸ்பெக்டரைக் கலந்தாலோசித்த பிறகும், அடியிற்கண்ட காரியங்களுக்காக சந்தாத் தொகைகள் வசூலிக்க ஆசிரியர்களுக்கு அனுமதி யளிக்கலாம் ; அவையாவன ;—

(i) மாணவர்களின் வகுப்புத் திறமை, பந்தய விளையாட்டுகள், பாடசாலை கேளிக்கைகள் இவற்றுக்கான பரிசுகள் உள்பட பள்ளிக்கூடத்தின் அல்லது பெற்ருேர் தினக் கொண்டாட்டங்கள் ;

(ii) உதவி பெறத் தகுந்த மாணவர்களுக்குப் பாடசாலை கட்டணங்கள், அல்லது புஸ்தகங்கள் அல்லது உணவு கொடுப்பதற்கான ஏழை மாணவர் நிதி ;

(iii) பாடசாலை உல்லாசப் பிரயாணங்கள் ;

(iv) கல்விப் பொருட் காட்சிகளும், பிரசாரமும்.

அத்தகைய வசூல்களுக்கும் அவற்றிலிருந்து செய்யப்பட்ட செலவுகளுக்கும் சம்பந்தப்பட்ட கணக்குகளைச் சரிவர வைத்து வருவதற்கு மேற்படி பாடசாலையின் தலைமை ஆசிரியர் அல்லது ஆசிரியை பொறுப்பாளியாவார்.

அத் தலைமை ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியை ஒவ்வொரு காரியத்துக்காகவும் வரவு செலவு ஸ்டேட்மெண்ட் ஒன்றைத் தனித்தனியே தயாரிக்கவேண்டும் ; அதை அவர் கொண்டாட்டம் முடிவுற்ற பிறகு அல்லது, இதர விஷயங்களில் கணக்குகள் பைசல் செய்யப்பட்ட பிறகு, ஒரு வாரத்துக்குள் நிர்வாக உத்தியோகஸ்தருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். இந்த கணக்குகளைப் பார்வையிடும் உத்தியோகஸ்தர்கள், பள்ளிக்கூடங்களுக்கு செல்லும் பொழுதோ, பார்வையிடும் பொழுதோ, பரிசீலனை செய்வதற்காக அவர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்யவும் வேண்டும். வசூலித்த தொகையில் மீதி ஏதேனுமிருந்தால், அதை போஸ்ட் ஆபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் டிபாஸிட் செய்துவைக்க வேண்டும்.

3. பணம் பெற்றுக்கொள்வது நிமித்தமாக ராஜினமா செய்வது :—ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர்களாவது, ஊழியர்களாவது, அவர்களில் ஒருவர் பஞ்சாயத்தில் வகிக்கும் யாதொரு வேலையை மற்றவர்களுடைய நன்மையை உத்தேசித்து ராஜினமா செய்வதற்காகப் பணம் சம்பந்தப்பட்ட எந்த ஏற்பாட்டையும் செய்துக்கொள்ளக்கூடாது இந்த விதி மீறப்படுமானல், அவ்வாறு ராஜினமா செய்ததன் பேரில் நேரிட்ட யாதொரு வேலை ரத்து செய்யப்பட வேண்டும் ; பின்னும், ஊழியத்திலிருந்து வருபவர்கள், அந்த ஏற்பாட்டில் சம்பந்தப்பட்டவர்களுமான கட்சிக்காரர்களை நிர்வாக உத்தியோகஸ்தர், உத்தரவுகள் பிறப்பிக்கும் வரை சஸ்பெண்ட் செய்து வைக்கப்படும்.

4. பஞ்சாயத்துக்களின் உத்தியோகஸ்தர்களும், ஊழியர்களும், கைப்பற்றில் வைத்திருக்கிற அல்லது அடைந்த ஸ்தாவர சொத்து விஷயமாய் மேல்விசாரணை செய்வது :— ஒரு பஞ்சாயத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் அல்லது, ஊழியர் ஒவ்வொருவரும் அல்லது, பஞ்சாயத்தில் சேவை செய்வதற்கான அபேட்சகர் ஒவ்வொருவரும், தம்மால் அல்லது தம் மனைவியால், அல்லது தம் குடும்பத்தைச் சேர்ந்தவராய் தம்முடனவது, வேறு எந்த விதத்திலாகிலும், தம்மைச் சார்ந்தாவது, வசிக்கிற ஒருவரால் அப்போதைக்கப்போது கைப்பற்றில் வைத்திருக்கப்படக்கூடிய அல்லது, அடையப்படக்கூடிய சகல ஸ்தாவர சொத்தையும் பற்றி நிர்வாக அதிகாரிக்கு உறுதிமொழி யொன்றை எழுதிக்கொடுக்க வேண்டும். அந்த உறுதிமொழியில், மேற்படி சொத்து இருக்கிற ஜில்லாவைக் குறிப்பிட்டிருக்க

வேண்டியதுமன்றி, பஞ்சாயத்து பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு பிறப்பித்து அதில் கேட்டிருக்கிற பிற்பட்ட தகவலைப் பற்றிக் கண்டிருக்கவும் வேண்டும்.

இந்த விதியானது சுபீரியர் சர்விஸென்ற உயர்தர ஊழிய வர்க்கத்திலுள்ள உத்தியோகஸ்தர், ஊழியர்கள் விஷயமாகவும், உயர்தர ஊழிய வர்க்கத்துக்கு நியமனம் செய்யப்படும் அபேட்சகர்கள் விஷயமாகவும். பிரயோகப்படும் இந்த உயர்தர ஊழிய வர்க்கமானது பஞ்சாயத்துக்கள் தங்கள் உத்தியோகஸ்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் க்ராட்யூயிடி என்னும் நன்கொடை கொடுப்பது விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்கான விதிகளில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பு :—(i) கைப்பற்றில் இருக்கிற அல்லது அடைந்திருக்கிற ஸ்தாவர சொத்து இந்தியாவில் எங்கிருந்தாலும் சரி அவை எல்லாவற்றையும் மேற்படி உறுதிமொழில் சேர்க்க வேண்டும், A அனுபந்தத்தில் கண்ட நமூனுவிலே குறிப்பிட்டுள்ள சகல விவரங்களையும் கூடுமானவரையில் அதில் கொடுக்கவேண்டும்.

(ii) ஒரு பஞ்சாயத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் ஒவ்வொருவரும் A அனுபந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள நமூனுப்படிக்கான ஸ்டேட்மெண்ட் ஒன்றை ஒவ்வொரு வருஷமும் ஜனவரி மாதம் 15-ம் தேதிக்குள்ளாக நிர்வாக அதிகாரிக்கு அனுப்பவேண்டும். அந்த ஸ்டேட்மெண்டில் இதற்கு முந்திய காலெண்டர் வருஷ முடிவில் எந்த ஸ்தாவர சொத்து விஷயமாய்த் தாம் சுவாதீனம் பெற்றிருந்தாரோ, அல்லது எந்த ஸ்தாவர சொத்தில் தமக்கு பற்று இருந்ததோ, அந்த ஸ்தாவர சொத்து எல்லாவற்றையும் பற்றிக் கண்டிருக்க வேண்டும். அந்த நமூனுவின் (6) முதல் (16) வரையிலுள்ள பத்திகளிலும், (19) முதல் (21) வரையிலுள்ள பத்திகளிலும் எந்த ஸ்தாவர சொத்தேனும் கைவிடப்பட்டிருந்தாலும், அல்லது மற்றபடி ஒரு வகை செய்யப்பட்டிருந்தாலும், அதைப் பற்றிய விவரங்களை எழுதவேண்டும்.

(iii) எந்த வருஷத்திலாவது, ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தரோ, ஊழியரோ ஸ்தாவர சொத்து எதையும் அல்லது ஸ்தாவர சொத்தின் எந்தப் பற்றையும் அடையவில்லை என்றாலும், கைவிடவில்லை என்றாலும், மற்றபடி ஒரு வகை செய்யவில்லை என்றாலும், அவர் A அனுபந்தத்தில் கண்ட நமூனுப்படிக்கான ரிட்டரன் ஒன்றை அனுப்புவதற்குப் பதிலாகக் கீழ்க்கண்ட நமூனுப்படிக்கான செர்டிபிகேட் ஒன்றை அனுப்பலாம்.

'அ. ஆ, என்னும் நான்.........தேதியன்று ரிட்டர்ன் ஸெர்டிபிகேட் அனுப்பியதற்குப் பிறகு எந்த ஸ்தாவர சொத்தையாவது; ஸ்தாவர சொத்தில் பிரயோசனகரமான, அல்லது இதர பற்றையாவது, என்னுடைய சொந்த பெயரிலாவது, வேறு யாதொரு நபருடைய பெயரிலாவது அடையவில்லை யென்றும், அல்லது சுவாதீனம் அடைந்திருக்கவில்லை யென்றும், அல்லது அதைக் கைவிடவில்லை யென்றும், அல்லது அதை மற்றபடி செய்யவில்லை யென்றும் மனப்பூர்வமாய் உறுதிமொழி கூறுகிறேன்.

(கையொப்பம்) அ. ஆ.

தேதி. ஆபீஸ் உத்தியோகப் பெயர்."

(iv) பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் பெயரில் அவருடைய சொந்த கணக்கிலாவது ஒரு டிரஸ்டி, எக்ஸிக்யூட்டர். அட்மினிஸ்ட்ரேட்டர், அல்லது கோயில் மிராசுதாரராகவாவது, அடையப்பட்ட அல்லது ரெஜிஸ்டர் செய்யப்பட்ட சகல ஸ்தாவர சொத்தையும், அல்லது அவருடைய மனைவியின் பெயரிலேனும் அவருடன் வசிப்பவராய் எந்த வகையிலாவது அவரை சார்ந்திருப்பவராய் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த வேறொருவர் பெயரிலேனும், அடையப்பட்ட அல்லது ரெஜிஸ்டர் செய்யப்பட்ட அல்லது அவருடைய கைப்பற்றில் வைத்துவரப்படுகிற அல்லது அவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிற சகல ஸ்தாவர சொத்தையும் வருஷாந்திர ரிட்டர்னில் சேர்க்க வேண்டும். ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் மருமக்கள்தாய்ச் சட்டத்தையோ, அலிய சந்தானத்தைக் குறித்த சட்டத்தையோ, பின்பற்றி வருபவராயிருந்தால், அவருடைய மனைவி வழியாக அடைந்த ஸ்தாவர சொத்தையும் அந்த ஸ்டேட்மெண்டில் சேர்க்க வேண்டும்.

(v) B அனுபந்தத்தில் கொடுத்துள்ள நமூனுப்படிக்கான ஸ்டேட்மென்ட் ஒன்றை உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் ஒவ்வொருவருடைய ஸெர்விஸ் புஸ்தகத்திலும் எழுதி

வைக்க வேண்டும். அந்த ஸ்டேட்மென்டு அவர் கைப்பற்றில் வைத்திருக்கிற ஸ்தாவர சொத்தை காட்டும். மேலே குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை யனுசரித்து இந்த ஸ்டேட்மென்ட் ஒவ்வொரு வருஷமும் மாற்றி அமைக்கப்படும். சம்பந்தப்பட்ட ஸெர்விஸ் புஸ்தகத்திலே வருஷாந்தரம் சரி பார்ப்பதற்குரிய—ஸெர்டிபிகேட்டை எழுதி வைக்கத் தகுதி வாய்ந்த உத்தியோகஸ்தர் அந்த ஸ்டேட்மென்டில் செய்யப்படுகிற பதிவு அல்லது மாற்றம் ஒவ்வொன்றுக்கும் கிரமமாக அத்தாட்சிக் கையெழுத்துப் போடவேண்டும்.

(vi) ஒரு பஞ்சாயத்தைச் சேர்ந்த வேலையில் நியமிக்கப்படுவதற்கான அபேட்சகர் ஒருவர் தமது விண்ணப்பத்துடன் A அனுபந்தத்தில் கொடுத்துள்ள நமூனுபடிக்கான ஸ்டேட்மென்ட் ஒன்றையும் சேர்த்தனுப்ப வேண்டும்.

(yii) தவறுதலான தகவல் கொடுக்க எத்தனித்தாலும் சரியான முழுத் தகவலைக் கொடுக்கத் தவறினுலும் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் வேலையிலிருந்து நீக்கிவிடப்படுவதற்கு உள்ளாவார்.

5. கம்பெனிகளை ஏற்படுத்துவதும் அவற்றை நிர்வகித்து வருவதும் (1) ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரும் யாதொரு கம்பெனி அல்லது மியூச்சுவல் பெனிபிட் ஸொஸைட்டியில் சம்பளம் பெறும் உத்தியோகம் எதையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது. அல்லது யாதொரு இன்ஷுரன்ஸ் கம்பெனி அல்லது ஸொஸைட்டியில் சம்பளம் பெற்றுக்கொண்டாவது ஒரு ஏஜென்டாகவாவது பிரவர்த்திக்கக் கூடாது.

(2) ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரேனும் நிர்வாக உத்தியோகஸ்தரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு மியூச்சுவல் பெனிபிட் ஸொஸைட்டி ஒன்றின் நிர்வாகத்தில் பங்கெடுத்துக் கொள்ளலாம். ஆனுல் அது சம்பந்தமாக ஊழியம் எதையும் பெற்றுக்கொள்ளக்கூடாது.

(3) ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தும் முயற்சியில் பங்கெடுத்துக்கொள்ளலாம். மேலும் அவர் நிர்வாக உத்தியோகஸ்தரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு யாதொரு கூட்டுறவுச் சங்கத்தில் பதவி வகிக்கலாம் அல்லது அதன் நிர்வாகத்துக்காக நியமிக்கப்பட்ட யாதொரு கமிட்டியில் சேவை செய்யலாம் அல்லது தாம் அதில் செய்த எந்த சேவைக்காகவாகிலும் அதனிடமிருந்து ஊதியம் பெற்றுக்கொள்ளலாம்.

(4) (2) அல்லது (3) உப விதியின்படிக்கான எந்த விஷயத்திலாவது அனுமதியளிப்பதற்கு முன் நிர்வாக உத்தியோகஸ்தரானவர் மேற்படி உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் மேற்கொள்ளும் அலுவலினுல் அவருடைய ஆபீஸ் வேலைக்குக் குந்தகம் ஏற்படாமல் அவர் அதைச் செய்வாரா என்பதைச் சந்தேகமறத் தெரிந்து கொள்ளவேண்டும்.

6. சொந்த வியாபாரம் அல்லது உத்தியோகம்.—(1) ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் ஒருவர் தமக்குரிய பொதுஜன அலுவல்கள் தவிர மற்றப்படி எந்த வியாபாரத்திலும் ஈடுபடவுங் கூடாது. யாதொரு உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளவுங் கூடாது.

ஆனுல், நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளைக் கமிஷன் அடிப்படையில் விற்பனை செய்வதற்காக அதிகாரம் பெற்ற ஏஜென்டுகளாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் விஷயத்தில் இந்த உபவிதி பிரயோகப்படாது.

(2) ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் ஒருவர் சமுதாய சம்பந்தமான அல்லது தரும சம்பந்தமான கவுரவ வேலையையேனும் இலக்கியம் சம்பந்தமான அல்லது சித்திரப்பாடு நிறைந்த வேலையையேனும் மேற்கொள்ளலாம்; ஆனுல், அப்படி மேற்கொள்வதால் அவருடைய ஆபீஸ் அலுவல்களுக்குக் குந்தகம் ஏற்படக் கூடாது. ஆனுல் பஞ்சாயத்து விரும்பதக்க தல்லவென்று கருதுகிற எந்த வேலையையேனும் அவர் எப்போதேனும் மேற்கொள்ளாமல் தடுக்கலாம். அல்லது அந்த வேலையை விட்டு விடும்படி அவருக்கு உத்தரவு பிறப்பிக்கலாம்.

(3) நிர்வாக அதிகாரியானவர் சிறுவர்களுக்குரிய எலிமென்டரி பாடசாலைகளில் வேலைக்கமர்த்திக் கொள்ளப்பட்டுள்ள ஆசிரியர்களின் விஷயத்தில் பாடசாலைகளின் சீனியர் டெப்புடி இன்ஸ்பெக்டரைக் கலந்தாலோசித்தும், பெண்களுக்குரிய எலிமென்டரி பாடசாலை

களின் வேலைக்கமர்த்திக் கொள்ளப்பட்டுள்ள ஆசிரியைகளின் விஷயத்தில் பாடசாலைகளின் ஸப்-அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டரைக் கலந்தாலோசித்தும் ஆசிரியர்கள் அடியிற்கண்ட வேலை பாபத்துக்களை மேற்கொள்ள அவர்களுக்கு அனுமதி கொடுக்கலாம்; அவையாவன :—

(i) மாணவர்களுக்கு ப்ரைவேட் டியூஷன் சொல்லிக் கொடுப்பது ;

(ii) கல்வி சம்பந்தமான பிரச்னைக்களை குறித்து ரேடியோவில் சொற்பொழி வாற்றுவது ;

(iii) வகுப்பு வேலைக்கான அல்லது விசேஷ சந்தர்ப்பங்களில் நூல் நிலையங் களில் உபயோகிக்கப்படுவதற்குரிய பாட புஸ்தகங்களை அடியிற்கண்ட திட்டங்களுக்குட்பட்டு எழுதுவது ; அவையாவன :—

(a) ஆசிரியர் இந்த ராஜ்யத்திலே அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாடசாலையில் உப யோகிக்கப்படுவதற்காகத் தம்மால் எழுதப்பட்ட எந்தப் பாட புஸ்தகத்துக்காவது, பிரசுர உரிமையோ அப் புஸ்தகத்தின் பிரதிகளை விற்பனை செய்வதில் பற்றோ வைத்துக்கொள்ளக் கூடாது. பிரசுர நிலையத்தாரிடமிருந்தாவது, வேறு யாதொரு கட்சிக்காரரிடமிருந்தாவது, மொத்தமாயுள்ள குறித்த ஒரு தொகையை மட்டுமே அவர் ஏற்றுக்கொள்ளலாம்.

(b) பாட புஸ்தகக் கமிட்டியில் அங்கத்தினராயுள்ள ஆசிரியர் எவரும் தாம் அந்தக் கமிட்டியில் அங்கத்தினராய் இருக்குங் காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாடசாலையில் உப யோகிக்கப்படுவதற்காகப் பாடபுஸ்தகங்கள் எவற்றையும் எழுதவோ, சீர்படுத்தி பிரசுரம் செய் யவோ கூடாது.

விவரணம். —அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை என்பது, அரசாங்கத்தாரால் வைத்துவரப் படுகிற அல்லது அரசாங்கத்தாரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு பாடசாலையென்ருவது, அல்லது எந்தப் பாடசாலைக்குச் சென்னைக்கல்வி விதிகளின் பிரகார மாவது, ஆரம்பக் கல்வியைக்குறித்த 1920-ம் வருஷத்திய சென்னபட்டணத்துச் சட்டத்தின் படிச்செய்யப்பட்ட விதிகளின் பிரகாரமாவது அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதோ அந்தப் பாடசாலையென்ருவது பொருள்படும்.

(iv) சர்க்கார் பரீட்சைகளில் பரீட்சகராயிருப்பது.

(v) கொஞ்சநேரம் வேலைபார்க்கும் போஸ்ட் மாஸ்டராகவோ, ஒரு பஞ்சாயத்தில் கொஞ்சநேரம் வேலை பார்க்கும் குமாஸ்தாவாகவோ, சேவைசெய்து வருவது ; ஆனல், ஆசிரிய ரெவரும் கொஞ்சநேரம் வேலைபார்க்கும் போட்ஸ் மாஸ்டர் பதவியையோ, ஒரு பஞ்சாயத்தில் கொஞ்சநேரம் வேலை பார்க்கும் குமாஸ்தா பதவியையோ, ஒரு சமயத்தில் வகித்துவர அனு மதிக்கப்படமாட்டார்.

(4) (a) கல்வி சம்பந்சமான பிரச்னைகளைக் குறித்து ரேடியோவில் சொற்பொழி வாற்றுவது விஷயமாக (3) உபவிதியில் வேறே விதமாய் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றபடி, ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரும் இன்ஸ்பெக்டரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல் ஒலி பரப்பு நிலையத்திலே எந்த விஷயத்தைப் பற்றியாகிலும் ரேடியோவில் சொற்பொழிவாற்றக்கூடாது. இன்ஸ்பெக்டர் அடியிற்கண்டபடி செய்வது விரும்பத்தக்கதென்று கருதினல் அப்படிப்பட்டயாதொரு விஷயத்தில் அரசாங்கத் தாரின் உத்தரவு கோருவதற்காக அவர்களுடைய ஆலோசனைக்கு அதைக் கொண்டுவரலாம்.

(b) ஒரு பஞ்சாயத்தின் எந்த உத்தியோகஸ்தர், அல்லது ஊழியர் ரேடியோ வில் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டிருக்கிருரோ, அல்லது சொற்பொழிவாற்ற விரும்பு கிருரோ, அவர் தாம் எந்த விஷயத்தைப்பற்றி சொற்பொழிவாற்ற உத்தேசித்திருக்கிருரோ, அந்த விஷயத்தைத் தகுதிவாய்ந்த அதிகாரி மூலமாய் இன்ஸ்பெக்டருக்குத் தெரிவிக்கவேண்டும்; அவ்விஷயமானது தமது ஆபீஸ் அலுவல்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப் பட்டதாயிருந்தால் அல்லது அவ்வாறு சம்பந்தப்படும்படி சொற்பொழிவாற்றவேண்டு மென்று உத்தரவிடப்பெற்றிருந்தால் அச் சொற்பொழிவு முழுவதையும் சொற்பொழிவாற்றப் படு வதற்குமுன், இன்ஸ்பெக்டருக்கு அவருடைய அங்கீகாரத்துக்காக அனுப்பவேண்டும்.

(c) ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர், அல்லது ஊழியர் (பழக்கமான சங்கீதக் கருவிகளை இசைப்பது அல்லது கிராமபோன் ரிகார்டுகளைப் போடுவது உள்ளிட்ட) இன்னிசை நிகழ்ச்சிகளையோ, இதர நிகழ்ச்சிகளையோ, ஒலிபரப்புவது சம்பந்தமாக (a), (b) பகுதிகளில் கண்ட நிபந்தனையானது தகுந்த மாறுதல்களுடன் பிரயோகப்படும்.

7. கான்ட்ராக்டர்களுடன் பணம் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் வைத்து கொள்வது:— பஞ்சாயத்துக்களின் சகல உத்தியோகஸ்தர்களும் ஊழியர்களும் பஞ்சாயத்து கான்ட்ராக்டர்களுடனாவது பஞ்சாயத்துகளின் கீழுள்ள எந்த இலாகாவுக்கேனும் எவ்வகையிலாவது சம்பந்தப்பட்ட வேறு எவருடனாவது, பணம் சம்பந்தப்பட்ட எந்த விவகாரங்களையும் வைத்துக்கொள்ளக்கூடாதென்று தடுக்கப்படுகிறார்கள்.

8. கடனிறுக்க சக்தியில்லாமையும் (இன்ஸால்வென்ஸி வாலாயமாய்க் கடனாளியாயிருப்பதும்.— ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர்களுக்கும் அல்லது ஊழியர் ஒருவர் வாலாயமாக கடனாளியாயிருப்பதைத் தவிர்க்கவேண்டும். அவர்கடனிறுக்கச் சக்தியற்றவரென்று தீர்மானிக்கப்பட்டாலும் பிரசித்தம் செய்யப்பட்டாலும் அல்லது அவர் சாதாரண சந்தர்ப்பங்களில் இரண்டு வருஷ காலத்துக்குள் திருப்பிச் செலுத்த முடியாத ஒரு தொகையைக் கடனாகப் பெற்றிருந்தாலும்அல்லது அவருடைய சம்பளத்தின் ஒரு பாகம் அடிக்கடி கடனுக்காக ஜப்தி செய்யப்பட்டாலும். இரண்டு வருஷ காலத்துக்குத் தொடர்ச்சியாக அவ்வாறு ஜப்தி செய்யப்பட்டிருந்தாலும் அல்லது அவர் சாதாரண சந்தர்ப்பங்களில் இரண்டு வருஷ காலத்துக்குள் திருப்பிச் செலுத்த முடியாத ஒரு தொகைக்காக அவருடைய சம்பளத்தின் ஒரு பாகம் ஜப்தி செய்யப்பட்டாலும், அவர் இவ்விதியை மீறியிருப்பதாகக் கருதப்படலாம்; ஆனால் அவ்வாறு கடனிறுக்கச் சக்தியில்லாமற் போனதோ, கடனாளியாய் ஆனதோ, சாதாரண ஜாக்கிரதையுடன் அவர் எதிர்பார்த்திருக்க முடியாத சந்தர்ப்பங்களின் விளைவே என்றாவது அச்சந்தர்ப்பங்களைத்தடுக்க தம்மால் முடியவில்லையென்றாவது, எண்பிப்பதோடு ஊதாரித்தனம் அல்லது, கெட்ட நடத்தைகளில் ஈடுபடவில்லை என்றும் எண்பித்தால் அவர் இவ்விதியை மீறியிருப்பதாகக் கருதப்படமாட்டார். ஒரு பஞ்சாயத்தின் எந்த உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் கடனிறுக்கச் சக்தியற்றவரென்று விண்ணப்பம் செய்துகொள்ளுகிறாரோ அல்லது அவ்வாறு தீர்மானிக்கப்படுகிறாரோ, அல்லது பிரசித்தம் செய்யப்படுகிறாரோ, அவர் தாம் வேலையிலமர்ந்துள்ள ஆபீஸ் அல்லது இலாகாவின் தலைமையதிகாரிக்கு தமது கடனிறுக்கச் சக்தியில்லாமையைக் குறித்து உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

9. ஆபீஸ் தஸ்தாவேஜுகளையாவது தகவலையாவது மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவது.— ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரும் தாம் ஆபீஸ் அலுவல்களைச் செய்துக்கொண்டிருக்கையில் தம்மிடம் வந்து சேர்ந்த அல்லது தாம் அவ்வலுவல்களைச் செய்து கொண்டிருக்கையில், ஆபீஸ் ஆதாரங்கள் மூலமாகவேனும், மற்றப்படியேனும், தம்மால் தயாரிக்கப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட தஸ்தாவேஜு அல்லது தகவல் எதையும் அப்பஞ்சாயத்தின் வேறு யாதொரு உத்தியோகஸ்தர், அல்லது ஊழியருக்கோ, வேறு யாதொரு பிரதேச அதிகார சபையைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் அல்லது ஊழியருக்கோ,அத்தகவல் அல்லது தஸ்தாவேஜைபெற அதிகாரம் கொடுக்கப் பெற்றிராத அரசாங்க ஊழியருக்கோ, உத்தியோக சம்பந்தமற்ற ஒருவருக்கோ, பத்திரிகைகளுக்கோ நேரடியாகவேனும் மறைமுகமாகவேனும் தெரியப்படுத்தக்கூடாது; ஆனால், மேற்படி பஞ்சாயத்து இது விஷயமாய்ப் பொதுவாகவோ, பிரத்தியேகமாகவோ, அதிகாரம் கொடுத்திருந்தால் அதை அவ்வாறு தெரியப்படுத்தலாம்.

10. பத்திரிகைகளுடன் தொடர்பு வைத்துக்கொள்வது.— ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் யாதொரு செய்தித்தாள் அல்லது குறித்த காலத்துக்கொரு முறை வெளியாகும் சஞ்சிகையின் முழு முதலாளியாகவோ ஒரு பாகம் மட்டிலும் முதலாளியாகவோ அதன் ஆசிரியராய் இருந்து அதை நடத்தவோ, அல்லது அதன் நிர்வாகத்தில் பங்கெடுத்துக்கொள்ளவோ கூடாது.

11. தஸ்தாவேஜுகளைப் பிரசுரம் செய்வது விஷயமாகவும், பத்திரிகைகளுக்குச் செய்திகளனுப்புவது விஷயமாகவும் விதிக்கப்படும் வரையறைகள்.—(1) ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரும் தமது சொந்த பெயரில் பிரசுரிக்கப்பட்ட எந்த தஸ்தாவேஜிலும் அல்லது தமது சொந்த பெயரில் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்ட எந்தச் செய்தியிலும், அல்லது தாம் பகிரங்கமாக ஆற்றிய எந்தச் சொற்பொழிவிலும்—

(a) ஒரு பஞ்சாயத்துக்கும் அல்லது இதர பிரதேசஅதிகார சபைக்கும் அரசாங்கத்தாருக்குமுள்ள தொடர்பைப்பற்றியாவது.

(b) மத்திய அரசாங்கத்தாருக்கும், அல்லது யாதொரு ராஜ்ய அரசாங்கத்தாருக்கும் இந்திய மக்களுக்கும், அல்லது அவர்களின் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களுக்குமுள்ள தொடர்பைப் பற்றியாவது,

(c) யூனியனுக்கும் யாதொரு அந்நிய ராஜ்யத்துக்குமுள்ள தொடர்பைப்பற்றியாவது, சிக்கலுண்டாக்கத்தக்க உண்மை பற்றிய ஸ்டேட்மெண்ட் அல்லது அபிப்பிராயம் எதையும் வெளியிடக்கூடாது;

(2) ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர், அல்லது ஊழியர் தமது சொந்த பெயரில் பிரசுரிக்க விரும்புகிற தஸ்தாவேஜில் அல்லது தமது சொந்த பெயரில் பத்திரிகைகளுக்கு அனுப்ப விரும்புகிற செய்தியில் அல்லது பகிரங்கமாகத் தாம் ஆற்ற விரும்புகிற சொற்பொழிவில் கண்ட எந்த ஸ்டேட்மெண்டுகளைக் குறித்து (1) உப விதியினுல் விதிக்கப்பட்டுள்ள வரையறைகளின் பிரயோகம் விஷயமாக அவருக்கு சந்தேகம் எதுவேனும் தோன்றினுல், தாம் பிரசுரிக்க விரும்பிகிற தஸ்தாவேஜியின் அல்லது தாம் அனுப்ப விரும்புகிற செய்தியின் அல்லது தாம் ஆற்ற விரும்புகிற சொற்பொழிவின் நகல், அல்லது மசோதா ஒன்றை இன்ஸ்பெக்டருக்கு அனுப்ப வேண்டும். இன்ஸ்பெக்டரின் அனுமதியில்லாமலும், அவர் கட்டளையிடக்கூடியபடி அதில் எவையேனும் மாறுதல்கள் செய்திருந்தால் அந்த மாறுதல்களைச் சேர்க்காமலும், அந்த தஸ்தாவேஜைப் பிரசுரிக்கவும் கூடாது. செய்தியை அனுப்பவும் கூடாது. சொற்பொழிவாற்றவும் கூடாது.

12. கமிட்டிகளுக்குமுன் சாட்சியம் கொடுப்பது :—ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர், அல்லது ஊழியர் நிர்வாக உத்தியோகஸ்தரின் அனுமதியை முதலில் பெற்றுக்கொண்டிருந்தாலன்றி மற்றப்படி பொதுக் கமிட்டி ஒன்றின் முன் சாட்சியம் கொடுக்கக் கூடாது. அவ்வாறு சாட்சியம் கொடுக்கும்போது பஞ்சாயத்தினுடைய அல்லது இந்த ராஜ்ய அல்லது மத்திய அரசாங்கத்தாருடைய கொள்கையையோ, முடிவுகளையோ அவர் கண்டிக்கலாகாது.

இந்த விதி கட்டாயம் ஆஜராகவேண்டுமென்று உத்தரவிட அதிகாரம் வாய்ந்த சட்ட பூர்வமான கமிட்டிகளுக்குமுன் சாட்சியம் கொடுப்பது விஷயமாகவும், நீதி சம்பந்தமான விசாரணைகளில் பதில்கள் சொல்லுவது விஷயமாகவும், அல்லது சாட்சியம் கொடுப்பது விஷயமாகவும் பிரயோகப்படாது.

13. தேர்தல்களில் பங்கெடுத்துக்கொள்வது:—ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர், அல்லது ஊழியர் ஒருவர் யாதொரு சட்ட நிருபண சபைக்காவது, பிரதேச அதிகார சபைக்காவது, நடக்கும் எந்தத் தேர்தலுக்கும் அபேட்சகராய் நிற்கவோ, அதில் தலையிட்டுக் கொள்ளவோ, வேறெந்த வகையிலாயினும் தமது செல்வாக்கை உபயோகிக்கவோ, யாதொரு அபேட்சகருக்கு உதவி புரிய அல்லது அவருக்கு தடை யுண்டாக்க எதையாகிலும் செய்யவோ கூடாது. மேலும் அவர், தேர்தல் பிரசாரம் செய்யும் எந்தக் கட்சி ஸ்தாபனத்திலும் பங்கெடுத்துக்கொள்ளவோ, அதற்கு உதவியாக சகாயத் தொகை கொடுக்கவோ கூடாது;

ஆனுல், ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் அப்படிப்பட்ட ஒரு தேர்தலில் வோட்டு கொடுக்க யோக்கியதாம்சம் பெற்றவராயிருந்தால் அவர் வோட்டு கொடுப்பதற்கான தமது உரிமையைச் செலுத்தலாம்; ஆனுல் அந்த உரிமையை எந்த விதத்தில் தாம் செலுத்த உத்தேசித்திருக்கிருர் என்பதைப் பற்றிய எதையும் கொடுப்பதை அவர் கூடுமானவரையில் தவிர்க்க வேண்டும்;

இந்த விதி முழு நேர உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் விஷயமாக மட்டுமே பிரயோகப்படும்.

14. அரசியலில் பங்கெடுத்துக்கொள்வது :—ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரும் அரசாங்கத்தார் பிறப்பிக்கிற பொதுவான அல்லது பிரத்தியேகமான யாதொரு உத்தரவுக்குட்பட்டு, இந்தியாவிலே அல்லது இந்திய விவகாரங்களுக்குச் சம்பந்தப்பட்ட எந்த அரசியல் இயக்கத்திலும் எவ்வகையிலும் பங்கெடுத்துக்கொள்ளவோ, அதற்கு உதவியாக சகாயத் தொகை கொடுக்கவோ அல்லது உதவி புரியவோ கூடாது. ஒரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் தாம் எடுத்துக்கொள்ள உத்தேசித்திருக்கிற எந்த நடவடிக்கையாவது, இவ் விதியை மீறுமென்று சந்தேகிக்க இடமிருந்தால், அவர் அவ்

விஷயத்தை நிர்வாக அதிகாரியின் மூலமாக இன்ஸ்பெக்டரின் ஆலோசனைக்குக் கொண்டு வரவேண்டும்.

குறிப்பு :—ஒரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் நாச வேலைகளிலாவது துரோகப் பேச்சுக்களைப் பேசுவதிலாவது ஈடுபட்டிருந்தால் அவரை ஊழியத்திலிருந்து நீக்கிவிடுவதற்காக அவையே போதுமான காரணங்களென்று கருதப்படும்.

15. உத்தியோகஸ்தர்கள். ஊழியர்கள் இவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் செய்யும் காரியங்களுக்காக அவர்கள் பொறுப்பாளியாவது : ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் தமது மனைவியாவது, தமது குடும்பத்தைச் சேர்ந்தவராய்த் தம்முடன் வசித்து வருகிற அல்லது எந்த வகையிலாவது, நம்மைச் சார்ந்திருக்கிற வேறு எவராவது செய்த எந்தக் காரியத்துக்காகவேனும்—அந்தக் காரியத்தைத் தாமே செய்திருந்தால் விதிகளை மீறினதற்கு எப்படி ஒப்பாகுமோ அப்படியே பொறுப்பாளியாவார்

16. பஞ்சாயத்து உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியர்கள் அந்த முறையில் தாங்கள் செய்த காரியங்களையும் தங்களது ஒழுக்கத்தையும் எடுத்துச்சொல்லி ஸ்தாபிப்பது:- ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் ஒருவர் நிர்வாக உத்தியோகஸ்தரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், உத்தியோக சம்பந்தமான தமது காரியங்களையும், ஒழுக்கத்தையும் பற்றி அவதூருக எழுதப்படுவதைக் கண்டித்து யாதொரு கோர்ட்டாரிடத்திலோ, பத்திகைகளிலோ எடுத்துச் சொல்லி ஸ்தாபிக்கக்கூடாது.

இவ் விதியில் கண்டதெதுவும் ஒரு பஞ்சாயத்தின் எந்த உத்தியோகஸ்தர் அல்லது ஊழியரேனும் தமது சொந்தக் காரியங்களையோ ஒழுக்கத்தையோ எடுத்துச் சொல்லி ஸ்தாபிப்பதற்காக அவருக்குள்ள உரிமையை வரையறுக்காது அல்லது மற்றப்படி பாதிக்காது.

17. ஸஸ்பென்ஷனிலிருக்கும்போது விலாசம் கொடுக்கவேண்டுமென்பது :— ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கும் போது அவர் தமக்கு இஷ்டமான எந்த இடத்துக்கும் தாராளமாகப் போகலாம் ; ஆனல், அவர் நிர்வாக அதிகாரியிடம் தமது விலாசத்தைக் கொடுக்கவேண்டும். தமது நடத்தையைப் பற்றி எவரேனும் உத்தியோகஸ்தர் விசாரணை நடத்தி வந்தால், அவரிடமும் தமது விலாசத்தை கொடுக்கவேண்டும்.

தமது நடத்தைப் பற்றிய எந்த விசாரணைக்காவது தாம் ஆஜராகவேண்டுமென்று பிறப்பிக்கப்படுகிற சகல உத்தரவுகளுக்கும் அவர் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் ; அவ்வாறு அவர் நடக்கத் தவறினல், அவர் ஆஜராகாமலிருக்கையிலேயே அவ் விசாரணையை நடத்தப்படலாம்.

18. (உத்தியோக சம்பந்தமான) தமது பற்றை அதிகப்படுத்தும்படி மேலதிகாரிகளைத் தூண்டுவது :— ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரும் உத்தியோக சம்பந்தமான தமது பற்றை அதிகப்படுத்திக் கொள்வதற்காக எந்த மேலதிகாரியிடமும் அரசியல் தொடர்புடைய எவருடைய செல்வாக்கையும் அல்லது இதர வெளியாருடைய செல்வாக்கையும் கொண்டுவரவும் கூடாது. கொண்டுவர யத்தனிக்கவும் கூடாது. இவ் விதியை மீறினல் நிரந்தரமாகவேனும், நிர்வாக அதிகாரி நிச்சயிக்கக்கூடிய கால அளவுக்கேனும் அவருக்கு உத்தியோக உயர்வு கொடுக்காமல் நிறுத்தி வைத்துக்கொள்ளப்படும் அல்லது அவருடைய சம்பளமானது சம்பளகால வீதத்திலே மிகக் குறைந்த அவருக்குக் குறைக்கப்படும். இதுவே அப்படி மீறியதற்குறிய தண்டனையாகும்.

விவரணம்.—ஒரு பஞ்சாயத்தின் உத்தியோஸ்தர் அல்லது ஊழியர் தமது சொந்த விஷயத்தை பற்றி அப்பஞ்சாயத்திலோ, பார்லிமெண்டிலோ, இந்த ராஜ்ய சட்ட நிரூபண சபைகளிலோ கேள்வி கேட்கும்படிச் செய்தால் அப்போது அவர் இவ்விதியை மீறுகிருர்.

19. மேலதிகாரிகளுக்குக் கடிதங்கள் எழுதுவது அல்லது அவர்களைப்பேட்டி காண்பது.—(1) ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரும் தமது உத்தியோக சம்பந்தமான அலுவல்களைப்பற்றிய அல்லது அந்த உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் என்ற ஹோதாவில் தம்மையே பாதிக்கிற எந்த விஷயத்தைப் பற்றியும் தாம் எந்த மேலதி

காரிக்கு உடனடியாக அடுத்துக் கீழிருக்கிருரோ, அந்த மேலதிகாரிக்கு தவிர்த்த வேறெந்த மேலதிகாரிக்கும் நேரடியாகக் கடிதம் எழுதக்கூடாது.

குறிப்பு.—ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் தமக்கு உடனடியாக மேலுள்ள அதிகாரி மூலமாய் ஒரு மேலதிகாரிக்குக் கடிதம் எழுதியிருந்தால், தமக்கு உடனடியாக மேலதிகாரி மூலமாய் அனுப்பிய கடிதத்தின் நகலொன்றைத் தாம் விரும்பினுல், மேலதிகாரிக்கு நேரடியாக அனுப்பலாம்.

(2) ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரும் ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் என்ற ஹோதாவில் தம்மையே பாதிக்கிற ஒரு விஷயம் சம்பந்தமாக ஆதரவு பெறும்பொருட்டோ, உறுதி மொழிப் பத்திரங்கள் அல்லது சேர்டிபிகேட்டுகள் பெறும் பொருட்டோ, தாம் எந்த உத்தியோகஸ்தருக்கு உடனடியாகக் கீழிருக்கிருரோ, அந்த உத்தியோகஸ்தரைத் தவிர்த்த மற்றெந்த உத்தியோகஸ்தரையாவது, உத்தியோகஸ்தரல்லாதவரையாவது அணுகலாகாது.

(3) ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரும் தமக்கு அடுத்த மேலதிகாரியைத் தவிர்த்த யாதொரு உத்தியோகஸ்தரைத்தாம் எந்த அதிகாரிக்கு அடுத்துக் கீழிருக்கிருரோ அந்த அதிகாரியிடமிருந்து முன்னதாக அனுமதி பெற்றுக்கொள்ளாமல் அந்த உத்தியோகஸ்தர் அல்லது ஊழியரென்னும் ஹோதாவில் தம்மையே பாதிக்கிற எந்த விஷயம் சம்பந்தமாகவும், பேட்டி காண விரும்பக்கூடாது. மேலும் ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரும் ஒரு மந்திரியையாவது, அரசாங்கக் காரியதரிசியையாவது, அவ்வாறு பேட்டிகாண விரும்பக்கூடாது.

(4) ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் உத்தியோகத்துக்காகவாவது உத்தியோக உயர்வுக்காகவாவது செய்துகொள்ளும் ஒவ்வொரு விண்ணப்பத்தையும் தகுதிவாய்ந்த அதிகாரி மூலமாய் அனுப்பவேண்டும்.

குறிப்பு - (1) முதல் (4) வரையிலுள்ள உப விதிகளில் கண்ட நிபந்தனைகள், யாதொரு கீழ் உத்தியோகஸ்தர் தமது உத்தியோக ஹோதாவில் தம்மை அடுத்த மேலதிகாரியாய் இராத யாதொரு உத்தியோகஸ்தருக்கு அனுப்ப வேண்டுமென்று சொல்லியிருக்கிற யாதொரு ரிட்டர்ன், அல்லது ரிப்போர்ட்டை அனுப்புவதற்குத் தடை ஏற்படுத்தமாட்டா.

20. பஞ்சாயத்துக்களின் உத்தியோகஸ்தர்களேயும், ஊழியர்களேயும், கவுரவிப்பதற்கான பொது நிகழ்ச்சிகள்(1)— ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரும் உபசாரப் பத்திரம் அல்லது வாழ்த்துப் பத்திரம் எதையும் பெற்றுக்கொள்ளக்கூடாது, அல்லது தம்மை கவுரவிப்பதற்காக நடக்கும் பொதுக்கூட்டம் அல்லது கேளிக்கை எதிலும் ஹாஜராயிருக்கக்கூடாது. எனினும், ஒரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் தமது சொந்த நண்பர்களாலாவது தாம் ஒரு கிளப்பில் அங்கத்தினராயிருந்து அந்தக் கிளப்பினுலாவது, தமக்குக் கொடுக்கப்படும் பிரிவுபசாரத்தின்போது ஹாஜராயிருக்க அவருக்கு எவ்விதத் தடையும் இல்லே ; ஆனுல் அவ்வித நிகழ்ச்சிக்கான ஆழைப்பொன்றை ஏற்றுக்கொள்கையில் அந்த நிகழ்ச்சி முழுவதும் தனிப்பட்ட நிகழ்ச்சியாகவே இருக்க வேண்டுமென்பதையும், அது எவ்விதத்திலும் ஒரு பொது நிகழ்ச்சியாயிருக்கக் கூடாதென்பதையும், தமக்கு எவ்வித வாழ்த்துப் பத்திரமும் வாசித்தளிக்கக் கூடாதென்பதையும், அதன் நடவடிக்கைகைக் குறிப்புகளேப்பற்றிய எந்த அறிக்கையும் பொதுப் பத்திரிகைகளில் பிரசித்தம் செய்யக்கூடாதென்பதையும், மேற்படி உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் தெளிவாக்க வேண்டும்.

(2) ஒரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எந்த அந்தஸ்தைச் சேர்ந்தவராயிருந்தாலும் தமது கீழ் உத்தியோகஸ்தர்கள் கொடுக்கும் உபசார நிகழ்ச்சி எதையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

21. பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தரோ, ஊழியரோ அல்லாத ஒருவர் அங்கத்தினராக இருக்கும் கழகம் அல்லது பெடரேஷனில் மெம்பராக இருக்கக்கூடாது.—ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரும் பஞ்சாயத்துக்களின்; உத்தியோகஸ்தர்கள் ஊழியர்கள் அடங்கிய யாதொரு கழகம், சங்கம் அல்லது பெடரேஷனில் யாதொரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தராகவோ ஊழியராகவோ இராத ஒருவர் அங்கத்தினராகவேனும் பதவி வகிப்பவராகவேனும் ஆதரவாளராகவேனும் இருந்தால் அந்தக் கழகம் யூனியன் அல்லது பெடரேஷனில் அங்கத்தினராயிருக்கக்கூடாது.

22. அரசாங்கம் முதலியவற்றின் கொள்கை அல்லது நடவடிக்கையைப்பற்றி விவாதிப்பது.—ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரும் மத்திய அரசாங்கத்தராவது, ஒரு ராஜ்ய அரசாங்கத்தாராவது, ஒரு பஞ்சாயத்தாவது, ஒரு ஜில்லா போர்டாவது, ஒரு முனிசிபல் கவுன்சிலாவது, பின்பற்றுகிற எந்தக் கொள்கையைப் பற்றியாவது, அல்லது எடுத்துக்கொள்கிற எந்த நடவடிக்கையைப் பற்றியாவது, பகிரங்கமாகவேனும், யாதொரு கழகம் அல்லது சபையின் எந்தக் கூட்டத்திலாவது நிகழ்த்தும் சொற்பொழிவு மூலமாகவேனும், எழுத்து மூலமாகவேனும், மற்றப்படியேனும் விவாதிக்கவும் கூடாது. கண்டிக்கவும் கூடாது. அப்படிப்பட்ட விவாதம் அல்லது கண்டனம் எதிலும் எவ்விதமாகவும் பங்கெடுத்துக்கொள்ளவும் கூடாது :

ஆனல், இவ் விதியில் கண்டதெதுவும்—

(1) பஞ்சாயத்திள் உத்தியோகஸ்தர்களும் ஊழியர்களும் மட்டுமே அடங்கிய தனிப்பட்ட கூட்டமொன்றில் அவ்வூழியர்களின் சொந்த ஹக்குகளைத் தனித்தனியாகவோ, பொதுப்படையாகவோ, பாதிக்கிற விஷயங்களைப் பற்றியும் விவாதங்களில் யாதொரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் நடக்க எவரும் கலந்து கொள்ளக்கூடாதென்று தடை செய்வதாகவோ.

(2) பஞ்சாயத்தின் யாதொரு கொள்கை அல்லது நடவடிக்கையைப்பற்றி தவறுதலாகப் புரிந்து கொண்டிருந்தால் அதை நீக்குவதற்காகவும், தவறு அறிக்கைகளைச் சரிப்படுத்துவதற்காகவும், அல்லது அக் கொள்கையைத் தீவிர தலானமாக நிறைவேற்றுவதற்காகவும், ஒரு பஞ்சாயத்தின் யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் பொதுக்கூட்டங்களிலாவது, தனிப்பட்ட கூட்டங்களிலாவது, அக்கொள்கை அல்லது நடவடிக்கையை ஆதரித்தேனும், விளங்கியேனும், பேச அவருக்குத் தடை ஏற்படுத்துவதாகவோ கருதப்படமாட்டாது.

விவரணம்.—இவ் விதியில் கண்டதெதுவும், பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர்கள் அப் பஞ்சாயத்தின் யாதொரு கொள்கை அல்லது நடவடிக்கையை அப் பஞ்சாயத்துக்கு யுக்தமென்று தோற்றுகிறபடியாவது அவசியமென்று தோற்றுகிறபடியாவது பிரசித்தம் செய்து விளக்கிக் காட்டவேண்டுமென்று அவருக்கு உத்தர விடுவதற்கான அதிகாரத்தை வரையறுப்பதாகவோ குறைப்பதாகவோ கருதப்படலாகாது.

அனுபந்தம் A.

19 ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதியோடு முடிவாகும் வருஷத்தில்——— என்பவர் சுவாதீனம் பெற்ற, அடைந்த அல்லது மாற்றிய ஸ்தாவர சொத்து, ஸ்தாவர சொத்திலுள்ள ஹக்கு ஆகிய இவை பற்றிய ஸ்டேட்மென்ட்.

குறிப்பு.—இந்த ரிட்டர்ன் எந்த வருஷத்துக்காக அனுப்பப்படுகிறதோ, அந்த வருஷத்துக்கு முன் மேற்படி உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எந்தச் சொத்தை அடைந்திருந்தும், அவ் வருஷத்தில் ஹக்கு வைத்துக் கொண்டு மிருந்தாரோ, அந்தச் சொத்தை முதலில் காட்டவேண்டும், எந்தச் சொத்துக்கள் விஷயமாய் அவ் வருஷத்தில் விவகாரங்கள் நடந்தனவோ அந்தச் சொத்துக்களைப் பின்னர் காட்டவேண்டும்.

உத்தியோகஸ்தர் அல்லது ஊழியரின் பெயர்	வகிக்கும் உத்தியோகம்.	ஊழியத்தில் எடுத்துக் கொள்ளப் பட்ட தேதி.	சொத்தின் தன்மை ; அதாவது.— (1) வீடுகளும் அவை எவ் விதம் உபயோகிக்கப்படுகின்றன வென்பதும், (அவைகளில் தோட்டங்கள் இருக்கின்றனவா இல்லையா என்பதைக் குறிப்பிடவும்.) (2) நிலங்கள் விவசாயகாரியங்களுக்காக உபயோகிக்கப்படுகின்றனவா, தோட்டங்களாக உபயோகிக்கப் படுகின்றனவா, வேறு இதர காரியங்களுக்காக உபயோகிக்கப் படுகின்றனவா என்பது.	19 -ம் வருஷத்துக்கு முன்பு அடையப் பட்டனவா அல்லது அவ் வருஷத்தில் அடையப்பட்டனவா என்பது.
(2)	(2)	(3)	(4)	(5)

	நிலம் அல்லது இதர சொத்து இருக்குமிடம்.				நிலங்களின் விஸ்தீர்ணமும் தீர்வையும்.						
					புஞ்சை		நஞ்சை				
19 -வருஷத்தில் கை விடப்பட்டனவா என்பது.	கிராமம்.	தாலுக்கா.	ஜில்லா.	ஸர்வே நம்பர்.	விஸ்தீர்ணம்.	தீர்வை.	விஸ்தீர்ணம்.	தீர்வை.	ஸர்க்கார் நிலமா இனும் நிலமா என்பது.	யாரிடமிருந்து அடையப்பட்டது அல்லது யார் சார்பாகக் கைவிடப்பட்டது என்பது.	அடைந்த பிறகு யார் பேரில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டது அல்லது கைவிடப்படுவதற்கு முன் யார் பேரில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தது என்பது.
(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12	(13)	(14)	(15)	(16)	(17)

எவ்வாறு அடையப்பட்டது, எதற்காக அடையப்பட்டது என்பது.	பத்திரத்தின் வருஷம், மாதம், தேதி.	நிலத்தில் சுவாதீனம் பெற்றுள்ள உரிமை.	நிலத்துக்காகக் கொடுத்த விலை அல்லது நிலத்துக்காகப் பெற்ற விலை.	குறிப்புகள்.
(18)	(19)	(20)	(21)	(22)

.........என்னும் நான், என்னுடைய சொந்தப் பெயரிலாவது வேறு யாதொரு நபருடைய பெயரிலாவது இந்த ரிட்டர்னில் கண்டிருக்கிறதைத் தவிர்த்து வேறு எந்த ஸ்தாவர சொத்தையேனும் ஸ்தாவர சொத்தில் நன்மை பயக்கத் தக்க அல்லது இதர ஹக்கு எதையேனும் இப்போது சுவாதீனத்தில் வைத்திருக்கவில்லை யென்றும் 19 -ம் வருஷத்தில் அந்த ஸ்தாவர சொத்து அல்லது ஹக்கு எதையும் அடையவில்லை அல்லது விட்டு விடவில்லை யென்றும் மனப்பூர்வமாய் உறுதி கூறுகிறேன்.

இடம்.   (கையொப்பம்)

19 -ம் ஆண்டு மாதம் தேதி.   (உத்தியோகம்)

குறிப்பு

(1) இந்த ஸ்டேட்மெண்டை ஒவ்வொரு வருஷமும் ஜனவரி மாதம் 15-ம் தேதியன்று தவருமல் அனுப்பவேண்டும்.

(2) இந்த ரிட்டர்ன் எந்த வருஷத்துக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த வருஷத்தில் புதிதாக அடையப்பட்ட சொத்துக்களை சிவப்பு மையில் எழுதவேண்டும்.

(3) ஒரு உத்தியோகஸ்தர் ஸ்தாவர சொத்து எதன் சுவாதீனத்திலிருந்தேனும் அவ் வருஷத்தில் நீக்கப்பட்டிருந்தால் அதைப்பற்றிய விரங்களையும்கூட வருஷாந்தர ரிட்டர்னில் பதியவேண்டும்.

அனுபந்தம் B.

பஞ்சாயத்துக்களின் உத்தியோகஸ்தர்களும் ஊழியர்களும் கைப்பற்றில் வைத்துள்ள ஸ்தாவர சொத்து, ஸ்தாவர சொத்தில் ஹக்கு ஆகிய இவைகளைப்பற்றிய ஸ்டேட்மென்ட்

உத்தியோகஸ்தர் அல்லது ஊழியரின் பெயர்	ஊழியத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட தேதி.	வகித்துவரும் உத்தியோகம்.	சொத்து இருக்கிற ஜில்லாவும் டிவிஷனும்.	சொத்து பற்றிய விவரங்கள். சொத்தின் தன்மை.	விஸ்தீர்ணம்.	தீர்வை.	யாருடைய பெயரில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டதென்பது.
(1)	(2)	(3)	(4)	(5)	(5)	(7)	(8)

எப்போது அடையப்பட்டது உரிமை வழியாய் அடையப்பட்டது முதலியன.	எவ்வாறு அடையப்பட்டது, எதற்காக அடையப்பட்டது என்பது.	அந்தச் சொத்துக்கு சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் சுவாதீனம் பெற்றிருக்கிற ஹக்கின் தன்மை.	குறிப்புகள்.
(9)	(10)	(11)	(12)

பி. 58 (2) தமிழ் நாட்டில் 358 பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் யிருக்கும் ஒவ்வொன்றுக்கும் இந்த உப பிரிவில் கண்ட ரெகுலேஷன்கள் செய்யும் அதிகாரத்தை கொடுத்தது பிசகான கார்யம் என்று எங்கள் அபிப்ராயம். எல்லா பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கும் ஒரே மாதிரி ரெகுலேஷன்கள் இருக்கவேண்டும் இந்த அதிகாரத்தை உடனே அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

பி. 58 (2) விதிகள்.—பி. 178யை பார்க்கவும் இந்த விதிகளிலே ஒரு குமஸ்தாவின்பேரில் ஒரு நிர்வாக அதிகாரி பஞ்சாயத்துச் சம்பந்தமாக ஒரு தப்பிதத்திற்காக சமாதானஞ் சொல்லும்படி உத்திரவிட்டபோது அந்த சமாதானத்தைச்சரிசெய்ய ஒரு வக்கீலை வைத்துக்கொண்டு வர்தாட அந்தக் குமாஸ்தாவுக்கு அதிகாரம் கிடையாது. அந்தக் குமாஸ்தா நேரில்தான் தன்னுடைய சமாதானத்தைத் தெரியப்படுத்த வேண்டும் [ராஜகோபாலா-எ-கலெக்டர் ஆபஸால்ட் ரெவின்யூ A. I. R. 1937 M 755]

பி. 58 (2) (c) ரஜா வர்த்தனை.—ஒரு உத்தியோகஸ்தர் அல்லது சிப்பந்தி இரண்டு பஞ்சாயத்துக்களிலோ அல்லது ஒரு பஞ்சாயத்து முனிசிபாலிடியிலோ குமாஸ்தாவாகவிருந்தால் அவருடைய ரஜா வர்த்தனைகளுக்காக விகிதாசாரம் கட்டிக்கொடுக்கவேண்டும். [ஹோதாலு முனிசிபாலிடி-எ-பீரியலால் A. I. R. 1939 L. 103]

பஞ்சாயத்துக்கள் தங்கள் ஆதிக்கத்துக்குட்பட்ட ஸ்தாபனங்களுக்கு விடுமுறைகள் கொடுப்பதுபற்றி அரசாங்கம், பி. 178 (1) படிக்கு செய்த விதிகள். விளம்பரம் X—24-3-1951

பஞ்சாயத்துக்களின் ஆதிக்கத்துக்குட்பட்ட ஸ்தாபனங்களுக்கும் ஆபீஸுகளுக்கும் அரசாங்கத்தாரால் அப்போதைக்கப்போது கொடுக்கப்படக்கூடிய பொதுவிடுமுறைகளும் விசேஷ உள்ளூர் விடு முறைகளும் மட்டுமே கொடுக்கப்படும்.

ஆனல், பஞ்சாயத்துக்களின் ஆதிக்கத்துக்குட்பட்ட கல்வி ஸ்தாபனங்களுக்கு விடுமுறைகள் கொடுக்கும் விஷயம் சென்னைக் கல்வி விதிகளை அனுசரித்து ஒழுங்குபடுத்தப்படும்.

மேலும், எந்தப் பஞ்சாயத்தும் தன் ஆதிக்கத்துக்குட்பட்ட ஆபீஸுகளுக்கும் ஸ்தாபனங்களுக்கும், அரசாங்க ஆபீஸுகளுக்கும் ஸ்தாபனங்களுக்கும், அனுமதிக்கப்பட்ட விடுமுறைகளைத்தவிர மற்ற விடுமுறைகளை இன்ஸ்பெக்டரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல் கொடுக்கக்கூடாது.

பி. 58 (2) (d) பென்ஷன்—ஒருவருடைய பென்ஷனை கொடுத்த பிறகு மற்றொரு அதிகாரி வந்தவுடன் அந்தப் பென்ஷனை ரத்து செய்யக்கூடாது. அடியிற்கண்ட கேஸில் மேலதிகாரி மாறியதும் மற்றொரு (பின் வந்த) அதிகாரி அந்த சிப்பந்தியை தள்ளிவிட்டதாக பின்னிட்டு உத்திரவுபோட்டு பென்ஷனை ரத்து செய்துவிட்டார். அம்மாதிரி செய்வது சரியல்லவென்று பிரிவிகௌன்ஸில் தீர்மானித்தது [ரங்கா எ செக்ரடரி ஆப் ஸ்டேட் A. I. R. 1937 P. C. 27 = I. L. R 1937 M. 517] ஆனல் பென்ஷன் கொடுக்கும் அதிகாரிகள் விதிகள்படி பென்ஷன் கொடுக்கவில்லை என்று ஒரு அப்பீல் சிவில் கோர்ட்டுகளுக்குச் செய்தால் அந்தத் தாவா செல்லாது. [வெங்கடா-எ-செக்ரடெரி ஆப ஸ்டேட் A. I. R. 1937 P C. 31 = I. L.R. 1937 M. 532 (P. C.) : : லால்-எ-செக்ரடெரி ஆப ஸ்டேட் A. I. R, 1941 L. 240 (246—217).

பி. 58 (2) (e) பிராவிடெண்டு பண்டு.—ஒரு பிராவிடெண்டு பண்டு கட்டுகிறவர்களுக்காக சம்பந்தமாகக் கோர்ட்டில் ஸிவில் புரொஸிஜர் கோடு 60-வது பிரிவு படிக்கு பஞ்சாயத்து ஆட்சேபிக்கலாம். [எம் அண்டு எஸ். எம். ரயில்வே-எ-சையத் அலி 1950 M. W. N. 108]

உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் நன்கொடை (PROVIDENT FUND—பிராவிடெண்டு பண்டு) அளிப்பது (ங-IV-4) விதிகள் பி. 58 (1) பி. 178 (1) படிக்கு

1. இந்த விதிகளிலே, சங்கதியினுலாவது சந்தர்ப்பத்தினுலாவது விரோதமொன்றுமிராவிட்டால்—

(i) 'சம்பளம்' என்பது 'மாதாந்தர ஸப்ஸ்டாண்டீவ் பே' என்னும் சம்பளம் என்று பொருள்படும்; மேலும் அதில், 'பெர்ஸனல் பே' என்னும் சொந்த வகையில் கொடுக்கும் சம்பளம் என்பதும் அடங்கும்;

(ii) 'ஊழியர்' என்பது ஒரு பஞ்சாயத்தில் ஒரு பதவியை வகித்து வருகிற யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் என்று பொருள்படும்;

(iii) 'கீழ்த்தர ஊழியவர்க்கம்', 'உயர்தர ஊழிய வர்க்கம்' என்பவை. இவ் விதிகளின் 1-ம் அனுபந்தத்தில் முறையே கீழ்த்தரமானவை, உயர்தரமானவை என்று வகை செய்யப்பட்டுள்ள பதவிகளிலிருக்கிற ஊழிய வர்க்கம் என்று பொருள்படும்.

2. இவ் விதிகளின் படிக்கான நன்கொடையானது, நிரந்தரமானது தாற்காலிகமான ஸப்ஸ்டான்டிவான அல்லது அபிஷியேடிங்கான எந்த ஊழியம் விஷயமாகவும் அனுமதிக்கப்படவேண்டும். மேலும் அது, வர்த்தனைகளுடன் கூட ரஜாப் பெற்று வேலைக்கு வராமலிருக்கும் கால அளவுக்கும் அனுமதிக்கப்படும் ஊழியத்தின் பூர்த்தியான வருஷங்களுக்காக மட்டுமே நன்கொடை அனுமதிக்கப்பட வேண்டும். தகுதியான விஷயங்களில், ஒரு வருஷ பூர்த்தியாவது மூன்று மாதங்களுக்கு மேற்படாமல் குறைந்தால் அதை ஒரு பஞ்சாயத்தின் நிர்வாக உத்தியோகஸ்தர் மன்னிக்கலாம்; அது போலவே பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படாமல் குறைந்தால் அதைப் பஞ்சாயத்து மன்னிக்கலாம்.

3. ஒரு ஊழியர் எந்த ஊழியகால அளவு விஷயமாய் அவர் ப்ராவிடன்ட் பண்டினுல் ஏற்படுகிற நன்மைகளுக்குப் பாத்தியதையுடைய வராயிருக்கிருரோ அந்த ஊழிய காலத்துக்காக அவருக்கு நன்கொடை எதுவும் அனுமதிக்கப் படலாகாது.

சிப்பந்தி பிரிவுகள் (57-62) ப்ராவிடெண்டு பண்டு விதிகள்

4. பென்ஷன் பெறத்தக்க ஊழியத்திலிருக்கும் ஒரு ஊழியருக்கு, அவர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிற பென்ஷன் திட்டத்தின்படி அவருக்கு அனுமதிக்கப்படத்தக்க யாதொரு நன்கொடை தவிர, இந்த விதிகளின்படிக்கான நன்கொடை எதுவும் அனுமதிக்கப்படலாகாது.

5. நன்கொடை எதையும்—

(a) பஞ்சாயத்தின் ஊழியத்திலிருந்து நீக்கிவிடப்படுகிற, அல்லது.

(b) துர்நடத்தை அல்லது திறமையின்மை காரணமாக அகற்றப்படுகிற அல்லது ராஜினமா செய்யும்படிக் கட்டளையிடப்படுகிற அல்லது.

(c) தாமாகவே ராஜினமா செய்கிற ஒரு ஊழியருக்கு அனுமதிக்கலாகாது.

6. (1) யாதொரு பஞ்சாயத்தில் தமது மொத்த ஊழிய காலம் ஐந்து வருஷங்களுக்குக் குறைவாகவுள்ள ஒரு ஊழியருக்கு நன்கொடை எதையும் அனுமதிக்கலாகாது.

(2) ஒரு ஊழியருக்கு, ப்ராவிடெண்ட் பண்டினல் ஏற்படுகிற நன்மைகளுக்கு அவர் அனுமதிக்கப்பட்டதற்கு முன்னல் உள்ள ஊழியத்துக்காக, அந்த ஊழியம் ஐந்து வருஷங்களுக்குக் குறைவாயிருந்தாலும், நன்கொடை அனுமதிக்கப்பட தக்கதாகும்; ஆனல், அவரது மொத்த ஊழிய காலம் ஐந்து வருஷங்களுக்குக் குறைவாயிருக்கக்கூடாது. தொடர்ச்சியாயிராத ஊழியம் விஷயமாகவும் ஒரு ஊழியருக்கு நன்கொடை அனுமதிக்கப்பட தக்கதாகும்.

7. (1) உயர்தர ஊழிய வர்க்கத்தைச் (சேர்ந்த ஊழியர் ஒருவருக்கு—

(a) முதுமையடைந்ததாலோ வேலைக்கு லாயக்கற்றுப் போனதாலோ ஊழியத்திலிருந்து அவர் விலகும் போதாவது.

(b) சிப்பந்திக் குறைப்பு காரணமாகவோ துர் நடத்தை அல்லது திறமையின்மை தவிர வேறு சில காரணங்களுக்காகவோ அவர் ஊழியத்திலிருந்து தள்ளிவிடப்படும் போதாவது.

நன்கொடை கொடுக்கலாம்.

(2) கீழ்த்தர ஊழிய வர்க்கத்தைச் சேர்ந்த ஊழியர் ஒருவருக்கு—

(a) உடல் தளர்ச்சியினலோ மனத்தளர்ச்சியினலோ தொடர்ந்து ஊழியம் செய்ய அவர் நிரந்தரமாகத் தகுதியற்றுப் போனல், அல்லது.

(b) அவரது வேலை அற்றுப்போவதன் பேரிலாவது சிப்பந்திக் குறைப்பினலாவது அவர் ஊழியத்திலிருந்து தள்ளிவிடப்பட்டு அவருக்கு வேறு எந்தத் தகுதியான வேலையும் கிடைக்காமற் போனல்,

அப்போது நன்கொடை கொடுக்கலாம்.

8. 2 முதல் 7 வரையிலுள்ள விதிகள் 12-வது விதி ஆகிய இவைகளின் நிபந்தனைகளுக்குட்பட்டு, உயர்தர ஊழிய வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் யாதொரு பிராவிடன்ட் பண்டினல் ஏற்படுகிற நன்மைகளுக்கு அனுமதிக்கப்பட்டிராதவர்களுமான ஊழியர்களுக்கு ஊழிய காலத்தின் ஒவ்வொரு வருஷத்துக்காகவும் அரை மாதச் சம்பளம் என்ற விதத்தில் நன்கொடை கொடுக்கலாம்; ஆனல் ஷை நன்கொடையானது, ஊழிய காலம் பதினைந்து வருஷங்களுக்குக் குறைவாயிருந்தால், ஆறு மாதச் சம்பளத்துக்கும், பதினைந்து வருஷங்கள் அல்லது அதற்கு மேற்பட்டு இருந்தால் பதினைந்து மாதச் சம்பளத்துக்கும் மேற்படக்கூடாது.

இவ் விதியின் படிக்கான நன்கொடையை, 7-வது விதியின் பிரகாரம் ஷை நன்கொடை எப்போது கொடுக்கப்படத் தக்கதாகிறதோ அப்போது பெற்றுவரக்கூடிய சம்பளத்தின் பேரில் கணக்கிட வேண்டும்.

9. 2 முதல் 7-வரையிலுள்ள விதிகள், 12-வது விதி ஆகிய இவைகளின் நிபந்தனைகளுக்குட்பட்டு, உயர்தர ஊழிய வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும், தங்களுடைய ஊழிய காலத்தில் யாதொரு பிராவிடன்ட் பண்டினல் ஏற்படுகிற நன்மைகளுக்கு அனுமதிக்கப் பட்டிருக்கிறவர்களுமான ஊழியர்களுக்கு, மேற்படி பிராவிடன்ட் பண்டினல் ஏற்படுகிற நன்மைகளுக்கு அனுமதிக்கப்பட்டதற்கு முன்னுலுள்ள அவர்களுடைய ஊழிய காலத்தின் ஒவ்வொரு வருஷத்துக்காக அரை மாதச் சம்பளம் என்ற வீதத்தில் நன்கொடை கொடுக்கலாம்; ஆனல் மேற்படி நன்கொடையானது அப்படி அனுமதிக்கப்படுவதற்கு முன்னல் செய்திருந்த ஊழிய காலம் பதினைந்து வருஷங்களுக்குக் குறைவாயிருந்தால் ஆறு மாதச் சம்பளத்துக்கும், பதினைந்து வருஷங்கள் அல்லது அதற்கு மேற்பட்டால் பதினைந்து மாதச் சம்பளத்துக்கும் மேற்படக் கூடாது.

இவ் விதியின் படிக்கான நன்கொடையை மேற்படி பிராவிடெண்ட் பண்டில் அனுதிக்கப்பட்டதற்கு அடுத்து முன்னதாகப் பெற்றுவந்த சம்பளத்தின்பேரில் கணக்கிடவேண்டும்.

10. 2 முதல் 5-வரையிலுள்ள விதிகள் 7-வது 12-வது விதிகளின் நிபந்தனைகளுக்குட்பட்டு, கீழ்த்தர ஊழிய வர்க்கத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு, ஊழிய காலத்தின் ஒவ்வொரு வருஷத்துக்காக ஒரு மாத சம்பளம் என்ற வீதத்தில் அடியிற்கண்ட வரையறைகளுக்குட்பட்டு நன்கொடை கொடுக்கலாம்; அவ் வரையறைகளாவன :—

(a) ஊழிய காலத்தின் முதல் ஐந்து வருஷங்கள் விஷயமாய் நன்கொடை எதையும் கொடுக்கக்கூடாது.

(b) நன்கொடையானது எந்த விஷயத்திலும் இருபது மாதச் சம்பளத்துக்கு மேற்படக்கூடாது.

இவ் விதியின்படிக்கான நன்கொடை, 7-வது விதியின் பிரகாரம் எப்போது கொடுக்கப்படத் தக்கதாகிறதோ அப்போது பெற்று வந்த சம்பளத்தின் பேரில் கணக்கிடவேண்டும்.

11. இவ் விதிகளின் படிக்கான நன்கொடையைப் பஞ்சாயத்து கொடுக்கவேண்டும்; ஆனால், இன்ஸ்பெக்டரின் முன்னனுமதியை எழுத்து மூலமாகப் பெற்றுக்கொள்ளாமல் தொகை எதையும் செலுத்தலாகாது. 8-வது, 9-வது, 10-வது விதிகளில் கண்டுள்ள வீதங்களை உச்ச வீதங்களாகக் கருதவேண்டும்; செய்த ஊழியம் முற்றும் திருப்திகரமாயிருந்தாலொழிய, அவ் வீதங்களை அனுமதிக்கக்கூடாது. ஊழியம் முற்றும் திருப்திகரமாயிராத யாதொரு விஷயத்தில், பஞ்சாயத்தானது தான் தகுதியென்று கருதுகிறபடி கொடுக்கப்படத் தக்க மேற்படி தொகையைக் குறைக்கவேண்டும்.

12. கீழ்த்தர ஊழிய வர்க்கத்தைச் சேர்ந்த ஊழியர் ஒருவருக்கு அனுமதிக்கப்படத் தக்க நன்கொடையைக் கணக்கிடுகையில், 16 வயது பூர்த்தியடைந்த பின்னர் அவர் செய்த ஊழியத்தை மட்டுமே கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும். உயர்தர ஊழிய வர்க்கத்தைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் விஷயத்தில் 20 வயது பூர்த்தியடைந்த பின்னர் அவர் செய்த ஊழியத்தை மட்டுமே கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

13. கீழ்த்தர ஊழிய வர்க்கத்தில் ஓரளவுக்கும் உயர்தர ஊழிய வர்க்கத்தில் ஓரளவுக்கும் ஊழியம் செய்திருக்கிற யாதொரு ஊழியர்—

(a) **கீழ்த்தரத்துக்குரிய** வீதத்தின் படிக்கான நன்கொடைக்காக, ஊழிய முழுவதையும் **கீழ்த்தரமானதாகக்** கணக்கிடலாம்; அல்லது.

(b) **உயர்தர ஊழிய வர்க்கத்தில்** செய்த ஊழியத்தை **உயர்தரத்துக்குரிய** வீதத்தின்படிக்கான நன்கொடைக்காகவும், **கீழ்த்தர ஊழிய வர்க்கத்தில்** செய்த ஊழியத்தை **கீழ்த்தரத்துக்குரிய** வீதத்தின்படிக்கான நன்கொடைக்காகவும் கணக்கிடலாம்.

(a) பகுதியின் படியானல், மேற்படி நன்கொடையை சந்தர்ப்பத்துக்கேற்றபடி, 7-வது விதியின் பிரகாரம் அந்த நன்கொடை எப்போது கொடுப்படத் தக்கதாகிறதோ அப்போதாவது பிராவிடன்ட் பண்டில் அனுமதிக்கப்படுவதற்கு அடுத்து முன்பாவது மேற்படி ஊழியர் (அவர் உயர்தர ஊழிய வர்க்கத்திலிருந்தாலுஞ் சரி கீழ்த்தர ஊழிய வர்க்கத்திலிருந்தாலுஞ் சரி) பெற்று வந்த சம்பளத்தின் பேரில் கணக்கிட வேண்டும்.

(b) பகுதியின் படியானல், ஒவ்வொரு வீதத்தின் படிக்கான நன்கொடையும், மேற்படி ஊழியர் கீழ்த்தர ஊழிய வர்க்கத்திலிருந்து உயர்தரத்துக்கு அல்லது உயர்தர ஊழிய வர்க்கத்திலிருந்து கீழ்த்தரத்துக்கு மாற்றப்பட்ட சமயத்திலும், முறையே, 7-வது விதியின் பிரகாரம் மேற்படி நன்கொடை எச்சமயத்தில் கொடுக்கப்படத் தக்கதாகிறதோ அப்போதாவது பிராவிடன்ட் பண்டில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பாவது, அவர் பெற்று வந்த சம்பளத்தின் பேரில் கணக்கிட வேண்டும். துர்நடத்தைக்காக யாதொரு ஊழியர் உயர்தர ஊழிய வர்க்கத்திலிருந்து கீழ்த்தர ஊழிய வர்க்கத்துக்கு மாற்றப்பட்டால், இன்ஸ்பெக்டரின் விசேஷ அனுமதியுடனன்றி மற்றப்படி, இவ் விதியின் பிரகாரம் அவருக்கு எந்த நன்கொடையையும் கொடுக்கலாகாது.

விவரணம்.—கீழ்த்தர ஊழிய வர்க்கத்துக்கான நன்கொடையும் உயர்தர ஊழிய வர்க்கத்துக்கான நன்கொடையும் சேர்ந்து, ஊழியகால முழுமையும் உயர்தர ஊழிய வர்க்கத்

தைச் சேர்ந்த ஊழியகாலமாயிருந்தால் எந்தத் தொகை நன்கொடையாக அனுமதிக்கப்பட வேண்டுமோ அந்தத் தொகைக்கு மேற்படக்கூடாது:

14. ஊழியத்திலிருக்கும்போது ஒரு ஊழியர் இறந்தால், அவருடைய குடும்பத்துக்கு, அது கஷ்டதிசையில் இருப்பதாக மேற்படி பஞ்சாயத்துக்கு சந்தேகமறத் தெரிய வந்தால், அந்த ஊழியர் இறந்த தினத்தன்று 7-வது விதியின் பிரகாரம் நன்கொடை கொடுக்கத்தக்க தாகி விட்டிருந்தால் எப்படியோ அப்படியே நன்கொடை கொடுக்கலாம்.

விவரணம்.—இவ் விதியின் காரியங்களுக்காக, 'குடும்பம்' என்பதில் மேற்படி ஊழி யரின் மனைவி, அவருக்கு விவாக மூலமாய்ப் பிறந்த குழந்தைகள்—இச் சொற்றொடரில் யாதொரு சுவீகாரபுத்திரன், அவருடன் வசித்து, அவரையே முற்றும் சார்ந்திருக்கும் மாற்றான் குழந்தைகள் (Step children) என்பது மடங்கும்—இன்னும் அவரது பெற்றோர், சகோதரர்கள், யுக்த வயதடையாத அவருடைய தம்பிமார்கள் முற்றும் அவரையே சார்ந்திருந்து அவருட னேயே வசித்து வந்தால், அவர்கள் என்பதும் அடங்கும், மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி மேற்படி ஊழியருக்குக் குடும்பம் எதுவும் இராமற்போய், அவர் பிராவிடெண்ட் பண்டில் பணம் செலுத்துபவராயிருந்தால், அப்போது அவருக்குக் கொடுக்கப்படத்தக்க நன்கொடை எது வேனுமிருந்தால் அதை, அவரால் நேமகம் செய்யப்பட்டு அவருடைய பிராவிடெண்ட் பண்டு தொகையை பெற்றுக்கொள்ளக் கூடியவரிடம் கொடுக்கலாம்; ஆனல், அவ்வாறு நேமகம் செய்யப்பட்டவர் கஷ்ட தசையிலிருக்கிருரென்று மேற்படி பஞ்சாயத்து சந்தேகமறத் தெரிந்து கொள்ளவேண்டும்.

15. ஒரு ஊழியர் வெவ்வேறு பிரதேச அதிகார சபைகளில் ஊழியம் செய்திருந்தால், அவ்வாறு வெவ்வேறு பிரதேச அதிகார சபைகளில் செய்திருந்த ஊழியம் ஒன்று சேர்க்கப் பட்டு, இவ்விதிகளின்படி அனுமதிக்கப்படத்தக்க நன்கொடையைக் கணக்கிடுவதற்கு ஒரே ஊழியமாகக் கருதப்படவேண்டும். நன்கொடை கொடுக்கவேண்டிய பொறுப்பை, மேற்படி வெவ்வேறு பிரதேச அதிகார சபைகளுக்கும், மேற்படி ஊழியர் தகுதியளிக்கிற தம்முடைய ஊழிய காலமுழுமையிலும் பெற்ற மொத்த சம்பளமானது எந்த சங்கியா பரிமாணங்களில் வெவ்வேறு பிரதேச அதிகார சபைகளில் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த சங்கியா பரிமா ணங்களில் நன்கொடை கொடுப்பதற்கான பொறுப்பை அவர்களிடையே பகிர்ந்து கொடுக்க வேண்டும். அவ்வாறு பகிர்ந்து கொடுப்பதனல் பிரதேச அதிகார சபை நன்கொடைத் தொகையின் மூன்றிலொரு பங்குக்குமேல் கொடுக்கத்தக்கதாயிருந்தால், அப்பிரதேச அதி கார சபை மொத்தச் செலவையும் ஏற்கவேண்டும். அதையாருக்கும் பிரித்துக்கொடுக்கக் கூடாது.

விவரணம்.—மற்றெரு பிரதேச அதிகார சபையில் வேலையிலமர்வதற்காக ஒரு பிரதேச அதிகார சபையிலிருந்து ராஜினமா செய்கிற விஷயங்களில் இவ்விதி பிரயோகப்படாது.

16. (1) (a) இவ் விதிகளின் பிரகாரம் யாதொரு நன்கொடை பெறப் பாத்தியதை யுள்ள ஒரு ஊழியர் அது கொடுக்கப்பெறுவதற்காக தமது ஆபீஸின் தலைமையதிகாரிக்கு விண் ணப்பஞ் செய்துகொள்ளவேண்டும்.

(b) 7-வது விதியைச் சேர்ந்த (2) உப-விதியின் (a) பகுதியின்படிக் கான நன் கொடைக்குரிய விண்ணப்பம் ஒவ்வொன்றுடனும், யாதொரு மெடிகல் ஆபீஸரிடமிருந்தாகிலும் அல்லது ஆபீஸின் தலைமையதிகாரியிடமிருந்தாகிலும் விண்ணப்பதாரர் மேலும் ஊழியத்தி லிருக்கத் தகுதியற்றுப்போய் விட்டார் என்று கண்டுள்ள ஒரு ஸெர்டிபிகேட்டை அனுப்ப வேண்டும்.

(c) ஊழியத்திலிருக்கும்போதோ, நன்கொடைக்காக விண்ணப்பம் செய்து கொள்வதற்கு முன்போ யாதொரு ஊழியர் இறந்துவிட்டால், 14-வது விதியின் பிரகாரம் நன் கொடை பெறப் பாத்தியதையுள்ளவர் நன்கொடைக்கான மேற்படி விண்ணப்பத்தைச் செய்து கொள்ளவேண்டும்; அவ்வாறு பாத்தியதையுள்ளவர் யுக்த வயதடையாதவராயிருந்தால் அல்லது வேறு விதமாய் தகுதியற்றுப் போயிருந்தால், அவருடைய சமரட்சகர் விண்ணபஞ் செய்து கொள்ளவேண்டும்.

(d) நன்கொடை கொடுக்கப் பெறுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றையும் மேற்படி ஊழியர்.—

(i) வேலையிலிருந்து நீங்கிய.
(ii) வேலையிலிருந்து தள்ளப்பட்ட, அல்லது.
(iii) இறந்த தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் செய்துகொள்ள வேண்டும்.

(2) பஞ்சாயத்தின் நிர்வாக உத்தியோகஸ்தர் விண்ணப்பஞ் செய்து கொள்ளப்பட்ட நன்கொடையைக் கொடுக்க உத்தேசித்தால், அவர் இவ்விதிகளின் II-ம் அனுபந்தத்திலுள்ள நமுனைப்படி நன்கொடைக்கான விண்ணப்பம் ஒன்றைத் தயாரிக்கவேண்டும்.

I7. தோட்டி முதலிய ஊழிய வர்க்கத்தினருக்குச் சாதாரணமாக நன்கொடை எதுவும் அனுமதிக்கப்படலாகாது. ஆயினும், தகுதியான விஷயங்களில் நன்கொடை கொடுக்கப்படலாம் என்று ஒரு பஞ்சாயத்து கருதும் பட்சத்தில், அடியில்கண்ட திட்டங்களுக்குட்பட்டு அவ்வாறு கொடுக்க அனுமதிக்கலாம்; அவையாவன:—

(a) அப் பஞ்சாயத்தில் மேற்படி தோட்டியின் ஊழியகாலம் இருபது வருஷங்களுக்குக் குறைவாயிருக்கக்கூடாது.

(b) அனுமதிக்கப்பட்ட நன்கொடையின் மொத்தத் தொகை, மேலே சொன்ன விதிகளின் பிரகாரம் கீழ்த்தர ஊழிய வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு அனுமதிக்கப் படத்தக்க தொகைக்கு மேற்படலாகாது.

(c) அவ்வாறு கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட ரீஜினல் இன்ஸ்பெக்டரின் முன் அனுமதியைப் பெற்றிருக்கவேண்டும்.

I-ம் அனுபந்தம்

[I (iii) விதியைப் பார்க்கவும்.]

உயர்தர ஊழிய வர்க்கத்தைச் சேர்ந்த வேலைகள்.	கீழ்த்தர ஊழிய வர்க்கத்தைச் சேர்ந்த வேலைகள்.
சாலை அல்லது தோட்ட மேற்பார்வையாளர்	ஆஸ்பத்திரிகளிலும், டிஸ்பென்ஸரிகளிலும் இருக்கிற அட்டெண்டன்டுகள்.
அட்டெண்டர்கள்	...
பில் கலெக்டர்கள்	...
ஜனன மரணப் பதிவு ரெஜிஸ்ட்ரார்கள்	...
குமாஸ்தாக்கள்	...
குமாஸ்தா—பில் கலெக்டர்கள்	...
கம்பவுண்டர்கள்	...
பொதுஜனன சுகாதார வேலையில் ஈடுபட்டுள்ள சினிமா ஆபரேட்டர்களும் கைத் தேர்ச்சி பெற்ற இதர ஊழியர்களும்.	...
பிட்டர்கள் (Fitters)*	தோட்டக்காரர்கள்.
தலைமை ஆசிரியர்கள்	...
ஹெல்த் விஸிட்டர்கள்	...
லைஸென்ஸ் ஸூபரின்டெண்டென்டுகள்	...
லைப்ரேரியன்கள்	...
லைட்டிங் ஸூபரின்டெண்டுகள் அல்லது இன்ஸ்பெக்டர்கள்	...
லாரி ட்ரைவர்	...
(இங்கிலிஷ், இந்திய மருத்துவ, ஆயுர்வேத, யுனானி) மெடிகல் ஆபீஸர்கள்.	...
மருத்துவச்சிகள்	...
ட்ராயிங், ட்ரில் முதலியவற்றுக்கான ஆசிரியர்கள்	...
மெக்கானிக்குகள்	...
மார்க்கெட் ஸூபரின்டெண்டென்டுகள் அல்லது ஸூபர்வைஸர், ஸார்ஜெனட்	...

* சம்பளம் அல்லது உச்ச சம்பளம் மாதமொன்றுக்கு ரூ. 20-க்கு மேற்படுவதாயிருந்தால்

நர்ஸுகள்	நர்ஸிங் ஆர்டர்லிகள்.
(ஆயுர்வேத, யுனனி (சித்த) டிஸ்பென்ஸரிகளிலுள்ள) வைத்தியர்கள்	பொதுஜன சுகாதாரத்தைச் சேர்ந்த ப்யூன்கள்
பார்க் ஸுபர்வைஸர்	...
ரேடியோ ஆபரேட்டர்கள்	...
ரெஜிஸ்ட்ரார்—வாக்ஸினேட்டர்கள்	...
ரெவினியு இன்ஸ்பெக்டர்கள்	...
ஸானிடரி இன்ஸ்பெக்டர்கள்	...
பாடசாலைகளின் ஸுபர்வைஸர்கள் அல்லது ஸுபரின்டெண்டென்டுகள்.	...
பாரஸ்ட் (Forest) ஸுபர்வைஸர்	...
ஸ்டாக்கர்கள்	...
ஸ்டோர்-கீப்பர்கள்	...
ஆசிரியர்கள்	டர்ன்-காக்ஸ் [Turn-cocks]
டவுன்-ப்ளானிங் ஸுபர்வைஸர்	...
வாக்ஸினேட்டர்கள்	...
கால்நடை மருத்துவ ஸர்ஜன் அல்லது இன்ஸ்பெக்டர் அல்லது உத்தியோகஸ்தர்.	...
வாரன்ட் ஆபீஸர்	...
சிசு சம்ரட்சணத்துக்கு சம்பந்தப்பட்ட உமன் (ஸ்திரீ) மெடிகல் ஆபீஸர் (தாய்மைசிசு போஷகத்துக் கானவர்கள்	—

II-ம் அநுபந்தம்.

[16 (2) விதியைப் பார்க்கவும்.]

நன்கொடைக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரரின் பெயர்.
2. தகப்பனர் பெயர்.
3. இனம், பிரிவு, ஜாதி.
4. இருப்பிடம்—கிராமமும் ஜில்லாவும்
5. தற்போது அமர்ந்துள்ள உத்தியோகம் அல்லது இதற்கு முன்பு அமர்ந்திருந்த உத்தியோகம்—ஸ்தாபனத்தின் பெயர் உட்பட
6. ஊழியர் தொடங்கிய தேதி
7. ஊழியம் முடிந்த தேதி.
8. மொத்த ஊழிய காலம், இடையில் விட்டுப்போன காலங்கள் உட்பட இதில் உயர்தர ஊழிய வர்க்கத்தில் கீழ்தர ஊழிய வர்க்கத்தில், தகுதியைத்தராத ஊழிய கால அளவும் விட்டுப்போன காலங்களும்
9. எந்த வகை நன்கொடைக்காக விண்ணப்பஞ் செய்து கொள்ளப்படுகிறது, என்பது விண்ணப்பஞ் செய்து கொள்ளப்படுவதற்கான காரணமும்.
10. (சராசரி) ஊதியம் அல்லது சம்பளம்,
11. கொடுக்க உத்தேசித்துள்ள பென்ஷன்.
12. கொடுக்க உத்தேசித்துள்ள நன்கொடை.
13. பென்ஷன் கொடுக்க ஆரம்பிக்க வேண்டிய தேதி.
14. கொடுக்கப்படவேண்டிய இடம்.
15. விண்ணப்பதாரர் பிறந்த தேதி. (கிறிஸ்து சகாப்தத்தில்)
16. உயரம்.
17. அடையாளங்கள்.
18. தேதி

நிர்வாக உத்தியோகஸ்தரின் கையெழுத்து

* யாதொரு நஷ்ட ஈட்டுக்காக அல்லது பென்ஷனுக்காக அல்லது நன்கொடைக்காக விண்ணப்பஞ்செய்து கொண்டிருந்தால், எந்த வேலை மாற்றத்தினுல் அந்த தாவா கேட்கும்படி நேரிட்டதோ அந்த மாற்றத்தின் தன்மையை முழுவதும் கண்டெழுத வேண்டும்.

......என்பவருடைய ஊழிய கால வரலாறு. இதில் இடையில் விட்டுபோன காலத்தையும் காட்டவேண்டும்.

ஸ்தாபனம்	உத்தியோகம்.	சம்பளம்.	பிரவர்த்திக்கும் காலத்தில் பெறும் சம்பளம்	ஆரம்பித்த தேதி.	முடிந்த தேதி.	ஊழியமெனக் கணக்கிடப் பட்ட கால அளவு.	ஊழியமெனக் கணக்கிடப் படாத கால அளவு.	குறிப்புகள்.	எப்படிச் சரிபார்க்கப்பட்டதென்பது.	எக்ஸாமினர் ஆப் லோக்கல் பண்டு அக்கவுன்ட் ஸின் குறிப்புகள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	7)	(8)	(9)	(10)	(11)

27 உயர்தர ஊழிய வர்க்கத்தில். :: 27 கீழ்த்தர ஊழிய வர்க்கத்தில். ::

27 மொத்த ஊழிய கால அளவு.

நன்கொடை சம்பந்தமாக ஆபீஸ் தலைமையதிகாரியின் குறிப்புகள்

1. விண்ணப்பதாரரின் ஒழுக்கத்தையும் முந்திய நடத்தையையும் பற்றி.
2. யாதொரு ஸஸ்பென்ஷன் அல்லது கீழ்ப்பதவிக்கு அனுப்புவது பற்றிய விவரணம்.
3. விண்ணப்பதாரர் எற்கெனவே யாதொரு நன்கொடை அல்லது பென்ஷன் பெற்றிருந்தால் அதைக் குறித்து.
4. வேறு இதர குறிப்புகள்.
5. தாவா செய்துகொள்ளப்பட்ட ஊழியம் நிரந்தரமானதுதானு என்பது பற்றியும் அதை அனுமதிக்க வேண்டுமா கூடாதா என்பதுபற்றியும் ஆபீஸ் தலைமையதிகாரியின் திட்டமான கருத்து.

சர்டிபிகேட்டும்ரிபோர்ட்டும்

[கீழே எழுதியுள்ள குறிப்புகளுக்குட்பட்டு] உயாதர ஊழிய வர்க்கத்தின் / கீழ்த்தர ஊழிய வர்க்கத்தின்

தாங்களில் தகுதியளிக்கும்ஊழிய காலம் வருஷங்கள்

மாதங்கள் தினங்கள் என்று எண்பிக்கப்பட்டிருக்கிறதென்றும்,

ரூபாய்க்கு மேற்படாத நன்கொடை அனுமதிக்கப்படத்தக்கதென்றும் உறுதி கூறப்படுகிறது. கணக்குகள் கிரமமாகச் சரிபார்க்கப்பட்டிருக்கின்றன.

நிர்வாக உத்தியோகஸ்தர்

நன்கொடைக்கான விண்ணப்பம்.

விண்ணப்பஞ் செய்து கொள்ளப்படும் தேதி.
விண்ணப்பதாரரின் பெயர்.
கடைசியாகப் பார்த்து வந்த உத்தியோகம்.
நன்கொடையின் வகை.
அனுமதிக்கப்பட்ட நன்கொடைத் தொகை.
ஆரம்பமாகும் தேதி.
அனுமதி கொடுக்கப்பட்ட தேதி.

நிர்வாக உத்தியோகஸ்தர்

* (சரியாக இன்னதுதானென்று தெரியாவிட்டால் மிக நன்ருகத் தெரிந்திருக்கிற அளவுக்கு அல்லது மதிப்பிடுகிற அளவுக்குக் கண்டெழுத வேண்டும்.)

59. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்கள் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கு பொதுவாயுள்ள அதிகாரங்களைச் செலுத்துவதற்காக அல்லது கடமைகளைச் செய்வதற்காக அதே உத்தியோகஸ்தரை அல்லது ஊழியரை அந்த பஞ்சாயத்துக்கள் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் நிர்ணயிக்கக்கூடிய விதிகளுக்குட்பட்டு நியமிக்கலாம்; விதிகள் மூலமாக இது விஷயமாய் அதிகாரம் கொடுக்கப் பெற்றுள்ள யாதொரு அதிகாரி அப்படி நியமிக்க வேண்டுமென உத்தரவிட்டால், அவை அவ்வாறே நியமிக்க வேண்டும்.

பொதுவான உத்தியோகஸ்தரை நியமிப்பது

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பஞ்சாயத்துகளுக்குப் பொது உத்தியோகஸ்தர் அல்லது ஊழியரை நியமிப்பது.

பி. 59ன் படிக்கு விதிகள் (XI 24—3—1951)

1. இன்ஸ்பெக்டர், இரண்டு பஞ்சாயத்துக்களின் அல்லது அதற்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்கள் எல்லாவற்றினுடைய ஒரே தன்மையுள்ள அதிகாரங்கள் அல்லது அலுவல்கள் எவற்றையேனும் செலுத்தவோ செய்யவோ நிர்வாக உத்தியோகஸ்தராயிராத ஒரே உத்தியோகஸ்தர் அல்லது ஊழியரை நியமிக்கும்படி அவசியமானபோது அவர்களுக்கு உத்தரவிடலாம் :

ஆனல், பொதுஜன சுகாதார சிப்பந்தி பற்றிய பிரேரணைகள் விஷயமாக இன்ஸ்பெக்டர் பப்ளிக் ஹெல்த் டைரெக்டரைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

2. சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அளவுகள் உத்தியோகஸ்தருக்காவதும் ஊழியருக்காவதும் கொடுக்கப்படத்தக்க சம்பளத்தையும் வர்த்தனைகளையும் கொடுக்கவேண்டும்; அவற்ருேடு கூட அவருடைய ரஜா சம்பளம் அல்லது ப்ராவிடென்ட் பண்டுக்காக அப் பஞ்சாயத்துக்களின் வருமானம் அவ்வுத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் செய்த மொத்த வேலை அல்லது இது காரியத்துக்காக இன்ஸ்பெக்டர் தகுதியென்று கருதக்கூடிய வேறெந்த தரவு இவற்றை அனுசரித்து இன்ஸ்பெக்டர் விதிக்கக்கூடிய வீதப்படியும் விதமாகவும் கொடுக்கப்படத்தக்க சகாயத் தொகைகளையும் கொடுக்க வேண்டும்.

3. மேற்படி சட்டத்தின் 58 (1) பிரிவில் குறிப்பிட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தும் காரியத்துக்காக சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களில் ஒன்றின் நிர்வாக அதிகாரியை இன்ஸ்பெக்டர் குறிப்பிடவேண்டும்.

4. சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களில் எவற்றின் நிர்வாக அதிகாரிக்கேனும் 3-வது விதியின்படி குறிப்பிடப்பட்டுள்ள நிர்வாக அதிகாரி அந்த விதியில் குறிப்பிட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்துவது திருப்திகரமாயிரா விட்டால், முதலில் சொன்ன நிர்வாக அதிகாரியானவர் இது விஷயத்தை இன்ஸ்பெக்டரின் ஆலோசனைக்குக் கொண்டு வரலாம்; அப்படி ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்ட விஷயத்தின் பேரில் இன்ஸ்பெக்டருடைய தீர்மானம் முடிவானதாகும்.

2-வது 3-வது விதிகளின்படி செய்யப்பட்ட ரெகுலேஷன்கள் மாற்றப்படலாம் அல்லது ரத்து செய்யப்படலாம்; ஆனல், சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகள் எல்லாம் அவ்வாறு மாற்றுவதற்கேனும் ரத்து செய்வதற்கேனும் அங்கீகாரம் அளிக்க வேண்டும்.

5. 52-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி இன்ஸ்பெக்டர் நடவடிக்கை எடுத்துக் கொண்டால், அவர் 2-வது விதிகளில் குறிப்பிட்டுள்ள விஷயங்கள் எல்லாவற்றைப் பற்றியுமாவது தாம் அவசியமென்று அல்லது உசிதமென்று கருதும் கட்டளைகளைப் பிறப்பிக்கலாம்.

6. மேற்சொன்ன விதிகளில் எவற்றின்படியாவது பிரதேச அதிகார சபைகளுக்குள் அபிப்பிராய பேதம் எதுவேனும் ஏற்பட்டால், அதை இன்ஸ்பெக்டருடைய ஆலோசனைக்கு அனுப்ப வேண்டும்; அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

7. சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகளில் ஒன்று ஒரு கன்டோன்மென்ட் அதிகார சபையாயிருந்தால் அல்லது ஒரு பெரிய ரேவின் ரேவு அதிகார சபையாய் இருந்தால், 52-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படியாவது மேற் சொன்ன விதிகளில் எவற்றின் படியாவது இன்ஸ்பெக்டருக்குள்ள அதிகாரங்கள் இந்த ராஜ்ய அரசாங்கத்தார் மூலமாகப் பெறப்படுகிற மத்திய அரசாங்கத்தாரின் சம்மதத்தின் பேரில் தான் செலுத்தப்படத்தக்கவையாகும்.

உத்தியோகஸ்தர்களையும் ஊழியர்களையும் மாற்றுவது

60. (1) (நிர்வாக உத்தியோகஸ்தர் உட்பட) ஒரு பஞ்சாயத்தின் யாதொரு உத்தியோகஸ்தரை அல்லது ஊழியரை யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அல்லது வேறு யாதொரு பஞ்சாயத்தின் சேவைக்கு இன்ஸ்பெக்டர் மாற்றலாம்.

ஆனால். (நிர்வாக உத்தியோகஸ்தர் நீங்கலாக) உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் எவரையும் சம்பந்தப்பட்ட கமிஷனர்களை அல்லது நிர்வாக அதிகாரிகளைக் கலந்து ஆலோசனை செய்தன்றி மற்றப்படி அவ்வாறு மாற்றக்கூடாது.

இந்த உட்பிரிவின்படி, ஒருவரை மாற்றுகையில் அந்த மாற்றத்தைக்கிரமமாக அமுல் நடத்தும் காரியத்துக்காக அவசியமெனத் தாம் கருதக்கூடிய பொதுவான அல்லது விசேஷ கட்டளைகளை இன்ஸ்பெக்டர் பிறப்பிக்கலாம்.

(2) இந்தச் சட்டத்தில் அல்லது ஜில்லா முனிசிபாலிட்டிகளைக் குறித்த (சென்னை 1920-ம் ஆண்டு V-வது சட்டமாகிய) 1920-ம் ஆண்டு சென்னபட்டணத்துச் சட்டத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, (கமிஷனர் உட்பட) யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியரை அரசாங்கத்தார் வேறு யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அல்லது ஜில்லா முனிசிபாட்டிகளைக் குறித்த (சென்னை 1920-ம் ஆண்டு V-வது சட்டமாகிய) 1920-ம் ஆண்டு சென்னபட்டணத்துச் சட்டத்தின் கீழ் அமைக்கப் பட்ட யாதொரு முனிசிபாலிட்டியின் கீழ் மாற்றலாம்.

ஆனால், (கமிஷனர் நீங்கலாக) எந்த உத்தியோகஸ்தரையும் அல்லது ஊழியரையும் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களை அல்லது முனிசிபல் கவுன்சில்களைக் கலந்தாலோசித்தன்றி மற்றப்படி அவ்வாறு மாற்றக்கூடாது.

இந்த உட்பிரிவின்படி ஒருவரை மாற்றுகையில், அந்த மாற்றத்தைக்கிரமமாக, அமுல் நடத்தும் காரியத்துக்காக அவசியமெனத் தாம் கருதக்கூடிய பொதுவான அல்லது விசேஷக் கட்டளைகளை யாதொரு அதிகாரி பிறப்பிக்கலாம்.

உத்தியோகஸ்தர்களையும், வேலைக்காரர்களையும் தண்டனை செய்ய அதிகாரம்.

61. அரசாங்கத்தாரால் செய்யப்பட்ட விதிகளின் மேல் பார்வைக்குட்பட்டு, நிர்வாக உத்தியோகஸ்தர் பஞ்சாயத்தினுடையவும் அல்லது கமிஷனர், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் யுடையவும் தக்கபடி அவைகளின் இலாகா விதிகளை (ரூல்களை) அல்லது ஒழுங்கை மீர்வார்களாகிலும், ஜாக்கிரதையாக இல்லாதவர்களாக இருந்தாலும், தகுதி அற்றவர்களாக இருந்தாலும், கடமையை அலட்சியம் செய்பவராக இருந்தாலும், கெட்ட நடத்தை உள்ளவராய் இருந்தாலும் அவைகளின் உத்தியோகஸ்தர்கள் அல்லது வேலைக்கரரர்கள் பேரில் பழி சுமத்தலாம், அபராதம் போடலாம், அவர்களுடைய உயரும் சம்பளத்தை நிறுத்தி வைக்கலாம். அவர்கள் உயர் பதவிக்கு போவதை தடுக்கலாம். உத்தியோக முறைமையின் ஜாபிதாவில் மேலே உள்ளவரின் பெயரை கீழுக்கு இறக்கி விடலாம், அல்லது கீழ் வேலைக்கு போகும்படி செய்யலாம். அல்லது காலத்துக்கு தக்கபடி சம்பளம் கிரமமாய் ஏற வேண்டியதை கீழ்தரத்திற்கு மாற்றி விடலாம். வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம், அல்லது தள்ளுபடி செய்யலாம்.

குறிப்பு

பி. 61 **நீக்கிவைத்தல்.**—ஒரு சிப்பந்தியை கடைசியில் நிறுத்தாவிட்டால் அவரைநீக்கி வைத்த காலத்திற்கு அவர் சம்பளம் பெறலாம். (புல்டானு முனிஸிபாலிடி எ. கார்வே A.I.R. 1946 M. 347 (348)] ஒருவரைத் தள்ளிவிட்ட பிறகு அவர் மூலமே ராஜிநாமாவை பெற்றுக் கொண்டு அவரை வேலையிலிருந்து நிறுத்தப்பட்டதாகத் தீர்மானித்தாலும், அவரை நீக்கி வைத்த காலத்திற்கு யாதொரு சம்பளமும் கிடையாது. [டுபீர்மிஸிர் எ, பைசா பாத் டிஸ்டிரிக்ட் போர்டு A. I.R.. 1937 Oudh 45]

தள்ளி விடுதல்.—இந்தச் சட்டப்படி தள்ளி விடுதல் சம்பந்தமான தாவாக்களை நோட்டீஸு கொடுத்து செ, 178 படிக்கு ஆறு மாதத்திற்குள் செய்ய வேண்டும். அதற்கு மேற் சென்றால் தாவாக்கள் தள்ளுபடியாகும். [ரத்னகிரி முனிஸிபாலிடி-எ-வாஸுதேவ் பாலகிருஷ்ண 39 Bom. 600 = 30 I. C. 390] இவ்வளவு குற்றஞ் செய்தால் தான் தள்ளிவிடலாம் என்று சொல்லமுடியாது. தள்ளி விடுவது விதிகளைப் பொறுத்திருக்கும். [அபிரகாம் ரூபென்-எ-கராச்சி முனிசிபாடிலி A. I. R. 1929 Sind 69] ஒரு குமாஸ்தாவைத் தள்ளிவிட்டார்கள். தன்னைத்தள்ளியது சட்ட விரோதமானதென்றும், தனக்குக் கோர்ட்டு கட்டவேண்டிய ஸ்டாம்பைக் கட்ட சக்தியில்லாமையால் அவரை 'பாப்ராக்க' கக் கருதி ஸ்டாம்பில்லாமலே தாவா ஏற்றுக் கொள்ளும்படி சிவில் கோர்ட்டுக்கு மனுச் செய்துகொண்டார். அவர் நெடுங் காலமாக வேலையிலிருந்து வந்தார் எனவும், அவர் முன் இருந்த வீட்டிலேயே குடியுள்ளாரெனவும், அவர் சொல்வதை நம்பக்கூடாது எனவும் அந்தப் பாப்பர் மனுவைத் தள்ளி விட்டார்கள். விசாரிக்கும் போது, அவர் அந்த வீட்டிற்கு 2 வருஷகாலமாக வாடகை கொடுக்கவில்லை யென்றும், அவரை அந்த வீட்டை விட்டுக் காலிசெய்ய அந்த வீட்டுச் சொந்தக்காரர் மனு விட்டிருப்பதாகவும் ஏற்பட்டதின் பேரில் அவரைப் பாப்பராக ஒத்துக்கொள்ளப்பட்டது [தேவிதாஸ் எ. நாகபூர் முனிஸிபாலிடி A. I. R. 1933 Nag. 104] ஒரு உத்தியோகஸ்தர் தன்னிடத்தில் இருந்த இரும்புப்பெட்டியில் ரூபாய்களைக் காணோமென்று தெரிவித்தார், ப்ரஸிடெண்டானவர் அத் தொகையை அவ்வுத்யோகஸ்தருடைய சம்பளம் மூலமாகவும், ரொக்கமாகவும் பெற்றுக் கொண்டு வேலையிலிருந்து அவனைத்தள்ளி விட்டார், அந்த உத்தியோகஸ்தர் முனிஸிபல் கமிட்டிக்கு அபீல் செய்து கொண்டார். அபீல் செய்ததின் பேரில் அவரை மறுபடி சேர்த்துக் கொள்ளும்படி உத்திரவு செய்தார்கள். அவன் செலுத்திய ரூபாய்களையும் வாபீஸ் செய்ய உத்திரவு செய்தார்கள். இது விஷயம் முனிஸிபல் கௌன்சிலில் தெரியப்படுத்தப்பட்டது. இக் கௌன்சிலில் இவை இரண்டையும் ஆமோதிக்கவில்லை. அதன்பேரில் அவர் சிவில் கோர்ட்டில் தாவா செய்தார். சிவில் கோர்ட்டுத் தீர்மானத்தில் முனிஸிபல் கமிட்டி அபீலைச் சட்டப்படி நடத்தியதால் அதை முனிஸிபல் கௌவன்சில்மாற்ற அதிகாரமில்லை என்றும்,ஆகையால் அந்த உத்தியோகஸ்தரை மறுபடியும் வேலையில் அமர்த்த வேண்டுமென்றும் அவர் கொடுத்த ரூபாயை அவரிடமே கொடுக்கவேண்டும் என்றும் தீர்மானித்தனர். [விருதுநகர் முனிசிபாலிடி எ. ஏசுநாதராவ். A. I. R. 1936 M 498] ஒருவரை கிரிமினல் கோர்ட்டார் தண்டித்தனர். அந்தக் காரணத்தை யொட்டி அவரை வேலையிலிருந்து தள்ளிவிடப்பட்டது. பிறகு அவர் தண்டனை பேரில் அபீல் செய்து கொண்டார். அந்த அபீலில் அவருக்கு அனுகூலமான தண்டனை எடுத்து விடப்பட்டது. அபீலில் அவருக்கு அனுகூலமான காரணங்கொண்டு அவரை மறுபடியும் வேலையில் வைத்துக் கொள்ளும்படி அவர் மனு போட்டுக்கொண்டதில் அந்த மனு தள்ளிவிடப்பட்டது. அவரை அந்தப்படி ஏற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயமில்லை என்று கோர்ட்டார் தீர்மானித்தார்கள். [எம் அண்டு எஸ். எம். ரயில்வே-எ-ரங்காராவ் A. I. R. 1940 M. 269.]

விதிகள்: - அப்பீலாகச் செய்வது.—விதிகள்படி நடந்து கொள்ளாவிட்டால் மேலதிகாரிகளுக்கு அப்பீல் செய்ய வேண்டுமே யொழிய, கோர்ட்டிற்குச் சென்றால் செல்லாது [லோஷன்லால்-எ-அலிகார் டிஸ்டிரிக்ட் போர்டு A. I. R. 1935 A. 802 (805)]

விதிகள்:—ஸ்டாண்டிங் கமிட்டி அப்பீல்கள்.—விதிகள்படி ஸ்டாண்டிங் கமிட்டி நடத்த வேண்டுமென்றிருந்தால் கோர்ட்டார் அதில் பிரவேசிக்கமாட்டார்கள். இந்தச் சட்டத்தின் கீழ் நடத்தும் உத்தியோகஸ்தர்களுக்கும், தனிப்பட்ட நபர் ஒருவரின் கீழ் ஒருவர் ஏஜெண்டாக இருப்பதற்கும் அதிக பேதங்களுண்டு, [அப்ஸ்லூர் ரஹமான் குறித்து A. I. R. 1913 F.C. 18]

பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் சிப்பந்திகளின் குற்றமான தனி வாழ்விலும் அதிகாரிகள் தலையிடலாம் (பக்கங்கள் 147 - 158) களை பார்க்கவும்.

எல். என். பாண்டே என்ற சர்க்கார் ஊழியர் ஒருவர் 1958 ஜுலை 27தேதி நள்ளிரவில் சர்தார் கனுங்கோ என்பவரின் வீட்டிற்குள் நுழைந்து அவரது மனைவியை பலாத்காரம் செய்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இது பற்றி சப் டிவிஷனல் ஆபீசரிடமிருந்து ரிப்போர்ட் வந்ததும் ஸ்ரீ பாண்டேயை ஜில்லா மாஜிஸ்டிரேட் 'சஸ்பெண்ட்' செய்து விட்டார். இதை ஆட்சேபித்தும் சஸ்பெண்ட் உத்திரவை ரத்து செய்யுமாறு கோரியும் பாண்டே அலகாபாத் ஹைக்கோர்ட்டில் 'ரிட்' மனுதாக்கல் செய்தார்.

இந்த 'ரிட்' மனுவை அலகாபாத் ஹைக்கோர்ட் நீதிபதி ஸ்ரீ தாவன் நிராகரித்து ஒழுங்கீனமான நடத்தைக்கு தனது சிப்பந்தியை தண்டிக்க சர்க்காருக்கு உரிமை உண்டு என்று தீர்ப்புக்கூறினர். இவ்விவகாரம் தன் சொந்த விஷயம் என்றும் தன் ஆபீஸ் அலுவல்களுடன் சம்பந்தப்படாத விஷயம் என்றும், எனவே தன்னை தண்டிக்க சர்க்காருக்கு அதிகாரமில்லை என்றும் மனுதார் தனது 'ரிட்' மனுவில் கூறியிருந்தார்.

இந்த வாதத்தை நீதிபதி நிராகரித்து தமது தீர்ப்பில் கூறியதாவது.

சர்க்கார் அதிகாரி என்ற ஓதாவிற்கு தகுதியில்லாமலோ அல்லது ஒழுங்கு நியதிகளை மீறியோ சர்க்கார் அதிகாரி ஒருவர் ஒழுங்கீனமாகவும், கண்யக்குறைவாகவும் நடந்துக் கொண்டதாக சர்க்கார் கருதினல் அவரது உத்யோக அலுவல்களில் சம்பந்தப்படாத காரியங்களுக்குக் கூட சர்க்கார் ஊழியரை டிஸ்மிஸ் செய்யவோ அல்லது வேறு விதமாக தண்டிக்கவோ அரசியல் கட்டத்தின் 310-வது ஷரத்தின் கீழ் ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனல் சம்பந்தப்பட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுப்பதற்கு தகுந்த காரணம் காட்டப்பட வேண்டும்.

கண்யத்தை நிலைநாட்ட வேண்டும்

தங்கள் சொந்த வாழ்வில் சர்க்கார் ஊழியர்கள் அக்ரமம்செய்து கொண்டு இருப்பதை சர்க்கார் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தால் சர்க்கார் நிர்வாகத்தின் கண்யமும் கௌரவமும் படு வீழ்ச்சி அடைந்துவிடும். சர்க்கார் ஊழியர்கள் உத்தியோக வாழ்வில் மட்டுமின்றி சொந்த வாழ்விலும் ஓரளவு கண்யத்தை நிலை நாட்ட வேண்டுமென்று சர்க்கார் எதிர் பார்ப்பதில் தவறில்லை. உதாரணமாக ஒரு மனைவி உயிருடன் இருக்கும் பொழுது மறுமணம் புரிந்து கொள்ளக் கூடாது என்று ஊழியர்களைக் கட்டாயப்படுத்த சர்க்காருக்கு அதிகாரமுண்டு. ராஜாங்க வைபவங்களில் 'மதுபானம்' அருந்தக் கூடாது என்று கட்டாயப்படுத்தவும் முடியும். சர்க்கார் ஊழியர் நடத்தை விதிகளில் கொடுக்கல் வாங்கலைத் தடைப்படுத்தியும். ஸ்தாவர சொத்துக்கள் வாங்குவதையும். விற்பதையும் கட்டுப்படுத்தவும் விதிகள் இருப்பதிலிருந்து சொந்த வாழ்விலும் சர்க்கார் ஊழியர்கள் ஓரளவு கண்யத்துடன் நடந்துக்கொள்ள நிர்ப்பந்திக்க அரசாங்கத்திற்குள்ள விரிவான அதிகாரம் தெளிவாகும்.

வாக்கு மூலத்தில் பொய்யான தகவல்கள் கொடுத்ததாக இ. பி. கோ. 193-வது பிரிவின்படி ஏன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கூடாதென்பதற்கு காரணம் காட்டும்படி மனுதாருக்கு நோட்டீஸ் பிறப்பிக்கவும் கோர்ட் உத்திர விட்டது. [தினமணி 4-4-1959]

பொது சுகாதார சிப்பந்திற்கு சில பிரிவுகள் பிரயோகப்படுவது

62. பொது சுகாதாரத்தைக் குறித்த (சென்னை 1939-ம்ஆண்டுத்திய III-வது சட்டமாகிய)—1939-ம்ஆண்டுத்திய சென்னபட்டணத்துச் சட்டத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் ஆகியவற்றின் பொது சுகாதாரச் சிப்பந்திகளுக்கும் 57-முதல் 61 வரையிலுள்ள பிரிவுகளில் உள்ள ஷரத்துக்கள் பிரயோகப்படும்.

குறிப்பு

பொதுஜன தேகாரோக்கிய சிப்பந்தியில் பதவிகளுக்கு அனுமதி கொடுப்பது.

பி. 62ன் படிக்கு விதி (ஞ—III—3).

யாதொரு பஞ்சாயத்தின் பொதுஜன தேகாரோக்கிய சிப்பந்தியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் இவர்களின் எண்ணிக்கை, உத்தியோகப் பெயர், தாங்கள் ஆகிய இவற்றையும் அவர்களுக்குக் கொடுக்கப்படத்தக்க சம்பளங்கள், கட்டணங்கள், வர்த்தனைகள் ஆகிய இவற்றையும் நிச்சயிப்பதற்குமுன் அல்லது மாற்றுவதற்குமுன் இன்ஸ்பெக்டரானவர் பப்ளிக் ஹெல்த் டைரெக்டரைக் கலந்தாலோசிக்க வேண்டும். எவ் விஷயத்திலேனும் இன்ஸ்பெக்டருக்கும் பப்ளிக் ஹெல்த் டைரக்டருக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டால், இன்ஸ்பெக்டர் அது குறித்து உத்தரவு பிறப்பிப்பதற்காக அதனை அரசாங்கத்தின் ஆலோசனைக்கு அனுப்பவேண்டும்.

அத்தியாயம் 3—(பிரிவுகள் 63 - 114)

I-பஞ்சாயத்துகளின் II-பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின்

(1) அலுவல்களும் (2) அதிகாரங்களும் (3) சொத்தும்

அலுவல்கள்—பி. 63, பி. 64 பஞ்சாயத்தினுடைய அலுவல்களை தெரிவிக்கிறது. பி. 65 பி. 67 பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் செய்யவேண்டிய, செய்யக்கூடிய அலுவல்களை காட்டியிருக்கிறது. இவைகள் அன்றி இவைகள் என்ன கார்யங்கள் செய்யலாம். செய்யவேண்டும், செய்யக்கூடும் என்று சொல்லி இருக்கிறது.

இந்த அலுவல்களை மீட்டிங்குகளில் பஞ்சாயத்துகளிலும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களில் இன்ன இடத்தில் இன்ன துகையில் செய்யவேண்டும் என்று மெம்பர்கள் (அங்கத்தினர்கள்) தீர்மானிப்பார்கள். அவைகளை மெம்பர்களே எடுத்துக்கொண்டு நடத்த கூடாது. அந்த காரியம் (அலுவல்)களைப் பட்டணம் பஞ்சாயத்துகளில் நிர்வாக உத்யோகஸ்தரும், கிராம பஞ்சாயத்துகளில் நிர்வாக அதிகாரி என்னும் தலைவர்தான் நடத்தவேண்டும் பி. 8 யை பார்க்கவும். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அலுவல்களை மீடிங்கில் மெம்பர்கள் தீர்மானிப்பார்கள். அவைகளை கமிஷனர்கள் நிறைவேற்ற வேண்டும். பி. 11, பி. 44 (4) பார்க்கவும்.

பஞ்சாயத்துகளும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும் பீடிகையின் 1-வது பாராபடிக்கு (பக்கம் 12-யை பார்க்கவும்) "உணவு உற்பத்தியை ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதிகரிப்பது" பஞ்சாயத்தினுடையவும். பஞ்சாயத்தினுடையவும் முக்கியமான பிரதானமான, அவசியமான வேலையாக முதல் முதலிலேயே கண்டிருக்கிறது. அதை சட்டபடி நடத்த வேண்டும். எமது அபிப்ராயத்தில் நிலங்களை தங்கள் வசம் செய்து கொள்ளாமல் அல்லது வைத்துக்கொள்ளாமல் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் யாதொரு உற்பத்தியும் செய்யமுடியாது. கடைசியாக அரசாங்கமே மொத்த நிலங்களை அதிக உற்பத்திக்காக கங்கானிக்க வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தார், கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் பஞ்சாயத்துகள். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் மூலமாகவும் பயிர் செய்து உற்பத்தி அதிகப்படுத்த வேண்டியிருக்கிறது. இதை குறித்து பிரிவு 66ன் கீழ் விஸ்தாரமாக எழுதி இருக்கிறது.

சில விஷயங்களுக்காக ஏற்பாடு செய்யப் பஞ்சாயத்து கடமைப் பட்டிருப்பது

63. இச் சட்டத்தில் கண்ட நிபந்தனைகளுக்கும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளுக்கும் உட்பட்டு, யாதொரு பஞ்சாயத்தானது, அடியிற் கண்ட விஷயங்கள் சம்பந்தமாக கிராமத்தின் அல்லது பட்டணத்தின் அவசியங்களை நிறைவேற்றும் பொருட்டு அதனுடைய நிதி இடங்கொடுக்கிற வரையில் நியாயமான ஏற்பாடு செய்யக் கடமைப்பட்டதாகும்; அவையாவன.—

(a) கிராமத்திலிருக்கிற சகல பாட்டைகளையும் அதாவது (தேசீய ரீதியானவையும், ராஜ்ய ரீதியானவையுமான பெரிய ரஸ்தாக்கள், பிரதான ஜில்லா பாட்டைகள், பஞ்சாயத்து யூனியன் பாட்டைகள எனத் தாம் பிரிக்கப்பட்ட பாட்டைகள் தவிர, கிராமத்திலும், பட்டணத்திலுமுள்ள சகல பாட்டைகள், அப்பாட்டைகளில் உள்ள சகலவாராவதிகள், கல்வெட்டுகள், பாட்டை அணைகள், மேட்டுப்பாதைகள் இவற்றை ஏற்படுத்துவதும், செப்பனிடுவதும், பராமரித்து வருவதும் ;

(b) பொது இடங்களிலும் பொதுப் பாட்டைகளிலும், கட்டிடங்கள் உள்ள பொது பிரதேசங்களிலும் விளக்குப் போடுவது ;

(c) ஜலதாரைகளை ஏற்படுத்துவதும், வடிகால் நீரையும் சாக்கடைத் தண்ணீரையும் ஒருவகை செய்வதும் ;

(d) தெருக்களைச் சுத்தி செய்தும், குப்பைக் குவியல்களையும், தாமாகவே அடர்த்தியாய் வளர்ந்திருக்கிற செடி கொடிகளையும், சப்பாத்திக்கள்ளியையும் அப்புறப்படுத்துவதும், உபயோகிக்கப்படாத கிணறுகள், சுகாதாரக் கேடான குளங்கள், குட்

டைகள் வடிகால்கள், குழிகள் அல்லது பள்ளங்களைத் தூர்த்து விடுவதும், கிராமத்தின் அல்லது பட்டணத்தின் சுகாதார நிலைமையை இதர வழிகளில் சீர்திருத்துவதும் ;

(e) பொதுவான கக்குஸுகள் ஏற்படுத்துவதும் கக்குஸுகள் பொதுவானவைகளாயிருந்தாலும் சரி சொந்தமானவைகளாயிருந்தாலும் சரி அவைகளைச் சுத்தி பண்ணுவதற்காக ஏற்பாடு செய்வதும்.

(f) (பிரேதங்களைப்) புதைக்கிற இடங்களையும் தகனம்செய்கிற இடங்களையும் ஏற்படுத்துவதும் பராமரித்து வருவதும் ;

(g) கிணறுகள் எடுப்பதும், அவைகளுக்குமராமத்து செய்வதும், துணி தோய்க்கிற காரியங்களுக்காகவும் குளிக்கிற காரியங்களுக்காகவும், வேண்டிய தண்ணீருக்காகவும், குடிக்கிற காரியங்களுக்காக வேண்டிய காப்பாற்றப்பட்ட தண்ணீருக்காகவும், குட்டைகள் அல்லது குளங்கள் வெட்டுவதும், அவைகளுக்கு மராமத்து செய்வதும் அவைகளைப் பராமரித்து வருவதும், ஜல சூத்திரங்களைக் கட்டுவதும், பராமரித்துவருவதும்.

பகுதிகள் 63, 64.—பஞ்சாயத்து விசாரணை வரம்பிற்குள் இருக்கும் கட்டுக்கோப்பு பிரதேசங்களிலுள்ள சாலைகள் பொது ஸ்தலங்கள் ஆகிய இடங்களுக்கு விளக்குப்போடும் கடமை பஞ்சாயத்தின் கட்டாயக் கடமைகளில் ஒன்று என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கட்டுக்கோப்பு பிரதேசங்களைத் தவிர மற்றப் பிரதேசங்களில் உள்ள சாலைகள் பொது ஸ்தலங்கள் ஆகியவற்றிற்கு விளக்குப் போடும் கடமை பஞ்சாயத்தின் யுக்தானுசாரப்படிக்கான கடமையென்று செய்யப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்தின் யுக்தானுசாரப்படிக்கான கடமைகளில் பூங்காக்களை ஏற்படுத்தி பராமரித்து வருதல். படிப்பு பராமரிக்கும் போதன நிலையங்கள், சமூகக் கல்வி போதன நிலையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்திப் பராமரித்து வருதல் ஆகிய இவையும் சேர்க்கப்பட்டுள்ளன. பிரிவுகள், 65, 66, 67 பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் கடமைகளையும், அதிகாரங்களையும் தெரிவிக்கின்றன.

பி: 63 (a) பொதுபாட்டை : பொது பாட்டைகளை ஏற்படுத்துவதும் செப்பனிடுவதும் (ரிப்பேர்) (Repairs) பராமரித்து வருவதும் மெய்ன்டினன்ஸ் [Maintenance]—பிரிவுகள் 2 (28); 64 (a), (b), 76, 77, 78, 82, 175 களை பார்க்கவும். இவை கடமையில் சேர்ந்தவை, பஞ்சாயத்தின் செய்கையினுல் ஒரு பாதை விஷயமாக பொது ஜனங்களுக்கு கெடுதி நேரிட்டால் அந்த நஷ்டத்தை பஞ்சாயத்து தான் கட்டி கொடுக்க வேண்டியதாகும். [கிருஷ்ணமூர்த்தி-எ.-மாயவரம் தாலுக்கா போர்டு. 42 M. 331 = 50 I. C. 809. :- சுப்ரமணியம்-எ.-நர்ஸாபூர் டிஸ்டரிக்ட் போர்டு A. I. R. 1941 M. 733 (735):: விசாகப்பட்டணம் முனிசிபாலிடி-எ. வில்லியம் போஸ்டர், (1918) 44. I. C. 308 (311) = 41 M. 538] ஒரு பொது பாட்டையை செப்பனிட வேண்டும் என்பதைக் குறித்தும், அது எந்தக் காலத்திற்குள் செப்பனிடப்பட வேண்டும் என்றும் தாவா செய்தால் அது செல்லாது. [பெனுரஸ்-(காசி) முனிசிபாலிடி-எ.-பிஹரிலால், A. I. R. 1926 A 538] ஒரு பாதையை செப்பனிட குறைந்த சிலவில் செய்து விடலாம் என்று வெளியார் தாவா செய்தால் அது செல்லாது, [கிருஷ்ணசாமி குறித்து 48 I. C. 128 (M) = 35 M. L. J. 251] செப்பனிடுவதில் பக்கத்து நிலக்காரர்களுக்கு அல்லது வீட்டுக்காரர்களுக்கு பஞ்சாயத்து யாதொரு நஷ்டமும் உண்டாக்கக் கூடாது. ஒருவன் பாதையிலிருந்து வடிந்து போகும் தண்ணீரை தன் நிலத்தில் விழாமல் தடுக்க ஒரு அணை போடும் பட்சத்தில் அதை எடுத்து விட பஞ்சாயத்திற்கு அதிகாரம் கிடையாது [ரங்கா எ. கும்பகோணம் முனிசிபாலிடி 29 M. 539] அம்மாதிரி செப்பனிடுவதில் (ரிப்பேர்) ஒருவனுடைய குதிரைக்கு கெடுதி நேரிட்டால் அதை பஞ்சாயத்துதான் கட்டிக்கொடுக்க வேண்டும் [ஈல்ஸ்-எ.-மதராஸ் முனிசிபாலிடி 14 M. 386] பாட்டைகள் ஓரங்களில்யுள்ள மரங்கள் பற்றி செ. 51 (a) பார்க்கவும்.

பொதுபாட்டை: அதன்பேரில் கட்டுக்கோப்பு: நஷ்ட ஈடு :- பொது பாட்டையில் ஏதாவது ஒரு பஞ்சாயத்தின் கட்டுக்கோப்பு இருக்கும் பட்சத்தில் அதை சரிவர வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி இல்லாமல் மற்றவர்களுக்கு நஷ்ட முண்டாகில் பஞ்சாயத்துதான் கட்டிக்கொடுக்க வேண்டும் [நூர்பீபி-எ.-அம்பாலா முனிசிபாலிடி. A I. R. 1939 L. 453]

வாராவதிகள், கல்வெட்டுகள் (சிறு பாலங்கள்) பாட்டை அணைகள் (ரோட்டாம்ஸ்) மேட்டு பாதைகள் (காஸ்வேஸ்):—வாராவதிகள் முதலியவைகள் எந்த இடத்தில் கட்டப்பட வேண்டும் என்பது பஞ்சாயத்தின் பாத்தியமே ஒழிய பொது மக்கள் தாங்கள் இஷ்டமான இடத்தில் கட்ட வேண்டும் என்று வற்புறுத்த அதிகாரம் கிடையாது [அய்யாசாமி—எ—தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்டு போர்டு, 31 M 177]

நி. 63 (b) விளக்கு போடுவது.:- ஒரே சமயத்தில் எல்லா இடங்களிலும் விளக்குகள் போட பஞ்சாயத்துகளுக்கு போதுமான பணம் கிடையாது. இதற்காக சண்டை இல்லாமல் கொஞ்சங் கொஞ்சமாக விளக்குகள் போட்டுக் கொண்டு வருவது உத்தமமானதாகும். வழியில் ஏதாவது தடங்கல் இருக்கும் பட்சத்தில் அதற்கும் விளக்கு வைக்க வேண்டும். [கல்கத்தா கார்ப்பரேஷன்--எ-ஆண்டர்சன் 10 Cal. 455] பிரிவுகள் 64 (b), 69 களைப் பார்க்கவும்.

பி, 63 (c) ஜலதாரைகளை ஏற்படுத்துவது :— இதைக்குறித்து 1939ஞூத்திய மதருஸ் சுகாதாரச் சட்டத்தின் பிரிவுகள் 27 முதல் 36 வரைக்கும் பார்க்கவும். பி. 29 சொந்த பாட்டையிலுள்ள ஜலதாரைகள் பற்றியும், பி. 30 படிக்கு குடிசைகளுக்கு ஜலதாரைகள் பற்றியும் பி. 31 படிக்கு சந்து, சின்ன வழி, முற்றம் முதலியவைகளின் ஜலதாரைகள் பற்றியும், பி. 32 படிக்கு ஜலதாரைத் தொட்டிகளைப் பற்றியும் பி. 33 படிக்கு புதுக்கட்டிடங்களில் ஜலதாரைகளில்லாம லிருக்கக்கூடாது என்பது பற்றியும், பி. 34 படிக்கு சாக்கடையின் தண்ணீரும், குப்பையும் தெருக்களில் போடக்கூடா தென்பது பற்றியும், பி 35 படிக்கு கெடுதி உண்டாக்கக் கூடிய பொது சாக்கடை குப்பை பொது ஜலதாரையில் விடப்படக் கூடா தென்பதை பற்றியும், பி. 36 படிக்கு நீர் நதிகளையும் கால்வாய்க்கால்களையும் அசுத்தம் செய்ய லாகாது என்பதைப் பற்றியும், சட்டஞ் செய்யப்பட்டிருக்கிறது. அவைகளைப் பார்க்கவும்.

பி. 63. (d) தெருக்களைச் சுத்திசெய்தல் :— ஒரு பஞ்சாயத்துக்கு கிராமத்திலுள்ள குப்பைகளை வெளிப்படுத்த குப்பை வண்டிகள் அவசியமானவை. அதே மாதிரி குப்பைத் தொட்டிகளும் வீடுகளுள்ள இடங்களில் வைக்க அவசியமாக இருக்கிறது. அந்த குப்பைத் தொட்டிகளை குடித்தனக்காரர்களுக்கும் இடையூறின்றி பஞ்சாயத்தும், நிர்வாக அதிகாரிகளும் தக்க இடங்களில் வைப்பார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது. [ஹன்ஸ ராஜ் ஹீர்த்தி-எ-கராச்சி முனிஸிபாலிடி 8 I. C. 208] பஞ்சாயத்து மூலமாக சிப்பந்திகளைகொண்டு அப்புரப் படுத்திய குப்பைமுதலியது பஞ்சாயத்துக்கு சேரவேண்டும். அதையாரும் பஞ்சாயத்தின் உத்தரவு இல்லாமல் எடுத்து கொண்டு போகக்கூடாது, பி. 88யை பார்க்கவும்.

அடர்த்தியாய் வளர்ந்திருக்கிற செடி கொடிகளையும் சப்பாத்திக்கள்ளியையும் அப்புறப்படுத்துவது— இவைகளினல் அழுக்கும், தும்பும், தூசியும், கிருமிகளும், பாம்புகளும் உண்டாகும். அவைகளினல் மலேரியா முதலிய நோய்களும் உண்டாகும். ஆகையினல் இம் மாதிரி செடி கொடிகளை அப்புறப்படுத்துவது அவசியமானதாகும்.

குளங்களை சீர்திருத்துவது (Repair) செய்வது.— ஒரு குளத்தை செப்பனிடுவதில் அதற்கு சொந்தக்காரரிடம் பஞ்சாயத்து ஏற்பாடுகள் செய்வது கொள்ளலாம். அது பஞ்சாயத்துக் காரியங்களுக்கு விரோதமானதல்ல [பெங்கால் சூபரின்டெண்டெண்டு—எ—நாராயண சந்திரா, A. I. R. 1924 Cal. 101].

சுகாதார நிலைமை— சுகாதார நிலைமையில் கக்கூஸு, சாக்கடைகள் சம்பந்தமானது மட்டுமல்லாமல் இன்னும் பொது ஜனங்களுடைய சகலவிதமான சுகாதார விஷயங்களைப் பற்றியும் கவனிக்கத் தக்கதாகும்.

பி. 63 (e) கக்கூஸுகள் :— மதருஸ் சுகாதார ஆக்டுபடிக்கு புது கட்டிடங்களில் கக்கூஸுக்குப் போக சௌகரியம் இருக்க வேண்டும். கக்கூஸுகள் எம்மாதிரி இருக்க வேண்டும். என்பதைக் குறித்து 37 முதல் 40 வரை செக்ஷன்களில் அந்த சட்டத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

சொந்த கக்கூஸுகளைச் சுத்தம் செய்வது (க XLV, 45) பற்றி விதி

யாதொரு வளவிலிருந்தாவது அதைச் சேர்ந்த யாதொரு இடத்திலிருந்தாவது குப்பை கூளம் அல்லது அழுக்கையேனும், குறித்த யாதொரு வகையைச் சேர்ந்த குப்பை, கூளம் அல்லது அழுக்கையேனும் அப்புறப்படுத்துவதற்காக, ஒரு பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரிக்குத் தகுதி என்று தோற்றக்கூடிய நேரங்கள், கால அளவுகள், இதர விஷயங்கள்

சம்பந்தப்பட்ட ஷரத்துக்களின் பேரிலும், அவ்வாறு அப்புறப்படுத்தும் வேலைக்காகப் பிடிக்கு மென்று பஞ்சாயத்து விதித்திருக்கக்கூடிய வீதப்படிக்கான கட்டணம் செலுத்தப்படுவதன் பேரிலும், மேற்படி நிர்வாக அதிகாரியானவர் அந்த வளவின் சொந்தக்காரர் அல்லது ஆட்சியாளருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

பி: 63 (f) **புதைக்கிற இடம், தகனஞ் செய்கிற இடம்** :—இவைகள் தனிப்பட்ட நபர்களிடம் ஒப்புவிக்கப்படக்கூடாது. பஞ்சாயத்துக்கள் தங்கள் சுவாதீனத்தில் வைத்துக் கொள்ளத் தீர்மானம் செய்து அவைகளை தங்கள் சுவாதீனஞ் செய்து கொள்ள வேண்டும். எந்த மத அதிகாரிகளுக்கு அந்த அந்த மதத்தில் சேர்ந்தவர்கள் என்று சொல்லுகிறவர்களின் சம்பந்தமான மனுஷ பிரேதங்களை புதைக்கவோ, தகனம் செய்யவோ மறுதளிக்க அதிகாரமிருக்கக்கூடாது.

இடுகாடுகள், முதலியவற்றை ஏற்படுத்தி வைப்பது (க XLVI 46) பற்றி விதிகள்

1. ஒரு பஞ்சாயத்து இடுகாடுகளாகவோ, சுடுகாடுகளாகவோ மயானங்களாகவோ உபயோகப்படுத்துவதற்குரிய இடங்களை தனது செலவில் ஏற்படுத்தலாம் ; இது சம்பந்தமாகப் போதிய ஏற்பாடு செய்யப்பட்டிரா விட்டால் அவ்வாறு ஏற்படுத்த வேண்டும் ; அவற்றை உபயோகிப்பதற்கான குத்தகைகளையும் கட்டணங்களையும் அப் பஞ்சாயத்து விதிக்கலாம்.

2. (1) இறந்தவர்களைப் புதைப்பதற்கான அல்லது கொளுத்துவதற்கான அல்லது மற்றபடி ஒருவகை செய்வதற்கான இடமாக உபயோகப்படுவதற்குரிய ஓரிடத்தின் சொந்தக்காரராவது அதன் ஆதிக்கம் வகிப்பவராவது, அவ்விடம் கிராமப் பஞ்சாயத்துக்களைக் குறித்த 1950-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தின் படியாகிலும் ஜில்லா போர்டுகளைக் குறித்த 1920-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தின் படியாகிலும் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டிரா விட்டால், அதைப் பதிவு செய்யுமாறு பஞ்சாயத்துக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

(2) அந்த இடத்தின் ஆதிக்கம் வகிக்கிற சொந்தக்காரர் அல்லது நபர் எவரும் இல்லையென்று பஞ்சாயத்துக்குத் தோற்றினால், அந்த பஞ்சாயத்து மேற்படி ஆதிக்கத்தைத் தானே ஏற்றுக்கொண்டு, அவ் விடத்தைப் பதிவு செய்ய வேண்டும் ; அல்லது ரீஜனல் இன்ஸ்பெக்டரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு அதை மூடிவிடலாம்.

3. (1) இறந்து போனவர்களை ஒருவகை செய்வதற்கான புதிய இடம் தனிப்பட்டவர்களுக்குச் சொந்த இடமாயிருந்தாலும் சரி பொதுவான இடமாயிருந்தாலும் சரி, அத்தகைய எந்த இடத்தையும் விண்ணப்பம் செய்து கொண்டதன் பேரில் பஞ்சாயத்தினிடமிருந்து ஒரு லைசென்ஸ் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி ஏற்படுத்தவோ அமைக்கவோ கட்டவோ உபயோகிக்கவோ கூடாது.

(2) ஒரு லைஸென்ஸுக்கான ஷெ விண்ணப்பத்துடன் லைசென்ஸ் கொடுக்கப் பெற வேண்டிய இடத்தின் நக்ஷா ஒன்றைச் சேர்த்தனுப்ப வேண்டும் ; அந்த நக்ஷாவில் பிரஸ்தாப பிரதேசம், அதன் எல்லை விஸ்தீர்ணம் ஆகிய இவற்றையும், அதில் பற்றுள்ள சொந்தக்காரர் அல்லது நபர் அல்லது சமூகத்தின் பெயரையும், நிர்வாக முறையையும், பஞ்சாயத்து மேற்கொண்டு கேட்கக்கூடிய விவரங்களையுங் காட்டியிருக்க வேண்டும். (நக்ஷா = பிளான்)

(3) எந்தப் பஞ்சாயத்து ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளப்படுகிறதோ அது—

(a) ஒரு லைசென்ஸைக் கொடுக்கலாம் அல்லது கொடுக்க மறுக்கலாம் அல்லது.

(b) பிரஸ்தாப மனைவிஷயமாக எழுப்பப்பட்ட ஆட்சேபனைகள் நிவர்த்தி செய்யப்படுகிறவரையில் அல்லது அது கேட்ட எவையேனும் விவரங்கள் தெரிவிக்கப்படுகிற வரையில் ஒரு லைசென்ஸ் கொடுப்பதை ஒத்திப் போடலாம்.

(4) (3) உப விதியின் பிரகாரம் ஒரு பஞ்சாயத்து பிறப்பித்த எந்த உத்தரவையேனும் ரீஜனல் இன்ஸ்பெக்டர் ரத்து செய்யலாம் அல்லது மாற்றலாம்.

4. (1) ஒவ்வொரு பஞ்சாயத்து ஆபீஸிலும் புஸ்தகம் ஒன்று வைத்து வரப்படவேண்டும் ; இதில், 1 முதல் 3 வரையிலுள்ள விதிகளின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட அல்லது லைசென்ஸ் கொடுக்கப் பெற்ற இடங்களையும் மேற்படி சட்டம் செலாவணியாகத் தொடங்குவதற்கு முன் ஏற்படுத்தப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட அல்லது லைசென்ஸ் கொடுக்கப் பெற்ற சகல இடங்களையும் பதிவு செய்து வைக்க வேண்டும்.

(2) மேற்சொன்ன பிரகாரம் அந்த இடம் ஏற்படுத்தி வைக்கப்பட்டிருக்கிற தென்றோ ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிற தென்றோ லைசென்ஸ் கொடுக்கப் பெற்றிருக்கிற தென்றோ கண்டுள்ள நோட்டீஸ் ஒன்றை இங்கிலீஷிலும் பிரஸ்தாப கிராமத்தின் பிரதான பாஷையிலும் தயாரித்து அதை மேற்படி இடுகாடு அல்லது சுடுகாடு அல்லது மேற்சொன்ன பிரகாரமுள்ள இதர இடத்தின் வாயிலில் அல்லது அதற்குச் சமீபத்தில் எல்லாருக்கும் தெரியும்படியான ஓரிடத்தில் ஒட்டி வைக்க வேண்டும்.

5. எவரும் மேற்சொன்ன பிரகாரம் ஏற்படுத்தி வைக்கப் பட்டுள்ள, பதிப்பு செய்யப்பட்டுள்ள அல்லது லைஸென்ஸ் கொடுக்கப்பெற்றுள்ள ஓரிடத்திலன்றி மற்றப்படி, ஒரு குடியிருப்பிடத்துக்காவது குடி தண்ணீர் ஜலாதாரத்துக்காவது நூறு கஜத்துக்குள்ளிருக்கிற எந்த இடத்திலும் ஒரு பிணத்தைப் புதைக்கவுங் கூடாது. கொளுத்தவுங் கூடாது மற்றப்படி ஒரு வகை செய்யவுங் கூடாது, அல்லது புதைப்பிக்கவோ மற்றப்படி ஒருவகை செய்விக்கவோ, கூடாது அப்படி யெல்லாம் செய்ய அனுமதிக்கவுங் கூடாது.

6. இறந்து போனவர்களை ஒருவகை செய்வதற்கான ஓரிடம் விஷயமாய் ஆதிக்கம் வகிக்கிற நபர் அந்த இடத்தில் பிணத்தைப் புதைக்கிற அல்லது கொளுத்துகிற அல்லது மற்றப்படி ஒருவகை செய்கிறவ்வொரு தடவையும் அதைப்பற்றிய பஞ்சாயத்து நியமித்துள்ள யாதொரு நபரிடம் தகவல் தெரிவிக்க வேண்டும்.

7. (1) ஒரு பஞ்சாயத்து—(a) இறந்துபோனவர்களை ஒருவகை செய்வதற்காகப் பதிவு செய்யப்பட்ட அல்லது லைஸென்ஸ் கொடுக்கப்பெற்ற ஓரிடம், அதற்கு அக்கம்பக்கத்தில் வசித்து வருபவர்களின் தேகாரோக்கியத்துக்கு அபாயம் விளைவிக்கும் அல்லது வெகுசாய் அபாயம் விளைவிக்கக்கூடிய நிலைமையில் அல்லது இடத்தில் இருக்கிற தென்று சந்தேகமறத் தெரிந்துக்கொண்டிருந்து, அல்லது.

(b) யாதொரு இடுகாட்டில் கல்லறைகள் மிகவதிகமாய் இருக்கின்றன வென்று சந்தேகமறத் தெரிந்துகொண்டிருந்து, மேற்சொன்ன பிரகாரமுள்ள ஒரு பொது இடுகாடு அல்லது சுடுகாடு அல்லது இதர இடத்தின் விஷயத்தில், இறந்துபோனவர்களை ஒருவகை செய்வதற்காகக் கிரமமாக அனுமதிக்கப்பட்டுள்ள மற்றொரு சௌகரியமான இடம் அந்த இடத்தைச் சாதாரணமாக உபயோகித்துக்கொள்ளும் நபர்களுக்கென்று இருந்தால் அல்லது ஏற்படுத்தி வைக்கப்பட்டிருந்தால், அந்தப் பஞ்சாயத்து, ரீஜனல் இன்ஸ்பெக்டரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, நோட்டிஸ் கொடுத்து. அதன் மூலமாய், இரண்டு மாத காலத்துக்குக் குறையாமல் அந்த நோட்டிஸில் குறிப்பிடப்பட வேண்டிய ஒரு கால அளவு கழிந்து போனபிறகு அந்த இடத்தில் எந்தப் பிணத்தையும் புதைப்பதோ கொளுத்துவதோ மற்றப்படி ஒருவகை செய்வதோ சட்ட சம்மதமாகாது என்று பிரசித்தம் செய்யலாம்.

(2) (1) உபவிதியின்படி கொடுக்கப்படும் ஒவ்வொரு நோட்டிஸையும் பஞ்சாயத்து விளம்பரப் பலகையில் ஒட்டிவைப்பது மூலமாகவும் பிரஸ்தாப கிராமத்தில் தண்டோரா போடுவது மூலமாகவும் பிரசித்தம் செய்யவேண்டும்.

(3) எவரும் (1) உபவிதியின்படிக்கான ஒரு நோட்டிஸை மீறியும் அந்த நோட்டிஸில் குறிப்பிட்டுள்ள கால அளவு கழிந்துபோன பிறகும் மேற்படி இடத்தில் எந்தப் பிணத்தையும் புதைக்கவுங் கூடாது. கொளுத்தவுங் கூடாது, மற்றப்படி ஒருவகை செய்யவுங் கூடாது, அல்லது புதைப்பிக்கவோ கொளுத்து விக்கவோ மற்றப்படி ஒருவகை செய்விக்கவோ கூடாது அல்லது அப்படியெல்லாம் செய்ய அனுமதிக்கவுங் கூடாது.

(4) ஒரு பஞ்சாயத்து (1) உபவிதியின்படி கொடுத்த எந்த நோடிஸையும் ரிஜனல் இன்ஸ்பெக்டர் ரத்து செய்யலாம் அல்லது மாற்றலாம்.

8. எவராகிலும் 2 (1), 3 (1), 5-வது, 6-வது, 7 (3) விதிகளில் கண்ட எந்த நிபந்தனைகளையேனும் மீறினல் அவருக்கு நூறு ரூபாய் வரை அபராத தண்டனை விதிக்கப்படத் தக்கதாகும்.

ஆனல், 5-வது விதியின் நிபந்தனைகளை மீறினதற்காக எவர்மீதும் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியின் எழுத்து மூலமாக அனுமதியில்லாமல், பிராது தொடரக்கூடாது.

பி. 63 (g) துவைக்கிற, குளிக்கிற, குடிக்கிற காரியங்களுக்காக காப்பாற்றப்பட்ட தண்ணீருக்காக.—இந்த மாதிரி தண்ணீரைக் குறித்து மதருஸ் சுகாதாரச் சட்டம் செ. 17 முதல் 26 களில் விசிதமாய் எழுதப்பட்டிருக்கிறது. அதாவது பி. 17-படிக்கு பஞ்சாயத்து குடி தண்ணீரை ஏற்படுத்தவேண்டும். பி. 18-படிக்கு பஞ்சாயத்து குடி நீருக்காக வேலை செய்ய கவர்ன்

மெண்டும் பஞ்சாயத்துக்கு உத்திரவு செய்யலாம். பி. 19-படிக்கு ஒரு பஞ்சாயத்தினுடைய 'வாடர்ஒர்க்ஸ்' குடிநீருக்கான தண்ணீர் வேலைகளிலிருந்து மற்ருெரு பஞ்சாயத்திற்கு தண்ணீர் அளிக்க கவர்ன்மெண்டிற்கு அதிகாரம் உண்டு. பி. 20 படிக்கு தண்ணீரை உபயோகிக்கும் விஷயத்தில் கலெக்டரானவர் தன் அதிகாரத்தைச் செலுத்தலாம். பி. 21-படிக்கு டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் (சுகாதார டைரக்டர்) ஒரு பஞ்சாயத்தின் ஜலத்தை மேன்மைபடச் சீர் திருத்த உத்திரவிடலாம். செ. 24-படிக்கு இவற்றைக் குறித்து ஹெல்த் ஆபீசரும் அதிகாரம் செலுத்தலாம். பி 25-படிக்கு இனங்களுக்காக ஒரு வரி போட்டும் அதை இவற்றிற்கென்றே செலவிடவேண்டுமென்று உத்திரவிடலாம். பி. 26-படிக்கு வீட்டுக் குடி தண்ணீருக்கு வசதி யில்லாவிட்டால் வீடு கட்டக்கூடாது.

வேறு சில விஷயங்களுக் காக ஏற்பாடு செய்ய பஞ்சாயத்துக்குள்ள அதிகாரம்.

64. இச் சட்டத்தில் கண்ட நிபந்தனைகளுக்கும் அதன்படிச் செய்யப்பட்ட விதி களுக்கும் உட்பட்டு, யாதொரு பஞ்சாயத்தானது, அடியிற் கண்ட விஷயங்கள் சம்பந்தமாய் கிராமத்தின் அல்லது பட் டணத்தின் அவசியங்களை நிறைவேற்றும் பொருட்டு அதற் குத் தகுதியாகத் தோற்றுகிற ஏற்பாட்டையும் செய்யலாம்; அவையாவன :—

(a) பஞ்சாயத்துக்கும், பாட்டையானது பஞ்சாயத்தால் மாத்திரம் பராமரித்து வரப் படாத விஷயத்தில் அதைப்பராமரிக்கும் அதிகாரிக்கும் இடையில் ஒப்புக் கொள்ளப்பட்ட ஷரத்துகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, கிராமத்தில் அல்லது பட்டணத்தில் உள்ள சகல பொதுப் பாட்டைகளின் பக்கங்களில் மரங்களை நடுவதும் பாதுகாப்பதும்;

(b) பொதுவான ரோடுகளிலும், பொது இடங்களிலும் கட்டிடம் கட்டப்பட்ட இடங் கள் அல்லாத பிரதேசங்களில் விளக்குப் போடுவதும்;

(c) பஞ்சாயத்து யூனியன் மார்க்கெட்டுகளாகத் தரம் பிரிக்கப்பட்ட மார்க்கெட்டுகளா யிராத வேறே பொதுவான மார்க்கெட்டுகளை ஏற்படுத்துவதும் பராமரித்து வருவதும்;

(d) பஞ்சாயத்து யூனியன் சந்தைகளாகவும் உற்சவங்களாகவும் தரம் பிரிக்கப்பட்ட வைகளாயிராத வேறே சந்தைகள் விஷயமாகவும் உற்சவங்கள் விஷயமாக வும்மேல் விசாரணை புரிவது;

(e) பொதுவான இறங்குமிடங்களையும் தங்குமிடங்களையும் பார வண்டி நிற்குமிடங் களையும் பொதுவான கால் நடைக் கொட்டில்களையும் ஏற்படுத்துவதும், பரா மரித்து வருவதும்;

(f) ஆடு மாடு முதலியவை அடிக்கும் பொதுவான தொட்டிகளை ஏற்படுத்துவதும் பராமரித்து வருவதும்;

(g) வாசகசாலைகளை ஏற்படுத்துவதும் நடத்திவருவதும்;

(h) ரேடியோ உபகரணங்களையும் விளையாட்டு மைதானங்களையும் விளையாட்டுச் சங்கங் களையும், தேகப்பயிற்சிக்குரிய ஸ்தாபனங்களையும் ஸ்தாபிப்பதும் பராமரித்து வருவதும்;

(i) கல்வி நிலையங்களையும், சமூகக் கல்வி கற்று கொடுக்கும் நிலையங்களையும் ஏற் படுத்துவதும் வைத்து வருவதும்;

(j) கிராமம் அல்லது பட்டண வாசிகளின் க்ஷேமத்தையாவது தேகாரோக்கியத்தை யாவது சுகத்தையாவது சௌகரியத்தையாவது விருத்தி பண்ணுவதற்கு அனு கூலமாயிருக்கும் பொதுஜன உபயோகத்துக்குத் தகுந்த இதர ஏற்பாடுகள்.

குறிப்பு

பி. 64 (a) மரங்களை நடுவது.—இது ரொம்பவும் மெச்சத்தக்கின காரியமாகும். மரங்களை நடுவது யோசித்து, அழகாயும், கூடிய சீக்கிரத்தில் வளர்கிறதாயும், நிழல் கொடுப் பவைகளையும், எரு, தழை, பழம் கொடுப்பவையாயும் வீடு கட்டு கோப்புகளுக்கு உபயோகிப் பவையாயும், விறகு கட்டைகளாயுபயோகிப்பவையாயும், இருக்க வேண்டும். உபயோகமற்ற

தாய் இருக்கக்கூடாது. அவைகளை கூடிய வரை சுத்தமாய் வைத்துக்கொண்டால் நலமாயிருக்கும், மரங்களின் கிளைகள்வளர்ந்து இருந்தால் அவற்றை அப்போதைக்கப்போது வெட்டி விடவேண்டும், சில ஜமீந்தாரி இடங்களில் பொதுபாட்டைக்கு ஓரத்திலுள்ள மரங்கள் தாங்களாகவே உற்பத்தியானல் அவைகள் சொந்தக்காரரைச் சேரும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. [சூரியராவ்-எ.-காகினடா முனிஸிபல் கௌன்ஸில், A. I. R. 1936 M. 918 : : ஜகன்னாத ராவ் எ. ராஜ மந்திரி தாலுக்கா போர்ட் 69 M. L, J. 269 = A. I. R. 1935 M. 810] இது விஷயத்தில் சட்டம் மாறிக்கொண்டு வருகிறது. எல்லா கிராமங்களும் ரயித்துவாரி கிராமங்கள் ஆய்விட்டால், மரங்கள் பஞ்சாயத்துகளுடையவை ஆகும். அதே மரங்கள் பஞ்சாயத்தால் வைக்கப்பட்டால் பலன்கள் பஞ்சாயத்தையே அடையும், ஒரு பொது பாட்டையிலுள்ள மரங்களின் கிளைகள் அடுத்த நிலங்களுக்கு நிழல் அதிகமாகக் கொடுத்துப்பயிரை கெடுதி பண்ணுமாகில் அது பஞ்சாயத்துச் செய்யாத காரியமாகும், அதற்காக பஞ்சாயத்து யாதொரு நஷ்டத்தையும் கட்டிக்கொடுக்கவேண்டியதில்லை. [கிருஷ்ண மூர்த்தி—எ—மாயவரம் தாலுக்கா போர்டு 42 M, 331 = 50 I. C. 309] ஆனல், நிலத்துக்காரர் பஞ்சாயத்துக்குத் தெரியப்படுத்தினல் பஞ்சாயத்து உடனே அந்த கிளைகளை வெட்டி விடவேண்டும். தெரியப்படுத்தியும் பஞ்சாயத்து வெட்டாவிட்டால், அந்த நஷ்டத்தை பஞ்சாயத்து கட்டிக்கொடுக்க வேண்டியதாகும். மேலும், நிலத்துக்காரர் நிழல் கொடுக்கும் கிளைகளை வெட்டிவிடலாம். [புத்திரய்யா-எ.-கிருஷ்ண-கோதா An. L. R. 1934 M. 625 = 67 M. L. J. 442 : : கட்டியா-எ.-கண்ணன் 1950 M, W. N. 72 = 1950—1. M. L. J. 179] ஒரு பஞ்சாயத்தின் மரங்களினல் கெடுதி நேரிடுகிறதென்று அதை கேட்டுக்கொண்டும் அது வெட்டாவிட்டால் அதின்பேரில் சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம். [குருஸ்வாமி—எ.—பெருமாள் A. I. R. 1929 M. 815 : : லக்ஷ்மீ நாராயணன் எ. தாராபிரசன்ன 31 Cal. 244] ஒரு பஞ்சாயத்தின் மரங்களை ஒருவன் வெட்டினலும், களவாடினலும் அது இந்தியன் பீனல்கோடு 379-வது செக்ஷன் படிக்கு களவாடிய தாகும், [வீரராகவா-எ.-வாணியம்பாடி முனிஸிபல் கௌன்ஸில், A. I. R. 1930 M. 861] இந்த மரங்களின் சம்பந்தமாகவும் ரோடுகள் விஷயமாகவும், ஆன நஷ்டங்களைக் குறித்து பஞ்சாயத்துக்கு 2 மாத நோட்டீஸ் கொடுத்து 6 மாதத்திற்குள் தாவா செய்ய வேண்டும். இல்லாவிடில் அது செல்லாது, [சுப்ரமணியம்-எ-.நரசாபூர் டிஸ்டிரிக்ட் போர்டு A. I. R. 1941 M. 733]

பி. 64 (a) பி. 178 (1) படிக்கு

பொது பாட்டைகளில் வளரும் மரங்களைப்பற்றிய அல்லது பஞ்சாயத்துகளில் சங்கர மித்திருக்கும் மற்ற சொத்தைப் பற்றிய தாவாவை தீர்மானிப்பது முதலிபவை.

1. மேற்படி சட்டத்தின் 76 (1) பிரிவின்படி ஒரு பஞ்சாயத்தினிடம் சங்கிரமித்திருக்கும் யாதொரு பொதுப்படையில் வளர்ந்திருக்கும் (மரவரி ஏற்பாட்டின் பேரில் கொடுக்கப்பட்ட மரங்களைத் தவிர மற்ற) மரங்கள் பஞ்சாயத்தினிடம் சங்கிரமிக்கும்.

ஆனல், அம் மரங்களின் சொத்துவம் (சொந்த பாத்யம்) அரசாங்கத்தாரிடமே இருந்து வரும்.

மேலும், இவ்விதியின்படித் தனக்குள்ள உரிமைகளைப் பஞ்சாயத்து துர் வினியோகப் படுத்தியிருக்கிறதென அரசாங்கத்தார் கருதினல் அவர்கள் அத்தகைய யாதொரு மரத்தைப் பஞ்சாயத்தின் ஆதிக்கத்திலிருந்து விலக்கிவிடலாம்.

2. பஞ்சாயத்தானது மேற்படி சட்டத்தில் கண்ட 76 (1) பிரிவின்படி தன்னிடம் சங்கிரமித்துள்ள யாதொரு பொதுப்பாட்டையின் ஓரத்திலே பொது ஜனங்களின் வழியுரிமைக்காவது பாட்டையை அடுத்துள்ள நிலங்களின் சொந்தக்காரர்கள், ஆட்சியாளர்கள் இவர்களின் சௌகரியத்திற்கும் வசதிக்குமாவது தடங்கலுண்டாக்காமல் மரங்கள் நடலாம்.

3. எந்த புறம்போக்கின் உபயோகம் மேற்படி சட்டத்தின் 82-வது பிரிவில் கண்ட (2) உட்பிரிவின்படியாவது (4) உட்பிரிவின்படியாவது முறைப்படுத்தப் படுகிறதோ அத்தகைய யாதொரு புறம்போக்கிலே பஞ்சாயத்தால் நடப்பட்ட எம்மரத்தையேனும் அரசாங்கத்தார் வெட்டி அப்புறப்படுத்தலாம். அவ்வாறு வெட்டி அப்புறப்படுத்தப்பட யாதொரு மரத்துக்காக அரசாங்கத்தரர் எப்பிரதிபலனையும் கொடுப்பதற்கு உள்ளாகமாட்டார்கள். அவ்வாறு வெட்டி அப்புறப்படுத்தப்பட்ட மரங்கள் பஞ்சாயத்தினிடம் கொடுத்துவிடப்படலாம்; அல்லது பகிரங்க ஏலத்தில் விற்கப்படலாம். அவைகள் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டால் அப்படி விற்றுவந்த தொகை பஞ்சாயத்து நிதிக்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

4. பஞ்சாயத்தானது மேற்படி சட்டத்தின் கண்ட 76 (1) பிரிவின்படி தன்னிடம் சங்கிர மித்திருக்கும் யாதொரு பொதுப் பாட்டையை அடுத்துள்ள நிலத்தின் அல்லது எந்தப் புறம் போக்கின் உபயோகம் மேற்படி சட்டத்தின் 82-வது, 87-வது பிரிவுகளின்படிப் பஞ்சாயத்தினுல் முறைப்படுத்தப்படுகிறதோ அந்தப் புறம்போக்கின் சொந்தக்காரர்களுக்கு பழ-மரங்கள் பழம் தரும் தசையை அடையக்கூடிய காலம் வரையில் அம்மரங்கள் நடுவதற்கு லைஸென்ஸுகள் கொடுக்கவும் பிறகு அம் மரங்கள் சரிவர வைத்து வரப்படுவதற்கும் பராமரித்து வரப்படுவதற் கும், வேறு தக்க ஷரத்துகளுக்கும் திட்டங்களுக்கும் உட்பட்டு அம் மரங்களை லைஸென்ஸுக்கு விடலாம்.

5. பஞ்சாயத்தானது மேற்படி சட்டத்தில் கண்ட 76 (1) பிரிவின்படி தன்னிடம் சங்கிரமித்துள்ள யாதொரு பாட்டையின் ஓரத்திலிருப்பவையும், எந்தப் புறம்போக்குகளின் உபயோகம் மேற்படி சட்டத்தின் 82-வது பிரிவின் கண்ட (2) உட்பிரிவின்படி அல்லது (4) உட்பிரிவின்படி அல்லது 87 (1) (a) பிரிவின்படி அதனுல் முறைப்படுத்தப்படுகிறதோ அந்தப் புறம்போக்குகளில் இருப்பவையும், மரவரி ஏற்பாட்டின் பேரில் வைத்துக் கொள்ளப்பட் டிருப்பவை யல்லாத மற்றவையுமான மரங்களின் பலானுபவத்தை யடைய உரிமையுள்ள தாகும்.

6. பஞ்சாயத்தானது மேற்படி சட்டத்தில் கண்ட 76 (1) பிரிவின்படி தன்னிடம் சங்கிர மித்துள்ள யாதொரு பொதுப்பாட்டையின் ஓரத்திலாவது, 5-வது விதியில் சொல்லப்பட்டப் படியுள்ள யாதொரு புறம்போக்கிலாவது இருப்பதும், மரவரி ஏற்பாட்டின்படி வைத்துக் கொள்ளப்பட்டிருக்கும் மரங்களல்லாததுமான யாதொரு மரத்தின் பலானுபவத்தை எவருக் கேனும் குத்தகைக்கு விடலாம். அத்தகைய குத்தகைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தை அடைய பஞ்சாயத்து உரிமையுள்ளதாயிருக்கும்.

7. அத்தகைய யாதொரு பாட்டையின் ஓரத்திலிருப்பவையும் அல்லது 5-வது விதியில் சொல்லப்பட்டதைப்போன்ற புறம்போக்கிலிருப்பவையுமான மரவரி ஏற்பாட்டின் பேரில் ஏற்கெனவே குத்தகைக்கு விடப்பட்டிராதவையுமான எந்தப் பழ மரங்களும், அத்தகைய பாட்டையோரங்களில் அல்லது புறம்போக்குகளிலுள்ள மரங்களின் பலானுபவத்தை யடைய 5-வது விதியின்படிப் பஞ்சாயத்து உரிமையுள்ளதா யிருக்கிற வரையில், பஞ்சாயத்தின் அனுமதியின்றி மரவரி ஏற்பாட்டின் பேரில் கலெக்டரால் குத்தகைக்கு விடப்படக்கூடாது.

8. (1) பஞ்சாயத்தானது—

(a) சுழல் காற்றினுல் விழுந்துவிட்ட மரங்கள் நீங்கலாக காற்றடித்து விழுந்த மரங்களும், பட்டுப்போன மரங்களும், பழ மரங்களாயிருந்தாலும் சரி, பழ மரங்களா யிரா விட்டாலும் சரி அவைகளையும்,

(b) பாட்டை ஓரங்களில் இருப்பவையும் போக்குவரத்துக்கோ, பிராணனுக்கோ, சுகாதாரத்திற்கோ, அபாயகரமானவையென்று கருதப்படுபவையுமான பச்சை மரங்களையும்,

(c) குடி தண்ணீர் ஆதாரமாக உபயோகப்படும் சிறு குளங்களின் கரைகளி லுள்ள பச்சை மரங்களின் இலைகள் அக்குளங்களில் விழுந்து, குடிக்கும் தண்ணீரைத் தகுதி யற்றதாக ஆக்குவதாயிருந்தால் அத்தகைய மரங்களையும் வெட்டி வீழ்த்தவோ ஏலத்தில் விற்கவோ அதிகாரமுடையதாகும்.

(2) (1) உபவிதியின்படி மரங்களின் விற்பனையிலிருந்து கிடைத்த வருமானத்தை பஞ்சாயத்து உபயோகித்துக்கொள்ள வேண்டும்.

(3) (1) உபவிதியில் கண்ட (b) அல்லது (c) பகுதியின்படி பஞ்சாயத்து பச்சை மரங்களை வெட்டவோ விற்கவோ உத்தேசித்தால், அது ரெவினியு டிவிஷனல் ஆபீஸரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்; தாசில்தார் மேற்படி மரங்களை நேரில் பார்வை யிட்ட பிறகு அவர் அனுப்புகிற ஒரு ரிப்போர்ட்டின் பேரில் மேற்படி ஆபீஸர் அந்த அனுமதியை அளிக்கலாம்.

9. பாட்டை ஓரங்களில்லாவது பஞ்சாயத்தினிடம் சங்கிரமித்துள்ள அல்லது அதற்குச் சொந்தமான வேறு சொத்திலாவது இருக்கும் மரங்கள் கள்ளத்தனமாக வெட்டி அப்புறப்படுத் தப்படுவதனின்றும் பாதுகாப்பதற்கும் பஞ்சாயத்து ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

பி. 64 (c) மார்க்கெட்டுகளைக் குறித்து பிரிவுகள் 79 முதல் 86 வரையில் பார்க்கவும்.

பி. 64 (d) உத்ஸவங்கள் மத சம்பந்தமான உத்ஸவங்களுக்காக பஞ்சாயத்து பணத்தை செலவிடக் கூடாது. ஆனுல் ஒரு கிராமத்தின் க்ஷேமத்தை அனுசரித்து மத விஷயத்

திலும் பஞ்சாயத்து பணம் சிலவிடலாம் என்று ஏற்படுகிறது. அதாவது பஞ்சாயத்து உத்சவ காலங்களில் வரும் ஜனங்களுக்காக பணம் சிலவு செய்தால் அதற்காக என்று பஞ்சாயத்து 70-வது செக்ஷன் (ii) (iv)ல் கண்டபடி யாத்திரை வரி பெறலாம். அந்த உத்சவத்திற்கு முக்கியஸ்தரான தர்மகர்த்தா விடமிருந்து பண சகாயம் கவர்ன்மெண்டின் உத்திரவு பேரில் பெறலாம். பொதுஜனங்களுக்கு எந்த மதஸ்தராயினும் பேதமின்றி சுகாதாரம் உண்டாகும் படி செய்வதுதான் இதனுடைய முக்கியக் கருத்து. [1922] அமூல்ய சந்திரா-எ-கல்கத்தா கார்ப்பரேஷன் 49 C. 838 (P. C.) = 69 I. C. 114] ஒரு முனிசிபாலிடி நிலத்தில் ஒரு ஹிந்து கோவில் கட்டப்பட்டிருந்தது. அதற்கு போக வர ஹிந்துக்களுக்கு என்று வழி விடப்பட்டிருந்தது. அதற்கு சமீபத்தில் மசூதி ஒன்று இருந்தது: இந்துக்கள் கோயிலை எடுத்துவிட வேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டது. அதனால் இந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் முனிசிபாலிடிக்கும் சச்சரவுகள் ஏற்படும் போல் இருந்தது. அதன் பேரில் இந்த செக்ஷன் கிளாஸ் (9)ல் கண்டபடி முனிசிபாலிடியில் உள்ள ஜனங்களின் க்ஷேமத்திற்காக கோயிலை எடுக்காமல் இருப்பது நலமென்றும், கோயிலுக்கு ஜனங்கள் போக இடம் விடுவது நலம் என்றும் முனிசிபாலிடியாரால் தீர்மானிக்கப்பட்டது. அது கோர்ட்டிற்கு போன சமயத்தில் அது சரியான காரியம் என்று ஒத்துக்கொள்ளப்பட்டது. [தென் இந்தியா ரயில்வே எ. திருச்சினுப்பள்ளி முனிசிபாலிடி 43 M. 905 = 59 I. C. 697]

பி. 64 (e) பொதுவான கால்நடை கொட்டில்கள் :—கால்நடை என்றால் எருதுகள், மாடுகள், பசுக்கள் சிலசமயங்களில் குதிரைகள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளும் ஆகும். இன்னும் யானைகள் ஒட்டகங்கள், கோவேரிக்கழுதைகள். கழுதைகள், எருமைகள், பன்றிகள், அதில் சேரலாம். [மதராஸ் சுகாதார ஆக்ட் செ. 2 (2) பார்க்கவும்.] இந்த கொட்டில்களுக்கும் பிரிவு 86ல் சொல்லப்பட்ட புறம்போக்கில் மாடுகள் மேய்வதற்கும், இந்த செக்ஷனில் (i) கிளாஸில் சொல்லப்பட்ட விவசாயத்திற்கும், கிளாஸ் (p)ல் சொல்லப்பட்ட மிருக வைத்திய அதிகாரத்திற்கும் சம்பந்தமுண்டு. பிரிவுகள் 106, 107களில் சொல்லப்பட்டிருக்கும் பார வண்டி நிற்கும் இடத்திற்கு பிராணிகள் தங்கும் இடம் என்றுகூட அர்த்தமாகும், இந்த நல்ல ஏற்பாடுகள் அபிப்பிராயத்தில் இருக்கின்றன. எப்படி முடியுமோ தெரியாது. இவைகள் மூலம் பால் பண்ணைகளும் அதிகமாகக்கூடும். பாலை நெடுங்காலம் கெடாமல் வைக்க ஏற்பாடுகளும் செய்யலாம். தேசத்தில் உள்ள ஒவ்வொரு 16 வயதுக்குட்பட்ட பிள்ளைக்கும் குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு ஆழாக்கு பால் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதைக் குறித்து இந்திய அரசியல் (Constitution of India) ஆர்டிகள் 48 (r) கிளாஸில் கண்டிருக்கிறது அதைப் பார்க்க.

விதிகள் பி. 64 (h) and 178 (1) படிக்கு

தந்திகம்பியில்லாத ரிஸீவிங் ஸெட்டுகளை (ரேடியோக்களை) ஏற்படுத்திப் பராமரித்து வருவதற்குப் பிடிக்கும் செலவு.

1. பஞ்சாயத்து எதுவும், சம்பந்தப்பட்ட ரிஜனல் இன்ஸ்பெக்டருடைய எழுத்து மூலமான அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல், ஒன்றுக்கு மேற்பட்ட தந்தியில்லாத ரிஸீவிங் ஸெட்டுகளை ஏற்படுத்திப் பராமரித்து வருவதற்காக செலவு எதையும் செய்யக்கூடாது.

2. மேற்படி ரிஜனல் இன்ஸ்பெக்டரானவர், 1-வது விதியின்படி அனுமதி கொடுப்பதற்கு முன், பின்வரும் விஷயங்களைக் கிரமப்படி கவனிக்க வேண்டும் :—

(i) பிரஸ்தாப கிராமத்திலே ஒன்றுக்கு மேற்பட்ட தந்தியில்லாத ரிஸீவிங் ஸெட்டுகளை ஏற்படுத்திப் பராமரித்து வருவதற்கு உண்மையிலேயே அவசியமிருக்கிறதா என்பது;

(ii) மேற்படி அதிகப்படியான ஸெட்டு அல்லது ஸெட்டுகளை ஏற்படுத்திப் பராமரித்து வருவதற்குப் பிடிக்கும் செலவைச் செய்வதற்கு வேண்டிய நிதி அந்தப் பஞ்சாயத்தினிடம் இருக்கிறதா என்பது.

பி. 64 (h) விளையாட்டு மைதானங்கள், விளையாட்டு கருவிகள்.—ஒரு பஞ்சாயத்து ஒரு நந்தவனத்தை ஏற்படுத்தலாம். விளையாட்டுக் கருவிகளையும் அந்த நந்தவனத்தில் வைக்கலாம். ஆனால் அந்தக் கருவிகள் விளையாடுகிறவர்களுக்கு யாதொரு கெடுதியும் அளிப்பதாக இருத்தல் கூடாது. ரேடியோ உபகரணங்களையும் ஆங்காங்கு அமைத்தால் நலமாயிருக்கும்.

சில விஷயங்களுக்காக ஏற்பாடு செய்ய பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்குள்ள கடமை.

65. இச் சட்டத்தில் கண்ட ஷரத்துகளுக்கும், அதன்படிச் செய்யப்பட்ட விதிகளுக்கும் உட்பட்டு, யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அடியிற்கண்ட விஷயங்கள் சம்பந்தமாக பஞ்சாயத்து யூனியனின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, அதனுடைய நிதி நிலைமை இடங்கொடுக்கிற வரையில் நியாயமான ஏற்பாடு செய்யக் கடமைப்பட்டதாகும், அவ் விஷயங்களாவன :—

(a) பஞ்சாயத்து யூனியனில் இருப்பவையும், பஞ்சாயத்து யூனியன் சாலைகளென வகைப்படுத்தப் பட்டிருப்பவையுமான சகல பொதுச் சாலைகளையும் அச் சாலைகளிலுள்ள வாராவதிகள், சிறு பாலங்கள். சாலை அணைகள், மேட்டுப்பாதைகள் ஆகியவற்றை ஏற்படுத்துவதும், செப்பனிடுவதும், பராமரித்து வருவதும் ;

(b) மருந்துச்சாலைகளை ஏற்படுத்தி வைத்து வருவதும் கிராமத்தில் மருத்துவர்களுக்கு உதவித் தொகை அளிப்பதும் ;

(c) தாய் சேவை வர்க்க மொன்றை வைத்து வருவது உட்பட்டதாய்-சேய் க்ஷேமநல நிலையங்களை ஏற்படுத்தி வைத்து வருவதும், குடும்பக் கட்டுப்பாட்டில் தாய்மார்களுக்கு ஆலோசனை புரிவதும், உதவி புரிவதும் ;

(d) ஏழை விடுதிகள், அனுதாலயங்கள், கடைக் கண்ணிகள், கூடங்கள் ஆகியவற்றை கட்டி வைத்து வருவதும், அம்மை குத்துபவர்களுக்குப் பயிற்சி அளித்து வேலை தருவதும், ஜனநெரிசலைத் தவிர்ப்பதும், வீட்டு மனைகள் ஏற்படுத்தித் தருவதும் ;

(e) ஆரம்பப்பள்ளிகள் விஷயமாய் தனியார் நிர்வாகத்தினருக்கு மானியங்கள் அளிப்பது உட்பட ஆரம்பப் பள்ளிக்கூடங்களை ஆரம்பித்து நடத்தி வருவதும், விஸ்தரிப்பதும் அல்லது சீர்திருத்துவதும் ;

(f) பரவலான யாதொரு நோய் அல்லது மலேரியா விஷயமாக தடுப்பு நடவடிக்கைகளும், சிகிச்சை நடவடிக்கைகளும் ;

(g) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தனது கட்டுப்பாட்டின் கீழ் ஒதுக்கி வைத்துள்ளவையென வகைப்படுத்தியுள்ள சந்தைகள், திருவிழாக்கள் ஆகியவற்றின் கட்டுப்பாடு ;

(h) கால்நடை மருத்துவ பரிகாரம் ;

(i) கிராம மனையிடங்களை விஸ்தரிப்பதும், கட்டிடம் கட்டுவதை ஒழுங்குபடுத்துவதும் ;

(j) பஞ்சாயத்து யூனியன் மார்க்கெட்டுகளென வகைப்படுத்தியுள்ள பொது மார்க்கெட்டுகளை ஏற்படுத்தி வைத்து வருவதும் ;

(k) ஜனன மரணங்களை கணக்குபடி பதிவுசெய்து காப்பாத்துவது ;

(l) சத்திரங்களை ஏற்படுத்தி வைத்துவருவது ;

(m) விவசாயத்தையும், விவசாய ஸ்டாக்குகளையும் சீர்திருத்துவதும், விவசாயக் காட்சிகளை நடத்துவதும்.

(n) குடிசைத் தொழில்களை வளர்ப்பதும், ஊக்குவிப்பதும்.

குறிப்பு

பகுதி 65.—இந்தப் பகுதியில் பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்களின் கட்டாயக் கடமைகள் இன்னவையென்று குறிப்பிட்டிருக்கிறது பஞ்சாயத்து யூனியன் சாலைகள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ள பொதுச் சாலைகளைப் போடுதல், மராமத்துச் செய்தல், அவற்றைப் பராமரித்து வருதல். மருந்துச் சாலைகள், பிரசவ சிசு நல விடுதிகள், சத்திரங்கள் முதலியவற்றை ஏற்படுத்தி பராமரித்து வருதல், ஆரம்ப பள்ளிக்கூடங்களை கட்டிப் பராமரித்து வருதல், சந்தைகளையும் திருவிழாக்களையும் பற்றி மேல் விசாரணை செய்தல், விவசாய அபிவிருத்தி செய்தல். குடிசைக் கைத்தொழில்களை ஆதரித்து வளர்த்தல். ஆகிய இவை

இந்தக் கட்டாயக் கடமைகளில் அடங்கும். பிரிவுகள் 66 - 74 இன்னும் சில அதிகாரங்களை தெரிவிக்கின்றன.

65 (b) : கிராம மருத்துவர்களுக்கு உதவித் தொகை.— கிராமத்தில் வைத்தியஞ் செய்யவேண்டிய வைத்தியர்கள் தற்காலத்தில் இல்லை. இதற்காக வென்று தேசீய பாஷைகளாகிய தமிழிலும், தெலுங்கிலும் இன்னும் இதர பாஷைகளிலும் முக்கியமானதும், சாதாரணமாயுள்ளதும் ஆன நோய்களின் விகிதத்தை எடுத்துக்காட்டி அவற்றிற்குத்தக்க மருந்துகளையும் தெரியப்படுத்தக் கூடிய புஸ்தகங்களை வெளியிட வேண்டும். இதில் நம் உள் நாட்டில் கிடைக்கும் மூலிகைகளையும் இன்னும் இதர விஷயங்களையும் சுலபமாகத் தெரியும்படி எழுதி இருக்க வேண்டும். இது ஒரு வருஷத்திற்குள் படிக்கக் கூடியதா யிருக்க வேண்டும். இதற்கு இஞ்செக்ஷன் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டியதும், சொற்ப கட்டிகளைத் தடுக்கத் திறமையும் அவசியந்தேவை, அப்படிப்பட்ட படிப்பை கவர்ன்மெண்டு தான் எல்லோருக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும்- அம்மாதிரி படித்தவர்கள் கிராம வாசிகளுக்குள் வைத்திய தொழிலைக் கொண்டு அவர்களுக்கு உதவுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பி. 65 (e) ஆரம்ப ஆதார பாடசாலைகள்.— படிப்பு மனிதனுக்கு அவசியம். அதனுல் புத்தி கூர்மையும் தேக நன்மையும் உண்டாகும். படிப்பு அதிகமாக வேண்டுமென்றுல் 1. படிக்கச் சுதந்திரம் இருக்க வேண்டும். 2. சொல்லிக் கொடுப்பதற்குச் சமயமும், நேரமும் இருக்கவேண்டும். 3. சொல்லிக்கொடுத்ததை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அறிய வேண்டும்.

"இந்திய அரசியல்" 45-வது ஆர்டிகள் படிக்கு கவர்ன்மெண்டு பத்து வருஷத்திற்கு ஒவ்வொரு குழந்தைக்கும் 14-வது வயது வரையில் இலவசமாகவும் கட்டாயமாகவும் படிப்புச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று 1949ஞூத்தில் சட்டம் செய்து இருக்கிறது. உதாரணமாக, லண்டனில் ஆதார கல்விக்கு 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு நர்சரி (போஷண சாலை) பாடசாலைகளும், ஜுனியர் (சிறிய) பாடசாலைகளும், ஸீனியர் (பெரிய) அல்லது சென்ட்ரல் (மத்ய) பாடசாலைகளும், வர்த்தகம், விஞ்ஞானப் பாடசாலைகளும், இன்னும் அநேக விதப் பாடசாலைகளும் ஏற்பட்டுள்ளன. எது எப்படியாயிருந்த போதிலும், ஆரம்ப ஆதார பாடசாலைகளுக்கு ஒரே விதமான படிப்பும், புத்தகங்களும் இருக்க வேண்டு மென்றும் அதற்கு வேண்டிய முயற்சியை கவர்ன்மெண்டு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும் எமதுகருத்து. அப்போது தான் இலவசமான படிப்பைக் குறைந்த செலவில் கொடுக்க முடியும்.

பி. 65 (f) பெருவாரி வியாதி:—மதருஸ் பொது ஜன சுகாதார ஆக்ட்டின் படிக்கு அவைகள் 16 என்று எடுக்கப்பட்டுள்ளன. அதுவல்லாமல் இப்புஸ்தகத்தின் படிக்கு மலேரியா ஜுரமும் சேர்த்து 17 பெருவாரி வியாதிகளாகின்றன. அவைகளை இன்னும் விசிதமாக அறிய செ. 52, 62, களை பார்க்கவும்.

பி 65 (h) : மிருகவைத்திய பரிகாரம் :—இவைகளை சிகிச்சை செய்வது மன்றி இவைகளை எண்ணிக்கையில் அதிகப் படுத்த வேண்டும். அதாவது பசுக்கள். ஆடுகள் போன்றவை பால், வரட்டி முதலியன உண்டாக்கி அளிப்பதை போல் உபயோகமாயுள்ள இப்படிப்பட்ட மிருகங்களை விருத்தி செய்தல் அவசியம். நல்ல வலுவான மிருகங்கள் இருந்தால் பயிருக்கும் அனுகூலமாயிருக்கும். மதராஸ் கவர்ன்மெண்டு பலமில்லாததும், பால் அதிகமாக்குவதற்கு உபயோகப்படாததுமான கன்று குட்டிகளை உண்டாக்கும் யாவத்து எருதுகளின் விரைகளை எடுத்துவிட 5 வருஷங்கள் முன் சட்டம் செய்தும் இதுவரையில் யாதொரு அக்கரையும் எடுத்துக் கொள்ளாதது வருந்த தக்கதாயிருக்கிறது.

பி. 65 (i) கிராம நத்தங்களை விஸ்தரிப்பது :—பி. 89 படிக்கு சொந்தக்காரர்களிடமிருந்து நிலத்தையும் சொத்துக்களையும் வாங்கி கிராம நத்தங்களை விஸ்தரிக்கலாம். பஞ்சாயத்துகள் தங்களுடைய கிராம நத்தங்களுக்காக வாடகை வசூலித்து தன் பணத்தில் சேர்த்துக் கொள்ளலாம். செ. 70 (2) (VIII) யை பார்க்கவும். கிராம நத்தங்கள் அதாவது வீட்டு மனைகளுக்காக பஞ்சாயத்து பணத்தை சில விடலாம். [வீரராகவ எ. செகரடரி ஆப் ஸ்டேட்; 49 M. 237 = A. I. R. 1925 M. 837 : : செகரடரி ஆப் ஸ்டேட்—எ—கோபாலா, A. I. R. 1930 M. 798 = 59 M. L. J. 274]

கட்டட விஷயமாய் ஒழுங்கு ஏற்படுத்துவது :—கிராமங்களில் தண்ணீர் போக இடமில்லாமலும் ஒழுங்கில்லாமலும் கட்டடங்கள் கட்டுவதினுல் சுகாதாரத்திற்கு கெடுதியாகவும்,

பார்வைக்கு விகாரமாகவும் இருக்கிறது. ஆகையினால் இந்தக் கிளாஸ் இருப்பது அவசிய மாகும். மிகத் தொலைவில் குடிசெய்வதற்கு வீடுகட்ட உத்திரவு செய்யக்கூடாது என்பது எமது அபிப்பிராயம். குடிசெய்யும் வீடுகள் போஸ்டாபீஸுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும், வைத்தியசாலை (ஆஸ்பத்திரி) களுக்கும் இன்னும் பொதுவான இடங்களுக்கும் அருகாமையில் இருக்க வேண்டும். அதனால் அனுவசியமான சிலவுகள் குறையும். மனிதர்கள் கும்பலாய்க் குடியிருக்கக் கூடாது என்னும் எண்ணம் சரியானதல்ல. சுகாதாரம் முக்கியமே ஒழிய ஜனங்கள் ஓரிடத்தில் எத்தனை பேர் குடியிருக்கிறார்கள் என்பது முக்கியமல்ல. அமெரிக்காவில் 50, 60 மாடிகள் உள்ள வீடுகளில் குடியிருந்து வந்தும் நோய் நொடியில்லாமல் வாழ்கிறார்கள். இன்னும் நம்மைக் காட்டிலும் அதிக காலம் ஜீவித்து வருகிறார்கள். அதனால் சுகாதாரம்தான் முக்கியமென்று ஏற்படுகிறது. அதற்காக கட்டிடங்களை ஒழுங்குப் படுத்துவது அவசிய மாகும்.

பி. 65 (k) ஜனன மரண பதிப்பு.—இதை 1959-வது வருஷம் முதல் சாகா வருஷத்திய கணக்குபடிக்கும் சேர்த்து பதிக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கமும், மதராஸ் அரசாங்கமும் உத்தரவு செய்து யிருக்கிறது.

சாகா வருஷம்.—இது மார்ச்சு மாதம் 22-ம் தேதியில் சித்திரை மாதம் 1-ம் தேதி ஆரம்பமாகும்.

சாகா வருஷம்				இங்கிலீஷ் வருஷம்		
மாதம்		தேதி	தினங்கள்	மாதம்		சாகா மாதம் ஆரம்பிக்கும் தேதி
சித்திரை	...	1	30	மார்சு	...	22
வையாசி	...	1	31	ஏப்ரல்	...	21
ஆனி	...	1	31	மே	...	22
ஆடி	...	1	31	ஜூன்	...	22
ஆவணி	...	1	31	ஜூலை	...	23
புரட்டாசி	...	1	31	ஆகஸ்டு	...	23
ஐப்பசி	...	1	30	செப்டெம்பர்	...	23
கார்த்திகை	...	1	30	அக்டோபர்	...	23
மார்கழி	...	1	30	நவம்பர்	...	22
தை	...	1	30	டிசம்பர்	...	22
மாசி	...	1	30	ஜனவரி	...	21
பங்குனி	...	1	30	பிப்ரவரி	...	20

இந்தப் படிக்கு கணக்கிட வேண்டும்.

பி. 65 (m) விவசாயம் அதற்கு உதவிபுரிகிற கால் நடைகள்:—விவசாயம் கூட்டுறவு (கோ ஆப்ரேடிவ்) முறையில் நடத்துவதா அல்லது மொத்த நிலங்களையும் கவர்ன்மெண்டு எடுத்துக் கொண்டு அது நடத்துவதா என்பதை முடிவு செய்யாமையாலும் தனிப்பட்ட சொந்தக்காரர்களிடம் பயிர் செய்யும் நிலங்கள் இருந்தும், அவர்கள் அவைகளை அபிவிருத்தி செய்ய அவர்களுக்கு பணம் இல்லாமையாலும் கவர்ன்மெண்டாரும் ஸ்தல ஸ்தாபனங்களும் வேண்டிய உதவி செய்யாமையாலும் நம்முடைய தேசத்து விவசாயம் மிகவும் தாழ்வான நிலையில் இருந்து வருகிறது. இதைக் குறித்து 1930-ம் வருஷத்தில் மூன்றுவது பதிவாகவும் 1937-ம வருஷத்தில் 4-வது பதிவாகவும் அச்சிட்ட மதராஸ் லோகல் போர்டுகள் ஆக்டில் கண்டிருக்கிறோம். அது முதல் இதுவரையில் நமது உத்பத்தியில் யாதொரு உயர்வும் இல்லை அது வருந்தத் தக்கதாக இருக்கிறது. இந்திய அரசியல் ஆர்டிகள் 48 படிக்கு கவர்ன்மெண்டானது விவசாயத்தை குறித்தும் ஜந்துக்களுடைய அபிவிருத்தியை குறித்தும் பால் கொடுக்கும் பசுக்களையும் இதர மாடுகளையும் கன்றுக்குட்டிகளையும் கொல்வதை தடுப்பதைக் குறித்தும் அக்கறை எடுத்துக் கொள்ளும், இந்தப் பொறுப்பை கவர்ன்மெண்டு எதுவரையில் நிறைவேற்றும் என்பதை எதிர்காலத்தில்தான் சொல்லமுடியும். 1950 ஆம் ஆண்டின் X-வது சட்டம் அமுலுக்கு வந்து ஒன்பது வருஷங்கள் ஆயினும் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாதது வருந்தத்தக்கதா யிருக்கிறது.

பி. 65 (n) குடிசைத் தொழில்கள் :—இவைகளால் ஜனங்கள் நீண்டகாலம் வேலை செய்வதாகவும் குறைந்த ஊதியம் அடைவதாயும் ஏற்படுகிறது. இந்தியா எங்கும் மின்சார சக்தி (எலெக்ட்ரிக் சக்தி) பரவும் இந்த நாளில் யந்திரங்கள் வேண்டாம், பெரிய ஆலைகள் வேண்டாம் என்று சொல்லுவது ஒரு அநாவசியமான பிரச்னையாகும். யந்திரங்களினால் வேலைக்காரர்களுக்கு வேலையில்லாமல் போகிறது என்பது ஒரு தப்பெண்ணமாகும். யந்திரத்தினால் அதிக வரும்படியும் உத்பத்தியும் உண்டாகிறது. குடிசைத் தொழில் இன்னதென்று சட்டப்படி அர்த்தம் செய்யப்படவில்லை குடிசைத் தொழில் செய்கிறவர்களுக்கு அவர்களே சரக்கை விற்கும்படியாக நேரிடுகிறது. குடிசைத்தொழிலின் மூலமாக செய்யும் சரக்குகளுக்கு ஏறக்குறைய சரியாக உள்ளதும், அல்லது கொஞ்சம் மேன்மையுள்ளதுமான வெளிநாட்டுச் சரக்குகளை இறக்குமதி செய்யக்கூடாது இதுவுமன்றி குடிசைத்தொழில் சரக்குகளை உத்பத்தி செய்கிறவர்களுக்கு அப்போதைக்கப்போது அவர்களின் ஊதியம் கிடைக்கும்படி ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதற்குத் தக்கபடி கூட்டுறவு சங்கங்கள் முதலியவைகளை கவர்ன்மெண்டு ஏற்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் வேலை செய்தும் பயனில்லாமல் போய்விடும்.

மதராஸ் ராஜதானியில் குடிசைத்தொழில்களும், கிராமக் கைத்தொழில்களும் :—

உணவு

1. மீனைப் பக்குவப்படுத்துதல்
2. பாற்சாலை உற்பத்திப் பொருள்கள்
3. பக்குவப்படுத்தப்பட்ட பழங்கள்
4. பழ ரஸங்களும், பழச் சத்துக்களும்
5. விசேஷ ஆகாரங்கள்—மால்ட், ஷார்க்—லீவர் ஆயில், ஔஷதங்கள் (Emulsions)
6. பிஸ்கட்டுகளும், தித்திப்புகளும்
7. வெல்லம், நாட்டுச்சர்க்கரைகள்
8. கோழி, வாத்து முதலியன வளர்த்தல்
9. மீன் பிடித்தல்
10. ஆடுகள் வளர்த்தல்
11. தேனீ வளர்த்தல்
12. அரிசி, சுருள் சேமியா போன்ற ஆகாரங்கள்

புகையிலை

1. பக்குவப் படுத்துதல்
2. பீடி செய்தல்
3. சுருட்டு செய்தல்
4. மூக்குப்பொடி தயாரித்தல்
5. புகையிலையைத் தரம் பிரிப்பது

பருத்தி

1. கையால் நூல் நூற்றல்
2. கைத்தறி
3. பனியன் முதலியன
4. ஜமுக்காளங்கள்
5. பின்னல்களும், பூவேலைகளும்
6. பருத்தி நாடாக்கள், மீன்வலை போன்றவை செய்தல்
7. அச்சு, டைகள் செய்தல் பின்னல்கள்

பட்டு

1. ஸெரிப் புழுவை காப்பாற்றல்
2. எரிப் புழுவை காப்பாற்றல்
3. பட்டு சுற்றுதல்
4. பட்டு நெய்தல்
5. பொன், வெள்ளி, சரிகை
6. சரிகைப் பூக்கள்
7. சாஸ்த்திர வைத்தியத்திற்கு பிறகு ரணங்களை தைக்கும் நூல்கள்

செம்மறியாட்டு ரோமம்

1. நூல் நூற்றலும், செய்தலும்.
2. ஜமுகாளங்கள்.
3. ரோமக் கம்பளிப் போர்வையும், கம்பளி நெசவும்.

தோல் பதனிடுதலும், தோல் கைத்தொழில்

1. பதனிடுதல்.
2. கால் அங்கிகள் (பூட்ஸ் முதலியன.)
3. தோல் சாமான்கள் செய்தல்.
4. வஜ்ரம் பிசினி செய்தல்.

மண், பீங்கான் வேலைகள்

1. மண் பாண்டஞ் செய்தல்.
2. பல வர்ண உலோகங்கள்.
3. மண் உருக்கள், பொம்மைகள்
4. செங்கற்களும், ஓடுகளும்.
5. சிமெண்டு, கான்கிரிட் வஸ்துக்கள்.
6. தளவரிசை ஓடுகள்.

பூச்சுவர்னங்கள், எண்ணைகள் சோப்புகள் வாசனை திரவியங்கள்

1. யூக்லிப்டஸ் (நீலகிரித்) தைலம்.
2. மீனெண்ணை, மீன்குடல் எண்ணை.
3. தாவர எண்ணைகள்.
4. அத்தியாவசிய எண்ணைகள்.
5. சோப்புகள்.
6. வாசனை திரவியங்கள்.
7. பூச்சுகள் (Paints)
8. மெருகெண்ணை (Varnish)
9. கிருமி நாசிகள்.
10. சாவனைகள்.

மரம்

1. நகைப்பெட்டி வைப்பிடம்.
2. கடையங் தொழில்.
3. மரத்தை செதுக்குதல்.
4. ஜட்காப் போன்ற வண்டிகள் கட்டுதல்.
5. மிதி அடிகள்.
6. அரக்கு முதலிய வேலைகள்.
7. சீப்புகள்.
8. கோச்சு வண்டி கட்டுதல்.
9. நாற்காலி முதலியன செய்யும் மர வேலை.

உலோகக் கைத் தொழில்

1. பித்தளை, செம்பு, வெண்கலம், அலுமூனியம் முதலிய உலோகங்களை உருக்குதல்.
2. இரும்புப் பெட்டிகளும், பூட்டுகளும்.
3. வெண்கலம் செய்தல்.
4. இரும்பு ஆயுதங்கள் செய்தல்.
5. தகரம் செய்தல்.
6. உலகடம் (Smithy)-கருமான் பட்டறை.
7. எஃகு அல்லது தகரப்பெட்டி செய்வது முதலியன.
8. உலோக பொம்மைகள்.
9. கத்தி சாமான்கள் வேலைகள்.
10. ஆணிகளும், திருகும் ஆணிகளும்.
11. இரும்புக் குழாய்களும், சட்டங்களும்.
12. நகை தட்டார வேலைகள்.
13. காரீயப் பாத்திரங்கள்.
14. பித்தளைப் பிடிகள்.
15. இரும்பு நாற்காலி முதலியவை.
16. கொல்லத்துக்காரர்களின் ஆயுதங்கள்.
17. வீடுகளுக்கு வேண்டிய கருவிகள்.

இவைகளை நம் இந்தியா கவர்ன்மெண்டு அன்னிய தேச மூலப்பொருளை வைத்து செய்ய விடுவது வருந்ததக்கதா இருக்கிறது.

கயிறு கைத்தொழில், பாய் கைத்தொழில்

1. கோரைப்பாய்.
2. மூங்கில் தட்டி.
3. நாரினாலும், ஈச்சங் நார்களாலும் பாய் முடைதல்.
4. நாரைப் பதனிடுதல், முறுக்குதல், முடைதல்.

கண்ணாடி

1. வளையல்கள்.
2. கண்ணாடி வளையல்கள்.
3. அதிக விலையுள்ள வைரங்களை சாணை யிடுவது.
4. கருப்புமணி செய்தல்.
5. அபிரகத்தைப் பிரித்தல்.

கற்கள்

1. சந்தனக் கல்.
2. கற்பலகையும், பலபமும்.
3. சோப்புக் கல்.
4. கல்லில் செதுக்கல்.
5. கற்குழாய்கள் செய்தல்

சிற்பத் தொழில்கள்

1. தொப்பிகள் செய்தல்.
2. அழகான விசிறிகள்,
3. வெள்ளி, செம்பு, பித்தளை இவைகளில் செதுக்குதல்.
4. தந்த வேலை செய்வது.
5. வாத்தியக் கருவிகள்.
6. வெள்ளி, பித்தளை, செம்பு முதலியவைகளால் செய்யப் பட்ட ஐந்து உருக்கள்.
7. பத்தான்கள் செய்வது,
8. கொட்டாங்கச்சிகளில் வேலை செய்வது.
9. படகு கட்டுதல்.
10. படத்திற்குச் சட்டங்கள்.
11. தறிகள் செய்வதும், தறிமூலம் வேலை செய்வதும்.
12. மூங்கில் வேலைகள்.
13. பிரம்பு வேலைகள்
14. பொம்மை செய்தல்.
15. அழகான மரவேலைச் சாமான்கள்
16. கூடை முடைதல்.
17. பனையோலைப் பெட்டிகள்.

பல பொருள் கைத்தொழில்

1. தொப்பிகள் செய்தல்.
2. தீக்குச்சிகள் செய்தல்.
3. அழகான கொம்பு வேலைச் சாமான்கள்.
4. இலை தைத்தல்.
5. குடைகள்.
6. சங்கு, மணி வேலைகள்
7. திரை செய்தல்.
8. ஊது வர்த்தி செய்தல்.
9. சந்தனம்.
10. இங்கிகள் (மசி)
11. சணல், கித்தான் (கான்வாஸ்) செய்தல்.
12. மின்சாரசக்தி (எலெக்டிரிக்கி)ற்கு வேண்டிய சாமான்கள்.
13. புளியங் கொட்டை மாவு போன்ற வஸ்துக்கள் செய்தல்.
14 எழுதுகோல் சாமான்கள்.
15. கரி செய்தல்.

சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு சேவை திட்டம்.

சமுதாய அபி விருத்தியின் தேசீய விஸ்தரிப்பு சேவைதிட்டத்தை நிறைவேற்றுவதை பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலிடம் ஒப்படைப்பது.

66. இந்த சட்டத்தின் படிக்கு ஒரு பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதிக்கு ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஏற்படுத்தியதும், கூடிய சீக்கிரத்தில், அரசாங்கத்தாரால் குறிப்பிட்ட நிபந்தனை களுக்கும், ஷரத்துகளுக்கும் உட்பட்டு சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு சேவை திட்டத்திற்கு சம்பந்தப்பட்ட சகல நடவடிக்கைகளையும் அந்த பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதியில் நிறைவேற்ற முக்கியமாக தனிப்பட்ட முறையில் அல்லது கூட்டுறவு முறையில், விவசாயம், பிராணிகளை வளர்த்தல், கிராம தொழில்களை நடத்துவதை பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் இடம் ஒப்படைக்கப்படும்.

குறிப்பு

பகுதி 66.—சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை சேர்ந்த தேசீய விஸ்தரிப்பு சேவைத் திட்டங்களை நிறைவேற்றும் வேலையை பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்களிடம் ஒப்புவிக்க அரசாங்கத்தாருக்கு இப் பகுதி இடமளிக்கிறது. இவற்றில் முக்கியமாக விவசாய அபிவிருத்தி பிராணி வளர்ப்பு தனிப்பட்ட முறையிலும் கூட்டுறவு அடிப்படையிலும் ஏற்படுத்தப் படுகிற கிராமக் கைத்தொழில்கள் ஆகியவை சம்பந்தமாக எல்லா ஏற்பாடுகளும் அடங்கும்.

1. **சமுதாய அபிவிருத்தி.**—அதாவது பொது மக்களின் முன்னேற்றம் ஆகும். இதை ஆண், பெண், ஜாதி பிரிவினை, மதம், ஏழை, பணக்காரர் என்று பேதம் இன்றி எல்லா மக்களும், பொருளாதார துறையில் சம உரிமைகள் உள்ளவர்களாக ஆகவேண்டும் என்பதாகும் அதற்காக.

2. **தேசீய விஸ்தரிப்பு சேவைதிட்டம்.**—அதாவது தேச மெங்கும் மேல்படி சமுதாய அபிவிருத்தியை பரவச் செய்வது என்பதே ஒரு சேவை என்னும் திட்டமாகும்.

3, சமுதாய அபிவிருத்தி எப்படி கிடைக்கும்.—இது மக்களுடைய முயற்சினுலும், விஞ்ஞானத்தை ஒட்டி அறிந்து செய்யும் ஏற்பாடுகளாலும் தேக உழைப்புகளாலும், புத்தி கூர்மையினுலும் உண்டாகும். தானுகவே மக்களுடைய அனுபவத்தில் தங்களை அறியாமலே மெல்ல மெல்ல இதுவரையில் சில உரிமைகள் வந்து கொண்டு இருக்கிறது. அப்படி உண்டாக இது வரையில் ஆயிரம் கணக்கான வருடங்கள் ஆகிவிட்டன. இனி மக்கள் அபிவிருத்தி அடைவதில் தாமதம் செய்யக்கூடாது. செய்யவும் முடியாது. இந்தியர்களும், இங்கிலீஷ்காரர் போலும், ஜப்பான், சைனு, ரஷ்யா, அமெரிக்கா நாடுகளில் உள்ளவர்கள்போல் விஞ்ஞான அறிவில் சமமாக இருக்க வேண்டும். வெளிதேசத்தார் யாராகிலும் நமக்கு தானம் செய்வதாக சொன்னுல் வேண்டியதில்லை, எங்களை நாங்கள் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று சொல்லக்கூடிய திறமையை நம்மில் உண்டு பண்ணிக் கொள்ள வேண்டும். அம்மாதிரி திறமை அடைய வேண்டு மென்ருல் நம் நாட்டில் உள்ள மக்களுக்கு வேண்டிய தேவைகளை குறைவு இல்லாமல், அவர்களுக்கு அவைகள் சுலபமாக கிடைக்கும்படி செய்யவேண்டும். மேலும் அந்த தேவைகள் நம் தேசத்தில் நமக்கும் மிஞ்சி அதிகமாக இருக்கும் பட்சத்தில் அவைகள் இல்லாத தேசத்தாருக்கு அவைகளை இனுமாக கொடுக்க வேண்டும். அவைகளை கொடுக்கிறோம் என்கிற சாக்கு போக்கினுல் அந்த வெளி தேசத்தாரை சுரண்டக் கூடாது.

4. மக்களுக்கு வேண்டியது முக்கியமாக முதலில் உணவு ஆகும்.—இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனுலும் மக்கள் அதை கவனிப்பதில்லை. ஓராவது பக்கத்தில் கண்டபடிக்கு தமிழ் நாட்டில் சுமார் மூன்று கோடி மக்கள் இருக்கிருர்கள். அவர்களில் ஒரு நபருக்கு ஒரு மாதத்தில் எவ்வளவு (1) அரிசி (2) கேவுரு (3) சோளம் (4) கம்பு (5) உப்பு (6) பருப்பு (7) புளி (8) மிளகாய் 9) மிளகு (10) சீரகம் (11) எண்ணை, (12) பால், (13) முட்டை, (14) மீன், (15) இறைச்சி ஆகிய எல்லா வஸ்துவுகளும் வேண்டி இருக்கும் என்று கணக்கிட்டு பார்த்தால் ஒரு மாதத்திற்கு வேண்டியதை அறிந்திடலாம் அப்படி கணக்கிட்டதை 12 ஆனுல் பெருக்கி பார்த்தால் ஒரு நபருக்கு ஒரு வருஷத்திற்கு எவ்வளவு அரிசி, உப்பு முதலியவை வேண்டும் என்பது ஏற்படும். அதை 3 கோடியால் பெருக்கினுல் தமிழ் நாட்டு 3 கோடி மக்களின் உணவுக்காக ஒரு வருஷத்திற்கு எவ்வளவு அரிசி, முதலியது வேண்டு மென்பதை சுலபமாக அறியலாம்.

இந்த கணக்குபடி நமக்கு அரிசி, உப்பு முதலியவை தனித்தனியாக நம் தமிழ் நாட்டில் உண்டாக்குகிறோமா என்பதை கவனிக்க வேண்டும். அது எப்படி யென்ருல் நமக்குள்ளது. 11, ஜில்லாக்களாகும். அவைகளில் அரிசி, கேழ்வரகு, சோளம், கம்பு, எவ்வளவு உண்டாகிற தென்று ஒரு வருடத்திற்கு கணக்கிட வேண்டும். அப்படி பார்க்கும் போது நமக்கு வேண்டிய உணவு பொருள்கள் நம் தமிழ் நாட்டிலேயே கிடைக்கிறதா அல்லது அதற்காக அவைகளை நமது இந்தியா தேசத்தின் இதர ராஜ்யங்களில் (ஸ்டேட்டுகளில்) இருந்தும், அல்லது வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கிறோமா என்பதை கவனிக்க வேண்டும். நமக்கு வேண்டிய உணவு பொருள்களை உடனடியாக அடைவதற்காக இச்சட்டத்தின் பீடிகையின் 1-வது பாராவில் கண்டிருக்கும், "ஜனத்தொகை அதிகரிப்பதற்கு ஏற்றவகையில் உணவு உற்பத்தியை ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதிகரிப்பதும்'' என்னும் வார்த்தைகளையும் அதை அனுசரித்து எழுதியிருக்கும் குறிப்புகளையும் 12 முதல் 16 வரையில் உள்ள பக்கங்களில் பார்க்கவும். பீடிகையில் உள்ளபடிக்கு "உணவு உற்பத்தி-அதிகரிப்பது'' என்பது நிலத்தின் மூலம் தான் கிடைக்கும். நிலம் தனிப்பட்ட நபர்களிடம் விட்டு விட்டு அவர்கள் இஷ்டபடி பயிர் செய்து கொடுத்தால் உண்டு, இல்லாமல் போனுல் இல்லை, என்று அவஸ்தைப் பட்டு கொண்டு இருப்பதா? அல்லது அரசாங்கம் அவைகளை கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவோ, மற்றபடியோ விஞ்ஞான வழிகள்படிக்கு பயிர் செய்து அதிக உற்பத்தி செய்வதா என்னும் பிரச்னைக்கு அம்மாதிரி அரசாங்கம் தான் செய்யமுடியும் என்று உடனே பதில் சொல்லலாம்.

பிரதமர் நேரு இதை குறித்து பல தடவைகளில் பல இடங்களில் பேசியிருக்கிருர். அவருடைய முன்னேற்றத்திற்காக வெளிப்படுத்திய எண்ணங்களை பீடிகையின் கீழ் 14, 15, 16 பக்கங்களில் அச்சிட்டு யிருக்கிறோம். இதின் கீழேயும் சிலதை தமிழிலும் வெளிப்படுத்தி இருக்கிறோம்.

5. சமுதாய அபிவிருத்தியை பற்றி முதல் 5 வருஷதிட்டம்-2-ம் 5 வருஷ திட்டம் 3-ம் 5 வருஷ திட்டம் ஏன்.—மேலே 4-வது பாராவில் நம் தமிழ் நாட்டில் உள்ள 3 கோடி மக்களின் ஒரு வருஷத்தின் தேவைகள் இவ்வளவென்று அறிந்ததும், அவைகள் நம்முடைய

சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு சேவை திட்டம்

தமிழ்நாட்டில் எவ்வளவு எங்கெங்கே கிடைக்கிறது நம்முடைய இந்திய தேசத்தின் எந்த பாகங்களிலிருந்து மீதியை அடைகிறோம். வெளி தேசங்களில் இருந்து எவ்வளவு வருகிறது என்று சிக்கனமாக கணக்குகள் எடுக்கவேண்டும். அந்த கணக்கில் மக்கள் வயிறு நிறைய சாப்பிடுவதாக கணக்கிடவேண்டும். அத்துடன் 100க்கு 10 வீதம் அதிகமாக சேர்த்துக்கொண்டால் அது ஒரு வருஷத்தின் தேவைகள் என்று ஏற்படும். அவைகள் குறைவாகயிருந்தால் 5 வருஷங்களுக்குள் அவைகளை மக்களுடைய சகாயத்தினல் அடைய முயற்சி செய்வதுதான் 5 ஆண்டு திட்டம் என்று பெயர். மறுபடியும் அதே மாதிரி செய்வது 2-ம் 5 ஆண்டு திட்டம், 3-வது ஐந்தாண்டில் அம்மாதிரியே செய்வது 3-ம் 5 ஆண்டு திட்டம் என்று கூறப்படுகிறது. இந்த கஷ்டங்களும், ஏழ்மை தனமும் மூன்றுவது 5 ஆண்டு திட்டத்திலும் தீருது என்கிருர்கள் அப்போதும் பொது உடமை வந்ததாக கருதமுடியாது.

அரசாங்கம் இடைகால ஏற்பாடாக அரிசி, கோதுமையை விற்க வர்த்தகத் திட்டம் மொத்த வியாபாரிகள்மூலம் கொள் முதல்;

சில்லரை வியாபாரிகளுக்கு கண்டிரோல் விலையில் விற்பனை கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள் முதல் விற்பனை நடைபெறுவது கடைசி ஏற்பாடு சில்லரை விலை நிர்ணயம் ராஜ்யப் பொறுப்பு: மத்ய உணவு மந்திரியின் விளக்க அறிக்கை

சர்க்காரின் தானிய வர்த்தகம் ஆரம்பத்தில் அரிசி, கோதுமை ஆகிய இரு பண்டங்கள் சம்பந்தமாகவே நடைபெறும். கண்டிரோல் விலையில் சில்லரை வியாபாரிகளுக்கு மொத்த வியாபாரிகள் விற்க வகை செய்யும் இத்திட்டம், பொது மக்களுக்கு விற்கப்படவேண்டிய விலையை நிர்ணயிக்கவில்லை. ஆனல், சப்ளை தங்கு தடையின்றி கிடைக்க வகை செய்து கொண்டு ராஜ்ய சர்க்கார்கள் சில்லரை விலைகளை நிர்ணயிக்க விரும்பினல் அங்ஙனம் செய்யலாம். 2-4-1959ல் லோக் சபையில் மத்திய உணவு மந்திரி ஸ்ரீ ஏ. பி. ஜெயின், வெளியிட்ட சர்க்காரின் உணவு தானிய வியாபாரதிட்ட விவரங்களில் இத்தகவல்கள் அடங்கியுள்ளன.

சர்க்கார் வகுத்துள்ள இந்த நகல் திட்டம் 3, 4-ந் தேதிகளில் கூடும் தேசீய அபிவிருத்தி கவுன்சிலில் விவாதிக்கப்பட்டு இறுதி உருப்பெறும். திட்டம் இரு பகுதிகள் கொண்டது. ஒன்று இடைக்கால ஏற்பாடு; மற்றொன்று இறுதி ஏற்பாடு.

இடைக்கால ஏற்பாட்டின் பிரகாரம், மொத்த வியாபாரிகள் லைசென்சு பெற்ற வியாபாரிகளாக இயங்குவர். சொந்த ஹோதாவில் அவர்கள் தானியம் கொள்முதல் செய்தாலும் விவசாயிக்கு சர்க்கார் நியமித்துள்ள குறைந்தபட்ச விலையைத் தரவேண்டும். லைசென்சு பெற்ற வியாபாரிகளின் ஸ்டாக் பூராவையுமே ஒரு பகுதியையோ கண்டிரோல் விலையில் வாங்க சர்க்காருக்கு உரிமை உண்டு. எஞ்சியதை மொத்த வியாபாரிகள் கண்டிரோல் விலைக்கு மேற்படாமல் சில்லரை வியாபாரிகளுக்கு விற்கலாம். லைசென்சு பெற்ற மொத்த வியாபாரிகள் அவர்களுடைய கொள்முதல், விற்பனை, கையிருப்பு ஆகியவைபற்றிச் சரியான கணக்கு வைத்திருப்பதோடு, உரிய காலங்களில் ராஜ்ய சர்க்கார்களுக்குக் கணக்கைத் தொகுத்து அனுப்ப வேண்டும். ஆரம்பத்தில் கோதுமை, அரிசி ஆகிய இரு தானியங்கள் சம்பந்தமாகத்தான் இத்திட்டம் அமுலாகும்.

இடைக்கால ஏற்பாடு அமுலில் இருக்கையில், நகரப்புற மாந்தர்களுக்கு சப்ளை செய்வதற்காக உபரி தானியங்கள் அனைத்தையும் சர்க்கார் வாங்கமாட்டார்கள். படிப்படியாக அதிக அளவில் வாங்கத் தொடங்கி மார்க்கெட் விலையைக் கட்டுப்படுத்த முயலுவர். இறுதியில் முழு அளவில் தானிய வர்த்தகத்தை சர்க்காரே நடத்தும் கட்டம் எய்தப்படும்.

சர்க்கார் வர்த்தக இறுதி ஏற்பாட்டில், கூட்டுறவு ஊழிய சங்கங்கள் மூலம் கிராமப் பண்ணைகளின் உபரி தானியம் கொள்முதல் செய்யப்படும். இவ்வேலை மார்க்கெட்டில் கூட்டுறவு சங்கங்கள் மேற்பட்ட கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடைபெறும். உபயோகிப்போருக்கு விநியோக வேலை சில்லரை வியாபாரிகள் உபயோகிப்போர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடைபெறும். ஆகவே உபயோகிப்போர் கூட்டுறவு சங்கங்களை நிறுவ உருவான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இறுதி லட்சிய ஏற்பாட்டை துரிதமாக எய்த தீவிர முயற்சி எடுக்கப்படும். இடைக்காலத்தில் மொத்த வியாபாரம் கூட்டுறவு சங்கங்கள் வளர வளர அவற்றால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு சேவை திட்டம்

அரசாங்க லட்சியம்

விவரங்களை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழுவின் சிபாரிசுகளை அரசாங்க வர்த்தக நோக்கங்கள் சம்பந்தமாக சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளது. 'உற்பத்தியாளருக்கும் உபயோகிப்போருக்கும் நியாயமான விலை விகிதங்கள் நிலவச் செய்வது, அறுவடையை அடுத்தும் பின்னரும், அடுத்த அறுவடைக்கு முன்னரும் விவசாயிக்குக் கிடைக்கும் விலைக்கும் வாங்குவோர் கொடுக்கும் விலைக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறைப்பது ஆகியவை இத் திட்ட நோக்கங்களாகும். ஆய்வுக்குழு தயாரித்துள்ள திட்டம் கூட்டுறவு சங்கங்கள் படிப்படியாக வளர்ச்சியடைந்து, கடைசியில் உபரி தானியம் அனைத்தையும் கொள்முதல்செய்து சீராக உபயோகிப்போருக்கு விநியோகிக்கும் வகையில் விரிவாகப் பல்வேறு கிளைகள் உப கிளைகளுடன் கூட்டுறவு சங்கங்கள் இயங்குவதற்கு வகை செய்கிறது.

தானிய வர்த்தகம் சம்பந்தமாகச் சர்க்கார் மேலும் சில முடிவுகள் செய்துள்ளனர். அவை வருமாறு:—**1.** குறைந்தபட்ச விலை உத்தரவாதமாகக் கிடைக்கும் பொருட்டு சர்க்காரிடமே நேரிடவிற்க விரும்பும் உற்பத்தியினரிடமிருந்து தானியங்களை வாங்க ஒரு ஸ்தாபனம் நிறுவப்படும். **2.** கொள்முதல்-விற்பனை வேலை யனைத்தும் லாபம்-நஷ்டம் இன்றி நடத்தப்படும் **3.** ராஜ்யம் பூராவுக்கும் அல்லது பிராந்தியம் பூராவுக்குமென ஒரே மாதிரி கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படும். சில பின் தங்கிய பிரதேசங்களில் ரயில் போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால், மொத்த வியாபார மார்க்கெட், அரவை மில்கள், ஆகியவை ரயில் நிலையத்துக்கு அருகாமையில் இருக்கின்றன. அங்கு நிலவும் விலைகளே உபரிப் பிரதேசத்தில் பிரதிபலிக்கின்றன. ஆகவே, அத்தகைய பிரதேசங்களுக்காகத் தனி விகிதத்தில் விலை நிர்ணயிக்கப்படுவது அவசியமாகலாம். மேலும் சில கடும்பற்றுக்குறைப் பிரதேசங்களில், உபரிப் பிரதேசங்களைவிட விலை கூடுதலாக நிர்ணயிப்பது அவசியமாகலாம். அதேபோல், மொத்த வியாபாரிகளுக்கான கண்டிரோல் விலை ராஜ்யத்தினுள் பல்வேறு பிராந்தியங்களிடையே மாறுபடலாம். **4.** சில்லரை விலையை தற்போது நிர்ணயிப்பது அனுபவ சாத்தியமாகத் தோன்றவில்லை. நியாய விலைக் கடைகளையும், உபயோகிப்போர் சங்கங்களையும் விஸ்தரித்து சில்லரைவிலைகள் நியாயமாக நிலவச் செய்ய நடவடிக்கை எடுக்கலாம். ஆனால். சப்ளைகள் தங்குதடையின்றி வரப்பாதகமின்றி சில்லரை விலைகளை அமுல் நடத்துவது சாத்தியமென ஒரு ராஜ்ய சர்க்கார் கருதினால் அங்ஙனம் செய்யலாம். [சுதேச மித்திரன் பக்கம் 4, தேதி 4-4-1959.]

விவசாயம் தொழில் துறைகளின் வளர்ச்சியை சரிக்கட்ட நேரு வற்புறுத்தல்.

3-வது திட்ட லட்சிய அடிப்படை: தேசீய அபிவிருத்தி கவுன்சில் விவாதம் கிராமப்புற செழிப்பு, ஆள் பலத்தைப் பயன்படுத்துதல் பற்றி சென்னை நிதி மந்திரி

தேசீய வருமானம் அதிகரிக்கையில் உள்நாட்டு வசதிகளை இன்னும் கூடுதலாகத் திரட்டும் பிரச்னை, இன்று இங்கு கூடிய தேசீய அபிவிருத்தி கவுன்ஸிலில் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத் தயாரிப்பு பற்றிய மூன்று மணி நேர விவாதத்தின்போது முக்கியமாகக் கவனிக்கப்பட்டது. ஆள் பலத்தை அதிகபட்சமாகப் பயன் படுத்த வேண்டுமென எல்லோரும் வலியுறுத்தியதாகத் தெரிகிறது. நாளை இவ்விஷயம் குறித்து விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

கவுன்ஸில் சட்டத்தைத் துவக்கி வைத்துப் பிரதம மந்திரி பேசுகையில், சுபிட்ச வருங்காலத்தைப்பற்றிய பேச்சோடு நிறுத்தாமல், மக்களில் கீழ்க் கடையிலுள்ளோரின் ஜீவதாரத் தேவைகளை ஈடு செய்வதற்கு ஆவன புரிவது குறித்து சிந்திக்குமாறு கேட்டுக்கொண்டார்.

வரும் ஆண்டுகளால் தேசீய வருமான அதிகரிப்பைப் பூராவாக தேசீய அபிவிருத்தித் திட்டங்களுக்குத் திருப்பும் பொருட்டு, சம்பளம், சம்பாத்தியம் இரண்டிற்கும் வரம்பிடலாமென்ற யோசனை பொதுவாக ஆதரவைப் பெறவில்லை. அதற்குப்பதிலாக இன்ஷுரன்ஸ், பிராவிடண்டு நிதிக்கு ஒதுக்கும் தொகையை 6¼ சத விகிதத்திலிருந்து 8 1/3 சத விகிதமாக உயர்த்துவது போன்ற கட்டாய சேமிப்பு முறைகளை அமுலாக்கலாம் என்று யோசனை கூறப்பட்டது.

ஸ்தல அபிவிருத்தி வேலைகளைப் பஞ்சாயத்துகள் மேற்கொள்ளச் செய்யலாமென்றும், இதற்காக நிலத் தீர்வை அடிப்படையில் குறிப்பிட்ட விகிதாச்சாரத்தில் வரி விதிக்க அவற்றை அனுமதிக்கலாமென்றும் அல்லது நலத் தீர்வையில் ஒரு சத விகிதத்தை அவற்றிற்கு ஒதுக்கலா மென்றும் யோசனை கூறப்பட்டது.

சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தாரிப்பு சேவை திட்டம்

மக்களின் அத்தியாவசியத்தேவைகளைப் பூர்த்தி செய்ய முயல்கையில்தான் அவர்களிட மிருந்து அதிக தியாகத்தைக் கோர முடியுமென நேருஜி வலியுறுத்தினர். சம்பள உயர்வு வசதி கள் அதிகரப்பு போன்றவற்றை பலதரப்பட்டவர் கோருகின்றனர். ஆனல் அதிக தேவையுள் ளவர் குரல் எழுப்பக் காணேம். நல்ல குடிதண்ணீர், வைத்திய-ஜாகை வசதிகள் போன்ற அத்யாவசியத் தேவையுள்ளோர் வாளாவிருக்கின்றனர். ஆகவே, அடிப்படைத் தேவைகளை அளப்பதில் கவனம் செலுத்தி, அடுத்த திட்டத்தைத் தயாராக்க வேண்டும் என்று குறிப் பிட்டார்.

சேமிப்பைத் திரட்டுவது.

மூன்ருவது திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பற்றிய விவாதத்தைத் துவக்கி வைத்த சென்னை நிதி மந்திரி ஸ்ரீ. ஸி. சுப்ரமண்யம் மக்களிடையே சேமிப்பை ஊக்குவித்து அதிகமாகத் திரட்டுவதெப்படி என ஆராய்வது முதல் பிரச்னையென்ருர். மூன்ருவது திட்டத்தின் தேசீய வருமானப் பெருக்கம் எந்த அளவில் இருந்தாலும் அதில் ஒரு விகிதத்தை அபிவிருத்திக்குத் திருப்புவது தவிர்க்க முடியாதது. தேசீய வருமானத்தில் பாதி விவசாயத் துறையிலிருந்து கிடைக்கிறது. ஆகவே அத்துறையிலிருந்து சேமிப்பு அதிகமாகத் திரட்டப் பட்டாலொழிய மொத்தத்தொகை உயராது. கஷ்டங்கள் எவ்வளவிருப்பினும் கிராமப்புறங்களில் சேமிப்பைத் திரட்டுவது தான் நம்மை எதிர்ப்படும் பிரச்னை. விவசாய உற்பத்திப் பெருக்க அனுகூலத்தின் ஒரு பகுதியை அபிவிருத்திக்குத் திருப்பி சட்ட மூலமோ அல்லது பிற வழிகளிலோ நடவடிக்கை எடுப்பதன் சாத்தியக் கூறுகளை ஆராய்வது அவசியமாகும் என்ருர்.

பஞ்சாயத்துக்கள்

சென்னை பஞ்சாயத்து சட்டத்தின் பிரகாரம் ஆரம்பக் கல்விக்கு வகை செய்து நடத்தும் பொறுப்பைப் பஞ்சாயத்துகளிடம் ஒப்படைந்திருப்பதையும், அதற்காக அவற்றின் வசதிகளைப் பெருக்க நடவடிக்கை எடுத்திருப்பதையும் ஸ்ரீ. சுப்ரமண்யம் விவரித்தார். மக் களின் உண்மைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பஞ்சாயத்துகளும் கூட்டுறவு சங்கங்களும் வெற்றி பெறும் அளவைப் பொறுத்தும் உள்ளூர் வசதிகள் இதற்காக அதிகமாகத் திரட்டப் படுவதைப் பொருட்டும், சர்க்காரின் வசதிகள் பிற முக்கிய முதலீடுகளுக்கு அதிகமாகத் திருப் பப்படுவது உள்ளது. இந்த யோசனையை எவ்வழியில் விரிவாக்கி அமுலாக்கலாமென ஆராய ஸ்ரீ. சுப்ரமண்யம் வேண்டினர்.

கிராமங்களில் வேலைக்கு வாய்ப்பின்மையை அவர் பிரஸ்தாபித்து, அங்குள்ள ஆள் பலத்தைப் பூரணமாகப் பயன்படுத்த ஏற்பாடு செய்தாலன்றி பிற துறைகளில் முயற்சி குறிப் பாக விவசாய உற்பத்திப் பெருக்க நடவடிக்கைகள் பலனளிக்காதென வலியுறுத்தினர்.

பொருளாதார லட்சியம்

பூரா திட்டத்தைப் பற்றி விரிவான கண்ணேட்டம் இல்லாமல், தனித் தனியாகப் பல் வேறு திட்டங்களைச் சரியாக மதிப்பிட்டு பிராதான்யம் நிர்ணயிக்க இயலாதென பிரதம மந் திரி நேரு குறிப்பிட்டார். பல்வேறு அம்சங்களில் சமநிலை எய்துவது அவசியமாகிறது. விவ சாயத் துறையில் நடவடிக்கைகளையும் தொழில் துறை நடவடிக்கையும், பிற முயற்சிகளும் ஒன்றுக்கொன்று அனுசரணையாக சரிக்கட்டுவது அவசியமென்றும், இதற்கு விரிவான பொரு ளாதார லட்சியங்களும் நாம் எய்த உத்தேசிக்கும் நோக்கத்தை அவ்வப்போது சரிபார்ப்ப தும் அவசியம் என்று விளக்கினர். பொருளாதார லட்சியம், தேசீய வருமானம், முதலீடு, பற்றித் திட்டவட்டமாக நமக்குத் தெரியாது. வருடம் 6 சத விகிதம் தேசீய வருமானம் உயர் வதாக வைத்துக் கொள்வோம். அந்த அடிப்படையில் நாம் வேலையைத் தொடங்குவோம். ஆனல் அதைச் சாதிப்பதென விடாப்பிடியாக இருக்க வேண்டும் என்ருர் நேரு,

ஜனத்தொகை பற்றி அவர் பிரஸ்தாபித்து, திட்டமிடுவது என்று ஒரு லட்சியத்தை மட்டும்பொறுத்ததாகாது, குறிப்பிட்ட ஜனத்தொகைக்கு இன்ன செய்வது என்பதும் அதில் சம்பந்தப்பட்டிருப்பதால், இன்று மட்டுமன்றி வருங்காலத்திலும் ஜனத்தொகை எவ்வளவு இருக்குமென மனதில் கொள்வது அவசியம் என்ருர். நமது கஷ்டங்கள் அனைத்துக்கும் ஜனத்தொகைப் பெருக்கம் காரணமல்ல. ஆயினும் அதைக் கட்டுப்படுத்தாவிடில் நமது முயற்சியனைத்தும் வியர்த்தமாகிவிடும். இன்றுள்ள நிலையிலேயே நீடிக்க நேரிடும் என்று எச் சரித்தார். உணவுப் பெருக்கமே எல்லாவற்றிற்கும் அடிப்படை என்பதையும், பருவ மழை

சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு சேவை திட்டம்

தவறுவதால் ஏற்படும் பற்ருக்குறையையும் சமாளிக்கும் வகையில் நிலைமை சீர்படுத்துவது அவசியமென்றும் வலியுறுத்தினர். [சுதேச மித்திரன் முதல் பக்கம். 5-4-1959]

ஸ்தல வேலைகளில் அதிக பட்சம் ஆள்சக்தியை ஈடுபடுத்தும் பொறுப்பு பஞ்சாயத்துகளிடமே விட தேசீய கவுன்ஸில் முடிவு குடிமராமத்து சட்டம் வரலாம்

ஸ்தல அபிவிருத்தி வேலைகளுக்கு, ஸ்தல மனித சக்தியை உயர்ந்தப் பட்சம் பயன் படுத்திக்கொள்ளும் பொறுப்பை, பஞ்சாயத்துக்கள் வசம் ஒப்படைத்து விடலாம் என்ற கொள்கையை, தேசிய அபிவிருத்தி கவுன்ஸில் இன்று பொதுவாக ஏற்றுள்ளது. இதற்கான நிதி சேகரிக்கும் யோசனைகளையும் கவுன்ஸில் விவாதித்தது.

ஸ்தல பாசன, பூசார பாதுகாப்பு வேலைகள் கால்வாய் மராமத்து போன்ற வழக்கமான கடமைகளை பஞ்சாயத்துக்கள் கட்டாயம் ஏற்க வேண்டுமெனவும், அவசியமானல் இதற்காக சட்டம் கொண்டு வரலாம் என்றும் கவுன்ஸிலில் அபிப்பிராயம் நிலவியது.

கிராமாந்திரங்களில் வருவாய்களை பெருக்கக் கீழ்க்கண்ட யோசனைகள் கூறப்பட்டன:- முற்போக்கு ரீதியில் அமைந்துள்ள நில ரெவின்யூ முறையை அமலாக்குவது (இதில் ஒரு குறிப் பிட்ட சதவிகிதத்தை பஞ்சாயத்துகளுக்கு ஒதுக்குவது) வர்த்தகப் பயிர்கள் மீது 'செஸ்' விதிப் பது; ஆயுள் இன்ஷியூரன்ஸை கிராமங்களில் பிரபலப் படுத்துவது. [தினமணி 5-4-1959]

சேவை கூட்டுறவுகள்: லோக சபையில் தீர்மானம் அங்கீகாரம் நிலம் மட்டுமின்றி தொழில்களிலும் கூட்டுறவு முறை ஏற்படவேண்டும்

பிரதமர் நேரு அறிவுறுத்தல்: கூட்டுறவு சாகுபடி முறையை ஏற்படுத்துவதற்கு முதல்படியாக சேவைக் கூட்டுறவுகள் அமைக்க வேண்டும் என்று கூறும் நாகபுரி காங்கிரஸ் தீர்மானத்தை இன்று லோக சபை அங்கீகரித்தது. நாகபுரி தீர்மானத்தின் சுருக்கமே இது.

''நிலத்தில் மட்டுமின்றி தொழில்களிலும் கூட்டுறவு முறை வந்தால் தான் நமது எதிர் காலம் சுபிட்சமாக இருக்கும்'' என்று நேருஜி கூறினர்.

லோகச்சபை தீர்மானத்தின் வாசகம் வருமாறு: ''வசதியும் நிலைமையும் சரியாக உள்ள இடங்களில் மக்கள் சம்மதத்துடன் கூட்டுறவு பண்ணைகள் ஏற்படுத்துவதற்குப் பீடிகையாக அடுத்த மூன்று ஆண்டுகளில் சேவை கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி மக்க ளிடையே கூட்டுறவு மனப்பான்மையை வளர்ப்பதற்கு சாத்யமான எல்லா முயற்சிகளையும் சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும். என்று பார்லிமெண்டு வற்புறுத்துகிறது''

இந்தத் தீர்மானத்தின் மூலமாக முதல் தடவையாக நாகபுரி தீர்மானத்திற்குப் பார்லி மெண்டின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

1. உற்பத்தி பெருகவும், 2. இணைந்து வேலை செய்யவும், 3. படிப்படியாக வர்க்க பேதம் நீங்கவும் கூட்டு சாகுபடி முறை விரும்பத் தக்கது என நான் நம்புகிறேன். என்று நேருஜி கூறினர்.

அவர் மேலும் சொன்னதாவது:—கூட்டு சாகுபடியை அணுகு முறை களைந்து கொடுக் கக் கூடியதாக இருக்க வேண்டும். அதை கட்டம் கட்டமாகத்தான் புகுத்த வேண்டும். முதல்படி சேவை அல்லது பல சேவை கூட்டுறவுகள்: அடுத்தது இணைப்பு கூட்டுறவு சங்கங் கள் படிப்படியாக சேவைக் கூட்டுறவுகள் இணைப்பு கூட்டுறவு சங்கங்கள் ஆகலாம். கொஞ்ச காலத்துக்கு இருவிதமான சங்கங்களும் இருக்கலாம்.

கூட்டுறவு சாகுபடிக்கு இரண்டு கிராமங்களை ஒரு யூனிட் ஆக வைத்துக் கொள்ளலாம். இரண்டு கிராமங்களுக்கு மேல் இருந்தால் சாகுபடியானவர்களிடம் நெருங்கிய உறவு இருக் காது. இம்மாதிரி பல யூனியட்டுகள் பொருளாதார காரியங்களுக்காக கூட்டுறவு சங்கங்கள் யூனியனுகலாம்.

கூட்டுறவுகளை நடத்த இப்போதிலிருந்து ஏராளமானவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

எதிர்ப்பவர்கள் என்ன சொல்லுகிருர்கள். இதைச் செய்யாதீர்கள் இது அபாயகர மானது. மக்கள் இதை விரும்ப மாட்டார்கள் என்கிருர்கள். உற்பத்தி குறைந்து விடும் என் றுகூட சில சமயம் சொல்லுகிருர்கள்.

சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு சேவை திட்டம்

விவசாய உற்பத்தியைக் குறைக்கும் என்ருல் இது தவருன நடவடிக்கைதான். அதைப்பற்றி வாதத்துக்கே இடமில்லை. ஆனுல் உற்பத்தி பெருகும் என்பது கூட்டுறவு முறை சிபாரிசு செய்யப்பட்டதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

இதைச் செய்யக் கூடாது என்ருல் நான் வேறு என்ன செய்யலாம்; ஒரு ஏழைக் குடியானவனை அவனுடைய துண்டு நிலத்தில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டும் என்ருல் அவன் தனது வயிற்றைக் கழுவலாம். மகசூல் மோசமாகி விட்டால் அவன் நிலைமை அதோகதிதான். சிறிய குடியானவர்கள் தற்கால விவசாய முறைகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது.

குடியானவர்களை அவர்களுடைய சொற்ப நிலங்களை வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தும்படி விடுவது இந்திய குடியானவரின் வறுமையை அதிகப் படுத்துவதேயாகும். நிலைமையை இப்போதுள்ளபடியே விட்டு விட்டால் அப்படித்தான் ஏற்படும்.

நிலைமையை நாம் இப்படியே-விட்டுவிட முடியாது நேருஜி உரத்த குரலில் சொன்னதாவது:—இந்திய மக்களின் வறுமை அல்லது குடியானவர்களின் வறுமை நீடிப்பதை நாம் அனுமதித்துக் கொண்டிருக்க மாட்டோம். எதிரிகள் கூறும் யோசனையை ஒப்புக்கொண்டால், நகரங்கள் அல்லது தொழில்கள் முன்னேறலாம் அல்லது முன்னேருமல் போகலாம். ஆனுல் ஒன்று மட்டும் நிச்சயம். சிறு நிலங்களை வைத்துக் கொண்டிருக்கும் குடியானவர்கள், மேலும் மேலும் வறுமை யடைந்து வருகிருர்கள் என்பதை நீங்கள் ஒப்புக் கொண்டால், அவர்கள் வறுமைச் சுழலி லிருந்து வெளியேற முடியாது என்பது மட்டும் நிச்சயம்.

கூட்டுறவு சாகுபடி மற்றும் அது போன்ற விஷயங்களில் ரஷியா, சீனு, போலந்து, யுகோ, பிருட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளின் அனுபவங்களை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த நாடுகளின் அனுபவங்களை நாம் ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்று எனக்குத் தெரியவில்லை. சீனுவில் செய்த ஏதாவதொன்றை நாம் செய்தால் அது நம்மை நாசத்தில் கொண்டு போய் விடும் என்ற பயத்தை என்னுல் புரிந்து கொள்ள முடியவில்லை. சீனுவின் அடிப்படைத்தத்துவத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. நான் எனக்கு இஷ்டமானதைச் செய்யலாம். அதே மாதிரி அவர்களுக்கு இஷ்டமானதை அவர்கள் செய்யலாம். எந்த நாட்டின் அடிப்படைத் தத்துவத்தையும் நான் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனுல் ஒரு நாடு நல்ல காரியம் ஒன்றைச் செய்தால் நாம் அதிலிருந்து தெரிந்து கொண்டு அனுகூல மடைய வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். அதே சமயத்தில் நாம் செய்யும் எதுவும் இந்தியாவின் நிலைமைகளுக்கு பொருத்தமானதாக இருக்க வேண்டும். மற்ற நாட்டவர்களின் அனுபவங்களைப் பயன்படுத்திக் கொண்டு நமக்குச் சொந்தமாக கொள்கை வகுத்துக் கொள்ள வேண்டும்.

கூட்டுறவு சாகுபடி முறையை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலையை உண்டாக்க வேண்டும் என்ற வாதத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனுல் இந்த முறையே இந்தியாவுக்குப் பொருத்தமான தல்ல என்று கூறுவது சரியான வாதமல்ல. இந்த வாதத்தை ஏற்றுக் கொண்டால் இந்தியக் குடியானவர்கள் நிரந்தரமாக வறுமையில் மூழ்கியிருக்க வேண்டும் என்றே அர்த்தம்.

கூட்டுறவு முறை சரியான வழி. அதை நடத்தி வைக்க சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்கள் இக் கருத்தை ஏற்கும்படிச் செய்ய வேண்டும். இதற்கு நிர்ப்பந்தம் பிரயோகிக்கப்படும் என்னும் பயத்துக்கு ஆதாரம் கிடையாது. இங்குள்ள நிலைமைகளில் அரசியல் அமைப்பையும் கருத்தில் கொண்டு பார்த்தால் கட்டாயத்தின் மூலம் கூட்டுறவு முறையைக் கொண்டு வருவது அசாத்தியமாகும்:

மதராஸ் அரசாங்கம் உணவு தானிய வியாபாரம் செய்ய ரூபா 5 கோடி 59 லட்சம் 28—3—1959-ல் அசெம்ப்ளியில் அனுமதிக்கப்பட்டது.

இந்த துகையை கூட்டுறவு முறையில் கிராம அடிப்படையில் விற்பனை செய்வதின் மூலம் அமுல் நடத்தப்படும். [சுதேசமித்திரன் 1959-ஷ மார்ச்சுமீ 29.]

சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு திட்டம்.—பஞ்சாயத்துக்களை குறித்த வரையில் இந்த சட்டத்தின் பீடிகையின் படிக்கு இரண்டு தேசீய காரியங்கள் முக்கியமாகவும் அவசியம் என்றும் எடுத்து காட்டி யிருக்கின்றது. (1) உணவு உற்பத்தியை அதிகரிப்பது (2) ஜனத்தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்துவது.

சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு சேவை திட்டம்

உணவு உற்பத்தி.—உணவு உற்பத்தி நிலத்தின் மூலமாகத்தான் செய்ய முடியும். இந்த சட்டத்தின் படிக்கு நிலங்களானது பஞ்சாயத்தின் சுவாதீனத்தில் தான் இருக்க வேண்டும். அவைகள் தனிப்பட்ட நபரிடமோ, ஒரு கூட்டுறவு சங்கத்தின் ஆதிக்கத்திலோ இருந்தால் அவைகளுக்காக பஞ்சாயத்து ஜவாப்தாரியாக மாட்டாது. இந்த பஞ்சாயத்து சட்டத்தின் நோக்கமும் பலிக்காது. அதற்காக நிலங்களை பஞ்சாயத்தே எடுத்து கொண்டு அவைகளை தன் சுவாதீனம் செய்து கொண்டு அது முன் இருந்து சாகுபடி செய்ய வேண்டும். ஒரு கூட்டுறவு சங்கத்திற்கு அநேக சலுகைகள் கொடுத்து, அந்த கூட்டுறவு சங்கம் பயிர் செய்ய சக்தியுள்ளதாய் ஆகும்போது.—அதே மாதிரியாக ஒரு பஞ்சாயத்துக்கு உதவி செய்தால் அதுவும் கூட்டுறவு சங்கம் மாதிரி பயிர் செய்ய சக்தியுள்ளதாய் ஆகும். ஆகையால் நிலங்களை பஞ்சாயத்தே பயிர் செய்வது நலமென்று தோன்றுகிறது.

பயிர் செய்ய இருக்க வேண்டிய நிபந்தனைகள்.—1. நிலங்களை நம்பி அவைகளுக்காக உழைத்து பயிர் செய்கிறவர்களுக்கு அதன் பலிதம் அவர்களுக்குத் தான் முதலில் சேர வேண்டும். 2. அந்த நிலங்களில் அசலார் வந்து பயிர் செய்வதற்காவது, வேலை செய்வதற்காவது சாதாரணமாக இடங்கொடுக்கக் கூடாது. 3. நிலங்களில் சாகுபடியான நெல்லு அல்லது கோதுமை அந்த ஊருக்கே போதாமல் இருக்க அவைகளை ஊரைவிட்டு வெளியே கொண்டு போகக்கூடாது. அதை யாருக்காவது விற்றாலும் பஞ்சாயத்தின் உத்தரவின் பேரில் விற்க வேண்டும். 4. அப்படி விற்றாலும் கோவாபரேடிவ் மார்கெடிங் சொசைடிகாரர்களுக்கு விற்க வேண்டுமே ஒழிய, தனிப்பட்ட மொத்த வியாபாரிகளுக்கு விற்கக்கூடாது. அவர்கள் எப்போதும் பொது உடமைக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும் எதிரிகள் என்று அறியவும். 5. நிலங்கள் பஞ்சாயத்தின் சுவாதீனம் இல்லா விட்டால் அவைகள் அசலாரிடம் போய் சேர்ந்து விடும். நிலங்களை பஞ்சாயத்து தன் வசம் வைத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்வது இந்த சட்டத்திற்கு விரோதமாகும். ஆகையால் இந்த நெல்லு, கோதுமை கொள் முதல் விஷயத்தில் தனிப்பட்ட மொத்த வியாபாரிகளுக்கு அவைகளை வாங்கி விற்க லைசென்சுகள் கொடுக்கக் கூடாது. என்று முன்னதாகவே எச்சரிக்கை செய்கிறோம்.

ச. அ. யின் தே. வி. சே. திட்டத்தின் நிதி.—இதற்கு 5 வருஷங்களுக்கு ஒரு முறை ஒரு பிளக் (தொகுதி அல்லது பஞ்சாயத்து யூனியனு)க்கு முப்பத்திரண்டு இலட்சம் ரூபாய்களை கொடுப்பதாக கண்டிருக்கிறது. முதலில் அதில் பேர்பாதி தான் கொடுக்கப்படும். பிறகு அதை அதிகப்படுத்தப்படும். இந்த திட்டங்களை முதல் தரம் இரண்டாம் தரம் என்று நிதி தரும் விஷயமாக ஏற்படுத்தப்படும். பிரிவு 130-யை பார்க்கவும்.

பிரதமர் நேரு 14-4-1959-ல் சென்னையில் பிரசங்கம்: " நில சீர்த்திருத்தங்கள் அவசியம் பொருளாதார பிரச்னைகள்.

இப்பொழுது இந்தியாவின் பிரச்சினைகள் பொருளாதார பிரச்சினைகளாகி விட்டன. தார்மீகம், ஒழுக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளும் உண்டு. ஆனல் பட்டினியால் வாடுகிற மனிதனுக்குத் தர்மோபதேசம் ஏற்காது. ஆகவே வறுமையை முதலில் நீக்கி சாதாரண மக்களின் வாழ்க்கையை வளம்படுத்த வேண்டுவதே முதல் கடமை.

நாம் சோஷலிஸம் குறித்து பேசுகிறோம். ஆனல் அதை வரையறுத்துக் கூறவே இல்லை. இது பற்றியும் புகார் கூறப்படுகிறது. நாம் சோஷலிசத்தை வரையறுத்துக் கூறுவதற்குக் காரணம், கடுமையைத் தவிர்க்கவேண்டு மென்பதேயாகும். சமத்துவம், சமவாய்ப்பு இருக்க வேண்டுமென்பதற்காக முயன்றாலும், எந்த இனத்தையும் மறக்க விரும்புகிறோம். உற்பத்தியைப் பெருக்கி, விநியோகத்தை பாரபட்சமின்றி சமத்துவமாகப் பகிர்ந்துகொடுத்து சாதாரண மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த விரும்புகிறோம். **இந்த நோக்கத்தை முதலாளித்துவ முறையால் சாதிக்க முடியாது. முதலாளிதத்துவ முறையால் இந்தியாவின் முன்னேற்றமும் சாத்தியமல்ல.**

ஜனத்தொகை அதிகரிக்கையில், திட்டங்கள் வகுத்து எல்லா கட்சிகளின் ஒத்துழைப்பையும் பெற்று விவசாயத்தையும் தொழில்களையும் அபிவிருத்தி செய்து பரிகாரம் காணவேண்டும். உணவுப் பொருள்களுக்காக அயல் நாட்டை எதிர் பார்க்கவே கூடாது. மின்சாரம்; உருக்கு உற்பத்தியும் பெருகவேண்டும் யந்திரங்களையும் ரசாயனப் பொருள்களையும் இந்தியாவிலேயே உற்பத்தி செய்ய வேண்டும்.

உற்பத்தியும் செல்வமும் அதிகரிப்பதுடன் குடும்பக் கட்டுப் பாடும் அவசியம். ஜனத்தொகை அதிகரிப்பை சமாளிப்பதுடன், வேண்டிய உணவு, உடை முதலியன உற்பத்தி செய்வதுடன், உபரியும் ஏற்படச் செய்யவேண்டும். அப்பொழுதுதான் வருங்காலத் திட்டங்களுக்கு வழிசெய்யக்கூடும்.

நிலச் சீர்திருத்தங்கள்

உணவு உற்பத்தி பெருக, விவசாய சீரமைப்பும், நிலச்சீர்திருத்தங்களும் அவசியம். சேவா கூட்டுறவுகள் அமைக்கவும், நிலஉச்ச வரம்பு ஏற்படுத்தவும் வேண்டும். கூட்டுறவு பண்ணைகள் ஒரு புரட்சி அல்ல, சேவா கூட்டுறவுகளும் புரட்சிகரமான திட்டங்களே அல்ல. ஒவ்வொரு நாட்டிலும் சேவா கூட்டுறவுகள் உண்டு. சிக்கனமான முறையில் அதிகபலன் காணவும் விவசாயத்தை அபிவிருத்தி செய்யவும் சேவா கூட்டுறவுகள் அவசியம்,

சேவா கூட்டுறவுகள் மூலம் ஏழை விவசாயிகள் உதவிபெறவும் கூடும்; உணவு உற்பத்தி அதிகரிக்கவும் கூடும். இது இந்தியாவுக்குப் பொருத்தமே கூட்டுறவு பண்ணை முறையால் நல்ல பலன் காணலாம், என்று முடித்தார்.

மராமத்து மந்திரி திரு. கக்கன் வந்தனோபசாரம் கூறினர்.

3 லட்சம் சேவா கூட்டுறவுகள் தேவை வறுமை, வேலையின்மை தீர இதுவே வழி மக்கள் சபையில் உதவி மந்திரிகள் பேச்சு.

இன்று மக்கள் சபையில் திட்டங்கள் இலாகா உதவி மந்திரி எஸ். என். மிஸ்ரா பேசுகையில், கூட்டுறவு பண்ணை முறையால் வேலைவாய்ப்புகள் குறையாதென்றும், கூட்டுறவு பண்ணையால் கிடைக்கும் உற்பத்தியில் நிலத்திற்கு உரிமையாளர் ஓர் பங்கு பெறுவரென்றும், உழுவோர் தமது உழைப்புக்கு ஊதியமும் அதோடு போனசும் பெறுவரென்றும் கூறினர்.

பெரும் சோதனை:—சமுதாய அபிவிருத்தி, ஒத்துழைப்பு இலாகா மானியங்கள் ரூ. 22·59 கோடி அனுமதிக்கப்பட்டன.

உதவி மந்திரி மிஸ்ரா தொடர்ந்து பேசுகையில், "கூட்டுறவு பண்ணைக்கு முன்பு சேவா கூட்டுறவுகள் அமைக்கப்படும். ஆயிரம் பேருக்கு ஒன்று என்ற அடிப்படையில் மூன்று லட்சம் சேவா கூட்டுறவுகள் தேவைப்படும். ஏற்கனவேயே 1 லட்சத்து 65 ஆயிரம் சேவா கூட்டுறவுகள் உள்ளன. அவற்றைப் புதுப்பிக்க வேண்டும். இது பெரும் சாதனையாகப் போகிறது என்றார்.

வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை இவை நீங்க கூட்டுறவே சிறந்தசாதனம் என்று மிஸ்ராவும் கூட்டுறவு உதவி மந்திரி பி. எஸ். மூர்த்தியும் வற்புறுத்தினர்.

புது சேவா கூட்டுறவுகளில் சுரண்டலுக்கு இடமில்லாதபடி செய்வதாக பி. எஸ். மூர்த்தி உறுதிமொழி கூறினர். [ஜனசக்தி, மதராஸ், 16-4-1959.]

சில விஷயங்களுக்காக ஏற்பாடு செய்ய பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலிக் குள்ள அதிகாரம்.

67. பஞ்சாயத்து யூனியன் வாசிகளின் பாதுகாப்பு, சுகாதாரம், சௌகரியம் அல்லது வசதியை அபிவிருத்தி செய்யக் கூடியவையும் பொது மக்களுக்கு பிரயோஜன முள்ளவையும் 65-வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவை அல்லாதவையுமான நடவடிக்கைகள் விஷயமாக பஞ்சாயத்து யூனியனின் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பொறுத்தமானதெனத் தான் கருதிகிற ஏற்பாட்டை பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் தனது நிதி நிலையங்களுக்குட்பட்டும் இச் சட்டத்தின் ஷரத்துக் களுக்கும் அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளுக்குட்பட்டும் செய்யலாம்.

குறிப்பு

பகுதி 67.—பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் வாசிகளின் பாதுகாப்பு, தேக ஆரோக்கியம், சௌகரியம், சுகம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கான பொதுச் சேவை ஏற்பாடுகள் சம்பந்தமாய் பஞ்சாயத்து யூனியனின் தேவைகளை நிறைவேற்ற வகை செய்வதற்காக இப் பகுதி பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலுக்கு அதிகாரம் அளிக்கிறது.

பொது.—இது பிரிவு 64-யை போன்றது. பிரிவு 66 படிக்கு சமுதாய அபிவிருத்தியின் தேசீய விஸ்தரிப்பு திட்டத்தை பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு ஒப்படைக்கப்படும் பி. 74 படிக்கு அரசாங்கம் அதனுடைய அலுவல்களை அதிகப்படுத்தலாம்.

பொதுவான தண்ணீர் கட்டு வேலைகள், இடுகாடுகள், சுடு காடுகள் முதலியவை

68. இச்சட்டத்தின் ஷரத்துக்களுக்கும் அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளுக்கும் உட்பட்டு, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்கள் —

(i) துணி துவைப்பதற்கும், குளிப்பதற்கும், தண்ணீர் ஸப்ளைக்காகவும், பொதுவான ஆதாரத்திலிருந்து குடி தண்ணீர் காரியத்திற்காக பாதுகாக்கப்பட்ட தண்ணீர் ஸப்ளைக்காகவும், தண்ணீர் கட்டு வேலைகளை அமைத்து வைத்து வருவதுடன் பொதுவான இடுகாடுகளையும், சுடுகாடுகளையும் ஏற்படுத்தி வைக்கலாம்.

(ii) யாதொரு ஸ்தாபனத்தை நிர்வகிப்பதை அல்லது யாதொரு கட்டு வேலையை கட்டி முடித்து வருவதை அல்லது வைத்து வருவதை பஞ்சாயத்து யூனியனின் கவுன்ஸிலின் சம்மதத்துடனும் ஒப்புக்கொள்ளப் படக்கூடிய ஷரத்துக்களின் பேரிலும் அந்தப் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலிடம் ஒப்படைக்கலாம்.

குறிப்பு

பகுதி 68.—இரண்டு அல்லது பல பஞ்சாயத்துக்கள் பொதுத் தண்ணீர் சாலைகளையும், சுடுகாடுகளையும், இடுகாடுகளையும் கட்டிப் பராமரித்து வருவதற்காகவும் ஷி யாதொரு ஸ்தாபனத்தின் நிர்வாகத்தை அல்லது யாதொரு கட்டுவேலையை நிறைவேற்றுவது அல்லது பராமரிப்பதை பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலிடம் ஒப்புவிப்பதை இந்தப் பகுதி சாத்தியமாக்குகிறது.

பொதுச் சாலைகளிலும், பொது இடங்களிலும் விளக்குப் போடுவது.

69. 64-வது பிரிவின் (b) பகுதியில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாமல் யாதொரு பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அதிகார வரம்புக்குள்ளிருக்கிற பொதுச் சாலைகளிலும், பொது இடங்களிலும் விளக்குப் போட வேண்டுமென அரசாங்கத்தார் பொதுவான அல்லது விசேஷ உத்தரவு மூலமாக அதற்குக் கட்டளையிடலாம்; அதன்பேரில் அப்படி விளக்குப் போடுவது பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் கடமையாகும்;

ஆனல், அத்தகைய கட்டளை பிறப்பிக்கும்போது விளக்குப் போடுவதற்கு நியாயமானதெனத் தாங்கள் கருதக்கூடிய செலவுக்காக அரசாங்கத்தார் ஏற்பாடு செய்ய வேண்டும்; அரசாங்கத்தாரின் தீர்மானம் முடிவானதாகும்.

குறிப்பு

பகுதி 69.—யாதொரு பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் பொதுச் சாலைகள், பொது ஸ்தாபனங்கள் இவற்றிற்கு விளக்குப் போடுவதற்காக ஏற்பாடு செய்யும்படி அதற்குக் கட்டளையிட அரசாங்கத்தாருக்கு இப் பகுதி அதிகாரமளிக்கிறது.

பொதுவான டிஸ்பென்ஸரிகள், சிசு சம்ரட்சணசாலைகள் முதலியவற்றைப் பராமரித்து வருவது.

70. இச் சட்டத்தில் கண்ட நிபந்தனைகளுக்கும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளுக்கும் உட்பட்டு, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்கள் பஞ்சாயத்தை யூனியன் கவுன்சில்கள் பொதுவான டிஸ்பென்ஸரிகளையும், சிசு சம்ரட்சண சாலைகளையும் நிர்ணயிக்கப்படக்கூடிய வேறு விதமான ஸ்தாபனங்களையும் ஏற்படுத்தி பராமரித்து வரலாம்.

குறிப்பு

பகுதி 70.—இப் பகுதியின்படி இரண்டு அல்லது பல பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்கள் அவைகளுக்குப் பொதுவாக மருந்துச்சாலைகளையும், சிசு நல நிலையங்களையும் இன்னும் இதர ஸ்தாபனங்களையும் ஏற்படுத்தி வைத்து வரலாம்.

விதி பி. 70 படிக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்கள் பராமரித்து வரவேண்டிய பொதுவான ஸ்தாபனங்கள் (II-5)

அடியிற்கண்ட ஸ்தாபனங்களை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்கள் பொதுவாக ஸ்தாபித்துப் பராமரித்து வரலாம் :—

(1) விவசாய ஸ்டோர்கள்—பொருட்காட்சிச் சாலைகள்;
(2) விவசாயக் கருவிகளையும் இயந்திர தளவாடத்தையும் செய்வதற்காகவும் பழுது பார்ப்பதற்காகவுமான வொர்க்ஷாப்புகள்;
(3) கால்நடையின் இனவகைகளை அபிவிருத்தி செய்வதற்கான (பொலிகாளைகளைப் பராமரித்து வருவதற்கான) ஸ்தாபனங்கள்.
(4) விறகு, வெட்டு மரங்கள், பசுந்தழைகள் இவற்றை ஸப்ளை செய்வதற்காக காடுகள் அல்லது தோப்புகளை அபிவிருத்தி செய்வதற்கான ஸ்தாபனங்கள்;
(5) ஆரம்பப் பாடசாலைகள் அல்லது உயர்தர ஆரம்பப் பாடசாலைகள்;
(6) ஆஸ்பத்திரிகளும் ஆரோக்கிய விடுதிகளும்;
(7) மலேரியா ஒழிப்பு, யானைக்கால் ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஸ்தாபனங்கள்.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் முதலியவைகளிலிருந்து ஒரு பஞ்சாயத்துக்கு ஸ்தாவர சொத்து, ஒரு ஸ்தாபன நிர்வாகம் முதலியவைகளை மாற்றுவது.

71. (1) பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலானது, நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய மேல் விசாரணைக்குட்பட்டு, விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக அதனிடம் சங்கிரமித்துள்ள யாதொரு அதே சொத்தை, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலிலுள்ள யாதொரு பஞ்சாயத்திடம் சங்கிரமிக்கும் என அறிவிக்கலாம்; மேலும், ஷை விளம்பரத்தில் குறிப்பிட்ட தேதியிலிருந்து ஷை சொத்து அவ்வாறு சங்கிரமிக்கும்.

(2) நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு, அரசாங்காத்தாராவது ரெவினியு போர்டாராவது, கலெக்டராவது, ரெவினியு டிவிஷனல் ஆபீஸராவது, பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலாவது அல்லது கமிஷனராவது, யாதொரு நபர், அல்லது பல நபர்களடங்கிய சபையாராவது பிரஸ்தாப கிராமம் அல்லது பட்டணத்துக்குள்ளாகிலும் சரி அதற்கு வெளியிலாகிலும் சரி இது விஷயமாய் இச் சட்டத்தில் நிபந்தனை கண்டிருந்தாலும் சரி இரா விட்டாலும் சரி, யாதொரு ஸ்தாபனத்தை நிர்வாகம் செய்கிற விஷயத்தையாயினும், யாதொரு கட்டு வேலையைச் செய்து முடிக்கிற விஷயத்தையாயினும் பராமரித்து வருகிற விஷயத்தையாயினும் யாதொரு அதிகாரத்தைச் செலுத்துகிற விஷயத்தையாயினும், யாதொரு கடமையை நிறைவேற்றுகிற விஷயத்தையாயினும் யாதொரு அதிகாரத்தைச் செலுத்துகிற விஷயத்தையாயினும் யாதொரு பஞ்சாயத்தின் சம்மதத்தைப் பெற்று (இருதிறத்தாராலும்) ஒப்புக்கொள்ளப்படக்கூடிய திட்டங்களுக்குட்பட்டு அந்தப் பஞ்சாயத்துக்கு மாற்றலாம்.

குறிப்பு

பகுதி 71.—பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்கள் முதலியவர்கள் ஸ்தாவர சொத்தினை பஞ்சாயத்துக்களுக்கு மாற்றுவதற்காக இப்பகுதி அதிகாரமளிக்கிறது. இதின் (2) ம் உபபிரிவு 74-ம் பிரிவை போன்றது;

ஒதுக்கி வைக்கப்படாத கிராமக் காடுகளையும் இதர ஸ்தாபனங்களையும் அல்லது கட்டு வேலைகளையும் பஞ்சாயத்துக்களுக்கு மாற்றுவது.

72. (1) (a) இச் சட்டம் செலாவணியாகத் தொடங்குகிற காலத்திலே பிரஸ்தாப கிராமத்தில் ஒதுக்கி வைக்கப்படாத காடுகள் எல்லாம், பிரஸ்தாப பஞ்சாயத்தினிடம் சங்கிரமிக்க வேண்டியதுமல்லாமல், ஷை கிராம வாசிகளின் நன்மைக்காகவென்று அதனுல் பரிபாலிக்கப்படவும் வேண்டும்.

(b) அவ்வாறு சங்கிரமிக்கும்படிச் செய்யப்பட்ட காடு ஒவ்வொன்றின் விஷயத்திலும், ஷை பஞ்சாயத்தானது கலெக்டர் பின்வருமாறு உத்தரவு செய்கிற பட்சத்திலே,

ரெவினியூ போர்டாரின் மேல் விசாரணைக்குட்பட்டு கலெக்டர் இது விஷயமாய் அப்போதைக்கப்போது நிச்சயிக்கக்கூடிய குத்தகைத் தொகையை அரசாங்கத்தாருக்குச் செலுத்த வேண்டும்.

(2) (a) ஒரு பஞ்சாயத்து, (1) உட்பிரிவின்படித் தன்னிடம் சங்கிரமித்துள்ள காடு ஒன்றைச் சரியாகப் பரிபாலிக்கவில்லையென ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் அபிப்பிராயப்பட்டால், அவர் உத்தரவு பிறப்பித்து அதன் மூலமாக, இது விஷயமாய்க் கால அளவு ஏதாகிலும் நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அதற்கு மேற்படாமல் அவ் வுத்தரவிலே குறிப்பிடக்கூடிய கால அளவு வரையில் ஷை காட்டை அப் பஞ்சாயத்தின் மேல் விசாரணையிலிருந்து விலக்கி விடலாம். அத்தகைய காடு சம்பந்தமாக, அது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் சங்கிரமிக்கப்பட்டு, அதனால் பரிபாலிக்கப்படவேண்டுமென அவர் கட்டளையிடலாம்.

(b) ரெவினியூ டிவிஷனல் ஆபீஸரானவர் உத்தரவு பிறப்பித்து அதன் மூலமாக, (a) பகுதியின்படி பிறப்பிக்கப்பட்ட எவ்வுத்திரவிலேனும் குறிப்பிடப்பட்டுள்ள கால அளவை அப்போதைக்கப்போது அதிகப்படுத்தலாம்.

(c) (a) அல்லது (b) பகுதியின்படி ஓர் உத்தரவைப் பிறப்பிப்பதற்கு முன் அவ்வாறு பிறப்பிக்கக்கூடாதென்பதற்குக் காரணங்காட்ட ஷை பஞ்சாயத்துக்கு நியாயமான ஓர் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

(d) (a) அல்லது (b) பகுதியின்படி ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தானது, அவ் வுத்தரவு சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து மூன்று மாதத்துக்குள் அதன் பேரில் கலெக்டருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்! கலெக்டரானவர், அவ் வுத்தரவை ஊர்ஜிதம் செய்யலாம், மாற்றி யமைக்கலாம் அல்லது ரத்து செய்யலாம்.

(3) (2) உட்பிரிவின்படி ரெவினியூ டிவிஷனல் ஆபீஸராவது கலெக்டராவது பிறப்பித்த யாதொரு உத்தரவு நியாயமானதுதானா அல்லது நேர்மையானதுதானா என்று ரெவின்யூ போர்டார் சந்தேகமறத் தெரிந்து கொள்ளும் பொருட்டு அவர்கள் தாங்களாகவோ அல்லது விண்ணப்பம்செய்து கொள்ளப்படுவதன் பேரில் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற பிரகாரம் அவ்வுத்தரவைப்பற்றிய ரெகார்டை எப்போதேனும் வரவழைத்துப் பரிசீலனை செய்யலாம், மேலும், அவர்கள் அது சம்பந்தமாகத் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற உத்தரவு பிறப்பிக்கலாம்.

விதி பி. 72-ன்படிக்கு

ஒதுக்கி வைக்கப்பட்டிராத காடு ஒன்றை பஞ்சாயத்தின் மேல் விசாரணையிலிருந்து இன்ன கால அளவுக்கு எடுத்துவிடலாமென்பது. (ஞ-VI-6)

ஒதுக்கிவைக்கப்பட்டிராத காடு ஒன்றை 53 (2) பிரிவில் கண்ட (a) பகுதியின்படி, ரெவினியு டிவிஷனல் ஆபீசர் ஒரு பஞ்சாயத்தின் மேல் விசாரணையிலிருந்து எடுத்துவிடக்கூடிய கால அளவானது அப்பிரிவில் கண்ட (b) பகுதியின்படி கால அளவுகள் அதிகப்படுத்தப்பட்டால் அவையும் உட்பட இரண்டு வருஷத்துக்கு மேற்படலாகாது.

ஒதுக்கி வைக்கப்படாத காடுகள்:—இவைகள் சாதாரணமாக தரைகாடுகளாகதான் இருக்கின்றன. தமிழ் நாட்டில் காடுகள் குறைவாக யிருக்கின்றன. இனி பஞ்சாயத்துகள் கூட்டு உறவு சங்கங்கள் மூலம் பயிர் செய்யப்போகின்றன. அதே சமயத்தில் இந்த தரைகாட்டுகளை தோப்பு காட்டுகள் (Garden Forests) ஆக செய்தால் ஊருக்கு அழகும் ஆரோக்யமும் உண்டாகும்.

நிதி யேற்பாடுகளையும் இனும்களையும் மாற்றவாவது அவைகள் விஷயமாயுள்ள மேல் விசாரணையை மீண்டும் எடுத்துக் கொள்ளவாவது ரெவின்யூ போர்டுக்குள்ள அதிகாரம்.

73. (1) (a) அரசாங்கத்தாரின் மேல்விசாரணைக்குட்பட்ட ரெவினியு போர்டார், விளம்பர மூலமாக யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் சம்மதத்துடன் வரும் சம்பந்தமான எந்த நிதியேற்பாட்டின் விஷயமான நிதியேற்பாடுகளையும் அவைகள் அரசாங்கத்தார் பரமாவதையும் குறித்த (சென்னை 1817-ம் வருஷத்து VII-வது ரெகுலேஷன்களாகிய) 1817-ம்வருஷத்திய சென்னபட்டணத்து ரெகுலேஷனில் கண்ட நிர்ப்பந்தங்களின்படி ரெவினியு போர்டாருக்கு அதிகாரங்களும் கடமைகளும் ஏற்பட்டிருக்கின்றனவோ அப்படிப்பட்ட தரும சம்பந்தமான யாதொரு நிதியேற்பாட்டின் நிர்வாகத்தையும் மேல் விசாரணையையும் ஷை பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு மாற்றலாம். அதன்மேல் அந்த விஷயத்தில் ரெவினியு போர்டாருக்குள்ள சகல அதிகாரங்களும் கடமைகளும் ஷை ரெகுலேஷன்களிலே ஷை பஞ்சாயத்தைப்பற்றி பிரத்தியேகமாய்ச் சொல்லியிருந்தால் எப்படியோ அப்படியே அதற்கு ஏற்படுவது மன்றி அந்தப் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அந்த நிதியேற்பாட்டை நிர்வகிக்கவும் மேல்விசாரணை செய்யவும் வேண்டும்.

(b) ரெவினியு போர்டார் தாங்களாகவோ விளம்பர மூலமாக, (a) பகுதியின்படி யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு மாற்றப்பட்ட யாதொரு நிதியேற்பாட்டின் நிர்வாகத்தையும் மேல்விசாரணையையும் மீண்டும் எடுத்துக் கொள்ளலாம்; மேலும், அந்தப் பிரகாரம் எடுத்துக்கொள்ளும்படி அரசாங்கத்தார் கட்டளையிட்டால், அப் பிரகாரமே மீண்டும் எடுத்துக்கொள்ள வேண்டும்; அந்தப்படி மீண்டும் எடுத்துக் கொள்வதன்மேல் அந்த நிதியேற்பாடு விஷயமாய் ஷை பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்குள்ள சகல அதிகாரங்களும் கடமைகளும் அற்றுப்போய் முடிந்து விடும்.

(2) அரசாங்கத்தார் யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் சம்மதத்துடன் அரசாங்கத்தாராலாவது வேறொரு அதிகாரியாலாவது மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்ட தரும சம்பந்தமான யாதொரு இனமை அந்த பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்குக் கொடுக்கலாம்; ஆனால் அப்படிப்பட்ட இனமலிருந்து கிடைக்கிற நிகர வரும்படியானது ஷை பஞ்சாயத்து யூனியன் நிதி உபயோகப்படக்கூடிய யாதொரு காரியத்துக்கு மாத்திரமே உபயோகப்படலாம். அரசாங்கத்தார் மேலே கண்டபடி எவ்விதமாகவாகிலும் கொடுக்கப்பட்டிருப்பதை ரத்து செய்யலாம்.

குறிப்பு

பொது.—அந்தச் சொத்தை பஞ்சாயத்து தன் சொத்தாகப் பாவித்து, அந்தப் பஞ்சாயத்து அந்த நிதியேற்பாட்டை நிர்வகிக்கவும், மேல் விசாரணை செய்ய இதின் வரும்படிக்கு மதருஸ் விவசாயிகள் ஆக்ட் செ. 4 (c) பொருந்தும். [மேற்கு தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் போர்ட்-எ பல்லவராயர், A. I. R. 1940 M. 23.]

பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அலுவல்களை அதிகப்படுத்த அரசாங்கத்தாருக்குள்ள அதிகாரம்.

74. நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு, அரசாங்கத்தாராலாவது, ரெவினியு போர்டாராலாவது, கலெக்டராலாவது, ரெவினியு டிவிஷனல் ஆபீஸராவது, யாதொரு நபர் அல்லது பல நபர்களடங்கிய சபையாராலாவது பிரஸ்தாப பஞ்சாயத்து யூனியனுக்குள்ளாகிலும் சரி வெளியாகிலும் சரி இது விஷயமாய் இச் சட்டத்தில் நிபந்தனை கண்டிருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி ஷை பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் சம்மதத்தைப் பெற்று (இருதிறத்தாராலும் ஒப்புக் கொள்ளக் கூடிய திட்டங்களுக்குட்பட்டு) யாதொரு ஸ்தாபனத்தை, நிர்வாகம் செய்கிற

விஷயத்தையாகிலும், யாதொரு கட்டு வேலையைச் செய்து முடிக்கிற விஷயத்தை யாயினும் பராமரித்து வருகிற விஷயத்தையாகிலும் யாதொரு கடமையை நிறை வேற்றுகிற விஷயத்தையாயினும் யாதொரு அதிகாரத்தைச் செலுத்துகிற விஷயத்தை யாயினும், அந்தப் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு மாற்றலாம்.

குறிப்பு

பகுதி 74.—யாதொரு ஸ்தாபனம் அல்லது யாதொரு கட்டு வேலை அல்லது யாதொரு அதிகாரம் பஞ்சாயத்து யூனியன் வரம்பிற்குள் இருந்தாலும் சரி இராவிட்டாலும் சரி, இச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தாலும் சரி, இராவிட்டாலும் சரி அந்த ஸ்தாபனத்தின் நிர்வாகத்தை அல்லது அந்தக் கட்டு வேலையை நிறைவேற்றுவது, அல்லது அதைப் பரா மரிப்பது சம்பந்தமான வேலையை அல்லது யாதொரு அதிகாரம் செலுத்துவதை அல்லது யாதொரு கடமையை நிறைவேற்றுவதை பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலில் ஒன்றுக்கு மாற்ற அரசாங்கத்தாருக்கும் அவர்களின் கீழ் அதிகாரிகளுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் இப் பகுதி பொதுவாக அதிகாரமளிக்கிறது. இது பிரிவு 71 (2)யை போன்றது.

நன்கொடைகளையும் ட்ரஸ்ட் சொத்துக்களையும் ஒப்புக்கொள்கிற அதிகாரத்தைப் பற்றிய வரையறை

75. எந்தக் காரியத்துக்கு யாதொரு பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் நிதியை உபயோகிக்கலாமோ அந்தக் காரியத்தை அபிவிருத்தி செய்வதற்கான நன்கொடைகளையாவது அப்படிச் செய்வதற்கு மாத்திரமே சம்பந்தப்பட்ட ட்ரஸ்ட்களையாவது அந்தப் பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஒப்புக்கொள்ளலாம்.

பொதுவான பாட்டைகள் பஞ்சாயத்துக்களிடத்தில் சங்கிரமிப்பது.

76. (1) யாதொரு கிராமத்தில் அல்லது பட்டணத்திலே (தேசீய ரீதியானவையும், ராஜ்ய ரீதியானவையும் எனவும் பெரிய ஜில்லா பாட்டைகள், பஞ்சாயத்து யூனியன் பாட்டைகள் எனவும் அரசாங்கத்தாரால் தரம் பிரிக்கப்பட்ட பாட்டைகளும், அல்லாத) இதர பொதுவான சகல பாட்டைகளும், அவைகளைச் சேர்ந்த சகல தளவரிசைகளும், கல் முதலிய சாமான்களும், அவைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட சகல கட்டு வேலைகளும், சேகரிக்கப்பட்டிருக்கிற சாமான்களும், இதர சகல வஸ்துக்களும், பஞ்சாயத்துச் செலவில் அல்லது மற்றப்படி உள்ள அப்படிப்பட்ட பாட்டைகளிலாவது அவைகளின் பக்கமாகவாவது கீழாவது இருக்கிற சகல சாக்கடைக் கால்களும், ஜலதாரைகளும், ஜலதாரை சம்பந்தமான கட்டு வேலைகளும், டன்னல்களும், கல் வெட்டுகளும், அவைகளைச் சேர்ந்த சகல கட்டு வேலைகளும், சாமான்களும், வஸ்துக்களும், பஞ்சாயத்திடம் சங்கிரமிக்கும்.

(2) அப்படிப்பட்ட யாதொரு பொதுவான பாட்டை, சாக்கடைக் கால், ஜலதாரை, ஜலதாரை சம்பந்தமான கட்டுவேலை, டன்னல் அல்லது கல் வெட்டுக்கு இச் சட்டம் பிரயோகப்படாதபடி அரசாங்கத்தார் அவைகளை விளம்பரம் மூலமாய் நிவர்த்தி செய்வதுடன் அந்த விளம்பரத்தைத் திருத்தலாம் அல்லது ரத்து பண்ணலாம்.

குறிப்பு

(1) **பொதுஜன பாட்டை பஞ்சாயத்தில் சங்கிரமிப்பது.**—பி. 2 (28)-ல் பொது பாட்டையின் அர்த்தம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. பி. 62 (a)-யில் பொது பாட்டை கட்டவேண்டிய விஷயங்களைக் குறித்து சொல்லப்பட்டு இருக்கிறது. பி. 63-ல் பொது பாட்டைகள் பக்கத்தில் மரங்களை வைப்பதுபற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. பி. 82 படிக்கு பொது பாட்டையில் யாதொரு தடங்கல்கள் உண்டாகக் கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது

பி. 175 படிக்கு பொது பாட்டைகளில் எல்லா ஜாதியினரும், மதஸ்தர்களும் போகலாம் என்றுள்ளது. மொத்த பொதுபாட்டைகளும், சாதாரணமாக கவர்ன்மெண்டினுடையதே ஆகும். இவைகளை பிறத்தியார், ஆக்கிரமித்துக் கொள்ளும் பக்ஷத்தில் பஞ்சாயத்துகள் மறுபடியும் அடையக் காலாவதி தோஷங் கிடையாது. பி. 82 யை பார்க்கவும்.

கிராமத்தின் பொது பாட்டைகள் குறித்து வியாஜ்ஜியங்கள்.— இவை சம்பந்தமான சிவில்; கிரிமினல் வியாஜ்ஜியங்களைக் பஞ்சாயத்தே நடத்தலாம். பொது பாட்டைகளின் அடியிலிருக்கும் நிலமானது பஞ்சாயத்துக்கு சில சமயங்களில் சம்பந்த மில்லாததை, இனி பஞ்சாயத்துகளுக்கே கொடுத்துவிட வேண்டுமென்று வங்காள கவர்ன்மெண்டு 1884-ம் ஸு 3-வது ஆக்டுப்படிக்கு ஏற்படுத்தின மாதிரி பஞ்சாயத்திற்கே சேர்த்து விடவேண்டும். பொது பாட்டையானது ஒரு தனிப்பட்ட சொந்தக்காரன் நிலத்தின் பேரில் போகுமாகில் பொது பாட்டையின் கீழ் நிலம் அவனுடையதாகும். அப்படியில்லா விட்டால் கவர்ன்மெண்டுடையதாகும்.

பொது பாட்டையும் பக்கத்து நிலங்களும்.—பொது பாட்டைக்காக வென்று அதின் பக்கத்து நிலங்களுக்கு பஞ்சாயத்து யாதொரு கெடுதியும் செய்யக்கூடாது [ரங்கா எ. கும்பகோணம் முனிசிபாலிடி 29 M. 539]

பொது பாட்டையும், முன் இடமும்.—ஒருவருடைய வீடு பொது பாட்டைக்குப் பக்கத்திலிருக்கும்போது அவர் வீட்டிற்கெதிரே பொது பாட்டையின் பேரில் யாதொரு கட்டமும் கட்டக்கூடாது. [பாட்னு முனிசிபாலிடி எ. துவாரக பிரஸாத். A. I. R. 1939 Pat. 683] ஆனல், குப்பையை எடுக்க வேண்டிய சாமான் (குப்பைத் தொட்டி போன்றவை) களை அவசியமாக இருந்தால், அதற்காக வேண்டி குப்பை தொட்டிகளை வைப்பதில் யாதொரு கெடுதியுங் கிடையாது. அதை ஆட்சேபிக்கவுங்கூடாது[ஹன்ஸ்ராஜ்—எ—கராச்சி முனிசிபாலிடி, 8 I. C. 208]

பொது பாட்டை—விற்பது முதலியன.— பொது படையில் பண்டங்களை, விற்பனை செய்வது கூடாது, இம்மாதிரி விற்பதை தடுப்பதற்குப் பஞ்சாயத்திற்கு அதிகாரமுண்டு. பி. 103 யை பார்க்கவும்.

மரங்களை குறித்த விதிகளை செ. 51 (a) குறிப்பில் பார்க்கவும்.

பொதுச் சாலைகள் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களிடம் சங்கிரமிப்பது.

77. (1) பஞ்சாயத்து யூனியன் சாலைகளென வகைப்படுத்தப்பட்டு யாதொரு பஞ்சாயத்து யூனியனிலுள்ள சகல பொதுச் சாலைகளையும், அதன் நடைபாதைகளும், கல்களும், இதர பொருள்களும், அவற்றிற்கான சகல கட்டு வேலைகளும், பொருள்களும், இதர சாமான்களும், அந்த சாலைகளில் சாலைகள் நெடுக அல்லது சாலைகளுக்கடியில் சாக்கடைக் கால்களும், வடிகால்களும், வடிகால் கட்டு வேலைகளும், சுரங்க வழிகளும், மேடான பாலங்களும் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் செலவில் செய்யப்பட்டிருந்தாலும் சரி அப்படி செய்யப்பட்டிராவிட்டாலும் சரி, அவைகளைச் சேர்ந்த சகல கட்டுவேலைகளும், பொருள்களும், சாமான்களும், பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் இடம் நிலைபெறும்.

(2) அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக இச்சட்டத்தின் பிரயோகத்தினின்றும், யாதொரு பஞ்சாயத்து யூனியனின் சாலை, ஜலதாரை, வடிகால், வடிகால் கட்டு வேலை, சுரங்க வழி அல்லது மேடான பாலத்தை விலக்கலாம். மேலும், அவர்கள் அத்தகைய விளம்பரத்தை மாற்றி அமைக்கலாம் அல்லது ரத்து செய்யலாம்.

குறிப்பு

பகுதி 77.—ஒரு பஞ்சாயத்து யூனியனில் உள்ளதையும் பஞ்சாயத்து யூனியன் சாலைகள் என்று வகைப்படுத்தப்படுவையுமான சகலப் பொதுச் சாலைகளும் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்களிடம் சங்கிரமிக்கும் என்று இந்தப் பகுதி அறிவிக்கிறது.

இச் சட்டத்தின் பிரயோகத்திலிருந்து விலக்கப்பட்ட பொது சாலைகளுக்குள்ள விஷயமாய் பஞ்சாயத்திற்குள்ள கடமை

78. யாதொரு பொதுச் சாலை 76-வது பிரிவின் (2) உட்பிரிவின் கீழ் அல்லது 77-வது பிரிவின் (2) உட்பிவின் கீழ் இச்சட்டத்தின் பிரயோகத்தினின்றும் விலக்கப்பட்டிருந்து (இதில் பின்னுல் பெருவழி இலாகா என குறிப்பிடப்படுகிற) அரசாங்கப் பெருவழி இலாகாவின் ஆதிக்கத்தின் கீழ் வைக்கப்பட்டிருந்தால், அரசாங்கத்தாரின் கட்டளையிடக் கூடிய அளவுக்கு பஞ்சாயத்து தனது செலவில் அடியிற்கண்டவற்றை ஏற்படுத்தி வைப்பது அதன் கடமையாகும்.

(a) அச் சாலையின் வடிகாலில் நீர் விட்டு சுத்தப்படுத்தி பராமரித்து வருவது;

(b) அச் சாலையில், சாலை நெடுக அல்லது சாலையின் கீழ் தண்ணீர் ஸப்ளை மெயின் குழாய்களையும் வடிகால்களையும் ஜலதாரைகளையும் வைத்துவருவதும், செப்பனிடுவதும்;

(c) அத்தகைய சாலையுடன் சேர்ந்த நடபாதைகளை ஏற்படுத்துவதும் வைத்து வருவதும், செப்பனிடுவதும்;

ஆனல், அத்தகைய ஷரத்துகளைச் செய்கையில் அச் சாலையின் மண்ணை அல்லது மேற்பரப்பை அகழ வேண்டியது பஞ்சாயத்துக்கு அவசியமாயிருந்தால் அத்தப் பஞ்சாயத்து, அரசாங்கத்தார் பொதுவான அல்லது விசேஷ உத்தரவு மூலம் குறிப்பிடக்கூடிய பொது வழி இலாகா அதிகாரியின் முற்சம்மதத்தை பெற்றுக் கொள்ளவேண்டும்,

அன்றியும், அவசர விஷயங்களில், அத்தகைய யாதொரு தெருவின் மண்ணை அல்லது மேற்பரப்பை அத்தகைய சம்மதமின்றியே பஞ்சாயத்து அகழ்ந்தெடுக்கலாம் ; ஆனல், அப்படிச் செய்வதற்கு அடுத்து முன் அந்த மண் அல்லது மேற் பரப்பு எந்த நிலைமையிலிருந்ததோ அதே நிலைமைக்கு சாத்தியமான வரையில் அதைச் சீர் செய்ய வேண்டும்; அவ்வாறு எடுத்துக்கொண்ட நடவடிக்கையையும் அதற்கான காரணங்களையும் கண்டுள்ள அறிக்கையொன்றை மேற்கண்ட விலக்கு நிபந்தனையில் குறிப்பிட்டுள்ள உத்தியோகஸ்தருக்கு உடனே அனுப்பிவைக்கவேண்டும்.

மேலும் அரசாங்கம் ஏதாவது வேலையை நிறைவேற்ற வேணுமென்ருல், அதன் செலவை அரசாங்கம் அளிக்கவேண்டும்.

குறிப்பு

பகுதி **78.**—இந்தச் சட்டத்தின் பிரயோகத்திலிருந்து விலக்கப்பட்டு அரசாங்கப் பெருவழி இலாகாவின் மேல்விசாரணையில் வைக்கப்பட்டுள்ள சாலைகள் சம்பந்தமாக பஞ்சாயத்தின் கடமைகளைப்பற்றி இப்பகுதி குறிப்பிடுகிறது.

அபாயகரமான கட்டுக் கோப்பின் விஷயத்தில் முன் எச்சரிக்கை ஏற்பாடுகள்.

79. (1) யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலில் அல்லது யாதொரு பஞ்சாயத்தில் நிலைபெற்றுள்ள யாதொரு பொதுச் சாலைக் கருகிலுள்ள யாதொரு கட்டுக் கோப்பு சிதலமாகும் நிலையிலிருக்கிற தென்றும், போவோர் வருவோர்களுக்கு அபாயம் விளைவிக்கக்கூடியதாயிருக்கிறதென்றும், சந்தர்ப்பத்திற்கேற்ப கமிஷனருக்கு அல்லது நிர்வாக அதிகாரிக்குத் தோற்றினல், அதிலிருந்து அபாயம் ஏற்படுவதைத் தடுப்பதற்காக அத்தகைய கட்டுக்கோப்புக்கு வேலிபோடவேண்டுமென்றும், அக்கட்டுக்கோப்பை எடுத்துவிடவேண்டுமென்று மற்றென்றுடன் சேர்ந்து கட்டிவைக்கவேண்டுமென்று அல்லது செப்பனிடவேண்டுமென்று அந்தக்கமிஷனர் அல்லது நிர்வாக அதிகாரி நோட்டிஸ் மூலமாக அதன் சொந்தக்காரருக்கு அல்லது அனுபோகதாரருக்கு உத்திரவிடலாம்.

(2) உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்வது அவசியமாயிருந்தால் கமிஷனர் அல்லது நிர்வாக அதிகாரி, அத்தகைய நோட்டிஸ் கொடுப்பதற்கு முன் அல்லது அத்தகைய நோட்டிஸின் கால அளவு கழிவதற்கு முன், அபாயத்தைத் தடுப்பதற்கு தகுதியானதெனத் தாம் கருதுகிறபடி, அத்தகைய கட்டுக்கோப்பை, தாமே வேலி போட்டு மூடிவிடவேண்டும், எடுத்துவிடவேண்டும், மற்றென்றுடன் சேர்த்துக் கட்டிவிடவேண்டும் அல்லது செப்பனிடவேண்டும். அல்லது யாதொரு சாலையின் யாதொரு பகுதிக்கு வெளியிடவேண்டும் அல்லது தற்காலிகமான இதர நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்வதற்குப் பிடிக்கிற செலவை இதில் பின்னால் ஏற்பாடு செய்துள்ள முறையில் அதன் சொந்தக்காரரிடமிருந்து அல்லது அதன் அனுபோகதாரரிடமிருந்து வசூலித்துக்கொள்ளவேண்டும்.

குறிப்பு

பகுதிகள் 79 முதல் 98 வரை.—ஜில்லா போர்டுகளை எடுத்துவிட உத்தேசிப்பதன் பலனாக அந்தப் போர்டுகளுக்குள்ள கடமைகளில் சில இனிமேல் பஞ்சாயத்துக்களையும் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்களையும் சேரும். இந்தப் பகுதிகள் அந்தக் கடமைகளில் சிலவற்றைக் குறிக்கின்றன; அவையாவன:—அபாயகரமான கட்டிடங்கள், அபாயகரமான மரங்கள், அபாயகரமான ஏரிகள், கிணறுகள் முதலியவை சம்பந்தமாக எடுத்துக் கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள், கட்டிடங்களுக்கு அல்லது நிலங்களுக்கு வேலி போடுதல், முட்புதர்களையும் மரங்களையும் வெட்டி விடுதல், அபாயகரமான யாதொரு வியாதியால் பீடிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் பள்ளிக்கூடத்துக்கு வராமல் தடுத்தல், அம்மை குத்தல், நிலங்களிலும் கட்டிடங்களிலும் முளைத்துள்ள புல் பூண்டுகளையும் அசுத்தங்களையும் அப்புறப்படுத்துதல் முதலியனவாகும்.

பி. 79 பொது சாலைக்கருகில் உள்ள யாதொரு கட்டுக்கோப்பு சிதிலமாகும் நிலையில்-—கட்டடத்திற்கும் ரோட்டிற்கும் நடுவில் சுவர் இருந்தால் கட்டடம் பொதுவான பாட்டைக்கு பக்கத்திலிருப்பதாக கருதப்படக்கூடாது. அருகில் என்பது சேர்ந்தாப்போலிருப்பதைக் குறிக்கும். முடிவு பெற்றிருக்க வேண்டும் அல்லது பிதுங்கி இருக்கவேண்டும். [பான்டெப் எ. அரசர், A. I. R. 1928 All. 696 = 112 I. C. 588.]

தண்டனை.—சாதாரணமாய் ரூபாய் 500-ம் தவறி நடக்கும் நாள் ஒன்றுக்கு ரூபாய் 50-ம் அபராதம் விதிக்கலாம். பி. 181 (1) (2)-யையும் ஷெட்யூல்கள் 2, 3 களையும் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) கட்டடம் பொது பாட்டைக்கு அருகாமையி லிருக்கவேண்டும், (2) அது கிலமாய் பொது ஜனங்களுக்கு அபாயத்தை விளைவிக்கக்கூடியதாயிருக்கவேண்டும். (3) செக்ஷனில் சொல்லியபடி எதிரிக்கு நோடீஸ் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். (4) நோடீஸ் நிபந்தனைகளை எதிரி மீறி இருககவேண்டும்.

அபாயகரமான மரங்கள் விஷயத்தில் முன் எச்சரிக்கையான ஏற்பாடுகள்.

80. (1) யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அல்லது பஞ்சாயத்தில் நிலை பெற்றுள்ள யாதொரு பொதுச் சாலையில் சேர்ந்துள்ள நிலத்தில் இருக்கிற யாதொரு மரம் அல்லது அம்மரத்தின் யாதொருகிளை வெகுசாய்க் கீழே விழுந்து அத்தகைய சாலையை உபயோகிக்கிற யாதொரு நபருக்கு அல்லது அதிலுள்ள யாதொரு கட்டுக் கோப்புக்கு அபாயம் விளைவிக்கக் கூடுமென கமிஷனருக்கு அல்லது நிர்வாக அதிகாரிக்குத் தோற்றினால் கமிஷனர் அல்லது நிர்வாக அதிகாரி அதிலிருந்து அபாயம் ஏற்படாமல் தடுப்பதற்காக அம்மரத்தைச் சேர்த்துக் கட்டிவிட வேண்டுமென, கழித்து விடவேண்டுமென அல்லது வெட்டிவிடவேண்டு மென அம் மரத்தின் சொந்தக்காரருக்கு நோட்டிஸ் மூலமாக உத்தரவிடலாம்.

(2) உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்வது அவசியமாயிருந்தால் கமிஷனர் அல்லது நிர்வாக அதிகாரி அத்தகைய நோட்டிஸ் கொடுப்பதற்கு முன் அல்லது அத்தகைய நோட்டீஸின் கால அளவு கழிவதற்கு முன், அபாயத்தைத் தடுப்பதற்கு தகுதியானதெனத் தாம் கருதுகிறபடி, அத்தகைய மரத்தைத் தாமே கட்டிவிட

வேண்டும், கழிக்க வேண்டும், அல்லது வெட்டி விட வேண்டும் அல்லது ஷ் பொதுச் சாலையின் யாதொரு பகுதிக்கு வேலியிடவேண்டும் அல்லது தாற்காலிகமான இதர நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதற்குப் பிடிக்கிற செலவை இதில் பின்னால் ஏற்பாடு செய்துள்ள முறையில் அதன் சொந்தக்காரரிட மிருந்து வசூலித்துக்கொள்ளவேண்டும்.

குறிப்பு

பி. 80 தண்டனை.—நோடீஸில் கண்டபடி மரம் அல்லது அதன் கிளைகளை பத்திர மாய் வைக்கத் தவறினாலும். கழிக்கத் தவறினாலும், ரூபாய் 50-ம், தவறிய ஒவ்வொரு தினத் திற்கும் ரூபாய் 10-ம் அபராதம் விதிக்கலாம். பிரிவு 181 (1), (2) களையும், 2, 3, ஷெட்யூல் களையும் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) பொதுவான பாட்டைக்கு அருகில் மரம் அல்லது கிளை இருக்க வேண்டும். (2) அது அந்த பாட்டையை உபயோகிக்கும் நபர்களின் பேரிலாவது, அண்டையி லிருக்கும் கட்டுக்கோப்பின் பேரில்வது விழுந்து அபாயம் விளைவிக்கக்கூடியதா யிருக்க வேண்டும். (3) எதிரிக்கு நோடீஸ் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். (4) மரம் எடுக்க தவறியிருக்க வேண்டும். (5) எதிரி மரத்திற்கு சொந்தக்காரரா யிருக்கவேண்டும்.

கட்டிடங்களுக்கு அல்லது நிலங்களுக்கு வேலி போடுவதும், வேலிச் செடிகளையும் மரங்களையும் வெட்டி விடுவதும்.

81. யாதொரு பொதுச்சாலை, பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலிடம் அல்லது பஞ்சாயத்திடம் நிலைபெற்றிருந்தால் அந்த சாலைக்குக்கருகி லுள்ள யாதொரு கட்டிடத்தின் அல்லது நிலத்தின் சொந்தக் காரர் அல்லது அனுபோகதாரர் அடியிற் கண்டவற்றைச் செய்ய வேண்டுமென கமிஷனர் அல்லது நிர்வாக அதிகாரி பொது நோட்டிஸ் மூலமாக உத்தரவிடலாம்.—

(a) கமிஷனரின் அல்லது நிர்வாக அதிகாரியின் திருப்திக்கு உகந்த முறையில் அதற்கு வேலியிடுவது ;

(b) அச் சாலையின் ஓரத்திலுள்ள வேலிச் செடிகள் அருகிலுள்ள சாலையின் அளவிலிருந்து கமிஷனர் அல்லது நிர்வாக அதிகாரி நிர்ணயிக்கக்கூடிய உயரத்துக்கு மேற்படாமலிருக்கும் பொருட்டு அவற்றை ஒழுங்காக வெட்டிவிடுவது அல்லது கத் தரித்து விடுவது ; அல்லது.

(c) அச்சாலைக்கு மேல் புறத்தில் கவிந்து கொண்டு போக்குவரத்து சரியாகத் தெரியாமலிருக்கும்படி இடைஞ்சல் செய்கிற அல்லது அதற்குத் தீங்கு விளைவிக்கிற வேலிச் செடிகள் அல்லது மரங்களை ஒழுங்காக வெட்டி விடுவதும் அல்லது கத்தரித்து விடுவதும்; அல்லது,

(d) சுற்றுச் சுவர் அல்லது வேலி அதன் உயரத்தினாலும் அதிலுள்ள நிலைமை யினாலும் போக்குவரத்து தெரிவதை அபாயம் விளைவிக்கும் படியாகத் தடுத்தால் அந்தச் சுவரின் அல்லது வேலியின் உயரத்தைக் குறைப்பது.

குறிப்பு

பி. 81 தண்டனை.—சாதாரணமாய் ரூபாய் 50 அபராதமும், தவறி நடக்கும் பிரதி தினத்திற்கு ரூபாய் 10-ம் அபராதம் விதிக்கலாம். II, III ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு:—(1) (a) to (d) ல் சொல்லப்பட்டவைகளை செய்யும்படி கமிஷனர் அல்லது நிர்வாக அதிகாரி நோடீஸ் கொடுத்தார். (2) எதிரி அம்மாதிரி செய்ய தவறி விட்டார்,

பொதுவான பாட்டைகள் முதலியவைகளிலாவது அவைகளின் மேலாகவாவது தடங்கல்கள் உண்டாக்கக் கூடாதென்று தடுப்பது

82. (1) இச் சட்டத்தின்படிச் செய்யப்பட்ட விதிகளினால் அனுமதிக்கப்பட்டாலன்றி மற்றப் படியும், அந்த விதிகளின்படி வேண்டியிருக்கிற யாதொரு லைஸென்ஸினால் ஏற்படுத்தப்பட்ட திட்டங்களை அனுசரித்தன்றி மற்றப்படியும், எந்த நபரும்—

(a) பொதுவான யாதொரு பாட்டையிலாவது, பாட்டையின் மேலாவது நிலையாகவோ சிறிது காலத்துக்கோ யாதொரு சுவர் கட்டவுங் கூடாது. யாதொரு அடைப்பாகிலும் வேறே தடங்கலாகிலும் பிதுக்கமாகிலும் ஏற்படுத்தப்படக் கூடாது. எவ்விதமாகவாயினும் யாதொரு ஆக்ரமிப்பு ஏற்படும்படிச் செய்யவுங்கூடாது.

(b) பொதுவான யாதொரு பாட்டையிலாவது அதன் மேலாவது ஒரு துவாரம் செய்யவுங் கூடாது. யாதொரு வஸ்துவை வைக்கவுங்கூடாது.

(c) பொதுவான ஒரு பாட்டையிலிருந்தாவது யாதொரு பஞ்சாயத்தினிடத்தில் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலினிடம் சங்கிரமித்திருக்கும் அல்லது அதற்குச் சொந்தமான வேறே ஸ்தாவர சொத்திலிருந்தாவது இருபது கெஜத்துக்குள் இருக்கும் யாதொரு இடத்தில் கல் வெட்டி எடுக்கவுங்கூடாது, கல்லையாயினும் மண்ணையாயினும் வேறே வஸ்துவையாயினும் அப்புறப்படுத்தவுங்கூடாது; ஆனால், யாதொரு வேலையானது, வாஸ்தவமான ஒரு விவசாய காரியம் சம்பந்தமாகவே செய்யப்பட்டிருக்கிறதென்று இன்ஸ்பெக்டர் அபிப்பிராயப்பட்டால், இப் பகுதியில் கண்டதெதுவும் அந்த வேலைக்குப் பிரயோகப்படுவதாகக் கருதப்படமாட்டாது.

(d) யாதொரு சாக்கடை அல்லது ஜலதாரையின் மேலாவது அதன் யாதொரு பாகத்தின் மேலாவது எந்தக் கட்டிடத்தையாகிலும் எழுப்பக்கூடாது.

(e) யாதொரு பஞ்சாயத்தினிடத்தில் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலிடத்தில் சங்கிரமித்திருக்கும் அல்லது அதற்குச் சொந்தமாயுள்ள பொதுவான யாதொரு பாட்டையின் மேலாவது இதர சொத்தின் மேலாவது எந்த மரத்தையாகிலும் நடக்கூடாது; அல்லது,

(f) அப்படிப்பட்ட பொதுவான யாதொரு பாட்டையின் மேலாவது இதர சொத்தின் மேலாவது யாதொரு புறம்போக்கின் மேலாவது 85-வது, அல்லது 86-வது பிரிவின்படி யாதொரு பஞ்சாயத்தால் எந்த நிலத்தின் மேலாவது வளர்ந்து கொண்டிருக்கும் எந்த மரம் ஷை நபரிடத்தில் சங்கிரமித்திருக்கிறதென்று அல்லது அந்த நபருக்குச் சொந்தமான தென்று அது சம்பந்தமாயுள்ள உரிமை அவரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லையோ அப்படிப்பட்ட யாதொரு மரத்தை வெட்டவுங்கூடாது, அப்புறப்படுத்தவுங் கூடாது, அழிக்கவுங் கூடாது, அதன் இலைகளைத் தறிக்கவுங் கூடாது, பட்டையை உரிக்கவுங்கூடாது, அல்லது மற்றபடி சேதப்படுத்தவுங் கூடாது.

(2) யாதொரு பஞ்சாயத்தினிடம் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலிடம் சங்கரமித்து உள்ள சொத்துகளின் பேரில் உண்டாய் இருக்கும் தடங்கல்களை குறித்து ஒவ்வொரு ரெவின்யு கிராம கர்னம் தன்னுடைய கடமையாக அவைகளுக்கு சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரிக்கும் அல்லது கமிஷனருக்கும், மேலும் ரெவின்யூ இலாகா உத்தியோகஸ்தற்களுக்கும் தெரிவிக்க (ரிப்போர்ட் செய்ய) வேண்டும். இன்னும் சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரி அல்லது கமிஷனர் தன்னுடைய கடமையாக அரசாங்கத்தாரால் செய்யப்பட்ட பொதுவான அல்லது தனிப்பட்ட உத்தரவில் குறிப்பிட்ட காலத்திற்குள் இந்த சட்டத்தின் படிக்கு நடவடிக்கைகள் எடுத்து கொண்டு அந்த தடங்கல்களை நீக்கிவிட வேண்டும். அந்த உத்தரவில் குறிப்பிட்ட காலத்தில் நீக்காவிட்டால் ரெவின்யு இலாகா உத்தியோகஸ்தர்கள், மதராஸ் நில தடங்கல்கள் சட்டம் (1905-ம் வருடத்திய மதராஸ் III-வது சட்டம்) படிக்கு நடவடிக்கைகள் எடுத்துகொண்டு அந்த நீக்கலை பெறவேண்டும்.

குறிப்பு

பி. 82 (1).—பி. 76-ன் கீழ் பாட்டைகளைக் குறித்து எழுதியிருக்கிறது. இந்த 82-வது பிரிவில் கண்டிருக்கிற மொத்த பொதுப்பாட்டைகளும் எல்லா ஜனங்களுக்கும், ஜாதிமத பேதமின்றி உபயோகப்படக்கூடியதாய் இருக்கவேண்டும். பி. 175 பார்க்கவும். இந்த பிரிவில் கண்ட (e) முதல் (f) வரையில் உள்ள பகுதிகள் ஆறும் குற்றங்கள் உள்ளவை இவைகளைக் குறித்து I-வது ஷெட்யூலில் கண்டிருக்கிறது.

பி. 82.—(1) (a) சட்ட விரோதமாக அவர் கட்டடம் முதலியவைகளை பொது பாட்டையின்மேல் கட்டினல் அதற்கு ரூ. 100 அபராதம் விதிக்கப்படும்.

ருஜு பாரம்.—பொது பாட்டையானது பஞ்சாயத்தின் வசமிருக்கிறது என்று ருஜு படுத்தவேண்டும், பி. 82 (1) (b)-க்கும் (c)-க்கும் அபராதம் ரூ. 50 ஆகும். (d); (e) (f)-க்கும் அபராதம் ரூ. 200 ஆகும், இந்த செக்ஷனில் கண்டபடி குற்றங்களை கவனித்து அக்ரமமாக ஆக்ரமிப்பு செய்பவர்களிடமிருந்து பொதுபாட்டையுடன் ஆக்ரமித்திருக்கிற அக்கம் பக்கம் நிலங்களை சேர்த்துக் கொள்வது மிகவும் அவசியமான காரியமாகும்.

பி. 82 (2) ரெவின்யூ கிராம கர்னம் தன்னுடைய கடமையாக தெரிவிக்க வேண்டும்.—உடனே கர்னங்கள் ஆக்ரமிப்பு ஜாபிதாக்கள் தயார் செய்து கட்டாயம் தெரிவிக்க வேண்டும்.

பி. 182 (1)ன் கீழ் விதிகளின் பட்டியும் - பக்கங்களும்

விதி	பக்கம்
1. பப்ளிக் ரோட்டுக்கு 20 கஜத்துக்குள் கல்வெட்டு எடுத்தால் லைசென்சு வேண்டும்.	203
2. கதவு, கேட்டு பொதுபாட்டையில் திறக்கக்கூடாது.	204
3. ஆக்கிரமிப்புகளை நோடீஸ் மூலம் எடுத்துவிடுவது.	,,
4. சில பிதுக்கங்களுக்கும் கட்டுகோப்புகளுக்கும் உத்திரவு கொடுக்க அதிகாரம்.	206
5. பந்தல்போட உத்திரவு கொடுப்பது.	209
6. பாட்டை ஓரங்களை குத்தகைக்கு விடுவது.	,,
7. சில சமயங்களில் லைசென்சுகளும் கொடுக்கக் கூடாது. குத்தகைகளும் கொடுக்கக்கூடாது.	,,
8. மேற்படி அதிகாரங்களை கவர்ன்மெண்டும், இன்ஸ்பெக்டரும், வரையறுக்கலாம். விசாரணை செய்யலாம்	,,
9. சில சமயங்களில் நோடீஸ் கொடாமலே பிதுக்கங்களை எடுத்துவிடலாம்.	209
10. ஜலதாரையின் மேல் அனுமதியின்றி கட்டடம் கட்டக்கூடாது.	210
11. ரோட்டுகளுக்கு அடுத்த சொந்தக்காரர்கள் நாகதாலி முதலியவைகளை எடுத்துவிட நோட்டீஸ்.	,,
12. பொது பாட்டையில் (தொலை) குழி தோண்டக்கூடாது.	,,
13. பொது பாட்டையில் அனுமதியின்றி மரங்களை நடக்கூடாது. நிபந்தனைகள்.	211
14. அனுமதியின்றி அனுபோகத்தில் வைத்துக்கொண்டால் அபராதம் கட்டவேண்டும்	,,

விதிகள் பி. 82 (1) படிக்கு

பொதுப் பாட்டைகளிலாவது அவைகளின் மீதாவது தடங்கல்களுக்குத் தடை-ஆக்கிரமிப்புகள் முதலியவற்றை எடுத்துவிடுவது

1-ம் விதி

பப்ளிக் ரோட்டுக்கு 20 கஜத்துக்குள் கல் வெட்டு எடுத்தால் லைசென்சு வேண்டும் (L-2-1)

1. (1) எவரும், பஞ்சாயத்தினல் கொடுக்கப்படுகிற ஒரு லைஸென்ஸின் படியன்றி மற்றபடி, பஞ்சாயத்தினிடம் சங்கிரமித்துள்ள அல்லது அதற்குச் சொந்தமான யாதொரு பொது பாட்டையிலிருந்து அல்லது இதர ஸ்தாவா சொத்திலிருந்து இருபது கெஜத்துக்குள்ளிருக்கிற எந்த இடத்திலேனும் கல்வெட்டியெடுக்கவும் கூடாது. அவ்விடத்திலிருந்து கல், மண் முதலியவற்றை அப்புறப்படுத்தவுங்கூடாது, மேற்படிபஞ்சாயத்து லைஸென்ஸ் ஒன்றைக் கொடுக்கலாம் அல்லது கொடுக்க மறுக்கலாம்; பிந்திய விஷயத்திலே, அவ்வாறு மறுத்ததற்குண்டான காரணங்களைச் சம்பந்தப்பட்ட நபர் அல்லது நபர்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

(2) யாதொரு இடத்திலே கல்வெட்டி எடுப்பதனுல் அல்லது அவ்விடத்திலிருந்து கல், மண் முதலியவற்றை அப்புறப்படுத்துவதனுல்; அதற்கு அக்கம் பக்கத்தில் வசிக்கிற அல்லது அங்கே சட்டப்பிரகாரம் செல்லக்கூடிய நபர்களுக்கு அபாயம் நேரிடுமென்ருலும், அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாகிறதென்ருகிலும், வெகுசாய் உண்டாகக்கூடுமென்ருகிலும் மேற்படி பஞ்சாயத்து அபிப்பிராயப்பட்டால், கல்வெட்டி யெடுக்கும் மேற்படி இடம் அல்லது வேறு இடம் விஷயமாய் மேல் விசாரணை அதிகாரமுள்ள சொந்தக்காரர் அல்லது நபர் அவ்வாறு கல் வெட்டியெடுப்பதை நிறுத்திவிட வேண்டுமென்றேனும், அத்தகைய வேறு இடத்திலிருந்து கல், மண் முதலியவற்றை அப்புறப்படுத்துவதை நிறுத்திவிட வேண்டுமென்றேனும். அதிலிருந்து உண்டாகிற அல்லது வெகுசாய் உண்டாகக்கூடிய அபாயத்தைத் தடுப்பதற்காக அல்லது அசங்கியம் அல்லது சங்கடத்தை குறைப்பதற்காக அவசியமென்று மேற்படி பஞ்சாயத்து கருதுகிற ஏற்பாட்டை கல் வெட்டியெடுக்கும் மேற்படி இடம் அல்லது வேறு இடம் விஷயமாக எடுத்துக்கொள்ளவேண்டு மென்றேனும் மேற்படி பஞ்சாயத்து அந்த சொந்தக்காரர் அல்லது நபருக்கு உத்தரவு செய்யலாம்

இது மதருஸ் டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் ஆக்ட் செ. 153-க்கு சமானமானது.

தண்டனை.—II, III ஷெட்யூல்களை பார்க்கவும்.

சாட்சியம்.—(1) பொது பாட்டை என்றும் (2) 20 கஜத்துக்குள் கல் வெட்டு செய்யப்பட்டது.

2-ம் விதி

கதவு கேட்டு பொது பாட்டையில் திறக்கக் கூடாது (ட-2-2)

2. (1) கதவு, கேட்டு வாசல், அடைப்பு அல்லது அடித்தரை ஜன்னல் ஆகிய இவை மேற்படி பஞ்சாயத்தினிடம் சங்கிரமித்துள்ள யாதொரு பொதுவான பாட்டையின் மீது, நிர்வாக அதிகாரி கொடுக்கும் ஒரு லைஸென்ஸின்படியன்றி மற்றப்படி, வெளிப் புறமாய்த் திறக்கும் படியாகத் தொங்க விடப்படவுங்கூடாது. அமைக்கப்படுவதுங் கூடாது.

(2) நிர்வாக அதிகாரியானவர் மேற்படி கதவு, கேட்டு வாசல், அடைப்பு அல்லது ஜன்னலின் சொந்தக்காரருக்கு நோட்டிஸ் கொடுத்து அதன் மூலமாக, அது திறக்கப்படும் போது அதன் எந்தப் பாகமும் பொதுப்பாட்டையின் மீது ஆக்கிரமிக்காத வகையில் அதை மாற்றி யமைக்கும்படி அவருக்கு உத்தரவு செய்யலாம்.

இது மதருஸ் டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் ஆக்டு செ, 157-க்கு சமமானது.

தண்டனை.—3 மாதங்களுக்குள் பிராது செய்யவேண்டும். தவறினல் பிராது செய்யக் கூடாது. அந்த மாதிரி சமயங்களில் விதி 3 படிக்கு நோட்டிஸ் கொடுத்து அந்த தடங்கலை அப்புறப்படுத்தலாம்.

சாட்சியம்.—(1) கதவு, அல்லது கேட்டு (2) அது பொது பாட்டையில் திறக்கிறது.

3-ம் விதி

ஆக்கிரமிப்புகளை நோட்டிஸ் மூலம் எடுத்து விடுவது (ட-2-3)

3. (1) நிர்வாக அதிகாரியானவர் யாதொரு வளவின் சொந்தக்காரருக்காவது அனுபோகதாரருக்காவது நோட்டிஸ் கொடுத்து அதன் மூலமாக, மேற்படி பஞ்சாயத்தினிடம் சங்கிரமித்துள்ள யாதொரு பொது பாட்டையிலே அல்லது அதன் மீது மேற்படி வளவை நோக்கி அல்லது அதன் எதிர்புறத்தில் அமைந்துள்ள (கதவு, கேட்டு வாசல், அமைப்பு அல்லது அடித்தரை ஜன்னல் அல்லாத வேறு) பிதுக்கத்தை யேனும் ஆக்கிரமிப்பையேனும் தடங்கலையேனும் அப்புறப்படுத்தும்படி அல்லது மாற்றும்படி அவருக்கு உத்தரவு செய்யலாம்.

(2) மேற்படி வளவின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர் அத்தகையயாதொரு பிதுக்கம், ஆக்கிரமிப்பு அல்லது தடங்கல் விஷயமாய் எவருக்கேனும் நீண்ட கால ஆட்சி பாத்தியதை கொடுப்பதற்குக் காலவரையறைச் சட்டத்தின்படி போதுமானதாயுள்ள காலம் வரையில் அது ஏற்பட்டிருந்ததென்ருவது, அதன் பொருட்டு கிரமப்படி அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ள யாதொரு ஸ்தல அதிகாரியின் அனுமதி அல்லது லைஸென்ஸைப் பெற்றுக்கொண்டு அது நிறுவப்பட்டதென்றும் அல்லது ஏற்படுத்தப்பட்டதென்றும், அந்த அனுமதி அல்லது

லைஸென்ஸ் செல்லுபடியாகிற காலம் ஏதாகிலும் இருந்தால் அது முடிவடையவில்லையென்றும் காண்பித்தால் மேற்படி பிதுக்கம் முதலியவை அப்புறப் படுத்தப்படுவதனுல் அல்லது மாற்றப் படுவதனுல் நஷ்டமடைகிற ஒவ்வொருவருக்கும் மேற்படி பஞ்சாயத்து நியாயமான நஷ்டஈடு செய்துகொடுக்க வேண்டும்.

பொது.—இது மதராஸ் டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் ஆக்ட் பி. 159-க்கு சமான மானது.

தண்டனை:—இந்த விதியில் கண்ட குற்றத்திற்கு பி. 161 (2) படிக்கு ரூபா 50-க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கலாம்.

சாட்சியம்.—(1) நோட்டிஸ் கொடுக்கப்பட்டது. அதின்படிக்கு நடந்துக்கொள்ள வில்லை (2) பிதுக்கம் அல்லது வளைப்பு பொது பாட்டையின் மேல் இருக்கிறது.

பொதுவான பாட்டையை காலிசெய்யவேண்டு மென்று ஒருவரை கேட்கும் முன் அந்த பாட்டை பொதுபாட்டை என்றும் அது பஞ்சாயத்தினிடம் சங்கிரமித்திருக்கிறதென்றும் ருசு செய்யவேண்டும். [ராதாகிருஷண-ஏ.-அரசர், A. I. R. 1927 P. 52] இந்த செக்ஷன் படி நோடீஸிற்கு கீழ்படியாமல் நடந்ததற்கு தண்டனையே ஒழிய ஆக்கிரமணத்திற்காக தண் டனையில்லை. [ராதாகிருஷ்ண-ஏ.-அமராவதி முனிசிபாலிடி, 19 Cr. L. J. 39 = 44 I.C. 744] சில சமயங்களில் பிராது தொடரப்படுவதைவிட ஆக்கிரமணத்தை எடுத்து விடுவதே மேலானது. [அரசர் ஏ. ஆத்மாராம், 66 I. C. 817 (Bom)] ஆக்கிரமணத்தை எடுக்கும் சாக்கில் முனிசிபாலிடிக்கு சொந்தமில்லாமல் சொந்தக்காரர்கள் அனுபவத்திலிருக்கும் கடைகளை முனிசிபாலிடி இடித்துவிட முடியாது. [ஜீவா ஏ. அரசர், 17 I. C. 713.]

2-வது 3-வது விதிகளுக்குள் வித்தியாசம்.—அடைப்பு, பிதுக்கங்கள் அல்லது ஆக்கிரமணம் செய்யப்பட்டது. 3 மாதங்களுக்குள்ளிருந்தால் நோடீஸ் இல்லாமலே 2 வது விதியின்படி பிராது தொடரலாம் மூன்று மாதத்திற்கு மேற் பட்டிருந்தால் 2 வது விதியின்படி பிராது தொடரக்கூடாது. சொந்தக்காரருக்கு லிமிடேஷன் சட்டப்படி உரிமை கொடுக்கக் கூடியதா யிருந்தபோதிலும் யாதொரு அடைப்பு, பிதுக்கல் அல்லது ஆக்கிரமணம் பொது பாட்டைக்கு இடைஞ்சல் செய்யக்கூடியதாயிருந்தால் அதை எடுத்துவிடும்படி நோடீஸ் கொடுத்த பிறகு தொடர வேண்டும்.

இந்த விதியின்படி பிராது தொடரல்:—இந்த செக்ஷன்படி பிராது தொடர வேண்டி யதற்கு முக்கிய அம்சம் யாதெனில் ஆக்கிரமணம் பொது பாட்டையிலிருக்கிறதா இல் லையா என்பது. [சுந்தரமௌளய்யா, குறித்து. 9. I. C. 239 = (1911) 2 M. W. N. 78.]

இரண்டாவது நோடீஸ் கொடுக்கப்பட்ட பிறகுப் பிராது தொடரலாம்:—ஒரு முனிசி பல் சேர்மன் முதல் கொடுத்த நோடீஸின் அம்சங்களை அமுலுக்குக் கொண்டுவரத் தக்க முயற்சிகள் செய்யாமற் போனபோதிலும், இரண்டாவது நோடீஸ் ஒன்று கொடுத்து அதன்படி நடக்கத் தவறினுல் அப்போது பிராது தொடரலாம். இரண்டாவது நோடீஸ் கொடுத்த மூன்று மாதத்திற்குள்ளும், முதல் நோடீஸ் காலாவதி ஆனபிறகும் பிராது தொடருவது சட்ட விரோ தமா காது. [ராமச்சந்தர குறித்து A. I. R. 1926 M. 763].

நோடீசும், 161 வது பிரிவும் :—(2) செக்ஷன்படி கொடுக்கப்பட்ட நோடீஸில் கண்ட அம்சங்கள்படி நடக்கத்தவறினுல் எம்மாதிரியாக திருத்த வேண்டுமென்று நோடீ ஸில் கண்டிருக்கிறதோ அம்மாதிரியாக முனிசிபல் சிப்பந்திகளைக்கொண்டு ஆக்கிரமணத்தை மாற்றலாம். கட்டடத்தை அடியோடு இடிக்காமல் ஆக்கிரமணத்தை மட்டும் மாற்றக் கூடியதாயிருந்தால் கட்டடத்தை அடியோடு இடித்துவிட அதிகாரமில்லை. [தங்கர்சிதாஸ் ஏ.-பசில்கா முனிசிபாலிடி, A. I. R. 1929 Lah. 566].

விதி 3 (2) லிமிடேஷன் (காலநிர்ணயத்தைப்பற்றிய சட்டம்):—யாதொரு ஆக்கிர மிப்பாவது தடங்கலாவது லிமிடேஷன் சட்டப்படி யாதொரு நபருக்கு நீண்டகால அனுபோக பாத்தியதை கொடுப்பது போதுமானதாயிருப்பதாய் ருசுபடுத்தினுல் அதை எடுத்துவிடுவதி னுலாவது மாற்றுவதனுலாவது நஷ்ட மடைகிற ஒவ்வொரு நபருக்கும் நியாயமான நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். இந்த செக்ஷன்படி பிதுக்கங்கள், ஆக்ரமணம், அடைப்பு இவைகளை எடுத்துவிட லிமிடேஷன் இல்லை. அந்த தடங்கல் 60-வது வருஷங்களுக்கு மேல் இருந்த தாக இருந்த போதிலும் நோடீஸ் கொடுக்கப்படும் முன் அந்தத் தடங்கல் பொது பாட்டையின்

மேல் இருக்கிறதா என்பதை மட்டும் கவனிக்க வேண்டும். பொது பாட்டையில் தடங்கலிருப்பதாக ஸ்பஷ்டமாய் ஏற்பட்டுவிட்டால் ஆக்கிரமித்திருப்பவர்க்கு எவ்விதமான பாத்தியதை இருப்பதாக கொண்டாடினுலும் அது செல்லாது. நோடீஸ் கொடுக்கப்பட்டால் அதன்படி அவர் அதை எடுத்தே தீரவேண்டும், சட்டத்திற்கு குறிப்பிட்ட காலத்தின்மேல் ஒருவர் அனுபோகத்திலிருந்ததென்று ருசு செய்யப்பட்ட தெருவில் ஆக்கிரமித்திருந்த சுவரைக் கூட எடுத்துவிட வேண்டுமென்று நோடீஸ் கொடுக்க முனிசிபாலிடிக்கு அதிகாரமுண்டு.

பொதுவான பாட்டையில் ஆக்கிரமனம் செய்திருப்பதாக மதருஸ் ஜில்லா போர்டுகள் ஆக்ட் 159-வது செக்ஷன்படி மேற்படி ஆக்கிரமணத்தை எடுத்து விடும்படி ஜில்லா போர்டார் எதிரிக்கு நோடீஸ் கொடுத்து பிராது தொடர்ந்தார்கள். ஷ பாட்டை யூனியன் போர்டாரிடம் சங்கரமித்திருப்பதென ஷ பிராது தள்ளிவிடப்பட்டது. யூனியன் போர்ட் பிரசிடெண்ட் மறுபடியும் 159-வது பிரிவுபடி புது நோடீஸ் கொடுத்து புதிதாக பிராது தொடர்ந்தார்கள். கிரிமினல் ப்ரொஸீஜர் கோட் 403-வது செக்ஷன்படி எதிரி விடுதலை செய்யப்பட்டார். இரண்டாவது பிராது செல்லத்தக்கின தென்றும், விடுதலை செய்தது சட்டப்படி பிசகென்றும் தீர்ப்பு கூறப்பட்டது. (அய்யன்பேட்டை யூனியன் போர்ட் எ. ராமசந்திர, A. I. R. 1930 Mad 971=33 L. W. 107] நோடிஸ் கொடுப்பது பிரசிடெண்டினுடைய அபிப்பிராயத்தைப் பொருந்தியது. அம்மாதிரி நோடீஸ் கொடுக்க யூனியன் போர்ட் மறுத்தால் தன்னிடத்தில் பராமரிக்காத பாட்டையின்மீதுள்ள ஆக்கிரமனத்தை எடுத்துவிட நோடீஸ் கொடுக்கவாவது, அதைமீறியதற்கு வியாஜ்ஜியம் தொடரவாவது முடியாது. [செண்டியப்ப எ. மதுரை ஜில்லா போர்ட் பிரசிடெண்ட், 54. Mad. 595=A .I. R. 1931 Mad. 416] நியாயமான அதிகாரிகளால் கொடுக்கப்பட்ட நோடீஸை மீறியதற்கு 159, 207 பிரிவுகளின்படி வியாஜ்ஜியம் தொடரப்பட்டது. ஏற்கெனவே அதே குற்றத்திற்காக இந்த நபரின் பேரில் வியாஜ்ஜியம் தொடரப்பட்டு விடுதலை அடைந்தபோதிலும் இந்த வியாஜ்ஜியத்தை பாதிக்காது. (மாயிடிபியாரி எ. மங்களூர் தாலூகா போர்ட் பிரசிடெண்ட், A. I. R. 1932 Mad 535=I. R. 1932 M. 583] 159 (1) பிரிவின்படி கொடுக்கப்பட்ட புது நோடீஸிற்கு ஏற்கனவே விடுதலை அல்லது தண்டனை அடைந்தது தடையாகாது. [வெல்கோட் பஞ்சாயத்து போர்ட் பிரசிடெண்ட், எ. சின்னவெங்கட A. I. R. 1932 Mad. 537]=A. R. 1932 M. 585].

ஒரு பிராதி அவருக்கு இருக்கும் பல பரிகாரங்களில் ஏதேனும் ஒன்றை அவர் கையாளலாம். 207 (2) பிரிவின்படி வியாஜ்ஜியம் தொடர பாத்தியதை உள்ளவர். செ. 159 (1) படிக்கு வியாஜ்யம் தொடர அருகதை யுடையவரல்ல என்று சொல்ல முடியாது.

தண்டனை.—பி. 161 படிக்கு தண்டிக்க வேண்டும்.

சாக்ஷியம் ருசு:—1 தடங்கலை எடுத்துவிட அல்லது மாற்றவேண்டு மென்று நோடீஸ் கொடுக்கப்பட்டது. (2) அந்த தடங்கல் பொது பாட்டையின் மேலிருந்தது. (3) நோடீஸில் கண்ட நிபந்தனைகள்படி எதிரி ஆக்கிரமிப்பை எடுக்கவில்லை.

4-ம் விதி

சில பிதுக்கங்களுக்கும் கட்டுகோப்புகளுக்கும் உத்திரவு கொடுக்க அதிகாரம்
V-2-4

4. (1) நிர்வாக அதிகாரியானவர், மேற்படி பஞ்சாயத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு மேற்படி பஞ்சாயத்தினிடம் சங்கிர மித்துள்ள யாதொரு பொதுப் பாட்டையின்மீது பிதுங்கி வரும்படியாகத் தாழ்வாரங்கள், மாடியின் முகப்புகள் (பால்கனிகள்), மேற்கட்டுகள் (ஸன்-ஷேடுகள்) காற்று வாரிகள் (வெதர்-பிரேம்கள்) முதலியவற்றை அமைப்பதற்காவது, யாதொரு வளவுக்குச் செல்வதற்கு அவசியமாயுள்ள யாதொரு படிக்கட்டையோ, சாக்கடை மூடியையோ கட்டுவதற்காவது, தாம் தகுதியென்று கருதக்கூடிய நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு, அந்த வளவின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரருக்கு லைஸென்ஸ் கொடுக்கலாம்.

(2) (1) உபவிதியின்படிக்கான ஒரு லைஸென்ஸ் கொடுக்கும்படி செய்து கொள்ளப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றிலும், பிரஸ்தாப கட்டுக் கோப்பினை எந்தப் பொருள்களைக் கொண்டு கட்ட உத்தேசித்திருக்கிறதென்பதைப் பற்றியும், லைஸென்ஸ் வேண்டியிருக்கிற கால அளவைப் பற்றியும் தகவல் அடங்கியிருக்கவேண்டும்.

(3) பனை ஓலை அல்லது தென்னையோலை, மூங்கில் அல்லது இதர பாய்ப் பொருள் அல்லது கோணி, துணி அல்லது அது போன்ற வேறு பொருள் ஆகிய இந்த மாதிரியான தாற்காலிகப் பொருள்களைக் கொண்டு பிரஸ்தாப கட்டுக் கோப்பினைக் கட்டுவதாயிருந்து அல்லது அந்தக் கட்டுக்கோப்பு அன்றுடம் அகற்றப்படக்கூடிய தன்மை வாய்ந்ததாயிருந்து, லைசென்ஸின் கால அளவு பன்னிரெண்டு மாதங்களுக்கு மேற்படாதிருந்தால் மேற்படி பஞ்சாயத்து அந்த லைசென்ஸைக் கொடுக்கலாம் அல்லது புதுப்பிக்கலாம்.

(4) (3) உபவிதியில் கண்டுள்ள விவரத்தை அனுசரித்திராத ஒரு கட்டுக்கோப்புக்கான அல்லது பன்னிரெண்டு மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு கால அளவுக்கான லைசென்ஸ் எதையும், பிரஸ்தாப கலெக்டரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல் யாதொரு பஞ்சாயத்து கொடுக்கலாகாது, மேற்படி கலெக்டரானவர் அப்படி அனுமதியளிக்கையில், தாம் அவசியமென்று கருதக் கூடிய எந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்படி பஞ்சாயத்து லைசென்ஸ் கொடுக்கலாமோ அந்த நிபந்தனைகளை விதிக்கலாம். மேற்படி பஞ்சாயத்து அந்த லைசென்ஸைக் கொடுப்பதற்கு முன் அத்தகைய நிபந்தனைகளை அந்த லைசென்ஸில்சேர்த்துக் கொள்ளவேண்டும்.

இந்த உபவிதியின்படி கொடுக்கப்படுகிற ஒரு லைசென்ஸின் விஷயத்திலே, அதைப் புதுப்பிப்பதானது மூன்று வருஷத்துக்கு மேற்பட்ட ஒரு கால அளவுக்கு அந்த லைசென்ஸின் ஆயுட்காலத்தை அதிகப்படுத்தாவிட்டால், அவ்வாறு புதுப்பிப்பதற்கு கலெக்டரின் அனுமதி அவசியமாகமாட்டாது.

(5) வளவுக்குள் போவதற்கு அவசியமாயுள்ள படிக்கட்டுகளையாவது சாக்கடை மூடிகளையாவது கட்டுவதற்கான லைசென்ஸுகள் மேலும் அடியிற் கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டவையாகும். இந்த நிபந்தனைகளை அந்த லைசென்ஸுகளில் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

(i) சாக்கடைகளுக்கு மேலுள்ள படிக்கட்டுகள் அல்லது கற் பலகைகள் அந்தச் சாக்கடையைத் தாங்குகிற சுவருக்கப்பால் பாட்டையை நோக்கிப் பிதுங்கி வந்திருக்கக் கூடாது. நேரடியாகப் பாட்டையை அடுத்துள்ள ஒரு வளவை நோக்கிச் செல்வதாய், சாக் கடையின் மேல் ஏற்படுத்தப்பட்டுள்ள படிக்கட்டு அல்லது கற்பலகையானது குடியிருப்பு வளவுகளின் விஷயத்தில் 3 அடி நீளத்துக்கு மேற்பட்டும் கடைகள் அல்லது வியாபார வளவுகள் விஷயத்தில் 5 அடி நீளத்துக்கு மேற்பட்டும் யிருக்கக்கூடாது. ஆனல் 20 அடி நீளத்திற்கு குறைவான முகப்பிடமுள்ள கடைகள் அல்லது வியாபார வளவுகள் விஷயத்திலே ஒரு வரிசைப் படிக்கட்டுகள் தான் அனுமதிக்கப்படும். முன்புறத்திலே காம்பௌண்டு இருந்து, அதற்குள் வண்டி முதலிய போக்கு வரத்துச் சாதனங்கள் சாக்கடையின்மேல் அதை தாண்டிப் போகக்கூடிய வளவுகள் விஷயத்திலே, மேற்படி பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர் சாக்கடை மூடியின் நீளத்தை நிச்சயிக்க வேண்டும்.

(ii) சாக்கடைகளின் மேலுள்ள மூடிகள், அந்தச் சாக்கடைகளைத் தாங்கும் சுவர் களின் மேற்புரத்தை நோக்கிச் சரியாய் இருக்கவேண்டும். ஆனல் அந்த மூடிகளின் கீழுள்ள சாக்கடையின் ஆழமானது மழை வெள்ளத்தைக் கொண்டு போவதற்குப் போது மான தென்று மேற்படி பஞ்சாயத்தினல் கருதப்பட வேண்டும். அபூர்வமான சந்தர்ப்பங் களில் சாக்கடையில் ஜலமார்க்கம் தடைப்படாம லிருக்கும் பொருட்டு, தாங்கும் சுவர்களின் உச்சியின்மேல் ஒரு கற்பலகையைப் போட்டு மூடுவது அவசியமா யிருந்தால், அல்லது லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரிக்கு ஆட்சேபணை எதுவும் இரா விட்டால், அவ்வாறே போட்டு மூடலாம், ஆனல் இதற்காக பிரஸ்தாப கலெக்டரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்; மேலும் உயர்ந்துள்ள கற்பலகையை அடுத்திருக்கிற பாட்டை பக்கத்திலே தகுதியான சிமிட்டி கான்க்ரீட் சரிமானம் ஒன்றைக் கட்ட வேண்டும் இந்த சரிமானம் மேற்படி கற்பலகையின் உச்சி மட்டத்திலிருந்து பாட்டை மட்டத்தை நோக்கிச் செல்லவேண்டும்;

(iii) பாட்டையை அடுத்தாற்போலுள்ள வளவுகளில் சாக்கடையின் மேலுள்ள மூடியானது, 6 அங்குல முதல் 36 அங்குலம் வரையிலுள்ள சாக்கடைகளுக்காக சாக்கடை யின் அளவுக்குத் தக்கபடி 2 அங்குல முதல் 4 அங்குலம் வரையில் கனமுள்ளதாய் இருக்க வேண்டும். ஒரு வளவுக்கு முன் பக்கத்தில் காம்பௌண்டு இருந்து, சுமை வண்டி முதலிய போக்குவரத்துச் சாதனங்கள் அந்தச் சாக்கடையின் மேல் தாண்டிச் செல்வதா யிருந்தால், அந்த மூடியானது கருங்கல்லினல் அல்லது பலமான கான்கிரீட் கற்பலகைகளினல் ஆக்கப்

பட்டதா யிருக்கலாம். அந்தக் கருங்கல் அல்லது கற்பலகைகள் பின்வரும் கனமுள்ளவை யாக இருக்க வேண்டும்.

மேலே மூடியெதுவும் இரா விட்டால், ஒவ்வொன்றும் 18 அங்குல கனமுள்ள கருங்கற் பலகைகள்.

		பலமான கான்கரீட்	கற்பலகைகள்.
	அங்குலம்.	அங்குலம்	அங்குலம்.
சாக்கடைகளின்மேல்	6 முதல் 12 வரை	4	5
ஷை	15 முதல் 14 வரை	6	7
ஷை	27 முதல் 36 வரை	7	9

பெரிய சாக்கடைகளின் விஷயத்தில் மூடி இவ்வளவு கனமுள்ளதாய் இருக்கவேண்டு மென்பதும், இன்ன பொருளைக் கொண்டு ஆக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதும்:—

(a) உபயோகிக்கப்படுகிற கல்லின் அல்லது இதர மூடிப்பொருளின் வகை.

(b) சுமையை தாங்குகிற தனித்தனி கற்பலகையின் அகலம்.

(c) உத்தேசமான சுமையின் செரிவு.

(d) கற்பலகையின்மேல் வேறு எந்தப் பொருளையாகிலும் போட்டு அடைப்பதா யிருந்தால், அந்தப் பொருளின் கனம்.

ஆகிய இவைகளுக்குத் தக்கபடி ஒவ்வொரு விஷயத்திலும் மேற்படி பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி நிச்சயிக்கக் கூடியபடி இருக்க வேண்டும்.

விசேஷ சந்தர்ப்பங்களில் பிரஸ்தாப கலெக்டருடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு இந்த நிபந்தனையைத் தளர்த்தலாம்.

(iv) மேற்படி சாக்கடை பார்வையிடப்படும் பொருட்டு அல்லது பழுது பார்க்கப் படும்பொருட்டு, அவசியமான போதெல்லாம், லைசென்ஸ்தாரின் செலவில் அவை அப்புறப் படுத்தப் படுவதற்கு உட்பட்டவையாகும்.

(v) யாதொரு பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர், தாம் தகுதியென்று கருதுகிறபோதெல்லாம் எழுதியுள்ள உத்திரவு பிறப்பித்து அதன் மூலமாக, நஷ்ட ஈடு கொடுக்காமலேயே ஆக்கிரமிப்பு முழுவதையும் எடுத்துவிட வேண்டுமெனக் கட்டளை யிடலாம்.

ஆனல், உத்தேசித்துள்ள நடவடிக்கைக்கான காரணங்களை மேற்சொன்ன உத்தர வில் குறிப்பிட்டிருக்க வேண்டும். மேலும், சம்மந்தப்பட்ட நபர்களுக்கு நோட்டீஸ் கொடுக் காமல் அவ் வுத்திரவைப் பிறப்பிக்கலாகாது.

(vi) சாக்கடை மூடியின் உச்சியைக் கடையின் பாகமாக உபயோகிக்கவுங் கூடாது; மற்றப்படி அதன் பேரில் ஆக்கிரமிக்கவுங் கூடாது.

(6) லைசென்ஸ் கொடுக்கப் பெற்றிருக்கிற பிதுக்கம், நிறுவனம் அல்லது கட்டுக் கோப்பு ஆட்சேபகரமானதாகி விட்டிருக்கிறதென்று கலெக்டர் அபிப்பிராயப் பட்டால் அல்லது பொதுநலத்தை உத்தேசித்து ஷை பிதுக்கம், நிறுவனம் அல்லது கட்டுக்கோப்பை அப்புறப் படுத்துவது அவசியமென்று அவர் கருதினல், (3) (4) அல்லது (5) உபநிதியின்படி கொடுக் கப்பட்ட யாதொரு லைசென்ஸ் ரத்தாக வேண்டுமென உத்தரவு செய்ய கலெக்டருக்கு அதிகாரமுண்டு. அத்தகைய உத்தரவு பிறப்பிக்கப் படுவதன்பேரில், ஷை பஞ்சாயத்து உடனடியாக அந்த லைசென்ஸை ரத்து செய்து, ஷை பிதுக்கம் நிறுவனம் அல்லது கட்டுக் கோப்பை எடுத்து விடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

(7) (3) (4) அல்லது (5) உபவிதியின்படி கொடுக்கப்படுகிற லைசென்ஸ் ஒவ்வொன் றுக்கும்,

(i) (6) உபவிதியில் குறிப்பிட்டுள்ள சந்தர்ப்பங்களில் எப்போதேனும் அது ரத்து செய்யப்படுவதற்கு உள்ளாகும் என்பதும்,

(ii) வருஷாந்தரக் கட்டணம் ஒன்று விதிக்கப் பட்டால் அது, அந்த லைசென்ஸ் அமுலில் இருக்கிறவரை, ஷை பஞ்சாயத்துக்கு முன்னதாகச் செலுத்தப்பட வேண்டுமென் பதும், அக்கட்டணம் செலுத்தப்படா விட்டால் அந்த லைசென்ஸ் ரத்து செய்யப்படுவதற்கு உள்ளாகுமென்பதும் நிபந்தனையாகும்,

5-ம் விதி

பந்தல்போட உத்திரவு கொடுப்பது

5. ஷெ பஞ்சாயத்தினிடம் சங்கிரமித்துள்ள ஒரு பொதுப்பாட்டையிலாவது வேறு எந்தப் பொது இடம் பற்றிய மேல் விசாரணே அதிகாரம் ஷெ பஞ்சாயத்தினிடம் சங்கிரமித்திருக்கிறதோ அந்த இடத்திலாவது பந்தல்களேயும் இதர கட்டுக் கோப்புகளேயும் தாற்காலிகமாக ஏற்படுத்துவதற்கு நிர்வாக அதிகாரியானவர், தமக்குத் தகுதியாக தோற்றக்கூடிய நிபந்தனேகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு லேஸென்ஸ் ஒன்றைக் கொடுக்கலாம்.

குறிப்பு

இதை நிர்வாக அதிகாரி அவருக்குத் தகுதியாக தோற்றக்கூடிய நிபந்தனேகளுக்கு உட்பட்டு லேஸென்ஸ் கொடுக்கலாம்.

6-ம் விதி

பாட்டை ஓரங்களில் குத்தகைக்கு விடுவது

6. மேற்படி பஞ்சாயத்தினிடம் சங்கிரமித்துள்ள பாட்டை ஓரங்களே, மேற்படி பஞ்சாயத்து நிச்சயிக்கக்கூடிய ஷரத்துக்களின் படியும், நிபந்தனே களின் பேரிலும் கால அளவுக்கும் அனுபோகத்தில் வைத்துக்கொள் வதற்கு, மேற்படி பஞ்சாயத்தின் அங்கீகாரத்துடன் குத்தகைக்கு விட நிர்வாக அதிகாரிக்கு அதிகாரமுண்டு. பி. 103 யை பார்க்கவும்.

7-ம் விதி

சில சமயங்களில் லேஸென்ஸ்களும் கொடுக்கக் கூடாது குத்தகைகளும் கொடுக் கக் கூடாது

7: ஆனல், சந்தர்ப்பத்திற்கேற்றபடி பிரஸ்தாப பிதுக்கம், கட்டடம் அல்லது அனு போகத்தினல் பொது ஜனங்களின் ஆரோக்கியத்திற்கு வெகுவாய்க் கெடுதி சம்பவிப்பதாய் இருந்தாலும் பொது ஜனங்களுக்கு வெகு வாய் அசௌகரியம் உண்டாகக் கூடியதாய் இருந்தாலும் மற்றப் படி பாட்டையைப் பாட்டையாக உபயோகிப்பதற்கு முக்கியாம் சத்தில் தடங்கல் ஏற்படுவதாய் இருந்தாலும் 4-வது விதியின்படி ஒரு லேஸென்ஸ் கொடுக்கவும் கூடாது, 6-வது விதியின்படி குத்தகை விடவுங்கூடாது.

8-ம் விதி

இவர்களே கவர்ன்மெண் டும் இன்ஸ்பெக்டரும் வரை யறுக்கலாம் விசாரணே செய்யலாம்

8. அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக 4-வது, 6-வது விதிகளின் படிக்கான அதிகாரங்களே யாதொரு பஞ்சாயத்தாவது யாதொரு வகுப்பைச் சேர்ந்த பஞ்சாயத்துக்களாவது செலுத்துவதை வரை யறுக்கலாம். தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய மேல் விசாரணேக்கு உட்படுத்தலாம்.

9-ம் விதி

சில சமயங்களில் நோட் டீஸ் கொடாமலே பிதுக் கம் எடுத்து விடலாம்

9. 4 முதல் 6 வரையிலுள்ள விதிகளின்படி எந்தக் கால அளவுக்கு யாதொரு லேஸென்ஸ் அல்லது குத்தகை கொடுக்கப் பட்டிருக்கிறதோ அந்தக் கால அளவு முடிவடைந்ததும், நிர்வாக அதிகாரியானவர் 4-வது விதியின்படியாவது 5-வது விதியின்படியாவது ஏற்படுத்தப் பட்ட யாதொரு பிதுக்கம் அல்லது கட்டடத்தை நோட்டீஸ் கொடாமலேயே அப்புறப்படுத்தும்படி செய்யலாம்; அவ்வாறு செய்வதற்குப் பிடிக்கும் செலவானது லேஸென்ஸ் கொடுக்கப் பெற்றுள்ள நபரிடமிருந்து வசூலிக்கப் படத்தக்கதாகும். பி. 161 யைப் பார்க்கவும்.

10-ம் விதி

ஜலதாரையின் மேல் கட்டடம் கட்டக் கூடாது

10. (1) யாதொரு ஜலதாரை அல்லது சாக்கிடையின் மேலாவது, யாதொரு ஜலதாரை அல்லது சாக்கிடையினுடைய யாதொரு பாகத்தின் மேலாவது, தெரு பெருக்கின குப்பைகள் அல்லது இதர குப்பை கூளங்களைக் கொண்டு முழுவதுமோ சிறிது மட்டிலோ மூடப்பட்டுள்ள, எழுப்பப்பட்டுள்ள அல்லது சமமாகப்பட்டுள்ள யாதொரு பூமியின் மேலாவது, நிர்வாக அதிகாரியினுடைய அல்லது அந்த நிர்வாக அதிகாரியினிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள வேறு யாதொரு நபருடைய எழுத்து மூலமான அனுமதியின்றிக் கட்டடம் எதையும் கட்டக்கூடாது.

(2) மேற்படி நிர்வாக அதிகாரியாவது நபராவது, நோட்டீஸ் கொடுத்து அதன் மூலமாக, இத்தகைய அனுமதியின்றி அல்லது அத்தகைய அனுமதியின் ஷரத்துக்களுக்கு விரோதமாக அல்லது முரணாக ஒரு கட்டடத்தைக் கட்டியிருக்கிற நபர் அதை இடித்துவிட வேண்டுமென அவருக்கு உத்தரவு செய்யலாம்.

குறிப்பு

மதராஸ் பொதுஜன சுகாதார ஆக்ட் செக்ஷன்கள் 27 முதல் 36 வரையில் பார்க்கவும்.

11-ம் விதி

ரோட்டுகளுக்கு அடுத்த சொந்தக்காரர்கள் நாக தாளி முதலியவைகளை எடுத்துவிட நோட்டீஸ்

11. மேற்படி பஞ்சாயத்தினிடம் சங்கிரமித்துள்ள யாதொரு பொதுப் பாட்டையை அடுத்துள்ள அல்லது அவ்வாறு சங்கிரமித்துள்ள வேறு நிலத்தை அல்லது நீர் நிலையை அடுத்துள்ள யாதொரு நிலத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர் நாகதாளி, வளார், லான்டானு அல்லது இதர அருவருப்பான புல்பூண்டுகள் மேற்படி சொத்தின் பேரில் ஆக்கிரமித்திருந்தாலும் அந்த நிலத்திலிருந்து, மேற்படி சொத்துக்குப் பரவி இருக்கிற வரையிலும் அவற்றை அப்புறப் படுத்தும்படி நிர்வாக அதிகார நோட்டீஸ் மூலமாக மேற்படி சொந்தக்காரர் அல்லது அனுபோகதாருக்கு உத்தரவு செய்யலாம்.

குறிப்பு

பொது.—சப்பாத்தி கள்ளி, வலார், லாண்டானு, இவைகள் தீங்குண்டாக்கக் கூடியவைகள். இதர தாவர வஸ்துக்கள் தீங்குண்டாக்கக் கூடியவைகளா இல்லையா என்பது அந்தந்த வஸ்துவைப் பொறுத்தது. தீங்குண்டாக்கக்கூடிய புல் பூண்டுகள் சொந்தக்காரருடைய நிலத்திலிருந்து பரவி பஞ்சாயத்தினிடம் சங்கிரமித்திருக்கும் பொதுவான பாட்டை அல்லது நிலம் அல்லது நீர் நிலைக்காகிலும் பரவி இருந்தால்தான் குற்றம் செய்ததாக கருதப்படும். பாட்டையில் வைத்திருக்கும் செடிகளின் பாதுகாப்புக்காக போடப்பட்ட சப்பாத்தி நாளடைவில் படர்ந்து சொந்தக்காரருடைய நிலத்தில் படர்ந்து விட்டால் அதை எடுக்கும்படி பிராது தொடரக்கூடாது. அப்படியில்லா விடில் நோட்டீஸில் கண்டபடி நடக்கவில்லை என்று சொல்ல முடியாது.

12-ம் விதி

பொது பாட்டையில் (தொளை) குழி செய்யக் கூடாது

12. (1) யாதொரு நபர் நிர்வாக அதிகாரியினுடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு நிர்வாக அதிகாரி விதிக்கக்கூடிய நிபந்தனையை அனுசரித்தாலன்றி, அவர் மேற்படிப் பஞ்சாயத்தினிடம் சங்கிரமித்துள்ள யாதொரு பொதுப் பாட்டையிலே ஒரு துவாரம் செய்யவுங் கூடாது. அங்கே எவ்வித தடங்கலும் உண்டாக்கவுங்கூடாது.

(2) அத்தகைய அனுமதி கொடுக்கப்பட்டால், மேற்படி நபர் அந்தத் துவாரம் அல்லது தடங்கல் நிரப்பப்படுகிற வரையில் அல்லது அப்புறப் படுத்தப்படுகிற வரையில் அதற்குத் தமது சொந்தச் செலவில் போதுமானபடி வேலி கட்டி அடைப்பு ஏற்படுத்தும்படி

செய்யவேண்டும்; மேலும் அவர் மேற்படி துவாரம் அல்லது தடங்கலண்டை இராக்காலத்தில் போதுமானபடி விளக்குப் போடும்படிச் செய்யவேண்டும்.

(3) எவராகிலும் இவ் விதியின் ஷரத்துக்களை மீறி நடந்தால், நிர்வாக அதிகாரியானவர் சந்தர்ப்பத்திற்கேற்றபடி அந்தத் துவாரத்தை நிரப்பி அல்லது அந்தத் தடங்கலை அப்புறப்படுத்தி, அல்லது அந்தத் துவாரம் அல்லது தடங்கலண்டை விளக்குப் போடும்படிச் செய்து, அவ்வாறு செய்ததற்குப் பிடித்த செலவை அந்த நபரிடமிருந்து வசூலிக்கலாம்.

13-ம் விதி

பொதுப் பாட்டையில் அனுமதியின்றி மரங்களை நடக்கூடாது

13. (1) மேற்படி பஞ்சாயத்தினிடம் சங்கிரமித்துள்ள அல்லது அதற்குச் சொந்தமான யாதொரு பொதுப் பாட்டையிலாவது இதர சொத்திலாவது நிர்வாக அதிகாரி விதிக்கக்கூடிய நிபந்தனைகளின் பேரில் மரம் நட யாதொரு நபருக்கு அனுமதி கொடுக்க நிர்வாக அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

(2) மேற்படி சட்டத்தின் 82 (1) (f) பிரிவில் குறிப்பிட்டிருக்கிற யாதொரு மரத்தை வெட்டவோ, அப்புறப்படுத்தவோ, அழிக்கவோ, தறிக்கவோ, அதன் பட்டைகளை உரிக்கவோ, இலைகளைக் கழிக்கவோ அதை மற்றப்படி சேதப்படுத்தவோ, நிர்வாக அதிகாரி விதிக்கக்கூடிய நிபந்தனைகளின்பேரில் யாதொரு நபருக்கு அனுமதி கொடுக்க நிர்வாக அதிகாரிக்கு அதிகாரமுண்டு. [செ. 167 (a) யைப் பார்க்கவும்.]

14-ம் விதி

அனுமதியின்றி அனுபோகத்தில் வைத்துக் கொண்டால் அபராதம் கட்ட வேண்டும்

14. (1) மேற்படி பஞ்சாயத்தினிடம் சங்கிரமித்திருப்பதும் அல்லது அதற்குச் சொந்தமான யாதொரு பொதுக் காரியத்துக்காகவென்று ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதுமான யாதொரு நிலத்தை எவராகிலும் பஞ்சாயத்தினுடைய முன் அனுமதியில்லாமல் அனுபோகத்தில் வைத்துக் கொண்டால், அவர் அவ்வாறு அனுபோகத்தில் வைத்துக்கொண்டது சம்பந்தமாய் அபராதமாக மேற்படி பஞ்சாயத்து கேட்கக்கூடிய தொகையைச் செலுத்தக் கடமைப்பட்டவராவர்.

(2) (1) உபவிதியின்படி எந்த நபருக்கு ஓர் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறதோ அல்லது விதிக்கப்படக்கூடுமோ அந்த நபர் அந்த நிலத்தைக் காலிசெய்து அதன் மேலுள்ள யாதொரு கட்டடத்தை அல்லது வேறு நிறுவனத்தை அல்லது அதன் மேல் வைக்கப்பட்டுள்ள யாதொன்றை எடுத்து விடவேண்டுமென அவருக்கு நிர்வாக அதிகாரி நோட்டீஸ் மூலமாக உத்தரவு செய்யலாம்.

(3) யாதொரு நபர் எந்த் நிலத்தையேனும் அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்காக (1) உப விதியின்படி அபராதம் செலுத்துவதற்கு உட்பட்டவராயிருந்து. அந்த நபரால் மேற்படி பஞ்சாயத்தின் சொத்துக்கு யாதொரு சேதம் ஏற்பட்டிருந்தால், அவர் அந்த சேதத்துக்காக, தமக்கு விதிக்கப்படக்கூடிய அல்லது தம்மிடமிருந்து வசூலிக்கப்படக்கூடிய யாதொரு அபராதத்துக்கு அதிகப்படியாகவும் பாதகமில்லாமலும் மேற்படி பஞ்சாயத்துக்கு நஷ்ட ஈடு செலுத்துவதற்கு உட்பட்டவராவார்.

(4) இவ் விதியின்படி எவரிடமிருந்தேனும் சேரவேண்டிய நஷ்ட ஈடுத் தொகையும் அபராதமும் பில் மூலமாகக் கேட்கப்படவேண்டும்; மேலும் அவை பஞ்சாயத்துக்களின் வரவு செலவு பற்றிய விதிகளின் பிரகாரம் "சேரவேண்டிய பலவகைப்பட்ட தொகைகளாக" வசூலிக்கப்படவேண்டும்.

சமுதாயச் சொத்தாவது வரும்படியாவது பஞ்சாயத்தினிடம் சங்கிரமிப்பது

83. எந்தச் சொத்து அல்லது வரும்படியானது மீன் பிடிக்கும் பாத்தியதை உள்பட பொதுவாய் கிராமம் அல்லது பட்டணவாசிகளுக்காவது, அல்லது பொதுவாய் கிராம நிலத்தையாகிலும் குறிப்பிட்ட விவரப்படியுள்ள நிலங்களையாகிலும் குறிப்பிட்ட ஒரு பாய்ச்சலாதாரத்திலிருந்து நீர் பாய்ச்சப்பெறும் நிலங்களையாகிலும் பொதுவாய்க் கைப்பற்றில் வைத்திருப்பவர்களுக்காவது மாமூல்படி சொந்தமா யிருக்கிறதோ அல்லது அவர்களுடைய பொதுவான பிரயோசனத்துக்காகப் பரிபாலிக்கப்பட்டு வந்திருக்

கிறதோ அப்படிப்பட்ட யாதொரு சொத்தாயினும் வரும்படியாயினும் அரசாங்கத்தாரால் அறிக்கையிடப்பட்டால், பிரஸ்தாப பஞ்சாயத்திடத்தில் சங்கிரமிக்கும். மேலும், அந்தச் சொத்தாவது வரும்படியாவது மேற்சொன்ன கிராமத்தார்களின் அல்லது பட்டணத்தார்களின் அல்லது கைப்பற்றுதாரர்களின் பிரயோஜனத்துக்காக அந்தப் பஞ்சாயத்தால் பரிபாலிக்கப்பட வேண்டும்.

குறிப்பு

பி. 83. பொது:— இந்த பிரிவில் உள்ள சமுதாய நிலங்கள் முதலியவற்றுக்கும், 86, 87 பிரிவுகளில் உள்ள புறம்போக்கு நிலங்களுக்கும் பேதமுண்டு. சமுதாய நிலங்களின் மிராசுதார்கள் என்கிறவர்களுக்கு இந்த பிரிவின்படிக்கு யாதொரு மிராசு பாத்தியமுங் கிடையாது.

ஜலச்சூஸ்திரங்கள் பஞ்சாயத்துகளிடம் சங்கிரமிப்பது

84. (1) இச் சட்டம் செலாவணியாகத் தொடங்கிய காலத்தில் இருப்பவைகளாகவாவது பின்பு செய்யப்பட்டோ இருக்கிறவைகளாகவாவது உள்ள பொதுவான சகல தண்ணீர்க் கால்களும் ஊற்றுகளும் நீர் நிலைகளும், குளங்களும், தொட்டிகளும், நீர் தூவுகிற சூத்திரங்களும், கிணறுகளும், நிலைக்குழாய்களும், மற்ற ஜல சூத்திரங்களும், பஞ்சாயத்தின் செலவிலாயினும் சரி மற்றப்படிக்காயினும் சரி செய்யப்பட்டாகிலும், போடப்பட்டாகிலும், கட்டப்பட்டாகிலுமிருந்தால், அவைகளும் (தனிப்பட்ட ஒருவருடைய சொத்தாயிராமல்) அவைகளைச் சேர்ந்ததாய் அடுத்திருக்கிற யாதொரு நிலமும்கூட பஞ்சாயத்தினிடத்தில் சங்கிரமித்து அதன் அதிகாரத்துக்குட் பட்டிருக்க வேண்டும். (ஷ பொதுவான) தண்ணீர்க் கால்கள், ஊற்றுகள் முதலியவைகளில், (அவைகளை உபயோகிப்பதற்கு நீண்ட கால் அனுபோக பாத்தியதை ஏற்படும் அளவுக்குப்) பொது ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வந்த தண்ணீர்க் கால்கள், ஊற்றுக்கள் முதலியவை என்பதும் அடங்கும் :

ஆனால், நீர்ப்பாசனம் சம்பந்தமான யாதொரு கட்டுவேலையா யிருக்கும் அல்லது அதனுடன் சம்பந்தப்பட்டிருக்கும் யாதொரு கட்டுவேலைக்காவது, அப்படிப்பட்ட யாதொரு கட்டுவேலையைச் சேர்ந்ததாய் அடுத்தாற்போலுள்ள யாதொரு நிலத்துக்காவது இந்த உட்பிரிவில் கண்டதெதுவும் பிரயோகப்பட மாட்டாது.

(2) அரசாங்கத்தார் மேற்கண்ட அதிகாரத்தை விளம்பர மூலமாய் வரையறுக்கலாம் அல்லது மட்டுப்படுத்தலாம் அல்லது யாதொரு பொதுஜன ஜல வசதி ஆதாரத்தின் பரிபாலனத்தையும் அதைச் சேர்ந்ததாய் அடுத்திருக்கிற பொது நிலத்தின் பரிபாலத்தையும் பஞ்சாயத்துடன் கலந்து ஆலோசித்து அதற்கு ஆட்சேபனைகள் எவையேனு மிருந்தால் அவைகளைப்பற்றிக் கிரமமாய் யோசித்த பிறகு ஏற்றுக் கொள்ளலாம்.

விதிகள் பி. 84 படிக்கு

பொது அல்லது தனிப்பட்ட ஊற்றுக்கள் முதலியவற்றை உபயோகிப்பதைக் தடுப்பதும் அல்லது அவற்றை உபயோகிப்பதும் ஒழுங்கேற்படுத்துவதும். (க-XLIV-44)

1. பஞ்சாயத்து, பொது ஜன சுகாதாரத்தை முன்னிட்டு, யாதொரு பொது நீர்க்கால் அல்லது அதன் யாதொரு பாகத்திலாவது, பிராணிகளைக் கழுவுவதையேனும், துணிகளைத் தோய்ப்பதையேனும், இதர வஸ்துக்களைச் சுத்தம் செய்வதையேனும், மீன் பிடிப்பதையேனும், தடுக்கலாம், அல்லது அது விஷயமாய் ஒழுங்கேற்படுத்தலாம்; தண்ணீர் குடிப்பதற்காக அல்லது குளிப்பதற்காக அல்லது பிராணிகளைக் கழுவுவதற்காக அல்லது துணிகளைத் தோய்ப்பதற்காக அல்லது வேறு யாதொரு குறிப்பிட்ட காரியத்துக்காக அத்தகைய ஓரிடத்தை ஒதுக்கி வைக்கலாம்.

2. யாதொரு சொந்த ஊற்று, ஏரி, கிணறு அல்லது நீர்க்கால் விஷயத்தில், அவ்விடத்தின் சொந்தக்காரருடைய சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு, 1-வது விதியில் கொடுத்துள்ள அதிகாரங்களைப் பஞ்சாயத்து செலுத்தலாம்.

3. பஞ்சாயத்து, பொது ஜன சுகாதாரத்தை முன்னிட்டு, தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான எந்த ஊற்று, ஏரி, கிணறு அல்லது நீர்க்காலிலிருந்து பொது ஜனங்கள் குடி தண்ணீர் எடுத்துக்கொள்ள உரிமை பெற்றிருக்கிறார்களோ அந்த ஊற்று, ஏரி, முதலியவற்றில் பிராணிகளைக் கழுவுவதையோ துணி தோய்ப்பதையோ அல்லது இதர வஸ்துக்களைச் சுத்தம் செய்வதையோ தடுக்கலாம் அல்லது அது விஷயமாய் ஒழுங்கேற்படுத்தலாம்,

4. ஒரு பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர், அரசாங்கத்தாரின் அல்லது பஞ்சாயத்தின் அல்லது ஜில்லா போர்டின் சேவையிலுள்ள மெடிகல் ஆபீஸர் ஒருவரிடமிருந்து, பிரஸ்தாப கிராமத்தில் பொது ஜனங்கள் கிட்டிச் செல்லக்கூடிய யாதொரு கிணறு, ஏரி, ஊற்று அல்லது இதர ஜலாதாரத்தின் தண்ணீர் அபாயகரமான யாதொரு வியாதி பரவுவதற்கு வெகுசாய் ஏதுவாயிருக்குமென்று அல்லது காரணமாயிருக்குமென்று கண்டுள்ள ஸெர்டிபிகேட் ஒன்று வரப்பெற்றுக்கொள்வதன்பேரில் அத் தண்ணீரை உபயோகிப்பதைப் பொது நோட்டீஸ் பிறப்பித்து அதன் மூலமாகத் தடுக்கலாம். ஜலாதாரத்தின் அருகில் அந்த நோட்டிஸின் நகல் ஒன்றை ஒட்டிவைப்பதன் மூலமாகவோ தண்டோரா போடுவது மூலமாகவோ அந்த நோட்டிஸைச் சேர்ப்பிக்க வேண்டும்; அதில், எத்தனை நாட்களுக்கு அவ்வாறு தடை செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் கண்டிருக்கவேண்டும். நிர்வாக அதிகாரியானவர் பின்னும் ஒரு ஸெர்டிபிகேட்டைக் கொடாமலேயே அந்த நோட்டிஸின் கால அளவை, அதிகப்படுத்தலாம் அல்லது அந்த நோட்டிஸை மாற்றலாம்.

5. எவரும்—

(a) ஒரு பஞ்சாயத்தினாலாவது சொந்த சொத்து விஷயத்தில் அதன் சொந்தக்காரராலாவது குடிப்பதற்காக அல்லது சமையல் செய்யும் காரியங்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட ஓரிடத்திலுள்ள தண்ணீரில் குளிக்கவோ அதை அசுத்தப் படுத்தவோ கூடாது; அல்லது.

(b) மேற்சொன்ன பிரகாரம் குடிப்பதற்காக ஒதுக்கிவைக்கப்பட்ட ஓரிடத்திலே தண்ணீர் வற்றிய படுகையில் அருவருப்பான அல்லது தீங்குண்டாக்கத்தக்க எந்த வஸ்துவையும் போடக்கூடாது; அல்லது.

(c) மேற்சொன்ன பிரகாரம் குடிப்பதற்காகவோ குளிப்பதற்காகவோ ஒதுக்கி வைக்கப்பட்ட ஓரிடத்தில் துணி தோய்க்கக்கூடாது; அல்லது

(d) மேற்சொன்ன பிரகாரம் குடிப்பதற்காகவோ குளிப்பதற்காகவோ துணிகள் தோய்ப்பதற்காகவோ ஒதுக்கி வைக்கப்பட்ட ஓரிடத்தில் யாதொரு பிராணியைக் கழுவவோ சமையல் பாத்திரம், கம்பளி, ஆடு மாடுகளின் தோல் அல்லது துர்நாற்றமுள்ள அல்லது அருவருப்பான இதர பொருளைச் சுத்தமாக்கவோ அருவருப்பான அல்லது தீங்குண்டாக்கத்தக்க யாதொரு வஸ்துவைப் போடவோ கூடாது; அல்லது.

(e) மேற்சொன்ன பிரகாரம் குடிப்பதற்காக அல்லது குளிப்பதற்காக அல்லது துணிகள் தோய்ப்பதற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட ஓரிடத்தில் ஒரு சாக்கடைக் குழி, சாக்கடைக் கால், ஜலதாரை, என்ஜின் அல்லது பாய்லரிலிருந்து வரும் தண்ணீராவது, தமக்குச் சொந்தமான வேறெந்த அருவருக்கத்தக்க வஸ்துவாவது, தமக்குச் சொந்தமான அல்லது தம்முடைய ஆட்சியிலிருக்கிற யாதொரு கட்டடம் அல்லது நிலத்திலிருந்து வழிந்து வருகிற வேறெந்த அருவருக்கத்தக்க வஸ்துவாவது செல்ல அனுமதிக்கக் கூடாது.

6. எவரேனும், 1 முதல் 3 வரையிலுள்ள விதிகளில் கண்ட நிபந்தனைகளில் எவற்றின் படியேனும் பிறப்பிக்கப்பட்ட எந்த உத்திரவையாவது, 4-வது விதியின்படிக்கான ஒரு நோட்டிஸையாவது, 5-வது விதியில் கண்ட நிபந்தனைகளில் எவற்றையாவது மீறினாலும்: இவ் விதிகளில் எவற்றின்படியேனும் அவருக்குச் சட்ட பூர்வமாகப் பிறப்பிக்கப்பட்ட எந்தக் கட்டளையாவது அவருக்குச் சட்ட பூர்வமாக இடப்பட்ட எந்த உத்தரவையாவது அனுசரிக்கத் தவறினாலும் அவருக்கு ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத் தக்கதாகும் ; அப்படி மீறினதற்காக குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட பிறகு அவ்வாறு மீறிக்கொண்டே வந்த ஒவ்வொரு தினத்துக்காகவும் பத்து ரூபாய்க்கு மேற்படாத அபராத தண்டனை விதிக்கப்படத் தக்கதாகும்.

நீர் பாசன வேலைகளை பராமரிக்கவும், குடிமராமத்துக்களை நிறைவேற்றவும்

85. (1) நிர்ணயிக்கப்படக்கூடிய திட்டங்களுக்கும் மேல்விசாரணைக்கும் உட்பட்டு, ஏதேனும் நீர்ப்பாசனக் கட்டுவேலையைப் பாதுகாத்து பராமரித்துவரும் வேலையையாவது, நீர்ப்பாசன முறைகளை நிர்வகிக்கும் வேலையையாவது, ஏதேனும் நீர்ப்பாசனக்கட்டு வேலையை நம்பியுள்ள புலன்களுக்கு அக்கட்டுவேலையிலிருந்து தண்ணீரைப் பங்கிட்டனுப்புவது விஷயமாய் ஒழுங்கேற்படுத்துகிற வேலையையாவது அரசாங்கத்தார் யாதொரு பஞ்சாயத்துக்கு மாற்றலாம்.

(2) அந்தப் பஞ்சாயத்தானது, நிர்ணயிக்கப்படக் கூடிய வரையறைக்கும் மேல்விசாரணைக்கும் உட்பட்டு, பிரஸ்தாப கிராமத்தில் அல்லது பட்டணத்தில் இருக்கிற யாதொரு பாசன ஆதாரம் விஷயமாய்க் குடிமராமத்தை நிறைவேற்றவும், அதன் காரியங்களுக்காக நிர்ணயிக்கப்படக்கூடிய அடிப்படையின் பேரில் அவ்வாறு நிர்ணயிக்கப்படக்கூடிய கட்டணத்தை விதித்து வாங்கவும் அதிகாரம் உள்ளதாயிருக்கும்;

ஆனல், ஷை கிராமத்தில் அல்லது பட்டணத்தில் இருக்கிற யாதொரு பாசன ஆதாரம் விஷயமாய்க் குடிமராமத்தை நிறைவேற்றுவதில் அந்தப் பஞ்சாயத்து தவறிப் போகும் பட்சத்தில், அந்தப் பாசன ஆதாரம் விஷயமாய் கட்டாயமாய் வேலை வாங்குவதைக் குறித்த (1858-ம் வருஷத்து 1-வது மத்தியச் சட்டமாகிய) 1858-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தின்படி கிராம சமூகத்துக்காவது அதைச் சேர்ந்தவர்களில் ஒருவருக்காவது உள்ள பொறுப்பு நீங்கி விடுவதாக இப் பிரிவில் கண்டதெனுலும் கருதப்பட மாட்டாது.

(3) இந்த பிரிவின்கீழ் ஒரு நீர்பாசன கட்டு வேலை பராமரிப்பை மாற்றியதில் அரசாங்கத்தாருக்கு அதில் உள்ள மீன் பிடிக்கும் ஹக்கையையும் சம்மந்தப்பட்ட பஞ்சாயத்திற்கு அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு மாற்றிவிடவேண்டும். அந்த மாறுதல் அரசாங்கத்தாரால் குறிப்பிட்ட ஷரத்துகளுக்கு உள்பட்டு இருக்கவேண்டும். அதன் வருமானத்தை எப்படி உபயோகிக்க வேண்டுமென்று அந்த ஷரத்துகள் குறிப்பிடலாம்.

குறிப்பு

பி 85, பொது:—பஞ்சாயத்தின் பிரதேசத்தில் ஒரு ஏரியிருந்து, அதன் ஜலம் அந்த பிரதேசத்திற்கே பாயுமாகில் அதற்கு அந்த ஏரியை ஒப்படைக்கலாம். அப்படியில்லாமல் ஒரு ஏரியின் ஜலம் அநேக பஞ்சாயத்துகளுள்ள பிரதேசங்களுக்குப் பாய வேண்டியிருந்தால் அதற்குப் பொதுவாக கவர்ன்மெண்டு அந்த ஏரியை ஒரு பஞ்சாயத்தின் சுவாதீனத்திலேயே வைக்காது. அதை பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலிடம் ஒப்படைக்கலாம். ஆகையால் தான் இந்தச் செக்ஷனில் நிர்ணயிக்கப்படக்கூடிய திட்டங்களுக்கும், மேல் விசாரணைகளுக்கும் உட்பட்டு என்று ஓராம் உபபிரிவில் நன்ருகத் தெரியப்படுத்தப் பட்டிருக்கிறது.

விதிகள் பி. 85 பி: 178 (1)

பஞ்சாயத்துக்கள் குடி மராமத்தை நிறைவேற்றுவது விஷயமாய் உள்ள வரையறைகளும் மேல் விசாரணையும்—பஞ்சாயத்துக்கள் கட்டணங்களை விதித்து வாங்குவது (ச. III—3)

1. பாதுகாத்துப் பராமரித்து வருவதற்கென்று பஞ்சாயத்துக்கு மாற்றப்பட்ட யாதொரு பாசனக்கட்டு வேலையினுல் நன்மையடையும் நிலங்களின் பதிவான கைப்பற்றுதாரர்கள் எல்லாரிடமிருந்தும் அந்தப் பஞ்சாயத்து ஆண்டு கட்டணம் ஒன்றை ஒரு ஏகராவுக்கு இவ்வளவென்று அந்த ரெவின்யூ ஜில்லாவின் கலெக்டர் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கக்கூடிய வீதப்படி விதித்து வாங்கலாம்.

பிரிவு 85 படிக்கு நீர்ப்பாசன அலுவல்களைப் பஞ்சாயத்துக்கு மாற்றுவதைப்பற்றிய விதிகள் (1—16).

மேற்படி 85 (1) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவையும் கிராம நீர்ப்பாசனக் கட்டுவேலை களுக்குச் சம்பந்தப்பட்டவையுமான அலுவல்கள் எந்தத் திட்டங்களுக்குட்பட்டு பஞ்சா யத்துக்களுக்கு மாற்றப்படலாமோ அந்தத் திட்டங்களுக்குட்பட்டு பஞ்சாயத்துக்களுக்கு மாற்றப்படலாமோ அந்தத் திட்டங்கள் அடியிற் கண்டவையாகும் :—

(1) ஆயக்கட்டுதாரர்களில் பெரும்பான்மையோர் விரும்பினாலொழிய, மாற்றக் கூடாது. பொது மராமத்து இலாகாவின் பொருப்பில் இருக்கிற ஒரு கட்டு வேலையை, நீர்ப்பாசனப் பிரதான என்ஜினீரைக் கலந்தாலோசித்த பிறகே மாற்ற வேண்டும்.

(2) யாதொரு கிராம நீர்ப்பாசனக் கட்டுவேலை சம்பந்தமான அலுவல்கள் எந்தத் தேதியிலிருந்து பஞ்சாயத்துக்கு மாற்றப்படுகின்றனவோ அத்தத் தேதியிலிருந்து அவற்றை நிறைவேற்ற பஞ்சாயத்து தானே ஏற்பாடுகளைச் செய்துக்கொள்ள வேண்டும். அவசியமானால் தானேச் சிப்பந்திகளை வேலைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டும். அவ் வலுவல்களைச் செய்கையில், பஞ்சாயத்து, அரசாங்கத்தாரால் வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்பட்ட நீர்க்கட்டிகள் எவர்களேனும் இருந்தால் அவர்கள் விஷயமாகவும் பொதுவான மேல் விசா ரணை அதிகாரம் உடையதாகும். எனினும், நியமனம் செய்வது, தண்டனை விதிப்பது, வேலை யிலிருந்து நீக்கிவிடுவது, சம்பளம் கொடுப்பதுஆகிய இவை சம்பந்தப்பட்ட அதிகாரத்தை ரெவினியு இலாகா தன்னிடமே வைத்துக் கொண்டிருக்கும்.

(3) பிரஸ்தாப கிராமத்தில் மேற்படி நீர்ப்பாசனக் கட்டு வேலையின் கீழிருக்கிற நிலங் களுக்கு எந்த விதமாகவும் எந்த வரிசைக் கிரமப்படியும் நீர்ப்பாய்ச்ச வேண்டும் என்பதை யும், எந்தக் காலத்தில் தண்ணீர் சப்ளை செய்ய ஆரம்பிக்க வேண்டும் என்பதையும், எந்தக் கால அளவு வரையில் தண்ணீர் சப்ளை தொடர்ந்து செய்யப்பட்டு வரவேண்டுமென்பதையும், சப்ளை செய்யப்பட வேண்டிய தண்ணீரின் மொத்த அளவையும் முறைப்படுத்தப் பஞ்சா யத்துக்கு அதிகாரம் உண்டு. ஆனால், பஞ்சாயத்து, முறைப்படுத்துவதற்காகத் தனக்குள்ள மேற்படி அதிகாரத்தை, சிலாக்கியமாக அல்லது வீதாசாரப்படி தண்ணீர் சப்ளை பெறுவ தற்குரிய ஊர்ஜிதமான அல்லது மாமூலான உரிமைக்குப் பங்கம் நேரிடாதபடி செலுத்த வேண்டும்.

(4) பஞ்சாயத்து மேற்படி நீர்ப்பாசனக் கட்டு வேலையைச் சேர்ந்த மதகுகளில் மாறு தல் எதையும் செய்யவோ அல்லது அக் கட்டு வேலை சம்பந்தமாக ஏரிப்புனருத்தாரண திட்ட வரலாற்றுக் குறிப்புகளில் கண்டுள்ள பரிமாணம் மாதிரிக் குறிப்புகள் ஆகிய இவை விஷயமாகத் தலையிடவோ அல்லது மடைகள் அல்லது கருங்கல்களை உயர்த்தவோ, தாழ்த் தவோ, விஸ்தரிக்கவோ அல்லது வாய்க்கால்களின் தலைப்புக் கட்டுதல்கள் எவற்றையேனு மிருந்தால் அவற்றில் முக்கிய மாறுதல்கள் எவற்றையேனும் செய்யவோ அல்லது அவை விஷயமாய்த் தலையிடவோ கூடாது.

(5) மழைக்காலத்தில் நீர்ப்பாசனக் கட்டு வேலையின் கரையைக் கவனித்துப் பார்த் துக்கொள்வதற்குப் பஞ்சாயத்து பொறுப்புள்ளதாகும்.

(6) மேற்படி நீர்ப்பாசனக் கட்டு வேலையின் ஒரு பாகமாயுள்ள அல்லது அதனோடு தொடர்புடைய மதகுகள், மடைகள், கருங்கல்கள், வாய்க்கால்கள், தலைப்புக் கட்டுவேலைகள், கரை அல்லது இதரக் கட்டுவேலைகளில் தனது கிரமத் தவறு காரணமாகவேனும், தான் செய்யவேண்டிய காரியத்தைச் செய்யாமல் போனது காரணமாகவேனும் சேதம் எதுவாகிலும் ஏற்பட்டால் அதைப் பஞ்சாயத்து சரிக்கட்டிக் கொடுக்க வேண்டும். குறித்த யாதொரு சேத பாபத்து பஞ்சாயத்தின் கிரமத் தவறினால் ஏற்பட்டதா அல்லது பஞ்சாயத்து தான் செய்யவேண்டிய காரியத்தைச் செய்யாமற் போனதனால் ஏற்பட்டதா என்பது பற்றிப் பிரஸ்தாப ஜில்லா கலெக்டருடைய தீர்ப்பு முடிவானதாகும்.

(7) பஞ்சாயத்து மேற்படி பாசனக்கட்டு வேலையின் கரையின் இரண்டு ஓரங்களில் எதிரிலிருந்தேனும் முப்பது அடிக்குள் எப்போதாகிலும் எந்தக் காரியத்துக்காகவும் பூமியைத் தோண்டக்கூடாது.

(8) ஒரு பஞ்சாயத்துக்கு மாற்றப்பட்டுள்ளதும் கிராம நீர்ப்பாசனக் கட்டு வேலை ஒன்றுக்குச் சம்பந்தப்பட்டதுமான எந்த அலுவலையும் எப்போதேனும் அரசாங்கத்தாராவது மேற்படி சட்டத்தின் 157-வது பிரிவின்படி அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப் பெற்றிருக்கக்கூடிய அதிகாரியாவது எந்தக் காரணத்யையும் காட்டாமலேயே மீண்டும் மேற்கொள்ளலாம்.

குறிப்பு

நீர்ப்பாசன வேலைகள்:— நீர்ப்பாசன வேலைகளில் ஏறியிருந்தால் அதை மராமத்து செய்து சரிவர வைத்துக்கொள்வது முக்கியமான காரியமாகும். இதுவரையில் தாசில்தார் அந்த மராமத்து வேலையை கன்டிராக்டர்கள் மூலம் செய்து வந்தார். இனி அந்த ரிப்பேர்களை தாசில்தாராவது, பஞ்சாயத்து யூனியன் உடைய (B. D. O. அல்லது கமிஷனராவது) ரிப்பேர் செய்யக் கூடாது என்று தீர்மானிக்கவேண்டும். அந்த மொத்த ரிப்பேரையும் பஞ்சாயத்தே செய்ய உத்திரவிடவேண்டும்.

அந்த ரிப்பேருக்கு என்று ஏற்படுத்திய எஸ்டிமேட்டில் யாதொன்றும் குறைக்கக் கூடாது. அந்த ரிப்பேருக்காக பஞ்சாயத்திலிருந்து யாதொரு டிபாசிட்டும் கேழ்க்கக்கூடாது. அதற்கு மாராக பஞ்சாயத்து தலைவரையும் இன்னும் இரண்டு மெம்பர்களையும், கமிட்டியாக செய்து அவர்களிடம் அவர்கள் பொருப்பின் பேரில் இந்த ரிப்பேரின் செலவுக்காக 4-ல் 1-பங்கு ரூபா அட்வான்ஸாக அரசாங்கம் கொடுக்க வேண்டும். அந்த ரிப்பேர்களை மைனர் இர்ரிகேஷன் ஓவர்சியர் அப்போதுக்கப்போது செக் மெஷர் மெண்ட் செய்து 4-ல் 1-பங்கு தொகையை அந்த வேலை முடியும்வரையில், அட்வான்சாக 4-ல் 1-பங்கு கொடுத்து கொண்டு வரவேண்டும். அந்த பஞ்சாயத்து கமிட்டிமூலம் வேலையை முடிவு செய்து கொள்ள உதவி செய்யவேண்டும். இதனால் பஞ்சாயத்து ஏரிமராமத்தில் சம்மந்த மில்லாத ஒருவர் கிராமத்திற்கு வந்து ரிப்பேர் செய்வது நின்றுவிடும். அந்த பஞ்சாயத்தே ரிப்பேர் செய்தால் பஞ்சாயத்துக்கு அந்த கன்ராக்டின் லாபம் கிடைக்கும்,

சம்பந்தப்பட்ட பாசனக்கட்டு வேலையிலிருந்து நீர் பாய்ச்சப்பெறும் நன்செய், புன்செய் நிலங்களின் விஷயத்தில் ஏகரா ஒன்றுக்கு ஒரே விதமான வீதப்படியும், அக்கட்டு வேலையிலிருந்து தண்ணீர் இறைப்பது மூலமாக நீர் பாய்ச்சப்பெறும் நன்செய், புன்செய் நிலங்களின் விஷயத்தில் மேற்படி வீதத்தில் பேர்பாதி வீதப்படியும் அக்கட்டணத்தை விதிக்கவேண்டும்.

விளக்கம்.—மேற்படி நிலத்திற்குரிய நன்செய் அல்லது புன்செய் தீர்வைக்கும், தண்ணீர் வரி ஏதாகிலும் இருந்தால் அதற்கும் அதிகப் படியாகத்தான் மேற்படி கட்டணம் விதிக்கப்படும்.

2. பிரஸ்தாப கிராமத்தின் அல்லது அதன் யாதொரு பாகத்தின் விஷயமாய் விசாரணை அதிகாரமுள்ள கிராமப்பெரியதனக்காரர் மூலமாகப் பஞ்சாயத்து அக்கட்டணங்களை வசூலிக்க வேண்டும்; பஞ்சாயத்து கலெக்டருடைய பொதுவான அல்லது விசேஷ உத்திரவுகளின்படி மேற்படி கட்டணத்தைப் பரிபாலித்துச் செலவிடவேண்டும். கிராமப் பெரியதனக்காரர் மேற்படி தொகையை வசூலிக்கக் கூடியவராய் இருக்கும் பொருட்டு, அக் கட்டணத்துக்குச் சம்பந்தப்பட்ட டிமாண்டுக் கணக்கைக் கர்ணம் தயாரித்துக்கொடுக்கவேண்டும். (இதில் பின்னால் மேற்படி சட்டம் என்று குறிப்பிடப்படும்) கிராமப் பஞ்சாயத்துக்களைக் குறித்த 1958-ம் வருஷத்திய சென்னைப்பட்டணத்துச் சட்டத்தில் கண்ட 164-வது பிரிவின்படிக் கலெக்டரால் இது விஷயமாய் நிர்ணயிக்கப்படக்கூடிய ஊதியத்தைக் கிராமப் பெரியதனக்காரருக்குக் கொடுக்கவேண்டும்.

3. மேற்படி கட்டணத்தைச் செலுத்தும்படிக் கேட்பதின்பேரில் அது சந்தர்ப்பத்திற்கேற்றபடிப் பதிவான கைப்பற்றுதாரரால் அல்லது கூட்டாய்ப் பதிவான கைப்பற்றுதாரர்களின் எவராலேனும் செலுத்தப்படத்தக்கதாகும்; அது செலுத்தப்படாவிட்டால், அது நிலவரி பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே அத்தகையக் கைப்பற்றுதாரரிடமிருந்து அல்லது அத்தகையக் கைப்பற்றுதாரர்களில் எவரிடமிருந்தேனும் வசூலிக்கப்படலாம்.

4. அக் கட்டணத்திலிருந்து கிடைக்கும் தொகைகளை ஒரு பிரத்தியேகமான நிதியாக அமைக்கவேண்டும்; சம்பந்தப்பட்ட பாசனக்கட்டு வேலையைப் பராமரிப்பதற்காக அல்லது செப்பனிடுவதற்காகப் பஞ்சாயத்து தனக்கு உசிதமாகத் தோற்றுகிறபடி அத்தொகைகளைச் செலவிடவேண்டுமேயன்றி வேறெக்காரியத்துக்காகவும் செலவிடக்கூடாது.

5. மேற்படி நிதிக்குச் சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்காகப் பஞ்சாயத்து சரியான கணக்குகளை வைத்து வரவேண்டும்; மேற்படி சட்டத்தில் கண்ட 141 பிரிவின்படி நியமிக்கப்பட்ட ஆடிட்டர் அக் கணக்குகளைத் தனிக்கை செய்ய வேண்டும்.

6. அரசாங்கத்தின் பொது மராமத்து இலாகாவையும் ரெவின்யூ இலாகாவையும் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் மேற்படி பாசனக்கட்டு வேலையையும் அதற்குச் சம்பந்தப்பட்ட மற்றெல்லாக் கட்டு வேலைகளையும் அல்லது அவற்றில் எவைகளையேனும் பார்வையிடுவதற்குப் பஞ்சாயத்து எல்லாக் காலங்களிலும் அனுமதி கொடுக்கவேண்டும்.

7. மேற்படி பாசனக்கட்டு வேலைக்காவது அதற்குச் சம்பந்தப்பட்ட மற்றக்கட்டுவேலைகளுக்காவது எவையேனும் மராமத்துக்கள் செய்வதற்கு அரசாங்கத்தின் பொது மராமத்து அல்லது ரெவின்யூ இலாகாதாரரால் அமர்த்திக் கொள்ளப்படக்கூடிய யாதொரு கண்ட்ராக்டருக்குப் பஞ்சாயத்து எல்லாக் காலங்களிலும் வசதிகள் செய்து கொடுக்கவேண்டும்.

ரயத்துவாரிப் பிரதேசங்களிலுள்ள சில புறம்போக்குகளின் உபயோகம் விஷயமாய்ப் பஞ்சாயத்து ஒழுங்கேற்படுத்துவது

86. (1) இப் பிரிவின் நிபந்தனைகள் ரயத்துவாரிப் பிரதேசங்களில் மாத்திரம் பிரயோகப்படும்.

(2) புல்மேயும் தரைகள், களத்து மேடுகள், தகனம் செய்கிற இடங்கள், புதைக்கிற இடங்கள், கால் நடைகள் நிற்கிற இடங்கள் பஸ் வண்டிகள் நிற்கும் இடங்கள், தோப்புகள் ஆகிய இப் புறம்போக்குகள் அரசாங்கத்தாரிடம் இருக்கிற பட்சத்தில் நிர்ணயிக்கக்கூடிய வரையறைகளுக்கும் மேல் விசாரணைக்கும் உட்பட்டு, அப் புறம்போக்குகளின் உபயோகம் விஷயமாய் ஒழுங்கேற்படுத்த பஞ்சாயத்துக்கு அதிகாரம் உண்டு.

(3) கலெக்டரானவர், பஞ்சாயத்துடன் கலந்தாலோசித்த பிறகு, (2) உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள யாதொரு புறம்போக்கை இச் சட்டத்தின் வியாபகத்திலிருந்து விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக நீக்கலாம்; மேலும், அந்த விளம்பரத்தையுங்கூட மாற்றலாம் அல்லது ரத்து செய்யலாம்.

(4) நிர்ணயிக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் மேல்விசாரணைக்கும் உட்பட்டு, அரசாங்கத்தார் வசமுள்ள வேறே யாதொரு புறம்போக்கின் உபயோகம் விஷயமாய் ஒழுங்கேற்படுத்தவும் பஞ்சாயத்துக்கு அதிகாரம் உண்டு; ஆனால், அரசாங்கத்தாரால் பிறப்பிக்கப்படும் உத்தரவு மூலமாய்ப் பஞ்சாயத்து இது விஷயமாக அதிகாரம் பெற்றிருக்க வேண்டும்.

(5) எந்தப் புறம்போக்கின் உபயோகம் விஷயமாய், (2) உட்பிரிவின்படியாவது, (4) உட்பிரிவின்படியாவது பஞ்சாயத்தால் ஒழுங்கேற்படுத்தப் படுகிறதோ அந்தப் புறம்போக்கின் மேல் நிர்ணயிக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் மேல் விசாரணைக்கும் உட்பட்டு ஷ பஞ்சாயத்தானது மரங்கள் வைக்கலாம்.

குறிப்பு

பொது.—இந்த விதிகள் புதைக்கிற, தகனஞ் செய்கிற, இடங்களையும் மேயும் இடங்களையும், களத்து மேடுகளையும், வண்டிகள், கால்நடைகள் நிற்குமிடங்களையும், தோப்புகளையும் மாற்றும் விஷயமாக ஏற்படுத்தப் பட்டவை. ஒரு பஞ்சாயத்தானது முன்மாதிரி தீர்மானங்கள் போடாமலே மேல் கண்ட இடங்களை அடைகிறது. ஆனால் அவைகள் கவர்ன்மெண்டார் ஏற்படுத்தும் விதிகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

ஒரு பஞ்சாயத்தானது தன்னிடத்தில் தான் என்னென்ன புறம்போக்குகளைக் கைப்பற்றிக் கொண்டதென்று ஒரு ஜாபிதாவை தயார்செய்து கொள்ளவேண்டும். மேற்படி புறம்போக்குகளில் உள்ள பழம் காய்க்கும் மரங்களை பஞ்சாயத்துதான் குத்தகைக்கு விடவேண்டும் அவைகளை உபயோகிப்பது தவிர மற்ற எந்த விதத்திலும் பாழ்படுத்தக் கூடாது.

பி. 86 (4) வேறே யாதொரு புறம்போக்கு:—இவைகளை சமீபகாலத்தில் ஒப்புவிப்பார்களா என்பது சந்தேகம்.

விதிகள் பி. 86 (2) (4) (5) படி

புறம்போக்குகளின் உபயோகத்தை முறைப்படுத்துவதற்கான வரையறைகளும் மேல்விசாரணைகளும் (ஞ-VII-7)

1: அரசாங்கத்தாருடைய வசத்திலிருக்கிற எந்த புறம்போக்கின் உபயோகம் பஞ்சாயத்தினால் முறைப்படுத்தப் படுகிறதோ அந்த புறம்போக்கை, அது முதல், உத்தேசிக்கப்பட்ட காரியத்துக்காக வல்லாமல் வேறொரு காரியத்துக்காக :—

(1) அது மேற்படி சட்டத்தின் 86 (2) பிரிவில் சொல்லப்பட்ட ஒரு புறம்போக்காயிருந்தால், கலெக்டருடைய அனுமதியின்றி மற்றப்படியும்.

(2) அது மேற்படி சட்டத்தின் 86 (1) பிரிவில் சொல்லப்பட்ட ஒரு புறம்போக்காயிருந்தால், அரசாங்கத்தாருடைய அனுமதியின்றி மற்றப்படியும்,

உபயோகிக்கலாகாது.

2 (1) மேற்படி சட்டத்தின் 86 (2) பிரிவில் சொல்லப்பட்ட ஒரு புறம்போக்கு முதன் முதல் உத்தேசிக்கப்பட்ட காரியத்துக்காக இனிமேல் வேண்டி யிருக்கவில்லை யென்றும், வேறு யாதொரு குறிப்பிட்ட சமுதாய காரியத்துக்காக அதை உபயோகித்துக் கொள்ளலாமென்றும், பஞ்சாயத்து கருதினால் அது, பிரஸ்தாப நிலம் இருக்கிற காலத்திலே அறிக்கையொன்றை பிரசித்தம் செய்விக்கவேண்டும். அந்நிலத்தின் ஸர்வே நம்பரையும் இன்ன காரியத்துக்காக வேண்டியிருக்கிற தென்பதையும் மேற்படி அறிக்கையில் குறிப்பிடவேண்டும். அதே சமயத்தில், பிரஸ்தாப உத்தேசத்துக்கு குறிப்பிட்ட ஒரு தேதிக்குள் ஆட்சேபணைகள் செய்து கொள்ளலாமென்று அந்த அறிக்கையில், தெரிவிக்க வேண்டும். அத் தேதியானது மேற்படி அறிக்கை பிரசுரிக்கப்படுகிற தேதியிலிருந்து 30 தினங்களுக்குக் குறைவாயிருக்கலாகாது. மேற்படி அறிக்கையை தண்டோரா போட்டும், பஞ்சாயத்து ஆபீஸ் இருக்கிற கட்டிடத்திலே எல்லோருக்கும் தெரியும் பொருட்டு ஓரிடத்தில் ஒட்டியும் பிரசித்தம் செய்யவேண்டும்.

(2) ஆட்சேபனைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவென்று நிச்சயிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு பஞ்சாயத்தானது, வந்து சேர்ந்த ஆட்சேபனைகள் சகிதமாக தனது உத்தேசத்தை கலெக்டருக்கு அனுப்ப வேண்டும்; அதன் பேரில் தகுதி யென்று கருதப்படக்கூடிய உத்தரவு களைக் கலெக்டர் பிறப்பிப்பார்.

3. மேற்படி சட்டத்தின் 86 (4) பிரிவில் சொல்லப்பட்ட ஒரு புறம்போக்கின் உப யோகத்தை முறைப்படுத்த யாதொரு பஞ்சாயத்து விரும்பினால் அது இவ்விஷயம் பற்றிய தனது தீர்மானத்தை ஒரு பிரதி சகிதமாக கலெக்டருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம். (a) புறம்போக்கின் ஸர்வே நெம்பர் அல்லது நம்பர்கள், எல்லைகள், விஸ்தீரணம் (b) புறம் போக்கு உபயோகிக்கப்படுகிற காரியம், (c) அதில் மரங்கள் எவையேனும் வளர்ந்திருந்தால் அவற்றின் ஜாபிதாவும் விவரமும்—ஆகிய இத் தகவல்கள் மேற்படி தீர்மானத்தில் கண்டிருக்க வேண்டும். அந்த புறம்போக்கு அரசாங்கத்தார் வசத்திலிருக்கிற தென்றும், மேற்படி தீர் மானத்தில் குறிப்பிட்டிருக்கிற தகவல்கள் சரியானவை யென்றும் கலெக்டர் சந்தேகமறத் தெரிந்து கொண்ட பிறகு, தமது அபிப்பிராயக் குறிப்புகள் சகிதமாக அதை ரெவினியு போர்டுக்கு அனுப்ப வேண்டும்; பிறகு, அந்த போர்டு தனது சிபார்சு சகிதமாக தஸ்தா வேஜுகளை அரசாங்கத்தாருக்கு அனுப்ப வேண்டும்.

4. எந்தப் புறம்போக்குகளின், உபயோகம் மேற்படி சட்டத்தில் கண்ட 86 (4) பிரிவின்படி பஞ்சாயத்தினால் முறைப்படுத்தப் படுகிறதோ அந்தப் புறம்போக்குகளின் ஜாபிதா, ஒன்றை (ஸர்வே நம்பர்கள், எல்லைகள், விஸ்தீரணம், ஒவ்வொரு புறம்போக்கும் இன்ன காரி யத்துக்காக உபயோகப்படுகிற தென்பது, அவற்றிலுள்ள மரங்கள்-இவை பற்றிய விவரங் கள் சகிதமாக) பஞ்சாயத்து வைத்துவர வேண்டும்.

5. எந்தப் புறம்போக்கின் உபயோகம் பஞ்சாயத்தினால் முறைப்படுத்தப் படுகிறதோ அதை கிராமப் பெரியதனக்காரரும் கர்ணமும் ரெவினியு இலாகாவைச் சேர்ந்த பார்வையிடு வதற்கான யாதொரு உத்தியோகஸ்தரும் எக்காலத்திலேனும் பார்வையிட பஞ்சாயத்து அனுமதி கொடுக்க வேண்டும்.

6. பஞ்சாயத்தானது யாதொரு புறம்போக்கு உபயோகத்துக்காக கலெக்டரால் அங்கீகரிக்கப்பட்ட வீதங்களின் ஷெடியூலின் பிரகாரம் கட்டணம் ஒன்றை விதிக்கலாம்.

7. பஞ்சாயத்தானது போரடிக் களங்கள், பாரவண்டி நிற்குமிடங்கள், கால் நடைக் கொட்டில்கள், சுடுகாடுகள், இடுகாடுகள், முதலியவற்றை சுகாதாரமான நிலைமையில் வைத்திருக்க வேண்டியது மல்லாமல் இது சம்பந்தமாக டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீஸரால் பிறப் பிக்கப்படுகிற, எவையேனும் கட்டளைகளையும் நிறைவேற்ற வேண்டும்.

8. பஞ்சாயத்தானது தோப்புகளை நல்ல நிலையில் வைத்திருப்பதற்கும், காற்றடித்து விழுந்துபோன அல்லது வாடிப்போன அல்லது பட்டுப்போன மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்களை நடுவதற்கும் எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

9. பஞ்சாயத்தானது தகுந்த நிபந்தனைகளுக்குட்பட்டு தோப்புகளைக் குத்தகைக்கு விடவேண்டியது மல்லாமல் தோப்புகளில் உள்ள மரங்களின் பலன்களிலிருந்து கிடைக்கிற வருமானத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

10. எந்தப் புறம்போக்கின் உபயோகம் பஞ்சாயத்தினால் முறைப்படுத்தப் படுகிறதோ அந்தப் புறம்போக்கிலே பஞ்சாயத்து மரங்களைக் குத்தகைக்கு விடுவதற்கும், வெட்டுவதற் கும், நடவு செய்வதற்கும் மேற்படி சட்டத்தில் கண்ட 178 (2) (xxx) பிரிவின்படிச் செய்யப் பட்ட விதிகள் பிரயோகப்படும்.

11. எந்தப் புறம்போக்கின், உபயோகம் பஞ்சாயத்தினால் முறைப்படுத்தப் படுகிறதோ அந்தப் புறம்போக்கிலுள்ள ஆக்கிரமிப்புக்களை அப்புறப் படுத்துவதற்கு பஞ் சாயத்து ஏற்பாடுகள் செய்யவேணடும். பஞ்சாயத்து அவ்வாறு செய்யத் தவறிப்போனால், அந்த ஆக்ரமிப்பு கண்டு பிடிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிறகு ரெவினியு டிவிஷன் ஆபீஸரானவர் அந்த ஆக்ரமிப்புக்களில் தான் ஆட்சேபகரமானவை யென்று கருதுகிற ஆக்கிரமிப்புக்களை அப்புறப்படுத்த வேண்டுமென உத்தரவிட அதிகாரம் உள்ளவரா வார். ரெவினியு டிவிஷனல் ஆபீஸருடைய அத்தகைய யாதொரு உத்தரவின் பேரில் கலெக் டருக்கு அப்பீல் உண்டு. ஓர் ஆக்கிரமிப்பு ஆட்சேபகரமானதா இல்லையா என்பது பற்றி கலெக்டருடைய தீர்மானம் உறுதியானதாகும்.

பூஸ்திதி (எஸ்டேட்) நிலங்களைக் குறித்த 1908-ம் வருஷத்து சென்னப்பட்டணத்துச் சட்டத்தின் பரிபாலனத் துக்குட்பட்ட பூஸ்திதி களிலுள்ள சில சமுதாய நிலங்களின் உபயோகம் விஷயமாய் பஞ்சாயத்து ஒழுங்கேற்படுத்துவது

87. (1) எஸ்டேட்டுகளிலுள்ள நிலங்களைக் குறித்த (சென்னை 1908-ம்ஹூத்து 1-வது சட்டமாகிய) 1908-ம்ஹூத்திய சென்னப்பட்டணத் துச் சட்டத்தின் பிரயோகத்துக்குட்பட்டதாய் பரிபாலிக்கப் படுகிற எஸ்டேட்டுகளிலே, அச் சட்டத்தில் என்ன சொல்லி யிருந்த போதிலும் பாதகமில்லாமலே, நிர்ணயிக்கப்படக் கூடிய வரையறைகளுக்கும், மேல்விசாரணைக்கும் உட்பட்டு, பஞ்சாயத்துக்கு அடியிற் கண்ட அதிகாரங்கள் உண்டு—

(a) ஷை சட்டத்தின் 3-வது பிரிவில் கண்ட (16) பகுதியைச் சேர்ந்த (b) உற்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அடியிற்கண்ட காரியங்களில் எதற்காகவாகிலும் ஒதுக்கி வைக்கப்பட்ட நிலங்களின் உபயோகம் விஷயமாய் ஒழுங் கேற்படுத்துவது; அக் காரியங்களாவன:—களத்து மேடு கள், கால் நடைகள் நிற்கும் இடங்கள், கிராம நத்தங்கள், பிரஸ்தாப கிராமத்தில் அல்லது பட்டணத்தில் ஷை கிராம அல்லது பட்டணவாசிகளின் பொது உபயோகத்துக்காக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள வேறு நிலங்கள்.

(*b*) ஷை சட்டத்தின் 20-A பிரிவினுல் ஜில்லாக் கலெக்டரிடம் சங்கிரமித் துள்ள அதிகாரத்தைச் செலுத்துவது. அதாவது (a) பகுதியில் குறிப்பிடப்பட்டதும் அதன் பிரதம காரியத்துக்காக இனிமேல் வேண்டியிராததுமான எந்த நிலத்தை யாகிலும் குறிப்பிடப்பட்டுள்ள வேறே யாதொரு சமுதாய காரியத்துக்காக உபயோகிக்க வேண்டுமென்று கட்டளையிடுவது; ஆனல், இதற்காக ஜில்லாக் கலெக்டரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(c): (a) பகுதியின்படி எந்த நிலத்தின் உபயோகம் விஷயமாய்ப் பஞ்சாயத் தாரால் ஒழுங்கேற்படுத்தப் படுகிறதோ அந்த நிலத்தின்மேல் மரங்கள் வைப்பது.

ஷை 20-A பிரிவின் (1) உட்பிரிவில் கண்டுள்ள விலக்கு நிபந்தனைகளின் பிரயோகம் (b) பகுதியில் கண்டதெதனுலும் எந்த விதத்திலாகிலும் பாதிக்கப் படுவதாகக் கருதப்படமாட்டாது.

(2) யாதொரு எஸ்டேட்டானது, எஸ்டேட்டுகளிலுள்ள நிலத்தைப் பற்றிய (சென்னை 1908-ம்ஹூத்து 1-வது சட்டமாகிய) 1908-ம்ஹூத்திய சென்னப்பட்டணத் துச் சட்டத்தின் பிரயோகத்துக்குட்படாமல் நின்றுபோன பிறகு, (1) உட்பிரிவின் நிபந்தனைகள், நிர்ணயிக்கப்படக்கூடிய அளவுக்கும் அப்படி நிர்ணயிக்கப்படக்கூடிய மாறுதல்களுடனும் அவ் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கிற நிலங்களுக்குப் பிரயோகப்படும்.

குறிப்பு
விதிகள் பி. 87 படிக்கு
பூஸ்திதிகளில் உள்ள சமுதாய நிலங்களின் உபயோகத்தைப் பஞ்சாயத்துக்கள் முறைப்படுத்துவது—வரையறைகளும் மேல் விசாரனையும் (ஞ-VIII-8)

1. மேற்படி சட்டத்தில் கண்ட 86-வது பிரிவைச்சேர்ந்த (2) உட்பிரிவின்படிச் செய்யப் பட்ட விதிகள், மேற்படி சட்டத்தின் 87 (1) (a) பிரிவில் குறிப்பிடப்பட்ட நிலங்களின் உப யோகத்தை முறைப்படுத்துவதற்கும் அவசியமான மாறுதல்களுடன் பிரயோகப்படும்.

2. யாதொரு நிலம் விஷயமாய் 89 (1) (a) பிரிவின்படிக்கான அதிகாரங்களைச் செலுத்துகையில், மேற்படி நிலத்துக்குடையவருக்கு அனந்தரவாரிசு பாத்தியதை ஏதாகிலு மிருந்தால் அதையும், அந்த நிலம் ஒரு கிராம நத்தமாயிருந்தால், அதில் சட்ட ரீதியான யாதொரு காரியத்துக்காக கிராமவாசிகளின் பொது உபயோகத்திலிராத எந்தக் காலி பாகத்தையேனும் வீட்டுமனையாக ஒப்படை செய்ய அவருக்குள்ள பாத்தியதையையும் பாதிக் கக்கூடிய எக் காரியத்தையும் பஞ்சாயத்து செய்யலாகாது.

3. யாதொரு நிலம் பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய 1908-ம்ஹூத்திய சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (16) பகுதியில் கண்ட (b) உட்-பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற விவரப்படி இருக்கிறதா இல்லையா என்பது பற்றி ஏதேனும் பிரசினை எழுமானல், பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப் பற்றிய 1908-ம்ஹூத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தில் கண்ட 20-வது பிரிவின்படி அப்பிரச்சினை தீர்மானிக்கப்படுகிற வரையில் அந்த நிலம் சம்பந்தமாக, கிராமப் பஞ்சாயத்துக்களைக் குறித்த 1958-ம்ஹூத்திய சென்னப்பட்டணச் சட்டத்தில் கண்ட 87 (1) (a) பிரிவின்படி பஞ்சாயத்து தனது அதிகாரங்களைச் செலுத்தலாகாது,

4. மேற்படி சட்டத்தில் கண்ட 87 (1) (a) பிரிவின்படிச் செய்யப் படுகிற யாதொரு காரியம் ஜில்லா கலெக்டரின் மேல்விசாரணைக்குப்பட்டதாகும்.

5. (1) பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப் பற்றிய 1908-ம்ஹூத்திய சென்ன பட்டணத்துச் சட்டத்தில் கண்ட 3-வது பிரிவைச் சேர்ந்த (16) பகுதியின் (b) உட்பகுதியில் குறிப்பிடப்பட்ட யாதொரு காரியத்துக்காக பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்டுள்ள யாதொரு நிலம் அக் காரியத்துக்காக இனிமேலும் வேண்டியிருக்கவில்லை யென்றும், குறிப்பிட்ட வேறு யாதொரு சமுதாய காரியத்துக்காக இது உபயோகிக்கப் படவேண்டுமென்று கட்டளையிட்டு, கிராமப் பஞ்சாத்துக்களைக் குறித்த 1958-ம் வருஷத்திய சென்னபட்டனத்துச் சட்டத்தில் கண்ட 87 (1) (b) பிரிவின்படி ஓர் உத்தரவு பிறப்பிப்பதற்கு ஜில்லா கலெக்டருடைய அனுமதியைப் பஞ்சாயத்து பெற வேண்டுமென்றும் அது தானகவேயாவது அதன் எல்லைகளுக்குள் வசிப்பவர்களில் எவர்களேனும் முறையிட்டுக் கொள்வதன் பேரிலாவது கருதினல், அது அந்த நிலம் இருக்கிற கிராமத்திலே தண்டோரா போடுவது மூலமாகவும் பஞ்சாயத்து ஆபீஸ் இருக்கிற கட்டிடத்தில் ஒட்டுவது மூலமாகவும் பிரசித்தம் செய்யப்படவேண்டிய ஓர் அறிக்கை மூலமாக; உத்தேசித்துள்ள உத்தரவுக்கு ஆட்சேபனைகளைக் குறிப்பிட்ட ஒரு தேதிக்குள் அனுப்பும்படிக் கேட்டுக் கொள்ள வேண்டும்; அத் தேதியானது மேற்படி அறிக்கை பிரசித்தம் செய்யப்பட்ட தேதியிலிருந்து 30 தினங்களுக்குக் குறைவாயிருக்கலாகாது. ஆட்சேபனைகள் விசாரிக்கப்படும் காலத்தையும் தேதியையும் கூட அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்க வேண்டும். அந்த அறிக்கையின் பிரதி ஒன்றை நிலச் சொந்தக்காரரிடம் நேரிலாவது, பெற்றுக்கொண்டதாக எழுதிக் கொடுக்கப்படும் ரசீது திரும்பி வந்து சேருவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ரெஜிஸ்டர் தபால் மூலமாகவாவது சேர்ப்பிக்கவேண்டும்; ஆட்சேபனைகளைத்தாக்கல் செய்வதற்காக மேற்படி அறிக்கை சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 30 தினகாலம் கொடுக்க வேண்டும்.

(2) (1) உபவிதியின்படிக்கான விசாரணைகளைத் தாக்கல் செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட காலம் கழிந்து போகிற தேதியிலிருந்து பதினைந்து தினங்களுக்குப் பிற்பட்டதாக இருக்கவேண்டும்.

(3) (1) உபவிதியில் நிச்சயிக்கப்பட்ட தேதியன்ருவது அதற்குமுன்பாவாவது வந்து சேரக்கூடிய சகல ஆட்சேபனைகளையும் பஞ்சாயத்து விசாரிக்க வேண்டும்; அப்படிச் செய்கையில் மனுதாரர்கள் தங்களுடைய ஆட்சேபனைகளை ருசுப்படுத்துவதற்கு வாய் மொழியாகவோ தஸ்தாவேஜு ரூபமாகவோ சாட்சியம் ஆஜர்படுத்த அவர்களுக்கு பஞ்சாயத்து, நியாயமான அவகாசம் எல்லாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

6. விசாரணை முடிவடைந்த பிறகு, மேற்படி ஆட்சேபனைகளை நிராகரித்து விடலாமென்றும், 87 (1) (b) பிரிவின்படி ஒரு கட்டளை பிறப்பிப்பதுஅவசிய மென்றும் பஞ்சாயத்து தீர்மானித்தால் அவ்வாறு கண்டுள்ள தீர்ப்பு ஒன்றை அது எழுதிவைக்கவேண்டும்; அதற்கான காரணங்களையெல்லாம் தெரிவிக்க வேண்டும்; மேலும் அது, அத்தகையக் கட்டளை ஒன்றை பிறப்பிப்பதற்கு அனுமதி கொடுக்குமாறு ஜில்லாகலெக்டருக்கு விண்ணப்பம் ஒன்றைச்செய்து கொள்ளவேண்டும்; அவ் விண்ணப்பத்துடன் கூட (i) தனது தீர்ப்புக்கு ஒரு பிரதி, (ii) 5-வது பிரிவைச் சேர்ந்த (1) உபவிதியில் குறிப்பிடப்பட்டிருக்கிற அறிக்கைகள் சேர்ப்பிக்கப்பட்டதாகும் பிறப்பிக்கப்பட்டதாகும் ருசுவாயிருக்கிற தஸ்தாவேஜுகள் உள்ளிட்ட விசாரணைபற்றிய ரெகார்டுகள்; (iii) மேற்படி நிலத்தின் அல்லது பாகத்தின் உபயோகம் விஷயமாக நிலச் சொந்தக்காரருக்கு அல்லது ரயித்துகளுக்கு உள்ள மாமூலான மற்ற எல்லா உரிமைகளையும் பற்றி பஞ்சாயத்து ஆலோசனை செய்திருக்கிற தென்றும், அத்தகைய ஒரு கட்டளை பிறப்பிக்கப்படுமானல் மேற்படி உரிமைகள் செலுத்தப்படுவதற்கு மற்றபடி வகை செய்யப்படு

மென்று பஞ்சாயத்து சந்தேகமறத் தெரிந்து கொண்டிருக்கிற தென்றும் கண்டுள்ள ஓர் உறுதி மொழி-ஆகிய இவற்றை அனுப்பவேண்டும்.

7. அத்தகைய விண்ணப்பம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதன் பேரில், ஜில்லா கலெக்டரானவர் தமக்குத் தகுதியென்று தோற்றுகிற விசாரணை செய்த பிறகு, மேற்படி நிலம் அதன் பிரதம நோக்கத்துக்காக இனிமேலும் வேண்டியிருக்கவில்லை யென்று கண்டு, பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய 1908-ம் வருஷத்திய சென்னபட்டணத்துச் சட்டத்தில் கண்ட 20-A பிரிவின் (1) உட்பிரிவைச் சேர்ந்த (a) பகுதியின்படி உறுதிமொழி பத்திரம் ஒன்றை பிறப்பிக்கலாம்; மேலும் அவர், மேற்படி விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள காரியத்துக்காக அந்த நிலம் உபயோகிக்கப்படவேண்டுமெனக் கட்டளையிட்டு, கிராமப் பஞ்சாயத்துக்களைக் குறித்த 1958-ம் வருஷத்திய சென்னபட்டணத்துச் சட்டத்தில் கண்ட 87 (1) (b) பிரிவின்படி ஓர் உத்தரவு பிறப்பிக்க பஞ்சாயத்துக்கு அனுமதி கொடுக்கலாம், அதன்பேரில், பஞ்சாயத்து அத்தகைய உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்கவேண்டும்.

ஜில்லா கலெக்டர் பஞ்சாயத்தின் கருத்தோடு மாறுபட்டால், அவர் அப்படி மாறுபடுவதற்குத் தமக்குண்டான காரணங்களை எழுதிவைத்து அவ் விண்ணப்பத்தை நிராகரித்து. தமது உத்தரவின் பிரதியொன்றை பஞ்சாயத்துக்கு அனுப்பவேண்டும்.

8. மேற்படி சட்டத்தில் கண்ட 178 (2) (XXX) பிரிவின்படி செய்யப்பட்ட விதிகள், மேற்படி சட்டத்தின் 87 (1) (a) பிரிவில் குறிப்பிட்டுள்ள நிலங்களில் மரங்களை நடுவது விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்கும் அவசியமான மாறுதல்களுடன் பிரயோகப்படும்.

திரட்டப்பட்ட சாக்கடை நீர் முதலியன பஞ்சாயத்தைச் சேரவேண்டும்

88. இச் சட்டத்தின்படிப் பஞ்சாயத்தில் திரட்டப்பட்ட சகல குப்பைகள், சாக்கடை நீர், அசுத்தம் இதர பொருள்கள் யாவும் அதைச் சேரவேண்டும்.

குறிப்பு

பொது:—குப்பை எடுப்பது பஞ்சாயத்தின் கடமை. குப்பை எடுக்கிறவராவது, சானிடரி இன்ஸ்பெக்டராவது. மெம்பராவது அதைத் தங்களுக்கு உபயோகித்துக் கொண்டால் அது இந்தியன் பீனல்கோடு 409-வது பிரிவின் படிக்குக் குற்றமாகும். [ஹரிலால் குறித்து 45 A. 281=A.I.R. 1923 A. 480].

பஞ்சாயத்துக்களுக்கு வேண்டியிருக்கும் ஸ்தாவர சொத்தை நிலமெடுத்துக் கொள்வதற்கான 1894-ம் வருஷத்துச் சட்டத்தின்படி எடுத்துக் கொள்ளலாம்

89. எந்த ஸ்தாவரப் பொருளை எடுத்துக்கொள்ள யாதொரு பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு இச் சட்டத்தின் படியாவது அதன்படிச் செய்யப்பட்ட எந்த விதிகளின் படியாவது அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு ஸ்தாவர சொத்தை நிலமெடுத்துக் கொள்வதைக் குறித்த (1894–ம்ஸூ்த்து 1–வது மத்தியச் சட்டமாகிய) 1894–ம்ஸூ்த்திய சட்டத்திலுள்ள நிபந்தனைகளின்படி எடுத்துக் கொள்ளலாம். அப்படிப்பட்ட சொத்தின் விஷயமாய் ஷை சட்டத்தின் பிரகாரம் தீர்மானிக்கப்படும் பிரதிபலனும் அதை எடுத்துக் கொள்வதற்காகப் பிடித்த வேறே எவையேனும் செலவுகளும் செலுத்தப் படுவதன்மேல், அந்தச் சொத்தானது, சந்தர்ப்பத்துக்கேற்ப ஷை பஞ்சாயத்தினிடம் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலிடம் சங்கிரமிக்கும்.

குறிப்பு

பி. 89:—ஒரு பஞ்சாயத்து தனக்கு சொத்து வேண்டுமென்றால் நில மெடுத்துக் கொள்வதற்கான சட்டத்தின்படி சொத்தை சம்பாதிக்கலாம். அதற்கு ஜில்லா கலெக்டர் உதவி வேண்டும். இதற்குக் கலெக்டரும், அவர் உத்தியோகஸ்தர்களும் நாள் தள்ளாமல் உடனுக்குடனே காரியங்களைச் செய்து பஞ்சாயத்துகளுக்கு சொத்து சம்பாதித்துக் கொடுப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

யாத்திரை ஸ்தலங்கள் முதலியவைகளின் மேல் விசாரணை வகிக்கும்நபர் கள் திரவிய சகாயம் செய்வது.

90. யாதொரு மசூதியாவது, கோவிலாவது, மடமாவது, மத ஆராதனை அல்லது போதனை செய்யும் யாதொரு இடமாவது, சந்தைகள் கூட்டுவதற்காகிலும் உற்சவங்கள் நடத்துவதற்காகிலும் அதைப்போன்ற இதர காரியங்களுக்காகிலும் உபயோகிக்கப் படுகிற யாதொரு இடமாவது, யாதொரு கிராமத்தின் அல்லது பட்டணத்தின் எல்லைகளுக்குள்ளாயினும் அதற்குச் சமீபத்திலாயினும் இருந்து, வருஷ முழுவதுமோ, குறித்த சில சந்தர்ப்பங்களிலோ ஜனங்கள் ஏராளமாய் ஷை மசூதி, கோவில் முதலியவைகளுக்குப் போவதாயிருந்தால், பொது ஜனங்களின் தேகாரோக்கியம், பந்தோபஸ்து அல்லது சௌகரியத்துக்காக அவசியமான விசேஷமான எந்த ஏற்பாடுகளையாகிலும் நிரந்தரமாய்ச் செய்யவேண்டியவைகளாயிருந்தாலும் சரி, சிறிது காலத்துக்குச் செய்யவேண்டியவைகளாயிருந்தாலும் சரி அவைகளைப் பஞ்சாயத்து செய்ய வேண்டும்; ஆனால், அப்படிப்பட்ட மசூதி, கோவில் முதலியவைகளின் மேல்விசாரணை வகிக்கும் ட்ரஸ்டி அல்லது இதர நபரைக் கலந்தாலோசித்த பிறகு, அரசாங்கத்தார் ஷை ட்ரஸ்டியாவது நபராவது பஞ்சாயத்தின் நிதிக்குத் தங்களால் நிச்சயிக்கப்படக் கூடியவாறு மீண்டும் மீண்டும் கொடுக்கத்தக்க அல்லது அந்தப்படி (மீண்டும் மீண்டும்) கொடுக்கவேண்டியிராத திரவிய சகாயம் செய்யும்படி அவரைக் கேட்கலாம்.

குறிப்பு

பி. 90 பொது.—மல குப்பைகள் உள்பட சுகாதாரவிதிகளின்படி எல்லாக் குப்பையையும் அப்புறப்படுத்த வேண்டும். ஜனங்கள் ஏராளமாய் கூடும் காலத்தில் அவர்கள் எந்த மதத்தை சேர்ந்தவர்களாயினும் அல்லது எந்த ராஜீய கொள்கைகளை கொண்டவர்களாயினும் சரி அவைகளை பொருட்படுத்தாது பொது ஜன சௌகரியங்களைக் கவனிப்பது சுகாதார குறை ஏற்படாமல் செய்யவேண்டிவைகளை செய்வதுதான் பெருந்தன்மை. பஞ்சாயத்து பணத்தில் அதிகம் செலவு செய்யாமலும் ஜனங்களுக்கு சௌகரியத்தைக் கொடுக்கக் கூடிய முறைகளை பஞ்சாயத்து அனுசரிக்க வேண்டும். யாத்திரை ஸ்தலமாயில்லாமல் போனபோதிலும் ஜனங்கள் உச்சவத்திற்காக வந்து சேர்ந்தால் அந்த இடங்களில் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். ஜனங்கள் அன்றடம், அல்லது அடிக்கடி வரும்படியான யாத்திரை ஸ்தலங்களாயிருந்தால் அந்த பஞ்சாயத்து மதராஸ் கவர்ன்மெண்டின் அனுமதியின்பேரில் யாத்திரை ஸ்தலத்து தர்மகர்த்தாக்களிடமிருந்து செலவிற்கு ஒரு பகுதி வசூல் செய்துகொள்ளலாம். யாத்திரை ஸ்தல தர்மகர்த்தாவினிடம் பணம் இல்லாமலிருந்தாலும் அல்லது வருமானமில்லாமலிருந்தாலும், யாத்திரை வாசிகள் வரி வசூல் செய்துகொள்ளலாம்.

பொதுக் கேளிக்கை இடங்களை மூடிவிடு மாறு உத்திரவிட அதிகாரம்.

91. யாதொரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதிக்குள் அல்லது யாதொரு கிராமத்துக்குள் அல்லது பட்டணத்துக்குள் அபாயகரமான, யாதொரு நோய் பரவியிருந்தால், பொதுக் கேளிக்கைக் காரியத்துக்காக உபயோகிக்கப்படுகிற யாதொரு கட்டிடத்தை அறையை அல்லது கூடத்தைதாம் நிச்சயிக்கக்கூடிய கால அளவுக்கு மூடி வைக்க வேண்டுமென அதன் சொந்தக்காரருக்கு அல்லது அனுபோகதாரருக்கு நோட்டிஸ் மூலமாகக் கமிஷனர் உத்தரவிடலாம்,

குறிப்பு

பி. 91. தண்டனை.—பொது ஜனங்கள் வேடிக்கையாக கூடும் இடங்களை மூடாமலிருந்தால் ரூபாய் 200-ம் அம்மாதிரி தவறிய நாள் ஒன்றிற்கு ரூபாய் 100-ம் அபராதம் விதிக்கலாம். II, III ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) அபாயகரமான வியாதி பரவி இருக்கவேண்டும். (2) கட்டடத்தை மூடிவைக்கும்படி நோடீஸ் கொடுக்கவேண்டும். (3) அந்த வேடிக்கைக்காக கூடும் இடம் எதிரியின் மேற்பார்வையில் இருந்திருக்கவேண்டும். (4) அது பொது ஜனங்கள் வேடிக்கைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். (5) எதிரி நோடீசில் கண்ட நிபந்தனைகளை மீறி நடக்கவேண்டும்.

அபாயகரமான நோயி ஞல் பீடிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் பள்ளிக் கூடங்களுக்கு வரலா காது என்பது.

92. அபாயகரமான நோயினல் பீடிக்கப்பட்டிருக்கிற அல்லது பீடிக்கப்பட்டு இருந்திருக்கிற, அதினிருந்து தொத்து நோய் ஏற்படுவதற்கு ஆளாயிருந்திருக்கிற மைனர் ஒருவரின் பெற்ருேராயிருக்கிற அல்லது அந்த மைனரைத் தம் பாதுகாப்பில் அல்லது பொறுப்பில் வைத்திருக்கிற எவரும் அந்த மைனர் பள்ளிக் கூடத்துக்கு அல்லது கல்லூரிக்கு அனுப்பப்படக்கூடாதென அந்தகமிஷனர் அல்லது இது விஷயமாய் அவரால் கிரமமாய் நியமிக்கப்பட்டுள்ள யாதொரு நபர் கொடுத்தநோட்டிசை பெற்றுக்கொண்ட பிறகு, அத்தகைய மைனர் பள்ளிக்கூடத்திற்கு அல்லது கல்லூரிக்குச் செல்ல அனுமதிக்கக்கூடாது. ஆனல், அந்த நோயைப் பிறருக்கும் தொத்திவிடத் தக்க அபாயமின்றி பள்ளிக்கூடத்திற்கு அல்லது கல்லூரிக்கு செல்லலாமென தாம் அபிப்பிராயப்படுவதாகக் கண்டுள்ள ஸர்டிபிகேட் ஒன்றைகமிஷனரிடமிருந்து அல்லது அத்தகைய நபரிடமிருந்து அல்லது பதிவான மருத்துவர் வேருெருவரிடமிருந்து அவர் பெற்றுக்கொண்டிருந்தால் மைனர் பள்ளிக்கூடம் அல்லது கல்லூரி செல்வதை அனுமதிக்கலாம்.

விளக்கம்.—இப் பிரிவிலும், 91-வது பிரிவிலும், "அபாகரமான நோய்" என்பது (சென்னை 1939-ம்ஞூத்து III-வது சட்டமாகிய) 1939-ம்ஞூத்திய சென்னை பொது சுகாதாரச் சட்டத்தின் 52-வது பிரிவின் தாற்பரியப் படியுள்ளதும் அரசாங்கத்தார் அபாயகரமான நோய் என அறிவித்துள்ள யாதொரு தொத்து நோய் என்று பொருள்படும்.

குறிப்பு

பி. 92. தண்டனை.—சாதாரணமாய் ரூபாய் 50 அபராதம் விதிக்கலாம். II-ம் ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) மைனர் அபாயகரமான வியாதியினல் பீடிக்கப்பட்டிருக்க வேண்டும். (2) அவருடைய தகப்பனர் அல்லது போஷகர் அறிந்திருந்தும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியிருக்கவேண்டும். (3) வியாதி பரவக்கூடியதல்ல என்பதற்கு அத்தாக்ஷி பத்திரம் கொண்டுவராமலிருக்க வேண்டும். [இ. பு. ப. 423]

கட்டாயமாக அம்மை குத்துவது.

93. பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் பஞ்சாயத்து யூனியன் முழுவதிலும் அம்மை குத்துமாறு பார்த்துக்கொள்ளவேண்டும்; மேலும், நிர்ணயிக்கப்படக்கூடிய நபர்கள் விஷயமாகவும், அப்படி நிர்ணயிக்கப்படக்கூடிய அளவுக்கும், அப்படி நிர்ணயிக்கக்கூடிய விதத்திலும் அந்த பஞ்சாயத்து யூனியன் முழுவதிலும்அல்லது யாதொரு பகுதியில் மீண்டும் அம்மை குத்துமாறு பார்த்துக்கொள்ளலாம்.

பெரியம்மை காலரா (வாந்திபேதி) கண்டிருப்பது பற்றி தகவல் கொடுப்பதற்குள்ள பொறுப்பு.

94. யாதொரு வீட்டில் குடியிருப்பவருக்கு பெரியம்மை அல்லது கலரா (வாந்திபேதி) கண்டிருந்தால் அவர் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவரோ, அக் குடும்பத் தலைவரும், அவர் இராதபோது அந்த இடத்தின் அனுபோகதாரரும் அல்லது அந்த இடத்தின் பொறுப்பு வகிப்பவரும் அது விஷயத்தை தாமதம் எதுவுமின்றி கமிஷனருக்கு அல்லது கிராமப் பெரியதனக்காரருக்குத் தெரிவிக்கவேண்டும்.

குறிப்பு

பி. 94. தண்டனை.—வைசூரியை அல்லது காலரா (வாந்திபேதி)யை குறித்து சங்கதி தெரிவிக்காதவருக்கு ரூபாய் 50 அபராதம் விதிக்கலாம். 2-வது ஷெட்யூலைப் பார்க்கவும்.

சாக்ஷியம், ருசு.—(1) வசிக்குமிடத்தில் வைசூரி அல்லது காலரா யிருக்கவேண்டும். (2) அச்சமயத்தில் வீட்டிற்கு பெரியவர்கள் யாராவது இருந்திருக்க வேண்டும். (3) கமிஷன ருக்கு அல்லது கிராம பெரிதனக்காரருக்கு அதைப்பற்றி தெரிவிக்காமலிருந்திருக்கவேண்டும்.
[இ. பு. ப. 424]

அபாயகரமான குளங்கள், கிணறுகள், குழிகள் முதலானவற்றின் விஷயத்தில் முன்எச்சரிக்கையான ஏற்பாடுகள்.

95. (1) யாதொரு குளம், குட்டை, கிணறு, குழி, சிற்ருறு, அணை, கரை அல்லது இதர இடம் போதுமான மராமத்து, பாதுகாப்பு அல்லது அடைப்பின்மையால் பொது சுகாதாரத்திற்கு அல்லது பாதுகாப்பிற்கு அபாயகரமானதென தமக்குத் தோற்றினுல் கமிஷனர் அல்லது நிர்வாக அதிகாரி சந்தர்ப்பத்திற்கேற்ப பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அல்லது பஞ்சாயத்தின் அங்கீகாரத்துடன், அதிலிருந்து அபாயம் எதுவும் ஏற்படுவதைத் தடுப்பதற்காக அதை மூடிவிடவேண்டுமென, அப்புறப்படுத்த வேண்டுமென, செப்பனிட வேண்டுமென, பாதுகாக்க வேண்டுமென, அல்லது அடைப்பு ஏற்படுத்த வேண்டுமென அதன் சொந்தக்காரருக்கு உத்தரவிடலாம்.

(2) உடனடியான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென அவசியமாயிருந்தால், அபாயத்தைத் தடுப்பதற்கு பொருத்தமானதெனத் தாம் கருதுகிற தாற்காலிகமான நடவடிக்கைகளை அந்த நோட்டீஸ் கொடுக்கப்படுவதற்கு முன் அல்லது அந்த நோட்டிஸின் கால அளவு கழிவதற்கு முன் தாமே எடுத்துக்கொள்ளவேண்டும்; அவ்வாறு செய்வதற்குப் பிடித்த செலவு இதில் பின்னுல் ஏற்பாடு செய்திருக்கிறவிதத்தில் சொந்தக்காரர்களிடமிருந்து வசூலித்துக்கொள்ளப்படத்தக்கதாகும்.

குறிப்பு

பொது.—பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் தீர்மானம் அல்லது அனுமதியில்லாமல், கமிஷனராவது, நிறைவேற்றும் அதிகாரியாவது, இந்த பிரிவின் கீழ் சொந்தக்காரருக்கு யாதொரு நோடீஸும் கொடுக்கக்கூடாது.

மூடிவிட, அப்புறப்படுத்த, செப்பனிடபாதுகாக்க அடைப்பு ஏற்படுத்த, சொந்தக்காரருக்கு அல்லது வசிப்பவருக்கு உத்தர விடலாம்.—நோடீஸ் கொடுப்பதற்கு முந்தி கமிஷனராவது அல்லது நிர்வாக அதிகாரியாவது முதலில் அந்த இடத்தை பார்வையிட்டு ரிப்போர்ட்டு செய்ய வேண்டும். சுகாதாரத்திற்கு அபாயகரமென்று தெரிவிக்கும் பட்சத்தில் அதற்கு டாக்டர் சர்டிபிகேட் வேண்டும். இம்மாதிரியான முதல் விஷயங்களை எடுத்துக் கொள்ளாமல் ஒரு நோட்டீஸ் கொடுத்தால் செல்லத்தக்கினதல்ல [தவாய் முனிசிபல் கமிட்டி—எ—முங் போகின். A. I. R. 1930 R. 71 = 126 I. C. 533.]

நோட்டீஸ் - சொந்தக்காரர் - வசிப்பவர்.—நோடீஸ் கொடுத்தும் அதை பெற்றுக் கொள்வதற்கு சொந்தக்காரரோ, அல்லது வசிப்பவரோ இல்லாவிட்டால், கமிஷனர் அல்லது நிர்வாக அதிகாரி தன் ரிப்போர்ட் பொருப்பின் பேரிலும், மெடிகல் சர்டிபிகேட் பேரிலும், பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் தீர்மானத்தின் பேரில் நோடீஸ் கொடாமலும் தற்கால மராமத்து உடனே செய்யலாம். முதலில் செய்ய வேண்டியவைகளை செய்யாமல் அவசரப் பட்டு குளம் முதலியவைகளை துத்து விட்டால் அதனுல் உண்டாகும் ஈஷ்டத்தை சொந்தக்காரர் அல்லது வசிப்பவருக்கு கட்டி கொடுக்கும்படி நேரிடும்.

தண்டனை.—நோட்டீஸில் கண்டபடி செய்யாவிட்டால் ரூபா 50ம், அப்படி செய்ய தவரிவிட்ட ஒவ்வொரு நாளுக்கும் ரூபா 10-ம் அபராதம் போடலாம். II, III ஷெட்யூல்களை பார்க்கவும்.

ருஜு பாரம்.—1) குளம் முதலியன சுகாதாரத்திற்கும் பாதுகாப்பிற்கும் அபாயகரமானது. (2) பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அவைகளை சரிபடுத்த நோடீஸ் கொடுக்க தீர்மானித்தது. (3) எதிரிக்கும் நோடீஸ் கொடுக்கப்பட்டது. (4) எதிரி அந்த குளம் முதலியவைகளை தன் சுவாதீனம் வைத்து கொண்டு இருக்கிறுர்.

நிலங்களிலிருந்தும் கட்டடங்களிலிருந்தும் அசுத்தங்களை அல்லது தீங்குண்டாக்கத்தக்க புல் பூண்டுகளை அப்புறப்படுத்துவது.

96. (1) யாதொரு கட்டிடம் அல்லது நிலம் அசுத்தமான அல்லது அசுசியான நிலைமையிலிருப்பதாகவாகிலும் தேகாரோக்கியத்திற்குக் கெடுதியாகவாவது, பொதுமக்களுக்கு அபாயகரமாகவாவது, அக்கம்பக்கத்திலிருப்பவர்களுக்கு உபத்திரமாகவாவது, மற்றப்படி அசங்கியமாகவாவது இருக்கிற அடர்ந்த அல்லது தீங்குண்டாக்கத்தக்க சிறு செடிகளாயினும், மரங்களாயினும், அவைகளின் கீழிருக்கும் புல் பூண்டுகளாயினும் அதில் ஏராளமாய் முளைத்திருப்பதாகவாகிலும் கமிஷனருக்கு அல்லது நிர்வாக அதிகாரிக்குத் தோற்றினால் அவர் அதன் சொந்தக்காரர் அல்லது அதன் அனுபோகதாரருக்கு நோட்டீஸ் கொடுத்து அந்த நோட்டீஸில் குறிப்பிடக்கூடிய கால அளவுக்குள்ளும், விதமாகவும், அந்தக் கட்டிடத்தை அல்லது நிலத்தை துப்புரவு செய்யவேண்டுமென்றாகிலும் சுத்தம் செய்யவேண்டுமென்றாகிலும், வேறே விதமாய் நல்ல நிலைமையில் வைத்திருக்கவேண்டுமென்றாகிலும், அப்படிப்பட்ட சிறு செடிகள், மரங்கள் அல்லது அவைகளின் கீழிருக்கும் புல் பூண்டுகளை வெட்டி அப்புறப்படுத்திவிடவேண்டுமென்றாகிலும், அத்தகைய அசங்கியத்தை அப்புறப்படுத்த அவசியமென அந்தக் கமிஷனர் அந்த நிர்வாக அல்லது அதிகாரி கருதுகிற இதர நடவடிக்கையை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றாகிலும் உத்தரவு செய்யலாம்.

(2) சுகாதார காரியங்களுக்காக அப்படிச் செய்வது அவசியமென்று கமிஷனருக்கு அல்லது நிர்வாக அதிகாரிக்குத் தோற்றினால் அவர் அந்தக் கட்டிடத்தின் அல்லது நிலத்தின் சொந்தக்காரருக்கு அல்லது அனுபோகதாரருக்கு நோட்டீஸ்கொடுத்து அந்த நோட்டீசில் குறிப்பிடக்கூடிய கால அளவுக் குள்ளும், விதமாகவும் அதைச் சுத்தம் செய்யவேண்டுமென்று அல்லது அதில் சுண்ணாம்பு அடிக்கவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

குறிப்பு

பி: 96 பொது.—இது பஞ்சாயத்து பிரசிடெண்ட் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம். "அசுத்தம்" என்பது சாக்கடை மண், மலம், சாணம், மண்தூள் கெட்டுப்போன வஸ்துக்கள் தேகாரோக்கியத்திற்கு கெடுதலான வஸ்துக்கள் இவை குறிக்கும் செடிகளும், புல் பூண்டுகளும் தழைந்திருப்பதினால் நிலத்தில் அதிக ஓதத்தை உண்டாக்கி மலேரியா முதலிய ஜுரங்கள் உண்டாவதற்கு ஆஸ்பதமா யிருக்கிறது. சில சமயங்களில் பாம்பு முதலிய விஷப்பூச்சிகள் தங்குவதற்கு ஆஸ்பதமா யிருப்பதால் அது அக்கம் பக்கத்திலிருப்பவர்களுக்குப் பத்திரகுறைவு உண்டு பண்ணக்கூடியதா யிருக்கிறது. இம்மாதிரியான விஷயங்களில் அதன் சொந்தக்காரருக்கு அல்லது அனுபோகதாரருக்கு குறித்த காலத்திற்குள் சுத்தம் செய்யும்படி நிர்வாக அதிகாரிக்கு நோடீஸ் கொடுக்க அதிகாரமுண்டு. கேஸிற்கு தக்க வைத்திய இலாகா சாக்ஷிகளும் இதர சாக்ஷிகளும் இருக்கவேண்டும். சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர் அகப்படா விட்டால் -97வது பிரிவை அனுசரிக்கலாம்.

மரங்கள்.—சேர்மன் எடுத்துவிட வேண்டு மென்று உத்திரவிட்ட மரம் அபாயகரமானதா அல்லவா என்பதைப்பற்றி மாஜிஸ்டிரேட் கவனிக்கக்கூடாது. அம்மாதிரியான அபிப்பிராயம் சரியானது என்பதைப்பற்றி முடிவு கூறவேண்டியதில்லை [சேர்மன், முனிசிபல் கௌன்சில், சிகரகோல் எ. காஜிரெட் சீதாரமய்ய, A. I. R. 1925 Mad. 584=90 I. C. 152.]

பரிஷ்கரிக்க வேண்டுமென்றும், சுத்தம் செய்ய வேண்டுமென்றும்.—சொந்தக்காரர் அல்லது அனுபோகதாருடைய சௌகரியத்திற்காக நிலத்தை பரிஷ்கரிக்க வேண்டுமென்றும் சுத்தம் செய்யவேண்டு மென்றும் உத்திரவிட வேண்டியதில்லை. பொது ஜனங்களின் சௌகரியத்திற்காகவும் அக்கம் பக்கத்திலுள்ளவர்களின் சுகத்திற்காகவும் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிக்கு சட்டபூர்வமாய் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. [முனிசிபல் கௌன்சில், மசூலிப்பட்டணம் எ. வெங்கட் லக்ஷ்மண்ணா, A. I. R 1927 Mad. 1125=100 I. C. 645.]

தண்டனை.—நோடீஸில் கண்ட நிபந்தனைகளை தவறி நடந்ததற்கு சாதாரணமாய் ரூபாய் 50-ம்; பிரதி தினத்திற்கு ரூபாய் 10-ம் அபராதம் விதிக்கலாம். II, III வது ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாக்ஷ்யம், ருசு.—(1) கட்டடங்களிலும் அல்லது நிலங்களிலும் அசுத்தங்கள் அல்லது தீங்குண்டாகக் கூடியவைகளாகிய புல் பூண்டுகள் நிறைந்திருந்தது. (1) அவைகளை அப்புறப்படுத்தும்படி சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரருக்கு நோடீஸ் கொடுக்கப்பட்டது. (3) நோடீஸில் கண்ட நிபந்தனைகளை நிராகரித்து விட்டார்.

அழித்துவிடப்பட்ட அபாயகரமான கட்டுக் கோப்பு முதலியவைகளின் சாமான்களை உபயோகிக்க அல்லது விற்க கமிஷனருக்கு அல்லது நிர்வாக அதிகாரிக்குள்ள அதிகாரம்.

97. (1) கமிஷனர் அல்லது நிர்வாக அதிகாரி இந்த அத்தியாயத்தின்படித் தமக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு யாதொரு கட்டுக்கோப்பை அல்லது பாகத்தை அழித்துவிட்டாலும், யாதொரு மரம், வேலி அல்லது புதரையாகிலும், அதன் யாதொரு பாகத்தையாகிலும் வெட்டி விட்டாலும் கமிஷனர் அல்லது நிர்வாக அதிகாரி அழித்துவிடப்பட்ட, வெட்டிவிடப்பட்ட அல்லது அப்புறப்படுத்தப்பட்ட சாமான்களை அல்லது வஸ்துக்களை விற்கலாம். அந்த விற்ற முதலை, பிடித்த செலவுக்காக முழுவதுமாகிலும், சிறிதுமட்டுமாகிலும் செலுத்தும் பொருட்டு உபயோகிக்கலாம்.

(2) நியாயமான விசாரணை செய்தபிறகு, இந்த அத்தியாயத்திலுள்ள எந்தப் பிரிவின்படியாவது நோட்டிஸ் கொடுக்கப்படக்கூடிய சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர் எவரும் இல்லையென்று கமிஷனருக்கு அல்லது நிர்வாக அதிகாரிக்குத் தோற்றினல், அவர் ஷை பிரிவில் சொல்லப்பட்ட சொத்தின் விஷயமாய் தமக்கு அவசியமாய் தோற்றக்கூடிய விதமாகத் தாமே ஏற்பாடு செய்யலாம். மேலும் அவர், பிடித்த செலவை (ஸ்தாபனச் சொத்து அல்லாத) அந்தச் சொத்தினையாகிலும், அதன் யாதொரு பாகத்தையாகிலும் விற்று வசூல் செய்யலாம்.

நஷ்ட ஈட்டின் வரையறை.

98. யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அல்லது ஒரு பஞ்சாயத்தின் அதிகாரிகள் இந்த அத்தியாயத்தின்படித் தங்களுக்குள்ள அதிகாரங்களை அனுசரித்து எடுத்துக் கொண்ட யாதொரு நடவடிக்கை காரணமாக நேரிட்டிருக்கும் எவையேனும் சேதங்களுக்காக எந்த நபரும் வேறே விதமாய் வெளிப்படையாக ஏற்பாடு செய்திருக்கின்றபடி மற்றப்படி நஷ்ட ஈடு பெறப்பாத்தியதையுள்ளவராக மாட்டார்.

மார்க்கெட்டுகள்

பொது மார்க்கெட்டுகள்.

99. (1) பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில், பொது மார்க்கெட்டுகளாக உபயோகமாகும் பொருட்டு, இன்ஸ்பெக்டரின் எழுத்து மூலமான உத்தரவை முன்னதாகப் பெற்ற பிறகு, இடங்களை ஏற்படுத்தலாம்; மேலும், அது இன்ஸ்பெக்டருடைய அனுமதியை பெற்றுக் கொண்டு அப்படிப்பட்ட யாதொரு மார்க்கெட்டையாவது அதன் பாகத்தை யாவது மூடிவிடலாம்.

(2) நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு, பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலானது, இன்ஸ்பெக்டரின் எழுத்து மூலமான உத்தரவை முன்னதாகப் பெற்றுக்கொண்ட பிறகு யாதொரு பொது மார்க்கெட்டில் இது விஷயமாய் எவையேனும் உச்ச வீதங்கள் நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அவைகளுக்கு மேற்படாமல் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அல்லது பஞ்சாயத்தானது தனக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய வீதங்களின்படி அடியிற்கண்ட கட்டணங்களில் யாதொன்றையாவது, பலவற்றையாவது விதித்து வாங்கலாம் :

(a) அப்படிப்பட்ட மார்க்கெட்டை உபயோகிப்பதற்கான அல்லது அவைகளில் விற்பனையின்பொருட்டு வஸ்துக்களைக் காட்டி வைப்பதற்கான உரிமைக்கான கட்டணங்கள் ;

(b) அந்த மார்க்கெட்டிலுள்ள கடைகளையாவது, கொட்டில்களையாவது, பட்டிகளையாவது, நிலைகளையாவது உபயோகிப்பதற்காகக் கட்டணங்கள் ;

(c) அப்படிப்பட்ட மார்க்கெட்டில் விற்பனைக்காக எந்தச் சரக்குகளையாவது கொண்டுவருகிற மோட்டார் வண்டிகளைக் குறித்த (1939-ம் ஆண்டு IV-வது மத்தியச் சட்டமாகிய) 1939-ம் ஆண்டு சட்டத்தில் அர்த்தம் சொல்லப்பட்டபடிக்குள்ள மோட்டார் வண்டிகள் உள்ளிட்ட வண்டிகளுக்கு அல்லது ஷி சரக்குகளைத் தூக்கிக்கொண்டு வருகிற ஜந்துகளுக்கு அல்லது நபர்களுக்கு கட்டணங்கள் ;

(d) அந்த மார்க்கெட்டில் விற்பனைக்காகக் கொண்டுவரப்படுகிற அல்லது விற்கப்படுகிற பிராணிகளுக்குக் கட்டணங்கள் ;

(e) அப்படிப்பட்ட மார்க்கெட்டில் தொழில் நடத்திக்கொண்டு வருகிற தரகர்களுக்கும், கமிஷன் ஏஜெண்டுகளுக்கும், எடை போடுகிறவர்களுக்கும், அளப்பவர்களுக்கும் லைசென்சு கட்டணங்கள்.

குறிப்பு

பகுதிகள் 99 முதல் 105 வரை உள்ள.—பொது மார்க்கெட்டுகள். தனிப்பட்ட மார்க்கெட்டுகள் சம்பந்தமாக பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்களின் கடமைகள்பற்றி இவை விவகரிக்கின்றன. பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில் ஒன்று இன்ஸ்பெக்டரின் அனுமதியைக்கொண்டு பொது மார்க்கெட் ஒன்றைத் திறக்கலாம் அல்லது மூடலாம். மேற்படி மார்க்கெட்டை உபயோகிப்பதற்காகவும் ஒரு மார்க்கெட்டில் உள்ள கடைகள், ஸ்டால்கள் முதலியவற்றை உபயோகிப்பதற்காகவும் ஒரு பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில் கட்டணம் விதித்து வாங்கலாம். பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலிடமிருந்து லைசென்ஸ் ஒன்றைப் பெற்றுக் கொள்ளாமல் தனிப்பட்ட புதிய மார்க்கெட் ஒன்றை ஏற்படுத்தமுடியாது. லைசென்ஸ் அல்லாத தனிப்பட்ட மார்க்கெட்டுகளை ஏற்படுத்துவதும், பொதுச் சாலையில் பிராணிகள் அல்லது பொருள்களை விற்பனை செய்வதும் தடை செய்யப்படுகின்றன. அரசாங்கத்தார் பொது அல்லது தனிப்பட்ட மார்க்கெட்டுகளை வகைப்படுத்தலாம், அவ்வாறு வகைப்படுத்துவதை மாற்றி அமைக்கலாம், மார்க்கெட்டுகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தைஅல்லது அவைகளுக்குக் கொடுக்கப்படத்தக்க சகாயத் தொகைகளை பங்கிட்டுக் கொடுக்கலாம். சில இடங்கள் மார்க்கெட்டுகளா அல்லவா என்பது பற்றிய தகராறுகளைத் தீர்மானிக்கலாம். பொது மார்க்கெட் ஒன்றை வைத்திருக்க ஒருவருக்குள்ள உரிமைகளை பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில் ஒன்று அடைவதைச் சாத்தியமாக்குவதற்கும் ஷரத்து ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; 1894-ம் ஆண்டு நிலம் அடைவதற்குரிய சட்டத்தின் கீழ் அவ்வாறு உரிமைகளை அடையலாம். யாதொரு நபர் புதிதாகத் தனிப்பட்ட மார்க்கெட் ஒன்றை ஏற்படுத்தக் கூடாது என்று அல்லது தனிப்பட்ட மார்க்கெட் ஒன்றை தொடர்ந்து நடத்திவரக்கூடாது என்று சொல்கிற 1950-ம் ஆண்டு சென்னை கிராம பஞ்சாயத்துக்கள் சட்டத்தில் இப்போது இருந்துவருகிற 81-வது பிரிவில் கண்டுள்ள ஷரத்து சென்னை உயர் நீதி மன்றத்தாரால் செல்லாது என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரிவை இம் மசோதாவில் கொண்டு வரவில்லை.

பி. 99 (1) பொது மார்க்கெட்டுகள்:—'கடை' என்றால் மார்க்கெட்டு தான் [பப்ளிக் பிராஸிகூடர்-எ.-சாருக்குட்டி A. I. R 1925 M. 1095] தற்காலத்தில் உள்ள மார்க்கெட்டுகளைக் குறித்து இந்த செக்ஷன் விவரிக்கிறது. [கோவில்பட்டி தாலுகா போர்டு -எ.-ஜானகி அம்மாள், [36 I. C. 384-(M) பொது மார்க்கெட்டுகள் பஞ்சாயத்துகளின் வசம் இருக்கும். [மதுரை முனிசிபாலிடி-எ.-சன்தாலெ 2 M. L. J. 206] உற்சவகாலத்தில் பந்தல் போடப்பட்டு அவைகளை அறைகளாகத் தடுத்து கடைகளுக்கு விடப்பட்டால் அவைகள் மார்க்கெட்டாக கருதப்படமாட்டாது. [பப்ளிக் பிராஸிகூடர்—எ.-சுப்ரமணியம் 1933 M W N 1232] மார்க்கெட்டு இன்னது என்று அர்த்தம் செய்வது கஷ்டமாக இருக்கிறது, [பாம்பே முனிசிபாலிடி-எ.-எல்லப்ப, 52 பாம்பே 780 = A. I. R. 1928 B. 413 (416)] எல்லா பொது மார்க்கெட்டுகளிலும் எல்லா ஜனங்களும் மத ஜாதி வித்யாசமின்றி பிரவேசிக்கலாம். [பி. 175 பார்க்கவும்.] வாரத்திற்கு ஒரு தரம் சந்தையாகவோ மற்ற எந்த விதமாகவோ வாங்கவும் விற்கவும் ஓரிடத்தில் சேர்ந்துக் கொள்வாராகில் அந்த இடம் மார்க்கெட்டு

ஆகும். [பிஜாய் குமார்-எ.-கல்கத்தா கார்பொரேஷன் A. I. R. 1933 C. 322 = An L R 1933 C 250 = 60 C 296 = I R 1933 Cal 396] மார்க்கெட்டுக்கு அருகாமையில் சொந்த வீட்டில் சாமான்கள் விற்ருல் அந்த இடம் மார்க்கெட்டில் சேர்ந்தது ஆகாது. [ராஜாப்பா கோஜி குறித்து 9 B. 272.] : : மகன் ஹரிஜீவன் குறித்து 11B 106 : : பாம்பே முனிசிபாலிடி -எ.-வெங்கன்ன, A. I. R. 1928 B 413] ஒரு கசாப்புகாரர் தன் சொந்தத்திற்கு வேண்டியதைக் காட்டிலும் அதிகமாக மாமிசத்தை இறக்குமதி செய்து அதை அன்னியர்களுக்குக் கொடுப் பானுகில் பணம் பெற்றுக்கொண்டார் என்பதற்கு ருஜு இல்லாவிட்டாலும் அந்த கசாப்பு காரர் விற்றதாக பாவிக்கப்படும். [மஹம்மது தீன் குறித்து A. I. R. 1929 S. 150.]

பி. 99 (2) குத்தகைகள்:—இந்த சப் செக்ஷன் (2) கிளாசுகள் (d) (e) களில் கண்டு இருக்கும் பீஸ் அல்லது கட்டணத்தை வசூல் செய்ய 3 வருஷங்கள் வரையில் பஞ்சாயத்து குத்தகைக்கு விடலாம். பி. 176 பார்க்கவும்- தவறுதலாய் அல்லது சட்ட விரோதமாக கட்டணத் தொகையை வசூல் செய்து இருந்தால் பஞ்சாயத்து அதை திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அப்படி செய்யாவிட்டால் பஞ்சாயத்தின் பேரில் வியாஜ்யம் செய்து இண்டியன் கண்ட்ராக்டு சட்டம் செ. 65 படிக்கு கட்டணம் கொடுத்தவர் வரப்பெற்றுக்கொள் ளலாம்; [சோமு-எ.-மாயவரம் முனிசிபாலிடி (1905) 28 M 520 :: குந்தாபூர் தாலுகா போர்டு -எ.-லக்ஷமி நாராயணன் 31 M 54].

விதிகள், பி. 99 பி. 178 (2) (XXXVII) படிக்கு.

பஞ்சாயத்து அல்லது அதன் நிர்வாக அதிகாரி யாதொரு பொது அல்லது சொந்த மார்க்கெட் விஷயமாகவாவது அதை உபயோகித்துக்கொள்பவர் விஷயமாகவாவது செலுத்தக்கூடிய அதிகாரங்கள் (1-47).

1. ஒரு பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர், யாதொரு பொது மார்க்கெட்டிலே பிரஸ்தாப காலத்தில் அமுலிலிருந்து வருகிற சகாயச் சட்டங்களுக்குக் கீழ்ப்படியாததற்காகக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிற ஒரு நபரையேனும் அவரை ஊழியராகக்கொண் டிருக்கிற ஒருவரையேனும் அந்த மார்க்கெட்டிலிருந்து வெளியில் அனுப்பலாம்; அவர் அந்த மார்க்கெட்டில் தாமாகவேயாகிலும் தமது ஊழியர்கள் அல்லது ஏஜெண்டுகள் மூலமாகவாகி லும் எந்தத் தொழிலையும் அல்லது வியாபாரத்தையும் பின்னும் நடத்தக்கூடாதென்று தடுக்க லாம். அல்லது அதில் யாதொரு கடை, ஸ்டால் அல்லது இதர இடத்தை அனுபோகத்தில் வைத்திருக்கக்கூடாதென்று தடுக்கலாம்; அந்தக் கடை ஸ்டால் அல்லது இடத்தில் அவர் பெற்றிருக்கக்கூடிய யாதொரு குத்தகை அல்லது மானியத்தை இறுதிசெய்யலாம்.

2. பஞ்சாயத்து யாதொரு சொந்த மார்க்கெட்டின் சொந்தக்காரர், ஆட்சியாளர் அல் லது இஜாராதாரருக்கு நோட்டீஸ் கொடுத்து அதன் மூலமாக.—

(a) அந்த மார்க்கெட்டுக்கு வரும் வழிகளையும்: வாயில்களையும், பாதைகளையும், கதவுகளையும், ஜலதாரைகளையும், சாக்கடைக் குழிகளையும் கட்டும்படியும், பஞ்சாயத்து தகுதி யென்று கருதக்கூடிய விவரத்துடனும் இடத்திலும் எண்ணிக்கையிலும் கக்கூஸுகளை ஏற் படுத்திவைக்கும்படியும்,

(b) அது முழுவதுக்குமோ அதன் ஒரு பாகத்துக்கோ மேற்கூரைபோட்டு தள வரிசை செய்யும்படியும், அல்லது தண்ணீர் ஊடுருவிச் செல்லமுடியாதபடியும் உடனடியாகச் சுத்தம் செய்யக்கூடியபடியும் உள்ளதென்று பஞ்சாயத்து கருதுகிற யாதொரு வஸ்துவைக் கொண்டு தரையின் யாதொரு பாகத்துக்கு தளவரிசை போடும்படியும்,

(c) அதில் சரிவரக்காற்ருேட்டம் ஏற்படுத்தும்படியும், ஜலவசதி ஏற்படுத்தும்படியும்,

(d) ஸ்டால்களுக்கிடையில் போதிய அகலமுள்ள பாதைகள் விடும்படியும், மார்க் கெட்டைச்சேர்ந்த ஸ்டால்கள், பாதைகள், பாதைகள், கடைகள், கதவுகள், அல்லது இதர பாகங்களில் பஞ்சாயத்து கட்டளையிடக்கூடிய மாறுதல்களைச் செய்யும்படியும்,

(e) அதைச் சுத்தமாகவும் சரியான நிலைமையிலும் வைத்து வரும்படியும், அதி லிருந்து அழுக்கு, குப்பை கூளங்கள் எல்லாவற்றையும் அப்புறப்படுத்தி அவற்றைப் பஞ் சாயத்து கட்டளை யிடக்கூடிய இடத்திலும் விதமாகவும் ஒருவகை செய்யும்படியும்,

(f) பஞ்சாயத்து அவசியமென்று கருதக்கூடிய இதர சுகாதார ஏற்பாடுகளைச் செய் யும்படியும் அவருக்கு உத்தரவிடலாம்.

மார்க்கெட்டுகள்

3. எவராகிலும் இது விஷயமாய் பஞ்சாயத்து தமக்கு நோட்டீஸ் கொடுத்த பிறகு, அந்த நோட்டீஸில் கண்டுள்ள காலத்துக்குள்ளும் விதமாகவும் 2-வது விதியில் குறிப்பிட்டுள்ள வேலைகளில் எவற்றையாகிலும் செய்யத்தவறினுல், பஞ்சாயத்து அவருடைய லைஸென்ஸை சிறிது காலத்துக்குச் செலாவணியாகாமல் நிறுத்திவைக்கலாம்; அல்லது அவ்வேலைகள் பூர்த்தி செய்யப்படுகிற வரை அவருக்கு லைசென்ஸ் கொடுக்க மறுக்கலாம்.

4. அவ்வாறு லைசென்ஸ் செலாவணியாகாமல் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைக்கப் பட்ட காலத்திலாவது லைசென்ஸ் புதுப்பிக்கப்படுகிற வரையிலாவது எவரும் யாதொரு சொந்த மார்க்கெட்டைத் திறந்து வைத்திருப்பது சட்ட சம்மதமாகாது.

5. யாதொரு சொந்த மார்க்கெட்டில் அல்லது அதிலுள்ள யாதொரு கடை, ஸ்டால், கொட்டகை அல்லது இதர இடத்தின் பொறுப்பு வகிக்கிற சொந்தக்காரர். ஆட்சியாளர், ஏஜென்ட் அல்லது மானேஜர் எவரும் அது அசங்கியமாயிருக்கும்படி வைத்திருக்கவாவது அசங்கியமாயுள்ள யாதொன்றை பஞ்சாயத்து குறிப்பிடும் ஓரிடத்துக்கு உடனடியாக அப் புறப்படுத்துவிக்கத் தவறவுாவது கூடாது.

6. (I) எவராகிலும் 2-வது விதியின்படிக்கான நோட்டீஸின் ஷரத்துக்களை அனுசரிக் கத்தவறினுலும் கீழே 1-ம் ஷெட்யூலின் முதல் பத்தியில் குறிப்பிட்டுள்ள இதர விதிகளில் எவற் றின் நிபந்தனைகளையேனும் மீறினுலும், அவருக்கு மேற்படி ஷெட்யூலின் இரண்டாவது பத்தி யில் இது விஷயமாய்க் குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப் படத்தக்கதாகும்.

(2) எவராகிலும் (1) உபவிதியில் குறிப்பிட்டுள்ள குற்றங்களில் எவற்றையாகிலும் செய்ததற்காகக் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டிருந்த பிறகும் அந்தக் குற்றத்தை முன் போலவே செய்து வந்தால், இதற்கு முன் எந்தத் தேதியன்று அவர் குற்றவாளியென்று தீர் மானிக்கப்பட்டாரோ அந்தத் தேதிக்குப்பிறகு அவ்வாறு முன்போலவே குற்றம் செய்து வரு கிற ஒவ்வொரு தினத்துக்காகவும் கீழே 11-ம் ஷெட்யூலின் இரண்டாவது பத்தியில், இதுவிஷய மாய்க் குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாமல் அவருக்கு அபராத தண்டனை விதிக்கப்படத் தக்கதாகும்.

I-ம் ஷெட்யூல்

[6 (1) விதியைப் பார்க்கவும்.]

சாதாரண அபராத தண்டனைகள்.

குற்றம் (1)	விதிக்கப்படக் கூடிய அபராதம். (2)
2-வது விதியின்படிக்கான ஒரு நோட்டீஸின் ஷரத் துக்களை அனுசரிக்கத் தவறிவிடுவது ...	நூறு ரூபாய்.
4-வது விதியை மீறுவது	ஐம்பது ரூபாய்.
5-வது விதியை மீறுவது	இருபது ரூபாய்.

II-ம் ஷெட்யூல்

[6 (2) விதியைப் பார்க்கவும்.]

விதிகளை மீறிக்கொண்டே வருவதற்கான அபராத தண்டனைகள்.

குற்றம் (1)	விதிக்கக்கூடிய அபராதம். (2)
2-வது விதியின்படிக்கான ஒரு நோட்டீஸின் ஷரத் துக்களை அனுசரிக்கத் தவறிவிடுவது	பத்து ரூபாய்.
4-வது விதியை மீறுவது	இருபது ரூபாய்.
5-வது விதியை மீறுவது ...	பத்து ரூபாய்.

விதிகள்

மார்கெட்டுகளை டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் மார்கெட்டுகள் எனவும், கிராம பஞ்சாயத்து கள் மார்கெட்டுகள் எனவும் பிரிப்பதைக் குறித்து பி. 76. 82 கீழேயுள்ள விதிகளைப் பார்க் கவும். பி. 104 யையும் பார்க்கவும்.

100. (1) எந்த நபரும், சந்தர்ப்பத்துக்கேற்ப பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலிடமிருந்து ஒரு லைசென்சு பெற்றிருந்தாலொழிய மற்றப்படி ஒரு புது சொந்த மார்க்கெட்டைத் திறக்கவுங்கூடாது அல்லது ஒரு சொந்த மார்க்கெட்டை தொடர்ந்து திறந்து வைத்திருக்கவுங்கூடாது. மேற்படி லைசென்சு ஒவ்வொரு வருஷமும் புதுப்பிக்கப்படவேண்டும்.

சொந்த மார்க்கெட்டுகளுக்கு லைசென்சு கொடுப்பது.

(2) (a) சந்தர்ப்பத்துக்கேற்ப ஒரு பஞ்சாயத்தானது அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலானது, மேல்விசாரணை செய்வது விஷயமாகவும், பார்வையிடுவது விஷயமாகவும், சுகாதாரம், ஜலவசதி ஆகிய இவைகள் விஷயமாகவும் உபயோகிக்கப் போகிற எடைகள் முகத்தலளவைகள் ஆகிய இவை விஷயமாகவும், வாங்கப்போகிற, வாடகைகள், கட்டணங்கள் ஆகிய இவை விஷயமாகவும், நிர்ணயிக்கப்படக்கூடிய இதர விஷயங்கள் சம்பந்தமாகவும், தனக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய திட்டங்களுக்குட்பட்டு, விண்ணப்பித்துக் கொள்ளப்பட்ட லைஸென்ஸ் கொடுக்கவேண்டும்.

(b) சந்தர்ப்பத்துக்கேற்ப பஞ்சாயத்தானது அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலானது, லைஸென்ஸில் கண்ட திட்டங்களைத் திருத்தி, அவை குறிப்பிட்ட ஒரு தேதியிலிருந்து செலாவணியாகும்படிச் செய்யலாம்.

(c) சந்தர்ப்பத்துக்கேற்ப பஞ்சாயத்தானது அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலானது, (a) பகுதியின்படிக் கொடுக்கப்பட்டிருக்கிற யாதொரு லைஸென்ஸில் கண்ட திட்டங்களை எவராகிலும் மீறி நடந்தால் அந்த லைஸென்ஸை எப்போதாகிலும் செலாவணியாகவொட்டாமல் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைக்கலாம் அல்லது ரத்து செய்யலாம்.

(d). (a), (b) அல்லது (c) பகுதியின்படி பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் பிறப்பித்த ஓர் உத்தரவினால் துன்பமடைந்திருக்கிற எந்த நபராகிலும் அந்த உத்தரவின் மேல் இன்ஸ்பெக்டருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம். இன்ஸ்பெக்டரானவர் தமக்குத் தகுதியாகத் தோற்றுகிற பட்சத்திலே, மேற்படி அப்பீல் ஒருவகை செய்யப்படுகிற வரையில் அந்த உத்தரவு நிறைவேற்றப்படுவதைச் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைக்கலாம்.

(3) (a) லோகல் போர்டுகளைக் குறித்த (சென்னை 1884-ம் ஆண்டு V-வது சட்டமாகிய) 1884-ம் ஆண்டு சென்னப்பட்டணத்துச் சட்டம் செலாவணியாகத் தொடங்குவதற்கு முன் சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு சொந்த மார்க்கெட்டில் 99-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தன்மையுள்ள கட்டணங்களை விதித்து வசூலிக்க சுதந்தரம் கொண்டாடும் யாதொரு நபர், இது விஷயமாய்த் தமக்குள்ள சுதந்தரத்தை அங்கீகரிப்பதற்கான ஸெர்டிபிகேட் என்று கொடுக்கும்படி இன்ஸ்பெக்டருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். இன்ஸ்பெக்டரானவர், சந்தர்ப்பத்துக்கேற்ப பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு கிரமமாய் நோட்டிஸ் கொடுத்து, அது தெரிவிக்கிற இந்த விஷயங்களைப் பற்றியாகிலும் ஆலோசனை செய்த பிறகு மேற்படி விண்ணப்பத்தின் மேல் உத்தரவு பிறப்பிக்கவேண்டும்.

(b) (a) பகுதியின்படி ஒரு ஸெர்டிபிகேட் கொடுக்க மறுத்து இன்ஸ்பெக்டர் பிறப்பிக்கிற உத்தரவினால் துன்பமடைந்திருக்கும் யாதொரு நபர், தாம் கொண்டாடுகிற சுதந்தரத்தை ஸ்தாபித்துக் கொள்வதற்காக மேலே கண்ட உத்தரவு அனுப்பிய தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் வியாஜ்ஜியம் தொடரலாம். அந்த வியாஜ்ஜியத்தின் முடிவுக்குட்பட்டு இன்ஸ்பெக்டருடைய உத்தரவு முடிவானதாகும்.

(4) (2) உட்பிரிவின்படிக் கொடுக்கப்பட்ட யாதொரு லைஸென்ஸினால் எந்தக் கட்டணங்களும் விதித்து வாங்குவதற்கு அனுமதி ஏற்படாதிருக்கும்போது, அந்த லைஸென்ஸுக்காகக் கட்டணம் எதுவும் வாங்காமலே அதைக் கொடுக்க வேண்டும்; ஆனால் அப்படிப்பட்ட அனுமதி கொடுக்கப்படுகிற விஷயத்திலே, முந்திய வருஷத்தில்

ஷி மார்க்கெட்டிலிருந்து சொந்தக்காரருக்குக் கிடைத்திருக்கிற மொத்த வரும்படியில் 15 சத வீதத்திற்கு மேற்படாத ஒரு கட்டணத்தை அப்படிப்பட்ட லைஸென்ஸுக்காகச் சந்தர்ப்பத்துக்கேற்ப பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் விதிக்க வேண்டும்.

(5) எதற்காக லைஸென்ஸ் கொடுக்கப்படவில்லையோ அல்லது செலாவணியாக வொட்டாமல் சிறிது காலம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறதோ அல்லது ரத்து செய்யப் பட்டிருக்கிறதோ அல்லது எது சட்டத்தில் கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாய் வைத்துக்கொள்ளப் பட்டிருக்கிறதோ அல்லது திறந்து வைக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு சொந்த மார்க்கெட்டை சந்தர்ப்பத்துக்கேற்ப ஷி பஞ்சாயத் தாவது அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலாவது அதனிடமிருந்து கிரமமாய் அதிகாரம் பெற்றிருக்கிற யாதொரு உத்தியோகஸ்தராவது மூடி விடலாம்.

குறிப்பு

பி. 100. (1)—இந்த உபபிரிவின் படிக்கு, தனிப்பட்ட எந்த நபரும் புதிதாக ஒரு சொந்த மார்க்கெட்டை ஏற்படுத்தக்கூடாது. அதுவரையில் இந்த சட்டம் இந்தியா அரசாங் கத்திற்கு ஒத்து இருக்கிறது. ஏற்கனவே இந்த ஆக்ட் 1—4—1951-ல் அமுலுக்கு வருவதற்கு முன்னதாகவே லைசென்ஸ் பெற்று, சொந்தக்காரர்களால் நடத்திவந்த மார்க்கெட்டுகளுக்கு லைசென்சுகள் கொடுத்து, அவைகளை சொந்தக்காரர்கள் நடத்தும்படி செய்வதா, இல்லையா என்னும் பிரச்சனைக்கு அம்மாதிரி சொந்தக்காரர்களுக்கு லைசென்சுகள் கொடாமையால், மரார்க்கெட்டுகள் நடத்தக்கூடாது என்பது இந்தியா அரசாங்கம் ஆர்டிகல் 19 (1) (f) படிக்கு, தனிப்பட்ட சொத்தை பறிமுதல் செய்வதாக ஏற்படுகிற தென்றும் ஆகையால் அப்பேர்ப்பட்ட சொந்தக்காரர்கள் மார்க்கெட்டுகளுக்கு சட்டப்படிக்கு லைசென்ஸ் கொடுக்க வேண்டுமென்று 16—11—1953-ல் மதருஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்தார்கள். மார்க்கெட்டுகளை தரம்பிரிக்கும் விதிகளைப் பற்றி பி. 104 யை பார்க்கவும்.

தனிப்பட்ட ஒரு மார்க்கெட்டின் வருமானத்திலிருந்து கழித்துக் கொள்ளப் படவேண்டிய தொடர்பான செலவுகள் (1—24)

மேற்படி சட்டத்தின் 100 பிரிவில் கண்ட விலக்கு நிபந்தனையில் குறிப்பிட்டுள்ள வசூலிப்புச் செலவு, நிர்வாகச் செலவு ஆகிய இவைகளுடன் கூட, தனிப்பட்ட ஒரு மார்க் கெட்டிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து அடியிற் கண்ட தொகைகளையும் கழித்துக் கொள்ள வேண்டும் :—

(1) மேல் கட்டுக்கோப்பைக் கட்டுவது அல்லது மீண்டும் கட்டுவது அல்லது அதைச் சீர்த்திருத்துவது, செப்பனிடுவது இவைகளுக்குப் பிடிக்கும் செலவு;

(2) அரசாங்கத்தாருக்கேனும் தனிப்பட்டவர்களுக்கேனும் நிலங்கள் கட்டடங்கள் ஆகிய இவைகளுக்குச் செலுத்தப்படத்தக்க வாடகை;

(3) இச் சட்டத்தின்படியாகிலும் வேறு யாதொரு சட்டத்தின்படியாகிலும் மேற்படி பஞ்சாயத் துக்குச் செலுத்தப்படத்தக்க நில வரியும் வீட்டு வரியும் வேறு யாதொரு வரியும்;

(4) நூல் நிலைய வரி ;

(5) தனிப்பட்ட தோட்டி வேலைக்காகவென்று மேற்படி பஞ்சாயத்துக்குச் செலுத்தப்படத் தக்க கட்டணம்.

(6) மேற்படி பஞ்சாயத்துக்குச் செலுத்தப்படத்தக்க லைசென்ஸ் கட்டணங்கள்.

விதிகள் பி. 100. பி. 178 (2) (XXXVII) படிக்கு சொந்த மார்க்கெட்டுகளின் கணக்குகளை வைத்துவருவதும், தணிக்கை செய்வதும், பார்வையிடுவதும். (III—9)

1. சொந்த மார்க்கெட்டுகளின் சொந்தக்காரர்கள், ஆட்சியாளர்கள், இஜாராதாரர் கள் அந்த மார்க்கெட்டுகளை உபயோகிப்பதற்காக அன்றாடம் செய்யப்படும் வசூல்களுக்கான டிக்கெட்டுகளையும் குறிப்பிட்ட காலத்துக்கொரு முறை செய்யப்படும் வசூல்களுக்கான ரசீது களையும் கொடுக்கவேண்டும்.

2. ரசீதுகளும் டிக்கெட் புஸ்தகங்களும் அனுபந்தத்தில் கண்டுள்ள I-ம். II-ம் நமூனுக்களின்படி அச்சிடப்பட வேண்டும்.

3. விதிக்கப்படும் கட்டணங்களின் வீதம் ஒவ்வொன்றுக்காகவும் பிரத்தியேகமான டிக்கெட் புஸ்தகங்களை அச்சிட வேண்டும்.

4. மேற்படி மார்க்கெட்டுகளின் சொந்தக்காரர்கள் அல்லது ஆட்சியாளர்கள் அல்லது இஜாராதாரர்கள் அம் மார்க்கெட்டுகளிலிருந்து கிடைக்கும் வரவுகளுக்கும் அவைகளைப் பராமரிப்பதற்குப் பிடிக்கும் செலவுக்கும் சரியானவையும் பூர்த்தியானவையுமான கணக்குகளை வைத்திருக்க வேண்டும். மேலும் அவர்கள், அவர்களைப் பார்வையிடுவதற்காக அல்லது சரி பார்ப்பதற்காக அல்லது தணிக்கை செய்வதற்காக பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியாவது இதன் பொருட்டு அவரிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கக்கூடிய வேறு நபராவது கேட்கும்போதெல்லாம் அவற்றை ஆஜர்ப்படுத்த வேண்டும்.

5. வசூலாகும் தொகைகளையும் பட்டுவாடா செய்யப்படும் தொகைகளையும் பற்றிய ரெஜிஸ்தர் ஒன்றை அனுபந்தத்தில் முறையே கண்டுள்ள III-ம், IV-ம் நமூனுக்களின்படி வைத்து வரவேண்டும். நிர்வாக அதிகாரியாவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கக்கூடிய வேறு நபராவது மேற்படி ரெஜிஸ்தர்களையும் டிக்கட் புஸ்தகங்களையும் ரசீது புஸ்தகங்களையும் ஒவ்வொரு மாதத்திலும் ஒரு தடவைக்குக் குறையாமல் சரிபார்க்க வேண்டும். மேலும் அவர்கள் எழுத வேண்டியிருக்கிற அபிப்பிராயக் குறிப்புக்களை அவற்றில் எழுத வேண்டும். கணக்குகள் சரிவர வைக்கப்படுகின்றன என்று தெரியவந்தால், அவ்வாறு கண்டுள்ள ஸெர்டிபிகேட் ஒன்றை மேற்படி ரெஜிஸ்டர்களில் எழுதவேண்டும்.

6. முந்திய வருஷத்திலே (அல்லது லைசென்ஸுக்காக விண்ணப்பம் செய்து கொள்ளும் தேதிக்கு முந்திய பூர்த்தியான பன்னிரண்டு மாத காலத்திலே) மார்க்கெட்டுகளுக்குச் சம்பந்தப்பட்ட வரவுகளையும் செலவுகளையும் காட்டும் ஸ்டேட்மென்ட் ஒன்றை, மார்க்கெட்டைத் திறந்து வைத்திருப்பதற்கு லைசென்சைப் புதுப்பிக்கும்படி செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் அனுப்ப வேண்டும். பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர், லைசென்சைப் புதுப்பிப்பதற்குமுன், மார்க்கெட்டுகளின் சொந்தக்காரர், ஆட்சியாளர் அல்லது இஜாராதாரரின் புஸ்தகங்களுடன் மேலே குறிப்பிட்ட ஸ்டேட்மென்டை வைத்து சரிபார்க்க வேண்டும்.

அனுபந்தம்

1-ம் நமூனு

2-வது விதியைப் பார்க்கவும்

எதிரிடைப்பிரதி	வெளிப்பிரதி
......................................மார்க்கெட்டு	....மார்க் கெட்டிலுள்ள
............ம் நெ. அறைக்காக / ஸ்டாலுக்காக வாடகை	............................ம் நெ. அறைக்காக. / ஸ்டாலுக்காக
19 ....ம்ஹூ............மீ.........தேதிக்காக	............க்கான வாடகையாகிய...... ரூபாய்
ரூ. அ. பை.	ஸ்ரீ................................ என்பவரிட மிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.
19............ம்ஹூ...............மீ...........தேதி	19..............
யன்று பெற்றுக்கொண்டேன்.	ரூ. அ. பை.
பில் கலெக்டர்.	...............அன்று பெற்றுக்கொண்டேன். பில் கலெக்டர்.

II-ம் நமூனு.

(2-வது விதியைப் பார்க்கவும்.)

எதிரிடைப்பிரதி	வெளிப்பிரதி.
தொடரிலக்கம். டிக்கெட்.	டிக்கெட்.
....மார்க்கெட்.	தொடரிலக்கம்.
தினமொன்றுக்கு	....மார்க்கெட்
(இங்கே வீதத்தை எழுதவும்.)	(வீதத்தை இங்கே எழுதவும்.)

மார்க்கெட்டுகள்

III-ம் நமூனு

(5-வது விதியைப் பார்க்கவும்.)

வசூல் தொகைகளைப் பற்றிய ரெஜிஸ்டர்

டிக்கெட்டுகள் மூலம் வசூலான தொகைகள்.

டிக்கெட்டுகள் மூலம் வசூலான தொகைகள்.

		டிக்கெட்டுகள் மூலம் வசூலான தொகைகள்.						
		கையிருப்பு.		கொடுக்கப்பட்டவை.		பாக்கி		
தேதி.	மதிப்பு.	முதல் வரையில் தொடரிலக்கங்கள்.	எண்ணிக்கை.	முதல் வரையில் தொடரிலக்கங்கள்.	எண்ணிக்கை.	வசூலிக்கப்பட்ட தொகை.	முதல் வரையில் தொடரிலக்கங்கள்.	எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)

மற்ற வரவுகள்					
வாடகைகள்		பலவகைப்பட்டவை			
ரசீது நெம்பர்.	தொகை.	ரசீது நெம்பர்.	தொகை.	ஒவ்வொரு தினத்துக்கும் மொத்த வசூல்.	குறிப்புகள்.
(10)	(11)	(12)	(13)	(14)	(15)

IV-ம் நமூனு

(5-வது விதியைப் பார்க்கவும்.)

பட்டுவாடா செய்யப்பட்ட தொகைகளைக் குறித்த ரெஜிஸ்டர்

தேதி	செலவு விவரங்கள்	தொகை	குறிப்புகள்

விதி. பி. 100 (2) (d) படிக்கு

அப்பீல்களுக்கான காலவரையறை. (க-X L V III—48)

ஷை சட்டத்திலாவது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளிலாவது வேறேவிதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, மேற்படி சட்டத்தின்படிக்கான அல்லது அத்தகைய யாதொரு விதியின்படிக்கான அப்பீல் ஒவ்வொன்றும், (மத்திய சட்ட நிரூபண சபையின் 1909-ம் ஷூத்து 9-வது சட்டமாகிய) 1908-ம் ஷூத்திய இந்தியக் கால வரையறைச் சட்டத்தின் 5-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு—

(a) மேற்படி அப்பீல் ஒரு லைசென்ஸ் அல்லது அனுமதி கொடுப்பதற்கான, ஓர் உத்தரவுக்கு விரோதமாகச் செய்துகொள்ளப் பட்டிருந்தால், அவ்வுத்தரவு பஞ்சாயத்தின் விளம்பரப் பலகையில் பிரசித்தம் செய்யப்பட்ட தேதிக்குப் பிறகு முப்பது தினங்களுக் குள்ளாகவும்.

(b) மற்ற விஷயங்களில், எந்த உத்திரவு அல்லது நடவடிக்கைக் குறிப்புக்கு விரோத மாக அப்பீல் செய்து கொள்ளப்படுகிறதோ அந்த உத்திரவை அல்லது நடவடிக்கைக் குறிப்பைப் பெற்றுக்கொண்ட தேதிக்குப் பிறகு முப்பது தினங்களுக்குள்ளாகவும்,

இன்ஸ்பெக்டரிடம் கொடுத்துக்கொள்ள வேண்டும்.

பி. 100 (1) தண்டனை.—லைஸென்ஸின்றி அல்லது லைசென்சுக்கு முரணுக புதிய தனிப்பட்ட மார்க்கெட் ஒன்றை ஏற்படுத்துதல் அல்லது தொடர்ந்து வைத்து வருதல்—இவைகளுக்கு ரூபா ஐந்நூறு வரையில் அபராதம் விதிக்கலாம். அதேமாதிரி குற்றத்தை தொடர்ந்து செய்து வந்தால் நாள் ஒன்றுக்கு ரூபா நூறு வரையில் அபாரதம் விதிக் கலாம். II, III ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாட்சியம் : ருசு.—(1) லைசென்ஸில்லாமல் அல்லது லைசென்ஸில் கண்ட ஷரத்து களுக்கு விரோதமாக ஒரு தனிப்பட்ட சொந்த மார்க்கெட்டை எதிரி நடத்தி வந்தாரென்று ருசுப்படுத்த வேண்டும்.

பி. 100 (3) தண்டனை.—தனிப்பட்ட மார்க்கெட்டில் சொ்டிபிகேட்டின்றி கட்ட ணங்கள் விதித்து வாங்குவதற்கு ரூபாய் நூறு வரையில் அபராதம் விதிக்கலாம். அதே மாதிரி குற்றத்தை தொடர்ந்து செய்து வந்தால் நாள் ஒன்றுக்கு ரூபா ஐம்பது வரையில் அப ராதம் விதிக்கலாம். II, III ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாட்சியம் : ருசு.—(1) செர்டிபி கேட்டின்றி எதிரி சொந்த மார்க்கெட்டில் கட்ட ணங்கள் விதித்து வசூல் செய்தார்.

பி. 100 (4) வரும்படியில் 15 சதவீத கட்டணம்:—லைசென்ஸை இலவசமாக கொடுக்கவேணும். சொந்த மார்க்கெட் என்பது ஒருவருடைய சொத்து ஆகையால் பஞ்சா யத்து யாதொரு பறிகாரம் கொடுக்காமல் தன் வசம் செய்துக்கொள்ளக்கூடாது. ஆனால் லைசென்சுகளை சட்டப்படிக்கும் விதிகள்படிக்கும் கொடாமல் இருக்கலாம். [எல்லம்மாள் குறித்து, A. I. R. 1928 M. 164.] இந்த லைசென்சுக்காக ஒரு பாகஸ்தரும் மனுபோட்டுக் கொள்ளலாம். [நிருபேந்திர குமார்-எ.-ஹாபிகன்ஜ் முனிசிபாலிடி, A. I. R. 1926 Cal. 251] லைசென்சு கட்டணமானது முன் வருஷத்திய மொத்த வரும்படியிலிருந்து 15-சதாம்சம்மேல் இருக்கக்கூடாது. [ரங்கூன் முனிசிபாலிடி-எ.-பஜான்டர்ங் பஜார் A. I. R. 1930 R. 282. A. I. R. 1931 P. C. 217.]

இடங்கள் மார்க்கெட்டு களாகுமா என்பதுபற்றி ஏற்படும் தகராறுகளைத் தீர்ப்பது.

101. எந்த இடமேனும் ஒரு மார்க்கெட்டா அல்லவா என்பது பற்றி தகராறு ஏதேனும் கிளம்பினல் சந்தர்ப்பத்துக்கேற்ப பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அதை அரசாங்கத் தாரின் ஆலோசனைக்கு அனுப்பவேண்டும்; அவர்களுடைய தீர்மானம் முடிவானதாகும்.

லைசென்ஸ் கொடுக்கப் பெருத சொந்த மார்க் கெட் முதலியவற்றில் விற்பனை செய்யக்கூடா தென்று தடுப்பது.

102. எந்த நபரும்—

(a) சந்தர்ப்பத்துக்கேற்ப நிர்வாக உத்தியோகஸ்தருடைய அல்லது கமிஷனருடைய அல்லது லைஸென்ஸ்தாரருடைய அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கிற யாதொரு நபருடைய அனுமதியில்லாமல் யாதொரு பொது மார்க்கெட் டிலாவது லைஸென்ஸ் கொடுக்கப்பெற்ற சொந்த மார்க் கெட்டிலாவது.

(b) லைஸென்ஸ் கொடுக்கப்பெருத யாதொரு சொந்த மார்க்கெட்டிலாவது, யாதொரு பிராணியையாகிலும், வஸ்துவையாகிலும் விற் கவுங்கூடாது, விற்பனைக்காகக் கட்டி வைத்திருக்கவுங்கூடாது.

குறிப்பு

பி. 102.—உத்தரவின்றி ஒரு மார்க்கெட்டில் விற்பனை செய்வது குற்றமாகும். அதனால் ஒரு பஞ்சாயத்தாவது குத்தகைதாரராவது யாதொரு நபரையாவது சில விற்கக் கூடிய சரக்குகளை விற்கக்கூடாது என்று நிர்ப்பந்திக்கக்கூடாது, எல்லோருக்கும் பொதுவாக நடந்துகொள்ள வேண்டும். பி. 175-யை பார்க்கவும். அப்படி இன்றி சில நபர்களுக்கோ அல்லது யாதோ ஒரு நபருக்கு விற்க ஹக்கு உண்டாக்கி மீதி பேர் விற்கக் கூடாது என்று வாதாடுவது செல்லாது. [சோமு. எ. மாயவரம் முனிசிபாலிடி (1905) 28 M. 520.]

பி. 102 தண்டனை.—பொது அல்லது தனிப்பட்ட மார்க்கெட்டில் அனுமதியின்றி யாதொரு பிராணியை அல்லது பொருளை விற்றல் அல்லது விற்பனைககாக வைத்திருப்பதற்கு ரூபா இருபது வரையில் அபராதம் போடலாம். அதேமாதிரி குற்றத்தை தொடர்ந்து செய்து வந்தால் நாள் ஒன்றுக்கு ரூபா பத்து வரையில் அபராதம் போடலாம். II, III ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாட்சியம் : ருசு.— பொது அல்லது தனிப்பட்ட மார்க்கெட்டில் அனுமதியின்றி எதிரி ஒரு பிராணியையோ, பொருளையோ விற்றார்.

பொதுப்பாட்டைகளில் விற்பனை செய்யக்கூடாதென்று தடுப்பது.

103. நிர்வாக அதிகாரி அல்லது கமிஷனர் சந்தர்ப்பத்துக்கேற்ப பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு, யாதொரு பொதுப்பாட்டை, இடம் அல்லது அதன் பாகத்திலாவது அதன் மேலாவது எவ்வித பிராணிகளையேனும் வஸ்துக்களையேனும் விற்கக்கூடாதென்று கிலும், விற்பனைக்காகக் காட்டிவைக்கக் கூடாதென்றுகிலும் பகிரங்கமான நோட்டீஸ் மூலமாகத் தடுக்கலாம், அல்லது அப்படி விற்பதற்கோ காட்டி வைப்பதற்கோ லைஸென்ஸ் கொடுக்கலாம், அல்லது அப்படி விற்பதையோ காட்டி வைப்பதையோ ஒழுங்குப்படுத்தலாம்.

குறிப்பு

பி. 103 பி. 2 (28)-ல் பொது பாட்டையின் அர்த்தம் சொல்லியிருக்கிறது. பி. 62 (a)-ல் பொது பாட்டைகளை பராமரிப்பு ஏற்படுத்துவது முதலியவை தெரியப்படுத்தியிருக்கிறது. 76-ன் கீழ் பொது பாட்டை பஞ்சாயத்தில் சேர்வதினல் உண்டாகும் சட்ட விஷயங்களை தெரியப்படுத்தி யிருக்கிறது. பி. 82-ன் கீழ் 6-வது விதியை பார்க்கவும். பொது பாட்டைகளில் சாதாரணமாக கடை போட்டுக்கொண்டு விற்பனை செய்யக்கூடாது. ஆனல் பொது பாட்டைகளில் பஞ்சாயத்தின் அனுமதியின் பேரில் நிர்வாக உத்தியோகஸ்தர் லைசென்ஸ் பெற்று கடைகள் போட்டு விற்க பஞ்சாயத்து உத்தரவு செய்யலாம்.

பி. 103 தண்டனை.—பொது பாட்டைகளில் அல்லது பொது இடங்களில் லைசென்ஸில்லாமலும் அல்லது விற்கக்கூடாது என்று தடை செய்தும் விற்பனை செய்வதற்கு ரூபா பத்து வரையில் அபராதம் போடலாம்.

சாட்சியம் : ருசு.—பொது பாட்டையில் அல்லது இடத்தில் விற்பனை செய்தார். அல்லது தடை செய்தும் விற்பனை செய்தார்.

மார்க்கெட்டுகளைத் தரம் பிரிப்பது.

104. ஒரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியிலுள்ள பொது மார்க்கெட்டுகளையும் சொந்த மார்க்கெட்டுகளையும், முறையே பஞ்சாயத்து யூனியன் மார்க்கெட்டுகளாகவும் பஞ்சாயத்து மார்க்கெட்டுகளாகவும் தரம் பிரிக்கவும், அப்படிப்பட்ட யாதொருமார்க்கெட் விஷயமாய் மேல்விசாரணை பண்ணுவதற்கும் அதிலிருந்து கிடைக்கிற வரும்படியை பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கும் பஞ்சாயத்தும் பங்கிடுவதற்கும் அல்லது அது விஷயமாய்ச் சந்தர்ப்பத்துக் கேற்றபடி பஞ்சாயத்துக்காவது அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்காவது சகாயத் தொகை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவும் அரசாங்கத்தாருக்கு அதிகாரமுண்டு.

பாரவண்டிகள்

இந்தப் பிரிவின்படிச் செலுத்தப்படவேண்டுமென உத்தரவிடப்பட்ட வருமானத்தின் பங்கையோ கட்டளையிடப்பட்ட சகாயத் தொகையையோ அப்போதைக்கப்போது அரசாங்கத்தார் புனராலோசனை செய்து மாற்றலாம்; ஆனால் அந்த மாற்றமானது ஜில்லா அபிவிருத்தி கவுன்ஸிலாரால் சிபாரிசு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

குறிப்பு

பி. 104 மார்க்கெட்டுகளை தரம் பிரிப்பது.—செ. 65-ன் கீழ் உள்ள விதிகளை பார்க்கவும். மார்க்கெட்டுகளை பஞ்சாயத்து மார்க்கெட்டுகள் என்றும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் மார்க்கெட்டுகள் என்றும் தரம் பிரிக்க கவர்ன்மெண்டாருக்கு அதிகாரமுண்டு. அப்படி பஞ்சாயத்து எல்லையில் உள்ள ஒரு மார்க்கெட்டை ப. யூ. க-லின் மார்க்கெட்டு என்று ஏற்படுத்திய பொழுது அந்த மார்க்கெட்டில் பஞ்சாயத்துக்கு யாதொரு அதிகாரமும் கிடையாது. மேல் பார்வையையும் பி. யூ. க. தான் செய்து கொள்ளும். அதே மாதிரி பஞ்சாயத்து மார்க்கெட்டுகள் விஷயத்தில் பி. யூ. க. பிரவேசிக்கக்கூடாது. ஒரு பி. யூ. க. மார்க்கெட்டானது ஒரு பஞ்சாயத்தின் எல்லையில் இருந்தால், பி. யூ. சு. அந்த பஞ்சாயத்துக்கு சகாய தொகை (Contributions) கொடுக்கலாம்.

சொந்த மார்க்கெட்டுகள் வைக்க தனி நபர்களுக்குள்ள உரிமையை எடுத்துக் கொள்வது.

105. (1) ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலால், ஒரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியில் எந்த இடத்திலாகிலும் சொந்த மார்க்கெட் வைத்துக்கொள்ளவும் அதில் கட்டணங்கள் விதித்து வாங்கவும் யாதொரு நபருக்குள்ள பாத்தியதைகளை எடுத்துக் கொள்ளலாம். நிலம் எடுத்துக் கொள்வதற்கான (1894-ம் ஹ ஒத்து I-வது மத்தியச் சட்டமாகிய 1894-ம் ஹ ஒத்திய சட்டத்தின்படி மேலே கண்ட பாத்தியதைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்; மேலும், அந்த பாத்தியதைகள் ஷை சட்டத்தின் காரியங்களுக்காக நிலமாகக் கருதப்படும்.

(2) அந்தச் சொத்தின் விஷயமாய் ஷை சட்டத்தின்படித் தீர்மானிக்கப்படும் பிரதி பலன் தொகையையும் அதை எடுத்துக்கொள்ளும் விஷயத்தில் பிடித்த வேறே யாதொரு செலவுத் தொகையையும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் செலுத்துவதன் மேல், சொந்த மார்க்கெட் வைத்துக் கொள்ளவும், அதில் கட்டணங்கள் விதித்து வாங்கவும் ஷை நபருக்குள்ள பாத்தியதைகள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலாரிடம் சங்கிரமிக்கும்.

பார வண்டிகள் நிற்கும் இடங்கள்

பொதுவான இறங்குமிடங்கள், பார வண்டி நிற்கும் பொது இடங்கள் முதலியன.

106. நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு, பஞ்சாயத்தானது.—

(a) பொதுவான இறங்குமிடங்களையும், தங்குமிடங்களையும், பார வண்டி நிற்கும் இடங்களையும் ஏற்படுத்தலாம் (பாரவண்டி நிற்குமிடங்கள் என்னும் சொற்றொடரில் பிராணிகளும் மோட்டார் வண்டிகள் உட்பட எந்த விபரப்படியாகிலும் உள்ள வண்டிகளும் நிற்கிற இடங்கள் என்பது அடங்கும்); மேலும் அவைகளை உபயோகிப்பதற்காக அது கட்டணங்கள் விதித்து வாங்கலாம்; அன்றியும்.

(b) அப்படிப்பட்ட யாதொரு இடம் ஏற்படுத்தப்பட்டிருந்தால், அதிலிருந்து இன்ஸ்பெக்டரின் மேல்விசாரணைக்குட்பட்டு, பஞ்சாயத்து குறிப்பிடக்கூடிய தூரத்துக்குள்ளாக இருக்கிற யாதொரு பொது இடத்தையாவது யாதொரு பொதுப்பாட்டையின் பக்கங்களையாவது எவரும் அதே காரியத்துக்காக உபயோகிக்கக்கூடாதென்று தடுக்கலாம்.

பாரவண்டிகள்

குறிப்பு

பி. 106 (b) இன்ஸ்பெக்டர் அவர்களின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு பொது பாட்டையை வண்டி மேடு சம்பந்தமென்று ஏற்படுத்தினல் அதில் யாதொரு வண்டியும் நிற்கக் கூடாது. அம்மாதிரி செய்வது குற்றமாகும். ஷெட்யூல் III-யை பார்க்கவும்.

106 (b) **தண்டனே.**—தடை பிறப்பிக்கப்பட்ட தூரத்துக்குள் யாதொரு பொது இடத்தை அல்லது சாலேயோரத்தை வண்டி நிற்குமிடமாக அல்லது தங்குமிடமாக அல்லது வண்டி ஸ்டாண்டாக உபயோகிப்பதற்கு ஐம்பது ரூபா வரையில் அபராதம் விதிக்கலாம் II-ம் ஷெட்யூலேப் பார்க்கவும்.

சாட்சியம் : ருசு.—தடை பிறப்பிக்கப்பட்ட தூரத்துக்குள் ஒரு பொதுசாலே அல்லது பொது இடத்தை வண்டி ஸ்டாண்டாக எதிரி உபயோக படுத்தினர்.

பி. 106. பி. 178 (2) (XXIII) படிக்கு

பொதுவான தங்குமிடங்கள், பாரவண்டி நிற்குமிடங்கள் முதலியவை, (க 25)

விதிகள்

1. (1) ஒரு பஞ்சாயத்து பொதுவான தங்குமிடம் அல்லது பாரவண்டி நிற்குமிடம் ஒன்றை ஏற்படுத்த உத்தேசித்தால், அது ரீஜனல் இன்ஸ்பெக்டருக்கு விண்ணப்பம் ஒன்றை அனுப்பவேண்டும். அந்த விண்ணப்பத்தில் அடியிற் கண்டவை அடங்கியிருக்கவேண்டும்:—

(a) பஞ்சாயத்து எந்த நிலத்தில் மேற்படி தங்குமிடம் அல்லது பாரவண்டி நிற்குமிடத்தை ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறதோ அந்த நிலத்தின் ஸர்வே நம்பர், விஸ்தீர்ணம், தரம்; முக்கியமான பாட்டைகளே யொட்டியும் அக் கம்பக்கத்திலுள்ள இதர நிலங்களே யொட்டியும் அந்த நிலத்தின் ஸ்தானத்தைக் காட்டுகிற வரிப்படம் ஒன்றையும் அந்த விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டும்;

(b) ரீஜனல் இன்ஸ்பெக்டர் குறிப்பிட்டுக் கேட்கக்கூடிய வேறு எவையேனும் விவரங்கள்.

(2) அனுமதி கொடுப்பதற்கு முன் ரீஜனல் இன்ஸ்பெக்டர், மோட்டார் வண்டிகளுக்கென்றே அல்லது ஒரு பகுதி மோட்டார் வண்டிகளுக்காக வென்று உத்தேசிக்கப்பட்ட ஸ்டாண்டுகள் (நிற்குமிடங்கள்) விஷயத்தில் சம்பந்தப்பட்ட ரோடு ட்ராபிக் போர்டைக் கலந்தாலோசிக்க வேண்டும்; அந்த போர்டாரின் அபிப்பிராயத்தைக் கிரமமாகக் கவனிக்க வேண்டும்.

2. (1) ஒரு பாட்டை அல்லது பாட்டை யோரத்தைச் சாதாரணமாகப் பொதுவான தங்குமிடமென்ரூே பாரவண்டி நிற்குமிடமென்ரூே பிரசித்தம் செய்யக்கூடாது.

ஆனல், விசேஷ சந்தர்ப்பங்களில் ரீஜனல் இன்ஸ்பெக்டர் அடியிற்கண்டபடி ஏற்பாடு செய்த பிறகு பாட்டை காரியங்களுக்காகப் போதிய இடம் இருக்கிறதென்றுதாம் அபிப்பிராயப்பட்டால், மேற்படி பாட்டை எந்த அதிகாரியிடம் சங்கிரமித்திருக்கிறதோ அந்த அதிகாரியைக் கலந்தாலோசித்து தங்குமிடத்தையோ பாரவண்டி நிற்குமிடத்தையோ ஏற்படுத்த ஒரு பஞ்சாயத்துக்கு அனுமதி கொடுக்கலாம்.

(2) எந்தப் பஞ்சாயத்தும் கிராமம் முழுவதையும் பொதுவான தங்குமிடமென்ரூே பார வண்டி நிற்குமிட மென்ரூே பிரசித்தம் செய்து, அதற்காகக் கட்டணங்கள் வசூலிக்கக் கூடாது.

3. ஒரு பஞ்சாயத்து பொதுவான தங்குமிடம் ஒன்றையோ பாரவண்டி நிற்குமிடத்தையோ ஏற்படுத்தி யிருந்தால், அதிலிருந்து அரை மைல் தூரத்துக் குள்ளிருக்கிற யாதொரு பொது இடத்தை அல்லது யாதொரு பொதுப் பாட்டையின் ஓரங்களே அதே காரியத்துக்காக எவராகிலும் உபயோகிப்பதை அது தடுக்கலாம்;

ஆனல், இந்த விதியில் கண்ட தெதுவும், மோட்டார் வண்டிகளேக் குறித்த 1939-ம் வருஷத்தியச் சட்டத்தின் தாற்பரியப்படிக்கான ஸ்டேஜ் வண்டியாயிராத எந்த மோட்டார் வண்டிக்கும் பிரயோகப்படமாட்டாது.

பாரவண்டிகள்

விவரம்.—பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு போவதற்காக உபயோகிக்கப்படும் ஒரு வண்டி ஒரு பொது இடத்தில் அல்லது ஒரு பொதுப் பாட்டையின் ஓரங்களில், பிரயாணிகளை யேனும் அவர்களுடைய சாமான்களையேனும் இறக்குவதற்காக அல்லது ஏற்றிக்கொள்வதற்காக இரண்டு நிமிஷங்களுக்கு மேற்படாத ஒரு கால அளவுக்கு நின்றாலும் அல்லது சரக்குகள் ஏற்றிச் செல்வதற்காக உபயோகிக்கப்படும் ஒரு வண்டி சரக்குகளை ஏற்றிக்கொள்ளவும் இறக்கவும் தேவையாயுள்ள கால அளவுக்கு மட்டுமே அங்கே நின்றாலும் அந்த பொது இடம் அல்லது பொதுப் பாட்டையின் ஓரங்கள் பொதுவான தங்குமிடமாகவோ பாரவண்டி நிற்குமிடமாகவோ கருதப்பட மாட்டாது.

4. ஒரு பஞ்சாயத்து, பொதுவான தங்குமிடம் அல்லது பாரவண்டி நிற்குமிடம் ஒன்றை ஏற்படுத்தினால், அது விஷயத்தை சம்பந்தப்பட்ட கிராமத்திலும் ஜில்லா கெஜெட்டிலும் அது பிரசித்தம் செய்யவேண்டும். அப்படிப் பிரசித்தம் செய்கையில்; அது ஏற்படுத்தப் பட்டுள்ள இடத்தைப்பற்றியும் அதை உபயோகிப்பதற்காகச் செலுத்தப்படத்தக்க கட்டண விதங்களை பற்றியும் தகவல் தெரிவிக்கவேண்டும் பஞ்சாயத்து நிர்ணயித்த விதங்கள் அங்கே கட்டணம் வசூலிக்க அதிகாரம் பெற்ற நபருடைய பெயர். தடை செய்யப்பட்ட தூரம் ஆகிய இவைகளைக் குறிப்பிடுகிற நோட்டீஸ் ஒன்றை, அத்தகைய பொதுவான தங்குமிடத்திலோ பாரவண்டி நிற்குமிடத்திலோ எல்லாருக்கும் தெரியும்படியான ஓரிடத்தில் விளம்பரப் பலகையில் காட்டி வைக்க வேண்டும்.

5. பொதுவான தங்குமிடம் அல்லது பார வண்டி நிற்குமிடத்தை உபயோகிப்பதற்காக அடியிற்கண்டவைகளுக்கு மேற்படாத வீதங்களில் கட்டணங்கள் விதித்து வசூலிக்கப் பட வேண்டும் :—

	வசதிகள் எவையும் செய்து கொடுக்கப் படாவிட்டால், நாளொன்றுக்கு உச்ச வீதம்	வசதிகள் செய்து கொடுக்கப்படாவிட்டால் நாளொன்றுக்கு உச்ச வீதம். ரூ. அ. பை.
(1) கை வண்டி ஒவ்வொன்றுக்கும் ...	6 தம்பிடி ...	0 1 0
(2) ஒரு பிராணி அல்லது பல பிராணிகள் இழுத்துச் செல்லும் பார வண்டி அல்லது வண்டி ஒவ்வொன்றுக்கும் ...	9 தம்பிடி ...	0 1 0
(3) மோட்டார் வண்டி ஒவ்வொன்றுக்கும் ...	1 அணு 6 தம்பிடி ...	0 2 0
(4) குதிரை, கோவேறுகழுதை, எருது, காளை, பசு அல்லது எருமை ஒவ்வொன்றுக்கும்	6 தம்பிடி ...	0 1 0

பார வண்டி நிற்கும் சொந்த இடங்கள்.

107. (1) எந்த நபரும் பார வண்டி நிற்கும் இடத்தைச் சொந்தத்தில் புதிதாய் ஏற்படுத்தவாவது, பார வண்டி நிற்கும் யாதொரு சொந்த இடத்தைத் திறந்துவைத்துக் கொண்டிருக்கவாவது பஞ்சாயத்தினிடமிருந்து லைசென்ஸ் பெற்றிருந்தாலொழிய அப் பிரகாரம் ஏற்படுத்தவுங்கூடாது, திறந்து வைத்துக்கொண்டிருக்கவுங்கூடாது. அந்த லைசென்ஸை ஒவ்வொரு வருஷமும் புதுப்பிக்கவேண்டும்.

(2) பஞ்சாயத்தானது, ஏற்கெனவே சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பார வண்டிநிற்கிற சொந்த இடங்களின் விஷயத்திலே, மேல்விசாரணை செய்வது, பார்வையிடுவது, குப்பை, அசுத்தம் முதலியவையெல்லாம் சுத்தமாய் வைத்திருப்பது, நிர்ணயிக்கப்படக்கூடிய இதர விஷயங்கள் ஆகிய இவை சம்பந்தமாய்ப் பஞ்சாயத்துக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய நிபந்தனைகளுக்குட்பட்டு விண்ணப்பித்துக் கொள்ளப்பட்ட

லைஸென்ஸைக் கொடுக்க வேண்டும். மேலும், புதிதாய் ஏற்படுத்தப்படுகிற பார வண்டி நிற்கிற சொந்த இடங்களின் விஷயத்திலே தனக்கு யுக்தமாகத் தோற்றினுல் அந்தப் படியே லைஸென்ஸ் கொடுக்கலாம்; அல்லது பஞ்சாயத்தானது புதிதாய் ஏற்படுத்தப் பட்ட பார வண்டி நிற்கிற எந்த இடத்துக்காகிலும் அப்படிப்பட்ட லைசென்ஸ் கொடுக்க மறுக்கலாம்.

(3) பஞ்சாயத்தானது லைசென்சில் கண்ட திட்டங்களை மாற்றி அவை குறிப் பிட்ட ஒரு தேதியிலிருந்து செலாவணியாகும்படிச் செய்யலாம்.

(4) பஞ்சாயத்தானது (2) உபபிரிவின்படிக் கொடுக்கப்பட்டிருக்கிற யாதொரு லைசென்சில் கண்ட நிபந்தனைகளை எவராகிலும் மீறி நடந்தால் அந்த லைசென்சை எப்போதாகிலும் செலாவணியாகவொட்டாமல் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைக்க லாம் அல்லது ரத்து செய்யலாம்.

(5) இந்தப் பிரிவின்படி யாதொரு லைசென்ஸ் கொடுக்கப்படுகிற அல்லது புதுப்பிக்கப்படுகிற ஒவ்வொரு தடவையும் பஞ்சாயத்து இருநூறு ரூபாய்க்கு மேற்படா மல் கட்டணம் விதித்து வாங்கலாம்.

குறிப்பு

பி. 107 பொது.—வண்டி மேடுகளைத் தனிப்பட்ட நபர்களே ஏற்படுத்தி லைசென்ஸ்கள் பெற்று கட்டணங்களை வசூல் செய்து அனுபவித்துக் கொள்ளலாம். லைசென்ஸ் இல்லாமல் வண்டிமேடை வைத்திருப்பது குற்றமாகும். ஷெடியூல்கள் II, III களைப் பார்க்கவும்.

பி. 107 (1) பார வண்டி நிற்கும் இடம்.—பிரதி தினம் எத்தனை வண்டிகள் வந்து நிற்கின்றன ? அந்த வண்டிகள் ஒருவருடையதா அல்லது அனேகருடையதா; கட்டணம் ஏதாவது விதிக்கப்படுகிறதா ? எவ்வளவு காலம் வண்டிகள் அங்கிருக்கின்றன ; வண்டிகளி லிருக்கும் சாமான்கள் நிற்குமிடக்காரருக்கு விற்கப்படுகிறதா ? அல்லது பொதுவாக விற்கப்படுகிறதா, அல்லது வாடகை வண்டிகள் அவ்விடம் கிடைக்கின்றனவா என்பவை களை எல்லாம் செவ்வனே ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

ஒரு தரகரி தன் வீட்டண்டை பிரதி தினம் விளை பொருள்களை ஏற்றிக்கொண்டு வரும் பார வண்டிகளை நிறுத்தி அவைகளைப் பொது ஜனங்களுக்கு விலையாக்கிய பிறகு வண்டிகள் போய்க்கொண்டிருந்தன. அம்மாதிரி தரகரி செய்வது தவறென்றும் அது பாரவண்டி நிற்கும் இடமல்லவென்றும், அம்மாதிரி லைசென்ஸ் இல்லாமல் இடத்தை உபயோகப்படுத்துவது குற்றமென்றும் தீர்ப்பு செய்யப்பட்டது. [ஐயாகண்ணு குறித்து 21 M. 293 :: 22 M. 455]

பி. 107 லைசென்ஸ் பெருத பார வண்டிகள் நிற்கும் இடம் துர்நாற்றம் அல்லது தேகாரோக்கியத்திற்குக் கெடுதல் உண்டாக்கக் கூடியதென்ருவது அல்லது அங்கு கட்டணம் வசூல் செய்யப்படுகிற தென்ருவது ருசு செய்யவேண்டியதில்லை. ஒரு இடத்தின் சொந்தக் காரர் வண்டி ஒன்றுக்கு ரூபாய் ஒன்று பெற்று வண்டியை அங்கு அவிழ்ந்து மாட்டை கட்டி வைத்திருக்க அநுமதி கொடுத்தால் அது இந்த செக்ஷனை மீறியதாகும். (கெஜட் 12-2-1925, G. O. No. 1602 L. & M.)

107 (1) தண்டனை.—லைசென்ஸில்லாமல் அல்லது லைசென்சுக்கு முரணகத் தனிப்பட்ட வண்டி ஸ்டாண்டு ஒன்றை ஏற்படுத்துதல் அல்லது அதைத் தொடர்ந்து வைத்து வருவதற்கு ரூபா இருநூறு வரையில் அபராதம் விதிக்கலாம், அதேமாதிரி குற்றத்தை தொடர்ந்து செய்து வந்தால் நாள் ஒன்றுக்கு ரூபா இருபது வரையில் அபராதம் விதிக்கலாம். II, III ஷெட்யூல்களைப் பார்க்கவும்.

சாட்சியம் : ருசு.—லைசென்சு இல்லாமலும் அல்லது லைசென்சுக்கு முரணகவும் ஒரு இடத்தை வண்டி ஸ்டாண்டாக உபயோகப்படுத்தினர். அல்லது லைசென்சுக்கு முரணக ஒரு வண்டி ஸ்டாண்டை உபயோகப் படுத்தினர்.

ஆடு மாடுகளை அடிக்கும் தொட்டிகள்

ஆடு மாடு முதலியவை அடிக்கும் பொதுத் தொட்டிகள்.

108. பஞ்சாயத்து ஆடு, மாடு முதலியவை அடிக்கிற பொதுத் தொட்டிகளாக உபயோகமாகும்படி இடங்களை ஏற்படுத்தி வைக்கலாம்; மேலும், அவைகளை உபயோகிப்பதற்காக வாடகைகளையும் கட்டணங்களையும் அது விதித்து வாங்கலாம்.

பிராணிகளை அடிப்பதற்காக இடங்களை உபயோகிக்கக்கூடாதெனத் தடுப்பதும் அல்லது அந்தப்படி உபயோகிப்பது விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதும் பிராணிகளை அடிப்பவர்களுக்கு லைஸென்ஸ் கொடுப்பதும்.—

109. அரசாங்கத்தார்:—

(a) இதில் சொல்லப்படுகிற விதிகளில் விலக்கப்பட்டிராத எல்லாச் சந்தர்ப்பங்களிலும், ஆடு, மாடு முதலியவை அடிக்கும் பொதுத் தொட்டிகளல்லாத வேறே இடங்களில், அந்த விதிகளிலே குறிப்பிடப்பட்டுள்ள பிராணிகளை அடிக்கவோ அல்லது துண்டு போடவோ அல்லது அவைகளின் தோலை உரிக்கவோ கூடாதென்று தடுப்பதற்காகவும் அல்லது அந்தப்படி அடிப்பது அல்லது துண்டு போடுவது அல்லது தோல் உரிப்பது விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்காகவும்,

(b) பொது ஜனங்களுக்கு விற்கும் பொருட்டு அந்த விதிகளில் குறிப்பிடப் பட்டுள்ள பிராணிகளை அடிப்பதற்காக நபர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதற்காகவும்.

(c) ஆடு, மாடு முதலியவை அடிக்கிற தொட்டிகளையும் அவைகளிலுள்ள மாமிசத்தையும் பார்வையிடுவதற்காகவும், அப்படி, பார்வை யிடுவதற்காக அமிர்த்திக்கொள்ளப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்குப் பிரதி பலன் தொகை கொடுப்பதற்காகவும் விதிகள் செய்ய அதிகாரம் உடையவர்களாவார்கள்.

குறிப்பு

பி. 109 ஒருவருடைய சொந்த உபயோகத்திற்காக தன்னுடைய இடத்தில் ஆடு அடிப்பது ஆட்டு தொட்டி ஏற்படுத்துவது ஆகாது. (மஹாராணி எ. லட்சுமணன், Cr. Rg. 5 of 1888) பொது ஜனங்களின் விற்பனைக்காக ஆடு மாடு லைசென்ஸ் பெற்ற இடத்தில் அடிக்க வேண்டும். இல்லையேல் குற்றமாகும். உற்சவ காலங்களில் பிராணிகளை கொல்லுவதற்கென, பொது ஜன தேகாரோக்கியத்தை உத்தேசித்து, தமக்குத் தகுதியான இடத்தில் பிராணிகளைக் கொல்ல பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அல்லது பஞ்சாயத்து அநுமதிக்கலாம். அப்படிச் செய்யாமல் போனால் கண்ட இடத்தில் அடிப்பதால் சுகாதாரக் குறைவும் அதனால் வியாதியும் உண்டாகும். கமிஷனர்கள் நிர்வாக அதிகாரிகள் ஜனங்களின் மதக் கொள்கைகளுக்கு மாறுபாடாயில்லாமல் வெகு ஜாக்கிரதையாய் நடந்துக்கொள்ள வேண்டும்.

109 (a) தண்டனை.—ஆடு மாடு அடிக்கும் பொதுத் தொட்டிகளுக்கு வெளியே பிராணிகளை அடித்தல், அறுத்தல் அல்லது தோல் உரித்தல் முதலியவைகளுக்கு ரூபா இரு நூறு வரையில் அபராதம் விதிக்கலாம்.

சாட்சியம் : ருசு.—ஆடு மாடு அடிக்கும் பொது தொட்டிகளுக்கு வெளியில் பிராணிகளை அடித்தல் முதலியவைகளை செய்தார்.

109 (b) தண்டனை.—லைஸென்ஸில்லாமல் அல்லது லைஸென்ஸுக்கு முரணாகப் பிராணிகளை விற்பனைக்காக அடிப்பதற்கு ரூபா இருபது வரையில் அபராதம் விதிக்கலாம்.

சாட்சியம் ருசு.—லைஸென்ஸில்லாமல் அல்லது லைஸென்ஸுக்கு முரணாக பிராணிகளை விற்பனைக்காக அடித்தார்.

ஆடு மாடுகளை அடிக்கும் தொட்டிகள்

விதிகள் - பி. 109 படிக்கு

பிராணிகளைக் கொல்வதற்காகச் சில இடங்களை உபயோகிக்கக்கூடாதென்று தடுப்பது அல்லது அப்படிக் கொள்வதற்கான இடங்களின் உபயோகத்தை முறைப்படுத்துவதும் பிராணிகளைக் கொள்பவருக்கு லைசென்ஸ் கொடுப்பது (ஞ. XII. 12)

1. பிரஸ்தாப கிராமத்தில் ஆடு மாடு முதலிய பிராணிகளைக் கொள்வதற்காகவென்று பஞ்சாயத்தினுல் பொதுவான இடம் ஏதாகிலும் ஏற்படுத்தப் பட்டிருந்தால் அத்தகைய இடம் அல்லாத வேறு யாதொரு இடத்திலே நிர்வாக அதிகாரியின் எழுத்து மூலமான அனுமதி யில்லாமல் அல்லது எழுத்து மூலமான அத்தகைய அனுமதியை அனுசரித்தன்றி மற்றப்படி எவரும் மாடு, குதிரை, செம்மறியாடு, வெள்ளாடு அல்லது பன்றி ஆகிய இவற்றைக் கொல்லவும் கூடாது. துண்டு போடவும் கூடாது. தோல் உரிக்கவும் கூடாது அல்லது அவற்றைக் கொல்வதற்கோ, துண்டு போடுவதற்கோ, தோல் உரிப்பதற்கோ அனுமதி கொடுக்கவுங் கூடாது;

ஆனுல், நிர்வாக அதிகாரியானவர் பிரஸ்தாப கிராமத்திலேயே கோயில்களாகவோ அவற்றின் வளவுகளாகவோ இராமல், தாம் தகுதியென்று கருதுகிற வேறு இடங்களில், திருவிழாக் காலங்களிலும், சடங்குகள் நடக்கும்போதும் அல்லது ஒரு விசேஷ ஏற்பாடாக யாதொரு பிராணி கொல்லப்படுவதற்கு அனுமதி கொடுக்கலாம்.

மேலும், விற்பனைக்காக வல்லாமல் சொந்த உபயோகத்திற்காக பிராணிகளைக் கொல்வதற்கு, இந்த விதியில் கண்டதெதனுலும் தடை ஏற்படுவதாகக் கருதப்படமாட்டாது.

2. எவரும் நிர்வாக அதிகாரியிடமிருந்து லைசென்ஸ் ஒன்றைப் பெற்றுக்கொள்ளாமல் அல்லது அத்தகைய லைசென்ஸை அனுசரித்தன்றி மற்றப்படி, பொது ஜனங்களுக்கு விற்பனை செய்யும் காரியங்களுக்காக கிராமத்துக்குள் மாடு, குதிரை, வெள்ளாடு அல்லது பன்றி ஆகிய இவற்றைக் கொல்லவுங் கூடாது. கொல்வதற்கு அனுமதி கொடுக்கவுங் கூடாது.

ஆனுல், லைசென்ஸ் இல்லாமலும் எக் கட்டணமும் செலுத்தாமலும், ஒரு கோயி லாகவோ அதன் வளவாகவோ இராத வேறு யாதொரு இடத்திலே ஒரு மதச் சடங்கின் காரியத்துக்காக எப்பிராணியையேனும் கொள்வதற்கு நிர்வாக அதிகாரி யாதொரு நபருக்கு அனுமதி கொடுக்கலாம்.

3. இவ் விதிகளில் சொல்லியிருக்கிற காரியங்களுக்காக மத்திய அல்லது ராஜ்ய அரசாங்கத்தாரால் உபயோகிக்கப்படுகிற இடங்களுக்கு முந்திய விதிகளின் ஷரத்துக்கள் பிரயோகப்படமாட்டா.

4. பிரயாணிகளைக் கொல்வதற்காகவென்று ஒரு பஞ்சாயத்தினுல் ஏற்படுத்தப்பட்ட இடத்திலே கொல்லப்படுகிற சகல பிராணிகளும் அவ்வாறு கொல்லப்படும் சமயத்தில் தொத்து நோய் உடையன அல்ல என்று கண்டு, தகுதி பெற்ற மிருக வைத்திய அஸிஸ்டன்ட் ஸர்ஜன் ஒருவர் உறுதி மொழி கூறும்படிப் பார்த்துக் கொள்வது அப் பஞ்சாயத்தின் கடமை யாகும். இந்த ஸர்ஜன் பிராணிகளைக் கொல்வதற்கான இடங்களை மேற் பார்வையிடுவதற்கு அப் பஞ்சாயத்தினுலேயே அமர்த்திக் கொள்ளப்பட்டவராக இருக்கவேண்டும். அல்லது அதன் அதிகார வரப்புக்குச் சமீபத்திலுள்ள அரசாங்க மிருக வைத்தி ஸ்தாபனம் ஒன்றில் அவர் அமர்த்திக் கொள்ளப்பட்டிருந்து, அவருடைய சேவை இது காரியத்துக்காக, தனக்கு வேண்டுமென்று அப்பஞ்சாயத்து கேட்டுப் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு அமர்த்திக் கொள்ளப்படுகிற மிருக வைத்திய அஸிஸ்டன்ட் ஸர்ஜன்; கொல்லப்பட்ட பிராணிகளின் பிரதேசங்களைப் பரிசோதித்து, மனிதர்கள் உட்கொள்வதற்கு அவை தகுந்தவை தானு என்று உறுதிமொழி கூறவும் கடமைப்பட்டவராவர். மேற்சொன்ன காரியத்துக்காக, தகுதி பெற்ற மிருக வைத்திய அஸிஸ்டண்ட் ஸர்ஜன் ஒருவரை அமர்த்திக் கொள்கிற ஒரு பஞ்சாயத்து அவ்வாறு அமர்த்திக்கொள்ளப்படுகிற மிருக வைத்திய ஸர்ஜனுக்கு வெளியாருடைய அனுமதி எதுவுமின்றி, இதன் பொருட்டு ராஜ்ய அரசாங்கத்தார் அப்போதைக்கப்போது நிச்சயிக்கிற வீதத்துக்கு மேற்படாத ஒரு வீதப்படி ஊதியம் கொடுக்கலாம்.

ஆனுல். தகுதி பெற்ற மிருக வைத்திய அஸிஸ்டன்ட் ஸர்ஜன் ஒருவருடைய சேவை யைப் பெறுவதோ அத்தகைய சேவைக்காக பணம் கொடுப்பதோ பஞ்சாயத்து இயலாத

காரியமாயிருந்தால் பஞ்சாயத்தின் சுகாதார இன்ஸ்பெக்டரானவர் பிராணிகள் கொல்லப் படுகிற சமயத்திலே பிராணிகளைக் கொல்வதற்காகவென்று பஞ்சாயத்தினால் ஏற்படுத்தப் பட்ட இடத்திலே கொல்லப்படுகிற சகல பிராணிகளும் தொத்து நோய்கள் உடையன அல்ல வென்றும் உறுதிமொழி கூறவேண்டும்; மேலும் அவர், கொல்லப்பட்ட பிராணிகளின் பிரதேசங்களைப் பரிசோதித்து மனிதர்கள் உட்கொள்வதற்கு அவை தகுந்தவைதானா என்று உறுதிமொழி கூறவேண்டும்.

5. பிராணிகளையும் பறவைகளையும் பலியிடுவதைத் தடுப்பதைக் குறித்த (சென்னை 1950-ம் ஆண்டு 82-வது சட்டமாகிய) 1950-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து சட்டத் தில் கண்ட ஷரத்துக்களின் பிரயோகம் இவ் விதிகளில் கண்டதெதனாலும் பாதிக்கப்படுவ தாகக் கருதப்படமாட்டாது.

கட்டிடங்களுக்கு இலக்கமிடுவது.

110. (1) இச் சட்டம் பிரயோகப்படுகிற எவ் விஸ்தீர்ணத்திலேனும், இது விஷயமாய் நிர்ணயிக்கப்படக்கூடிய அதிகாரியானவர் யாதொரு கட்டிடத்தின் பக்கக் கதவிலாயினும் வெளிப் புறக் கதவிலாயினும் பிரஸ்தாப வளவின் பிரவேச வாயிலிலே ஏதாவதொரு இடத்திலாயினும் இலக்கமொன்றை ஒட்டுவிக்க லாம்.

(2) அத்தகைய எந்த இலக்கத்தை எவரும் சட்டரீதியான ஆணையின்றி அழிக்கவுங்கூடாது, இழுத்துப் போடவுங்கூடாது விகாரப் படுத்தவுங்கூடாது.

(3). (1) உபபிரிவின்படி இலக்கம் ஒன்று ஒட்டப்பட்டிருந்தால், அக் கட்டிடத் தின் சொந்தக்காரரானவர் அந்த இலக்கத்தைப் பாதுகாத்து வரவும், அது அப்புறப் படுத்தப்பட்டால் அல்லது விகாரப்படுத்தப்பட்டால், அதைப் பூர்த்தி செய்யவும் கட மைப்பட்டவராவார்; அவர் அவ்வாறு செய்யத்தவறினால், அதைப் பூர்த்தி செய்யும் படி, (1) உபபிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கிற அதிகாரி நோட்டிஸ் மூலமாக அவருக்கு உத்தரவிடலாம்.

குறிப்பு

பி. 110 இது ஒரு நூதனமானதும் ஜனங்களுக்கு அனுகூலம் செய்யக் கூடிய தாகவும் இருக்கிறது. இதனால் ஒரு கிராமத்தில் எத்தனை கட்டிடங்கள் இருக்கிற தென்று கண்டு பிடிக்கலாம். ஒரு நெம்பரின் மூலமாக அந்த கட்டடத்தில் வசிக்கும் நபருடைய விலாசத்தையும் கண்டு பிடிக்கலாம். ஓட்டு விஷயமாய் ஓட்டரையும் சுலபமாக ருஜுபடுத்திக் கொள்ளலாம். இது கோர்ட்டு விஷய விவகாரங்களுக்கும் அனுகூலமானது. இதன் மூலமாக சம்மன் முதவியவைகளைச் சேர்ப்பிக்கலாம். இந்த நெம்பர்களைக் கலைத்தால் குற்றமாகும் II-ம் செட்யூல் பார்க்கவும்.

கட்டடங்களுக்கு நம்பர் கொடுப்பதற்கான அதிகாரி பி. 110 படிக்கு விதி

(i) ஒரு பஞ்சாயத்து அமைக்கப்பட்ட பிரதேசம் விஷயமாக, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி.

(ii) பஞ்சாயத்து இன்னும் அமைக்கப்பட்டிராத ஒரு பிரதேசத்தில், விசாரணை அதிகார முள்ள டிப்டி தாசீல்தார் அல்லது தாசீல்தார்.

110 (2) தண்டனை.—கட்டிடங்களுக்கு கொடுத்திருக்கும் இலக்கங்களை சட்ட சம்மத மின்றி கலைத்து விடுவதற்கு ரூபா ஐந்து வரையில் அபராதம் விதிக்கலாம்.

சாட்சியம்: ருசு.—கட்டிடங்களுக்கு கொடுத்திருந்த இலக்கங்களை எதிரி கலைத்து விட்டார்.

110 (3) தண்டனை.—(வீட்டு) இலக்கத்தைப் புதிப்பிக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்து அதைச் செய்யத் தவறிப்போவதற்கு ரூபா இருபது வரையில் அபராதம் விதிக்க லாம்.

சாட்சியம்: ருசு.—(வீட்டு) இலக்கத்தைப் புதிப்பிக்க வேண்டு மென்று எதிரிக்கு உத்தரவிட்டிருந்தும் எதிரி இலக்கத்தை புதுப்பிக்கவில்லை.

111 முதல் 114 வரையில் யுள்ள பிரிவுகளுக்கு பொதுவான குறிப்பு

லைசென்ஸ்களை பற்றி பொதுவாக அறிய பிரிவுகள் 159, 160, 176 களையும் பார்க்கவும்.—இந்த சட்டம் அமுலுக்கு வருவதற்கு முந்தி இப்போது கிராம பஞ்சாயத்துகள் என்று வழங்கும் 2-ம் தரம் கிராம பஞ்சாயத்துகளின் தலைவர்கள், நிர்வாக அதிகாரிகள் என்ற ஹோதாவில், இந்த பிரிவில் கண்ட காரியங்களை செய்யும் இடங்களுக்கு லைஸென்சுகள் கொடுத்து வந்தார்கள். இப்போது அம்மாதிரி லைஸென்சுகளை கிராம பஞ்சாயத்து தலைவர்களுக்கு கொடுக்க அதிகாரமில்லை. லைஸென்சுகளை இந்த பிரிவின்படிக்கு பஞ்சாயத்து கிராமங்களில் யுள்ளவர்கள் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் கமிஷனர்களிடம் பெறவேண்டும். அநேகமாக கமிஷனர்கள் கிராம பஞ்சாயத்துகளுக்கு 3 முதல் 12 வரை மைல்கள் தொலவில் இருப்பார்கள். அவர்களை காண்பதும் கஷ்டமாகும். கிராம பஞ்சாயத்துகளுக்கு அதிகமான பொருப்பும், கௌரவமும், செல்வாக்கும், அதிகாரங்களும் கொடுப்பதாக பிரசாரம் பண்ணிக் கொண்டே இந்த பிரிவின் படிக்கு கிராம பஞ்சாயத்து தலைவர்கள் லைசென்சுகள் கொடுத்து வந்த அதிகாரத்தை பிடுங்கிவிட்டது சரி அல்ல. முன்மாதிரியாக தங்களுடைய பஞ்சாயத்து கிராமங்களில் உள்ள இடங்களுக்கு கிராம பஞ்சாயத்து தலைவர்கள் லைசென்சுகள் கொடுக்க, அரசாங்கம் இந்த பிரிவுகளை திருத்தி விடவேண்டும். அப்போது தான் பஞ்சாயத்து ராஜ்யம் வளரும்.

இன்ன காரியங்களுக்கு லைஸென்ஸ் இல்லாமல் இடங்களை உபயோகிக்கலாகாது என்பது.

111. (1) அரசாங்கத்தார் தங்கள் அபிப்பிராயத்தில் மனித உயிருக்காவது, ஆரோக்கியத்துக்காவது தீங்கோ அல்லது அபாயமோ வெகுவாய் உண்டாக்கக்கூடிய காரியங்கள் எவை என்று ஒரு அறிக்கையினல் குறிப்பிட வேண்டும்.

(2) (i) பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலானது, நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியின் சம்மதத்தை முன்னதாக பெற்றுக்கொண்டு ஒரு அறிக்கையின் மூலம் பிரஸ்தாப அபிவிருத்தி தொகுதியில் இருக்கிற யாதொரு பஞ்சாயத்து கிராம அத்துக்குள்ளும், அல்லது ஒரு அறிக்கையின் மூலம் குறிப்பிட்ட பஞ்சாயத்து கிராமம் அல்லது பஞ்சாயத்து கிராமங்கள் அத்துக்குள்ளும். (1) உப-பிரிவின் படிக்கு நிர்ணயிக்கப்பட்ட காரியங்களுக்காக யாதொரு இடத்தையும் ஒரு லைஸென்ஸ் இல்லாமலும் அல்லது அந்த லைஸென்ஸில் குறிப்பிட்டுள்ள திட்டங்களை அனுசரித்தன்றி மற்றப்படியும் உபயோகிக்கக்கூடாதென்று அறிக்கையிடலாம்.

(ii) பட்டணம் பஞ்சாயத்து நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியின் சம்மதத்தை முன்னதாக பெற்றுக்கொண்டு அதன் பஞ்சாயத்து பட்டணம் அத்துக்குள் (1) உப-பிரிவின் படிக்கு நிர்ணயிக்கப்பட்ட காரியங்களுக்காக யாதொரு இடத்தையும் ஒரு லைஸென்ஸ் இல்லாமலும் அல்லது அந்த லைஸென்ஸில் குறிப்பிட்டுள்ள திட்டங்களை அனுசரித்தன்றி மற்றப்படியும் உபயோகிக்கக்கூடாதென்று அறிக்கையிடலாம்.

(3) (1) (2) உப-பிரிவுகளின் படிக்கு உண்டாகிய யாதொரு அறிக்கையும், அது பிரசுரித்த தேதியிலிருந்து அறுவது நாளுக்கு முன் யாதொரு சக்தி வாய்ப்பு உள்ளதாகாது.

(4) பஞ்சாயத்து பட்டணங்களில் நிர்வாக உத்தியோகஸ்தரும், பஞ்சாயத்து கிராமங்களில் கமிஷனரும் லைஸென்ஸ் கொடுக்கவும் அல்லது நிராகரிக்கவும் தகுந்த அதிகாரம் உள்ளவர் ஆவர்.

குறிப்பு

பி. 111-க்கும் பி. 112-க்கும் பேதங்கள்:—பி. 112 தொழிற்சாலைகளைக் கட்டுவதற்கும் யந்திரங்களை ஸ்தாபிப்பதற்கும் சம்பந்தமானது. இம் மாதிரி செய்வது ஒருதரம்

தான் செய்ய முடியும். ஆகையால் லைசென்சு ஒரு விசைதான் வாங்கவேனும். வருஷா வருஷம் வாங்க வேண்டியதில்லை. ஆனல் பி. 111-ன் கீழ் விதிகளின்படி குறிப்பிடுபவைகளுக்கு வருஷா வருஷம் லைசென்ஸ் வாங்கவேண்டும். அப்படி லைசென்ஸ் இல்லாமல் அந்த தொழிலை அல்லது காரியத்தை நடத்தினல் அது குற்றமாகும். [முத்துபாலு-எ-மதுரா முனிஸிபாலிடி, A. I. R. 1927 M 961=53 M. L. J. 633 (S. B.) : : பப்ளிக் பிராஸிகியூடர்-எ.-ரங்கநாயகலு, 50 M. 845=52 M. L. J. 653=A. I. R. 1927 M. 602 : : மதரூஸ் கார்ப்பரேஷன் எ. மதரூஸ் எலெக்டரிக் ட்ராம் வேஸ். 54 M 364=60 M. L. J. 551 (566)=A. I. R. 1931 M 152=I. R. 1931 M. 417]

பிரிவு 111, 112-களுக்கு வேண்டிய விதிகளை பி. 113 மூலமாக அரசாங்கம் செய்வதற்கு அதிகாரமுண்டு, ஆகையால் இந்த பிரிவுடன் பி. 112, 113 களின் கீழ் உள்ள-குறிப்புகளையும் கவனிக்கக் கோருகிறோம்.

பி. 111 பொது:—ஒரு பஞ்சாயத்தானது தன்னுடைய பட்டணத்தில் விதிகளில் குறிப்பிடப்பட்ட காரியங்களை பஞ்சாயத்து பட்டணத்திற்குள் யாதொரு இடத்திலும் நிர்வாக உத்யோகஸ்தரால் கொடுக்கப்படுகிற லைசென்ஸ் இல்லாமல் செய்யக்கூடாது. இம்மாதிரி ஒவ்வொரு பஞ்சாயத்தும் லைசென்சுகள் விதிக்க வேண்டுமென்று கட்டாயம் கிடையாது. சிறிய கிராமங்களில் விதிகளில் குறிப்பிட்ட காரியங்களை லைசென்ஸ் பெருமலே செய்யலாம் யாதொரு பஞ்சாயத்து விதிகளில் குறிப்பிட்ட காரியங்களுக்கு லைசென்ஸ் அடையவேண்டுமென்று அறிக்கையிடப்படுகிறதோ அதற்கு 60 நாள் பின்னிட்டு அந்த தீர்மானமானதுசெலாவணியாகும். அம்மாதிரி அறிக்கை செய்யாவிட்டால் யாதொரு லைசென்சும் பெறவேண்டியதில்லை.

லைசென்ஸு:—லைசென்ஸ்சுகளைப்பற்றிய பொதுவான நிபந்தனைகளை அறிய பி. 159 பார்க்கவும். லைசென்சு கொடாமல் நிராகரிப்பது பிரமாதமான காரியமாகும். இந்த செக்ஷன் கீழ் லைசென்சுகள் மூலம் நடத்தவேண்டிய காரியங்கள் அநேகமாகவும், ஜனங்களுக்கு வாழ்க்கையில் உபயோகப்படுவதாகவும் இருக்கிறது. இன்னும் லைசென்ஸ்பெற்ற அநேகர்கள் அவைகளின் மூலம் ஜீவிக்கவேண்டி யிருக்கிறது. இவைகளை எல்லாம் கவனித்து நிர்வாக உத்தியோகஸ்தர்கள் பிரபல காரணம் இன்றி லைசென்சு கொடாமல் தடுக்கமாட்டார்களென்று நம்புகிறோம். [சாமல் கோட்டா பஞ்சாயத் போர்டு-எ.-யார்க், An, L. R. 1933 M. 717 (719)=1933 M. W. N. 102 : : ராமசந்திர ராவ் குறித்து. A. I. R. 1924 M. 375.] யாதாவதொரு பஞ்சாயத்து ஒரு காரியத்தை லைசென்ஸ் இல்லாமல் செய்யக்கூடாதென்று பிரசுரித்தால் அது கிரமப்படி செய்திருக்கிறதென்று கருதவேண்டும். [ஆலந்தூர் யூனியன் போர்டு-எ.-பாலகிருஷ்ண, I. R. 1932 M. 594 (1)=A. I R. 1932 M. 508] இதில்கண்ட அறிக்கையை இந்த ஆக்ட் செலாவணிக்கு வருவதற்கு முந்திவெளியிட்டால் அது செல்லாது. [சேஷ பிரிவு குறித்து. 66 I. C. 429=1922 M. W. N. 79.]

இடம்:—ஒரு லைசென்சு ஒரு இடத்திற்கு கொடுத்தால் அந்த இடத்திற்கு அது செலாவணியாகுமே ஒழிய மற்ற இடத்திற்கு செல்லாது. [சக்கிரவர்த்தி எ. மாயாண்டி 30 M. 220] அந்த லைசென்சு ஆனது இடத்திற்கே ஒழிய நபருக்கல்ல. ஒரு லைசென்சை ஒரு காரியத்திற்கு கொடுத்தால் மற்ருெரு காரியத்திற்கு உபயோகப்படுத்தக்கூடாது. [நெல்லூர் முனிசிபல் கௌன்ஸில்-எ.-சுப்பையா 1. Weir 737] ஒரு கோர்ட்டிற்கு இந்த லைசென்சுகளை பஞ்சாயத்து கொடுக்கக்கூடாது என்று தடுக்க யாதொரு அதிகாரமும் கிடையாது. வெங்கடராம ரத்தினம்-எ -செக்ரடரி ஆப் ஸ்டெட், 60 M. L. J. 25=I. R. 1931 M. 147 = A. I. R. 1930 M. 896=53. M. 979] ஒரு சம்மனில் இன்ன இடத்தில் காரியம் செய்ததாக குறிப்பிடாவிட்டால் அந்த கேஸ் செல்லாது. [ஜேசுராஜ்-எ.-நாட்டோர் முனிசிபாலிடி 58 Cal. 1356=A. I. R. 1932 C 117=I. R. 1932 C: 222] எல்லா காரியங்களுக்கும் லைசென்சு அவசியம் இல்லை. இம்மாதிரியான சில காரியங்களால் தயாரிக்கப்பட்ட உற்பவம் (Product) வஸ்துக்களுக்கு லைசென்சு வேண்டியதில்லை. இப்படியிருக்க லைசென்ஸ் வேண்டிய காரியங்களை பஞ்சாயத்தினது அத்தின் வெளியே காரியத்தைச் செய்து ஒரு வஸ்துவாக முடித்து பஞ்சாயத்தின் ஹத்துக்குள் கொண்டுவந்தால் அதற்கு யாதொரு லைசென்சும் பெற வேண்டியதும் இல்லை. கட்டணமும் கொடுக்கவேண்டியதில்லை. [பானர்ஜி-எ.-பெங்காள் வர்ண கம்பெனி A. I. R. 1928. C. 531 (1)].

இடங்களை லைசென்ஸ் இல்லாமல் உபயோகிக்கலாகாது

நிர்வாக உத்தியோகஸ்தரும் லைசென்ஸும்:—பஞ்சாயத்து பட்டண எல்லைகளுக்குள் உள்ள இடங்களுக்குத்தான் நிர்வாக உத்தியோகஸ்தர் லைசென்சு கொடுக்கலாம். வெளியிடங்களுக்கு கொடுக்கக்கூடாது. அந்த இடங்களுக்கு ஏற்ற பிரதேச அதிகாரிகள் அதாவது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அல்லது முனிசிபாலிடி வகையருக்கள் லைசென்சு கொடுக்கலாம். [போதனூர் யூனியன்போர்டு—எ.-ராமசுப்பா, 30 Cr. L. J. 367. A. I. R. 1929 J 26 (e)].

காரியங்கள்:—ஒரு இடத்தை அநேக காரியங்களுக்கு உபயோகப்படுத்திவர ஒவ்வொரு காரியத்திற்கும் லைசென்சு வாங்கவேண்டியதாயிருக்க நிர்வாக உத்யோகஸ்தரானவர் ஒவ்வொரு காரியத்தின் லைசென்ஸிற்கும் உள்ள கட்டண பிரகாரம் மொத்த காரியங்களுக்கும் மொத்த லைசென்ஸ் கட்டணங்களையும் மொத்தமாக வசூல் செய்தால் அது சட்ட விரோதமாகாது. [நைனா முகம்மது-எ.-லாயிட் 1911-1 M. W. N. 71].

லைசென்ஸு குற்றங்கள்:—லைசென்ஸு குற்றங்களுக்கு குற்றவாளி என்று தண்டிப்பதற்கு முன்பு மாஜிஸ்ட்ரேட் ஆனவர் லைசென்ஸ் பெறவேண்டியது அவசியமா என்று கவனிக்கவேண்டும். விதிகளில் சொல்லப்பட்ட எல்லா காரியங்களுக்கும் லைசென்சு அவசியம் என்று ஒரு பஞ்சாயத்து அறிக்கை இடவேண்டியதில்லை. சிலவற்றிற்கு மாத்திரம் லைசென்சு அவசியமென்று அறிக்கை இட்டு மீதியை விட்டுவிடலாம். [உமேஷ் சந்திர—எ.-கல்கத்தா கார்ப்பரேஷன், A. I. R. 1936 C. 614] இந்த செக்ஷனை கடுமையாக உபயோகப்படுத்தக்கூடாது. ஒருவர் தற்கால அதிகாரத்தில் உள்ளவர்களின் ராஜீய கொள்கைக்கு விரோதமாயிருக்கிறாரென்றோ அல்லது இந்த பிரிவுக்கு சம்பந்தமில்லாத வேறு சொந்த காரணங்களை வைத்துக்கொண்டோ லைசென்சு கொடுக்காமல் மறுக்கக்கூடாது. ஒருவருடைய ஜீவனோபாயமா யிருக்கக்கூடிய வியாபாரத்தை நிறுத்துவதற்குள்ள அதிகாரத்தை அதி ஜாக்ரதையாய் உபயோகிக்கவேண்டும். பழமையானதும் பிரபல்யமானதும், பண நஷ்டம், வியாபார நஷ்டம், இந்நாட்டின் பொருள் நஷ்டம், ஏழைகளுக்கு தொழில் நஷ்டம் இவைகள் உண்டாக்கக்கூடிய வியாபாரத்தை திடீரென நிறுத்த உத்தரவு இடுவதும், மனு சரியான நமூனா படி எழுதப்படவில்லை என்றும், லைசென்சு கட்டண ரசீதுடன் எழுதிய கடிதம் சரியாயில்லை என்றும் கூறிய அற்பகாரணங்களைக் கொண்டு லைசென்சு கொடுக்க மறுப்பதானது ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. லைசென்ஸிற்காக கட்டவேண்டிய கட்டணத் தொகையையும் கடிதமும் பெற்றுக்கொண்டு கார்ப்பரேஷன் நிர்ணயிக்கப்பட்ட காலவரைக்கு பிறகு வைத்துக்கொண்டிருந்தால், மனுசெய்து கொண்டவர் அந்த அரசியல் வருஷத்திற்கு சரியான லைசென்சு பெற்றவராவார். லைசென்ஸிற்காக கொடுக்கப்படும் மனுவை கமிஷனர் பரிசோதனை செய்ததின் மேல் மறுக்கப்பட்டாலன்றி நிரந்தர கமிட்டியின் முன்வைக்க முடியாது. மனுவை பெற்றுக்கொண்டு பரிசோதனை செய்து, காரணத்துடன் முடிவு கூறினாலொழிய மற்றைய சந்தர்ப்பங்களில் நிரந்தரக் கமிட்டிக்கு ஆலோசிக்க யாதொரு பாத்யதையும் இல்லை [வெங்கடாசலம்-எ.-மதராஸ் கார்ப்பரேஷன் A. I. R. 1934 M. 70 = 65 M. L. J. 860] ஒரு காரியத்திற்கு அநேக ஆக்டுகளின் கீழ் லைசென்சுகள் வேண்டியிருந்தால் ஒவ்வொரு ஆக்டின் கீழும் லைசென்சுகள் வாங்கவேண்டும்.

ஒரே ஆக்டின் கீழ் ஒரு காரியத்திற்கு அநேக பிரிவுகளின் கீழ் தனித் தனியாக லைசென்சுகள் வாங்கவேண்டியிருக்கும் பட்சத்தில் அந்த லைசென்சுகளை எல்லாம் வாங்கித்தான் ஆகவேண்டும். மருந்துகுண்டு ஆக்டின் கீழ் ஒருவர் ஒரு லைசென்சு பெற்றால் அதுபோதுமானதல்ல. அவர் இந்த ஆக்டின் கீழும் லைசென்சு பெறவேண்டியதாகும். [பப்ளிக் ப்ராஸிக்யூடர் எ. கோவிந்தப்பிள்ளை 1 Weir. 740] ஒருவர் தோல் பதம் செய்யும் (டானரி) இடத்திற்கு என்று ஒரு லைசென்சு பெற்றிருந்து ஒரு சுண்ணாம்பு வேகும் கால்வாய் கட்டினால் அதற்கு தனிப்பட்ட லைசென்சு வாங்கவேண்டும். இந்த இரண்டிற்கும் ஒரே லைசென்சு போதாது. [பப்ளிக் ப்ராஸிக்யூடர்-எ.-பாசாமியான் 1 Weir 737] மூங்கில் பாய்கள் நீக்கப்படாவிட்டால் லைசென்சு பெறவேண்டும் [ஹுசேன்-எ.-பெல்லாரி முனிஸிபாலிடி [Weir 733] லைசென்சு பெறுவிட்டால் அது குற்றமாகும். ஷெட்யூல் II பார்க்கவும். ஒரு லைசென்ஸின் ஷரத்து சட்ட விரோதமென்று ஒரு லைசென்சு பெற்றவருக்கு தோன்றினால் அவர் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியோ கோர்ட்டு மூலமாகவோ அதை திருத்திக்கொள்ள வேண்டுமே ஒழிய தன்னிஷ்டப்படிக்கு அந்த ஷரத்தை மீறி நடக்கக்கூடாது. [பாச்சன்லாடா-எ.-பாம்பே முனிசிபாலிடி, A. I. R. 1936 B. 264.]

(காரியங்கள்) கைத்தொழில்களும் தொழிற்சாலைகளும்

விதி பி. 111 (1) படிக்கு (க-XXVI-26)

பஞ்சாயத்து, சம்பந்தப்பட்ட ரீஜனல் இன்ஸ்பெக்டரின் அங்கீகாரத்தை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, பிரஸ்தாப கிராமபட்டண எல்லைகளுக்குள் இருக்கிற எந்த இடத்தையும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரியங்களில் எவற்றிற்காகவாவது ஷை சட்டத்தின் 111-வது பிரிவின் படிக்கான லைசென்ஸ் ஒன்று இல்லாமல் உபயோகிக்கக் கூடாதென்று அறிக்கையிடலாம்.

(a) கற்பூரத்தைக் கொதிக்க வைப்பது.

(b) மாட்டுக் கொழுப்பு அல்லது கந்தகத்தை உருக்குவது.

(c) கழிவு மாமிசம், இரத்தம், எலும்புகள், மாட்டுத் தோல், மீன் அல்லது ஆட்டுத் தோலை சேகரித்து வைப்பது அல்லது அவை விஷயமாய் மற்றப்படி விவகரிப்பது.

(d) ஆடு, மாடு முதலியவற்றின் தோலைப் பதனிடுவது.

(e) கம்பளம் அல்லது ரோமத்தைக் கழுவுவது அல்லது உலர்த்துவது.

(f) மீன் எண்ணெய் தயாரிப்பது.

(g) சோப்புத் தயாரிப்பது.

(h) சவ்வரிசியைத் தயாரிப்பது அல்லது காய்ச்சி வடிப்பது; செயற்கை எருவைத்தயாரிப்பது; சர்க்கரை தயாரிப்பது அல்லது அதைச் சுத்தம் செய்வது; கள்ளிறக்குபவர்களாவது மரங்களின் அனுபோகத்தாரர்களாவது தங்கள் சொந்த வளவுகளிலேயே குடிசைக் கைத்தொழிலாக அல்லாமல் மற்றப்படி வெல்லம், கற்கண்டு அல்லது வெல்லப்பாகு தயாரிப்பது; பீடி அல்லது சுருட்டுகள் செய்வது.

(i) வெடி மருந்து அல்லது வாணமருந்து தயாரிப்பது.

(j) செங்கல், ஓடு, மட்பாண்டம் ஆகியவற்றுக்கான சூளை அல்லது சுண்ணும்புக் கால்வாய் போடுவது.

(k) (அரசாங்க ஆதிக்கத்துக்குட்பட்ட அல்லது அங்கீகாரமான ஆதிக்கத்துக்குட்பட்ட மாணவர் இல்லம் நீங்கலாக வேறு) ஹோட்டேல். ரெஸ்டாரென்ட் சிற்றுண்டிச் சாலை, காபி ஹவுஸ், போஜன விடுதி அல்லது தங்குமிடத்தை வைத்துவருவது.

(l) மனிதர்கள் உட்கொள்ளுவதற்காக மாவு அல்லது மாப்பண்டங்கள் அல்லது இனிப்புப் பண்டங்களைத் தயாரிப்பது.

(m) ஐஸ் அல்லது சோடா முதலிய பானவகைகளைத் தயாரிப்பது.

(n) பீர் காய்ச்சுவது, சாராயம் அல்லது (நிரசமாக்கப்பட்டதா யிருந்தாலும் சரி இராவிட்டாலும் சரி) ஆல்கஹால் அடங்கிய இதர ஸ்பிரிட்டைக் காய்ச்சி வடித்துத் தயாரிப்பது.

(o) வெட்டுமரம் விற்பது அல்லது அதை விற்பனைக்காகச் சேர்த்து வைப்பது.

(p) தானியம் வேர்க்கடலை, புளி, மிளகாய், வெல்லம், பருப்பு வகைகள், மாவு, தவிடு, பிண்ணுக்கு அல்லது எலிகள் வெகுவாய்த் தின்னக்கூடிய விவசாயப்பொருள் ஆகிய இவற்றை மொத்தமாகவோ சில்லறையிலோ விற்பனை செய்வது அல்லது மொத்த அல்லது சில்லறை வியாபாரத்துக்காக அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகமல்லாத மற்றக் காரியங்களுக்காகச் சேர்த்து வைப்பது.

(q) வெடி மருந்து அல்லது பற்றி எரியக்கூடிய பொருள்கள் எவற்றையாகிலும் சேர்த்து வைப்பது.

ஆனுல், பெட்ரோலியத்தைக் குறித்த 1934-ம் வருஷத்திய சட்டத்தின் நிபந்தனைகளால் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகள் அல்லது விளம்பரங்களால் எந்த அளவுகளுக்கு இச் சட்டத்தின் பிரயோகம் வரையறுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவுகளுக்கு மேல் பெட்ரோலியத்தையும் அதன் பொருள்களையும் சேர்த்து வைப்பதற்காக எந்த லைஸென்சும் வேண்டியதில்லை.

இடங்களை லைசென்ஸ் இல்லாமல் உபயோகிக்கலாகாது

(r) பருத்தியை மொத்தமாகவோ சில்லறையிலோ விற்பதற்காக அல்லது மொத்தமாகவோ சில்லறையிலோ வியாபாரம் செய்வதற்காக அல்லது நூலாக திரிப்பதற்காகச் சேகரித்து வைப்பது.

(s) அருவருப்பான அல்லது அனுரோக்கியகரமான நாற்றம் வீசும் எதையேனும் தயாரிப்பது

(t) யாதொரு எரி பொருள் அல்லது அரசாங்கத்தார் அப்போதைக் கப்போது விளம்பரம் பிறப்பித்து அதன் மூலமாக நிவாரணை செய்யக்கூடிய யந்திரத்தைத் தவிர இதர யந்தி ரத்தை கைத்தொழில் சம்பந்தமான யாதொரு காரியத்துக்காக உபயோகிப்பது.

ஆனல், வெட்டு மரம், விறகு, விழல், வேய்வதற்கான பொருள்கள், உலர்ந்த புல், பச்சைப் புல், வைக்கோல், நார் அல்லது நிலக்கரியைச் சேர்த்து வைப்பதற்காக அல்லது நெல்லைப் புழுக்குவதற்காக—அப்படி சேர்த்து வைப்பதும், புழுக்குவதும் சொந்த உபயோகத் துக்காக வென்றிருந்தால்—எந்த லைஸென்சும் வேண்டியதில்லை :

மேலும் பொதுஜன சுகாதாரத்தைக் குறித்த 1939-ம் வருஷத்திய சென்னப்பட்டணத் துச் சட்டத்தில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடியுள்ள தங்குமிடம் ஒன்றை வைத்திருப்பவர் அச் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்டிருந்தால் அத்தங்குமிடத்துக்காக இந்த பிரிவின் கீழ் எந்த லைஸென்சும் பெற வேண்டியதில்லை.

குறிப்பு

(d) தோல்பதனிடுவதில் சுண்ணும்பு சுடுவது ஓர் காரியமாயினும், தோல் பதனிடு வதற்காக லைசென்ஸ் பெற்றிருந்தாலும், சுண்ணும்பு சுடுவதற்காக தனியாய் ஒரு லைசென்ஸ் பெறவேண்டும். [பப்ளிக் பிராஸிக்கூடர்—எ.—பாசாமியான், 1 Weir 737] தோல் வேலைக்கு மாத்திரம் சுண்ணும்பு சுட்டால் லைசென்சு வேண்டியதில்லை என்று தோன்றுகிறது. ஏனென் ருல் இடத்திற்கு லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. தொழிலுக்கு அல்ல.

(i) 1884 வருஷத்து 4-வது ஆக்டாகிய இந்திய வெடி குண்டுகள் சட்டப்படி லைசென்ஸ் பெற்றிருந்தபோதிலும், ஒரு முனிசிபாலிடியின் எல்லைக்குள் வெடி குண்டுகள் வைத்துக் கொள்ள மேற்படி ஆக்ட் 188 (g) செக்ஷன்படி முனிசிபல் லைசென்ஸ் பெற்ருக வேண்டும். [பப்ளிக் ப்ராசிக்கூடர்—எ.—கோவிந்த பிள்ளை, 1 Weir 740].

(j) **பொது.**—சூளையில் கல் சுடுவதென்று இருந்தது. புது ஆக்டினல் கல், ஓடு, பானை, சுண்ணும்பு முதலியவை சுடுதல் என ஆகிவிட்டது. ஒரே இடத்தில் பல சூளை போட வேண்டுமானல் வேறு வேறு லைசென்ஸ் பெற வேண்டும். ஒவ்வொரு சூளைக்கும் பிரத்தியேக இடம் தேவையானதால் தனி லைசென்ஸ் வேண்டும்- [நெல்லூர் முனிசிபல் கௌன்சில் ஏ.—சுப்பையா, 1 Weri 737]. 1924-ம் வருஷம் முதல் ஒரு குயவன் சூளை போடுவதற்கு லைசென்ஸ் வாங்கவில்லை என்று 1926-ம் வருஷம் பிராது தொடரப்பட்டது. 166-வது செக்ஷன்படி வருஷம் முடிந்து மூன்று மாதம் வரையில் காலவரை யாதலால் 1924, 1925 வருஷத்திற்காக குற்றம்சாட்ட முடியாதெனவும், லைசென்ஸ் பெற தவறிவிட்டதற்கு 103-வது செக்ஷன்படி தாவா தொடரவேண்டுமே தவிர 165-வது செக்ஷன் பொருந்தாது என தீர்ப்பு கூறப்பட்டது. [53 M. L, J. Notes on Recent Cases Pag 41.]

(k) **ஹோட்டல்.**—காப்பி தயார் செய்து விற்கும் கடைக்கு லைசென்ஸ் பெற வேண்டிய தில்லை. மனிதர்கள் வந்து உட்கார்ந்து காப்பி சாப்பிடும் இடத்திற்கு மட்டும் லைசென்ஸ் பெற வேண்டும். ஒரு முனிசிபாலிடி கொடுத்த லைசென்ஸை அதன் சேர்மன் லைசென்ஸின் ஷரத்து படி இல்லை என்று நிவாரணை செய்துவிட்டு அந்த ஹோட்டல் சொந்தக்காரர் லைசென்ஸ் இல்லாமல் வியாபாரம் செய்ததாக குற்றம் சாட்டினல், விசாரிக்கும் மாஜிஸ்டிரேட்டுக்கு லைசென்ஸ் நிவாரணை செய்யப்பட்டது. நியாயமானதா என்பதை அறிய அதிகாரமுண்டு. [சிதம்பரம் முனிசிபல் கௌசில்—எ.—திருநாராயண 51 M.876 = A. I. R. 1928 M. 847.]

(p) தான்யம் என்பதினல் உணவுப் பொருள்கள். நெல்லு, அரிசி, நொய், கோதுமை, கேவுரு, சோளம், பொரி, அவுலு, மாவு முதலியன.

(p) **சேர்த்து வைப்பது.**—வியாபாரத்துக்கு அல்லது விற்பனைக்காக சேர்த்து வைப் பது போதுமானது. [சேஷாசலம் செட்டி—எ.—அரசர், 18 I. C. 663.] ஒரு மொத்த வியாபாரி 5 அல்லது 6 மூட்டைகளை வைத்திருப்பது சேர்த்து வைப்பதாகும். [சேஷப்பிரபு எ.—அரசர், 1922 M. W. N. 79.] ஏற்றுமதி செய்வதற்காக வஸ்துக்கள் சேகரிக்கப்

பட்டிருப்பது சரியான உதாரணமாகும். (பப்ளிக் ப்ராசிக்கூடர்-எ.-சைடலிகுட்டி அண்ட் சன்ஸ். 50 M. 752 = A. I. R. 1927 M. 624). சேர்க்கப்பட்டது சில நாட்களில் உபயோகத்திற்காக மட்டு மாதலின் சேர்ப்பிக்கப்பட்டதாகாது. [அரசர்-எ.-வாலஸ் மாவு மில், 29 Bom. 193].

(t) யந்திரம்.— நீராவி அல்லது மின்சார சக்தியினல், அல்லது எண்ணெ அல்லது காஸ் (புகை)னல் நடத்தப்படும் யந்திரம் என்று அறியவும். கையினல் வேலை செய்யப்படும் கைத்தறி யந்திரமாகாது. சிறிய தறிகளும், கைத்தொழில் சாமான்களும் லைசென்ஸ் பெறக்கூடிய யந்திரங்களென்று சட்ட நிரூபண சபையாரின் அபிப்பிராயமல்ல. கண்ணனூர் முனிசிபல் கௌன்சில்-எ.-பத்தைய்ய, [51 Mad. 601] கையால் வேலை செய்யும் அச்சு யெந்திரத்திற்கு லைசென்ஸ் பெற வேண்டியதில்லை. மேற்படி யெந்திரம் பீராண ஹானி உண்டாக்கக் கூடியதென சொல்லுவது அசம்பாவிதம். லைசென்ஸ் கட்டணம் விதிக்க லோகல் போர்டுக்கு அதிகாரமில்லை. [சிவபூஷணம்—எ.—திருவள்ளூர் பஞ்சாயத்து 70 M. L J. 113.]

இந்த ஷெட்யூவில் இரும்பு சேகரித்து வைப்பதைப்பற்றி கூருததால் இரும்பு சேகரிப்பது குற்றமாகாது. [ஆறுமுக எ. கார்ப்பொரேஷன், மதராஸ், 4 M. L. T. 321.] ஆனல் கிளாஸ் (p) படிக்கு லைசென்ஸ் வேண்டியதாக இருக்கும்.

அபராதம் —ஒரு இடத்தை லைசென்சு இல்லாமலோ, லைசென்சுக்கு விரோதமாகவோ நிர்ணயிக்கப்பட்ட யாதொரு காரியத்திற்காக உபயோகித்தால் அதற்கு 100 ரூபாய் வரை அபராதம் போடலாம். பி. 181 (1), (2), ஷெட்யூல்கள் II, III களை பார்க்கவும்.

ருஜுப்படுத்துவது.—(1) பஞ்சாயத்து விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட காரியங்களுக்காக லைசென்சு பெறவேண்டுமென தீர்மானித்தது.

(2) அதை விதிகள் படிக்கு அறிக்கையிடப்பட்டது.

(3) செய்த காரியமானது விதிகளால் நிர்ணயிக்கபட்டதும், லைசென்சு பெற வேண்டியதுமான காரியங்களில் அடங்கியிருக்கிறது என்று ருசுப்படுத்த வேண்டும்.

(4) எதிரி அம்மாதிரி காரியத்தை செய்தான் என்ருே அல்லது லைசென்சு பெற்றிருந்தால் லைசென்சு ஷரத்துகளுக்கு விரோதமாக நடந்துக்கொண்டான் என்று ருஜுப்படுத்த வேண்டும்.

விதிகள் — பி. 145. பி. 146, பி. 162 பி-178 (1) படிக்கு
பிரவேசித்துப் பார்வையிடுவதற்கான அதிகாரங்கள் பற்றிய வரையறைகளும் மேல் விசாரணையும்

1. 111-வது பிரிவின் (1) உட்பிரிவைச் சேர்ந்த (a) பகுதியின் காரியங்களுக்காக.—

(a) நிர்வாக உத்தியோகஸ்தராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற எவராவது சூரியாஸ்தமனத்துக்கும் சூரியோதயத்துக்கும் மிடையில் எப்போதும் பிரவேசிக்கக்கூடாது.

(b) நிர்வாக உத்தியோகஸ்தராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற எவராவது, குடியிருப்பு வீடு எதிலும், குடியிருப்பு வீடாக உபயோகிக்கப்படுகிற யாதொரு பொதுக் கட்டடத்தின் எந்தப் பாகத்திலும், அதன் ஆட்சியாளரின் சம்மதத்தைப் பெருமல் பிரவேசிக்கலாகாது. ஆனல், அவ்வாறு பிரவேசிக்க உத்தேசித்திருப்பதைப் பற்றி ஆறு மணி நேரத்துக்கு முன்னதாகவாவது மேற்படி ஆட்சியாளரிடத்தில் நோட்டிஸ் வந்து சேர்ந்திருந்தால் அவ்வாறு பிரவேசிக்கலாம்.

(c) 2 (b) விதியின் பிரகாரம் யாதொரு வளவில் நோட்டிஸ் கொடுக்காமலேயே மற்றப்படி பிரவேசிக்கும் போதும் ஒவ்வொரு விஷயத்திலும் ஸ்திரீகளுக்காக வென்று ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள ஓர் அறையிலிருப்பவர்கள் தங்களை மற்றவர்கள் பார்க்காதபடி அந்த வளவின் மற்ருெரு பாகத்துக்குப் பெயர்ந்து செல்ல நிர்வாக உத்தியோகஸ்தராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற எவராவது அவர்களுக்குப் போதிய நோட்டிஸ் கொடுக்கவேண்டும்.

(d) நிர்வாக உத்தியோகஸ்தராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற எவராவது, அவ்வாறு பிரவேசிப்பதன் அவசரத்துக்கேற்ப, அந்த வளவுகளின் ஆட்சியாளர்களுடைய சமூக ஆசாரங்களையும் மத ஆசாரங்களையும் கிரமமாகக் கவனிக்க வேண்டும்.

இடங்களை லைசென்ஸ் இல்லாமல் உபயோகிக்கலாகாது

2. 162-வது பிரிவின் (i) உட்பிரிவைச் சேர்ந்த (b) பகுதியின் காரியங்களுக்காக.—

(a) நிர்வாக உத்தியோகஸ்தராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற எவராவது சூரியோதயத்துக்கும் சூரியாஸ்தமனத்துக்கு மிடையில் யாதொரு வளவில் பிரவேசிக்கலாம்; மேலும் அவர், அந்த வளவு அப்போது பொது ஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டால் அல்லது அதில் யாதொரு கைத்தொழில் நடத்தி வரப்பட்டால், சூரியாஸ்தமனத்துக்கும் சூரியோதயத் துக்கு மிடையிலும் அதில் பிரவேசிக்கலாம்.

(b) மேற்படி சட்டத்தின்படி அல்லது அதன்கீழ் கேட்கப்படுகிற ஒரு லைசென்ஸ் அல்லது அனுமதி இல்லாமல் யாதொரு வளவு கீழே சொல்லப்பட்டுள்ள காரியங்களில் எவற் றிற்காகவாவது உபயோகிக்கப் படுகிறதென்றோ, அந்த வளவில் மேற்படி லைசென்ஸ் அல்லது அனுமதியின் திட்டங்களை யனுசரித்தன்றி மற்றப்படி ஏதாவது செய்யப்பட்டு வருகிறதென்றோ நம்புவதற்கு ஏது விருந்தால், நிர்வாக உத்தியோகஸ்தராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற எவராவது யாதொரு சட்டம், விதிகள்; சகாயச் சட்டங்கள் அல்லது ரெகுலேஷன்களின் நிபந்தனைகள் எவையேனும் அல்லது ஒரு லைசென்ஸ் அல்லது அனுமதியின் திட்டம் எது வேனும் அல்லது சட்ட சம்மதமான கட்டளை அல்லது தடை யுத்தரவு எதுவேனும் மீறப்பட்டு வருகிறதாவென்று தாம் சந்தேகமறத் தெரிந்துகொள்ளும் பொருட்டு இரவு, பகல் எந்நேரத் திலும், நோட்டிஸ் கொடுக்காமலேயே, அந்த வளவில் பிரவேசிக்கலாம்.—

(i) மாட்டுத் தோல்களையும் ஆட்டுத் தோல்களையும் பதனிடுதல்.

(ii) வெடி மருந்து அல்லது வாண மருந்து தயாரித்தல்.

(iii) காய்ச்சி வடிப்பது மூலம் பீர் தயாரித்தல், சாராயம் தயாரித்தல் அல்லது (வீரியம் குறைக்கப்பட்ட அல்லது குறைக்கப்படாத) ஆல்கொஹா லுடன் கூடிய இதர மது வகைகளைத் தயாரித்தல்.

(iv) வெடிக்கக்கூடிய அல்லது எரியக்கூடிய எவையேனும் பொருள்களைச் சேகரித்து வைத்தல்.

குறிப்பு

நிர்வாக அதிகாரி காரணத்துடன் தான் பிரவேசிக்க வேண்டும். அக் கிரமமாக பிர வேசித்தால் அதைக் கோர்ட்டார் அங்கீகரிக்கமாட்டார்கள். நம்முடைய சட்டப்படிக்கும் ஒவ் வொருவருடைய வீடும் அவனுடைய கோட்டையாக யிருப்பதினால் அதில் பிரவேசிக்கும்போது முன் ஜாக்கிரதையுடன் பிரவேசிக்க வேண்டும். வேணுமென்றே பிரவேசிக்கும் பக்ஷத்தில் அவர்களை அக்கிரம பிரவேசம் செய்ததாக கருதப்படும். இண்டியன் பீனல் கோர்ட் செக்ஷன் 448ன் கீழ் அவர்களை குற்றவாளிகளாக பாவிக்கப்படும்.

பொது.—இந்த விதிகளைக் குறித்து நன்கு அறிய பிரிவு 162, 184 185களை பார்க்கவும். விதி 2 யில் கண்டிருக்கும் 4 அயிடங்களுக்கு மாத்திரம் யாதொரு நோட்டிஸ் கொடாமலும், இரவிலும், பகலிலும், பார்வையிடலாம். இதனால் ஏற்படுவது யென்னவென்றால் மிகுதி இடங் களை பார்வையிட வேண்டுமென்றால் 1-வது விதியில் கண்டபடி செய்ய வேண்டும்.

பி. 162 யை பார்க்கவும்.

ஒரு பார்ட்டி நேராக வருவதற்கு சக்தியில்லாவிட்டால், ஒரு உத்தியோகஸ்தர் போய் விசாரிக்க வேண்டுமென்றிருக்கிறது. எக்ஸிக்யூடிவ் அதிகாரிகளும் அம்மாதிரி செய்ய வேண்டுமென்று இல்லை. அம்மாதிரி இல்லாமையாலும் சம்மன் செய்தவர்களுக்கு சாக்ஷிபடி கட்டிக் கொடுக்கவேண்டுமென்று இல்லாமையாலும் இவர்கள் இந்த அதிகாரத்தை அனுவசிய மாக உபயோகப்படுத்தாமல் இருப்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. நலமாகயிருக்கும் யிருக்கிற தென்று வீணாக தாவா செய்யும் பக்ஷத்தில் இந்த நிர்வாக அதிகாரி கிரிமினல் புரொசீஜர் கோர்ட் செக்ஷன் 250 படிக்கு எதிரிக்கு காம்பென்ஸேஷன் கொடுக்கும்படி உத் திரவு செய்யலாம். அப்படியில்லாவிட்டால் சொல்ப அபராதம் போட்டு கேஸை முடிவு செய்யலாம்.

யாதொரு வரி, லைசென்ஸ் விஷயமாக எதிரியின் மூலமாக தவிர மற்ற எவ்விதத்திலும் அவைகளின் விஷயங்கள் கிடைக்காதென்று ஏற்பட்டாலொழிய, எதிரிக்கு நோட்டிஸ் அனுப்பவேண்டியது அவசியமானதென்று ருஜுப்படுத்த வேண்டும். பி. 161 யை பார்க்கவும்.

தொழிற்சாலை கட்டவும், யந்திரம் வைக்கவும் அனுமதி.

தொழிற்சாலைகளைக் கட்டுவதற்கும் யந்திரங்களை ஸ்தாபிப்பதற்கும் அனுமதி.

112. எந்த நபரும் பஞ்சாயத்து கிராமங்களில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் சம்மதியில்லாமலும், பஞ்சாயத்து பட்டணத்தில் பட்டணம் பஞ்சாயத்தின் அனுமதியில்லாமலும், அந்த அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களை அனுசரித்தன்றி மற்றப்படியும்.

(a) நீராவி சக்தி, ஜலசக்தி அல்லது இதர யந்திர சக்தியையாவது அல்லது மின்சார சக்தியையாவது உபயோகிக்க உத்தேசித்திருக்கும் யாதொரு தொழிற்சாலை, வேலைச் சாலை அல்லது வேலை செய்கிற இடத்தைக் கட்டவாகிலும் ஸ்தாபிக்கவாகிலும் கூடாது; அல்லது,

(b) விதிகளினுல் விலக்களிக்கப்பட்டிருக்கும் யந்திரங்களாயிராமல் அல்லது வஸ்துக்களைச் செய்வதற்கான தளவாடங்களாயிராமல் மேலே சொல்லப்பட்டபடி நீராவிச் சக்தி ஜல சக்தி, அல்லது இதர சக்தியைக் கொண்டு இயக்கப்படுகிற எவையேனும் யந்திரங்களை அல்லது வஸ்துக்களைச் செய்வதற்கான தளவாடங்களை யாதொரு வளவில் ஏற்படுத்தக்கூடாது.

குறிப்பு

பி. 112.—பி. 111ன் கீழ் உள்ள குறிப்புக்களை பார்க்கவும். மதருஸ் லோகல் போர்டு ஆக்டு 194-வது செக்ஷனின் கீழ் ஒரு குறித்த இடத்தில் (Industrial Area) கட்டாயம் பாக்டரி முதலியவை கட்டவேண்டுமென்று வெளிப்படையாகத் தெரியப்படுத்தவில்லை. அதனுல் அநேகமான வியாஜ்ஜியங்களும் பக்ஷபாதமான தீர்மானங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அதற்காகவென்று 93-வது செக்ஷனின் கீழ் கவர்மெண்டார் அம்மாதிரி இன்டஸ்ட்ரியல் ஏரியாக்களை (குறித்த இடங்களை) ஏற்படுத்தினுல் அந்த இடங்களில் தான் பாக்டரிகளை கட்டவேண்டும் என்றும் கண்டிருக்கிறது. செ. 112 (1) (c) (2)வில் "குறிப்பிட்ட பிரதேசங்கள்" என்னும் தலைப்பைப் பார்க்கவும்.

பொது.—மதருஸ் லோகல் போர்டு ஆக்ட் 194-வது செக்ஷன்படிக்கு அநேக பாக்டரி இன்ஸ்பெக்டர் முதலில் பெரிய உத்தியோகஸ்தரிடமிருந்து உத்திரவு பெறவேண்டியிருந்தது. அவை தவிர இன்னும் பிளான்களும் தயாரித்து அனுப்பவேண்டியிருந்தது. அதனுல் கிணறுகளிலிருந்து சிறிய என்ஜின்கள் அதாவது 5, 7, 10 குதிரை ஓட்டமுள்ள என்ஜின்கள் பம்புகள் மூலமாக தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளும் சாமான்ய மக்களுக்கு அதிக கஷ்டமாயிருந்தது. இந்த செக்ஷனில் மூலமும், பி. 113ன் கீழ் கவர்ன்மெண்டார் செய்யும் விதிகள் மூலமும் அம்மாதிரி கஷ்டங்கள் நீக்கிவிடப்படும் என்று எதிர்பார்க்கிறோம். அதற்காகத்தான் இந்த செக்ஷன் கிளாஸ் (b) யில் விதிகளினுல் விலக்களிக்கப்பட்ட யந்திரங்கள் என்ற வாக்யத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஷெட்யூல் I பார்க்கவும். இந்த செக்ஷனனது மிஷின்களை புதிதாக வைத்தாலும் அல்லது மாற்றினுலும் மாத்திரம் அமுலுக்கு வரும். மிஷின் இருக்கும் கட்டடத்தை பிறித்து கட்டுவதாக இருந்தால் அதற்கு இந்த செக்ஷனின் கீழ்யாதொன்றும் செய்வதற்கில்லை. [சத்தியநாராயண-எ.-பெஜவாடா முனிசிபாலிடி A. I. R. 1923 M. 375]. ஒரு மிஷினை மாற்றுவதாயிருந்தால் அதற்கு புது அனுமதி வேண்டும். [ஸ்மித் குறித்து, A. I. R. 1924 M. 289]. விதிகளுக்கு பி. 114ன் கீழ் பார்க்கவும்.

பாக்டரி.—இருபது அல்லது அதிக வேலைக்காரர்கள் ஒரு இடத்தில் வேலை செய்யும் பட்சத்தில் அதற்கு பாக்டரி என்று அர்த்தமாகும். [பாக்டரி ஆக்ட் XXV ஆப் 1934 செ. 2 (J)].

112. தண்டனை.—தொழிற்சாலை வொர்க்ஷாப் முதலியவற்றை சட்ட சம்மதமின்றி எழுப்புவதற்கு ரூபா ஆயிரம் வரையில் அபராதம் விதிக்கலாம். அதே மாதிரி குற்றத்தை தொடர்ந்து செய்து வந்தால் நாள் ஒன்றுக்கு ரூபா நூறு வரையில் அபராதம் விதிக்கலாம். II, III-ஷெட்யூல்களைப் பார்க்கவும். 111-ம் பிரிவின் கீழ் 242 பக்கத்தில் யுள்ள குறிப்புபடிக்கு III-வது ஷெட்யூலின் கீழ் யாதொரு தண்டனையும் இருக்கக்கூடாது.

சாட்சியம்: ருசு.—தொழிற்சாலை வொர்க்ஷாப் முதலியவற்றை சட்ட சம்மதமின்றி எழுப்பினர்.

லைஸென்ஸுகள், அனுமதிகள் ஆகிய இவைகளைக் கொடுப்பது விஷயமாகவும் புதுப்பிப்பது விஷயமாகவும் விதிகள் செய்ய அரசாங்கத்தாருக்குள்ள அதிகாரம்.

113. (1) அரசாங்கத்தார்— (a) 111-வது பிரிவின்படிக்கான லைசென்சு கொடுக்கக் கூடாதென்றோ புதுப்பிக்கக் கூடாதென்றோ தடுப்பதற்காகவும், அப்படிக் கொடுப்பது அல்லது புதுப்பிப்பது விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்காகவும் அந்த லைசென்சுகள் செலாவணியாகும் கால அளவைக் குறித்தும்.

(b) அந்த லைசென்சுகளுக்காகவேனும், அவைகளைப் புதுப்பிப்பதற்காகவேனும் இன்ன காலத்துக்குள் விண்ணப்பங்கள் செய்துகொள்ள வேண்டுமென்பதைக் குறித்தும.

(c) 112-வது பிரிவின்படிக்கான அனுமதிகளைக் கொடுக்கக் கூடாதெனத் தடுப்பதற்காகவும் அல்லது அப்படிக் கொடுப்பது விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்காகவும் விதிகள் செய்யலாம்.

(2) (1) உட்பிரிவைச் சேர்ந்த (c) பகுதியின்படிச் செய்யப்பட்ட விதிகளில் கைத் தொழில் காரியங்களுக்காகப் பஞ்சாயத்து கிராமங்களில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலும், பஞ்சாயத்து பட்டணத்தில் பட்டணப் பஞ்சாயத்தும் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களைப் பிரத்தியேகப்படுத்தி வைக்கவும், அந்தப் பிரதேசங்களுக்கு வெளியேயுள்ள யாதொரு தொழிற்சாலை, வேலைச் சாலை, வேலை செய்யுமிடம் அல்லது வளவு சம்பந்தமாய் 112-வது பிரிவின்படி அனுமதி கொடுக்க மறுப்பதைக் குறித்தும், நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியின் அனுமதிக்குட்பட்டும், மேற்படி பிரதேசங்களுக்கு வெளியே யிருக்கிற யாதொரு வளவில் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டிருக்கும் எந்த யந்திரங்களையாவது முன்சொன்ன பிரதேசங்களுக்கு அப்புறப்படுத்துவதைக் குறித்தும் கூட நிபந்தனை ஏற்படுத்தவும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு அதிகாரம் கொடுக்கப்படலாம்.

ஆனால், மத்திய அரசாங்கத்தாருடைய அல்லது இந்த ராஜ்ய அரசாங்கத்தாருடைய அல்லது வியாபார விளைபொருள்களின் மார்க்கெட்டுகளைக் குறித்த (சென்னை 1933-ம் வருஷத்து XX-வது சட்டமாகிய) 1933-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு மார்க்கெட் கமிட்டியாருடைய ஆட்சியிலாவது பொறுப்பிலாவது இருக்கும் யாதொரு வளவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள எந்தத் தொழிற்சாலையையேனும், வேலைச் சாலையையேனும், வேலை செய்யுமிடத்தையேனும் யந்திரங்களையேனும் அப்புறப்படுத்துவதற்கு அப்படிப்பட்ட எந்த விதியினாலும் அதிகாரம் ஏற்படமாட்டாது.

(3) அரசாங்கத்தார் பொதுவாகவோ குறிப்பிட்ட யாதொரு விஷயத்திலோ 111-வது பிரிவின்படியாவது 112-வது பிரிவின்படியாவது செய்யப்பட்ட அல்லது செய்யாமல் விடப்பட்ட யாதொரு காரியம் சம்பந்தமாய்த் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய உத்தரவு செய்யலாம் அல்லது கட்டளைகள் பிறப்பிக்கலாம்.

(4) 111–வது பிரிவின்கீழ் லைஸென்சுகளின் கட்டணங்களுக்காகவும் 112-வது பிரிவின்கீழ் அனுமதியின் கட்டணங்களுக்காகவும் கிடைத்த வருமானத்தை பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் வாங்கி கொண்டிருந்தால், அதை கிராம பஞ்சாயத்து நிதிக்கு ஜமகட்டவேண்டும் மேலும் பட்டணம் பஞ்சாயத்தால் வாங்கி கொண்டிருந்தால் பட்டணம் பஞ்சாயத்து நிதிக்கு ஜமகட்டவேண்டும்.

குறிப்பு

பி. 113 பொது.—இந்த செக்ஷன் அதிக அனுபவத்தினல் ஏற்படுத்தப்பட்டது. பிரிவுகள் 111, 112: பழைய லோகல் போர்டுகள் ஆக்டு செக்ஷன்கள் 193, 194-க்கு சமமானவை. அவைகளின் மூலமாய் லைசென்சு பெறுவதென்றால் ஏழை மக்களுக்கு மிகவும் கஷ்டமா யிருந்தது. மேலும் அந்த செக்ஷன்களில் குறிப்பிட்ட பிரதேசங்களில் தான்

லைசென்சுகள் பெறவேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று காட்டவில்லை. அதனால் அநேக கஷ்டங்களும் வியாஜியங்களும் உண்டாயின. இவைகளை ஒட்டி இந்த செக்ஷனின் கீழ் விதிகள் செய்யப்பட்டிருக்கிறது.

பி. 113 (2) குறிப்பிட்ட பிரதேசங்கள்.—இது மிகவும் முக்கியமானது. லைசென்சு பெறவேண்டிய காரியங்களால் அசுத்தம், தும்பு, தூசி, நெருப்பு பொறிகள், நாற்றம், காதிற்கு இனிமை இல்லாத சத்தம், ஜம்புலன்களுக்கும் அதிருப்தி உண்டாக்கக்கூடிய காரியங்களும் உண்டாகும், ஆகையால் அவைகள் ஜனங்கள் குடியிருக்கும் இடங்களுக்கு தனிப்பட்டு இருப்பது ஜனங்களுடைய நன்மைக்கே ஆகும். இதுவரையிலும் கிராமத்திலோ அல்லது கிராமத்தை அடுத்தாற்போலவோ உள்ள பாக்டரிகள் முதலியவைகள் போக இனி மேலாவது லைசென்சு பெறவேண்டிய காரியங்களை குறிப்பிட்ட பிரதேசங்களில் தான் செய்யும் படி செய்யவேணும். அப்படி செய்யா விட்டால் லைசென்சு கொடாமல் தடுத்துவிட வேண்டும்.

பி. 113 (3).—இந்த ஆக்டு செலாவணியாவதற்கு முந்தி ஒரு கிணற்றில் 5 குதிரை ஓட்டமுள்ள ஒரு இன்ஜினை வைத்து தண்ணீர் பாய்ச்சி பயிர் செய்ய வேண்டும் என்றால் அதற்கு அநேக கஷ்டங்கள் இருந்து வந்தது. அந்த லைசென்சு பெறுவதற்கு அநேக சடங்குகள் செய்யவேண்டி யிருந்தது. அவைகள் எல்லாம் இல்லாமல் சுலபமாக லைசென்சு களை குடிசைக் கைத்தொழில்களுக்கும், பயிர் வேலைகளுக்கும் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

மின்சாரத்தினால் அல்லது இதர சக்தியினால் செலுத்தப்படுகிற யந்திரங்களுக்கான உச்ச லைசென்ஸ் கட்டணம்

பி. 113, பி. 178 (1)-ன்கீழ் விதிகள்: (ஞ,-xiii-13)

I மின்சாரத்தினால் செலுத்தப்படுகிற யந்திரங்கள்.

1. மின்சார சக்தியினால் செலுத்தப்படுகிற எவையேனும் யந்திரங்களையாவது தயாரிப்பு யந்திர தளவாடங்களையாவது யாதொரு வளவிலே நிறுவுவதற்காக மேற்படி சட்டத்தில் கண்ட 92-வது பிரிவின்படிக் கொடுக்கப்படுகிற ஒரு அனுமதிக்காக விதிக்கப்படலாகும். கட்டணங்கள், இவ்விதிகளுடன் சேர்க்கப்பட்டிருக்கிற I-ம் ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள உச்ச தொகைகளுக்கு மேற்படலாகாது.

ஆனால், இவ்விதியின்படி விதிக்கப்படலாகும் கட்டணங்கள் அதே ஹார்ஸ் பவர் உள்ள வையும் மின்சாரத்தினால் அல்லாமல், மற்றபடி செலுத்தப்படுபவையுமான எவையேனும் யந்திரங்களையாகிலும் தயாரிப்பு யந்திர தளவாடங்களையாகிலும் நிறுவுவதற்காக விதிக்கப் படுகிற கட்டணங்களுக்கு மேற்படக்கூடாது.

2. மின்சார சக்தினால் செலுத்தப்படுகிற எவையேனும் யந்திரங்களாவது தயாரிப்பு யந்திர தளவாடங்களாவது உபயோகப்படுகிற ஓர் இடத்துக்காக ஒரு வருஷம் கொண்ட கால அளவுக்கு மேற்படி சட்டத்தில் கண்ட 111-வது பிரிவின்படி கொடுக்கப்படுகிற அல்லது புதுப்பிக்கப்படுகிற ஒரு லைசென்சுக்காக விதிக்கப்படலாகும் கட்டணங்கள், இவ்விதிகளுடன் சேர்க்கப்பட்டுள்ள I-ம் ஷெட்யூலில் குறிப்பிட்டிருக்கிற உச்ச தொகைகளுக்கு மேற்படக் கூடாது;

ஆனால், ஒரு வருஷத்துக்குக் குறைவான கால அளவுக்காக அத்தகைய ஒரு லைசென்ஸ் கொடுக்கப்பட்டால் அல்லது புதுப்பிக்கப் பட்டால், யாதொரு வருஷத்திலே அதே யந்திரங் கள் அல்லது அதே தயாரிப்பு யந்திர தளவாடங்கள் சம்பந்தமாய் அதே இடத்துக்காக விதிக்கப்படுகிற லைசென்ஸ் கட்டணங்களில் மொத்தமானது ஒரு வருஷம் கொண்ட கால அளவுக்கு அவை சம்பந்தமாய் கொடுக்கப்படுகிற அல்லது புதுப்பிக்கப்படுகிற ஒரு லைசென்சுக்கு விதிக்கப்படலாகும் கட்டணங்களுக்கு மேற்படக்கூடாது.

மேலும், இவ் விதியின்படி விதிக்கப்படலாகும் கட்டணங்கள், மின்சாரத்தினால் அல்லாமல் மற்றப்படிச் செலுத்தப்படுபவையும் அதே ஹார்ஸ்பவர் உள்ளவையுமான எவை யேனும் யந்திரங்களுக்காக அல்லது தயாரிப்பு யந்திரத் தளவாடங்களுக்காக விதிக்கப்படுகிற கட்டணங்களுக்கு மேற்படக்கூடாது.

யந்திரங்களுக்கு லைஸென்ஸு கட்டணம்

3. இவ்விதிகளுடன் சேர்க்கப்பட்டுள்ள I-வது செட்யூலில் குறிப்பிட்டிருக்கிற உச்ச தொகைகள் உரிய காலத்திலே செய்து கொள்ளப்படுகிற விண்ணப்பங்களுக்கு மட்டுமே பிரயோகப்படும். காலம் கடந்து செய்து கொள்ளப்படுகிற ஒரு விண்ணப்பத்தின் விஷயத்தில், அந்த ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள உச்ச கட்டணத்தில் 25 சத வீதத்துக்கு மேற்படாத ஓர் அதிகப்படியான கட்டணம் விதிக்கப்படலாம்.

அனுபந்தம்

I-ம் ஷெட்யூல்

நிருவனத்தின் ஹார்ஸ் பவர்	விதிக்கப் படத்தக்க உச்சகட்டணம். ரூ.	அ.	பை.
சினிமா காரியங்களுக்காக ரெக்டிபையர்களின் நிறுவனங்கள், ஹார்ஸ்-பவர் எதுவா யிருந்தபோதிலும் பாதகமில்லை ...	1	0	0
ஒரு ஹார்ஸ்-பவருக்கு மேற்படாத இதர நிறுவனங்கள் ...	1	0	0
ஒரு ஹார்ஸ்-பவருக்கு மேற்பட்டு, ஆனுல் ஐந்து ஹார்ஸ்-பவருக்கு மேற்படாத இதர நிறுவனங்கள் ...	5	0	0
ஐந்து ஹார்ஸ்-பவருக்கு மேற்பட்டு, ஆனுல் பத்து ஹார்ஸ்-பவருக்கு மேற்படாத இதர நிறுவனங்கள்	15	0	0
10 குதிரை ஓட்டத்திற்குமேல் 20 வரையில் ...	25	0	0
20 ,, ,, 30 ,, ...	40	0	0
30 ,, ,, 40 ,, ...	50	0	0
40 ,, ,, 50 ,, ...	75	0	0
50 ,, ,, 100 ,, ...	100	0	0
100 ,, ,, 200 ,, ...			

முதல் 100 குதிரை ஓட்டத்திற்கு ரூபா 100-ம் அதற்கு மேல் பட்ட குதிரை ஓட்டம் ஒன்றுக்கு ரூபா ஒன்றும்.

200 குதிரை ஓட்டத்திற்கு மேல் 500 வரையில் முதல் 200 குதிரை ஓட்டத்திற்கு ரூபா 200-ம் அதற்கு மேற்பட்ட குதிரை ஓட்டம் ஒன்றுக்கு அணு எட்டு

500 குதிரை ஓட்டத்திற்கு மேற்பட்டால் முதல் 500 குதிரை ஓட்டத்திற்கு ரூபா 350-ம், அப்புறம் ஒரு குதிரை ஓட்டத்திற்கு அணு நாலும்.

மொத்தத்தில் ரூபாய்கள் 450-க்கு மேல் போகக்கூடாது.

போர்ட் செயிண்ட் ஜார்ஜ் கெஜட், பார்ட் I-A, பக்கம் 159, தேதி, 17-11-1954

II மின்சாரமல்லாத வேறு சக்தியினுல் செலுத்தப்படுகிற யந்திரங்கள்.

4. மின்சாரமல்லாத வேறு யாதொரு சக்தியினுல் செலுத்தப்படுகிற எவையேனும் யந்திரங்களையாவது தயாரிப்பு யந்திரதளவாடங்களையாவது யாதொரு வளவில் நிறுவுவதற்காக மேற்படி சட்டத்தில் கண்ட 112-வது பிரிவின்படிக் கொடுக்கப்படுகிற ஓர் அனுமதிக்காக விதிக்கப்படக்கூடிய கட்டணங்கள் இவ்விதிகளுடன் சேர்த்துள்ள II-ம் ஷெட்யூலில் குறிப்பிட்டிருக்கிற உச்ச தொகைகளுக்கு மேற்படக்கூடாது.

5. மின்சராமல்லாத வேறு யாதொரு சக்தியினுல் செலுத்தப்படுகிற எவையேனும் யந்திரங்களாவது தயாரிப்பு யந்திர தளவாடங்களாவது உபயோகப்படுகிற ஓர் இடத்துக்காக மேற்படி சட்டத்தில் கண்ட 111-வது பிரிவின்படி ஒரு வருஷ காலத்துக்கு கொடுக்கப்படுகிற

அல்லது புதுப்பிக்கப்படுகிற ஒரு லைசென்சுக்காக விதிக்கப்படலாகும் கட்டணங்கள், இவ் விதிகளுடன் சேர்த்துள்ள II-ம் ஷெட்யூலில் குறிப்பிட்டிருக்கிற உச்ச தொகைகளுக்கு மேற்படக்கூடாது.

ஆனல், ஒரு வருஷத்துக்குக் குறைவான காலங்களுக்கு அத்தகைய யாதொரு லைசென்ஸ் கொடுக்கப்பட்டால் அல்லது புதுப்பிக்கப் பட்டால், யாதொரு வருஷத்திலே அதே யந்திரங்கள் அல்லது அதே தயாரிப்பு யந்திர தளவாடங்கள் விஷயமாய் அதே இடத்துக்காக விதிக்கப்படுகிற லைசென்ஸ் கட்டணங்களின் மொத்தமானது, ஒரு வருஷ காலத்துக்கு அவை விஷயமாய் கொடுக்கப்படுகிற அல்லது புதுப்பிக்கப்படுகிற ஒரு லைசென்சுக்காக விதிக்கப்படலாகும் கட்டணங்களுக்கு மேற்படக்கூடாது.

6. இவ்விதிகளுடன் சேர்ந்துள்ள II-ம் ஷெட்யூலில் குறிப்பிட்டிருக்கிற உச்ச தொகைகள், உரிய காலத்திலே செய்து கொள்ளப்படுகிற விண்ணப்பங்களுக்கு மட்டுமே பிரயோகப் படும். காலங்கடந்து செய்து கொள்ளப்படுகிற ஒரு விண்ணப்பத்தின் விஷயத்தில் அந்த ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள உச்ச தொகையில் 25 சதவீதத்து மேற்படாமல் ஒரு அதிகப் படியான கட்டணம் விதிக்கப்படலாம்.

II-ம் ஷெட்யூல்

நிறுவனத்தின் ஹார்ஸ் பவர்	விதிக்கப் படத்தக்க உச்ச கட்டணம் ரூ.	அ.	பை.
வீட்டுக் காரியங்களுக்கான நிறுவனங்கள்; ஹார்ஸ்-பவர் இரண்டுக்குள் ...	0	8	0
ஒரு ஹார்ஸ்-பவருக்கு மேற்படாத இதர நிறுவனங்கள் ...	1	8	0
ஒரு ஹார்ஸ்-பவருக்கு மேற்பட்டு ஆனல் ஐந்து ஹார்ஸ்பவருக்கு மேற்படாத இதர நிறுவனங்கள் ...	7	8	0
ஐந்து ஹார்ஸ்பவருக்கு மேற்பட்டு, ஆனல் பத்து ஹார்ஸ்பவருக்கு மேற்படாத இதர நிறுவனங்கள் ...	22	8	0
பத்து ஹார்ஸ்-பவருக்கு மேற்பட்டு, ஆனல் 20-ஹார்ஸ்பவருக்கு மேற்படாத இதர நிறுவனங்கள் ...	35	0	0
20 ஹார்ஸ்-பவருக்கு மேற்பட்டு, ஆனல் 30 ஹார்ஸ்பவருக்கு மேற்படாத இதர நிறுவனங்கள் ...	60	0	0
30 ஹார்ஸ்-பவருக்கு மேற்பட்டு, ஆனல் 40 ஹார்ஸ்பவருக்கு மேற்படாத இதர நிறுவனங்கள் ...	75	0	0
40 ஹார்ஸ்-பவருக்கு மேற்பட்டு, ஆனல் 50 ஹார்ஸ்பவருக்கு மேற்படாத இதர நிறுவனங்கள் ...	100	0	0
50 ஹார்ஸ்-பவருக்கு மேற்பட்டு, ஆனல் 100 ஹார்ஸ்பவருக்கு மேற்படாத இதர நிறுவனங்கள் ...	125	0	0
100 ஹார்ஸ்-பவருக்கு மேற்பட்ட இதர நிறுவனங்கள் ...	150	0	0

III. பொது

7. மேற்படி சட்டத்தில் கண்ட 112-வது பிரிவின் பிரயோகத்தின்றும் அல்லது மேற்படி சட்டத்தில் கண்ட 111-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்டு, 1951-ம் வருஷம் மார்ச் மாதம் 24-ம் தேதியன்று ஸ்தல நிர்வாக இலாகாவில் பிறந்த XXVI-ம் நெ. விள்ம்பரத்துடன் 1951-ம் வருஷம் மார்ச்சு மாதம் 27-ம் தேதியுள்ள போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜட் I-A பாகத்தின் ரூல்ஸ் ஸப்ளிமெண்டைச் சேர்ந்த 59-60 வது பக்கங்களிலே (இங்கிலீஷில்) பிரசுரிக்கப்பட்ட விதியில்கண்ட (t) இனத்தில் பிரயோகத்தினின்றும் நிவாரணை செய்யப்பட்டுள்ள யந்திரங்களின் அல்லது தயாரிப்பு யந்திர தளவாடங்களின் நிறுவனங்கள் விஷயமாய் சந்தர்ப்பத்திற்கேற்ப கொடுக்கப்பட்ட அனுமதிக்கான அல்லது லைசென்சுக்கான யாதொரு கட்டணத்தை விதிப்பதற்கு இவ்விதிகளில் கண்ட தெதனுலும் அதிகாரம் ஏற்படுவதாகக் கருதப்படமாட்டாது.

ஜனங்கள் கூடும் இடங்களுக்கு லைஸென்ஸு

யந்திர தளவாடத்தை அமைப்பது—அனுமதியினின்றும் நிவாரணே.

பி. 112ன் கீழ் விதி (க-XXVII-27)

மேற்படி சட்டத்தைச் சேர்ந்த 92-வது பிரிவின் நிபந்தனைகளினின்றும் அடியிற் கண்டவை நிவாரணையாகும்:—

(1) வீட்டு அல்லது சொந்தக் காரியங்களுக்காகவே அல்லது சௌகரியத்துக்காகவே உபயோகிக்க உத்தேசிக்கப்பட்ட மின்சார உபகரணங்களும் அக் காரியங்களுக்காக அல்லது சௌகரியத்துக்காக உபயோகிக்க உத்தேசிக்கப்பட்ட மின்சார யந்திரங்களும்.

(2) வீட்டு அல்லது சொந்தக் காரியங்களுக்காகவே அல்லது சௌகரியத்துக்காகவே உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டவையும் இரண்டு குதிரை யோட்டத்துக்கு மேற்படாதவையும் மின்சார சக்தி தேவைப்படாதவையுமான உபகரணங்களும், அக்காரியங்களுக்காக அல்லது சௌகரியத்துக்காக உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டவையும் இரண்டு குதிரை யோட்டத்துக்கு மேற்படாதவையுமான யந்திரங்களும்.

(3) வாஸ்தவமான விவசாய காரியங்களுக்கென்று உபயோகிக்கப்படும் மோட்டார்கள் உள்ளிட்ட மின்சார நிறுவனங்கள்.

(4) விவசாயக் காரியங்கள் சம்பந்தமாக அமைக்கப்பட்டவையும் இரண்டு குதிரை யோட்டத்துக்கு மேற்படாதவையும் மின்சார சக்தி தேவைப்படாதவையுமான நிறுவனங்கள்.

(5) சாதாரணமாக யாராலும் கவனிக்கப்படாத நிலையான ட்ரான்ஸ்பார்மர் ஸ்டேஷன்கள்.

(6) சாதாரணமாக யாராலும் கவனிக்கப்படாத கண்டென்ஸர் ஸ்டேஷன்கள்.

(7) சாதாரணமாக யாராலும் கவனிக்கப்படாத ரெக்டிபையர் ஸ்டேஷன்கள்.

ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களைக் குறித்த 1888-ம் வருத்திய சட்டம் பிரயோகப்படுவது

ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களைக் குறித்த 1888-ம் வருத்திய சென்னபட்டணத் துச் சட்டத்தை மாற்றுவது.

114. ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களைக் குறித்த (சென்னை 1888-ம் வருத்து II-வது சட்டமாகிய) 1888-ம் வருத்திய சென்ன பட்டணத்துச் சட்டத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே அரசாங்கத்தார் ஷி சட்டத்தை யாதொரு கிராமத்துக்காவது, பட்டணத்துக்காவது, அதன் பாகத்துக் காவது பிரயோகப்படும்படிச் செய்கிற பட்சத்திலே —

(a) சினிமாக் காட்சிகளை நடத்தும் காரியங்களல்லாத வேறே காரியங்களுக்காக மாத்திரம் உபயோகிக்கப்படப் போகும் யாதொரு இடம் அல்லது கட்டிடம் விஷயமாய் ஷி சட்டத்தின் பிரகாரம் ஒரு லைஸென்ஸுக்காக எந்த அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டுமோ அவரும், அந்த லைஸென்ஸை எந்த அதிகாரி கொடுக்கலாமோ அல்லது கொடுக்க மறுக்கலாமோ அவரும் பஞ்சாயத்து பட்டணங்களில் நிர்வாக உத்யோகஸ்தரும், பஞ்சாயத்து கிராமங்களில் கமிஷனரும் ஆவார்.

(b) ஷி சட்டத்தின் படிக்கான ஒரு லைஸென்ஸைக் கொடுத்தோ, கொடுக்க மறுத்தோ, ரத்து செய்தோ சிறிது காலம் செலாவணியாக வொட்டாமல் நிறுத்தி வைத்தோ நிர்வாக அதிகாரி பிறப்பிக்கும் உத்தரவின்மேல் பஞ்சாயத்துக்கு அப்பீஸ் செய்து கொள்ளலாம்.

(c) இந்த பிரிவின் கீழ் லைஸென்சுகளின் கட்டணங்களுக்காக பெற்றுக் கொண்ட வருமானத்தை பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் கிராம பஞ்சாயத்து நிதிக்கு, சேர்த்துவிட வேண்டும். மேலும் பட்டணம் பஞ்சாயத்தால் பெற்றுக் கொண்டிருந்தால் அதை பட்டணம் பஞ்சாயத்து நிதிக்கு சேர்த்துவிட வேண்டும்.

மக்கள் வழக்கமாக கூடும் இடங்களை குறித்த சட்டம்
1888-ம் ஆண்டு சென்னை 2-வது சட்டம்

இதை பிரிவு 114-ன் கீழ் 255 — 259 பக்கங்களில் அச்சிட்டு இருக்கிறது. இந்த சட்டத்தை 1960-ஆம் திருத்திய 20-வது சட்டத்தினால் திருத்தப்பட்டது. ஆகையால் அந்த 255—259 பக்கங்களுக்கு **பதிலாக** இதனடியில் உள்ளதை வாசித்து கொள்ளவேண்டும்.

இதை கடைசியாக 1960-ம் வருடத்திய 20-வது சட்டத்தினால் திருத்தப்பட்டது.

பொருளடக்கம்

		பக்கம்
1-	சுருங்கிய பெயரும் தொடக்கமும்	256-1
2.	பொருள் விளக்கம் ...	,,
	(a) "கட்டிடம்" ...	,,
	(b) "நிர்வாக அதிகாரி"	,,
3.	500 சதுர அடி கொண்ட அடைப் பிடத்தையாவது, கட்டத்தையாவது, லைசென்சில்லாமல் ஜனங்கள் வழக்கமாய் கூடுவதற்கு உபயோகிக்கக் கூடாது தென்பது.	,,
4.	லைசென்சுக்காக செய்து கொள்ள வேண்டிய மனு: அதில் என்ன அடங்கியிருக்க வேண்டிய தென்பது.	257-1
5.	இன்ன அதிகாரிக்கு மனு செய்து கொள்ள வேண்டிய தென்பது.	,,
6.	இடம் அல்லது கட்டடத்தை அதிகாரி பார்வையிட வேண்டும். முன்னிருந்ததோடு சேர்த்துக் கட்டவேண்டிய தென்றுவது அதில் மாறுதல் செய்யவேண்டியதென்றுவது உத்தரவும் செய்யலாம்.	,,
7.	இன்ன படிக்கானல் அதிகாரி லைசென்சு கொடுக்கலாமென்பது.	,,
8.	லைசென்சு இத்தனைநாள்செலாவணியாக வேண்டியதென்று அதில் காண வேண்டியது.	258-1
9.	லைசென்சை ரத்து செய்வது அல்லது கொஞ்ச காலம் செலாவணியாக ஒட்டாமல் பண்ணுவது.	,,
10.	6-வது ,7-வது அல்லது 9-வது பிரிவின்படி செய்யப்படுகிற உத்தரவின் பேரில் அப்பீல்.	258-1,
11.	ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடத்தில் பிரவேசிக்கவும் லைசென்சைப் பார்வையிடவும் இனி உபயோகிக்க வொட்டாமல்தடுக்கவும் அதிகாரம்.	
12.	இந்த ஆக்டின்படி நடத்தப்படும் எவ்வித நடவடிக்கைகளையும் பற்றி டிஸ்டிரிக்டு மாஜிஸ்டிரேட்டு புனராலோசனை செய்யலாம்:	259-1
12. A.	விநோதமாக காலம் கழிக்கும் சில இடங்களில்புகை (பீடி, சிகரெட், சுருட்டு) பிடிப்பதை தடுக்கப்பட்டது.	,,
13.	தண்டனைகள் ...	259-2
13. A.	இந்தச் சட்டம் முனிசிபல் எல்லை 3 மைல் வரையில் பொருந்தும்	,,
13. B	முனுசிபாலிடி வெளியிடங்களிலிருந்து வரும் வருமானத்தை பங்கிடுவது.	259-3
13. C.	மாற்றப்பட்ட கேசுகளுக்கு உள்ள ஷரத்து	,,
14.	பிரதேச வரம்பை மாற்றிய பொழுது உண்டான கேசுகளுக்கு ஏற்படுத்திய விஷயங்கள்.	,,
15	திருவாங்கூர் - கொச்சின் (1951-ம் வருடத்திய 8-வது சட்டம் ரத்து)	

மக்கள் வழக்கமாய் கூடும் இடங்களைக் குறித்த சட்டம்
(1888ஷூத்திய மதராஸ் 2-வது சட்டம்)

Madras Act II of 1888

மக்கள் வழக்கமாக கூடும் இடங்களை குறித்த சட்டம்

1888-ம் ஆண்டு சென்னை 2-வது சட்டம்

இதை கடைசியாக 1960ஷூத்திய 20-வது சட்டத்தினுல் திருத்தப்பட்டது.

சுருங்கிய பெயரும் தொடக்கமும்

1. (1) இச்சட்டம், மக்கள் வழக்கமாய் கூடும் இடங்களைக் குறித்த 1888-ம் ஆண்டு சென்னை சட்டம் என்று பெயர் பெறும்.

(2) (*a*) இது சென்னை மாவட்ட நகராட்சிச் சட்டம், 1920-ன் (சென்னை சட்டம் 5, 1920) கீழ் அமைக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்டதாகக் கருதப்படுகிற ஒவ்வொரு நகராட்சியிலும் உடனடியாக அமுலுக்கு வரத் தொடங்கும்.

(*b*) மாநில அரசாங்கம் விளம்பரம் வெளியிட்டு அதன் மூலமாக, இச் சட்டத்தின் எல்லா ஷரத்துக்களையும் அல்லது அவற்றில் எவற்றையேனும் சென்னை நகரம் நீங்கலாக இம்மாநிலத்தில் உள்ள வேறு எந்தப் பிரதேசத்திற்கும் விஸ்தரிக்கலாம்; ஷை ஷரத்துக்கள் அந்த விளம்பரத்தில் குறிப்பிடக்கூடிய தேதியிலிருந்து அமுலுக்கு வரத்தொடங்கும்; மேலும் அவர்கள் அத்தகைய யாதொரு விளம்பரத்தை ரத்து செய்யலாம் அல்லது மாற்றியமைக்கலாம். (1960ஷூத்திய 20-வது சட்டம் 1-ம் பிரிவினுல் திருத்தப்பட்டது.)

பொருள் விளக்கம்

2. இச் சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி மற்றப்படி—

(*a*) "கட்டிடம்" என்பதில், யாதொரு வீடு, குடிசை. கொட்டகை அல்லது கூரை வேய்ந்த அடைப்பு என்பதும் அடங்கும்;

(*b*) "நிர்வாக அதிகாரி" என்பது சென்னை மாவட்ட நகராட்சிச் சட்டம், 1920-ன் (சென்னை சட்டம் 5, 1920) 3-வது பிரிவு (8-C) பகுதியில் பொருள் கூறியுள்ள நிர்வாக அதிகாரி எனப் பொருள்படும். (1960ஷூத்திய 20-வது சட்டம் 2-ம் பிரிவினுல் திருத்தப்பட்டது)

500-சதுர அடி கொண்ட யாதொரு அடைப்பிடத்தை யாவது கட்டடத்தை யாவது லைசென்சில்லாமல் ஜனங்கள் வழக்கமாய் கூடுவதற்கு உபயோகிக்கக் கூடாதென்பது.

3. இந்த ஆக்ட்டு வழங்கி வருகிற எந்த விஸ்தீரணத்திலும் 500-அல்லது அதற்கு மேற்பட்ட சதுர அடிகொண்ட நிலையான அல்லது கொஞ்ச காலத்திற்கு ஏற்படுத்தப்பட்ட யாதொரு அடைப்பிடத்தையாவது, கட்டடத்தையாவது இதில் பின்னுல் சொல்லியிருக்கிற விதமாய் முன்னதாகவே ஒரு லைசென்சு பெற்றுக் கொண்டிருந்தாலன்றி,

(*a*) ஜனங்கள் வழக்கமாய் கூடுவதற்கு அல்லது விநோதமாய்க் காலங் கழிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது.

(*b*) 500 சதுர அடிக்கு குறையாது இருந்தாலும் ஜனங்கள் ஒரு இடத்தில் சென்னை கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டம், 1950 ன் (சென்னை சட்டம் 10, 1950) 5 (1) உட்பிரிவில் கண்ட (*a*) பகுதியின் கீழ் 1-ம் வகுப்புப் பஞ்சாயத்து என்று வகை படுத்தப்பட்ட ஒரு பஞ்சாயத்தின் — அல்லது சென்னை பஞ்சாயத்துக்கள் சட்டம். 1958-ன் கீழ் (சென்னைச் சட்டம் 35, 1958) நகரப் பஞ்சாயத்துக்காக அமைக்கப்பட்டுள்ள ஒரு பஞ்சாயத்தின் பஞ்சாயத்திற்கு – சேர்ந்தால் அதற்கும் லைசென்ஸ் அவசியமாகும், 1960-ஷூத்திய 20-வது சட்டம் 3 வது பிரிவினுல் திருத்தப்பட்டது.)

மக்கள் வழக்கமாய்க்கூடும் இடங்களைக் குறித்த சட்டம்

லைசென்சுக்காக செய்து கொள்ள வேண்டிய மனு: அதில் என்ன அடங்கி யிருக்க வேண்டிய தென்பது

4. ஜனங்கள் வழக்கமாக கூடும் இடமாகவாவது விநோதமாய் காலங்கழிக்கும் இடமாகவாவது யாதொரு அடைப்பிடம் அல்லது கட்டடத்தை உபயோகிக்கவாகிலும் யாதொரு அடைப்பிடம் அல்லது கட்டடத்தை அப்படிப்பட்ட காரியத்திற்காக கட்டவாகிலும் லைசென்ஸ் பெற்றுக்கொள்ள யாருக்காவது விருப்பமிருக்கிற பட்சத்தில், அந்த இடம் அல்லது கட்டடத்திற்கு சொந்தக்காரன் இன்னாறென்பதையும், அது இன்ன இடத்திலிருக்கிறதென்பதையும், இன்ன பரிமாணமுள்ள தென்பதையும், இன்ன மாதிரியான தென்பதையும், அந்த அடைப்பிடம் அல்லது கட்டடம் இன்ன வஸ்துவைக்கொண்டு செய்யப்பட்டிருக்கிறது அல்லது செய்வதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிற தென்பதையும், அது நிலையாய் எப்போதும் இருப்பதற்காவது கொஞ்சகாலம் வரையில் இருப்பதற்காவது போடப்படுகிறதா அல்லது போடும்படி உத்தேசிக்கப்படுகிறதா வென்பதையும், அது எதற்காக உபயோகப்படுத்த உத்தேசிக்கப்படுகிறதோ அதையுங் கண்டு 5-வது பிரிவில் கண்டிருக்கிற அதிகாரிக்கு ஒரு மனு செய்து கொள்ளவேண்டியது.

இன்ன அதிகாரிக்கு மனு செய்துகொள்ள வேண்டிய தென்பது-

5. அப்படிப்பட்ட மனுவை அந்த அடைப்பிடம் அல்லது கட்டடம் யாதொரு நகராட்சி பட்டணத்திலிருக்கும் பட்சத்தில் அந்த நிர்வாக அதிகாரிக்கும் மற்றப்படி ஒவ்வொரு விஷயத்திலும் அந்த இடம் அல்லது கட்டடம் கட்டப்பட்டிருக்கிற பிரதேச விஸ்தீரணத்தில் அதிகாரமுடைய யாதொரு தாசீல்தார் பதவிக்கு குறையாத பதவி வகித்துவரும் யாதொரு ரெவின்யூ அதிகாரிக்கும் செய்துகொள்ள வேண்டியது. (1960-ஆம் ஆண்டின் 20-வது சட்டம் 4-வது பிரிவுனால் திருத்தப்பட்டது.)

இடம் அல்லது கட்டடத்தை அதிகாரி பார்வையிடவேண்டும். முன்னிருந்ததோடு சேர்த்துக்கட்டவேண்டியதென்றுவது அதில் மாறுதல் செய்ய வேண்டிய தென்றுவது உத்தரவும் செய்யலாம்.

6. அப்படிப்பட்ட யாதொரு மனுவை வரப்பெற்று கொள்வதின் பேரில் அந்த மனு எந்த அதிகாரிக்கு செய்து கொள்ளப்பட்டதோ, அந்த அதிகாரி எதற்காக லைசென்சு வேண்டியதோ யிருக்கிறதோ அப்படிப்பட்ட இடம் அல்லது கட்டடத்தை பார்வையிட வேண்டியது, மேலும் அந்த அடைப்பிடம் அல்லது கட்டடம் எந்த வஸ்துவைக்கொண்டு கட்டப்பட்டிருக்கிறதோ அதிலாவது எந்த ஏற்பாட்டின்படி அமைக்கப்பட்டிருக்கிறதோ அதாவது அதில் கூடும்படியான ஜனங்களுடைய பந்தோபஸ்துக்காக என்னென்ன முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதோ அவைகளிலாவது யாதொரு மாறுதலையாகிலும் பின்னும் சேர்க்கையாக யாதொன்றையாகிலும் செய்யும்படி அந்த மனுதாரருக்கு எழுத்து மூலமாய் அறிக்கை செய்து உத்தரவு பண்ணலாம். மேலும் அப்படிப்பட்ட மாறுதலையாவது சேர்க்கையான யாதொன்றையாவது செய்து முடிக்கிற வரையில் லைசென்சு கொடுக்கமாட்டேனென்று நிராகரிக்கலாம்.

இன்னபடிக்கானுல் அதிகாரி லைசென்சு கொடுக்கலா மென்பது.

7. (a) அடைப்பிடம் அல்லது கட்டடம் எப்படி உத்தேசமோ அப்படி ஜனங்கள் வழக்கமாய்க் காலங் கழிக்கவாவது அதை யாருக்கும் கெடுதி நேரிடாமல் உபயோகப்படுத்தலா மென்றும்,

(b) அது அமைந்திருக்கும் இடத்தின் விஷயமாகவாவது, அதன் உரிமைச் சுதந்திரத்தின் விஷயமாகவாவது உத்தேசிக்கப்பட்ட காரியத்தின் விஷயமாகவாவது யாதொரு ஆட்சேபனையுமில்லை யென்பதும்,

அந்த அதிகாரிக்குத் திருப்திகரமாய்த் தோற்றுகிற பட்சத்தில் அவர் லைசென்சு எழுதித் தன் கையெழுத்து போட்டு மனுதாரனுக்குக் கொடுக்க வேண்டியது. அந்த லைசென்சில் அந்த அடைப்பிடம் அல்லது கட்டடத்தையும் அது எந்த காரியத்திற்கு உபயோகபப்டுத்துவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த காரியத்தையும் காண வேண்டியது. அப்படிப்பட்ட லைசென்சானது ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் அப்போதைக்கப்போது விதி ஏற்படுத்தி உத்தரவு பண்ணுகிற நமூனுப்படிக்கும் கட்டணத்திற்கும் திட்டங்களுக்கும் உட்பட்டு மிருக்க வேண்டியது.

அந்த அதிகாரிக்கு மேற்கண்டபடி திருப்திகரமாய்த் தோன்ருத பட்சத்தில், தான் எந்த எழுத்துக்களைக்கொண்டு நிராகரிக்க வேண்டி யிருக்கிறதோ அந்த எழுந் துக்களைக் கண்டெழுதி லைசென்சு கொடுக்க மாட்டேனென்று நிராகரிக்கலாம்.

லைசென்சு இத்தனை நாள் செலாவணியாக வேண்டியதென்று அதில் காண வேண்டியது.

8. இந்த ஆக்டின்படி கொடுக்கப்படுகிற ஒவ்வொரு லைசென்சிலும் அது இத் தனை நாள் செலாவணியாகிக் கொண்டு வருமென்று காண வேண்டியது. அந்த காலம் முடிந்த பிறகு அது செலாவணி யாகாமல் ரத்தாய் போகும்.

லைசென்சு ரத்து செய் வது அல்லது கொஞ்ச காலம் செலாவணியாக வொட்டாமல் பண் ணுவது,

9. இந்த ஆக்ட்டின்படி லைசென்சு கொடுக்கிற எந்த அதிகாரியாவது:—

(a) லைசென்சு மோசடியாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தென்றும்,

(b) அடைப்பிடம் அல்லது கட்டடம்-ஜனங்கள் வழக்க மாய்க் கூடுகிற அல்லது விநோதமாய்க் காலங்கழிக்கிற காரி யங்களில் எந்த காரியத்திற்காக லைசென்சு கொடுக்கப் பட்டதோ அது தவிர வேறே காரியங்களுக்கு உபயோகப் படுத்தப்பட்ட தென்றும்,

(c) எந்தக் காரியத்திற்கு லைசென்சு கொடுக்கப்பட்டதோ அந்த காரியத் திற்கு அந்த இடம் அல்லது கட்டடத்தை பயமில்லாமல் இனி உபயோகப் படுத்தக் கூடாதென்றும்.

(d) லைசென்ஸின் யாதொரு ஷரத்து மீறப்பட்டு இருக்கிறது என்றும்

நம்புவதற்கு தனக்கு ஏதுவிருந்தால், அந்த ஏதுக்களை எழுதி அந்த லைசென்சை ரத்துசெய்யலாம், அல்லது கொஞ்ச காலம் செலாவணியாக வொட்டா மல் பண்ணலாம்.

6-வது, 7-வது அல்லது 9-வது பிரிவின்படிசெய் யப்படுகிற உத்தரவின் பேரில் அப்பீல்

10. (1) இந்த ஆக்டின்படி லைசென்சு கொடுக்க வேணுமென்று மனு செய்துக் கொள்ளுகிறவன் இதன் 6-வது பிரிவின்படிக்காவது, 7-வது பிரிவின்படிக்காவது, 9-வது பிரிவின்படிக்காவது, செய்யப் படும் எந்த உத்திரவும் மாவட்ட கலெக்டரினுல் செய்யப்பட்ட தாக யிருந்தாலொழிய மற்றபடி அந்த உத்தரவின்பேரில் அப்பீல் செய்து கொள்ளலாம்.

(2) எந்த உத்தரவின் பேரில் அப்பீல் செய்து கொள்ளப்படுகிறதோ அந்த உத்தரவை மனுதாரன் பெற்றுக் கொண்ட தேதி முதல் 30 நாளைக்குள் அப்பீல் செய்ய வேண்டியது.

(3) யாதொரு முனிஸிபல் பட்டணத்தில் அந்த முனிஸிபல் கவுன்சிலுக்கு, மற்ற ஒவ்வொரு பிரதேச விஸ்தீரணத்திலும் ரெவினியி டிவிஷனல் ஆபீசருக்கும் அல்லது பிரதம உத்தரவு (மூல ஆணை)யை ரெவினியு டிவிஷனல் ஆபீசரால் பிரபித்து இருந்தால், மாவட்ட கலெக்டருக்கும் அப்பீல் செய்துகொள்ள வேண்டியதாகும்.

(4) 5-வது பிரிவின்படி எந்த அதிகாரிக்கு மனுசெய்து கொள்ளப்பட்டதோ அந்த அதிகாரியைப்போலவே அப்பீல் அதிகாரிக்கும் அடைப்பிடம் அல்லது கட்டடத்தை பார்வையிடவும் அதில் மாறுதல் செய்யவேண்டிய தென்ருவது முன்னிருந்த தோடு சேர்த்து கட்டவேண்டிய தென்ருவது உத்தரவு செய்யவும் அதிகாரமுண்டு. மேலும் அவர் லைசென்சு கொடுக்கலாம், கொடுக்காமல் நிறுத்திப்போடலாம் அல்லது அவருக்கு யுக்தமாக தோற்றுகிறபடி வேறு உத்திரவு செய்யலாம்.

ஜனங்கள்வழக்கமாய்க் கூடும் இடத்தில் பிரவேசிக்கவும் லைசென்சைப் பார்வையிடவும் இனி உபயோகிக்க வொட்டாமல் தடுக்கவும் அதிகாரம்

11. எந்த அடைப்பிடம் அல்லது கட்டடத்திற்கு இந்த ஆக்ட்டின்படி லைசென்சு வேண்டியிருக்கிறதோ அந்த அடைப்பிடம் அல்லது கட்டடத்திற்குள் எப்போதாகிலும் பிரவேசிப்பதற்கும், லைசென்சு கொடுக்கப்பட்டிருந்தால் அதைப் பார்வையிடுவதற்கும், லைசென்சு இல்லாத பட்சத்திலாவது லைசென்ஸில் கண்ட திட்டங்கள் அனுசரிக்கப்படாத பட்சத்திலாவது, உடனே ஜனங்களுக்குப் பெருத்த அபாயம் நேரிடுமென்று பயப்பட தனக்கு முகாந்தரமிருக்குமாகில், அப்படிப்பட்ட அடைப்பிடம் அல்லது கட்டடத்தை ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடமாகவாவது விநோதமாய் காலங்கழிக்கும் இடமாகவாவது இனி உபயோகிக்காதபடி தடுப்பதற்கு தாசில்தார் பதவி வகித்து வரும் யாதொரு ரெவினியு ஆபீசருக்காவது அல்லது யாதொரு காவல் நிலையத்தின் பொறுப்பு வகிக்கிற அல்லது தலைமைக் காவலர் பதவிக்கு மேற்பட்டுள்ள காவல் துறை அதிகாரிக்காவது அதிகாரம் உண்டு. [1960-ஆம் ஆண்டுத்திய 20-வது சட்டம் 7-ம் பிரிவுனல் திருத்தப்பட்டது.]

இந்த ஆக்டின்படி நடத்தப்படும் எவ்வித நடவடிக்கைகளையும் பற்றி மாவட்ட கலெக்டர் புனராலோசனை செய்யலாம்.

12. மாவட்ட கலெக்டர் இந்த ஆக்டின்படி நடத்தப்பட்ட எந்த நடவடிக்கையைச் சேர்ந்த ரெகார்டையும் வரவழைத்துப் பரிசோதிக்கலாம். அதற்குச் சம்பந்தமான எவ்வித ரிபோர்டையும் வரவழைக்கலாம். பின்னும் எவ்வித விசாரணையையும் செய்யலாம் அல்லது செய்விக்கலாம். மேலும் அந்த நடவடிக்கை வைத்திய அதிகாரி என்ன உத்தரவு செய்திருக்கலாமோ அவ்விதமான உத்தரவும் செய்யலாம்.

விநோதமாக காலம் கழிக்கும் இடங்களில் புகை (பீடி, சிகரெட், சுருட்டு) பிடிப்பதை தடுக்கப்பட்டது.

12-A. (1) பொது மக்களை பணம் பெற்றுக் கொண்டோ, இல்லாமலோ, ஒரு அடைப்புள்ள இடத்தில் அல்லது கட்டிடத்தில், நடக்கும். விநோதத்திற்காக பிரவேசிக்க செய்யும்பொழுது, எந்த நபரும் (2)-வது உபபிரிவில் விளக்கஞ் செய்த படிக்கு அந்த தடுக்கப்பட்ட காலத்தில்—

(a) மேடையின் பேரிலும் (ஆனல் அந்த விநோதத்திற்கு புகை பிடிப்பது அவசியமாக இருந்தால் அன்றியும்)

(b) பொது மக்கள் கூடும் இடத்திலும்-அதாவது-பொது ஜனங்கள் கூடுவதற்கு என்று தடுக்கப்பட்டதும் ஒதுக்கப்பட்டதுமான இடத்தில் அல்லது கட்டிடத்திலும் புகை பிடிக்க கூடாது,

ஆனல் அரசாங்கம் போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் விளம்பரம் செய்து விநோதங்களில் சில வகுப்புகளே இந்த உபபிரிவில் கண்ட ஷரத்துகளிலிருந்து நீக்கிவிடலாம்.

(2) (1)-ம் உபபிரிவு காரியங்களுக்காக 'தடுக்கப்பட்ட காலம்' என்பது விநோதம் நடத்துவதற்கு 30 நிமிடங்கள் முந்தியும்' முடிவதற்கு போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் விளம்பரம் செய்தபடிக்கு அந்த அந்த விநோதங்களுக்கு தகுந்த படிக்கு பிடிக்கும் காலம் என்று பொருள்படும்.

(3). எந்த நபராவது இந்த பிரிவில் உள்ள ஷரத்துக்களுக்கு மீறி நடப்பாராகில் அந்த நபரை சடுதியாக (உடனே) அந்த தடுப்பு இடம் அல்லது கட்டடத்திலிருந்து ஒரு போலீஸ் ஆபீஸரால் வெளிபடுத்தப்படலாம். மேலும் அந்த நபரை ரூபா 50/-வரையில் அபராதம் கட்டும்படி செய்யலாம்.

(4) 3-வது உபபிரிவின் படிக்கு வெளிபடுத்தப்பட்ட நபர் அந்த விநோதத்திற்காக கட்டிய பணத்தை திருப்பிக் கொடுக்கும்படி கேட்க பாத்தியதை உள்ளவர் ஆகமாட்டார். அந்த நபருக்கு யாதொரு மாரு நஷ்டமும் கட்டிக் கொடுக்க வேண்டியதில்லை.

பிரிவு 12-A (a)ன் கீழ் குறிப்பு

நீக்கிவிட்ட இடம்

அடைப்புக்குள் உள்ளதும், கூரையில்லாமல் திறந்த வெளியாக இருக்கும் இடங்கள் நீக்கி விடப்பட்டது (S R O.B. No. 148 of 1960.)

நீக்கி விட்ட காலம்

காலை 6 மணிமுதல் இரவு 12 மணி வரையிலும் இரவு 12 மணி முதல் காலை 4 மணி வரையிலும், நீக்கிவிடப்பட்டது. (S. R.O. No. B. 149 of 1960) இந்த இரண்டு S. R. O. க்களேயும் போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்பார்ட் I-A. 27—3—1960) பக்கம் 61, ஜி. ஒ. நெ. 113. எல். எ. பார்ட் I. ஏ. 27- 3—1960 பக்கம் 61-யை பார்க்கவும்.

தண்டனைகள்.

13. யாதொரு அடைப்பிடம் அல்லது கட்டடத்தை தன்னுடைய நேர் விசாரணையில் வைத்துக் கொண்டிருக்கிற எவனுவது லைசென்சு பெருமல் ஜனங்கள் வழக்கமாய்க்கூடுவதற்கு அல்லது விநோதமாய்க் காலங்கழிப்பதற்கு உபயோகிக்க வொட்டினுலும், இந்த ஆக்டின்படி லைசென்சு பெற்றுக் கொண்டு அப்படிப்பட்ட லைசென்சில் கண்ட நிபந்தனைகளில் எதற்காவது விரோதமாய் அப்படி உபயோகிக்க வொட்டினுலும் அப்படிப்பட்ட ஒவ்வொருவனும் யாதொரு மாஜிஸ்டிரேட்டுக்கு முன்பாக குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதின் பேரில் ஐந்நூறு ரூபாய்க்கதிகப்படாமல் அபராதத்திற்குள்ளாவான்.

இந்தச் சட்டம் முனிசிபல்எல்லை 3மைல் வரையில் பொருந்தும்

13-A. ஒரு மாவட்டத்தில் உள்ள ஒரு நகர ஆட்சியினுடைய அத்தின் மூன்று மைல் வரையில் (அதாவது அந்த 3மைல் பிரதேசத்தில் உள்ள இடம் அந்த நகர ஆட்சியின் பாகமாக கருதி) இந்த ஆக்டின் விஷயங்கள் பொருந்தும் ; ஆனல் இந்த பிரிவு.

(i) அந்த சமயத்தில் அந்த பிரதேசம் மற்ற ஒரு நகராட்சியின் அத்தில் சேர்ந்ததா இருந்தாலும் அல்லது--

(ii) ஒரு விளம்பரத்தினல் இந்த சட்டத்தை ஒரு பிரதேசத்திற்கு பரவும் படி 1-வது பிரிவை சேர்ந்த (2) (b) உட்பிரிவின்கீழ் பரவும்செய்தால் அந்த விளம் பரம் அமலில் இருக்கும் வரையிலும்.

அந்த பிரதேசங்களுக்கு பொருந்தாது.

முனிஸிபாலிடி வெளி யிடங்களிலிருந்து வரும் வருமானத்தை பங்கிடுவது

13-B. 13-A-ன் படிக்கு ஒரு முனிசிபாலிடி தன்னுடைய வெளி அத்துகளி லிருந்து ஏதாவது வருமானம் அடைந்தால் அந்த வரு மானத்தை முனிசிபல் கௌன்சிலுக்கும் இதர பிரதேச அதிகாரிக்கும் கவர்ன்மெண்டாரின் விதிகளின்படி பங்கிட வேணும்,

மாற்றப்பட்ட கேசு களுக்கு உள்ள ஷரத்து

13-C. 1-வது பிரிவை சேர்ந்த (2) (b) படிக்கு ஒரு விளம்பரம் செய்தால் அல்லது, இந்த சட்டத்தின் படிக்கு ஒரு பிரதேசத்திலுள்ள அதிகாரம் ஒரு உத்தியோகஸ்தர் அல்லது அதிகாரி இடம் இருந்து மற்ற ஒரு அதிகாரம் உள்ள உந்தியோகஸ்தர் அல் லது அதிகாரிக்கு மாற்றப்பட்டால், அந்த இடங்கள், கட்டிடங் கள் அடைப்புகள் குறித்து கொடுக்கப்பட்ட எல்லா லைசென்சுகளும், செய்யப்பட்ட உத்திரவுகளும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் பின்னிட்டு மாற்றப்பட்ட உத்தியோ கஸ்தர் அல்லது அதிகாரியால் கொடுக்கப்பட்டது, செய்யப்பட்டது. எடுக்கப்பட்டது என்று கருதப்படும்.

இச்சட்டம் மாதா கோயில், கோயில், மசூதி முதலியவற்றிற் குப் பயன்படாது என்பது.

13-D. இச்சட்டத்தில் கண்டுள்ளதெதுவும், யாதொரு மாதா கோயில், கோயில் மசூதி, அல்லது பொது மக்கள் ஆராதிக்கும் இதர இடத்திற்குப் பயன்படாது,

பிரதேச வரம்பைமாற் றிய பொழுது உண் டான கேசுகளுக்கு ஏற்படுத்தியவிஷ யங்கள்

14. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் இந்த ஆக்ட் ஜாரியான பிறகு எந்த காலத்திலாவது அப்போதைக்கப்போதாவது இந்த ஆக்டில் காரியங்களை நிறைவேற்றுவதற்கு இந்த ஆக்டுக்கு ஒற்றுமையான விதிகளைச் செய்யலாம், மேலும் அந்த விதிகளைத்திருத்தலாம் அல்லது ரத்து செய்யலாம். அப்படிப்பட்ட எல்லாவிதிகளும் போர்டு செயிண்டு ஜார்ஜு கெஜட்டில் பிரசுரமாகி அந்தப்படிப் பிரசுரஞ் செய்யப்படுகிற தேதியிலாவது அவைகளை பிரசுரஞ் செய்கிற விளம்பரத்தில் குறிக்கப்படுகிற பிந்திய தேதியிலாவது வழக்கத்தொடங்குவதாகும்,

(2) இச்சட்டத்தின் கீழ்ச் செய்யப்பட்ட சகல விதிகளும், அவை செய்யப்பட்டவுடன் கூடிய விரைவில் சட்டப்பேரவையின் இரு சபைகளின் முன்பும் மேஜையின்மேல் வைக்கபடவேண்டும். மேலும் அவை, சட்டப் பேரவை. அக்த கூட்டத் தொடரில் அல்லது வைக்க அதற்கு அடுத்த கூட்டத் தொடரில் திருத்தப் அல்லது ரத்து மூலம் செய்யக் கூடிய மாறுதல்களுக்குட் பட்டவையாகும்.

15. திருவாங்கூர் - கொச்சின் சட்டம் ரத்து செய்யப்பட்டது.

3-வது ஞாபகம் ஊட்டும் கடிதம்

ராஜாம்பா தேவி அண்டு கம்பெனி

புத்தகம் வெளியிடுவோர்

திருவள்ளூர், - சென்னை அருகாமை.

அட்வொகேட். சி. வி. நாயுடு அவர்களின்

மதராஸ் பஞ்சாயத்துகளின் சட்ட திட்டங்கள்

1960-ம் வருடத்திய 7-ம் பதிப்பு

ஜி. ஓ. (மிஸ்) நெம்பர் 159 எல். ஏ. தேதி 5—2—1960

இந்த அரசாங்க உத்திரவுபடிக்கு இந்த புத்தகத்தை எல்லா பஞ்சாயத்துகளும் வாங்க வேண்டு மென்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

ஜி. ஓ. (மிஸ்) நெம்பர் 583 (எல். ஏ.) தேதி 30—3—1960

படிக்கு அரசாங்கத்தார் ஒரு ஆயிரம் பிரதிகளை வாங்கி (1) மாவட்ட கலெக்டர்களுக்கும், (2) ரெவினியூ டிவிஷனல் ஆபீசர்களுக்கும், (3) லோகல் போர்டுகளின் ரீஜனல் இன்ஸ்பெக்டர்களுக்கும், (4) பஞ்சாயத்து யூனியன்களின் அக்ராசனாதிபதி அவர்களுக்கும், (5) பிளாக் டெவலப்மெண்டு (அபிவிருத்தி தொகுதி) உத்தியோகஸ்தர்களுக்கும், (6) பஞ்சாயத்துகளை விஸ்தரிக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் அவர்களின் உபயோகத்திற்காக அளித்திருக்கிறார்கள்.

சில பஞ்சாயத்து கூட்டு மன்றங்களின் ஆணையாளர்களும் (பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் கமிஷனர்களும்) பஞ்சாயத்து எக்ஸ்டென்ஷன் ஆபீஸர் அவர்களும், (பஞ்சாயத்துகளை பரவ செய்யும் உத்தியோகஸ்தர்களும்)

எந்த எந்த பஞ்சாயத்துகளுக்கு இந்த புத்தகம் தேவை என்று தெரிந்து கொண்டு அந்த பஞ்சாயத்துகளுக்கு புத்தகம் பிரதி ஒன்றுக்கு ரூபா. 20 ஆக தபால் வி. பி. மூலம் அனுப்ப வேண்டுமென்று அன்பு கூர்ந்து தெரிவித்திருக்கிறார்கள்.

அதே மாதிரியாக எல்லா ஆணையாளர்களும், எக்ஸ்டேன்ஷன் ஆபீஸர் அவர்களும் உதவி செய்வார்களென்று எதிர் பார்க்கிறோம்.

1958 ஆம் ஆண்டு மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டம் — எல்லா பஞ்சாயத்துகூட்டு மன்றங்களிலும், பஞ்சாயத்துகளிலும் — 2—10—1961-க்குள் அமலுக்கு வரும்

இந்த புத்தகத்தில் 1960-ம் வருடம் ஆகஸ்டு-செப்டம்பர் மாதங்களில் உண்டான புதிய சட்டங்களையும், திருத்தங்களையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவைகளை மாத்திரம் வேண்டியவர்கள் 35 நயா பைசா தபால் ஸ்டாம்புகள் அனுப்பினால், அவைகளை எங்கள் செலவில் அனுப்புவோம்.

இந்த புதிய மதராஸ் பஞ்சாயத்துகள் சட்ட திட்டங்கள்

பிரதி ஒன்றுக்கு விலை ரூபா. 17.

தபால் மூலம் அனுப்பினால் அதன் செலவு ரூபா. 3.

புத்தகம் வேண்டியவர்கள் முன்னதாக ரூபா. 20 மணியார்டர் மூலம் அனுப்பினால் புத்தகம் ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும்.

Jyothi Printers, Madras-1

குறிப்பு

1888-வது வருஷத்திய, ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களைக் குறித்துச் சட்டத்தில் என்ன சொல்லி இருந்தபோதிலும் பாதகமில்லாமலே.—இதினால் அந்தச் சட்டத்திற்கும் இந்த ஆக்டுக்கும் சம்பந்தமில்லை என்று ஏற்படுகிறது. ஆனால் சினிமா காட்சிகளை நடத்தும் காரியங்களுக்காக சினிமா உத்தியோகஸ்தர்தான் லைசென்ஸ் கொடுக்க அதிகாரம் உள்ளவர் ஆவார். அது தவிர, இதர காரியங்களுக்கு நிர்வாக உத்யோகஸ்தர் அல்லது கமிஷனர் லைசென்ஸை கொடுக்கலாம். அப்படி லைசென்ஸ் கொடுக்க மறுத்தால் பஞ்சாயத்துக்கு அப்பீல் செய்துக்கொள்ளலாம்.

114-(b) 1888-வது வருஷத்து II-வது ஆக்ட்படி லைசென்ஸிற்கு மனு செய்துக் கொள்ள வேண்டிய நபரை பஞ்சாயத்து சட்டம் 114-வது பிரிவு குறிக்கிறது. முனிசிபாலிடிகளல்லாத எல்லைகளுக்கும் அப்பீல் உண்டு, [குலாம் மொஹதீன் எ. செங்கற்பட்டு ஜில்லா மாஜிஸ்டிரேட், A. I. R. 1932 Mad. 559 = 67 M.] L. J. 217.]

MADRAS ACT No. II of 1888

சென்னப்பட்டணம் 1888 வருஷத்து 2-வது சட்டம்

ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களையும் விநோதமாய் காலங்கழிக்கும் இடங்களையும் மேற்பார்வை யிடுவதற்கும் அவைகளுக்கு லைசென்ஸ் கொடுப்பதற்குமான சட்டம்

பீடிகை. ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களையும் விநோதமாய்க் காலங்கழிக்கும் இடங்களையும் மேற்பார்வையிடுவதற்கும் தகுந்த அதிகாரியைக்கொண்டு அவைகளுக்கு லைசென்சு கொடுப்பிக்கவேண்டியதற்கும் நிபந்தனைகள் ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியால் இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால்:—

சுருக்கமான பெயர். 1. (1) இந்த ஆக்ட்டை ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடங்களைக் குறித்த 1888-வருஷத்திய சட்டமென்று சொல்லலாம்.

வழங்கத் தொடங்குவது. (2) இது சட்டமாக ஜாரி செய்யப்படுவது முதற்கொண்டு வழங்கத் தொடங்கவேண்டியது.

வியாபிக்குமிடம். (3) சென்னப்பட்டணம் 1888-ஆம் வருஷத்து 4-வது ஆக்ட்டின் படிக்காவது அந்தந்த காலத்தில் செலாவணியாகிற அதே மாதிரியான வேறு ஆக்ட்டின் படிக்காவது சென்னப்பட்டணம் பிரஸிடென்ஸியில் முனிஸிபாலிடிகளாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அல்லது இனி மேல் நிர்ணயிக்கப்படுகிற எல்லாப் பட்டணங்களிலும் இது வியாபிக்கின்றது; மேலும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் அப்போதைக்கப்போது போர்ட்டு செயிண்டு ஜார்ஜு கெஜட்டில் விளம்பர மூலமாய், அந்த விளம்பரத்தில்கண்ட தேதி முதற்கொண்டு எப்பொழுதும் நிலையாகவாவது கொஞ்ச காலத்திற்காவது குறித்த சந்தர்ப்பங்களில் மாத்திரமாவது சென்னப்பட்டணம் முனிஸிபாலிடி எல்லைக்கப்பாலுள்ள போர்ட்டு செயிண்டு ஜார்ஜு பிரஸிடென்ஸியைச் சேர்ந்த வேறு எந்த பிரதேச விஸ்தீரணத்திலாகிலும் இந்த சட்டத்தை வியாபிக்கச் செய்யலாம். மேலும் அப்படிப்பட்ட யாதொரு விளம்பரத்தை ரத்து செய்யலாம் அல்லது திருத்தலாம்.

நிவாரணை

(4) **இந்த ஆக்டிலுள்ள தெதுவும் யாதொரு (கிரிஸ்தவ) கோவிலுக்காவது—(ஹிந்து) ஆலயத்திற்காவது - பள்ளிவாசலுக்காவது - ஜனங்கள் ஆராதனை நடத்தும் வேறு எந்த இடத்திற்காவது சம்பந்தப்படமாட்டாது.**

அர்த்தம்.

2. இந்த ஆக்ட்டில் சங்கதியினுலாவது முன்பின் தொடர்ச்சியினுலாவது விரோதமொன்று மில்லாவிட்டால்.—

முனிசிபல் சங்கத்தின் அக்கிராசனுதிபதி என்பது.—சென்னப்பட்டணம் 1884-வருஷத்து 4-வது ஆக்ட்டின் படிக்காவது போர்ட்டு செயிண்டு ஜார்ஜு பிரஸிடென்ஸிலுள்ள டிஸ்ட்ரிக்ட்டு முனிசிபாலிடிகளைக் குறித்து அந்தந்த காலத்தில் வழங்கிவருகிறதொரு ஆக்ட்டின்படிக்காவது நேமிக்கப்பட்ட யாதொரு முனிசிபல் சங்கத்தின் அக்கிராசனுதிபதியென்று அர்த்தமாகும்.

மாஜிஸ்திரேட்டு என்பது.-கிரிமினல் ப்ரொசிஜர் கோர்டின்படி நேமிக்கப்பட்ட மாஜிஸ்திரேட்டென்று அர்த்தமாகும்,

கட்டடமென்பது.—யாதொரு வீடு-குடிசை-பந்தல் அல்லது மேற்கூரையிட்ட அடைப்பிடம் என்று அர்த்தமாகும்.

500-சதுர அடி கொண்ட யாதொரு அடைப்பிடத்தையாவது கட்டடத்தையாவது லைசென்சில்லாமல் ஜனங்கள்வழக்கமாய் கூடுவதற்கு உபயோகிக்கக் கூடாதென்பது

3. இந்த ஆக்ட்டு வழங்கி வருகிற எந்த விஸ்தீரணத்திலும் 500-அல்லது அதற்கு மேற்பட்ட சதுர அடிகொண்ட நிலையான அல்லது கொஞ்ச காலத்திற்கு ஏற்படுத்தப்பட்ட யாதொரு அடைப்பிடத்தையாவது கட்டடத்தையாவது இதில் பின்னுல் சொல்லியிருக்கிற விதமாய் முன்னதாகவே ஒரு லைசென்சு பெற்றுக்கொண்டிருந்தாலன்றி, ஜனங்கள் வழக்கமாய்க் கூடுவதற்கு அல்லது விநோதமாய்க் காலங்கழிப்பதற்கு உபயோகப்படுத்தக்கூடாது. 500 சதுர அடிக்கு குறைந்து இருந்தாலும் ஜனங்கள் ஒரு இடத்தில் பந்தயத்திற்கு அல்லது போட்டிக்கு சேர்ந்தால் அதற்கும் லைசென்ஸ் அவசியமாகும். (1949-வருஷத்திய 38-வது ஆக்ட்டால் திருத்தப்பட்டது.)

லைசென்சுக்காக செய்து கொள்ள வேண்டிய மனு : அதில் என்ன அடங்கியிருக்க வேண்டியதென்பது.

4. ஜனங்கள் வழக்கமாக கூடும் இடமாகவாவது விநோதமாய் காலங்கழிக்கும் இடமாகவாவது யாதொரு அடைப்பிடம் அல்லது கட்டடத்தை உபயோகிக்கவாகிலும் யாதொரு அடைப்பிடம் அல்லது கட்டடத்தை அப்படிப்பட்ட காரியத்திற்காக கட்டவாகிலும் லைசென்ஸ் பெற்றுக்கொள்ள எவனுக்காவது விருப்பமிருக்கிற பட்சத்தில், அந்த இடம் அல்லது கட்டடத்திற்கு சொந்தக்காரன் இன்னுனென்பதையும், அது இன்ன இடத்திலிருக்கிறதென்பதையும், இன்ன பரிமாணமுள்ளதென்பதையும், இன்ன மாதிரியான தென்பதையும், அந்த அடைப்பிடம் அல்லது கட்டடம் இன்ன வஸ்துவைக்கொண்டு செய்யப்பட்டிருக்கிறது அல்லது செய்வதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிற தென்பதையும், அது நிலையாய் எப்போதும் இருப்பதற்காவது கொஞ்சகாலம் வரையில் இருப்பதற்காவது போடப்படுகிறதா அல்லது போடும்படி உத்தேசிக்கப்படுகிறதாவென்பதையும், அது எதற்காக உபயோகப்படுத்த உத்தேசிக்கப்படுகிறதோ அதையுங் கண்டு 5-வது பிரிவில் கண்டிருக்கிற அதிகாரிக்கு ஒரு மனு செய்து கொள்ளவேண்டியது.

இன்ன அதிகாரிக்கு மனு செய்துகொள்ள வேண்டிய தென்பது.

5. அப்படிப்பட்ட மனுவை அந்த அடைப்பிடம் அல்லது கட்டடம் யாதொரு முனிசிபல் பட்டணத்திலிருக்கும் பட்சத்தில் அந்த முனிசிபல் சங்கத்தின் அக்ராசனுதிபதிக்கும், மற்றப்படி ஒவ்வொரு விஷயத்திலும் அந்த இடம் அல்லது கட்டடம் கட்டப்பட்டிருக்கிற பிரதேச விஸ்திரணத்தில் அதிகாரமுடைய யாதொரு மாஜிஸ்திரேட்டுக்கும் செய்து கொள்ள வேண்டியது.

இடம் அல்லது கட்டடத்தை அதிகாரி பார்வையிட வேண்டும். முன்னிருந்ததோடு சேர்த்துக்கட்ட வேண்டிய தென்றுவது அதில் மாறுதல் செய்ய வேண்டிய தென்றுவது உத்தரவும் செய்யலாம்.

6. அப்படிப்பட்ட யாதொரு மனுவை வரப்பெற்று கொள்வதின் பேரில் அந்த மனு எந்த அதிகாரிக்கு செய்து கொள்ளப்பட்டதோ அந்த அதிகாரி எதற்காக லைசென்சு வேண்டியதா யிருக்கிறதோ அப்படிப்பட்ட இடம் அல்லது கட்டடத்தை பார்வையிட வேண்டியது. மேலும் அந்த அடைப்பிடம் அல்லது கட்டடம் எந்த வஸ்துவைக்கொண்டு கட்டப்பட்டிருக்கிறதோ அதிலாவது எந்த ஏற்பாட்டின்படி அமைக்கப்பட்டிருக்கிறதோ அதாவது அதில் கூடும்படியான ஜனங்களுடைய பந்தோபஸ்துக்காக என்னென்ன முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதோ அவைகளிலாவது யாதொரு மாறுதலையாகிலும் பின்னும் சேர்க்கையாக யாதொன்றையாகிலும் செய்யும்படி அந்த மனுதாரனுக்கு எழுத்து மூலமாய் அறிக்கை செய்து உத்தரவு பண்ணலாம். மேலும் அப்படிப்பட்ட மாறுதலை யாவது சேர்க்கையான யாதொன்றையாவது செய்து முடிக்கிற வரையில் லைசென்சு கொடுக்கமாட்டேனென்று நிராகரிக்கலாம்.

இன்னபடிக்கானுல் அதிகாரி லைசென்சு கொடுக்கலா மென்பது

7. (a) அடைப்பிடம் அல்லது கட்டடம் எப்படி உத்தேசமோ அப்படி ஜனங்கள் வழக்கமாய்க் காலங் கழிக்கவாவது அதை யாருக்குங் கெடுதி நேரிடாமல் உபயோகப்படுத்தலா மென்றும்,

(b) அது அமைந்திருக்கும் இடத்தின் விஷயமாகவாவது அதன் உரிமைச் சுதந்திரத்தின் விஷயமாகவாவது உத்தேசிக்கப்பட்ட காரியத்தின் விஷயமாகவாவது யாதொரு ஆட்சேபனையு மில்லை யென்பதும்,

அந்த அதிகாரிக்குத் திருப்திகரமாய்த் தோற்றுகிற பட்சத்தில் அவர் லைசென்சு எழுதித் தன் கையெழுத்து போட்டு மனுதாரனுக்குக் கொடுக்க வேண்டியது. அந்த லைசென்சில் அந்த அடைப்பிடம் அல்லது கட்டடத்தையும் அது எந்த காரியத்திற்கு உபயோகப்படுத்துவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறதோ அந்த காரியத்தையும் காணவேண்டியது. அப்படிப்பட்ட லைசென்சானது ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் அப்போதைக்கப்போது விதி ஏற்படுத்தி உத்தரவு பண்ணுகிற நமூனைப்படிக்கும் கட்டணத்திற்கும் திட்டங்களுக்கு முட்பட்டு மிருக்க வேண்டியது.

அந்த அதிகாரிக்கு மேற்கண்டபடி திருப்திகரமாய்த் தோற்ருத பட்சத்தில், தான் எந்த எழுத்துக்களைக்கொண்டு நிராகரிக்க வேண்டி யிருக்கிறதோ அந்த எழுத்துகளைக் கண்டெழுதி லைசென்சு கொடுக்க மாட்டேனென்று நிராகரிக்கலாம்.

லைசென்சு இத்தனை நாள் செலாவணியாக வேண்டிய தென்று அதில் காண வேண்டியது,

8. இந்த ஆக்டின்படி கொடுக்கப்படுகிற ஒவ்வொரு லைசென்சிலும் அது இத்தனை நாள் செலாவணியாகிக் கொண்டு வருமென்று காணவேண்டியது. அந்த காலம் முடிந்த பிறகு அது செலாவணியாகாமல் ரத்தாய் போகும்,

லைசென்சை ரத்து செய்வது அல்லது கொஞ்ச காலம் செலாவணியாக வொட்டாமல் பண்ணுவது.

9. இந்த ஆக்ட்டின்படி லைசென்சு கொடுக்கிற எந்த அதிகாரியாவது :—

(a) லைசென்சு மோசடியாகப் பெற்றுக்கொள்ளப்பட்டதென்றும்,

(b) அடைப்பிடம் அல்லது கட்டடம்-ஜனங்கள் வழக்கமாய்க் கூடுகிற அல்லது விநோதமாய்க் காலங்கழிக்கிற காரியங்களில் எந்த காரியத்திற்காக லைசென்சு கொடுக்கப்பட்டதோ அது தவிர வேறே காரியங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்ட தென்றும்,

(c) எந்த காரியத்திற்கு லைசென்சு கொடுக்கப்பட்டதோ அந்த காரியத்திற்கு அந்த இடம் அல்லது கட்டடத்தை பயமில்லாமல் இனி உபயோகப் படுத்தக் கூடாதென்றும்.

நம்புவதற்கு தனக்கு ஏதுவிருந்தால், அந்த ஏதுக்களை எழுதி அந்த லைசென்சை ரத்து செய்யலாம், அல்லது கொஞ்ச காலம் செலாவணியாக வொட்டாமல் பண்ணலாம்.

ஜனங்கள் கூடும் இடங்களுக்கு லைஸென்ஸு

6-வது, 7-வது அல்லது 9-வது பிரிவின்படி செய்யப்படுகிற உத்தரவின் பேரில் அப்பீல்,

10. (1) இந்த ஆக்டின்படி லைசென்சு கொடுக்க வேணுமென்று மனு செய்துக் கொள்ளுகிறவன்-இதன் 6–வது பிரிவின்படிக்காவது 7-வது பிரிவின் படிக்காவது 9-வது பிரிவின்படிக்காவது செய்யப்படும். எந்த உத்திரவும் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டினுல் செய்யப்பட்டதாக யிருந்தாலொழிய மற்றப்படி அந்த உத்தரவின்பேரில் அப்பீல் செய்து கொள்ளலாம்.

(2) எந்த உத்தரவின் பேரில் அப்பீல் செய்துகொள்ளப் படுகிறதோ அந்த உத்தரவை மனுதாரன் பெற்றுக்கொண்ட தேதி முதல் 30 நாளைக்குள் அப்பீல் செய்ய வேண்டியது,

(3) யாதொரு முனிஸிபல் பட்டணத்தில் அந்த முனிஸிபல் சங்கத்திற்கு, மற்ற ஒவ்வொரு பிரதேச விஸ்தீரணத்திலும் சப் டிவிஷன் மாஜிஸ்டிரேட்டுக்கு அல்லது பிரதம உத்திரவு ஒரு சப் டிவிஷன் மாஜிஸ்டிரேட்டினுல் செய்யப்பட்டிருந்தால் டிஸ்டிரிக்ட்டு மாஜிஸ்டிரேட்டுக்கும் அப்பீல் செய்து கொள்ள வேண்டியதாகும்.

(4) 5-வது பிரிவின்படி எந்த அதிகாரிக்கு மனுசெய்து கொள்ளப்பட்டதோ அந்த அதிகாரியைப்போலவே அப்பீல் அதிகாரிக்கும் அடைப்பிடம் அல்லது கட்டடத்தை பார்வை யிடவும் அதில் மாறுதல் செய்யவேண்டிய தென்ருவது முன்னிருந்ததோடு சேர்த்து கட்ட வேண்டிய தென்ருவது உத்தரவு செய்யவும் அதிகாரமுண்டு. மேலும் அவர் லைசென்சு கொடுக்கலாம், கொடுக்காமல் நிறுத்திப் போடலாம், அல்லது அவருக்கு யுக்தமாக தோற்று கிறபடி வேறு உத்திரவு செய்யலாம்.

ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடத்தில் பிரவேசிக்கவும் லைசென்சைப் பார்வை யிடவும் இனி உபயோகிக்க வொட்டாமல் தடுக்கவும் அதிகாரம்.

11. எந்த அடைப்பிடம் அல்லது கட்டடத்திற்கு இந்த ஆக்ட்டின் படி லைசென்சு வேண்டியிருக்கிறதோ அந்த அடைப்பிடம் அல்லது கட்டடத்திற் குள் எப்போதாகிலும் பிரவேசிப்பதற்கும், லைசென்சு கொடுக்கப் பட்டிருந்தால் அதைப் பார்வையிடுவதற்கும், லைசென்சு இல்லாத பட்சத்திலாவது லைசென்ஸில் கண்ட திட்டங்கள் அனுசரிக்கப்படாத பட்சத்திலாவது, உடனே ஜனங்களுக்குப் பெருத்த அபாயம் நேரிடுமென்று பயப்பட தனக்கு முகாந்தர மிருக்குமாகில், அப்படிப் பட்ட அடைப்பிடம் அல்லது கட்டடத்தை ஜனங்கள் வழக்கமாய்க் கூடும் இடம் இடமாகவாவது விநோதமாய் காலங்கழிக்கும் இட மாகவாவது இனி உபயோகிக்காதபடி தடுப்பதற்கு யாதொரு மாஜிஸ்டிரேட்டுக்காவது ஸ்டேஷன் விசாரணையுள்ள அல்லது ஹெட்கான்ஸ்டேபில் அந்தஸ்துக்கு மேற்பட்டுள்ள போலீஸ் உத்தியோகஸ்தருக்காவது அதிகாரமுண்டு.

இந்த ஆக்ட்டின்படி நடத்தப்படும் எவ்வித நடவடிக்கைகளையும் பற்றி டிஸ்டிரிக்டு மாஜிஸ்டிரேட்டு புனராலோசனை செய்யலாம்.

12. டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்டிரேட்டு-இந்த ஆக்ட்டின்படி நடத்தப்பட்ட எந்த நடவடிக் கையைச் சேர்ந்த ரெகார்ட்டையும் வரவழைத்துப் பரிசோதிக்கலாம். அதற்குச் சம்பந்தமான எவ்வித ரிபோர்ட்டையும் வரவழைக்கலாம். பின்னும் எவ்வித விசாரணையையும் செய்யலாம். அல்லது செய்விக் கலாம். மேலும் அந்த நடவடிக்கை வைத்திய அதிகாரி என்ன உத் தரவு செய்திருக்கலாமோ அவ்விதமான உத்தரவும் செய்யலாம்.

தண்டனைகள்.

13. யாதொரு அடைப்பிடம் அல்லது கட்டடத்தை தன்னு டைய நேர் விசாரணையில் வைத்துக்கொண்டிருக்கிற எவனுவது லைசென்சு பெருமல் ஜனங்கள் வழக்கமாய்க் கூடுவதற்கு அல்லது விநோதமாய்க் காலங்கழிப்பதற்கு உபயோகிக்க வொட்டினுலும், இந்த ஆக்டின்படி லைசென்சு பெற்றுக்கொண்டு அப்படிப்பட்ட லைசென்சில் கண்ட நிபந்தனைகளில் எதற்காவது விரோதமாய் அப்படி உபயோகிக்கவொட்டினுலும் அப்படிப்பட்ட ஒவ்வொருவனும் யாதொரு மாஜிஸ்டிரேட்டுக்கு முன்பாக குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதின் பேரில் ஐந்நூறு ரூபாய்க்கதிகப்படா மல் அபராதத்திற்குள்ளாவான்.

13-A ஒரு ஜில்லாவில் உள்ள முனிசிபாலிடியினுடைய அத்தின் மூன்று மைல் வரையில் இந்த ஆக்டின் விஷயங்கள் பொருந்தும்; ஆனல் மற்றொரு முனிசிபாலிடிக்குள் உள்ள பிரதேசங்கள் இதில் சேராது; அல்லது. இந்த செக்ஷன் கீழ் எந்த எந்த பிரதேசங்கள் சம்பந்தமானது என்பதை ஒரு அறிக்கையின் மூலம் வெளியிட்டால் அது யிருக்கும் வரையில் அந்த பிரதேசம் இந்த செக்ஷனுக்கு உட்பட்டிருக்கும்.

இந்தச் சட்டம் முனிஸிபல் எல்லை 3 மைல் வரையில் பொருந்தும்

13-B. 13-A-ன் படிக்கு ஒரு முனிசிபாலிடி தன்னுடைய வெளி அத்துகளிலிருந்து ஏதாவது வருமானம் அடைந்தால் அந்த வருமானத்தை முனிசிபல்கௌன்சிலுக்கும் இதர பிரதேச அதிகாரிக்கும் கவர்ன்மெண்டாரின் விதிகளின்படி பங்கிடவேணும்.

முனிஸிபாலிடி வெளியிடங்களிலிருந்து வரும் வருமானத்தை பங்கிடுவது.

13-C. இந்த ஆக்டின் பிரதேச வரம்பை மாற்றிய பொழுது இந்த ஆக்டின் கீழ் கொடுக்கப்பட்ட லைசென்சுகள் யாவத்தும் மேல்படி பிரதேசங்களுக்கும், கட்டிடங்களுக்குக்கும் கொடுக்கப்பட்டதாக கருதப்படும்.

பிரதேச வரம்பைமாற்றிய பொழுது உண்டான கேசுகளுக்கு ஏற்படுத்திய விஷயங்கள்.

14. ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள்-இந்த ஆக்ட் ஜாரியான பிறகு எந்த காலத்திலாவது அப்போதைகப்போதாவது இந்த ஆக்டில் காரியங்களை நிறைவேற்றுவதற்கு இந்த ஆக்ட்டுக்கு ஒற்றுமையான விதிகளைச் செய்யலாம், மேலும் அந்த விதிகளைத் திருத்தலாம் அல்லது ரத்து செய்யலாம். அப்படிப்பட்ட எல்லா விதிகளும் போர்டு செயிண்டு ஜார்ஜு கெஜட்டில் பிரசுரமாகி அந்தப்படிப் பிரசுரஞ் செய்யப்படுகிற தேதியிலாவது அவைகளை பிரசுரஞ் செய்கிற விளம்பரத்தில் குறிக்கப்படுகிற பிந்திய தேதியிலாவது வழக்கத் தொடங்குவதாகும்.

ஜனங்கள் கூடும் இடங்கள் ஆக்டின் கீழ் விதிகள்

1-ம் பாகம் அர்த்தம்

1, இந்த விதிகளில், சங்கதியினுலாவது முன்பின் தொடர்ச்சியினுலாவது விரோதமொன்றும் இல்லாவிட்டால்,—

(i) 'மேற்படி ஆக்ட்' என்பது-ஜனங்கள் வழக்கமாய்க்கூடும் இடங்களைக் குறித்த 1888-ம் ஆம் திய ஆக்ட் என்று அர்த்தமாகும்.

(ii) 'ஹெல்த் ஆபீஸர்' என்பது - ஹெல்த் ஆபீஸர் ஒருவரை வேலையில் அமர்த்திக் கொண்டிருக்கும் யாதொரு முனிசிபாலிடியின் விஷயத்தில், முனிசிபல் ஹெல்த் ஆபீஸர் என்றும், மற்ற சகல விஷயங்களிலும் டிஸ்டிரிக்டு ஹெல்த் ஆபீஸர் என்றும் அர்த்தமாகும்.

(iii) 'லைஸென்ஸ் கொடுக்கப்படும் அதிகாரி' என்பது மேற்படி ஆக்டின்படி லைசென்ஸ் கொடுப்பதற்கு அதிகாரமுள்ள அதிகாரியென்று அர்த்தமாகும்.

(iv) 'நிலையான கட்டிடம்' என்பது - கல் மண், செங்கல், சுண்ணம்பு, சிமெண்ட் அல்லது தீப்பற்றி யெரியாத வேறே வஸ்துவைக்கொண்டு நிலையான உபயோகத்துக்காகக் கட்டப்பட்ட யாதொரு கட்டிடமென்று அர்த்தமாகும்.

விவரணம்.—யாதொரு கட்டிடத்தைக் கட்டுவதில் அல்லது நிருமாணிப்பதில் தீப்பற்றி யெறியத்தக்க வஸ்து ஓரளவுக்கு உபயோகிக்கப்பட்டிருந்து, அந்த வஸ்து இருப்பதால் தீ விபத்து நேரிடாதென்று லைஸென்ஸ் கொடுக்கும் அதிகாரி தெரிந்து திருப்தி யடைந்தால் ஷெ கட்டிடம் நிலையான கட்டிட மென்று கருதப்படும்.

(v) 'நிர்ணயிக்கப்பட்ட' என்பது - லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரியின் உத்திரவினுல் நிர்ணயிக்கப்பட்டது என்று அர்த்தமாகும்; மேலும்.

(vi) 'அங்காமியான கட்டிடம்' என்பது-நிலையான கட்டிடமாயிராத யாதொரு கட்டிடமென்று அர்த்தமாகும்.

ஜனங்கள் கூடும் இடங்களுக்கு லைஸென்ஸு

2-ம் பாகம் நிலையான கட்டிடங்கள்

2. யாதொரு நிலையான கட்டிடத்தில்.

(a) குறைந்தது அதன் மூன்று பக்கங்களிலாகிலும் 20-அடிக்குக் குறையாத அகல மாவது லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரி உத்தரவு செய்யக்கூடிய அதற்கு மேற்பட்ட அகல மாவது உள்ள திறந்தவெயான இடம் ஏற்படுத்தி யிருந்தாலன்றி மற்றப்படியும்.

(b) அந்தக் கட்டிடத்தின் இறப்பு பத்து அடிக்குக் குறையாமல் உயரமாயிருந்தா லன்றி மற்றபடியும்.

(c) அந்தக் கட்டிடத்திலுள்ள ஒவ்வொரு வாசற்காலும் உயரத்தில் எட்டு அடிக்கும் குறையாமலும் அகலத்தில் ஐந்து அடிக்குக் குறையாமலும் இருந்தாலன்றி மற்றபடியும், அந்த அகலமானது கதவுகளைத் திறந்து இருக்கும்போது 5-அடியாக யிருக்கவேணும்.

(d) அந்த கட்டிடத்தில் லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரி உத்தரவு செய்யக்கூடிய பரிமாணமும் சங்கியையும் உள்ள ஜன்னல்கள் அவர் உத்தரவு செய்யக்கூடிய இடங்களி லிருந்து ஜனங்கள் வந்துசேர அனுமதிக்கப்படும் இடங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள சகல ஜன்னல்களின் மொத்த விஸ்தீரணத்தில் பத்திலொரு பங்குக்குக் குறையாமலிருந்தாலன்றி மற்றப்படியும்.

அந்தக் கட்டிடத்தை ஜனங்கள் வழக்கமாய்க் கூடுவதற்காவது விநோதமாய்க் காலம் கழிப்பதற்காவது உபயோகிப்பதற்காக மேற்படி ஆக்டின்படி லைசென்ஸ் எதுவும் கொடுக்கப் பட மாட்டாது.

ஆனுல், லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரியானவர் - ஹெல்த் ஆபீஸருடன் கலந் தாலோசித்து,

(i) அந்தக் கட்டிடத்தில் போதுமான அளவுக்குப் புதிய காற்று வரும் பொருட்டு (d) குறிப்பிட்ட பகுதியின்படி ஏற்படுத்த வேண்டியதா யிருக்கிற சகல ஜன்னல்களுக்குமாவது அவைகளில் எதற்காவது பர்த்தியாக (extractor) எக்ஸ்ட்ராக்டர் என்னும் காற்றைப் போக்குவதற்காக சாதனங்களை யாகிலும் காற்றைப் புகட்டும் வேறே செயற்கை சாதனங்களை யாகிலும் உபயோகிக்க அனுமதி கொடுக்கலாம். அல்லது,

(ii) மேற்படி பகுதியின்படி ஏற்படுத்த வேண்டியதா யிருக்கிற ஜன்னல்களுடன் கூட, காற்றைப் போக்குவதற்கான ஷெ சாதனங்களையாயினும் காற்றை புகட்டும் அப்படிப் பட்ட வேறே செயற்கைச் சாதனங்களையாயினும் ஏற்படுத்தும்படி உத்தரவு செய்யலாம்.

3. ஜனங்கள் வழக்கமாய்க் கூடுவதற்காக அல்லது விநோதமாய்க்காலம் கழிப்பதற் காக யாதொரு நிலையான் கட்டிடத்தை உபயோகப்படுத்துவதற்கு மேற்படி ஆக்டின்படி லைசென்ஸ் பெற்றுக் கொண்டிருக்கக்கூடிய ஒவ்வொரு நபரும் ஜனங்கள் வழக்கமாய்க் கூடு வதற்காக அல்லது விநோதமாய்க் காலம் கழிப்பதற்காக அந்தக் கட்டிடம் உபயோகிக்கப் படும் காலத்திலும் அந்தப்படி உபயோகிக்கப்படுவதற்குக் குறைந்தது இரண்டு மணி நேரத் துக்கு முன்பும் அரை மணி நேரத்துக்குப் பிறகும், அந்தக் கட்டிடத்திலுள்ள சகல ஜன்னல் களையும் காற்றைப் புகட்டும் வேறே சாதனங்களையும் நல்ல நிலைமையிலும் திறமையாய் வேலை செய்யக்கூடிய படியும் வைத்திருக்கும்படி செய்யவேண்டும்.

4. லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரியானவர் - ஹெல்த் ஆபீஸர் சிபாரிசு செய்வதன் மேல் 2-வது 3-வது விதிகளில் கண்ட நிபந்தனைகளைக் கண்டிப்பாய் அனுசரிக்காம லிருக்கலாம்.

5. மேற்படி கட்டிடம் பகற்காலத்தில் உபயோகிக்கப்பட்டு செயற்கை வெளிச்சம் எதுவும் வேண்டியிராத காலத்தில் தவிர மற்றக் காலங்களில் லைசென்ஸ்தாரர் அந்தக் கட்டி டத்திலும் அதைச் சேர்ந்த திறந்தவெயான இடத்திலும் போதுமான விளக்குகள் ஏற்படுத்த வேண்டும்.

6. லைசென்ஸ்தாரர் மேற்படி கட்டிடத்தின் ஒவ்வொரு பாகத்தில் தரைக்கும் தள வரிசை போடுவிக்கலாகாது வேறே விதமாய் அந்தத் தரையில் தண்ணீர் உட்புகாமலும் ஈரமில்லாமலும் இருக்கும்படி செய்விக்கவாவது வேண்டியது மல்லாமல், எல்லாக் காலங் களிலும் அந்தத் தரையை நல்ல ஸ்திதியில் வைத்திருக்கவும் வேண்டும். மேலும், அவர், நிர்ணயிக்கப்படக்கூடிய காலங்களிலும் விதமாகவும் அந்தத் தரையிலிருந்து தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்கவேண்டும்.

7. ஜனங்கள் வந்துசேர அனுமதிக்கப்படும் கட்டிடத்தைச் சேர்ந்த தரையின் எந்த பாகத்தின் மேலும் மணலையாவது மண்ணையாவது தும்பு தூசு நிறைந்த வேறே வஸ்துவை யாவது பரப்பி வைப்பதற்கு லைசென்ஸ்தாரர் அனுமதி கொடுக்கக்கூடாது.

8. லைசென்ஸ்தாரர் - ஜமக்காளங்களையாவது பாய் முதலியவைகளையாவது தரையை மூடுவதற்காக உபயோகிக்கப்படும் வேறே யாதொரு வஸ்துவையாவது தினந்தோறும் குறைந்தது ஒரு தடவையாகிலும் சுத்தம் செய்யும்படி அவைகளிலிருந்து தூசியை நீக்கும் படியும் செய்யவேண்டும்.

9. லைசென்ஸ்தாரர் – லைசென்ஸ் கொடுக்கப் பெற்றிருக்கும் வளவிலுள்ள திறந்தவை யான சகல இடங்களிலும், லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரிக்குத் திருப்திகரமாகத் தளவரிசை போடும்படியாவது பாய்கல் போடும்படியாவது செய்யவேண்டும்.

10. பிரதி 100 சதுர அடிக்கு 20-க்கு மேற்பட்ட நபர்களாவது அதற்குக் குறைவாய் நிர்ணயிக்கப்படக்கூடிய சங்கியைக்கு மேற்பட்ட நபர்களாவது மேற்படி கட்டிடத்தில் இடம் பெறுவதற்கு லைசென்ஸ்தாரர் அனுமதி கொடுக்கக்கூடாது. மேலும், அவர் - இந்த விதியின் படி ஷை கட்டிடத்தில் இன்ன சங்கியைக்கு மேற்பட்ட நபர்களும் இடம் கொடுக்கப்படமாட்டா தென்று கண்டுள்ள பலகையொன்றை, லைசென்ஸ் கொடுக்கப்பெற்றிருக்கும் வளவில் எல்லாருக்கும் நன்ருய்த் தெரியும்படியான ஒரு இடத்தில் தொங்கவிடும்படிச் செய்யவேண்டும்.

விவரணம்.—இந்த விதியின் காரியத்துக்காக, லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரி யானவர்-இடம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டிய நபர்களின் சங்கியை நிர்ணயிக்கும் போது, பிரவேசு வாயில்கள், வழிகள், மேடை, படிக்கட்டுகள், ஜனங்கள், வந்து சேர அனு மதிக்கப்படாத சகல இடங்கள் ஆகிய இவைகளின் விஸ்தீரணத்தைக் கணக்கில் சேர்த்துக் கொள்ளாமல் விட்டுவிட வேண்டும்.

11. லைசென்ஸ்தாரர் - ஸ்திரீகளுக்காக நியாயமாய்ப் போதுமான இடத்தைப் பிரத் யேகமாய் ஏற்படுத்த வேண்டும்.

12. லைசென்ஸ்தாரர் மேற்படி கட்டிடத்தின் சுவர்களுக்கு, பிரதி ஆறு மாதத்துக்கு குறைந்தது ஒரு தடவையாகிலும் வேகவைத்து சுண்ணும்பு அடிக்கும்படிச் செய்யவாவது, பிரதி இரண்டு வருஷத்துக்கு ஒரு தடவையாயினும் ஒரு தடவைக்கு அதிகமாக வர்ணம் பூச வேண்டு மென்று நிர்ணயிக்கப்பட்டால் அந்தப்படி அதிகமாகவாயினும் வர்ணம் பூசும்படிச் செய்யவாவது வேண்டும்.

13. லைசென்ஸ்தாரர் 24-மணி நேரத்திற்குக் குறைந்தது ஒரு தடவையாகிலும் ஒரு தடவைக்கு அதிகமாக அடியிற்கண்டபடி செய்யவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டால் அந்தப்படி அதிகமாகவாகிலும், மேற்படி வளவை நன்ருய்ச் சுத்தம் செய்து சகல கழிவுப் பொருள்களையும் அப்புறப்படுத்தும்படிச் செய்ய வேண்டும்.

14. லைசென்ஸ்தாரர் மேற்படி கட்டிடத்துக்குத் தகுந்த ஜலதாரை ஏற்பாட்டையும், 1-ம் அனுபந்தத்தில் காட்டியிருக்கும் பரிமாணத்தின் புருஷர்களும் ஸ்திரீகளும் தனித்தனியாய் உபயோகிப்பதற்காக, ஹெல்த் ஆபீசர் சிபாரிசு செய்வதன்மேல் நிர்ணயிக்கப்படக்கூடிய விவரமும் மாதிரியுமுள்ள சுகாதார சம்பந்தமான சௌகரியங்களையும்கூட ஏற்படுத்த வேண்டியது மல்லாமல், அவைகளை நல்ல நிலைமையிலும் சுகாதாரத்துக் கேதுவான ஸ்திதி யிலும் வைத்திருக்கும்படிச் செய்யவும் வேண்டும்.

15. குழாய்த் தண்ணீர் இடை விடாமல் கிடைக்கக் கூடியதா யிருக்கிற பட்சத்திலே லைசென்ஸ்தாரர் ஹெல்த் ஆபீஸர் சிபாரிசு செய்வதன்மேல் நிர்ணயிக்கப்படக்கூடிய சங்கியை யுள்ள தண்ணீர்க்குழாய்களை அந்தப்படி நிர்ணயிக்கப்படக்கூடிய இடங்களில் ஏற்படுத்த வேண்டும்.

16. குழாய்த் தண்ணீர் இடைவிடாமல் கிடைக்கக்கூடியதாயிராத பட்சத்திலே, லைசென்ஸ்தாரர் - ஹெல்த் ஆபீஸர் சிபாரிசு செய்வதன்மேல் நிர்ணயிக்கப்படக்கூடிய அள வுள்ள குடிப்பதற்கான தண்ணீர் அந்தப்படி நிர்ணயிக்கப்படக்கூடிய இடங்களிலும் விதமாக வும் ஏற்படுத்தி வைக்கவேண்டும்.

17. லைசென்ஸ்தாரர் - ஹெல்த் ஆபீஸர் சிபாரிசு செய்வதன்மேல் நிர்ணயிக்கப்படக் கூடிய விவரமும் சக்தியையுள்ள எச்சில் துப்பும் படிக்கங்களை அந்தப்படி நிர்ணயிக்கப்படக் கூடிய இடங்களில் ஏற்படுத்த வேண்டும்.

ஜனங்கள் கூடும் இடங்களுக்கு லைசென்ஸு

17-A. லைசென்சுதாரர் கொட்டகைக்குள் சினிமா, அல்லது நாடகம் அல்லது நாட்டியம் நடந்து கொண்டிருக்கும்போது புகைபிடிக்க அனுமதிக்கவாவது ஆமோதிக்கவாவது கூடாது.

விவரணம்.—இந்த விதிக்காத பார்வையாளர்களின் ஜாகை என்றால் பொது ஜனங் களும் இம்மாதிரி காட்சிகளைக்காண வசதி ஏற்படுத்தியிருக்கும் கட்டிடத்தில் ஒரு பகுதி என அர்த்தமாகும்.

3-ம் பாகம்—அங்காமியான கட்டிடங்களும் அடைப்பிடங்களும்

18. யாதொரு அங்காமியான கட்டிடம் அடியிற்கண்ட திட்டங்களின் பிரகாரம் இருந்தாலன்றி மற்றப்படி அந்தக் கட்டிடத்தை ஜனங்கள் வழக்கமாய்க் கூடுவதற்காவது விநோதமாய்க் காலம் கழிப்பதற்காவது உபயோகிப்பதற்காவது மேற்படி ஆக்டின்படி லைசென்ஸ் கொடுக்கப்பட மாட்டாது. அந்தத் திட்டங்கள் எவை யென்றால் :—

(a) அந்தக் கட்டிடத்தின் எல்லாப் பக்கங்களிலும் திறந்தவையான இடம் ஏற் படுத்தி வைக்கவேண்டும்; அந்த இடமானது எந்தப் பாகத்திலும் 50-கஜ அகலத்துக்குக் குறைவாயிருக்கக் கூடாது ;

ஆனல், ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட் அல்லது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டின் அனு மதியைப் பெற்றுக்கொண்டு லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரியாவது ஸப்டிவிஷன் மாஜிஸ்ட் ரேட் அல்லது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டே லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரியா யிருந்தால் அந்த ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட் அல்லது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டாவது-20 கெஜத்துக்குக் குறையாமல் அகலமுள்ள திறந்தவையான இடத்துடன் கூடிய அப்படிப்பட்ட யாதொரு கட்டிடத்துக்கு லைசென்ஸ் கொடுக்கலாம்.

(b) அந்தக் கட்டிடத்தின் இறப்புகள் எட்டு அடிக்குக் குறையாமல் உயரமா யிருக்கவேண்டும் ; மேலும்,

(c) அந்தக் கட்டிடத்திலுள்ள ஒவ்வொரு வாசற்காலும் உயரத்தில் ஆறு அடிக் குக் குறையாமலும் அகலத்தில் நான்கு அடிக்குக் குறையாமலும் இருக்க வேண்டும்.

19. ஜனங்கள் வழக்கமாய்க் கூடுவதற்காக அல்லது விநோதமாய்க் காலம் கழிப் பதற்காக யாதொரு அங்காமியான கட்டிடத்தையாவது யாதொரு அடைப்பிடைத்தையாவது உபயோகிப்பதற்கு இந்த ஆக்டின்படி லைசென்ஸ் பெற்றுக் கொண்டிருக்கக்கூடிய ஒவ்வொரு நபரும்-அந்தக் கட்டிடம் அல்லது இடத்துக்குக் காற்றை புகட்டும் தகுந்த சாதனங்களை ஏற்படுத்த வேண்டியது மல்லாமல், லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரிக்குத் திருப்திகரமாக அவைகளைப் பராமரித்து வரும்படிச் செய்யவும் வேண்டும். மேலும், அவர்-மேற்படி கட்டிடம் அல்லது இடம் பகற்காலத்தில் உபயோகிக்கப்பட்டு, செயற்கை வெளிச்சம் எதுவும் வேண்டியிராத காலத்தில் தவிர மற்றக் காலங்களில், அந்தக் கட்டிடம் அல்லது இடத்தில் போதுமான விளக்குகள் ஏற்படுத்த வேண்டும்.

20. லைசென்ஸ்தாரர் மேற்படி கட்டிடம் அல்லது இடத்தின் ஒவ்வொரு பாகத்தையும் சுகாதாரத்துக்கேதுவான சரியான நிலைமையில் வைத்து வரும்படிச் செய்யவேண்டும்.

21. பிரதி 100 சதுர அடிக்கும் 25-க்கு மேற்பட்ட நபர்களுக்காவது அதற்குத் குறை வாய் நிர்ணயிக்கப்படக்கூடிய சங்கியைக்கு மேற்பட்ட நபர்களாவது மேற்படி இடம் அல்லது கட்டிடத்தில் இடம் பெருவதற்கு லைசென்ஸ்தாரர் அனுமதி கொடுக்கக்கூடாது.

விவரணம்.—இந்த விதியின் காரியத்துக்காக, லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரி யானவர் இடம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டிய நபர்களின் சங்கியை நிர்ணயிக்கும் போது, பிரவேசவாயில்கள், வழிகள், மேடை, படிக்கட்டுகள், ஜனங்கள் வருவதற்கு அனு மதிக்கப்படாத சகல இடங்கள் ஆகிய இவைகளின் விஸ்தீரணத்தைக் கணக்கில் சேர்த்துக் கொள்ளாமல் விட்டுவிட வேண்டும்.

22. லைசென்ஸ்தாரர் புருஷர்களும் ஸ்திரீகளும் தனித்தனியாய் உபயோகிப்பதற்காக, லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரியால் நிர்ணயிக்கப்படக் கூடிய சுகாதார சம்பந்தமான சௌகரியங்களை I-ம் அனுபந்தத்தில் விதிக்கப்பட்டிருக்கும் பரிமாணத்தின் பிரகாரம் ஏற்படுத்த

வேண்டியது மல்லாமல், அவைகளை நல்ல நிலைமையிலும் சுகாதாரத்துக் கேதுவான ஸ்திதி யிலும் வைத்திருக்கும்படிச் செய்யவும் வேண்டும்.

23. லைசென்ஸ்தாரர்-ஷி கட்டிடம் அல்லது இடத்தில் வேலையில் அமர்த்திக்கொள்ளப் பட்டிருக்கும் அல்லது அங்கே அடிக்கடி வந்து கொண்டிருக்கும் நபர்களின் உபயோகத்திற் காக, சுத்தமான குடிக்கும் தண்ணீரைப் போதுமான அளவுக்கு ஏற்படுத்தி வைக்கவேண்டும். எந்த அளவுக்கு எந்த இடங்களில் எவ்விதமாய்த் தண்ணீரைச் சேகரித்து வைத்து சப்ளை செய்ய வேண்டு மென்பதை லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரி நிர்ணயிக்க வேண்டும்.

24. லைசென்ஸ்தாரர் :—

(a) ஷி கட்டிடம் அல்லது இடத்தின் பக்கச்சுவர்கள் அல்லது ஸ்தம்பங்களில் எந்த விளக்கையாவது மாட்டிவைப்பதற்கு:

(b) ஷி கட்டிடம் அல்லது இடத்தின் சுவர்கள் அல்லது கூரையிலிருந்து ஐந்து அடிக்குள்ளாக எந்த விளக்கையாவது வைப்பதற்கும்,

(c) ஷி கட்டிடம் அல்லது இடத்தின் வெளிப்புறத்துச் சுவர்களின் எந்த பாகத்திலிருந்தாகிலும் 100-கஜத்துக்குள்ளாக அவருடைய வேலைக்காரர்கள் பாணவேடிக்கை நடத்துவதற்கும்,

(d) மேற்படி கட்டிடம் அல்லது இடத்துக்குள் சுருட்டு முதலியவை பிடிப்பதற்கும் அனுமதி கொடுக்கவுங் கூடாது, அந்தப்படி செய்யவிடவுங் கூடாது.

4-ம் பாகம்—நிலையானவைகளும் அங்காமியானவைகளுமான கட்டிடங்கள் அல்லது அடைப்பிடங்கள்

25. (1) இந்த ஆக்ட்டின்படி லைசென்சுகள் வருஷத்துக்கொரு தடவையோ அங்காமி யாகவோ கொடுக்கப்பட வேண்டும்.

(2) ஒரு தடவையில் மூன்று மாதத்துக்கு மேற்படாத காளஅளவுகளுக்கு அங்காமியான லைசென்சுகள் கொடுக்கலாம்.

(3) நிலையான கட்டிடங்களின் விஷயத்தில் மாத்திரமே வருஷாந்தர லைசென்சுகள் கொடுக்கவேண்டும்; (ஆனாலும் காரணங்களை எழுத்து மூலமாக பதிவு செய்து லைசென்ஸ் கொடுக்கிறவர் ஒரு வருஷத்தில் குறைவான காலத்திற்கு சரியான லைசென்சை கொடுக் கலாம். அப்போது அதற்கு தாமாஷாபடி லைசென்சு பீசுவாங்கவேண்டும்) ஷி கட்டிடங் கள் ஜனங்கள் வழக்கமாய்க் கூடுவதற்கான அல்லது விநோதமாய்க் காலம் கழிப்பதற் கான இடங்களாகக் காலாகாலங்களில் மாத்திரமே உபயோகிக்கப்படுவதற்கு வேண்டி யிருந்தால், அந்தக் கட்டிடங்களின் விஷயத்தில் அங்காமியான லைசென்சுகள் கொடுக்கலாம்.

(4) அங்காமியான கட்டிடங்களின் விஷயத்தில் அங்காமியான லைசென்சுகள் மாத்திரமே கொடுக்கலாம்.

(5) கூரை அல்லது மேல் கட்டிடமில்லாமல் சுவர்களால் அடைப்பு ஏற்படுத்தப் பட்டிருக்கும் இடங்களின் விஷயத்தில். வருஷாந்தர லைசென்சுகளாவது அங்காமியான லைசென்சு களாவது கொடுக்கலாம்.

(6) லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரிக்கு யுக்தமாய்த் தோற்றுகிறபடி. கொடுக்கப்பட்ட யாதொரு லைசென்சைப் புதுப்பிக்கலாம்.

(7) (a) 2 வது விதி கிளாஸ் (a) படிக்கு கொடுத்த லைசென்சானது ஸ்டேட் கவர்ன்மெண்டின் தனி உத்திரவு (Special Sanction) இன்றி மொத்தத்தில் 3-மாத காலத்திற்கு அதிகமாக இருக்கக்கூடாது.

(b) ஏதாவது ஒரு யாத்ரீக சினிமெடாகிராபிக்கு கொடுத்த தாற்காலிக லைசென்சு 12-மாதங்களுக்குள் 6-மாதங்களுக்கு அதிகப்பட்டு இருக்கக் கூடாது.

ஒரு இடத்தில் ஒரே ஒரு யாத்ரீகசினிமெடாகிராபிக்கு லைசென்ஸ் கொடுக்க நேரிடும் காலத்தில், முதல் 3-மாதத்திற்குப் பிறகு அன்னியர் லைசென்ஸ் கேழ்க்காவிட்டால் முதல் லைசென்ஸ்தாரருக்கே மறுபடியும் 3-மாதங்களுக்கு அதாவது மொத்தத்தில் ஆறு மாதம் வரை யில் கொடுக்கலாம்.

ஜனங்கள் கூடும் இடங்களுக்கு லைஸென்ஸு

டிஸ்ட்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் ஒரு சினிமெடோகிராப் துருப்புகளுக்கு மாத்திரம் காட்டுவதாக இருந்தால் இதில் நிபந்தனைகளுக்கு உட்படுத்தாமல் லைசென்ஸ் கொடுக்கலாம்.

கவர்ன்மெண்டாரும் துருப்புகளுக்கு என்று சினிமெடாகிராப்களுக்கு லைசென்ஸ் இல்லாமல் காட்ட உத்திரவு கொடுக்கலாம். (18-8-1950ஹுத்திய (G. O. No.) ஜி. ஓ. 3270-வால் திருத்தப்பட்டது.)

26. பிரஸ்தாப பிரதேசத்திலே, யாதொரு பெருவாரி வியாதியாவது தொத்து வியாதியாவது காணுகிற விஷயத்தில், எந்தக் கட்டிடம் அல்லது அடைப்பிடத்தின் விஷயமாய் இந்த ஆக்ட்டின்படி லைசென்ஸ் கொடுக்கப் பட்டிருக்கிறதோ அந்தக் கட்டிடம் அல்லது இடத்தை ஜனங்கள் வழக்கமாய் கூடுவதற்கான காரியங்களுக்காகவாகிலும் விநோதமாய்க் காலம் கழிப்பதற்கான காரியங்களுக்காகவாகிலும் உபயோகித்தல் ஷெ பெருவாரி வியாதி அல்லது தொத்து வியாதி வெகுவாய்ப் பரவக்கூடுமென்று ஹெல்த்-ஆபீஸர் அபிப்பிராயப்படும் பட்சத்தில், லைஸென்ஸ் கொடுக்கும் அதிகாரியானவர்-உத்தரவு பிரப்பித்து அதன் மூலமாய், அந்த உத்திரவில் குறிப்பிடப்படக்கூடியகால அளவுக்கு மேற்படி கட்டிடம் அல்லது அடைப்பிடத்தை மேலே கண்ட காரியங்களுக்காக உபயோகிக்கக் கூடாதென்று கட்டளையிடலாம் அதே மாதிரியான சந்தர்ப்பங்களில், லைசென்ஸ் கொடுக்க மறுத்துவிடுவதற்கான அதிகாரமும் லைஸென்ஸ் கொடுக்கும். அதிகாரிக்கு உண்டு.

27. மேற்படி ஆக்ட்டின்படி கொடுக்கப்படும் அல்லது புதுப்பிக்கப்படும் ஒவ்வொரு லைஸென்ஸுக்காகவும், அடியிற்கண்ட வீதப்படி கட்டணம் விதித்து வாங்கப்படும் அதாவது.-

(i) யாதொரு நிலையான கட்டிடத்தின் விஷயமாய் ஒரு வருஷத்துக்கு லைஸென்ஸ் கொடுப்பதற்காக அல்லது புதுப்பிப்பதற்காக.—

1,000-சதுர அடி விஸ்தீர்ணத்துக்காவது அதற்குக் குறைந்த விஸ்தீர்ணத்துக்காவது ஐந்து ரூபாய்; இதோடுகூட 1,000 சதுர அடிக்கு மேற்பட்டுள்ள பிரதி 500-சதுர அடிக்காவது அதன் பாகத்துக்காவது ரூ. 2-8-0 அதிகப்படியான கட்டணம் விதிக்கப்படும்.

(ii) யாதொரு நிலையான கட்டிடத்தின் விஷயமாய் அங்காமியான லைஸென்ஸ் கொடுப்பதற்காக அல்லது புதுப்பிப்பதற்காக.—

1,000-சதுர அடி விஸ்தீரணத்துக்காவது அதற்குக் குறைந்த விஸ்தீர்ணத்துக்காவது மாத மொன்றுக்கு அல்லது அதன் பாகத்துக்கு ஒரு ரூபாய்; இதோடுகூட 1,000-சதுர அடிக்கு மேற்பட்டுள்ள பிரதி 500-சதுர அடிக்குமாவது அதன் பாகத்துக்காவது மாதமொன்றுக்கு அல்லது அதன் பாகத்துக்கு எட்டணு அதிகப்படியான கட்டணம் விதிக்கப்படும்.

(iii) யாதொரு அங்காமியான கட்டிடத்தின் விஷயமாய் அங்காமியான லைஸென்ஸ் கொடுப்பதற்காக அல்லது புதுப்பிப்பதற்காக—

1,000-சதுர அடி விஸ்தீர்ணத்துக்காவது அதற்குக் குறைந்த விஸ்தீர்ணத்துக்காவது மாத மொன்றுக்கு அல்லது அதன் பாகத்துக்கு ஐந்து ரூபாய்; அதோடுகூட 1,000-சதுர அடிக்கு மேற்பட்டுள்ள பிரதி 500-சதுர அடிக்குமாவது அதன் பாகத்துக்காவது மாத மொன்றுக்கு அல்லது அதன் பாகத்துக்கு ரூ. 2-8-0 அதிகப்படியான கட்டணம் விதிக்கப்படும்.

(iv) கூரையாவது மேல் கட்டிடமாவது இராமல் அடைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கும் யாதொரு இடத்துக்காக ஒரு வருஷத்துக்கு லைஸென்ஸ் கொடுப்பதற்காக அல்லது புதுப்பிப்பதற்காக—

2,000-சதுர அடி விஸ்தீர்ணத்துக்காவது அதற்குக் குறைந்த விஸ்தீர்ணத்துக்காவது இரண்டு ரூபாய்; இதோடுகூட 2,000-சதுர அடிக்கு மேற்பட்டுள்ள பிரதி 1,000-சதுர அடிக்காவது அதன் பாகத்துக்காவது ஒரு ரூபாய் அதிகப்படியான கட்டணம் விதிக்கப்படும்.

(v) யாதொரு கூரையாவது மேல் கட்டிடமாவது இல்லாமல் அடைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கும் யாதொரு இடத்துக்காக அங்காமியான லைஸென்ஸ் கொடுப்பதற்காக அல்லது புதுப்பிப்பதற்காக—

2,000-சதுர அடி விஸ்தீர்ணத்துக்காவது அதற்குக் குறைந்த விஸ்தீர்ணத்துக்காவது மாதமொன்றுக்கு அல்லது அதன் பாகத்துக்கு ஒரு ரூபாய்; இதோடுகூட 2000-சதுர அடிக்கு மேற்பட்டுள்ள பிரதி 1,000 சதுர அடிக்குமாவது அதன் பாகத்துக்காவது மாதமொன்றுக்கு அல்லது அதன் பாகத்துக்கு எட்டணு அதிகப்படியான கட்டணம் விதிக்கப்படும்.

பிரஸ்தாப கட்டிடம் அல்லது அடைப்பிடம் விளக்குகள் இல்லாமல் பகற் காலத்தில் மாத்திரமே உபயோகப்படுகிற பட்சத்திலே, அங்காமியான லைசென்சுக்காக மேற்கண்ட வீதங்களில் பாதி வீதங்களின்படி கட்டணம் விதித்து வாங்கப்படத் தக்கதாகும்.

விவரணம்.—இந்த விதியின் காரியத்துக்காக, எந்தக் கட்டிடத்துக்கு லைசென்ஸ் கொடுக்கும்படிக் கேட்கப்படுகிறதோ அந்தக் கட்டிடம். சிறிது மட்டில் தீப்பற்றி எரியத்தக்க வஸ்துக்களைக் கொண்டும் சிறிதுமட்டில் தீப்பற்றி எரியாத வஸ்துக்களைக் கொண்டும் கட்டப்பட்டிருந்தால், அந்த முழுக் கட்டிடமும் அங்காமியான கட்டிடமென்று கருதப்படும். பிரஸ்தாப இடத்தில் சிறிது மட்டில் யாதொரு கட்டிடமும் சிறிதுமட்டில் கூரை போட்டிராத வெறும் அடைப்பிடமும் இருந்தால். கட்டிடத்தின் விஸ்தீர்ணத்தை அனுசரித்து மாத்திரமே கட்டணம் கணக்கிடப்படும்.

28. (1) (2) முதல் (5) வரையிலுள்ள உபவிதிகளில் கண்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி யாதொரு கட்டிடம் அல்லது அடைப்பிடத்தின் விஷயமாய் லைஸென்ஸ் கொடுக்கப்படமாட்டாது. ஒரு லைசென்ஸ் மாற்றுவது என்றுல் அதற்கு ஒரு ரூபா கட்டணம் செலுத்தவேணும்.

(2) உயரத்தில் எட்டடிக்கு குறையாமலும் அகலத்தில் ஆறடிக்குக் குறையாமலுமுள்ள வெளியே போகும் பிரதான வழிகள் குறைந்தது இரண்டாகிலும் மேற்படி கட்டிடத்துக்கு அல்லது இடத்துக்கு இருக்கவேண்டும். இந்த வெளியே போகும் வழிகள் கதவுகளால் மூடப்பட்டிருந்தால் வெளிப்புறமாகத் திறக்கும்படியாக அந்தக் கதவுகளை அமைக்க வேண்டும். உட்பக்கத்திலிருந்து கதவுகளைச் சுலபமாகவும் தாமதமில்லாமலும் தள்ளித் திறப்பதற்கு அனுகூலமாக மேற்படி வழிகளை ஏற்படுத்தி வைக்கவேண்டும்.

(3) மேற்படி கட்டிடம் அல்லது இடத்தின் விஸ்தீர்ணம் 1,000 சதுர அடிக்கு மேற்பட்டிருந்தால், அதிகப்படியான பிரதி 500-சதுர அடி இடத்துக்கும் வெளியே போவதற்காகக் குறைந்தது ஒரு பிரத்தியேகமான வழியையாகிலும் மேற்படி கட்டிடம் அல்லது இடத்தின் வெளிப்புறத்துச் சுவர்களில் போதுமான தூரத்தில் அதிகப்படியாய் ஏற்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட பிரத்தியேகமான வெளியே போகும் வழிகளில் ஒவ்வொன்றும் உயரத்தில் எட்டு அடிக்குக் குறையாமலும் அகலத்தில் எட்டு அடிக்கு குறையாமலும் இருக்க வேண்டும். கதவுகளை திறந்ததில் அவைகளின் நடுவில் 5-அடி அகலம் இருக்க வேண்டும். மேற்படி கட்டிடம் அல்லது இடமானது ஜனங்கள் வழக்கமாய்க்கூடும் இடமாக உபயோகிக்கப்படும்போது, மேற்படி பிரத்தியேகமான வெளியே போகும் வழிகளை மூடிவிடாமலும்; ஆனுல், அவசரமான சந்தர்ப்பங்களில் அவைகளை உபயோகிப்பதற்காக அனுசரிக்கும் முறையை லைசென்ஸ் (4) அடையாளமிட்ட காலத்தில் குறிப்பிடவேண்டும்.

(4) இங்கிலீஷில் 'Exit' என்னும் வார்த்தையையும் பிரஸ்தாப ஜில்லாவில் வழங்கும் சுதேச பாஷையில் அதற்குச் சரியான வார்த்தை அல்லது வார்த்தைகளைத் தெளிவான பெரிய எழுத்துக்களில் ஸ்பஷ்டமாய் வர்ணத்திஞல் எழுதியிருக்கும் ஒரு பலகையைக் கொண்டு, வெளியேபோகும் மேற்படி வழிகளில் ஒவ்வொன்றையும் குறிப்பிடவேண்டும்.

(5) மேற்படி கட்டிடம் அல்லது இடத்திலாவது அதன் மேலாவது நேரிடக்கூடிய தீ விபத்தைத் தடுத்து அந்த தீயை அணைப்பதற்காகப் போதுமான ஏற்பாடு செய்யவேண்டும்; மேலும் அந்தப்படி ஏற்பாடு செய்திருப்பதைப் பற்றி லைசென்ஸின் (9) அடையாளமிட்ட காலத்தில் குறிப்பிடவேண்டும். நிலையான யாதொரு கட்டிடம் அல்லது அடைப்பிடத்தின் விஷயத்தில் பிரதி 100-சதுர அடி விஸ்தீர்ணத்துக்கும் ஐந்து காலனுக்குக் குறையாமல் தண்ணீர் சர்பரா ஏற்படுத்திவைத்து அந்தக் கட்டிடம் அல்லது இடத்தின் சுவர்களின் நெடுக தயாராக பக்கெட்களின் அந்தத் தண்ணீரைச்சேகரித்து வைத்திருக்கவேண்டும். அங்காமியான கட்டிடங்களின் விஷயத்தில் தண்ணீர் சர்பராவானது பிரதி 100 சதுர அடி விஸ்தீர்ணத்துக்கும் 15 காலனுக்குக் குறையாமல் இருக்கவேண்டும். மேலும் அந்தத் தண்ணீர் மேற்படி கட்டிடத்தின் வெளிப்புறத்துச் சுவர்களுக்கு உட்புறத்தில் ஒரு பாதியும் வெளிப்புறத்தில் ஒரு பாதியுமாக பக்கெட்டுகளில் தயாராகச் சேர்த்து வைத்திருக்கவேண்டும். ஆனுல், யாதொரு கட்டிடம் அல்லது அடைப்பிடத்தின் அமைப்புகாரணமாகவும் நிலைமை காரணமாகவும் அதன் விஷயமாய் அடியிற் கண்டபடி செய்ய வேண்டியதாயிருக்கிற பட்சத்திலே, டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்டிரேட் அல்லது ஸப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரியாவது டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது சப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டே லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரியாயிருந்தால் அந்த டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அல்லது சப்டிவிஷன் மாஜிஸ்ட்ரேட்டாவது தீயை அணைப்பதற்காகத் தண்ணீரைச்சேர்த்து வைப்பது சம்பந்தமாக

வும் போதுமானதாகவும் தகுதியானதாகவும் கருதப்படக்கூடிய திருத்தங்கள் சகிதமாக ஒரு லைசென்சை மேற்படி கட்டிடம் அல்லது இடத்துக்காகக் கொடுக்கலாம்.

29. இந்த ஆக்டின்படி கொடுக்கப்படும் ஒவ்வொரு லைசென்சும் 2-ம் அனுபந்தத்தில் கண்ட நமூனுப்படிக்கு இருக்க வேண்டும்.

30. இந்த ஆக்ட்டின்படி கொடுக்கப்படும் ஒவ்வொரு லைசென்சும் அடியிற் கண்ட அதி கப்படியான திட்டங்களுக்குட்பட்டவைகளாகும்.—

(1) லைசென்ஸ் கொடுக்கப் பெற்றிருக்கும் வளவுக்குள் நெருப்பையாவது மூடியில் லாத விளக்கையாவது கொண்டுவருவதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கக் கூடாது.

(2) ஆடும் சகல விளக்குகளேயும் உலோகத்தினுலான கம்பிகளிலாவது கோல்களிலாவது தொங்கவிடவேண்டும்.

(3) பெட்ரோலியம், கெரோஸின் எண்ணெய், பாணவேடிக்கை சாமான்கள் அல்லது துப்பாக்கி மருந்து ஆகிய இவைகளே போன்ற தீப்பற்றி எரியத்தக்க வஸ்துவையாவது வெடிக்கத்தக்க வஸ்துவையாவது ஒரு நாள் உபயோகத்துக்காக வேண்டியிருக்கும் அளவுக்கு மேற்பட்டு, லைசென்ஸ் கொடுக்கப் பெற்றிருக்கும் வளவின்மேலாகிலும் அதற்குள்ளாகிலும் சேர்த்துவைக்கக் கூடாது.

(4) லைசென்ஸ் கொடுக்கப்பெற்றிருக்கும் வளவை ஜனங்கள் உபயோகித்துக் கொண்டிருக்கும் போது, (4) குறிப்பிட்ட காலத்தில் விரித்துச் சொல்லப்பட்ட பிரதான கதவு களேத் தாழ்ப்பாளிடாமலும் தடங்கலில்லாமலும் எப்போதும் வைத்திருக்கவேண்டும்.

(5) லைசென்ஸ் கொடுக்கும். அதிகாரியின் எழுத்து மூலமான அனுமதியைப் பெற்றுக்கொண்டாலன்றி மற்றப்படி, லைசென்ஸ் கொடுக்கப் பெற்றிருக்கும் வளவில் கட்டிட சம்பந்தமான அல்லது முக்கியமான மாறுதல் எதையும் செய்யக் கூடாது.

(6) எந்தக் குஷ்டரோகியாவது திறந்தலையான ரணத்தினுலாகிலும் அருவெருப் பான, தொத்திக்கொள்ளத்தக்க அல்லது ஒட்டிக்கொள்ளத்தக்க வியாதியினுலாகிலும் வருந் திக் கொண்டிருக்கும் எந்த நபராவது லைசென்ஸ் கொடுக்கப்பெற்றிருக்கும் வளவுக்குள் போக அனுமதி கொடுக்கக்கூடாது. அந்த நபர் மேற்படி எந்த வளவிலாகிலும் இருக்கக் காணப் பட்டால், லைசென்ஸ்தாரர் பொது ஜன தேகாரோக்கிய இலாக்காவைச் சேர்ந்தவராய், சானி டரி இன்ஸ்பெக்டரின் அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்திலுள்ள அதி சமீபத்திலுள்ள உத்தி யோகஸ்தருக்காவது லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரிக்காவது அது சங்கதியைக் குறித்து உடனே ரிபோர்ட் செய்யவேண்டும். மேலும், லைசென்ஸ்தாரர் மேற்படி இடத்திலிருந்து தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்குவதற்கும், தொத்துவியாதி சம்பந்தம் பின்னும் பரவா மல் தடுப்பதற்கும் அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் அல்லது அதிகாரி சொல்லக்கூடிய ஏற் பாடுகளேத் தம்முடைய சொந்தச் செலவிலேயே செய்யவேண்டும்.

(7) லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரியின் பிரத்தியேகமான அனுமதியில்லாமல் லைசென்ஸ் கொடுக்கப் பெற்றிருக்கும் வளவை காலே 2-மணிக்குப் பிறகு திறந்து வைத்திருக் கக்கூடாது.

(8) லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரி அனுமதியில்லாமல், லைசென்ஸ் ட்ரான்ஸ்பர் செய்யக்கூடாது.

(9) லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரியும் லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரியால் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் யாதொருகீழ் உத்தியோகஸ்தரும் ஹெல்த் ஆபீசரும் லைசென்ஸ் கொடுக்கப் பெற்றிருக்கும் வளவில் யாதொரு வேடிக்கை நடந்து கொண் டிருக்கையில் அமைதி நிலவும்படிப் பார்த்துக் கொள்ளும் பொருட்டுப் பிரத்தியேகமாய் நியமித் தனுப்பப்படும் யாதொரு போலீஸ், உத்தியோகஸ்தரும்-லைசென்ஸில் கண்ட திட்டங்கள் நிறை வேற்றப்படுகின்றனவாவென்று பார்க்கும் பொருட்டு மேற்படி வளவில் எல்லாக் காலங்களிலும் தாராளமாய்ப் போகக்கூடியவர்களாயிருக்க வேண்டும்.

(10) லைசென்ஸ் அதிகாரியானவர்-இந்த விதிகளுக்குப் பொருத்த மற்றவைகளா யிராதவைகளாய், ஜனங்களின் தேகாரோக்கியம் அல்லது பாதுகாப்பை உத்தேசித்து உசிதமாயிருக்குமென்று தாம் கருதக்கூடிய வேறே திட்டங்களே லைசென்சுடன் சேர்க்கலாம்.

31. மேற்படி ஆக்ட் * 9-வது பிரிவையும் 3-முதல் 17-வரையிலுள்ள விதிகளேயும், 19-முதல் 24-வரையிலுள்ள விதிகளேயும் 30-விதியையும், கொடுக்கப்படும் லைசென்சின் அடி யில் அச்சிடவேண்டும்,

* இந்த ஆக்டின்படி லைசென்ஸ் கொடுக்கிற எந்த அதிகாரியாவது.—

(a) லைசென்ஸ் மோசடியாகப் பெற்றுக்கொள்ளப்பட்டதென்றும்.

(b) மேற்படி அடைப்பிடம் அல்லது கட்டிடம் ஜனங்கள் வழக்கமாய் கூடுகிற அல்லது விநோதமாய்க் காலங்கழிக்கிற காரியங்களில் எந்தக் காரியத்துக்காக லைசென்ஸ்கொடுக்கப்பட்டதோ அது தவிர வேறே காரியங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்ட தென்றும்.

(c) எந்தக் காரியத்துக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டதோ அந்தக் காரியத்துக்கு அந்த இடம் அல்லது கட்டிடத்தைப் பயமில்லாமல் இனி உபயோகப்படுத்தக்கூடா தென்றும் நம்புவதற்குத் தமக்கு ஹேதுவிருந்தால்.

அந்த ஹேதுக்களை எழுதி அந்த லைசென்சை ரத்து செய்யலாம் அல்லது கொஞ்ச காலம் செலாவணியாக வொட்டாமல் பண்ணலாம்.

1-ம் அனுபந்தம்

ஏற்படுத்த வேண்டிய சுகாதார சம்பந்தமான வசதியிடத்தின் பரிமாணம்

(14-வது, 22-வது விதிகளைப் பார்க்கவும்)

புருஷர்கள்

மூத்திரம் பெய்யும் இடங்கள் — பிரதி 50-நபர்களுக்கும் ஒன்று — குறைந்தது 10-பிரிவுகள் இருக்கவேண்டும்.

கக்கூஸுகள் — பிரதி 25 நபர்களுக்கும் ஒன்று—குறைந்தது 5-உட்காருமிடங்கள் இருக்கவேண்டும்.

ஸ்திரீகள்

கக்கூஸுகள்—பிரதி 25 நபர்களுக்கும் ஒன்று—குறைந்தது 5-உட்காருமிடங்கள் இருக்கவேண்டும்.

2-ம் அனுபந்தம்

(22-வது விதியை பார்க்கவும்).

லைசென்ஸ் நமூனு

விண்ணப்பதாரரின் பெயரும் வாசம் செய்யும் இடமும். (1)	இடம் அல்லது கட்டிடத்தின் சொந்தக் காரர். (2)	இடம் அல்லது கட்டிடம் இருக்குமிடம். (3)	பிரதான கதவுகளின் அளவும் விவரமும் சங்கிலியையும். (4)	எந்த வஸ்துக்களைக்கொண்டு கூரையும் அடைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ அல்லது அவைகளை ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறதோ அந்த வஸ்துக்கள். (5)	லைசென்ஸ் வருஷாந்தர லைசென்ஸா; அங்காமியான லைசென்ஸாவென்பது. (6)	எந்தக் காரியத்துக்காக உபயோகிக்க உத்தேசித்திருக்கிறதென்பது. (7)	வளவானது பகற்காலத்தில் உபயோகிக்கப்படப் போகிறதா அல்லது இராக்காலத்தில் உபயோகப்படப் போகிறதாவென்பது. (8)	தீப்பற்றிக் கொள்ளாமல் தடுப்பதற்கும் தீயை அணைப்பதற்கும் ஏற்பாடுகள். (9)	லைசென்ஸ் எவையேனும் பிரத்தியேகமான திட்டங்களின்படி கொடுக்கப்பட்டால், அந்தப் பிரத்தியேகமான திட்டங்கள். (10)	லைசென்ஸ் செலாவணியாய்க் கொண்டிருக்கவேண்டிய கால அளவு. (11)	செலுத்தப்படும் கட்டணங்கள். (12)

உத்தியோகஸ்தரின் கையொப்பம்

அத்தியாயம் IV

வரி விதிப்பும்—நிதி விஷயமும்.

குறிப்பு

பகுதிகள் 115 முதல் 143 வரை

வரி விதிப்பு, நிதி ஆதாரம் பற்றிய அத்தியாயம் இந்தப் பகுதிகளில் அடங்குகிறது. இந்த அத்தியாயத்தில் கண்டுள்ள ஷரத்துகளை அனுசரித்து பிரதேச ஸெஸ் அல்லது பிரதேச ஸெஸ் சர்சார்ஜ் ஒன்று பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதிகளில் ஒன்று விதித்து வாங்கப்படும், மேலும், பஞ்சாயத்துப் பிரதேசங்களில் வீட்டுவரி, தொழில் வரி, வண்டி வரி, சொத்து மாற்றங்களின் பேரில் தீர்வை ஆகிய இவையும் விதித்து வாங்கப்படும். நிர்ணயிக்கப்படக் கூடிய விதிகளுக்குட் பட்டும் இன்ஸ்பெக்டரின் அனுமதியுடன் ஒரு பஞ்சாயத்து குறிப்பான ஒரு காரியத்துக்காக விவசாய நிலத்தின் பேரில்கூட ஒரு வரி விதித்து வாங்கலாம். பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியில் விதித்து வாங்கப்படும். பிரதேச ஸெஸ் கீழ்கண்ட வரிகளுக்கு பர்த்தியாக விதித்து வாங்கப்படும்.— 1. 1920-ம்ஞூ்த்திய சென்னை ஜில்லா போர்டுகள் சட்டத்தின் 74-B பிரிவின் கீழ் விதித்து வாங்கப்படுகிற லாண்ட்ஸெஸ் என்னும் வரி, 2. 1920-ம்ஞூ்த்திய சென்னை ஆரம்பக் கல்வியின் சட்டத்தில் 34 (2) பிரிவில் குறிப்பிட்டுள்ள யாதொரு வரிவிதிப்பு தலைப்பின் கீழ் விதிக்கப்படத்தக்க வரிகள் 3. 1955-ம் ஞூ்த்திய சென்னை நிலவரி (உபரி சர்சார்ஜ்) சட்டத்தின் கீழ் விதிக்கப்படத்தக்க நிலவரி சர்சார்ஜ்.

பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்கள் இவற்றின் நிதி ஆதாரங்களை அதிகப்படுத்தும் பொருட்டு அவைகளுக்கு அரசாங்கத்தார் சில மான்யங்களை கொடுக்க வேண்டும் என்று குறிப்பாக ஷரத்து ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பிரதேச கல்வி மான்யம், பிரதேச ஸெஸ் சார்ஜ் நிகர்மான்யம், பிரதேச சாலை மான்யம் ஆகியவைகள் பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்களுக்கும் கிராம வீட்டு வரி நிகர்மான்யம் கிராம பஞ்சாயத்துகளுக்கும் கொடுக்கப்படும். இவைகளோடுகூட அரசாங்கத்தார் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலுக்கும் பிரதி வருஷமும் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியின் ஜனத்தொகையை ஒட்டிக்கிடைக்கிற நிலவரி வசூலிப்பில் குறிப்பிட்ட ஒரு தொகையை அரசாங்கத்தார் கொடுப்பார்கள். இவ்வாறு பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலின் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்ட தொகைக்கு நிலவரி மூலம் கிடைக்கிற தொகைகள் என்று சொல்லப்படும். மான்யங்களை அனுமதிப்பதற்காக அரசாங்கத்தார் தங்களுக்குத் தகுதியென தோற்றக்கூடிய பிரகாரம் பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதிகளை அபிவிருத்திப் படுத்துவார்கள்.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலும் இரண்டு நிதிகளை உடைத்தாயிருக்கும், பஞ்சாயத்து யூனியன் (பொது) நிதி ஒரு நிதியாகும், மற்றொன்று பஞ்சாயத்து யூனியன் (கல்வி) நிதியாகும். ஒவ்வொரு பட்டண பஞ்சாயத்து நிதி ஒன்றை வைத்து இருக்கும். ஒவ்வொரு கிராம பஞ்சாயத்தும் கிராமப் பஞ்சாயத்து நிதி ஒன்றை வைத்து இருக்கும்.

பஞ்சாயத்து யூனியன் (பொது) நிதிக்கு வரவு வைக்க வேண்டிய வருமானம் இவைகளைப் பற்றியும் பஞ்சாயத்து யூனியன் (கல்வி) நிதிக்கு வரவு வைக்கவேண்டிய வருமான இனங்களைப் பற்றியும், இந்த நிதிகளைச் செலவழிக்கும் விதங்களைப் பற்றியும் தணிக்கையாளர்களின் நியமனம் பற்றியும் வரவு செலவு திட்டங்கள் முதலியவைப்பற்றி தயாரிப்பது, அனுமதிப்பது ஆகியவைப்பற்றியும் இந்த மசோதாவில் அவசியமான ஷரத்துக்கள் சேர்க்கப் பட்டுள்ளன. வரிகள் செலுத்துவதனின்றும் விலக்களித்தல், வசூலிக்க முடியாத தொகைகளை கணக்கிலிருந்து அடித்து விடுதல், நிலவரி சிப்பந்திகளை வரிகள், கட்டணங்கள் முதலியவற்றை வசூலிக்க உபயோகித்துக் கொள்ளுதல், அரசாங்கத்தார் அல்லது யாதொரு பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் அல்லது பஞ்சாயத்து அல்லது இதர அதிகார சபையார் செய்த யாதொரு செலவு பிரஸ்தாப பிரதேச வாசிகளின் நன்மைக்கு உகந்தவையாய் இருக்கக் கூடுமென்று தெரிந்தால் அந்தச் செலவு நிமித்தமாக சகாயத் தொகைகள் கொடுத்தல், அரசாங்கத்தார் கொடுத்தக் கடன்கள், முன்பணத் தொகை இவைகளை வசூலித்தல் ஆகியவற்றின் சம்பந்தமாக ஷரத்து ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

வரிகளை குறித்த பொது விஷயங்கள்

வரி விதிப்புகளைக் குறித்து எப்போது குற்றம் சொல்லக்கூடாதென்பதை குறித்து பிரிவு 174 கூறுகிறது. **இந்த சட்டத்தின் ஷரத்துகள் முக்கியாம்சத்திலும் வாஸ்தவமாகவும் அனுசரிக்கப்பட்டிருக்கிற பட்சத்தில், யாதொரு கோர்ட்டும் வரி விதிப்பு விஷயமாய் வியாஜ்யத்தை விசாரிக்கக்கூடாது**. ஆகையால் வரி கிரமமாக போடப்பட்டதா அல்லதா, அப்படி கிரமப்படிக்கு :போடாவிட்டால் அதற்கு பரிகாரம் என்ன என்பதை குறித்து பிரிவு 174ன் கீழ் உள்ள குறிப்புகளை பார்க்கவும்.

வரி விதிப்பு.—சட்ட உத்தரவின்றி யாதொரு வரியும் போடவும் கூடாது. வசூலிக்கவுங் கூடாது. [1949-ம் வருஷத்திய இந்திய அரசியல் அமைப்பு ஆர்டிகள் 265.] ஒரு தனிப்பட்ட மதத்திற்காக யாதொரு வரியும் போடக்கூடாது. பி. 119-ல் வீட்டுவரி, தொழில் வரி, முதலியவைகளைக் கண்டிருக்கிற மாதிரி லைசென்சு கட்டணங்களைச் சேர்க்கவில்லை. அதனுல் வரி வேறென்றும் லைசென்ஸ் கட்டணங்கள் வேறென்றும் ஏற்படுகிறது. ஆந்திர பிரதேசத்தில் வண்டி வரியை பஞ்சாயத்து இஷ்டப்பட்டால் போடலாம் என்று இருக்கிறது. நம்முடைய மதராஸ் ராஜ்யத்தில் கட்டாயமாக போடவேண்டும் என்று இருக்கிற மாதிரி அங்கே இல்லை. இதை மதராஸ் அரசாங்கம் அம்மாதிரி மாற்றினுல் நல்லதாகும்.

ஒரு நபர் வரி செலுத்த கடமைப்பட்டவர் என்று கட்டாயப்படுத்த வேணுமென்ருல் அவரை எந்த காலத்திலிருந்து வரி கொடுக்க பாத்தியப் பட்டவராக வரியை கேழ்க்கப் படுகிறதோ அந்த காலத்திலிருந்து அந்த வரியானது சட்ட பூர்வமாகயிருந்து இருக்க வேண்டும். [பேட்ஸ்-எ.-பெல்லாரி முனிசிபல் கவுன்சில் 7. M. H. C. 249.]

ஏற்படுத்தப்பட்ட அதிகாரத்தின் மூலமாக அன்றி ஒரு வரியை விதிக்க சட்டத்தில் யாதொரு ஏற்பாடும் கிடையாது. அந்த அதிகாரம் யில்லாத பக்ஷத்தில் வரியை செலுத்த யாதொரு பாத்தியதையும் உண்டாகாது. வரி சட்டப்படி யில்லாதபோது, வரி செலுத்தியவர், அந்த வரியை திருப்பிக் கொடுக்க தாவா செய்துக் கொள்ளலாம். ஒரு சட்டமானது, வரியை விதிக்க வேணுமென்று பொதுவாக சொல்வதல்லாமல் அதற்கு அனுகுணமாக (ஒத்த மாதிரி) அந்த சட்டமானது அது எப்படி விதிக்க வேண்டுமென்பதையும் அதற்கு முக்கியமான விஷயங்களையும் கண்டிருக்கவேண்டும். ஒவ்வொரு சட்டத்திலும் (ஆக்டிலும்) வரி விதிப்பவர்கள்பேரிலும் பஞ்சாயத்து பேரிலும் சில கடமைகளை (Duty) ஏற்படுத்தி யிருக்கிறது. வரி செலுத்துவோர் செலுத்தா விட்டால் அவர் பேரில் வாரண்ட் பிறப்பித்து அவர் சொத்தை ஜப்தி செய்யலாம். சிவில் கிரிமினல் கோர்டுகளிலும் தொடரலாம். ஆகையால் சட்ட பூர்வமான வரி யிருக்க வேணுமென்று ஏற்படுகிறது. [குண்டூர் முனிசிபாலிடி,-எ.-தாமோதரய்யர் 1877) 1. M. 158.]

வெறும் குமஸ்தாக்கள் தப்பினுலும் அல்லது அதிகமாக வரி போடுதல் ஆக யிருந்தாலும் அதற்கு அந்த வரியைப்போட சட்ட விரோதமில்லா விட்டால், அந்த சமயங்களில் அந்த ஸ்தாபனத்திற்கு (பஞ்சாயத்து போர்டுக்கோ முனிசிபாலிடிக்கோ) அபீல் செய்து கொள்ள வேண்டுமே தவிர, சிவில் கோர்ட்டில் தாவா செய்து கொண்டால், அந்த மாதிரி விஷயங்களில், சிவில் கோர்ட்டானது, அந்த ஸ்தாபனத்தின் அபிப்பிராயத்திற்கு பதிலாக தன் அபிப்ராய படிக்கு அந்த ஸ்தாபனம் நடத்த வேணுமென்று தீர்மானிக்க அதற்கு அதிகாரம் கிடையாது. [காமய்யா. எ. குண்டூர் முனிசிபாலிடி (1878)2 M. 37.]

மேல்கண்ட தீர்மானங்களை ஆதாரமாகக் கொண்டு இந்த ஆக்டில் உள்ள நிபந்தனைகள் முக்கியாம்சத்திலும் வாஸ்தவமாயும் அனுசரிக்கப்படாம லிருந்தால் அந்த விஷயங்களில் கோர்ட்டார் பிரவேசிக்கலாம். [தூத்துக்குடி முனிசிபாலிடி-எ.-தென் இந்தியா ரயில்வே (1889) 13. Mad 78 (82):: கடப்பை முனிசிபாலிடி.-எ.-மதருஸ்—தென் மஹாராஷ்டிர ரயில்வே, 52 Mad. 779 = 57 M.L.J. 471 = A. I. R. 1929 M. 746.]

சட்டத்தின்படி ஏற்படுத்தப்படாத வரியை குமாஸ்தா தப்பெனவும் கை பிசகுயெனவும் கருதப்பட மாட்டாது. [கும்பகோணம் முனிசிபாலிடி.-எ.-ராலி பிரதர்ஸ், 61 M. L. J. 748 = A. I. R. 1931 Mad. 497 = I. R. 1931 M, 446].

ஒரு பிரதேசத்தில் எல்லா மெம்பர்களுக்கும் சட்டப்படி சரியான நோட்டீஸ் கொடாமல் ஒரு மீட்டிங்கு நடத்தி அதற்கு வந்திருந்த மெம்பர்கள் ஒரு வரியை போட வேணுமென்று விதித்தார்கள். அடுத்த மீட்டிங்குக்கு எல்லா மெம்பர்களுக்கும் ஆக்டின்படி நோட்டீஸ்

கொடுக்கப்பட்டது. ஆனல் அந்த மீட்டிங்கில் வரியை விதிப்பதைப் பற்றி யோசிக்கப்படவில்லை. வரிசை எந்த விகிதாசாரம் விதிக்க வேண்டுமென்பதை கவனித்தார்கள். இந்த இரண்டு தீர்மானங்களையும், பிறகு கவர்ன்மெண்டார் அங்கீகாரம் செய்துக்கொண்டார்கள். பிறகு ஒருவர் வரியை சட்டப்படி போடவில்லையென்று ஆட்க்ஷேபித்த பொழுது எல்லா மெம்பர்களுக்கும் அது விஷயம் அடுத்த மீட்டிங்கில் தெரிய வந்தது என்றும் அதன் படிக்கு அந்த வரி கிரமப்படி போடப்பட்டது என்றும், முனிசிபாலிடியின் பக்கத்திலும் கவர்ன்மெண்டு பக்கத்திலும் வாதித்தார்கள். ஆனல், முதலில் சட்டத்தின் படிக்கு சரியான நோட்டீஸ் கொடாத தோஷமானது யிருந்துக்கொண்டே வருகிற தென்றும், சட்டப்படிக்கு நடந்து கொள்ளாததால், பின்னிட்டு கவர்மெண்டும், ஸ்தாபனமும் எது செய்தாலும் முன் யிருந்த தோஷமானது நீங்கவில்லை யென்றும் அதனல் அந்த வரி நியாய சம்மதமானதல்ல வென்றும் தீர்மானிக்கப் பட்டது. [ஜோஷி காளிதாஸ்.-எ.-டாகொர் முனிசிபாலிடி, (1883) 7 Bom. 399 (408) :: பெனரிஸ் முனிசிபாலிடி,-எ.-நரசிங்க், A. I. R. 1930 All 222 :: கடப்ப முனிசிபாலிடி—எ-எம். எஸ். எம் ரயில்வே, 57 M. L. J. 471 = A. I. R. 1929 Mad. 746.]

ஒரு வரி விதிப்பானது சட்ட சம்மதமாக யிருக்கும் பக்ஷத்தில் அந்த வரியானது எவ்வளவு கஷ்டமானதாக யிருந்த போதிலும் அந்த நபரிடமிருந்து வசூலித்துதான் ஆக வேண்டும். ஆனல் அது சட்ட சம்மதமாக யில்லா விட்டால் அந்த வரியை அவனிடமிருந்து வசூலிக்கக்கூடாது. பார்வைக்கு அந்தச் சட்டத்தின் கீழ் வருவதாக யிருந்தால் போதாது. வாஸ்தவத்தில் சட்டத்தின் கீழ் அந்த வரி வந்திருக்க வேண்டும். [தென் இந்தியா ரயில்வே-எ.—மண்டபம் பஞ்சாயத்து, A. I. R. 1945 Mad. 733 (737)].

ஒரு ஆக்டின் பிரிவுகளில் உள்ள பதங்களை யோசிக்கும் சமயத்தில் வரி நியாயமானதா அல்லவா என்னும்படியான யோசனைக்கு இடமில்லை. பதங்களை ஒட்டிதான் யோசிக்க வேண்டும். [பிரான்ஸன்-எ.-மதராஸ் முனிசிபல் கமிஷனர், (1877) 2 Mad. 362 (F. B.)]

ஒரு வரி விதிக்கும் ஆக்டையும் பிரிவுகளையும், யோசிக்கும்பொழுது உத்தேசத்தை குறித்து சொல்வது சரியல்ல. அதில் உள்ள பதங்களை தான் கவனித்து அர்த்தம் செய்ய வேண்டும். வரி போடுவது நியாயமாக யிருக்கிறதா ? எக்வுடி (equity) அதாவது நியாய சம்மதமா, இல்லையாயென்று அர்த்தம் செய்யக் கூடாது. ஒரு வரி இருக்க வேண்டுமென்றும் இல்லையென்றும் நம்பக்கம் கிடையாது. அந்தப் பதங்களில் இல்லாததை இருக்கிறதாக பாவித்து படிக்கக் கூடாது. அனுமானங்கள் பேரில் யோசிக்கக் கூடாது அந்த பிரிவின் பாஷையை மாத்திரம் பார்த்து மிகுதி ஆக்டுகள் மாதிரி பரிசீலனை செய்யவேண்டும். கோர்ட்டுகள் தங்கள் முன்னிற்கும் வரி விதிப்பு பிரிவுகளை கவனிக்கும்போது யாருக்கோ பாதகம் யிருக்கிறதே, தொழிலுக்கு பாதகம் யிருக்கிறதே, என்று அந்த காரணங்களுக்காக வரி விதிப்பதை வேறு விதமாக யோசிக்கக் கூடாது. சட்டம் செய்யும் சபைகள் சொல்லி யிருப்பதை கோர்ட்டுகள் நிறை வேற்ற வேண்டும். [பெஸ்டு அண்டு கம்பெனி.-எ.-மதருஸ் கார்பரேஷன் 47 M. 262 = A. I R. 1924 M. 420 = 46 M. L. J. 217 (F. B.)]

ஒரு வரி விதிக்கும் விஷயத்தில், அதிகமாக போட வேண்டியதாகவும், மற்றென்று குறைவாக போட வேண்டுமென்று அர்த்தமாகும் பக்ஷத்தில் வரி போடும் நபர், அதை குறைவான விஷயத்தில் தான் வரி போட வேண்டுமென்று கேட்பது சரியாக கருதவேண்டும். [வைத்தியலிங்கா. எ. தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் போர்டு, 52 M. 972 = A. I. R. 1930 M. 43 = 57 M. L. J. 510.]

வரி விதிக்கும் விஷயங்களில் பிரிவில் சொல்லப்பட்டதைக் காட்டிலும் யாதொன்றும் சேர்க்கப்படவில்லை யென்று கோர்ட்டார் கவனிக்க வேண்டும். [மதருஸ் முனிஸிபல் கார்ப்பரேஷன்.-எ.-ஸ்பென்ஸர் கம்பெனி, 52 M. 764 = A.I.R. 1920. M. 55 (56)].

சட்ட விரோதமாக வரி போடுவதும், வரி கொடுக்க வேண்டியதில்லாதவனுக்கு வரி விதித்தலும் இரண்டும் ஒரே மாதிரியாகும் [காகினடா முனிஸிபாலிடி-எ.-ஸ்டாண்டேர்டு லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, 24 M. 205] ஒரு முனிஸிபாலிடி ஏதோ கஷ்டங்களினல் ஒரு வரியை வசூலிக்கா விட்டால் அது வரியைத் தள்ளிவிட்டதாக எண்ணக்கூடாது [ஹைதராபாத் முனிஸிபாலிடி-எ.-ஹக்கூமால், A. I. R. 1926 S. 111] ஒரு வரி அநேக நாளாக வசூலிக்கப்பட்டு வருவதை ஒரு கோர்ட் திடீரென்று தப்பென்று தீர்மானிப்பதற்குக் கஷ்டத்துடன் தீர்க்க யோசனை செய்யும். [ராதாகிருஷ்ணன்,-எ.-கண்டு வர முனிஸிபல் கமிட்டி, A. I. R. 1934 P. C. 62 = 66 M. L. J. 551.]

வரிகளை குறித்த பொது விஷயங்கள்

வரி விதிக்கும், சட்டங்களும், திருத்தங்களும்.—ஒரு வரிவிதிக்கும் சட்டத்தில் ஒரு திருத்தம் ஏற்பட்டால் அது முன் கட்டவேண்டிய வரி பாக்கிகளை ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்பட மாட்டாது. [காஞ்சீபுரம் முனிஸிபாலிடி,—எ.—வெங்கடாச்சாரி, 57 I. C. 718 (721) (M.) :: மதருஸ் ஜெனரல் கிளாஸஸ் ஆக்ட் செ. 8 (d)]

வரியும், செலுத்தவேண்டிய உத்திரவாதமும்.—ஒரு வரி செலுத்த வேண்டு மென்று பில் கொடாமலேயே வரி வசூலிக்கவும், செலுத்தவுங் கூடாதென்று வாதிப்பதில் பலன் இல்லை. ஆனல் பில் கொடுக்கா விட்டால் ஜப்தி செய்யக்கூடாது. வியாஜ்யம் கொண்டுவரக் கூடாது. பிராது தொடரவுங் கூடாது. [சுப்ரமண்யம்,-எ.—குடியாத்தம் முனிசிபாலிடி, A. I. R. 1926 M. 204.]

வரியும், பஞ்சாயத்து செய்யவேண்டிய வேலைகளும்.—ஒரு பஞ்சாயத்து சரியாகப் பராமரிக்க வில்லையென்றும், யாதொரு நன்மையும் செய்யவில்லை யென்றும், அது போட்டிருக்கும் வரிகளை ஒரு கோர்ட்டு ரத்து செய்யக்கூடாது. [பத்ரு நிஸ்ஸா,—எ.—ஆக்ரா முனிஸிபாலிடி, A. I. R. 1941 A. 153]. ஒரு வரி விதிப்பு (contract) ஒப்பந்தம் அல்ல. ஒரு வரி கொடுக்கிற நபருக்கு இவ்வளவு பிரதி பலன் திருப்பி கொடுக்க வேண்டு மென்று தீர்மானிக்க முடியாது. [பிரான்சன்—எ—மதராஸ் முனிசிபாலிடி, (1877) 2 Mad. 362 (F. B.)]

வரி கட்டக்கூடாதென்று சொல்வது.—இம்மாதிரி சொல்வது ஒரு குற்றம் ஆக மாட்டாது. அதை ஒரு பிரசங்க மேடையில் சொன்னல் அந்த பிரசங்க சபையை சட்ட விரோத சபையாக எண்ணலாகாது. [எம்பரர்,—எ.—ஞாடுன்மாஸ், A. I. R. 1925 R. 362.]

பஞ்சாயத்துகள் சட்டத்திலில்லாததாயும், புதிதாயும், தங்களுக்குத் தோன்றியதாயும் உள்ள ஒரு வரியைப் போடக்கூடாது.

வரி.—விதிப்பது ரொம்ப ஜாக்கிரதையாகவும், சட்டபூர்வமாகவும், செய்யவேண்டும். விதித்தல் கிரமமாக இல்லாவிட்டாலும், சட்ட விரோதமா யிருந்தாலும் சிவில் கோர்ட்டு அதை பரிசீலனை செய்து பார்த்து அந்த வரியை ரத்து செய்யலாம். பி. 174 பார்க்கவும்.

ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வரியை விதிக்க அதிகமான அதிகாரங்களைக் கொடுக்கப் பட்டு யிருக்கின்றன. அவர்கள் சட்டத்தில் யில்லாத விஷயங்களுக்கு வரி விதிப்போராகில் அது பெரிய அபவாதமும் நிபந்தனையும் ஆகும். [கிருஷ்ண ஜுட் மில்ஸ்-எ—விஜயநகரம் முனிசிபாலிடி, A. I. R. 1926 M. 152 (2)]

வரி விதிக்கும் சட்டங்கள் ரொம்பவும் தெளிவாகவும் (விசதமாகவும்) எதை யாருக்கு எம்மாதிரி, வரியை விதிக்க வேணுமென்பதை ஸ்பஷ்டமாகத் தெரிவிக்க வேண்டும். [மதுரை மீனுக்ஷி தேவஸ்தானம்-எ.-மதுரை முனிசிபல் கவுன்சில், 51 M. 301 = A. I. R. 1928 M. 569 = 27 M. L. W. 834 = 110 I. C. 89, : : மைலாப்பூர் ஹிந்து பர்மனெண்டு பண்டு.—எ-மதருஸ் கார்ப்பரேஷன் (1908) 31 M. 408]

ஒரு வரி விதிக்கும் சட்டத்தில் சந்தேகங்கள் யிருந்தால் அவைகளை, வரி விதிக்கப்பட வேண்டுமென்ற நபருக்கு அனுகூலமாக செய்து வைக்க வேண்டும், அதாவது அவருக்கு வரி போடுவதை யில்லாமல் செய்ய வேண்டுமென்பது அர்த்தமாகிறது. [வல்கன் இன்ஷியூரன்ஸ் கம்பெனி-எ—மதருஸ் கார்ப்பரேஷன், 58 M. L. J. 337 = A. I. R. 1930 M. 626 (2) = I. R. 1930 M. 703.]

வரி விதிக்கும் சட்டங்களை கண்டிதமாய் ருஜுப்படுத்த வேண்டும் என்பது வரி விதிக்கும் விஷயத்தில் உபயோகப்படுத்த வேணுமே யொழிய வரி வசூலிக்கும் விஷயத்தில் உபயோகப்படுத்தக் கூடாது. [கோபால ஸ்வாமி.-எ.-செக்ரிடரி ஆப் ஸ்டேட், 1933 M. W. N. 989 = A. I. R. 1933 M. 748 = 65 M. L. J. 518]

ஆனல் அப்படி ரத்து செய்யாத முன் ஏதரவது வரி கொடுக்க வேண்டியதா யிருந்தால் அதைக் கட்டாயமாகக் கொடுத்து தான் ஆக வேண்டும். பி. 8 (d) மதருஸ் ஜெனரல் கிளாஸஸ் ஆக்டைப் பார்க்கவும்) சி. வி. நா. 7 வி. 31-ன் உள்ள குறிப்பைப் பார்க்கவும்.

பஞ்சாயத்தின் வரிகளை மிகுதி எல்லாக் கடன்களுக்கும் முன்னதாகச் செலுத்த வேண்டும். [பிரிவு 49 (1) (a) பிரஸிடென்ஸி டவுன்ஸ் இன்ஸால்வென்ஸி சட்டம்: பிரிவு 64 (1) (a) புரொவின்ஷியல் இன்ஸால் வென்ஸி சட்டம்]

நிலவளங்கள்பேரில் செஸ் (அதாவது அதிகவரி) பிரிவுகள் 115—118)

115. (1) ஒவ்வொரு பசலிக்காகவும் யாதொரு நிலம் விஷயமாய் அரசாங்கத்தாருக்குச் செலுத்தப்படத்தக்க நிலவரியின் பிரதி ரூபாயிலும் 45 நயா பைசா என்ற வீதப்படி பிரதேச வரி யொன்றை ஒவ்வொரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியிலும் விதித்து வாங்க வேண்டும்.

பிரதேச வரி.

விளக்கம்.—நிலவரி என்பது நிலத்தின் பேரில் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரி என்று பொருள்படும்; மேலும் அதில், நிலத்துக்கு பாசனம் செய்வதற்காக ஸப்ளை செய்யப்பட்ட அல்லது உபயோகிக்கப்பட்ட தண்ணீருக்காக அரசாங்கத்தாருக்கு செலுத்தப்படத்தக்க தண்ணீர் வரி என்பதும் அடங்கு; ஆனல், வேறு யாதொரு வரி என்பதும் 116–வது பிரிவின் கீழ் செலுத்தப்படத்தக்க ஸர் சார்ஜ் என்பது அடங்கமாட்டா; மேலும், வரி வஜா செய்யப்பட்ட நிலவரி இப் பிரிவின் காரியத்துக்காகச் செலுத்தப்படத்தக்க நிலவரி என்று கருதப்படமாட்டாது.

(2) (1) உபபிரிவின் கீழ் செலுத்தப்படத்தக்க பிரதேச வரி எந்த நிலம் விஷயமாய் யாதொருவர் பிரதேச வரியைச் செலுத்துவதற்கு உட்பட்டிருக்கிருரோ அத்தகைய சகல நிலங்களின் பேரிலும் அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய வரி எனக் கருதப்பட வேண்டும்; அத்தகைய நிலங்களும் அவற்றின் பேரிலுள்ள கட்டிடங்களும் அவற்றின் விளைபொருள்களும் ஷ பிரதேச வரிக்கு ஜாமீனுகக் கருதப்படும்.

(3) சென்னை—(1864–ம் ஷூத்து II–வது சட்டமாகிய) 1864–ம் ஷூத்திய சென்னை நிலவரி வசூலிப்புச் சட்டத்தின் ஷரத்துக்கள் எந்த நிலங்கள் விஷயமாய் இச் சட்டத்தின்படிக்கான பிரதேச வரி செலுத்தப்படத்தக்கதோ அந்த நிலங்களின் பேரில் பாக்கியாயுள்ள நிலவரியைச் செலுத்துவதற்கும் வசூலிப்பதற்கும் பிரயோகப்படுவதுபோலவே இச் சட்டத்தின்படிச் செலுத்தப்படத்தக்க பிரதேச வரியைச் செலுத்துவதற்கும், வசூலிப்பதற்கும் பிரயோகப்படும்.

(4) (a) ஒவ்வொரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியிலும் அவ்வாறு வசூலிக்கப்பட்ட பிரதேச வரித்தொகையிலிருந்து 4/9 பாகத்திற்குச் சமமான தொகை பஞ்சாயத்து யூனியன் (கல்வி) நிதிக்கு வரவு வைக்கப்படவேண்டும்.

(b) ஒரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியில் ஒவ்வொரு பஞ்சாயத்துப் பட்டணத்திலும் வசூலிக்கப்பட்ட பிரதேச வரித்தொகையிலிருந்து 2/9 பாகத்திற்குச் சமமான தொகை பட்டணம் பஞ்சாயத்து நிதிக்கு வரவு வைக்கப்படவேண்டும்.

(c) பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதியில் வசூலிக்கப்பட்ட பிரதேச வரியில் எஞ்சியிருக்கும் தொகையிலே பஞ்சாயத்து யூனியன் நிச்சயிக்கக்கூடிய சத வீதமுள்ள தொகை கிராமப் பஞ்சாயத்து நிதிக்கு வரவு வைக்கப்படவேண்டும். பஞ்சாயத்து யூனியனிலுள்ள சகல கிராமப் பஞ்சாயத்துக்களும் பெருகிற மொத்த வருமானங்களும் அந்த பஞ்சாயத்து யூனியனிலுள்ள கிராம மக்களில் ஒவ்வொருவருக்கும் 20 நயா பைசா என்ற அளவில் கணக்கிடப்பட்ட ஒரு தொகைக்குக் குறையாமலிருக்கும்படிப் பார்த்துக் கொள்வதற்கு இயன்ற வரையில் இந்த சத வீதம் நிச்சயிக்கப்பட வேண்டும்.

(d) பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதிகளில் வசூலிக்கப்பட்ட பிரதேச வரித் தொகையில் எஞ்சியிருக்கும் தொகை பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களுக்கு வரவு வைக்கவேண்டும்.

குறிப்பு

பிரதேச வரி.—பிரதேச வரியை ஜில்லா கலெக்டர் வசூல் செய்கிருர். அதில் ஏதாவது தப்புகள் இருந்தாலும், சட்டப்படி அந்த வரியை விதிக்கா விட்டாலும் அதற்கு கலெக்டர் பேரில் தான் தாவா செய்ய வேண்டும். பஞ்சாயத்தின் பேரிலாவது, பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் பேரிலாவது, தாவா செய்யக் கூடாது. [அரிச்சந்திரா–எ–கஞ்சாம் டிஸ்ரிக்ட் போர்டு, 24 Mad. 114 :: சின்னசாமி–எ–சேலம் ஜில்லா கலெக்டர், 20 M. L. J. 771 = 1910 M. W. N. 623 = 8. M. L. T. 201.]

நிலங்களின்பேரில் செஸ் (அதாவது) அதிகவரி (பிரிவுகள் 115—118)

பி. 115 (1) பிரதேசவரி.—இதை "ரோட்டு பண்டு" என்றும் "லாண்டு செஸ்" என்றும் சொல்வதுண்டு. 268-ம் பக்கம் I-ம் பாராவில் சொல்லிய படிக்கு இதை 3 சட்டங்கள் மூலம் வசூலிக்கப் பட்டிருந்தது. அவைகளை ஒன்றுக சேர்த்து இந்த பிரிவின் கீழ் ஒரே தடவையாக ரூபா ஒன்றுக்கு நிலவரியின் மேல் 45 நயாபைசா வீதப்படி ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலும் விதித்து வாங்கவேண்டும். இந்த பிரதேசவரியை அரசாங்கம் வஜா செய்த நிலவரியின் பேரில் விதித்து வசூலிக்கக் கூடாது. இந்த பிரதேசவரியை எப்படி வசூலிக்க வேண்டும் என்பதை குறித்து117-வது பிரிவின்படிக்கு அரசாங்கம் விதிகளை செய்யும்.

பி. 115 (4) மேல்படி நயாபைசா 45-ல்

1. பஞ்சாயத்து பட்டணங்களில் வசூலிக்கும் 45 நயாபைசாக்களில் **10 நயாபைசாக்கள் பட்டணம் பஞ்சாயத்து நிதிக்கு சேரும்.**

2. பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலானது தன்னுடைய பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதியில் எத்தனை பஞ்சாயத்துகள் இருக்கிறது என்றும் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் எவ்வளவு ஜனத்தொகை இருக்கிறது என்றும் கணக்கிட்டு கொள்ள வேண்டும். **அந்த ஜனத்தொகையின் படிக்கு ஒவ்வொரு கிராம பஞ்சாயத்து நிதிக்கும் நபர் ஒன்றுக்கு 20 நயா பைசாவீதம் கொடுக்க வேண்டும்.**

3. 1-வது ஐடத்திலும் 2-வது ஐடத்திலும் சொல்லியபடிக்கு கொடுத்தது போக ஷ 45 நயாபைசாக்களில் மீதியுள்ள தொகை பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலின் நிதியை சேரும். 118-வது பிரிவின் படிக்கு நபர் ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் நிலவரியிலிருந்து ஒவ்வொரு பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதிக்கும் சேரும் பஞ்சாயத்து யூனியன் நிதிகளை குறித்து பிரிவுகள் 135, 136 களை பார்க்கவும்.

116. **பிரதேச வரி ஸர் சார்ஜ்** அரசாங்கத்துக்கு நிலவரி செலுத்துவதற்கு உட்பட்ட ஒவ்வொரு நபருக்கும் பஞ்சாயத்து யூனியனிலுள்ள யாதொரு நிலம் விஷயமாக பொருத்தமானதெனக் கருதப்படக்கூடிய விதத்தில் பிரதேச வரி ஸர்சார்ஜ் ஒன்றை 115-வது பிரிவின் கீழ் பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியில் விதித்து வசூலிக்கப்படுகிற வரிக்கு கூடுதலாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலும் விதித்து வாங்கலாம். அவ்வாறு விதித்து வசூலிக்கப்பட்ட பிரதேச வரி ஸர் சார்ஜின் வீதம் நிர்ணயிக்கப்படக்கூடிய உச்ச அளவுக்குட்பட்டிருக்க வேண்டும்.

குறிப்பு

நிலவரி-1, பிரிவு. 115-ன் கீழ் பிரதேசவரி-2. பிரிவு 116-ன் கீழ்.—பிரதேச வரியின் அதிகவரி-அது தான் சர்சார்ஜ். இதை கட்டாயமாயும் உச்சவரம்பு வரையிலும் விதிக்க வேண்டுமென்று தான் அரசாங்கத்தின் இஷ்டம். அதற்காக தான் பி. 129 படிக்கு சர்சார்ஜ் போட்டு விதித்து வசூலித்த தொகைகளுக்கு சரிசமமான (இணையான) சதவீத மான்யத்தை கொடுக்கிறது.

பொது:—1. பிரிவு 85(2)ன் கீழ் விதிக்கும் நீர்பாசன கட்டணங்களும். **2.** பிரிவு 115-ன் கீழ் விதிக்கும் பிரதேசவரியும் **3.** பி. 119 (3)ன் கீழ் குறிப்பிட்ட ஒரு காரியத்துக்காக விவசாய நிலங்களின் பேரில் விதிக்கும் வரியும், இந்த பி. 116-ன் கீழ் விதிக்கப்பட்ட பிரதேச வரி சர்சார்ஜில் (அதாவது பிரதேசவரியின் மேல் போடும் அதிக வரியில்) சேராது. இந்த ஸர் சார்ஜ் தனிப்பட்டவரி இந்த தொகை பூராவும் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் (பொது) நிதிக்கு சேரும். பி. 135 (ii)யை பார்க்கவும். இந்த சர் சார்ஜ்வரி உச்ச அளவுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். இதன் அடியில் உள்ள விதிகள் ஒருக்கால் உபயோகப்படலாம்.

பி. 116ன் கீழ் விதிகள்

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் நிலவரி விதிப்பது (ஞ. IX—9)

1. (நிலவரி விதிப்பதற்கான விண்ணப்பம் செய்து கொள்கிற வருஷம் உட்பட) தொடர்ச்சியாக இரண்டு வருஷங்களுக்கு மேற்பட்டு ஒரு பஞ்சாயத்து பற்றுக்குறையாக நடத்தி வந்திருந்தால் அது இன்ஸ்பெக்டருடைய அனுமதி பெற்றுக்கொண்டு நிலவரி விதிக்கலாம்.

2. நிலவரி வீதிப்பதற்கான பிரேரணையானது, இது காரியத்துக்காக வென்றே கூட்டப்பட்ட ஒரு கூட்டத்திலே, பஞ்சாயத்தில் மொத்தத்திலே இருக்கவேண்டு மென்று அனுமதிக்கப்பட்ட அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் பாதி பேருக்குக் குறையாதவர் களால் ஆதரிக்கப்பட்ட பஞ்சாயத்துத் தீர்மானம் ஒன்றினுல் அங்கீகரிக்கப்பட வேண்டும்; மேலும் அப்பிரேரணையானது பிரஸ்தாப நிதி வருஷத்தின் முடிவுக்கு மூன்று மாதங்களுக்குக் குறையாமல் முன்னதாக ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர் மூலமாகவும் கலெக்டர் மூலமாகவும் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பப்பட வேண்டும்; மேலும் அதனுடன்—

(i) மேற்படி பிரேரணைக்கு உடன்பட்டு முதன்மையான கிராம வாசிகள் செய்து கொண்ட மகஜர் ஒன்றும்,

(ii) முந்திய மூன்று வருஷங்களுக்காகவும் விண்ணப்பம் செய்து கொள்ளப் படுகிற வருஷத்துக்காகவும் வெவ்வேறு தலைப்பின் கீழ் வரவுகளையும் பொறுப்புகளையும் காட்டுகிற ஸ்டேட்மெண்ட் ஒன்றும்,

(iii) பிரேரணை செய்யப்படுகிற வருஷத்துக்குரிய வரவு செலவுத் திட்டம் ஒன்றும், அனுப்பப்படவேண்டும்.

3. ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸரானவர், பஞ்சாயத்தின் திரவிய நிலைமை மேற்படி வரி விதிப்பதனுல் பஞ்சாயத்துக்குக் கிடைக்குமென்று மதிப்பிடப்படுகிற வருமானம், பஞ்சாயத்தின் திரவிய நிலையை சீர்படுத்துவதற்கு மேற்படி வருமானம் எவ்வாறு உபயோகிக் கப்படு மென்பது ஆகிய இவை பற்றிய ஓர் அறிக்கை சகிதமாக அந்த பிரேரணையை கலெக்டருக்கு அனுப்ப வேண்டும்.

4. கலெக்டரானவர் மேற்படி பிரேரணையை தமது சிபார்சு சகிதமாக இன்ஸ்பெக் டருக்கு அனுப்பவேண்டும்; ஜில்லா போர்டுகளைக் குறித்த (சென்னை 1920-ம் வருஷத்து 14-வது சட்டமாகிய) 1920-ம் வருஷத்திய சென்னபட்டணத்துச் சட்டத்தின் படியும் ஆரம்பக் கல்வியைக் குறித்த (சென்னை 1920-ம் வருஷத்து 8-வது சட்டமாகிய) 1920-ம் வருஷத்திய சென்னபட்டணத்துச் சட்டத்தின் படியும் பஞ்சாயத்துப் பிரதேசத்திலே ஏற்கெனவே வசூலிக்கப்படுகிற நிலவரி வீதத்தையும், மேற்படி வரி விதிக்கப்படுவதனுல் அங்கே குடி இருப்பவர்களுக்கு கஷ்டம் ஏதாகிலும் வெகுசாக ஏற்படக்கூடுமானுல் அக் கஷ்டத்தையும் கிரமப்படி கவனித்து மேற்சொன்ன சிபார்சு செய்யப்பட வேண்டும்.

5. நிலவரி விதிப்பு எந்த வருஷத்தில் அனுமதிக்கப்படுகிறதோ அதற்கு அடுத்துவரும் வருஷத்திலிருந்து அது செலாவணியாகும்; மேலும், அது மூன்று வருஷங்களுக்கு மேற் படாமல் இன்ஸ்பெக்டர் குறிப்பிடக்கூடிய கால அளவு வரையில் அமுலிலிருந்துவரும்.

ஆனுல், பஞ்சாயத்து சிபார்சு செய்வதன் பேரில், இன்ஸ்பெக்டரானவர் ஒரு சமயத் தில் மூன்று வருஷங்களுக்கு மேற்படாத அதிகப்படியான கால அளவுக்கு மேற்படி வரி விதிப்புக் காலத்தை அதிகப்படுத்தலாம்.

6. இன்ஸ்பெக்டரானவர், எழுதி வைக்கப்பட வேண்டிய காரணங்களுக்காக வேனும், பஞ்சாயத்து கேட்டுக்கொள்வதன் பேரிலேனும், நிலவரி விதிப்பு அமுலிலிருந்து வருகிற கால அளவில் எப்போதேனும் அந்த வரி விதிப்பை ரத்துச் செய்யலாம். அப்படி ரத்து செய்வதானது, அது எவ் வருஷத்தில் உத்தரவாகிறதோ அவ் வருஷத்துக்கு அடுத்து வரும் வருஷத்திலிருந்து செலாவணியாகும்.

7. ஜில்லா போர்டுகளை குறித்த 1920-வருஷத்திய சென்னபட்டணத்துச் சட்டத்தின் படி வசூலிக்கப்படுகிற நிலவரி விஷயத்தில் செய்யப்படுவது போலவே, இவ் விதிகளின்படி விதிக்கப்படுகிற நிலவரியானது ரெவினியூ இலாகாதாரரால் வசூலிக்கப்பட்டு பஞ்சாயத்து நிதிகளுக்கு வரவு வைக்கப்பட வேண்டும்; மேலும், மேற்படி சட்டத்தின் 79 முதல் 91 வரையிலுள்ள பிரிவுகளின் ஷரத்துக்கள் அவ்வாறு விதித்து வசூலிப்பதற்குப் பிரயோகப்படத் தக்கவையாகும்.

வரிகளின் பொது விஷயங்களை 269, 270, 271 பக்கங்களில் பார்க்கவும்

117. பிரதேச வரி வசூலிப்பதை ஒழுங்கு படுத்துவதற்காகவும், பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களுக்கும் அதைக் கொடுப்பதற்காகவும், அதை வசூல் செய்வதில் அரசாங்கத்தாருக்குப் பிடித்த எவையேனும் செலவுகளை பிடித்துக் கொள்வதற்காகவும் அரசாங்கத்தார் இச் சட்டத்திற்கு முரண்படாமல் விதிகள் செய்யலாம்.

பிரதேச வரியை வசூலிப்பதைப் பற்றிய விதிகள்

118. இந்த அரசாங்கத்தார் பிரஸ்தாப ஆண்டில் (தண்ணீர் வரி உட்பட இந்த ராஜ்யத்தில் வசூல் செய்யப்பட்ட மொத்த நிலவரியிலிருந்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதியின் மக்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாய் என்ற அளவிலுள்ள தொகையை ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கும் கொடுக்க வேண்டும் அந்தப் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களுக்கு அவ்வாறு வரவு வைக்கப்பட்ட தொகை அத்தொகையின் நிலவரி ஒப்படை என்று கருதப்படும்.

நிலவரி ஒப்படை

குறிப்பு

பொது:—இந்த பிரிவின்படிக்கு நிலவரியிலிருந்து பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதியில் இருக்கும் ஒவ்வொரு நபருக்காக ஒரு ரூபா வீதம் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு கொடுக்கப்படும் கேரளா 1958-ம் வருடத்திய 48-ம் மசோதா (பில்) பகுதி 77 (2) (iii) படிக்கு நிலவரியிலிருந்து பேர்பாதியை அதாவது 100-க்கு 50 வீதம் பஞ்சாயத்து பண்டுக்கு கொடுக்கப்படும். இதில் நிலவரியிலிருந்து எந்த அரசாங்கம் பஞ்சாயத்து நிதிக்கு அல்லது பஞ்சாயத்து நிதிகளுக்கு அதிகமாக கொடுக்கிறது என்பதை கணக்கு மூலம் அறியவேண்டும்.

மக்கள் ஒவ்வொருவருக்கு.—அதாவது ஜனத்தொகையில் நபர் ஒன்றுக்கு என்று பொருளாகும். இந்த சட்டத்தின்படிக்கு 10-வருஷங்களுக்கு ஒரு முறை எடுக்கும் "சென்செஸ்" என்னும் ஜனத்தொகை கணக்கு எடுப்பது அவசியமானது அப்போதுதான் பீடிகை I-ல் கண்டபடி உணவு உற்பத்தி அதிகப்படுத்த முடியும். இந்த பிரிவில் கண்டபடிச்கு நபர் ஒன்றுக்கு ஒரு ரூபா கணக்கிட்டு பெற முடியும். பிரிவு 128படிக்கும் ஜனத்தொகை சங்கியை அவசியமானது.

1. வீட்டுவரி, 2, தொழில்வரி, 3. வண்டிவரி, 4. சொத்தை மாற்றுவதற்கு வரி, 5. விவசாய நிலத்தின்மீது வரி.

வரிகளின் பொது விஷயங்களை 269, 270, 271 பக்கங்களில் பார்க்கவும்.

119. (1) ஒவ்வொரு கிராம பஞ்சாயத்தும் ஒவ்வொரு நகர பஞ்சாயத்தும் முறையே பிரஸ்தாப கிராமத்தில் அல்லது நகரத்தில் வீட்டு வரி, தொழில் வரி, வண்டி வரி ஆகிய வரிகளை விரிக்க வேண்டும்.

பஞ்சாயத்துக்களினல் விதிக்கப்பட வேண்டிய வரிகள்.

(2) ஒவ்வொரு பஞ்சாயத்துக் கிராமத்திலும் ஒவ்வொரு பஞ்சாயத்து நகரத்திலும் சொத்து இன்னெருவருக்கு மாற்றப்படுகிற சில விஷயங்கள் மீது 124-வது பிரிவின் ஷரத்துக்களை அனுசரித்து ஒரு தீர்வை விதிக்கப்பட வேண்டும்.

(3) நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டும், இன்ஸ்பெக்டருடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டும், அனுமதி கொடுக்கும் காலத்திலோ அதற்குப் பிறகோ அவர் எந்த வரையறைகளையாகிலும் நிபந்தனைகளையாகிலும் விதித்தால் அவைகளுக்குட்பட்டும், சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற்போல், கிராமத்தில் அல்லது நகரத்தில் குறிப்பிட்ட ஒரு காரியத்துக்காக விவசாய நிலத்தின் மீது வரியொன்றையும் விதிக்கலாம்.

வரிகளின் பொது விஷயங்களை 269, 270, 271 பக்கங்களில் பார்க்கவும்

குறிப்பு

வரிகளை விதிக்க கோர்ட்டுகளுக்கு அதிகாரமில்லை

வரிபோடும் விஷயத்தில் சிவில் கோர்ட்டானது. பஞ்சாயத்தின் தீர்மானத்திற்கு அல்லது அபிப்பிராயத்திற்கு எதிராக தனக்குத் தோன்ற வரியை விதிக்கக்கூடாது. [ஒய். முனிசிபாலிடி,-எ.-கிருஷ்ணஜி கெங்காதரர் (1898) 23 Bom 446.] முரார்-எ.-போர்ஷாத் முனிசிபாலிடி, (1900) 24 Bombay 609] ஆனல் வரி விதிக்கும் விஷயத்தில் விதிகள் படிக்கு மதிப்புப் போடாவிட்டால் அப்போது அந்த வரி போடுவதே சட்ட விரோதமாயிருக்கும்பொழுதும் சிவில் கோர்ட்டு பிரவேசிக்கும். [கஸான்தாஸ் ரகுனதாஸ்-எ.-அங்களேஸ்வர் முனிசிபாலிடி, (1902) 26 Bom 294 : : சாப்ரா முனிசிபாலிடி-எ.-வாசுதேவ நாருயன், (1909) 37 Cal. 374.]

1- **119 (1) வீட்டு வரி**—பிரிவு 120யை பார்க்கவம்
2. ,, **தொழில் வரி**—பிரிவு 121யை பார்க்கவும்.
3. ,, **வண்டி வரி** —பிரிவு 122யை பார்க்கவும்.
4. **119 (2) சொத்து மாற்றுவதற்கு விதிக்கும் தீர்வை**—பிரிவு 124யை பார்க்கவும்.
5. **119 (3)** குறிப்பிட்ட ஒரு காரியத்துக்காக **விவசாய நிலத்தின்மீது வரி**—இதன் விதிகளை அடியில் அச்சிட்டுள்ளதை காணவும்.

பி. 119. (3) படிக்கு விதிகள்

குறிப்பிட்ட காரியங்களுக்காக விவசாய நிலத்துக்கு வரி (ஞ-X-10)

1. (1) அடியிற்கண்டவைகளைப் போன்ற குறிப்பிட்ட ஒரு காரியத்துக்காக யாதொரு கிராமத்திலே ஒவ்வொரு அரை வருஷத்திலும் விவசாய நிலத்துக்கு வரி விதிக்கப்படத் தக்கதாகும் :—

(a) எந்த பாசன வாய்க்கால்கள் அல்லது ஏரிகள் சம்பந்தமாக மேற்படி சட்டத்தில் கண்ட 85 (2) பிரிவின்படி குடிமராமத்துக் கட்டணம் எதுவும் விதிக்கப்படுவதில்லையோ அந்த வாய்க்கால்களையும் ஏரிகளையும் செப்பனிடுவது:

(b) தண்ணீர் கட்டுவேலைகளை அல்லது வடிகால் கட்டு வேலைகளை நிர்மாணிப்பது பராமரித்து வருவது, செப்பனிடுவது, விஸ்தரிப்பது அல்லது சீர்திருத்தி வருவது; (பி- 84)

(c) காஸ் (Gas) அல்லது மின்சாரத்தைக் கொண்டு விளக்கேற்றுவது; (பி. 69)

(d) பாட்டை போடுவது அல்லது பாலம் அல்லது மதகு கட்டுவது; அல்லது,

(e) கலாச்சாரம், கல்வி, வைத்தியம் ஆகிய இவைபோன்ற காரியங்களுக்காக உபயோகிக்க உத்தேசித்துள்ள கட்டிடங்களைக் கட்டுவது; மேலும், அந்த வரியானது எந்த அரை வருஷத்தில் அனுமதிக்கப்படுகிறதோ, அதற்கு அடுத்து வரும் அரை வருஷத்தின் முதல் தினத்திலிருந்து செலாவணியாகும்.

(2) நிலத்தின் விஸ்தீர்ணத்தை அடிப்படையாகக்கொண்டு வரி வீதத்தை நிச்சயிக்க வேண்டும்; ஆனல் பஞ்சாயத்தானது நஞ்சை நிலத்துக்கு ஒன்ருகவும் புஞ்சை நிலத்துக்கு மற்ருென்ருகவும் நிலத்தின் மதிப்புக்கு ஏற்றபடி வெவ்வேறு வீதங்களை அமைத்துக் கொள்ளலாம்.

2. மேற்படி வரியை விதிப்பதற்கான பிரேரணை ஒவ்வொன்றும் ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர் மூலமாகவும் கலெக்டர் மூலமாகவும் இன்ஸ்பெக்டருக்கு அடியிற்கண்டவைகள் சகிதமாக அனுப்பப்பட வேண்டும் :—

(1) இது காரியத்துக்காக வென்றே கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டதும், பஞ்சாயத்திலே, மொத்தத்தில் இருக்க வேண்டுமென அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையுள்ள அங்கத்தினர்களில் பாதிபேருக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப் பட்டதுமான ஒரு தீர்மானம்; இன்ன காரியத்துக்காக, இன்ன விதிப்படி, இன்ன கால அளவுக்கு மேற்படிவரி விதிக்கப்படு மென்பதை அத்தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்க வேண்டும்:

வரிகளின் பொது விஷயங்களை 269, 270, 271 பக்கங்களில் பார்க்கவும்

(2) பிரேரணை செய்யப்படுகிற வருஷத்துக்கு முந்தி உள்ள மூன்று வருஷங்களில் வெவ்வேறு கணக்குத் தலைப்புகளின் கீழ் வரவுகளையும் பொறுப்புகளையும் காட்டுகிற ஒரு ஸ்டேட்மென்ட்;

(3) பிரேரணை செய்யப்படுகிற வருஷத்துக்குரிய வரவு செலவுத் திட்டம்;

(4) எந்தக் கட்டுவேலை சம்பந்தமாக வரி விதிக்க உத்தேசித்திருக்கிறதோ அந்த கட்டுவேலையின் தோராயமான அல்லது குத்துமதிப்பான செலவு பற்றிய விவரங்களும், ஒரு அரை வருஷத்தில் வெகுசாய் வசூலிக்கப்படக்கூடிய வரித்தொகையும்;

(5) மேற்படி வரி விதிப்புக்கு உடன்பட்டு முதன்மையான கிராம வாசிகள் செய்து கொள்ளும் ஒரு மகஜர்.

3. கலெக்டரானவர் பிரேரணையை இன்ஸ்பெக்டருக்கு அனுப்பும்போது, உத்தேசிக்கப்பட்ட வரி வீதம் தகுதியானதுதானு அல்லவா என்பது பற்றி தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கலாம்.

4. இன்ஸ்பெக்டரானவர், மேற்படி வரி விதிப்புக்கு அனுமதி யளிக்கையில் இன்ன வீதப்படியும் இன்ன கால அளவுக்கும் அது விதிக்கப்பட வேண்டு மெனக் குறிப்பிடவேண்டும்; மேலும் அவர், அந்த வரி எந்த நோக்கத்துக்காக விதிக்கப்படுகிறதோ, அந்த நோக்கம் நிறைவேறும் பொருட்டு அவசியமானுல் அக்கால அளவை அவ்வப்போது அதிகப்படுத்தலாம்.

5. மேற்படி வரியிலிருந்து கிடைக்கும் தொகைகள் ஒரு தனி நியாயகதி இருக்க வேண்டும், மேலும், அவ்வரி எந்த நோக்கத்துக்காக விதிக்கப்படுகிறதோ அந்த நோக்கத் துக்காகவே பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்டிருக்க வேண்டும்; அன்றியும், அந்த நிதிக்குச் சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்காக தனிக் கணக்கு ஒன்று வைக்கப்பட்டு வரவேண்டும்.

6. வரிகளை விதிப்பது சம்பந்தமாகவும் வசூலிப்பது சம்பந்தமாகவும் மேற்படி சட்டத்தில் கண்ட 119 (3), 178 (2) (xx) (xxii) பிரிவுகள்படிப் பிறப்பிக்கப்பட்ட விதிகள் மேற்படி விதிக்கும் விஷயத்திலும் வசூலிக்கும் விஷயத்திலுங்கூட அவசியமான மாறுதல்களுடன் பிரயோகப்படும்.

வரி புஸ்தகங்களையும் வரி விதிப்பு கணக்குகளையும், வரி செலுத்துபவர்கள் பிரிவுகள் 117—127 படிக்கும் பார்வை யிடுவது (ந—IX—9)

பி. 178 (X) படிக்கு விதிகள்

1. ஒரு பஞ்சாயத்தின் நிர்வாக உத்தியோஸ்தர், அரசாங்கத்தார் அப்போதைக்கப் போது விதிக்கக்கூடிய நமூனுப்படி வரி விதிப்பு புஸ்தகங்களைத் தயாரித்து வைத்து வர வேண்டும்; அவற்றில் ஷே சட்டத்தின்படி வரி விதிக்கத்தக்கவர்களையும், வரி விதிக்கத்தக்க சொத்துக்களையும் கண்டிருக்க வேண்டும். **(சி. வி. நா. 1-யைப் பார்க்கவும்.)**

2. வரி விதிப்புப் புஸ்தகங்களையும், யாதொரு வரி விதிப்பு சம்பந்தமாய் சவிஸ்தார மான விவரங்கள் தனிப்பட்ட தஸ்தாவேஜுகளில் வைத்து வரப்பட்டால் அவற்றில் மேற்படி விவரங்கள் அடங்கிய பாகத்தையும், வேலை செய்யும் நாட்களில் ஆபீஸ் வேலை மணி நேரத்தில், கட்டணம் எதுவும் செலுத்தாமலேயே, மேற்படி பஞ்சாயத்துக்கு யாதொரு வரி செலுத்துகிற எவராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற ஏஜென்டாவது அவற்றைப் பார்வையிடும்படி வைத்திருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள், அல்லது அவர்களுடைய ஏஜென்டுகள் மேற்படி புஸ்தகங்கள் அல்லது தஸ்தாவேஜுகளிலிருந்து கட்டணமெதுவுமின்றி, எக்ஸ்ட்ராக்டுகளை எடுத்துக்கொள்ள பாத்தியதையுடையவர்களாவார்கள். **(சி. வி. நா. 2-யைப் பார்க்கவும்.)**

3. பஞ்சாயத்தின் கணக்குப் புஸ்தகங்களை, மேற்படி பஞ்சாயத்துக்கு யாதொரு வரி செலுத்துகிறவர் எவரும் அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற ஏஜென்டாவது, பஞ்சாயத்து ஒவ்வொரு மாதத்திலும் நிர்ணயிக்கக் கூடிய தினத்தில் அல்லது தினங்களில் எந்தக் கட்டணமும் செலுத்தாமலேயே பார்வையிடும்படி வைத்திருக்க வேண்டும். **(சி. வி. நா. 3-யைப் பார்க்கவும்.)**

வரிகளின் பொது விஷயங்களை 269, 270, 271 பக்கங்களில் பார்க்கவும்

வரி விதிப்பதும் வசூலிப்பதும்

பி. 178 (2) படிக்கு (ந—X—10) விதிகள்

A. எல்லா வரிகளுக்கும் பொதுவான விதிகள்

1. நிர்வாக அதிகாரி, இவ் விதிகளில் வேறு விதமாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, ஒவ்வொரு நபர் அல்லது சொத்துக்கும் விதிக்கத்தக்க வரியை நிச்சயிக்க வேண்டும்.

ஆனல், நிர்வாக அதிகாரி செலுத்தத்தக்க வரிகள் விஷயத்தில் பஞ்சாயத்து வரி விதிக்க வேண்டும். **(சி. வி. நா. 4-யைப் பார்க்கவும்:)**

2. (a) யாதொரு நபர் அல்லது சொத்துமீது குறைவாக வரி, விதிக்கப் பெற்றிருக்கிறது என்ருவது அந்த நபர் அல்லது சொத்து அசட்டை காரணமாகவோ தகுதியற்ற முறையிலோ யாதொரு வரிக்குச் சம்பந்தப்பட்ட வரி விதிப்புப் புஸ்தகங்களிலிருந்து விடப்பட்டிருக்கிற தென்ருவது மேற்படி புத்தகங்களில் யாதொரு எழுத்துப் பிழை அல்லது கணக்குப் பிழை இருக்கிறதென்ருவது மேற்படி பஞ்சாயத்து எப்போதாகிலும் தெரியவந்தால், அது, மேற்படி புஸ்தகத்தில், தான் நியாயமானதென்ருே அவசியமானதென்ருே கருதுகிற விதமாக அப் புஸ்தகங்களைத் திருத்துமாறு நிர்வாக அதிகாரிக்குக் கட்டளையிடலாம்.

ஆனல், வரி விதிப்பில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தால், சம்பந்தப்பட்டவருக்கு வரி விதிப்புப் புஸ்தகங்களில் உத்தேசித்துள்ளபடி ஏன் திருத்தம் செய்யக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுவதற்காக, நியாயமான அவகாசம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி அப்படிப்பட்ட கட்டளை யெதையும் பிறப்பிக்கக்கூடாது.

(b) அத்திருத்தம் அவசியமாயிருந்த சந்தர்ப்பம் எந்த நடை முதல் அரை வருஷத்தில் ஏற்பட்டதோ அந்த அரை வருஷத்தில் அல்லது அதற்கு அடுத்து முந்திய இரண்டு அரை வருஷங்களில் கூடிய விரைவான தேதியில் அத் திருத்தம் செலாவணியாகத் தொடங்கியதாகக் கருத வேண்டும். **(சி. வி. நா. 5-யைப் பார்க்கவும்.)**

3. (1) நிர்வாக அதிகாரி வரியொன்றைச் செலுத்துகிற ஒவ்வொருவருக்கும், அதற்காக தாமாவது அது விஷயமாய்த் தம்மிடமிருந்து கிரமமாய் அதிகாரம் பெற்ற வேறு எவராவது கையெழுத்திட்ட ரசீது ஒன்றைக் கொடுக்க வேண்டும்.

(2) அந்த ரசீதில் :—

(a) அது கொடுக்கப்பட்ட தேதியும்.
(b) அது யாருக்குக் கொடுக்கப்படுகிறதோ அவருடைய பெயரும்.
(c) எந்த வரி விஷயமாய் மேற்படி தொகை செலுத்தப்பட்டிருக்கிறதென்பதும்.
(d) எந்தக்கால அளவுக்குமேற்படி தொகை செலுத்தப்பட்டிருக்கிறதென்பதும்.
(e) செலுத்தப்பட்ட தொகையும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(சி. வி. நா. 6-யைப் பார்க்கவும்:)

B. விட்டு வரி விதிப்பது

4. வீட்டு வரியின் காரியத்துக்காக வீடுகளுக்கு, அவற்றின் வருஷாந்தர அல்லது மூலதன மதிப்பின் பேரில், வரி விதிக்கப் பஞ்சாயத்து தீர்மானித்தால், அப் பஞ்சாயத்து நிர்ணயித்த வீதங்கள் ஒவ்வொரு வீட்டின் மதிப்பின் சங்கியா பரிமாணப்படி யிருக்கலாம் அல்லது அவ்வீட்டின் மதிப்புக் கிணங்கக் கிரமமாக உயர்ந்து கொண்டே போகலாம்; ஆனல், எவ்விஷயத்திலும் வீட்டின். மதிப்பு அதிகரிக்கையில், அவ்வீதமானது குறையலாகாது. **(சி. வி. நா. 8-யைப் பார்க்கவும்.)**

5. (1) பஞ்சாயத்து சங்கியா பரிமாணப்படிக்கான வீதத்தை அனுசரித்திருந்தால், அது வரியைக் கணக்கிட்டு வசூலிப்பதைச் சுலபமாக்குவதற்காக மேற்படி கிராமத்திலுள்ள வீடுகளைத் தரவாரியாகத் தொகுதி செய்யலாம்.

(2) பஞ்சாயத்து கிரமமாக உயர்ந்து கொண்டே போகும் வீதத்தை அனுசரித்திருந்தால், அது (i) [ஒவ்வொரு வீட்டின் வரி விதிப்பிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை இதற்கு

வரி இல்லாத தொகையாகக் கழித்துக்கொள்ள வேண்டும் அல்லது கீழ்த்தர வகையில் ஒரு குறிப்பிட்ட சத வீதத்திலிருந்து உயர்ந்த வகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் வரை வரி விதிப்பு கிரமமாக உயர்ந்து கொண்டே போக வேண்டும் என்பது போன்று] தரம் பிரிப்பதற்கான கொள்கைகளை நிர்ணயிக்க வேண்டும்; (ii) ஒவ்வொரு வகைக்கான சரியான எண்ணிக்கையையும், வகையறைகளையும் தீர்மானிக்கவும் வேண்டும்.

(3) பஞ்சாயத்து இந்த இரண்டு விஷயங்களிலும், வரி விதிப்பு சங்கியா பரிமாணப் படியா யிருந்தாலும் சரி கிரமமாக உயர்ந்து கொண்டே போவதா யிருந்தாலும் சரி, வரி விதிப்புக் கொள்கையைப் பெரும்பாலும் பாதிக்குமாறு அத் தரங்களைப் பிரிக்கக்கூடாது; மேலும், தரங்களின் எண்ணிக்கை எந்த விஷயத்திலும் ஆறுக்குக் குறையலாகாது. **(சி. வி. நா. 9-யைப் பார்க்கவும்.)**

6. (1) மேற்படி கிராமத்தில் அடங்கியுள்ள யாதொரு பிரதேசத்தில் விசாரணை யதிகாரம் வசிக்கிற கர்ணம், நிர்வாக அதிகாரி அடியிற் கண்டவாறு கேட்டுக்கொள்வதன் பேரில் அப் பிரரதேசத்துக் குள்ளிருக்கிற எல்லா வீடுகளைக் குறித்த ஜாபிதாவில் அவ் வீடுகளின் சொந்தக்காரர்கள், ஆட்சியாளர்கள் இவர்களுடைய பெயர்களைப் பதியவும் வேண்டும்.

(2) அந்த ஜாபிதாவைத் தயாரிக்கவும், கலெக்டரின் அங்கீகாரத்துக் குட்பட்டு, பஞ்சாயத்து எந்த ஊதியத்தையேனும் நிச்சயித்தால், அதைப் பெற்றுக்கொள்ளவும் கர்ணம் பாத்தியதை யுடையவராவார்: **(சி. வி. நா. 13-யைப் பார்க்கவும்.)**

7. நிர்வாக அதிகாரி 6-வது விதியில் சொல்லப்பட்டுள்ள ஜாபிதாக்களை வரப்பெற்றுக் கொள்வதன்பேரில், வரி விதிப்புப் புஸ்தகங்களைத் தயார் செய்விக்க வேண்டும். அந்த வரி விதிப்புப் புஸ்தகங்களில் தனித்தனி பத்திகளிலே ஒவ்வொரு வீட்டின் சொந்தக்காரர் பெயரையும், ஆட்சியாளர் பெயரையும், அவ்வீடு யாதொரு தரத்தின்கீழ் வரி விதிக்கப்பட்டால், அத் தொகையையும், சேரவேண்டிய வரித் தொகையையும், அவ் வரி செலுத்தத்தக்க தேதியையும் கண்டிருக்கவேண்டும். **(சி. வி. நா. 14-யைப் பார்க்கவும்.)**

8. வரி விதிப்புப் புஸ்தகங்கள் தயாரிக்கப் பட்டவுடனே, நிர்வாக உத்தியோகஸ்தர், அந்தக் கிராமத்தில் தண்டோராப் போட்டு, அதுபற்றியும் மேற்படி புஸ்தகங்கள் பார்வையிடப் படக்கூடிய இடம் அல்லது இடங்கள் பற்றியும் பொது நோட்டீஸ் கொடுக்கவேண்டும். **(சி. வி. நா. 16-யைப் பார்க்கவும்.)**

9. (1) நிர்வாக அதிகாரி, ஒரு பொது புனர் விமரிசைக்கும் மற்றொரு பொது புனர் விமரிசைக்கும் இடையில் எப்போதாகிலும் வரி விதிப்பு புஸ்தகத்தில் அடியிற்கண்டவாறு செய்து அதைத் திருத்தலாம்:—அதில் யாதொரு வீட்டைச் சேர்ப்பது அல்லது அதிலிருந்து யாதொரு வீட்டை நீக்குவது அல்லது யாதொரு வீட்டின் மதிப்பு அல்லது தரத்தை மாற்றுவது அல்லது அது விஷயமாய்ச் செலுத்தத்தக்க வரித் தொகையை மாற்றுவது அல்லது அடியிற் கண்ட விஷயமாய் அரசாங்கத்தார் செய்யக்கூடிய வேறு எந்த விதிகளுக்கேனும் உட்பட்டு, அதில், யாதொரு வீட்டின் சொந்தக்காரர் பெயருக்குப் பதிலாக மேற்படி திட்டின் சொந்தத்து வத்துக்கு ட்ரான்ஸ்பர் மூலமாகவோ மற்றப்படியோ வாரிசு பெற்றுள்ள வேறொருவருடைய பெயரை அமைத்துக்கொள்வது.

(2) அத் திருத்தம், அது எந்த அரை வருஷத்தில் செய்யப்படுகிறதோ அந்த அரை வருஷத்தின் முதல் தினத்திலிருந்தோ அமுலுக்குவரத் தொடங்கி விட்டிருப்பதாகக் கருதப்படும்

ஆனல், மேற்படி திருத்தமானது, யாதொரு அரை வருஷத்தில், அந்த அரை வருஷத்துக்கான டிமாண்ட் நோட்டீஸ் கொடுக்கப்பட்டதன் பின்னர் செய்யப்பட்டால், கட்டடங்களைக் (குத்தகைக்கு விடுவதையும் அவற்றின் வாடகை விஷயமாய் மேல்விசாரணை செய்வதையும்) குறித்த 1949-ம் ஆஸ்த்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தின்படி ஒரு வீட்டின் நியாயமான வாடகையை நிச்சயிப்பது விஷயமாய் அத் திருத்தம் செலாவணியானலொழிய அது அடுத்து வருகிற அரை வருஷத்திலிருந்துதான் செலாவணியாகத் தொடங்கும் :

மேலும், கட்டடங்களைக் (குத்தகைக்கு விடுவதையும் அவற்றின் வாடகை விஷயமாய் மேல்விசாரணை செய்வதையும்) குறித்த 1949-ம் ஆஸ்த்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தின்படி ஒரு வீட்டின் நியாயமான வாடகையை நிச்சயிப்பது காரணமாக அத் திருத்தமானது அவசியமாயிருப்பதால், அவ்வாறு நியாயமான வாடகை நிச்சயிக்கப்பட்ட தேதியிலிருந்து அத் திருத்தம் செலாவணியாகத் தொடங்கவேண்டும் :

வரிகளின் பொது விஷயங்களை 269, 270, 271 பக்கங்களில் பார்க்கவும்

வரி விதிப்பதும், வசூலிப்பதும்

அன்றியும், ஒரு வீட்டின் சொந்தத்துவத்தை ட்ரான்ஸ்பர் செய்வது பற்றி தாவா செய்து கொள்ளப்பட்ட யாதொரு விஷயமாக நிர்வாக அதிகாரி முடிவு, அவ்வாறு ட்ரான்ஸ்பர் செய்யப் பெற்றவருக்கு அவ் வீட்டின்மீது சட்டபூர்வமான ஹக்கைக் கொடுக்காது.

(3) ஒரு பொது புனர் விமரிசைக்கும் மற்றொரு புனர் விமரிசைக்கும் இடையில் நிர்வாக அதிகாரி யாதொரு வீட்டுக்கு முதன் முதலாக வரி விதிக்கிற ஒவ்வொரு விஷயத்திலும் அல்லது யாதொரு வீட்டின் மீதுள்ள வரி விதிப்பை, வீட்டு வரி விதிக்கப்படதக்க வீதங்கள் பொதுவாக அதிகரிக்கப் பட்டதனுலன்றி மற்றப்படி அதிகப்படுத்துகிற ஒவ்வொரு விஷயத்தி லும், நிர்வாக அதிகாரி, அவ் வீட்டின் சொந்தக்காரர் அல்லது ஆட்சியாளருக்கு விசேஷ நோட்டீஸ் கொடுப்பதன் மூலம், அவ் வரி விதிப்பைப் புனர் விமரிசை செய்வதற்கான ஒரு மனுவானது அரசாங்கத்தார், யாதொரு ரெயில்வே பரிபாலனம் அல்லது யாதொரு கம்பெனி அந்த நோட்டீஸ் கொடுத்த தேதியிலிருந்து அறுபது தினங்களுக்குள்ளும், இதர விஷயங்களில் விஷயத்தில் அந்த நோட்டீஸ் கொடுத்த தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள்ளும் பஞ்சா யத்து ஆபீஸுக்கு வந்து சேர்ந்தால், அது ஆலோசனைக் கெடுத்துக்கொள்ளப்படுமென்று தெரிவிக்க வேண்டும். **(சி. வி. நா. 17-யைப் பார்க்கவும்.)**

10. எவரும், ஒரு அரை வருஷம் முடிவதற்கு முப்பது தினங்களுக்குக் குறையாமல் அல்லது அறுபது தினங்களுக்கு மேற்படாமல் உள்ள காலத்தில் எப்போதாகிலும், புனர் விமரிசை மனு செய்து கொள்வதன் பேரில் அடுத்து வரும் அரை வருஷத்துக்காக தாம்செலுத் தத்தக்க வரியை சந்தர்ப்பத்துக் கேற்றபடி, மேற்படி வரி விதிக்கப்பெற்ற வீட்டின் வரு ஷாந்தர அல்லது மூலதன மதிப்பானது அவ்வீட்டிற்குக் கடைசியாக வரி விதிப்பு செய்யப்பட்ட திலிருந்து அல்லது புனர் விமரிசை செய்ததிலிருந்து குறைந்திருக்கிறது என்ற காரணத்தின் பேரில் குறைக்குமாறு நிர்வாக அதிகாரியை கேட்டுக்கொள்ளலாம். (சி. வி. நா. 18-ஐப் பார்க்கவும்.)

11. 9. (3) அல்லது 10-வது விதியின்படிக்கான ஒரு புனர் விமரிசைமனு பைசல் செய்யப்பட்டதற்கு அடுத்துப் பிறகு, நிர்வாக அதிகாரி, மேற்படி மனுதாருக்கு அல்லது அவ ரிடமிருந்து அதிகாரம் பெற்ற ஏஜெண்டுக்கு, அந்த மனுவின் பேரில் பிறப்பிக்கப்பட்ட உத்த ரவை வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ தெரிவிக்கவேண்டும்; மேலும் புனர்விமரிசை யின் பேரில் நிச்சயிக்கப்பட்ட தொகையை, அவ்வாறு தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து பதி னைந்து தினங்களுக்குள் அல்லது அத்தொகை இன்னும் சேரவேண்டியதாகிவிடுகிற தேதி யிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் செலுத்துமாறும் அவருக்குக் கட்டளையிடவேண்டும்; மேலும் அவர் அவசியமானுல், வரி விதிப்புப் புஸ்தகங்களைத்திருத்துவிக்கவும் வேண்டும். (சி. வி. நா. 19-ஐப் பார்க்கவும்.)

12. நிர்வாக அதிகாரி ஒவ்வொரு அரை வருஷமும் புது ஜாபிதாக்களையோ வரி விதிப் புப் புஸ்தகங்களையோ தயார் செய்விக்கக் கடமைப்பட்டவராகமாட்டார்; ஆனுல் முந்திய அரை வருஷத்துக்கான ஜாபிதாக்களை முந்திய அரை வருஷத்தில் செய்யப்பட்டிருக்கிற அல் லது செய்யப்படக்கூடிய திருத்தங்களுடன் அனுசரிக்கலாம்;

ஆனுல், ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறையாவது பொது வரி விதிப்பு ஒன்றைப் புதிதாய் செய்யவேண்டும்.

அத் திருத்தங்கள், பொது வரி விதிப்பு ஆகிய இவை பற்றிய பொது நோட்டிசை, 8-வது விதியில் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிற விதமாகக் கொடுக்கவேண்டும்.

அப் பொது வரி விதிப்பானது மேற்படி நோட்டிஸ் கொடுக்கப்பட்ட அரை வருஷத் தின் முதல் தினத்திலிருந்தே அமுலுக்குவரத் தொடங்கி விட்டிருப்பதாகக் கருதப்படும். (சி. வி. நா. 20-ஐப் பார்க்கவும்.)

13 முதல் 17 வரை வண்டி வரி விதிகளை பி. 122ன் கீழ் பார்க்கவும்

18 முதல் 22 வரை அபீல் வரி விதிகளை பிரிவு 123ன் கீழ் பார்க்கவும்

23-முதல் 33-வரை வரிகளை வசூலிப்பதை குறித்து பிரிவு 123ன் கீழ் பார்க்கவும்

வரிகளின் பொது விஷயங்களை, 269, 270, 271 பக்கங்களில் பார்க்கவும்

பொதுவான வரி விதிகளின் குறிப்புகளின் அட்டவணை

		பக்கம்
சி. வி. நா. 1.	நிர்வாக அதிகாரி வரி விதிப்பு புஸ்தகங்களை தயாரித்து வைக்க வேண்டும் ...	281
சி. வி. நா. 2.	கட்டணம் செலுத்தாமல் வரி விதிப்பு புத்தகங்களை வரி செலுத்துகிறவர்கள் பார்வை இடலாம் ...	,,
சி. வி. நா. 3.	பஞ்சாயத்து கணக்கு புஸ்தகங்களை காட்ட வேணும்	282
சி. வி. நா. 4.	நிர்வாக அதிகாரி வரி விதிக்க வேண்டும்: தன்னுடைய வரியை பஞ்சாயத்து விதிக்கவேண்டும்.	,,
சி. வி. நா. 5.	பஞ்சாயத்து சில சமயங்களில் வரி புஸ்தகங்களை திருத்தலாம் ...	283
சி. வி. நா. 6.	வரி கொடுத்ததற்கு ரசீது ...	,,

எல்லா வரி விதிகளுக்கும் பொதுவான விதிகள்

நிர்வாக அதிகாரி வரி விதிப்பு புஸ்தகங்களை தயாரித்து வைக்க

சி. வி. நா. 1. விதி 1. ஒரு பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி அரசாங்கத்தார் அப்போதைக்கப்போது விதிக்கக்கூடிய நமூனுப்படி வரி விதிப்புப் புஸ்தகங்களைத் தயாரித்து வைத்து வர வேண்டும்; அவற்றில் ஷை சட்டத்தின்படி விதிக்கத் தக்கவர்களையும், வரி விதிக்கத்தக்க சொத்துக்களையும் கண்டிருக்க வேண்டும்.

குறிப்பு

பொது.—வரி ஜாப்தா சரியான காலத்தில் பிரசுரிக்கப்பட்ட தென்றும் அது முடிவாய் விட்ட தென்றும் யோசிக்க வேண்டியதாய் இருக்கிறது. அப்படியே நம்பவேண்டி யிருக்கிறது. [பகல்பூர் முனிசிபாலிடி-எ.-பேக், A.I.R. 1930 PAT 370 = I. R. 1930 Pat 668].

வரி புத்தகங்களும் - அவைகளில் பதிப்பும் சொந்தத்துவமும்.— ஒருவருடைய பெயர், வீட்டுவரி புஸ்தகத்தில் இருந்தபடியினுலேயே, அந்த பதிப்பு ஒரு சொந்தத்துவமும் கொடுக்காது. [மஹம்மது சூலேமான்-எ.-சகீனு, 44 All 674 = 69 I. C. 701] ஒரு நபருடைய பெயர் ஒரு சொத்து ரிஜிஸ்டரில் இருந்ததினுலேயே, அவர் அந்த சொத்தை விற்க அதிகாரம் உள்ளவரென்று எண்ணக்கூடாது. [முன் ஸர்ஜி -எ.- செக்டரி ஆப் ஸ்டேட், 39 Bom. 664 (P. C.) = 30 I C. 539 = 29 M.L.J. 299 :: ஜர்ஸாராம். -எ.-புரான் A.I.R. 1938 Lah. 440]. ஆனல் அந்த மாதிரி சொத்து புஸ்தகத்தில் ஒருவருடைய பெயர் இருப்பதையும், ஒரு சாக்ஷியமாகக் கருதலாம். [ஜகன்கோயேறி, -எ- கயா முனிசிபாலிடி, A. I. R. 1937 Pat. 557].

கட்டணம் செலுத்தாமல் வரி விதிப்பு புத்தகங்களை பார்வை இடலாம்

சி. வி. நா. 2. விதி 2.—வரி விதிப்புப் புஸ்தகங்களையும், யாதொரு வரி விதிப்பு சம்பந்தமாய் சவிஸ்தாரமான விவரங்கள் தனிப்பட்ட தஸ்தாவேஜுகளில் வைத்துவரப்பட்டால் அவற்றில் ஷை விவரங்கள் அடங்கிய பாகத்தையும் வேலை செய்யும் நாட்களில் ஆபீஸ் வேலை மணி நேரத்தில், கட்டணம் எதுவும் செலுத்தாமலேயே, ஷை பஞ்சாயத்துக்கு யாதொரு வரி செலுத்துகிற எவராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற ஏஜெண்டாவது அவற்றைப் பார்வையிடும்படி வைத்திருக்க வேண்டும். அப்படிப் பட்டவர்கள், அல்லது அவர்களுடைய ஏஜெண்டுகள் மேற்படி புத்தகங்கள் அல்லது தஸ்தாவேஜுகளிலிருந்து கட்டண மெதுவுமின்றி, எக்ஸ்ட்ராக்டுகளை எடுத்துக் கொள்ள பாத்தியதையுடையவர்களாவார்கள்.

வரிகளின் பொது விஷயங்களை 269, 270, 271 பக்கங்களில் பார்க்கவும்

குறிப்பு

ஆபீஸ்-வேலை மணி நேரத்தில் நிர்வாக அதிகாரி வரி விதிப்பு புஸ்தகங்களை தன்னுடைய விரோதிகளுக்கும் காட்டவேண்டும். காட்டா விட்டால் அவைகளில் தோஷம் உண்டு என்று இண்டியன் எவிடென்ஸ் ஆக்ட் செக்ஷன் 114 படிக்கு கருதப் படும். சில நிர்வாக அதிகாரிகள், கவர்ன்மெண்டு ஆடிடர்களுக்கும், சரிவர கணக்குகள் கொடுக்கிறதில்லையென்று கவர்ன்மெண்டு, ரிபோர்ட்டுகள் மூலம் அறிய வருந்துகிறோம். பொதுஜன சேவையில், இன்னும் நம்முடைய சில பிரதிநிதிகளுக்கு ஜவாப்தாரி குணம் பூர்த்தியாக உண்டாகவில்லையேயென்று பரிதாபப் படுகிறோம்.

சி. வி. நா. 3. விதி 3. பஞ்சாயத்தின் கணக்குப் புஸ்தங்களை மேற்படி பஞ்சாயத்துக்கு யாதொரு வரி செலுத்துகிறவர் எவரும், அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற ஏஜென்டாவது, பஞ்சாயத்து ஒவ்வொரு மாதத்திலும் நிர்ணயிக்கக்கூடிய தினத்தில் அல்லது தினங்களில் எந்தக் கட்டணமும் செலுத்தாமலேயே பார்வையிடும்படி வைத்திருக்கவேண்டும்.

பஞ்சாயத்து கணக்கு புஸ்தகங்களை காட்ட வேணும்

குறிப்பு

பொது.—பஞ்சாயத்து கணக்கு புஸ்தகங்களை காண்பிக்கவேண்டுமென்று யிருந்த போதிலும் சில-ஏன்-பல-நிர்வாக அதிகாரிகள் காண்பிப்பதில்லை. அப்படிச் செய்யாவிட்டால் அவர்களை பி. 187 படிக்கு குற்றவாளிகளாக கருத வேண்டும். சிவில் கோர்ட்டிலும் தாவா செய்துக் கொள்ளலாம். இங்கிலீஷ் புஸ்தகம் 3-வது வால்யூம் 49-வது பக்கத்தில் 69 கேசைப் பார்க்கவும்.

சி. வி. நா. 4. விதி 1. பட்டணம் பஞ்சாயத்துகளில் நிர்வாக உத்தியோகஸ்தரும், கிராம பஞ்சாயத்துகளில் நிர்வாக அதிகாரி என்னும் தலைவர் இவ் விதிகளில் வேறுவிதமாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, ஒவ்வொரு நபர் அல்லது சொத்துக்கும் விதிக்கத்தக்க வரியை நிச்சயிக்கவேண்டும்.

ஆனால், நிர்வாக உத்தியோகஸ்தர் அல்லது நிர்வாக அதிகாரி செலுத்தத்தக்க வரிகள் விஷயத்தில் பஞ்சாயத்து வரி விதிக்க வேண்டும்.

நிர்வாக அதிகாரி வரி விதிக்க : தன்னுடைய வரியை பஞ்சாயத்து விதிக்க

குறிப்பு

பொது.—1 நிர்வாக அதிகாரி, சட்டவிரோதமாக யாதொரு வரியும் போடக்கூடாது. (இந்தியா அரசாங்கம் ஆர்டிகள் 265ஐ பார்க்கவும்)

2. தொழில் வரிக் கென்று ஒரு வருஷத்திற்கு ரூ. 250க்கு மேல் வரி விதிக்கக்கூடாது. (இந்தியா அரசாங்கம், ஆர்டிகள் 276ஐ பார்க்கவும்) ஒரு வரியை கமிட்டி மூலமாக ஏற்படுத்தப்பட்டாலும், பிறகு அதை நிர்வாக அதிகாரி ஒப்புக் கொள்வாராகில், அது நிர்வாக அதிகாரியால் போடப்பட்டதாகக் கருதப்படும். [எம். எஸ். எம். ரெயில்வே,-எ-பெஜவாடாமுனிசிபாலிடி A. I. R. 1941 M. 641] நிர்வாக அதிகாரி எப்பொழுது வேணுமென்றாலும் வரி புஸ்தகத்தை திருத்தலாம்.

சி. வி. நா. 17. விதி 9 படிக்கு நிர்வாக அதிகாரி எப்பொழுது வேணுமானாலும், வரி புஸ்தகத்தை திருத்தலாமென்றுயிருக்கிறது. சி. வி. நா. 18 விதி 10 படிக்கு மேலும் நிர்வாக உத்தியோகஸ்தர் வரி குறைக்கவேணுமென்று அவருக்கு ரிவிஷன் (மறுபார்வை) மனு போட்டுக் கொள்ளலாம். அவரே திருத்தும் பக்ஷத்தில் வரியை அதிகமாகவும் விதிக்கலாம். குறைக்கவும் செய்யலாம். அவரே அதிகப்படுத்தும் சமயத்தில் வரி விதிப்போருக்கு நோடீஸ் கொடுக்கவேண்டும்.

வரிகளின் பொது விஷயங்களை 269, 270, 271 பக்கங்களில் பார்க்கவும்

சி. வி. நா. ரூல் 4 விதி 1.—அப்படியிருந்தும் அதிருப்தியாக யிருக்கும் பக்ஷத்தில், பஞ்சாயத்துக்குப் பணம் கட்டி அபீல். செய்துக்கொள்ள வேண்டும். பஞ்சாயத்துக்கு அந்த வரி விதிப்பு அக்கிரமமென்றும் அல்லது அதிகமாய் விதிக்கப்பட்டதென்று எண்ணினலும், அப்படி வரி விதிக்கப்பட்டவர் அபீல் செய்யாவிட்டால், பஞ்சாயத்துக்கு விசாரிக்க அதிகாரம் கிடையாது. ஆனுல் வரி குறைவாக விதிக்கப்பட்டதென்று, தோன்றும் பக்ஷத்தில் அந்த வரி விதிப்பை சி. வி. நா. 5 விதி 2 படிக்கு அந்த வரியை அதிகப்படுத்தலாம். நிர்வாக உத்தியோகஸ்தருக்கு வரியை உயர்த்தவும், தாழ்த்தவும் அதிகாரம் யிருக்கும்போது, அந்த அதிகாரம் பஞ்சாயத்துக்கும் இருக்கவேண்டும். அதேமாதிரி பஞ்சாயத்திற்கும் ரிவிஷன் போட்டுக் கொள்ள அதிகாரம் கொடுக்கவேண்டும்.

பஞ்சாயத்து சில சமயங்களில் வரி புஸ்தகங்களை திருத்தலாம்.

சி. வி. நா. 5. விதி 2. (a) யாதொரு நபர் அல்லது சொத்து மீது குறைவாக வரி விதிக்கப்பெற்றிருக்கிறது என்ருவது அந்த நபர் அல்லது சொத்து அசட்டை காரணமாகவோ, தகுதியற்ற முறையிலோ, யாதொரு வரிக்குச் சம்பந்தப்பட்ட வரி விதிப்புப் புஸ்தகங்களிலிருந்து விடப்பட்டிருக்கிற தென்ருவது மேற்படி புஸ்தகங்களில் யாதொரு எழுத்துப் பிழை அல்லது கணக்குப் பிழை இருக்கிறதென்ருவது, மேற்படி பஞ்சாயத்துக்கு எப்போதாகிலும் தெரிய வந்தால், அது, மேற்படி புஸ்தகத்தில், தான் நியாயமானதென்ருே அவசியமான தென்ருே கருதுகிற விதமாக அப் புத்தகங்களைத் திருத்துமாறு நிர்வாக உத்தியோகஸ்தருக்குக் கட்டளையிடலாம்.

ஆனுல், வரி விதிப்பதில் அதிகரிப்பு எதுவேனும் ஏற்பட்டிருந்தால், சம்பந்தப்பட்டவருக்கு வரி விதிப்புப் புஸ்தகங்களில் உத்தேசித்துள்ளபடி ஏன் திருத்தம் செய்யக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டுவதற்காக நியாயமான அவகாசம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி அப்படிப்பட்ட கட்டளை எதையும் பிறப்பிக்கக் கூடாது.

(b) அத்திருத்தம் அவசியமாயிருந்த சந்தர்ப்பம் எந்த நடை முதல் அரை வருஷத்தில் ஏற்பட்டதோ அந்த அரை வருஷத்தில் அல்லது அதற்கு அடுத்து முந்திய இரண்டு அரை வருஷங்களில் கூடிய விரைவான தேதியில் அத் திருத்தம் செலாவணியாகத் தொடங்கியதாகக் கருதவேண்டும்.

குறிப்பு

பஞ்சாயத்து சில சமயங்களில் வரி புஸ்தகங்களைத் திருத்தலாம்:—பஞ்சாயத்து வரியைக் குறைக்க அதற்கு அதிகாரம் கிடையாது. வரி பணத்தை பில்படிக்கு முன்னதாக செலுத்தி பஞ்சாயத்துக்கு அப்பீல் செய்தால்தான் பஞ்சாயத்து வரியைக் குறைக்கலாம். பி. 123யை பார்க்கவும்.

ஆனுல்...சம்பந்தப்பட்டவருக்கு அவகாசம் ஏற்படுத்த:—நோட்டீஸ் கொடுக்காவிட்டால் அம்மாதிரி அதிகப்படுத்தப்பட்ட வரி விதிப்பு செல்லாது. [ஜோஷி காளிதாஸ்-எ.-டாகர் முனிசிபாலிடி (1883) 7 Bom. 408]. அக்கிரமமாக அந்த வரியை வசூலிக்கும் பக்ஷத்தில் அம்மாதிரி அக்கிரமமாக வசூலிக்கப்பட்ட தொகையை, சிவில் கோர்ட்டில் தாவா செய்து வரப் பெற்றுக்கொள்ளலாம். [மஹம்மது ஷம்ஷீதீன் அலிம்.-எ.-திருவாரூர் முனிஸிபாலிடி A. I. R. 1928 M. 348]. பிரிவு 174ஐ பார்க்கவும்.

சி. வி. நா. ரூல் 5, விதி 2 (b)—பஞ்சாயத்து விதிக்கும் அதிக வரியானது, தான் விதிக்கும் அரை வருஷத்திலேயன்றி அதற்கு முன் இரண்டு அரை வருஷங்களுக்கும் விதிக்கலாம். ஒரு பஞ்சாயத்தானது வரியை ஒரு தரம் விதித்த பிறகு, அந்த வருஷத்திலேயே மறுபடியும் ரீஜினல் இன்ஸ்பெக்டர் உத்திரவின்றி வரியை மாற்றக்கூடாது [கும்பகோணம் முனிசிபல் கவுன்ஸில்,-எ.-தென்னிந்திய ரெயில்வே 52 M. 792=57 M. L. J. 251=A. I. R. 1929 M. 849].

காலாவதி தோஷம் :—சாதாரணமாக வரியை விதிக்கப்பட்ட மூன்று வருஷங்களுக்குள் வசூலிக்கலாம். செக்ஷன் 165-ஐ பார்க்கவும். [ராய்பூர் மானிபாக்ஸரிங் கம்பெனி,-எ.-அஹமதாபாத் முனிசிபாலிடி 31 Bom. L. R. 124].

வீட்டு வரி

இதர விஷயங்கள்: ஒரு பஞ்சாயத்து வரியை யார் செலுத்தினுலும் பஞ்சாயத்து பெற்றுக் கொள்ளலாம். பிரிவு 174ஜ பார்க்கவும்.

சி. வி. நா. 6 ரூல் 3: (1) நிர்வாக உத்தியோகஸ்தர், வரியொன்றைச் செலுத்துகிற ஒவ்வொருவருக்கும், அதற்காக தாமாவது அது விஷயமாய்த் தம்மிடமிருந்து கிரமமாய் அதிகாரம் பெற்ற வேறு எவராவது கையெழுத்திட்ட ரசீது ஒன்றைக் கொடுக்கவேண்டும்.

வரி கொடுத்ததற்கு ரசீது

(2) அந்த ரசீதில்—

(a) அது கொடுக்கப்பட்ட தேதியும்,

(b) அது யாருக்குக் கொடுக்கப்படுகிறதோ அவருடைய பெயரும்.

(c) எந்த வரி விஷயமாய் மேற்படி தொகை செலுத்தப்பட்டிருக்கிற தென்பதும்.

(d) எந்தக் கால அளவுக்கு மேற்படி தொகை செலுத்தப்பட்டிருக்கிற தென்பதும்.

(e) செலுத்தப்பட்ட தொகையும் — குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

வீட்டு வரி

120. (1) வீட்டு வரியானது ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் இந்தச் சட்டத்தின் தொடக்கத்துக்கு அடுத்து முன்பு சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் எந்த அடிப்படையில் விதிக்கப்பட்டதோ அந்த அடிப்படையில் எல்லா வீடுகளின் மீதும் விதிக்கப்பட வேண்டும்.

வீட்டுவரி

ஆனுல், அரசாங்கத்தார் விதிகள் செய்து அவை மூலமாக வகுக்கப்பட்ட தரைப் பரப்பு அடிப்படையில் அல்லது வருஷாந்தர வாடகை மதிப்பின் அடிப்படையில் அல்லது மூலதனத்தின் அடிப்படையில் அல்லது மேற்கண்ட விஷயங்களின் எவை இரண்டின் அடிப்படையிலாவது அல்லது அதற்கு மேற்பட்ட விஷயங்களின் அடிப்படையிலாவது மேற்படி வரி விதிக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கலாம்.

(2) வீட்டு வரியானது, பிரஸ்தாப வீட்டின் மனை சம்பந்தமாய் அரசாங்கத்தாருக்கு நிலவரி ஏதேனும் சேரவேண்டியிருந்தால் அதை முன்னதாகச் செலுத்துவதற்குட்பட்டு, அவ் வீட்டின் பேரிலும், – அதற்குள் அல்லது அதன் பேரில் காணப்படுவதும் மேற்படி வரி செலுத்துவதற்குட்பட்டவருக்குச் சொந்தமானதுமான அசையும் பொருள் ஏதாகிலும் இருந்தால் அதன் பேரிலும், – முதல் பொறுப்பாக ஏற்படும்.

(3) வீட்டு வரியானது பிரஸ்தாப பஞ்சாயத்து அனுசரிக்கும் வரி விதிப்பு ஆதாரம் சம்பந்தமாய் I–ம் ஷெட்யூலில் நிர்ணயிக்கப்பட்ட அதம வீதங்களுக்குக் குறையாமலும், உச்ச வீதங்களுக்கு மேற்படாமலும், அந்த பஞ்சாயத்தார் நிச்சயிக்கக்கூடிய வீதங்களின்படி ஒவ்வொரு அரை வருஷமும், விதிக்கப்பட வேண்டும்.

(4) (i) வரி விதிக்கும் காரியங்களுக்காக, வீடுகளின் வருஷாந்திர மதிப்பையாவது, மூலதன மதிப்பையாவது, நிச்சயத்தறியும் விதத்தைக் குறித்தும் அல்லது அவைகள் என்ன வகுப்புகளின் கீழ் அடங்குகின்றன என்பதைக் குறித்தும்,

(ii) மேற்படி வரியை இன்ன நபர்கள் செலுத்துவதற்குள்ளாவார்கள் என்பதைக் குறித்தும் வீடுகள் மாற்றப்படுவதைப் பற்றி நோட்டீஸ்கள் கொடுப்பதைக் குறித்தும்,

(iii) காலியாய் இருப்பதற்காகவும் வேறு காரணங்களுக்காகவும் வஜா செய்வதைக் குறித்தும்,

(iv) எந்த அரை வருஷத்திலாகிலும், கட்டப்பட்ட அல்லது புதிப்பிக்கப்பட்ட அல்லது எடுத்து இடித்து விடப்பட்ட வீடுகளாவது, பிரஸ்தாப கிராமத்தில் அல்லது நகரத்தில் சேர்க்கப்பட்ட பிரதேசங்களிலாகிலும் அதிலிருந்து

விலக்கி விடப்பட்ட பிரதேசங்களிலாகிலும் இருக்கிற வீடுகளாவது எந்த சந்தர்ப்பங்களிலும் எந்த நிபந்தனைகளுக்குட்பட்டும், ஷை வரி முழுவதையுமாயினும், அதன் யாதொரு பாகத்தையாயினும் செலுத்துவதற் குட்பட்டவை அல்லது அந்தப்படி உட்பட்டவையாயிருப்பது நின்றுபோகும் என்பதைக் குறித்தும் ஷரத்து செய்வதற்காக அரசாங்கத்தார் விதிகள் செய்யலாம்.

(5) யாதொரு வீட்டின் சொந்தக்காரர் சார்பில் அதன் அனுபோகதாரர் வீட்டுவரி செலுத்தினல், அவ்வனுபோகதாரர் சொந்தக்காரரிடமிருந்து அத் தொகையை வசூலிக்கப் பாத்தியதையுள்ளவராவார். சொந்தக்காரருக்கு அப்போதாகிலும் அதற்குப் பிறகாகிலும் தான் கொடுக்க வேண்டிய வாடகையிலிருந்து அதைக் கழித்துக் கொள்ளலாம்.

குறிப்பு

பொது —வீட்டு வரியை "குடிசை"களுக்கு போடக்கூடாது. பிரிவு 2 (13) (14) களை பக்கங்கள் 23, 24 களில் பார்க்கவும். வீட்டு வரியை பஞ்சாயத்து ஏற்படுத்திய படி ஆறு மாதத்திற்கு ஒரு தரம் ஏப்ரல் முதல் தேதியிலிருந்தும், அக்டோபர் மாதம் முதல் தேதியிலிருந்தும் அதாவது வருடத்திற்கு இரண்டு தடவை விதிக்க வேண்டும்.

பஞ்சாயத்து பட்டணங்களில் வீட்டு வரி.—வீட்டு வரியை பஞ்சாயத்து பட்டணங்களில் எல்லா வீடுகள் பேரிலும் நீண்டகாலமாக போட்டு வசூலித்து வரப்படுகிறது. அவை அப்படியே இருக்க வேண்டும்.

பஞ்சாயத்து கிராமங்களில் வீட்டு வரி.—பஞ்சாயத்து கிராமங்களிலும் எல்லா வீடுகளுக்கும் வீட்டு வரி போட வேண்டு மென்றும், வீட்டு வரி எவ்வளவுக்கு எவ்வளவு வசூலிக்கப் படுகிறதோ அவ்வளவுக்கு அரசாங்கம் சரிசமமான (இணையான) மான்யம் (கிராண்ட்) கொடுக்கிறது. பிரிவு 132-யை பார்க்கவும். இதினல் ஏற்படுவது என்ன வென்றால் கிராம பஞ்சாயத்துகளில் உள்ள வீடுகளுக்கு வீட்டு வரி அதிகமாக போட்டு வசூலித்தால், அரசாங்கம் அதிகமாக அவ்வளவு சரிசமமான மான்யம் கொடுக்கும். இந்த மாதிரி, சரிசமமான மான்யத்தை அடைய தயவில்லாத சில பஞ்சாயத்து அங்கத்தினர்களும், தலைவர்களும், சிப்பந்திகளும் ஏழை மக்கள் மீது வீணாக வீட்டு வரியை அதிகமாக போடப் போகிறார்கள். இதனல் பஞ்சாயத்து கிராமங்களில் வீடுகள் கட்டுவதும் குறைந்து விடும். நிலங்களுக்கு உச்ச வரம்பு வரப்போகிறது. இனி கிராமங்களில் சேவா கூட்டுறவு சங்கங்கள் வரப் போகிறது. கிராமங்களில் பெரிய வீடுகள் இருந்தால் அவைகளை மராமத்து செய்வது கடினமாகும். இதற்கு பதிலாக அடியில் கண்ட மாதிரி செய்தால் கிராமங்களில் அதிகமாக வீடுகள் உண்டாகும். அதற்கும் அரசாங்கம் சேவா கூட்டுறவு சங்கங்கள் மூலம் உதவி செய்ய போகிறது. போக போக அரசாங்கம் எல்லா கிராம மக்களுக்கும் வீடுகள் கட்டி கொடுக்கும் வாய்ப்பும் ஏற்படலாம். ஒன்று மாத்திரம் மக்கள் மனதில் வைத்து கொண்டு அதற்கென்று பாடுபட வேண்டும் இது நம்முடைய இந்தியா தேசம். இதற்கென்று சோம்பல் இல்லாமல் பாடுபட வேண்டும் என்பதே ஆகும்.

கிராமங்களில் உள்ள வீடுகளுக்கு மின்சார மான்யம் வேண்டும்

பிரிவு.—132 படிக்கு பஞ்சாயத்து கிராமங்களில் விதிக்கும் வீட்டு வரிக்கு சமமான மான்யத்தை அரசாங்கம் கொடுப்பதற்கு பதிலாக, மின்சாரத்தை வீடுகளின் உபயோகத் திற்காக யூனிட் ஒன்றுக்கு 5 நையா பைசா வீதம் கொடுத்தால் (சப்ளை செய்தால்) கிராமங்களில் வீடுகளை அதிகமாக கட்டுவதற்கு தூண்டுதலாக இருக்கும்.—

மேல் கண்ட நோக்கத்தை அரசாங்கம் செய்ய இஷ்டப்பட்டால் உடனே செய்யலாம். இப்போது நம்முடைய நாட்டில் உண்டாகும் **மின்சாரத்தில் பத்தில் ஒன்பது பங்கு கழனிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும்** உபயோகப்படுகிறது. அவைகளுக்கு யூனிட் ஒன்றுக்கு சராசரி ஆறு, ஏழு நையாபைசா வீதம் வாங்கப்படுகிறது. அப்படியிருக்க, **வீடுகளுக்கு மின்சாரத்தை உபயோகப்படுத்துவதற்கு யூனிட்டு ஒன்றுக்கு 4** (நாலு) **அணு (25 நயா**

வீட்டு வரியை விதிப்பதை குறித்த விதிகள்

பைசா) வீதமும், அதற்கு மேல் சர்சார்ஜ் 1 (ஒரு) அணு (6 நையா பைசா) வீதமும், அதாவது யூனிட்டு ஒன்றுக்கு அரசாங்கம் 31 நயாபைசா வாங்குவது (not equitable) நியாய மான தல்ல. இந்த பிரிவையும், பிரிவு 132-யையும் மதராஸ் அரசாங்கம் உடனே கவனித்து மாத்தி விடும்படி கோரப்படுகிறது.

வீட்டு வரி-அதம வீதம்-உச்ச வீதம்-I-ம் ஷெட்யூல் பார்க்கவும்.—அந்த வீட்டு வரி யானது 198-வது பிரிவுக்கு அடுத்தபடியுள்ள I-ம் ஷெட்யூலில் நிர்ணயிக்கப்பட்ட அதம வீதங் களுக்கு குறையாமலும், உச்ச வீதங்களுக்கு மேற்படாமலும் ஒவ்வொரு அரை வருடமும் விதிக்கப்பட வேண்டும். வீட்டு வரியை I-ம் ஷெட்யூலில் கண்டபடி (1. மூலதன மதிப்பின் பேரி லாவது, 2. வருடாந்திர மதிப்பின் பேரிலாவது, 3. வகைப் படுத்தப்பட்ட (அடி மனை) குரடு விஸ்தீர்னத்தின் (Plinth Ara) பேரிலாவது) விதிக்கலாம்.

வீட்டு வரி அரசாங்கத்தின் நிலவரிக்கு அடுத்தாப்போல் முதல் பொருப்பு உள்ளது.—வீட்டு வரியானது, அரசாங்கத்தாருக்கு அந்த வீட்டு மனையின் நிலத்துக்காக கட்ட வேண்டிய நிலவரி போக முதல் சார்ஜ் அதாவது அந்த வீட்டின் மேல் உள்ள எல்லா கடன்களுக்கும், முந்திய பொருப்புள்ளதாகும். திஷ்டாந்தரமாக ஒரு வீட்டிற்கு போட்டிருக் கும் வீட்டு வரியை கட்டா விட்டால், அந்த வீட்டின் பேரில் தாவா செய்து அந்த வீட்டை அந்த வீட்டின் வரிக்காக ஏலம் போட்டால், அது முதல் பொருப்புள்ளதாகும். அந்த ஏலமும் செல்லும். அப்போது அந்த வீட்டின் பேரில் இருக்கும் மீதி கடன்கள் பொருப்பற்றவை யாகும். வீட்டு வரிக்காக அந்த வீட்டில் உள்ள அசையும் பொருளையும் ஜப்தி செய்யலாம். உபபிரிவு (2) யை பார்க்கவும்.

வீட்டு வரியை பெற காலாவதி தோஷம் — பி. 165 பார்க்கவும்

வீட்டுவரியை விதிப்பதை குறித்த விதிகளின் அட்டவணை

		பக்கம்
சி. வி. நா. 7.	விதி. 1.-வீட்டுவரி விதிப்பதை ரீஜனல் இன்ஸ் பெக்டர் உத்திரவு இன்றி ஒரு வருஷத்திற் குள் மறுபடியும், மாற்றக் கூடாது ...	287
சி. வி. நா. 8.	விதி ப.—(1) வருஷாந்திர மதிப்பு, அல்லது (2) மூலதன மதிப்பின் பேரில் வீட்டுவரி விதிக்கலாம். வீடுகளின் மதிப்பு அதிகரிக் கையில் வீட்டுவரி குறைக்கலாகாது.	288
சி, வி. நா. 9.	விதி. 5.—(1) சங்கியா வீதம் அல்லது (2) கிரமமாக உயர்ந்து கொண்டு போகும் வீதம்; வீடுகளை 6 தரமாக பிரிப்பது. ...	,,
சி. வி. நா. 10.	விதி. 2.—வீடுகளின் (1) மூலதன மதிப்பு (2) வாடகை: வருஷாந்திர மதிப்பு அறியுவது. ...	289
சி. வி. நா. 11.	விதி. 2.—அடித்தரை விஸ்தீரணத்தின் அடிப்படை யின்பேரில் வீட்டுவரி விதிக்க ரீஜனல் இன்ஸ்பெக்டரின் முன் உத்திரவு வேண்டும் ...	290
சி. வி. நா. 12.	விதி. 4.—அடிப்படையை கர்ணமும், ரிவின்யூ இன்ஸ் பெக்டரும் சர்வே செய்ய வேண்டும்.	,,
சி. வி. நா. 13.	விதி. 6.-கிராம கர்ணம் வீடுகள் ஜாபிதா செய்வதற்கு ஊதியம் ...	291
சி. வி. நா. 14.	விதி. 7.-நிர்வாக அதிகாரி கர்ணத்தின் ஜாபிதா படிக்கு வீட்டுவரி விதிக்க. ...	,,
சி. வி. நா. 15.	விதி. 3-மதிப்புகள் 3 வீதம் (1) மூலதணம் (2) வரு ஷாந்திர வாடகை (3) அடிப்படை— இவைகளின் குறைந்த பட்ச வீதம்— அதிக பட்ச வீதம் ...	,,

பிரிவு 198-ன் கீழ் 1.ம் ஷெட்யூல் பார்க்கவும்

வீட்டு வரியை விதிப்பதை குறித்த விதிகள் - அட்டவணை (ப. 286)

சி. வி. நா. 16.	விதி. 8.-வீட்டு வரி ஜாபிதாவை பார்வையிட தண்டோரா போடவேண்டும் பொது நோடீஸ் கொடுக்க வேண்டும் ...	291
சி. வி. நா. 17.	விதி. 9.-வீட்டு வரியை எப்போதும் திருத்தலாம். ...	292
சி. வி. நா. 18.	விதி. 10.-வீட்டு வரியை குறைக்க ரிவிஷன் மனுபோட வழி ...	293
சி. வி நா. 19.	விதி. 11.-ரிவிஷன் உத்திரவை தெரிவிக்க: வரி புத்தகங்களை திருத்த. ...	,,
சி. வி. நா. 20.	விதி. 12-அடிக்கடி புது ஜாபிதா தயாரிக்க வேண்டிய தில்லை. 5வருஷங்களுக்கு ஒரு முறை செய்தால் போதும். ...	294
சி. வி. நா. 21.	விதி. 5.-குறைந்த மதிப்பு வீடுகளுக்கு வீட்டுவரி நிவாரணை. ...	,,
சி. வி. நா. 22.	விதி. 1.-குறிப்பிட்ட வகைகளை சேர்ந்த வீடுகளை விட்டுவரியிலிருந்து நிவாரணை செய்வது.	295
சி. வி. நா. 23.	விதி. 5.-வருமை காரணமாக நிவாரனை அளிப்பது. ...	296
சி. வி. நா. 24.	விதி. 6.-வருமை காரணமான வரிவஜா ஒரு வருஷம் தான் கொடுக்கப்படும் ...	,,
சி. வி. நா. 25.	விதி. 7.-வீடுகள் காலிக்கு அளிக்கப்படும் வரிவஜா ...	,,
சி. வி. நா. 26.	விதி. 9.-ஓர் அரை வருஷத்தின் மத்தியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அல்லது நீக்கிவிடப் பட்ட வீடுகளுக்கு வரிவஜா செய்வது.	297
சி. வி. நா. 27.	விதி. 8.-கட்டடம் கட்டுவது: அதை மீண்டும் கட்டு வது அல்லது அதை இடித்து கட்டு வதை பற்றி கொடுக்கச் சொந்தகாரர் நோட்டீஸ் கொடுக்க வேண்டும் ...	
சி. வி. நா. 28.	விதி. 4.-ட்ரான்ஸ்பர் நோடீஸ் கொடுப்பதற்கு கொடுத் தவருக்கும் வாங்கியவருக்கும் உள்ள கடமை. ...	298
சி. வி. நா. 29.	விதி. 1.-வீடுகளின் சொந்தத்தின் பதிவை ட்ரான்ஸ் பர் செய்வது. ...	299
சி. வி. நா. 30.	விதி. 3.-வீட்டு வரியை சொந்தகாரரும் அனுபோகதார ரும் செலுத்த வேண்டும். ...	300

வீட்டு வரி - தொழில் வரி - வண்டி வரி - வசூலிக்கும் விதிகளை குறித்தும் அப்பீல்களை குறித்தும் பிரிவு 123ன் கீழ் பார்க்கவும்

சி. வி. நா. 7. விதி 1.-ஒரு பஞ்சாயத்து வீட்டு வரி விதிப்பை அனுமதித்திருந்து, அவ்வரி விதிப்பதை யாதொரு வருஷத்தில் அமுலுக்கு வரத் தொடங்கி யிருந்தால் வரி வீதங்களை மாற்று வதற்கான அல் லது அது விதித்து வசூலிக்கப்பட வேண்டிய ஆரம்ப தேதியை மாற்றுவதற்கான எந்தப் பிரேரேபணையையும். அந்த வருஷம் சம்பந்தப்பட்ட வரையில், ரீஜனல் இன்ஸ் பெக்டரின் விசேஷ அனுமதியைப் பெற்றுக் கொண்டாலன்றி அல்லது அவர் பிறப்பித்த ஒரு கட்டளையின் பேரிலன்றி மற்றப்படி அப்பஞ் சாயத்து ஆலோசணைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது.

வீட்டுவரி விதிப்பதை ரீஜனல் இன்ஸ் பெக்டர் உத்திரவு இன்றி ஒரு வருஷத்திற்குள் மறுபடியும் விதிக்கக்கூடாது.

வீட்டு வரியை விதிப்பதை குறித்த விதிகள் - அட்டவணை (ப. 286)

சி. வி. நா. 8. ரூல் 4:—வீட்டுவரியின் காரியத்துக்காக வீடுகளுக்கு, அவற்றின் வருஷாந்திர அல்லது மூலதன மதிப்பின் பேரில், வரி விதிக்கப் பஞ்சாயத்து தீர்மானித்தால், அப் பஞ்சாயத்து நிர்ணயித்த வீதங்கள் ஒவ்வொரு வீட்டு மதிப்பின் சங்கியா பரிமாணப்படி யிருக்கலாம் அல்லது அவ் வீட்டின் மதிப்புக் கிணங்கக் கிரமமாக உயர்ந்து கொண்டே போகலாம்; ஆனல், எவ் விஷயத்திலும் வீட்டின் மதிப்பு அதிகரிக்கை யில், அவ்வீதமானது குறையலாகாது.

வருஷாந்திர மதிப்பு அல்லது மூலதன மதிப்பின் பேரில், வீட்டுவரி விதிக்கலாம் : வீடுகளின் மதிப்பு அதிகரிக்கையில் வீட்டுவரி குறையலாகாது.

குறிப்பு

பஞ்சாயத்து தீர்மானம் :—பஞ்சாயத்து வருஷாந்திரம், அல்லது, மூலதன மதிப் பின்பேரில் வரி விதிக்கத் தீர்மானித்தால் அது கிரமமானது. அதற்கு ரீஜனல் இன்ஸ்பெக்ட ருடைய, சாங்ஷன் (அனுமதி) வேண்டியதில்லை, ஆனல் வீட்டின் அடிமனை விஸ்தீரணத்தின் பேரில் (பிளின்த் ஏரியா) வரி விதிக்க வேணுமென்ருல். சி. வி. நா. II படிக்கு, ரீஜனல் இன்ஸ் பெக்டருடைய உத்தரவின்றி விதிக்கக்கூடாது.

மூலதன மதிப்பு அல்லது வருஷாந்திர மதிப்பு:—மூலதன மதிப்பு என்பது எம்மாதிரி யிருக்க வேணுமென்பதை சி. வி. நா. 10 ரூல் 2 **(1)**ன் கீழ் பார்க்கவும். வருஷாந்திர மதிப்பு என்பதை சி. வி. நா. 10 ரூல் 2 **(2)**ன் கீழ் பார்க்கவும்.

வீட்டின் மதிப்பு அதிகரிக்கையில் (வீட்டுவரி) குறையலாகாது:—வீட்டுவரி விதிக் கும்பொழுது வீடுகளுக்குள்ள (டிமாண்டு) அவசியத்தையும், வியாபாரத்திற்கு வேண்டியதா என்பதையும் கவனிக்கவேண்டும். சேரி வீடுகளுக்கு மொத்தமாகவே, வரி விதிக்கக் கூடா தென்று தீர்மானிக்கக்கூடாது. அந்தந்த வீட்டைக் கவனித்து வரி போடவேண்டுமேயொழிய ஜாதி, மதம், வகுப்பு கவனித்து வரி போடக்கூடாது. [போர்டு செயின்ட் ஜார்ஜ் கெஜட்டு, **Part I-A** பக்கம் 75 (1920-ம் வருஷத்திய பிப்ரவரி மாதம்).]

சி. வி. நா. 9 ரூல் 5—(1) பஞ்சாயத்து சங்கியாபரிமாணப்படிக்கான வீதத்தை அனுசரித்திருந்தால் அது வரியைக் கணக்கிட்டு வசூலிப் பதைச் சுலபமாக்குவதற்காக மேற்படி கிராமத்திலுள்ள வீடுகளைத் தரவாரியாகத் தொகுதி செய்யலாம்.

சங்கியா வீதம், அல்லது கிரமமாக உயர்ந்துகொண்டுபோகும் வீதம்; வீடுகளை 6 தரமாக பிறிப்பது.

(2) பஞ்சாயத்து கிரமமாக உயர்ந்துகொண்டே போகும் வீதத்தை அனுசரித்திருந்தால், அது (i) [ஒவ்வொரு வீட்டின் வரி விதிப்பிலிருந்தும் ஒரு குறிப்பிட்ட தொகையை இதற்கு வரி இல்லாத தொகையாகக் கழித்துக் கொள்ள வேண்டும் அல்லது கீழ்த்தர வகையில் ஒரு குறிப்பிட்ட சத வீதத்திலிருந்து உயர்ந்த வகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் வரை வரி விதிப்பு கிரமமாக உயர்ந்துகொண்டே போகவேண்டும் என்பது போன்று] தரம் பிரிப்பதற்கான கொள்கைகளை நிர்ணயிக்க வேண்டும்; (ii) ஒவ்வொரு வகைக்கான சரியான எண்ணிக்கையையும், வரையறை களையும் தீர்மானிக்கவும் வேண்டும்.

(3) பஞ்சாயத்து இந்த இரண்டு விஷயங்களிலும், வரி விதிப்பு சங்கியாபரி மாணப்படியாயிருந்தாலும் சரி கிரமமாக உயர்ந்து கொண்டே போவதாயிருந்தாலும் சரி, வரி விதிப்புக் கொள்கையைப் பெரும்பாலும் பாதிக்குமாறு அத் தரங்களைப் பிரிக் கக்கூடாது; மேலும், தரங்களின் எண்ணிக்கை எந்த விஷயத்திலும் ஆறுக்குக் குறையலாகாது.

குறிப்பு

சங்கியாவீதம் :—ஒரு வீட்டிற்கு, வரி போடவேண்டிய மதிப்பு ரூ. 50 என்று வைத்துக் கொள்ளவும். அதற்கு வீட்டுவரி ரூ. 5 என்று ஏற்படுத்தப்பட்டதாக வைத்துக் கொள்ளலாம். அது ரூ. 60 ஆகயிருக்கும் பக்ஷத்தில், வரி ரூ. 6 என்றும், ரூ. 70 ஆக யிருக்கும் பக்ஷத்தில் வரி ரூ. 7 என்றும் கணக்குப்படி கிரமமாக ஏற்றிக்கொண்டே போவது, சங்கியா பரிமாணம் என்று பெயர்.

வீட்டு வரியை விதிப்பதை குறித்த விதிகள் - அட்டவணை (ப. 286)

கிரமமாக உயர்ந்துக்கொண்டு போகும் வீதம் :—இதன் பொருள் என்னவென்றால், வீட்டின் மதிப்பு உயர, உயர, வரி கிரமமாக கணக்குபடி உயராமல், அதிகப்படியாக உயர்ந்துக்கொண்டே போவதாகும். உதாரணமாக ஒரு வீட்டின் மதிப்பு ரூ. 50 ஆகயிருக்கும் பக்ஷத்தில் அதற்கு வீட்டுவரி ரூ. 5 என்று வைத்துக்கொள்ளலாம். அதுவே ரூ. 70 ஆக போகும் போது ரூ. 7-க்கு பதிலாக ரூ. 8-ஆக யிருக்கலாம். அதே ரூ. 100-யிருக்கும்போது 10-க்கு பதிலாக ரூ. 13-ஆக யிருக்கலாம். அதற்கு உயர்ந்துகொண்டு போகும்விதம் என்பது பெயர்.

தாங்கள் :—மொத்த வரி விதிக்கவேண்டிய வீடுகளை ஆறு தாங்களாகப் பிரிக்கவேண்டும். அது சங்கியபரிமாணமாயிருந்தாலும் சரி உயர்ந்து கொண்டு போகும் விதமானாலும் சரி, ஆறு தரங்களுக்குமேல் யிருக்கக்கூடாது. இதனால் கணக்குகள் சுலபமாக போடமுடியும்.

சி. வி. நா. 10 விதி 2.

வீடுகளின்
1. மூலதன மதிப்பு
2. வாடகை: வருஷாந்திர மதிப்பு — அறியுவது(க-18 விதி2.)

(1) வீட்டு வரி விதிப்புக் காரியங்களுக்காக, ஒரு வீட்டின் மதிப்பானது, நிலத்தின் தோராய மதிப்பும், வீடு கட்டுவதற்காக தற்சமயம் தோராயமாகப் பிடிக்கும் செலவும், சேர்ந்த மொத்தத் தொகையிலிருந்து மதிப்புக் குறைவுக்காக நியாயமான ஒரு தொகையைக் கழித்துக்கொண்ட பிறகு மிச்சமுள்ள தொகையென்று கருதப்படும். ஷ மதிப்புக் குறைவுத் தொகையானது எந்த விஷயத்திலும் மேற்படி செலவில் பத்து சத வீதத்துக்குக் குறைவா யிருக்கக்கூடாது.

இந்த உபவிதியின்படிக்கான மதிப்பீடுகளில் யந்திரங்களையும் மேஜை, நாற்காலி முதலிய சாமான்களையும் சேர்க்கக் கூடாது.

(2) (a) வீட்டின் வருஷாந்திர மதிப்பானது, அதிலிருந்து மாதா மாதம் அல்லது வருஷா வருஷம் கிடைக்குமென்று நியாயமாக எதிர்பார்க்கப்படக்கூடிய மொத்த வருஷாந்திர வாடகையிலிருந்து பத்து சதவீதம் கழித்துக்கொண்ட பிறகு மிச்ச முள்ள அத்தகைய வருஷாந்தர வாடகை என்று கருதப்படும். மராமத்துகள் செய்வதற்காக அல்லது வேறு எந்தக் காரணத்துக்காகவேனும் பிடிக்கும் எல்லாச் செலவுகளுக்கும் பதிலாகவே மேற்படி தொகை கழித்துக் கொள்ளப்படும்.

(b) (i) மேற்படி சட்டத்தின் பிரகாரம் "வீடு" என்பதன் அர்த்தத்தில் அடங்குகிற எந்த அரசாங்கக் கட்டடம் அல்லது ரயில்வே கட்டடம் விஷயத்தில், அல்லது

(ii) மேற்சொன்ன அர்த்தத்தில் அடங்குவதும் சாதாரணமாக வாடகைக்கு விடப்படாத வகையைச் சேர்ந்ததுமான எந்தக் கட்டடத்தின் மொத்த வருஷாந்திர வாடகையை மதிப்பிட முடியாதென்று நிர்வாக அதிகாரி கருதுகிறாரோ அந்தக் கட்டடத்தின் விஷயத்தில், வருஷாந்தர மதிப்பு அதன் மூலதன மதிப்பில் ஆறு சதவீதமாகுமென்று கருதப்படும்.

குறிப்பு

பொது.—தற்கால மதிப்பாக இருக்க வேண்டும். எப்படி இருந்தது, இருக்கவேண்டும் என்பது அல்ல. [எம். எஸ். எம். ரயில்-எ-பெஜவாடா முனிசிபாலிடி, A. I. R. 1941 M. 641] சரியானபடி வரியை போடாமல் போனால், சிவில் கோர்டில் தாவா செய்துக் கொள்ளலாம் [பெனாரஸ் முனிசிபாலிடி-எ-நரசிங் A. I. R. 1930 A. 222]

(2) **(வாடகை) வருஷாந்திர மதிப்பு.**—வாஸ்தவத்தில் ஒரு வீடு இல்லாதபொழுது அது இருக்கிறதென்று என்பித்து வீட்டுவரி போடுவது, பிரிவு 187 படிக்கு குற்றமாகும். ஒரு 6 மாத நடுவில் தோன்றிய வீட்டுக்கு 60 நாளுக்கு உள்ளிருந்தால், அதற்கும் வீட்டுவரிப் போடக் கூடாது. சி. வி. நா. 26 விதி 9ஐப் பார்க்கவும். 10 சதவீதத்தின் மேல் தள்ளிக் கொடுக்கக் கூடாது.

மார்க்கெட்டுகள்.—பிரிவு 100 (4) யைப் பார்க்கவும்.

குதிரைப் பந்தியம், குஸ்திபோடும் முதலிய இடங்கள்.—இவைகளுக்கு வருஷாந்திர வரும்படியின் பேரில் வீட்டுவரிப் போடவேண்டும். [ரங்கூன் டர்ப் கிளப்-எ-ரங்கூன் முனிசிபாலிடி, A. I. R. 1929 ரங். 129]

வீட்டு வரியை விதிப்பதை குறித்த விதிகள் - அட்டவணை (ப. 286)

மதருஸ் கவர்ன்மெண்டு கட்டிடங்கள்.—கவர்ன்மெண்டு கட்டிடங்களுக்கும், விடுவிக்கப்பட்டவை (நிவாரணை செய்யப்பட்டவை) கள் தவிர (சி. வி. நா. 22 யைப் பார்க்கவும் மீதி எல்லா வீடுகளுக்கும் வரி கட்ட வேண்டும் [பெல்-கன்காரேஜ் பாக்டொரி)-எ, மதருஸ் முனிசிபாலிடி, (1902) 25 Mad457: செக்ரிடரி ஆப்ஸ்டேட்-எ-பம்பாய் முனிசிபாலிடி, (A. I.R. 1935 Bom 347 (350)]

இந்தியா கவர்ன்மெண்டு கட்டிடங்கள்.—இந்தியா அரசாங்கம் ஆர்டிகல் 285 படிக்கு அவர்கள் நீக்கி வரி விதிக்கலாம் என்று ஸ்பஷ்டமாய் ஏற்படுத்தினுல் அன்றி, இந்தியா கவர்ன் மெண்டு சொத்துகளுக்கு யாதொரு வரியும் விதிக்கலாகாது.

ரயில்வேகளுக்கு (ஸ்தல ஸ்தாபனங்கள்) வரி விதிக்கும் ஆக்ட், 1941.—இந்த ஆக்டின் பி. 3 படிக்கு இண்டியா கவர்ன்மெண்டு ஒரு பிரசுரம் செய்தால், அப்போது மாத்திரம் அந்த ஸ்தல ஸ்தாபனத்திற்கு ரயில்வே கட்டிடங்களின் மேல் வீட்டுவரி விதிக்க அதிகாரமுண்டு.

சி. வி. நா. 11 விதி 2 ஒரு பஞ்சாயத்து ரீஜனல் இன்ஸ்பெக்டரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, வீடுகளின் மூலதன மதிப்பு அல்லது வருஷாந்திர மதிப்பின் அடிப்படையின் பேரில் வீட்டு வரி விதித்து வசூலிப்பதற்குப் பதிலாக அவற்றின் அடித்தரை விஸ்தீரணத்தின் அடிபடையின் பேரிலும் (i) மெத்தை வீடு, (ii) ஒரு பாகம் மெத்தை வீடாகவும் ஒரு பாகம் ஓட்டு வீடாகவும் அல்லது விழல் வேய்ந்த வீடாகவும் உள்ள வீடு (iii) ஓட்டு வீடு (iv) ஒரு பாகம் ஓட்டு வீடாகவும் ஒரு பக்கம் விழல் வேய்ந்த வீடாகவும் உள்ள வீடு, (v) விழல் வேய்ந்த வீடு என வீடுகள் வகைபடுத்தப்பட் டிருப்பதன் அடிப்படையின் பேரிலும் அவ்வரியை விதித்து வசூலிக்கலாம்.

அடித்தரை விஸ்தீரணத்தின் அடிப்படையின் பேரில் வீட்டு வரி விதிக்க ரீஜனல் இன்ஸ்பெக்டரின்முன் உத்தரவு வேண்டும் (க-17. விதி 2)

குறிப்பு

அடித்தரை விஸ்தீரணம்.—இம்மாதிரி வீட்டுவரி போடக்கூடாது என்று முன்னிருந்த பஞ்சாயத்து போஸ்டுகள் தடுக்கப்பட்டிருந்தது, மதருஸ் லோக்கல் போர்ட்டுகள் ஆக்ட்டு செடியூல் IV விதி 13 பார்க்கவும். இம்மாதிரி வீட்டு வரி போடவேணு மென்ருல் முன்னதாக ரீஜனல் இன்ஸ்பெக்டர் உத்திரவு வேண்டி யிருக்கிறது. பிறகு சி. வி. நா. 12 படிக்கு கிராம கர்ணத்தையும், ரெவினியூ இன்ஸ்பெக்டர்களையும் சர்வேயர்களையும் நியமிக்கவேண்டி யிருக்கிறது. இதினுல் அனேக ஊழல்கள் நேரிடும். இம்மாதிரி வரி விதிக்கக்கூடா தென்று எதிர் பார்க்கப் படுகிறது.

சி. வி. நா. 12 விதி 4 (1) 3-வது விதியின் காரியங்களுக்காக, வீடுகளின் அடித்தரை விஸ்தீரணத்தை இனிமேல் பஞ்சாயத்து ஸர்வே செய்யும் போது ஸர்வே இலாகாதார் தீர்மானிக்க வேண்டும்.

அடித்தரையை கர்ணமும் ரிவின்யூ இன்ஸ்பெக்டரும் சர்வே செய்வது (க—17 விதி. 4)

(2) அப்படி ஸர்வே செய்யாதபோது, அடித்தரை விஸ்தீர்ணத்தை—

(a) முந்நூறுக்கு மேற்படாத வீடுகளுள்ள கிராமங்களில் கிராமக் கர்ணம் நிச்சயிக்க வேண்டும்: அப்போது கர்ணத்துக்கு ஒவ்வொரு வீட்டுக்கும் இரண்டணு வீதம் பஞ்சாயத்து நிதியிலிருந்து ஊதியம் கொடுக்கப்படும்;

(b) முந்நூறுக்கு மேற்பட்ட வீடுகளுள்ள கிராமங்களில், இது காரியத்துக்காகப் பிரத்தியேகமாக வேலைக்கமர்த்திக் கொள்ளப்பட்ட ரெவினியு இன்ஸ்பெக்டர் நிச்சயிக்க வேண்டும்; அப்போது சிப்பந்திச் செலவு பஞ்சாயத்து நிதியிலிருந்து கொடுக்கப்பட வேண்டும். [சி. வி. நா. 11-ன் கீழ் குறிப்பைப் பார்க்கவும்.]

குறிப்பு

வீட்டு வரியை வசூலிக்க ரெவின்யூ சிப்பந்தியும் பி. 126 படிக்கு உதவி செய்யலாம்.

வீட்டு வரியை விதிப்பதை குறித்த விதிகள் - அட்டவணை (ப. 286)

சி. வி. நா. 13 விதி 6. (1) மேற்படி கிராமத்தில் அடங்கியுள்ள யாதொரு பிரதேசத்தில் விசாரணை அதிகாரம் வகிக்கிற கர்ணம், நிர்வாக அதிகாரி அடியிற் கண்டவாறு கேட்டுக்கொள்வதின் பேரில் அப்பிரதேசத்துக்குள்ளிருக்கிற எல்லா வீடுகளைக் குறித்த ஜாபிதா ஒன்றை தயாரித்து அவருக்கு அனுப்ப வேண்டும். அந்த அவ்வீடுகளின் சொந்தக்காரர்கள், ஆட்சியாளர்கள் இவர்களுடைய பெயர்களைப் பதியவும் வேண்டும்.

கிராம கர்ணம் வீடுகள் ஜாபிதா தயார் செய்ய அவருக்கு ஊதியம் (ந - 10. விதி. 6.)

(2) அந்த ஜாபிதாவை தயாரிக்கவும் கலெக்டரின் அங்கீகாரத்துக்குட்பட்டு பஞ்சாயத்து எந்த ஊதியத்தையேனும் நிச்சயித்தால்; அதைப் பெற்றுக் கொள்ளவும் கர்ணம் பாத்தியதை யுடையவராவார்.

குறிப்பு

சிறிய கிராம பஞ்சாயத்துகளுக்கு மாத்திரம் கிராம கர்ணம் உதவி வேண்டியதாய் இருக்கும்; இப்போது பி. 110 படிக்கு கட்டிடங்களுக்கு நெம்பர்கள் (சங்கியை)ப் போட வேண்டும். ஆகையால் வீடுகளை கண்டு பிடிப்பது இப்போது சுலபமாக இருக்கும்.

சி. வி. நா. 14 விதி 7. நிர்வாக அதிகாரி 6-வது விதியில் சொல்லப்பட்டுள்ள ஜாபிதாக்களை வரப்பெற்றுக் கொள்வதின் பேரில், வரி விதிப்பு புஸ்தகங்களை தயார் செய்விக்க வேண்டும். அந்த வரி விதிப்பு புஸ்தகங்களில் தனித்தனி பத்திகளிலே ஒவ்வொரு வீட்டின் சொந்தக்காரர் பெயரையும், ஆட்சி ஆளர் பெயரையும், அவ்வீடு எந்த தரத்தின் கீழ் வரி விதிக்கப்பட்டால், அத்தரத்தையும், சேரவேண்டிய வரித் தொகையையும், அவ்வரிச் செலுத்தத்தக்க தேதியையும் கண்டிருக்க வேண்டும்.

நிர்வாக அதிகாரி கர்ணத்தின் ஜாபிதாவின் படிக்கு வீட்டு வரிவிதிப்பது (ந-10 விதி. 7)

குறிப்பு

நிர்வாக அதிகாரிக்கும்; பி. 43ன் கீழ் பக்கம் 98ல் யுள்ளபடிக்கு வரி விதிப்பதை குறித்து தகவல் தெரிவிக்கும்படி உத்திரவிட அதிகாரம் உண்டு. அப்படி கண்டுபிடித்தும் நிர்வாக அதிகாரி வரி விதிக்கலாம். தனித்தனி பத்திகளிலே விவரங்கள் எழுதாவிட்டால் அது சட்ட விரோதமாகும். பி. 174யை பார்க்கவும். பக்கங்கள் 269, 270, 271 களையும் பார்க்கவும்.

சி. வி நா. 15. — 198-ம் பிரிவின் கீழ் 1-ம் ஷெட்யூலை பார்க்கவும்

சி. வி. நா. 16 வீட்டு வரி ஜாபிதாவைக்காண்பதற்கு தண்டோரா போட வேண்டும் பொது நோடீஸும் கொடுக்க வேண்டும் (ந—10) விதி 8

விதி 8. வரி விதிப்பு புத்தகங்கள் தயாரிக்கப்பட்ட உடனே நிர்வாக அதிகாரி அந்த கிராமத்தில் தண்டோராப் போட்டு, அது பற்றியும் மேற்படி புத்தகங்கள் பார்வையிடப் படக்கூடிய இடம் அல்லது இடங்கள் பற்றியும் பொது நோட்டீஸ் கொடுக்க வேண்டும்.

பொது:—சி. வி. நா. 2, 281-ம் பக்கம் படிக்கு வரி புத்தகங்களையும், சி. வி. நா. 3 (282-ம் பக்கம் படிக்கு கணக்கு புஸ்தகங்களையும் யாதொரு கட்டளையுமின்றி ஒவ்வொரு வரி கொடுப்பவர் பார்க்கலாம். சாதாரண வரி விதிப்பை 6 மாதத்திற்கு ஒரு தபா விதிக்கப்படும். முன்னிருந்ததையே விதித்தால் அதற்கு சாதாரண தண்டோரா போதுமானது. மீதி விஷயங்களுக்கு சி. வி. நா. 17 பார்க்கவும்.

வீட்டு வரியை விதிப்பதை குறித்த விதிகள் - அட்டவணை (ப. 286)

வீட்டு வரியை எப்போதும் திருத்தலாம்(ந10விதி9)

சி. வி. நா. 17. விதி. 9. (1) நிர்வாக அதிகாரியானவர், ஒரு பொது புனர் விமரிசைக்கும் மற்றொரு பொது புனர் விமரிசைக்கும் இடையில் எப்போதாகிலும் வரி விதிப்புப் புஸ்தகத்தில் அடியிற் கண்டவாறு செய்து அதைத் திருத்தலாம் :—அதில் யாதொரு வீட்டைச் சேர்ப்பது அல்லது அதிலிருந்து யாதொரு வீட்டை நீக்குவது அல்லது யாதொரு வீட்டின் மதிப்பு அல்லதுதரத்தை மாற்றுவது அல்லது அது விஷயமாய்ச் செலுத்தத்தக்க வரித்தொகை மாற்றுவது அல்லது அடியிற்கண்ட விஷயமாய் அரசாங்கத்தார் செய்யக்கூடிய வேறு எந்த விதிகளுக்கேனும் உட்பட்டு, அதில், யாதொரு வீட்டின் சொந்தக்காரர் பெயருக்குப் பதிலாக மேற்படி வீட்டின் சொந்தத்துவத்துக்கு ட்ரான்ஸ்பர் மூலமாகவோ மற்றப்படியோ வாரிசு பெற்றுள்ள வேறொருவருடைய பெயரை அமைத்துக்கொள்வது.

(2) அத் திருத்தம், அது எந்த அரை வருஷத்தில் செய்யப்படுகிறதோ அந்த அரை வருஷத்தின் முதல் தினத்திலிருந்தே அமுலுக்கு வரத்தொடங்கி விட்டிருப்பதாகக் கருதப்படும்.

ஆனால், ஷை திருத்தமானது யாதொரு அரை வருஷத்தில், அந்த அரை வருஷத்துக்கான டிமாண்ட் நோட்டிஸ் கொடுக்கப்பட்டதன் பின்னர் செய்யப்பட்டால், கட்டிடங்களைக் (குத்தகைக்கு விடுவதையும் அவற்றின் வாடகை விஷயமாய் மேல் விசாரணை செய்வதையும்) குறித்த 1949-ம் ஷூ்த்திய சென்னபட்டணத்துச் சட்டத்தின்படி ஒரு வீட்டின் நியாயமான வாடகையை நிச்சயிப்பது விஷயமாய் அத் திருத்தம் செலாவணியானலொழிய அது அடுத்து வருகிற அரை வருஷத்திலிருந்துதான் செலாவணியாகத் தொடங்கும்.

மேலும், கட்டிடங்களைக் குத்தகைக்கு விடுவதையும் அவற்றின் வாடகை விஷயமாய் மேல் விசாரணை செய்வதையும்) குறித்த 1949-ம் ஷூ்த்திய சென்னபட்டணத்துச் சட்டத்தின்படி ஒரு வீட்டின் நியாயமான வாடகையை நிச்சயிப்பது காரணமாக அத் திருத்தமானது அவசியமாயிருந்தால், அவ்வாறு நியாயமான வாடகை நிச்சயிக்கப்பட்ட தேதியிலிருந்து அத்திருத்தம் செலாவணியாகத் தொடங்க வேண்டும்.

அன்றியும் ஒரு வீட்டின் சொந்தத்துவத்தை ட்ரான்ஸ்பர் செய்வது பற்றி தாவா செய்துகொள்ளப்பட்ட யாதொரு விஷயமாக நிர்வாக அதிகாரியின் முடிவு, அவ்வாறு ட்ரான்ஸ்பர் செய்யப் பெற்றவருக்கு அவ்வீட்டின் மீது சட்ட பூர்வமான ஹக்கைக் கொடுக்காது.

(3) ஒரு பொது புனர் விமரிசைக்கும் மற்றொரு புனர் விமரிசைக்கும் இடையில் நிர்வாக அதிகாரி யாதொரு வீட்டுக்கு முதன் முதலாக வரி விதிக்கிற ஒவ்வொரு விஷயத்திலும் அல்லது யாதொரு வீட்டின் மீதுள்ள வரி விதிப்பை, வீட்டு வரி விதிக்கப்படத்தக்க வீதங்கள் பொதுவாக அதிகரிக்கப் பட்டதனாலன்றி மற்றப்படி அதிகப்படுத்துகிற ஒவ்வொரு விஷயத்திலும், நிர்வாக உத்தியோகஸ்தர், அவ் வீட்டின் சொந்தக்காரர் அல்லது ஆட்சியாளருக்கு விசேஷ நோட்டிஸ் கொடுப்பதன் மூலம், அவ்வரி விதிப்பைப் புனர் விமரிசை செய்வதற்கான ஒருமனுவானது அரசாங்கத்தார், யாதொரு ரெயில்வே பரிபாலனம் அல்லது யாதொரு கம்பனி விஷயத்தில் அந்த நோடீஸ் கொடுத்த தேதியிலிருந்து அறுபது தினங்களுக்குள்ளும், இதர விஷயங்களில் நோட்டீஸ் கொடுத்த தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள்ளும் பஞ்சாயத்து ஆபீஸுக்கு வந்து சேர்ந்தால், அது ஆலோசனைக் கெடுத்துக்கொள்ளப்படு மென்று தெரிவிக்க வேண்டும்.

குறிப்பு

நிர்வாக அதிகாரி:—வரி நிர்ணயிக்கும் விஷயத்தில் அவர் ஜட்ஜு அல்ல. சாதாரண நிறைவேற்றும் அதிகாரி. நிர்வாக அதிகாரி வரி நிர்ணயிக்கும் அதிகாரத்தை இதராளுக்குக் கொடுக்கலாம் என்பது தீர்மானிக்கப்படவில்லை.

வீட்டு வரியை விதிப்பதை குறித்த விதிகள் - அட்டவணை (ப. 286)

வரியை திருத்துவது :—வரியை உசத்தினுல் அந்த ருஜு பாரம் அதிகாரியினுடையது. அது நியாயமாயிருக்கவேண்டும். வரி செலுத்துகிறவர் இருக்கும் வரியை குறைக்க யத்தனிக்கும் பொழுது ருஜு பாரம் வரிசெலுத்துகிறவர் பேரில் இருக்கும்.

எப்பொழுதாகிலும் :—இதற்கு கால நிர்ணயம் கிடையாது. ஆனுல் அந்த திருத்தம் இந்த விதியில் கண்டபடி செல்லும். பஞ்சாயத்து வீட்டு வரியை உயர்த்தினுல் அது சி.வி.நா. 5 படிக்கு 2 அரை வருஷங்கள் முன் வரையில் செல்லும். (283-ம் பக்கம் பார்க்கவும்)

(3) பொது புனர் விமர்சனம் :—இதை 5 வருஷங்களுக்கு குறைந்தது ஒரு தாவ நடத்தவேண்டும். சி. வி. நா. 20 பார்க்கவும்.

விசேஷ நோட்டீஸ் :—இதை பொது புனர் விமர்சனேயில் கொடுக்க வேண்டியதில்லை என்று இருப்பது வருந்த தக்கதாக இருக்கிறது. விசேஷ நோட்டிஸ் கொடாவிட்டால், அதிகமாக விதிக்கப்பட்ட வரியானது சட்டபடிக்கு செல்ல தக்கினதல்ல. [சிவகங்க பஞ்சாயத் போர்டு-எ-பாளத்தய்யன் A. I. R. 1937 Mad. 272: தஞ்சாவூர் முனிசிபாலிடி எ-உமாம்பா, 23 Mad. 523] விசேஷ நோட்டீஸ் கொடுக்காமல் வசூல் செய்தால் சிவில் கோர்ட்டில் தாவா செய்து அதிகப்படியாகக் கொடுத்த வீட்டு வரியை வரப்பெற்றுக் கொள்ளலாம். [ஷமாதீன் அலிம்-எ-திருவாரூர் முனிசிபாலிடி A. I. R. 1928 Mad. 848] மீதிக்கு பி. 174-யைப் பார்க்கவும்.

சி. வி. நா. 18. விதி 10. எவரும், ஒரு அரை வருஷம் முடிவதற்கு முப்பது தினங்களுக்குக்குறையாமல் அல்லது அறுபது தினங்களுக் மேற்படாமல் உள்ள காலத்தில் எப்போதாகிலும், புனர் விமரிசை மனு செய்துகொள்வதன் பேரில் அடுத்துவரும் அரை வருஷத்துக்காகத் தாம் செலுத்தத்தக்க வரியை, சந்தர்ப்பத்துக்கேற்றபடி, மேற்படி வரி விதிக்கப்பெற்ற வீட்டின் வருஷாந்திர அல்லது மூலதன மதிப்பானது அவ்வீட்டிற்குக் கடைசியாக வரி விதிப்பு செய்யப்பட்டதிலிருந்து அல்லது புனர் விமரிசை செய்ததிலிருந்து குறைந் திருக்கிறது என்ற காரணத்தின் பேரில் குறைக்குமாறு நிர்வாக அதிகாரியைக் கேட்டுக்கொள்ளலாம்.

வீட்டுவரி குறைக்க ரிவிஷன் மனுபோட வழி (ங-X-விதி 10)

குறிப்பு

சி. வி. நா. 18. அறுபது ஜனங்களுக்கு மேற்படாமல் :—இந்த சொற்கள் அனுவசியமென்று தோன்றுகிறது. 60 தினங்கள் முன் மனுப் போட்டுக் கொண்டால், அதை கவனிக்காமல் விட்டு விடுவது வேண்டுமென்று செய்யும் குறும்புகளில் ஒன்ருகும். இந்த சொற்களை உடனே எடுத்துவிடும்படியாக எதிர்பார்க்கப்படுகிறது.

சி. வி. நா. 19 விதி 11. 9. (3) அல்லது 10-வது விதியின்படிக்கான ஒரு புனர் விமரிசை மனு பைசல் செய்யப்பட்டதற்கு அடுத்துப் பிறகு, நிர்வாக அதிகாரி, மேற்படி மனுதாரருக்கு அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற ஏஜெண்டுக்கு, அந்த மனுவின் பேரில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை வாய் மொழியாகவோ எழுத்து மூலமாகவோ தெரிவிக்க வேண்டும்.. மேலும் புனர் விமரிசையின் பேரில் நிச்சயிக்கப் பட்ட தொகையை, அவ்வாறு தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து தினங் களுக்குள் அல்லது அத்தொகை இன்னும் சேரவேண்டியதாக ஏற்பட்டிரா விட்டால், அது சேரவேண்டியதாகிவிடுகிற தேதியிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் செலுத்துமாறும் அவருக்குக் கட்டளையிட வேண்டும்; மேலும் அவர் அவசியமானுல் வரி விதிப்புப் புஸ்தகங்களைத் திருத்துவிக்கவும் வேண்டும்.

ரிவிஷன் உத்திரவை தெரிவிக்க: வரி புஸ்தகங்களை திருத்த (ங-X11)

வீட்டு வரியை விதிப்பதை குறித்த விதிகள் - அட்டவணை (ப. 286)

குறிப்பு

வாய்மொழியாகவோ.—இந்த வார்த்தைகளை எடுத்து விட்டால் நன்ருக யிருக்கும். இதனுல் வீண் வியாஜ்யங்கள் உண்டாகும்.

சி, வி. நா. 20 விதி 12, நிர்வாக அதிகாரி ஒவ்வொரு அரை வருஷமும் புது ஜாபிதாக்களையோ வரி விதிப்புப் புஸ்தகங்களையோ தயார் செய்விக்கக் கடமைப்பட்டவராக மாட்டார்; ஆனுல் முந்திய அரை வருஷத்துக்கான ஜாபிதாக்களை முந்திய அரை வருஷத்தில் செய்யப்பட்டிருக்கிற அல்லது செய்யப்படக்கூடிய திருத்தங்களுடன் அனுசரிக்கலாம்; ஆனுல், ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறையாவது பொது வரி விதிப்பு ஒன்றைப் புதிதாய் செய்யவேண்டும்.

அடிக்கடி நிர்வாக அதிகாரி புதுஜாபிதா தயாரிக்கவேண்டியதில்லை. 5 வருஷத்திற்கு ஒருமுறை செய்தால் போதும். (ங-X-விதி. 12.)

அத் திருத்தங்கள், பொது வரி விதிப்பு ஆகிய இவை பற்றிய பொது நோட்டீஸை, 8-வது விதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற விதமாகக் கொடுக்க வேண்டும்.

அப்போது வரி விதிப்பானது மேற்படி நோட்டீஸ் கொடுக்கப்பட்ட அரை வருஷத்தின் முதல் தினத்திலிருந்தே அமுலுக்குவரத் தொடங்கி விட்டிருப்பதாகக் கருதப்படும்.

குறிப்பு

சி. வி. நா. 17 படிக்கு விசேஷநோட்டீஸ் கொடுக்க வேண்டும். ஆனுல் இந்த விதிப்படிக்கு தண்டோரா நோட்டீஸ் போதுமென்று இருக்கிறது. இது பெறுத்த அந்நியாயமாகும். இதை 1922 வருஷம் முதல் இது தவருதல் என்றும். விசேஷ நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்றும் எழுதியும் பயனில்லாமல் போய்க்கொண்டு இருக்கிறது.

பிரிவு120 (4)ன் கீழ் விதிகள்

வீட்டு வரி நிவாரணையும்,—வஜாவும்

சி. வி. நா. 21 விதி. 5. ஒரு பஞ்சாயத்து, பிரஸ்தாப கிராமத்திலுள்ள எந்த வீட்டை யேனும், அடியிற்கண்ட சந்தர்ப்பங்களில், தீர்மான மூலமாக வீட்டு வரியினின்றும் நிவாரணை செய்யலாம் :—

குறைந்த மதிப்பு வீடுகளுக்கு வீட்டு வரி நிவாரணை (க. 17-விதி. 5)

(i) அவ் வீட்டின் மூலதன மதிப்போ வருஷாந்தர மதிப்போ அல்லது 2-வது விதியின் கீழ்வருகிற விஷயங்களில் அதற்கு விதிக்கப்பட்ட வரியோ மேற்படி தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள வரையறைக்கு மேற்படாமல் இருந்து அந்த வரையற கீழே குறிப்பிட்டுள்ள வரையறைக்கு மேற்படாமல் இருப்பது :—

	வரி விதிப்பின் அடிப்படை.	வரையறை
(a)	வீட்டின் மூலதன மதிப்பு	240
(b)	வீட்டின் வருஷாந்தர மதிப்பு	12
(c)	2-வது விதியின்படி அடித்தரை விஸ்தீர்ணமும் வகையும்.	6

(ii) (a) அவ் வீட்டின் சொந்தக்காரருக்கு அந்தக் கிராமத்தில் வேறு எந்த வீடும் சொந்தமாயிராதிருப்பது; அல்லது

(b) அந்தக் கிராமத்தில் அவருக்குச் சொந்தமாயுள்ள எல்லா வீடுகளின் மொத்த மூலதன மதிப்போ, வருஷாந்திர மதிப்போ, அவ் வீடுகளுக்கு விதிக்கப்பட்ட வரியோ சந்தர்ப்பத்துக் கேற்றபடி இருநூற்று நாற்பது ரூபாய்க்கு அல்லது பன்னிரண்டு ரூபாய்க்கு அல்லது ஆறு ரூபாய்க்கு மேற்படாதிருப்பது.

வீட்டு வரியை விதிப்பதை குறித்த விதிகள் - அட்டவணை (ப. 286)

குடிசை என்பதின் அர்த்தத்தை பி. 2. (14)ல் பார்க்கவும். பி. 120 (1)ல் குடிசைகளல்லாத சகல வீடுகளின் பேரிலும் வீட்டு வரி விதிக்கப்படும் என்று இருக்கிறது. ஆகையால் இந்த விதியில் சொல்லப்பட்ட கட்டிடங்களை குடிசைகள் என்று கருதவேண்டும்.

சி. வி. நா. 22 விதி. 1

I வீட்டு வரி குறிப்பிட்ட வகைகளைச் சேர்ந்த வீடுகளை வீட்டு வரியிலிருந்து நிவாரணை செய்வது, (சி. வி. நா. 22, க-18. விதி—1.)

அடியிற்கண்ட கட்டடங்கள் மேற்படி சட்டத்தின் பிரகாரம் "வீடு" என்பதற்குச்சொல்லப்பட்ட அர்த்தத்தில் அடங்கினால் அவைகள் வீட்டு வரியினின்றும் நிவாரணை ஆனவையாகும் :—

(a) பொது ஆராதனைக்காக ஒதுக்கி வைக்கப்பட்டு அவ்வாறு வாஸ்தவமாக உபயோகிக்கப் படும் அல்லது வேறு எந்தக்காரியத்துக்காகவும் உபயோகிக்கப்படாத கட்டடங்கள்;

(b) வாடகை வாங்காமல் அனுபோகத்துக்கு விடப்படும் சத்திரங்களும், எந்தச் சத்திரங்களை அனுபோகத்தில் வைத்துக்கொள்வதற்கு வாங்கப்படும் வாடகை தரும காரியங்களுக்காகவே உபயோகப்படுகிறதோ அந்தச் சத்திரங்கள்;

(c) ஹாஸ்டல்கள் உட்பட்ட கல்வி சம்பந்தமான காரியங்களுக்காகவும், பொது ஜனங்கள் வரக்கூடிய நூல் நிலையங்களுக்காகவும் உபயோகப்படும் கட்டடங்களும், அனாதைகள் அல்லது பிராணிகளுக்குப் புகலிடம் கொடுப்ப தென்னும் தரும காரியத்துக்காக உபயோகப்படும் பொதுக் கட்டடங்கள்,

(d) புராதன ஞாபகச் சின்னங்களைக் காப்பாற்றி வைப்பதைக் குறித்த 1904-ம் வருஷத்திய சட்டத்தின் பிரகாரம் காப்பாற்றி வைக்கப் படுபவையும் குடியிருப்பு விடுதிகளாகவோ பொது ஆபீஸுகளாகவோ உபயோகிக்கப்படாதவையுமான புராதன ஞாபகச் சின்னங்களும் அவைகளின் பாகங்கள்;

(e) தரும ஆஸ்பத்திரிகள், டிஸ்பென்ஸரிகள், தரும காரியங்களுக்காகவென்றே உபயோகப்படுத்தப்படுகிற இதர கட்டடங்கள்;

(f) அரசாங்கத்தாரால் அப்போதைக்கப்போது அறிக்கையிடப் படக்கூடியவையும் ரெயில்வே பரிபாலனத்தாரால் பராமரிக்கப்பட்டு வருபவையுமான ஆஸ்பத்திரிகளும் டிஸ்பென்ஸரிகளும்

(g) பஞ்சாயத்துக்குச் சொந்தமான கட்டடங்கள்;

(h) கடல்கரை விளக்குக்கள்.

ஆனால் (a), (c), (e) பகுதிகளில் கண்டது எதுவும், எந்தக் கட்டடம் விஷயமாக மேற்சொன்ன பகுதிகளில் குறிப்பிடப்பட்ட காரியங்களுக்காக அதை உபயோகித்து வருகிற நபர் அல்லது நபர்கள் வாடகை செலுத்தத் தக்கவராகிறாரோ அல்லது செலுத்தத்தக்கவர்களாகிறார்களோ அந்தக் கட்டடத்தை வீட்டு வரியினின்றும் நிவாரணை செய்வதாகக் கருதப்பட மாட்டாது.

விவரணம்.—இந்த விதியின்படி கொடுக்கப்பட்ட நிவாரணையானது ஹாஸ்டல்களாயிராமல் பாடசாலைகளையும் கல்லூரிகளையும் சேர்ந்த குடியிருப்பு விடுதிகளுக்கோ, ஆஸ்பத்திரிகள், டிஸ்பென்ஸரிகள், நூல் நிலையங்கள் ஆகிய இவைகளைச் சேர்ந்த குடியிருப்பு விடுதிகளுக்கோ பிரயோகப்படாது.

குறிப்பு

பொது—வீட்டு வரியிலிருந்து நிவாரணை கேட்பவர், அவர் நிவாரணையை அடைய பாத்யப் பட்டவர் என்று ருஜுப் படுத்தவேண்டும். ஏனெனில் வரி நிவாரணையால், வரி கொடுப்பவர்கள் பேரில் பாரம் (சுமை) அதிகமாகும்.

(a-எ) பொது ஆராதனைக்கு அல்லாமல் மற்ற விதத்தில் உபயோகப் படுத்தினால் நிவாரணை கிடையாது. [பழனி முனிஸிபாலிட்டி-எ-ஸ்ரீ தண்டாயுதபாணி தேவஸ்தானம்.

வீட்டு வரியை விதிப்பதை குறித்த விதிகள் - அட்டவணை (ப. 286)

A. I. R. 1941 Madras 185 :: திருப்பதி முனிசிபாலிடி-எ-பிரயாக் தாஸ், 26 I. C. 96 Madras.] பிராமணனுக்கு சாப்பாடு இடுவது பொது ஆராதனையில் சேராது [தம்பு சுப்பராய-எ-அருண்டேல் 6 Madras 287] கோவில்கள் உள்ளிருக்கும் கடைகளுக்கு வாடகை பெற்றுக்கொண்டால், வீட்டு வரிகட்ட வேண்டும். [மதுரா முனிசிபாலிடி-எ-மதுரா தேவஸ்தானம் A. I. R. 1942 M. 658.]

(b) **சத்திரங்கள்.—வாடகை தரும காரியங்களுக்காகவே.**—இது சத்திரத்திற்கு வருகிறவர்களிடம் வாங்கும் வாடகை என்று அறியவும். ஒரு சத்திரத்திற்கு மற்றொரு வீட்டின் மூலம்வரும் வாடகையை உபயோகப்படுத்துவதினால் அந்த மற்றொரு கட்டடத்திற்கு வீட்டுவரி நிவாரணை கொடுக்க வேண்டும் என்பது சரியல்ல. [கெஜட் 25-7-1939 பக்கம் 296 : பண்டாரா-எ-மதராஸ் கார்பொரேஷன், A. I. R. 1941 M-908.]

(c) **கல்வி சம்பந்தமான காரியாலயங்கள்.**—இவைகள் வாடகை கட்டிடங்களில் வைக்கப்பட்டிருந்தால், வாடகை பெற்றுக்கொள்ளுகிறவர் வீட்டு வரி கட்டப் பந்தப்பட்டவர் ஆவார். தன் சொந்த வீட்டில் பாடசாலை வைத்துக்கொண்டு நடத்தி வரும்போது தனக்கு லாபம் கிடைத்தாலும் அந்த பாடசாலையுள்ள வீட்டுக்கு வீட்டு வரி கொடுக்கவேண்டியதில்லை. [திருச்சினாப்பள்ளி முனிசிபாலிடி-எ-வெங்கடராமா, A. I. R. 1931 Madras 55.]

வறுமை காரணமாக நிவாரணை அளிப்பது. (க.18விதி6.)

சி. வி. நா. 23:விதி 5. பஞ்சாயத்து பிரஸ்தாப கிராமத்திலுள்ள ஒரு வீட்டுச் சொந்தக்காரரின் வறுமை காரணமாக அவர் வரி முழுவதையுமாவது அதன் யாதொரு பாகத்தையாவது செலுத்த வேண்டியதில்லையென அவருக்கு நிவாரணை அளிக்கலாம். இது போலவே ரீஜனல் இன்ஸ்பெக்டர் எந்த வகைக் கேனும் சேர்ந்த வீடுகளின் சொந்தக்காரர்களுக்கு நிவாரணை அளிக்கலாம்.

வறுமை (ஏழ்மை காரணமாக வரி வஜா (க-18விதி 6)

சி. வி. நா. 24 விதி 6. வறுமை காரணமாக அளிக்கப்படும் வரி வஜா ஒரு சமயத்தில் ஒரு வருஷத்துக்குத்தான் அளிக்கப்படும்.

வீடு காலியாயிருப்பதனால் அளிக்கப்படும் வரிவஜா (க-18 விதி 7.)

சி. வி. நா. 25 விதி 7. (1) யாதொரு அரை வருஷத்தில் அறுபது அல்லது அதற்கு மேற்பட்ட நாட்களுக்கு தொடர்ச்சியாக ஒரு வீடு காலியாயிருந்தால், நிர்வாக அதிகாரியானவர், வரித் தொகையில் ஒரு பாதிக்கு மேற்படாமல், அந்த அரை வருஷத்தில் எத்தனை நாட்களுக்கு அவ்வீடு காலியாயிருந்ததோ அதற்கு வீதாசாரப்படியுள்ள பாகத்தை வஜா செய்யவேண்டும்.

(2) (1) உபவிதியின்படி வஜாவுக்கான கோரிக்கை (டிமாண்டு) ஒவ்வொன்றையும், எந்த அரை வருஷம் விஷயமாக மேற்படி வஜா கோரப்படுகிறதோ அந்த அரை வருஷத்திலேனும் அதற்கு அடுத்த வரை வருஷத்திலேனும் செய்து கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு அந்தக் கோரிகையைச் செய்து கொள்ளக்கூடாது.

(3) (a) வீட்டுச் சொந்தக்காரராவது அவருடைய ஏஜெண்டாவது அவ்வீடு காலியாயிருப்பதைப் பற்றி நிர்வாக அதிகாரிக்கு ஏற்கனவே நோட்டிஸ் கொடுத்திருந்தாலொழிய அத்தகைய வஜாவுக்கான கோரிக்கை எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது; வஜா செய்யப்படும் கால அளவு மேற்படி நோட்டிஸ் ஒப்புவிக்கப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(b) அத்தகைய நோட்டிஸ் ஒவ்வொன்றும், அது அவ்வாறு ஒப்புவிக்கப்படும் அரை வருஷத்தோடு காலங் கடந்து போகும். அதற்குப் பிறகு அது செல்லுபடியாகாது.

(3) நோட்டீஸ் கொடுக்கா விட்டால் காலியாக உள்ள தேதியிலிருந்து கணக்கிடப் படமாட்டாது. நோட்டீஸ் தேதியிலிருந்து தான் கணக்கிட முடியும். அந்த நோட்டீஸ் கொடுத்தது மாத்திரம் போதாது. பிறகு அந்த அரை வருஷத்திலோ அல்லது அடுத்த அரை வருஷத்திலோ டிமாண்டு செய்ய (எழுத்து மூலமாய் கேட்க) வேண்டும். ஒவ்வொரு அரை வருஷத்திற்கும் தனித் தனி நோட்டீஸ் கொடுக்க வேண்டும்.

சி. வி. நா 26 விதி 9. (1) ஒரு கிராமத்துக்குள் ஒரு பிரதேசம் சேர்த்துக் கொள்ளப்பட்டால் அப் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு வீட்டின் சொந்தக்காரரும் :—

ஓர் அரை வருஷத்தின் மத்தியில் சேர்த்துக் கொள்ளப் பட்ட அல்லது நீக்கிவிடப் பட்ட பிர தேசங்களில் வரி வஜா செய்து (க-18 விதி 9.)

(a) அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்ட தேதி ஓர் அரை வருஷத்தின் கடைசி இரண்டு மாதங்களில் இருந்தால், அந்த அரை வருஷத்துக்காக அவ் வீட்டின் விஷயமாக எந்த வீட்டு வரியும் செலுத்துவதற்கு உட்பட்டவராக மாட்டார்.

(b) அந்த தேதியானது ஓர் அரை வருஷத்தின் முதல் நான்கு மாதங்களில் இருந்தால், அந்த அரை வருஷத்துக்காக அவ் வீடு விஷயமாகச் செலுத்தப் படத்தக்க வீட்டு வரியில் பாதிக்கு மேற்பட்டால் அத் தேதிக்கு முன் அந்த அரை வருஷத்தில் எத்தனை நாட்களிருந்தனவோ அவற்றின் வீதாசாரப் படிக்கான பாகத்தை வஜா செய்யப் பெறுவதற்குப் பாத்தியதை உள்ளவராவார்.

(2) ஒரு கிராமத்திலிருந்து ஒரு பிரதேசம் நீக்கிவிடப் பட்டால், அப்பிர தேசத்திலுள்ள ஒவ்வொரு வீட்டின் சொந்தக்காரரும்:—

(a) அப்படி நீக்கப்பட்ட தேதியானது ஓர் அரை வருஷத்தின் முதல் இரண்டு மாதத்திற்குள்ளிருந்தால், அந்த அரை வருஷத்துக்காக அவ் வீட்டின் விஷயமாய்ச் செலுத்தப்படத்தக்க முழு வீட்டு வரியையும் வஜா செய்யப் பெறுவதற்குப் பாத்தியதை உள்ளவராவர்;

(b) அத் தேதியானது ஓர் அரை வருஷத்தின் கடைசி நான்கு மாதங்களுக்குள்ளிருந்தால், அந்த அரை வருஷத்துக்காக அவ் வீட்டின் விஷயமாய்ச் செலுத்தப்படத்தக்க வீட்டு வரியில் பாதிக்கு மேற்படாமல், அத் தேதியை அடுத்து அந்த அரை வருஷத்தில் எத்தனை நாட்களிருந்தனவோ அவற்றின் வீதாசாரப் படிக்கான பாகத்தை வஜா செய்யப் பெறுவதற்குப் பாத்தியதை யுள்ளவராவார்.

(3) ஒரு வீடு எந்தப் பிரதேசத்திலிருக்கிறதோ அந்தப் பிரதேசம் நீக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் வஜா விண்ணப்பம் ஒன்று நிர்வாக அதிகாரிக்குச் செய்துகொள்ளப் பட்டாலொழிய அவ்வீட்டின் விஷயமாக (2) உப-விதியின் படி வஜா எதுவும் செய்யப்படமாட்டாது.

சி. வி. நா. 27 விதி 8. (1) (a) ஒரு கிராமத்தில் வீடு ஒன்று கட்டப்பட்டால் அல்லது மீண்டும் கட்டப்பட்டால், சொந்தக்காரர், அவ் வீடு கட்டி முடிந்த தேதி அல்லது அது அனுபோகத்தில் வைத்துக்கொள்ளப்பட்ட தேதி ஆகிய இவைகளில் எது முந்தி இருக்கிறதோ அதிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் அதைப்பற்றி நிர்வாக அதிகாரிக்கு நோட்டிஸ் கொடுக்க வேண்டும்.

கட்டடம் கட்டுவது, அதை மீண்டும் கட்டுவது அல்லது அதை இடித்து விடுவது பற்றி நோட்டிஸ் கொடுக்கச் சொந்தக் காரருக்குள்ள கடமை (க-8—விதி 8)

(b) அத் தேதியானது ஒரு அரை வருஷத்தின் கடைசி இரண்டு மாதங்களுக்குள் இருந்தால், மேற்படி சொந்தக்காரர் (a) பகுதியின் பிரகாரம் நோட்டிஸ் கொடுப்பதற்கு உட்பட்டு அந்த அரை வருஷத்துக்காக அவ் வீடு விஷயமாய்ச் செலுத்தப்படத்தக்க முழு வரியையுமாவது அதிகரிக்கப்பட்ட வரியையாவது, சந்தர்ப்பத்துக்கேற்ப வஜா செய்யப் பெறுவதற்குப் பாத்தியதை உள்ளவராவார்.

வீட்டு வரி விதிப்பதை குறித்த விதிகள் - அட்டவணை (ப. 286)

(c) அத் தேதியானது ஒரு அரை வருஷத்தின் முதல் நான்கு மாதங்களுக்குள் இருந்தால், மேற்படி சொந்தக்காரர், (a) பகுதியின் பிரகாரம் நோட்டிஸ் கொடுப்பதற்குட்பட்டு அந்த அரை வருஷத்துக்காக அவ் வீடு விஷயமாய்ச் செலுத்தப்படத்தக்க, சந்தர்ப்பத்துக்கேற்ப, மேற்படி வரி அல்லது அதிகரிக்கப்பட்ட வரியில் பாதிக்கு மேற்படாமல், அத்தேதிக்கு முன் அந்த அரை வருஷத்தில் எத்தனை தினங்கள் இருந்தனவோ அதற்கு வீதாசாரப்படிக்கான பாகத்தை வஜா செய்யப்பெறுவதற்குப் பாத்தியதை உள்ளவராவார்.

(2) (1) உபவிதியைச் சேர்ந்த (a) பகுதியின் நிபந்தனைகளைச் சொந்தக்காரர் எவராகிலும் மீறி நடந்தால் அவருக்கு **ஐம்பது ரூபாய்'க்கு மேற்படாத அபராத தண்டனை** விதிக்கப்படத்தக்கதாகும்.

(3) (a) ஒரு கிராமத்திலுள்ள ஒரு வீடு இடித்து விடப் பட்டால் அல்லது அழித்து விடப்பட்டால், சொந்தக்காரர், அதுப் பற்றி நிர்வாக அதிகாரிக்கு நோட்டீஸ் கொடுக்கப்படுகிற வரையில், அந்த வீடு இடிக்கப்படாமல் அல்லது அழிக்கப்படாமல் இருந்திருந்தால் எந்த வரி செலுத்தத்தக்கதாய் இருந்திருக்குமோ அந்த வரியை அவருக்கு யுக்தமாய்த் தோற்றுகிறபடிச் செலுத்துவதற்கு உட்பட்டவராவர்.

(b) அந்த நோட்டீஸ் ஓர் அரை வருஷத்தின் முதல் இரண்டு மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டால் சொந்தக்காரர் அந்த அரை வருஷத்துக்காக அவ் வீடு விஷயமாய்ச் செலுத்தப்படத்தக்க முழு வரியையும் வஜா செய்யப்பெறுவதற்குப் பாத்தியதை உள்ளவராவார்.

(c) அந்த நோட்டீஸ் ஓர் அரை வருஷத்தின் கடைசி நான்கு மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டால் மேற்படி சொந்தக்காரர் அந்த அரை வருஷத்துக்காக அவ் வீடு விஷயமாய்ச் செலுத்தப்படத்தக்க வரியில் பாதிக்கு மேற்படாமல், சந்தர்ப்பத்துக் கேற்றபடி அவ்வாறு இடித்துவிட்ட பிறகு அல்லது அழித்துவிட்ட பிறகு அந்த அரை வருஷத்தில் எத்தனை நாட்களிருந்தனவோ அவற்றின் வீதாசாரப்படிக்கான பாகத்தை வஜா செய்யப்பெறுவதற்குப் பாத்தியதை உள்ளவராவார்.

சி. வி. நா. 28. விதி. 4. (1) ஒரு வீடு விஷயமாக வீட்டுவரி செலுத்துவதற்கு பிரதமத்தில் உட்பட்ட ஒருவருக்கு அவ் வீட்டின் பேரில் அல்லது அது சம்பந்தமாக உள்ள ஹக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்படும்போதெல்லாம் எவருடைய ஹக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்படுகிறதோ அவரும் அது யாருக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்படுகிறதோ அவரும், ட்ரான்ஸ்பர் பத்திரம் எழுதப்பட்ட பிறகு அல்லது அது ரெஜிஸ்டர் செய்யப்பட்டால் அதன் ரெஜிஸ்ட்ரேஷனுக்குப் பிறகு அல்லது பத்திரம் எதுவும் எழுதப்படாவிட்டால் ட்ராஸ்ன்பர் செய்யப்பட்ட பிறகு மூன்று மாதங்களுக்குள் நிர்வாக அதிகாரிக்கு மேற்படி ட்ரான்ஸ்பரைக் குறித்து நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

ட்ரான்ஸ்பர் நோட்டீஸ் கொடுப்பதற்கு ட்ரான்ஸ்பர் செய்பவருக்கும் ட்ரான்ஸ்பர் செய்யப்பெறுபவருக்கு முள்ள கடமை (க-18–விதி-4.)

(2) மேற்சொன்ன பிரகாரம் வீட்டுவரி செலுத்துவதற்குப் பிரதமத்தில் உட்பட்ட ஒருவர் இறந்து போயிருந்தால், இறந்து போனவரின் ஹக்கு அவருடைய வாரிசு என்னும் முறைமையில் அல்லது மற்றப்படி யாருக்கு மாற்றப்படுகிறதோ அவர், இறந்துபோனவர் மரணமடைந்ததிலிருந்து ஒரு வருஷத்துக்குள் நிர்வாக அதிகாரிக்கு மேற்படி ட்ரான்ஸ்பரைக் குறித்து எழுத்து மூலமான நோடீஸ் கொடுக்க வேண்டும்.

(3) இந்த விதியின்படி கொடுக்கப்படவேண்டிய நோட்டீஸ் நிர்வாக அதிகாரி கட்டளையிடக்கூடிய நமூனப்படி இருக்கவேண்டும்; சந்தர்ப்பத்துக்கேற்றபடி, ஹக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்பெறுபவரோ ஹக்கு போய்ச் சேருகிற வேறு நபரோ அடியிற் கண்டபடி உத்தரவிடப்பட்டால், மேற்படி ட்ரான்ஸ்பர் அல்லது வாரிசுரிமையை எண்பிக்கிற எவையேனும் தஸ்தாவேஜுகளை நிர்வாக அதிகாரிக்கு முன் கொண்டுவந்து காட்டக் கடமைப்பட்டவராவார்.

(4) நிர்வாக அதிகாரிக்கு அத்தகைய நோட்டிஸ் கொடுக்காமல் மேற்சொன்ன பிரகாரம் ட்ரான்ஸ்பர் செய்கிற ஒவ்வொருவரும், அத்தகைய அசட்டை காரணமாக அவர் உள்ளாகும் வேறு யாதொரு பொறுப்புடன்கூட, நோட்டிஸ் கொடுக்கிற வரையில் அல்லது பஞ்சாயதது ரெஜிஸ்டர்களில் மேற்படி ட்ரான்ஸ்பர் பதிவாகிறவரையில், ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட வீட்டுக்கு விதிக்கப்பட்ட வீட்டு வரியைச் செலுத்துவதற்கு முன் போலவே உட்பட்டவராவார்; ஆனால் இவ் விதியில் கண்டதெதுவும், ட்ரான்ஸ்பர் செய்யப் பெற்றவர் மேற்படி வரி செலுத்துவதற்கு அவருக்குள்ள பொறுப்பை பாதிப்பதாகக் கொள்ளலாகாது.

சி. வி. நா. 29 விதி 1.

II. வீடுகள் பற்றிய சொத்துவத்தின் பதிவை ட்ரான்ஸ்பர் செய்வது (க - 18- விதிகள் 1, 2, 3.)

பொதுவான புனர் விமரிசையின் போதாவது, பொதுவான ஒரு புனர் விமரிசைக்கும் மற்றொன்றுக்கும் இடையிலாவது, ஒரு கட்சிக்காரருடைய விண்ணப்பத்தின் பேரில், வரிவிதிப்புப் புஸ்தகங்களில் சொத்துக்களின் சொந்தத்துவத்தில் மாறுதல்கள் செய்கையில், ஒரு பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர் அடியிற்கண்ட நிபந்தனைகளை அனுசரிக்க வேண்டும்; அவையாவன :—

(1) **சொந்தக்காரர்கள் தாங்களாகவே செய்யும் ட்ரான்ஸ்பர்கள்:**—ஹக்கு அறுதியாக ட்ரான்ஸ்பர் செய்யப்படும் எல்லா விஷயங்களிலும், ட்ரான்ஸ்பருக்குரிய கட்சிக்காரர்கள் இருவருமாவது அவர்களில் ஒருவராவது விண்ணப்பம் செய்து கொள்வதன்பேரில் சொத்துக்களின் பதிவு அதன் சொந்தத்துவத்தின் ட்ரான்ஸ்பருக்குப் பொருத்தமாயிருக்கும்படியாக மாற்றப்படலாம்; ஆனால் பதிவு மாற்றத்துக்கான விண்ணப்பத்தை ஒவ்வொரு விஷயத்திலும் எழுத்து மூலமாகச் செய்து கொள்ளவேண்டியது மன்றி, அதைச் செய்துகொள்ளும் கட்சிக்காரர் அல்லது கட்சிக்காரர்கள் அதில் கையெழுத்து செய்யவும் வேண்டும். அதைத் தபால் மூலமாக அனுப்பலாம் அல்லது நேரிலாகிலும் கிரமமாக அதிகாரம் பெற்ற ஏஜென்ட் மூலமாகவாகிலும் ரெஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்மென்டைச்சேர்ந்த ஓர் உத்தியோகஸ்தர் மூலமாகவாகிலும் சமர்ப்பிக்கலாம். அத்தகைய விண்ணப்பம் ஒன்று இரண்டு கட்சிக்காரர்களாலும் கொடுத்துக்கொள்ளப்பட்டிருந்து அவர்களில் ஒருவர் பதிவான சொந்தக்காரராயிருந்தால், கோரியிருக்கிறபடி பதிவு மாற்றத்துக்காக உடனே உத்தரவு பிறப்பிக்கப்படலாம். ஆனால் ட்ரான்ஸ்பருக்குரிய கட்சிக்காரர்களில் ஒருவர் மட்டும் மேற்படிவிண்ணப்பத்தைச் செய்துகொண்டால், மற்றொரு கட்சிக்காரருக்கு நோட்டிஸ் சேர்ப்பிக்கவேண்டும். பிரஸ்தாப விவகாரத்திலே பதிவான சொந்தக்காரர் ஒரு கட்சிக்காரராயிராவிட்டால், பதிவை ட்ரான்ஸ்பர் செய்வதற்கான விண்ணப்பமானது இரண்டு கட்சிக்காரர்களால் கொடுத்துக் கொள்ளப்பட்டிருந்தாலும் சரி அவர்களில் ஒருவரால் கொடுத்துக்கொள்ளப்பட்டிருந்தாலும் சரி, மேற்படி சொந்தக்காரருக்கும் நோடீஸ் கொடுக்கவேண்டும். பதிவான சொந்தக்காரர் உத்தேசிக்கப்பட்ட டிரான்ஸ்பர் விஷயமாக ஆட்சேபனை செய்தால், சொந்தக்காரரென்று சொல்லிக்கொள்பவர் சட்ட பூர்வமான சாட்சியத்தைத் திருப்திகரமாக ஹாஜர்ப்படுத்தினாலொழிய, எவ்வித மாற்றத்தையும் செய்யலாகாது. பிரஸ்தாப விவகாரத்துக்குச் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர் ஒருவர் மட்டுமே விண்ணப்பம் செய்துகொண்டிருந்து, மற்றொருவர் அதை ஆட்சேபித்தால் அல்லது சும்மா இருந்தால், ஒரு பூர்த்தியான தொடராயுள்ள தஸ்தாவேஜுகளைக்கொண்டு கட்சிக்காரர்களைத் தொடர்புபடுத்த வேண்டும். அத் தொடர் பூர்த்தியாயிராவிட்டால், கண்யமுள்ளவர்களின் ஸ்டேட்மெண்டுகள் வரி ரசீதுகள் என்பவற்றைப் போன்ற இதர சாட்சியத்தைக் கொண்டு அதைப் பூர்த்தி செய்யவேண்டும். ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்வதற்கு ஒரு மாத காலம் கொடுக்கவேண்டும்; ஆட்சேபனை எதுவாகிலும் செய்து கொள்ளப்பட்டால் விசாரணை ஒன்றை நடத்த வேண்டும்; ஆட்சேபனை நியாயமானதென்று தெரிந்தாலன்றி மற்றப்படி, பதிவை ட்ரான்ஸ்பர் செய்யவேண்டும்.

(2) **டிக்ரி பெற்றவர்களுக்கு ட்ரான்ஸ்பர்கள் செய்வது.**—ஒரு ஸிவில் கோர்ட்டின் டிக்ரியை அனுசரித்து டிக்ரி பெற்றவர்கள் பெயரிலாவது ஸிவில் கோர்ட் டிக்ரிகளை நிறைவேற்றுகையில் நடந்த ஏல விற்பனைகளில் கிரயகாரர்களின்

வீட்டு வரி விதிப்பதை குறித்த விதிகள் - அட்டவணை (ப. 286)

பெயரிலாவது சொத்துக்களின் ஹக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்படும் விஷயங்களில், வியாஜ்ஜியக் கட்சிக்காரர்களில் அல்லது ஏலக் கிரயதாரர்களில் எவரேனும், விண்ணப்பம் செய்துகொண்டு, சந்தர்ப்பத்துக் கேற்றபடி டிக்ரியின் மெய்ப்பிக்கப் பட்ட நகல் ஒன்றையும் அல்லது விற்பனை ஸெர்டிபிகேட் ஒன்றையும், அதை அனுசரித்து சுவாதீன ஒப்படை செர்டிபிகேட் ஒன்றையும் ஹாஜர்ப்படுத்துவதன் பேரில் உடனடியாகப் பதிவு மாற்றம் செய்யலாம் ; ஆனால் பதிவான சொந்தக்காரிடமிருந்து அது அவ்வாறு ட்ரான்ஸ்பர் செய்யப்பட வேண்டும். மேற்படி ட்ரான்ஸ்பர் பதிவான சொந்தக்காரராயிராத ஒருவரிடமிருந்து செய்யப்பட்டால், பதிவு மாற்றம் செய்யப்படுவதற்கு முன் (1) உபவிதியில் நிபந்தனை கண்டுள்ள விதமாகப் பதிவான சொந்தக்காரருக்கு நோட்டிஸ் கொடுக்க வேண்டும். எனினும், சுவாதீன ஒப்படை செர்டிபிகேட்டை ஹாஜர்ப்படுத்த முடியாத ஒரு விஷயத்தில், உதாரணமாக, பிறப்பிக்கப்பட்ட டிக்ரியை அனுசரித்து நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை இன்றியே சுவாதீனம் விட்டுவிடப்படும் விஷயத்தில், டிக்ரியும் முடிவானதாகவே தோன்றினால், ட்ரான்ஸ்பருக்குரிய கட்சிக்காரர்களில் ஒருவர் மட்டுமே கொடுத்துக் கொண்டதும் பதிவு மாற்றத்துக்குரியதுமான விண்ணப்பங்கள் சம்பந்தமாக, (1) உபவிதியில் நிபந்தனை கண்டிருக்கிற விதமாக அதை விவரிக்க வேண்டும்.

(3) **டிக்ளரேடரி டிக்ரி என்னும் பிரசித்தம் செய்கிற டிக்ரிகளின் படிக்கான ட்ரான்ஸ்பர்கள்.**—நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்க இயலாத டிக்ளரேடரி டிக்ரி—அதாவது, குறித்த ஒரு நபர் ஹக்கைப் பதிவு செய்து கொள்ள அவருக்கு பாத்தியதை உண்டாகும் பொருட்டு அவரிடம் சங்கிரமித்திருக்கும் ஹக்கை மட்டும் அந்த டிக்ரி பிரசித்தம் செய்தால்—அத்தகைய ஒரு டிக்ரியின் பிரகாரம் பதிவு ட்ரான்ஸ்பர் கோரப்படும் விஷயங்களில் நிர்வாக அதிகாரியானவர் அந்த டிக்ரியின் மெய்ப்பிக்கப்பட்ட நகல் ஒன்று ஹாஜர்ப்படுத்தப்படுவதன் பேரில், பதிவை உடனடியாக ட்ரான்ஸ்பர் செய்யலாம்.

(4) **வாரிசுரிமையினால் அடையப்படும் ட்ரான்ஸ்பர்கள்.**— வாரிசு உரிமையினால் அடையப்படும் ட்ரானஸ்பர்களின் விஷயத்தில், நிர்வாக அதிகாரி தமக்குச் சந்தேகமற ருஜு காட்டப்படுவதன் பேரில் பதிவை ட்ரான்ஸ்பர் செய்ய உத்தரவு பிறப்பிக்கலாம்.

2. பதிவை ட்ரான்ஸ்பர் செய்வது அல்லது அவ்வாறு செய்ய மறுப்பது சம்பந்தமாக நிர்வாக அதிகாரி பிறப்பித்த உத்தரவுகளுக்கு விரோதமாகப் பஞ்சாயத்துக்கு அப்பீல் செய்துகொள்ளலாம். எந்த உத்தரவுக்கு விரோதமாக அப்பீல் செய்து கொள்ளப்படுகிறதோ அந்த உத்தரவு வந்து சேர்ந்த தேதிக்குப் பிறகு முப்பது நாட்களுக்குள் அந்த அப்பீல்களைச் செய்துகொள்ள வேண்டும்.

குறிப்பு

சி. வி. நா. 28 : விதி (4)ல் கடைசியில்யுள்ள வாக்கியத்தின் படிக்கு ட்ரான்ஸ்பர் கொடுத்தவருடைய பாரம் ட்ரான்ஸ்பர் தேதிவரையில் உள்ளது நீங்காது.

சி. வி. நா. 30 விதி 3. (1) வீட்டுச் சொந்தக்காரர் அரை வருஷம் ஆரம்பமான பிறகு முப்பது தினங்களுக்குள் வீட்டு வரியைச் செலுத்த வேண்டும்.

வீட்டு வரியை செலுத்துவதற்கு சொந்தக்காரரும் அனுபோகதாரரும் உட்பட்டவர்கள் (க-18 விதி 3.)

(2) ஒரு வீடு விஷயமாகச் சேரவேண்டிய வீட்டுவரி முழுவதையுமாவது அதன் யாதொரு பாகத்தையாவது அந்த வீட்டுச் சொந்தக்காரர் நோட்டிஸ் சேர்ப்பிக்கப் பட்ட தேதியிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் செலுத்தத் தவறினால் நிர்வாக அதிகாரியானவர், பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்பட்டு அவ் வரி செலுத்தப்படாமலிரா விட்டால், பிரஸ்தாப காலத்தில் அவ் வீட்டின் அனுபோகதாரர், பதினைந்து நாட்களுக்குக் குறையாமல் குறிப்பிட்ட காலத்துக்குள், அத்தொகையைச் செலுத்த வேண்டுமென அவ்வனுபோகதாரருக்கு உத்தரவிடலாம்.

குறிப்பு

சொந்தக்காரர் - அனுபோகதாரர் :—அனுபோகதாரர் வீட்டுவரியை கொடுத்தால் அதை வீட்டு வரியில் கழித்துக் கொள்ளலாம். ஒரு வீட்டுக்கு அநேக சொந்தக்காரர்களிருந்தால், பஞ்சாயத்து வீட்டுவரி மொத்தத்தையும் ஒருவரிடமிருந்து வசூல் செய்துகொள்ளலாம். சொந்தகாரர் இல்லாவிட்டால் அவருடைய வார்சுகள் வீட்டுவரியை கட்ட பந்தப்பட்டவர்கள். பி. 120 (5) யை பார்க்கவும்.

(1) அரை வருஷம் ஆரம்பமான பிறகு முப்பது தினங்களுக்குள் :—நோடீஸ் அல்லது டிமாண்டு கொடாவிட்டாலும் வீட்டு வரி செலுத்த வேண்டியது அவசியம். டிமாண்டு செய்யாவிட்டால், இவ்வளவு தொகை கட்டவேண்டும் என்று தெரியாது. டிமாண்டு செய்யாமல் சிவில் கோர்டுக்கு போனாலும் பிரதி வாதிக்கு செலவு கட்டிக்கொடுக்கும்படி நேரிடும் டிமாண்டு செய்யாமல் ஜப்தி செய்யவும் கிரிமினல் கோர்டில் கேசு செய்யவும் கூடாது.

தொழில் வரி

121. (1) தொழில் வரியானது நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளுக்குப்பட்டு ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பட்டணத்திலும் ஒவ்வொரு அரை ஆண்டிலும் —

தொழில் வரி

(i) அந்த அரை வருஷத்திலே மொத்தத்தில் அறுபது தினங்களுக்குக் குறையாமல் அந்தக் கிராமத்தில் அல்லது பட்டணத்தில் தொழில் நடத்துகிற ஒவ்வொரு கம்பெனிக்கும்,

(ii) அந்த அரை வருஷத்திலே—

(a) (i) அந்தக் கிராமத்திற்குள் அல்லது பட்டணத்துக்குள் மொத்தத்தில் அறுபது தினங்களுக்குக் குறையாமல், அல்லது.

(ii) அந்தக் கிராமத்துக்குள் அல்லது பட்டணத்துக்குள் மொத்தத்தில் அறுபது தினங்களுக்குக் குறையாமல் வசித்துக்கொண்டிருந்து, ஆனல் அக் கிராமத்திற்கு அல்லது பட்டணத்திற்கு வெளியே தொழில், கைவினை அல்லது வேலையைச் செய்யும் அல்லது வியாபாரம் நடத்தும் அல்லது அரசாங்கத்தைச் சேர்ந்ததாகவோ அரசாங்க சம்பந்தம் இல்லாததாகவோ உள்ள யாதொரு உத்தியோகம் வகிக்கும், அல்லது

(b) அந்தக் கிராமத்தில் அல்லது பட்டணத்தில் மொத்தத்திலே அறுபது தினங்களுக்குக் குறையாமல் வசித்துக்கொண்டிருந்து யாதொரு பென்ஷனைவது முதலீடுகளிலிருந்து யாதொரு வரும்படியாவது பெற்றுவருகிற நபருக்கும் அப்படிப்பட்ட அரை வருஷம் ஒவ்வொன்றிலும் விதிக்கப்படவேண்டும்.

(2) நிர்ணயிக்கப்படக்கூடிய குறைந்த பட்ச வீதங்களுக்குக் குறையாமலும் அவ்வாறு நிர்ணயிக்கப்படக்கூடிய அதிகபட்சமான வீதங்களுக்கு மேற்படாமலும் பஞ்சாயத்தால் நிச்சயிக்கப்படக்கூடிய வீதங்களின்படி தொழில் வரியை விதிக்க வேண்டும்.

(3) வரிக்குட்பட்டு இருப்பதாக (1) உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட சகல ஆதாரங்களிலிருந்தும் தமக்குக் கிடைக்கிற மொத்த வரும்படிக்குப் பொருத்தமாயுள்ள வகுப்பின்படி யாதொரு நபர் வரிக்குள்ளாகத் தக்கவராவார்.

(4) யாதொரு கம்பெனியார் அல்லது நபர் சென்னை ராஜ்யத்திலுள்ள யாதொரு பஞ்சாயத்துக்காவது, முனிசிபல் கௌன்ஸிலுக்காவது, கன்டோன்மென்ட் அதிகார சபைக்காவது அதே அரை வருஷத்துக்காக இச் சட்டத்தின்படி விதிக்கப்படுகிற தொழில் வரிக்காகவாகிலும் (சென்னை 1919-ம் ஹூத்து IV-வது சட்டமாகிய) சென்னை நகர முனிசிபாலிட்டியைக் குறித்த 1919-ம் ஹூத்திய சட்டத்தின்படியோ (சென்னை 1920-ம் ஹூத்திய V-வது சட்டமாகிய) ஜில்லா முனிசிபாலிட்டிகளைக் குறித்த 1920-ம் ஹூத்திய சென்னபட்டணத்துச் சட்டத்தின்படியோ விதிக்கப்படுகிற

தொழில் வரி

கம்பெனி வரி அல்லது தொழில் வரிக்காகவாகிலும் (1924-ம் ஆத்து II-வது மத்திய சட்டமாகிய) 1924-ம் ஆத்து கன்டோன்மெண்டுகள் சட்டத்தின்படி விதிக்கப்பட்ட தொழில் வரியைப்போன்ற யாதொரு வரிக்காகவாகிலும் செலுத்தவேண்டிய தொகையைத் தாங்கள் அல்லது தாம் செலுத்தி யிருப்பதாக எண்பித்தால், அப்படிப்பட்ட கம்பெனியார் அல்லது நபர் வியாபார ஸ்தலத்திலாகிலும் தொழில், கைவினை அல்லது வேலையைச் செய்வதிலாகிலும் உத்தியோகத்திலாகிலும் இருப்பிடத்திலாகிலும் மாறுதல் ஏற்படும் காரணத்தினாலேயே மேற்படித் தொகைக்கும் இச் சட்டத்தின் படியாவது மேலே சொல்லப்பட்ட சட்டங்களில் எதன்படியாவது அந்த அரை வருஷத்துக்குத் தொழில் வரி அல்லது கம்பெனி வரியாகச் செலுத்த அவர்கள் அல்லது அவர் மற்றப்படி உட்பட்டு இருக்கிற தொகைக்குமுள்ள வித்தியாசத்தைக்காட்டிலும் அதிகமாக, வேறே யாதொரு பஞ்சாயத்துக்காகிலும் முனிஸிபல் கௌன்ஸிலுக்காகிலும் கன்டோன்மெண்ட் அதிகார சபைக்காகிலும் செலுத்த உட்பட்டவராகமாட்டார்கள் அல்லது உட்பட்டவராகமாட்டார்.

(5) யாதொரு நபர் ஒரு பிரதேச அதிகார சபையின் பிரதேச எல்லைகளுக்குள் வாசம் செய்துகொண்டிருந்து, வேறே யாதொரு பிரதேச அதிகார சபை அல்லது அதிகார சபைகளின் எல்லைகளுக்குள் தம்முடைய தொழில், கைவினை அல்லது வேலையைச் செய்தாலும், வியாபாரம் நடத்தினாலும், யாதொரு உத்தியோகத்தை வகித்தாலும் அவர், பிரதேச அதிகார சபைகளில் எதனாலாகிலும் விதித்து வாங்கப்படத் தக்க வரித்தொகைகளில் பெரிதாயுள்ள தொகைக்கு மேற்பட்ட தொகைக்காகத் தொழில் வரி செலுத்துவதற்கு, இப்பிரிவில் கண்டது எதனாலும் உட்பட்டு இருப்பதாகக் கருதப்படமாட்டார். அப்படிப்பட்ட ஒரு விஷயத்தில் அரசாங்கத்தார் மேற்படி வரியைத் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக் கூடியபடி மேற்படி பிரதேச அதிகார சபைகளுக்கு பங்கீடு செய்யவேண்டும்; இது விஷயமாய் அரசாங்கத்தாருடைய தீர்மானம் முடிவானதாகும்.

ஆனால் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகளுள் ஒன்று கண்டோன்மெண்ட் அதிகாரச் சபையாயிருந்தாலும், ஒரு பெரிய துறைமுகத்துக்குரிய துறைமுக அதிகார சபையாயிருந்தாலும், அரசாங்கத்தாருடைய தீர்மானம் மத்திய அரசாங்கத்தின் உடன்பாட்டுக்குட்பட்டதாகும்.

(6) யாதொரு கம்பெனியிடமிருந்தாவது கழகத்தாரிடமிருந்தாவது அவிபக்த ஹிந்து குடும்பத்தாரிடமாவது விதித்து வாங்கத்தக்க தொழில் வரியை அந்த கம்பெனி, கழகம் அல்லது குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்த எந்த நபரிடமிருந்தாகிலும் வாங்கலாம்.

(7) (a) யாதொரு கம்பெனியார் அல்லது நபர் யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தில் வியாபாரம் நடத்துகிற காரியத்துக்காகத் தங்களுடைய அல்லது தம்முடைய பிரதிநிதியாக இருக்கும்படி யாதொரு உத்தியோகஸ்தரையோ ஏஜென்டையோ வேலைக்கு வைத்துக்கொண்டால், ஷை உத்தியோகஸ்தருக்காவது ஏஜென்டுக்காவது அப்படிப்பட்ட கம்பெனியாரின் அல்லது நபரின் சார்பில் பிணைப்படுத்தும் ஒப்பந்தங்கள் செய்துகொள்ள அதிகாரமிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, மேற்படி கம்பெனியார் அல்லது நபர் அந்தப் பிரதேச விஸ்தீர்ணத்திலே வியாபாரம் நடத்துவதாகக் கருதப்படுவதுமல்லாமல், அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் அல்லது ஏஜென்ட் அந்தக் கம்பெனியாரின் அல்லது நபரின் வியாபாரம் விஷயமாய் தொழில் வரி செலுத்துவதற்கும் உள்ளவராவார்.

(b) ஒரு கம்பெனியாவது நபராவது வேறொரு கம்பெனியின் அல்லது நபரின் ஏஜென்டாய் இருந்தால், முந்திய கம்பெனியாராவது நபராவது பிரதானக் கம்பெனியின் அல்லது நபரின் வருமானத்தைப் போல் அதே வருமானத்தின்பேரில் தனியாகத் தொழில்வரிக்குள்ளாக மாட்டார்கள்.

குறிப்பு

பொது:—பி 121 படிக்கு ஒவ்வொரு அரை வருஷத்திலும் தொழில் வரி போட வேண்டும். பின்னிட்ட அரை வருஷங்களுக்கு நிர்வாக அதிகாரிக்கு தொழில் வரி போட அதிகாரம் கிடையாது.

தொழில் வரி.— இந்திய அரசியல் அமைப்பு 276-வது ஆர்டிகள் படிக்கு வருஷம் ஒன்றிற்கு தொழில் வரிக்காக என்று ரூபா 250-க்கு மேல் விதிக்கக்கூடாது. கம்பெனி என்பதை பி. 2 (6)-ல் அர்த்தமாக்கியிருக்கிறது. அதன்படிக்கு ஒவ்வொரு கம்பெனியும் தங்களுக்கு கிளை இருந்தாலும், இல்லாவிட்டாலும் தங்களுக்காக ஒரு ஏஜென்ட் இருக்கும் பட்சத்தில் தொழில் வரியைக் கட்டாயம் கொடுக்கவேண்டும். இதற்கு பழய தீர்மானங்கள் உபயோகமில்லே. ஒரு நபர் 60 நாளைக்கு வசித்து வந்த காலத்தில் அவருக்கு பென்ஷன் மூலமாகவோ, வட்டி மூலமாகவோ, வியாபார மூலமாகவோ, வேறே எந்த வருமான மூலமாகவோ வரும்படி வந்தால் அதன்படிக்கு தொழில்வரி கட்டவேண்டும் இதிலிருந்து யாதொரு நபரும் நீக்கப் படவில்லே. ஆகையினல் வரும்படி உள்ள எல்லோரும் இந்த வரியை கட்டவேண்டும்.

தொழில் வரி விதிக்கும் காலம்.— தொழில் வரியை இதில்கண்ட வருமானத்தை வெளி இடங்களில் சம்பாதித்து கிருமத்திற்கு அல்லது பட்டணத்திற்கு கொண்டுவந்தால் அதின் பேரிலும் போடலாம். திருஷ்டாந்தமாக ஒரு ஆபீஸ் ஒரு பஞ்சாயத்து எல்லேக்குள் இருக்க அதில் வேலேசெய்யும் நபர் மற்ருெருபஞ்சாயத்து எல்லேக்குள் குடியிருந்தால் அவருக்கு இரண்டு பஞ்சாயத்துகளும் வரிவிதிக்கலாம். ஆனல் அவர் இந்த இரண்டு பஞ்சாயத்துகளில் எது அதிகமான தொழில் வரியை வசூலிக்க கூடுமோ அதைக் காட்டிலும் அதிகமாக இரண்டு பஞ்சாயத்துகளும் கலந்து வசூலித்தாலும் கவர்ன் மெண்டார் விதிகள்படி ஏற்படுத்திய அதிகமான தொழில் வரியைக் காட்டிலும் யாதொரு தொழில் வரியும் கொடுக்கவேண்டியதில்லே. மற்ருெரு வரி கட்டுவதினல் தொழில் வரி கட்டக்கூடாது என்று யாதொரு சித்தாந்தமும் கிடையாது. [மாணிக்கவாசகம் - எ. - தேவகோட்டா யூனியன் போர்டு, 55 M. 853 = I. R. 1932 M. 597 : : பெரியண்ணன் - எ. - தேவகோட்டா தாலூக் போர்டு, 55 M 848 = I. R. 1932 M. 600 = A. I. R. 1932 M. 509]

வக்கீல்களும் வக்கீல் குமஸ்தாக்களும்—இந்த வரியைக் கட்டிக் கொடுக்க வேண்டும். [ராமசாமி - எ. - சேலம் முனிசிபல் கௌன்ஸில், 18 M. 183] வியாபாரிகளும் இந்த வரியைக் கட்டிக் கொள்ளவேண்டும். பென்ஷன் விஷயத்தில் ஒருவர் தன்னுடைய பென்ஷனைக் குறைத்துக் கொள்ளும் காரணமாய் மொத்தமாய் பெறும் (Commutation) என்னும் பணத்தை ஒரு வரும்படியாகவும் பென்ஷஞகவும் கருதப்படமாட்டாது. அதற்கு பென்ஷனுக்காக என்று தொழில் வரி விதிக்கக்கூடாது. [சேலம் முனிசிபாலிடி-எ.-குருராஜ, 68 M.L.J. 118] பூஜாரிகள் அர்ச்சகர்கள், குருக்கள் முதலியவர்களுக்கு வரும்படி அதிகமாக இருந்தால் தொழில் வரி கட்டவேண்டும். ஒரு விவசாயி நிலத்திலிருந்துவந்த வருமானத்தை பொதுவாக விற்பதற்கு தொழில் வரி கட்டவேண்டியதில்லே. ஆனல் அதையே கடையில் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்தால் தொழில் வரி கட்டவேண்டும். [மோதீசிங் எ. ஆனந்தபூர் நேடிபைட் ஏரியா, A.I.R. 1932 L. 137 = 68 I. C. 996] ஒரு வெளியிடங்களில் அநேக லாவாதேவிகள் இருந்து அதன் மூலமாக லாபம் கிடைக்குமாயினும் அந்த லாபமானது தான் இருக்கும் பஞ்சாயத்து பிரதேசத்திற்கு தன்பேருக்கு வராமலே மேற்படி வெளியிடங்களிலேயே இருக்குமாயின் அந்த இடத்தில் அந்த நபருக்குக் கிடைத்த தொகைக்கு மாத்திரம் தொழில் வரிபோட வேண்டுமே ஒழிய அந்த நபருக்கு வெளியிடங்களில் கிடைத்த மொத்த லாபத்திற்கென்று தொழில் வரிபோடக் கூடாது. [சொக்கலிங்கம் - எ. - தேவகோட்டை தாலூகா போர்ட், An. L. R. 1933 M. 1166 ; : பெரிய ராமன் - எ. - ராமநாதன் 55 M. 648 = I. R. 1932 M. 600 = 63 M. L. J. 148 = A. I. R. 1932 M. 509 :· ராமன்-எ -சிவகங்கா தாலூகா போஸ்டு I. R. 1932 M. 751 = A.I R. 1932 M. 226] ஒருவனுக்கு தானங்கள் மூலமாக; உயில்கள் மூலமாக மொத்தமாக பணம் கிடைக்குமாயின் அதற்கு தொழில்வரி போடக்கூடாது. [சேலம் முனிசிபாலிடி-எ.-குருராஜா 68 M.L.J. 118 = A.I.R. 1935 M. 249] மொத்த வரும்படிக்கும் தொழில் வரி போடவேண்டுமே ஒழிய ஏதாவதொரு பாகத்திற்கு தொழில் வரி போடுவதல்ல. அதில் சிலவுகளை கழிக்கவேண்டும் [பாலசூரிய எ. சிகாகோல் தாலூகா போர்டு A. I. R. 1931 M. 822] வாதியானவர் கணக்கு புஸ்தகங்களைக் கொண்டு வந்து அதன் படிக்கு வரி போடக் கேட்கும்போது கணக்குப் புத்தகங்களைப் பார்க்காமலேயே வரி போட்டால் அந்த வரி செல்லத்

தொழில் வரி விதிப்பதைக் குறித்த விதிகள்

தக்கினதல்ல. ஒருவனுக்கு அநேக இடங்களில் வியாபாரம் இருக்குமாயின் ஒவ்வொரு இடத்திலும் தொழில் வரி கட்டித்தான் ஆகவேண்டும் [வெங்கடா எ. பர்லாகிமிடி முனிஸிபாலிடி, 17 M. 100] முனிசிபாலிடி யானது அப்போதைக்கப்போது தொழில் வரியை வசூலிக்க வேண்டும். தாமதிப்பதனுல் வரி கொடுக்க வேண்டியவர்களுக்கு கெடுதல் நேரிடுகிறது. முனிசிபாலிடிக்கும் வருமானம் குறைகிறது [கூடலூர் முனிசிபாலிடி-எ -கிருஷ்ண 50 M. 987 = A. I. R. 1927 M. 968].

தொழில் வரி வரும்படிக்கு தக்கவாறு இருக்கவேண்டும்.— அடியிற்கண்ட விதிகள் படிக்கு ஒரு நபர் ஒரு வருடத்திற்கு ரூபா. 15.000 வருமானம் உள்ளவராகில் அவர் 6 மாதத்திற்கு தொழில் வரிக்காக ரூபா 125 கட்டவேண்டும். அதற்குமேல் அவர் ஒரு வருடம் ஒன்றுக்கு ரூபா. 20,000 அல்லது ரூபா. 3 லட்சம் அல்லது இருவது லட்சம் சம்பாதித்தாலும் அவர் தொழில் வரிக்காக 6 மாதத்திற்கு ரூபா. 125க்கு மேல் கட்டவேண்டியதில்லே. பக்கம் 305ல் 1-ம் விதியை பார்க்கவும்.]

அதே மாதிரியாக கம்பெனிகளுக்காக கொடுக்க வேண்டிய தொழில் வரியில் குறைந்த மொத்த தொகையான ஒன்னரை லட்சத்திற்கு 4 சதவீதமும், 3 லட்சத்திற்கு 3 சதவீதமும், 6 லட்சத்திற்கு 2 சதவீதமும், 12 வட்சத்திற்கு 1 சதவீதமும் அதற்குமேலும் 1 சதவீதமும் தொழில் வரி கட்டவேண்டும் என்று இருக்கிறது.

அதிக வருமானமுள்ளவர்கள் குறைந்த தொழில் வரி கட்டுவதாகவும், அது ரூபா. 250 க்குமேல் கட்டாமல் இருப்பதாகவும் இருக்கிறது. இது நியாயமன்று. ஜனநாயகமும் அன்று. இதை மாத்தி அதிக வருமானம் உள்ள நபர்களேயும், கம்பெனிகளேயும் அவர்கள் வருமானத்திற்கு தக்கபடி தொழில் வரியை கட்டும்படியாக செய்ய வேண்டியிருக்கிறது. அதற்காக மேற்படி இந்திய அரசியல் சட்டம், ஆர்டிகல் 276(2) யை நம்முடைய இந்தியா அரசாங்கம் மாத்துமென்று எதிர்பார்க்கிறோம்.

தொழில் வரி விதிப்பு விதிகளின் பட்டி

விதி		பக்கம்
1.	தொழில் வரிக்காக வகுப்புகளும், உச்ச குறைந்த அரை வருஷ வரி (க. 19 விதி 1) ...	305
2.	ஆபீஸ் அல்லது வேலே நடத்தி வந்தால் தொழில்வரி போடலாம்.	,,
3.	வரும்படியைக் கண்டு பிடிக்கும் வழிகள் ...	306
4.	கம்பெனிகளுக்கு தொழில் வரி வருமாணத்தை கணக்கிடுவது	307
5.	தொழில் வரி விதிப்பதற்கு முந்தி நோடீஸ் கொடுப்பது அவசியம். ஷெட்யூல் விதி 5(1) யைப் பார்க்கவும் ——— யோடு முடிவாகும்.	,,
	அரை வருஷத்தில் தொழில் வரி விதிப்பதற்கான வருமானம் பற்றிய ரிட்டன்.	309
6.	தொழில் வரி விதித்த பிறகு நோடிஸ் சேர்ப்பிக்கவேண்டும் ...	310
7.	கொடுத்த ஸ்டேட்மெண்டுகள் மர்மமா இருக்கவேண்டும் ...	,,
8.	சொந்தகாரருக்கு அல்லது அனுபோகதாரருக்கு தொழில் வரி கொடுக்க கூடியவர்களே தெரிவிக்க நோடிஸ் கொடுப்பது.	,,

தொழில் வரி அப்பீல் விதிகளே பி. 123ன் கீழ் பார்க்கவும்.

தொழில் வரி வசூலிக்கும் விதிகளே பி. 123ன் கீழ் பார்க்கவும்.

தொழில் வரி விதிப்பதைக் குறித்த விதிகள் - அட்டவணை (ப. 304)
பி. 121 (1) (2) கீழ் செய்யப்பட்டது

தொழில் வரி—வரி விதிப்பும் உச்ச வீதங்களும் குறைந்த பட்ச வீதங்களும் (க. 19)

தொழில் வரிக்காக வகுப்புகளும், உச்ச, குறைந்த அரை வருஷ வரி (க. 19-விதி-1)

1. (1) தொழில் வரி விதிப்பின் காரியங்களுக்காகக் கம்பெனிகளையும், நபர்களையும் பிரிக்கவேண்டிய வகுப்புகளும், ஒவ்வொரு வகுப்பின் பேரிலும் விதிக்கத்தக்க உச்ச அரை வருஷ வரியும் குறைந்த பட்ச அரை வருஷ வரியும் அடியிற் கண்டவையாகும் :—

வகுப்பு	அரை வருஷ வருமானம்		உச்ச அரை வருஷவரி		குறைந்தபட்ச அரை வருஷவரி	
	ரூபாய்	ரூபாய்	ரூ.	அ.	ரூ.	அ.
I	15,000க்கு மேல்		125	0	100	0
II	12,000க்கு மேல், ஆனல்	15,000 மேற்படாமல்	100	0	75	0
III	9,000க்கு ,, ,,	12,000க்கு ,,	75	0	50	0
IV	6,000க்கு ,, ,,	9,000க்கு ,,	50	0	25	0
V	4,800க்கு ,, ,,	6,000க்கு ,,	25	0	12	0
VI	3,000க்கு ,, ,,	4,000க்கு ,,	12	0	6	0
VII	1,800க்கு ,, ,,	3,000க்கு ,,	6	0	4	0
VIII	1,200க்கு ,, ,,	1,800க்கு ,,	4	0	2	0
IX	600க்கு ,, ,,	1,200க்கு ,,	2	0	1	0
X	300க்கு ,, ,,	600க்கு ,,	1	0	0	8

(2) பஞ்சாயத்து (1) உபவிதியில் குறிப்பிட்டுள்ள உச்ச வரிக்கும் குறைந்த பட்ச வரிக்கும் உட்பட்டு ஒவ்வொரு வகுப்புக்கும் விதிக்கத்தக்க வரியை நிச்சயிக்கவேண்டும்.

ஆனல், ஒரு வகுப்புக்குரிய வரிக்கும் அந்த வகுப்பின் குறைந்த பட்ச வருமானத்துக்குமுள்ள சங்கியா பரிமாணமானது அதைவிடக் குறைந்த ஒரு வகுப்புக்குரிய வரிக்கும் அத்தகைய குறைந்த வகுப்பின் குறைந்த பட்ச வருமானத்துக்கும் உள்ள சங்கியா பரிமாணத்தைக் காட்டிலும் எந்த விஷயத்திலும் குறைவாயிருக்கக் கூடாது.

(3) பஞ்சாயத்து (1) உபவிதியில் கண்ட வகுப்புகளில் எந்த ஒரு வகுப்பையேனும் பல வகுப்புக்களையேனும் தொழில் வரிப் பொறுப்பினின்றும் நிவாரணை செய்யலாம்; ஆனல் ஒரு வகுப்பைவிடக் குறைந்த ஒரு வகுப்பு தொழில் வரிக்கு உள்ளாகி இருக்கையில் முதலில் சொன்ன வகுப்பு மேற்படி பொறுப்பினின்றும் நிவாரணை செய்யப்படக்கூடாது.

குறிப்பு

பொது : - கிராமங்களிலும் கட்டாயமாக தொழில் வரியை போட்டு ஆகவேண்டும். பி. 119யை பார்க்கவும். I முதல் X வகுப்புகளில் கடைசி 2 வகுப்புகளை தள்ளிவிடலாம். கிராம பட்டண பஞ்சாயத்துகள் அம்மாதிரி தள்ளிவிடுவது நலமாக இருக்கும்.

ஆபீஸ் அல்லது வேலை நடத்தி வந்தால் தொழில் வரி போடலாம்.

2. ஒரு கம்பனி அல்லது நபர் ஒரு கிராமத்துக்குள் ஆபீஸ் அல்லது வேலை நடத்துமிடம் ஒன்றை வைத்திருந்தால் அந்த கம்பனி அல்லது நபர் அந்தக் கிராமத்துக்குள் வியாபாரம் செய்திருப்பதாகவோ தொழில், கைவினை அல்லது வேலை செய்திருப்பதாகவோ உத்தியோகம் வகித்திருப்பதாகவோ கருதப்படும் அல்லது கருதப்படுவார்.

தொழில் வரி விதிப்பதை குறித்த விதிகள் - அட்டவணை (ப. 304)

வரும்படியைக் கண்டு பிடிக்கும் வழிகள்.

3. (1) ஒரு கம்பனி அல்லது நபர் ஓர் அரை வருஷத்தில் தனிப் பஞ்சாயத்தின் பிரதேசம் ஒன்றிலேயே பணம் கடன் கொடுப்பது தவிர வேறு யாதொரு வியாபாரம் செய்தால், அந்த அரை வருஷத்தில் இச் சட்டத்தின்படி தொழில் வரி விதிக்கும் காரியத்துக்காக, அந்த வியாபாரம் செய்ததிலிருந்து மேற்படி கம்பனி அல்லது நபருக்குக் கிடைத்த வருமானம்.—

(a) ஷை அரை வருஷம் அடங்கிய வருஷத்துக்காக அந்தக் கம்பனி அல்லது நபருக்கு 1922-ம் வருஷத்திய இந்திய வருமான வரிச்சட்டத்தின்படி வருமான வரி விதிக்கப் பட்டால், வருமான வரி விதிக்கும் காரியத்துக்காக 1922-ம் வருஷத்திய இந்திய வருமான வரிச் சட்டத்தின் 10-வது பிரிவின் பிரகாரம் அந்த வியாபாரத்தின் லாபங்களும் ஆதாயங்களும் எவ்வளவென்று கணக்கிடப்படுகின்றனவோ அந்தத் தொகையில் ஒரு பாதியென்று கருதப்படும்.

(b) மேற்சொன்ன லாபங்களும் ஆதாயங்களும் இவ்வளவென நிச்சயித்து அறிய முடியாவிட்டால், அல்லது மேற்படி கம்பனி அல்லது நபருக்கு வருமான வரி விதிக்கப்படாவிட்டால், பிரஸ்தாப அரை வருஷத்தில் அப் பஞ்சாயத்துப் பிரதேசத்தில் செய்த அந்த வியாபாரத்தின் மொத்தத் தொகையில் 4-வது விதியை அனுசரித்துக் கணக்கிடப்பட்ட சத வீதம் அல்லது சத வீதங்கள், அல்லது இதையும் நிச்சயித்தறிய முடியாவிட்டால், முந்திய வருஷத் திலே நிகரான அரை வருஷத்தில் அப்பஞ்சாயத்துப் பிரதேசத்தில் செய்த வியாபாரத்தின் மொத்தத் தொகையில் மேற்சொன்னபடி கணக்கிடப்பட்ட சத வீதம் அல்லது சத வீதங்கள் என்று கருதப்படும்.

(2) ஒரு கம்பனி அல்லது நபர் ஒரு பஞ்சாயத்தின் பிரதேசத்தில் கொஞ்சமும் அப்பிரதேசத்துக்கு வெளியில் கொஞ்சமுமாக பணம் கடன் கொடுப்பது அல்லாத வேறு ஒரு வியாபாரத்தைச் செய்தால், மேற்படி கம்பனி அல்லது நபர் அப் பஞ்சாயத்துப் பிரதேசத்தில் செய்த அத்தகைய வியாபாரத்திலிருந்து கிடைத்த வருமானம், இச் சட்டத்தின் படி தொழில் வரி விதிக்கும் காரியத்துக்காக, சந்தர்ப்பத்துக்கேற்றபடி பிரஸ்தாப அரை வருஷத்திலே அல்லது முந்திய வருஷத்தில் நிகரான அரை வருஷத்திலே அப் பிரதேசத்தில் செய்த அவ் வியாபாரத்தின் மொத்தத் தொகையில், 4-வது விதியை அனுசரித்துக் கணக்கிடப்பட்ட சத வீதம் என்று கருதப்படும்.

(3) (1) உபவிதியைச் சேர்ந்த (b) பகுதி, (2) உபவிதி ஆகிய இவைகளின் காரியங்களுக்காக, ஒரு கிராமத்தில் நடந்த வியாபாரத்தின் மொத்தத் தொகை என்பது அந்தக் கிராமத்திலே தயாரிக்கப்பட்ட, உற்பத்தி செய்யப்பட்ட, கிரயத்துக்கு வாங்கப்பட்ட அல்லது விற்பனை செய்யப்பட்ட சரக்குகளின் அல்லது பணம் கடன் கொடுப்பது நீங்கலாக வேறு ஒரு வியாபாரத்தின் மொத்தப் பண மதிப்பு என்று அர்த்தமாகும்.

விவரணம்:—இந்த உபவிதியின் பிரகாரம் வியாபாரத்தின் மொத்தத் தொகையை நிச்சயிக்கையில்,

(a) ஒரு கம்பனி அல்லது நபர் கிரயத்துக்கு வாங்கியது காரணமாக எந்தச் சரக்குகளேனும் ஒப்படை செய்யப்படுவதும், அதே கம்பனி அல்லது நபர் அவற்றை விற்பனை செய்தது காரணமாக ஒப்படை செய்யப்படுவதும் சென்னை ராஜ்யத்திலேயே நடந்தால், பின்னால் சொன்ன விவகாரத்தையே கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

(b) ஒரு கம்பனி அல்லது நபர் கிரயத்துக்கு வாங்கியது காரணமாக எந்தச் சரக்குகளேனும் ஒப்படை செய்யப்படுவதும் மேற்சொன்ன ராஜ்யத்திற்கு வெளியே எந்த இடத்திலாகிலும் நடந்து அதே கம்பனி அல்லது நபர் அவற்றை விற்பனை செய்தது காரணமாக ஒப்படை செய்யப்படுவது மேற்சொன்ன ராஜ்யத்தில் எந்த இடத்திலாகிலும் நடந்தால், பின்னால் சொன்ன விவகாரத்தைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டும்.

(c) ஒரு கம்பனி அல்லது நபர் கிரயத்துக்கு வாங்கியது காரணமாக எந்தச் சரக்குகளேனும் ஒப்படை செய்யப்படுவது மேற்சொன்ன ராஜ்யத்தில் எந்த இடத்திலாகிலும் நடந்திருந்து, அதே கம்பனி அல்லது நபர் அவற்றை விற்பனை செய்தது காரணமாக ஒப்படை செய்யப்படுவது மேற்சொன்ன ராஜ்யத்துக்கு வெளியில் எந்த இடத்திலாகிலும் நடந்தால் முன்னால் சொன்ன விவகாரத்தைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பு

இன்கம்டாக்ஸ் வரியின் துகையை அனுசரித்து தொழில் வரியைபோட வேண்டியது கட்டாயமாகும். இன்கம்டாக்ஸ் கட்டாதவர்கள் மீதிலும் தொழில் வரிபோடலாம்.

கம்பனிகளுக்கு தொழில் வரி வருமானத்தை கணக்கிடுவது

4. தொழில் வரி விதிக்கும் பொருட்டு வருமானத்தைக் கணக்கிடும் காரியத்துக்காக, 3-வது விதியைச் சேர்ந்த (1) உபவிதியின் (b) பகுதியின் படியும் (2) உபவிதியின் படியும் வியாபாரத்தின் மொத்தத் தொகையின் சத வீதமானது அடியிற் கண்ட அட்டவணையின் (1) (2) பத்திகளில் குறிப்பிட்டுள்ள படி இருக்கவேண்டும்.

ஆனால், எந்த விஷயத்திலாவது அப்படி கணக்கிடப்பட்ட வருமானம் மேற்படி அட்டவணையைச் சேர்ந்த (3) பத்தியில் குறிப்பிட்டுள்ள குறைந்த பட்சத் தொகைக்கும் குறைவாயிருந்தால், மேற்படி சதவீதத்தை அந்தக் குறைந்த பட்சத் தொகையைக் கொடுக்கக் கூடிய வீதத்துக்கு உயர்த்த வேண்டும்:—

அட்டவணை (1)	சதவீதம் (2)	குறைந்த பட்சத் தொகை (3)
வியாபாரத்தின் மொத்தத் தொகை 12 லட்ச ரூபாய்க்கு மேற்பட்டால் ...	1	18,000
6 லட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் 12 லட்ச ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால்	1·5	12,000
3 லட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் 6 லட்ச ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால்	2	9,000
$1\frac{1}{2}$ லட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் 3 லட்ச ரூபாய்க்கு மேற்படாமலிருந்தால்	3	6,000
$1\frac{1}{2}$ லட்ச ரூபாய்க்கு மேற்படாம லிருந்தால் ...	4	—

குறிப்பு

கவனிக்க வேண்டிய விஷயம்.—வீட்டுவரி சி. வி. நா. 9 ரூல் (விதி) 5 (2) படிக்கு வீட்டு மதிப்பு அல்லது வாடகை அதிகமாக ஆக வீட்டுவரி உயர்ந்து கொண்டு போக வேண்டும். கம்பனிக்கு அம்மாதிரி அன்று. கம்பனி துகை ஏற ஏற தொழில் வரி குறைந்து வருகிறது. ஏன் ? இதை தானே " ஏழை மக்கள் மீது தற்கால அரசாங்கம் வரிகள் அதிகமாக விதிக்கிறது. பணமுள்ளவர்களை விட்டுவிடுகிறது " என்பது.

தொழில் வரி விதிப்பதற்கு முந்தி நோடீஸ் கொடுப்பது அவசியம்.

5. (1) எந்த அரை வருஷத்துக்காகவாவது ஒரு கம்பனி அல்லது நபரிடமிருந்து தொழில் வரி சேரவேண்டிய தாயிருக்கிற தென்றுவது இனிமேல் சேரவேண்டியதாயிருக்கு மென்றுவது நிர்வாக அதிகாரி அபிப்பிராயப்பட்டால், அவர் அந்த அரை வருஷத்திலாகிலும் அதற்கடுத்த அரை வருஷத்திலாகிலும் அந்தக் கம்பனி அல்லது நபரிடம் நோட்டிஸ் ஒன்றைச் சேர்ப்பித்து, அதன் மூலமாக, அந்த நோட்டிஸில் குறிப்பிடக்கூடியதும் முப்பது தினங்களுக்குக் குறையாததுமான கால அளவுக்குள் இந்த

தொழில் வரியை விதிப்பதை குறித்த விதிகள் - அட்டவணை (ப. 304)

விதிகளில் கண்ட ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள நமூனுப்படிக்கான ரிட்டர்ன் ஒன்றை அந்தக் கம்பனி அல்லது நபர் அனுப்ப வேண்டுமென்று உத்தரவிடவேண்டும்; பிரஸ்தாப அரை வருஷத்துக்கு, எந்த வருமானத்தை ஆதாரமாகக்கொண்டு தொழில் வரி விதிக்கப் பெறுவதற்கு அக் கம்பனி உள்ளாகும் என்று அது சொல்லுகிறதோ, அல்லது எந்த வருமானத்தை ஆதாரமாகக் கொண்டு தாம் தொழில் வரி விதிக்கப் பெறுவதற்கு உள்ளாவார் என்று அந்த நபர் சொல்லுகிருரோ அந்த வருமானத்தை ஷெ ரிட்டர்னில் கண்டிருக்க வேண்டும். அதன் பேரில், தொழில் வரி கேட்கப்படும் அரை வருஷத்திலாவது முந்திய வருஷத்தின் நிகரான அரை வருஷத்திலாவது அக் கம்பனிக்கு அல்லது நபருக்குக் கிடைத்த வருமானத்தைக் காட்டும் ரிட்டர்ன் ஒன்றை அக் கம்பனி அல்லது நபர் அனுப்பி, அவ்வாறு அனுப்பப்பட்ட ரிட்டர்னுக்கு ஆதாரமாக அக் கம்பனி அல்லது நபர் நம்பியிருக்கக்கூடிய எந்த சாட்சியத்தையேனும் ஹாஜர்ப்படுத்தலாம்.

(2) (1) உபவிதியில் சொல்லியிருக்கிற பிரகாரம் ரிட்டர்ன் ஒன்று அனுப்பப்பட்டு, அது சரியானதென்றும் பூர்த்தியானதென்றும் நிர்வாக அதிகாரிக்குச் சந்தேகமறத் தெரியவந்தால், அவர் அந்த ரிட்டர்னை அடிப்படையாகக்கொண்டு மேற்படி கம்பனி அல்லது நபருக்குத் தொழில் வரி விதிக்கவேண்டும்.

விவரணம் :—3-வது விதியைச் சேர்ந்த (1) உபவிதியின் (b) பகுதியின் கீழ் அல்லது (2) உபவிதியின் கீழ் வராத விஷயங்களில், பிரஸ்தாப அரை வருஷமடங்கிய வருஷத்துக்காக 1922-ம் வருஷத்திய இந்திய வருமான வரிச் சட்டத்தின் 29-வது பிரிவின் பிரகாரம் மேற்படி கம்பனி அல்லது நபரிடம் சேர்ப்பிக்கப்பட்ட வருமான வரி டிமாண்டு நோட்டிஸை மேற்படி கம்பனி அல்லது நபர் ஹாஜர்ப்படுத்தினல், நிர்வாக அதிகாரியானவர் இச் சட்டத்தின்படி தொழில் வரி விதிக்கத் தக்க ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் வருமானமென்று அந்த டிமாண்டு நோட்டிஸில் கண்டுள்ள வருமானத்தில் பாதியை தொழில் வரி விதிக்கும் காரியங்களுக்காக மேற் சொன்ன ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் வருமான மென்று கொள்ளக் கடமைப்பட்டவராவார்.

(3) (1) உபவிதியில் சொல்லியிருக்கிற பிரகாரம் ரிட்டன் எதுவும் அனுப்பப்படாவிட்டாலும் அப்படி அனுப்பப்பட்ட ரிட்டர்ன் எதுவாகிலும் தப்பானதென்ருே பூர்த்தியற்ற தென்ருே நிர்வாக அதிகாரிக்குச் சந்தேகமறத் தெரியவந்தாலும், மேற்படி நிர்வாக அதிகாரியானவர் தாம் மதிப்பிட்டபடி அந்தக் கம்பனி அல்லது நபரின் அரை வருஷ வருமானத்திற்குச் சரியான வீதப்படியுள்ள வகுப்பை அந்தக் கம்பனி அல்லது நபருக்கு வகுத்துக் கொடுக்கவேண்டும்.

(4) நிர்வாக அதிகாரியானவர், (3) உபவிதியின் பிரகாரம் ஒரு கம்பனி அல்லது நபரை வகைப்படுத்தும்போது, நடத்தப்படும் வியாபாரத்தின் தன்மை, பிரசித்தமான மதிப்பு, குடி யிருப்பு வளவு, வியாபாரவளவு ஆகிய இவற்றின் அளவு, வாடகை, வியாபாரத்திலீடுபட்ட பொருள்களின் அளவு எண்ணிக்கை, வேலைக் கமர்த்திக்கொள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை, செலுத்தப்பட்ட வருமான வரி ஆகிய இவைகளை யனுசரித்துப் பொதுவாக ஆலோசனை செய்தபிறகு அவ்வாறு வகைப்படுத்தலாம்.

(5) எந்த கம்பனி அல்லது நபருடைய கணக்குகளையும் கொண்டுவந்து காட்டும்படி கேட்க நிர்வாக அதிகாரி பாத்தியதையுள்ளவராக மாட்டார்.

குறிப்பு

இன்கம்டாக்ஸ் கணக்கையும், இதரமான கணக்கையும் பாராமல் தொழில் வரிப் போட்டால் அது செல்லாது. [ரஜோலி பஞ்சாயத்து போர்டு - எ. - அமிசந்த், A. I. R. 1941 Mad. 686 : : பாம்பே கம்பெனி-எ-திண்டுகல் முனிசிபாலிடி, A. I. R. 1929 Mad. 146.] பிரிவு 43ன் கீழ் "நிர்வாக அதிகாரியின் அதிகாரங்களை" பார்க்கவும்.

விதி 5 (1)-ன் ஷெட்யூல்

......யோடு முடிவாகும் அரை வருஷத்தில் தொழில் வரி விதிப்பதற்கான வருமானம் பற்றிய ரிட்டன்.

(1) கம்பெனி அல்லது நபரின் பெயர்.

(2) வியாபாரம், தொழில், கைவினை அல்லது உத்தியோகத்தின் விவரம்.

(3) வரி விதிக்கப் பெறுபவர், யாதொரு தொழில் கைவினை அல்லது உத்தியோகம் செய்ததிலிருந்தாவது அரசாங்க உத்தியோகம் அல்லது தனிப்பட்ட உத்தியோகம் வகித்ததிலிருந்தாவது அல்லது பணம் கடன் கொடுக்கும் வியாபாரம் நடத்தியதிலிருந்தாவது பிரஸ்தாப அரை வருஷத்தில் அல்லது முந்திய வருஷத்தின் நிகரான அரை வருஷத்தில்—

(a) மேற்படி அரை வருஷத்திலே மொத்தத்தில் அறுபது தினங்களுக்குக் குறையாமல் மேற்படி கிராமத்துக்குள்ளும் அல்லது பட்டணத்துக்குள்ளும்

(b) வரி விதிக்கப் பெறுபவர் மேற்படி அரை வருஷத்திலே மொத்தத்தில் அறுபது தினங்களுக்குக் குறையாமல் மேற்படி கிராமத்துக்குள் அல்லது பட்டணத்தில் வசித்திருந்தால், அந்தக் கிராமத்துக்கு அல்லது பட்டணத்துக்கு வெளியிலும் அடைந்த வருமானம்

(4) பணம் கடன் கொடுக்கும் வியாபாரத்தைத் தவிர மற்ற வியாபாரம் மேற்படி கிராமத்துக்குள்ளேயே அல்லது பட்டணத்துக்குள்ளேயே செய்யப்பட்டால்—

(a) மேற்படி அரை வருஷம் அடங்கிய வருஷத்துக்காக மேற்படி கம்பெனி அல்லது நபருக்கு வருமான வரி விதிக்கப்பட்டிருந்தால்—மேற்படி வருமான வரி விதிக்கும் காரியத்துக்காக 1922-ம் வருஷத்திய இந்திய வருமான வரிச் சட்டத்தின் 10-வது, பிரிவின்படிக் கணக்கிடப்பட்ட மேற்படி கம்பனி அல்லது நபரின் லாபங்களின் தொகையும் ஆதாயங்களின் தொகையும்;

(b) மேற்சொன்ன லாபங்களையும், ஆதாயங்களையும் நிச்சயத்தறிய முடியா விட்டால் அல்லது மேற்படி அரை வருஷ மடங்கிய வருஷத்துக்காக வருமான வரி விதிக்கப்பட்டிரா விட்டால்—

(i) மேற்படி அரை வருஷத்தில் அந்தக் கிராமத்துக்குள் நடந்த வியாபாரத்தின் மொத்த தொகை; அல்லது

(ii) அந்த மொத்த வியாபாரத் தொகையை நிச்சயித்தறிய முடியா விட்டால் முந்திய வருஷத்தின் நிகரான அரை வருஷத்தில் நடந்த வியாபாரத்தின் மொத்தத் தொகை.

(5) பணம் கடன் கொடுக்கும் வியாபாரத்தைத் தவிர மற்ற வியாபாரத்தை ஷை கிராமத்தில் அல்லது பட்டணத்தில் கொஞ்சமும் அந்தக் கிராமத்துக்கு அல்லது பட்டணத்தில் வெளியில் கொஞ்சமுமாக ஷை கம்பெனி அல்லது நபர் நடத்தினல்—

(a) பிரஸ்தாப அரை வருஷத்தில் மேற்படி கிராமத்தில் நடந்த வியாபாரத்தின் மொத்தத் தொகை; அல்லது

(b) அந்த மொத்த வியாபாரத் தொகையை நிச்சயித்தறிய முடியா விட்டால், முந்திய வருஷத்தில் நிகரான அரை வருஷத்திலே மேற்படி கிராமத்தில் அல்லது பட்டணத்தில் நடந்த வியாபாரத்தின் மொத்தத் தொகை.

(6) வரி விதிக்கப் பெறுபவருக்கு—

(a) மேற்படி கிராமத்துக்கு அல்லது பட்டணத்துக்கு வெளியில் நடந்த வியாபாரத்திலிருந்தும்,

(b) வரி விதிக்கப் பெறுபவர் ஷெ அரை வருஷத்திலே மொத்தத்தில் அறுபது தினங்களுக்குக் குறையாமல் மேற்படி கிராமத்திற்குள் அல்லது பட்டணத்திற்குள் வசித்திருந்தால், அந்த அரை வருஷத்தில் யாதொரு பென்ஷனிலிருந்தும் முதலீடுகளிலிருந்தும் கிடைத்த வருமானம்.

(7) எந்த மொத்த வருமானத்தை ஆதாரமாகக் கொண்டு வந்தக் கம்பனிதான் வரி விதிக்கப் பெறுவதற்கு உள்ளாகும் என்று சொல்லுகிறதோ அல்லது அந்த நபர் வரி விதிக்கப் பெறுவதற்குள்ளாவார் என்று சொல்லுகிருரோ அந்த மொத்த வருமானம்.

தொழில் வரி விதித்த பிறகு நோடீஸ் சேர்ப்பிக்கவேண்டும்

6. ஒரு கம்பெனி அல்லது நபரிடமிருந்து சேரவேண்டிய தொழில் வரி செலுத்தப்படா விட்டால் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர், அந்தக் கம்பனி அல்லது நபரிடம் நோட்டிஸ் ஒன்றைச் சேர்ப்பித்து, அப்படி சேர்ப்பித்த தேதியிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் அதைச் செலுத்தும்படிக் கேட்க வேண்டும்.

கொடுத்த ஸ்டேட்மெண்டுகள் மர்மமாக இருக்க வேண்டும்.

7. தொழில் வரி விதிப்பு சம்பந்தமாக ஒரு கம்பனி அல்லது நபரால் அனுப்பப்பட்ட சகல ஸ்டேட்மெண்டுகளும், ரிட்டர்ன்களும் அல்லது ஹாஜர் படுத்தப்பட்ட சகல கணக்குகளும் அல்லது தஸ்தாவேஜுகளும் ரகசியமானவை யென்று கருதப்பட வேண்டும். அவற்றின் நகல்களைப் பொது ஜனங்களுக்குக் கொடுக்கக்கூடாது.

சொந்தகாரருக்கு அல்லது அனுபோகதாரருக்கு தொழில் வரி கொடுக்க கூடிய வர்களை தெரி விக்க நோடீஸ் கொடுப்பது.

8. பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி நோட்டிஸ் பிறப்பித்து அதன் மூலமாக, ஒரு கட்டடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரருக்கும் அல்லது அனுபோகதாரருக்கும், ஒரு ஹோட்டேல், பொதுஜன விடுதி, அல்லது தங்கும் விடுதி, கிளப், அல்லது குடியிருப்பு அறைகள், இவற்றின் காரியதரிசி அல்லது மானேஜர் ஒவ்வொருவருக்கும், எழுத்து மூலமான ஒரு பட்டியலைக் குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் அனுப்பும்படி உத்தர விடலாம்; அந்தப் பட்டியலில் மேற்படி கட்டடம், நிலம். ஹோட்டேல், பொஜன விடுதி, அல்லது தங்கும் விடுதி, கிளப், அல்லது குடியிருப்பு, அறைகள், இவற்றை அனுபோகத்தில் வைத்துக் கொண்டிருப்பவர்கள் எல்லாருடைய பெயர்களும் அடங்கி யிருக்க வேண்டுமெனவும், அப்படிப்பட்ட ஒவ்வொருவருடைய தொழில் கைவினை அல்லது உத்தியோகமும் அவர் வாடகை எதுவேனும் செலுத்தினல் அதுவும் அத்தகைய அனுபோகக் கால அளவும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டுமெனவும் மேற்படி நோட்டிஸ் மூலமாக உத்தர விடலாம்.

வண்டி வரி

வாகன வரி. அல்லது வண்டி வரி

122. வாகன வரியானது, விலக்குகளுக்கும் வரையறைகளுக்கும் சம்பந்தப்பட்ட விதிகள் உட்பட நிர்ணயிக்கப்பட கூடிய விதிகளுக்குட்பட்டு; பிரஸ்தாப கிராமத்திலே அல்லது பட்டணத்திலே வைத்திருக்கப்படுகிற அல்லது உபயோகிக்கப்படுகிற சகல வாகனங் களின் வண்டிகளின் பேரிலும், நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச வீதங்களுக்குக் குறை

யாமலும் உச்ச வீதங்களுக்கு மேற்படாமலும் பிரஸ்தாப பஞ்சாயத்தினுல் நிச்சயிக்கப் படக்கூடிய வீதங்களின் பிரகாரம் ஒவ்வொரு அரை வருஷத்திலும் விதித்து வாங்கப்படும்.

விளக்கம்.—இந்தப் பிரிவில் "வாகனம்" என்பது சாலைகளில் உபயோகிப்ப தற்குத் தகுதிவாய்ந்த யாதொரு போக்கு வரத்துச் சாதனம் என்று அர்த்தமாகும்: மேலும், அதில் எந்த வகையையாகிலும் சேர்ந்த டிராம்கார், வண்டி, பார வண்டி, வாகன், பைசைக்கில், டிரைசைக்கில் ஆகிய இவையடங்கும்; ஆனுல் அதில், மோட் டார் வண்டிகளைக் குறித்த (1939-ம்வருஷத்து IV-வது மத்திய சட்டமாகிய) 1939-ம் வருஷத்திய சட்டத்தில் அர்த்தம் சொல்லப்பட்டுள்ள யாதொரு மோட்டார் வண்டி என்பது அடங்காது.

குறிப்பு

பொது.— வண்டி (வாகன) வரி இந்த சட்டம் வருவதற்கு முந்தி தமிழ் நாட்டிலும், ஆந்திராவிலும் ஒரே மாதிரியாக இருந்தன. மதராஸ் அரசாங்கத்திலிருந்து ஆந்திரா பிரிந்த பிறகு, இந்த பிரிவின் (1)-ம் உபபிரிவை திருத்தி விட்டது. அதாவது ஒரு கிராம பஞ்சாயத்து இஷ்டப்பட்டால் வண்டி வரியை வசூலிக்கலாம். நம்முடைய தமிழ் நாட்டில் உள்ள மாதிரி வண்டி வரியை கட்டாயமாக வசூலிக்க வேண்டியதில்லை. இதை எங்களுடைய இங்கிலீஷ் புத்தகமாகிய "The Law of Madras Village Panchayats and District Boards"லும், தெலுங்கு "மதராஸ் கிராம பஞ்சாயதீல ஆக்ட்டி"லும் எழுதியிருக்கிரோம். அதின் படிக்கு ஆந்திரா பிரதேச அரசாங்கம் இந்த பிரிவை திருத்தி விட்டது. மதராஸ் அரசாங்கமும் திருத்தும் என்று எழுதிப்பார்க்கிறோம். இதை 6-ம் பதிப்பில் அடியில் கண்ட மாதிரி எழுதியிருந்தோம்.

"**வண்டி வரி.**—நம்முடை கிராமங்களில் வண்டிகள் இருப்பது மிகவும் கொஞ்சம். அவற்றிற்கு வரி போடுவதினுல் இன்னும் அவைகள் கொஞ்சமாகி விடும் என்று தோன்று கிறது. கிராமங்களில் உள்ள சொந்த வண்டிகளுக்கும், பயிர் தொழிலுக்காக வைத்துள்ள வண்டிகளுக்கும் வரிபோடாமல் இருந்தால் நலமாயிருக்கும். வாடகை வண்டிகளுக்கு மட்டும் வரி போடலாம். இந்த வரியை சில காலம் வரைக்கும் தள்ளி வைக்கலாம் என்பது தான் எமதபிப்பிராயம்."

வண்டி வரி விதிகள் பி. 122 (க-20)

வண்டி வரி—நிவாரணைகளும், வரி விதிப்பு உச்ச வீதங்களும் குறைந்த பட்ச வரி விதிப்பு வீதங்களும்

1. மேற்படி சட்டத்தின் 122 (1) பிரிவின்படிக்கான வண்டி வரி அடியிற் கண்ட வண்டி களுக்கு விதிக்கப்படக்கூடாது :—

(a) மத்திய அரசாங்கத்தாருக்கு அல்லது இந்த ராஜ்ய அரசாங்கத்தாருக்குச் சொந்தமானவையும், ராணுவக் காரியங்களுக்காக உபயோகிக்கப் படுபவையு மான வண்டிகள்;

(b) வண்டி செய்பவர்களும், வண்டி வியாபாரிகளும், விற்பனைக்கென்றே வைத் திருக்கும் வண்டிகள் ;

(c) பிரஸ்தாப அரை-வருஷம் முழுவதிலும் செப்பனிடப்பட்டு வருகிற அல்லது வண்டி செய்பவரின் பட்டரையில் இருக்கிற வண்டிகள்.

2. வண்டி வரியானது அடியிற்கண்ட அட்டவணையின் (2) பத்தியில் கண்ட வீதங் களுக்கு மேற்படாமலும் (3) பத்தியில் கண்ட வீதங்களுக்குக் குறையாமலுமுள்ள வீதங்களில் விதிக்கப்பட வேண்டும் :—

வண்டி வரியும் — விதிகளும்

வண்டி வரியின் உச்ச வீதங்களும் - குறைந்த பட்ச வீதங்களும் அட்டவணை

வண்டியின் விவரம் (1)	உச்ச அரை வருஷ வரி (2)	குறைந்த பட்ச அரை வருஷ வரி (3)
	ரூ. அ. பை.	ரூ. அ. பை.
(a) ஒரு பிராணியினுல் அல்லது பல பிராணிகளால் இழுத்துச் செல்லும்படி அமைக்கப்பட்ட நான்கு சக்கர வண்டி ஒவ்வொன்றுக்காகவும்	10 0 0	5 0 0
(b) ஒரு பிராணியினுல் அல்லது பல பிராணிகளால் இழுத்துச் செல்லும்படி அமைக்கப்பட்ட இரண்டு சக்கர வண்டி ஒவ்வொன்றுக் காகவும்	2 8 0	1 8 0
(c) பைசிகல் அல்லது ட்ரைசிகில் ஒவ்வொன்றுக்காகவும்	2 0 0	1 0 0
(d) குழந்தையை வைத்து இழுத்துச் செல்லும் பெராம்புலேட்டர் அல்லது நடை வண்டியாயிராத இதர வண்டி ஒவ்வொன்றுக்காகவும்	3 0 0	1 8 0
(e) வில்லுகள் இல்லாத மற்ற (a) முதல் (d) வரையில் உள்ளவைகளில் சேராத மற்ற வண்டிகள்	4 0 0	1 8 0

* போர்ட் செயின்ட் ஜார்ஜ் கஜட் பார்ட் I-A பக்கம் 131 :: தேதி 8—9—1954

3. (1) வரி விதிக்கத்தக்க எந்த வண்டியையாகிலும், தம் சுவாதீனத்திலாவது, பொறுப்பிலாவது, ஆதிக்கத்திலாவது வைத்திருக்கிற ஒவ்வொருவரும், அந்த வண்டியைப் பிரஸ்தாப அரை வருஷத்திலே மொத்தத்தில் அறுபது நாட்களுக்குக் குறையாத ஒருகால அளவுக்குப் பிரஸ்தாப் கிராமத்துக்குள் வைத்திருந்தாலும், உபயோகித்திருந்தாலும், அவருக்கு முழு அரை-வருஷ வரி விதிக்கப்படத் தக்கதாகும்.

(2) மேற்படி மொத்தக் கால அளவு பதினைந்து நாட்களுக்கு மேற்பட்டிருந்து ஆனல் அறுபது நாட்களுக்குக் குறைவாயிருந்தால், அரை-வருஷ வரியில் பாதி தான் விதிக்கப்படத் தக்கதாகும்.

(3) மேற்படி மொத்தக் கால அளவு பதினைந்து தினங்களுக்கு மேற்படாம லிருந்தால், அந்த அரை வருஷத்துக்கு எவ்வித வரியும் விதிக்கப்படத்தக்கதாகாது

(4) வரி விதிக்கத்தக்க எந்த வண்டியையாகிலும் மேற்படி கிராமத்துக்குள் தம் சுவாதீனத்திலாவது பொறுப்பிலாவது ஆதிக்கத்திலாவது வைத்திருக்கிற ஒவ்வொருவரும், அடியிற் கண்டதற்கு விரோதமாக எண்பிக்கப்படுகிற வரையில், அதை அந்த கிராமத்துக்குள் பிரஸ்தாப அரை வருஷத்தில் அறுபது நாட்கள் வைத்திருந்ததாக அல்லது உபயோகித்திருந்தாகக் கருதப்படுவர்.

(5), (1), (2) உபவிதிகளில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாமலே எவரும்—

(a) எந்த வண்டி விஷயமாக பிரஸ்தாப அரை வருஷத்துக்குரிய முழுவரியையும் வேறு எவரேனும் பஞ்சாயத்துக்கு ஏற்கெனவே செலுத்திவிட்டிருக்கிருரோ அந்த வண்டிக்காக அந்த அரை வருஷத்தில் அப் பஞ்சாயத்துக்கு வரி செலுத்துவதற்குள்ளாக மாட்டார்; அல்லது

(b) எந்த வண்டி விஷயமாக வேறு யாதொரு பஞ்சாயத்துக்கேனும், யாதொரு முனிசிபாலிடிக்கேனும், கண்டோன்மெண்ட் போர்டுக்கேனும் கிராமப் பஞ்சாயத்துக்களைக் குறித்த 1950-ம் வருத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தின் படியாகிலும், ஜில்லா முனிசி

பாலிட்டிகளைக் குறித்த 1950-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தின்படியாகிலும், சென்னை நகர முனிசிபாலிட்டியைக் குறித்த 1919-ம் வருஷத்திய சட்டத்தின்படியாகிலும் கண்டோன்மெண்டுகளைக் குறித்த 1924-ம் ஆம் ஆண்டு சட்டத்தின்படியாகிலும் ஏற்கெனவே வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ அந்த வண்டிக்காக சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஷை இதர பஞ்சாயத்து, முனிசிபாலிட்டி அல்லது கண்டோன்மெண்ட் போர்டுக்கு ஏற்கெனவே செலுத்தப்பட்ட வரிக்கு அதிகமாக அந்த வண்டி விஷயமாய் மேற்படி கிராமத்தில் செலுத்தப் படத்தக்க வரி ஏதாகிலுமிருந்தால் அதற்கு மேற்பட்டு அப் பஞ்சாயத்துக்குச் செலுத்து வதற்கு உட்பட்டவராக மாட்டார்.

4. ஒருவர் பிரஸ்தாப அரை வருஷத்துக்குள் ஒரு வண்டிக்குப் பதிலாக 2-வது விதியில் கண்ட அட்டவணையிலுள்ள அதே விவரத்தைச் சேர்ந்த மற்றொரு வண்டியை வைத்துக்கொண்டால், அப்படி வைத்துக்கொண்டது வண்டி சீரழிந்து போன தன் வினைவா யிருந்து, அப்படி ஒதுக்கப்பட்ட வண்டி சீரழிந்து போன காலத்தில் அவர் அதைத் தம் சுவாதீனத்திலாவது, பொறுப்பிலாவது ஆதிகத்திலாவது வைத்திருந்தால், அவர் ஒரு தடவைக்கு மேல் வரி செலுத்துவதற்கு உள்ளாக மாட்டார்; அப்படி செலுத்தப்படும் வரி யின் தொகையானது, பிரஸ்தாப அரை வருஷத்தில் மொத்தத்தில் எத்தனை நாட்களுக்கு சீரழிந்து போன வண்டியும் அந்த வண்டிக்குப் பதிலாக வைத்துக்கொள்ளப்பட்ட வண்டியும் வைத்திருக்கபட்டதோ அல்லது உபயோகிக்கப்பட்டதோ அந்த நாட்களைக்கொண்டு முறைப்படுத்தப்பட வேண்டும்.

5. நிர்வாக அதிகாரியானவர், பஞ்சாயத்தின் அனுமதியைப் பெற்றுக்கொண் டேனும் அந்தச் சபையார் செய்த ரெகுலேஷன்களை அனுசரித்தேனும், வாடகைக் குதிரை களுக்கான லாயம் வைத்திருக்கிற எவருடனாவது விற்பனைக்கேனும், வாடகைக்கேனும், வண்டிகள் வைத்திருக்கிற இதர நபருடனாவது வண்டி வரிக்குப் பதிலாகச் செலுத்தப்பட வேண்டிய தொகைக்காக ஒரு வருஷத்துக்கு மேற்படாத ஒரு கால அளவுக்கு ராஜி செய்து கொள்ளலாம்.

C. வண்டி வரியை வசூலிக்கும் விதத்திற்கு விதிகள்

[இதை (ங-10-ல்) விதிகள் 13-ம் முதல் 17 வரையில் காணலாம்]

1 முதல் 12 விதிகளை பிரிவு 119ன் கீழ், 278, 279, 280 பக்கங்களில் காணலாம்.

13. (1) நிர்வாக உத்தியோகஸ்தர், வண்டி வரி செலுத்தத்தக்கவராகி விட்டிருப்பதாகக் கருதப்படுகிற ஒவ்வொருவருக்கும், அச்சிட்ட அட்டவணை யொன்றை அனுப்ப வேண்டும். அதில் அவர் வைத்துள்ள அல்லது உபயோகிக்கிற வண்டிகள் விஷயமாய் வரி விதிப்பதற் காக நிர்வாக உத்தியோகஸ்தர் அவசியமென்று கருதக்கூடிய தகவலைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(2) அந்த அட்டவணை யாருக்கு அனுப்பப்பட்டதோ அவர் அதில் மேற்படி தகவலை எழுதி தேதியுடன் கையெழுத்திட்டு, அது வந்து சேர்ந்ததிலிருந்து ஒரு வாரத்துக்குள் பஞ்சாயத்துக்கு திருப்பி யனுப்பவேண்டும்.

(3) (2) உபவிதியில் குறிப்பிட்டுள்ள ஒரு வார கால அளவு முடி வடைந்ததன் பேரில், நிர்வாக உத்தியோகஸ்தர், மேற்சொன்ன நபருக்கு நோட்டீஸ் சேர்ப்புவித்து, அவ்வாறு சேர்ப்புவிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து தினங்களுக்குள், வண்டி வரியாக அவர் செலுத்தத் தக்கதென்று நிர்வாக உத்தியோகஸ்தர் கருதுகிற தொகையை செலுத்துமாறு அவருக்குக் கட்டளையிட வேண்டும்.

14 யாதொரு வண்டி விஷயமாய்ச் சேரவேண்டிய வரித்தொகையை ஒருவர் செலுத் தினால் நிர்வாக உத்தியோகஸ்தர் செலுத்தப்பட்ட தொகை எந்தக் கால அளவுக்குச் சம்பந்தப் படுகிறதோ அந்தக் கால அளவில் அவ் வண்டியை உபயோகிப்பதற்காக அல்லது வைத்து வருவதற்காக அவருக்கு லைஸென்ஸ் ஒன்றைக் கொடுக்க வேண்டும்.

15. 14-வது விதியின் பிரகாரம் லைசென்ஸ் கொடுக்கப்பெற்ற ஒவ்வொரு வண்டிக்கும் பஞ்சாயத்து நம்பர் ஒன்றை ஒட்டி வைக்க வேண்டும்; அந்த நம்பரைப் பஞ்சாயத்து ஆபீஸில் பதிவு செய்யவேண்டும்;

ஆனல், யாதொரு விசேஷச் சட்டத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் நம்பர் ஒன்றை ஒட்டி வைக்கப்பட்டிருக்க வேண்டிய ஒரு வண்டியின் விஷயத்தில் பஞ்சாயத்து நம்பர் எதுவும் வேண்டியதில்லை.

16. 15–வது விதியில் சொல்லியிருக்கிறபடி ஒரு வண்டியில் பஞ்சாயத்து நம்பரையோ யாதொரு விசேஷ சட்டத்தின் நிபந்தனைகளின் படிக்கான நம்பரையோ ஒட்டி யிருக்கா விட்டால், நிர்வாக உத்தியோகஸ்தர் அந்த வண்டியை எப்போதாகிலும், கைப்பற்றி மறியல் செய்து வைக்கலாம்.

ஆனல். பைசிக்கல், ட்ரைசிக்கிள் அல்லது ரிக்ஷா தவிர்த்த எந்த வண்டியையும், யாதொரு பிரயாணி அல்லது சாமானை அது ஏற்றிச் செல்ல வாஸ்தவமாகவே அமர்த்திக் கொள்ளப்பட்டிருக்கும்போது, அவ்வாறு கைப்பற்றி மறியல் செய்யலாகாது.

17. (1) கைப்பற்றப்பட்ட வண்டியை யாரும் கேட்காமலும், அதன் பேரில் சேர வேண்டிய வரியை அதைக் கைப்பற்றியதிலிருந்து பத்து தினங்களுக்குள் செலுத்தாம லிருந்தால், நிர்வாக உத்தியோகஸ்தர் அவ் வண்டியைப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படு மென்றும், அவ் விற்பனை மூலம் கிடைத்த தொகையைக் கொண்டு அடியிற்கண்டவற்றைச் செலுத்துவதற்குப் பிரயோகப்படுத்தப் படுமென்றும் கட்டளையிடலாம்.

(i) விற்கப்பட்ட வண்டிக்காக சேரவேண்டிய வரி எதுவேனும் இருந்தால் அவ்வரி;

(ii) நிர்வாக உத்தியோகஸ்தர் கட்டளையிடக்கூடியதும் வரியின் தொகைக்கு மேற்படாததுமான அபராதம்;

(iii) கைப்பற்றியது, மறியல் செய்தது, விற்பனை செய்தது சம்பந்தமாக ஏற்பட்ட செலவுக்காக எட்டணு.

(2) வண்டியின் சொந்தக்காரரோ அதற்குப் பாத்தியதையுடைய வேருருவரோ, கைப்பற்றப்பட்ட தேதியிலிருந்து பத்து தினங்களுக்குள்ளாக அல்லது விற்பனை செய்யப்படு வதற்குமுன் எப்போதாகிலும் அதைக் கேட்டால், அடியிற் கண்டவை செலுத்தப்படுவதன் பேரில் அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் :—

(i) அதற்குச் சேரவேண்டிய வரி ;

(ii) நிர்வாக உத்தியோகஸ்தர் கட்டளையிடக் கூடியதும் வரியின் தொகைக்கு மேற்படாததுமான அபராதம் ;

(iii) கைப்பற்றியது, மறியல் செய்தது சம்பந்தமாக ஏற்பட்ட செலவுக்காக நான்கணு.

வரி பேரில் அப்பீல்

123. 119 முதல் 122 வரையிலுள்ள பிரிவுகளை அனுசரித்து விதிக்கப்படுகிற யாதொரு வரிக்கு எதிராக நிர்ணயிக்கப்படக்கூடிய காலத்திற் குள்ளும், அதிகாரிக்கும், அப்பீல் உண்டு.

வரி விதிப்பை எதிர்த்து அப்பீல்கள்

குறிப்பு

119-ம் பிரிவில் 5 விதமான வரிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளில் (1) பி. 120-ன் கீழ் வீட்டுவரியும் ( ) பி. 121-ன் கீழ் தொழில் வரியும் (3) 122-ன் கீழ் வண்டிவரி யும் முக்கியமானவை அந்த வரிகளின் பேரில் திருப்தி இல்லாவிட்டால் அதாவது வரிவிதிப்பு அதிகம் என்று கருதினல் அப்பீல் கெடுவுக்குள் அப்பீல்செய்து கொள்ளலாம் அவைகளை அடி யில் காணவும்.

முதல் 6 முதல் 17 விதிகளை 278, 279, 280 பக்கங்களில் பார்க்கவும்

18. அடியிற்கண்ட வரி விதிப்பு விஷயமாகவும் விதித்து வாங்கும் விஷயமாகவும் பஞ்சாயத்துக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்:—

அப்பீல் (a) 7-வது,12-வது விதிகளின் படிக்கான வீட்டுவரி விதித்து வாங்குவதும், 11-வது விதியின்படி யாதொரு புனர் விமரிசை மனுவின் மீது நிர்வாக உத்தியோகஸ்தர் பிறப்பித்த உத்தரவுகளும்.

(b) நிர்வாக அதிகாரி:—

(i) யாதொரு வண்டியின் மீது வரி விதிப்பது.

(ii) யாதொரு தொழில் வரி விதிப்பது.

(c) மேற்படி சட்டத்தின்படி இன்ஸ்பெக்டர் அங்கீகரித்துள்ளதும் விவசாய நிலங்கள்மீது விதிக்கப்பெறுவதுமான ஒரு வரி விதிப்பு.

குறிப்பு

வீட்டு வரி.—இதை விதிப்பதை குறித்த விதிகளை [சி. வி. நா. 7 முதல் 30 வரையில் [பக்கங்கள் 287 - 300 களில் பார்க்கவும்.]

தொழில் வரி.—இதை விதிப்பதை குறித்த விதிகளை [பக்கங்கள் 304 - 310 களில் பார்க்கவும்.]

வண்டி வரி.—இதை விதிப்பதை குறிந்த விதிகளை [பக்கங்கள் 311 - 314களில் பார்க்கவும்.]

விதி. 18 (a) விதி 7 என்பது "சி. வி. நா. 14" இதை பக்கம் 291ல் காணலாம்.
,, **விதி 11** என்பது "சி. வி. நா. 20" இதை பக்கம் 294ல் காணலாம்.
,, **விதி 12** என்பது "சி. வி. நா. 19" இதை பக்கம் 293ல் காணலாம்.
இவை 3-ம் வீட்டு வரி விதிப்பை குறித்தது

விதி. 18 (b) (i) வண்டி வரி— இதின் விதிப்பை பக்கம் 311ல் காணலாம்.
(ii) தொழில் வரி—இதின் விதிப்பை பக்கங்கள் 304--310 களில் காணலாம்.

விதி. 18 (c)— இந்த விதிகளை பி. 119 (3) படிக்கு குறிப்பிட்ட காரியங்களுக்காக விவசாய நிலங்களுக்கு போடும் வரி, இவைகளை குறித்து பக்கம் 276ல் பார்க்கவும். இவைகளை விதிப்பதை குறித்து பக்கம் 276ல் பார்க்கவும்.

அப்பீல்.—முதல் முதலாக நிர்வாக அதிகாரி ஒவ்வொரு அரை வருஷத்திற்கு வரி புஸ்தகங்களை நிர்ணயித்து எழுத்து மூலமாக டிமாண்டு நோட்டீஸ் கொடுப்பார். அது புதியதாக போடுவதாயிருந்தாலும், அல்லது இருக்கும் வரியை அதிகப்படுத்துவதானலும், ஸ்பெஷல் (விசேஷ) நோட்டிஸ் கொடுப்பார். (சி. வி. நா. 17) அப்பொழுது நிர்வாக அதிகாரிக்கு புனர் விமர்சனைக்கு, அதாவது வரியை குறைப்பதற்கு ரிவிஷன் மனு போட்டுக்கொள்ளலாம். (சி. வி. நா. 18) இந்த ரிவிஷன் மனுவுக்கு முன்னதாக யாதொரு வரியையும் கட்டவேண்டியதில்லை. இந்த மனுவின் பேரில் நிர்வாக அதிகாரி உத்தரவு செய்து மனுபோட்டவருக்கு தெரிவிக்கவேண்டும், [சி. வி. நா. 19 (1)] அப்படி தெரிவித்த 15 நாட்களுக்குள் அப்பீல் செய்துக் கொள்ளவேண்டும். (2) அல்லது டிமாண்டு நோட்டிஸ் கொடுத்த 15 நாட்களுக்குள் நிர்வாக அதிகாரிக்கு ரிவிஷன் மனுபோடாமலே, வரிபணத்தை செலுத்தி கிராம பஞ்சாயத்துக்கு நேராக அப்பீல் செய்துக் கொள்ளலாம் அப்பீலின் தீர்மானமானது கிராம பஞ்சாயத்தின் தீர்மானமாகும். அதில் ஏதாவது தவறுதல் நடந்து சர்சார்ஜ் அதாவது நஷ்டம்கட்டிக் கொடுக்கவேண்டியிருந்தால் பிரசிடெண்டின்மேல் மாத்திரம் போவது போதாது. சர்சார்ஜியை மொத்த பஞ்சாயத்து மெம்பர்களின் பேரில் போடவேண்டும் [செக்ரிடரி ஆப் ஸ்டேட்-எ-சிவசங்கரன் 59 M. 876 = A. I. R. 1936 M. 412] கிரமமாக நடந்த விஷயங்களில் அப்பீல் செய்துக் கொள்ள வேண்டுமே ஒழிய கோர்டுக்கு போனல் செல்லாது [பூர்ன சந்திகமாலா-எ-ஸ்ரீகாகுளம் தாலூக்கா போர்ட் 113 I. C. 560 (Mad). 20-வது விதியின்படிக்கு கிராம பஞ்சாயத்து தானே நேராக குறைக்கலாம். அதற்கு அப்பீல் கெடுவு கிடையாது நிர்வாக அதிகாரியால் போடப்

பட்ட வரிவிதிப்பை குறித்து அப்பீல் செய்வதாகும். அது நிர்வாக அதிகாரியின் சாதாரண தினசரி முறையில் செய்யும் நடவடிக்கை (அட்மினிஸ்ட்ரெடிங் முறை யாகும்) (கல்கத்தா கார்பொரேஷன்-எ-கியாமுடின்; **A. I. R. 1927 Cal. 802**] ஏதாவது சட்டத்தின் படிக்கு நடக்காவிட்டால் சிவில் கோர்ட்டுக்கு சென்று பரிஷ்கரித்துக் கொள்ளவேண்டும் பி. 174-யை பார்க்கவும் அப்பீலுக்கு கோர்டு பீஸ் ஸ்டாம்புக் கிடையாது. அப்பீலுக்கு லிமிடேஷனை குறித்து விதி 19-யை அடியில் பார்க்கவும் அப்பீலில் மனுபோட்டுக் கொண்டவர் வரியை குறைக்க ருஜூபடுத்தவேண்டும். அப்பீல் உத்திரவுபடிக்கு நிர்வாக அதிகாரி நடந்துகொள்ளவேண்டும். (விதி 21.)

அப்பீல் கெடுவு

19. ஒரு பஞ்சாயத்துக்குச் செய்து கொண்ட எந்த அப்பீலையும்:—

(i) ஆட்சேபிக்கப்பட்ட வரியைக் கொடுக்கும்படி கேட்கப்பட்ட பிறகு பதினைந்து தினங்களுக்குள் பஞ்சாயத்தின் ஆபீஸுக்கு அது வந்து சேர்ந்தாலொழிய,

(ii) நிர்வாக அதிகாரி, ஏழ்மை காரணமாக வேறு விதமாகக் கட்டளையிட்டால் அன்றி மற்றப்படி, எந்த வரி விஷயமாய் அப்பீல் செய்துகொள்ளப்பட்டிருக்கிறதோ அந்த வரியை, பஞ்சாயத்து ஆபீஸில் (i) பகுதியில் குறிப்பிட்டுள்ள கால அளவுக்குள் செலுத்தி யிருந்தாலொழிய அல்லது டிபாஸிட் செய்திருந்தாலொழிய,

ஆனல், (i) பகுதியில் குறித்துள்ள காலத்துக்குள் அப்பீல் செய்து கொள்ளாததற்கான காரணங்களைப் பஞ்சாயத்துக்குச் சந்தேகமற எடுத்துக் காட்டப்பட்டால், அது அக்கால அளவுக்கு பிறகு பதினைந்து தினங்களுக்குள் அந்த அப்பீலை அநுமதிக்கலாம்.

குறிப்பு

அப்பீல்.—மேலேயுள்ள விதி **18**-யைப் பார்க்கவும்

(i) **பதினைந்து தினங்கள்:**—இதற்குள் அப்பீல் செய்து கொள்ளவேண்டும் 15 நாள் தாண்டி மற்றெரு 15 நாள்களுக்குள் அப்பீல் செய்து கொள்வதற்கும் பஞ்சாயத்தின் அனுமதி வேண்டும்.

(ii) **எந்தவரி விஷயமாய் அந்த வரியை.**—அப்பீலுக்கு முன்னதாக வரியை செலுத்த வேண்டும். ஆனல் ஏழ்மை காரணமாக பஞ்சாயத்து வரிகட்டாமல் போனலும் அப்பீலை விசாரிக்கலாம்.

இந்த (i) (ii) காரணங்கள் படிக்கு நடந்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், அதனல் உண்டாகும் நஷ்டத்தை பஞ்சாயத்து மெம்பர்கள் கட்டி கொடுக்கும்படி நேரிடும்.

பஞ்சாயத்து குறைத்த அல்லது வஜா செய்த வரியை மாற்றலாம்.

20. பஞ்சாயத்து தானே தீர்மானம் நிறைவேற்றி அல்லது வேறு வித அதிகாரி யாதொருவரியைக் குறைத்து அல்லது வஜா செய்து பிறப்பித்த உத்தரவு ஒன்றை ரத்து செய்யலாம் அல்லது மாற்றலாம்.

வரி புத்தகங்களை திருத்த

21. அப்பீல் செய்துகொண்டதன் பேரில் பஞ்சாயத்து பிறப்பித்த எவையேனும் உத்தரவுகளுக்கிணங்க வரி விதிப்புப் புஸ்தகங்களைத் திருத்தவேண்டும். யாதொரு வரித்தொகை பஞ்சாயத்தால் குறைக்கப்பட்டாலும், வஜா செய்யப்பட்டாலும், நிர்வாக அதிகாரி அவ்வாறே அதைத் திருப்பிக் கொடுக்க அனுமதிக்கவேண்டும்.

22. இதில் முன்னுல் நிபந்தனை கண்டிருக்கிறபடி அப்பீல் எதுவும் செய்து கொள்ளப் படாவிட்டால் யாதொரு வரி விதிப்பு அல்லது டிமாண்டும் அவ்வாறு அப்பீல் செய்துகொள்ளப்பட்டிருந் தால், அதன் பேரில் பஞ்சாயத்தின் தீர்ப்பும், உறுதி யானவையாகும்.

அப்பீல் உத்தரவு முடிவானது

ஆனுல், யாதொரு வரி விதிப்போ, டிமாண்டோ, வரி விதிப்புப் புஸ்தகங்களின்படி யிராவிட்டால், இவ் விதியில் கண்டதெதுவும், அதன் படி ஒரு வரிவிதிப்பு அல்லது டிமாண்டைப் புதிதாகச் செய்வதைத் தடை செய்வதற் காகக் கருதப்படலாகாது.

வீட்டு வரி—தொழில் வரிகளை வசூலிக்கும் விதிகளின் அட்டவணை

23.	ஜப்தி, கிரிமினல் கேஸ்களை செய்வதற்கு முன் பில்லை சேர்ப்பிக்க வேண்டும்.	317
24.	வரிக்காக ஜங்கம சொத்து ஜப்தி செய்யலாம் அல்லது கிரிமினல் கேஸூம் செய்யலாம்.	318
25,	ஜப்தி சொத்தை அவசியமான வரையில் ஜப்தி செய்யலாம்: ஜாபிதா கொடுக்கவேண்டும் ...	320
26.	ஜப்தி செய்த சொத்தை விற்பது. ...	,,
27.	ஜப்தி கட்டணம்- ...	321
28.	எங்கே கண்டாலும் சொத்தை ஜப்தி செய்யலாம் ...	,,
29.	வரிக்காக ஆட்சியாளர் சொத்தை ஜப்தி செய்யலாம். ...	322
30.	பஞ்சாயத்து வரியை நிலவரியாக வசூலிப்பது. ...	,,
31.	வரிக்காக கிரிமினல் கேஸ். ...	,,
32.	நிர்வாக அதிகாரி வகையரா கிரத்திற்கு வாங்கக் கூடாது. ...	323
33.	வீட்டு வரிக்கும் இந்த விதிகளை உபயோகிக்கவும் ...	,,

அனுபந்தம்

A.	ஜப்தி வாரண்ட்.	
B.	விற்பனை செய்யப்படும் பொருள்களின் ஜாபிதா, விற்பனை நோட்டீஸ் இவற்றுக்கான நமூனு.	
C.	ஜப்திகளுக்காகச் செலுத்தத்தக்க உச்சக் கட்டணங்களின் அட்டவணை.	324

வீட்டு வரி - தொழில் வரி - வண்டி வரிகளை வசூலிக்கும் விதிகள்

23. (1) எவரிடமிருந்தேனும் வீட்டு வரி ஒன்று சேரவேண்டியதாயிருந்தால், பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி 24-வது விதியின் நிபந் தனைகளை அமுல் செய்ய முற்படுவதற்குமுன், சேர வேண்டிய தொகைக்காக ஒரு பில்லை அவரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

ஜப்தி, கிரிமினல் கேஸ்களை செய்வதற்குமுன் பில்லை சேர்ப்பிக்க வேண்டும்

(2) (1) உபவிதியின் படிக்கான பில்லொன்றில் நிர்வாக அதிகாரியாவது அது விஷயமாய் அவரால் கிரமமாக அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறு யாராவது கை யெழுத்திட வேண்டும் ; அதில்.—

(a) வரி விதிக்கப்படுகிற கால அளவும் வீட்டின் விவரமும் கொண்ட ஸ்டேட்மென்ட் ஒன்றும்.

(b) செலுத்தத் தவறினுல் ஏற்படக்கூடிய பாத்தியதைப் பற்றிய நோட்டிஸ் ஒன்றும் அடங்கியிருக்கவேண்டும்.

வரிகளை வசூலிக்கும் விதிகள்

(3) ஒரு அரை வருஷத்தில் அல்லது அதற்கு அடுத்த அரை வருஷத்துக்குள் ஒருவரிடம் மேற்படி பில்லைச் சேர்ப்பித்திருந்தாலன்றி, மற்றப்படி அந்த அரை வருஷத்துக்கான வரியெதையும், 24-வது விதியில் விதிக்கப்பட்டுள்ள விதமாக அவரிடமிருந்தும், வசூலிக்கக்கூடாது.

ஆனல், 2-வது விதியின்படி வரிவிதிப்புப் புஸ்தகங்கள் திருத்தப் பட்டிருந்தால், மேற்படி பில்லை அத்திருத்தம் செய்யப்பட்ட அரை வருஷத்திலாவது அதற்கு அடுத்த அரை வருஷத்திலாவது சேர்ப்பிக்கலாம்.

(4) இவ் விதியிலோ 24-வது விதியிலோ கண்ட தெதுவும், பஞ்சாயத்து, தனக்குச் சேரவேண்டிய வரிக்காக யாதொரு ஸிவில் கோர்ட்டில் தாவா செய்து கொள்வதைத் தடை செய்யாது.

குறிப்பு

பொது.—இந்த பில்லை அல்லது நோட்டிசை வீட்டு வரிக்கும், மீதிவிதமான வரிகளுக்கும் ஜப்தி செய்வதற்கு அல்லது கிரிமினல்கேஸ் செய்வதற்கு முந்தி கொடுக்க வேண்டும்.

பில்லை சேர்ப்பிக்கவேண்டும் :—பில்லை அந்த அரை வருஷம் அல்லது அடுத்த அரை வருஷத்திற்குள் சேர்ப்பிக்கவேண்டும். அப்படி செய்யாவிட்டால் வரிக்காக என்று ஒருவருடைய ஜங்கம சொத்தை ஜப்தி செய்தால் அல்லது கிரிமினல் கேசை அவர்பேரில் செய்தால் அது சட்ட சம்மதமன்று. அவருக்கு நஷ்டத்தை கட்டிக்கொடுக்க நேரிடும். 174-யைப் பார்க்கவும். லிமிடேஷனுக்கு பி. 166யைப் பார்க்கவும். சிவில் கோர்ட்டில் தாவா செய்வதற்கு பில் கொடுக்காவிட்டாலும் பாதகமில்லை [சுப்ரமணியம்-எ -குடியாத்தம் முனிசிபாலிடி, A.I.R. 1926 Mad 202 :: சிதம்பரம் முனிசிபாலிடி-ஏ.-வேணுகோபால், I.L. R.1937 M. 985 = A. I. R. 1937 M. 56 :: பத்மநாபர்-எ.-கொழம்பத்தூர் முனிசிபாலிடி, A. I. R. 1938 M. 232.]

வரிக்காக ஜங்கம சொத்து ஜப்தி செய்யலாம் அல்லது கிரிமினல் கேஸும் செய்யலாம்.

24. (1) கொடுக்கும்படி கேட்கப்பட்ட வரித்தொகை, பில்லைச் சேர்பித்ததிலிருந்தாவது 11-வது விதியில் குறிப்பிட்டுள்ள கட்டளை பிறப்பிக்கப்பட்டதிலிருந்தாவது பதினைந்து தினங்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், அவ் வரியாரிடமிருந்து சேரவேண்டியதாயிருக்கிறதோ அவர், அது ஏன் செலுத்தப்படக்கூடாது என்று நிர்வாக அதிகாரிக்கு சந்தேகமற எண்பிக்காமலிருந்தால், நிர்வாக அதிகாரி வரி செலுத்தத் தவறியவருடைய ஜங்கம சொத்தைத் தமது வாரண்டின்படி ஜப்தி செய்து விற்பது மூலம் வரியாகச் சேர வேண்டிய தொகையை வசூலிக்கலாம்; அத்தொகையுடன் வாரன்ட் கட்டணம், ஜப்திக் கட்டணம், அவ்வாறு ஜப்தி செய்யப்பட்ட சொத்தை மறியல் செய்து விற்கிற வகையில் நேரிடக்கூடிய உத்தேசச் செலவை ஈடு செய்யக்கூடிய மேலுமொரு தொகை ஆகிய இவற்றையும் வசூலிக்கலாம்,

ஆனல், 1908-ஞத்திய ஸிவில் வழங்கு முறைச் சட்டத்தின் 60-வது பிரிவைச் சேர்ந்த விலக்கு நிபந்தனையில் விவரிக்கப்பட்டுள்ள ஜங்கம சொத்து ஒரு பொழுதும் ஜப்தி செய்யப்படத்தக்கதாகாது.

(2) வரி செலுத்தத்தவறிய ஒருவரது சொத்தை ஜப்தி செய்வது அல்லது போதுமானபடி ஜப்தி செய்வது எக்காரணம் பற்றியேனும் சாத்தியமற்றதானல், நிர்வாக அதிகாரி ஒரு மாஜிஸ்ட்ரேட் முன்பு மேற்படி வரி செலுத்தத் தவறியவரைப் பிராது செய்யலாம்.

(3) (1) உபவிதியின் படிக்கான வாரன்ட் இவ்விதிகளின் A அனுபந்தத்தில் கண்டுள்ள நமூனைப்படி அல்லது அது போன்ற ஒரு நமூனைப்படி இருக்கவேண்டும்; அப்படிப்பட்ட வாரன்ட் ஒவ்வொன்றுக்காகவும் இரண்டணு கட்டணம் ஒன்றை விதித்து வசூலிக்கவேண்டும்.

(4) நிர்வாக அதிகாரியின் எழுத்துமூலமான விசேஷ உத்தரவின்படி ஜப்தி வாரன்டை நிறைவேற்றும் பொறுப்பு வகிக்கிற ஒரு உத்தியோகஸ்தர், யாதொரு

கட்டடத்தில் கைப்பற்றப்படத்தக்க சொத்து இருக்கிறது என்று தாம் நம்புவதற்கு நியாயமான காரணமிருந்து தமக்குள்ள அதிகாரத்தையும், தமது காரியத்தையும் தெரிவித்துவிட்டு கிரமமாகப் பிரவேசிக்க அனுமதி கேட்டு அது மறுக்கப்பட்டிருந்து, வேறு விதமாய்ப் பிரவேசிக்க முடியாவிட்டால் அப்போது அவர் அக் கட்டடத்தின் யாதொரு வெளி அல்லது உள் கதவு அல்லது ஜன்னலை, சூரியோதயத்துக்கும் சூரி யாஸ்தமனத்துக்கும் இடையில், அவ்வாறு ஜப்தி செய்வதற்காக உடைத்துத் திறக் கலாம்.

ஆனல், மேற்படி உத்தியோகஸ்தர், பெண்களுக்கென்று ஒதுக்கி வைக்கப்பட் டுள்ள யாதொரு அறையில் பிரவேசிக்கவோ அதன் கதவை உடைத்துத் திறக் கவோ உத்திதேசித்துள்ளதைக் குறித்து மூன்று மணி நேர நோட்டிஸ் கொடுத்து அப்பெண்கள் வேறிடம் செல்வதற்கு அவகாசம் அளித்திருக்கிறவரையில் அவ்வாறு அந்த அறையில் பிரவேசிக்கவுங்கூடாது. அதன் கதவை உடைத்துத் திறக்கவுங் கூடாது.

குறிப்பு

(1) **வரிசெலுத்த தவறினவர்:—** பில் கொடுத்தபிறகு வரி செலுத்த தவறினவர் என்று அர்த்தம். ஒரு இறந்தவர்பேரில் பில் கொடுத்திருந்தால், அவருடைய வார்சுகளுக்கு பில் கொடாமல் அவர்களுடைய ஜங்கம சொத்தை ஜப்தி செய்யக்கூடாது. மொத்தவீடு அனேக பாகஸ்தர்களுடையதா இருந்தாலும் ஒருவரிடமிருந்து வரி வசூலிக்கலாம் என்பதை கவனிக்கவும்.

வாரண்டின்படி:—ஜப்தி வாரண்டின் பாரத்தை A-ஏ அனுபந்தத்தில் காண லாம், வாரண்டின்படி ஜங்கம சொத்து ஜப்தி செய்தவர்களை எந்த காரணத்தைக் கொண்டும் தடுக்கக்கூடாது. துன்பப்படுத்தக்கூடாது. அது இண்டியன் பீனல் கோடு செ. 353 படிக்கும், செ. 186 படிக்கும் குற்றமாகும். [பூமாலை குறித்து (1898) 21 M. 236::மாதவகுறித்து 36 I. C. 61::பீரமஸ்தான் குறித்து A.I.R. 1938 M. 659::இதில் முன்செய்த மதார் குறித்து, 53 M. 508 = 53 M. L. J. 193 = A. I. R. 1930 M. 430.] வாரண்டு கொண்டுபோகும் போது ஒரு பாகத்தைக் கொடுத்தால் பெற்றுக்கொள்ளாவிட்டாலும், வாரண்டை அனுப்ப அதிகார மில்லாதவர்களும், வாரண்டை நிறைவேற்ற அதிகாரமில்லாதவர்களாக இருந்தும் அதிகாரம் உள்ளவராக என்பித்துக்கொண்டு தொந்தரவு செய்தால் அவர்களை தடுக்கலாம். அதை தீர்க்கமாக யோசித்து செய்யவேண்டும். அவசரப்படக்கூடாது. வாரண்டில் எல்லா அரை வருஷங்களுக்கும் வரியை சேர்த்து வாரண்டை பிறப்பிக்கலாம். வரிகளுக்கு வட்டி போடக் கூடாது. ஜங்கம சொத்துக்களில் ஜப்தி செய்யக்கூடாததைப்பற்றி சிவில் வழக்குகள் ஆக்ட், பிரிவு 60-ல் கண்டிருக்கிறது. அதாவது வேண்டிய துணிகளும், சமையல் பாத்திரங்களும், படுக்கைகளும், தாலி முதலியதும் வேலைக்கும், பயிருக்கும், உதவும் கருவிகளும், ஜப்தி செய்ய தக்கவைகள் அல்ல.

நிர்வாக அதிகாரி வரி செலுத்த தவறியவருடைய ஜங்கம சொத்தைத் தமது வாரண்டின்படி ஜப்தி செய்து விற்று வரி தொகையை வசூலிக்கலாம்— ஜங்கம சொத்தை வீட்டுக்குள் நுழைந்து ஜப்தி செய்ய ஒரு உத்தியோகஸ்தர் அல்லது அவ ரிடம் அதிகாரம் பெற்ற ஊழியர் பிரவேசிக்கும் சமயத்தில் அவரை உள்ளே நுழைய விடா மல் கதவை சாத்தி விட்டால் அது பிரிவு 184-ன் படிக்கும் இண்டியன் பினல் கோட் 341-வது பிரிவின் படிக்கும் குற்றமாகும் [திம்மக்கா குறித்து A. I. R. 1942 Mad. 552]

(2) **சாத்யமற்றதானல்:**—ஒருவருக்கு பல தடவைகளில் பில் அல்லது நோட்டிஸ் கொடுத்தும் அவர் பதில் யாதொன்றும் தெரியப்படுத்தாவிட்டால், அதினல் ஜப்தி செய்ய சாத்தியமில்லை என்பது சரியல்ல. ஜப்தி செய்ய யத்தனித்தும் ஜங்கம சொத்து அகப்படா விட்டால் மாத்திரம் சாத்தியமில்லை என்பது சரியாகும்.

மாஜிஸ்ட்ரேட் முன்பு பிராது செய்யலாம்:—பிராதின்படி நோட்டிஸ் அல்லது பில் கொடுக்கப்பட்டதென்றும், ஜங்கம சொத்து ஜப்தி செய்வது சாத்யமற்றதென்றும் பஞ்சா யத்து ருஜுப்படுத்த வேண்டும். நாள் ஆய்விட்டபடியாலேயே அவைகள் கிரமமாக நடந்துக் கொண்டதாக எண்ணிக்கொள்ளக் கூடாது. [மீனம்மாள் குறித்து, 1936 A. W. N. 1147]

(4) எழுத்து மூலமான **விசேஷ உத்திரவின்படி—சூர்யோதயத்திற்கும் சூரியாஸ்தமானத்திற்கும் இடையில் வெளி அல்லது உள் கதவு ஜன்னலை உடைத்து திறக்கலாம்:—** இந்த ஏற்பாடுகள் படிக்கு நடந்து கொள்ளாவிட்டால் அந்த ஜப்தி சட்ட **விரோத**மாகும். பஞ்சாயத்தும் நஷ்டத்தை கட்டிக் கொடுக்கும்படி நேரிடும்.

மூன்று மணிநேர நோட்டீஸ் கொடுத்து:—அப்படி செய்யாமல்; பெண்கள் இருக்கும் இடத்தில் பிரவேசித்தால், அது இண்டியன் பினல்கோட் செக்ஷன்கள் 441, 354, 509 படிக்கு குற்றமாகும் இந்த ஆக்டின் பி. 174 (3) இதற்குப் பொருந்தாது.

ஜப்தி சொத்தை அவசியமான வரையில் கைபற்றலாம் ஜாபிதா கொடுக்கவேண்டும்

25. (1) யாதொரு வாரண்டை நிறைவேற்றும் பொறுப்பு வகிக்கிற உத்தியோகஸ்தர், ஜப்தி செய்வதற்கு முன்னல்; சேரவேண்டிய வரியையும், வாரன்ட் கட்டணத்தையும் செலுத்திவிடுமாறு கேட்க வேண்டும். மேற்படிவரியும் கட்டணமும் செலுத்தப்பட்டால், ஜப்தி எதுவும் செய்யலாகாது; ஆனல், வரியோ கட்டணமோ செலுத்தப்படாவிட்டால், அவ்வுத்தியோகஸ்தர்:—

(a) செலுத்தத் தவறியவருடைய ஜங்கம சொத்தில் தாம் அவசியமெனக் கருதுகிறதைக் கைப்பற்ற வேண்டும்;

(b) கைப்பற்றப்பட்ட சொத்தின் ஜாபிதா வொன்றைத் தயாரிக்கவேண்டும்;

(c) கைப்பற்றப்பட்ட சொத்தின் சுவாதீனமுடையவரிடம் கைப்பற்றுங் காலத்தில் மேற்படி ஜாபிதாவினுடையவும் இவ்விதிகளின் B அனுபந்தத்தில் கண்டுள்ள நமூனுப்படிக்கான அல்லது அது போன்ற நமூனுப்படிக்கான விற்பனை நோட்டீஸினுடையவுமான நகல் ஒன்றைக்கொடுக்கவேண்டும்;

ஆனல் சேரவேண்டிய தொகைகளைச் செலுத்துவதற்காகவும் கைப்பற்றப்பட்ட சொத்தை மீட்டுக்கொள்வதற்காகவும் ஏழு தின கால அளவை அனுமதிக்க வேண்டும்.

(2) அதிக்கிரமமாய் ஜப்திசெய்யக்கூடாது; அதாவது ஜப்தி செய்யப்பட்ட சொத்தின் மதிப்பு வரி செலுத்தத் தவறியவரிடமிருந்து சேரவேண்டிய வரியுடன் வாரன்ட், ஜப்தி,மறியல் செய்வது, விற்பது ஆகிய இவற்றுக்காக ஏற்படக்கூடிய எல்லா செலவுகளும் சேர்ந்த தொகையின் மதிப்புக்குக்கூடிய வரையில் சமமாக இருக்கவேண்டும்.

குறிப்பு

(1) **ஜப்தி-முன்-செலுத்திவிடுமாறு கேட்கவேண்டும்:—**அவர் இல்லாத காலத்தில் ஜப்தியைக் கேளாமல்தான் செய்யவேண்டி நேரிடும். ஆனல் யாராவது பணம் செலுத்தினுல் அதைப் பெற்றுக்கொண்டு, ஜப்தி செய்யக்கூடாது.

(a) **ஜங்கம சொத்தை:—** இதில் வீட்டு கதவு சேராது. அதை ஜப்தி செய்யக் கூடாது. அதை தடுத்தால் குற்றமாகாது. [ஷேக் இப்ராஹீம் குறித்து (1890) 13 Mad. 518 மதார் குறித்து, A. I. R. 1930 M. 430 (1)]

(b) **ஜாபிதா:**—சரியான அளவுகள்,இடைகள்கொடாமல், தோராயமாகக்கொடுத்தது போதாதென்று ஜப்தி சாமான்களை எடுத்துக்கொண்டு போகாமல் தடுத்தது இண்டியன் பினல்கோட் செ. 186 படிக்கு குற்றமாகாது. [மகம்மது ஷாபி குறுத்து A. I. R. 1941 A. 639]

(3) **ஏழு தின கால அளவு:—**ஆக்ஷேபனை மனுவை ஏழு நாள் தாண்டிப் போட்டால் அதை கவனிக்க வேண்டியதில்லை. ஆக்ஷேப மனுதாரருக்கு ருஜு செய்ய அவகாசம் கொடுக்க வேண்டும்.

ஜப்தி செய்த சொத்தை விற்பது

26. (1) வரி செலுத்தத் தவறியவரிடமிருந்து வரியாகச் சேரவேண்டிய தொகை, வாரன்ட் கட்டணம், ஜப்திக் கட்டணம், சொத்தை மறியல் செய்ததனல் நேரிட்ட செலவுகள் ஆகிய இவற்றை 25 வது விதியின்படி கொடுக்கப்படும் நோட்டீஸில் சொல்லியுள்ள ஏழு நாள் கால அளவுக்குள் செலுத்தாவிட்டாலும், நிர்வாக அதிகாரி ஜப்திவாரன்டை சிறிது காலத்துக்கு நிறுத்தி வைக்காவிட்டா

லும், கைப்பற்றப்பட்ட சொத்தை அல்லது அதன் கணிசமான ஒரு பாகத்தை, நிர் வாக அதிகாரியின் உத்தரவுப்படி பகிரங்கஏல மூலம் விற்பனை செய்யவேண்டும்; அவர், அப்படி விற்று வந்த தொகையை, அவ்வாறு வரியாகச் சேரவேண்டிய தொகை, வாரன்ட் கட்டணம், ஜப்திக்கட்டணம், சொத்தை மறியல்செய்து விற்பத னுல் நேரிட்ட செலவுகள் ஆகிய இவற்றைச் சரிக்கட்ட பயன்படுத்த வேண்டும். கைப்பற்றுங்காலத்தில் அச்சொத்தை சுவாதீனத்தில் வைத்திருந்தவருக்கு, அதை விற்பனைசெய்து அதிலிருந்து கிடைத்தவற்றை மேலே சொன்னவாறு பயன்படுத்திக் கொண்ட பிறகு எஞ்சியிருக்கக்கூடிய யாதொருசொத்து அல்லது தொகையைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். அப்படி விற்பனை செய்ததிலிருந்து கிடைத்த தொகையானது, அவ்வாறு வரியாகச் சேரவேண்டிய தொகை, வாரன்ட் கட்டணம் ஜப்திக்கட்டணம், சொத்தை மறியல்செய்து விற்றதினுல் நேரிட்ட செலவுகள் ஆகிய இவற்றைச் செலுத்தப் போதுமானதாயிராவிட்டால் நிர்வாக அதிகாரி செலுத்தப் படாமல் எஞ்சியிருக்கும் தொகை விஷயமாய் மீண்டும் 24-வது விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(2) கைப்பற்றப்பட்ட சொத்து விரைவிலும் இயற்கையாகவும் அழிந்து போகக் கூடியதானுல், நிர்வாக உத்தியோகஸ்தர் சேரவேண்டிய தொகை, சீக்கிரமேசெலுத் தப்படாவிட்டால், மேற்படி ஏழு நாள் கால அளவு முடிவடைவதற்கு முன்பே எப்போ தாகிலும், மேற்படி சொத்தை விற்கலாம்.

(3) ஒரு சொத்தை ஜப்தி செய்ததை முன்னிட்டு மேற்படி ஏழு தின கால அளவுக்குள் யாதொரு ஆட்சேபனை செய்து கொள்ளப்பட்டால், நிர்வாக அதிகாரி அதை ஆலோசிக்கவேண்டும்; அதன் பேரில் விசாரணை முடிவடையும் வரையில் விற்பனையை ஒத்திப் போடலாம். ஜப்தி செய்யப்பட்ட சொத்து ஜப்தி செய்யப்படத் தக்கதல்லவென்று நிர்வாக அதிகாரி தீர்மானித்தால், அதை அல்லது அது ஏற் கெனவே விற்பனை செய்யப்பட்டிருந்தால், விற்பனையில் கிடைத்தவற்றை அவர், அதற்குப் பாத்தியதையுடையவராகக் காணப்படுகிறவருக்குத் திருப்பிக் கொடுத்து விட்டு, 24-வது விதியின்படி மீண்டும் நடவடிக்கை எடுக்கலாம்; வரி செலுத்தத் தவறியவர் மேற்படி சொத்து ஜப்தி செய்யப்படத் தக்கதல்ல என்று தமக்குத் தெரிந் திருந்தும். வேண்டுமென்றே மேற்படி சொத்து ஜப்தி செய்யப்படுவதை அனுமதித் திருப்பதாக நிர்வாக அதிகாரிக்கு சந்தேகமறத் தெரியவந்தால், அவரிடமிருந்து முதல் ஜப்தி விற்பனை இவற்றுக்கான சகல கட்டணங்களும் செலவுகளும் வசூலிக் கப்படத் தக்கவையாகும்.

27. **ஜப்தி கட்டணம்** (1) ஜப்தி கட்டணங்கள் இவ் விதிகளின் C. அனுபந்தத்தில் சொல்லி யிருக்கிற வீதங்களுக்கு மேற்படாமலும், பஞ்சா யத்து நிர்ணயிக்கக் கூடியபடியும் செலுத்தப்படத் தக்கவையாகும்.

(2) மேற்படி கட்டணங்களில் ஜப்தி செய்யப்பட்ட யாதொரு சொத்தை மறியல் செய்ததனுல் நேரிட்ட செலவுகள் அடங்குவதாய்க் கருதக் கூடாது.

28. **எங்கே கண்டாலும் சொத்தை ஜப்தி செய்ய** 24-வது விதியைச் சேர்ந்த (1) உபவிதியின்படி வரி செலுத்தத்தவறிய ஒருவரது சொத்தை அது மேற்படி பஞ்சாயத்தின் பிர தேசத்துக்குள் எங்கு காணப்பட்டாலும், ஜப்தி செய்யலாம்.

குறிப்பு

சொத்தை எங்கு காணப்பட்டாலும் ஜப்தி செய்யலாம்:—சொத்தானது எந்த வீட் டுக்கு வரி கொடுக்கவில்லையோ அதிலேயே இருக்க வேண்டும் என்பது கிடையாது. கழனி யில் இருந்தாலும் மற்றொரு இடத்தில் இருந்தாலும் ஜப்தி செய்யலாம்.

வரிகளை வசூலிக்கும் விதிகள்

வரிக்காக ஆட்சியாளர் சொத்தை ஜப்தி செய்யலாம்

29. யாதொரு வீடு விஷயமாகச் சேரவேண்டிய வரி முழுவதுமோ ஒரு பாகமோ 24-வது விதியைச் சேர்ந்த (1) உபவிதியில் குறிப்பிட்டுள்ள கால அளவின் முடிவில், செலுத்தப் படாமலிருந்து, அவ்வரியானது அவ்வாறு செலுத்தப் படாமலிருந்தது பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படா விட்டால், நிர்வாக அதிகாரி பதினைந்து தினங்களுக்கு குறையாமல் குறிப்பிட்ட ஒரு கால அளவுக்குள் அத்தொகையைச் செலுத்தும்படி பிரஸ்தாப சமயத்திலுள்ள அக்கட்டிடத்தின் ஆட்சியாளரைக் கேட்கலாம்; ஷ ஆட்சி யாளர் அவ்வாறு செலுத்தும்படிக் கேட்கப்பட்டும் செலுத்தாம லிருந்தால், நிர்வாக அதிகாரி அக்கட்டிடத்தில் காணப்படும் யாதொரு ஜங்கமசொத்தை ஜப்தி செய்து விற்கலாம்; மேலே சொல்லப்பட்ட விதிகளின் நிபந்தனைகள், அவசியமான மாறுதல்களுடன், இவ்விதியின்படிச் செய்யப்படும் சகல ஜப்திகளுக்கும் விற்பனை களுக்கும் பிரயோகப்படும். ஆனால், ஆட்சியாளரெவரும் ஜப்தி செய்வதையோ போதுமானபடி ஜப்தி செய்வதையோ வேண்டுமென்றே தடை செய்திருந்தால் ஒழிய, இவ்விதியின்படி வசூலிக்கத் தக்க யாதொரு தொகை விஷயமாய் பிராது தொடரப் படவோ, சிவில் வியாஜ்ஜியத்துகோ உட்பட்டவராக மாட்டார்.

குறிப்பு

பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படாவிட்டால் (Require) கேட்கலாம்:—இங்கிலீஷ் பதம் (Require) என்பதின் மொழி பெயர்ப்பு சரியல்ல. அது வேண்டலாம் என்று இருக்க வேண்டும். வாசாவாகசொன்னால் போதாது. எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டும். அப்படி எழுத்து மூலம் தெரிவிக்காமல் ஜப்தி செய்தால் பி. 174 படிக்கு நஷ்டம் கட்டிக் கொடுக்கும்படி நேரிடும்.

பஞ்சாயத்து வரியை நிலவரியாக வசூலிப்பது

30. யாதொருவரிடமிருந்து சேர வேண்டிய வரியை முழுவதுமோ ஒரு பாகமோ 24-வது விதியைச் சேர்ந்த (1) உபவிதியில் குறிப்பிட்டுள்ள கால அளவின் முடிவில் செலுத்தப் படாமலிருக்கிற அவ்வரியும் அல்லது அதன் பாகமும் அது சம்பந்தமாக செலுத்தத்தக்க எல்லா தொகைகளும், அது நிலவரி பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே வசூலிக்கத்தக்கவையாகும்.

குறிப்பு

நிலவரி பாக்கியாயிருந்தால் எப்படியோ :—மதராஸ் வருமான வசூல் ஆக்ட் (Madras Rent Recovery Act II of 11 of 1864) பி. 5 படிக்கு ரிவின்யூ அதிகாரிகள்தான் ஜப்தி செய்யவேண்டும். நிர்வாக அதிகாரிக்கு அதிகாரம் கிடையாது. அந்த சமயத்தில் தாசீல் தாரருக்கு இந்த விதி தெரிவித்து இதின்படி ஜப்தி செய்து வரியை வசூலித்துக்கொடுக்க எழுதிக்கொள்ள வேண்டும். பிரிவு 126ஐ பார்க்கவும்.

வரிக்காக கிரிமினல் கேஸ்

31. (1) 24-வது விதியைச்சேர்ந்த (2) உபவிதியின் பிரகாரம் பிராது செய் யப்படுகிற ஒவ்வொருவரும், அவர்வேண்டுமென்றே தாம் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்தாமல் விட்டார் என்ருவது, ஜப்தி செய்வதை அல்லது போது மான அளவு ஜப்தி செய்வதை வேண்டுமென்றே தடை செய்தார் என்ருவது மாஜிஸ்ட் ரேட்டுக்குச் சந்தேகமற எண்பிக்கப்பட்டால், அடியிற் கண்டவற்றுக்காக அவரிடமிருந்து சேரவேண்டிய தொகைக்கு இரண்டு மடங்குக்கு மேற்படாமல் ஓர் அபராதம் செலுத்தத் தக்கவராவார்,

(a) வரியும், வாரண்ட் கட்டணம் எதுவேனுமிருந்தால், அதுவும்.

(b) ஜப்தி செய்யப்பட்டிருந்தால், ஜப்திக் கட்டணமும், ஜப்தி செய்யப் பட்ட சொத்தை மறியல் செய்வதற்கும் விற்பதற்கும் செலவுகள் எவையேனும் ஏற்பட்டிருந்தால் அவையும்.

(2) (1) உபவிதியின் படிக்கான யாதொரு குற்றத்துக்காக ஒருவர் தண்டிக்கப்படும் போதெல்லாம், மாஜிஸ்ட்ரேட்டானவர் விதிக்கப்படக்கூடிய யாதொரு அபராதத்துடன் கூட, (1) உபவிதியைச்சேர்ந்த (a) (b) பகுதிகளில் குறிப்பிட்டுள்ள தலைப்புகளின் கீழ் சேர வேண்டிய தொகைகளிருந்தால், அவற்றைச் சுருக்கவகையாக வசூலித்துப் பஞ்சாயத்துக்குச்செலுத்தவும் வேண்டும்; மேலும் தாம் யுக்தமெனக் கருதினல் ஷி பிராதுக்குப் பிடித்த செலவு என்று தாம் நிச்சயிக்கக்கூடிய தொகை எதுவேனுமிருந்தால், அதையும் சுருக்க வகையாக வசூலித்துப் பஞ்சாயத்துக்கு செலுத்தலாம்.

குறிப்பு

வேண்டுமென்றே செலுத்தாமல் விட்டார் — ஜப்தி செய்வதை வேண்டுமென்றே தடை செய்தார்-என்ருவது மாஜிஸ்ட்ரேட்டுக்கு சந்தேகமற எண்பிக்கப்பட்டால் :—இவைகளை பஞ்சாயத்து கட்டாயம் ருஜுப்படுத்த வேண்டும். விதி 24 (1) ன் குறிப்பில் "வாரண்டின்படி" குறிப்பை பார்க்கவும்.

பிராது செலவு:—மாஜிஸ்டிரேட் சிவில் கோர்ட்டு மாதிரி இந்த வரி கேசுகள் விஷயத்தில் பிராது செலவை அதாவது பஞ்சாயத்து செலவை கட்டிக் கொடுக்கும்படி. செய்யலாம். எதிரிக்கு Compensation (கம்பன்சேஷன்) கொடுக்கலாம்.

நிர்வாக அதிகார வகையரா கிரயத்திற்கு வாங்கக்கூடாது

32. நிர்வாக அதிகாரியாவது, பஞ்சாயத்தின் யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியராவது, மேலே சொன்ன விதிகளின்படி ஜப்தி செய்யப்பட்ட சொத்தின் விற்பனையின்போது எந்தச் சொத்தையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ கிரயத்துக்கு வாங்கக்கூடாது.

வீட்டு வரிக்கும் இந்த விதிகளை உபயோகிக்கவும்

33. மேலே சொன்ன விதிகள், மேற்படி சட்டத்தின் 120 (4) பிரிவின் படிச் செய்யப்பட்ட விதிகளில் குறிப்பிட்டுள்ள ஆதாரத்தின் பேரில் விதித்து வசூலிக்கப்பட்ட வீட்டு வரி விதிப்பு, அதைப் புனர் விமரிசை செய்து அதை ஆட்சேபித்து அப்பீல் செய்துகொள்வது, அதை வசூலிப்பது ஆகிய இவை விஷயமாய்; தகுந்த மாறுதல்களுடன் பிரயோகப்படும்.

A – அனுபந்தம்

ஜப்தி வாரண்ட்

[24 (3) விதியைப் பார்க்கவும்.]

வாரண்ட் நெ.

என்பவருக்கு (வாரண்டை நிறைவேற்றுகிற பொறுப்புள்ள உத்தியோகஸ்தரின் பெயர்)

[சேரவேண்டிய வரி அல்லது வரிகளையும், மேற்படி வரி அல்லது வரிகள் வளவு எது விஷயமாகவேனும் சேரவேண்டியிருந்தால் அதையும் குறிப்பிடவும்.]

195 -ம் ஹு மீ தேதியுடன் முடிவடைகிற சேரவேண்டிய ரூ. நயா பைசா யை கிரமமாய் கொடுக்கும்படி என்பவரைக் கேட்டு, அவ்வாறு கேட்டதிலிருந்து பதினைந்து தினங்கள் முடிவடைந்திருந்தும் மேற்படி என்பவர் செலுத்தாதனல் அல்லது அவ்வாறு செலுத்தத் தவறியதற்குப் போதுமான காரணம் காட்டாததனல் மேற்படி ரூ. நயா பைசா. யுடன், வாரண்ட் கட்டணத்துக்காக இரண்டணு சேர்த்துக் கொடுக்கும்படிக் கேட்குமாறு இதனல் உங்களுக்குக் கட்டளை யிடப்படுகிறது; அவ்வாறு செலுத்தத் தவறினல் மேற்படி என்பவருடைய தட்டுமுட்டு சாமான்களை அல்லது சந்தர்ப்பத்துக்கேற்றபடி, பிரஸ்தாப வளவில் இருக்கிற யாதொரு தட்டுமுட்டு

சாமான்களை மேற்படி ரூ. நயா பைசா வாரண்ட் கட்டணம்; ஜப்தி கட்டணம் இவற்றுக்காக ரூ. நயாபைசா ஆகிய இவை சேர்ந்த தொகையான ரூ. நயாபைசா க்கும், மேற்படி ஜப்திகளை வைத்திருந்து விற்பதற்காகப் பிடிக்கும் செலவுகளைச் சரிக்கட்டப் போதுமான பின்னுமொரு தொகைக்குமான அளவுக்கு நீங்கள் ஜப்தி செய்யவேண்டும்; மேலும் மேற்படி ஜப்திக்கு அடுத்து ஏழு தினங்களுக்குள் மேற்படி வரி அல்லது வரிகள், கட்டணங்களை இவற்றுக்காகச் சேரவேண்டிய தொகையை மேற்படி ஜப்தியை வைத்திருப்பதற்காகப் பிடிக்கும் செலவுகளைச் சரிக்கட்டப் போதுமான பின்னுமொரு தொகையுடன்கூட செலுத்தாமலிருந்தால், நான் இனிமேல் பிறப்பிக்கக்கூடிய உத்திரவின்படி தட்டுமுட்டு சாமான்களை விற்று, பஞ்சாயத்தின் ஆபீசில் ஜப்தி செய்யப்பட்ட சொத்தை விற்றுவந்த தொகையைச் செலுத்தவும் வேண்டும்; மேற்படி தொகையிலிருந்து மேற்படி வரி அல்லது வரிகள், கட்டணங்கள் இவற்றுக்காகச் சேர வேண்டிய தொகையான ரூ. நயாபைசா யையும், மேற்படி ஜப்தியை வைத்திருந்து விற்பதற்குப் பிடித்த செலவுகளையும் கழித்துக்கொண்டு நிதியில் வரவு வைக்க வேண்டும்; உபரித்தொகை ஏதேனுமிருந்தால். அதை ஜப்தி செய்யப்பட்ட தட்டு முட்டு சாமான்களின் சொந்தக்காரரிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். மேற்படி என்பவரின் தட்டுமுட்டு சாமான்களில் ஜப்தியோ போதுமான ஜப்தியோ காணப்படாவிட்டால், அவ்வாறே இவ்வாண்டுடன் அதுபற்றி எனக்கு உறுதிமொழி கூறவேண்டும்.

நிர்வாக அதிகாரியின் கையெழுத்து

இடம்.

தேதி.

B. அனுபந்தம்

விற்பனை செய்யப்படும் பொருள்களின் ஜாபிதா, விற்பனை நோட்டீஸ் இவற்றுக்கான நமூனு

[25 (1) (b) விதியைப் பார்க்கவும்]

[கைப்பற்றப்பட்ட தட்டுமுட்டு சாமான்களைப்பற்றிய விவரங்களைக் குறிப்பிடவும்.]

மேலேயுள்ள ஜாப்தாவில் குறித்துள்ள தட்டுமுட்டு சாமான்களை, 195 -ம் வருஷம் மாதம் தேதியுடன் முடிவடைகிற க்கு ஓரத்தில் சொல்லப்பட்டுள்ள வரி அல்லது வரிகளுக்காகச் சேரவேண்டிய ரூ. நயாபைசா. -க்காக நான் இன்று கைப்பற்றியிருக்கிறேன் என்றும், வாரண்ட் கட்டணம், ஜப்திக் கட்டணம், தட்டுமுட்டு சாமான்களை வைத்திருப்பதற்குப் பிடித்த செலவு இவைகளுடன்கூட மேற்படி தொகையை, இந்த நோட்டீஸ் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு தினங்களுக்குள் பஞ்சாயத்து ஆபீசில் செலுத்தத் தவறினல், மேற்படி தட்டுமுட்டு சாமான்கள், பஞ்சாயத்து ஆபீசில் அல்லது நிர்வாக அதிகாரி கட்டளையிடக்கூடிய வேறு யாதொரு இடத்தில் 195 -ம் வருஷம் மாதம் -ம் நாளன்று விற்பனை செய்யப்படும் என்றும், மேற்படி தட்டுமுட்டு சாமான்கள் விரைவிலும் இயற்கையாகவும் அழிந்துபோகக் கூடியனவாயிருந்தால், அவை அதற்கு முந்திய யாதொரு தேதியில் விற்பனை செய்யப்படலாமென்றும் நீங்கள் அறியவும்.

இடம்.

ஜப்தி வாரண்டை நிறைவேற்றுகிற உத்தியோகஸ்தரின் கையெழுத்து.

C. அனுபந்தம்

ஐப்திகளுக்காகச் செலுத்தத்தக்க உச்சக் கட்டணங்களின் அட்டவணை

[27 (1) விதியைப் பார்க்கவும்]

எவ்வளவு தொகைக்காக ஜப்தி செய்யப்படுகிற தென்பது.	கட்டணம் ரூ.	நயாபைசா
1 ரூபாய்க்குக் கீழ்	0	25
1 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆனல் 5 ரூபாய்க்குக் குறைந்தும்	0	50
5 ரூபாயும் அதற்கு மெற்பட்டும்ஆனல் 10 ரூபாய்க்குக் குறைந்தும்	1	00
10 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆனல் 15 ரூபாயக்குக் குறைந்தும்	1	50
15 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆனல் 20 ரூபாய்க்குக் குறைந்தும்	2	00
20 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆனல் 25 ரூபாய்க்குக் குறைந்தும்	2	50
25 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆனல் 30 ரூபாய்க்குக் குறைந்தும்	3	00
30 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆனல் 35 ரூபாய்க்குக் குறைந்தும்	3	00
35 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆனல் 40 ரூபாய்க்குக் குறைந்தும்	4	00
40 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆனல் 45 ரூபாய்க்குக் குறைந்தும்	4	50
45 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆனல் 50 ரூபாய்க்குக் குறைந்தும்	5	00
50 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆனல் 60 ரூபாய்க்குக் குறைந்தும்	6	50
60 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆனல் 80 ரூபாய்க்குக் குறைந்தும்	7	50
80 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆனல் 100 ரூபாய்க்குக் குறைந்தும்	9	00
100 ரூபாயும் அதற்கு மேற்பட்டும்	100	00

மேற்படி கட்டணத்தில், எல்லா செலவுகளும் அடங்கும்; ஆனல் ஜப்தி செய்யப்பட்ட சொத்தின் பொருப்பில் ப்யூன்களை விட்டுவைத்தால் ; ஒவ்வொரு ப்யூனுக்கும் நாளொன்றுக்கும் மூன்று அணு (19 நயா பைசா) கொடுக்க வேண்டும்.

அரசாங்கக் காரியதரிசி.

முத்திரை கடிதாசி சட்டத்தின்கீழ் வருமானம்

124. (1) சொத்தினை (இன்னொருவருக்கு) மாற்றுகிற விவகாரங்களின்பேரில் விதிக்கப்படுவதற்குரிய தீர்வையானது—

சொத்தினை (இன்னொருவருக்கு) மாற்றுகிற விவகாரங்களின் பேரில் தீர்வை.

(a) கீழே குறிப்பிடப்பட்ட விவரப்படியுள்ளதும் ஒரு பஞ்சாயத்தினுடைய அதிகார வரம்புக்குட்பட்ட விஸ்தீர்ணத்திலே இருக்கிற ஸ்தாவரப் பொருளுக்குச் சம்பந்தப்படுவதுமான பத்திரம் ஒவ்வொன்றின் பேரிலும், சென்னை ராஜ்யத்திலே பிரஸ்தாப காலத்தில் செலாவாணியாய்க் கொண்டு இருக்கிறபடியுள்ள 1899-ம்வருஷத்திய இந்திய முத்திரைக் கடிதாசி சட்டத்தினல் விதிக்கப்படுகிற தீர்வையின்பேரில் ஒரு ஸர்சார்ஜ் ரூபத்திலும்,

(b) அப்படிப்பட்ட பத்திரத்துக்கு எதிரில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையிலே ஐந்து சத வீதத்திற்கு மேற்படாமல் அரசாங்கத்தாரால் நிச்சயிக்கப்படக்கூடிய வீதத்தின் படியும், விதித்து வாங்கப்படவேண்டும்.

பத்திரத்தின் விவரம்.	இன்ன தொகையின் பேரில் தீர்வை விதித்து வாங்கவேண்டு மென்பது.
(i) ஸ்தாவர பொருளின் விற்பனை	விற்பனைக்கான ஐவேஜு என்று அந்தப்பத்திரத்தில் கண்டு இருக்கிற தொகை அல்லது மதிப்பு.
(ii) ஸ்தாவர பொருனின் பரிவர்த்தனை.	எல்லாவற்றிலும் அதிகமதிப்புள்ள சொத்துக்குரியதென்று அந்தப் பத்திரத்தில் கண்டிருக்கிற மதிப்பு.
(iii) ஸ்தாவர பொருளின் தானம்.	பிரஸ்தாப சொத்துக் குரியதென்று அந்தப் பத்திரத்தில் கண்டிருக்கிற மதிப்பு

முத்திரை கடிதாசி சட்டத்தின்கீழ் வருமானம்

பத்திரத்தின் விவரம்.	இன்ன தொகையின் பேரில் தீர்வை விதித்து வாங்கவேண்டு மென்பது.
(iv) ஸ்தாவர பொருளின் சுவாதீன அடைமானம்	பிரஸ்தாப அடைமானத்தினுல் ஈடு செய்யப்பட்டிருப்ப தென்று அந்தப் பத்திரத்தின் கண்டிருக்கிற தொகை.
(v) ஸ்தாவர பொருளின் நிரந்தரக் குத்தகை.	அந்தக் குத்தகையின் முதல் ஐம்பது வருஷம் விஷய மாய்ச் செலுத்தப்படுவதாக அல்லது கொடுக்கப் படுவதாக இருக்கக்கூடிய குத்தகைத் தொகைகளுக் குரியதென்று அந்தப் பத்திரத்திலே கண்டிருக்கிற மொத்த தொகை அல்லது மதிப்பில் ஆறில் ஒரு பங்குக்குச் சமமான ஒரு தொகை.

(2) மேற் சொன்ன தீர்வை விதிக்கப்படுவதன்பேரில்—

(a) யாதொரு பஞ்சாயத்தின் அதிகார வரம்புக்குட்பட்ட பிரதேசத்திலிருக்கிற சொத்து விஷயமாகவும் பிரத்தியேகமாக விவரங்களைக் கண்டெழுத வேண்டுமென்று இந்திய முத்திரைக் கடிதாசி சட்டத்தின் 27-வது பிரிவில் திட்டமாகச் சொல்லி யிருந்தால் எப்படியோ அப்படியே அப் பிரிவை வாசித்து அதற்கு அர்த்தம் பண்ண வேண்டும்.

(b) அதே சட்டத்தின் 64-வது பிரிவு மேற்படி பஞ்சாயத்தையும் அரசாங்கத் தாரையும் குறிப்பதாயிருந்தால் எப்படியோ அப்படியே அப் பிரிவை வாசித்து அதற்கு அர்த்தம் பண்ணவேண்டும்.

(3) (a) இந்த பிரிவின் கீழ் பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதிக்குள் உள்ள பஞ்சாயத்து கிராமங்களில், சொத்தினை (இன்னொரு வருக்கு மாற்றுவதின் பேரில் விதிக்கப்படும் சர்சார்ஜு (அதிக துகை)யை அந்த மொத்த தொகுதிக்காக ஒவ்வொரு வருஷமும் ஒன்று சேர்த்து அந்த தொகுதியிலுள்ள எல்லா கிராம பஞ்சாயத்துகளுக் கும் அந்தந்த கிராமத்தின் நிலவரியின் வீதாசாரம் பங்கிட்டு கொடுக்கப்படவேண்டும்.

(b) இந்த பிரிவின் கீழ் யாதொரு பட்டண பஞ்சாயத்தில் சொத்தினை, இன்னொருவருக்கு மாற்றுவதின் பேரில் விதிக்கப்படும் சர்சார்ஜு (அதிக துகை) பட்டண பஞ்சாயத்து நிதிக்கு சேர்க்கப்படும்.

(4) இந்தப் பிரிவின் கீழ் சொத்துக்களை மாற்றுகிற விவகாரங்களின்பேரில் தீர்வைக்கான ஸர்சார்ஜாக பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதியைச்சேர்ந்த பஞ்சாயத்து கிராமங்களில் வசூல் செய்யப்படுகிற தொகைகள் அந்தத் தொகுதி முழுமைக்கும் ஒவ் வொரு வருஷமும் ஒன்ருகச் சேர்க்கப்பட்டு பிரஸ்தாப கிராமத்தில் நிலவரிக்குத் தகுந்த வீதாசாரப்படி அந்தத்தொகுதியிலுள்ள சகல பஞ்சாயத்துக்களுக்குமிடையிலும் வினி யோகிக்கப்படவேண்டும்.

குறிப்பு

பொது :—இதின் கீழ் பழைய விதிகள் அச்சிடப்பட்டு இருக்கின்றன. அவைகளை கவனித்து வாசிக்கப்பட வேண்டும்.

பி. 124 (3) (a) இந்த சட்டத்திற்கு முந்தி மதராஸ் கிராம பஞ்சாயத்துகள் சட்டம் 67 படிக்கும் விதிகள்படிக்கும் அந்த அந்த 2-ம் தர பஞ்சாயத்துகள் (அதாவது தற்கால கிராம பஞ்சாயத்துகள் மாதிரி ஆனவை) தங்கள் கிராமங்களின் நிலங்கள் பேரில் வசூலித்த சர் சார்ஜை (அதிக துகை)யை அந்தந்த கிராம பஞ்சாயத்தே அடைந்தது. இப்போதும் அடியில் கண்ட (b) கிளாஸ் படிக்கு பட்டணம் பஞ்சாயத்து நிலங்கள் பேரில் வசூலித்த சர் சார்ஜ் அந்த பட்டண பஞ்சாயத்து நிதிக்கு சேர்க்கப்படும். ஆனுல் கிராம பஞ்சாயத்துகள் விஷயத்தில் இந்த பிரிவின் படிக்கு இனி அப்படி நடக்காது.

ஏ-என்ற ஒருகிராமத்தில் யாதொரு சொத்தினை மாற்றுதல் இல்லாமல் இருக்கலாம். அந்த கிராமத்தில் நில வரி அதிகமாக இருக்கலாம். மற்றொரு பி-என்ற கிராமத்தில் சொத்தினை மாற்றுதல் அதிகமாக யிருக்கலாம். ஆனுல் நில வரி குறைவாக யிருக்க லாம். அப்படியிருந்தும் இந்த (a) கிளாஸின் படிக்கு ஏ-கிராமத்தில் யாதொரு சொத்தினை

மாற்றுதல் இல்லாமலே பி-கிராமத்தின் சர் சார்ஜையை பங்கிட்டு கொண்டு போகிறது. மேலும் இனி கிராம பஞ்சாயத்துகள் தங்களுக்கு சேரவேண்டிய சர் சார்ஜ் துகைகளை பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களிடம் பெறவேண்டியதாக இருக்கிறது. இதற்கு அரசாங்கம் தக்க விதிகளை செய்யும்.

பி. 124 கீழ் விதிகள் : சொத்தின் டிரான்ஸ்பர்கள் மீது தீர்வை. (ஞ. XI: 11)

1. **சிறு பெயர்:**—இவ்விதிகளை (சொத்தின் டிரான்ஸ்பர்கள் மீது தீர்வை விதிப்பதைக் குறித்த) 1951-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து பஞ்சாயத்து விதிகள் என்று சொல்லலாம்.

2. **அர்த்தம்:**—இவ்விதிகளில், சங்கதியினுலாவது சந்தர்ப்பத்தினுலாவது விரோதம் ஒன்றும் இராவிட்டால்.—

(1) 'மேற்படி சட்டம்' என்பது கிராமப் பஞ்சாயத்துக்களைக் குறித்த 1950-ம் வருஷத்திய சென்னபட்டணத்துச் சட்டம் என்று பொருள்படும்.

(2) 'பத்திரம்' என்பது ஸ்தாவர சொத்தின் நிரந்தரமான விற்பனை பரிவர்த்தனை, தானம், சுவாதீன அடைமானம் அல்லது குத்தகை பற்றிய எந்தப் பத்திரத்தின்மீது 67-வது பிரிவின்படி டிரான்ஸ்பர் தீர்வை விதிக்கத் தக்கதாயிருக்கிறதோ அத்தகைய ஒரு பத்திரம் என்று பொருள்படும்.

(3) 'பிரிவு' என்பது மேற்படி சட்டத்தில் கண்ட ஒரு பிரிவு என்று பொருள்படும்.

(4) 'முத்திரைக் காகிதச் சட்டம்' என்பது சென்ன ராஜ்யத்திலே அமுலிலிருக்கிற 1899-ம் வருஷத்திய முத்திரைக் காகிதச் சட்டம் என்று பொருள்படும்.

(5) 'டிரான்ஸ்பர் தீர்வை' என்பது சொத்தின் டிரான்ஸ்பர்கள் மீது 67-வது பிரிவின்படி விதிக்கப்படத்தக்க தீர்வை என்று பொருள்படும்.

(6) இவ் விதிகளில் அர்த்தம் சொல்லப்பட்டிராத சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் முத்திரைக் காகிதச் சட்டத்திலும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளிலும் முறையே என்ன அர்த்தங்கள் சொல்லப்பட்டு இருக்கின்றனவோ அந்த அர்த்தங்களையே மேற்படி சகல சொற்களும் சொற்றொடர்களும் உடையனவாயிருக்கும்.

3. **முத்திரைக் காகிதச் சட்டத்தின் ஷரத்துக்கள் டிரான்ஸ்பர் தீர்வைக்குப் பிரயோகப்படுமென்பது.**—(1) முத்திரைக் காகிதச் சட்டத்திலும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளிலும் கண்ட சகல ஷரத்துக்களும், அச்சட்டத்தின் பிரகாரம் வாங்கப்படத்தக்க தீர்வை சம்பந்தமாக பிரயோகப்படுவது போலவே, சொத்தின் டிரான்ஸ்பர் சம்பந்தமாகவும் சாத்தியமான வரை பிரயோகப்படும்.

(2) டிரான்ஸ்பர் தீர்வையாவது அதன் யாதொரு பாகமாவது இரண்டணுவுக்குக் குறைவாயிருந்தால், அத் தீர்வையையாகிலும் பாகத்தையாகிலும் வசூலிக்கலாகாது.

4. **பத்திரங்களில் குறிப்பிட வேண்டிய விவரங்கள் பற்றி பதிவு செய்யும் உத்தியோகஸ்தர்களின் கடமைகள்:**—(1) யாதொரு பத்திரம் பதிவு செய்யப்படுவதற்காக, பதிவு செய்யும் உத்தியோகஸ்தர் ஒருவரிடம் கொடுத்துக் கொள்ளப்படும்போதெல்லாம் அவர் முத்திரைக் காகிதச் சட்டத்தின் 27-வது பிரிவை, கிராமப் பஞ்சாயத்துக்களைக் குறித்து 1950-ம் வருஷத்திய சென்னப் பட்டணத்துச் சட்டத்தின் 124 (2) (a) பிரிவுடன் சேர்த்து வாசிப்பதன் விளைவாக செய்யவேண்டி யிருக்கிறபடி, மேற்சொன்ன 27-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் தனியாக மேற்படி பத்திரத்தில் கண்டிருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும்; மேலும், சம்பந்தப்பட்ட சொத்து எந்தப் பஞ்சாயத்தின் அதிகார வரம்புக்குள் இருக்கிறதோ அப் பஞ்சாயத்து மேற்படி பத்திரத்தில் நிச்சயமாக தெளிவாய் குறிக்கப்படும்படி அவர் பார்த்துக் கொள்ளவேண்டும்,

(2) மேற்படி விவரங்கள் அப்பத்திரத்திலே அவ்வாறு தனியாக குறிக்கப்பட்டிராவிட்டால், பதிவு செய்யும் உத்தியோகஸ்தரானவர் அதை திருப்பிக் கொடுக்காமல் வைத்துக் கொண்டு, அதை அசலாகவே கலெக்டருக்கு அனுப்பவேண்டும்; அவ்வாறு அனுப்புகையில் முத்திரைக் காகிதச் சட்டத்தின் 64-வது பிரிவையும் பஞ்சாயத்துக்களை குறித்த 1958-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தின் 124 (2)(b) பிரிவையும் அவர் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டும்.

முத்திரை கடிதாசி சட்டத்தின்கீழ் வருமானம்

(3) பரிவர்த்தனைப் பத்திரத்தின்மீது விதிக்கப்படத்தக்க தீர்வை பின்வருமாறு முறைப்படுத்தப்படும்

(a) பரிவர்த்தனை செய்துகொள்ளப்படுகிற சொத்துக்களின் மதிப்புகள் சமமாயிராவிட்டால், அதிக மதிப்புள்ள சொத்தின் மதிப்பின்மீது அத்தீர்வை விதிக்கப்படும்.

(b) பரிவர்த்தனை செய்துகொள்ளப்படுகிற சொத்துக்களின் மதிப்புகள் சமமாயிருந்தால் விதிக்கப்படத்தக்க தீர்வையின் அதிக தொகை விதிக்கப்படவேண்டும்.

5. டிரான்ஸ்பர் தீர்வை சம்பந்தமாக கணக்குகளை வைத்து வருவதும் ஒருங்கிணைப்பதும்:—(1) (a) பதிவு செய்கிற உத்தியோகஸ்தர் ஒவ்வொருவரும், தம்மால் பதிவு செய்யப்பட்ட பத்திரம் ஒவ்வொன்றின் விஷயமாகவும் செலுத்தப்பட்ட தீர்வையைக் குறித்த கணக்கு ஒன்றை வைத்து வரவேண்டும். இந்த கணக்கிலே முத்திரைக் காகிதச் சட்டத்தின்படி விதிக்கப்பட்டத்தீர்வையையும் டிரான்ஸ்பர் தீர்வையையும் தனித்தனியாகக் காட்டவேண்டும். மேலும், அவர், எந்தப் பஞ்சாயத்தின் அதிகார வரம்புக்குள் சம்பந்தப்பட்ட சொத்து இருக்கிறதோ அப்படிப்பட்ட பஞ்சாயத்து ஒவ்வொன்றுக்காகவும் ஒரு தனிக் கணக்கு வைத்து வரவேண்டும் அப்படி செய்கையில் எந்தத் தொகையின் பேரில் டிரான்ஸ்பர் தீர்வை விதிக்கப்படப்போகிறதோ அந்தத் தொகையை, அவசியமானபோது, சம்பந்தப்பட்ட கட்சிக்காரரிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

(b) பரிவர்த்தனைப் பத்திரம் ஒன்றின்மீது விதிக்கப்படும் தீர்வையானது அந்தந்த ஸ்தலப் பிரதேசங்களில் உள்ள சொத்துக்களின் மீது விதிக்கப்படத்தக்க தீர்வைத் தொகையின் வீதாசாரத்தை அனுசரித்து சம்பந்தப்பட்ட ஸ்தல அதிகார சபைகளிடையே பங்கிடப்படவேண்டும்.

(c) பத்திரப் பதிவு இன்ஸ்பெக்டர்-ஜெனரலானவர் மூன்று மாதத்துக்கொரு தடவை அத்தகைய ஒவ்வொரு பஞ்சாயத்துக்காகவும் மேற்படி கணக்கை ஒருங்கிணைக்கவேண்டும்.

(d) பதிவு செய்யும் உத்தியோகஸ்தர்கள் இதன் பொருட்டு கணக்குகள் வைத்து வருவது சம்பந்தமாகவும் கால் வருஷம் ஒவ்வொன்றுக்காகவும் ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகளை இன்ன நமூனப்படி சென்னை அகௌன்டென்ட் ஜெனரலுக்கு அனுப்பவேண்டுமென்பது சம்பந்தமாகவும், இன்ஸ்பெக்டர்-ஜெனரல் நிர்வாக உத்தரவுகள் பிறப்பிக்கலாம்.

(2) 1908-ம் வருஷத்திய இந்தியப் பத்திரப்பதிவு சட்டத்தில் கண்ட 17-வது பிரிவின்படிக் கட்டாயமாக பதிவு செய்யப்படத் தக்கவையல்ல என்னும் காரணத்தினால், ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர்களின் கைக்கு வந்திராத பத்திரங்களின் விஷயத்தில், முத்திரைக் காகிதச் சட்டத்தில் கண்ட 31 அல்லது 41-வது பிரிவின்படி அத்தகைய ஒரு பத்திரம் எந்தக் கலெக்டருக்கு முன் ஆஜர் படுத்தப்படுகிறதோ அந்தக் கலெக்டராவது மேற்படி சட்டத்தின் கண்ட 33-வது பிரிவின்படி அத்தகைய யாதொரு பத்திரத்தை தம் வசமே வைத்துக் கொள்கிற அல்லது மேற்படி சட்டத்தின் கண்ட 38-வது பிரிவின்படி அத்தகைய யாதொரு பத்திரம் விஷயமாய்ச் செலுத்தப்பட்ட தீர்வையையும் அபராதத்தையும் குறித்த ஒரு ஸெர்டிபிகேட்டையேனும் அத்தகைய யாதொரு பத்திரத்தின் அசல் பிரதியையேனும் பெற்றுக்கொள்கிற கலெக்டராவது அப்படிப்பட்ட பத்திரம் ஒவ்வொன்றின் விஷயமாகவும் செலுத்தப்பட்ட தீர்வையின் கணக்கு ஒன்றை வைத்துவரவேண்டும்; அந்தக் கணக்கிலே, முத்திரைக் காகிதச் சட்டத்தினால் விதிக்கப்பட்ட தீர்வையையும், டிரான்ஸ்பர் தீர்வையையும் தனித்தனியாகக் காட்டவேண்டும். அன்றியும் மேற்படி கலெக்டரானவர், கால் வருஷத்துக்குரிய ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கு ஒன்றை, ஒவ்வொரு கால் வருஷமும் முடிந்த பிறகு ஒரு மாதத்துக்குள் சம்பந்தப்பட்ட அஷ்யூரன்சுகளின் டிஸ்ட்ரிக்ட் ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்பவேண்டும். அத்தகைய பத்திரம் ஒவ்வொன்றின் விஷயத்திலும், அதை எழுதிக் கொடுப்பவர், தாவாதாரர், இருவர்களின் பெயர்கள் எழுதிக்கொடுத்த தேதி, விவகாரத்தின் தன்மை, டிரான்ஸ்பர் தீர்வை விதிக்கப்படத்தக்க தொகை, பஞ்சாயத்தின் எல்லைகளுக்குள் அல்லது அவற்றிற்கு வெளியே இருக்கிற சொத்து பற்றிய விவரம் ஆகிய இவைகளைக் குறித்த தகவல்கள் மேற்படி ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கில் கண்டிருக்கவேண்டும்.

(3) எவ்விஷயத்திலேனும் யாதொரு பத்திரத்தின் மீது செலுத்தப்படத்தக்க முழுத் தீர்வையையும் வசூலிக்க முடியாவிட்டால், அப்போது, மேற்படி பத்திரம் நிமித்தமாக வசூலிக்கப்பட்ட தீர்வையில், முத்திரைக் காகிதச் சட்டத்தினுல் விதிக்கப்பட்ட தீர்வைக்கு அதிகப்படியாயுள்ள பாகம் மாத்திரமே டிரான்ஸ்பர் தீர்வை என்று இவ் விதியில் குறிக்கப்பட்ட கணக்குகளில் கருதப்படும்

6. திருப்பிக் கொடுக்கப்பட்ட டிரான்ஸ்பர் தீர்வைகளைப்பற்றிய கால் வருஷ ஸ்டேட்மென்டை சம்பந்தப்பட்ட ஜில்லா ரெஜிஸ்ட்ராருக்குக் கலெக்டர் அனுப்பவேண்டுமென்பது:—யாதொரு பத்திரத்தின்மீது செலுத்தப்பட்ட டிரான்ஸ்பர் தீர்வையைத் திருப்பிக் கொடுப்பதற்கு அனுமதியளிக்கிற கலெக்டர் ஒவ்வொருவரும், எந்தப் பத்திரங்கள் சம்பந்தமாக ஒரு கால் வருஷத்தில் தொகைகளைத் திருப்பிக் கொடுப்பதற்கு அவ்வாறு அனுமதியளிக்கப்பட்டதோ அந்தப் பத்திரங்களைப் பற்றிய ஸ்டேட்மென்ட் ஒன்றை அப்படிப்பட்ட கால் வருஷம் ஒவ்வொன்றும் முடிந்த பிறகு ஒரு மாதத்துக்குள் சம்பந்தப்பட்ட அஷ்யூரன்ஸுகளின் ஜில்லா ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்பவேண்டும் திருப்பிக் கொடுக்கப்பட்ட டிரான்ஸ்பர் தீர்வையின் தொகை அத்தகைய பத்திரம் ஒவ்வொன்றின் சம்பந்தமாகவும் 5 (2) விதியில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் ஆகிய இவற்றை மேற்படி ஸ்டேட்மெண்டில் குறிப்பிடவேண்டும்.

7 ஸ்தல அதிகார சபைகளுக்குக் கொடுக்கப்படத்தக்க தொகை விஷயமாய் பத்திரப்பதிவு இன்ஸ்பெக்டர்-ஜெனரல், அகௌன்டென்ட் ஜெனரலுக்கு தகவல் அனுப்பவேண்டுமென்பது:—ஒவ்வொரு கால் வருஷத்திலும் பஞ்சாயத்து ஒவ்வொன்றுக்கும் கொடுக்கப்படத்தக்க தொகை விஷயமாகவும், 5-வது விதியைச் சேர்ந்த (1) (2) உபவிதிகளில் குறிப்பிடப்பட்ட பத்திரங்கள் சம்பந்தமாக, டிரான்ஸ்பர் தீர்வையை வசூலிப்பதற்காக கழித்துக்கொள்ளவேண்டியதும் அரசாங்கத்தாருக்கு வரவு வைக்கவேண்டியதுமான தொகை விஷயமாகவுமான தகவலைப் பத்திரப் பதிவு இன்ஸ்பெக்டர் ஜெனரலானவர் ஒவ்வொரு கால் வருஷமும் முடிந்த பிறகு இரண்டு மாதத்துக்குள் சென்னை அக்கௌன்டென்ட்-ஜெனரலுக்கு அனுப்பவேண்டும்.

டிரான்ஸ்பர் தீர்வையை வசூலிப்பதற்காகப் பிடிக்கிற செலவுனிமித்தம் அத் தீர்வையில் மூன்று சதவீத பாகத்தையும் திருப்பிக் கொடுக்கப்படுவதற் குரியவையென்று 6-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள தொகைகள் எவையேனுமிருந்தால் அவைகளையும் கழித்துக்கொண்ட பிறகு அத் தீர்வையில் எஞ்சி நிற்கும் பாகமே சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்படத்தக்க தொகையாகும்.

ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் கொடுக்கப்படத்தக்க நிகர தொகையைக் கணக்கிடுகையில், ஆறு தம்பிடியாகவோ அதற்கு மேற்பட்டோ உள்ள ஓர் அணுவின் பின்னங்கள் ஓர் அணுவென்று கணக்கிடப்படவேண்டும்; ஆறு தம்பிடிக்குக் குறைவான பின்னங்களை விட்டுவிடவேண்டும்.

அக்கௌன்டென்ட்-ஜெனரல் ஸ்தல அதிகார சபைகளுக்குத் தொகைகள் கொடுப்பது:—சென்னையிலுள்ள அக்கௌன்டென்ட்-ஜெனரலானவர், ஒவ்வொரு கால் வருஷமும் முடிந்த பிறகு மூன்று மாதங்களுக்குள், 7-வது விதியின்படி பத்திரப் பதிவு இன்ஸ்பெக்டர்-ஜெனரல் தெரிவித்த தகவலை அனுசரித்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்படத்தக்கத் தொகைகளை அவைகளுக்குக் கொடுக்குமாறு கஜானுவுக்குத் தீர்வையை வசூலிப்பதற்காக கழித்துக் கொள்ளப்படும் தொகைகள் அரசாங்கத்தாருக்கு வரவு வைக்கப்படவேண்டும்.

125. 116-வது அல்லது 119-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள யாதொரு ஸர்சார்ஜ் அல்லது வரியை செலுத்துவதினின்றும் விலக்கு எதையும் நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளை அனுசரித்தன்றி மற்றபடி பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் அளிக்கக்கூடாது.

விலக்குகள்

ஆனல், குறிப்பிட்ட யாதொரு விஷயத்தில் அரசாங்கத்தின் முன் அனுமதியுடன் அப்படி விலக்கு அளிக்கப்படலாம்.

நிலவரி சிப்பந்தி வரி வசூலிப்பது

பஞ்சாயத்துக்களுக்குச் சேரவேண்டிய வீட்டு வரியை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தயாரிக்கவும், வரிகளையும் கட்டணங்களையும் வசூல் செய்யும்படி நிலவரிச் சிப்பந்திக்கு உத்தர விடுவதற்கான அதிகாரம்

126. நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு, நிர்ணயிக்கப்படக்கூடிய நமூனு வில்வீட்டுவரிவிதிப்பு ரெஜிஸ்டர் ஒன்றை ஐந்தாண்டுக்கொரு முறை தயாரிக்கும்படியும், பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு சேரவேண்டியிருக்கிற யாதொரு வரியை அல்லது கட்டணத்தை கலெக்டர் பொதுவான அல்லது விசேஷ உத்தரவு பிறப்பித்து நிர்ணயிக்கக்கூடியபடி வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகையில் $6\frac{1}{4}$ சதவீதத்திற்கு மேற்படாமல் ஊதியம் பெற்றுக் கொண்டு வசூலிக்குமாறு நிலவரி இலாகாவைச் சேர்ந்த சிப்பந்திக்கு நிர்வாக அதிகாரி அல்லது கமிஷனர் உத்தரவிடலாம்.

குறிப்பு

பொது.—நிலவரி சிப்பந்திக்கு கொடுக்கும் ஊதியம் ஆறேகால் சதவீதத்திற்குமேல் இருக்கக்கூடாது. சி. வி. நா. 12, 13, 14 விதிகளை, பக்கங்கள் 286, 290, 291 களில் பார்க்கவும்,

நிலவரி சிப்பந்தி வரிகளை வசூலிப்பது (க-XXII-22)
செ. 126-ன் கீழ் விதிகள்

1. யாதொரு பஞ்சாயத்து தனக்குச் சேரவேண்டிய வரிகளையும் கட்டணங்களையும் வசூலிக்க எந்தச் சிப்பந்தியையும் வேலைக்கமர்த்திக் கொள்ளாத விஷயங்களில்; அப்பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர், அப்படி வசூலிக்கும் காரியத்துக்காக, பிரஸ்தாப கிராமத்தின் அல்லது அதன் யாதொரு பாகத்தின் பொறுப்பு வகிக்கிற, சந்தர்ப்பத்துக்கேற்ப, கிராம பெரியதனக்காரர்களின் சேவையைக் கோரி கலெக்டருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

2. மேற்படி கலெக்டரானவர், ஒரு பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி விண்ணப்பம் செய்து கொள்வதன் பேரில், அந்தக் கிராமத்தின் அல்லது அதன் யாதொரு பாகத்தின் பொறுப்பு வகிக்கிற, சந்தர்ப்பத்துக்கேற்ப, கிராமப் பெரியதனக்காரரையாகிலும் கிராமப் பெரியதனக்காரர்களையாகிலும், எவரேனும் மேற்படி பஞ்சாயத்துக்குச் செலுத்த வேண்டிய வரி அல்லது கட்டணத்தை அவரிட மிருந்து வசூலிக்க அனுமதி கொடுக்கலாம்.

3. 2-வது விதியின்படி அனுமதி கொடுக்கையில், கலெக்டர் அவசிய மென்று கருதக்கூடிய திட்டங்களைக் குறிப்பிடலாம்.

4. 126-வது பிரிவின் பிரகாரம் கலெக்டர் நிச்சயிக்கும் ஊதியத்தை நிர்வாக அதிகாரி, சந்தர்ப்பத்துக்கேற்ப, கிராமப் பெரிதனக்காரருக்கு அல்லது கிராமப் பெரியதனக்காரர்களுக்கு பஞ்சாயத்து நிதியிலிருந்து கொடுக்க வேண்டும்.

வசூலிக்க முடியாத தொகைகளைக் கணக்கிலிருந்து அடித்து விடுவது

127. நிர்ணயிக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் மேல்விசாரணைகளுக்கும் உட்பட்டு, யாதொரு பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன்கவுன்ஸில்யாதொரு ஒப்பந்தத்தின்படியாகிலும், மற்றப்படியாகிலும் தனக்குச் சேரவேண்டியிருக்கிற யாதொரு வரி, கட்டணம் அல்லது இதர பணத்தையாவது அது சம்பந்தமாய் செலுத்தப்படத்தக்க யாதொரு தொகையையாவது வசூலிக்க முடியாதென்று அபிப்பிராயப்பட்டால், அது அப்படிப்பட்ட வரி, கட்டணம், பணம் அல்லது தொகையைக் கணக்கிலிருந்து அடித்து விடலாம்.

ஆனால், கலெக்டராவது அவருடைய கீழ் உத்தியோகஸ்தர்கள் எவராவது யாதொரு பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்குச் சேரவேண்டிய எந்த வரியையாகிலும் கட்டணத்தையாகிலும் இதர பணத்தையாகிலும், வசூலிப்

பதற்குப் பொறுப்பாளியாக இருந்தால், அந்த வரியையாயினும், கட்டணத்தையாயினும், பணத்தையாயினும் அது சம்பந்தமாய் செலுத்தப்படத்தக்க யாதொரு தொகையையாயினும் வசூலிக்க முடியாதென்னும் ஹேதுவின்பேரில் அதைக் கணக்கிலிருந்து அடித்து விடுவதற்கான அதிகாரத்தை, ரெவினியு போர்டாராவது அவர்களுடைய மேல் விசாரணைக்குட்பட்டு, கலெக்டராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கிற யாதொரு உத்தியோகஸ்தராவது செலுத்தவேண்டும்.

குறிப்பு

வசூலிக்க முடியாத வரிகள், கட்டணங்கள் முதலியவற்றைக் கணக்கிலிருந்து அடித்து விடுவதற்கான அதிகாரம்—வறையறைகளும் - மேல்விசாரணையும்.

விதி. (பி. 127) (க - 21)

ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு ஒப்பந்தத்தின்படியோ மற்றப்படியோ சேரவேண்டிய யாதொரு வரி, கட்டணம் அல்லது இதர தொகை வசூலிக்க முடியாததென்று அதைக் கணக்கிலிருந்து அடித்து விடுவதற்காக மேற்படி சட்டத்தின் 127-வது பிரிவின்படி அப்பஞ்சாயத்துக்குள்ள அதிகாரமானது அடியிற்கண்ட வரையறைகளுக்கும் மேல் விசாரணைக்கும் உட்பட்டதாகும்; அவையாவன.—

(1) பில் கலெக்டராவது கிராமப் பெரிதனக்காரரிடம் மேற்படி சட்டத்தின் 126-வது பிரிவின் பிரகாரம் வரிகள் அல்லது கட்டணங்கள் வசூலிக்கும் வேலை ஒப்புவிக்கப் பெற்றிருந்தால் அவராவது வசூலிக்க முடியாதவையென்று தெரியவரும் தொகைகளைப்பற்றி—அதற்கான காரணங்கள் சகிதமாக—ரிப்போர்ட் செய்யவேண்டும்; இதை நிர்வாக அதிகாரி சரிபார்க்க வேண்டும். **கால் வருஷத்துக் கொருதடவை அத்தகைய தொகைகள் எல்லாவற்றையும் பற்றிய பட்டியல் ஒன்றைத் தயாரித்துப் பஞ்சாயத்தின் அனுமதியைப் பெறுவதற்காக அதன் அடுத்த கூட்டத்தில் அதை அப்பஞ்சாயத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும்:** அத்தோடுகூட அவற்றைக் கணக்கிலிருந்து அடித்து விடுவதற்காக நிர்வாக அதிகாரி காட்டும் காரணங்களையும் செய்யும் சிபாரிசுகளையும் அவ்வாறு சமர்ப்பிக்க வேண்டும். நிர்வாக அதிகாரி அத்தொகையைக் கணக்கிலிருந்து அடித்துவிடச் சிபாரிசு செய்வதற்கு முன் வரி செலுத்தத் தவறிப் போனவருக்கு அந்தக் கிராமத்துக்குள் ஜப்தி செய்யப்படக்கூடிய எந்தச் சொத்தும் இல்லையா என்றும், வரி வசூலிப்பதற்கான எல்லா முறைகளும் கையாண்டு பார்த்து பயனில்லை யெனத் தெரியவந்ததா என்றும் பார்க்கவேண்டும்.

(2) கணக்கிலிருந்து அடித்துவிடப்பட்ட சகல தொகைகளையும் எழுதி வைத்துக் கொள்வதற்கான ரெஜிஸ்டர் ஒன்றை அரசாங்கத்தார் குறிப்பிடக்கூடிய நமூனுவின்படி வைத்து வரவேண்டும்.

(3) ஒரு பஞ்சாயத்து தொகைகளைக் கணக்கிலிருந்து அடித்து விடுவதற்காக அனுமதிக்கையில், கணக்கிலிருந்து அடித்துவிடப்பட்ட தொகைகளைக் குறித்த ரெஜிஸ்டரில் ஷெ பாபத்துக்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். வரி, கட்டணம் அல்லது இதர தொகையின் தன்மை (வரிக்குச் சம்பந்தப்படுகிற பாபத்துக்களின் விஷயத்தில் வரிவிதிப்பு நம்பர்கூட) கணக்கிலிருந்து அடித்து விடப்பட்ட தொகை, மேற்படி சம்பந்தப்படுகிற கால அளவு இவை பற்றிய விவரங்களை நடவடிக்கைக் குறிப்புப் புஸ்தகத்தில் விரிவாகக் கொடுக்க வேண்டும் அல்லது அடியிற்கண்டபடி செய்வது பஞ்சாயத்துக்கு உசிதமென்று தோன்றினுல், கணக்கிலிருந்து அடித்துவிடப்பட்ட தொகைகளைக் குறித்த ரெஜிஸ்டரில் உள்ள தொடரிலக்கத்தை மட்டுமே குறிப்பிடலாம். ஒவ்வொரு தடவையும் கணக்கிலிருந்து அடித்துவிட அனுமதிக்கப்பட்ட மொத்தத் தொகையை, மேற்படி இரண்டு விஷயங்களிலும் ஒவ்வொன்றிலும் எழுத்தால் எழுதவேண்டும்.

(4) கணக்கிலிருந்து அடித்துவிடப்பட்ட வரிகள், கட்டணங்கள் அல்லது இதர தொகைகளின் பில்லுகளிலும் வாரண்டுகளிலும் (அசல் பிரதி, எதிரிடைப் பிரதி இவ்விரண்டிலும்), கணக்கிலிருந்து அடித்து விடுவதற்கான அனுமதி கொடுக்கப்பட்ட பிறகு கூடிய சீக்கிரத்தில், "கணக்கிலிருந்து அடித்துவிடப்பட்டது" என்று முத்திரையிட வேண்டும்; அதே சமயத்தில் டிமாண்டு ரெஜிஸ்டர்களிலும் அவசியமான பதிவுகளைச் செய்ய வேண்டும்.

கிராண்டுகள் அல்லது மானியம்

(5) வசூலிக்க முடியாதென்று கணக்கிலிருந்து அடித்துவிடப் படவேண்டிய வரி, கட்டணம் அல்லது இதர தொகையின் எந்த ஒரு பாபத்தாகிலும் 5 ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால், அதற்காக ரீஜனல் இன்ஸ்பெக்டரின் அனுமதியைப் பெறவேண்டும்.

பிரதேச கல்வி மானியம்

128. அரசாங்கத்தார் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கும் பிரதேசக் கல்வி மானியம் ஒன்றை ஆண்டுதோறும் அளிக்க வேண்டும்; அத் தொகை அடியிற்கண்டவாறு கணக்கிடப் படவேண்டும்:—

பஞ்சாயத்து யூனியின் (கல்வி) நிதிக்குப் பற்றுக்கப்படுவதற்காக அரசாங்கத்தார் அங்கீகரித்துள்ள மொத்த செலவுத் தொகை கீழே குறிப்பிட்டுள்ள விதப்படி பலவேறு படிக்கிரமங்களில் பிரிக்கப்படவேண்டும்:

118-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள தொகுதியின் நிலவரி ஒப்படைக்தச் சமமாயிருக்கக்கூடிய அளவுக்கு உள்ள செலவுத்தொகை முதல் படிக்கிரமாக அமையும் முதல் படிக்கிரமத்துக்கு மேற்பட்டுள்ளதும் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியின் மக்கட்தொகையில் ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் 250 நயா பைசா என்பதற்கு உட் பட்டுள்ளதுமான செலவின் தொகை இரண்டாவது படிக்கிரமமாக அமையும்.

அரசாங்கத்தார் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கும் பிரதேசக் கல்வி மானியமொன்றை அளிக்கவேண்டும். அது அத்தொகுதி விஷயமாய் அரசாங்கத்தார் குறிப்பிடக்கூடியபடி இரண்டாவது படிக்கிரமத்தில் ஐம்பது சதவீதத்திற்குக் குறையாமலும் என்பது சதவீதத்திற்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

பிரதேச வரி ஸர்சார் ஜுக்கு இணையான மானியம்

129. அரசாங்கத்தார் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு பிரதேச வரி ஸர்சார்ஜுக்கு இணையான மானியம் ஒன்றை ஆண்டுதோறும் அளிக்கவேண்டும். இது **116**-வது பிரிவின் கீழ் நிச்சயிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச வீதத்திற்கு மேற்பட்டு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியில் விதிக்கப்பட்டு பிரதேசவரி ஸர்சார்ஜிலிருந்து கிடைக்கும் தொகையில் நிர்ணயிக்கப்படக்கூடிய சதவீதப்படிக் கணக்கிடப்படுகிற ஒரு தொகையாயிருக்கவேண்டும்.

பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதிகளை வகைப் படுத்துவது.

130. பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களுக்கு மானியங்கள் அனுமதிக்கும் காரியத்துக்காக, அரசாங்கத்தார் பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதிகளைத் தாங்கள் யுக்தமெனக் கருதுகிற விதத்தில் ஐந்தாண்டுகளுக் கொருமுறை வகைப்படுத்தலாம். வெவ்வேறு வகை பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதிகளுக்கு அரசாங்கத்தார் வெவ்வேறு வீதங்களில் மானியங்கள் அனுமதிக்கலாம். பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதிகளை வகைப்படுத்தியிருப்பதை ஐந்தாண்டுகளுக்கொருமுறை அரசாங்கத்தார் மாற்றி அமைக்கலாம்.

குறிப்பு

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்.—பிரிவுகள் 2 (24); பி 7, 11. 65, 66, 74களை பார்க்கவும்
அரசாங்கத்தார் என்பது மதராஸ் அரசாங்கத்தார். [பி. 2 (12) யை பார்க்கவும்.
பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதிகள்.—[பி. 2 (21); பி. 7]—

இந்த பிரிவு முக்கியமாக “சமுதாய அபிவிருத்தியின் தேசிய விஸ்தரிப்பு சேவை திட்டத்தை” குறித்தது. இதை குறித்து பீடிகை பாரா 1ல் பக்கங்கள் 17, 18, 19 களிலும்; பிரிவு 11-ன் கீழ் பக்கங்கள் 57—60களையும் பிரிவு 66-ன் கீழ், பக்கங்கள் 184—192 வரையிலும் அச்சிடப்பட்டு இருக்கிறது. இதின் நிதியை குறித்து பக்கம் 191-ல் எழுதியுள்ளதை பார்க்கவும்.

கிராண்டுகள் அல்லது மானியம்

பிரதேச சாலைகள் மானியம்.

131. அரசாங்கத்தார் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கும் ஆண்டு தோறும் பிரதேச சாலைகள் மானியமொன்றை அளிக்க வேண்டும். இம் மானியத் தொகை பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியின் மதிப்பிட்டு ஜனத்தொகையில் ஒவ்வொரு வருக்கும் 40 நயா பைசா என்ற வீதத்தில் கணக்கிடப்பட்ட தொகையாயிருக்க வேண்டும். இது அப்பகுதியில் சாலைகளைப் பராமரிப்பதற்காக ஒதுக்கப்பட்டு அதற்காகச் செலவிடப்படவேண்டும் இத் தொகை, இச் சட்டம் செலாவணியாகத் தொடங்குவதற்கு முன் (சென்னை 1931-ம் ஆண்டின் III-வது சென்னை பட்டணத்துச் சட்டமாகிய) 1931-ம் ஆண்டின் சென்னை மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச்சட்டத்தின் 10 (1) (a) பிரிவை அனுசரித்து கொடுக்கப்படத்தக்க தொகைகளுக்குப் பதிலாகக் கொடுக்கப்படவேண்டும். இந்த விதம் பஞ்சாயத்து யூனியனின் தேவைகளையும் ஆதாரங்களையும் கிரமமாகக் கவனித்துப் பார்த்து ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மீண்டும் பரிசீலனை செய்து நிச்சயிக்கப்படவேண்டும்.

கிராம வீட்டு வரிக்கு இணையான மானியம்

132. ஒரு கிராமப் பஞ்சாயத்து வசூலித்த வீட்டு வரி ஒவ்வொரு ரூபாய்க்கும் இணையான தொகை ஒன்றை அரசாங்கத்தார் மானியமாகக் கொடுக்க வேண்டும். இது கிராம வீட்டு வரிக்கு இணையான மானியமென வழங்கப் பெறும்.

இதை குறிற்து பிரிவு 120 ன் கீழ், 285 பக்கத்திலுள்ள குறிப்பை பார்க்கவும்.

சில விஷயங்களில் மானியங்களிலிருந்து தொகை பிடித்துக் கொள்வது

133. ஒன்றுக்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்களுக்குப் பொதுவான நன்மையளிக்கக்கூடிய கட்டுவேலையைப் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் மேற்கொண்டால், அக் கட்டுவேலைகளுக்குப் பிடிக்கிற செலவை, அதனால் நன்மை அடைகிற பல்வேறு பஞ்சாயத்துக்களிடையே பங்கீடு செய்யவேண்டும் அத்தகைய விஷயத்தில் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலானது, 115-வது, 124-வது பிரிவுகளின்கீழ் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்படத்தக்க தொகைகளிலிருந்து அச் செல்லில் அதற்குரிய பங்குத் தொகையை அப் பஞ்சாயத்திடமிருந்து வசூலித்துக்கொள்ளப் பாத்தியதை யுள்ளதாகும்.

பஞ்சாயத்து நிதிகள் பிரிவுகள் (134—140)

பஞ்சாயத்து யூனியன் நிதியையும், பட்டண பஞ்சாயத்து நிதியையும், கிராமப் பஞ்சாயத்து நிதியையும் அமைப்பது

134. (i) ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்காகவும் பஞ்சாயத்து யூனியன் (பொது) நிதி ஒன்றும், பஞ்சாயத்து யூனியன் (கல்வி) நிதி ஒன்றும்.

(ii) ஒவ்வொரு பட்டண பஞ்சாயத்துக்கும் பட்டண பஞ்சாயத்து நிதி ஒன்றும்.

(iii) ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்துக்கும், கிராமப் பஞ்சாயத்து நிதி ஒன்றும், அமைக்கப்படவேண்டும்.

விதிகள்

பஞ்சாயத்து நிதிகளைப் பத்திரமாய் வைப்பதும் முதலீடு செய்வதும் அவைகளிலிருந்தும் பணம் வாங்கும் விதமும்.

பிரிவு 178 (2) (XII)ன் கீழ் விதிகள் (க-XXXVII—37)

1. ஒரு பஞ்சாயத்து பெற்றுக்கொள்ளும் சகல பணத்தையும் மிக அருகிலுள்ள அரசாங்கக் கஜானாவிலாவது, மிக அருகிலுள்ள தபாலாபீஸ் ஸேவிங்ஸ் பாங்கிலாவது இவை இரண்டிலுமாவது வைத்திருக்கவேண்டும்.

2. (1) ஒரு பஞ்சாயத்து உடனடியான உபயோகத்துக்குத் தேவையாயிராத எந்தத் தொகைகளையேனும், சென்னை மாகாணக் கூட்டுறவு பாங்கிலும் இது காரியத்துக்காக கூட்டுறவுச் சங்கங்களின் ரெஜிஸ்டராரிடமிருந்து அங்கீகாரம் பெற்ற ஜில்லாமத்திய கூட்டுறவு பாங்குகளிலும் மூன்று வருஷத்துக்கு மேற்படாத கால அளவுகளுக்கு பிக்ஸெட் டெபாஸிட்டுகளில் (Fixed deposits) முதலீடு செய்துவைக்கலாம்.

(2) ஒதுக்கி வைக்கப்பட்ட நிதிகளில் உபரியாகவுள்ள எந்தத் தொகையையேனும் ஒரு பஞ்சாயத்து நேஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளில் முதலீடு செய்து வைக்கலாம்.

3. பிரத்தியேகமான விஷயங்களில், ஒரு பஞ்சாயத்து ரீஜனல் இன்ஸ்பெக்டரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு, அந்த ரீஜனல் இன்ஸ்பெக்டர் குறிப்பிடும் வேறு யாதொரு பாங்கில் தன் நிதிகளைப் பத்திரப்படுத்தி வைக்கலாம் அல்லது முதலீடு செய்துவைக்கலாம்.

4. ஒரு பஞ்சாயத்து ரீஜனல் இன்ஸ்பெக்டரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டும் பந்தோபஸ்து விஷயமாக அல்லது மற்றப்படி அவர் விதிக்கக்கூடிய திட்டங்களுக்குட்பட்டும், தன் பணத்தைத் தன் நிர்வாக அதிகாரியின் பாதுகாப்பில் வைத்திருக்கலாம்.

ஆனால், நிர்வாக அதிகாரியின் பாதுகாப்பில் 25 ரூபாய்க்கு மேற்படாமல் நிலையான முன்பணத்தொகை ஒன்றை வைத்திருப்பதற்கு மேற்படி அனுமதி எதுவும் வேண்டியதில்லை.

5. பஞ்சாயத்து நிதியின்பேரில் கொடுக்கப்படும் சகல உத்தரவுகளிலும் அல்லது செக்குகளிலும் நிர்வாக அதிகாரி கையெழுத்துப் போடவேண்டும்.

6. பஞ்சாயத்து நிதி எந்தகஜானவில் அல்லது பாங்கில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கிறதோ அந்த கஜானு அல்லது பாங்கி, பஞ்சாயத்தின் வரவிலுள்ள நிதிகள் அனுமதிக்கிற வரையில், அந்த நிதியின்பேரில் கொடுக்கப்படுபவையும் 5-வது விதியில் சொல்லியிருக்கிற பிரகாரம் கையெழுத்துப் போடப்பட்டிருப்பவையுமான உத்தரவுகளிலும் அல்லது செக்குகளிலும் கண்ட தொகையைக் கொடுக்க வேண்டும்.

7. பஞ்சாயத்தின் சார்பில் அரசாங்கத்தார் எந்தச் செலவையேனும் செய்திருந்தால் அதை, மேற்படி உத்தரவு அல்லது செக் இல்லாமலேயே, மேற்படி கஜானு, பாங்க் அல்லது நிர்வாக அதிகாரி, பஞ்சாயத்து முன்னதாகவே எழுத்து மூலமான அதிகாரத்தைக் கொடுத்திருந்தால், உடனடியாக அப் பஞ்சாயத்தின் நிதிகளிலிருந்துகொடுக்கலாம்.

பஞ்சாயத்து யூனியன் (பொது நிதி

பஞ்சாயத்து யூனியன் (பொது) நிதி

135. பஞ்சாயத்து யூனியன் (பொது) நிதிக்கு வரவு வைக்கப்படவேண்டிய வருமானங்களில் அடியிற்கண்டவை அடங்கும்

(i) பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியில் வசூலிக்கப்பட்ட பிரதேச வரித்தொகையில் 115-வது பிரிவின் கீழ் பஞ்சாயத்து யூனியன் (கல்வி) நிதிக்கும், பட்டணப் பஞ்சாயத்து நிதிக்கும், கிராமப் பஞ்சாயத்து நிதிக்கும் வரவு வைத்தது போக எஞ்சியுள்ள தொகை.

(ii) 1 6-வது பிரிவின் கீழ் பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியில் வசூலிக் கப்பட்ட பிரதேச வரி ஸர்சார்ஜ்.

(iii) 129-வது பிரிவின் கீழ் அரசாங்கத்தார் வழங்கியதும், பிரதேசவரி ஸர்சார்ஜுக்கு இணையானதுமான மானியம்.

(iv) 131-வது பிரிவின் கீழ் அரசாங்கத்தார் வழங்கிய பிரதேசச் சாலைகள் மானியம்.

(v) பஞ்சாயத்து யூனியன் கொடுத்த லைஸென்ஸுகளுக்கும், அனுமதிகளுக்குமான கட்டணங்கள்.

(vi) பஞ்சாயத்து யூனியன் மார்க்கெட்டுகளென வகைப்படுத்தப் பட்டுள்ள பொது மார்க்கெட்டுகளில் விதித்து வாங்கப்படுகிற கட்டணங்களில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அரசாங்கத்தார் நிச்சயித்த வீதப்படி பஞ்சாயத்துக்குக் கொடுத்த பங்குத் தொகையைக் கழித்துக்கொண்ட பிறகு எஞ்சியுள்ள கட்டணத் தொகை.

(vii) பஞ்சாயத்து மார்க்கெட்டுகளென வகைப்படுத்தப் பட்டுள்ள மார்க்கெட்டுகள் விஷயமாய் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கு பஞ்சாயத்துக்கள் செலுத்திய பங்குத் தொகை.

(viii) சாலேகளே அல்லது சாலே ஓரங்களே தாற்காலிகமாக அனுபோகத்தில் வைத்துக் கொள்வதற்கான கட்டணங்கள்.

(ix) சத்திரங்களே உபயோகப்படுத்துவதற்கான கட்டணங்கள்.

(x) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் வைத்துவருகிற மருந்துச் சாலேகளில் இருந்து கிடைக்கிற வருமானம்.

(xi) பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் நிர்வாகத்தின் கீழிருக்கிற எண்டோமெண்டு களிலிருந்தும், டிரஸ்டுகளிலிருந்தும் கிடைக்கின்ற வருமானம்.

(xii) கேளிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த (சென்னே 1939-ம்ஷூத்து X-வது சட்டமாகிய) 1939-ம்ஷூத்திய சென்னபட்டணத்துச் சட்டத்தின் 13-வது பிரிவின்படிக் கேளிக்கை வரி வருமானத்தில் பஞ்சாயத்து யூனியன் பெற்றுக் கொண்ட வீதாச்சார பங்குத் தொகை.

(xiii) பஞ்சாயத்து யூனியன் நிதிகளிலிருந்து வைத்து வரப்படுகிற அல்லது நிதி உதவி செய்யப்படுகிற அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் நிர்வகித்து வருகிற யாதொரு ஸ்தாபனத்துக்கு அல்லது சேவைக்கு உதவியாக அரசாங்கத் தாரும், இதர பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும், முனிசிபாலிட்டிகளும், இதர பிரதேச அதிகாரிகளும் நபர்களும் கொடுக்கிற நன்கொடைகள்.

(xiv) கருவிகளேயும், தளவாடங்களேயும், ஸ்டோர்ஸ்களேயும், சாமான்களேயும் பஞ்சா யத்து யூனியன் சாலேகளேச் சேர்ந்திருக்கிற மரங்களேயும் அவற்றின் விலே பொருள்களேயும் விற்பது மூலம் கிடைக்கிற தொகை.

(xv) பஞ்சாயத்து யூனியன் தோணித்துறைகளிலிருந்தும், மீன்பிடித் துறைகளிலிருந் தும் கிடைக்கிற வருமானம்.

(xvi) கடன்களின் பேரிலும் வீடுகளின் பேரிலும் கிடைக்கிற வட்டி.

(xvii) நிலவரி பாக்கிகளின் பேரில் கிடைக்கிற வட்டி.

(xviii) பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்குச் சொந்தமான கட்டிடங்களேயும், நிலங் களேயும், இதர சொத்தினேயும் விற்பது மூலம் கிடைக்கிற வருமானம்.

(xix) எவரும் பாத்தியதை கொண்டாடாத டெபாசிட் தொகைகளும் இதர பறிமுதல் தொகைகளும்.

(xx) பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலினுலேயோ அல்லது அதற்காகவோ இச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட அபராதம் துகைகள்.

(xxi) மேலே குறிப்பிட்டுள்ளவையும், 136-வது பிரிவில் சொல்லியுள்ள வையுமான தொகைகள் நீங்கலாக, பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து வைத்து வரப்படுகிற அல்லது நிதி உதவி செய்யப்படுகிற அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலால் நிர்வகித்து வரப்படுகிற எவையேனும ஸ்தாபனங்கள் அல்லது சேவை களிலிருந்து பெறப்படுகின்ற அல்லது அந்த ஸ்தாபனங்கள் அல்லது சேவைகளுக்கு உதவியாக அல்லது அவற்றிற்குச் செலவழிப்பதற் காகப் பெற்றுக் கொள்ளப்படுகிற மறறெல்லாத் தொகைகளும்.

(xxii) பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலால் வாங்கிக்கொள்ளக்கூடிய மற்ற எல்லா தொகைகளும்

பட்டண பஞ்சாயத்து நிதி - கிராம பஞ்சாயத்து நிதி

பஞ்சாயத்து யூனியன் (கல்வி) நிதி

136. பஞ்சாய்த்து யூனியன் (கல்வி) நிதிக்கு வரவு வைக்கவேண்டிய வருமானங்களில் அடியிற் கண்டவை அடங்கும் :—

பஞ்சாயத்து யூனியன் (கல்வி) நிதி

(i) 115-வது பிரிவின் கீழ் வசூலிக்கப்பட்ட பிரதேச வரியில் ஒன்பதில் நான்கு பாகம்;

(ii) 118-வது பிரிவின் கீழ் அரசாங்கத்தார் கொடுக்கிற நிலவரி ஒப்படை ;

(iii) அரசாங்கத்தார் கொடுக்கிற பிரதேசக் கல்வி மானியம்.

(iv) பிரஸ்தாப ஆண்டில் அந்த நிதியின் வரவு செலவைச் சரிக்கட்டுவதற்காக யாதொரு ஆண்டில் அவசியமென அரசாங்கத்தார் நிச்சயிக்கக்கூடியதும் பஞ்சாயத்து யூனியன் (பொது) நிதியிலிருந்து கொடுக்கப்படுவதுமான நன்கொடை;

(v) பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அதிகார வரம்புக்குள் (சென்னை 1920-ம்ஞு VIII-வது சட்டமாகிய) 1920-ம்ஞுத்திய சென்னை ஆரம்பக்கல்விச் சட்டத்தின் ஷரத்துகளின் கீழ் விதித்து வாங்கப்படும் சகல அபராதத் தொகைகளும் தண்டனைத் தொகைகளும் ;

(vi) ஆரம்பக் கல்வியின் நலனுக்காக பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் சொந்தத்தில் வைத்திருக்கிற அல்லது நிர்வகிக்கிற எவையேனும் எண்டோமென்டுகளிலிருந்து அல்லது இதர சொத்திலிருந்து கிடைக்கிற சகல வருமானமும் ;

(vii) ஆரம்பக் கல்விக் காரியங்களுக்காக பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் நன்கொடையாகக் கொடுக்கக்கூடிய அல்லது பெற்றுக்கொள்ளக்கூடிய மற்றெல்லாத் தொகைகளும்.

பட்டணம் பஞ்சாயத்து நிதி கிராம பஞ்சாயத்து நிதி

137. பட்டணப் பஞ்சாயத்து, கிராமப் பஞ்சாயத்து ஆகியவற்றின் நிதியில் வரவு வைக்கப்பட வேண்டிய வருமானங்களில் அடியிற் கண்டவைகள் அடங்கும் :—

பட்டணப் பஞ்சாயத்து நிதியும் கிராமப் பஞ்சாயத்து நிதியும்

(i) இச் சட்டத்தின் 119-வது பிரிவின்கீழ் விதித்து வாங்கப்படுகிற வீட்டு வரி, தொழில் வரி, வண்டி வரி, வேறு யாதொரு வரி, தீர்வை அல்லது கட்டணம் ;

(ii) சொத்துக்களை மாற்றுவது விஷயமாக இச்சட்டத்தின் 124-வது பிரிவின்கீழ் விதித்து வாங்கப் படுகிற தீர்வையிலிருந்து கிடைக்கிற வருமானம் ;

(iii) 115-வது பிரிவின்கீழ், பிரதேச வரியின் பங்குத் தொகை ;

(iv) கிராமப் பஞ்சாயத்து நிதி விஷயமாய், கிராம வீட்டு வரிக்கு இணையான மானியம் ;

(v) (சென்னை 1939-ம்ஞுத்திய III-வது சட்டமாகிய) 1939-ம்ஞுத்திய சென்னைப் பொது சுகாதாரச் சட்டத்தின் 117-வது, 118-வது பிரிவுகளின் கீழ் பிரஸ்தாப கிராமத்தில் விதித்து வாங்கப்படுகிற வரிகளும், சுங்கங்களும்.

(vi) பஞ்சாயத்து மார்க்கெட்டுகளென வகைப்படுத்தப்பட்டுள்ள பொது மார்க்கெட்டுகளில் விதித்து வாங்கப்படுகிற கட்டணங்களில் பஞ்சாயத்து அரசாங்கத்தார் நிச்சயித்த வீதப்படி பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்குக் கொடுத்த பங்குத் தொகையைக் கழித்துக்கொண்ட பிறகு எஞ்சியுள்ள கட்டணத்தொகை ;

(vii) பஞ்சாயத்து யூனியன் மார்க்கெட்டுகளென வகைப்படுத்தப்பட்டுள்ள மார்க்கெட்டுகள் விஷயமாய் பஞ்சாயத்துகளுக்கு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்கள் கொடுத்த பங்குத் தொகை ;

(viii) பிரஸ்தாப கிராமத்தில் அல்லது பட்டணத்தில் கிராம மனைகளையும், சாலைகளையும் அவைபோன்ற இதர பொது இடங்களையும் அல்லது அவற்றின் பாகங்களையும் தற்காலிகமாக அனுபோகத்தில் வைத்துக் கொள்வதற்கான கட்டணங்கள் ;

(ix) இச் சட்டத்தின் யாதொரு ஷரத்து அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது உத்தரவை அனுசரித்து பஞ்சாயத்து விதித்து வாங்குகிற கட்டணங்கள் ;

(x) பஞ்சாயத்து நிர்வாகத்தின் கீழிருக்கிற எண்டோமென்டுகளிலிருந்தும், டிரஸ்டுகளிலிருந்தும் கிடைக்கிற வருமானம் ;

(xi) அரசாங்கத்தார் மீண்டும் எடுத்துக் கொண்ட சேவை இனாம்களின் பேரில் விதிக்கப்படுகிற நிகர வரி ;

(xii) கேளிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த (சென்னை 1939-ம் ஆண்டின் X-வது சட்டமாகிய) 1939-ம் ஆண்டின் சென்னப்பட்டணத்துச் சட்டத்தின் 13-வது பிரிவின்படி கேளிக்கை வரி வருமானத்தில் பஞ்சாயத்து யூனியன் பெற்றுக் கொண்ட வீதாசாரப் பங்குத் தொகை ;

(xiii) கிராம மீன்பிடித் துறையிலிருந்து கிடைக்கிற வருமானம் ;

(xiv) பஞ்சாயத்தின் நிர்வாகத்தின் கீழிருக்கிற தோணித் துறையிலிருந்து கிடைக்கிற வருமானம் ;

(xv) எவரும் பாத்தியதை கொண்டாடாத டெபாஸிட் தொகைகளும் இதர பறிமுதல் தொகைகளும் ;

(xvi) சந்தர்ப்பத்திற்கேற்ப கிராமத்தில் அல்லது பட்டணத்தில் சாலைப் பொருள்களுக்காக கல்வெட்டியெடுத்துக் கொள்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிற நபரிடமிருந்து ஆண்டுதோறும் அரசாங்கத்தார் வசூல் செய்கிற சீனியரேஜ் கட்டணங்களுக்குச் சமமான தொகை ;

(xvii) எந்தப் புறம்போக்குகளின் உபயோகம் பஞ்சாயத்தில் நிலை பெற்றிருக்கிறதோ, அந்தப் புறம்போக்குகளிலிருந்து கிடைக்கிற வருமானம் ;

(xviii) சந்தர்ப்பத்திற்கேற்ப பிரஸ்தாப கிராமம் அல்லது பட்டணம் ரயத்துவாரி பிரதேசத்திலிருந்தால், புறம்போக்குகளின் உபயோகம் பஞ்சாயத்தில் நிலை பெற்றிராவிடினும், அந்தப் புறம்போக்கிலிருக்கிற மரங்களிலிருந்து கிடைக்கிற சகல வருமானம் ;

(xix) அரசாங்கச் சொத்தினைக் குத்தகைக்கு விடுவதிலிருந்து பிரஸ்தாப பஞ்சாயத்துக்குக் கிடைக்கிற வருமானம் ;

(xx) II-வது, III-வது ஷெட்யூல்களில் அல்லது இச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட யாதொரு விதியில் அல்லது சகாயச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள குற்றங்கள் விஷயமாய் மாஜிஸ்டிரேட்டுகள் அபராதம் விதிப்பதிலிருந்து ஆண்டுதோறும் அரசாங்கத்தாருக்குக் கிடைக்கிற மொத்த வருமானம் ;

(xxi) மேலே குறிப்பிட்டுள்ள தொகைகள் நீங்கலாக, பஞ்சாயத்து நிதியிலிருந்து வைத்துவரப்படுகிற அல்லது நிதி உதவி செய்யப்படுகிற அல்லது பஞ்சாயத்தாய் நிர்வகித்து வரப்படுகிற எவையேனும் ஸ்தாபனம் அல்லது சேவைகளிடமிருந்து பெறப்படுகின்ற அல்லது அந்த ஸ்தாபனங்கள் அல்லது சேவைகளுக்கு உதவியாக அல்லது அவற்றிற்குச் செலவழிப்பதற்காகப் பெற்றுக் கொள்ளப்படுகிற மற்றெல்லாத் தொகைகளும்.

xxii) பஞ்சாயத்தால் வரபெற்றுக் கொண்ட மற்ற எல்லாத் தொகைகளும்.

பொது செலவு — குறிப்பிட்ட சீர்திருத்தத்திற்கு செலவு

செலவு

பெற்றுக் கொள்ளப் பட்ட பணங்களை உப யோகிப்பதும் நிதிகளி லிருந்து செலவு செய் வதும்.

138. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில், கிராமப் பஞ்சாயத்து அல்லது பட்ட ணப் பஞ்சாயத்து பெற்றுக் கொண்ட சகல பணங்களும் இச் சட்டத்தின் ஷரத்துக்களையும் மற்ற சட்டங்களின் ஷரத்துக் களையும் அனுசரித்து உபயோகித்து ஒருவகை செய்யப்பட வேண்டும்.

ஆனல், இச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட யாதொரு வரியிலிருந்து அல்லது கூடுதலான வரியிலிருந்து கிடைக் கிற வருமானம் குறிப்பிட்ட யாதொரு பொது சீர்திருத்தத்திற்கு நிதி உதவியளிக்கும் காரியத்துக்காக ஒதுக்கிவைக்கப்படவேண்டுமென, நிர்ணயிக்கப் படக்கூடிய விதிகளுக்குட்பட்டு கட்டளையிட பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு அல் லது பஞ்சாயத்துக்கு அதிகாரம் உண்டு. அத்தகைய ஒவ்வொரு வரியிலிருந்தும் அத் தகைய கூடுதலான வரியிலிருந்தும் கிடைத்த வருமானம் விஷயமாகவும், அதற்குப் பிடித்த செலவு விஷயமாகவும் தனித்தனியாகக் கணக்கு வைத்து வரவேண்டும்.

விதிகள்

குறிப்பிட்ட பொது சீர்திருத்தத்திற்கு நிதி உதவி அளிக்கும் காரியத்துக்காக பஞ்சாயத்துக்கள் நிதிகளை ஒதுக்கிவைப்பது.

பி. 178 (2) (XIII)

எந்தப் பஞ்சாயத்தும், ரீஜனல் இன்ஸ்பெக்டரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், ஒதுக்கிவைக்கப்பட்ட அடியிற்கண்ட நிதிகளில் எவற்றையாகிலும், அவை எந்தக் காரியங்களுக்காக வசூலிக்கப்பட்டனவோ அந்தக் காரியங்கள் தவிர மற்றக்காரியங் களுக்காகத் தாற்காலிகமாகக் கூட உபயோகிக்கக் கூடாது:—

(1) தண்ணீர்க் கட்டுவேலைகளை நிர்மாணிப்பது, பராமரித்து வருவது, செப்பனிடுவது, விஸ் தரிப்பது அல்லது சீர்திருத்துவது, விஸ்தரிப்பது அல்லது சீர்திருத்துவது சம்பந்த மாகப் பிடிக்கும் செலவுகளுக்காக ஏற்பாடு செய்யும் பொருட்டு, பொதுஜன சுகாதாரத் தைக் குறித்த 1939-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தின் பிரகாரம் தண் ணீர் வரியிலிருந்து கிடைக்கும் தொகைகள். பிரிவு 85 யை பார்க்கவும்.

(2) தண்ணீர்க் கட்டுவேலைகளை நிருமாணிப்பது, பராமரித்து வருவது, செப்பனிடுவது, விஸ் தரிப்பது அல்லது சீர்திருத்துவது சம்பந்தமாகப் பிடிக்கும் செலவுகளுக்காக அல்லது மேற்படி பஞ்சாயத்தின் காஸ் விளக்குகள் அல்லது மின்சார விளக்குகள் போடுவது சம்பந்தமாகப் பிடிக்கும் செலவுகளுக்காக ஏற்பாடு செய்யும் காரியத்துக்காகவென்றே மேற்படி சட்டத்தின் 119 (3) பிரிவின் பிரகாரம் விவசாய நிலத்தின் பேரில் விதிக்கப் பட்ட வரியிலிருந்து கிடைக்கும் தொகைகள்.

(3) எலிமெண்டரி பாடசாலைகளை ஏற்படுத்திப் பராமரித்து வருவதற்காக வசூலிக்கப்பட்ட நிதிகள்.

(4) கடன் நிதிகள்.

(5) குறிப்பிட்ட காரியங்களுக்காக இந்த ராஜ்ய அரசாங்கத்தாரால் அனுமதிக்கப்பட்ட விசேஷ க்ராண்டுகள்.

(6) மூலதன ஆஸ்திகளை விற்பனை செய்வதிலிருந்து கிடைக்கும் வரவுகள்.

(7) நிதி ஏற்பாடுகளிலிருந்தும் ட்ரஸ்டுகளிலிருந்தும் கிடைக்கும் வருமானம்.

(8) (ப்ராவிடன்ட் பண்டு உள்ளிட்ட) டெபாஸிட்டுகள்.

பொது செலவு—கட்டாயமான செலவு

பஞ்சாயத்து நிதியிலிருந்தும் பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்தும் செய்யப்படும் செலவு

139. (1) பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் அல்லது கிராமப் பஞ்சாயத்து, பட்டணப் பஞ்சாயத்து நிதியைச் செலவிடக்கூடிய காரியங்களில் இச் சட்டத்தினுலாவது அதன்படிச் செய்யப்பட்ட எந்த விதிகளின்படியாவது வேறே எந்தச் சட்டங்கள் அல்லது விதிகளினுலாவது கட்டாயமானவை என்ருகிலும் யுக்தானுசாரமாய் செய்யக்கூடியவை என்ருகிலும் வெளிப்படையாய்ப் பிரசித்தம் செய்யப்பட்ட சகல காரியங்களும் அடங்கும்; மேலும், மேற்படி நிதியானது அரசாங்கத்தார் நிர்ணயிக்கக்கூடிய அல்லது பிறப்பிக்கப் படக்கூடிய விதிகளுக்காவது விசேஷ உத்தரவுகளுக்காவது உட்பட்டு, சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற்போல் அந்த பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதிக்குள் அல்லது கிராம அல்லது பட்டணப் பஞ்சாயத்துக்குள் மேற்படி காரியங்களுக்காக உபயோகிக்கப்படத்தக்கதாகும்; அல்லாமலும் மேற்சொன்னவைகளுக்குட்பட்டு அந்தப் பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதிக்கு அல்லது கிராமத்துக்கு அல்லது பட்டணத்துக்கு வெளியில் மேற்படி காரியங்களுக்காகப் பிடிக்கும் செலவானது இச்சட்டத்தினுல் அனுமதிக்கப்பட்டதாகவாவது இன்ஸ்பெக்டரால் பிரத்தியேகமாய் அனுமதிக்கப்பட்டதாகவாவது இருந்தால், அந்தக் காரியங்களுக்கும் மேற்படி நிதி உபயோகிக்கப்படத்தக்கதாகும்.

(2) அடியிற்கண்ட தொகைகளைச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்வது ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலின் அல்லது பஞ்சாயத்தின் கடமையாகும்.

(i) அது வாங்கின எந்தக் கடன்களுக்காகிலும் சேர வேண்டியதாய் ஏற்படுகிற தொகைகள்.

(ii) அதனுடைய உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் ஆகிய இவர்களின் சம்பளங்களும், வர்த்தனைகளும், பென்ஷன்களும், அவர்களுடைய பென்ஷன் விஷயமாயும், ப்ராவிடென்ட் பண்டின் விஷயமாயும், கொடுக்கப்படத்தக்க சகாயத் தொகைகளும்.

(iii) யாதொரு கோர்ட்டாரின் ஒரு டிக்ரி அல்லது உத்தரவின்படிச் சேர வேண்டிய தொகைகள்.

(iv) இச் சட்டத்தினுலாவது வேறே யாதொரு சட்டத்தினுலாவது அதன்படியாவது கட்டாயமாகச் செய்ய வேண்டியவையென்று ஏற்படுத்தப் பட்டுள்ள வேறே எவையேனும் செலவுகள்.

(3) யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அல்லது பஞ்சாயத்து அரசாங்கத்தாரின் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு இந்தியாவினுடைய பாதுகாப்புக்கான யாதொரு நிதிக்குத் திரவிய சகாயம் செய்யலாம்.

(4) ஒரு பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் அல்லது பஞ்சாயத்து இன்ஸ்பெக்டரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு.

(i) பிரஸ்தாப பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியில் அல்லது கிராமத்தில் அல்லது பட்டணத்தில் நடக்கும் யாதொரு பொதுஜனக் காட்சிக்காவது, சடங்குக்காகவாவது, கொண்டாட்டத்துக்காவது பிடிக்கிற செலவுகளுக்காகத் திரவிய சகாயம் செய்யலாம்.

(ii) யாதொரு தரும நிதிக்காகிலும், ஏழைகளுக்குச் சகாயம் செய்வதற்காவது, வியாதி அல்லது பலவீனத்துக்குச் சிகிச்சை செய்வதற்காகவாவது, வியாதியஸ்தர்களையோ பலவீனமாய் இருப்பவர்களையோ வரவேற்று ஆதரிப்பதற்காகவாவது, வியாதியின் காரணங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்காகவாவது ஏற்படுத்தப்பட்டுள்ள யாதொரு ஸ்தாபனத்தின் நிதிக்காகிலும் பொருளுதவி செய்யலாம்.

(iii) வேறே எவையேனும் விசேஷ சலுகைகளுக்காகத் தொகை கொடுக்கலாம்.

கட்டாயமான செலவு

விதிகள்

பி, 139 (1) கட்டாயமானவை என்றுகிலும் யுக்தானுசாரமாய் செய்ய கூடியவை சில விஷயங்களுக்காகப் பஞ்சாயத்து நிதிகளை ஏற்படுத்தி வைத்தல்

பி. 63 ; பி. 64 ; பி. 138, பி 139-ன் கீழ் விதிகள்

1. கீழே I-வது ஷெட்யூலின் (1) பத்தியில் கண்ட இனங்களில் எதற்காகவேனும் யாதொரு வருஷத்தில் ஒரு பஞ்சாயத்து செய்யக்கூடிய செலவானது, ரீஜனல் இன்ஸ் பெக்டருடைய திட்டமான அனுமதியின்றி, அந்த ஷெட்யூலின் (2) பத்தியிலுள்ள நிகரான பதிவில் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச வரையறைக்குக் குறையக்கூடாது.

2. கீழே II-வது ஷெட்யூலின் (1) பத்தியில் கண்ட இனங்களில் எதற்காகவேனும் யாதொரு வருஷத்தில் ஒரு பஞ்சாயத்து செய்யக்கூடிய செலவானது, ரீஜனல் இன்ஸ் பெக்டருடைய திட்டமான அனுமதியின்றி, அந்த ஷெட்யூலின் (2) பத்தியிலுள்ள நிகரான பதிவில் குறிப்பிடப்பட்ட உச்ச வரையருக்குக் குறையக்கூடாது.

3. 1-வது, 2-வது விதிகளில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாமலே—

(1) ஷெட்யூல்களின் (1) பத்தியில் குறிப்பிடப்பட்ட காரியங்களில் எதற்காகவேனும் அதிகப்படியான வரி ஒன்றை யாதொரு பஞ்சாயத்து விதித்தால், ரிஜனல் இன்ஸ்பெக்ட ருடைய விசேஷ அனுமதியின்றி, குறிப்பிட்ட அக்காரியத்துக்காகப் பொது கணக்கிலிருந்து எச் செலவையும் செய்யக்கூடாது ; மேலும்,

(2) தனிப்பட்ட முறையில் குப்பைவாரும் சேவைக்காக ஒரு பஞ்சாயத்து கட்டணங்களை விதித்தால், அச்சேவைக்காகச் செய்யப்படும் செலவானது, ரிஜனல் இன்ஸ்பெக்டருடைய விசேஷ அனுமதியின்றி, மேற்படி கட்டணங்களிலிருந்து கிடைக்கும் தொகைக்கு மேற்படக்கூடாது.

1-ம் ஷெட்யூல்

செலவினம் (1)	செலவின் குறைந்த பட்சவரையறை. (2)
போக்குவரத்து மார்க்கங்கள்	
(a) பிரஸ்தாப கிராமத்திலே (ஜில்லா பாட்டைகளும், தேசிய பெருவழிகள் என்று அரசாங்கத்தாரால் தரம் பிரிக்கப் பட்ட பாட்டைகளும் அல்லாத வேறு) சகல பொதுப் பாட்டை களையும் போடுவதும், செப்பனிடுவதும், பராமரித்து வருவதும்; அத்தகைய பாட்டைகளில் சகல பாலங்களையும் கல்லொட்டு களையும் பாட்டை வரம்புகளையும் செய்கரைகளையும் கட்டு வதும் செப்பனிடுவதும் பராமரித்து வருவதும்.	சாதாரண வருமானத்தில் 20 சதவீதம்.
ஜல-சப்ளை	
(b) கிணறுகளை வெட்டுவது, செப்பனிடுவது, குட்டை களை அல்லது குளங்களைத் தோண்டுவது, செப்பனிடுவது, பராமரித்து வருவது, கழுவுவதற்கும், குளிப்பதற்குமான ஜல சப்ளைக்காகவும் குடிப்பதற்காகப் பாதுகாக்கப்பட்ட ஜல-சப் ளைக்காகவும் தண்ணீர்க்கட்டு வேலைகளை நிர்மாணிப்பது, பரா மரித்து வருவது.	சாதாரண வருமானத்தில் 10சதவீதம்.

2-ம் ஷெட்யூல்

செலவினம் (1)	செலவின் உச்ச வரையறை. (2)
விளக்குப் போடுவது	
(a) பொதுப் பாட்டைகளிலும் பொது இடங்களிலும் விளக் குப் போடுவது.	சாதாரண வருமானத்தில் 15 சதவீதம்.

வரவு — செலவு—பொது விதிகள்

பொது ஜன சுகாதாரம்

(b) சாக்கடைகளைக் கட்டுவதும், சாக்கடைத் தண்ணீரையும் அழுக்குத் தண்ணீரையும் ஒரு வகை செய்வதும், (c) தெருக்களைச் சுத்தம் செய்வது, குப்பைமேடுகளையும் மண்டி வளர்ந்திருக்கும் செடிகளையும், சப்பாத்திக்கள்ளியையும், அப்புறப்படுத்துவது, உபயோகத்திலிராத கிணறுகள், சுகாதாரக் கேடான குட்டைகள், நீர்த்தேக்கங்கள், ஓடைகள், குழிகள், அல்லது பள்ளங்கள் இவற்றைத் தூர்த்துவிடுவது, (d) பொதுக் கக்கூஸுகளுக்காக ஏற்பாடு செய்வதும், பொதுவான அல்லது தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான கக்கூஸுகளைச் சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளும், (e) இடுகாடுகளையும், சுடுகாடுகளையும் ஏற்படுத்தி வைத்து வருவது, (f) யாதொரு பெருவாரி நோய்க்கு அல்லது மலேரியாவுக்குச் சம்பந்தப்பட்ட தடை முறைகளும், பரிகார முறைகளும்.	சாதாரண வருமானத்தில் 30 சதவீதம்

பஞ்சாயத்து நிதிகள்

வரவு — செலவு விதிகள் — 45 — அவைகளின் அட்டவணை பிரிவுகள் 134 — 139 ன் கீழ் விதிகள்.

விதி		பக்கம்
1.	லைசென்ஸுகளுக்கும் அனுமதிகளுக்கும் கட்டணங்கள் :—	... 343
2.	நிதி ஏற்பாடுகளிலிருந்தும் ட்ரஸ்டுகளிலிருந்தும் கிடைக்கிற வருமானம் :—	... ,,
3.	சகாயத் தொகைகள் :—	... ,,
4.	சாலை மரங்களிலிருந்து கிடைக்கும் வரவுகள் :—	... ,,
5.	கருவிகள், யந்திர தளவாடங்கள், பெருக்கி எடுத்த குப்பைகள், பழைய சாமான்கள், வஸ்த்துக்கள் ஆகிய இவற்றை விற்று வந்த தொகைகள் :—	... 344
6.	மார்க்கெட்டுகள், பார வண்டி நிற்கு மிடங்கள், இறக்குவதற்கான அல்லது இறங்குவதற்கான இடங்கள் அல்லது தங்குமிடங்கள், ஆடு மாடுகள் அடைக்கு மிடங்கள், மீன் பண்ணைகள், ஓடத்துறைகள் ஆகிய இவைகளிலிருந்து கிடைக்கும் கட்டணங்கள் :—	... ,,
6-A.	டெண்டர்கள் மூலமாக குத்தகைக்கு விடுவது :—	... 346
7.	மார்கெட்டு—பாரவண்டி நிற்குமிடம் :—	... ,,
8.	கட்டடங்கள், நிலங்கள், இதர ஸ்தாவர சொத்து ஆகிய இவைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் :—	... 347
9.	சேவை செய்ததற்காக வசூலிக்கப்படும் தொகைகள் :—	... ,,
10.	மிஸ்லேனியஸ் பில் ரெஜிஸ்டர் :—	... ,,
11.	வரியைத் திருப்பிக் கொடுப்பது :—	... 348
12.	எல்லா விற்பனைகளும், குத்தகைகளும், பகிரங்க ஏலம் மூலம் நடத்த வேண்டும்.—	... ,,
13.	கட்டணங்களை வசூலிப்பதை குறித்து :—	
14.	பஞ்சாயத்து பணத்தை அன்றுடம் பஞ்சாயத்து ஆபீசில் செலுத்த வேண்டும் :—	... 349
15.	பஞ்சாயத்து பணத்தை பாங்கு முதலியவைகளில் செலுத்தாமல் செலவுக்காக உபயோகித்துக் கொள்ளக் கூடாது :—	... ,,

வரவு—செலவு—பொது விதிகள்

பக்கம்.

16. பாங்கியின் பெயர் குறிப்பிடவேண்டும் :— ... 349
17. மூலதன வரவுகளை சாதாரண செலவுக்காக பயன் படுத்தக் கூடாது :— ... ,,
18. வரிவசூலிக்க வசூல் புத்தகம் கொடுக்கவேண்டும் :— ... ,,
19. வசூல் ரிஜிஸ்டரின் மூலமாக வசூலித்த தொகையை செலுத்த வேண்டும் :— ... ,,
20. பெற்றுக் கொண்ட பணத்துக்கு ரசீது கொடுப்பது :— ... ,,
21. ரொக்கப் புத்தகமும் துணையான ரெஜிஸ்டர்களும் :— ... ,,
22. பில்லுகளை பாஸ் செய்த பிறகு பணம் கொடுக்க வேண்டும் :— ... 350
23. செக்குகள் மூலம் கொடுக்க வேண்டும் தபால் ஆபீஸ் சேவிங்ஸ் பாங்க் தொகையை வாங்கி கொடுக்க வேண்டும் :— ... ,,
24. நிலையான முன் தொகை நிர்வாக அதிகாரிக்கு அனுமதிப்பது:— ... ,,
25. அதிகாரி மாறினல் வந்தவர் பணம் வாங்க சர்டிபிகேட் :— ... ,,
26. செக்கு புத்தகங்களை வைத்துக் கொள்ள வேண்டிய விதம் :— ... 351
27. பில்லுகளை தயாரிக்கும் விதம் - வவுச்சர்கள் :— ... ,,
28. சம்பள ரசீது ரெஜிஸ்டரஜயும் ரசீதையும் குறித்து :— ... ,,
29. செலவு பில்லுக்கு ஆதரவைக் குறித்து :— ... ,,
30. செலவு பாபத்து பாரம் (நமூனு) இருக்க வேண்டிய விதமும் பட்ஜெட்டை மீட்டிங்கில் பாஸ் செய்விக்கும் விதமும், மராமத்துகள் விவரம் :— ... 352
31. பில் தொகைகளை கொடுப்பதற்கு கால அளவு :— ... 353
32. அதிகமாக தொகை கொடுத்ததற்கு ஜவாப்தாரியார் :— ... ,,
33. மோசடி, நஷ்டம், திருடு முதலியன :— ... ,,
34. சிப்பந்தி சம்பள பில்லுகள் :— ... 354
35. சம்பள உசத்திக்கு சர்டிபிகேட் :— ... ,,
36. மாற்றியபோது உத்தியோகஸ்தர் சம்பளம் வாங்கும் விதம் :— ... ,,
37. மேல் உண்டாகும் செலவுகளை உத்தியோகஸ்தனுக்கு கொடுப்பது :— ... ,,
38. சம்பள பாக்கியை குறித்த பில் :— ... ,,
39. நிர்வாக அதிகாரி பில்களை பாஸ் செய்யவேண்டும் :— ... 355
40. சம்பளங்கள் கொடுக்க வேண்டிய காலம் :— ... ,,
41. பில்லின் தொகையை கொடுக்க வேண்டிய ஜவாப்தாரித் தனம்:— ... ,,
42. மாதா மாதம் பில்லு :— ... ,,
43. பிரயாண வர்த்தனை பில் :— ... ,,
44. போக்கு வரத்து பில் :— ... ,,
45. ஒரு மாதத்தின் செலவுகளை குறித்த பட்டியை பஞ்சாயத்து மீட்டிங்கில் வைக்க வேண்டும் :— ... ,,

விளக்கம்.— "சாதாரண வருமானம்" என்பது, குறிப்பிட்ட காரியங்களுக்காக "பொதுக்கணக்கு—சாதாரணமானது" என்றும் கணக்குக்கு வரவு வைக்கப்பட்ட மான்யங்களும் சகாயத் தொகைகளும் நீங்கலாக, அந்தக் கணக்கின் கீழ் முந்திய மூன்று வருஷங்களில்பஞ்சாயத்துக்கு கிடைத்த சராசரி மொத்த வரவுகள் என்று பொருள்படும்.

வியாஜ்யம் கேஸ் முதலியவைகளின் செலவுகள்:—இவைகளைக் குறித்து பி 8 (3)ன் குறிப்பில் "வியாஜ்ஜியம் தொடரவும், அல்லது பிறரால் வியாஜ்ஜியம் பெறவும்" என்பதை 41-ம் பக்கத்தில் பார்க்கவும்.

வரவு—செலவு—பொது விதிகள்

பஞ்சாயத்து நிதி—வரவு—செலவு
பிரிவுகள் 134 - 139 ன் கீழ் விதிகள்

1-ம் பாகம் - வரவுகள்

ஸைசென்ஸுகளுக்கும் அனுமதிகளுக்கும் கட்டணங்கள்

1. (1) மேற்படி சட்டத்தின் படியாவது. அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்தின்படியாவது கொடுக்கப்பட்ட ஸைசென்ஸ் அல்லது அனுமதி ஒவ்வொன்றையும் அரசாங்கத்தார் அது விஷயமாக அப்போதைக்கப்போது நிர்ணயிக்கக்கூடிய நமூனுவின்படி கொடுக்கவேண்டும்.

(2) அத்தகைய ஸைசென்ஸ் அல்லது அனுமதி ஒவ்வொன்றின் விஷயமாகவும் செலுத்தப்படத்தக்க கட்டணத்தை அந்த ஸைசென்ஸ் அல்லது அனுமதிக்காத விண்ணப்பம் கொடுத்துக்கொள்கிற காலத்தில் முன்கூட்டியே வசூலிக்கவேண்டும்.

(3) கட்டணம் வசூலிப்பது சம்பந்தமான விவரங்களையும் மேற்படி ஸைசென்ஸ் அல்லது அனுமதி கொடுப்பது சம்பந்தமான விவரங்களையும் ஸைசென்ஸுகள், அனுமதிகள் ஆகிய இவை பற்றிய ரெஜிஸ்டரில் தொடர்ச்சியாக எழுதிக்கொள்ள வேண்டும்; இந்த ரெஜிஸ்டரை அரசாங்கத்தார் அப்போதைக்கப்போது நிச்சயிக்கக்கூடிய நமூனுவின்படி வைத்துவர வேண்டும்

(4) மேற்படி ஸைசென்ஸ் அல்லது அனுமதி கொடுக்கப்படுகிற நபர் ஒவ்வொரு வருக்கும் எந்தத் திட்டங்களுக்குட்பட்டு அது கொடுக்கப்படுகிறதோ அந்தத் திட்டங்களின் நகல் ஒன்று கொடுக்கப்படவேண்டும்.

111, 159 (2) பிரிவுகளை பார்க்கவும்.

நிதி ஏற்பாடுகளிலிருந்தும் ட்ரஸ்டுகளிலிருந்தும் கிடைக்கிற வருமானம்

2. (1) பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர் பஞ்சாயத்து ஆபீஸில், அது நிர்வகித்து வருகிற நிதி ஏற்பாடு அல்லது ட்ரஸ்ட் ஒவ்வொன்றையும் ரெக்கார்டு ஒன்றை எழுதவேண்டியதை நாளது வரையில் பற்றிய பூர்த்தியாக எழுதி வைத்துவர வேண்டும். அல்லதுவைத்து வரும்படிச் செய்யவேண்டும். அந்த ரெகார்டில் அடியிற்கண்ட விஷயங்கள் கண்டிருக்க வேண்டும்.

(a) மேற்படி நிதி ஏற்பாடு அல்லது ட்ரஸ்டின் நிர்வாகம் பஞ்சாயத்தில் எந்த அதிகாரத்தின்படி சங்கிரமித்ததோ அந்த அதிகாரம்;

(b) மேற்படி நிதி ஏற்பாடு அல்லது ட்ரஸ்டின் ஆஸ்திகளும் வருமான ஆதாரங்களும் ;

(c) மேற்படி நிதி ஏற்பாடு அல்லது ட்ரஸ்டின்பேரில்சாட்டப்படத்தக்க செலவு,

(2) மேற்படி பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர் (1) உப-விதியில் குறிப்பிட்டுள்ள ரெகார்டுடன்கூட, நிதி ஏற்பாடுகள், ட்ரஸ்டுகள் பற்றிய ரெஜிஸ்டர் ஒன்றையும் பஞ்சாயத்து ஆபீஸில் வைத்துவர வேண்டும் அல்லது வைத்து வரும்படிச் செய்யவேண்டும் ; அந்த ரெஜிஸ்டரில் ஒவ்வொரு நிதி ஏற்பாடு அல்லது ட்ரஸ்டுக்கும் சம்பந்தப்பட்ட வருஷாந்தர விவகாரங்களைத் தனித்தனிப் பக்கங்களில் காட்டியிருக்க வேண்டும்.

சகாயத் தொகைகள்

3. அரசாங்கத்தார், இதர பஞ்சாயத்துக்கள், ஜில்லா போர்டுகள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள், முனிஸிபல் கவுன்ஸில்கள், இதர பிரதேச அதிகார சபைகள், தனிப்பட்ட நபர்கள் ஆகிய இவர்கள் ஒரு பஞ்சாயத்துக்குச் செலுத்தத்தக்க வரவு அல்லது சகாயத்தொகைகளை மிஸ்லேனியஸ் டிமாண்டு ரெஜிஸ்டர் மூலமாகக் கவனித்து வரவேண்டும்.

சாலை மரங்களிலிருந்து கிடைக்கும் வரவுகள்

4. மரங்களின் பொருள்களை அல்லது அவற்றின் அனுபோக உரிமையை விற்பனை செய்வதிலிருந்து கிடைக்கும் வரவுகளை நிர்வாக அதிகாரியானவர் மிஸலேனியஸ் டிமாண்டு ரெஜிஸ்டர் மூலமாகக் கவனித்து வரவேண்டும்.

வரவு—செலவு - பொது விதிகள்

கருவிகள், யந்திர தளவாடங்கள், பெருக்கி எடுத்த குப்பைகள், பழைய சாமான்கள், வஸ்துக்கள், ஆகிய இவற்றை விற்றுவந்த தொகைகள்

5. உபயோகத்துக்குதவாத பழைய கருவிகள், யந்திர தளவாடங்கள், சாமான்கள்; வஸ்துக்கள், பெருக்கி எடுத்த குப்பைகள் ஆகிய இவற்றை ஒருவகை செய்வதற்காகப் பஞ்சாயத்தின் உத்தரவைப் பெற வேண்டும். குறித்த காரணங்களுக்காகப் பஞ்சாயத்து மற்றப்படி உத்திரவிட்டாலொழிய மேற்படி கருவிகள், யந்திர தளவாடங்கள், சாமான்கள், வஸ்துக்கள் பெருக்கி எடுத்த குப்பைகள் ஆகிய இவற்றைப் பகிரங்க ஏலத்தில் விற்கவேண்டும்; மேற்படி காரணங்கள் எழுதி வைக்கப்படவேண்டும். இவ்விற்பனைகள் பஞ்சாயத்தால் ஊர்ஜ்ஜிதம் செய்யப்படு வதற்கு உட்பட்டவையாகும். அத்தகைய விற்பனைகள் எல்லாவற்றிலுமிருந்தும் கிடைக்கும் வரவுகளை பலவகைப்பட்ட விற்பனைகளைப்பற்றிய ரெஜிஸ்டரில் காட்டவேண்டும்.

மார்க்கெட்டுகள், பார வண்டி நிற்குமிடங்கள், இறக்குவதற்கான அல்லது இறங்குவதற் கான இடங்கள் அல்லது தங்குமிடங்கள், ஆடு மாடுகள் அடிக்குமிடங் கள், மீன் பண்ணைகள், ஓடத்துறைகளிலிருந்து கிடைக்கும் கட்டணங்கள்

6. (1) ஒரு மார்க்கெட், பார வண்டி நிற்குமிடம், இறக்குவதற்கான அல்லது இறங்குவதற்கான இடம் அல்லது தங்குமிடம். ஆடு மாடுகள், அடிக்குமிடம், மீன் பண்ணை அல்லது ஓடத்துறையை உபயோகிப்பது சம்பந்தமாகக் கட்டணங்கள் வசூலிப்பதற்கான உரிமையைப் பஞ்சாயத்து குத்தகைக்கு விட உத்தேசித்தால், அந்தக் குத்தகை எந்தத் திட்டங்களுக்கும் ஷரத்துக்களுக்கும் உட்பட்டு கொடுக்கப்படுமோ அந்தத் திட்டங்களையும் ஷரத்துக்களையும் கண்டுள்ள பூர்வாங்க நோட்டீஸ் ஒன்றை நிர்வாக அதிகாரி தயாரிக்க வேண்டும்.

(2) மேற்படி பூர்வாங்க நோட்டீஸில் கண்டுள்ள திட்டங்களையும் ஷரத்துக்களையும் பஞ்சாயத்து அங்கீகரிக்க வேண்டும்.

ஆனல், அந்த நோட்டீஸ் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டிருந்தால், அதன் திட்டங்களிலும் ஷரத்துக்களிலும் மாறுதல்கள் எவையேனுமிருந்தாலொழிய, அத்தகைய அங்கீகாரம் அவசியமாகமாட்டாது.

(3) மேற்படி குத்தகை அடியிற்கண்ட எந்தத் திட்டங்களுக்கும் ஷரத்துக்களுக்கும் உட்பட்டு கொடுக்கப்படுமோ அந்தத் திட்டங்களும் ஷரத்துக்களும் மேற்படி பூர்வாங்க நோட்டீஸில் கண்டிருக்க வேண்டும்; அவையாவன:—

(a) எவரும் மேற்படி நோட்டீஸில் குறிப்பிடப்படும் தொகையை ஜாமினக டெபாஸிட் செய்தாலன்றி மற்றப்படி அல்லது முந்திய ஒரு குத்தகை விஷயமாக பஞ்சாயத்துக்குப் பாக்கிப் பணம் செலுத்தவேண்டியிருந்தால் மேற்படி ஏலத்தில் கேட்க அனுமதிக்கப்படமாட்டார்.

(b) குத்தகைக் கால அளவு ஒரு வருஷத்துக்கு மேற்படாவிட்டால்:—

(i) குத்தகைதாரர் தம் சார்பில் குத்தகை ஊர்ஜிதமான தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள் எந்தத் தொகையும் (a) பகுதியில் குறிப்பிட்டுள்ள ஜாமீன் தொகையும் சேர்ந்து மொத்தக் குத்தகைத் தொகையில் நான்கில் ஒரு பங்கு ஆகுமோ அந்தத் தொகையை டெபாஸிட் செய்யவேண்டும். இத்தொகை சாதாரணமாகப் பிரஸ்தாப வருஷத்தின் கடைசி மூன்று மாதங்களுக்குச் சேரவேண்டிய குத்தகைத் தொகையின் தவணைகளுக்காகச் சரிக்கட்டப்படும்; ஆனல், குத்தகைதாரர் கெடு கடந்தும் செலுத்தாமலிருக்கிற குத்தகைத் தொகையின் யாதொரு தவணைக்காகவும் மறு விற்பனை செய்வதனலாவது இலாகாதாரர் நிர்வாகம் செய்வதனலாவது நஷ்டம் எதுவேனும் ஏற்பட்டால் அதற்காகவும் இத்தொகையைச் சரிக்கட்டிக் கொள்ளலாம்.

(ii) மேற்படி குத்தகைத் தொகையில் பாக்கியிருப்பதை மேற்படி குத்தகைப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தேதிகளிலாவது அவைகளுக்கு முன்பாவது ஒவ்வொரு வருஷமும் ஏப்ரல் மாதம் 1-ம் தேதியன்று ஆரம்பமாகும் ஒன்பது மாத கால அளவுக்குள் செலுத்தவேண்டும்,

(c) குத்தகைக் கால அளவு ஒரு வருஷத்துக்கு மேற்பட்டால்:—

(i) குத்தகைதாரர் தம் சார்பில் குத்தகை ஊர்ஜிதமான தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள். எந்தத் தொகையும் (a) பகுதியில் குறிப்பிட்டுள்ள ஜாமீன் தொகையும் சேர்ந்து குத்தகைத் தொகையின் மூன்று தவணைகளுக்குச் சமமான ஒரு தொகை ஆகுமோ அந்தத் தொகையை டெபாஸிட் செய்யவேண்டும். இத்தொகை, சாதாரணமாக சேர வேண்டிய குத்தகைத் தொகையின் கடைசி மூன்று தவணைகளுக்காகச் சரிகட்டப்பட வேண்டும்: ஆனுல், குத்தகைதாரர் கெடு கடந்தும் செலுத்தாமலிருக்கிற குத்தகைத் தொகையின் யாதொரு தவணைக்காகவும் மறு விற்பனை செய்வதனுலாவது இலாகாதாரர் நிர்வாகம் செய்வதனுலாவது நஷ்டம் எதுவேனும் ஏற்பட்டால் அதற்காகவும் இதைச் சரிக்கட்டிக்கொள்ளலாம்;

(ii) குத்தகைத் தொகை பாக்கி முழுவதையும் பஞ்சாயத்து நிர்ணயிக்கக் கூடிய தேதிக்குள் செலுத்திவிடவேண்டும்.

ஆனுல், அப்படி நியமிக்கப்பட்ட தேதி குத்தகைக் கால அளவு கழிந்து போவதற்கு முன் மூன்று மாதங்களுக்கு மேற்படக்கூடாது.

(d) குத்தகைப் பத்திரத்தைச் சாதாரணமாக பஞ்சாயத்து மேற்படி குத்தகையை ஊர்ஜிதம் செய்த தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் எழுதிப் பதிவுசெய்ய வேண்டும்.

(e) மேற்படி குத்தகையின் பிரகாரம் சேரவேண்டிய ஒரு தவணையை அது செலுத்தத் தக்கதாகிவிடுகிற தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் செலுத்தாவிட்டால், நிர்வாக அதிகாரியானவர் அது விஷயத்தை பஞ்சாயத்துக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்; அதன் பேரில் பஞ்சாயத்து குத்தகையை இறுதி செய்து, மறு விற்பனை ஒன்று உத்தரவாகியிருந்தால், அது மறு விற்பனை செய்யப்படும் வரை குத்தகைதாரரின் நஷ்டப் பொறுப்பின் பேரில் அதை இலாகாதாரரே நிர்வகிக்க வேண்டுமென உத்தரவு செய்ய வேண்டும்.

(4) பூர்வாங்க நோட்டிஸைப் பஞ்சாயத்து அங்கீகரித்த பிறகு ஜில்லா கெஜட்டில் பிரசித்தம் செய்யவேண்டும். நோட்டீஸின் நகல் ஒன்றையும் பஞ்சாயத்து ஆபீஸின் விளம்பரப் பலகையிலும் பிரஸ்தாப கிராம எல்லைக்குள் எல்லாருக்கும் தெரியும்படியான ஓரிடத்திலும் ஒட்டிவைக்க வேண்டும்;

ஆனுல், பஞ்சாயத்து குத்தகைத் தொகையிலிருந்து கிடைக்குமென்று எதிர்பார்க்கக்கூடிய வருமானத்தையும் குத்தகையின் தன்மையையும் கவனித்து, பூர்வாங்க நோட்டிஸை இந்த உப-விதியில் கண்டுள்ள விதமாகப் பிரசித்தம் செய்யவேண்டுமா அல்லது வேறு யாதொரு விதமாகப் பிரசித்தம் செய்யவேண்டுமா என்பதைப்பற்றி நிச்சயிக்கலாம்; பின்னுல் சொன்ன விஷயத்திலே, பிரசித்தம் செய்யவேண்டிய விதம் அல்லது விதங்களைக் குறிப்பிடவேண்டும்.

(5) நிர்வாக அதிகாரியாவது அவரிடமிருந்து கிரமமாய் அதிகாரம் பெற்ற ஒருவராவது ஏலம் நடத்தவேண்டும்; மேலும் பூர்வாங்க நோட்டிஸில் குறிப்பிடக்கூடிய தொகையை ஜாமீனுக டெபாஸிட் செய்யத் தவறிவிடுகிற ஒரு நபராவது முந்திய ஒரு குத்தகை விஷயமாகப் பஞ்சாயத்துக்குப் பணம் பாக்கியிருக்கிற ஒரு நபராவது ஏலத்தில் கேட்க அவர் அனுமதிக்கக்கூடாது.

(6) நிர்வாக அதிகாரியானவர், ஏலம் பூர்த்தியான பிறகு, ஏலத்தில் கேட்ட தொகைகளின் பட்டியல் ஒன்றைப் பஞ்சாயத்துக்குமுன் வைக்கவேண்டும். பஞ்சாயத்து ஏலத்தில் கேட்கப்பட்ட எந்தத் தொகைகளை ஒப்புக்கொள்ள வேண்டும் ஏன்பதை நிச்சயிக்க வேண்டும். ஒப்புக்கொள்ளப்பட்ட ஏலத்தொகை மிக உயர்ந்த ஏலத்தொகையாயிரா விட்டால், ஒப்புக்கொள்ளப்பட்டதைவிட உயர்ந்த ஏலத்தொகை அல்லது ஏலத்தொகைகளைத் தள்ளிவிட்டதற்கான காரணங்களை எழுதி வைக்கவேண்டும்.

(7) பின்னர், பஞ்சாயத்தின் சார்பில் நிர்வாக அதிகாரி பூர்வாங்க நோட்டிஸின் ஷரத்துக்களையும் திட்டங்களையும் அனுசரித்து யாருடைய ஏலத்தொகை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதோ அவருடன் எழுத்து மூலமான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள வேண்டும்.

வரவு — செலவு — பொது விதிகள்

(8) சேரவேண்டிய தொகைகளின் வசூலை மிஸலேனியஸ் டிமாண்டு ரெஜிஸ்டர் மூலமாகக் கவனித்து வரவேண்டும்.

(9) ஒவ்வொரு குத்தகையின் விஷயத்திலும், குத்தகைப் பத்திரம் ஒன்றை எழுத வேண்டும் ; அதில் அடியிற்கண்ட விவரங்கள் அடங்கியிருக்க வேண்டும் :—

(a) குத்தகைக் கால அளவு ;

(b) வாடகையின் ஒவ்வொரு தவணைக்குறிய தொகையும், அது எந்தத் தேதி யன்று அல்லது எந்தத் தேதிக்குமுன் செலுத்தத் தக்கதாகுமென்பதும் ;

(c) உரிய தேதிக்குப் பிறகு ஒரு தவணையைச் செலுத்தும் விஷயத்தில் செலுத் தத்தக்க பிரதிபலன் தொகை ;

(d) குத்தகைதாரர் ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை நிறைவேற்றத் தவறிய கார ணத்தால், மறு விற்பனையினாலாவது இலாகாதாரர் நிர்வாகம் பண்ணி மறுவிற்பனை செய்த தனாலாவது பஞ்சாயத்துக்கு ஏற்பட்ட யாதொரு நஷ்டத்தைச் சரிக்கட்டிக்கொடுக்க குத்தகை தாரருக்குள்ள பொறுப்பு ;

(e) மார்க்கெட்டுகள் இறங்குமிடங்கள் அல்லது இறக்குமிடங்கள் ; தங்குமிடங் கள். பாரவண்டி நிற்குமிடங்கள், ஆடுமாடு அடிக்குமிடங்கள், மீன் பண்ணைகள், ஓடத் துறைகள், ஆகிய இவை விஷயமாக குத்தகைதாரர் விதிக்கவேண்டிய கட்டணங்களின் வீதம்.

(10.) (a) குத்தகைதாரர், பிரஸ்தாப கலெக்டர் அந்த இடத்திற்காக அப்போ தைக்கப்போது நிச்சயிக்கக்கூடிய வாடகையைச் செலுத்த உட்பட்டவராவார் என்னும் வெளிப்படையான திட்டமொன்று ஒவ்வொரு குத்தகைப் பத்திரத்திலும் கண்டிக்கவேண்டும்.

(b) எடுத்து விடப்பட்டது.

(c) எவரும் மேற்படி குத்தகையின் பிரகாரம் தமக்குள்ள உரிமைகள். அந்தக் குத்தகைப் பத்திரத்தைத் தாம் எழுதிக்கொடுக்கிற வரையில், செலுத்த அனுமதிக்கப் படமாட்டார்.

டெண்டர்கள் மூலமாக குத்தகைக்கு விடுவது:

6–A. அசாதாரணமான விஷயங்களில் 2 சமயங்களில் பொது குத்தகையை, குத்தகைதாரர்கள் கட்டுபாட்டினுல் அல்லது மற்றெரு காரணமாக சரிபட்டு வராவிட்டால், நிர்வாக அதிகாரி டெண்டர்கள் மூலமாக குத்தகைக்கு ஏற்பாடு செய்யலாம். அவைகளில் எதை ஏற்றிக் கொள்ளவேணும் என்பதை பஞ்சாயத்து தீர்மானிக்க வேண்டும். அதிக தொகையுள்ளதை ஒத்துக் கொள்ளாமல் கீழ் தொகையுள்ளதை ஒத்துக் கொண்டால் காரணங்களை எழுத்தில் தெரியப்படுத்த வேண்டும். [போ. செ. ஜா-கெஜட் பார்ட் I-பக்கம் 175 தேதி 22-12-1954.]

மார்கெட்டு-பாரவண்டி நிற்குமிடம் முதலியவின் குத்தகை

7. (1) ஒரு மார்க்கெட், பாரவண்டி நிற்குமிடம், இறங்குமிடம் அல்லது இறக்குமிடம் அல்லது தங்குமிடம், ஆடுமாடு அடிக்குமிடம், மீன்பண்ணை அல் லது ஓடத்துறையை இலாகாதாரர் நிர்வகித்து வந்தால், அதை உபயோகிப்பது மொத்தமாக விதிக்கப்பட்ட சகல கட்டணங்களை யும் நிர்வாக அதிகாரியால் அச்சிடப்பட்டுக் கொடுக்கப்படும் டிக் கட்டுகள் மூலமாக வசூலிக்கவேண்டும்.

(2) இந்த டிக்கட்டுகளை வெவ்வேறு கட்டண வீதங்களுக்காக வெவ்வேறு நிறங் களில் பிரதி, எதிரிடைப் பிரதிகளில் அச்சிடவேண்டும் ; ஒவ்வொரு விஷயத்திலும் கட்டண வீதங்களை அச்சிடவேண்டும், ஒவ்வொரு வகையைச் சேர்ந்த டிக்கட்டையும் ஒவ்வொன்றும் 100 கொண்ட புஸ்தகங்களாக பைண்டு செய்து, அவைகளுக்குத் தொடரான மெஷின் நம்பர் கள் கொடுக்கவேண்டும். வசூல் உத்தியோகஸ்தர்களிடம் அவற்றைக் கொடுப்பதற்கு முன், அவற்றில் நிர்வாக அதிகாரியின் அல்லது இது விஷயமாய் அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற யாதொரு நபரின் முன்னிலையில் பஞ்சாயத்தின் பொது முத்திரையைப் போடவேண்டும்.

(3) இந்த டிக்கட்டுகள் விஷயமாக இரண்டு பாகங்களாகவுள்ள ரெஜிஸ்டர் ஒன்றைப் பஞ்சாயத்து ஆபீசில் வைத்து வரவேண்டும்.

முதல் பாகம் ஸ்டாக் ரெஜிஸ்டராகும்; வரவுகளுக்கான பதிவுகளில் நிர்வாக அதிகாரியும் அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற ஓர் உத்தியோகஸ்தரும் அத்தாட்சிக் கையெழுத்துப் போடவேண்டும்; கொடுக்கப்பட்டவைகளைக் காட்டும் பதிவுகளில் சம்பந்தப்பட்ட வசூல் உத்தியோகஸ்தர் அத்தாட்சிக் கையெழுத்துப் போடவேண்டும்,

இரண்டாம் பாகம், இந்த டிக்கட்டுகளைக் கொண்டு வரி வசூலிக்கும் வேலை ஒப்புவிக்கப்பெற்றுள்ள ஒவ்வொரு உத்தியோகஸ்தருக்காகவுமான சொந்த லெட்ஜர் கணக்காகும். அதில் வசூல் உத்தியோகஸ்தர் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வகையான டிக்கட்டின் நம்பரையும் மதிப்பையும் பற்றுக எழுதிக்கொண்டு, பஞ்சாயத்து ஆபீஸில் அவர் செலுத்திய வசூல் தொகையை வரவு வைக்கவேண்டும். வசூல் உத்தியோகஸ்தர் ஒவ்வொரு நாளும் தொகைகள் செலுத்தவேண்டும்; அவர் கொடுத்த ஒவ்வொரு வகையான டிக்கட்டின் நம்பர், மதிப்பு இவை பற்றிய விவரங்களையும் அப்போது சேர்த்து அனுப்பவேண்டும்.

(4) ஒரு டிக்கட் புஸ்தகம் முழுவதும் உபயோகிக்கப்பட்டிருந்தால், அதன் எதிரிடைப் பிரதியை வாஸ்தவமான வரவுகளோடு வைத்துச் சரிபார்ப்பதற்காகப் பஞ்சாயத்து ஆபீஸுக்கு அனுப்பவேண்டும்.

(5) தம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட டிக்கட்டுகளையும் தாம் செய்த வசூலையும் பற்றிய கணக்கைக்கூட வசூல் உத்தியோகஸ்தர் வைத்து வரவேண்டும். ஒவ்வொரு வகையான டிக்கட்டின் மூலம் கிடைத்த அன்றாட வசூல்களை அந்தக் கணக்கில் எழுதிக்கொண்டு, ஒவ்வொரு நாள் முடிவிலும், இருப்பு கட்ட வேண்டும். மேற்படி கணக்கையும் டிக்கட்டுகளின் கையிருப்பையும் நிர்வாக அதிகாரியோ அவரிட மிருந்து அதிகாரம் பெற்ற ஓர் உத்தியோகஸ்தரோ கிரமமான இடைக்காலங்களில் சரிபார்க்க வேண்டும்; அப்படிச் சரிபார்த்ததைப்பற்றி அந்த அதிகாரி அல்லது உத்தியோகஸ்தர் உறுதிகூறவேண்டும்.

கட்டடங்கள், நிலங்கள், இதர ஸ்தாவர சொத்து ஆகிய இவைகளிலிருந்து கிடைக்கும் வருமானம்

8. (1) ஒரு பஞ்சாயத்துக்குச் சொந்தமான ஒரு கட்டடம் வாடகைக்கு விடப்பட்டாலும் அந்தப் பஞ்சாயத்துக்குச் சொந்தமான ஒரு நிலம் அல்லது இதர ஸ்தாவர சொத்து குத்தகைக்கு விடப்பட்டாலும், அந்தக் கட்டடத்தின் வாடகையாவது அந்தக் குத்தகையின் படிச் சேர வேண்டிய தொகையாவது சரிவர வசூலிக்கப்படுகிறதா என்பதை மிஸலேனியஸ் டிமாண்டு ரெஜிஸ்டர் மூலமாகக் கவனித்து வரவேண்டும்.

(2) பஞ்சாயத்தின் ஆதிக்கத்தின் கீழுள்ள முசாபரி பங்களா, ரெஸ்ட்-ஹவுஸ் அல்லது சத்திரம் ஒவ்வொன்றிலும் அரசாங்கத்தார் அப்போதைக்கப்போது ஏற்படுத்தக்கூடிய நமூனுப்படிக்கான ரெஜிஸ்டர் ஒன்றை வைத்து வரவேண்டும்; மேற்படி முசாபரி பங்களா, ரெஸ்ட்-ஹவஸ் அல்லது சத்திரத்தை அனுபோகத்தில் வைத்திருப்பவர்கள் அந்த ரெஜிஸ்டரில் குறிப்பிட்டுள்ள விவரங்களை எழுதவேண்டியவர்களாவார்கள். அத்தகைய அனுபோகத்துக்காக பஞ்சாயத்து நிச்சயிக்கும் வீதங்களின்படி கட்டணங்கள் விதிக்கப்படவேண்டும்.

சேவை செய்ததற்காக வசூலிக்கப்படும் தொகைகள்

9. மேற்படி சட்டத்தில் வேறு விதமாய் நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, ஒரு பஞ்சாயத்து, தனிப்பட்ட ஒரு நபர் அல்லது நிலையத்துக்கான ஒரு வேலைக்குப் பிடிக்கு மென்று மதிப்பிடப்பட்ட செலவு முன்னதாகச் செலுத்தப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய எவ்வேலையையும் மேற்கொள்ளக் கூடாது.

மிஸலேனியஸ் பில் ரெஜிஸ்டர்

10. பலவிதங்களில் சேரவேண்டிய எந்தத் தொகைகளுக்காக மிஸலேனியஸ் பில்லுகள் கொடுக்கப்படுகின்றனவோ அந்தத் தொகைகளுக்குச் சம்பந்தப்பட்ட சகல விவகாரங்களையும் மிஸலேனியஸ் பில் ரெஜிஸ்டரில் எழுதிக்கொள்ளவேண்டும்.

வரவு — செலவு — பொது விதிகள்

வரியைத் திருப்பிக் கொடுப்பது

11. ஒரு பஞ்சாயத்து பெற்றுக்கொண்ட எந்த பாபத்தையும் அப் பஞ்சாயத்தின் அனுமதியின்றி திருப்பிக் கொடுக்கக்கூடாது. பஞ்சாயத்து அளித்த மேற்படி அனுமதியானது அது அளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருஷத்துக்குப் பிறகு காலாவதியாகிவிடும்; அதன் பின்னர் புதிதாக ஒரு அனுமதியைப் பெறவேண்டும். நிலத் தீர்வையைத் திருப்பிக் கொடுப்பதானது, அத் தீர்வையைத் திருப்பிக் கொடுப்பது சம்பந்தமான விதிகளினுல் முறைப்படுத்தப்படும்.

வரியைத் திருப்பிக் கொடுப்பதற்கான பில்லுகளை அரசாங்கத்தார் அப்போதைக்கப் போது ஏற்படுத்தக்கூடிய நமூனைப்படித் தயாரிக்கவேண்டும். தொகை யொன்று திருப்பிக் கொடுக்கப்பட்ட உடனே அவ்வாறு கொடுக்கப்பட்டதைப்பற்றிய ஒரு குறிப்பைப் பொருத்தமான கணக்குகளில் பிரதம வரவுப் பதிவுக்கு எதிரே எழுதவேண்டும்.

271-ம் பக்கம் பார்க்கவும் பி. 174-யை பார்க்கவும்.

எல்லா விற்பனைகளும், குத்தகைகளும் பகிரங்க ஏலம் மூலம் நடத்த வேண்டும்.

12. (1) (a) மரங்களின் பொருள்கள் அல்லது அவற்றின் அனுபோக உரிமை.
(b) காற்றடித்து விழுந்த மரங்கள், பட்டுப்போன மரங்கள்.
(c) பெருக்கி எடுத்த குப்பைகள்.
(d) கருவிகளும் யந்திர தளவாடங்களும்.
(e) பழைய சாமான்களும், வஸ்துக்களும்.
(f) பஞ்சாயத்துக்குச் சொந்தமான கட்டடங்கள் நிலங்கள் ஆகிய இவற்றின் குத்தகை.

ஆகிய இவற்றின் விற்பனை பகிரங்க ஏலம் மூலமாக நடத்தவேண்டும்; இந்த ஏலத்தை நிர்வாக அதிகாரியாவது அவரிடமிருந்து கிரமமாக அதிகாரம் பெற்ற ஒருவராவது நடத்த வேண்டும்; இவர் அது விஷயமாய் தாம் தகுதியென்று கருதுகிறவிதமாக நன்ருக விளம்பரம் செய்யவேண்டும். ஏலத்தில் கேட்ட தொகைகளை நிர்வாக அதிகாரி பஞ்சாயத்துக்கு முன் வைக்கவேண்டும்; இந்த ஏலத் தொகைகளில் எவற்றை ஒப்புக்கொள்ளலாமென்பதைப் பஞ்சாயத்துக்கு முன் வைக்கவேண்டும்; இந்த ஏலத் தொகைகளில் எவற்றை ஒப்புகொள்ளலாமென்பதைப் பஞ்சாயத்து தீர்மானிக்கவேண்டும். ஒப்புக்கொள்ளப்பட்ட ஏலத்தொகை மிக உயர்ந்த ஏலத் தொகையாயிராவிட்டால், ஒப்புக்கொள்ளப்பட்டதை விட உயர்ந்த ஏலத் தொகை அல்லது ஏலத்தொகைகளைத் தள்ளிவிட்டதற்கான காரணங்களை எழுதிவைக்க வேண்டும்.

ஆனல், (1) பகுதியில் குறிப்பிட்டுள்ள நிலங்கள், கட்டடங்கள் விஷயமாக, பிரதமத்தில் யாருக்கு குத்தகை விடப்பட்டதோ அவர் சார்பில் அதைப் புதுப்பிப்பது லாபகரமாயிருக்கும் பட்சத்தில், பஞ்சாயத்து, கலெக்டரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு பகிரங்க ஏலத்தைக் கைவிடலாம்.

(2) விற்பனை செய்த பொருள்களை, ஏலத்தில் கேட்டு விலை ஒப்புக்கொள்ளப்பெற்றவர் தாம் செலுத்தத்தக்க தொகை முழுவதையும் செலுத்திவிட்டிருந்தாலொழிய சுவாதீனத்திலெடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்.

(3) விற்பனைகளெல்லாவற்றையும் மிஸலேனியஸ் ஸேல்ஸ் ரெஜிஸ்டரில் காட்ட வேண்டும். விற்பனைத் தொகைகளை வசூலித்ததெல்லாம் அதில் பதிவு செய்யவேண்டும்.

கட்டணங்களை வசூலிப்பதை குறித்து

13. மரங்களின் பொருள்களின் அல்லது அனுபோக உரிமையின் அல்லது மார்க்கெட்டுகள், பார வண்டி நிற்குமிடங்கள், இறங்குமிடங்கள் அல்லது தங்குமிடங்கள், ஆடு, மாடு, அடிக்குமிடங்கள், மீன் பண்ணைகள் ஆகிய இவை விஷயமாகக் கட்டணங்கள் வசூலிக்கும் நிலைமையின் அல்லது இதுபோன்ற வேறு யாதொரு உரிமையின் குத்தகை ஷரத்துக்கள் கிரமமாக நிறைவேற்றப்படுவதற்காக நிர்வாக அதிகாரி, சகல விஷயங்களிலும், போதுமானதென்று கருதுகிற ஜாமீன் தொகை வாங்கப்பட வேண்டும். அப்படி வாங்கப்பட்ட ஜாமீன் தொகையைக் குத்தகைதாரர் குத்தகையின் ஷரத்துக்கள் எல்லாவற்றையும் திருப்திகரமாக அனுசரித்திருந்தாலொழியவும் அனுசரித்திருக்கிறவரையிலும் அவரிடம் திருப்பிக் கொடுக்கக்கூடாது. ஆனல் மேற்படி குத்தகையின்படிக்கான கடைசி தவணைக்காக அந்த ஜாமீன் தொகையைச் சரிக்கட்டிக் கொள்ளலாம்.

வரவு — செலவு — பொது விதிகள்

14. நிர்வாக அதிகாரியாவது அவருடைய அதிகாரத்தின்படி (பஞ்சாயத்தின் சேவைக்காக அனுப்பப்பட்டிருக்கிற அரசாங்க ஊழியர் ஒருவர் உட்பட) பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியராவது அத்தகைய தமது ஹோதாவில் பெற்றுக்கொண்ட சகல பணத்தையும், அதைப் பெற்றுக்கொண்டவுடனே, கணக்கில் கொண்டு வரவேண்டும். அப்படிப் பெற்றுக்கொண்ட சகல பணத்தையும் அன்றுடம் பஞ்சாயத்து ஆபீஸில் செலுத்தவேண்டும்.

பஞ்சாயத்து பணத்தை அன்றுடம் பஞ்சாயத்து ஆபீசில் செலுத்த வேண்டும்

15. பஞ்சாயத்தின் சார்பாகப் பெற்றுக்கொண்ட எந்த பணத்தையும், முதலில் கணக்கில் கொண்டுவந்து பஞ்சாயத்து நிதி எந்த கஜானு பாங்க் அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் வைக்கப்பட்டிருக்கிறதோ அந்த கஜானு, பாங்க் அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் செலுத்தாமல் அல்லது அதற்கு அனுப்பாமல் அதன் செலவுக்காக உபயோகித்துக்கொள்ளக்கூடாது.

பஞ்சாயத்து பணத்தை பாங்கி முதலியவைகளில் செலுத்தாமல் செலவுக்காக உபயோகித்துக் கொள்ளக்கூடாது

16. ஒரு கஜானு, பாங்க் அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் ஒவ்வொரு தரம் பணம் செலுத்தும்போதும் சலான் ஒன்றைச் சேர்த்தனுப்பவேண்டும்; அந்தச் சலானில், செலுத்தப்பட்ட தொகையையும் அதனதன் மையையும் எந்த நபருடைய அல்லது ஆபீஸினுடைய கணக்கில் அது செலுத்தப்படுகிறதோ அந்த நபர் அல்லது ஆபீஸையும் கண்டிருக்க வேண்டும்.

பாங்கியின் பெயர் குறிப்பிட வேண்டும்

17. எந்தப் பஞ்சாயத்தும் ரீஜனல் இன்ஸ்பெக்டரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல் அதன் நிலம், கட்டடங்கள் அல்லது யந்திரங்களை விற்பனை செய்வதிலிருந்து கிடைக்கும் தொகைகள் போன்ற தனது மூலதன வரவுகளை சாதாரணச் செலவுக்காகப் பயன் படுத்தக்கூடாது.

மூலதன வரவுகளை சாதாரண செலவுக்காக பயன்படுத்தக் கூடாது

18. பஞ்சாயத்து ஆபீஸில் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள பில்லுகளின் பேரில் பஞ்சாயத்து வரி வசூலிக்கும் வேலை ஒப்பிக்கப்பெற்றுள்ள பஞ்சாயத்து ஊழியர் அல்லது கிராமப் பெரியதனக்காரர் ஒவ்வொருவருக்கும் வசூல் புஸ்தகம் ஒன்று கொடுக்கப்படவேண்டும்.

வரி வசூலிக்க வசூல் புஸ்தகம் கொடுக்க வேண்டும்

19. பில் கலெக்டர்கள் அல்லது வெளியில் சென்று வேலை செய்யும் இதரகீழ் உத்தியோகஸ்தர்கள் அல்லது கிராம பெரியதனக்காரர்கள் வசூலித்த வரிகள் இதர பஞ்சாயத்து வருமானம் இவற்றின் வசூலைப் பஞ்சாயத்து ஆபிஸில் வைத்து வரப்படுகிற வசூல் ரெஜிஸ்டர் ஒன்றின் மூலமாக பஞ்சாயத்து ஆபீஸில் செலுத்த வேண்டும்.

வசூல் ரிஜிஸ்டரின் மூலமாக வசூலித்த தொகையைசெலுத்த வேண்டும்

20. பஞ்சாயத்து ஆபீஸில் பொது ஜனங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட சகல பணத்துக்கும் அரசாங்கத்தார் ஏற்படுத்திய நமூனுப்படிக்கான ரசீதுகளைக் கொடுக்கவேண்டும்; ஆனல் ஆபீஸ் வசூல் ரெஜிஸ்டரில் பெற்றுக் கொண்டதாக ஒப்புக்கொள்ளப்பட்ட வரவுகள் விஷயத்தில் அவ்வாறு ரசீதுகள் கொடுக்கவேண்டியதில்லை. மேற்படி ரசீதுகளில் நிர்வாக அதிகாரியாவது அவரிடமிருந்து அதிகாரம்பெற்ற வேறு யாதொரு நபராவது கையெழுத்துச் செய்யவேண்டும்.

பெற்றுக் கொண்ட பணத்துக்கு ரசீது கொடுப்பது

21. நிர்வாக அதிகாரியானவர் அரசாங்கத்தார் அப்போதைக்கப்போது ஏற்படுத்தக் கூடிய நமூனுப்படி அடியிற்கண்ட கணக்குகளையும் ரெஜிஸ்டர்களையும் பஞ்சாயத்து ஆபீஸில் வைத்துவர வேண்டும் அல்லது வைத்து வரும்படிச் செய்யவேண்டும்:—

ரொக்கப் புஸ்தகமும் துணையான ரெஜிஸ்டர்களும்

(1) ரொக்கப் புஸ்தகம்.

(2) வண்டிகளுக்கான வரியைப்பற்றிய வசூல் ரெஜிஸ்டர்.

(3) லைஸென்ஸ்—கள், அனுமதிகள் ஆகிய இவை பற்றிய ரெஜிஸ்டர்.

வரவு — செலவு — பொது விதிகள்

(4) மிஸலேனியஸ் டிமாண்டு ரெஜிஸ்டர்.
(5) வருமானம் தரும சொத்துக்களைப்பற்றிய ரெஜிஸ்டர்.
(6) வசூல் புஸ்தகம்.
(7) தொகை செலுத்துவதற்காக அனுமதிக்கப்பட்ட பில்லுகளைப் பற்றிய ரெஜிஸ்டர்.
(8) மிஸலேனியஸ் ஸேல்ஸ் ரெஜிஸ்டர்.
(9) மிஸலேனியஸ் பில் ரெஜிஸ்டர்.
(10) நிதி ஏற்பாடுகளையும் ட்ரஸ்டுகளையும் பற்றிய ரெஜிஸ்டர்.
(11) சிட்டா.
(12) சம்பளப்பட்டி ரெஜிஸ்டர்.
(13) பலவகையான வரவுகள்.
(14) தணிக்கை ரெஜிஸ்டர்.

II-ம் பாகம் — செலவு

பில்லுகளை பாஸ் செய்த பிறகு பணம் கொடுக்க வேண்டும்

22. பஞ்சாயத்தினிடம் சேர்ப்பிக்கப்பட்ட பில்லுகள் விஷயமாக பஞ்சாயத்து நிதியிலிருந்து கொடுக்கப்படும் தொகைகள் எல்லாவற்றையும் நிர்வாக அதிகாரியாவது, இதுவிஷயமாய் நிர்வாக அதிகாரியிடமிருந்து கிரமமாக அதிகாரம் பெற்ற எவராவது அந்தப் பில்லுகளை ஜாரி (பாஸ்) செய்த பிறகே கொடுக்க வேண்டும்

செக்குகள் மூலம் கொடுக்க வேண்டும். தபால் ஆபீஸ் சேவிங்ஸ் பாங்க் தொகையை வாங்கி கொடுக்க வேண்டும்

23. பஞ்சாயத்து நிதிகள் எந்த கஜானு, பாங்க் அல்லது கூட்டுறவுச் சங்கத்துக்குப் பிரஸ்தாப கட்சிக்காரர்கள் பெயரில் எழுதப்படும் செக்குகள் மூலமாகவே தொகைகள் கொடுக்கவேண்டும். நிர்வாக அதிகாரி தமக்கும் சிப்பந்திக்கும் கொடுக்கப் படவேண்டிய தொகைகளுக்காக மட்டும் ஸெல்ப் செக்குகள் எழுதவேண்டும் ஒரு பஞ்சாயத்தின் நிதிகள் தபால் ஆபீஸ் ஸேவிங்ஸ் பாங்கில் வைக்கப்பட்டிருந்தால், நிர்வாக அதிகாரி பணம் கொடுப்பதற்காக வேண்டிய தொகையைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களுக்குப் பட்டுப்வாடா செய்ய வேண்டும்.

நிலையான முன் தொகை நிர்வாக அதிகாரிக்கு அனுமதிப்பது.

24. ஒரு பஞ்சாயத்து எதிர்பாராதச் சில்லரைச் செலவுக்காக நிர்வாக அதிகாரிக்கு நிலையான முன் பணத்தொகை ஒன்றை அனுமதிக்கலாம். பிரஸ்தாப விவகாரங்களை எதிர்பாராதச் செலவுகள் பற்றிய ரிஜிஸ்டர் ஒன்றில் எழுதிக் கொள்ளவேண்டும்; நிலையான முன் பணத்தொகை செலவழிந்து விடும்போதெல்லாம் அதை மீண்டும் நிரப்பிக்கொள்ள வேண்டும்.

அதிகாரி மாறினுல் வந்தவர் பணம் வாங்க சர்டிபிகேட்

25. அரசாங்க கஜானு பாங்க் அல்லது கூட்டுறவுச் சங்கமொன்றில் வைக்கப்பட்டிருக்கிற பஞ்சாயத்து நிதிகள் பேரில் செக்குகள் கொடுத்து பணம் வாங்க அதிகாரம் பெற்றுள்ள பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியாவது இதர உத்தியோகஸ்தராவது தற்காலிகமாகவோ தம் உத்தியோகப் பொறுப்பை இன்னொருவருக்குக் கொடுத்து விட்டால், விடுவிக்கும் உத்தியோகஸ்தரின் மாதிரிக் கையெழுத்து ஒன்றையும் கீழே கொடுக்கப்பட்டுள்ள நமுனுப் படிக்கான ஸெர்டிபிகேட் ஒன்றையும் அவர் சந்தர்பத்துக்கேற்றபடி, கஜானு உத்தியோகஸ்தருக்காவது பாங்கின் உள்ளூர் உத்தியோகஸ்தருக்காவது போஸ்ட்மாஸ்ட்டருக்காவது கூட்டுறவுச் சங்கக் காரியதரிசிக்காவது அனுப்ப வேண்டும்.

ஸெர்டிபிகேட்டின் நமுனு.

அ. ஆ.

விடுவிக்கும் உத்தியோகஸ்தரின் கையெழுத்தும். உத்தியோகப் பெயரும்.

19 -ம் வருஷம் (மாதம்) (தேதி)

முற்பகலிலிருந்து பிற்பகலிலிருந்து என்னுடைய உத்தியோகப் பொறுப்பை எந்த உத்தியோ

கஸ்தருக்கு கொடுத்திருக்கிருரோ அந்த உத்தியோகஸ்தரின் கையெழுத்து மேற்கண்டதாகு மென்று நான் உறுதி கூறுகிறேன்.

இ. ஈ.

உத்தியோகப் பொறுப்பைக் கொடுக்கிற உத்தியோகஸ்தரின் கையெழுத்தும் தேதியும்.

செக்கு புஸ்தகங்களை வைத்து கொள்ள வேண்டிய விதம்.

26. செக்குப் புஸ்தகங்களை பணம் வாங்கும் உத்தியோகஸ்தர் தம் சொந்தப் பொறுப்பில் வைத்திருக்கவேண்டும். பொறுப்பு மாற்றம் ஏற்படும் காலத்தில் விடுவிக்கப் பெறும் உத்தியோகஸ்தர் கொடுத்து விடுவிக்கும் உத்தியோகஸ்தர் பெற்றுக் கொண்ட உபயோகிக்கப் படாத செக்குகள் செக்குப் புஸ்தகங்கள் ஆகிய இவைகளின் எண்ணிக்கையைக் காட்டுகிற குறிப்பு ஒன்றை ரொக்கப் புஸ்த கத்தில் அந்த இருவருடைய'கையெழுத்துடனும் எழுதிக்கொள்ள வேண்டும்.

பில்லுகளை தயாரிக்கும் விதம்-வவுச்சர்கள்.

27. (1) பஞ்சாயத்து நிதியின்பேரில் யாதொரு தாவா (பாத்யதை)வுடைய ஒவ்வொருவரும் பஞ்சாயத்து ஆபீஸில் பில் ஒன்றைக் கொடுத்துக் கொள்ளவேண்டும். சாத்தியமான இடங்களிலெல்லாம் அந்த பில் இது காரியத்துக்காக நமுனு எது வேனும் ஏற்படுத்தப் பட்டிருந் தால் அந்த நமுனைப்படி இருக்கவேண்டும். தாவாதாரர் அதில் கிரமமாகத் தேதியைக் குறிப்பிட்டுக் கையெழுத்துப் போடவேண்டியது அன்றி, அவசியமான போது அதற்கு ஸ்டாம்பு ஒட்டவேண்டும்

(2) பில்லுகள் தயாரிக்கையில் சாத்தியமானபோதெல்லாம் அச்சிட்ட நமூனுக் களையே உபயோகிக்கவேண்டும்.

(3) தாவாதாரர் ஒருவர் பில் ஒன்றை இது காரியத்துக்காக ஏற்படுத்தப் பட்டுள்ள நமூனுவினின்றும் வேறுபட்ட நமூனைப்படிக் கொடுத்துக் கொண்டால், மேற்படி செலவை எந்த உத்தியோகஸ்தர் செய்கிருரோ அவர் சரியான நமூனைப்படி பிரத்தியேகமான பில்ஒன்றை தயாரிக்கவேண்டும் ; தாவாதாரருடைய பில்லை அதனுடன் ஒரு உப-வவுச்சர் (Sub - Voucher) ஆக சேர்த்தனுப்பவேண்டும்.

(4) பில் ஒவ்வொன்றையும் பஞ்சாயத்தின் பிரதான பரிவார உத்தியோகஸ்தரிடம் கொடுத்துக்கொள்ளவேண்டும் ; அவர் பில்லுகளைப் பற்றிய ரெஜிஸ்டரில் அதைப் பதிவு செய்துகொண்டு பிறகு, ஸாங்க்ஷன் செய்வது அல்லது இதர தஸ்தாவேஜுகள், தாவாவின் நேர்மை, கணக்குத் தவறின்மை ஆகிய இவற்றை அனுசரித்து அந்த பில் அனுமதிக்கப் படத் தக்கதாஎன்பதைப் பற்றி சரிபார்த்துப் பரிசீலனை செய்வதன்பேரில் அந்த பில்சரியாகவும் கிரமமாகவும் இருக்கிறதென்று தெரிந்தால் அந்த பில்லிலுள்ள தொகை-செலுத்து உத்தரவில் கையெழுத்துப் போடுவதற்காக அதை நிர்வாக அதிகாரியின் முன் வைக்கவேண்டும்.

சம்பள ரசீது ரெஜிஸ்ட ரையும் ரசீதையும் குறித்தது

28 (1) பஞ்சாயத்தின் எந்த உத்தியோகஸ்தர் அல்லது ஊழியருக்குச் சம்பளமாவது படியாவது கொடுக்கப்படுகிறதோ அந்த உத்தியோகஸ்தர் அல் லது ஊழியர் ஒவ்வொருவரிடமிருந்தும் சம்பள ரசீது ரெஜிஸ்டரில் தனித்தனி ஒப்புக் கையெழுத்துகள் (அவசியமானபோது ஸ்டாம்ப் ஒட்டி) பெற வேண்டும் ; ஆனல் பில் அனுப்புகிறவரே அதில் கண்ட மொத்தத் தொகையையும் பெறுவதாயிருந்து அந்த பில்லிலேயே (அவசியமானபோது ஸ்டாம்பு ஒட்டி) ரசீது ஒன்றை அவர் ஏற் கெனவே அனுப்பியிருந்தால் அவரிடம் அவ்வாறு ஒப்புக்கையெழுத்துப் பெறவேண்டியதில்லை.

(2) ஒரு பஞ்சாயத்தின் யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் தாம் வாங்கிய எந்தப் பணத்திலிருந்தாவது தொகை எதுவேனும் செலுத்தினல், அவர் (அவசியமானபோது ஸ்டாம்ப் ஒட்டிய) ரசீது ஒன்றை பில்லிலேயே அனுப்பியிருந்தாலொழிய (அவசியமானபோது ஸ்டாம்ப் ஒட்டிய) தனி ரசீது ஒன்றைப் பெற்று அந்த பில்லுடன் சேர்த்தனுப்ப வேண்டும்.

செலவு பில்லுக்கு ஆதரவை குறித்து

29. செலவு பாபத்து எதற்காகிலும் பில் அனுப்புகிற உத்தியோகஸ்தர் அல்லது ஊழியரைக் காட்டிலும் உயர்ந்த அதிகாரியொருவரின் அனுமதி தேவையாயிருந்தரல், அந்த அனுமதியைப் பெற்று, அந்த ஷாத்துக் களை அந்த பில்லில் கண்டெழுத வேண்டும்.

வரவு — செலவு — பொது விதிகள்

செலவு பாபத்து பாரம் (நமூனு) இருக்க வேண்டிய விதமும்-பட்ஜெட்டை மீட்டிங்கில் பாஸ் செய்விக்கும் விதமும்

30. (1) செலவு பாபத்து ஒன்றின் விஷயமாக அடியிற்கண்ட நமூனுப்படிக்கான ஸெர்டிபிகேட் ஒன்றை அனுப்பி யிருந்தாலொழிய ஒரு பஞ்சாயத்து எந்தச் செலவு பாபத்தையும் அனுமதிக்கக்கூடாது :—

.... என்னும் தலைப்பின் கீழ்.........
பட்ஜெட் பட்டியிலிருந்து இத் தொகையைச் செலவழிக்கலாம்.

	ரூபா.	நயா பைசா.
இந்தத் தலைப்பின் கீழ் நாளது தேதி வரையில் செலவழித்த தொகை		
நாளது வரையில் அனுமதிக்கப்பட்டு ஆனல் செலவழிக்கப் படாமலிருக்கும் தொகை.		
இப்போது அனுமதிக்கப்பட வேண்டிய தொகை.		
மொத்தம் ...		

மிச்ச மிருக்கும் பாக்கி ரூபா..... ....ஆகும்.

சம்பந்தப்பட்ட தலைப்பின் கீழ் பட்ஜெட்டில் ஏற்பாடு எதுவும் செய்யப் படாமலிருந்து, பஞ்சாயத்து அத்தொகையை இன்னெரு தலைப்பிலிருந்து புனர்வினியோகமூலம் திரட்டுவதெனத் தீர்மானித்தால், 'செலவழிக்கலாம்' என்னும் சொல்லுக்கு முன் 'புனர்வினியோக மூலமாக' என்னும் சொற்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இந்த ஸெர்டிபிகேட்டைப் பதிவு செய்ய வேண்டும்; கூட்டத்துக்கு முன் இதை அங்கத்தினர்களுக்கு அனுப்ப வேண்டும்; பஞ்சாயத்து, இதை ஒப்புக்கொண்டால், நடவடிக்கைக் குறிப்புப் புஸ்தகத்தில் :—தீர்மானத்தின் ஒரு பகுதியாக இதை மீண்டும் எழுதவேண்டியதில்லை. எனினும் செலவுத் தொகையிலாவது எந்தத் தலைப்பின் கீழ் செலவு செய்யப்படவேண்டுமோ அந்தத்தலைப்பிலாவது பஞ்சாயத்துத் திருத்தம் ஒன்றைச் செய்தால், திருத்தப்பட்ட படிக்குள்ள அந்த ஸெர்டிபிகேட் பஞ்சாயத்துத் தீர்மானத்தின் ஒரு பகுதியாகும்; அதை நடவடிக்கைக் குறிப்புப் புஸ்தகத்தில் அம் முறைமையில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

(2) ஒரு புதிய பொறுப்புக்கான அனுமதி ஒரு வருஷ காலம் வரை பயன்படுத்திக் கொள்ளப்படாவிட்டால், அந்த அனுமதி திட்டமாகப் புதுப்பிக்கப்பட்டாலன்றி மற்றப்படி அற்றுப்போயிருப்பதாகக் கொள்ளவேண்டும் :

ஆனல்,—

(a) ஒரு வகுப்பைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களின் உத்தியோகத்திற்காக அனுமதிக்கப்பட்ட படியை உத்தியோகத்தை வகித்து வருகிற குறித்த ஒருநபராவது அல்லது உத்தியோகஸ்தர்களின் குறித்த ஒரு தொகுதியாவது வாங்காமலிருந்தால் அப்படிப்பட்ட ஒரு விஷயத்திலும்,

(b) தகுதி வாய்ந்த அதிகாரியால் அனுமதிக்கப்பட்டிருக்கிற பொதுவான ஒரு திட்டத்தின் பிரகாரம் நிரந்தர சிப்பந்தி ஒன்றில் வருஷா வருஷம் அதிகம் சிப்பந்திகளைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்துக்கொண்டே வரும் ஒரு விஷயத்திலும்,

(c) (3) உபவிதியில் கண்டநிபந்தனைகளின் பிரயோகத்துக்குட்பட்ட கட்டு வேலைகளுக்காகப் பிடிக்கும் செலவின் விஷயத்திலும்

இந்த உப விதி பிரயோகப்படமாட்டாது

(3) (a) வருஷாந்தர சாதாரண உத்தேச பராமரிப்புச் செலவுக்காகக் கொடுத்த அனுமதி, அது எந்த அரசிறை வருஷத்துக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த அரசிறை வருஷத்தின் கடைசி தினத்தன்று அற்றுப்போகும். எனினும் பிரஸ்தாபக் கட்டு வேலையை அத் தேதியன்று நிறுத்தி விடுவதனல் அசாதாரணமான ஒரு விஷயத்தில் அசௌகரியம்

ஏற்படுமானல், அந்த மராமத்துகளைப் பூர்த்தி செய்ய அவற்றைத் தொடர்ந்து நடத்திக் கொண்டே போகலாம்: அத் தேதிக்குப் பிறகு பிடிக்கும் செலவை அடுத்த வருஷத்துக்கான புதிய மராமத்து உத்தேசச் செலவில் அடங்கிய செலவாகக் கருதவேண்டும்.

(b) விசேஷ மராமத்துகளுக்கான செலவு மதிப்புகள் அந்த மராமத்துகள் பூர்த்தி யாகும் வரையில் பிரதம கட்டுவேலைகளுக்கான செலவு மதிப்புகள் எப்படி அமுலிலிருக்குமோ அப்படியே அமுலிலிருக்கும்.

(c) வருஷாந்திர பராமரிப்புச் செலவு அல்லாத பொதுக்கட்டு வேலை ஒன்றின் செலவு மதிப்புக்கான அங்கீகாரம் அல்லது அனுமதியானது, அக்கட்டுவேலை விஷயமாய் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தாலொழிய, அது அளிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வருஷ காலத்துக்குப் பிறகு செலாவணியற்றுப் போகும்.

பில் தொகைகளை கொடுப்பதற்கு கால அளவு

31. (பஞ்சாயத்தின் யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியருக்குச் சம்பந்தப் படுகிற தாவாவைத் தவிர—இது விஷயமாய் தனியாகச் செய்யப் பட்ட விதிகளின் பிரயோகத்துக்கு இந்த தாவா உட்பட்டதாகும்—,) ஒரு பஞ்சாயத்தின் பேரில் செய்துகொள்ளப்படும் எந்த தாவாவுக்கும். (1) அந்த தாவா சேரவேண்டியதாகிவிட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு மேல் ஆனல் ஒரு வருஷத்துக்கு மேற்படாமல் அது சம்பந்தமான பில் கொடுத்துக் கொள்ளப்பட்டால், நிர்வாக அதிகாரியின் உத்தர வில்லாமலும், (2) அந்த தாவா சேரவேண்டியதாகிவிட்ட தேதியிலிருந்து ஒரு வருஷத்துக்கு மேல் மேற்படி பில் கொடுத்துக் கொள்ளப்பட்டால் பஞ்சாயத்தின் உத்தரவில்லாமலும் பணம் கொடுக்கக்கூடாது.

அதிகமாக தொகை கொடுத்ததற்கு ஜவாப் தாரி யார்—உரிய தொகைக்குமேல்

32. உரிய தொகைக்குமேல் பணம் கொடுக்கப்பட்டால், அதற்கான பொறுப்பு பிரதமத்தில் பில் அனுப்புவரைச்சேரும். உரிய தொகைக்கு மேல் கொடுக்கப்பட்ட பணத்தை அவர் சரிக்கட்ட வேண்டியவராவார்; அவரிடமிருந்து அதை வசூலிக்கமுடியாவிட்டால்,மேற்கையொப்பம் செய்கிற உத்தியோகஸ்தராவது குற்றமென்று கருதக்கூடியவாறு அசட்டையாயிருந்தால் மட்டுமே அவர்களில் எவரிடமிருந்தேனும் கொடுக்கப்பட்ட மேற்படி பணத்தை வசூலிக்கவேண்டும்.

மோசடி நஷ்டம், திருடு முதலியன—

33. (1) ஒரு பஞ்சாயத்துக்குச் சொந்தமான பணம் அல்லது ஸ்டாம்புகள் சம்பந் தமாக யாதொரு மோசடி அல்லது நஷ்டம் ஏற்பட்டிருந்தால் அதைக் கண்டுபிடித்த உடனே மேற்படி சட்டத்தின் 141-வது பிரி வின் பிரகாரம் நியமிக்கப்பட்ட ஆடிட்டருக்கு அதை ரிபோர்ட் செய்யவேண்டும். இவ்விஷயம் முழுவதும் விசாரணை செய்யப் பட்ட கூடிய சீக்கிரத்தில், மேற்படி மோசடி அல்லது நஷ்டத்தின் தன்மையையும் அளவையும், அந்த மோசடி அல்லது நஷ்டம் ஏற்பட சாத்தியமாயிருந்ததற்கு எந்தத் தவறு கள் காரணமாயிருந்தனவோ அந்தத் தவறுகளையும், எந்த விதிகளை அசட்டை செய்தது காரணமாயிருந்ததோ அந்த விதிகளின் அசட்டையையும், அதை வசூலிப்பதற்கான சாத்தி யக்கூறுகளையுங்கண்டு மேற்படி ஆடிட்டருக்குப் பூர்த்தியான ஒரு ரிபோர்ட்டை மேற்கொண்டு அனுப்பவேண்டும்.

(2) ஒரு பஞ்சாயத்துக்குச் சொந்தமான இதர சொத்து திருட்டு காரணமாகவோ மற்றப்படியோ நஷ்டமாயிருந்து, அச்சொத்தின் மதிப்பு பத்து ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் அதையும் மேற்படி ஆடிட்டருக்கு ரிபோர்ட் செய்யவேண்டும்.

(3) (1), (2) உபவிதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ரிபோர்ட்டுகளை அனுப்புவது, பஞ்சாயத்தாவது நிர்வாக அதிகாரியாவது அவசியமென்று கருதக்கூடிய நடவடிக்கையை மேற்கொண்டு எடுத்துக் கொள்வதற்குத் தடை விதிப்பதாகக் கருதப்படமாட்டாது.

வரவு — செலவு — பொது விதிகள்

சிப்பந்தி சம்பள பில்லுகள்.

34. அரசாங்கத்தார் அப்போதைக்கப்போது ஏற்படுத்தக்கூடிய நமூனுப்படி சம்பள பில்லுகளைத் தயாரிக்கவேண்டும். சிப்பந்திகளின் மாதாந்தர சம்பள பில் அரசாங்கத்தார் அப்போதைக்கப்போது ஏற்படுத்தக்கூடிய நமூனுப்படிக்கான வேலைக்கு வராதவர்களைப்பற்றிய (ஆப்ஸெண்டி) ஸ்டேட்மென்ட் ஒன்றையாவது சிப்பந்தியைச் சேர்ந்த எவருக்கும் ரஜா கொடுக்கப்பட்டிருக்கவில்லை என்று கண்டுள்ள ஸெர்டிபிகேட் ஒன்றையாவது ஆதாரமாகக் கொண்டிருக்கவேண்டும்.

சிப்பந்தி பிரிவுகள் 57 - 62 வரையில் பக்கங்கள் 134 முதல் 169 வரையில் பார்க்கவும் விதிகள் 38, 39 களை பார்க்கவும்.

சம்பள உசத்திக்கு சர்டிபிகேட்

35. எந்த முதல் சம்பள பில்லில் பருவகால சம்பள உயர்வு (Periodical increment) வாங்கப்படுகிறதோ அந்த சம்பள பில்லுடன், அரசாங்கத்தார் அப்போதைக் கப்போது ஏற்படுத்தக்கூடிய நமூனுப்படிக்கான சம்பள உயர்வு ஸெர்டிபிகேட் ஒன்றையும் சேர்த்தனுப்பவேண்டும்.

மாற்றியபொழுது உத்தியோகஸ்தர் சம்பளம் வாங்கும் விதம்

36. அரசாங்கத்தார் ஒரு பஞ்சாயத்தின் சேவைக்காகவென்று அனுப்பிவைத்த அல்லது வேறு யாதொரு பிரதேச அதிகாரசபையிலிருந்து அதற்கு ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் ஒருவரின் சம்பளத்தை, இதற்கு முந்திய அவருடைய ஆபீஸ் தலைமை அதிகாரியால் கொடுக்கப்பட்ட கடைசி சம்பள ஸெர்டிபிகேட்டை(இது அரசாங்கத்தார் அப்போதைக்கப்போது ஏற்படுத்தக்கூடிய நமூனுப்படி இருக்கவேண்டும்) பெற்றுக்கொண்ட பிறகே வாங்கவேண்டும், மேற்சொன்னவாறு அனுப்பிய பிறகு அல்லது ட்ரான்ஸ்பர் செய்த பிறகு அனுப்புகிற முதல் சம்பள பில்லுடன்மேற்படி ஸெர்டிபிகேட்டைச் சேர்த்தனுப்பவேண்டும்.

மேல் உண்டாகும் செலவுகளை உத்யோகஸ்தர்களுக்கு கொடுப்பது

37. (1) ஒருவர் இறந்துபோனதினத்துக்காகவும் சம்பளம், ரஜாசம்பளம், படிகள் ஆகிய இவற்றை வாங்கலாம்; மரணம் ஏற்படுகின்ற மணிநேரம் தாவாவைப் பாதிக்காது.

(2) ஒரு பஞ்சாயத்தின் இறந்துபோன உத்தியோகஸ்தர் அல்லது ஊழியருக்குச் சேரவேண்டிய சம்பளத்தை, 1925-ம் வருஷத்திய இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 214-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கண்ட (i), (ii), (iii), (iv) அல்லது (v) பகுதிகளில் குறிப்பிட்டுள்ள தன்மையுள்ள அதிகாரப் பத்திரம் ஹாஜர்படுத்தப்பட்டாலொழிய கொடுக்கக்கூடாது.

ஆனுல், மற்ற அதிகாரப்பத்திரம் ஹாஜர்படுத்தப்படாமல் :—

(i) பஞ்சாயத்து, தாவாதாரரின் உரிமையையும் ஹக்கையும் பற்றி. தான் போதுமென்று கருதக்கூடிய விசாரணையை நடத்திய பிறகு, சந்தேகமறத் தெரிந்துகொண்டால் அதன் உத்தரவின் பிரசாரம் 25 ரூபாய் வரையிலும்.

(ii) தாவாதாரரின் உரிமையையும் ஹக்கையும் பற்றி தாம் போதுமான தென்று கருதக்கூடிய விசாரணையை நடத்திய பிறகு ரீஜனல் இன்ஸ்பெக்டர் சந்தேகமறத்தெரிந்து கொண்டு, மேற்படி அதிகாரப் பத்திரத்தை ஹாஜர்ப் படுத்தும்படி வற்புறுத்துவதனுல் அதிக தாமதமும் நஷ்டமும் ஏற்படுமென்று அவர் கருதினுல், அவர் கேட்கக்கூடிய ஜாமீனை அல்லது ஜாமீன்களுடன் இண்டெமினிட்டிபாண்ட் என்னும் நஷ்ட விமோசனப் பத்திரம் ஒன்று எழுதிக் கொடுக்கப்படுவதன்பேரில், அவருடைய உத்தரவின் பிரகாரம் 25 ரூபாய்க்கு மேற்படும் தொகைகளும், கொடுக்கப்படலாம்.

சம்பள பாக்கியை குறித்த பில்

38. நிலுவைச் சம்பளத்தை மாதாந்தர சம்பள பில்லிலன்றி தனிச் சம்பள பில்லில் வாங்கவேண்டும் ; எந்தச் சம்பள பில்லிலிருந்து மேற்படி செலவு விட்டுவிடப்பட்டதோ அல்லது நிறுத்திவைக்கப்பட்டதோ அல்லது எந்த சம்பள பில்லிலிருந்து கழித்துக்கொள்வதன் மூலமாக அது திரும்பச் செலுத்தப்பட்டதோ அந்தச் சம்பள பில்லை மேற்படி தனிச் சம்பள பில்லில் குறிப்பிடவேண்டும். விதிகள் 34, 39 களை பார்க்கவும்.

நிர்வாக அதிகாரி பில்லுகளை பாஸ் செய்ய வேண்டும்

39. நிர்வாக அதிகாரி சம்பள பில்லுகளில் கையெழுத்துப் போட்டு அவற்றை ஜாரி செய்யவேண்டும்.

விதி 34 யை பார்க்கவும்.

40. சம்பளங்களும் நிரந்தரமான படிகளும் எந்த மாதத்துக்காக கொடுக்கப்பட வேண்டுமோ அந்த மாதத்துக்கு அடுத்துப் பின்வரும் மாதத்தின் முதல் வேலை தினத்துக்கு முன் அவற்றைக் கொடுக்கக்கூடாது.

சம்பளங்கள் கொடுக்கப்படவேண்டிய காலம்

ஆனால், ஒரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் பஞ்சாயத்து சேவையை முடிவாக விட்டுவிட்டுச் சென்றாலும் மற்றொரு பிரதேச அதிகார சபையின் அல்லது அரசாங்கத்தின் சேவைக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டாலும், அப்படி விட்டு விட்டுச் செல்கிற அல்லது ட்ரான்ஸ்பர் செய்யப்படுகிற தேதியன்று தொகை கொடுக்கப்படலாம்.

மேலும், ஒரு மாதத்தில் முதல் ஆறு நாட்கள் கஜானா அல்லது பாங்கில் பணம் கொடுக்கப்படாத பொது விடுமுறை நாட்களாக இருந்தால், அவ் விடுமுறை நாட்களுக்கு முன் அவை வேலை செய்யும் கடைசி தினத்தன்று தொகைகளை வாங்கிக் கொடுக்கலாம்.

41. சம்பளம், படிகளுக்காக பில் ஒன்றைத் தயாரிப்பவர், அப்படி வாங்கிய தொகை சம்பந்தப்பட்ட தக்க நபர் அல்லது நபர்களுக்குப் பட்டுவாடா செய்யப்பட்டு அவர்களுடைய ஒப்புக் கையெழுத்துக்கள் பெறப் படுகிற வரையில் அந்தத் தொகைக்காக அவர் தாமே பொறுப்பாளியாவார். பணம் கொடுக்கப் பெறுபவர் பணம் வாங்கிய தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஹாஜராகாவிட்டால், அவரிடமிருந்து வாங்கிய பணத்தை அடுத்த சம்பள பில்லில் குறைத்துக் கொள்வது மூலமாக திருப்பிச் செலுத்தவேண்டும். வாங்கிய சம்பளம், படிகள் இவற்றின் தொகையை எந்தச் சந்தர்ப்பத்திலும் டெபாஸிட்டாக வைத்திருக்கக்கூடாது.

பில்லின் தொகையை கொடுக்கவேண்டிய ஜவாப்தாரி தனம்

42. சிப்பந்திச் செலவுகள், வீட்டு வாடகை, போக்கு வரத்துவர்த்தனை ஆகிய இவைபோன்ற மீண்டும் மீண்டும் நேரிடுகிற செலவுகளுக்குரிய மாதாந்தர பில்லுகள் பரிசீலனை செய்யப்படுவது சுலபமாயிருக்கும் பொருட்டு ; ஒவ்வொரு பஞ்சாயத்து ஆபீஸிலும் தணிக்கை ரெஜிஸ்டர் ஒன்றை வைத்து வரவேண்டும்.

மாதா மாதம் பில்லு.

43. நிரந்தரமான பிரயாண வர்த்தனைகளைத் தவிர இதர பிரயாண வர்த்தனைகளை அரசாங்கத்தார் அப்போதைக்கப்போது ஏற்படுத்தக்கூடிய நமூனாப் படிக்கான தனிச் சம்பள பில் ஒன்றில் வாங்கவேண்டும்.

பிரயாண வர்த்தனை பில்

44. போக்குவரத்து வர்த்தனையைப் பிரயாண வர்த்தனை பில்லுகளிலன்றி, சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர் அல்லது ஊழியரின் சம்பள பில்லில் வாங்க வேண்டும். போக்குவரத்து வர்த்தனைக்கான பில் ஒவ்வொன்றுடனும், ஒரு ஸெர்டிபிகேட்டைச் சேர்த்தனுப்பவேண்டும் ; அந்த ஸெர்டிபிகேட்டில் பிரஸ்தாப போக்குவரத்துச் சாதனம் மேற்படி மாதத்தில் நல்ல நிலைமையில் வாஸ்தவமாக வைத்து வரப்பட்டு அவரால் உபயோகிக்கப்பட்டு வந்ததென்று கண்டிருக்கவேண்டும்.

போக்கு வரத்து பில்.

45 பஞ்சாயத்தின் அனுமதியுடனோ அனுமதி இன்றியோ ஒரு மாதத்தில் செய்த செலவுக்கான பில்லுகள் எல்லாவற்றையும் பஞ்சாயத்து அவசியமென்று கருதக்கூடிய பரிசீலனையைச் செய்த பிறகு ஜாரி செய்யப் படுவதற்காகக் கூடிய சீக்கிரத்தில் அதன் முன் வைக்க வேண்டும்.

ஒரு மாதத்தின் செலவுகளை குறித்த பட்டியை பஞ்சாயத்து மீட்டிங்கில் வைக்கவேண்டும்.

பட்ஜெட் — வரும் வருஷத்திய — (வெகுசாவான வரவு – செலவு)

140. (1) பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியும், கமிஷனரும் ஒவ்வொரு வருஷத்திலும் அடுத்து வருகிற வருஷத்தில் வெகுசாய் கிடைக்கக்கூடிய வரவுகள் இன்னவையென்றும் செலவு இன்னதென்றும் கண்டு ஒரு பட்ஜெட் தயாரித்து அதைச் சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற்போல் பஞ்சாயத்துக்கு, பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு முன் வைக்க வேண்டும்.

பட்ஜெட்டுகளைத் தயாரித்து அவைகளுக்கு அனுமதி கொடுப்பது

(2) யாதொரு பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் பட்ஜெட்டானது, நிர்வாக அதிகாரி அல்லது கமிஷனரால் தயாரிக்கப்பட்ட பிறகு, நிர்ணயிக்கப்படக்கூடிய தேதியன்ருவது அதற்கு முன்பாகவாவது அந்தப்படி நிர்ணயிக்கப்படக்கூடிய உத்தியோகஸ்தருக்கு அனுப்பப்படவேண்டும். அவசியமான யாதொரு ஊழியமாவது அந்த ஊழியங்களாவது செய்யப்படுவதற்கு அதில் போதுமான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லையென்று அவர் சந்தேகமறத் தெரிந்து கொண்டால், அந்தப்படி நிச்சயமாக ஏற்பாடு செய்யப்படுவதற்கு அவசியமாய் இருக்கக்கூடிய விதமாக அந்த பட்ஜெட்டை மாற்றுவதன் பொருட்டு அதைத் திருப்பி அனுப்புவதற்கு அவருக்கு அதிகாரம் உண்டு.

(3) சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற்போல் பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அவர்களுக்கு அவசியமெனத் தோற்றுகிற மாறுதல்களை ஷை பட்ஜெட்டில் அனுமதிக்கலாம். (2) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள உத்தியோகஸ்தருக்கு இடையேயும் சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற்போல் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் இவர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்படுமாளுல், ஷை பட்ஜெட்டானது பஞ்சாயத்துக்களின் விஷயத்தில் இன்ஸ்பெக்டருக்கும் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் விஷயத்தில் அரசாங்கத்தாருக்கும் அனுப்பப்படவேண்டும் சந்தர்ப்பத்துக்கேற்ப இன்ஸ்பெக்டர் அல்லது அரசாங்கத்தார் அவருக்கு அல்லது அவர்களுக்கு அவசியமெனத் தோற்றுகிற விதமாக ஷை பட்ஜெட்டை மாற்றுவதற்கு அதிகாரமுண்டு.

(4) பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுடைய வரவுகள் சம்பந்தமாகவாவது அது செய்ய ஏற்றுக்கொள்கிற பற்பலகாரியங்களுக்காகச் செலவிட வேண்டியிருக்கிற தொகைகளைப் பங்கீடு செய்வது சம்பந்தமாகவாவது பட்ஜெட்டில் கண்டுள்ள இலக்கங்களை மாற்றுவது அவசியமென்று யாதொரு வருஷத்தில் எப்போதாகிலும் அந்தப் பஞ்சாயத்துக்குத் தோற்றுமாகில், உடன் சேர்க்கையான அல்லது மாற்றப்பட்ட பட்ஜெட் ஒன்று (1), (2) உட்பிரிவுகளில் நிபந்தனை கண்டிருக்கிற விதமாகத் தயாரிக்கப்படலாம், அனுமதிக்கப்படலாம், அனுப்பப்படலாம், மாற்றப்படலாம். ஆளுல், நிர்ணயிக்கப்பட்ட உத்தியோகஸ்தருடைய சம்மதத்துடனன்றி மற்றப்படி, அத்தகைய எந்த மாறுதலையும் அமுலுக்குக் கொண்டுவரக் கூடாது.

(5) ஒவ்வோர் வருஷத்திலும் நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முந்தி ஒவ்வொரு கமிஷனரும் நிர்ணயிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் மூலமாக நிர்ணயிக்கப்பட்ட நமூனுக்களில் வருகிற ஒவ்வொரு அரசாங்க வருஷத்திற்கும் சம்பந்தமான பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் (கல்வி) நிதியின் வரவு சிலவு திட்டத்தை தெரிவிக்கும் பட்ஜெட் ஒன்றை அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டும்.

(6) (5)-வது உபபிரிவில் சொல்லிய பட்ஜெட்டின் பேரில் அரசாங்கம் தங்களுக்கு தோன்றியபடி உத்திரவுகள் விடலாம். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அந்த உத்திரவுகளை கட்டாயமாக நிறைவேற்ற வேண்டும்.

(7) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் (கல்வி) நிதியின் கணக்குகளை அரசாங்கத்தாரால் பிரிவு 141 படிக்கு நியமித்த தணிக்கை உத்தியோகஸ்தரால் சோதித்து முடிவு கட்டப்படும். சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்

அம்மாதிரி தணிக்கை உத்தியோகஸ்தரின் அறிக்கையின்பேரில் அரசாங்கம் வெளியிட்ட வழிகாட்டிகளை நிறைவேற்ற வேண்டும்.

குறிப்பு

பட்ஜெட்:—பட்ஜெட் என்பது வரும் வருஷத்தில் வெகுசாய் கிடைக்கக்கூடிய வரவுகள் செலவுகள் இவ்வளவு இருக்கலாம் என்று உத்தேசமாய் தயாரிக்கும் கணக்கு புள்ளியுள்ள பட்டி இதில் இந்த சட்டத்தின் படிக்கு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் நிதிக்கு வரவுகள் அறிய பிரிவுகள் 134, 135, 136 கிளை பார்க்கவும். கிராம பஞ்சாயத்து நிதிக்கும், பட்டண பஞ்சாயத்து நிதிக்கும் வரவுகளை அறிய பிரிவு 137-ஐ பார்க்கவும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் நிதியில் இருந்தும், பட்டணம் பஞ்சாயத்து நிதியிலிருந்தும், கிராம பஞ்சாயத்து நிதியில் இருந்தும், செலவுகள் செய்வதை அறிய, பிரிவுகள் 138, 139 களை பார்க்கவும். சென்ற முன் வருஷத்தின் பரிபாலனத்தை குறித்து பிரிவு 54 படிக்கு பரிபாலன அறிக்கையில் கொடுக்கப்படுகிறது. 125 - 132 பக்கங்களை பார்க்கவும்.

பட்ஜெட் தயாரிப்பது :—ஒரு வருடத்திற்கு இவ்வளவு வரவு வரும், இவ்வளவு செலவு ஆகும் என்று அறிந்த பிறகு பட்ஜெட்டை தயாரிப்பது சுலபகாரியமாகும். இதற்கு என்று பட்ஜெட் பாரங்கள் இருக்கின்றன. அவைகளை கொண்டு தான் பட்ஜெட்களை தயாரிக்க வேண்டும். அவைகளில் வரவுகள், எப்படி எப்படி எந்த எந்த பிரிவு படிக்கு வரவு வருகிறதென்றும், எந்த எந்த பிரிவு படிக்கு எப்படி எப்படி செலவிடலாம் என்றும் கண்டிருக்கிறது. திருஷ்டாந்தமாக பிரிவு 139-ன் கீழ் விதியில் எது எதுக்கு எவ்வளவு, எவ்வளவு சதம் வீதம் செலவு செய்யலாம் என்றுள்ளதை கவனித்து பட்ஜெட் தயார் செய்யவேண்டும்.

பட்ஜெட்டை சமர்ப்பிக்கும் விதம்:—சாதாரணமாக வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கக்கூடாது. தண்ட சம்பளங்களை கொடுத்தால் அது செல்லாது. கைவிட்டு செலவு செய்து பின்னிட்டு பெற்றுக் கொள்ளலாம் என்று எண்ணம் கொள்ளக்கூடாது. பட்ஜெட்டை தயாரித்தவுடன் உடனே பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு தெரிவித்து தீர்மானம் செய்யக்கூடாது. அதை தயாரித்த உடன் விதிகளால் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரிக்கு (1) உபபிரிவின்படி அனுப்பவேண்டும. அவருடைய அங்கீகாரம் பெற்ற பிறகு அதை பஞ்சாயத்துக்கோ, அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கோ சமர்பிக்கவேண்டும். அப்போது அதில் உள்ளதை அந்த அந்த மீடிங்குகளில் அந்த அந்த தொகைகளை சந்தர்பத்திற்கு ஏற்றபடி மாற்றலாம். பிரிவு 139-ன் கீழ் விதி 30 யை பக்கம் 352ல் பார்க்கவும்.

பட்ஜெட்டில், சொல்லிய தொகைகளும், செலவு செய்த தொகைகளையும் ஏற தாழயிருக்கும். முக்கியமாக எதிர் பாராதபடி ஒரு வெள்ளம் வந்தால் அதை சரிப்படுத்தவும், ஒரு தொத்து வியாதி வந்தால் அதை நீக்கவும் அதிக செலவுகள் செய்ய நேரிடும். அப்படி செய்வதற்கு முன் பணம் போட்டு பின்னிட்டு வரப் பெற்றுக் கொள்ளலாம். எதற்கும் பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அங்கீகாரம் வேண்டும்.

சமுதாய அபிவிருத்தியின் சேவாதிட்ட சிலவுகள் :—இவைகளை அறிய பி. 11-ன் கீழ் 57-60 பக்கங்களையும் — பி. 54-ன் கீழ் 127 - 132 பக்கங்களையும் — பி. 65, பி. 66-ன் கீழ் 179 - 192 பக்கங்களையும், பி. 74, 130 களையும் பார்க்கவும்.

பி. 140 (4) பட்ஜெட்டில் கண்டுள்ள இலக்கங்களை மாற்றுவது அவசியமென்று யாதொரு வருஷத்தில் எப்போதாகிலும்— பி. 140 (4) ; பி. 178 (2) (XIII) ன் கீழ் விதிகள்

பஞ்சாயத்துக்கள் விஷயமாய் பட்ஜெட்டும் நிதிகளைப் பகிர்ந்தளிப்பதும், ட்ரான்ஸ்பர் செய்வதும், பட்ஜெட்டைத் தயாரிப்பது

1. ஒவ்வொரு பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியும், ஒவ்வொரு வருஷத்திலும், அடுத்த வருஷத்தில் அப்பஞ்சாயத்தின் உத்தேச வரவுகளையும் செலவையும் காட்டும் பட்ஜெட் ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

பட்ஜெட் விதிகள்

2. வேலை நடத்துவதற்காகவென்று பட்ஜெட்டில் ஏற்பாடு செய்யப்பட வேண்டிய பாக்கியானது பிரஸ்தாப வருஷத்தில் கிடைக்கும் உத்தேச வரவுகளிலிருந்து, நிதியேற்பாடுகள் ராஜ்ய மானியங்கள், கடன் தலைப்புகள் இவற்றிலிருந்து கிடைக்கும் வரவுகளை நீக்கிவிட்ட பிறகு எஞ்சி நிற்கும் தொகையில் ஐந்து சதவீதத்திற்குக் குறைவாயிருக்கலாகாது.

3. பஞ்சாயத்து ஒவ்வொன்றினுடைய பட்ஜெட்டும் அதற்கு ஒரு சங்கிரகமும் அரசாங்கத்தாரால் அவ்வப்போது விதிக்கப்படக் கூடிய நமூனைப்படித் தயாரிக்கப்பட வேண்டும்.

4. (1) பிரஸ்தாப கிராமத்தின் பாஷையிலுள்ள பட்ஜெட்டின் பிரதிகளை, பஞ்சாயத்தினால் பட்ஜெட் ஆலோசிக்கப்படுவதற்கென்று நிச்சயிக்கப்பட்ட தேதிக்குப் போதுமான அளவில் முன்னதாகப் பஞ்சாயத்தின் அங்கத்தினர்களுக்கு அனுப்பவேண்டும்; அங்கத்தினர்கள் மேற்படி தேதிக்கு முன் அதைப் பரிசீலனை செய்வதற்கு நியாயமான ஒரு வாய்ப்பு அவர்களுக்கு இருக்கும்படியாக அவ்வாறு அனுப்பவேண்டும்.

பட்ஜெட்டுக்கு அனுமதி கொடுப்பது

5. பஞ்சாயத்தானது பின்வரும் விஷயங்களைப்பற்றித் தான் நன்கு திருப்தியடைந்த பிறகு தான் அவசியமென்று கருதக்கூடிய மாறுதல்களுடன் மேற்படி பட்ஜெட்டுக்கு அனுமதிகொடுக்க வேண்டும்; அவ் விஷயங்களாவன :—

(i) வரவுகளைப் பற்றிய உத்தேச மதிப்பு விரிவாகவும் எச்சரிக்கையாகவும் போடப்பட்டிருக்கிறதென்பது;

(ii) கட்டாயமான சகல பொறுப்புகளுக்காகவும் கிரமப்படி ஏற்பாடு செய்திருக்கிறதென்பது;

(iii) பஞ்சாயத்து வாங்கிய கடன்கள் விஷயமாக சகல பொறுப்புக்களையும் கிரமப்படிக் கொடுத்துத் தீர்ப்பதற்காகவும், மற்றெல்லாக் கட்டுப்பாடுகளுக்காகவும் ஏற்பாடு செய்திருக்கிறதென்பது;

(iv) பட்ஜெட் வருஷத்திய இலக்கங்களுக்கும் முந்திய வருஷத்திய இலக்கங்களுக்கும் உள்ள சகல வேறுபாடுகளுக்கும் போதுமானபடி சமாதானம் சொல்லப்பட்டிருக்கிறதென்பது; மேலும்,

(v) வேலை நடத்துவதற்கான பாக்கித் தொகை 2-வது விதியில் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச தொகைக்கு குறைவாக இல்லை என்பது.

6. பட்டண / கிராம பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர் அனுமதிக்கப்பட்ட பட்ஜெட்டின் மூன்று பிரதிகளை பட்ஜெட் வருஷத்துக்கு முந்தியான நவம்பர் மாதம் 30-ம் தேதியன்றுவது அதற்கு முன்பாவது சம்பந்தப்பட்ட ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தர் / டெபுடி பஞ்சாயத்து உத்தியோகஸ்தர் மூலமாக ரீஜனல் இன்ஸ்பெக்டருக்கு / மூலமாக பஞ்சாயத்து உத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டும்; அதே சமயத்தில் ஒரு பிரதியை ஆடிட்டருக்கு அனுப்பவேண்டும். ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தரானவர் / டெபுடி பஞ்சாயத்து உத்தியோகஸ்தரானவர் ஒரு பிரதியைத் தம்மிடத்திலேயே வைத்துக்கொண்டு எஞ்சியுள்ள இரண்டு பிரதிகளைத் தமது அபிப்பிராயக் குறிப்புகளுடன் ரீஜனல் இன்ஸ்பெக்டருக்கு / ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டும். ரீஜனல் இன்ஸ்பெக்டரானவர் / ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தரானவர் பஞ்சாயத்தினால் அனுமதிக்கப்பட்டபடி பட்ஜெட்டை ஒப்புக்கொண்டாவது, 141-வது பிரிவின் (2) உட்பிரிவில் கொடுத்துள்ள அதிகாரத்தைக் கொண்டு அதை மாற்றியாவது உத்தரவு பிறப்பித்து, அவ்வுத்தரவின் பிரதி ஒன்றை நிர்வாக அதிகாரிக்கும் ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தருக்கும் / டெபுடி பஞ்சாயத்து உத்தியோகஸ்தருக்கும் ஆடிட்டருக்கும் அனுப்பவேண்டும். நிர்வாக அதிகாரியானவர் ரீஜனல் இன்ஸ்பெக்டரால் / ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தரால்

பட்ஜெட் விதிகள்

பிறப்பிக்கப்பட்ட உத்தரவைப் பஞ்சாயத்து தெரிந்து கொள்வதற்காக அதற்கு முன் வைக்க வேண்டும்.

7. எந்தப் பஞ்சாயத்தும், உத்தேசிக்கப்பட்ட செலவுக்கு வேண்டிய பணம் கிடைக்கக்கூடிய ஆதாரத்தைக் குறிப்பிடாமல், பட்ஜெட்டில் சேர்க்கப்பட்டிராத யாதொரு செலவினத்திற்காவது பட்ஜெட் பகிர்ந்தளிப்பிற்கு அதிகப்படியாயுள்ள யாதொரு செலவினத்திற்காவது அனுமதி கொடுக்கலாகாது.

8. பட்ஜெட்டை அனுமதிப்பதனுலேயே, அதில் ஏற்பாடு செய்துள்ள எல்லாச் செலவையும் செய்ய பஞ்சாயத்துக்கு அதிகாரம் ஏற்படுவதாகக் கருதப்படமாட்டாது ; யாதொரு செலவுக்கான ஏற்பாடு பட்ஜெட்டில் சேர்க்கப்பட்டிருந்து, அச்செலவைச் செய்வதற்காக அரசாங்கத்தாருடைய அல்லது வேறு யாதொரு அதிகாரியினுடைய அனுமதி வேண்டியிருந்து அத்தகைய அனுமதி திட்டமாக அளிக்கப்பட்டிராவிட்டால், மேற்படி செலவைச் செய்வதற்கு முன் அத்தகைய அனுமதியைப்பெறுவது பஞ்சாயத்தின் கடமையாகும்.

9. பட்ஜெட் பகிர்ந்தளிப்போடு ஒப்பிட்டுப் பார்க்கையில் செலவைப்பற்றி ஆடிட்டர் அபிப்பிராயம் ஏதேனும் தெரிவித்திருந்தால், நிர்வாக அதிகாரி அந்த அபிப்பிராயத்தை உடனுக்குடன் கவனிக்கவேண்டும்.

பகிர்ந்தளிப்புகளும் டிரான்ஸ்பர்களும்

10. பட்ஜெட்டில் செய்யப்பட்ட சகல பகிர்ந்தளிப்புக்களும் பிரஸ்தாப வருஷக் கடைசியில் அற்றுப் போய்விடும். அவ்வருஷக் கடைசியில், பகிர்ந்தளிப்புகளில் செலவிடாமல் எஞ்சியுள்ள பாகங்கள், அவ் வருஷக் கடைசிக்குப் பிறகு பட்டுவாடா செய்வதற்காக ஒதுக்கி வைக்கப்படலாகாது ; மேலும், அவ்வாறு அற்றுப்போவதைத் தடுக்கும் பொருட்டு டிபாஸிட்டுகளுக்கேனும் மற்றெந்தத் தலைப்புக்கேனும் டிரான்ஸ்பர் மூலமாக அவற்றை உபயோகித்துக் கொள்ளவும் கூடாது.

11. பிரஸ்தாப வருஷத்தின்போது செய்தற்குரிய சகல செலவுகளும் பட்டண பஞ்சாயத்துக்களின் விஷயத்தில் ரீஜனல் இன்ஸ்பெக்டரால், அல்லது கிராம பஞ்சாயத்துக்கள் விஷயத்தில் ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தரால் மாற்றப்பட்டுள்ள அந்த வருஷத்திய பட்ஜெட்டில் செய்யப்பட்ட பகிர்ந்தளிப்புக்களை அனுசரித்து முறைப்படுத்தப்படவேண்டும்.

12. (1) யாதொரு கணக்குத் தலைப்பின்கீழ் ஒரு பகிர்ந்தளிப்போ அதிகப்படியான பகிர்ந்தளிப்போ அவசியமென்று பின்னர்த்தெரியவந்தால், அத்தகைய பகிர்ந்தளிப்பு அல்லது அதிகப்படியான பகிர்ந்தளிப்பு, சந்தர்ப்பத்திற்கேற்றபடி ரீஜனல் இன்ஸ்பெக்டரின் அல்லது ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தரின் அனுமதியுடன், இதர தலைப்புக்களிலிருந்து மீண்டும் பகிர்ந்தளிப்பது மூலமாக, பின்வரும் திட்டத்துக்கு உட்பட்டு, செய்யப்படவேண்டும் : மீண்டும் பகிர்ந்தளிப்பதற்கான சகல விண்ணப்பங்களும் இவ் விதிகளுடன் சேர்க்கப்பட்டுள்ள A-நமூனுப்படி செய்துக் கொள்ளப்படவேண்டுமென்பதும், பிரஸ்தாப வருஷம் முடிவதற்குமுன் அவ் விண்ணப்பங்களின் பேரில் உத்தரவு பிறப்பிப்பது சாத்தியமா யிருப்பதற்குப் போதிய காலத்தில் பஞ்சாயத்தின் அனுமதியைப் பெற்ற பிறகு நிர்வாக அதிகாரி அவற்றைச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுவே மேற்படி திட்டமாகும்.

ஆனுல் நூறு ரூபாய்க்கு மேற்படாத பகிர்ந்தளிப்புக்களை ஒரு தலைப்பிலிருந்து மற்றென்றுக்கு ட்ரான்ஸ்பர் செய்வதற்காகப் பஞ்சாயத்தின் அனுமதியே போதுமானது.

மேலும், விசேஷ சந்தர்ப்பங்களிலும், நிர்வாக அதிகாரி திருப்திகரமாகச் சமாதானம் சொல்லுவதன் பேரிலும், சந்தர்ப்பத்திற்கேற்றபடி ரீஜனல் இன்ஸ்பெக்டர் அல்லது ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தர், பிரஸ்தாப விவகாரம் சம்பந்தப்படுகிற வருஷம் முடிந்த பிறகு பகிர்ந்தளிப்புக்களை ஒரு தலைப்பிலிருந்து : மற்றென்றுக்கு ட்ரான்ஸ்பர் செய்வதை அனுமதிக்க அதிகாரமுடையவராவர்.

(2) அத்தகைய விண்ணப்பத்திற்கு அனுமதி கொடுத்து சந்தர்ப்பத்திற்கேற்றபடி ரீஜனல் இன்ஸ்பெக்டராவது ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தராவது பிறப்பித்த உத்தரவின் பிரதி ஒன்றை, நிர்வாக அதிகாரியானவர், அவ்வுத்தரவைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் ஆடிட்டருக்கு அனுப்பவேண்டும்.

பட்ஜெட் விதிகள்

13. எவ்விதமான பாக்கி தொகையிலிருந்தாவது இதர ஆதாரங்களிலிருந்தாவது பகிர்ந்தளிர்ப்புக்களையோ அதிகப்படியான பகிர்ந்தளிப்புக்களையோ செய்யவேண்டிய அவசியமிருப்பதாகத் தெரியவந்தால், பின் வரும் திட்டங்களுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு, சந்தர்ப்பத்திற் கேற்றபடி ரீஜனல் இன்ஸ்பெக்டரின் அல்லது ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தரின் அனுமதியுடன் அத்தகைய பகிர்ந்தளிப்புக்களையோ அதிகப்படியான பகிர்ந்தளிப்புக்களையோ செய்யவேண்டும்.—

(i) வேலை நடத்துவதற்கான பாக்கி தொகையை 2-வது விதியில் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச தொகைக்கும் கீழே குறைக்கலாகாது.

(ii) பகிர்ந்தளிப்புகளுக்கான அல்லது அதிகப்படியான பகிர்ந்தளிப்புக்களுக்கான விண்ணப்பங்களை இவ் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள B நமூனுப்படி செய்து கொள்ள வேண்டும்; பிரஸ்தாப வருஷம் முடிவதற்குமுன் அவ்விண்ணப்பத்தின் பேரில் உத்தரவு பிறப்பிப்பது சாத்தியமாயிருப்பதற்குப் போதிய காலத்துக்குள் பஞ்சாயத்தின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட பிறகு நிர்வாக அதிகாரி அவ்விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்; மேலும்,

(iii) நிர்வாக அதிகாரியானவர் அத்தகைய விண்ணப்பத்துக்கு அனுமதி கொடுத்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பிரதி ஒன்றை அவ்வுத்தரவைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் ஆடிட்டருக்கு அனுப்பவேண்டும்.

அனுபந்தம்

A. நமூனு

[12-வது விதியைப் பார்க்கவும்]

..............பஞ்சாயத்துக்கு வேண்டிய நிதிகளை மறுபடி ஒதுக்கிவைப்பது மூலமாக பகிர்ந்தளிப்பதற்கான அல்லது மேற்கொண்டு பகிர்ந்தளிப்பதற்கான விண்ணப்பம்

(1)	குறிப்பிட்ட வேலை அல்லது காரியம்
(2)	இன்ன கணக்குத்தலைப்பில் அல்லது இன்ன வேலைக் காக அதிகப்படியான பகிர்ந்தளிப்பு வேண்டி யிருக்கிற தென்பது.
(3)	மேற்படி வேலை அல்லது காரியத்துக்காக பட் ஜெட்டில் ஏற்பாடு செய்த தொகை.
(4)	பின்னர் பகிர்ந்தளிக்கப் பட்ட அல்லது ட்ரான்ஸ் பர் செய்யப்பட்ட தொகை.
(5)	நாளது வரையில் செல விடப்பட்ட தொகை.
(6)	இவ்வருஷக் கடைசி வரை யில் உத்தேச செலவுக்கு வேண்டிய தொகை.
(7	(5), (6) பத்திகளின் மொத் தம்
(8)	இப்போது ட்ரான்ஸ்பர் செய் யப்படவேண்டிய தொகை அதாவது, பத்தி ( )— [பத்திகள் (3) (4)]
(9)	முதலில் பகிர்ந்தளிக்கப் பட்ட தொகையை விட அதிகமாக வேண்டி யிருப் பதற்குக் காரணங்கள்.
(10)	இன்ன கணக்குத் தலைப்பி லிருந்து அல்லது இன்ன ஆகாரத்திலிருந்து ட்ரான் ஸ்பர்செய்யும்படிக்கோரப் படுகிறதென்பது.
(11)	எதிர்பார்க்க இன்ன சேமிப் புக்களிலிருந்து நிதிகளைப் பகிர்ந்தளிக்கலா மென் பது?
(12)	குறிப்புகள்.

பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி.

மாறுதல்களுக்கு உட்பட்டு ல் அனுமதிக்கப்பட்டது

ரீஜனல் இன்ஸ்பெக்டர்............................ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தர்

B நமூனா

[13-வது விதியை பார்க்கவும்]

(1) குறிப்பிட்ட வேலை அல்லது காரியம்.	(2) இன்ன கணக்குத் தலைப்பில் அல்லது இன்ன வேலை முதலியவற்றிற்காக அதிகப்படியாக பகிர்ந்தளிப்பு வேண்டியிருக்கிறதென்பது	(3) மேற்படி வேலை அல்லது காரியத்திற்காக பட்ஜெட்டில் ஏற்பாடு செய்துள்ள தொகை.	(4) பின்னர் பகிர்ந்தளிக்கப்பட்ட அல்லது ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட தொகை.	(5) நாளது வரையில் செலவிடப்பட்ட தொகை.	(6) இவ்வருஷக் கடைசி வரையில் உத்தேச செலவுக்கு வேண்டிய தொகை.	(7) பாக்கித் தொகையிலிருந்து டிரான்ஸ்பர் செய்வது மூலமாக இப்போது வேண்டியுள்ள தொகை.	(8) முதலில் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகைக்கு மேல் வேண்டியிருப்பதற்கு காரணங்கள்.	(9) முந்திய கடிதப் போக்குவரத்துக்குச் சம்பந்தப்பட்ட உத்கரிப்பும் ரீஜனல் இன்ஸ்பெக்டருடைய ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தருடைய அனுமதியின் இலக்கமும் தேதியும்,	(10) இவ்வருஷத்தின் வாஸ்தவமான ஆரம்பக் கையிருப்பை அனுசரித்து மாற்றியமைக்கப்பட்ட பட்ஜெட்டில் ஏற்பாடு செய்துள்ள முடிவான கையிருப்புத் தொகை	(11) இப்போது கேட்கப்படும் பகிர்ந்தளிப்புத் தொகைகள் உட்பட மேற்படி பாக்கித் தொகையிலிருந்து செய்யப்படும் சகல பகிர்ந்தளிப்புத் தொகைகளின் மொத்தம்.	(12) இப்போது கிடைக்கும் நிகர பாக்கித் தொகை.	(13) உத்தேச மதிப்புக்களில் ஐந்துசதவீதம்.	(14) குறிப்புகள்,

.........பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி. மாறுதல்களுக்கு உட்பட்டு ....ல் அனுமதிக்கப்பட்டது.

ரீஜனல் இன்ஸ்பெக்டர்.................................

ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தர்............

குறிப்பு.—(6) பத்திக்கும், (7) பத்திக்கும் உள்ள வித்தியாசத் தொகையை எவ்வாறு செலவு செய்ய உத்தேசித்திருக்கிறதென்பதைக் குறிப்புகள் விளக்கிச் சொல்லவேண்டும்.

தணிக்கை உத்தியோகஸ்தர்களை (ஆடிட்டர்களை) நியமிப்பது

141. (1) பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் இவைகளுடைய நிதியின் வரவு செலவுபற்றிய கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக அரசாங்கத்தார் தணிக்கை உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டும். அந்த தணிக்கை உத்தியோகஸ்தர்களை (1860-ம் ஆண்டு XLV-வது மத்திய சட்டமாகிய) இந்தியத் தண்டனைச் சட்டத்தில் கண்ட 21-வது பிரிவின் தாற்பரியப்படி "அரசாங்க உத்தியோகஸ்தர்களாகக்" கருதப்படுவார்கள்.

(2) ஷை தணிக்கை உத்தியோகஸ்தர்களுக்குரிய சம்பளம் வர்த்தனைகள் ஆகிய இவைகளின் பொருட்டாவது, ஷை பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அல்லது பஞ்சாயத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்குப் பிடிக்கிற வேறே ஏதேனும் செலவின் பொருட்டாவது அரசாங்கத்தார் அந்தப் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலிடமிருந்து அல்லது பஞ்சாயத்திடமிருந்து சகாயத் தொகை எதையும் வசூலிக்கக் கூடாது.

விதிகள் பி., 141 ; பி. 178 (2) (XVI) படிக்கு விதிகள்

ஆடிட் ரிப்போர்ட்டுகளைப் பிறப்பிப்பதும் பைசல் செய்வதும்

1. ஒரு பஞ்சாயத்தின் ஒவ்வொரு அரசிறை வருஷத்துக்குமான கணக்குகளின் தணிக்கையைப்பற்றிய ரிப்போர்ட்டை, மேற்படி சட்டத்தின் 141 (1) பிரிவின்படி அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ஆடிட்டர், அத் தணிக்கை பூர்த்தியானதும், பஞ்சாயத்தின் நிர்வாக உத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டும். அந்த ரிப்போர்ட்டின் நகல் ஒன்றை ஆடிட்டர், ரீஜனல் இன்ஸ்பெக்டருக்கும், பட்டண / கிராம வகையைச் சேர்ந்த பஞ்சாயத்துக்களின் விஷயத்தில் சம்பந்தப்பட்ட ஜில்லா / டெபுட்டி பஞ்சாயத்து ஆபீசருக்கும், அனுப்பவேண்டும்.

2. பட்டண / கிராம வகையைச் சேர்ந்த பஞ்சாயத்து ஒன்றின் நிர்வாக அதிகாரி மேற்படி ஆடிட் ரிப்போர்ட்டை, அதற்கான தமது பதில் சகிதமாக பஞ்சாயத்தில் வைக்க வேண்டும். மேலும் அந்த ஆடிட் ரிப்போர்ட்டை அது வந்துசேர்ந்த தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள், தமது பதில், அதை அங்கீகரித்து மேற்படி பஞ்சாயத்து செய்த தீர்மானம் ஆகியவற்றிற்கு இரண்டு நகல்கள் எடுத்து அவை சகிதமாக சம்பந்தப்பட்ட ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸருக்கு / டெப்புடி பஞ்சாயத்து ஆபீஸருக்கு சமர்பிக்க வேண்டும்.

3. பட்டண பஞ்சாயத்துக்களின் விஷயத்தில், ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர் அந்த பதில் ரீஜனல் இன்ஸ்பெக்டருக்கு, தமது குறிப்புகள் எவையேனுமிருந்தால் அவைகளுடன் கூட சமர்ப்பிக்க வேண்டும். இப் பஞ்சாயத்துக்களின் ஆடிட்ரிப்போர்ட்டை ரீஜனல் இன்ஸ்பெக்டர் விமரிசை செய்ய வேண்டும் ; நிர்வாக, உத்தியோகஸ்தரின் பதில், பஞ்சாயத்தின் தீர்மானம் இவற்றின் நகல் சகிதமபக, அவ் விமரிசையின் நகல் ஒன்றை ,மேற்படி ஆடிட்டருக்கு அனுப்பவேண்டும். கிராம பஞ்சாயத்துக்களின் விஷயத்தில் டெப்டி பஞ்சாயத்து ஆபீஸர், தமது குறிப்புகள், எவையேனுமிருந்தால், அவை சகிதமாக மேற்படி பதிலை சம்பந்தப்பட்ட ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸருக்குச் சமர்ப்பிக்க வேண்டும். இப் பஞ்சாயத்துக்களில் ஆடிட் ரிப்போர்ட்டை ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர் விமரிசை செய்ய வேண்டும். அவ்விமரிசையின் நகல் ஒன்றை ரீஜனல் இன்ஸ்பெக்டர் மூலமாக மேற்படி ஆடிட்டருக்கு அனுப்ப வேண்டும்.

பிரிவு 178 (2) (XVII) படிக்கு விதிகள்

பார்வையிடும் உத்தியோகஸ்தர்கள், மேற்பார்வை செய்யும் உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களுக்குள்ள அதிகாரங்கள்.

1. விசாரணைகள் நடத்துவதற்காகக் கிராமப் பஞ்சாயத்துக்களைக் குறித்த 1958-ம் வருஷத்திய சென்னபட்டணத்துச் சட்டத்தில் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளில் அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கிற சகல நபர்களும், ஷை சட்டத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்டவர்களும் தங்கள் அலுவல்களின் வியாபகத்துக்குள் அடங்குகிற விஷயங்களில் விசாரணைகள் ஏவற்றையேனும் நடத்துகிறவர்களுமான, பார்வையிடும் சகல உத்தியோகஸ்தர்களும்,

மேற்பார்வை செய்யும் சகல உத்தியோகஸ்தர்களும், அவ்வாறு விசாரணைகள் நடத்தும் காரியத்துக்காக—

(i) விசாரணையிலிருக்கிற எந்த விஷயத்தைப் பற்றியேனும் பரிசீலனை செய்வதற்குப் பிரஸ்தாப ஜில்லாவுக்குள் வசிக்கிற யாருடைய சாட்சியம் அவசியமென்று தங்களுக்குத் தோற்றக்கூடுமோ அவரை ஸம்மன் அனுப்பி வரவழைக்கவும், விசாரணையிலிருக்கிற விஷயத்துக்குப் பொருத்தமான எந்த தஸ்தாவேஜு அந்த நபருடைய சுவாதீனத்திலாவது அவருடைய ஆதிக்கத்திலாவது இருக்கோ அந்த தஸ்தாவேஜைக்கொண்டுவந்து காட்டும்படிக் கேட்கவும்.

(ii) ஒரு ஸிவில் கோர்ட்டார் ஸம்மன் அனுப்பி வரவழைத்த ஒரு சாட்சிக்கு எந்தப் படி கொடுக்கத்தக்கதாகுமோ அந்தப் படியை அப்படிப்பட்ட யாதொரு நபருக்குக் கொடுக்கவும், அப்படி யார் கொடுக்கவேண்டும் அல்லது அது எந்த நிதியிலிருந்து கொடுக்கப்பட வேண்டும் என்பதுபற்றி உத்தரவைப் பிறப்பிக்கவும்,

அதிகாரங்கள் உடையவர்களாவார்கள்.

குறிப்பு

விதி 1. (ii) சாட்சிக்குப் படி: சிவில் கோர்ட்டு, சாக்ஷிபடி படிக்கு படி நாள் 1க்கு அணு பன்னிரண்டும் மைலுக்கு போகவர அணு இரண்டும் கொடுக்கவேண்டும். [சிவில் ரூல்ஸ் ஆப் பிராக்டிக்ஸ் மதருஸ் ஐகோர்ட்டு, விதி 50.]

2. மேற்படி ஸம்மனை எழுதியனுப்பவேண்டும்; அது எந்த உத்தியோகஸ்தரால் பிறப்பிக்கப்பட்டதோ அந்த உத்தியோகஸ்தரின் கையெழுத்தையும் முத்திரையும் அதில் போட்டு அதை அத்தாட்சிப்படுத்தவேண்டும்.

ஸம்மன் அனுப்பி வரவழைக்கப்பட்டவர் குறித்த ஒரு காலத்திலும் இடத்திலும் மேற்படி உத்தியோகஸ்தருக்கு முன் ஹாஜராகவேண்டுமென்று அதில் கட்டளையிட்டிருக்க வேண்டும்; அவர் சாட்சியம் கொடுப்பதற்காகவா அல்லது ஒரு தஸ்தாவேஜை ஹாஜர்ப்படுத்துவதற்காகவா அல்லது இவ்விரண்டு காரியங்களுக்குமாகவா ஹாஜராக வேண்டுமென்று அதில் குறிப்பிட்டிருக்கவேண்டும்; கொண்டு வந்து காட்டவேண்டுமெனக் கேட்கப்படும் குறிப்பிட்ட ஒருதஸ்தாவேஜைப்பற்றி ஸம்மனில் சௌகரியமானவரை திட்டமாக விவரித்திருக்க வேண்டும்.

3. ஸம்மன் அனுப்பி வரவழைக்கப்பட்டவரிடம் நேராகவே அந்த ஸம்மனைச் சேர்ப்பிக்கவேண்டும்; அல்லது அவர் காணப்படாவிட்டால், அவருடன் வசிக்கிற அவர் குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்த ஒருவரிடமாவது அவர் வசித்து வருகிற கிராமத் தலைவரிடமாவது அவருக்காக அதை கொடுத்துவிடலாம்.

4. சாட்சியம் கொடுக்கும்படி ஸம்மன் அனுப்பி வரவழைக்காமலேயே ஒரு தஸ்தாவேஜைக் கொண்டுவந்து காட்டும்படி எந்த நபரையும் ஸம்மன் அனுப்பி வரவழைக்கலாம்; ஒரு தஸ்தாவேஜை மட்டும் கொண்டு வந்து காட்டும்படி ஸம்மன் அனுப்பி வரவழைக்கப்பட்ட ஒருவர் அதைக் கொண்டு வந்து காட்ட தாமே நேரில் ஹாஜராவதற்குப் பதிலாக அந்த தஸ்தாவேஜைக் கொண்டு வந்து காட்டும்படி செய்தால், அவர் அந்த ஸம்மனை அனுசரித்திருப்பதாகக் கருதப்படுவார்.

5. யாருடைய சாட்சியம் வேண்டியிருக்கிறதோ அவர் வியாதிகாரணமாகவோ அசக்தம் காரணமாகவோ ஸம்மன் பிறப்பிக்கும் உத்தியோகஸ்தருக்கு முன் ஹாஜராக முடியாவிட்டால், அல்லது அவருடைய அந்தஸ்து காரணமாக அல்லது அவர் ஆணுயிருப்பது அல்லது பெண்ணுயிருப்பது காரணமாக ஸம்மன் அனுப்பி வரவழைக்கக்கூடாத ஒருவராயிருந்தால் ஸம்மன் பிறப்பிக்கும் உத்தியோகஸ்தர் தாமாகவேயாது எந்தக் கட்சிக்காரருடைய சாட்சியம் கோரப்படுகிறதோ அந்தக் கட்சிக்காரர் விண்ணப்பம் செய்துகொள்வதன் பேரிலாவது, அவர் ஹாஜராக வேண்டியதில்லையென்று சொல்லி, இது காரியத்துக்காக அவ் வுத்தியோகஸ்தர் நியமித்தனுப்புகிற ஒரு கீழ் உத்தியோகஸ்தர் அவரைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

6. இவ்விதிகளின் பிரகாரம் அனுப்பப்பட்ட ஒரு ஸம்மனுக்கு எவரேனும் கீழ்ப்படியத் தவறினால் அவருக்கு **நூறு ரூபாய் வரையில் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கதாகும்.**

குறிப்பு

விதி 6. ரூபா. 100 அபராதம்:—ஒருவருக்கு சம்மன் அனுப்பியும் அவர் வராவிட்டால் அந்தக்கேஸை சப்மாஜிஸ்டிரேட்தான் விசாரிக்க வேண்டும். ஸம்மன் அனுப்பியவர், விசாரிக்க அதிகாரமில்லை. விசாரிக்கவேண்டிய விஷயங்களில் முதலாவதாக அவருக்கு சம்மன் அனுப்ப வேண்டியது அவசியமென்பதை ருஜுப்படுத்தவேண்டும். இதற்கு அபராதம் ரூ 100/- வரையில் போடலாம்.

7. இவ் விதிகளில் கண்டதெதுவும், மேற்படி சட்டத்தினுல் அல்லது அதன் பிரகாரம் வேறே விதமாய் ஏற்பாடு செய்திருக்கிற விஷயங்களுக்குப் பிரயோகப்படாது.

இதர பிரதேச அதிகார சபைகளால் செய்யப்படும் செலவுக்குத் திரவிய சகாயம்செய்வது.

142. அரசாங்கத்தாராலாவது அல்லது ராஜ்யத்திலுள்ள யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலிலாவது யாதொரு பஞ்சாயத்து அல்லது இதர யாதொரு பிரதேச அதிகார சபையாலாவது இச் சட்டத்தினுலும் அதன்படியாகிலும் அனுமதிக்கப்பட்ட எந்தக் காரியத்துக்காகவாகிலும் செய்யப் பட்ட செலவினுலே சந்தர்ப்பத்துக்கு ஏற்ருற்போல் பிரஸ்தாப கிராமத்திலுள்ள அல்லது பட்டிணத்திலுள்ள அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலிலுள்ள அல்லது பஞ்சாயத்திலுள்ள குடிகளுக்குப் பயன் உண்டானுல் அந்த இன்ஸ்பெக்டரின் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டு அப்படிப்பட்ட செலவுக்காக ஒரு தொகையைக் கொடுத்து உதவலாம். மேலும், அப்படிக் கொடுத்து உதவ வேண்டுமென்று இன்ஸ்பெக்டர் கட்டளை யிட்டால் அப்படியே செய்யவேண்டும்.

குறிப்பு

சில ஸ்தாபனங்கள் தங்களிடம் வேண்டிய நிதியிலிருந்தும், குரும்புதனமாகவும், லோபி தனமாகவும் தங்கள் பிரதேசங்களிலுள்ள பள்ளிக்கூடங்களை மூடிவிடவும், மருந்துசாலைகளை யும் எடுத்து விடவும் மருத்துவ நர்சுகளையும் எடுத்து விடவும் செய்தார்கள். அந்த மாதிரி சமயங்களிலும், இன்னும் இதர சமயங்களிலும் அம்மாதிரி ஸ்தாபனங்களை கட்டாயமாக செலவு செய்ய உத்தரவிடலாம். அதாவது சில ஸ்தாபனங்கள் அதிக நன்மையும் சில குறைந்த நன்மையை அடைவதையும் இந்த பிரிவின் மூலமாக சரிகட்டலாம்.

அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்ட கடன்களையும் முன்பணத் தொகைகளையும் வசூலிப்பது

143 (1) பிரதேச அதிகார சபைகளுக்குக் கடன் கொடுப்பது பற்றிய (**1914**-ம் ஆண்டு **IX**-வது சட்டமாகிய) 1914-ம் ஆண்டிய சட்டத்தில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாம லேயே, அரசாங்கத்தார்—

(a) பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அல்லது பஞ்சா யத்து நிதியைத் தம் வசத்தில் வைத்திருக்கிற யாதொரு நபர் இச் சட்டத்தின்படி மேற்படி நிதியை எந்தக் காரியத்துக்கு உபயோகிக்கலாமோ அப்படிப்பட்ட காரியத்துக்காக அந்தப் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு அல்லது அந்த பஞ்சாயத்து அரசாங்கத்தார் கொடுத்த யாதொரு கடனையாவது முன் பணத்தொகையையாவது அனுமதிக்கப்பட்ட கடன்களைக்கொடுத்து தீர்ப்பதற்கான பொறுப்புகள் தவிர அந்த நிதியின் பேரில் ஏற்பட்டுள்ள வேறு எவையேனும் பொறுப்புகளுக்கு முன்னதாகத் தங்களுக்குச் செலுத்த வேண்டு மென்று அந்த நபருக்கு உத்தரவு மூலமாய் கட்டளையிடலாம்.

(b) அப்படிப்பட்ட யாதொரு கடன் அல்லது முன் பணத்தொகையை வியாஜ்ஜியம் மூலமாக வசூலிக்கலாம்.

(2) (1) உட்பிரிவைச் சேர்ந்த (a) பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிற உத்தரவு யாருக்கு விலாசமிட்டனுப்பப்படுகிறதோ அவர் அவ்வுத்திரவை அனுசரித்து நடக்கக் கடமைப்பட்டவராவார்.

அத்தியாயம் V பிரிவுகள் 144 - 158

மேல் விசாரணை செய்யும் அதிகாரிகள் – பகுதிகள் 144 முதல் 158 வரை

இந்தப் பகுதிகள், அரசாங்கத்தார் இன்ஸ்பெக்டர் கலெக்டர், மேல் விசாரணை செய்கிற இதர அதிகாரிகள் ஆகியவர்களின் அதிகாரங்களுக்குச் சம்பந்தப்பட்டவையாகும். இவை முக்கியமாக 1950-ம் ஆண்டு சென்னை கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தில் உள்ள நிகரான ஷரத்துக்களை அவசியமான மாறுதல்களுடன் அப்படியே எடுத்து எழுதுகின்றன. இந்த மாறுதல்கள் உத்தேச பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்களுக்குச் சம்பந்தப்பட்ட ஷரத்துக்களை இம் மசோதாவில் சேர்த்துக் கொண்டிருப்பதன் விளைவாக ஏற்படுகின்றன. பஞ்சாயத்துக்களின் தலைவர்களையும் உப-தலைவர்களையும் நீக்குவதற்கான நடைமுறை சம்பந்தமாக சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. இப்போதுள்ள ஷரத்துக்களின் பிரகாரம் ஒரு பஞ்சாயத்தின் தலைவர் உப-தலைவர் அல்லது அங்கத்தினரை அது விஷயமாய் பஞ்சாயத்துக்களிடமிருந்து எந்த விதமான தீர்மானமும் இல்லாமலேயே இன்ஸ்பெக்டர் பதவியிலிருந்து நீக்கி விடலாம். இந்த மசோதா சட்டமாக்கப்படுமானால், ஒரு பஞ்சாயத்து தலைவர், அல்லது உப-தலைவர் தாசீல்தாரரின் தலைமையில் அது விஷயமாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினால் மட்டுமே இன்ஸ்பெக்டர் அவரைப் பதவியிலிருந்து நீக்கமுடியும். ஓர் அங்கத்தினரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான ஷரத்தும் விட்டுவிடப்பட்டிருக்கிறது. ஒரு பஞ்சாயத்தின் தலைவர் அல்லது உப-தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காகவும் புதிய ஷரத்து ஒன்று அமைத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்களின் அக்கிராசனர்கள், உப-அக்கிராசனர் இவர்களைப் பதவியிலிருந்து நீக்குவது சம்பந்தமாகவும் இதைப் போலவே ஷரத்துக்கள் அமைத்துக் கொள்ளப்பட்டன. ஆனால், இது சம்பந்தப்பட்ட கூட்டங்களுக்கு ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் — தாசில்தார் அல்ல — தலைமை வகிப்பார்; அக்கிராசனர்கள் அல்லது உபஅக்கிராசனர்களைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான அதிகாரி அரசாங்கத்தார் ஆவார்கள். இன்ஸ்பெக்டர் அல்ல. பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்களை கலைப்பதற்கும் ரத்து செய்வதற்குமான ஷரத்துக்கூட இப்போது பஞ்சாயத்துக்களைக் கலைப்பதற்கும் ரத்து செய்வதற்கும் உள்ள ஷரத்துக்களைப் போலவே செய்யப்பட்டுள்ளன.

பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களையும் பஞ்சாயத்துக்களையும் மேற்பார்வையிடும் அதிகாரிகளை நியமிப்பது

144. (1) இச்சட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்கள் ஆகியவை எல்லாவற்றின், அல்லது அவைகளில் யாதொன்றின் அலுவல்களைப் பார்வையிடுவதற்காக அல்லது மேற்பார்வை செய்வதற்காக அரசாங்கத்தார் தேவையாயிருக்கக்கூடிய அதிகாரிகளை நியமிக்கலாம்.

(2) (1) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள அதிகாரிகள் அவர்களுடைய சிப்பந்தியினர் ஆகியவர்களின் ஊழியத் தரப் பிரிவினை, அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளும் முறைகள், ஊழிய நிபந்தனைகள், அவர்களின் சம்பளப்படி, அவர்களின் நடத்தை ஒழுங்கு ஆகியவற்றை முறைப்படுத்த இந்த சட்டத்தின் கீழ் ஏற்படுத்திய விதிகள்படிக்கு அரசாங்கத்தாருக்கு அதிகாரம் உண்டு.

குறிப்பு

இன்ஸ்பெக்டர் — பி. 2 (15)
பஞ்சாயத்து — பி. 2 (20) பி. 8
அதிகாரங்கள் கடமைகள். } பி. 8 63, 64—67

அரசாங்கம் பி. 2 (12)
உத்தியோகஸ்தர் — பி. 144- 148
சிப்பந்தி விதிகள் —பி. 57- 62

பொது:—அரசாங்கம், இந்த பிரிவு படிக்கு இன்ஸ்பெக்டரையும், கலெக்டரையும் உத்தி யோகஸ்தர்களாக நியமிக்கிறது. இவர்கள் எல்லோரும் அரசாங்கத்தின் கீழ் சம்பளம்வாங்கிக் கொள்ளும் உத்தியோகஸ்தர்கள். இவர்கள் இந்த சட்டத்தின்படி நடந்து கொள்ள வேண்டும். இன்ஸ்பெக்டரானவர் 147-வது பிரிவின் படிக்கு ஒரு தீர்மானத்தை அல்லது ஒரு லைசென்சை நிருத்தி வைக்கலாம், அல்லது ரத்து செய்யலாம். அம்மாதிரி செய்வதற்கு முந்தி பஞ்சாயத் துக்கும், தலைவருக்கும் ஏன் அந்த மாதிரி ரத்து செய்யக்கூடாது என்பதைக் குறித்து பதில் தெரியப்படுத்த நோட்டீஸ் கொடுக்க வேண்டியது அவசியமானது. அப்படி நோட்டீஸ் கொடாமல் தீர்மானத்தையோ லைசென்சையோ ரத்து செய்து விட்டால் அந்த உத்தரவு செல் லத் தக்கினது அல்ல.

அதே மாதிரியாக பி. 154-ன் கீழ் ஒரு பஞ்சாயத்து சரிவர நடந்து கொள்ளவில்லை என்று நிர்வாக உத்தியோகஸ்தர் அல்லது ரீஜனல் இன்ஸ்பெக்டர் அவர்களின் ரிப்போர்டின் பேரிலேயே அந்த பஞ்சாயத்துக்கு யாதொரு நோட்டீஸ் கொடாமல் அந்த பஞ்சாயத்தை கலைத்து விடக்கூடாது. அப்படி நோட்டீஸ் இல்லாமல் கலைத்தால் அது சட்டவிரோதமாகும் அதில் சிவில் கோர்ட்டு பிரவேசித்து அந்த ரத்து செய்த உத்தரவை மாற்றிவிடலாம். பி. 8 (2) குறிப்பில் பக்கம் 40-ல் "இந்த சட்டத்தில் கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு" என்னும் தலைப்பை பார்க்கவும்.

இந்திய அரசாங்க அமைப்பில் பிரசிடெண்டானவர் சர்வாதிகாரியாக இருக்கிறார். அவர் ஒரு ராஜ்யத்தின் கவர்னரை சம்பளம் கொடுத்து நியமிக்கிறார். அந்த ராஜ்யத்தின் சட்ட மன்றங்களுக்கு பொது மக்கள் தங்கள் பிரதிநிதிகளாக மெம்பர்களை தேர்ந்தெடுத்து அனுப்பு கிறார்கள். அந்த பிரதிநிதிகள் மந்திரிகளை ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள். அவர்களை மற்ற எந்த விதமாகவும் மேற்படி இந்திய அரசாங்க சட்டயமைப்பு மூலமாக சட்டமன்றங்களில் இருந்து வெளிப்படுத்த முடியவில்லை. ஆனால் அவர்களுக்கு தெரியாமலே சம்பளம் வாங்கும் [பஞ்சாயத்து நிர்வாக உத்தியோகஸ்தர் மந்திரி] கவர்னர் இந்த மந்திரிகளுக்கு [அதாவது பஞ் சாயத்துக்கும், பஞ்சாயத்து அரசாங்கத்தினர்களுக்கும், தலைவருக்கும்] தெரியாமலே பிரசி டெண்டுக்கு ரிப்போர்ட்டு செய்கிறார். அதன் பேரில் மேற்படி ராஜ்ய அரசாங்கத்திற்காவது. மந்திரிகளுக்காவது யாதொரு நோட்டீஸும் கொடாமலே அந்த சட்ட மன்றத்தையும் மந்திரி களையும் பிரசிடெண்ட் கலைத்து விடுகிறார். அம்மாதிரி கேரள ராஜ்யத்தில் 1-8-1959ல் நடந்து இருக்கிறது. அந்த இந்திய அரசாங்க அமைப்பில் கலைப்பதற்கு முந்தி நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று ஷரத்து இல்லை. ஒரு:கால் மதராஸ் அரசாங்கமோ அல்லது இன்ஸ்பெக் டரோ ஒரு பஞ்சாயத்துக்கு நோட்டீஸ் கொடாமல் அதை கலைத்து விட்டால் அது சட்டவிரோ தமாகும். அந்த இந்திய அரசாங்க அமைப்பு கேஸ் இங்கு பொருந்தாது, இம்மாதிரி விஷயங் களில் சிவில் கோர்டுகள் விசாரணை புரிய அவைகளுக்கு அதிகாரம் உண்டு.

பார்வையிடும் அதிகாரிகளுக்குள்ள அதிகாரங்கள்

145. (1) இன்ஸ்பெக்டராவது கலெக்டராவது 144-வது பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தராவது இது விஷயமாய் அரசாங்கத்தாரிடமிருந்தேனும் இன்ஸ்பெக்ட ரிடமிருந்தேனும் அதிகாரம் பெற்றிருக்கக் கூடிய வேறு யாதொரு அதிகாரியாவது நபராவது—

(a) யாதொரு பஞ்சாயத்து அல்லது அதன் நிர்வாக உத்தியோ கஸ்தரின், அல்லது யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அல்லது கமிஷனரின்மேல் விசாரணையிலுள்ள யாதொரு ஸ்தாவர சொத்தை அல்லது நடந் தேறி வருகிற யாதொரு வேலையை, பிரவேசித்து பார்வை இடலாம்.

(b) யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அல்லது யாதொரு பஞ்சயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் மேல் விசாரணையில் அல்லது அதன்கீழ் வைத்துவரப்படுகிற வேறு யாதொரு ஸ்தாபனத் தின் மேல் விசாரணையில் அல்லது அதன்கீழ் பராமரிக்கப்பட்டு வருகிற யாதொரு பள்ளிக்கூடம் அம்மை ஊசி போடுகிற நிலையம், அல்லது சத்திரத்தையும், பிரவேசித்து அத்தகைய யாதொரு ஸ்தாபனத்தில் வைத்துவரப்படுகிற எவையேனும் ரெகார்டுகள், ரெஜிஸ்டர்கள் அல்லது எவையேனும் தஸ்தாவேஜுகளையும் பார்வையிடலாம்.

(c) யாதொரு பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் காரியாலயத்தையும் அதில் வைக்கப்பட்டுள்ள எவையேனும் ரெகார்டுகள், ரெஜிஸ்டர்கள் அல்லது இதர தஸ்தாவேஜுகளையும் பிரவேசித்துப் பார்வையிடலாம்.

(2) பஞ்சாயத்துக்களும் அவற்றின் தலைவர்களும் நிர்வாக அதிகாரிகளும், பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களும் அவற்றின் அக்கிராசனர்களும், கமிஷனர்களும். பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்கள் இவற்றின் அதிகாரிகளும் ஊழியர்களும் மேற்சொன்ன அதிகாரிகளுக்கும் நபர்களுக்கும், அந்த அதிகாரிகளும் நபர்களும் இப் பிரிவின் கீழ் தங்களுக்குள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமென அவர்கள் கருதக்கூடிய நியாயமான எல்லாக் காலங்களிலும் பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியனின் சொத்து அல்லது வளவு அல்லது சகல தஸ்தாவேஜுகள் இவற்றை, நிர்ணயிக்கக்கூடிய விதிகளுக்குட்பட்டு பார்க்க விடுவதற்குக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

குறிப்பு

பொது :—இந்த பார்வையிடும் அதிகாரிகளுக்குள்ள அதிகாரங்களை குறித்த விதிகளை பிரிவு 141-ன் கீழ் அச்சிட்டு இருக்கிறது. அவைகளை பார்க்கவும்.

145-வது பிரிவுக்கும், 146-வது பிரிவுக்கும் உள்ள பேதங்கள்

145-வது பிரிவின் படிக்கு பார்வையிடும் அதிகாரிகள் நேராக போய் தாவர சொத்துக்களையும், அங்கே நடக்கும் வேலைகளையும், பள்ளிக்கூடங்களையும், மருந்து சாலை முதலியவைகளையும் அவைகளின் ரிக்கார்டுகளையும் பார்வையிடலாம்.

146-வது பிரிவின்படிக்கு மேலதிகாரிகள் தங்களுடைய ஆபீஸ்களிலேயே இருந்தும் பஞ்சாயத்தும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலும் பிரிவுகள் 63, 65 படிக்கு யாதொரு பொது வேலையை அல்லது வசதியை அல்லது சேவையை சரியாக நடத்திவர உத்திரவிடலாம். ஏதாவது ரிக்கார்டுவேண்டுமென்றால் அதை அனுப்பும் படிக்கும், இன்னும் மொத்த விஷயங்களை எழுத்தின் மூலம் தெரியப்படுத்த உத்தரவிடலாம்.

இதனால் ஏற்பட்டது என்ன வென்றால் 145-வது பிரிவின்படிக்கு மேலதிகாரிகள் நேராக போய் பார்க்கும் பொழுது என்ன செய்யலாம் என்று இருக்கிறது. 146-வது பிரிவின்படிக்கு மேலதிகாரிகள் நேராக போகாமல் போனாலும் பஞ்சாயத்தும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலும் இன்னது செய்ய வேண்டும் என்று உத்தரவு செய்யலாம்.

145. (1) இன்ஸ்பெக்டர்.—இவர் இந்த சட்டத்தின் கீழ் பஞ்சாயத்துகளுக்காக சகல விஷயங்களையும் நடத்தும் பிரதான அதிகாரி. இதுவரையில் ரீஜனல் இன்ஸ்பெக்டர்களும் பஞ்சாயத்து ஆபீஸர்களும், ஆடிட்டர்களும் பஞ்சாயத்துகளையும், அவற்றின் நடவடிக்கைகளையும், கணக்குகளையும் பரிசீலிப்பார்கள். 147 (1)ன் கீழ் " இச்சட்டத்தை அனுசரித்தோ அல்லது சாக்கிட்டுக்கொண்டோ " என்கிற தலைப்பின் கீழ்யுள்ள குறிப்பை பார்க்கவும். யாதொரு பஞ்சாயத்தின் தீர்மானமின்றி யாதொரு கிரிமினல் தாவாவும் செய்யக்கூடாது. இன்ஸ்பெக்டரானவர் அந்தக் காரணத்தைக் கொண்டு பஞ்சாயத்தால் செய்யப்பட்ட கிரிமினல் தாவாவை வாபீஸ் பெறும்படி பஞ்சாயத்துக்கு உத்திரவு செய்ய அதிகாரமுள்ளவராக இருக்கிறார்.

(2) பிரஸிடெண்டுகளும், பஞ்சாயத்துகளும். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்குப் பார்வையிடவேண்டிய சௌகரியங்கள் ஏற்படுத்தவேண்டும். பஞ்சாயத்து நிதிக்குச் செலவு வைக்கும் விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அதிகாரிகள் பார்வையிட வந்தபோது அவர்களுக்கு காலதாமதமின்றி உதவி செய்யும் பக்ஷத்தில் அவர்கள் இன்னும் இதரப் பஞ்சாயத்துக்களுக்குப் போக நேரிடும், ஆகையால் பஞ்சாயத்து பிரஸிடெண்டுகளும், சிப்பந்திகளும் மேலதிகாரிகளுக்கு இடையூறில்லாமல் நடந்து கொள்ள

எதிர்பார்க்கப்படுகிறது. அப்போதைக்கப்போது பிரஸிடெண்டுகள் சரிவர நடந்து கொள்வதில்லையென்று நிந்திக்கப்பட்டும், பஞ்சாயத்துப் பணத்தை சரிவர ஆளவில்லை என்று தண்டிக்கப்பட்டும் வருகிறுர்கள். அம்மாதிரி புகார்களுக்கு இடங்கொடாமல் எல்லா பஞ்சாயத்துகளும் நடந்து கொள்ளுமென்று, எதிர்பார்க்கிறோம், வந்த உத்தியோகஸ்தர்களுக்கு சரிவர விஷயங்களைத் தெரிவிக்காவிட்டால் அது பி. 187 படிக்கு குற்றமாகும்.

146. இன்ஸ்பெக்டராவது இது விஷயமாய் அரசாங்கத்தாரிடமிருந்தாகிலும் இன்ஸ்பெக்டரிடமிருந்தாகிலும் அதிகாரம் பெற்றிருக்கக் கூடிய யாதொரு உத்தியோகஸ்தராவது நபராவது—

மேல் விசாரணை செய்வதன் நிமித்தமாக அதிகாரிகளுக்குள்ள அதிகாரங்கள்

(a) 63, 65-வது பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள விவரப்படிக்கான யாதொரு பொது வேலை அல்லது வசதி அல்லது சேவை நிமித்தமாக தொகை ஒதுக்கும்படி அல்லது அதை நிறைவேற்றி வைக்கும்படி அல்லது அதற்கு ஏற்பாடு செய்யும்படி பஞ்சாயத்திற்கு அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்குக் கட்டளையிடலாம்.

(b) யாதொரு பஞ்சாயத்தின் அல்லது நிர்வாக அதிகாரியின் அல்லது யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அல்லது கமிஷனரின் சுவாதீனத்திலுள்ள அல்லது அவரது மேல்விசாரணையிலுள்ள யாதொரு ரெகார்டு, ரெஜிஸ்டர் அல்லது இதர தஸ்தாவேஜை அனுப்பும்படிக் கேட்கலாம்.

(c) யாதொரு பஞ்சாயத்து அல்லது அதன் நிர்வாக அதிகாரியை அல்லது யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலை அல்லது கமிஷனரை யாதொரு விவரக் கணக்கு, ப்ளான், மதிப்பீடு, ஸ்டேட்மெண்ட், கணக்கு அல்லது புள்ளி விவரத்தை அனுப்பும்படிக் கேட்கலாம் ;

(d) யாதொரு பஞ்சாயத்தை அல்லது அதன் நிர்வாக அதிகாரியை அல்லது யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலை அல்லது அதன் கமிஷனரை ஷ பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு விஷயம் பற்றிய தகவல் அல்லது அறிக்கையொன்றை அனுப்பும்படிக் கேட்கலாம் ;

(e) யாதொரு பஞ்சாயத்தின் அல்லது நிர்வாக அதிகாரியை அல்லது யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலாரை அல்லது கமிஷனரை வருமானம் தருகிற யாதொரு ஸ்தாபனம் சம்பந்தமான உரிமையை விட்டுக்கொடுக்குமுன் அல்லது அதன் ஸ்தாபனத்தை மூடிவிடுவதற்கு முன் தமது முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்கலாம் ;

(f) யாதொரு பஞ்சாயத்தின் அல்லது அதன் நிர்வாக அதிகாரியின் அல்லது யாதொரு யூனியன் கவுன்ஸிலின் அல்லது கமிஷனரின் நடவடிக்கைகள் அல்லது அலுவல்கள் சம்பந்தமாக எவையேனும் குறிப்புகளை அவர்களின் ஆலோசனைக்காக எழுதி வைக்கலாம்.

குறிப்பு

பி. 145 யையும் அதின் கீழ் குறிப்புகளையும் விதிகளையும் இந்த பிரிவுக்கு ஒத்த மாதிரி படிக்கவும். இங்கே பிரிவு 141-ன் கீழ் பக்கம் 362 ல் தலைப்பு “ பார்வையிடும் உத்தியோகஸ்தர்கள் மேற்பார்வை செய்யும் உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களுக்கு உள்ள அதிகாரங்கள் ” பற்றிய விதிகளையும், அதன் குறிப்புகளையும் பார்க்கவும்.

147. (1) இன்ஸ்பெக்டர் எழுதிய உத்தரவு பிறப்பித்து அதன் மூலமாக.—

இச் சட்டத்தின்படிக்கான தீர்மானம் முதலியவைகளை ஸஸ்பெண்டு செய்வதற்கான நிறுத்தி வைப்பதற்கான அல்லது ரத்து செய்வதற்கான அதிகாரம்.

(i) இச் சட்டத்தை அனுசரித்தோ அல்லது அதை சாக்கிட்டு நிறைவேற்றபட்ட யாதொரு தீர்மானம், பிறப்பிக்கப்பட்ட உத்தரவு அல்லது கொடுக்கப்பட்ட லைசென்ஸாவது அல்லது அனுமதியாவது.

(ii) செய்யப்படப் போகிற அல்லது செய்யப்பட்டு வருகிற யாதொரு காரியமாவது.

(a) ஷை தீர்மானம், உத்தரவு, லைஸென்ஸ், அனுமதி அல்லது காரியம் சட்ட பூர்வமாக நிறைவேற்றப்படவில்லை, பிறப்பிக்கப்படவில்லை, கொடுக்கப்படவில்லை அல்லது அதற்கு அதிகாரம் அளிக்கப்படவில்லையென்றேனும், அல்லது.

(b) ஷை தீர்மானம், உத்தரவு, லைஸென்ஸ், அனுமதி அல்லது காரியம் இச் சட்டத்தில் அல்லது வேறு யாதொரு சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மிகைப்பட்டுள்ளதென்றேனும், அந்த அதிகாரங்கள் துஷ்பிரயோகிக்கப்பட்டிருக்கின்றதேனும் அல்லது மற்றப்படி உசிதமல்லவென்று இன்ஸ்பெக்டரால் கருதப்படுகிறதென்றேனும், அல்லது.

(c) ஷை தீர்மானம் அல்லது உத்தரவு நிறைவேற்றப்படுவதனல், அல்லது ஷை லைஸென்ஸ் அல்லது அனுமதி அமுலில் இருந்து வருவதினல் அல்லது மேற்படி காரியம் செய்யப்படுவதனல் மக்கள் உயிருக்கு, தேகாரோக்கியத்திற்கு அல்லது பாதுகாப்பிற்கு அபாயம் நேரிடும் என்றேனும் அல்லது யாதொரு கலகம் அல்லது தெருச் சண்டை ஏற்படும் என்ருகிலும் ; தாம் கருதினல் அவர் அவ்வாறு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் முதலியவற்றை ஸஸ்பெண்ட் செய்யலாம் அல்லது ரத்து செய்யலாம் ; அவ்வாறு செய்யப்படப் போகிற காரியத்தைத் தடை செய்யலாம்.

ஆனல், இந்த உட்பிரிவில் சொல்லியிருப்பதெதுவும் யாதொரு தேர்தல் நடைபெற்றிருக்குமானல் அதை ரத்துசெய்வதை இன்ஸ்பெக்டருக்கு சாத்தியமாக்காது.

(2) இன்ஸ்பெக்டர் (1) உட்பிரிவின் (a), (b) பகுதிகளில் குறிப்பிட்டுள்ள காரணங்களில் எதை முன்னிட்டாவது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்குமுன் சம்பந்தப்பட்ட அதிகாரி அல்லது நபர் சொல்லிக்கொள்ள வேண்டியவற்றைச் சொல்லிக் கொள்வதற்காக அவருக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

(3) (1) உட் பிரிவைச் சேர்ந்த (c) பகுதியின் கீழ் இன்பெக்டருக்கு கொடுத்துள்ள அதிகாரத்தை அந்தப் பகுதியில் கண்டுள்ள ஷரத்துக்களை அனுசரித்து கலெக்டர் செலுத்தலாம்.

குறிப்பு

பி. 147 (1) (a) இச்சட்டத்தை அனுசரித்தோ அல்லது சாக்கிட்டுக்கொண்டோ:— ஒரு விஷயத்தை சட்டப்படி நடத்தினல் அந்த விஷயம் எப்போதும் சரியானதாகும். கெட்ட எண்ணத்துடன் சட்டத்தைச் சாக்கிட்டுக்கொண்டு, சட்டப்படிக்கு நடத்தினல் அதுவும் செலாவணியாகக் கூடியதே. பிரஸிடெண்ட் அல்லது நிர்வாக உத்தியோகஸ்தர் அல்லது மெம்பர்களுக்கு விரோதம் இருந்து அதற்காக அந்தச் சட்டத்தின் மூலம் அவர்கள் நடந்து கொள்வதினல் அவர்களுடைய விரோதிக்கு கெடுதி உண்டானல் அதுவும் சட்டப்படி செய்யப்பட்டதாகையால் அதைச் சட்ட பிரகாரம் நடத்தியதாகவே கருதப்படும். ஆனல் இன்ஸ்பெக்டரானவர் அம்மாதிரி தீர்மானங்களைத் தள்ளிவைக்காலம். அல்லது ரத்து செய்யலாம். அல்லது மாற்றிவிடலாம். இச்சட்டத்தின் கீழ் 170 (1)-வது பிரிவிலுள்ள 'நிறை வேற்றுகையில் யாதொரு அசட்டை அல்லது தவறுதல் நேரிட்டதாக சொல்லப்பட்ட' எனும் தொடர்மொழிக்

குச் சரியானதாகும். பிரிவு 169-ல் யுள்ள பூரா அமிசங்களையும் பார்க்கவும். இன்ஸ்பெக்டர் அல்லது ரீஜனல் இன்ஸ்பெக்டர் முதலியவர்கள் மனுதாரர் மனுபோட்டவுடனே ஒரு தீர்மானம், லைசென்ஸ், உத்திரவுகளை ரத்து செய்வார்கள் என்று என்ன கூடாது. பஞ்சாயத்துக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து விசாரணைசெய்து, பிறகு தான் அவைகளை மாற்றுவார்கள்.

பி. 147 (1) தீர்மானம் :—தீர்மானங்களை பிரேரேபிப்பத்தைப்பற்றி பி. 38 கீழ் பக்கம் 90-ல் விதிகளை பார்க்கவும். பஞ்சாயத்துக்கள் தீர்மானங்களை இன்ஸ்பெக்டரே மாற்றலாம். பஞ்சாயத்து பிரதேசத்திலுள்ள பிரஜைகள் ஒரு தீர்மானத்தை மாற்றிக் கொள்ளவேண்டுமென்றுல்இன்ஸ்பெக்டருக்கு நேராக மனுசெய்து கொள்ளலாம். மேலும், ரிஜீனல் இன்ஸ்பெக்டர்களுக்கும் மனுப்போட்டுக் கொள்ள வேண்டும். அவசியமாக இருந்தால் ஜில்லா கலெக்டர் அவர்களுக்கும் மனுப்போட்டுக் கொள்ளலாம். உதாரணமாக ஒரு பஞ்சாயத்தின் நிலத்தை பஞ்சாயத்து விற்கத் தீர்மானித்தால் அதை ரத்து செய்ய மேற்படி அதிகாரிகளுக்கு மனுப் போட்டுக்கொள்ளலாம். [ஜீஹுர்-எ-கிம்மன் A. I. R. 1936 All. 66] ஒரு பிரேரேபணை முடிவாகிற வரையில் அது தீர்மானமாகமாட்டாது. தீர்மானமான பிறகுதான் இன்ஸ் பெக்டர் அவர்களுக்கு அதில் பிரவேசிக்க அதிகாரமுண்டு. தீர்மானம் ஆகாத முன்பு அதில் பிரவேசிக்க அவருக்கு அதிகாரம் கிடையாது. [சுலேமன்- எ- காண்டர் டவுன் முனிசிபாலிடி A. I. R. 1925 Bom , 345] இன்ஸ்பெக்டர் செய்யும் உத்திரவுகளும் சட்டபடி இருக்க வேண்டும். எம்பார்-எ-சிந்தே], A. I. R. 1934 Bom.234]

பி. 147 (1) (i) உத்திரவு—உத்திரவு செய்யமாட்டேன் என்பது உத்திரவு ஆகாது. அதுபைலில் போடப்பட்டால் செல்லாது. அதைக்குறித்துக் கோர்ட்டில் தாவாசெய்துகொள்ளலாம் [எல்லம்மாள் குறித்து A.I.R, 1928 M. 164 = 53 M.L.J,.810]. ஒரு நிர்வாகி அதிகாரி அல்லாதவர் அல்லது நிர்வாக உத்தியோகஸ்தரல்லாதவர், உத்திரவுபோட்டால் அது செல்லாது. இன்ஸ்பெக்டர் பஞ்சாயத்தால் செய்யப்பட்ட உத்திரவுகளைத் தள்ளிவைக்கலாம்.

பி. 147 (1) (i) லைசென்ஸாவது அனுமதியாவது:—பி. 159-யையும், பி. 111-114களையும் பார்க்கவும். பஞ்சாயத்தால் கொடுக்கப்பட்டயாதொரு லைசென்ஸையும் இன்ஸ்பெக்டர் மாற்றிவிடலாம் அல்லது ரத்து செய்துவிடலாம் அல்லது தள்ளியும் வைக்கலாம்.

பி. 147 (1) (ii) காரியம் :—தீர்மானம், உத்திரவு, லைசென்ஸு முதலியவைகள் ஏற்பட்டபிறகு அதில் இன்ஸ்பெக்டர் பிரவேசிக்கலாம். காரியத்தில் ஏற்படப்போகிறது என்பதற்கு முந்தி அதைத் தடுத்துவிடலாகாது.

பி. 147 (1) (a) சட்டப்படி நிறைவேற்றப்படவில்லை, பஞ்சாயத்தின் காரியம்ரொம்பவும் மெச்சத்தக்கினதாகவும், நீதியுள்ளதாகவும் இருக்கும். ஆனுல் அது பஞ்சாயத்து ஆக்டின் படிக்கு இல்லாவிட்டால், அது சட்ட விரோதமாகும். ஒரு மத உத்ஸவத்திற்காக பஞ்சாயத்துப் பணத்தை உபயோகித்தால் அது நல்லதாகும். கடவுள் பக்தியாகவும் இருந்தபோதிலும் சட்டப்படிக்குச் சம்மதமான தல்ல,

பி. 147 (1) (c) அபாயம்,— இது உடனே உண்டாகவேண்டு மென்பது கிடையாது, இது ரொம்பத் தொலைவில் இருக்கலாம். இதை அபாயமில்லாமல் செய்வதே இதன் கருத்தாகும். இந்த மாதிரி விஷயங்களில் சந்தேகங்கள் இருந்தபோதிலும் இதைக் கட்டாயம் தடுக்கவேண்டும்.

பி. 147 (2) – இதன் படிக்கு சமாதானம் கொடுப்பதற்கு அதிகாரம் கொடுக்காமல் தீர்மானத்தை ரத்து செய்தால் அது செல்லத் தக்கினதல்ல. அப்துல் -எ- மதராஸ் அரசாங்கம் A. I. R. 1952 Mad. 555]. பி. 148-யையும் பார்க்கவும்.

எலெக்ஷன்:—மெம்பர்எலெக்ஷனும், பிரஸிடெண்ட் எலெக்ஷனும் பூர்த்தியாகாதவரையில் தேதிகள் மாற்றுவது முதலிய காரியங்களை இன்ஸ்பெக்டர் செய்யலாம். ஆனுல் வாக்காளர்கள் வாக்குக்கொடுத்த பிறகு அந்தத் தேர்தல்களின் முடிவைத் தள்ளிவைக்கஅல்லது ரத்து செய்ய கவர்ன்மெண்டிற்கு அதிகாரங்கிடையாது. அதை கோர்ட்டார்தான் செய்ய வேண்டும். [செக்ரடெரி ஆப் ஸ்டேட் -எ- முருகேசா A. I. R. 1919 M 443]

பி. 147 (3) கலெக்டர்—இதுவரையில் கலெக்டர் செய்வதற்கு அதிகாரங் கிடையாது. இப்போது இந்த ஆக்டின் கீழ் கலெக்டர்க்கும் அவ்வளவு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

148. நிர்ணயிக்கப்படக்கூடிய மேல் விசாரணைக்குட்பட்டு, இன்ஸ்பெக்டர் அல்லது கலெக்டர், அவசர சந்தர்ப்பங்களில், யாதொரு வேலையை உடனடியாக நிறைவேற்றுவதோ, யாதொரு காரியத்தை உடனடியாகச் செய்வதோ மக்கள் பாதுகாப்பிற்கு அவசியமாகுமெனத் தாம் கருதினல் அந்த வேலையை நிறைவேற்ற அல்லது அந்த காரியத்தை நிறைவேற்ற அதிகாரமுள்ள பஞ்சாயத்தை அல்லது அதன் நிர்வாக உத்தியோகஸ்தரை அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலை அல்லது கமிஷனரை அவ்வாறு நிறைவேற்றும்படி அல்லது செய்யும்படிக் கட்டளையிடலாம். அல்லது ஏற்பாடு செய்யலாம். மேலும் அவர், ஷ வேலையை நிறைவேற்றுவதற்கு அல்லது அந்தக் காரியத்தைச் செய்வதற்குப் பிடிக்கக்கூடிய செலவைப் பஞ்சாயத்து நிதியின் அல்லது பஞ்சாயத்து யூனியன் நிதியின் பொறுப்பு வகிக்கிற நபர் அதிகாரபூர்வமான கடன்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்காகப் பிடிக்கும் செலவுகள் தவிர மற்றபடி அந்த நிதிக்கு எழுதுகிற வேறு எந்தச் செலவையும்விட இதற்கு முதற்செலவைக் காட்டி அதைக் கொடுக்கும்படியும் கட்டளையிடலாம்.

கலெக்டர், இன்ஸ்பெக்டர் இவர்களுக்குள்ள அவசர அதிகாரங்கள்.

குறிப்பு

பொது — இது 45-வது பிரிவுக்கு சமானமானது. இதில் கண்ட அதிகாரத்தை இன்ஸ்பெக்டராவது, கலெக்டராவது, தங்கள் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்கள் செய்ய ஏற்படுத்தலாம். பி. 157 ஐ பார்க்கவும்.

பி. 148ன் கீழ் விதி

இன்ஸ்பெக்டருக்கும் கலெக்டருக்குமுள்ள அவசரகால அதிகாரங்கள் விஷயமாக மேல்விசாரணை

மேற்படி சட்டத்தின் 148-வது பிரிவில் கொடுத்துள்ள அதிகாரங்கள் செலுத்தப்படும் ஒவ்வொரு விஷயத்திலும் :—

(i) அவ் வதிகாரங்களை இன்ஸ்பெக்டர் செலுத்தினல், அதை அவர் உடனடியாக அரசாங்கத்தாருக்கு ரிபோர்ட் செய்யவேண்டும்.

(ii) அவ் வதிகாரங்களைக் கலெக்டர் செலுத்தினல், அதை அவர் உடனடியாக இன்ஸ்பெக்டருக்கு ரிபோர்ட் செய்யவேண்டும். அப்படி ரிபோர்ட் செய்கையில், அவ் வதிகாரங்களைச் செலுத்துவதற்கான முழுக் காரணங்களையும் தெரிவிக்க வேண்டும்; அதே சமயத்தில் அந்த ரிபோர்ட்டின் நகல் ஒன்றைப் பஞ்சாயத்து தெரிந்துகொள்வதற்காக அதற்கு அனுப்பிவைக்கவும் வேண்டும்.

149. (1) இச்சதினலாவது அதன்படி யாவது வேறு யாதொரு சட்டத்தினலாவது அதன்படியாவது விதிக்கப்பட்டுள்ள யாதொரு கடமையை யாதொரு பஞ்சாயத்து அல்லது தலைவர் அல்லது நிர்வாக அதிகாரியாகிலும், யாதொரு பஞ்சாயத்துக் கவுன்சில் யூனியனகிலும் அல்லது அதன் அக்கிராசனர் அல்லது கமிஷனராகிலும் நிறைவேற்றத் தவறிப் போயிருக்கிருரென்று இன்ஸ்பெக்டருக்கு எப்போதாவது தோற்றினல், அவர் அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கான கால அளவு ஒன்றை எழுதிய உத்தரவு பிறப்பித்து அதன் மூலம் நிச்சயிக்கலாம்.

யாதொரு பஞ்சாயத்து அல்லது தலைவர் அல்லது நிர்வாக அதிகாரி கடமையைச் செய்யத் தவறிப்போனல், நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கான அதிகாரம்.

(2) அவ்வாறு நிச்சயிக்கப்பட்ட கால அளவுக்குள் ஷ கடமை நிறைவேற்றப்படவில்லையென்ருல்; இன்ஸ்பெக்டர் அதை நிறைவேற்ற ஏதாவதொரு நபரை நியமித்து, அதை நிறைவேற்றுவதற்குப் பிடிக்கும் செலவை

சந்தர்ப்பத்திற்கேற்ப பஞ்சாயத்து நிதி அல்லது பஞ்சாயத்து யூனியன் நிதி பொறுப்பு வகிக்கிற நபர் கொடுக்கவேண்டுமெனக் கட்டளையிடலாம். அப்படிக் கொடுக்கையில் அதிகார பூர்வமான கடன்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான செலவுகள் நீங்கலாக ஷை நிதிக்கு எழுதுகிற வேறு எந்தச் செலவைக் காட்டிலும் இதற்கு முதற் சலுகை அளிக்கவேண்டும்.

குறிப்பு

149. (1) **தவறி விடுவது** —தவறிவிடுவது என்றால் ஒரு விதிக்கு அல்லது ஒரு ஏற்பாட்டிற்கு விரோதமாக நடப்பது அன்று, ஆனால், தவறுதல் என்றால் சட்டப்படிக்குச் செய்யாமலிருப்பதுதான் ஆகும். [சேந்தியப்பா எ. மதுரை டிஸ்டிரிக்ட் போர்டு 52 M 595=60 M. L. J. 495=I. R. 1931 M. 671=A. I. 1931 M. 419] தவறுதல் என்றால் செய்யாமலிருப்பது மாத்திரம் அன்று. [ரீகைலால் எ. பானுரி சிங் A. I. R. 1932 All 139=I. R 1932 All 217.]

காலம்.—இன்ஸ்பெக்டர் குறித்த காலத்தில் பிரஸிடெண்டு காரியத்தை முடிக்க வேண்டுமே யொழிய, இன்ஸ்பெக்டர் ஏற்படுத்திய ஒரு நாளில் சபை வைக்கவேண்டுமென்று கட்டாயம் செய்யக்கூடாது. [பக்தவத்ஸலு எ. இராமானுஜா An. L. R. 1933 M. 197=A. I. R. 1933 M. 326.]

தலைவர் அல்லது உப-தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவது.

150. (1) தலைவர் அல்லது உப தலைவர் இச் சட்டத்தின் அல்லது அதன் படிக்கான விதிகள், சகாயச் சட்டங்கள், ரெகுலேஷன்கள் அல்லது சட்டப்பூர்வமான எந்த உத்தரவுகளின் ஷரத்துக்களையாவது வேண்டுமென்றே நிறைவேற்றாமல் போனாலும் அல்லது நிறைவேற்ற மறுத்தாலும் அல்லது அவைகளுக்குக் கீழ் படியாவிட்டாலும் அல்லது தம்மிடம் சங்கிரமித்துள்ள அதிகாரங்களை துஷ்பிரயோகப்படுத்தினாலும், இன்ஸ்பெக்டர் எழுதிய நோட்டிஸ் மூலமாக, சந்தர்ப்பத்திற்கேற்ப, தலைவர் அல்லது உப தலைவரை, குறிப்பிடப்பட்ட ஒரு தேதிக்குள் அந்த நோட்டிஸில் சொல்லியிருக்கிற தவறுதல்களுக்கும் அல்லது செய்கைகளுக்கும் தமது விளக்கத்தைத் தரும்படிக் கேட்கவேண்டும்.

(2) ஷை விளக்கம் குறிப்பிட்ட தேதிக்குள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்து, அவ் விளக்கம் திருப்திகரமாயிருக்கிறதென்று இன்ஸ்பெக்டர் கருதினால் அவர் ஷை நோட்டிஸ் சம்பந்தமாக மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. குறிப்பிட்ட தேதிக்குள் விளக்கம் எதுவும் பெற்றுக்கொள்ளப்படா விட்டாலும் அல்லது பெற்றுக்கொண்ட விளக்கம் திருப்திகரமாயில்லையென்று தாம் கருதினாலும், அவர் (1) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள நோட்டிஸின் நகல் ஒன்றையும், தலைவரின் விளக்கம் குறிப்பிட்ட தேதிக்குள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அவ் விளக்கத்தையும் சேர்த்து பிரஸ்தாப தாலூகா தாசில்தாருக்கு அனுப்பிவைப்பதுடன் தலைவர் அல்லது உப தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான பிரேரணை ஒன்றையும் சேர்த்து பஞ்சாயத்தாரின் ஆலோசனைக்காக அவருக்கு அனுப்பிவைக்கவும் வேண்டும்.

(3) பின்னர் தாசில்தாரர் ஷை நோட்டிஸையும் அதற்கு விளக்கம் ஏதாகிலும் வந்திருந்தால் அதையும், தலைவர் அல்லது உப தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான பிரேரணையையும் பற்றி ஆலோசிப்பதற்காக ஒரு கூட்டம் கூட்ட வேண்டும். இக்கூட்டம் தாசில்தாரர் நியமிக்கக்கூடிய காலத்தில் பஞ்சாயத்து அலுவலகத்தில் நடைபெற வேண்டும்.

(4) இக் கூட்டத்தைப் பற்றிய நோட்டிஸின் நகல் ஒன்றை சம்பந்தப்பட்ட தலைவரிடமும் அல்லது உப தலைவரிடமும் பஞ்சாயத்தின் அங்கத்தினர்கள் எல்லோரிடமும் ஷை கூட்டத் தேதிக்குக் குறைந்தபட்சம் ஏழு தினங்களுக்கு முன்பாவது தாசில்தாரர் சேர்ப்பிக்கச் செய்யவேண்டும்.

(5) இப் பிரிவின்படிக் கூட்டப்பட்ட கூட்டத்திற்குத் தாசில்தாரர் தலைமை வகிக்கவேண்டும். அவரைத் தவிர வேறுயாரும் அதற்குத் தலைமை வகிக்கக் கூடாது. அக் கூட்டத்திற்காக நியமிக்கப்பட்ட மணி நேரத்திலிருந்து அரை மணி நேரத்திற்குள் தாசில்தாரர் அக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க வரவில்லையென்றால் (6) உட்பிரிவின்கீழ் தாசில்தாரர் நியமித்து அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்கவேண்டிய ஒருகாலத்திற்கு அக் கூட்டம் தள்ளிப்போடப்படும்.

(6) ஷை கூட்டத்திற்குத் தாசில்தாரர் தலைமை வகிக்க முடியவில்லை யென்றால், அவர் அதற்கான காரணங்களை எழுதி வைத்த பிறகு, தாம் நியமிக்கக்கூடிய இன்னொரு காலத்திற்கு அக் கூட்டத்தை ஒத்திப்போடலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட தேதி (3) உட்பிரிவின் கீழ் ஷை கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது தினங்களுக்கு மேல் போகக்கூடாது. ஒத்திப்போட்ட கூட்டம் சம்பந்தமாக, நியமிக்கப்பட்ட காலத்தைக் குறித்து அங்கத்தினர்களுக்குத் தெளிவாக ஏழு தினங்களுக்குக் குறையாத நோட்டிஸ் கொடுக்கவேண்டும்.

(7). (5), (6) உட்பிரிவுகளில் ஏற்பாடு செய்திருக்கிறபடிக்சன்றி மற்றப்படி, ஷை நோட்டிஸையும் அதற்கு விளக்கம் ஏதாகிலும் வந்திருந்தால் அதையும், தலைவர் அல்லது உப தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான பிரேரணையை ஆலோசனை செய்வதற்காக இப் பிரிவின்படிக் கூட்டப்பட்ட ஒரு கூட்டம் எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒத்திப் போடப்படலாகாது.

(8) இப் பிரிவின்படிக் கூட்டப்படுகிற கூட்டம் தொடங்கியவுடன் தாசில்தாரர் இன்ஸ்பெக்டர் பிறப்பித்த நோட்டிஸையும் சந்தர்ப்பத்துக்கேற்ப தலைவர் அல்லது உப தலைவர் அதற்கு விளக்கம் ஏதாகிலும் தந்திருந்தால் அதையும் பஞ்சாயத்திற்கு வாசித்துக்காட்ட வேண்டும். இந்த நோட்டிஸையும் விளக்கத்தையும் ஆலோசிப்பதற்காகவென்றே இக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

(9) இப் பிரிவின்படிக்கான எந்தக் கூட்டத்திலும் சர்ச்சை எதையும் கிளப்பக் கூடாது.

(10) தாசில்தார், இந்த நோட்டிஸ் அல்லது விளக்கத்தின் தராதரங்களைக் குறித்துப் பேசவுங்கூடாது, அந்தக் கூட்டத்தில் வாக்களிக்க அவருக்கு உரிமையும் கிடையாது.

(11) இன்ஸ்பெக்டரின் பிரேரணையை ஏற்றுக்கொண்டு அல்லது நிராகரித்து பஞ்சாயத்து செய்கிற தீர்மானம் அந்தக் கூட்டம் சம்பந்தமான நடவடிக்கைக் குறிப்புப் புத்தகத்தில் கிரமமாக எழுதி வைக்கப்பட வேண்டும். இந்த நடவடிக்கைக் குறிப்பின் நகல் ஒன்றைக் கூட்டம் முடிந்தவுடன் தாசில்தாரர் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(12) மேற்படி கூட்டத்தில் அப் பிரேரணையைப் பஞ்சாயத்து ஏற்றுக்கொண்டால், இன்ஸ்பெக்டர் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக சந்தர்ப்பத்திற்கேற்ப தலைவர் அல்லது உப தலைவரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும்.

(13) (12) உட்பிரிவின்படி தலைவர் அல்லது உப தலைவர் பதவியிலிருந்து தம்மை நீக்கி விளம்பரம் பிறப்பிக்கப்பட்டிருக்கிற யாதொரு நபர் மேற்படி பஞ்சாயத்தின் அடுத்த சாதாரண தேர்தல்களைக் குறித்து நிர்ணயிக்கப்பட்டவிதமாக விளம்பரம் பிரசுரிக்கப்படுகிற தேதி அலலது அந்த விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள தேதியிலிருந்து ஒரு வருஷம் பூர்த்தியாகியுள்ள தேதி இவைகளில் எது முந்தியதாயிருக்கிறதோ அந்தத் தேதிவரையில் தலைவர் அல்லது உப தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெறுவதற்கு அல்லது அந்தப் பதவிகளில் யாதொன்றை வகிப்பதற்கு அருகதையற்றவராவார்.

குறிப்பு

பொது.—முந்தி இருந்த 1950 ஆக்டில் சட்டத்தின் கீழ் இன்ஸ்பெக்டர் தலைவரையும், உபதலைவரையும், நீக்கிவிடலாம். இந்த பிரிவின்படிக்கு தலைவரை நீக்க வேண்டு மென்றால் தலைவர் பேரில் முன்னதாக குற்ற சாட்டு போட்டு. அதை அவருக்கு அனுப்பி தமது விளக்கத்தைதரும்படி கேட்க வேண்டும். அந்த விளக்கம் இன்ஸ்பெக்டருக்கு திருப்தி தராவிட்டால் அந்த குற்றசாட்டை இன்ஸ்பெக்டர் தாலூக்கா தாசீல் தாரருக்கு 2-ம் உப பிரிவின் படிக்கு அனுப்புவார். பிறகு இந்த பிரிவில் கண்டபடிக்கு நடந்து கொள்ளவேண்டும். இந்த பிரிவும், 151ம் ஒரே பிரிவு மாதிரியானவை. இங்கு சொல்லிய குறிப்பு யாவற்றையும் பிரிவு 151-க்கு உபயோகித்துகொள்ளவும்.

பி. 150 (1) வேண்டு மென்றே நிறை வேற்றாமல் போனாலும். அல்லது மறுத்தாலும்,—அதிகாரங்களை துஷ் பிரயோக படுத்தினாலும். நோடீஸ் கொடுக்கவேண்டும்.—சட்டத்துக்கும், விதிகளுக்கும், உப-சட்டங்களுக்கும் ஒத்து இல்லாமைகளாக இருக்க வேண்டும். அப்போது தான் தலைவரை நீக்கலாம் என்ற பிரச்னை எழும்புகிறது. ஒரு தலைவர் ஒரு கட்சிக்கு சேர்ந்தவர், தன்கட்சியையே பலப்படுத்தப் பார்க்கிறார், அரசாங்கத்தை பற்றியும் அதின் உத்தியோகஸ்தர்களை பற்றியும் பத்திரிகைகளுக்கு கண்டித்து எழுதுகிறார், அரசாங்கத்தாரிடமிருந்து உள்வழியாக சங்கதிகளை அறிந்து கொள்ளுகிறார் என்ற காரணங்களை கொண்டு ஒரு தலைவரையாவது, உப-தலைவரையாவது அவருடைய பதவியிலிருந்து நீக்கக் கூடாது. அரசாங்கமோ அல்லது இன்ஸ்பெக்டரோ அப்படி நீக்க பிரயத்தனம் செய்தால் சிவில் கோர்ட்டுகள் அந்த உத்தரவை ரத்து செய்யலாம். [சேலம் விஜயராகவாசாரி-எ. செக்ரட்ரி ஆப் ஸ்டெட்; 7 Mad. 466, (F. B.)]

அதிகாரங்களை துஷ் பிரயோகப் படுத்துவது.—ஒரு தலைவர் ஒரு காரியம் செய்ய அதிகாரம் இருக்கும் போது அதை கொண்டு, செய்ய தகாத காரியத்தை தனக்கு அதிகாரம் உள்ளதாக எண்பித்து செய்யும் காரியமாகும். [எம். ஜி. பர்ஷின் குறித்து, A. I. R. 1936 R. 11 (12).

நோடீஸ் மூலமாக விளக்கம் கேழ்க வேண்டும்:—அம்மாதிரி நோடீஸ் கொடுக்க தவறிவிட்டால் இந்த மொத்த காரியமும் சட்ட விரோத மானதாகும் [செல்வ பெருமாள் -எ.-செக்ட்ரி ஆப் ஸ்டேட். 7. M. L. J. 245=6 I. C. 604=1910 M. W. N. 271].

தவறுதல்களுக்கும் செய்கைகளுக்கும் விளக்கத்தை தருவது,—பத்து என்று காட்டிய தவறுதல்களில் ஏழு மாத்திரம் ருசுவாகிவிட்டது அம்மாதிரி உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று மனு போட்டுக் கொண்டதில், ஒரு தவறுதல் ருசுவானாலும் போது மென்று கோர்ட்டு தீர்ப்பு செய்தது. [சையட் மகமட்-எ-இன்ஸ்பெக்டர் ஆப் முனிசிபல் கவுன்சில் 1936. M. W. N. 1156=A. I. R. 1937. M. 80.]

பி. 150 (13) ஒருக்கால், இன்ஸ்பெக்டரின் பிரேரணையை பஞ்சாயத்து ஒத்து கொள்ளா விட்டால், அது இன்ஸ் பெக்டருடைய அபிப்ராயத்திற்கு விரோதமாக யிருந்தாலும், அவர் தலைவரையோ. உபதலைவரையோ நீக்க சக்தி அற்றவராக இருக்கிறார். அதற்காக அவர் தலைவரும், உபதலைவரும் உள்பட மொத்த பஞ்சாயத்தையும் பிரிவு 154 படிக்கு கலைத்துவிட வேண்டும் என்று அரசாங்கத்திற்கு எழுதியதின் பேரில், அரசாங்கமும் மொத்த பஞ்சாயத்தையும் கலைத்து விடக்கூடும்.

அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனரைப் பதவியிலிருந்து நீக்குவது.

151. (1) அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனர் இச் சட்டத்தின் அல்லது அதன்படிக்கான விதிகள், சகாயச் சட்டங்கள், ரெகுலேஷன்கள் அல்லது சட்டபூர்வமான எந்த உத்தரவுகளின் ஷரத்துக்களையாவது வேண்டுமென்றே நிறைவேற்றாமல் போனாலும் அல்லது நிறைவேற்ற மறுத்தாலும் அவைகளுக்கு கீழ்படியாவிட்டாலும். அல்லது தம்மிடம் சங்கிரமித்துள்ள அதிகாரங்களைத் துஷ்பிரயோகப்படுத்தினாலும், அரசாங்கம் எழுதிய நோட்டிஸ் மூலமாக, சந்தர்ப்பத்துக்கேற்ப, அக்கிராசனரை அல்லது உப அக்கிராசனரைக் குறிப்பிட்ட ஒரு தேதிக்குள் அந்த நோட்டிஸில சொல்லியிருக்கிற தவறுதல்களுக்கும் அல்லது செய்கைகளுக்கும் தமது விளக்கத்தைத் தரும்படிக் கேட்கவேண்டும்.

(2) மேற்படி விளக்கம் குறிப்பிட்ட தேதிக்குள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்து, அவ் விளக்கம் திருப்திகரமாயிருக்கிறதென்று அரசாங்கத்தார் கருதினல், அரசாங்கத்தார் மேற்படி நோட்டிஸ் சம்பந்தமாக மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. குறிப்பிட்ட தேதிக்குள் விளக்கம் எதுவும் பெற்றுக் கொள்ளப்படாவிட்டால் அல்லது பெற்றுக்கொண்ட விளக்கம் திருப்திகரமாயில்லையென்று தாங்கள் கருதினலும், அரசாங்கத்தார் (1) உட் பிரிவில் குறிப்பிட்டுள்ள நோட்டிஸின் நகல் ஒன்றையும் அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனரின் விளக்கத்தையும் சேர்த்து சம்பந்தப்பட்ட டிவிஷனின் ரெவினியு டிவிஷனல் ஆபீஸருக்கு அனுப்பி வைப்பதுடன், மேற்படி அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான பிரேரணை ஒன்றையும் சேர்த்து அவருக்கு அனுப்பி வைக்கவும்வேண்டும்.

(3) பின்னர் ரெவினியு டிவிஷனல் ஆபீஸர் மேற்படி நோட்டிசையும் அதற்கு விளக்கம் ஏதாகிலும் வந்திருந்தால் அதையும் அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான பிரேரணையும் பற்றி ஆலோசிப்பதற்காக ஒரு கூட்டம் கூட்டவேண்டும். இக் கூட்டம் ரெவினியு டிவிஷனல் ஆபீசர் நியமிக்கக் கூடிய காலத்தில் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அலுவலகத்தில் நடைபெற வேண்டும்.

(4) இக் கூட்டத்தைப் பற்றிய நோட்டிஸின் நகல் ஒன்றை சம்பந்தப்பட்ட அக்கிராசனரிடம் அல்லது உப அக்கிராசனரிடம் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அங்கத்தினர்கள் எல்லோரிடமும் மேற்படி கூட்டத் தேதிக்குக் குறைந்தபட்சம் ஏழு தினங்களுக்கு முன்பாவது ரெவினியு டிவிஷனல் ஆபீஸர் சேர்ப்பிக்கச் செய்ய வேண்டும்.

(5) இப் பிரிவின்படிக் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு ரெவினியு டிவிஷனல் ஆபீஸர் தலைமை வகிக்கவேண்டும். அவரைத் தவிர வேறு யாரும் அதற்குத் தலைமை வகிக்கக்கூடாது. அக் கூட்டத்திற்காக நியமிக்கப்பட்ட மணி நேரத்திலிருந்து அரை மணி நேரத்திற்குள் ரெவினியு டிவிஷனல் ஆபீசர் அக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க வரவில்லையென்றுல் (6) உட் பிரிவின்கீழ் ரெவியினியு டிவிஷனல் ஆபீசர் நியமித்து, அங்கத்தினருக்குத் தெரிவிக்க வேண்டிய ஒரு காலத்திற்கு அக் கூட்டம் தள்ளிப் போடப்படும்,

(6) மேற்படி சட்டத்திற்கு ரெவினியு டிவிஷனல் ஆபீஸர் தலைமை வகிக்க முடியவில்லையென்றுல், அவர் அதற்கான காரணங்களை எழுதி வைத்த பிறகு தாம் நியமிக்கக் கூடிய இன்னொரு காலத்திற்கு அக் கூட்டத்தை ஒத்திப்போடலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட தேதி (3) உட் பிரிவின் கீழ் மேற்படி கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து 30 தினங்களுக்குமேல் போகக்கூடாது. ஒத்திப் போட்ட கூட்டம் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட காலத்தைக் குறித்து, அங்கத்தினர்களுக்கு ஏழு தினங்களுக்குக் குறையாத நோட்டிஸ் கொடுக்கவேண்டும்.

(7) (5), (6) உட் பிரிவுகளில் ஏற்பாடு செய்திருக்கிறபடியன்றி மற்றப்படி, மேற்படி நோட்டிஸையும் அதற்கு விளக்கம் ஏதாகிலும் வந்திருந்தால் அதையும் அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனர் பதவியிலிருந்து நீக்குவதற்கான பிரேரணையை ஆலோசனை செய்வதற்காக இப் பிரிவின் படிக் கூட்டப்பட்ட ஒரு கூட்டம் எந்தக் காரணத்தை முன்னிட்டு ஒத்திப் போடப்படலாகாது.

(8) இப் பிரிவின்படிக் கூட்டப்படுகின்ற கூட்டம் தொடங்கியவுடன் ரெவினியு, டிவிஷனல் ஆபீஸர் அரசாங்கத்தார் பிறப்பித்த நோட்டிஸையும் சந்தர்ப்பத்துக்கேற்ப அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனர் அதற்கு விளக்கம் ஏதாகிலும் தந்திருந்தால் அதையும் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு வாசித்துக் காட்டவேண்டும். இந்த நோட்டிஸையும் விளக்கத்தையும் ஆலோசிப்பதற்காகவென்றே இக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

(9) இப் பிரிவின்படிக்கான எந்தக் கூட்டத்திலும் சர்ச்சை எதையும் கிளப்பக் கூடாது,

(10) ரெவினியு டிவிஷனல் ஆபீஸர் இந்த நோட்டீஸ் அல்லது விளக்கத்தின் தாராதரங்களைத் குறித்து பேசவுங்கூடாது, அக் கூட்டத்தில் வாக்களிக்க அவருக்கு உரிமையும் கிடையாது.

(11) அரசாங்கத்தாரின் பிரேரணையை ஏற்றுக்கொண்டு அல்லது நிராகரித்து பஞ்சாயத்துயூனியன் கவுன்ஸில் செய்கிற தீர்மானம் அந்தக் கூட்டம் சம்பந்தமான நடவடிக்கைக் குறிப்புப் புத்தகத்தில் கிரமமாக எழுதிவைக்கப் படவேண்டும். இந்த நடவடிக்கை ஒன்றைக் கூட்டம் முடிந்தவுடன் ரெவினியு டிவிஷனல் ஆபீஸர் அரசாங்கத்தாருக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

(12) மேற்படி கூட்டத்தில் அப் பிரேரணையை பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் ஏற்றுக்கொண்டால் அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாகச் சந்தர்ப்பத்துக்கேற்ப அக்கிராசனர் அல்லது உப-அக்கிராசனரை பதவியிலிருந்து நீக்கவேண்டும்.

(13). (12) உட் பிரிவின்படி அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனர் பதவியிலிருந்து தம்மை நீக்கி விளம்பரம் பிறப்பிக்கப் பட்டிருக்கிற யாதொரு நபர் மேற்படி பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அடுத்த சாதாரண தேர்தல்களை குறித்து நிர்ணயிக்கப்பட்ட விதமாக விளம்பரம் பிரசுரிக்கப்படுகிற தேதி அல்லது அந்த விளம்பரத்தில் குறிப்பட்டுள்ள தேதியிலிருந்து ஒரே வருஷம் பூர்த்தியாகியுள்ள தேதி இவைகளில் எது முந்தியதாயிருக்கிறதோ அந்தத் தேதி வரையில் அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பெறுவதற்கு அல்லது அப் பதவிகளில் யாதொன்றை வகிப்பதற்கு அருகதையற்றவராவார்.

குறிப்பு

பொது:—இந்த பிரிவு 150-யை போன்றது. இங்கே "இன்ஸ்பெக்டரு"க்கு பதில் "அரசாங்கமும்"—"தலைவர்-உபதலைவர்"க்கு பதில் "அக்கிராசனரையும்—உப அக்ராசனரையும்"—"தாசில்தாரு"க்கு பதிலாக "ரிவின்யூ டிவிஷனல் ஆபீஸரையும்" கண்டிருக்கிறது. மீதிக்கு பிரிவு 150 கீழ் யுள்ள குறிப்புகளை பார்க்கவும்.

பஞ்சாயத்துத் தலைவர் அல்லது உபதலைவர் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம்

152. (1) இப் பிரிவின் ஷரத்துக்களுக்குட்பட்டு, ஒரு பஞ்சாயத்துத் தலைவர் அல்லது உப தலைவர் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கிற பிரேரணை ஒன்றை இதில் சொல்லியிருக்கிற நடைமுறையை அனுசரித்துக் கொண்டு வரலாம்.

(2) பிரஸ்தாப பஞ்சாயத்தில் எத்தனை அங்கத்தினர்கள் இருக்கலாமென்று அனுமதிக்கப்பட்டிருக்கிறதோ அவர்களில் பேர் பாதிக்குக்குறையாமல் மேற்படி பிரேரணையில் கையெழுத்துச் செய்து அந்தப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கான உத்தேசத்தைப் பற்றிய எழுத்து மூலமான நோட்டிஸையும், கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள பிரேரணையின் நகல் ஒன்றையும், சந்தர்ப்பத்துக்கேற்ப மேற்படி தலைவர் அல்லது உப தலைவருக்கு எதிராக சாட்டப்படுகிற குற்றச்சாட்டுகள் சம்பந்தமான எழுத்து மூலமான ஸ்டேட்மெண்ட் ஒன்றையும் சேர்த்து மேற்படி நோட்டீஸில் கையெழுத்திடுகிற பஞ்சாயத்து அங்கத்தினர்களில் யாராவது இரண்டு பேர் பிரஸ்தாப தாலுகா தாசில்தாரிடம் அதை நேரில் கொண்டு போய்கொடுக்கவேண்டும்,

(3) தாசில்தார் மேற்படி குற்றச்சாட்டுகள் கண்டுள்ள ஸ்டேட்மெண்டின் நகல் ஒன்றையும் கூட்டம் சம்பந்தமான நோட்டிஸையும் சேர்த்து சம்பந்தப்பட்ட தலைவர் அல்லது உப தலைவரிடம் சேர்ப்பிக்கச் செய்யவேண்டும்; தலைவர் அல்லது உப தலைவர் மேற்படி குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் முகமான ஸ்டேட்மென்ட்

ஒன்றை. தலைவர் அல்லது உப தலைவர் மேற்படி நோட்டீஸைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டுமென்றும் கேட்கப்பெற வேண்டும்.

(4) பின்னர் தாசில்தார் மேற்படி பிரேரணையைப் பற்றி ஆலோசிப்பதற்காக ஒரு கூட்டம் கூட்டவேண்டும். இக் கூட்டம் அவர் நியமிக்கிற காலத்தில் பஞ்சாயத்து அலுவலகத்தில் நடைபெறவேண்டும்.

(5) தாசில்தார் மேற்படி சட்டத்தைப் பற்றியும் அதற்காக நியமிக்கப்பட்ட காலத்தைப் பற்றியும் தெளிவாகப் பதினைந்து தினங்களுக்குக் குறையாமல் நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

(6) இப் பிரிவின்படிக் கூட்டப்பட்டகூட்டத்திற்கு தாசில்தார் தலைமை வகிக்க வேண்டும். அவரைத் தவிர வேறு யாரும் அதற்குத் தலைமை வகிக்கக்கூடாது. கூட்டத்திற்காக நியமிக்கப்பட்ட நேரத்திலிருந்து அரைமணி நேரத்திற்குள் தாசில்தார் அக் கூட்டத்திற்கு தலைமை வகிக்க வரவில்லையென்றால், (7) உட்பிரிவின் தாசில்தார் நியமித்த அங்கத்தினர்களுக்கு அறிவிக்க வேண்டிய ஒரு காலத்திற்கு அக்கூட்டம் தள்ளிப் போடப்படும்.

(7) மேற்படி தாசில்தார் கூட்டத்திற்கு தலைமை வகிக்க முடியவில்லையென்றால், அதற்கான காரணங்களைத் தாம் எழுதிவைத்த பிறகு தாம் நியமிக்கக்கூடிய இன்னொரு காலத்திற்கு அவர் அக் கூட்டத்தை ஒத்திப் போடலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட தேதியானது (3) உட்பிரிவின் கீழ் மேற்படி கூட்டத்திற்கு என நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குமேல் போகக்கூடாது. ஒத்திப்போட்ட கூட்டம் சம்பந்தமாய் நியமிக்கப்பட்ட காலத்தைக் குறித்து அங்கத்தினர்களுக்குத் தெளிவாக ஏழு தினங்களுக்குக் குறையாமல் நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

(8) (6), (7) உட்பிரிவுகளில் ஏற்பாடு செய்திருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, இப் பிரிவின்படிக்கான பிரேரணை ஒன்றை ஆலோசிப்பதற்காகக் கூட்டப்பட்ட ஒரு கூட்டம் எந்தக் காரணத்தை முன்னிட்டும் தள்ளிப்போடப்படலாகாது.

(9) இப்பிரிவின்படிக் கூட்டப்பட்ட கூட்டம் தொடங்கியவுடன் தாசில்தார் எந்தப் பிரேரணையை ஆலோசிப்பதற்காகவென்று அக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளதோ அந்தப் பிரேரணையையும், குற்றச்சாட்டுகள் சம்பந்தமான ஸ்டேட்மெண்டையும் தலைவர் அல்லது உப தலைவர் ஷ குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்குமுகமாக எழுத்து மூலமான ஸ்டேட்மெண்ட் ஒன்றைக் கொடுத்திருந்தால் அதையும் பஞ்சாயத்துக்கு வாசித்துக் காட்ட வேண்டும்.

(10) இந்தப் பிரிவின்படிக்கான யாதொரு பிரேரணையின் பேரில் சர்ச்சை எதையும் கிளப்பக்கூடாது.

(11) தாசில்தார் இந்தப் பிரேரணையின் தராதரங்களைக் குறித்துப் பேசவும் கூடாது. அதன்பேரில் வாக்களிக்க அவருக்கு உரிமையும் கிடையாது.

(12) ஷ பிரேரணையின் ஒரு நகல் சகிதமாக ஷ கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புக்களைப்பற்றிய நகல் ஒன்றையும் அந்தப் பிரேரணையின்மீது எடுத்தவாக்குகளின் முடிவையும் தாசில்தார் அக் கூட்டம் முடிவடைந்தவுடன் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

(13) பஞ்சாயத்தில் அனுமதிக்கப்பட்ட அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாமல் ஷ பிரேரணையை ஆதரித்து அது நிறைவேற்றப்பட்டால், இன்ஸ்பெக்டர் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக சந்தர்ப்பத்துக்கேற்ப ஷ பஞ்சாயத்தின் தலைவர் அல்லது உபதலைவரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும்.

(14) இப் பிரேரணை மேற்சொன்ன பிரகாரம் பெரும்பாலாரால் நிறைவேற்றப் படாவிட்டாலும், (13) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள க்வோரம் (நிர்வாகச் சிற்றெண்)

இல்லாததால் அக் கூட்டம் நடைபெறமுடியாவிட்டாலும், அதே தலைவர் அல்லது உப தலைவர்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கிற அதற்கடுத்த பிரேரணை சம்பந்தமாக இந்தக் கூட்டத்தின் தேதியிலிருந்து ஆறுமாதம் முடிகிறவரையில் நோட்டிஸ் எதுவும் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(15) இப் பிரிவின்படிக்கான பிரேரணை பற்றிய நோட்டீஸ் எதுவும் சந்தர்ப்பத்துக்கேற்ப, தலைவர் அல்லது உபதலைவர் பதவி ஏற்றதிலிருந்து ஆறுமாதங்களுக்குள் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு

1950ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு முந்தி பஞ்சாயத்து தலைவர்கள் மீதிலும், உபதலைவர்கள் மீதிலும் நம்பிக்கை இல்லாத தீர்மானங்களை அங்கத்தினர்கள் கொண்டுவர அவர்களுக்கு அதிகாரம் இருந்தது. பிறகு 1950-ஆம் ஆண்டு திருத்திய சட்டம் அதை எடுத்து விட்டது. அதினால் சில தலைவர்களும், உபதலைவர்களும், பொது நலனுக்காக கவனம் செலுத்தாமல் சுய நலனை தேடி கொண்டார்கள். அந்த ஊழலை போக்கடிக்க இந்த பிரிவை மறுபடியும் நுழைக்கப்பட்டிருக்கிறது. சில சமயங்களில் ராஜாங்க கக்ஷி பேதங்களால், நல்ல கருத்துள்ள தலைவர்கள் மீதிலும், உப தலைவர் மீதிலும் அபாண்டமான பழிகளையும் கூறுவதுண்டு. இவைகளை எல்லாம் பொருத்துக் கொண்டு தேச நலனுக்காக தலைவர்களும், உபதலைவர்களும் சேவை செய்யவேண்டும்.

பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

153. (1) இப் பிரிவின் ஷரத்துக்களுக்குட்பட்டு ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனர் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கிற பிரேரணை ஒன்றை இதில் சொல்லி யிருக்கிற நடைமுறையை அனுசரித்துக் கொண்டு வரலாம்.

(2) பிரஸ்தாப பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலில் எத்தனை அங்கத்தினர்கள் இருக்கலாமென்று அனுமதிக்கப்பட்டிருந்ததோ அவர்களின் பேர் பாதிக்குப் பேருக்குக் குறையாமல் ஷை பிரேரணையில் கையெழுத்துச் செய்து அந்தப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கான உத்தேசத்தைப் பற்றிய எழுத்து மூலமான நோட்டிசையும், கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள பிரேரணையின் நகல் ஒன்றையும், சந்தர்ப்பத்துக்கேற்ப, ஷை அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனருக்கு எதிராகச் சாட்டப்படுகிற குற்றச்சாட்டுகள் சம்பந்தமான எழுத்து மூலமான ஸ்டேட்மென்ட் ஒன்றையும் சேர்த்து ஷை நோட்டீஸில் கையெழுத்திடுகிற பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அங்கத்தினர்களில் யாராவது இரண்டு பேர் பிரஸ்தாப டிவிஷனின் ரெவினியூ டிவிஷனல் ஆபீஸரிடம் அதை நேரில் கொண்டுபோய்க் கொடுக்கவேண்டும்.

(3) ரெவினியு டிவிஷனல் ஆபீஸர், ஷை குற்றச்சாட்டுகள் கண்டுள்ள ஸ்டேட்மெண்டின் நகல் ஒன்றையும், கூட்டம் சம்பந்தமான நோட்டீஸையும் சேர்த்து சம்பந்தப்பட்ட அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனரிடம் சேர்ப்பிக்கச் செய்யவேண்டும்; அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனர் ஷை குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கிற ஸ்டேட்மென்ட் ஒன்றை அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனர் ஷை நோட்டிஸைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அனுப்பி வைக்கவேண்டுமென்றும் கேட்கப்படவேண்டும்.

(4) பின்னர் ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர், ஷை பிரேரணையைப் பற்றி ஆலோசிப்பதற்காக ஒரு கூட்டம் கூட்டவேண்டும்; இக் கூட்டம் அவர் நியமிக்கிற காலத்தில் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அலுவலகத்தில் நடைபெற வேண்டும்.

(5) ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர். ஷை கூட்டத்தைப் பற்றியும் அதற்காக நியமிக்கப்பட்ட காலத்தைப் பற்றியும் தெளிவாகப் பதினைந்து தினங்களுக்குக் குறையாமல் நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

(6) இப்பிரிவின்படிக் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் தலைமை வகிக்க வேண்டும்; அவரைத் தவிர வேறு யாரும் அதற்கு தலைமை

வகிக்கக்கூடாது. ஷை கூட்டத்திற்காக நியமிக்கப்பட்ட நேரத்திலிருந்து அரைமணி நேரத்திற்குள் ரெவினியு டிவிஷனல் ஆபீஸர் அக்கூட்டத்திற்கு தலைமை வகிக்க வரவில்லையென்றால், (7) உட்பிரிவின்படி ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் நியமித்து அங்கத்தினர்களுக்கு அறிவிக்கப்படவேண்டிய காலத்திற்கு அக் கூட்டம் தள்ளிப் போடப்படும்.

(7) ஷை கூட்டத்திற்கு ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் தலைமை வகிக்க முடியவில்லையென்றால், அதற்கான காரணங்களையும் எழுதிவைத்த பிறகு, தாம் நியமிக்கக்கூடிய இன்னொரு காலத்திற்கு அவர் அக் கூட்டத்தை ஒத்திப்போடலாம் அவ்வாறு நியமிக்கப்பட்ட தேதியானது (3) உட்பிரிவின்கீழ் ஷை சட்டத்திற்கென நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குமேல் போகக்கூடாது. ஒத்திப்போட்ட கூட்டம் சம்பந்தமாய் நியமிக்கப்பட்ட காலத்தைக்குறித்து அங்கத்தினர்களுக்கு தெளிவாக ஏழு தினங்களுக்குக் குறையாமல் நோட்டீஸ் கொடுக்க வேண்டும்.

(8). (6). (7). உட்பிரிவுகளில் ஏற்பாடு செய்திருக்கிறபடிக்கன்றி மற்றப்படி இப் பிரிவின்படிக்கான பிரேரணை ஒன்றே ஆலோசிப்பதற்காகக் கூட்டப்பட்ட ஒரு கூட்டம் எந்தக் காரணத்தை முன்னிட்டும் தள்ளிப் போடலாகாது.

(9) இப் பிரிவின்படிக் கூட்டப்பட்ட கூட்டம் தொடங்கியவுடன் ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் எந்தப் பிரேரணையை ஆலோசிப்பதற்காக வென்று அக்கூட்டம் கூட்டப்பட்டுள்ளதோ அந்தப் பிரேரணையையும், குற்றச்சாட்டுகள் சம்பந்தமான ஸ்டேட்மெண்டை அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனர் ஷை குற்றச் சாட்டுகளுக்குப் பதிலளிக்கு முகமாக ஸ்டேட்மென்ட் ஒன்றைக் கொடுத்திருந்தால் அதையும் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு வாசித்துக் காட்ட வேண்டும்.

(10) இந்தப் பிரிவின்படிக்கான யாதொரு பிரேரணையின் பேரில் சர்ச்சை எதையும் கிளப்பக்கூடாது.

(11) ரெவினியு டிவிஷனல் ஆபீஸர் இந்தப் பிரேரணையின் தராதரங்களைக் குறித்துப் பேசவும் கூடாது. அதன் பேரில் வாக்களிக்க அவருக்கு உரிமையும் கிடையாது.

(12) ஷை பிரேரணையின் ஒரு நல்ல சகிதமாக, ஷை கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பைப் பற்றிய நகல் ஒன்றையும் அந்தப் பிரேரணையின் மீது எடுத்த வாக்குகளின் முடிவையும் ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் அக் கூட்டம் முடிவடைந்தவுடன் அரசாங்கத்தாருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

(13) பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலில் அனுமதிக்கப்பட்ட அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாமல் ஷை பிரேரணையை ஆதரித்து அது நிறைவேற்றப்பட்டால், அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக, சந்தர்ப்பத்துக்கேற்ப ஷை பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும்.

(14) இப் பிரேரணை மேற்சொன்ன பிரகாரம் பெரும்பாலாரால் நிறைவேற்றப்படாவிட்டால், (13) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள க்வோரம் இல்லாததால் அக்கூட்டம் நடைபெற முடியாவிட்டாலும், அதே அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனர் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கிற அதற்கடுத்தப் பிரேரணை சம்பந்தமாக இந்தக் கூட்டத்தின் தேதியிலிருந்து ஆறுமாதம் முடிகிறவரையில் நோட்டிஸ் எதுவும் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(15) இப் பிரிவின்படிக்கான பிரேரணைபற்றிய நோட்டிஸ் எதுவும், சந்தர்ப்பத்துக்கேற்ப, அக்கிராசனர் அல்லது உப அக்கிராசனர் பதவி யேற்றதிலிருந்து ஆறு மாதங்களுக்குள் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு

இந்த பிரிவு 152-யை போன்றது. இங்கே தாசில்தாரருக்கு பதிலாக ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் என்று படித்துக்கொள்ள வேண்டும்.

பஞ்சாயத்துக்களைக் கலைப்பது

154. (1) யாதொரு பஞ்சாயத்துச் சட்டபடி அதற்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்யத் தகுதியற்றதென்றோ அல்லது அவற்றைச் செய்ய இடைவிடாமல் தவறிக்கொண்டேயிருக்கிறதென்றோ அல்லது தனக்குள்ள அதிகாரங்களை மிகையாகப் பிரயோகிக்கப்படுத்துகிற தென்றோ அல்லது துஷ்பிரயோகப்படுத்துகிற தென்றோ அரசாங்கத்தார் கருதினால்: அவர்கள் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக,

(a) குறிப்பிட்ட ஒரு தேதியிலிருந்து ஷை பஞ்சாயத்தைக் கலைத்து விடலாம் மேலும்,

(b) கலைத்து விட்ட தேதியிலிருந்து ஒரு வருஷத்துக்கு மேற்படாத கால அளவுக்குள் மறுபடியும் அப் பஞ்சாயத்தை அமைக்க கட்டளையிடலாம்.

(2) (1) உட்பிரிவின்படி விளம்பரம் ஒன்றைப் பிரசுரிப்பதற்கு முன், அரசாங்கத்தார் தாங்கள் அவ்வாறு செய்ய உத்தேசித்துள்ளதற்கான காரணங்களைப் பஞ்சாயத்துக்குத் தெரியப்படுத்துவதுடன், அந்த உத்தேசத்துக்கெதிராகக் காரணம் காட்டும்படி பஞ்சாயத்துக்கு நியாயமான ஒரு கால அளவை நிச்சயித்து அந்தப் பஞ்சாயத்து விளக்கங்கள் அல்லது ஆட்சேபக் குறிப்புகள் எவற்றையேனும் அனுப்பினால் அவற்றை ஆலோசிக்கவும் வேண்டும்.

(3) (1) உட்பிரிவின் கீழ் ஒரு பஞ்சாயத்தைக் கலைப்பதற்காக நிச்சயிக்கப்பட்ட தேதியன்று அதன் அங்கத்தினர்கள் எல்லாரும் அதன் தலைவர், உபதலைவர் ஆகியவர்களும் தங்கள் தங்கள் பதவிகளை உடனடியாகக் காலி செய்து விட்டிருப்பதாகக் கருதப்படுவார்கள். அதன் காரணமாக பிரிவு 11-ன் (2) வது உபபிரிவு பிரயோகப்படும்.

(4) பிரிவு 19-ன் (1)-வது உபபிரிவில் எது இருந்தாலும் அதற்கு பாதகம் இல்லாமல், ஒருக்கால் கலைக்கப்பட்ட பஞ்சாயத்தின் தலைவர், உபதலைவர் அல்லது அங்கத்தினர்—பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அக்ராசனர், உப அக்ராசனர் அல்லது அங்கத்தினராக இருப்பாராகில், அவர், அதன் பயனாக கலைக்கப்பட்ட தேதியிலிருந்து அப்படிப்பட்ட அக்ராசனராக அல்லது உப அக்ராசனராக அல்லது அங்கத்தினராக இருக்கும் பதவியை காலி செய்தவர் ஆக கருதப்படுவார்.

(5) கலைத்த பிறகு மீண்டும் பஞ்சாயத்தை அமைக்கப்பட்டதும், அது கலைக்கப்பட்ட காலத்தில் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலிடம் சேர்ந்த அப்பஞ்சாயத்தின் ஆஸ்தியையும், ஸ்தாபனங்களையும் அதினிடம் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் மாற்றி விடவேண்டும் என்றும் அவைகளுக்கு சம்பந்தமான கடன்களை பஞ்சாயத்து செலுத்த வேண்டுமென்றும் அரசாங்கம் தக்கபடிக்கு உத்திரவிடவேண்டும்.

(6) மீண்டும் அமைக்கப்பட்ட ஒரு பஞ்சாயத்தின் அங்கத்தினர்கள் மீண்டும் பஞ்சாயத்தை அமைப்பதற்காக நிச்சயிக்கப்பட்ட தேதியன்று தங்கள் பதவிகளை வகிக்க தொடங்குவார்கள். அவர்களுடைய பதவிக்கால அளவு அரசாங்கத்தார் எந்த வருஷம் எந்த தேதி என்று நிச்சயிக்கிறார்களோ அந்த காலத்தில் முடிவாகும்.

குறிப்பு

பஞ்சாயத்துகளை கலைப்பது.—"பஞ்சாயத்து" குறித்து பூர்த்தியாக பிரிவு 8-ன் குறிப்பில் 34 தொகுதிகளை பக்கங்கள் 38-50 களில் யுள்ளதை பார்க்கவும். ஒரு தலைவரை அல்லது உப தலைவரை நீக்கினால் அவர்களுடன் அது முடிவாகும். அவர்களுக்கு பதிலாக புதிய தலைவர்களையும், உப-தலைவர்களையும் ஏற்படுத்தி கொள்ளலாம். அப்போதும் பஞ்சாயத்தின் ஆக்ஷி கிராமத்தாரின் பிரதிநிதிகள் ஆகிய அங்கத்தினர்களிடமே யிருக்கும். ஒரு பஞ்சாயத்தை கலைத்து விட்டால், அதில் யாதொரு கிராம வாசியும், (மீண்டும் பஞ்சாயத்து அமைக்கப்படும் வரையில்) அதின் ஆக்ஷியில் அங்கத்தினர் ஹோதாவில், பங்கு எடுத்து

கொள்ள முடியாது. பஞ்சாயத்தை கலைப்பது என்றால் அந்த பஞ்சாயத்து பிரதேசத்தி லுள்ள வாசிகள் மொத்தத்தில் சரியானவர்கள் என்று ஒரு குற்றச் சாட்டாக கூறலாம், இந்த நிந்தனைக்கு ஆள் ஆகாமல் பஞ்சாயத்தை கலைப்பதை இல்லாமல் செய்து கொள்வதே நல மாகும். பஞ்சாயத்தை விரும்பாத சில எதிரி கக்ஷிகாரர்கள் ஒன்று சேர்ந்தாலும் பஞ்சாயத் துக்கு மெஜாரிடி (அதிக) அங்கத்தினர்களின் பாதுகாப்பு இருந்து அது சட்டத்தின் படிக்கு நடந்து கொண்டு வரும் வரையில், அதை அசைக்க முடியாது. இம்மாதிரியான திட்டம் இந்திய அரசியலில் ஏற்பட்ட பிறகுதான் நம் இந்தியா ஜனநாயகத்தின் அடிவாரத்தில் சேர்ந்த தாகும்.

பொது. கலைத்த காலத்தில் பெயரில் தவறுதல்கள் ஏற்பட்டாலும் அதைத் திருத்திக் கொள்ளலாம். [லாகூர் முனிஸிபாலிடி-எ-தௌத்ராம், A. I. R. 1942 F. C. 14 :: ராமச் சந்திரா-எ-பாட்னா முனிஸிபாலிடி A. I. R. 1937 P. 588]. பஞ்சாயத்தைக் கலைத்த காலத்தி லும், மீண்டும் அமைத்தகாலத்திலும் அதனுடைய சொத்துக்களும், ஆஸ்தியும் முன்னிருந்த படியே இருக்கும். [ரங்கா-எ.-கும்பகோணம் முனிஸிபாலிடி (1906) 29 M. 539 (544) :: வெங் கண்ணா-எ-முனகபாகா பஞ்சாயத்து போர்டு A. I. R. 1943 M. 508.]

பி. 154 (2) சமாதானங்களைப் பற்றியாகிலும் ஆட்சேபணையைப் பற்றியாகிலும் :— கவர்ன்மெண்டார் சமாதானங்களை அல்லது ஆட்சேபணைகளைத் தெரிவிக்கும்படி கவர்ன்மெண் டார் பஞ்சாயத்திற்கு நோட்டீஸு கொடாமல் பஞ்சாயத்தைக் கலைத்தால் அது சட்டவிரோத மாகும். [செல்வ பெருமாள்-எ-செக்ரிடெரி ஆப் ஸ்டேட், 1910 M. W. N. 271] இதனால் இன்ஸ்பெக்டர் நீக்கும் உத்திரவில் காரணங்களை தெரிவிக்க வேண்டுமென்று கட்டாயம் கிடையாது. [கூடாரவல்லி பஞ்சாயத்துபோர்டு-எ-இன்ஸ்பெக்டர், 1952 M. W. N. 91=65 L. W. 186.]

பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களைக் கலைப்பது

155. (1) யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் சட்டபடி அதற்கு விதிக் கப்பட்டுள்ள கடமைகளைச் செய்யத் தகுதியற்றதென்றோ அல் லது அவற்றைச் செய்ய இடைவிடாமல் தவறிக்கொண்டே யிருக்கிறதென்றோ அல்லது தனக்குள்ள அதிகாரங்களை மிகையாகப் பிரயோகிக்கிறதென்றோ அல்லது துஷ்பிரயோ கப்படுகிறதென்றோ அரசாங்கத்தார் கருதினால், அவர்கள் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக—

(a) குறிப்பிட்ட ஒரு தேதியிலிருந்து ஷை பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலைக் கலைத்துவிடலாம் மேலும்,

(b) கலைத்து விட்ட ஒரு தேதியிலிருந்து ஒரு வருஷத்துக்கு மேற்படாத கால அளவுக்குள் மறுபடியும் அப்பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலை அமைக்க கட்டளை யிடவேண்டும்.

(2) (1) உட்பிரிவின்படி விளம்பரம் ஒன்றைப் பிரசுரிப்பதற்குமுன் அரசாங்கத் தார் தாங்கள் அவ்வாறு செய்ய உத்தேசித்துள்ளதற்கான காரணங்களை பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்குத் தெரியப்படுத்துவதுடன் அந்த உத்தேசத்துக் கெதிராகக் காரணம் காட்டும்படி பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு நியாயமான ஒரு கால் அளவை நிச்சயித்து அந்த பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் விளக்கங்கள் அல்லது ஆட்சேபக் குறிப்புகள் எவற்றையேனும் அனுப்பினால் அவற்றை ஆலோசிக்கவும் வேண்டும்.

(3) (1) உட்பிரிவின் கீழ் ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலைக் கலைப்பதற் காக அல்லது ரத்து செய்வதற்காக நிச்சயிக்கப்பட்ட தேதியன்று அதன் அங்கத்தினர் கள் எல்லோரும் அதன் அக்கிராசனர், உபஅக்கிராசனர் ஆகியவர்களும் தங்கள் தங்கள் பதவிகளை உடனடியாகக் காலி செய்துவிட்டிருப்பதாகக் கருதப்படுவார்கள்.

(4) யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலைக் கலைப்பதற்கும் அதை மீண் டும் அமைப்பதற்கு மிடையே இடை வெளி ஏதேனும் இருந்தால் அந்த இடை வெளி யிலாவது சந்தர்ப்பத்துக்கேற்ப அதை கலைத்த கால அளவிலாவது இன்ஸ்பெக்டர் மேற்படி பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் மீண்டும் அமைக்கப்படுகிறவரையில் அந்தப்

பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கும் அதன் அக்கிராசனருக்குமுள்ள அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் யாதொரு நபரை நியமிக்கலாம்.

ஆனல், இந்த உட்பிரிவில் கண்ட ஷரத்துக்களின்கீழ் நியமிக்கப்பட்ட யாதொரு நபர் தாசில்தாரின் அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்தில் சர்க்கார் சேவையிலிருப்பவராக இருக்கவேண்டும்.

(5) மீண்டும் அமைக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அங்கத்தினர்கள் அதை மீண்டும் அமைப்பதற்காக நிச்சயிக்கப்பட்ட தேதி யன்று தங்கள் பதவிகளை வகிக்கத் தொடங்குவார்கள்.

(6) பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் ஒன்று கலைக்கப்பட்டால் அதை மீண்டும் அமைக்கிற தேதி வரையில் அரசாங்கத்தாரும், அதற்குப் பிறகு மேற்படி மீண்டும் அமைக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலும் முறையே அவ்வாறு கலைக்கப் படுகிற தேதியன்றும், அவ்வாறு மீண்டும் அமைக்கப்படுகிற தேதியன்றும் மேற்படி பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலிடம் இருந்த சகல ஆஸ்திகளை ஏற்றுக் கொள்ளவும் அதன் சகல பொறுப்புக்களுக்கும் உட்படவும் உரிமையுடையவர்களாவார்கள்.

குறிப்பு

இந்த பிரிவு, 154-ம் பிரிவை போன்றது.

பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்காகச் செயலாற்றுகிற அல்லது செயலாற்றத் தவறிப் போகிற அதிகாரிகளின் அதிகாரங்களும், பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் நிதி சம்பந்தமான பொறுப்பும்

156. இச் சட்டத்தின்படி யாதொரு பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் சார்பில் அரசாங்கத்தார் அல்லது இன்ஷ்பெக்டர் அல்லது வேறு யாதொரு நபர் சட்டபூர்வமான நடவடிக்கை எடுத்துக் கொண்டாலும் அல்லது எடுத்துக் கொள்ளத் தவறிப்போனலும், அவர்கள் அவர்களுக்கு அது காரியத்துக்காக வேண்டியிருக்கிற அதிகாரங்கள் உண்டு. மேலும், பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அல்லது அவற்றின் அதிகாரிகள் அல்லது ஊழியர்கள் எவர்களுக்குள்ள அதிகாரங்களைச் செலுத்துகிருர்களோ அவர்களுக்கு இச் சட்டத்தின் கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள அதே பாதுகாப்பையும் உடையவர்களாவார்கள் ; அன்றியும் அந்த அதிகாரங்களைச் செலுத்துவதனல் யாதொரு நபர் நஷ்ட விமோசனத்துக்குட்பட்டிருப்பாரானல் பிரஸ்தாப நடவடிக்கையைப் பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அல்லது அவற்றின் அதிகாரிகள் அல்லது ஊழியர்கள் எடுத்துக் கொண்டிருந்தால் எப்படியோ அப்படியே அதே அளவுக்கு பஞ்சாயத்து நிதியிலிருந்து அல்லது பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து அந்த நபரால் பிரதிபலன் தொகை வசூலித்துக் கொள்ளப்படத் தக்கதாகும்.

குறிப்பு

அரசாங்கத்தாரின் சிப்பந்திகள் அவசரத்துக்காக வேலை செய்யும்போது அவர்கள் எப்படி ஜவாப்தாரிகளாக இல்லையோ அதோ மாதிரியாக பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் கலைத்த போது ஏற்படுத்திய அதிகாரிகளும், பஞ்சாயத்துகளை கலைத்தபோது ஏற்படுத்திய அதிகாரிகளும் தங்கள் சொந்த ஹோதாவில் ஜவாப்தாரிகள் ஆகமாட்டார்கள். அவர்கள் வேலை செய்யும் காலத்தில் ஏதாவது கெடுதல் நேரிட்டால் அதற்கு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலும், பஞ்சாயத்தும், அவைகளின் நிதிகளும் ஜவாப்தாரி ஆகும். பிரிவுகள் 170, 171, 173களை பார்க்கவும்.

அதிகாரங்களைப் பிரித்துக் கொடுப்பது

157. (1) அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக யாதொரு பஞ்சாயத்து சம்பந்தமாகவாவது அல்லது யாதொரு வகையை சேர்ந்த பஞ்சாயத்துக்கள் சம்பந்தமாகவாவது அல்லது யாதொரு பிரதேசத்திலுள்ள சகல பஞ்சாயத்துக்கள் சம்பந்த மாகவாவது அல்லது யாதொரு பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில் சம்பந்தமாகவாவது அல்லது யாதொரு வகுப்பைச் சேர்ந்த பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில் சம்பந்தமாகவாவது அல்லது யாதொரு பிரதேசத்திலுள்ள சகல பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்கள் சம்பந்தமாகவாவது விதிகள் செய்வதற் கான அதிகாரத்தைத் தவிர இச் சட்டத்தின்படித் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களில் எதையாகிலும் அந்தப் பிரதேசத்தில் செலுத்த யாதொரு அதிகாரிக்கு அல்லது கலெக்டரின் அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்துள்ள உத்தியோகஸ் தருக்கு அதிகாரம் கொடுக்கலாம். அதே மாதிரியாகவே அவர்கள் அந்த அதிகாரத்தை எடுத்து விடலாம்.

(2) இன்ஸ்பெக்டராவது கலெக்டராவது விளம்பரம் பிரசுரித்து அதன் மூலம் ரெவினியூ டிவிஷனல் உத்தியோகஸ்தரின் அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்துள்ள யாதொரு உத்தியோகஸ்தருக்கு யாதொரு பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில் அல்லது யாதொரு வகையைச் சேர்ந்த பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்கள் அல்லது அத்தகைய உத்தியோகஸ்தரின் விசாரணை அதிகாரத்தின்கீழ் உள்ள பிர தேசத்திலுள்ள சகல பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்கள் சம்பந்தமாக சந்தர்ப்பத் துக்குத் தகுந்தாற்போல் இன்ஸ்பெக்டர் அல்லது கலெக்டரிடத்தில் இந்தச்சட்டத்தின் படிச் சங்கிரமித்துள்ள அதிகாரங்களில் எதையாகிலும்செலுத்தஅதிகாரம் கொடுக்கலாம்; அதே விதமாக அவர்கள் அந்த அதிகாரத்தை எடுத்து விடலாம்.

(3) இன்ஸ்பெக்டர் அல்லது கலெக்டர் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக கமிஷனரின் அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்துள்ள யாதொரு உத்தி யோகஸ்தருக்கு யாதொரு பஞ்சாயத்து அல்லது யாதொரு வகையைச் சேர்ந்த பஞ்சாயத்துக்கள் அல்லது பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியில் உள்ள சகல பஞ்சாயத்துக்கள் சம்பந்தமாக இந்தச் சட்டத்தினுல் சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற்போல் இன்ஸ்பெக்டரிடத்தில் அல்லது கலெக்டரிடத்தில் சங்கிரமித்துள்ள யாதொரு அதி காரங்களைச் செலுத்துவதற்கு அதிகாரம் கொடுக்கலாம்- அம்மாதிரியாகவே அத்தகைய அதிகாரத்தை எடுத்துவிடலாம்.

(4) (1) முதல் (3) வரையுள்ள உட்பிரிவுகளின்படிப் பிரித்துக் கொடுக்கப்படும் யாதொரு அதிகாரத்தைச் செலுத்துவதானது, மேற்படி விளம்பரத்தில் நிர்ணயிக்கப் படக்கூடிய அல்லது குறிப்பிடப்படக்கூடிய வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும், அதிகாரத்தை பிரித்துக்கொடுக்கிற அதிகாரியால் அல்லது அந்த அதிகாரி அரசாங் கத்தாராயிருந்தால், இது விஷயமாய் அரசாங்கத்தாரிடமிருந்து அதிகாரம் பெறக் கூடிய உத்தியோகஸ்தர்களால் மேல்விசாரணை செய்யப்படுவதற்கும் திருத்தப்படு வதற்கும்கூட உட்பட்டதாகும். இந்தப்படி அதிகாரம் பெற்றிருக்கும் உத்தியோகஸ்தர் களின் செய்கைகளாவது நடவடிக்கைகளாவது மேல்விசாரணை செய்யவும் மாற்றி யமைக்கவும்கூட அரசாங்கத்தாருக்கு அதிகாரம் உண்டு.

(5) இந்தப் பிரிவில் கண்ட (2) முதல் (4) வரையில் உள்ள உட்பிரிவுகள் உட்பட இச்சட்டத்தில் கண்ட ஷரத்துக்களில் எதன்படியாகிலும் இன்ஸ்பெக்டருக்கா வது கலெக்டருக்காவது கொடுக்கப்பட்டிருக்கும் யாதொரு அதிகாரத்தைச் செலுத்துவ தானது, அந்த அதிகாரத்தை மேற்படி இன்ஸ்பெக்டர் செலுத்தினுலும் சரி, கலெக்டர் செலுத்தினுலும் சரி (2) அல்லது (3) உட்பிரிவின்படி அது பிரித்துக் கொடுக்கப்பட் டிருக்கிற உத்தியோகஸ்தர் செலுத்தினுலும் சரி, நிர்ணயிக்கப்படக்கூடிய வரையறை களுக்கும் நிபந்தனைகளுக்கும், அரசாங்கத்தாராலாகிலும் இது விஷயமாய், அவர் களிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கக்கூடிய உத்தியோகஸ்தராலும், மேல்விசாரணை

செய்யப்படுவதற்கும் கூட உட்பட்டதாகும். அந்தப்படி அதிகாரம் பெற்றிருக்கும் உத்தி யோகஸ்தருடைய செய்கைகளேயாவது நடவடிக்கைகளேயாவது மேல்விசாரணை செய்யவும் மாற்றியமைக்கவும்கூட அரசாங்கத்தாருக்கு அதிகாரம் உண்டு.

குறிப்பு

அதிகாரங்களை பிரித்து கொடுப்பது பற்றி பக்கம் 8-ல் 12-வது பாராவை பார்க்கவும். அந்த பாராவில் எந்த எந்த அதிகாரங்களை பிரித்து கொடுக்கலாம் என்பதை விவரமாகக் காட்டியிருக்கிறது.

முந்தி இங்கிலீஷ்காரர்கள் ஆண்டு கொண்டிருக்கும் போது, கலெக்டர், ரிவின்யூ டிவிஷனல் ஆபீஸர் போன்ற ரெவின்யூ உத்யோகஸ்தர்களை ஸ்தல ஆட்சியில் கலந்து கொள் வதை குறித்து வெறுப்பார்கள். இப்போது அவர்களை தேச சேவகர்கள் என்று கருதப்பட்டு ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வரவேற்கிருர்கள். கவனிக்கவும்.

அரசாங்கம் புனராலோசனை செய்து உத்தரவுகளை திருத்துவது

158. (1) (a) இன்ஸ்பெக்டராவது, கலெக்டராவது 157-வது பிரிவைச் சேர்ந்த (2) அல்லது (3) உட்பிரிவின்கீழ் இன்ஸ்பெக்டரிடமிருந்து அல்லது கலெக்டரிடமிருந்து, அதிகாரம் பெற்றிருக்கிற யாதொரு உத்தியோகஸ்தராவது,

(b) அந்தப் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி அரசாங்கத்தாரிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கிற யாதொரு உத்தியோகஸ்தராவது அந்தப் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின்படி அவர்களிட மிருந்து அதிகாரம் பெற்றிருக்கிற யாதொரு உத்தியோகஸ்தராவது,

(c) வேறு யாதொரு அதிகாரியாவது உத்தியோகஸ்தராவது இந்தச் சட்டத்தின் கண்ட ஷரத்துக்களின்படிப் பிறப்பித்த எந்த உத்தரவாகிலும் சட்ட சம்மதமானதுதானு அல்லது ஒழுங்கானதுதானு என்றேனும் அத்தகைய நடவடிக்கை கிரமமானதுதானு என்றேனும் அரசாங்கத்தார் சந்தேகமறத் தெரிந்து கொள்ளும் பொருட்டு அவர்கள் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற பிரகாரம் தாங்களாகவோ அல்லது விண்ணப்பம் செய்து கொள்ளப்படுவதன்பேரில் அவ்வுத்தரவு அல்லது நடவடிக்கைப் பற்றிய ரெகார்டை எக்காலத்திலாயினும் வரவழைத்துப் பரிசீலனை செய்யலாம் ; மேலும், அரசாங்கத்தார் தங்களுக்கு யுக்தமெனத் தோற்றுகிறபடி இன்ஸ்பெக்டர், கலெக்டர் அல்லது இதர வேறு உத்தியோகஸ்தர் அல்லது அதிகாரியைக் கலந்தாலோசித்த பிறகு அது சம்பந்தமாகத் தங்களுக்குத் தகுதியென்று தோற்றுகிற உத்தரவைப் பிறப்பிக்கலாம்.

(2) (1) உட்பிரிவில் குறிப்பிடப்பட்டு இருக்கிற தன்மை வாய்ந்த அதிகாரங்களை, அரசாங்கத்தாரிடமிருந்து இது விஷயமாய் அதிகாரம் பெற்று இருக்கக்கூடிய அதிகாரி அல்லது உத்தியோகஸ்தர் கூட செலுத்தலாம்.

குறிப்பு

இந்த பிரிவு அப்பீல் மாதிரியானது. உத்திரவின்பேரில் முதலில் அருகாமையிலுள்ள டிப்டி பஞ்சாயத்து ஆபீஸருக்கும், ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸருக்கும், ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர்க்கும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் கமிஷனருக்கும் மனுசெய்து கொள்ள வேண்டும். அவர்கள் மூலம் சரியான உத்திரவு கிடைக்கா விட்டால் பிறகு ஜில்லா கலெக்டருக்கும், ரீஜனல் இன்ஸ்பெக்டருக்கும், இன்ஸ்பெக்டருக்கும் மனுபோட்டு கொள்ளலாம். கடைசியாக புனர் ஆலோசனைக்கு என்று இந்த 158-வது பிரிவின் கீழ் இந்த பிரிவை சொல்லி புனர் ஆலோசனை மனுவை அரசாங்கத்தாருக்கு போட்டுக் கொள்ளலாம். அரசாங்கத்தாரின் உத்திரவு கடைசியானதாகும்.

அத்தியாயம் VI. (பிரிவுகள் 159—177)

லைசென்ஸுகளும்—அனுமதிகளும்—பொதுவானதும் பலவகைப்பட்டதும்

லைசென்ஸுகளையும் அனுமதிகளையும் பற்றிய பொதுவான ஷரத்துக்கள்

159. (1) இச் சட்டத்தில் வெளிப்படையாக வேறே விதமாக ஏற்பாடு செய்திருந்தாலன்றி மற்றப்படி, அல்லது இச் சட்டத்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்படக்கூடிய படிக்கன்றி மற்றப்படி இச் சட்டத்தின் படியாவது அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச் சட்டம் அல்லது ரெகுலேஷனின்படியாவது ஒரு லைசென்ஸ் அல்லது அனுமதிக்கான ஒவ்வொரு விண்ணப்பத்தையும் அல்லது அதைப் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பத்தையும், அதி முன்னதாக உள்ள எந்தத் தேதியிலிருந்து மேற்படி லைசென்ஸ் அல்லது அனுமதி வேண்டியிருக்கிறதோ அந்தத் தேதிக்கு, அல்லது (ஒரு வருஷமாகவாவது அதைவிடக் குறைவாய் மேற்படி விண்ணப்பத்தில் கண்டிருக்கும் கால அளவாகவாவது உள்ள) எந்தக் கால அளவுக்காக மேற்படி லைசென்ஸ் அல்லது அனுமதி வேண்டியிருக்கிறதோ அந்தக் கால அளவு தொடங்குவதற்கு முப்பது தினங்களுக்குக் குறையாமலுங் தொண்ணூறு தினங்களுக்கு மேற்படாமலும் முன்னதாகச் செய்து கொள்ளவேண்டும்.

(2) மேலே சொல்லப்பட்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, அப்படிப்பட்ட ஒவ்வொரு லைசென்ஸ் அல்லது அனுமதிக்காகவும் சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற்போல் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில் அல்லது பஞ்சாயத்து நிச்சயிக்கக்கூடிய பரிமாணங்களை அனுசரித்தும் நிர்ணயிக்கப்பட்ட அதிக பட்சமான வீதங்கள் எவையேனுமிருந்தால் அவைகளுக்கு மேற்படாத வீதங்களின்படியும் கட்டணங்கள் விதித்து வாங்கலாம்.

(3) மேலே சொல்லப்பட்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, அப்படிப்பட்ட யாதொரு லைசென்ஸ் அல்லது அனுமதிக்காக ஒரு விண்ணப்பத்தின் மேல் பிறப்பிக்கப்படும் உத்தரவுகள், பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியிடம் அல்லது கமிஷனரிடம் மேற்படி விண்ணப்பம் வந்து சேர்ந்த பிறகு முப்பது தினங்களுக்குள் அல்லது அதற்கு அதிகமாய் எந்த வகுப்பைச்சேர்ந்த விஷயங்களிலாகிலும் நிர்ணயிக்கப்படக் கூடிய கால அளவுக்குள் விண்ணப்பத்தாருக்கு தெரிவிக்கப்படாவிட்டால், அந்த விண்ணப்பம் சாதாரணமாய் எந்தக் கால அளவுக்கு அனுமதிக்கப்பட்டிருந்திருக்கக் கூடுமோ அந்தக் கால அளவு ஏதாகிலும் இருந்தால் அது வரையிலும், பிரஸ்தாப சட்டத்துக்கும் விதிகளுக்கும் சகாயச் சட்டங்களுக்கும் ரெகுலேஷன்களுக்கும் சாதாரணமாய் ஏற்படுத்தப்படுகிற சகல நிபந்தனைகளுக்கும் அந்த விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(4) அப்படிப்பட்ட யாதொரு லைசென்ஸ் அல்லது அனுமதிக்காக முன்னதாய்ச் செலுத்தப்படும் கட்டணத்தை அங்கீகரிப்பதனுல், அந்தப்படி முன்னதாகச் செலுத்தும் நபர் மேற்படி லைசென்ஸ் அல்லது அனுமதி மறுக்கப்படும் விஷயத்திலே அந்தக் கட்டணம் வாபஸ் செய்யப் பெறுவதற்கு மாத்திரம் அவர் பாத்தியதை உள்ளவராவார்.

(5) எந்தக் காரியத்துக்கு அப்படிப்பட்ட யாதொரு லைசென்ஸ் அல்லது அனுமதி அவசியமாய் இருக்கிறதோ அந்தக் காரியம் மேற்படி லைசென்ஸ் அல்லது அனுமதி இல்லாமலாவது, பெற்றுக்கொள்ளப்பட்ட லைசென்ஸ் அனுமதியும் ஷரத்துக்களுக்குப் பொருத்தமற்ற விதமாகவாவது செய்யப்பட்டால் அப்போது—

(a) பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர் அல்லது கமிஷனரானவர் நோட்டிஸ் கொடுத்து அதன் மூலமாய், அந்த நோட்டீஸில் குறிப்பிடப்படும் காலத்திற்குள் மேற்படி காரியத்தினுல் பாதிக்கப்படுகிற யாதொரு சொத்து, ஜங்கம சொத்

தாயிருந்தாலும் சரி, ஸ்தாவர சொத்தாயிருந்தாலும் சரி, அரசாங்கத்தாரைச் சேர்ந்தாயிருந்தாலும் சரி, தனி நபர்களைச் சேர்ந்ததாயிருந்தாலும் சரி, அந்தச் சொத்து முழுவதையுமாவது அதன் யாதொரு பாகத்தையாவது மாற்றும்படியோ அப்புறப்படுத்தப்படும்படியோ கூடிய வரையில் அதை அதன் பழைய நிலைமைக்குக் கொண்டு வரும்படியோ மேற்படி காரியத்தை அந்தப் பிரகாரம் செய்பவருக்கு உத்தரவு செய்யலாம்; மேலும்,

(b) மேற்படி காரியத்தை அவ்வாறு செய்தால், அதற்கு இச் சட்டத்தில் தண்டனை எதுவும் பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்டிராத பட்சத்திலே அதை அந்தப்படிச் செய்யும் நபருக்கு அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்துக்காகவும் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராதத் தண்டனை விதிக்கப்பட்டதாகும்.

(6) அப்படிப்பட்ட யாதொரு லைசென்ஸ் அல்லது அனுமதியைப் பெற்றுக் கொள்ளத் தவறுகிற விஷயத்தில் குற்றம் செய்தவராக யாதொரு நபர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படும் போதெல்லாம், மாஜிஸ்ரேட்டானவர், விதிக்கப்படத்தக்க யாதொரு அபராதத்துடன்கூட மேற்படி லைசென்ஸுக்காகவாகிலும் அனுமதிக்காகவாகிலும் விதித்து வாங்கத்தக்க கட்டணம் எவ்வளவோ அதையும் சுருக்க வகையாய் வசூலித்து சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற்போல பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்க வேண்டும்; மேலும் அவர் தமக்கு யுக்தமாகத் தோற்றுகிற பட்சத்திலே, பிராதுக்குப் பிடித்த செலவுத் தொகையாகத் தாம் தொகை ஏதாகிலும் நிச்சயித்தால் அப்படிப்பட்ட தொகையையும் சுருக்க வகையாய் வசூலித்து சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற்போல் பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கலாம்.

விளக்கம்:—இந்த உட்பிரிவின் பிரகாரம் ஒரு லைசென்ஸ் அல்லது அனுமதிக்குரிய கட்டணத்தை வசூலிப்பதினாலே, குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட நபருக்கு மேற்படி லைசென்ஸ் அல்லது அனுமதியைப் பெற பாத்தியதை உண்டாக மாட்டாது.

குறிப்பு

லைசென்ஸுகள்: பிரிவு 111 படிக்கு சில காரியங்களை செய்ய லைசென்ஸ் இல்லாத இடங்களை உபயோகிக்கலாகாது. பி. 82-ன் கீழ் விதிகள் 4—9 படிக்கு ரோட்டுகளில் லைசென்ஸுகள் இல்லாமல் சில காரியங்களை செய்யக்கூடாது. யந்திரங்களை ஸ்தாபிப்பதற்கும், ஜனங்கள் கூடும் இடங்களுக்கும் லைசென்ஸ்கள் வேண்டும். பி. 112—114 களை பார்க்கவும். கேளிக்கை வரி சட்டத்தின்படிக்கும் பி. 195 படிக்கும் லைசென்ஸ் வேண்டும்.

சாதாரணமாக லைசென்ஸுகளை கொடுப்பது சகஜம். இதனால் வியாபாரங்கள், பண்டங்கள், வஸ்துக்கள் செய்யவேண்டி இருக்கின்றன. அப்படி அவைகள் செய்யாவிட்டால், அதனால் அனேகருடைய ஜீவனங்கள் கெட்டுப்போய்விடும். கஷ்டங்கள் உண்டாகும். கிராமத்தின் அபிவிருத்தியும் குறைந்துவிடும். இன்னும் அதற்குபோடும் கட்டணமானது வரிக்காக அல்ல வென்றும் பஞ்சாயத்தின் வருமானத்திற்கு அல்ல என்றும் அறியவேண்டும் ஆகையால் சந்தர்ப்பங்களையும், தொழில்களையும் கவனித்து அவைகளுக்கு தக்கவாறு மேல் பார்வை செலவுக்காகவென்று கட்டணங்கள் விதிக்கவேண்டும். அப்படி என்றால் லைசென்ஸ் கட்டணங்கள் தோராயமாய்தான் இருக்கும், நிகரமாய் இருக்கவேண்டும் என்று நிர்பந்தம் கிடையாது. ஓர் இடத்திற்கு அல்லது தொழிலுக்கு லைசென்ஸ் கட்டணம் கட்டியதினாலேயே வீட்டு வரி, தொழில் வரி, கட்டவேண்டியது இல்லை என்று எண்ணக்கூடாது. லைசென்ஸ் பெறுவிட்டால் உபபிரிவு (5) (b)படிக்கு தண்டிக்கப்படவேண்டும். தண்டனை இல்லாமல் லைசென்ஸ் கட்டணம் வாங்கிக்கொண்டு விட்டுவிடுவதல்ல. ஆனால் இம்மாதிரியான குத்தங்களுக்காக நிர்வாக அதிகாரி ராஜியாய் போகலாம். பி. 167 பார்க்கவும். சரியான காரணங்கள் இல்லாமல் பஞ்சாயத்துகள் லைசென்ஸுகள் கொடாமல் தடுக்கக்கூடாது. [சோமு-எ.-மாயவரம் முனிசிபாலிடி, 28 M. 520: : நாகலிங்க-எ.-கும்பகோணம் முனிசிபாலிடி, 28 I C. 709 (M) = 2 M L. W.·368] லைசென்ஸ் பெறவில்லை என்று தாவா செய்தால் லைசென்ஸ் பெறவேண்டியதில்லை என்று எதிர்வாதம் செய்யலாம் [ஸ்மித்தை குறித்து A. I. R. 1924 M. 389 = 25 Cr. L. J. 584] தண்டிக்கும்போது மாஜிஸ்ரேட் ஆனவர் சாக்ஷியம் மூலமாயும், ரெகார்டுகள் மூலமாகவும் கட்டணத்தை அறிந்து விதிக்கவேணும் [தஞ்சாவூர் ஜில்லா போர்டு பிரசிடெண்ட்-

எ.- நடேசன்—1922 M. W. N. 1144] ஒரு நபர் லைசென்ஸ் பெருவிட்டால் அவரை மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தண்டிக்கவேணுமென்று மனுசெய்துகொள்ளவேண்டும். மாஜிஸ்ட்ரேட் ஆனவர் லைசென்ஸ் கட்டணத்தையும் கொடுக்கும்படி உத்திரவு இடலாம். அப்படி இன்றி லைசென்ஸ் கொடாமலே ஒரு நபர் லைசென்ஸ் பெறவேண்டியதாயிருந்து பெறவில்லை என்றும் அதற்காக அவருக்கு லைசென்ஸ் கொடுத்து அவரிடம் கட்டணத்தை வசூலித்துக் கொள்ள வேண்டும். அப்படி செய்யாமல் அதாவது லைசென்ஸ் கொடாமலே லைசென்ஸ் கட்டணம் மாத்திரம் வேண்டுமென்று தாவா செய்தால் அது செல்லாது. மாஜிஸ்ட்ரேட் ஆனவர் 2 விஷயங்களை கவனிக்கவேண்டும். (1) லைசென்ஸ் பெறவேண்டியது அவசியமா (2)லைசென்ஸ் கட்டணம் அனுவசியமாய் அதிமாகயிருக்கிறதா என்பதுதான். ஒன்றுக்கொன்று சம்பந்தம் கிடையாது. மாஜிஸ்ட்ரேட் ஆனவர் தன் இஷ்டப்படி லைசென்ஸ் கட்டணத்தை மாற்றக் கூடாது. சட்டப்படியும் விதிகள்படியும் உபவிதிகள் படியும் தீர்மானம் செய்யவேண்டும்.

பி. 159 (1) ஒரு வருஷமாகவாவது அதைவிடக் குறைவாய் கண்டிருக்கும் கால அளவாகவாவது:—இதன்படிக்கு லைசென்ஸ்களை ஒரு வருஷத்திற்கு குறைந்த காலத்திற்கு கொடுக்கலாம். கட்டணங்களையும் அந்த கால அளவுக்கு தகுந்தபடிக்கு பெறவேண்டும். அதிகமாக கேட்பது சரியன்று.

பி. 159 (1) 30-நாளுக்கு குறையாமலும் 90-தினங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். — 30 நாளுக்குள் யாதொரு பதிலும் கொடுக்காவிட்டால் விண்ணப்பதாரர் மனு அனுமதிக்கப்பட்டிருப்பதாக கருதப்படும். உபபிரிவு (3) பார்க்கவும். நிர்வாக விண்ணப்பத்தைப்பற்றி யோசிக்கப்பட்டு வருகிருரென்று 30 நாள்களுக்குள் தெரிவித்தால் அது ஒரு அனுமதி ஆகாது. விண்ணப்பதாரும் பொறுத்துக்கொண்டு இருக்கவேண்டும். விதிகளைப் பார்க்கவும். விதிகளில் I, II, III விதமானவை இருக்கின்றன. அவைகளில் II-ம் தொகுதியில் யார் யாருக்கு அப்பீல் செய்யவேண்டும் என்றும், III-ம் தொகுதியில் இன்ஸ்பெக்டருக்கு எது காலவரையில் அப்பீல் செய்துக்கொள்ளலாம் என்றும், இருப்பதை பார்க்கவும்.

பி. 159 (2) லைசென்ஸ் கட்டணங்கள்.—இவைகளை வரிகளாக என்னக்கூடாது. அந்த கட்டணங்கள் அவைகளின் மேல் பார்வைக்காக செலவுகளுக்காக என்று கருத வேண்டும். அனுவசியமாக அதிகமாக போட்டால் அதை திருப்பிக் கொடுக்க வேண்டியதாய் நேரிடும். அவைகளை வீட்டுவரி, தொழில்வரி, மாதிரி பஞ்சாயத்தின் வருமானத்திற்காக போடப்பட்டவை என்று எண்ணக்கூடாது. [கும்பகோணம் முனிசிபல் கவுன்சில். -எ- ராலி பிரதர்ஸ், 61 M. L. J. 748=I R. 1931 Mad. 446 : : சாமல் கோடா பஞ்சாயத்து.-எ-யோர்க், An. L. R. 1933 Mad. 713=34 Cr. L. J. 26 : : குலாம் மஹமத்-எ-மதராஸ் கார்போரேஷன், A. I. R. 1930 Mad. 200=57 M. L. J. 536 (545.)] லைசென்ஸ் கட்டணங்களை மூன்று வருஷங்களுக்கு வசூலிக்க, குத்தகைக்கு விடலாம். பிரிவு 176யை பார்க்கவும்.

அதிக பட்சவீதங்கள் – மேற்படாத - கட்டணங்கள் விதித்து வாங்கலாம்.— உச்சத்திற்கு அதிகமாக கட்டணங்கள் பெறக்கூடாது. யாதொரு உச்ச கட்டணங்களும் நிர்ணயிக்கப்படாவிட்டால் லைசென்ஸ் கட்டணங்கள் நியாய முள்ளதாயும் கிரமமானதாயும் இருக்கவேணும். பி. 139-ன் கீழ் 1-ம் விதியை பார்க்கவும்.

பி. 159 (4) அனுமதி மறுக்கப்படும் விஷயத்தில் நிறைவேற்றும் அதிகாரி லைசென்ஸுக்கு என்று கட்டிய கட்டணத்தை தானகவே வாபஸ் செய்யவேண்டும் என்றும் பிரிவில் இருந்தால் நலமாக யிருக்கும். பி. 170 படிக்கு கட்டணம் கட்டியவருக்கு வாபஸ் பெற அதிகாரமுண்டு. வாபஸ்பெறவேண்டியவர் 170 வது பிரிவுபடிக்கு நோட்டீஸ் கொடுத்து 6 மாதத்திற்குள் தாவாசெய்து கட்டிய கட்டணத்தை வாபஸ் பெறவேண்டும். காலம் அதிகரித்தால் அந்த தாவாசெல்லாது.

பி. 159 (5) (a) இந்த சப்-செக்ஷன்படிக்கு, லைசென்ஸ் பெருவிட்டாலும் லைசென்ஸ் பெற்று அதற்கு விரோதமாக நடந்துகொண்டாலும் லைசென்ஸ் பெறுவதற்கு முந்தி இருந்த பழய நிலைமைக்கு அந்த சொத்தை மாற்றும்படி உத்திரவ செய்து நிறைவேற்றிவைக்க நிர்வாக அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

பி. 159 (5) b) தண்டனை.—அதை அறிய பி. 181யை பார்க்கவும், பிராது தொடர அதிகாரத்தைக்குறித்து அறிய 166ஐ பார்க்கவும். இந்த (b) ல் கண்ட தண்டனை குறித்து II-ம் ஷெட்யூலில் யாதொன்றும் காணப்படவில்லை, ஆகையால் இந்த தண்டனை சொல்லாது என்று

சொல்லக்கூடாது. லைசென்ஸ் பெருமல் இருப்பதே குற்றம் ஆகும். அதற்கு முக்கியமாக ருஜுப்படுத்த வேண்டிய விஷயம் யாதெனில் எதிரி லைஸென்ஸ் பெற்று செய்யவேண்டிய காரியத்தை லைசென்ஸ் இல்லாமல் செய்தார் என்பதுதான். அதற்கு ரூபா 50-0-0 வரையில் அபராதம் போடலாம். இன்னும் லைசென்ஸ் கட்டணத்தை வரப்பெற்றுக்கொண்டு பஞ்சாயத்துக்குக் கொடுக்கலாம்.

சாதாரணமாக லைசென்ஸ்தாரரை தான் தண்டிக்க வேண்டும். அவர் இல்லாத காலத்தில் அவருக்குப் பதிலாக மற்றெருவர் காரியங்களை லைசென்ஸ் ஷரத்துகளுக்கு விரோதமாக செய்துவந்தால் அப்போதும் லைசென்ஸ் பெற்றவரின் பொறுப்பு நீங்கிவிடாது. ஆகையால் லைசென்ஸ் பெற்றவர்கள் வெகு ஜாக்கிரதையாய் லைசென்ஸ் ஷரத்துகள்படி நடந்து கொள்ள வேண்டும்.

பி. 159. (6) மாஜிஸ்ட்ரேட் ஆனவர் கட்டணம் எவ்வளவோ அதையும் சுருக்க வகையாய் வசூலித்துப் பஞ்சாயத்துக்குக் கொடுக்கவேண்டும். மேலும் பிராதுக்குப் பிடித்த செலவு தொகையையும் அவருக்குத் தோன்றுகிறபடி கொடுக்கலாம்.

விவரணம்.—லைசென்ஸ் கட்டணத்தை வசூலிப்பதனுலேயே லைசென்ஸ் பெற பாத்தியதை உண்டாகமாட்டாது.

I. லைஸென்ஸுகள், அனுமதிகள் முதலியவற்றின் நமூனுவும் பொருளடக்கமும், பி. 178 (2) [XXVI] ன் கீழ் விதிகள் (க. 40 - XL)

1. மேற்படி சட்டத்தின்படியாவது அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்தின்படியாவது கொடுக்கப்பட்ட சகல லைசென்ஸுகளும் அனுமதிகளும் அல்லது பிறப்பிக்கப்பட்ட சகல நோட்டிஸுகளும் எழுத்து மூலமாய் இருக்கவேண்டும்.

2. மேற்படி சட்டத்தின்படியாவது அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்தின்படியாவது கொடுக்கப்பட்ட ஒவ்வொரு லைஸென்ஸிலும் அல்லது அனுமதியிலும் அது எந்தக் கால அளவுக்காகக் கொடுக்கப்படுகிறதோ அந்தக் கால அளவு எதுவேனுமிருந்தால் அதையும் அது எந்த வரையறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் திட்டங்களுக்கு உட்பட்டுக் கொடுக்கப்படுகிறதோ அந்த வரையறைகளையும் கட்டுப்பாடுகளையும் திட்டங்களையும் குறிப்பிடவேண்டும்; அதில் நிர்வாக அதிகாரியாவது இது விஷயமாய் அவரிடமிருந்து கிரமமாய் அதிகாரம் பெற்ற ஒருவராவது கையெழுத்துப்போடவேண்டும். மேற்படி லைஸென்ஸ் அல்லது அனுமதியைக் கொடுக்கிற ஒவ்வொரு உத்தரவையும் பஞ்சாயத்தின் விளம்பரப் பலகையில் பிரசித்தம் செய்யவேண்டும்.

3. (1) லைசென்ஸ் அல்லது அனுமதி கொடுக்கப் பெற்றவர் அந்த லைஸென்ஸின் அல்லது திட்டங்களில் எவற்றிற்கேனும் உட்படாமல் தப்பித்துக்கொண்டாலும் அவற்றை மீறினுலும், மேற்படி லைசென்ஸ் அல்லது அனுமதிக்குச் சம்பந்தப்படுகிற எந்த விஷயத்திலும் மேற்படி சட்டத்தின் நிபந்தனைகளில் எவற்றையாகிலும் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி, சட்டம் அல்லது ரெகுலேஷன் எதையாகிலும் மீறினதற்காக லைஸென்ஸ் அல்லது அனுமதி கொடுக்கப்பெற்றவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டாலும், லைஸென்ஸ் அல்லது அனுமதி கொடுக்கப்பெற்றவர் பொய்யாக சங்கதி தெரிவித்ததனுலோ மோசடியினுலோ அதைப் பெற்றிருந்தாலும், மேற்படி சட்டத்தின்படியாவது அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்தின்படியாவது கொடுக்கப்பட்ட எந்த லைஸென்ஸ் அல்லது அனுமதியையும், நிர்வாக அதிகாரியானவர் எப்போதாகிலும் மாற்றலாம்: ரத்து செய்யலாம் அல்லது சிறிதுகாலம் செலாவணியாகாமல் நிறுத்தி வைக்கலாம். இந்த விதியின்படி நிர்வாக அதிகாரியானவர் ஒரு லைஸென்ஸை மாற்றுவதற்காக, ரத்து செய்வதற்காக அல்லது சிறிது காலம் செலாவணியாகாமல் நிறுத்தி வைப்பதற்காகப் பிறப்பித்த எந்த உத்தரவின் பேரிலும் பஞ்சாயத்துக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்; எந்த உத்தரவுக்கு விரோதமாக அப்பீல் செய்து கொள்ளப்படுகிறதோ அந்த உத்திரவு லைஸென்ஸ் அல்லது அனுமதி கொடுக்கப்பெற்றவரிடம் வந்து சேர்ந்த தேதிக்குப் பிறகு **பத்து தினங்களுக்குள் மேற்படி அப்பீல் பஞ்சாயத்து ஆபீஸில் பெற்றுக் கொள்ளப்பட்டாலொழிய அப்படிப்பட்ட அப்பீல் எதையும் விசாரணைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது.**

(2) (1) உபவிதியின் பிரகாரம் பஞ்சாயத்து பிறப்பித்த உத்தரவுக்கு விரோதமாக **ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தருக்கு இரண்டாவது அப்பீல் செய்துக்கொள்ளலாம்;**

எந்த உத்தரவுக்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ளப்படுகிறதோ அந்த உத்திரவு லைஸென்ஸ் அல்லது அனுமதி கொடுக்கப் பெற்றவரிடம் வந்து சேர்ந்த தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள் மேற்சொன்ன இரண்டாவது அப்பீலைச் செய்துகொள்ளவேண்டும்.

4. ஒரு லைஸென்ஸ் அல்லது அனுமதியை மறுத்தோ மாற்றியோ, ரத்து செய்தோ, சிறிது காலம் செலாவணியாகாமல் நிறுத்தி வைத்தோ உத்தரவு பிறப்பிக்க மேற்படி சட்டத்தின் படியாவது அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்தின் படியாவது அதிகாரமுள்ள அதிகாரி பிறப்பிக்கும் ஒவ்வொரு உத்திரவும் எழுத்து மூலமாய் இருக்கவேண்டியதுமன்றி அதற்கான ஏதுக்களையும் அதில் கண்டிருக்கவேண்டும்.

5. ஒரு லைஸென்ஸ் அல்லது அனுமதியானது ரத்து செய்யப்பட்டாலும் அல்லது சிறிது காலம் செலாவணியாகாமல் நிறுத்தி வைக்கப்பட்டாலும், அது எந்தக் கால அளவு அல்லது அதைப் புதுப்பித்துக் கொள்வதற்கான விண்ணப்பம் எந்தக் கால அளவுக்குள் செய்துகொள்ளப்படவேண்டுமோ அந்தக் கால அளவு, இவற்றில் எது பிற்பட்டு முடிவடைகிறதோ அக்காலம் முடிவடைந்திருந்தாலும், மேற்படி சட்டத்தின் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச்சட்டத்தின் சகல காரியங்களுக்காகவும், லைசென்ஸ் அல்லது அனுமதியின்றி இருப்பதாகக் கருதப்படுவார்; ஆனால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி, மேற்படி லைஸென்ஸ் அல்லது அனுமதியை ரத்து செய்வதற்காக அல்லது சிறிது காலம் செலாவணியாகாமல் நிறுத்திவைப்பதற்காகப் பிறப்பித்த உத்திரவு ரத்து செய்யப்படுகிற வரையில் அல்லது அந்த லைஸென்ஸ் அல்லது அனுமதி புதுப்பிக்கப்படுகிற வரையில் மட்டும் அவர் அவ்வாறு லைஸென்ஸ் அல்லது அனுமதியின்றி இருப்பதாகக் கருதப்படுவார்.

6. லைஸென்ஸ் அல்லது அனுமதி ஒவ்வொன்றும் கொடுக்கப் பெற்றிருப்பவர், அந்த லைஸென்ஸ் அல்லது அனுமதி செலாவணியாய்க் கொண்டிருக்கையில் நிர்வாக அதிகாரி கேட்டுக்கொள்வதன் பேரில் நியாயமான எல்லாக் காலங்களிலும் அதைக் கொண்டு வந்து காட்டவேண்டும்.

7. மேற்படி சட்டத்திலாவது அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச் சட்டம், ரெகுலேஷன் அல்லது உத்திரவிலாவது யாதொரு நோட்டீஸ் ஒரு நபரிடம் சேர்ப்பிக்கவேண்டுமென்றாகிலும் அவருக்கு அனுப்பவேண்டுமென்றாகிலும் சொல்லியிருந்தால்—

(i) அந்த நபரிடம் மேற்படி நோட்டீஸைக் கொடுப்பதனாலோ கொடுப்பதாகச் சொல்வதனாலோ, அல்லது

(ii) அந்த நபர் காணப்படாவிட்டால், கடைசியாக அவர் வசித்து வந்ததாக அல்லது தொழில் நடத்தி வந்ததாகத் தெரிந்த இடத்தில் அந்த நோட்டீஸைக் கொடுத்துவிட்டு அல்லது போட்டுவிட்டதினாலோ, அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்த ஒருவரிடத்திலாகிலும், அதைக் கொடுப்பதனாலோ, அல்லது

(iii) பிரஸ்தாப கிராமத்தில் அவர் வசித்து வராமலிருந்து, வேறோரிடத்திலுள்ள அவருடைய விலாசம் நிர்வாக அதிகாரிக்குத் தெரிந்திருந்தால் அதை அவருக்கு ரெஜிஸ்டர் தபாலில் அனுப்புவதனாலோ, அல்லது

(iv) மேற்சொன்ன முறைகள் எவையும் பயன்படாவிட்டால், அந்த வீடு அல்லது தொழிலிடத்திலே எல்லாருக்கும் தெரியும் ஒரு பாகத்தில் அதை ஒட்டி வைப்பதன் மூலமாகவோ.

அவ்வாறு சேர்ப்பிக்கலாம் அல்லது அனுப்பலாம்.

8. மேற்படி நபர் யாதொரு கட்டடத்தின் அல்லது நிலத்தின் சொந்தக்காரராகவோ ஆட்சியாளராக இருந்தால், அந்த நோட்டீஸில் மேற்படி சொந்தக்காரர் அல்லது ஆட்சியாளரின் பெயரைக் குறிப்பிடவேண்டியதில்லை; கூட்டுச் சொந்தக்காரர்கள் அல்லது ஆட்சியாளர்களில் விஷயத்தில் அப்படிப்பட்ட சொந்தக்காரர்கள் அல்லது ஆட்சியாளர்களில் ஒருவரிடம் அதைச் சேர்ப்பித்தால் அல்லது ஒருவருக்கு அதை அனுப்பினால் போதுமானது.

9. மேற்படி சட்டத்தின் பிரகாரம் சேர்ப்பிக்கப்பட்ட அனுப்பப்பட்ட யாதொரு பில் அல்லது நோட்டீஸிலேனும், நமூனா அல்லது இதர தஸ்தாவேஜிலேனும், இன்ன கால அளவுக்குள் ஒரு வரி அல்லது இதர தொகை செலுத்தப்பட வேண்டுமென்றாவது யாதொரு வேலை நிறைவேற்றப்படவேண்டுமென்றாவது அல்லது ஏதாகிலும் செய்யப்படவேண்டுமென்றாவது

நிச்சயிக்கப்பட்டிருந்தால், அந்தக் கால அளவை மேற்படி சட்டத்திலேனும் அதன்படிச் செய்யப்பட்ட, விதிகளிலேனும் அடியிற்கண்டதற்கு விரோதமாகத் தெளிவான யாதொரு நிபந்தனை இல்லாவிட்டால், அதன்படிச் சேர்ப்பிக்கும் அல்லது அனுப்பும் தேதியிலிருந்து கணக்கிடவேண்டும்.

10. எவராகிலும் 6-வது விதியின் பிரகாரம் கேட்டுக் கொள்ளப்படுவதன் பேரில் ஒரு லைஸென்ஸ் அல்லது அனுமதியைக் **கொண்டுவந்து காட்டத் தவறினால், அவருக்கு ஐந்து ரூபாய்வரை அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கதாகும்.**

II. லைசென்ஸுகளுக்கும் அனுமதிகளுக்குமான விண்ணப்பங்களின் விஷயமாகப் பிறப்பிக்கப்படும் உத்திரவுகளை அனுப்புவதற்கான கால வரையறை பி. 159 (3)ன் கீழ் விதி (க-XXX 30)

இச் சட்டத்தின்படியாவது அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச் சட்டம் அல்லது ரெகுலேஷனின் படியாவது ஒரு லைஸென்ஸ் அல்லது அனுமதிக்காகச் செய்து கொள்ளப்படும் ஒரு விண்ணப்பம் விஷயமாக அல்லது அதைப் புதுப்பித்துக் கொள்வதற்காகச் செய்து கொள்ளப்படும் ஒரு விண்ணப்பம் விஷயமாக உத்தரவு பிறப்பதற்கு முன் டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீஸர் அல்லது தொழிற்சாலைகளின் இன்ஸ்பெக்டர் அல்லது வேறு யாதொரு உத்தியோகஸ்தர் போன்ற வெளி அதிகாரி ஒருவரைக் கலந்தாலோசிக்க வேண்டியிருக்கும் விஷயங்களில் மேற்படி, விண்ணப்பத்துக்குச் சம்பந்தப்பட்ட உத்தரவை, பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியிடம் **அவ் விண்ணப்பம் வந்து சேர்ந்த தேதிக்குப் பிறகு அறுபது தினங்களுக்குள் விண்ணப்பத்தாருக்கு அனுப்பவேண்டும்.**

விதிகள்

III. அப்பீல் விதிகள் பி. 178 (2) (XXXVI) படிக்கு (க, XLVIII-48) லைசென்சுகள் இன்னும் மற்ற விஷயங்கள் குறித்து உண்டாகும் உத்திரவுகளின் மேல் அப்பீல்களுக்கான காலவரையறை.

ஷி சட்டத்திலாவது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளிலாவது வேறே விதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, ஷி சட்டத்தின்படிக்கான அல்லது அத்தகைய யாதொரு விதியின்படிக்கான அப்பீல் ஒவ்வொன்றும், (மத்திய சட்ட நிரூபண சபையாரின் 1908-ம் ஞூத்து 9-வது சட்டமாகிய) 1908-ம் வருஷத்திய இந்தியக் கால வரையறைச் சட்டத்தின் 5-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு.—

(a) மேற்படி அப்பீல் ஒரு லைசென்ஸ் அல்லது அனுமதி கொடுப்பதற்கான ஓர் உத்தரவுக்கு விரோதமாகச் செய்து கொள்ளப்பட்டிருந்தால், அவ்வுத்தரவு பஞ்சாயத்தின் விளம்பரப் பலகையில் பிரசித்தம் செய்யப்பட்ட தேதிக்குப் பிறகு முப்பது தினங்களுக்குள்ளாகவும்.

(b) மற்ற விஷயங்களில், எந்த உத்தரவு அல்லது நடவடிக்கைக் குறிப்புக்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ளப்படுகிறதோ அந்த உத்தரவை அல்லது நடவடிக்கைக் குறிப்பைப் பெற்றுக்கொண்ட தேதிக்குப் பிறகு முப்பது தினங்களுக்குள்ளாகவும்.

இன்ஸ்பெக்டரிடம் கொடுத்துக் கொள்ளவேண்டும்.

அரசாங்கத்தாரும் மார்க்கெட் கமிட்டிகளும் லைசென்ஸுகளையும் அனுமதிகளையும் பெறவேண்டியதில்லை யென்பது

160. மத்திய அல்லது இந்த ராஜ்ய அரசாங்கத்தாரின் அல்லது வியாபார விளைபொருள்களின் மார்க்கெட்டுகளைக் குறித்த (சென்னை 1933-ம் ஞூத்து XX-வது சட்டமாகிய) 1933-ம் ஞூத்திய சென்னப்பட்டணத்துச் சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு மார்க்கெட் கமிட்டியாரின் அனுபோகத்திலாவது மேல்விசாரணையிலாவது உள்ள யாதொரு இடம் விஷயமாகவாகிலும் மத்திய அரசாங்கத்தை அல்லது இந்த ராஜ்ய அரசாங்கத்தைச் சேர்ந்த யாதொரு சொத்து விஷயமாகவாகிலும், மேற்படி மார்க்கெட் கமிட்டியாருக்குச் சொந்தமான யாதொரு சொத்து விஷயமாகவாகிலும், இச் சட்டத்தின்படியாயினும் அதன்படிச் செய்யப்பட்ட

யாதொரு விதி, சகாயச் சட்டம் அல்லது ரெகுலேஷன்படியாயினும் ஒரு லைசென்ஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ருே அல்லது ஓர் அனுமதி பெற வேண்டுமென்ருே இச் சட்டத்தில் அல்லது அப்படிப்பட்ட யாதொரு விதி, சகாயச் சட்டம், அல்லது ரெகுலேஷனில் கண்டதெதுவும் பொருள்படுவதாகக் கொள்ளக்கூடாது.

நோட்டீஸ்கள், உத்தரவுகள் முதலியவைகளை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான அதிகாரம்.

நோட்டீஸ், உத்தரவு முதலியவைகளின்படி நடப்பதற்கு வாய்தாவும் அந்தப்படி நடந்து கொள்ளாவிட்டால் அவைகளை அமுலுக்குக் கொண்டுவர அதிகாரமும்

161. (1) இச் சட்டத்தின்படியாவது அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச் சட்டம் அல்லது ரெகுலேஷனின்படியாவது பிறப்பிக்கப்படுகிற யாதொரு நோட்டீஸ், கட்டளை அல்லது உத்தரவின் பிரகாரம் யாதொரு வேலையைச் செய்து முடிக்கும்படியாகிலும், எவ்வித ஏற்பாடுகளையேனும் அனுசரிக்கும்படியாகிலும் யாதொரு காரியத்தைச் செய்யும்படியாகிலும், ஒரு நபருக்குத் திட்டம் செய்யப்படுமாகில், இன்ன காலத்திற்குள்ளாக மேற்படி வேலையைச் செய்து முடிக்க வேண்டுமென்ருவது, ஏற்பாடுகளை அனுசரிக்க வேண்டுமென்ருவது, காரியத்தைச் செய்ய வேண்டுமென்ருவது மேற்படி நோட்டீஸ், கட்டளை அல்லது உத்தரவில் நியாயமான காலத்தைக் குறிப்பிட வேண்டும்.

(2) மேலே கண்டபடி குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் மேற்படி நோட்டீஸ், கட்டளை அல்லது உத்தரவின் பிரகாரம் நடந்துகொள்ளாவிட்டால்.—

(a) சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற்போல் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியானவர் அல்லது கமிஷனரானவர் அந்த வேலையைச் செய்து முடிப்பிக்கலாம், அல்லது அந்த நோட்டீஸ் கட்டளை அல்லது உத்தரவைச் சரியாய் அமுலுக்குக் கொண்டுவருவதற்கு அவசியமென்று தாம் அபிப்பிராயப்படுகிற எந்த ஏற்பாடுகளையும் அனுசரிக்கலாம் அல்லது யாதொரு காரியத்தைச் செய்யலாம்; மேலும்,

(b) அப்படிப்பட்ட நோட்டீஸ், கட்டளை அல்லது உத்தரவின்படிச் செய்யத் தவறினல், அதற்கு எந்தத் தண்டனையும் இச் சட்டத்தில் பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்படாமல் இருக்கும் பட்சத்தில் மேற்படி நபருக்கு அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்திற்காகவும் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராதத் தண்டனை விதிக்கப்படத் தக்கதாகும்.

குறிப்பு

பி. 161. **நோட்டீஸ்:**—ஒரு நபருக்கு நோட்டீஸின் மூலம் ஒரு வேலையை செய்து முடிக்கும்படியாக உத்தரவு செய்வதற்கு முந்தி அது சட்டம் அல்லது விதி அல்லது துணை விதிக்கு சம்மதமானதாக இருக்கவேண்டும். [சேந்தியப்பா-எ.-மதுரை டிஸ்டிரிக்ட் போர்டு I. R. 1931 M. 611 = 60 M. L. J. 495] அப்படி இல்லாவிட்டால், அதன் பிரகாரம் யாதொரு நபரும் நடந்துகொள்ளாவிட்டால் அது குற்றமாகாது. [நாராயனன்-எ-ஜான்ஸி முனிசிபாலிடி A. I. R. 1026 J. 130]. ஒரு நோட்டீஸில் ஒரு பாகம் சட்ட சம்மதமாகவும் மற்ருெரு பாகம் சட்டத்திற்கு மீறியும் இருந்தால் அந்த நோட்டீஸில் கண்ட சட்டசம்பந்தமான வேலையை செய்ய வேண்டும் என்று நிர்ப்பந்திக்கக்கூடாது. அப்படி செய்யாவிட்டால் அது குற்றமாகாது. [மதராஸ் ரெயில்வே குறித்து, 1 Weir. 749] எதிரிக்கு கொடுக்கப்பட்ட நோட்டீஸ் சட்ட சம்பந்தமானதல்ல என்றும் நோட்டீஸ் கொடுத்தவருக்கு அம்மாதிரி அதிகாரம் இல்லை என்றும் வாதாடலாம். [ஷெங்துர்னி-எ-அகோலா முனிசிபாலிடி, A. I. R. 1928 Nagpur 337 : : ஹஜா குறித்து 25 I. C. 326 = 36 All 227] ஒரு நோட்டிஸை எதிரிக்கு கிரமப்படி சேர்ப்பிக்காமல் வியாஜ்ஜியம் தொடங்கினல் அது செல்லாது. [ராம்பிரதாப் குறித்து, 21 Cr. L. J. 286 = 55 I. C. 302] ஒவ்வொரு நோட்டீஸிலும் நியாயமான காலம் குறிப்பிட

வேண்டும். இல்லாவிட்டால் அது செல்லாது. கொடுக்கப்பட்ட காலத்திற்குள் ஒரு காரியத்தை செய்து முடிப்பதற்கு சாத்தியமல்லாத சமயத்தில் எதிரி குறித்த காலத்தில் அந்த காரியத்தை முடிக்கவில்லையென்று மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தாவாசெய்தால் அது செல்லாது. [மதராஸ் கார்ப்பொரேஷன்-எ.-அப்பாசாமி 1919 M. W. N. 712 = 50 I. C. 247.] நோட்டீஸில் காலமும் இடமும் கொடுக்காவிட்டால் அது செல்லாது [தேவாஜி-எ-மதரஸ் கார்பொரேஷன், 18 M. 503] ஒரு தப்பான நோட்டீஸ் கொடுத்து அதன் மூலமாக தாவா செய்தால் எதிரி அதிலிருந்து விடுதலை ஆனபிறகு, சரியான மறுநோட்டீஸ் கொடுத்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

பி. 161. (2) (a) ஒரு ஆக்ரமனத்தை எடுத்துவிட நோட்டீஸ் கொடுத்தும் எடுக்காமையால் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணை செய்து தண்டித்த பிறகும், அந்த ஆக்ரமனத்தை எடுத்து விடாவிட்டால் போலீஸ் உதவியைக்கொண்டு பஞ்சாயத்தானது அந்த ஆக்ரமனத்தை எடுத்துவிடலாம். (பி. 82, பி. 205 யை பார்க்கவும்)

பி. 161. (2) (b) இதற்கு பி. 181. ஷெட்யூல் I. படிக்கு யாதொரு தண்டனையும் குறித்து இல்லாவிட்டால், இந்த உப பிரிவின்படிக்கு ரூபா 50-வரையில் அபராதம் போடலாம். கிரிமினல் தாவாயை யார் நடத்துவது, எப்படி நடத்துவது என்பவைகளை அறிய பி. 170, 181 களை பார்க்கவும், செ. 82 கீழ் விதிகளையும் பார்க்கவும்.

ருஜு செய்ய வேண்டிய விஷயங்கள் (1) நோட்டீஸை சட்டப்படி கொடுக்க பஞ்சாயத்துக்கு அதிகாரம் உண்டு (2) அதில் குறிப்பிட்ட காரியத்தை செய்ய நியாயமான காலம் கொடுத்து இருக்கிறது. (3) அப்படி இருந்தும் எதிரி அந்த காரியத்தை நிறைவேற்றவில்லை என்பவைதான்.

நோடீஸ்களை குறித்த விதிகள்

இந்த விதிகளை 8-ம் பிரிவு குறிப்பு, 36-வது எண்ணின் கீழ், பக்கம் 54-ல் அச்சிட்டுயிருக்கிறது. அவைகளை அங்கே பார்க்கவும்.

பிரவேசிக்கவும் பார்வையிடவும் அதிகாரங்கள்

162. (1) **பிரவேசிக்கவும் பார்வையிடவும் அதிகாரங்கள்** நிர்ணயிக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, நிர்வாக அதிகாரியாகிலும் கமிஷனராகிலும் அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ளவர் எவராகிலும்.—

(a) இச் சட்டத்தின் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச் சட்டம், ரெகுலேஷன் அல்லது உத்தரவில் கண்ட ஷரத்துக்களின்படி அனுமதிக்கப்பட்டிருக்கிற அல்லது இச் சட்டத்தின் காரியங்களில் எதற்காகவாகிலும் மேற்படி ஷரத்துக்களில் எதையேனும் அனுசரித்தாகிலும் செய்வதோ அல்லது செய்து முடிப்பதோ அவசியமாய் இருக்கிற யாதொரு விசாரணை செய்யும் பொருட்டாவது, பரீட்சிக்கும் பொருட்டாவது, பரிசீலனை செய்யும் பொருட்டாவது, ஸர்வே செய்யும் பொருட்டாவது, அளக்கும் பொருட்டாவது, மதிப்பிடும் பொருட்டாவது, வேறே யாதொரு வேலையைச் செய்து முடிக்கும் பொருட்டாவது,

(b) எந்தக் காரியத்துக்காக மேற்படி ஷரத்துக்களில் எதன்படியாவது ஒரு லைசென்ஸ் அல்லது அனுமதி வேண்டியிருக்கிறதோ, அப்படிப்பட்ட யாதொரு காரியம் அந்த லைசென்ஸ் அல்லது அனுமதி இல்லாமல், அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட லைசென்ஸின் அல்லது அனுமதியின் ஷரத்துக்களை அனுசரித்தன்றி மற்றப்படி, யாதொரு இடம், கட்டடம் அல்லது நிலத்தில் செய்யப்படவில்லை யென்று தாம் சந்தேகமறத் தெரிந்து கொள்ளும் பொருட்டாவது, நோட்டீஸ் கொடுத்தோ, கொடாமலோ, உதவியாட்கள் அல்லது வேலையாட்களோடாகிலும் அவர்களல்லாமலாகிலும் மேற்படி இடத்திலாயினும், கட்டடத்துக்குள்ளாயினும், நிலத்திலாயினும் பிரவேசிக்கலாம்.

(2) (1) உட்பிரிவின்படிக்கான அதிகாரங்களைச் செலுத்துவதனாலாவது அந்த உட்பிரிவின்படி (யாதொரு இடத்தில்) பிரவேசிக்கும் பொருட்டு அவசியமான யாதொரு பலவந்தத்தை உபயோகிப்பதனாலாவது அவசியமாய் நேரிடுகிற யாதொரு சேதம் அல்லது அசௌகரியத்துக்காக எவர் பேரிலும் எந்தத் தாவாவும் நிற்காது.

குறிப்பு

பி. 162. பொது.—பி. 184, 185 களை பார்க்கவும். மேலும் ஒரு நபர் பார்வையிடுவதை தடுக்கும் பக்ஷத்தில் அது இந்தியாவின் பீனல் கோட் 341-வது செக்ஷன்படிக்கு குற்றமாகும் என்றும் அதற்கு தண்டிக்கலாம் என்றும் வெளிப்படையாகக்கூறி இருக்கிறது. அப்படித் தடுப்பது அந்தச் செக்ஷன்படிக்கு குற்றமேயாகும். வாசாவாக பார்வை இடக்கூடாது என்று சொல்வது தடுத்ததாக என்னக்கூடாது. அது குற்றமாகாது. [காரடுரி. நாகம்மாகுறித்து I. Weir 339] இன்ஸ்பெக்டரானவர் தன்னுடைய வேலை செய்ய ஒரு கூலிக்காரனை இட்டுக் கொண்டுபோய் எதிரி செய்துவரும் அசுத்த வஸ்துக்களை எடுத்துவிட உத்திரவிட்டார். கூலிக்காரன் அவைகளை எடுக்கும்போது எதிரி இன்ஸ்பெக்டரையும் கூலிக்காரனையும் தடுத்து மிரட்டினர். அதன்பேரில் கூலிக்காரனும், இன்ஸ்பெக்டரும் அந்த இடத்தை விட்டுத் திரும்பிவிட்டார்கள். எதிரி அம்மாதிரி செய்தது இந்தியன் பீனல்கோட் பிரிவுகள் 341 படிக்கு குற்றமாகும் என்று எதிரி தண்டிக்கப்பட்டார். [அரசன் எ. பாக மொனா, 52 Bom 236 = A. I. R. 1928 Bom. 135]

ருஜுப்படுத்த வேண்டிய விஷயங்கள்.--(1) பார்வையிடும் நிர்வாக அதிகாரிக்கும் அல்லது அவரால் பார்வையிட நியமிக்கப் பட்டவர்களுக்கும் சட்டப்படி பார்வையிட அதிகாரம் உண்டென்றும் (2) அம்மாதிரி பார்வை இருக்கும்போது எதிரி வாசாவாக வெறும் வார்த்தைகளால் அல்லாமல் தடுத்தான் அல்லது ஆட்சேபித்தார் என்றும், இரண்டு விஷயங்களையும் ருஜுசெய்யவேண்டும்.

தண்டனை. இதற்கு பிரிவுகள் 184, 185-களை பார்க்கவும்

விதிகள்

1. இவைகளை பிரிவு 111-ன்கீழ் பக்கங்கள் 247, 248களில் அச்சிட்டு இருக்கிறதை காணவும்
2. மேலும் பிரிவு 141-ன் கீழ் பக்கங்கள் 362, 363, 364களில் அச்சிட்டு உள்ளதையும் பார்க்கவும்.

எடைகளையும் முகத்து அளவைகளையும் பரீட்சிப்பது

163. நிர்வாக அதிகாரியாவது அல்லது கமிஷனராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள யாதொரு நபராவது (1860-ம் ஆண்டு XLV-வது மத்தியச் சட்டமாகிய) இந்திய தண்டனைச் சட்டத்தில் கண்ட XIII-ம் அத்தியாயத்தின்படி எடைக் கருவிகளுக்கும் முகத்தலளவைக் கருவிகளுக்கும் சம்பந்தப்பட்ட குற்றங்களைத் தடுப்பதற்காகவும், அவைகளுக்காகத் தண்டனை விதிப்பதற்காகவும், சந்தர்ப்பத்து'க்குத் தகுந்தாற்போல், பிரஸ்தாப கிராமத்திலுள்ள அல்லது பட்டணத்திலுள்ள அல்லது பஞ்சாயத்து யூனியனிலுள்ள மார்க்கெட்டுகளிலும் கடைகளிலும் உபயோகிக்கப்படுகிற எடைகளையும் முகத்தலளவைகளையும் பரீட்சித்துப் பரிசோதிக்கலாம்.

குறிப்பு

இந்தியன் பீனல் கோட் 13-வது அத்தியாயத்தின் கீழ்படி :—இதில் 264, 265 266, 268 ஆக நான்கு பிரிவுகள் இருக்கின்றன.

இந்தியன் பீனல் கோட் 264 பிரிவின்படிக்கு எந்த நபராவது எடைபோட மோசமான கருவிகளை உபயோகித்தால் அவரை ஒரு வருஷம் வரையில் தண்டிக்கலாம்.

265 பிரிவின் படிக்கு எந்த நபராவது மோசவிதமான, சரியில்லாத எடை குண்டுகளையும், முகத்தலளவுகளான படி முதலியவைகளையும் உபயோகித்தால் அது குற்றமாகும். அதற்கும் ஒரு வருஷம் வரையில் தண்டிக்கலாம்.

266-வது பிரிவின் படிக்கு ஒரு நபர் தன்னிடத்தில் சரியல்லாத எடைகளையும் வைத்துக் கொண்டிருந்தால் அதுவுங் குற்றமாகும் அதற்கும் ஒரு வருஷம் வரையில் தண்டிக்கலாம்.

267 பிரிவின் படிக்கு ஒருவர் சரியல்லாத முக அளவுகளையும் எடைகளையும் உபயோகித்து வந்தால் அது குற்றமாகும். அதற்கு ஒரு வருஷம் வரையில் தண்டிக்கலாம்.

கிரிமினல் ப்ரொசீஜர் கோட் பி. 153-வது படிக்கு ஒரு போலீஸ் ஆபீசர் இவைகளைப் பார்வை இடலாம்.

மதராஸ் எடைகள் முகத்தலளவு குறித்த குற்றங்களைப் பற்றி மேலும் 22-வது ஆக்ட் செ. 9 to 15 களில் காணலாம்.

கிராமப் பெரிய தனக்காரர்களிடமிருந்தும் கர்ணங்களிடமிருந்தும் தகவல் கேட்க அதிகாரம்

164. (1) நிர்வாக அதிகாரி அல்லது கமிஷனரானவர், எழுதியுள்ள உத்தரவு பிறப்பித்து அதன் மூலமாக, மேற்படி பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலின் அதிகார வரம்புக்குட்பட்ட எந்த ரெவினியூ கிராமம் விஷயமாகவேனும் அதன் எந்தப் பாகம் விஷயமாகவேனும் அதிலிருக்கிற யாதொரு நபர் அல்லது சொத்து விஷயமாகவேனும் நிர்ணயிக்கப்படக்கூடிய வகைகளின்கீழ் அடங்குகிற யாதொரு விஷயத்தைப்பற்றியேனும் தமக்குத் தகவல் கொடுக்கும்படி அந்தக் கிராமத்தின் பெரியதனக்காரருக்காவது. கர்ணத்துக்காவது இவ்விருவருக்குமாவது உத்தரவு செய்யலாம்.

(2) மேற்படி உத்தரவை இன்ன காலத்துக்குள் அனுசரித்து நடக்கலாமென்று அதில் குறிப்பிட்டிருக்கவேண்டும்; ஆனால் நிர்வாக அதிகாரி அல்லது கமிஷனரானவர் அப்போதைக்கப்போது அக்கால அளவை அதிகப்படுத்தலாம்.

குறிப்பு

இது மதராஸ் டிஸ்டிரிக்ட் போர்டு ஆக்ட் 231-வது செக்ஷனுக்கு ஒத்தது. ஒரு கிராம பெரியதனக்காரருக்காவது அல்லது கர்ணத்திற்காவது பஞ்சாயத்தின் அதிகார வரம்புக்குட்பட்ட எந்த ரெவின்யூ கிராம விஷயமாகவும் அதில் இருக்கிற யாதொரு நபர் அல்லது சொத்து விஷயமாக தமக்குத் தேவையான தகவல் கொடுக்கும்படி நிர்வாக அதிகாரியானவர் உத்தரவு செய்யலாம். அந்த உத்தரவின்படி நடந்து கொள்ளாவிட்டால் மேல் அதிகாரிகளுக்கு ரிப்போர்ட் செய்தால் அவர்கள் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுவார்கள். அந்த மாதிரியான தகவல் கொடுக்காதது 187-வது பிரிவின் படிக்கு குற்றமாகும். [வெங்கடநரசப்பா குறித்து (1894) 1 Weir 111]

பிரிவுகள் 164, 178(2) (XXV) படிக்கு விதிகள்
கிராம உத்தியோகஸ்தர்களிடமிருந்து கேட்கப்படக்கூடிய தகவல்

ஒரு பஞ்சாயத்தின் அதிகார வகுப்புக்குள் அடங்கிய ரெவினியூ கிராமம் ஒன்றின் பெரியதனக்காரரையாவது கர்ணத்தையாவது அவர்கள் இருவரையுமாவது, அந்தக் கிராமம் அல்லது அதன் யாதொரு பாகம் விஷயமாகவேனும் அதிலுள்ள யாதொரு நபர் அல்லது சொத்து விஷயமாக வேனும் அடியிற்கண்ட வகைகளுக்குள் அடங்குகிற எந்த விஷயத்தைப் பற்றியாகிலும் தமக்குத் தகவல் தெரிவிக்கும்படி அப் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி எழுத்து மூலமான உத்தரவு ஒன்றின் மூலமாகக் கேட்கலாம்:—

(1) பஞ்சாயத்து எல்லைகளுக்குள் இருக்கிற ஒரு நிலத்தின் ஸர்வே நம்பர், ஸப்-டிவிஷன், தரம், புஞ்சை நிலமா நஞ்சை நிலமாஎன்பது போன்ற விவரம், விஸ்தீர்ணம், தீர்வை, பதிவான கைப்பற்றுதாரின் அல்லது ஆட்சியாளரின் பெயர் ஆகிய இவை பற்றி கிராம ரெக்கார்டுகளில் கிடைக்கும் விவரங்கள்.

(2) பஞ்சாயத்து பரிபாலனத்துக்காகவென்று கிராம உத்தியோகஸ்தர்கள் வைத்து வருகிற ரெஜிஸ்டர்கள், கணக்குகள் ஆகிய இவைகளில் கிடைக்கக்கூடிய வேறு எவையேனும் விவரங்கள்.

குறிப்பு

இது புதிதாகசேர்க்கப்பட்ட அதிகாரம் ஆகும். இதனுல் கிராமத்திலேயே எல்லா சங்கதிகளும் அறிந்துக் கொள்ளலாம். இதற்காக வென்று தாசில்தாரிடத்திற்கும், ஜில்லா கலெக்டரிடத்திற்கும் போகவேண்டியதில்லே. கிராம உத்தியோகஸ்தர்களும் இதன் படிக்கு நடந்துக்கொள்ளவேணுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. அப்பேர்பட்ட கிராம உத்தியோகஸ் தர்களுக்கு இந்த விதியைக் காட்டவும். அப்படிக்காட்டியும் அவர் ஒப்புக்கொள்ளாவிட்டால் அவர் ஜனநாயகத்திற்கு விரோதி என்று சொல்லி தாசில்தாருக்கு மனுபோட்டு வேலேயி லிருந்து நீக்கிவிடலாம்.

கால வரையறை

சேரவேண்டிய தொகைகளை வசூலிப்பதற்கு காலவரையறை

165. இச் சட்டத்தின்படியாவது அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி சகாயச் சட்டம், ரெகுலேஷன் அல்லது உத்தரவின்படியாவது யாதொரு பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்து யூனியனுக்குச் சேரவேண்டிய யாதொரு வரி அல்லது இதர விஷயமாய் சந்தர்ப்பத்துக்கேற்றபடி (1) ஜப்தி முதலில் எப்போது செய்யப்பட்டிருக்கலாமோ அந்தத் தேதி முதற் கொண்டாவது, (2) வியாஜ்ஜியம் முதலில் எப்போது கொண்டுவரப்பட்டிருக்கலாமோ அந்தத் தேதி முதற் கொண்டாவது, (3) பிராது முதலில் எந்த தேதியிலே தொடரப்பட்டு இருக்கலாமோ அந்த தேதி முதற்கொண்டாவது, **மூன்று வருஷ காலம் கழிந்துபோன பிறகு** மேற்படி வரி அல்லது தொகை விஷயமாய் ஜப்தி எதுவும் செய்யக் கூடாது வியாஜ்ஜியம் எதுவும் கொண்டுவரவுங் கூடாது, பிராது எதுவும் தொடரவும் கூடாது,

குறிப்பு

பொது :— இந்த பிரிவு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கும், பட்டணம் பஞ்சாயத்துக்கும், கிராம பஞ்சாயத்துக்கும் சேர, வேண்டிய தொகையை வசூல் செய்வதில் காலவரம்பு 3 வருஷம் என்று கூறுகிறது. பஞ்சாயத்துகளுக்குச் சேரவேண்டிய தொகைகள் இவைகள் என்று பிரிவுகள் 135, 136, 137-களில் காணப்பட்டிருக்கிறது. இந்த பிரிவு இதரர்கள் பேரில் ஜப்தி, சிவில் வியாஜ்ஜியம கிரிமினல்கேஸ் தொடருவதைக் குறிக்கிறது 170-வது பிரிவு பஞ்சாயத்துமேல் இதரர்கள், இந்த சட்ட விஷயமாய்ச் செய்த காரியங்களுக்காக வியாஜ்ஜியம் தொடருவதை குறிக்கிறது. பஞ்சாயத்துக்காக சேரவேண்டிய துகைகளை நிர்வாக உத்தியோகஸ்தர், பிரஸிடென்டு, வைஸ்-பிரசிடெண்டு, மெம்பர்கள், அஜாக்கிரதையால் வசூல் செய்யாமல் காலாவதி ஆகும்படி விட்டு விட்டால் இவர்கள் 173-வது பிரிவின்படிக்கு உத்திரவாதிகளாகையால் அந்த கலாவதியான தொகைகளை அவர்களிடமிருந்து வசூலிக்கநேரிடும். அவர்கள்பேரில் சர்சார்ஜ் (Surcharge) ஏற்படுத்தி அவர்களை அந்தத் தொகைகளைக் கட்டும்படி செய்வார்கள். அதற்காக முன் ஜாக்கிரதையாக வசூலிக்க முடியாத துகைகளை 127-வது பிரிவின்படிக்கு கழித்துவிடப்பட்டது என்று பஞ்சாயத்து தீர்மானம் செய்துகொள்வது நலமாகும்.

இந்த பிரிவின் (1) ஜப்தி செய்வது, (2) வியாஜ்ஜியம்செய்வது (3) பிராது செய்வது, ஆக மூன்று வழிகள் மூலமாக பஞ்சாயத்துக்குச் சேரவேண்டிய தொகைகளை வசூலிப்பதைக் குறித்து கண்டிக்கிறது.

(1) ஜப்தி முதலில் எப்போது செய்யப்பட்டிருக்கலாமோ அந்தத் தேதி முதற் கொண்டு :— (1) தொழில் வரிக்காக ஜப்தியைச் செய்யவேண்டுமென்ருல் தொழில் வரியை பதினைந்து நாட்களுக்குள் கட்டவேண்டு மென்று நோட்டிஸ் கொடுத்திருக்க வேண்டும். பதினைந்து நாட்களுக்குள் கட்டாவிட்டால் தொழில் வரியை நோட்டீஸ் கொடுத்த பதினுருவது நாள்முதல் மூன்று வருஷத்திற்குள் ஜப்தி செய்யலாம், (2) வீட்டு வரிக்காக ஜப்தி செய்ய வேண்டு மென்ருல் அதற்கு முன்னதாக வீட்டு வரியில் ஒன்று கொடுக்கவேண்டும். அந்த பில்லில் கண்ட கெடுவிற்குள் வீட்டு வரியைக் கட்டாவிட்டால் வீட்டு வரியை வசூலிக்க ஜப்தி செய்யலாம். நோட்டீஸும் பில்லும் கொடாவிட்டால் ஜப்தி செய்வது நியாயமல்ல. [சுப்ரமண்யம்-எ.-குடியாத்தம் முனிஸிபாலிடி, A.I.R. 1916 M. 204 : : சிவகங்கா பஞ்சாயத்து போர்டு-எ.-பிள்ளையாத்தையன், A. I. R. 1937 M. 272 :: மினுல்லா உஸேன்-எ.-ஆதோனி முனிஸிபாலிடி, 1937 M. 429 :: பத்மநாபா-எ.-கோயம்புத்தூர் முனிஸிபாலிடி A. I. R. 1938 M 282] இதனுல் ஏற்படுவது என்ன வென்ருல் ஜப்தி செய்யவும், பிராது செய்யவும் நோட்டி

ஸூம் பில்லும் கொடுப்பது அவசியமென்றும், வியாஜ்ஜியத்திற்குகட்டாயம் இல்லை என்றும் ஏற்படுகிறது. [சிதம்பரம் முனிஸிபாலிடி-எ.-வேணுகோபால் A. I. R. 1937 M. 562=I. L. R. 1937 M. 985.] 174-வது பிரிவின்படிக்கு ஜப்தி செய்வதில் யாதொரு பிசகுகள் இருந்தாலும், ஜப்தித் தொகையைக்கட்டவேண்டி இருந்தால், ஜப்தியின் மூலமாய் உள்ள பிசகுகள் ஒட்டி ஜப்தி மூலம் வசூலித்த பணத்தைத்திருப்பிக் கொடுக்க வேண்டியது இல்லை. [ராஜமந்திரி முனிஸிபாலிடி-எ.-பிரசாத், 1936 M. 857] ஜப்தியின் மூலமாய் அதிகமான தொகை வசூலித்தால் அதை திருப்பிப்பெறுவதற்கு பணத்தை செலுத்தியவருக்கு அதிகாரம் உண்டு. வியாஜ்ஜிய மூலம் பணத்தை வசூலித்துக்கொள்ள பாத்தியதை உண்டு [சம்சுதீன்-எ.-திருவாரூர் முனிஸிபாலிடி, A. I. R. 1928 M. 318.] வரியார் கட்டவேண்டுமோ அவருடைய சொத்துக்களைத்தான் ஜப்தி செய்யவேண்டும். [புருஷோத்தம்-எ.-பல்லாரி முனிசிபாலிடி (1891) 4 M. 467.]

ஒருவன் முன்னதாக வரி கொடுத்துவிட்டபோது அவன்தான் அடுத்த வருஷம்கூட கொடுக்கவேண்டியவன் என்றுக் கருதப்படும். [கல்கத்தா கார்ப்பொரேஷன்-எ.-பெங்கால் டுபான்ஸ் ரெயில்வே I. L. R. 1940-I. C. 585=A. I. R. 1940 C. 534.]

ஒருவர் பஞ்சாயத்துக்கு கொடுக்கவேண்டிய தொகையைக் கொடுக்கவில்லை என்று ஜப்திசெய்தது தப்பென்று நஷ்டபரிகாரம் கேட்கும் பட்சத்தில் அந்த தாவாவை ஆறு மாதத்திற்குள் நோட்டீஸ் கொடுத்து செய்யவேணும். ஆறுமாதத்திற்கு மேல் செல்லுபடியாகாது. [சேலம் முனிசிபாலிடி-எ.-பக்தவத்சலு, A. I. R. 1937 M. 117] பி. 170யை பார்க்கவும். ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு ஆறு மாதத்திற்கோ அல்லது இரண்டு மூன்று ஆறு மாதங்களுக்கோ ஒரு நபர் வரி செலுத்தவேண்டியிருந்தால் அவர் எந்த ஆறுமாதத்திற்கு வரி கட்டுகிறாரோ அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படி பெற்றுக்கொள்ளாமல் மொத்தத் தொகைக்கும் அவர் சொத்தை ஜப்தி செய்தால் அது சட்டப்படிக்கு செல்லத்தக்கதல்ல. அவருக்கு நஷ்ட ஈடு கட்டிக்கொடுக்கவேண்டும். [பாஹனி பாஸன்ன எ. லாங்பூர் முனிசிபாலிடி A. I. R. 1936 C. 542 (543). பி. 170-யையும், பி. 174 யையும் பார்க்கவும்.

ஒரு ஜப்தி நியாயமானதா என்று சிவில் கோர்ட்டார் விசாரிக்கலாம். [ஜோஷி காளிதாஸ்-எ.-டாகோர் முனிசிபாலிடி, (1883) 7 பாம்பே 399 (407). :: சசாங்கா சேகர் -எ.-சுதாம்சு மோஹன், 48 C, 45=59 I, C, 572 :: கோலகாட் முனிசிபாலிடி-எ.-சோனுராம், A.I.R. 1941 C. 609 (612)] மீதி விஷயங்களுக்கு செக்ஷன் 174 (3)யை பார்க்கவும்.

ஒரு வரியை கட்டவேண்டியதல்லாத ஒரு நபருடைய சொத்தை ஜப்தி செய்தால் செல்லாது. அம்மாதிரி அக்ரமமாய் செய்வதற்கு பஞ்சாயத்து பி. 174 படிக்கு நஷ்ட ஈடு கட்டிக் கொடுக்க வேண்டியதாகும். [மணிப்பூர் முனிசிபாலிடி-எ.-அஜிதியா பிரசாத், A. I. R. 1935 A. 51.]

ஒரு இறந்தவர் கட்டவேண்டிய வரிக்காக இருப்பவர்களுடைய சொத்துக்களை ஜப்தி செய்யக்கூடாது. இறந்தவருடைய சொத்துக்கள் இருப்பவர்களிடம் இருந்தால் அவைகளை மாத்திரம் ஜப்தி செய்யலாம். இருந்தவர்பேருக்கு அவர் இறந்த பிறகு நோட்டீஸ் அனுப்பினால் அது செல்லாது. [ராஜம்மாள்-எ.-ரஹமான், A. I. R. 1936 R. 202]

(2) வீட்டுவரி பாக்கியானால் அந்த வீட்டின் பேரில் பஞ்சாயத்து நோட்டீஸ் கொடுத்து வசூலிக்கலாம். அந்த வீட்டை முன் இருந்தவர் விற்றுவிட்டார். அதனால் வீட்டுவரியை விற்றவர் தான் கட்டவேண்டும் என்றால் செல்லாது. பி. 120 (2)யை பார்க்கவும். [மதருஸ் கார்ப்பரேஷன் எ. மீர்குலாம் 1946-1 M. L. J. Notes of Recent Cases Page No, 26 :: லக்னோ முனிஸிபாலிடி-எ -ரான்திலால், A. I. R. 1941 O. 305=63 Luck 307.] ஒருவர் தன் வீட்டு வரியைக் குறித்து ஆக்ஷேபித்து இருக்கும்போது அந்த ஆக்ஷேபணையை விசாரணை செய்யாமலே ஒரு பஞ்சாயத்து வியாஜ்ஜியம் தொடரும் பக்ஷத்தில் அது செல்லாது. [டேராடூன் டிஸ்டிரிக்ட் போர்டு-எ-ட்ராட்டர், A. I. R. 1939 R. 389.] ஒரு பஞ்சாயத்து தனக்கு செலுத்தவேண்டிய மொத்த வீட்டுவரிக்காகத் தாவாசெய்ய வேண்டும். அதில் ஏதாவது ஒரு பகுதியை விட்டுவிட்டால் அதற்காக பிறகு மற்றொரு தாவா செய்தால் அது செல்லாது. [கல்கத்தா கார்ப்பரேஷன் எ. அருணசந்திரா 60 C. 1470=A. I. R. 1934 M. 325] சாதாரணமாக, தாவாவிற்கு முந்தி கட்ட வேண்டிய வரிக்கு வட்டியும் கொடுக்கவேண்டியது கிடையாது. [பாட்னா முனிசிபாலிடி-எ-சூர்சந்த், A. I. R. 1942 பாட்னா 417] இம்மாதிரியான தாவாக்களை ஸ்மால் காஸ் கோர்ட்டில் செய்யலாம்.

(3) பிராது செய்வது:—செக்ஷன் 166யையும், 181யையும் பார்க்கவும். பிராது செய்வதற்கு முன் எதிரிக்கு சொத்து இல்லை என்று ஏற்படவேண்டும். அப்போதுதான்

பிராது செய்தால் செல்லும். [மீனுல்லா-எ.-ஆதோனி முனிசிபாலிடி, A. I. R. 1937 M, 429 : : ராணி எ. ஒஷானஸி (1884) 9 Madras 429] ஒரு நபரின் சொத்தை ஜப்தி செய்யமுடியாமல் போய்விட்டால் அவர் பேரில் மூன்றுமாத காலத்திற்குள் பிராது செய்யவேண்டும். ஒரு தடவை பிராது செய்யத் தவறிப்போனால், மறுபடியும் ஜப்தி செய்து சொத்து அகப்படாவிட்டால், அந் தக்காலம் முதல் மூன்று மாதத்திற்குள் பிராது செய்யலாம். இம்மாதிரியாக மூன்று வருஷத் திற்குள் அநேக தடவைகள் பிராது செய்யலாம். [G. O. No. 5313 dated 9—12—1936 : : கிருஷ்ணன்-எ.-கோழிக்கோடு முனிஸிபாலிடி, A. I. R. (1930 8 M. 709 : : சிதம்பரம் முனிசி பாலிடி-எ.-வேணுகோபால், A. I. R. 1937 M. 562 : : சிவகங்கா பஞ்சாயத்து போர்டு-எ.-பிள்ளத்தையன், A. I. R. 1937 M. 272.] ஒரு சிவில் வியாஜ்யம் தொடரப்பட்டதினாலேயே கிரிமினல் பிராது தடுக்கப்படவில்லை என்று ஏற்படுகிறது. [அஜிசுத்தௌலா- எ வாலாஜா முனிசிபாலிடி 1 Weir 731.]

பிராதுகள், வியாஜ்ஜியங்கள் முதலியவை

பிராது தொடர அதிகாரம் பெற்றுள்ள நபர்கள்

166. இச் சட்டத்தில் வேறே விதமாக வெளிப்படையாய் ஏற்பாடு செய் திருக்கிறபடிக்கன்றி மற்றபடி, போலீஸாராவது, நிர்வாக அதி காரியாவது, பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலாவது, கமிஷ னராவது, பஞ்சாயத்தினால், பஞ்சாயத்து யூனியன் கௌன் ஸிலினால், நிர்வாக அதிகாரியினால் அல்லது கமிஷனரி னால் இது விஷயத்தில் வெளிப்படையாய் அதிகாரம் கொடுக்கப்பெற்றுள்ள யாதொரு நபராவது, குற்றம் செய்யப்பட்டதிலிருந்து மூன்று மாதத்துக்குள்ளாக பிராது கொடுத்தாலொழிய, இச் சட்டத்துக்காகிலும், அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்துக்காகிலும் விரோதமாய்ச் செய்யப்பட்ட யாதொரு குற்றத்துக்காக எந்த நபரையும் விசாரணை செய்யக்கூடாது ; ஆனால் வரப்பெற்றுக் கொண்ட சங்கதியினாலாவது தங்களுக்குத் தெரியவந்த சங்கதி யினாலாவது அனுமானத்திலாவது குற்றங்கள் விஷயமாய் நீதி முறைமையில் அறிந்து கொண்டு செயலாற்ற சில மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குள்ள அதிகாரத்தைப்பற்றி (1898–ம் ஆண்டு V–வது மத்தியச் சட்டமாகிய) 1898–ம் ஆண்டு கிரிமினல் வழக்கு முறைச் சட்டத்தில் கண்ட ஷரத்துக்களுக்கு இதிலுள்ளதெதனாலும் பாதகமுண்டாக மாட்டாது.

ஆனால், இச்சட்டத்தின்படி லைஸென்ஸ் வாங்கிக்கொள்ளவோ அனுமதி பெறவோ தவறுவதானது, எந்தக் கால அளவுக்கு லைஸென்ஸ் அல்லது அனுமதி வேண்டியிருக்கிறதோ அப்படிப்பட்ட கால அளவு ஏதாகிலும் இருந்தால், அது முடி கிறவரையிலே, இந்தப் பிரிவின் காரியங்களுக்காக தொடர்ந்து செய்யப்பட்டு வருகிற குற்றமாய் இருப்பதாகக் கருதப்படும் ; மேலும், எந்தக்கால அளவும் குறிப்பிடப்பட் டிராவிட்டால், குற்றம் செய்ய ஆரம்பத்திலிருந்து பன்னிரண்டு மாதத்திற்குள் எப் போதாகிலும் பிராது கொடுத்துக்கொள்ளலாம்.

குறிப்பு

குற்றம் :—இதை பிராது செய்து ருஜுப்படுத்தவேண்டும். [ராமசாமி எ. சிவகாசி முனிசிபாலிடி A. I. R. 1937 M. 291] பஞ்சாயத்துகள் சிவில் கோர்ட்டு டிக்ரிகள் இருக்கும் போது அவைகளுக்கு விரோதமாக கிரிமினல் பிராதுகள் தொடரக்கூடாது. [மதேவ் பிரசாத் குறித்து, 32 All 620] ஒரு பிராது சம்மனில் எதிரி யாதொரு சட்டம் அதின் பிரிவின்கீழ் குற்றம் செய்தார் என்றால் போதாது, அவர் எம்மாதிரி குற்றம் செய்தார் என்று கண்டிருக்க வேண்டும். [ராஜா, எ. ஷாம்லால் A. I. R. 1941 B 19] மூன்று மாதத்திற்குள் பிராது செய்யவேண்டும். அதற்குமேல் செய்தால் செல்லாது. இந்தப் பிராதை நிர்வாக அதிகாரி யாவது, பஞ்சாயத்தால் அல்லது நிர்வாக அதிகாரி இடம் இது விஷயத்தில் வெளிப்படையாய் அதிகாரம் பெற்றுள்ள நபராவது செய்யலாம். இல்லாவிடில் இந்த பிராது செல்லாது. ஒரு பிராதை ராஜி செய்துக்கொள்ளும் பக்ஷத்தில் நிர்வாக அதிகாரியனவர், பஞ்சாயத்துக்கு அடுத்த மீட்டிங்கில் தெரியப்படுத்தவேண்டும். பிரிவு 167 யை பார்க்கவும். பிராதை அதிகார மில்லாதவர்கள் செய்தால் செல்லாது. பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்காக பஞ்சாயத்தும்,

பஞ்சாயத்துக்காக பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலும் பிராதை செய்தால் அது செல்லாது, லைசென்ஸ் குற்றங்களுக்கு மாத்திரம் 12 மாதத்திற்குள் தாவாச்செய்துக் கொள்ளலாம்.

இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளுக்காகிலும் .... நபரையும் விசாரணை செய்யக் கூடாது.—தண்டனைக்குள்ளாகக்கூடிய விஷயங்களில் பிராதுக்கு யாதொரு பாதகரமும் நேரக் கூடியதில்லை என்று வாதிப்பது சரியாகாது, சட்டத்தை அப்படியே வியாக்யானம் செய்ய வேண்டும், [சேஷப்பிரபு, குறித்து 66 I. C. 429] சேர்மன் அனுமதியின்மேல் பொதுவான பாட்டையில் வெட்டித்தள்ளிய மரத்தை அக்கிரமாக உபயோகப்படுத்தியதற்கு இந்த பிரிவு பொருந்தாது [அரசர்-எ.-ஆதம்கான், 9 M. L. T. 458 = 10 I. C. 577] அந்த குற்றம் இந்த சட்டத்தின் கீழ் குற்றமல்ல. அது இண்டியன் பினல் கோட்டின் பிரிவு 379-ன் கீழ் குற்றமாகும். அந்த பிரதை எப்போதுஆகிலும் செய்யலாம்.

நிர்வாக அதிகாரி, கமிஷனர், பிராது கொடுக்கப்படலாம் :—யாதொரு பிராதை லோகல் போர்ட் பிரஸிடெண்டாவது அல்லது அவரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட நபராவது நேரில் கொடுக்கவேண்டியதில்லை. மாஜிஸ்டிரேட்டுக்கு அனுப்பப்பட்டால் போதுமானது இந்தியன் பினல் கோட் 21 (10)-வது செக்ஷன்படி பொதுஜன ஊழியராதலால் அவர் பிரமாணத்தின்மேல் உறுதிமொழி கொடுக்கவேண்டியதில்லை.

பிராது வராமலிருந்தால்:—மதராஸ் டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடி 52-வது செக்ஷன்படி பிராது தொடரப்பட்டது. சாமான்கள் பிறப்பிக்கப்பட்டன. பிராது இல்லாததால் பிராதுக்கு வாய்தா தேதி நோட்டிஸ் கொடுக்கவில்லையாதலால் அவர் அந்த தேதியில் ஆஜராகவில்லை ஆயினும் பிராது கிரிமினல் ப்ரொஸிஜர்கோட் 247-வது பிரிவின்படி பிராது ஆஜராயில்லை என்று தள்ளப்பட்டது. அதனால் எதிரியை விடுதலை செய்யப்படவில்லை என்று பிராது தள்ளியதற்கு ஹைகோர்டில் அப்பீல் செய்யலாம் என்று தீர்ப்பு கூறப்பட்டது, [நூனே பான காலு-எ.-சுப்பாராவ், A. I. R. 1928 Mad, 1158]

பிராதை வாபீஸ் வாங்கிக்கொள்ளுதல் :—பிராதை வாபீஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமானால் கிரிமினல் ப்ரொசீஜர் கோட் 248-வது செக்ஷன்படி வாபீஸ் வாங்கிக்கொள்ளவேண்டும். [ஸிசூர் குமார் மித்தர் - எ. - கல்கத்தா கார்பொரேஷன், A. I. R. 1926 Cal. 786.]

புனர் விசாரணை:—கிரிமினல் ப்ரொசீஜர் கோட் 350-வது செக்ஷன்படி ஒரு மாஜிஸ்டிரேட்டினின்றும், மற்றொரு மாஜிஸ்டிரேட்டுக்கு மாற்றப்பட்டால் புனர்விசாரணை நடைபெறவேண்டும்.

வெளிப்படையாய் அதிகாரம் கொடுக்கப்பட்ட நபர்—அதிகாரம் வெளிப்படையாய் கொடுக்கப்படவேண்டும், இல்லையேல் பிராது செல்லாது. லைசென்ஸுடன் சேர்ப்பிக்கப் பட்ட ப்ளான்படி யில்லாமல் மாறி செய்ததற்காக பிராது தொடரும்படி அதிகாரம் கொடுக்கப் பட்ட ஸானிடெரி இன்ஸ்பெக்டர் அத்துடன் லைஸென்ஸின் கால அளவை கடந்து செய்ததற்காக மற்றொரு பிராதையும் தாக்கல் செய்தார், சானிடெரி இன்ஸ்பெக்டருக்கு கால அளவை கடந்து செய்ததற்காக நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி அதிகாரம் கொடுக்காததால் அதற்காக தண்டிக்கப்பட்ட தண்டனை நியாயமானதல்ல என்று தீர்ப்பு கூறப்பட்டது. [கள்ளப் பெருமாள் 11 W, 120 = 55 I. C. 599]. இதர காரியங்களுக்காக கொடுக்கப்பட்ட அதிகாரம் பிராது தொடர கொடுக்கப்பட்ட அதிகாரமாகாது. [பப்ளிக் ப்ராசிக்யூடர்—எ.-சங்கரலிங்க 43 Mad, 787 = 50 I, C, 103

அன்னியரால் பிராது தொடரல்,—நிர்வாக அதிகாரி அல்லது கமிஷனர் ஒருவரது செல்வாக்குக்குப்பயந்து அவர் பேரில் பிராது தொடராவிட்டால் கிரிமினல்ப்ரோசிஜர்கோட், 190 (1) (c) படி ஒரு அன்னியர் மேஜிஸ்ட்ரேட் இடம் சென்று பிராதை பிறப்பிக்கும்படி செய்யலாம்.

குற்றங்கள் விஷயமாய் ராஜி செய்துகொள்வது

167. இச் சட்டத்துக்காவது அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாய சட்டத்துக்காவது விரோதமான யாதொரு குற்றத்தின் விஷயமாய் ராஜி செய்து கொள்ளலாமென்று விதிகளினால் நிர்ணயிக்கப்படக் கூடுமானால், அப்படிப்பட்ட குற்றத்தின் விஷயமாய் நிர்வாக அதிகாரி அல்லது கமிஷனர் நிர்ணயிக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் மேல் விசாரணைக்கும், உட்பட்டு ராஜி செய்து கொள்ளலாம்.

குற்றங்களை ராஜிசெய்து கொள்வது. (க-XXXII-32) விதிகள் பி. 167 படிக்கு

அடியிற்கண்ட ஷெட்யூலின் முதல் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஷை சட்டத்தைச் சேர்ந்த பிரிவுகளின் பிரகாரம் தண்டிக்கப் படத்தக்க குற்றங்கள் அந்த ஷெட்யூலின் நான்காவது பத்தியில் குறிப்பிட்டுள்ளபடி ராஜி செய்து கொள்ளப்படத் தக்கவையாகும் அல்லது அக் குற்றத்துக்காகத் தொடரப்பட்ட ஒரு பிராது எந்தக் கோர்ட்டாருக்கு முன் பைசலாகாமல் நடந்து கொண்டிருக்கிறதோ அந்தக் கோர்ட்டாரின் அனுமதியுடன் ராஜிசெய்துகொள்ளப்படத்தக்கவையாகும். அப்படிப்பட்ட ஒரு குற்றம் விஷயமாய் ராஜி செய்துகொள்வதற்காக **நிர்வாக அதிகாரி ரீஜினல் இன்ஸ்பெக்டரின் அனுமதியை முன்னதாகப் பெறவேண்டும்.**

168-வது பிரிவையும் பார்க்கவும்.

ஷெட்யூல்.

பிரிவும், உட் பிரிவும் அல்லது பகுதியும்	குற்றம்	மேற்படி சட்டத்தின் படிக்கான தண்டனை.	ராஜி செய்து கொள்ளப் படத்தக்கதா அல்லது கோர்ட்டாரின் அனுமதியுடன் ராஜி செய்து கொள்ளப்படத் தக்கதா என்பது.
(1)	(2)	(3)	(4)
82 (a)	பொதுப் பாட்டையிலாவது, பொதுப் பாட்டையின் மேலாவது சட்ட விரோதமாகச் சுவர் எழுப்புவது அல்லது வேலிபோடுவது முதலியவை.	நூறு ரூபாய்	ராஜி செய்து கொள்ளப் படத்தக்கது.
82 (b)	பொதுப் பாட்டை முதலியவற்றின் அருகிலுள்ள ஓரிடத்தில் சட்ட விரோதமாகக் கல் வெட்டி யெடுப்பது.	ஐம்பது ரூபாய்	மேற்படி
82 (c)	ஜலதாரையின்மேல் சட்ட விரோதமாகக் கட்டம் கட்டுவது.	இருநூறு ரூபாய்	அக் குற்றத் துக்காகத் தொடரப்பட்ட பிராது எந்தக் கோர்ட்டாருக்கு முன் பைசலாகாமல் நடந்து கொண்டிருக்கிறதோ, அந்தக் கோர்ட்டாரின் அனுமதியுடன் ராஜி செய்துக் கொள்ளப்படத் தக்கது.
100 (1)	லைசென்ஸில்லாமலோ லைசென்ஸுக்கு முரணாகவோ, சொந்தமார்க்கெட் ஒன்றைப் புதிதாக ஏற்படுத்துவது, அல்லது சொந்த மார்க்கெட் ஒன்றைத் தொடர்ந்து வைத்துவருவது.	ஐந்நூறு ரூபாய்	ராஜி செய்துகொள்ளப் படத்தக்கது.
100 (3)	ஸர்டிபிகேட்டில்லாமல் சொந்த மார்க்கெட்டில் கட்டணங்கள் விதித்து வாங்குவது.	நூறு ரூபாய்	மேற்படி
102	ஒரு பிராணியையாவது வஸ்துவையாவது பொது மார்க்கெட்டிலோ சொந்த மார்க்கெட்டிலோ அனுமதியின்றி விற்பனை செய்வது அல்லது விற்பனை செய்வதற்காகக் காட்டிவைப்பது.	இருபது ரூபாய்	ராஜி செய்து கொள்ளப் படத்தக்கது.

பிரிவும், உட் பிரிவும் அல்லது பகுதியும்	குற்றம்	மேற்படி சட்டத்தின் படிக்கான தண்டனை.	ராஜி செய்து கொள்ளப் படத் தக்கதா அல்லது கோர்ட்டாரின் அனுமதி யுடன் ராஜி செய்து கொள்ளப்படத் தக்கதா என்பது
[1]	(2)	(3)	(4)
103	தடை செய்த பிறகாவது லைசென் ஸில்லாமலாவது ரெகுலேஷன்களுக்கு முரணாகவாவது பொதுப் பாட்டை களிலோ இடங்களிலோ வஸ்துக்களை விற்பனை செய்வது முதலியன.	பத்து ரூபாய்	இக் குற்றத்துக்காகக் தொடரப்பட்ட பிராது எந்தக் கோர்ட்டாருக்கு முன் பைசலாகாமல் நடந்து கொண்டிருக்கிற தோ அந்தக் கோர்ட்டா ரின் அனுமதியுடன் ராஜி செய்து கொள்ளப்படத் தக்கது.
106 (b)	தடை செய்த தூரத்துக்குள் ஒரு பொது இடத்தையாவது பாட்டையோரத்தை யாவது இறங்குமிடமாகவோ, இறக்கு மிடமாகவோ, தங்குமிடமாகவோ பார வண்டி நிற்குமிடமாகவோ உபயோ கிப்பது.	ஐம்பது ரூபாய்	மேற்படி
107 (1)	லைசென்ஸில்லாமலோ லைசென்ஸுக்கு முரணாகவோ பாரவண்டி நிற்குமிடத் தைப் புதிதாக ஏற்படுத்துவது அல் லது சொந்த பார வண்டி நிற்கு மிடத் தைத் தொடர்ந்து வைத்து வருகிறது.	இருநூறு ரூபாய்	மேற்படி
109 (a)	ஆடுமாடு அடிக்கும் பொது இடங்களுக்கு வெளியே விதிகளை மீறி பிராணிகளைக் கொல்வது, வெட்டுவது, அல்லது தோலுரிப்பது முதலியன.	மேற்படி	மேற்படி
109 (b)	லைசென்ஸ் இல்லாமலோ லைசென் ஸுக்கு முரணாகவோ விற்பனைக்கு எனும் காரியங்களுக்காகப் பிராணி கொல்வது.	இருபது ரூபாய்	மேற்படி
110 (1)	கட்டடங்களுக்குக் கொடுக்கப் பட்ட நம்பரை சட்ட விரோதமாக அழிப்பது முதலியன.	ஐந்து ரூபாய்	மேற்படி
110 (2)	நம்பரை மீண்டும் போடும்படி கேட்டுக் கொண்டபோது அவ்வாறு போடத் தவறி விடுவது.	இருபது ரூபாய்	ராஜி செய்து கொள்ளப் படத்தக்கது.
111	லைசென்ஸ் இல்லாமலோ லைசென்ஸ் ஸுக்கு முரணாகவோ நிர்ணயிக்கப் பட்ட யாதொரு காரியத்துக்காக ஓரி டத்தை உபயோகிப்பது.	நூறு ரூபாய்	இக் குற்றத்துக்காகத் தொடரப்பட்ட பிராது எந்தக் கோர்ட்டாருக்கு முன் பைசலாகாமல் நடந்து கொண்டிருக்கிற தோ அந்தக் கோர்ட்டா ரின் அனுமதியுடன் ராஜி செய்து கொள்ளப்படத் தக்கது.

168. நிர்வாக அதிகாரியால் அல்லது கமிஷனரால் தொடரப்படுகிற ஒவ்வொரு பிராதும், குற்றம் சம்பந்தமாய் ராஜி செய்து கொள்ளப்பட்ட ஒவ்வொரு விஷயமும், அவரால் சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற் போல் பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலுக்கு அதன் அடுத்த கூட்டத்தில் தெரிவிக்கப்படவேண்டும்.

பிராதுகளைப் பற்றியும் ராஜி விஷயங்களைப் பற்றியும் பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலுக்குத் தெரிவிக்க வேண்டுமென்பது

குறிப்பு

பி. 168.—நிர்வாக அதிகாரி ஒரு பிராதை ராஜி செய்துக்கொண்டால் அவர் அதை பஞ்சாயத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், பிரிவு 187 படிக்கு குற்றமாகும். ஆகையால் பிரசிடெண்டுகளும், நிர்வாக உத்தியோகஸ்தர்களும். அதி ஜாக்கிரதையாக அடுத்த பஞ்சாயத்து மீட்டிங்கிலேயே தாவாக்களைக் குறித்து தெரியப்படுத்த வேண்டும். கமிஷனர்களும் அதே மாதிரி நடந்துகொள்ள வேண்டும். ராஜி செய்து கொள்வதை குறித்து பி. 167யை பார்க்கவும்.

169. (1) யாதொரு பஞ்சாயத்து தலைவராவது நிர்வாக அதிகாரியாவது, பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலின் அக்கிராசனராவது அக்கிராசனராவது உப ராவது கமிஷனராவது யாதொரு அங்கத்தினராவது தம்முடைய உத்தியோக சம்பந்தமான அலுவலை நடத்துகிற போதாகிலும் அந்தப்படி நடத்துவதாகப் பொருள்படுகிற போதாகிலும், செய்திருப்பதாகச் சொல்லப்படுகிற யாதொரு குற்றம் அவர்மேல் சாட்டப்பட்டால், அரசாங்கத்தாரின் அனுமதியை முன்னதாகப் பெற்றலன்றி மற்றப்படி, எந்தக் கோர்ட்டாரும் அப்படிப்பட்ட குற்றம் விஷயமாய் நீதி முறைமையில் அறிந்துகொண்டு விசாரணை செய்யக்கூடாது.

தலைவர், நிர்வாக அதிகாரி, அக்ராசனர், கமிஷனர், அங்கத்தினர்கள் பேரில் பிராது தொடர்வதற்காக அனுமதி பெறவேண்டும்

(2) (1) உட்பிரிவின்கீழ் முன்னதாக அனுமதி வழங்கும்போது சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற்போல் ஷ தலைவர், நிர்வாக அதிகாரி, அக்கிராசனர், உப அக்கிராசனர் அல்லது கமிஷனர் மேற்படி வழக்கு பைசல் செய்யப்படுகிறவரையில் அவரது கடமைகளைச் செயலாற்றக்கூடாது என்று உத்தரவிட அரசாங்கத்தாருக்கு அதிகாரம் உண்டு.

குறிப்பு

பொது.—இந்த பிரிவின் முக்கியமான பொருள் என்ன வென்றால் எந்தக் கோர்ட்டாரும் அரசாங்கத்தார் அனுமதியின்றி இந்த பிரிவின் கீழ் பிராது பிடிக்கக்கூடாது. இந்த பிரிவு கிரிமினல் பிராதுகளை குறித்து தெரியப்படுத்துகிறது. அதே மாதிரியாக பி. 170 சிவில் வியாஜ்ஜியங்களை குறித்து தெரிவிக்கிறது. எதிரியின் வாதத்தை அனுசரித்து நடத்தும் காரியமல்ல. [ஹோரிராம் குறித்து, A. I. R. 1939. F. C. 43 (55)] அனுமதி இல்லாவிட்டால் பிராதைத் தள்ளிவிடவேண்டும். எதிரியை விடுதலை செய்வதல்ல. இந்தச் செக்ஷனின் கீழ் நல்லெண்ணமா ? கெட்ட எண்ணமா ? என்று கவனிக்க வேண்டியது இல்லை. உத்தியோக முறையில் ஒரு காரியம் செய்திருந்தால் அனுமதி கட்டாயம் வேண்டும். [அருணாசலம்-எ-தணணீர்மலையன் A. I. R. 1947 M. 335 : : கருப்பையா-எ.-கிருஷ்ண, A. I. R. 1937 M. 437 : : குருசுரன் எ. மதரூஸ் பிராவின்ஸ் A. I. R. 1944 F. C. 41 (45),] ஆனல் லஞ்சம் பெற்றுக் கொள்ளுவது உத்தியோகமுறையில் சேர்ந்தது என்று சொல்லமுடியாது [ஹோரிராம் குறித்து, A. I. R. 1939 F. C. 43 (52) : : எட்கார் குறித்து, A. I. R. 1944 F. C. 66 (67) :: பீஹார் பிராவின்ஸ்-எ.-ராமேஸ்வர், A.I.R. 1945 பாட்ண 136 (140)] ஒரு முனிசிபல் கட்டிடத்திற்குள் சண்டைபோட்டுக்கொண்டிருந்த குப்பைக்கார மேஸ்திரியை தொந்தரவு செய்யக்கூடாதென்று (Health Inspector) சுகாதார உத்யோகஸ்தர் அவனைத்திட்டி, அடித்து, துரத்தினர். அதற்கு அவன் பிராதுச் செய்தான். இந்தச் பிரிவின்படிக்கு உத்யோகஸ்தர் உத்யோக முறையில் நடந்துக்கொண்டார் என்றும், அந்தத் தாவா செய்யவேண்டு மென்றல்

அரசாங்கத்தாரின் அனுமதி வேண்டுமென்றும் பிராதைத் தள்ளிவிட்டார்கள். [ராமச்சந்திரா குறித்து, A. I. R. 1946 M. 97 : : வீரபத்திரசாமி குறித்து [A. I. R. 1947 M. 190.] ஒருவர் தனக்கு ஓட்டுகொடா விட்டால் அடிப்பதாக சொன்னதற்கும் அல்லது, அவர்கள்பேரில் பொய்க்கேஸுகள் செய்வதாகச் சொன்னதற்கும் பிராது செய்வதற்கு அரசாங்கத்தாருடைய அனுமதி வேண்டியதில்லை. [கரூர் முனிசிபல் கௌன்சில் சேர்மென் குறித்து, 1 Weir 243 : : நூனேபானகாலு-எ.-சுப்பாராவ், A.I.R. 1928 Mad. 11.] ஒரு மெம்பர் ஒரு மீட்டிங்கில் அவதூறு பேசினால், அதற்கு தாவா செய்யவேண்டுமென்றால் அரசாங்கத்தின் அனுமதி வேண்டும். ஒரு மீட்டிங்கில் ஒரு மெம்பர் கையெழுத்துப்போட வேண்டுமென்று மீட்டிங் புஸ்தகத்தை பிடுங்கிய தற்கு தாவா செய்யவேண்டு மென்றால் அரசாங்கத்தின் அனுமதி வேண்டும். [சத்யநாராயணு எ.,வெங்கண்ணு, 1935 M. W. N. 10] ஒரு மெம்பர் ஒரு மீட்டிங்கில் சொன்னதற்கு அரசாங் கத்தின் அனுமதிவேண்டி இருந்தபோதிலும் அவர் அதே வார்த்தைகளை வெளியில் சொன்னால் அதற்குத் தாவா செய்ய அரசாங்கத்தின் அனுமதி வேண்டியதில்லை. [அருணுசலம்-எ.-தண்ணீர்மலையன், A. I. R. 1947 M. 335.] மெம்பர்களும், அந்நியர்களும் செய்த காரியத் திற்கு அரசாங்க அனுமதி வேண்டி இருந்தால், மெம்பர்கள் வரையில் அனுமதியின்றி தாவா செய்யக்கூடாது. அந்நியர் பேரிலுள்ள தாவாவை விசாரிக்கலாம். [சுப்பிரமண்யா, A. I. R. 1940 Mad. 297.]

1955-ம் வருடம் ஆவடியில் காங்கிரஸ் கூட்டம் நடந்த பொழுது, திருமுல்லை வாயில் பஞ்சாயத்து பாட்டை (ரோடு) ஓரங்களில் கடைகள் வைக்க ரூபா. 4,000-க்கு முருகேசர் குத் தகைக்கு எடுத்துக்கொண்டு, பஞ்சாயத்து தலைவரிடம் ரூபா. 4,000-ம் கட்டினர். அந்த குத்தகை ரத்து செய்யப்பட்டது. ரூபா. 4,000-த்தை பஞ்சாயத்து தலைவர் முருகேசருக்கு திருப்பிக் கொடுப்பதற்கு பதிலாக, ரூபா. 945-யைக் மீத்திக்கொண்டு மீதியை கொடுத்தார். பிறகு அவர் பஞ்சாயத்து தலைவராக இருந்தது நீங்கிவிட்டது. அதற்கு பிறகு அதன் பேரில் இண்டியன் பீனல் கோர்டு (I. P. C.) 409 பிரிவு படிக்கு நம்பக துரோகத்துக்காகவும், பணத்தை துர்வினியோகப் படுத்தியதற்காகவும், முருகேசர் ஷெ மாஜி பஞ்சாயத்து தலைவர்மீது திருவள்ளூர் முதல்தர மாஜிஸ்ட்ரேட்டிடம் கிரிமினல் தாவா செய்தார்.

மாஜி பஞ்சாயத்து தலைவர் தன்னை இந்த 1-வது உப-பிரிவின் படிக்கு (1) தன்பேரில் அரசாங்கத்தாரின் முன் அனுமதி (Sanction) இன்றி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தாவா செய் தது சட்டப்படி செல்லாது என்றும். (2) மேல்படி ரூபா. 945-யை தனக்கு முருகேசர் கடனுக கொடுக்கும்படி சொன்னதற்கு ஷெ ரூ. 945-யை நிறுத்தி வைத்துக் கொண்டதாகவும் வாதாடி ஞர். மாஜிஸ்ட்ரேட் ஆனவர் மேற்படி ரூபா. 945-யை திருப்பிக் கொடுக்காதது, குற்ற மாகிறது என்றும், ஆனல் அரசாங்கத்தாரின் அனுமதி (Sanction) இன்றி அந்த கேஸை செய்திருப்பதால் அது செல்லாது என்று அந்த கேஸை தள்ளி விட்டார்.

அதன் பேரில் மதராஸ் அரசாங்கம் மதராஸ் ஐகோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொண் டார்கள். அந்த அப்பீலில் ஐகோர்ட் ஜட்ஜு கவுரவ சோம சுந்தரம் தீர்ப்பு செய்ததாவது.— அந்த கேஸ் ஆரம்பித்த பொழுது எதிரி பஞ்சாயத்து தலைவராக இல்லை. ஆகையால் இந்த கேஸுக்கு அரசாங்கத்தாரின் முன் அனுமதி (Sanction) வேண்டியதில்லை. அதனுல் கேஸ் தள்ளியது பிசகு என்றும் இரண்டாவதாக.

எதிரி மாஜி தலைவர் ரூபா. 945-யை முருகேசருக்கு கொடுக்காதது குற்றம் என்று, மாஜி தலைவரை 2 வருடம் கடுங்காவலில் இருக்க தண்டித்து ரூபா. 2,000-அபராதம் போட்டார். அந்த ரூபா. 2,000-மும் அபராதம் செலுத்தா விட்டால், இன்னும் 6 மாதம் கடுங்காவலில் இருக்க வேண்டு மென்று தண்டனை செய்தார். அந்த ரூபா. 2,000-மும் வசூலானல் அதில் ரூபா. 1,000-முருகேசருக்கு கொடுக்கும்படி உத்தரவு செய்தார் (இண்டியன் எக்ஸ் பிரஸ் தேதி. 5-4-1959 பக்கம் 6.)

பி. 169 (2) இந்த உபபிரிவை புதிதாக சேர்க்கப்பட்டது. முன் சட்டங்கள் படிக்கு தலைவர் பேரில் ஒரு பக்கம் கேசு இருந்தாலும் மீதி விஷயங்களில் அவர் தலைவராகவே இருப் பார். இப்போது அந்த கேசு முடியும் வரையில் அப்பேர்ப்பட்ட தலைவரை அந்த தலைவர் பதவியிலிருந்து அரசாங்கம் நீக்கி வைக்கலாம்.

பி. 169 (1) தம்முடைய உத்தியோக சம்பந்தமான அலுவல் நடத்துகிற போதா கிலும் அந்தப்படி நடத்துவதாகப் பொருள் படுகிற போதாகிலும் செய்திருப்பதாகச் சொல் லப்படுகிற யாதொரு குற்றம் அவர்மேல் சாட்டப்பட்டால், அரசாங்கத்தாரின் அனுமதியை

முன்னதாகப் பெற்றுலன்றி மற்றப்படி.—இதன் பொருள் என்ன வென்றால் குற்றம் செய்யப்பட்டதாக சொல்லும் நபர் பிராது செய்யும் காலத்தில் மெம்பராகவோ, தலைவராகவோ பதவியில் இருந்தால், அரசாங்கத்தின்முன் அனுமதி கட்டாயம் வேண்டும். தலைவராக அல்லது மெம்பராக நீங்கியபிறகு அவர்கள் பேரில் கேசுகள் செய்யும்போது அதற்கு யாதொரு அரசாங்கத்தாரின் முன் அனுமதி (Sanction) வேண்டியதில்லை. அந்த குற்றமானது ஒருவர் தலைவராக இருக்கும் காலத்தில் செய்திருந்தால், அவர் தலைவராக இருக்கும் வரையில் தான் முன் அனுமதி வேண்டும். அவரே தலைவராக இருப்பது காலவரையினுல் முடிந்து மறுபடியும் தலைவராக வந்தாலும் அப்போதும் அந்த குற்றத்திற்காக தாவா செய்ய முன் அனுமதி (Sanction) வேண்டியதில்லை.

பஞ்சாயத்தார் முதலியவர்கள்மேல் நஷ்ட ஈடு முதலியவைகளுக்காக தாவாக்களை நடத்த முன்னதாக நோடீஸ் கொடுக்க வேண்டும்

170. (1) இந்தச் சட்டத்தின்படிச் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகப் பொருள்படுகிற யாதொரு செய்கை விஷயமாகவாவது, இச் சட்டத்தையாகிலும் அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச் சட்டம், ரெகுலேஷன் அல்லது உத்தரவையாகிலும் நிறைவேற்று வகையில் யாதொரு அசட்டை அல்லது தவறுதல் நேரிட்டதாகச் சொல்லப்பட்டால் அது விஷயமாகவாவது, யாதொரு பஞ்சாயத்து மேலாயினும் அல்லது அதன் தலைவர் மீது அல்லது யாதொரு பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் மீது அல்லது அதன் அக்கிராசனர் மீது அல்லது கமிஷனர் மீது அல்லது அதன் யாதொரு அங்கத்தினர், உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் மீது அல்லது அத்தகைய பஞ்சாயத்து, தலைவர், பஞ்சாயத்து யூனியன் கௌன்சில், அதன் அக்கிராசனர், நிர்வாக அதிகாரி, கமிஷனர், அங்கத்தினர், உத்தியோகஸ்தர் அல்லது ஊழியரின் கட்டளைப்படி செயல்படுகிற யாதொரு நபர் மேலாயினும், எதற்காக **வியாஜ்ஜியம்** கொண்டு வரப்படுகிறதோ அல்லது சட்டப்படிக்கான **வேறே நடவடிக்கை** எடுத்துக் கொள்ளப்படுகிறதோ, அந்தக் காரணத்தையும் கோரப்படுகின்ற பரிகாரத்தின் **தன்மையும், கேட்கிற நஷ்டஈட்டுத் தொகையும்,** வியாஜ்ஜியம் கொண்டுவர அல்லது சட்டப்படிக்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ள உத்தேசிக்கிற வாதியின் பெயரையும், இருப்பிடத்தையும், கண்டெழுதியுள்ள ஒரு நோட்டிஸை அந்தப் பஞ்சாயத்தினுடைய அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலினுடைய அலுவலகத்தில் சேர்ப்பித்த பின்பு, அடுத்த இரண்டு மாதம் கழிகிறவரையில் 171-வது பிரிவின் நிபந்தனைகளுக்குட்பட்டு அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் எதையும் கொண்டுவரக் கூடாது அல்லது சட்டப்படிக்கான வேறே நடவடிக்கை எதையும் எடுத்துக்கொள்ளக் கூடாது ; மேலும், அப்படிப்பட்ட யாதொரு தலைவர், நிர்வாக அதிகாரி, அக்கிராசனர், கமிஷனர், அங்கத்தினர், உத்தியோகஸ்தர், ஊழியர் அல்லது நபர் மேலாவது மேற்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்படுகிற பட்சத்திலே, மேற்படி நோட்டிஸை அவரிடம் ஒப்புவிக்கவும் வேண்டும்; அல்லது அவருடைய இருப்பிடத்தில் சேர்ப்பிக்கவும் வேண்டும்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கையும், அது ஸ்தாவர சொத்தைவரப் பெற்றுக்கொள்வதற்காவது அதற்குள்ள பாத்தியதையை நிர்ணயித்துக்கொள்வதற்காவது எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கையாய் இருந்தாலொழிய, வியாஜ்ஜிய மூலம் உண்டான தேதிக்குப் பிறகு ஆறு மாதத்திற்குள்ளாகிலும், தீங்கு அல்லது சேதம் நேரிட்டுக்கொண்டே இருக்கும் விஷயத்தில் அப்படி நேரிட்டுக்கொண்டே இருக்கும் போதாகிலும் அது நின்று போன ஆறு மாதத்திற்குள்ளாகிலும் ஆரம்பிக்கவேண்டும்.

(3) (1) உட்பிரிவின்படி நோட்டிஸ் கொடுக்கப்படுகிற யாதொரு பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலில் அல்லது நபர் நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னமே அங்கீகரிக்கும்படி வாதிக்கு ஈடுகாட்டியிருந்து அப்படிப்பட்ட நடவடிக்கையில் அந்தப்படி ஈடுகாட்டப்பட்ட தொகைக்கு அதிகமாக வாதிக்குக் கிடைக்காதிருக்கும் பட்சத்தில், அவர் மேற்படி பஞ்சாயத்தாவது பஞ்சாயத்து யூனியன் கௌன்

சிலாவது நபராவது அந்தப்படிச் செலுத்திக்காட்டின பிறகு, தாம் செய்து இருக்கிற எந்தச் செலவுகளையாகிலும் வசூலிக்கக்கூடாது ; அல்லாமலும், அப்படிச் செலுத்திய பிறகு பிரதிவாதிக்குப் பிடித்த சகல செலவையும் வாதி செலுத்தவும் வேண்டும்.

குறிப்பு

பி. 170. (1) பொது.—இந்த மொத்த பிரிவும் நஷ்ட பரிகாரத்தைக் குறித்தது [திருவொத்தியூர் பஞ்சாயத்து போர்ட்-எ.-வெஸ்டர்ன் இந்தியா மேட்சஸ் அண்டு-கோ, **I. L. R.** 1939 **M.** 566 (F. B.) = **A. I. R.** 1939 **M.** 421 : : கோவிந்தா-எ.-கும்பகோணம் தாலுக்கா போர்ட், (1909) 32 **M.** 371 (**F. B.**)] இந்த செக்ஷன் தாவாக்களைத் தடுக்கவில்லை. ஆனல் அவைகளில் காலத்தைக் குறைக்கிறது. [பார்வதிப்பா-எ.-ஹூப்ளி முனிஸிபாலிடி, **I. L. R.** 1937 **B.** 807 = **A. I. R.** 1937 **B.** 490 (492)]

இது ஸ்தாவர சொத்துக்களுக்குப் பொருந்தாது. டிஸ்டிரிக்ட்டுகளுடைய (பஞ்சாயத்து களுடைய) அலுவல்களினுல் ஒருவருக்கு நஷ்டம் உண்டாகும் பக்ஷத்தில் அந்த நஷ்டத்துக்கு ஈடுகேட்கும் தாவாவை டிஸ்டிரிக்ட்டு போர்டின் (பஞ்சாயத்து போர்டின்) பேரிலேயே செய்ய வேண்டும். அதை நிர்வாக அதிகாரி அல்லது பிரஸிடெண்டின் பேரில் செய்தால் செல்லாது. அந்த மாதிரி தாவாக்களுக்கு, முன்னதாக இரண்டு மாதங்கள் கெடுவு கொடுத்து நஷ்டஈடு தொகையைக்கண்டு, வாதியின் விலாசம், வியாஜ்ஜிய மூலம் இவைகளை நன்ருக தெரியும்படி ஒரு நோட்டீஸ் கொடுக்கவேண்டும். நஷ்டத்தேதியிலிருந்து ஆறு (6) மாதத்திற்குள் தாவா செய்யவேண்டும் அந்த ஆறுமாத காலத்தோடு இந்த நோட்டீஸில் கண்ட இரண்டு மாதத் தையும் சேர்த்துக்கொள்ளலாம். அம்மாதிரி நோட்டீஸ் கொடுக்காவிட்டால் மொத்த தாவாவும் செல்லாது. இதே மாதிரியாக நிர்வாக அதிகாரி, பிரஸிடெண்ட், மெம்பர்கள் முதலியவர்கள் பேரில் உத்தியோக முறையில் செய்த காரியங்களுக்காக நஷ்டஈடு கேட்கும் தாவாக்கள் தாக் கல் செய்வதற்கு முன்னதாக மேல்கண்ட மாதிரி இரண்டுமாத கெடுவு கொடுத்து நோட்டீஸ் கொடுக்கவேண்டும். இந்த செக்ஷனுக்கும் கன்ட்ராக்டுகளின் மூலமாக உண்டாகும் தாவாக் களுக்கும் சம்பந்தம் கிடையாது. அதாவது கண்ட்ராக்ட் சம்பந்தமான தாவாக்களுக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டியதில்லை. அம்மாதிரி கண்ட்ராக்ட் விஷயமான தாவாக்களை மூன்று வருஷகாலத்திற்குள் செய்யலாம். அதே மாதிரி இன்ஜங்ஷன் தாவாக்களுக்கும் நோட்டீஸ் கொடுக்கவேண்டியதில்லை.

பி. 170. (1) நோட்டீஸ்.—நோட்டீஸில் யாவத்து விஷயங்களும் விவரமாக இருக்க வேண்டும். ஒரு தாவாவில் நோட்டீஸ் கொடுக்கவில்லை என்னும் விஷயத்தைக் குறித்து கீழ்க் கோர்ட்டிலேயே ஆன்சரில் தெரியப்படுத்த வேண்டும். அப்படியின்றி ஹைகோர்ட்டில், முதல் தடவையாக ஆக்ஷேபித்தால் அது செல்லாது. நோட்டீஸ் எதற்காக கொடுக்கப்படுகிறதென் ருல், (1) கோர்ட்டுக்குப் போகாமல் இருப்பதற்கும், (2) கேட்கும் பரிகாரத்தை பஞ்சாயத்து கொடுத்து வியாஜ்ஜியம் இல்லாமல் செய்து கொள்வதற்கும் நோட்டீஸ் கொடுக்கவேண்டும் என்று அறியவேண்டும். ஒரு பஞ்சாயத்தானது கலைக்கப்பட்ட போதும் அதற்கு உயிர் போவ தில்லை, அதை ஒரு ஸ்பெஷல் ஆபீஸர் பாதுகாத்து வருகிருர். ஆகையால் பஞ்சாயத்து பேரி லேயே நோட்டீஸ் கொடுத்தால் போதுமானது. நோட்டீஸ் கொடுத்தவரும் தாக்கல் செய்கிற வரும் ஒரே நபராக இருக்கவேண்டும். ஒருவர் நோட்டீஸ் கொடுத்து இறந்துவிட்டால் அவ ருடைய வார்சு தாவா செய்வதாய் இருந்தால், அவரும் நோட்டீஸ் கொடுத்துத்தான் தாவா செய்யவேண்டும். ஒரே நோட்டீஸில் அநேக பேருக்கென்று எழுதி இருந்தபோதிலும் அந்த நோட்டீஸில் கண்ட ஒவ்வொரு நபருக்கும் சேர்ப்பிக்கவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அந்த தாவா செல்லாது. நோட்டீஸானது இந்த பிரிவின்படி இல்லாவிட்டால் மொத்த தாவா வும் தள்ளுபடி செய்யப்படும். [கர்னூல் முனிஸிபாலிடி-எ.-சுப்பன்ன 13 **M. L. J.** 426]. ஒரு நோட்டீஸ் சாதாரணமாக கொடுக்கப்பட்டது. அந்த சமயத்தில் நஷ்ட பரிகாரத்தின் தொகை ஏற்படவில்லை, அந்த நோட்டீஸிலேயே நஷ்டபரிகார தொகையை குறித்து பின்னிட்டு தெரி விப்பதாக கண்டிருந்தது, பிறகு நஷ்ட பரிகாரத்தொகை ஏற்பட்டது. அதைக் குறிதது இரண் டாவது நோட்டீஸ் மூலமாய் பிரதிவாதி முனிஸிபாலிடிக்கு தெரிவிக்கப்பட்டது. கோர்ட்டில் நோட்டீஸ் சரியாயில்லை என்று பிரதிவாதி முனிஸிபாலிடி எதிர்வாதம் செய்தது. இரண்டு நோட்டீஸுகளும் ஒன்ருக சேர்த்து வாசிக்கவேண்டும் என்றும் தாவா சரியானதென்றும் தீர் மாணம் செய்யப்பட்டது. [ஈல்ஸ் எ. மதராஸ் முனிஸிபாலிடி 14 **M.** 386]. வாதி நோட்டீஸ் சேர்பித்ததாக ருஜு செய்யவேண்டும், முனிஸிபாலிடியானது அந்த நோட்டீஸை கொண்டு வந்து ருஜு செய்யவேண்டியது கிடையாது. [கோல்காட் முனிஸிபாலிடி எ. சோனுராம் **A. I. R.** 1941 **C.** 609].

இந்த ஆக்டை அனுசரித்தாகிலும் .... வியாஜ்ஜியம் கொண்டுவருவதாயிருந்தால்—"செய்கை" என்பது 'ஒப்பந்தம்' அல்லது ஒப்பந்த சம்பந்தமான செய்கைகளைக் குறிக்காது. நல்ல எண்ணத்துடன், ஒரு மெம்பர் அல்லது பிரசிடெண்ட் இந்த சட்டத்தை அனுசரித்து செய்யும் காரியங்களுக்கு நோட்டீஸ் கொடுத்த பிறகு வியாஜ்ஜியம் தொடரவேண்டும். இந்த ஆக்டை அனுசரித்து நடக்கும் பிரசிடெண்ட் அல்லது மெம்பர் கெட்ட எண்ணத்தைக் கொண்டு செய்தாலும், நோட்டீஸ் கொடுக்கவேண்டும். ஆக்டை மீறி பிரசிடெண்டாவது, அல்லது மெம்பராவது ஒருவரை திட்டினாலும், ஒருவருடைய பொருளை அபகரித்தாலும் இந்தியன் பினல் கோர்ட் சட்டத்திற்குள்ளாக்கக் கூடிய காரியங்கள் செய்தாலும் நோட்டீஸ் வேண்டியதில்லை. உத்தியோகத்திலிருக்கப்பட்டவரால் செய்யப்பட்ட காரியமாயினும் ஆக்டை மீறியதாயிருக்கக் கூடாது. ஆக்டை அனுசரித்து செய்யப்பட்டதாயிருக்கவேண்டும். எந்தெந்த செய்கைக்கு நோட்டீஸ் வேண்டுமென்பது அந்த செய்கையை பொருந்தியது. ஒரு செய்கை பிரசிடெண்ட் அல்லது மெம்பராய் அல்லாதவரால் செய்யக் கூடிய செய்கையாயிருந்தால் அந்த செய்கை இந்த ஆக்டை அனுசரித்து செய்யக்கூடிய செய்கையாக கருதப்படமாட்டாது. ஒரு யூனியன் பஞ்சாயத்து சேர்மன் நம்பிக்கை துரோகம் செய்தது ஆக்டை அனுசரித்து செய்யும் காரியமாகாது. [அப்துல் காதர் 1916 M. W. N. 384]. ஒரு ஆக்ரமணத்தை எடுக்கும்போது யூனியன் பஞ்சாயத்து சேர்மன் ஆக்ரமணம் செய்தவரை திட்டியது இந்த ஆக்டின்படி செய்த காரியமாகாது. [அப்துல் ரஹமான் (1919) M. L. W. 4 556 = 36 I. C. 142] பிரசிடெண்ட் என்கிற தோரணையில் ஒருவர் சட்ட விரோதமான காரியம்செய்தால் அதற்கு இந்த செக்ஷன் பொருந்தாது [சங்கரலிங்க தேவன்-எ.-ஆவுடை அம்மாள், 35 I. C. 826]. ஜட்ஜி கக்ஷிகாரரை அவதூறாக பேசியது அவரது நியாயமான காரியங்களில் ஒன்றாகாது. [நந்தலால் பாசக் எ. மித்தர். 26 Cal. 852 = 3 C. W. N. 539] சென்னை துப்பாக்கி வண்டி தொழிற்சாலை சூப்ரின்டெண்ட் லைசென்ஸ் இல்லாமல் மரம் வாங்கியது அவரது உத்தியோக முறையில் செய்யக் கூடிய காரியமல்ல வென்றும், அம்மாதிரி இதரர்களும் செய்யக்கூடு மென்றும் தீர்மானிக்கப்பட்டது. [மதராஸ் முனிசிபல் கமிஷனர்-எ.-மேஜர்பெல், (1903) 2 Weir 223 = 25 Mad. 5] ஒரு லோகல் போர்ட் பிரஸிடெண்ட் தனது சிப்பந்தியை வேலையிலிருந்தும் நீக்கியது அவரது அதிகார முறையில் செய்த காரியமாகும். ஒரு பிரஸிடெண்ட் தன்னுடைய ஆளுக்கு ஓட்டுக் கொடுக்காமல் போனால் கெடுதல் செய்வதாக ஒரு ஓட்டரை பயமுறுத்தலானது அவரது அதிகாரமுறையை பொறுத்ததாகாது [ராஜாராவ் எ. ராமஸ்வாமி, 50 Mad. 754 = A. I. R. 1927 Mad. 566] குடிகளின் ஸ்வதந்தரங்களை குறைக்கக்கூடிய செய்கைகள் எவையாகிலும் பிரசிடெண்ட் செய்தால், நோட்டீஸ் இல்லாமல் வியாஜ்ஜியம் தொடரலாம் [சர்வோத்தம ராவ்-எ.-சைதாப்பேட்டை முனிசிபல் சேர்மன், 47 Mad 585 = A. I .R. 1923 Mad. 475.] ஒரு பிரஸிடெண்ட் தனது இஷ்டப்படி ஓட்டு கொடுக்காமல் போனால் அந்த ஓட்டரைக் கெடுத்து விடுவதாகவும் அவருக்கு அதிகவரிவிதித்து விடுவதாகவும், அவருடைய ஆக்கிரணமத்திற்காக தாவாதொடருவதாகவும் பயமுறுத்தி தனக்கு வேண்டியவருக்கு ஓட்டு கொடுக்காத வரை தடுத்தால், அந்த பிரஸிடெண்டின்மேல் நோட்டீஸ் இல்லாமலும், சாங்ஷன் இல்லாமலும் வியாஜ்ஜியம் தொடரலாம். [நுனெபானகாளு-எ.-சுப்பராவ், A.I.R. 1928 Mad. 1158 = 113 I. C. 625.] "இந்த ஆக்டை அனுசரித்து நிறைவேற்றவாயினும், நிறைவேற்ற உத்தேசித்தாயினும்"... ....என்பது செய்யும் செய்கையை குறிக்குமே தவிர செய்யப் போவதாய் அச்சப்படுத்தும் செய்கையைக் குறிக்காது. அச்சப்படும் செய்கைக்காக பரிகாரம் தேட போடப்படும் வியாஜ்ஜியத்திற்கு நோட்டீஸ் வேண்டியதில்லை [விர்ஜி-எ.-கராச்சி முனிசிபாலிடி, 56 I. C. 527.]

நல்லெண்ணத்துடன் செயல்படுகிற அக்கிராசனரையும், தலைவரையும், உத்தியோகஸ்தரையும், பாதுகாப்பது

171. இச் சட்டத்தின்படிச் செய்யப் பட்டதாகவோ செய்யப்பட்டதாய் பொருள்படுகிறதாகவோ உள்ள யாதொரு செய்கையாவது, இச் சட்டத்தையாகிலும் அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச்சட்டம், ரெகுலேஷன் அல்லது உத்தரவையாகிலும் தாம் நிறைவேற்றுகையிலே யாதொரு அசட்டை அல்லது தவறுதல் நேரிட்டதாகச் சொல்லப்பட்டால், அப்படிப் பட்ட அசட்டையாவது தவறுதலாவது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதாக அல்லது நேரிட்டதாக இருக்குமானால் அப்படிப்பட்ட செய்கை விஷயமாகவோ அசட்டை அல்லது தவறுதல் விஷயமாகவோ

யாதொரு அக்கிராசனர், கமிஷனர், தலைவர், நிர்வாக அதிகாரி அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலின் அல்லது பஞ்சாயத்தின் யாதொரு அங்கத்தினர், உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌசிலுடைய அல்லது பஞ்சாயத்தினுடைய அல்லது அக்கிராசனர், கமிஷனர், தலைவர், நிர்வாக உத்தியோகஸ்தர், அங்கத்தினர், உத்தியோகஸ்தர் அல்லது ஊழியருடைய கட்டளையின்படிச் செயல்படுகிற யாதொரு நபர் மேலாவது வியாஜ்ஜியம் எதையும் கொண்டு வரவும் கூடாது. சட்டப்படிக்கான வேறே நடவடிக்கை எதையும் எடுத்துக் கொள்ளவும் கூடாது: ஆனால், 173-வது பிரிவின்படிக் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியங்களின் விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களில், அப்படிப்பட்ட யாதொரு நடவடிக்கை கோர்ட்டில் ஸ்தாபிக்கத்தக்கதாய் இருக்கிற மட்டிலே அதை மேற்படி பஞ்சாயத்தின் மேல் கொண்டு வரவேண்டும்.

குறிப்பு

பி. 171. இந்த செக்ஷன்படிக்கு பிரஸிடெண்டோ அல்லது மெம்பரோ நிர்வாக உத்தியோகஸ்தரோ நல்ல எண்ணத்துடன் ஒரு காரியத்தை செய்யும்போது அந்நியர்களுக்கு நஷ்டம் உண்டானால் அதற்கு பரிகாரம், பஞ்சாயத்தின் பேரில் தாவாசெய்து பெறவேண்டுமேயொழிய, பிரஸிடெண்டின் பேரிலோ, மெம்பரின் பேரிலோ, நிர்வாக உத்தியோகஸ்தரின் பேரிலோ தாவா செய்தால் செல்லுபடியாகாது

தேர்தல் நடவடிக்கைகளில் இஞ்சங்ஷன் என்னும் உத்தரவுகள் பிறப்பிக்கக் கூடாதென்பது.

172. (1908-ம் ஞூத்து V-வது சட்டமாகிய) 1908-ம்ஞூத்திய சிவில் வழக்கு முறைச் சட்டத்திலாவது அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் வேறே யாதொரு சட்டத்திலாவது, என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, எந்தக் கோர்ட்டாரும் தேர்ந்தெடுப்பவர்களின் யாதொரு ஜாபிதாவைத் தயார் செய்வதற்காகிலும், பிரசித்தம் செய்வதற்காகிலும், யாதொரு தேர்தல் நடத்துவதற்காகிலும் இச் சட்டத்தின்படி நடத்தப்பட்டு வருகிற அல்லது நடத்தப்படப்போகிற எந்த நடவடிக்கையையாயினும் தடுப்பதற்காக நிலையான அல்லது தாற்காலிகமான யாதொரு இஞ்சங்ஷன் என்னும் உத்தரவு கொடுக்கவும் கூடாது, யாதொரு இடைக்கால உத்தரவு பிறப்பிக்கவும் கூடாது.

குறிப்பு

பி. 172. இந்த பிரிவு பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.-முனிஸிபல் கௌன்ஸில்களுக்கும் லோகல் போர்டுகளுக்கும் எலெக்ஷன்கள் நடத்துவதை தடுக்கும் பொருட்டு கோர்ட்டுகள் சில விஷயங்களில் இன்ஜங்ஷன் என்னும் உத்தரவுகள் கொடுத்திருப்பதாகக் கவர்ன்மெண்டாருக்குத் தெரியவந்திருக்கிறது. 1920-ம் ஞூத்திய சென்னப் பட்டணத்து டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடி ஆக்டின்படியாவது இது காரியத்துக்காக ஏற்படுத்தப்பட்ட விதிகளை அனுசரித்துத் தயார் செய்யப்படும் தேர்ந்தெடுப்பவர்களின் பெயர்களைக் கிரமப் பிசகாக விட்டு விட்டிருக்கிறதென்றாகிலும், கிரமப் பிசகாகச் சேர்த்துயிருக்கிறதென்றாலும் சொல்லப்படுவதன்மேல் அநேகமாய் மேற்படி உத்தரவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதனால் பெருத்த அளவுக்குப் பரிபாலன சம்பந்தமான அசௌகரியம் ஏற்படுகிறது. எப்படியென்றால் பொறுப்பற்ற சில நபர்கள் யாதொரு பொது எலெக்ஷனையோ யாதொரு பொது எலெக்ஷன் முழுவதையுமோ கூட நிறுத்திவிடுவது சாத்தியமாய் விட்டிருக்கிறது. எலெக்ஷன்களுக்குச் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களுக்காகவும் அனுசரிக்கக்கூடிய முறையொன்றை ஏற்படுத்திக்கொடுப்பதே, மேற்சொன்ன ஆக்டுகளின்படி செய்யப் பட்ட விதிகளின் உத்தேசமாகும். இந்த விதிகளில் போதுமான பாதுகாப்புகள் அடங்கியிருப்பதுமல்லாமல் நுன்பமடைந்த நபர்கள் அப்பீல் முதலியவை செய்துகொள்வதற்காக நியாயமான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகையால்; தேர்ந்தெடுப்பவர்களின் ஜாபிதாக்களைத் தயார் செய்வதற்காக அல்லது பிரசுரிப்பதற்காகவாவது, எலெக்ஷன் நடத்துவதற்காகவாவது, மேற்படி விதிகளின்படி, நடத்தப்பட்டு வரும்

அல்லது நடத்தப்படப்போகும், நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக இஞ்ஜெக்ஷன் என்னும் தடைசெய்யும் உத்தரவுகளைக் கோர்ட்டார் கொடுக்கக்கூடாதென்று கண்டுள்ள பிரத்தியேக மான நிபந்தனை யொன்றைச் சென்னப்பட்டணத்து டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடி ஆக்டிலும் சென்னப்பட்டணத்து லோகல் போர்டு ஆக்டிலும் சேர்த்துக்கொள்வது மூலமாய் அந்த ஆக்டுகளைத் திருத்துவது உசிதமென்று கருதப்படுகிறது.

சொத்தை இழந்து விட்டாலும் பாழ் பண்ணினாலும் துர்வினியோகம் செய்தாலும் தலைவரும் நிர்வாக அதிகாரியும், அங்கத்தினர்களும் பொறுப்பாளிகளாவது

173. (1) யாதொரு பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலுக்குச் சொந்தமான அல்லது அதனிடத்தில் சங்கரமித்துள்ள ஏதேனும் பணமாவது வேறே சொத்தாவது இழந்து விடப்பட்டாலும், பாழ்பண்ணப்பட்டாலும், துர்வினியோகம் செய்யப்பட்டாலும், அது தலைவர், நிர்வாக அதிகாரி பஞ்சாயத்தின் ஒவ்வொரு அங்கத்தினர்; அக்கிராசனர், கமிஷனர், பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலின் அங்கத்தினர் ஒவ்வொருவருடைய அசட்டையினாலேயாவது துர்நடத்தையினாலேயாவது சம்பவித்ததாக இருக்கும் பட்சத்திலே, அப்படிப்பட்ட தலைவரும் நிர்வாக அதிகாரியும் பஞ்சாயத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும், அக்கிராசனரும், கமிஷனரும் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலின் ஒவ்வொரு அங்கத்தினரும் அதற்குப் பொறுப்பாளியாவார்கள். அதற்கு ஈடுபண்ணும் பொருட்டு இன்ஸ்பெக்டரின் அனுமதியை முன்னதாகவே பெற்று பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலானது தகுந்த அதிகாரமுள்ள யாதொரு கோர்ட்டிலே அவர்மேல் வியாஜ்ஜியம் கொண்டு வரலாம்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு வியாஜ்ஜியத்தையும் வியாஜ்ஜிய மூலம் ஏற்பட்ட தேதிக்குப் பிறகு மூன்று வருஷத்துக்குள் தொடங்க வேண்டும்.

குறிப்பு

பி. 173. பொது:— பஞ்சாயத்து சொத்தைப் பாழ்செய்தால் ஒவ்வொரு அங்கத்தினரும் (மெம்பரும்) அதற்கு உத்திரவாதி ஆகிறார். அதற்கு ஈடுபெறும் பொருட்டு, இன்ஸ்பெக்டரின் அனுமதியை முன்னதாகப் பெற்று பஞ்சாயத்தானது அவர்பேரில் மூன்று வருஷத்திற்குள் தாவா தொடங்கலாம் அல்லது அவரிடமிருந்து ஈடுத்தொகை வசூலித்துக் கொள்ளலாம். அப்படித் தொடரும்போது ஒரு மெம்பர் ஸ்தானம் வகித்து இருக்கிறாரா? அல்லது அந்த ஸ்தானம் காலி ஆகிவிட்டதா? என்பது இல்லை. ஒரு பிரச்னை (கேள்வி) — ? இவர்கள் பேரில் கிரிமினல் பிராது செய்யவேண்டுமென்றால் 169-வது பிரிவின்படிக்கு அரசாங்கத்தின் அனுமதிபெறவேண்டும். சிவில் வியாஜ்ஜியத்திற்கு இன்பெக்டரின் அனுமதி போதுமானது.

ருஜுசெய்யவேண்டிய விஷயங்கள்:—பிரதிவாதி பஞ்சாயத்து நஷ்ட பரிகாரம் இல்லாமல் செய்துகொள்ளவேண்டுமென்றால் கட்டாயமாக அந்த காரியத்தில் அக்கறை எடுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும், அம்மாதிரி பஞ்சாயத்து அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்றும், அம்மாதிரி அக்கறை எடுத்துக்கொள்ளாத காரணத்தால் சமீபமாகவே நஷ்டம் உண்டாயிற்றென்றும் ருஜுப்படுத்தவேண்டும்.

ஸர் சார்ஜ் விதிகள்

பாபத்துகளை ஸர்சார்ஜ் செய்வதும் அவற்றைத் தள்ளிவிடுவதும் — விசாரணைகள் நடத்த ஆடிட்டர்களுக்குள்ள அதிகாரங்கள்.

பி. 173-ன் கீழ் விதிகள் (க-XXX-VIII-38)

I. ஒரு பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர் ஷை சட்டத்தின் 141-வது பிரிவின் படி நியமிக்கப்பட்ட ஆடிட்டர்கள் கேட்கிற பிரகாரம் அவர்களுக்கு எல்லாக் கணக்குகளையும் அனுப்பவேண்டும்.

II. மேற்படி ஆடிட்டர்கள்.—

(a) தாங்கள் எந்தப் புஸ்தகம், பத்திரம், ஒப்பந்தம், கணக்கு, வவுச்சர், ரசீது அல்லது இதர தஸ்தாவேஜைப் பார்ப்பதேனும் பரிசீலனை செய்வதேனும் அவசியமென்று

கருதுகிறுர்களோ அந்தப் புஸ்தகம், பத்திரம் முதலியவற்றைக் கொண்டுவந்து காட்டும்படி எழுத்து மூலமான ஸம்மன் அனுப்பிக் கேட்கலாம்.

(b) அந்த தஸ்தாவேஜு எதையாகிலும் தமது பொறுப்பிலாவது ஆதிக்கத்திலாவது வைத்திருக்கிற அல்லது அதற்கு ஜவாப்தாரியாயிருக்கிற எந்த நபருக்காகிலும் தங்கள் முன் நேரில் ஹாஜராகும்படி எழுத்து மூலமான ஸம்மன் அனுப்பி உத்தரவு செய்யலாம்.

(c) அவ்வாறு ஹாஜராகிற எந்த நபருக்கும், மேற்படி தஸ்தாவேஜு விஷயமாக உறுதிமொழி ஒன்றைச் செய்து கையெழுத்துப் போடும்படியோ அதற்குச் சம்பந்தப்பட்ட யாதொரு கேள்விக்குப் பதிலளிக்கும்படியோ அதற்குச் சம்பந்தப்பட்ட ஒரு ஸ்டேட்மெண்டைத் தயாரித்தனுப்பும்படியோ உத்தரவு செய்யலாம்.

இவ் விதியின் பிரகாரம் சட்ட சம்பந்தமாகத் தமக்குப் பிறப்பிக்கப்பட்ட எந்த உத்தரவையேனும் எவராகிலும் அனுசரிக்கத் தவறினல் **அவருக்கு ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கதாகும்.**

III. மேற்படி ஆடிட்டர்கள்.—

(a) பஞ்சாயத்தின் செலவிலோ பஞ்சாயத்துக்குச் சேரவேண்டிய பணத்தின் வசூலிலோ பஞ்சாயத்தின் கணக்குகளிலோ தாங்கள் கவனிக்கக்கூடிய முக்கியமான கிரமப் பிசகு அல்லது ஒழுங்கீனம் எதைப்பற்றியேனும் பஞ்சாயத்துக்கு ரிப்போர்ட் செய்யவேண்டும்.

(d) பஞ்சாயத்துக்குச் சொந்தமான அல்லது பஞ்சாயத்தில் சங்கிரமித்திருக்கிற பணம் அல்லது இதர சொத்து எவ்விதமாகவேனும் நஷ்டம் அல்லது விரயம் அல்லது துர்விநியோகம். அவருடைய அசட்டையின் அல்லது துர்நடத்தையின் நேரடியான விளைவாயிருந்தால் அந்த நஷ்டம், விரயம் அல்லது துர்விநியோகத்தையும், நேரடியாகவோ மறைமுகமாகவோ பொறுப்பாளியான நபர்களின் பெயர்களையும் அந்தப் பஞ்சாயத்துக்கு ரிப்போர்ட் செய்யவேண்டும்.

IV. நிர்வாக அதிகாரியானவர் ஆடிட்டர்கள் குறிப்பிட்டுக்காட்டக்கூடிய எந்தக் குறைபாடுகள் அல்லது ஒழுங்கீனங்களையாவது உடனடியாக நிவர்த்தி செய்து, அது விஷயத்தைப் பஞ்சாயத்துக்கு ரிப்போர்ட் செய்யவேண்டும்.

குறிப்பு

ஒரு தரம் ஆடிட் செய்த பிறகு, மறுபடியும் ரி-ஆடிட் செய்து சர் சார்ஜ் செய்யக் கூடாது [துளசிராம்-எ-மதுரா முனிசிபாலிடி, 55 M 296=62 M L. J. 77=A. I. R. 1932 M. 90]

V. (1) அரசாங்கத்தாரிடமிருந்து அதிகாரம் பெற்ற எந்த ஆடிட்டரும் சட்டத்துக்கு விரோதமான ஒவ்வொரு பாபத்தையும் தள்ளிவிட்டு, அவ்வாறு சட்ட விரோதமாகத் தொகை செலுத்தியிருக்கிற அல்லது தொகை செலுத்த அதிகாரம் கொடுத்திருக்கிற நபர் பேரில் அதை ஸர் சார்ஜ் செய்யலாம்; மேலும் அவர் ஒரு நபருடைய அசட்டையினுலோ துர்நடத்தையினுலோ ஏற்பட்ட குறைவு, நஷ்டம் அல்லது லாபகரமற்ற முதலீட்டுத்தொகையையாவது, அந்த நபர் கணக்கில் கொண்டு வந்திருக்க வேண்டியது. ஆனல் அப்படிக் கொண்டுவந்திராத எந்தத் தொகையையாவது, அதற்குப் பொறுப்பாளியாகவுள்ள மேற்படி நபர் பேரில் காட்டலாம்; அப்படிப்பட்ட ஒவ்வொரு விஷயத்திலும், அந்த நபரிடமிருந்து சேரவேண்டிய தொகை விஷயமாக உறுதிமொழி கூறவேண்டும்.

விவரணம்.—எந்த நபருடைய அசட்டை அல்லது துர்நடத்தை காரணமாக மேற்படி குறைவு அல்லது நஷ்டம் எதுவாகிலும் ஏற்பட்டதோ அல்லது விளைந்ததோ அந்த நபர், தாம் அசட்டையாய் இருந்த போதிலும் அல்லது துர்நடத்தை நடந்திருந்தபோதிலும் பாதகமில்லாமலே, மற்றொரு நபர் அசட்டையாக இருந்திராவிட்டால் அல்லது துர்நடத்தை நடந்திராவிட்டால் மேற்படி குறைவு அல்லது நஷ்டம் ஏற்பட்டிருக்காது என்று வாதிக்கலாகாது.

(2) ஆடிட்டர் தாம் தள்ளிவிட்ட தொகை. விதித்த ஸர்சார்ஜ் அல்லது காட்டிய பொறுப்பு ஒவ்வொன்றின் சம்பந்தமாகவும் தாம் செய்த தீர்ப்புக்குரிய காரணங்களை எழுதி வைக்கவேண்டும்; மேலும் அவர், எந்த நபருக்கு விரோதமாகச் செய்யப்படுகிறதோ அவருக்கு அதன் நகலொன்றை ரெஜிஸ்டர் தபாலில் அனுப்பவேண்டும்.

சர் சார்ஜ்

(3) அவ்வாறு ஆடிட்டருடைய தீர்ப்பின் நகல் யாருக்கு அனுப்பப்படுகிறதோ அவர் அதைப் பெற்றுக் கொள்ள மறுத்தால், அவர் அவ்வாறு மறுத்தபோதிலும் பாதகமில்லாமலே மேற்படி தீர்ப்பின் நகல் அவருக்குக் கிரமமாக அனுப்பப்பட்டிருக்கிறதென்று (2) உபவிதியின் தாற்பரியப்படி கருதப்படுவார். VI-ம்; VII-ம் விதிகளில் நிச்சயிக்கப்பட்டுள்ள **பதினைந்து தின கால அளவை** மேற்சொன்னபடி மறுத்ததேதியிலிருந்து கணக்கிடவேண்டும்

குறிப்பு

பொது :—சர் சார்ஜ் செய்வதற்கு லிமிடேஷன் இல்லை. [கொண்டோ - எ - கன்ஜாம் டிஸ்ட்ரிக்ட் கலெக்டர், 58 M 340 = 68 M. L. J. 232 (234) = A. I. R. 1933 M. 264]

அசட்டை... துர்நடத்தை :—இவைகளால் நஷ்டம் உண்டானால் சிவில் கோர்ட்டில் தாவாசெய்து அந்த நஷ்டத்தை உண்டாக்கிய நபரிடமிருந்து வசூலித்துக் கொள்ளலாம். [மதருஸ் முனிசிபாலிடி -எ.- பிரான்ஸன், 3 Mad 20] மொத்தமாக சகல விஷயங்களுக்கு ஒரே சர் சார்ஜ் சர்டிபிகேட் அனுப்புவது சரியல்ல, [ஆத்மாராம் - எ. - அகௌன்டண்ட் ஜனரல், A. I. R. 1936 N 422.] அசட்டை... துர்நடத்தை இல்லாமல் (Error of Judgment) தீர்மானம் செய்வதில் யோசனை யோசனை தவராக யிருந்தால் அதற்கு சர் சார்ஜ் செய்யக் கூடாது. ஒரு பிரசிடெண்ட் மேல் அதிகாரர்களிடம் முன் சாங்ஷன் பெறுவது கஷ்டமென்று ஒரு செய்யவேண்டிய கார்யத்தை துண்டித்து சாங்க்ஷன் இல்லாமல் செய்தார், அதினால் நஷ்டம் உண்டாச்சுது. அதை பிரசிடெண்டும், அவர்களுக்கனுகூலமாக இருந்த பஞ்சாயத்து போர்டு மெம்பர்கள் கட்டிக்கொடுக்க நேரிட்டது. [நம்பி - எ - லோகல் பண்டு எக்ஸாமினர் A. I. R. 1943 M. 567] சில சந்தர்ப்பங்களில் யாருடைய அசட்டை... துர்நடத்தை என்று சொல்லமுடியாமல் போய்விடும். அப்போது சர் சார்ஜ் செய்வது சரியன்று. [நாயுடு - எ - லோகல் பண்டு எக்ஸாமினர் A. I. R. 1943 M. 97]

VI. (1) தொகை தள்ளிவிடப்பட்டதனல் அல்லது ஸர்ஸார்ஜ் செய்யப்பட்டதனல் அல்லது பொறுப்பு சாட்டப்பட்டதனல் துன்பமடைந்த எவரும் ஆடிட்டரின் தீர்ப்பு தம்மிடம் வந்து சேர்ந்த பிறகாவது தமக்குச் சேர்ப்பிக்கப்பட்டிருக்கிற பிறகாவது **பதினைந்து தினங்களுக்குள்**—

(a) அப்படித் தொகை தள்ளிவிட்டதை அல்லது ஸர்சார்ஜ் செய்திருப்பதை அல்லது பொறுப்பு காட்டப்பட்டிருப்பதை ரத்து செய்யும்படி அசல் விசாரணை அதிகாரமுள்ள பிரதான ஸிவில் கோர்ட்டுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம். அக் கோர்ட்டார் அவசியமாயிருக்கிற சாட்சியத்தை எடுத்த பிறகு அப்படித் தொகை தள்ளிவிட்டதையோ ஸர் சார்ஜ் செய்திருப்பதையோ அல்லது பொறுப்பைச் சாட்டியிருப்பதையோ ஊர்ஜ்ஜிதம் செய்யலாம். மாற்றலாம் அல்லது தவிர்க்கலாம்; அப்படிச் செய்கையில், செலவுகள் பற்றி, பிரஸ்தாப சந்தர்ப்பங்களில் கோர்ட்டார் தகுதியென்று கருதக் கூடிய உத்தரவு பிறப்பிக்கலாம் ; அல்லது.

(b) மேற்படி விண்ணப்பம் செய்து கொள்வதற்குப் பதிலாக, இன்ஸ்பெக்டருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம் ; அதன் பேரில் அவர் தாம் தகுதியென்று கருதுகிற உத்தரவைப் பிறப்பிக்கவேண்டும். அவ்வாறு இன்ஸ்பெக்டர் பிறப்பித்த எந்த உத்தரவும் முடிவானதாகும்.

(2) (1) உபவிதியில் கண்ட (a) பகுதியின்படி மேற்படி கோர்ட்டார் செய்த எந்தத் தீர்ப்பின் பேரிலும் ஹைகோர்ட்டாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

(3) (a) பகுதியின்படி கோர்ட்டாருக்கு ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டிருந்தால், அது விஷயமாக மேற்படி ஆடிட்டர் மட்டுமே பிரதிவாதியாவார் ; விண்ணப்பதாரர் பிரஸ்தாப நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தாரையாவது வேறு யாதொரு நபரையாவது கட்சிக்காரராக்கப் பாத்தியதையுள்ளவராக மாட்டார்.

குறிப்பு

(1) (a) சிவில் கோர்ட்டுக்கு.—இது சாதாரண வியாஜ்யம் அல்ல. [செக்ரிடரி—எ.-சிவசங்கரன், 70 M. L. J. 404 = A. I. R. 1936 M. 412] இந்த விதிகளின்படி மனு போட்டுக்கொள்ளா விட்டால் வியாஜ்யம் செய்துக் கொள்ளக்கூடாது. [செக்ரிடரி-எ-அல்லு, I. L. R. 1941 M. 550 (F. B.) = A. I. R. 1941 M. 530] சிவில் கோர்டு தீர்மானத்தின் பேரில் (2-ம்விதி படிக்கு ஹைகோர்டுக்கு அப்பீல் செய்துக்கொள்ளலாம், இதற்கு ஹைகோர்டு ரிட் கிடையாது [மஹம்மத்ராஜ-எ-சதாசிவ, A. I. R. 192 M. 297 = 49 M. = 49.]

கோர்டு சிலவுகள் — பஞ்சாயத்து நிதியிலிருந்து கவர்ன்மெண்டு உத்தரவின்றி கோர்டு செலவுக்காக செலவு செய்யக்கூடாது [ஜி. ஒ. நெ. 3617 எல். எம். தேதி 17-8-1927 பார்ட் I-A கெஜட் பக்கம் 330 தேதி 21-3-1927] ஆனல் பஞ்சாயத்து நிதியில் இருந்து மனு தாரர் ஜெயித்தபொழுது அவருக்கு செலவு கட்டிகொடுக்கும்படிக்கு உத்தரவு செய்யலாம். [செக்ரிடரி-எ-சிவசங்கரம், 70 M. L. J. 404 (407) = A. I. R. 1936 M. 412]

(1) (b) **இன்ஸ்பெக்டருக்கு.**—இவருக்கும் மனு செய்துக் கொள்ளலாம் 14 நாட் களுக்குள் இவருக்கு மனு போட்டுக் கொண்டதில் பிரதிகூலமான பிறகு, சிவில் கோர்டுக்கு தாவா செய்து கொள்ளக்கூடாது. லோகல் பண்டு எக்ஸாமினர்-எ-ராமசாமி, A.I.R 1941 M. 891] விதி VIII படிக்கு கவர்ன்மெண்டு எப்போதாகிலும் வசூலிக்காமல் விட்டு விடலாம்.

VII. ஆடிட்டர் இவ் விதிகளின் படி ஒரு நபரிடமிருந்து சேரவேண்டுமென்று உறுதி மொழி கூறிய ஒவ்வொரு தொகையையும், ஆடிட்டரின் தீர்ப்பு அந்த நபருக்குத் தெரிவிக்கப் பட்ட பிறகு **பதிஞன்கு தினங்களுக்குள்**, பஞ்சாயத்தின் நிதிகள் எந்தக் கெஜாஞஅல்லது பாங் கில் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தக் கஜாஞ அல்லது பாங்கில் அதைச் செலுத்தவேண்டும். ஆனல், அந்தக் காலத்துக்குள் மேற்படி நபர் அத் தீர்ப்புகளுக்கு விரோ தமாகக் கோர்ட்டாருக்காவது இன்ஸ்பெக்டருக்காவது அப்பீல் செய்துகொண்டிருந்தால் அவர் அதை அவ்வாறு செலுத்தவேண்டியதில்லை; மேற்படி தொகை செலுத்தப்படாவிட்டால் அத்தொகையாவது, சேரவேண்டியதென்று கோர்ட்டாரேனும் இன்ஸ்பெக்டரேனும் பிரசித்தம் செய்யும் தொகையாவது, மேற்படி கோர்ட்டார், டிக்ரி செய்த ஒரு தொகை எவ்வாறு வசூலிக் கப்படத்தக்கதாகுமோ அவ்வாறே **ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தர் அக்கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்து கொள்வதன் பேரில், வசூலுக்கப்படத்தக்கதாகும்.**

VIII. இவ் விதிகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதக மில்லாமலே, **அரசாங்கத்தார் எப்போதேனும்**, இவ் விதிகளின்படி ஆடிட்டர் ஒரு நபரிடமிருந்து சேரவேண் டியதென்று உறுதிமொழி கூறிய தொகை முழுவதையுமோ அதன் ஒரு பாகத்தையோ வசூலிக் காமல்விட்டு விடுவது, பிரஸ்தாப விஷயத்தின் சந்தர்ப்பங்களையெல்லாம் கவனிக்கும் போது, அவசியமென்று கருதினல், அவ்வாறு **வசூலிக்காமல் விட்டுவிட வேண்டுமெனக் கட்டளை யிடலாம்.**

வரி விதிப்பு முதலான வைகளைக் குறித்து குற் றம் சொல்லக்கூடா தென்பது

174. (1) இச் சட்டத்தின் ஷரத்துக்கள் முக்கியாம்சத்திலும் வாஸ்தவமாகவும் அனுசரிக்கப்பட்டிருக்கிற பட்சத்தில், (a) யாதொரு நபருடைய பெயர், இருப்பிடம், வியாபார ஸ்தலம் அல்லது தொழில் செய்யும் அல்லது வேலை நடத்தும் இடம் விஷயமாகவாவது, (b) யாதொரு சொத்து அல்லது வஸ்துவின் விபர விஷயமாகவாவது, (c) இச் சட்டத்தினல் ஏற்படும் அதிகாரத்தின்படி, வரி விதிப்பு ஏற்படுத்தப்பட்டோ அல்லது கேட்கப்பட்டோ அல்லது விதிக்கப்பட்டோ இருக்கிற தொகை விஷயமாக வாவது நேரிட்ட யாதொரு எழுத்துப் பிழை காரணமாகவாகிலும் யாதொரு பிசகு காரணமாகவாகிலும், மேலே கண்டபடி ஏற்படுத்தப்பட்ட வரியைக் குறித்து, அல்லது செய்யப்பட்ட டிமாண்டைக் குறித்து, அல்லது விதிக்கப்பட்ட கட்டணத்தைக் குறித்து குற்றம் சொல்லவும் கூடாது. அப்படிப்பட்டதற்கு பாதகம் உண்டாகவும் மாட்டாது. மேலும் **இச் சட்டத்தின்படி நடத்தப்பட்ட எந்த நடவடிக்கைகளும் நடை முறை விஷயத்தில் ஏற்பட்டிருக்கிற யாதொரு குறைவு காரணமாக மாத்திரமே, நீதி செலுத்துகிற யாதொரு கோர்ட்டாரால் ரத்து செய்யப்படவுங் கூடாது, தள்ளி விடப்படவுங் கூடாது.**

(2) இந்தச் சட்டத்தினல் ஏற்படும் அதிகாரத்தைக் கொண்டு வசூலிக்கப் படுகிற யாதொரு தொகையை வசூலிப்பதற்காகவாகிலும், மேற்படி அதிகாரத்தைக் கொண்டு செய்யப்பட்ட யாதொரு வரி விதிப்பு அல்லது தொகை வசூலின் காரணமாக நேரிடும் **நஷ்டத்திற்காகப் பிரதிபலனை வசூலிப்பதற்காகவாகிலும் யாதொரு கோர்ட்டில் வியாஜ்ஜியம் எதுவும் கொண்டுவரக்கூடாது.**

சர் சார்ஜ்

ஆனால், இச் சட்டத்திலுள்ள ஷரத்துக்கள் முக்கியாம்சத்திலும், வாஸ்தவத்திலும் அனுசரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(3) இச் சட்டத்திலும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளிலும் சகாயச் சட்டங்களிலும், ஷரத்துக்கள், முக்கியாம்சத்திலும் வாஸ்தவமாயும் அனுசரிக்கப்பட்டிருந்தால், விலைப்பட்டியலில் அல்லது நோட்டீஸில் அல்லது ஷெட்யூலில் அல்லது நமுனவில் அல்லது ஸம்மனில் அல்லது டிமாண்டு நோட்டீஸில் அல்லது ஜப்தி வாரண்டில் அல்லது சாமான் பட்டியலில் அதற்குச் சம்பந்தப்பட்ட வேறே நடவடிக்கையிலாவது யாதொரு பிழையாகிலும் குற்றம் அல்லது கிரமப் பிசகாகிலும் இருப்பது காரணமாக, இச் சட்டத்தின்படிச் செய்யப்பட்ட ஜப்தியாயினும் விற்பனையாயினும் சட்ட விரோதமாக இருப்பதாகக் கருதப்படவுமாட்டாது. அந்தப்படி ஜப்தி அல்லது விற்பனை செய்கிற யாதொரு நபர் அக்கிரமமாய் நடந்தவராகக் கருதப்படவு மாட்டார்.

ஆனால், யாதொரு ஒழுங்கீனத்தினாலே துன்பமடைந்த ஒவ்வொரு நபரும் தாம் அடைந்திருக்கிற யாதொரு சேதத்திற்காகப் பரிகாரம் பெறலாம்.

குறிப்பு

பொது.—''வரி விதிப்பு முதலியவைகளைக் குறித்து தோஷம் சொல்லக்கூடாது'' செக்ஷன் ''வரியை குறித்தோ அல்லது டிமாண்டை குறித்தோ'' என்பதால் இந்த சட்டத்தின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் முறைமை விஷயத்திலுள்ள குறைவால் ரத்து செய்யப்படமாட்டாது என்ற விரிந்த பொருள் ஏற்படுகிறது. ஆனால், யாதொரு ஒழுங்கீனத்தினாலே துன்பமடைந்த பிரதி நபரும் தாம் அடைந்திருக்கிற குறித்த யாதொரு சேதத்துக்காக நஷ்ட ஈடு பரிகாரம், பெறலாம். இந்த பிரிவின் கீழ் தப்பித்துக்கொள்ள வேண்டுமானால், நிர்வாக அதிகாரி வரி விதிப்பு விஷயத்தில் கவனிக்க வேண்டிய எல்லா அம்சங்களையும் சட்டபடிக்கு கவனித்து வரி விதித்ததாக ருஜூ செய்யவேண்டும். (சுவாமிநாதா-எ.-நன்னிலம் தாலுகா போர்ட், 65 M. L. J. 414 (416, 417)=A. I. R. 1933 Mad 681.)

வரி விதிப்பு.—நிலவரி விஷயத்தில் அதை விதிப்பதும் வசூலிப்பதும் ஜில்லா கலெக்டரைப் பொறுத்தது. இந்த விஷயமாய் ஏற்படும் குறைபாடுகளுக்கு ஜில்லா கலெக்டரின் மேல் தாவா தொடரவேண்டும். பிரிவு 115யை பார்க்கவும். வீட்டு வரிக்கும், தொழில் வரிக்கும், மீதி வரிகளுக்கு தனித்தனி வரி விதிப்பு புஸ்தகங்களை நிர்வாக அதிகாரியால் வைக்கப்பட வேண்டும். இது விஷயமாகப் பஞ்சாயத்தின்பேரில் தாவா தொடர வேண்டுமேயொழிய நிர்வாக அதிகாரியின் மேல் தாவா தொடரக்கூடாது. சட்டத்தின் நிபந்தனைகள் வாஸ்தவத்திலும், முக்கியாம்சத்திலும் அனுஷ்டிக்கப் பட்டாலொழிய வரியாக வசூலிக்கப்பட்ட பணத்தை திருப்பிப்பெற தாவா தொடர அதிகாரமுண்டு. [சாமல் கோர்ட் பஞ்சாயத்து-எ.-ராமசாமி, A. I. R. 1938 Mad. 23=46 L. W. 433.]

டிமாண்ட்.—வீட்டு வரி விஷயமாய் செக்ஷன் 120ன் படிக்கு நோட்டீஸ் சேர்பிக்கப்பட்ட 30-நாட்கள் கழிந்த பிறகும் தொழில் வரி விஷயமாய் பிரிவு 121 படிக்கு நோட்டீஸ் சேர்ப்பிக்கப்பட்ட 60-நாட்கள் கழித்த பிறகும், டிமாண்ட் செய்யலாம்.

எழுத்துப் பிழை......பிசகு.—''எழுத்துப்பிழை......பிசகு'' முதலியவை தவிர இதர விதமான குறைபாடுகள் இருந்தால் தான் வரி விதிப்பு, கட்டண வசூல் விஷயமாய் தாவா தொடரலாம் [அனந்தபூர் முனிசிபல் கவுன்சல்-எ.-வாஸுதேவ, 61 M. L. J. 642 = A. I. R 1931 Mad 808] வரி விதிப்பு தொகை விஷயத்தில் தவருக கணக்கு இடப்பட்டாலும், பிசகு செய்யப்பட்டாலும் தாவா தொடரக்கூடாது. [கும்பகோணம் முனிசிபல் கௌன்சல்-எ.-ராலி சகோதரர்கள், 61 M. L. J. 748=A. I. R. 1931 Mad. 497] ஆனால் பிசகை பஞ்சாயத்துக்கு எடுத்துக் காட்டிய பிறகும் அதை திருத்திக் கொள்ளாவிட்டால் சட்டப்படி நடந்ததாக கருதப்படமாட்டாது. ''பிசகு அல்லது ஒழுங்கீனத்திற்கு'' பஞ்சாயத்துக்கு அப்பீல் செய்துக்கொள்ள வேண்டுமே யொழிய, தாவா தொடரக்கூடாது. ஒரு குயவன் தன் வீட்டு வரி டிமாண்ட் நோட்டீஸ் வீட்டுக்கதவின் மேல் ஒட்டப்பட்ட பிறகு வரி செலுத்தவில்லை. அந்த நோட்டீஸில் ஒரு கலம் பூர்த்தி செய்யப்படாததை வைத்துக்கொண்டு, வரி வசூலுக்காக மேற்படி வீட்டு வரிக்காக ஜப்தி செய்த பொருள்களை சிப்பந்திகளிடமிருந்து பலாத்காரமாய் பிடுங்கிக்கொண்டார். அவர் பேரில் தாவா தொடரப்பட்டது. நோட்டீஸிலுள்ள குறைபாட்டினால் ஜப்தி செல்லா

சர் சார்ஜ்

தென்றும், சட்டப்படி செய்யப்பட்டஜப்தி அல்ல ஆதலால் குற்றவாளி அல்லவென்றும் வழக்காடினர். ஆனல் கோர்ட்டார் அம்மாதிரி விடப்பட்டது சட்டவிரோதமல்லவென்றும், ஜப்தி சரியான தென்றும், எதிரியின் செய்கை மீறியதென்றும் கூறி தண்டனையை ஊர்ஜிதப் படுத்தினர்கள். [பூமாலை குறித்து 21 Mad. 296.]

எந்த நடவடிக்கைகளும்—நடைமுறையில் ஏற்படும் தவறுதல்களுக்காக எந்த ஸிவில் கோர்ட்களும் நடவடிக்கைகளை ரத்து செய்யக்கூடாது. [வெங்கடநரசிம்ம-எ.-நரசராவ் பேட்டை முனிசிபாலிடி, 58 Mad. 949 = A. I. R. 1935 Mad. 298]

பி. 174. (2) **பொது**—சட்டப்படி விதிக்கப்பட்ட வரி விஷயத்தில் பஞ்சாயத்து அல்லது நிர்வாக அதிகாரி தவறுதலான அபிப்பிராயத்தினல் வரிவிதித்தாலும் அவர்களுக்கு இந்த பிரிவு வேண்டிய பாதுகாப்பு அளிக்கிறது. [லக்ஷ்மணன்-எ.-திருச்சிராப்பள்ளி முனிசிபாலிடி] A.I.R. 1928 Mad, 208] கெட்ட எண்ணத்தால் வேண்டுமென்று நிர்வாக அதிகாரி அதிகமாக போட்டால், என்ன செய்யவேண்டும் என்பதை குறித்து பிரிவு 120யை பார்க்கவும். தொழில் வரியை குறித்து பிரிவு 121யை பார்க்கவும்.

வியாஜ்ஜியம் எதுவும் நடத்தக்கூடாது.—சட்ட பூர்வமாயும், வாஸ்தவத்திலும், முக்கியாம்சத்திலும் வசூலிக்கப்பட்டாலும் அந்த தொகையை திருப்பிப் பெறவோ, அதற்காக நஷ்டஈடு கோரவோ ஸிவில் கோர்ட்டுகளில் வியாஜ்ஜியம் எதுவும் நடத்த முடியாது. செலுத்திய தொகை பெறுவதற்கு பிரிவு 170ன் படிக்கு நோட்டிஸ் கொடுக்கவேண்டியதில்லை. நஷ்டஈடு பெறும் விஷயத்தில் பிரிவு 170 ன்படிக்கு நோட்டிஸ் கொடுக்கவேண்டும். முதலில் கூறிய விஷயத்திற்கு காலாவதி 3-வருஷம் வரையில் உண்டு. பின் கூறியதற்கு 6-மாதத்திற்குள்ளாக தாவா செய்யவேண்டும். ஒருவருடைய கோரிக்கையை பஞ்சாயத்து நிராகரித்தால், அது நிராகரித்ததேதி முதல் காலாவதிகளை கணக்கிடப்படும்.

கீழே குறித்திருக்கும் விஷயங்களில் சட்டப்படி விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்ட வரிகள் விஷயத்தில் எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளக்கூடாது (விதிகள் அனுபந்தம் = வி. ஆ.)

அநுசரிக்க வேண்டிய பிரிவு		எந்த காரணத்திற்காக.
பி. 120	... ...	வீட்டு வரிக்கு
பி. 121	... ...	தொழில் வரிக்கு
பி 122	... ...	வண்டி வரிக்கு
பி. 123	... ...	அபீலுகளுக்கு.
பி. 63, (e)	... ...	மலஜலத்தை சுத்தி செய்வது.
பி. 90	... ...	கோவில்களிடமிருந்து திரவிய சகாயம் பெறுவது.
பி. 82	... ...	ரோட்டுகள்-பக்கங்களில் குத்தகை விடுவது.
பி. 99-104	... ...	பொது மார்க்கெட்டுகள் கட்டணங்கள்.
பி. 100	... ...	சொந்த மார்க்கெட்டுகள் கட்டணங்கள்.
பி. 107	... ...	வண்டிமேடுகள் கட்டணங்கள்.
பி. 108	... ...	ஆடு அடிக்கும் தொட்டி கட்டணங்கள்.
பி. 111	... ...	லைசென்ஸ் கட்டணங்கள்.

சட்டப்படி வசூலிக்கப்பட்ட வரிக்கும், கட்டணத்திற்கும் அக்கிரமமாய் வசூலிக்கப்பட்ட வரிக்கும் வித்தியாசமுண்டு.—சட்ட விரோதமாய் வசூலிக்கப்பட்ட லைசென்ஸ் கட்டணங்களும் வரிகளைப் போலவாகும் [சோமு-எ.-மாயவரம் முனிசிபல் கௌன்சில் (1905) 28 Mad 520] லைசென்ஸ் கட்டணம் வெகு அதிகமாய் விதிக்கப்பட்டிருந்தால் அது சட்டத்தின் முக்கியாம்சத்திலும் வாஸ்தவத்தினுலும் விதிக்கப்பட்டது ஆகாது. லைசென்ஸ் கட்டணம் பார்வையிடும் செலவுக்கும் ரொம்பவும் அதிகமாகயிருக்கக்கூடாது. [மதராஸ் கார்ப்பொரேஷன் எ.-ஸ்பென்ஸர் கம்பெனி, 59 Mad. 764 = A. I. R. 1930 Mad. 55.) அந்த கட்டணத்தை திருப்பிப் பெறலாம். பஞ்சாயத்துகள் தங்கள் அதிகாரங்களை சட்டத்தில் கூறியுள்ள நிபந்தனைகள் படிக்கு முக்கியாம்சத்திலும் வாஸ்தவத்திலும் செவ்வனே அனுசரித்து நீதி தவருமல் நடப்பார்களென எதிர்பார்த்து ஏராளமான அதிகாரங்கள் அவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வசூலிக்கப்பட்ட வரியை திருப்பிப் பெறும் விஷயத்தில் அவ்வரியை தானுகவே செலுத்தப்பட்டிருந்தால் அது நன்கொடையாக கருதப்படுமேயொழிய திருப்பிப்பெறமுடி

யாது. [ராஜமஹேந்திரி முனிசிபாலிடி-எ.-சுப்பாராவ், A. I. R. 1937 Mad. 559] இந்த தீர்ப்பை சரிவர கவனித்து செய்ததாக தெரியவில்லை. அது அப்படியிருக்க முனிசிபாலிடியாவது தானுகவே அந்த தொகையை கொடுத்து இருக்கவேண்டும். அப்பீல் செய்யப்படும்போது செலுத்தப்பட்டவரியானது தானுகவே செலுத்தப்பட்டதாக கருதப்படமாட்டாது. அதை திருப்பிப்பெற தாவா தொடரலாம். [சாமல்கோட்டை பஞ்சாயத்து-எ.-ராமசாமி, A.I.R. 1938 Mad 23.]

சட்டத்தின் நிபந்தனைகள் அனுசரிக்கப்பட்டதா இல்லையா என்பது அந்தந்த சந்தர்ப்பத்தைப் பொருந்தியது. [காமராஜா-எ.-இந்தியா மந்திரி, 69 M L. J. 695] சட்டத்தின் நிபந்தனைகள் வாஸ்தவத்திலும், முக்கியாம்சத்திலும் அனுசரிக்கப்பட்டிருந்தால் ஒருவருடைய வருமானத்தை தவறுதலாக மதித்து வரி விதித்திருந்தாலும்கூட கோர்ட்டுகள் தலையிடக்கூடாது. [லக்ஷ்மணன்-எ.-திருச்சிருப்பள்ளி முனிசிபல் கௌன்சில், A.I.R. 1928 Mad. 208.]

அத்து மீறியவர் :--ஜப்தி வாரண்ட் சட்டப்படி யாரால் கையெழுத்து இடப்பட வேண்டுமோ அவரால் கையெழுத்து இடப்படாவிட்டால் அவ்வாரண்டை நிறைவேற்றுபவர் அத்துமீறியவராவார். சேரவேண்டிய வரித்தொகையில் ஒரு பகுதியை ஒருவர் செலுத்தியிருக்கும்போது பூராத்தொகைக்கும் ஜப்தி வாரண்ட் பிறப்பித்தால் அதை நிறைவேற்றுபவர் அத்து மீறியவராவார். அப்பேர்ப் பட்டவர்களும் அவர்களுக்கு உடந்தையாயுள்ள பஞ்சாயத்துகளும் நஷ்டத்தை கட்டிக்கொடுக்க வேண்டியவர்கள் ஆவார்கள்.

பொதுச்சாலைகள், மார்க்கெட்டுகள், கிணறுகள், குளங்கள் முதலியவை எல்லாருக்கும் பயன் பட வேண்டு மென்பது

175. ஒரு பஞ்சாயத்தில் அல்லது பஞ்சாயத்து யூனியனில் சங்கரமித்துள்ள அல்லது பஞ்சாயத்தால் அல்லது பஞ்சாயத்து யூனியனுல் பராமரித்து வரப்படுகிற சகல (பாட்டை) சாலைகளும், மார்க்கட்டுகளும் கிணறுகளும், குளங்களும் ரிஸர்வாயர்களும் தண்ணீர் வழிகளும் ஜாதிமதபேதமின்றி எல்லா நபர்களும் உபயோகிப்பதற்காகவும் அனுபவிப்பதற்காகவும் இருக்க வேண்டும்.

குறிப்பு

பி. 175. இந்தச் செக்ஷன் மதராஸ் டிஸ்டிரிக்ட் போர்ட்ஸ் ஆக்ட் 157-A வுக்கும் இந்திய 1949-ம் வருஷத்திய இந்திய அரசியல் அமைப்பு ஆர்டிகல்கள் 15, 27 களுக்கும் ஒத்தது. ஆர்டிகள் 15 (2) படிக்கு அரசாங்கம் ஒரு மதம், வகுப்பு ஜாதி ஆண் பால், பெண் பால், பிறந்த இடம் முதலியவை குறித்து அதனுடைய காரணங்களுக்காக அதனுடைய ஜனங்களில் பேதம் உண்டாக்கக்கூடாது. ஆர்டிகள் 27 படிக்கு அரசாங்கத்தின் கீழ் உள்ளவர் கடைகளுக்கும், பொது ஓட்டல்களுக்கும், பொதுக் காட்சிகளுக்கும். பிரதேசங்களுக்கும் போவதற்கு தடைசெய்யக்கூடாது. பொது கிணறுகள், குளங்கள். குளிக்கும் இடங்கள், ரோடுகள், ரஸ்தாக்கள், பொது ஜனங்கள் கூடும் இடங்களுக்குப் போவதை யாரும் தடுக்கக்கூடாது. ஆனுல் இந்த இடங்களில் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் தனி ஏற்பாடுகள் செய்யலாம். சுகாதாரத்திற்காக அரசாங்கத்தார் சில சட்ட திட்டங்களும் ஏற்படுத்தலாம்.

பொது (பாட்டை) சாலைகளும்—ஒரு மதத்தார்—அல்லது ஜாதியார்—அங்கு குடியிருப்பதும்—மசூதிகள் அங்கு இருப்பதும்—அவைகளின் வழியாய் சங்கீத ஊர்வலங்கள் செல்வதும்:—நம்முடைய மதராஸ் ராஜ்யம் பொருத்த வரையில் 1880-ம் வருடத்தில் (முத்தியாலு-எ.-பாபூன், I. L. R, 2 Madras 140) கேசில் கௌரவ ஹைகோர்ட் ஜட்ஜுகள் டர்னரும், முத்துசாமியும் பொது பாட்டையில் மசூதி இருக்கும் போது மசூதில் யுள்ளவர்கள் எப்படி இருக்கவேண்டும் என்றும், சங்கீதத்துடன் ஊர்வலம் நடத்த வேண்டு மென்பவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டு மென்றும் தீர்ப்பு கூறியுள்ளார். அதாவது "சில சமயங்களில் யாதொரு கெடுதி செய்ய வேண்டும் என்கிற கெட்ட எண்ணங்கள் இல்லாமலே மற்ற விஷயங்களில் பொது பாட்டைகளில் சண்டைகளும், சச்சரவுகளும் உண்டாகிறது. இந்த சண்டைகளும் சச்சரவுகளும் இல்லாமல் இருக்கவேண்டு மென்ருல் பொருமையும், சகிப்பு தன்மையும் அவசியம் இருக்க வேண்டும். ஒரு பொது பாட்டையின் பக்கத்தில் ஒரு மசூதி இருக்கும் பட்சத்தில் அதில் எப்போதும் நாள் முழுதும் பூஜிக்கிருர்கள் என்று சொல்வதற்

கில்லை. ஒரு பொது பாட்டை பக்கத்தில் ஒரு மசூதி இருந்தால் அந்த பொது பாட்டையில் யாதொரு நபரும் சங்கீதத்துடன் யாதொரு ஊர்வலமும் நடத்தக்கூடாது, என்று சொல்வது சரியானதல்ல. அப்படியானல் ஒவ்வொரு பொது பாட்டையிலும் ஒரு மசூதி கட்டி விட்டு அந்த வழியாக சங்கீத ஊர்வலங்கள் இல்லாமல் தடுத்து விடலாம். அம்மாதிரி செய்வது நியாயமானது அல்ல.

மசூதில் சாந்தமாக பூஜைசெய்கிறவர்களுக்கு நிம்மதி இருக்கும்படியாக அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். அதே மாதிரியாக சங்கீதத்துடன் ஊர்வலம் செய்பவர்களுடைய அக்குகளையும் அரசாங்கம் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. ஆகையால் ஒரு மேஜிஸ்டிரேட் ஆனவர் நேரங்கள் ஏற்படுத்தி சமயத்துக்கு தக்கமாதிரி இருதரத்தாருடைய அக்குகளை நிறைவேற்றிக் கொள்ள உத்திர விடலாம்.

ஒரு பிரதேசத்தில் சாந்தி இருக்கும்படி செய்வது அரசாங்கத்தின் கடமையாகும். அது காரணத்தை கொண்டு பொது பாட்டைகள் விஷயத்தில் சில காலங்களில் பொது மக்களுடைய அக்குகளை தடுக்க அரசாங்கத்தாருக்கு அதிகாரமுண்டு. அந்த மாதிரியாக யாதொரு பஞ்சாயத்தாவது, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலாவது நடந்து கொள்ளக் கூடாது.

கட்டணங்களை வசூலிக்க குத்தகைக்கு விடுவது

176. ஒரு பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து கௌன்ஸில் இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ்ச் செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச் சட்டம் அல்லது ரெகுலேஷனில் கீழ் அதற்குச் சேரவேண்டிய கட்டணங்கள் வசூலிப்பதை அதற்குத் தகுதி யென தோற்றுகிற நிபந்தனைகளின் பேரில் ஒரு சமயத்தில் மூன்று வருஷங்களுக்கு மேற்படாமல் யாதொரு கால அளவுக்குக் குத்தகைக்கு விட அதிகாரம் உள்ளதாகும்.

குறிப்பு

பி. 159 (2) கீழ் குறிப்பு பக்கம் 387-ல் பார்க்கவும்.

பிரதேச அதிகாரிகளுக்குள் தகராறுகளை சமரசம் செய்து வைப்பது

177. (1) ஒரு பஞ்சாயத்துக்கும் அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன் ஸிலுக்குமிடையேயும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரதேச அதிகார சபைகளிடையேயும் இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு யாதொரு சட்டத்தின் கீழ் உள்ள ஷரத்துக்களின்படி எழும்புகிற யாதொரு விஷயமாக யாதொரு தகராறு எழுந்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலும், இதர பிரதேச அதிகாரிகளும் அந்த தகராறை தங்களுக்குள்ளேயே சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள முடியாதிருக்கின்றன என்று அரசாங்கத்தார் கருதினல், அரசாங்கத்தார் அந்தத் தகராறை நீதி முறையில் அறிந்துகொண்டு—

(a) அதை அவர்களே தீர்க்கவேண்டும் ; அல்லது

(b) அதைப் பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மத்தியஸ்தர் ஒருவருக்கு அல்லது மத்தியஸ்தர்கள் கோர்ட்டாருக்கு அல்லது இது காரியத்துக்காகவென்றே அமைக்கப்பட்ட கூட்டுக் குழுவுக்கு அதை அனுப்பவேண்டும்.

(2) (1) உட்பிரிவைச் சேர்ந்த (c) பகுதியில் குறிப்பிட்டுள்ள அறிக்கையானது அரசாங்கத்தாரிடம் சமர்ப்பிக்கப்படவேண்டும்; அரசாங்கத்தார் அவர்களுக்குத் தகுதியெனத் தோற்றுகிற விதமாக அந்தத் தகராறைத் தீர்க்கவேண்டும்.

(3) (1) உட்பிரிவைச் சேர்ந்த (a) பகுதியின் கீழ் அல்லது (2) உட்பிரிவின் கீழ்ச் செய்யப்படும் யாதொரு உத்தரவு அரசாங்கத்தாரால் அவர்களுக்குத் தகுதியெனத் தோற்றுகிற விதமாக அப்போதைக்கப்போது மாற்றியமைக்கப்படலாம்; மேலும், இந்தப் பிரிவின் கீழ் அவைகளில் எவையேனும் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தால் அவைகளுடன் கூட உள்ள அத்தகைய யாதொரு முடிவு அரசாங்கத்தாரால் எந்தச் சமயத்திலும் ரத்து செய்யப்படலாம்.

அத்தகைய யாதொரு முடிவு அல்லது அதன் மாறுதல் அல்லது அதன் ரத்து ஆகிய இவைகள் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தையும் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலேயும் மற்றைய பிரதேச அதிகார சபைகளில் ஒவ்வொருவரையும் கட்டுப்படுத்துவது மல்லாமல் எந்த நீதி மன்றத்திலும் அதை எதிர்த்து தாவா செய்யக்கூடாது.

(4) சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகளில் ஒருவர் கன்டோன்மென்ட் அதிகார சபையாகவிருந்தால், அல்லது பெரியதொரு துறைமுகத்தின் துறைமுக அதிகாரசபையாக இருந்தால், இப்பிரிவின் கீழ் அரசாங்கத்தாருக்குள்ள அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தாரின் சம்மதத்தைப் பெற்றுத்தான் பிரயோகிக்கப்படவேண்டும்.

அத்தியாயம் VII

விதிகளும், சகாயச் சட்டங்களும் தண்டனைகளும்

விதிகள்.

விதிகள் செய்ய அரசாங்கத்தாருக்குள்ள அதிகாரம்

178. (1) அரசாங்கத்தார், விதிகள் செய்வதற்காக இச் சட்டத்தில் கண்ட வேறு எந்த ஷரத்துக்களின்படியாவது தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்துடன்கூட, இந்தச் சட்டத்தின் காரியங்களைப் பொதுவாய் நிறைவேற்றுவதற்காக விதிகள் செய்ய அதிகாரமுடையவர்களாவார்கள். பிரிவுகளின் எண்

(2) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத் தன்மைக்குப் பாதகமில்லாமலும் அடியிற்கண்ட விஷயங்களைக் குறித்து அரசாங்கத்தார் விதிகள் செய்யலாம் :—

1. 3-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் கீழ் ஒரு கிராமம் அல்லது பட்டணத்திலிருந்து யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தை நீக்குவதில் அல்லது ஒரு கிராமத்தில் அல்லது பட்டணத்தில் யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தை அல்லது 5–வது பிரிவின் கீழ் யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தை ஒரு முனிஸிபாலிடியாக அமைக்கும் விஷயத்தில் சேர்ப்பதில் அல்லது 5-வது பிரிவின்கீழ் யாதொரு பிரதேச விஸ்தீரணத்தை ஒரு முனிஸிபாலிட்டியில் சேர்க்கும் விஷயத்தில் அனுசரிக்கவேண்டிய கொள்கைகள் குறித்து. பி. 3 (2) பி. 5
2. இச் சட்டத்தில் வெளிப்படையாய் ஏற்பாடு செய்திராமல் வாக்காளர்களின் பட்டியல்களுக்கும் தேர்தல்களுக்கும் சம்பந்தப்பட்ட சகலவிஷயங்களும்; இவைகளில், தேர்ந்தெடுப்பதற்கு நிற்கும் அபேட்சகர்கள் கட்டவேண்டிய டிபாஸிட் தொகைகளும், இன்ன நிபந்தனைகளின்படி அந்த டிபாஸிட் தொகைகள் பறிமுதல் செய்யப்படலாமென்பதும், வாக்காளர்களின் பட்டியல்கள் அல்லது தேர்தல்கள் சம்பந்தமாய் விசாரணைகள் நடத்துவதும் விவாதங்களைத் தீர்மானிப்பதும் அடங்கும். பி. 20 பி. 52
3. 12-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவினுடைய விளக்கு நிபந்தனையின் கீழ் ஸ்திரீகளையும் ஷெட்யூல்டு ஜாதிகளைச் சேர்ந்த அங்கத்தினர்களையும் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலில் எந்தக் கால அளவுக்குள் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்பதும் எந்த ஸ்திரீயும் ஷெட்யூல்டு ஜாதியைச் சேர்ந்த எந்த அங்கத்தினரும் சேர்க்கப்படாவிட்டால் அந்தக் காலி ஸ்தானங்களை பூர்த்தி செய்யும் விதத்தைப்பற்றி. பி. 12

4. இந்தச் சட்டத்தின் காரியங்களுக்காக ஜனத்தொகையை நிச்சயிப்பது பற்றி. பி. 3

5. பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்களின் அக்கிராசனர்கள், உப அக்கிராசனர்கள், அங்கத்தினர்கள் இவர்களும் பஞ்சாயத்துக்களினுடைய தலைவர்கள், உப தலைவர்கள், அங்கத்தினர்கள் ஆகிய இவர்களும் ராஜினமா செய்வதும் அந்த ராஜினமாக்கள் அமுலுக்கு வரவேண்டிய தேதிகளும் பி. 10 பி. 17 பி. 38

6. அங்கத்தினர்கள் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலின் அக்கிராசனரையும் உப அக்கிராசனரையும் கேள்விகள் கேட்பதும் அங்கத்தினர்கள் பஞ்சாயத்தின் தலைவரை (கேள்விகள் கேட்பதும் சபைகளில் தீர்மானங்களைப் பிரேரேபிப்பதும். பி. 32 பி. 38

7. பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்கள், பஞ்சாயத்துக்கள் ஆகிய இவைகளின் கமிட்டிகளை அமைப்பதும், அவைகளில் வெளியார்களைச் சேர்த்துக் கொள்வதும், அந்தக் கமிட்டிகளுக்கு அலுவல்களைப் பிரித்துக் கொடுப்பதும். பி. 52 பி. 53

8. பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் அவற்றின் கமிட்டிகள் ஆகிய இவற்றின் கூட்டங்களிலே மேற்கொள்ளவேண்டிய நடைமுறை பற்றியும் விவகாரங்களை நடத்துவது யாதொரு கூட்டத்தில் நிர்வாகச் சிற்றெண் பொருட்டு இருக்கவேண்டிய அங்கத்தினர்களின் எண்ணிக்கை ஆகிய இவைகளைப் பற்றியும் ஷரத்து செய்வதற்காகவும். பி. 53

9. செலவுகளைச் செய்வது சம்பந்தமாக பஞ்சாயத்து யூனியன் கௌன்சில், அதன் அக்கிராசனர், அதன் கமிட்டிகள் இவர்களுக்குள்ள அதிகாரங்கள் பற்றியும் கமிஷனரது அதிகாரங்கள், கடமைகள் இவைகள் பற்றியும். பி. 53

10. பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலின் அக்கிராசனர்கள், உப அக்கிராசனர்கள்; இதர அங்கத்தினர்கள் ஆகிய இவர்களுக்கும் பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலைச் சேர்ந்த கமிட்டிகளின் அங்கத்தினர்களுக்கும் பிரயாணப்படி, இதர வர்த்தனைகள் இவைகள் பற்றி ஏற்பாடு செய்வது பற்றியும். பி. 39

11. யாதொரு பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலின் எந்த அலுவலையாகிலும் அந்தப் பஞ்சாயத்தின் தலைவருக்காவது அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலின் அக்கிராசனருக்காவது, அங்கத்தினருக்காவது யாதொரு உத்தியோகஸ்தருக்காவது, மத்திய அரசாங்கத்தாரின் அல்லது இந்த ராஜ்ய அரசாங்கத்தாரின் எந்த உத்தியோகஸ்தருக்காவது பிரித்துக் கொடுப்பது.

12. பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் ஆகிய இவைகளின் பணத்தைச் சேமித்துவைப்பதும் முதலீடு செய்வதும், அந்தப் பணத்தை இன்ன விதமாய் வாங்கலாமென்பதும். பி. 134

13. பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிற பட்ஜெட்டில் இனவாரியாய்ப் பிரித்து ஏற்படுத்தியுள்ள தொகைகளை ஒரு தலைப்பிலிருந்து இன்னொரு தலைப்புக்கு மாற்றுவது. பி. 140

14. பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்களும் அனுப்ப வேண்டிய வரவு செலவு சம்பந்தமான எஸ்டிமேட்டுகளும், விவரக் கணக்குகளும் ஸ்டேட்மெண்டுகளும் அறிக்கைகளும். பி. 140

விதிகள்

15. கட்டு வேலைகளுக்கு நக்ஷாக்களையும், எஸ்டிமேட்டுகளையும் தயாரிப்பதும், எஸ்டிமேட்டுக்குத் தொழில் முறைமையான அல்லது பரிபாலன சம்பந்தமான அனுமதியைக் கொடுக்கப் பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்களுக்கும் மத்திய அரசாங்கத்தின் அல்லது இந்த ராஜ்ய அரசாங்கத்தாரின் உத்தியோகஸ்தர்களுக்கும் உள்ள அதிகாரம் பற்றியும் ; பி. 144

16. பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்களும் வைத்துவரவேண்டிய கணக்குகளும், அந்தக் கணக்குகளைத் தணிக்கை செய்து பிரசித்தம் செய்வதும், வரி செலுத்துகிறவர்கள் இன்ன நிபந்தனைகளின் மேல் தணிக்கையாளர்களுக்கு முன் சென்று புத்தகங்களையும் கணக்குகளையும் பார்வையிட்டு, அவைகளில் பதியப்பட்டுள்ள அல்லது பதியப்படாமல் விட்டுப்போயுள்ள இனங்களை ஆட்சேபிக்கலாம் என்பது பற்றியும் ; பி. 141

17. தணிக்கையாளர்கள், பரிசோதனை செய்வதற்கும் மேல் விசாரணை செய்வதற்குமான உத்தியோகஸ்தர்கள் ஆகிய இவர்களுக்கு சாட்சிகளை சம்மன் அனுப்பி வரவழைத்து விசாரிக்கவும், தஸ்தாவேஜிகளை கொண்டுவந்து காண்பிக்கும்படி கட்டாயப்படுத்தவும் உள்ள அதிகாரங்களும் (கணக்குகளை) தணிக்கை செய்வது சம்பந்தமாகவும் பார்வையிடுவது சம்பந்தமாகவும் மேல் விசாரணை செய்வது சம்பந்தமாகவும் உள்ள மற்ற சகல விஷயங்களைப் பற்றியும். பி 141

18. இன்ன நிபந்தனைகளின்மேல் யாதொரு பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் சொத்தை எடுத்துக் கொள்ளலாம் அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலினிடம் சங்கரமித்துள்ள அல்லது அதற்குச் சொந்தமாக இருக்கிற சொத்தை இன்ன நிபந்தனைகளின்மேல் விற்பனை மூலமாகவாகிலும் கொதுவை மூலமாகவாகிலும் குத்தகைக்கு விடுவது மூலமாகவாகிலும் பரிவர்த்தன மூலமாகவாகிலும் மற்றப் படியாகிலும் மாற்றலாம் என்பது பற்றியும். பி. 89 பி. 105

19. பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்களும் அல்லது அவைகளின் சார்பில் இன்ன நிபந்தனைகளின் மேலும் இன்ன விதமாகவும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளலாம் என்பதுபற்றியும்; பி. 8

20. இச் சட்டத்தின்படி வரிகள் விதிப்பது பற்றியும் வரிவிதிப்புகளைத் திருத்தி அமைப்பது பற்றியும் அவைகளின்மேல் அப்பீல்கள் செய்து கொள்வது பற்றியும்; பி. 119 பி. 123

21. இச் சட்டத்தின்படிச் சேர வேண்டிய யாதொரு வரிக்குப் பதிலாக, வேலையாட்களை அனுப்புவது மூலமாகவோ வண்டியில் ஏற்றிக் கொண்டு போவது மூலமாகவோ மற்றப் படியோ உள்ள யாதொரு ஊழியத்தை அங்கீகரிப்பது பற்றியும்;

22. இச் சட்டத்தின்படியாவது வேறே யாதொரு சட்டத்தின்படியாவது எவையேனும் விதிகளின்படியாவது சகாயச் சட்டங்களின்படியாவது யாதொரு பஞ்சாயத்துக்கு அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலுக்குச் சேரவேண்டிய யாதொரு வரி அல்லது இதர தொகையை, ஜங்கமப் பொருளை ஜப்தி பண்ணி விற்பனை செய்வது மூலமாகவோ ஒரு மாஜிஸ்டிரேட்டுக்கு முன் பிராது தொடர்வது மூலமாகவோ வியாஜ்ஜிய மூலமாகவோ மற்றப்படியோ வசூல் செய்வது பற்றியும்; பி. 165

23. பார வண்டி நிற்குமிடங்கள் முதலியவைகளை உபயோகிப்பது சம்பந்தமாய்ச் சேர வேண்டிய கட்டணங்களை, சம்பந்தப்பட்ட வண்டியை யாவது பிராணியையாவது அதனிடமாக உள்ள சுமையின் யாதொரு பாகத்தையாவது கைப்பற்றி விற்பனை செய்வது மூலமாகவோ மற்றப்படியோ வசூல் செய்வது பற்றியும் ; பி. 108

24. இச் சட்டத்தின்படிக் கொடுக்கப்படும் அல்லது பிறப்பிக்கப்படும் லைசென்ஸுகள், அனுமதிச் சீட்டுகள், நோட்டீஸ்கள் ஆகிய இவைகளின் நமூனுவும், அவைகளில் கண்டிருக்க வேண்டிய விஷயங்களும், அவைகளைப் பிறப்பிக்கவேண்டிய விதமும் அல்லது அவைகளைச் சேர்ப்பிக்க வேண்டிய முறையும், அவைகளை மாற்றுவதும் அல்லது ரத்து செய்வதும் அல்லது செலாவணியாக வொட்டாமல் சிறிதுகாலம் நிறுத்தி வைப்பதும் ; பி. 159 பி. 167

25. எந்த விஷயத்தைப் பற்றியாகிலும் சங்கதியைத் தெரிவிக்கும்படி கேட்கவும், சாட்சிகளை சம்மன் அனுப்பி வரவழைத்துப் பரிசீலனை செய்யவும், தஸ்தாவேஜிகளை கொண்டுவந்து காண்பிக்கும்படிக் கட்டாயப்படுத்தவும் நிர்வாக அதிகாரிகளுக்கும், கமிஷனர்களுக்கும் உள்ள அதிகாரங்கள் பற்றியும் ; பி. 43 பி. 164

26. பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்கள் ஆகிய இவைகளின் நிர்வாக அதிகாரிகள், கமிஷனர்கள், உத்தியோகஸ்தர்கள் இவர்களுடைய கையெழுத்துக்களின் பிரதிருபங்களை உபயோகிப்பது பற்றியும் ; பி. 40

27. பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலைச் சேர்ந்ததும், அரசாங்கத்தாராலாவது அவர்களிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கும் யாதொரு அதிகாரியாலாவது ரகசியமானது என்று தரம் பிரிக்கப்பட்டிருக்கிற யாதொரு விஷயத்துக்குச் சம்பந்தப் படாததுமான யாதொரு நடவடிக்கை அல்லது ரெகார்டின் அல்லது நகல்களை பொது ஜனங்களுக்குக் கொடுப்பதுபற்றியும் அந்த நகல்கள் கொடுப்பதற்காக விதிக்கப்படவேண்டிய கட்டணங்கள் பற்றியும் ; பி. 15 பி. 51

28. ஆரம்ப பாடசாலைகளை ஏற்படுத்துவதும் பராமரித்து வருவதும் நிர்வகிப்பதும் மேற்பார்வையிடுவதும் பற்றியும் ; பி. 65 (e)

29. பொதுவான யாதொரு ஊற்று, குளம், கிணறு, அல்லது தண்ணீர் காலையாவது, யாதொரு சொந்த ஊற்று குளம், கிணறு அல்லது தண்ணீர்க்காலின் சொந்தக்காரருடைய சம்மதத்துடனு, அப்படிப் பட்ட சம்மதமில்லாமலோ, அந்த ஊற்று, குளம் முதலியவைகளை யாவது குறிப்பிட்ட எந்தக் காரியங்களுக்காகவேனும் உபயோகிக்கக் கூடாதென்று தடுப்பது அல்லது அந்தப்படி உபயோகிப்பது விஷயமாய் ஒழுங்கு ஏற்படுத்துவது பற்றியும் ; பி. 65 (d) பி. 95

30. சொந்த வளவுகளிலிருந்து குப்பை, கூளம் அல்லது அசுத்தத்தை யாவது யாதொரு வகையைச் சேர்ந்த குப்பைக் கூளம் அல்லது அசுத்தத்தையாவது அப்புறப்படுத்துவதற்காகப் பஞ்சாயத்தும் மேற்படி வளவுகளின் சொந்தக்காரர்கள் அல்லது அனுபோகதாரர்களும் செய்து கொள்கிற ஒப்பந்தங்கள் விஷயமாக ஒழுங்கு ஏற்படுத்துவது பற்றியும் ; பி. 88

31. (பிரேதங்களைப்) புதைப்பதற்கும் எரிப்பதற்குமான இடங்களை ஏற்படுத்துவது பற்றியும் ; (பிரதேசங்களைப்) புதைப்பதற்கும் எரிப்ப பி. 63 (f)

விதிகள்

தற்குமான சொந்த இடங்களுக்கு லைசென்ஸ் கொடுப்பது பற்றியும் ; அந்தப்படி ஏற்படுத்தப்படுகிற அல்லது லைசென்ஸ் கொடுக்கப்படுகிற சகல இடங்களையும் உபயோகிப்பது விஷயமாய் ஒழுங்கேற்படுத்து வது பற்றியும் ; அப்படிப்பட்ட எந்த இடங்களையாகிலும் மூடிவிடுவது பற்றியும், அப்படிப்பட்ட இடங்களிலாவது, அனுமதிக்கப்பட்ட வேறு இடங்களிலாவது, தவிர மற்ற இடங்களில் பிரேதங்களை ஒருவகைச் செய்யக்கூடாது என்று தடுப்பது பற்றியும் ; பி. 68

32 பன்றிகளுக்கும் நாய்களுக்கும் லைசென்ஸ் கொடுப்பதுபற்றியும் ; லைசென்ஸ் கொடுக்கப்பெருத பன்றிகளையும் நாய்களையும் அழித்து விடுவது பற்றியும் ;

33. கட்டட விஷயமாய் ஒழுங்கு ஏற்படுத்துவது அல்லது வரையறை ஏற் படுத்துவதும் கட்டடங்களுக்காக மனைகளை உபயோகிப்பதும் ; பி. 65 (i)

34. பஞ்சாயத்திடத்தில் அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸி லிடத்து நிலைபெற்றுள்ள பொதுப்பாட்டைகளிலிருந்து எவ்விதமான ஆக்கிரமிப்புகளையும் எடுத்துவிடுவது பற்றியும், அப்படிப்பட்ட பாட்டை களுக்கு உண்டாக்கப்படும் யாதொரு சேதத்தை, அந்தச் சேதத்தை உண்டாக்கின நபராவது அவர் செலவிலாவது மராமத்து செய்வது பற்றியும் ; பி. 82

35. பஞ்சாயத்துக்களிடத்தில் நிலைப்பெற்றுள்ள அல்லது அவைகளுக்குச் சொந்தமான பொதுப் பாட்டைகளிலாவது இதர சொத்திலாவது 85-வது பிரிவின்படி அல்லது 86–வது பிரிவின்படி அவர்களில் எந்தப் புறம்போக்குகளின் அல்லது நிலங்களின் உபயோகம் விஷய மாய் ஒழுங்கேற்படுத்தப்படுகிறதோ அந்தப் புறம்போக்குகளின் மேலாவது நிலங்களின் மேலாவது வளர்ந்து கொண்டிருக்கும் மரங் கள் விஷயமாக உள்ள யாதொரு உபயோகத்தைத் தீர்மானிப்பதும், அந்த மரங்கள் யாருக்குச் சொந்தமானவை என்பதைப்பற்றி இன்ன விஷயங்களை நிச்சயமாய் கொள்ளவேண்டுமென்பது பற்றியும் ; பி. 85, பி. 86, பி. 87

36. பஞ்சாயத்துக்களிடம் அல்லது பஞ்சாயத்து யூனியன்களிடம் சங்கர மித்து இருக்கும் அல்லது அவைகளுக்குச் சொந்தமான பொதுப் பாட்டைகளையாவது, இதர நிலத்தையாவது அனுமதியில்லாமல் அனுபோகத்தில் வைத்துக்கொண்டதற்காக அபராதங்கள் விதித்து வசூலிப்பதும். அந்தப்படி அனுபோகத்தில் வைத்துக் கொண்டத ஞல் உண்டான யாதொரு சேதத்துக்காக நஷ்டஈட்டுத் தொகையை விதித்து வசூலிப்பது பற்றியும் ; பி. 82

37. பொதுவான அல்லது தனி நபர்களுக்குச் சொந்தமான யாதொரு மார்க்கெட் விஷயத்திலாவது, அதை உபயோகிப்பவர் விஷயத்திலா வது பஞ்சாயத்தாகிலும், நிர்வாக அதிகாரியாகிலும், பஞ்சாயத்து அல் லது பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலாகிலும் கமிஷனராகிலும் செலுத்தக்கூடிய அதிகாரங்களும், அந்த அதிகாரங்களை அனுசரித் துப் பிறப்பிக்கப்படுகிற எந்த உத்தரவுகளையாவது அமுலுக்கு கொண்டுவருவது பற்றியும் ; பி. 100

38. பஞ்சாயத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கால்நடைத் தொழுவங்களில் கால்நடைகளைக் கட்டிவைக்க வேண்டுமென்று அவைகளின் சொந் தக்காரர்களைக் கட்டாயப்படுத்துவதும் அது விஷயமாய் விதிக்கப்படத் தக்க கட்டணங்கள் பற்றியும் ; பி. 64 (e)

39. மேற்படி கிராமத்திலே வீடுகளிலிருந்தும் பண்ணையின் முற்றங்களி லிருந்தும் அப்புறப்படுத்தப்படுகிற கழிவுப் பொருள்களைப் போடக் கூடிய குழிகளைத் தோண்டுவதற்காக நிலத்துண்டுகளை வகுத்து'க் கொடுக்கும்பொருட்டு பிரஸ்தாப பஞ்சாயத்து நிலத்தை அடைவதும், அந்த நிலத் துண்டுகளில் எவற்றையேனும் பிரஸ்தாப கிராமத்தில் உள்ளவர்களுக்கும் ஒப்படை செய்வதும், விதித்து வாங்கப்பட வேண்டிய குத்தகைத் தொகை உட்பட இன்ன நிபந்தனைகளுக்குட் பட்டு அந்த ஒப்படையைச் செய்யலாம் என்பது பற்றியும் ;

40. பஞ்சாயத்துக்கள் சம்பந்தமாகவும் அவைகளின் நிர்வாக அதிகாரிகள் சம்பந்தமாகவும் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்கள், அவைகளின் அக்கிராசனர்கள், கமிஷனர்கள் ஆகிய இவர்களின் சம்பந்தமாகவும் கிராம உத்தியோகஸ்தர்கள் நிறைவேற்றவேண்டிய கடமைகள் பற்றியும் ; பி. 82 பி. 126 பி. 164

41. இச்சட்டத்தின் பிரகாரம் பிறப்பிக்கப்பட்ட (லைசென்சுகளை அல்லது அனுமதிகளைக் கொடுத்து அல்லது கொடுக்க மறுத்துப் பிறப்பிக்கப் படும் உத்தரவுகள் உள்பட) உத்தரவுகளின் மேல் செய்து கொள்ளப் படுகிற அப்பீல்கள் இச் சட்டத்திலாவது, விதிகளிலாவது அனுமதிக் கப்பட்டிருந்தாலும் சரி மற்றப்படி அனுமதிக்கப்பட்டிருந்தாலும் சரி, இன்ன காலத்திற்குள் அந்த அப்பீல்களைக் கொடுத்துக் கொள்ள வேண்டு மென்பது பற்றியும் ; பி. 159

42. பொதுப் பாட்டைகளையும், சந்தைகளையும், உற்சவங்களையும் பஞ்சா யத்து யூனியன் கவுன்ஸிலைச் சேர்ந்தவையென்றோ பஞ்சாயத்தைச் சேர்ந்தவையென்றோ தரம் பிரிப்பது பற்றியும் ;

43. இச் சட்டத்தின்படியாவது, வேறு எந்தச் சட்டத்தின்படியாவது, விதிக் கப்படுகிற யாதொரு வரியிலிருந்து கிடைக்கிற தொகைகளை அல்லது பெற்றுக் கொள்ளப்படுகிற வரும்படியை இந்த ராஜ்யத்திலுள்ள பிர தேச அதிகார சபையினருக்கும் பங்கிடுவது விஷயமாய் ஒழுங்கு ஏற்படுத்துவது பற்றியும் ; பி. 121

44. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விசேஷ சபைகளின் ஒன்று பஞ்சாயத்தாகயிருந்தால், அவைகளுக்கு நேரிடும் தகராறுகளைத் தீர்ப்பது பற்றியும் ; பி. 177

45. பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் அந்தக் கொள்கைகளை அனுசரித்து அரசாங்கத்தாரால் மான்யங்க ளும் நிதி உதவிகளும் கொடுக்கப்பட வேண்டுமோ அந்தக் கொள் கைகளை முறைபடுத்துவது பற்றியும் ; பி. 177

46. தனிப்பட்ட மார்க்கெட்டுகளின் சொந்தக்காரர்கள், அனுபோகதார்கள் குத்தகைதாரர்கள் ஆகிய இவர்கள் வைத்து வரவேண்டிய கணக்கு களும், அக்கணக்குகளின் தணிக்கையையும் பரிசீலனையும் பற்றியும் ; பி. 107

47. இச் சட்டத்தின்படி எந்த விளம்பரங்களையாவது பொது ஜனங் களுக்குரிய எந்த அறிக்கைகளையாவது பிரசித்தம் செய்ய வேண்டிய விதம் பற்றியும் ;

பிரிவு 178-க்கு மசோதாவில் விளக்கம்

பகுதி 178.—இப் பகுதி இம் மசோதாவில் கண்டுள்ள பல்வேறு விஷயங்கள் சம்பந்தமாக அரசாங்கத்தாருக்குள்ள விதி செய்வதற்கான அதிகாரங்களைப்பற்றி விவகரிக்கிறது யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தை ஒரு பஞ்சாயத்துக் கிராமத்திலிருந்து அல்லது பஞ்சாயத்துப் பட்டணத்திலிருந்து விலக்குவது சம்பந்தமாக அல்லது யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தை அதில் சேர்ப்பது சம்பந்தமாக அல்லது யாதொரு பிரதேச விஸ்தீரணத்தையாதொரு முனிசிபாலிட்டியில் சேர்ப்பது சம்பந்தமாக அனுசரிக்க வேண்டிய நடைமுறைகளைப் பற்றி விதிகள் செய்வதற்காக மற்ற விஷயங்களோடு கூட குறிப்பாக அதிகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது; மேலும், ஒரு பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் ஸ்திரிகளையும் ஷெட்யூல்டு வகுப்பினர்களையும் இன்ன கால அளவிற்குள் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளலாம் என்பது பற்றியும் ஸ்தீரிகள் அல்லது ஷெட்யூல்ட் வகுப்பினர்கள் யாரும் அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படவில்லையென்றால், காலி ஸ்தானங்களை நிரப்பும் விதம் பற்றியும், இந்தச் சட்டத்தின் காரியங்களுக்காக ஜனத்தொகையை நிச்சயிப்பது பற்றியும், பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்களுக்கும் மானியங்களையும் சகாயத் தொகைகளையும் கொடுப்பது விஷயமாக அரசாங்கத்தார் அனுசரிக்க வேண்டிய கொள்கைகளைப் பற்றியும் கூட குறிப்பாக அதிகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

பிரிவின் அமைப்பு பற்றி

இந்த பிரிவை பார்க்கும் பொழுது அதன் வலது பக்கத்தில் எங்களால் காட்டியுள்ள பிரிவுகள் படிக்கு ஒன்றன் பின் ஒன்றாக கிரம வரிசையில் அமைக்கப்பட வில்லை என்பது விளங்கும். அரசாங்கத்தார் அதை உடனே சரிப்படுத்த வேண்டும் என்று கோருகிறோம்.

பொது.—(1)-வது உபபிரிவின் கீழ் அடியில் கண்டபடி 97 பிரிவுகள் கீழும், (2)-வது உப பிரிவின் கீழ் 47 தொகுதிகள் படிக்கு அரசாங்கம் விதிகள் செய்யலாம். இவைகளின்றி, இந்தச் சட்டத்தின் காரியங்களை பொதுவாய் நிறைவேற்றுவதற்கும் விதிகளை ஏற்படுத்தலாம். இந்த விதிகளை இன்ஸ்பெக்டர், முதலியவர்கள் செய்தால் செல்லாது. பி. 157 (1)யை பார்க்கவும். இந்தச்சட்டத்தின் படிக்கு யாவற்று விதிகளையும் செய்யும் வரையில் அந்தந்த பிரிவுகளுக்குத் தகுதியான பழைய மதராஸ் கிராம பஞ்சாயத்து சட்டத்தின் கீழ் செய்திருக்கும் விதிகள் ஆசாரத்தில் இருக்கும். பிரிவு 190-ஐயும் 4-ம் ஷெட்யூலையும் பார்க்கவும். இந்தியன் அரசியல் அமைப்பு ஆர்டிகள் 166 (3)-க்குப் பிறகு அடியில் கண்டவாறு ஏற்படுத்தப்பட்டன. அதாவது இதுவரையிலும் செய்யப்பட்ட விதிகள் ஏற்படும் வரையில் அவைகள் ஆசாரத்தில் இருக்கும் என்று கண்டிருக்கிறது. கெஜட் ஆப் இந்தியா எக்ஸ்ட்ரார்டினரி பார்ட் (2) செக்ஷன் (3) பேஜ் 867; 7 அக்டோபர் (1950) Gazette of India Extraordinary Part (2 Section (3) Page 867 dated 7th October 1950.) சட்டத்திற்கு மீறி விதிகள் இருக்கக் கூடாது. [படேமியா-எ.-ஜம்கான், 1950. M. 366 (F. B.) : : வெங்கையா-எ.-புல்லையா I. L. R. 1942 M 654 = A. I. R. 1942 M. 466.] விதிகள் கிரமமாக செய்யப்பட்டவை என்று கோர்டுகள் கருதவேண்டும். விதி சட்டவிரோதமாய் யிருந்தால் அதை எப்போதும் சட்ட விரோதம் என்று வாதிக்கலாம். கோர்ட்டார் அந்த விதிகள் சட்ட விரோதமா என்பதை விசாரித்துத் தீர்மானிக்க வேண்டும். [நடேசன் குறித்து, 40 M. 125 = 38 I. C. 847 (866)] சட்டத்தில் உள்ள அர்த்தத்தையே விதிகளிலும் அனுசரிக்க வேண்டும். சமயம் வந்தபொழுது ஒரு விதியானது சட்டசம்மதமல்ல என்று வாதிக்கலாம் [ஜகன்னாத்-எ-சொரோன் முனிசிபாலிடி, A. I. R. 1939 All 337.]

பி. 178. (2).—இந்த உப-பிரிவின் கீழ் 7 காரியங்களுக்கு விதிகள் செய்யலாம் என்று இருக்கிறது. இந்த 47-ல் ஒவ்வொரு காரியமும் எந்த பிரிவின் கீழ் வரக்கூடும், வருகிற என்பதை அந்த விஷயத்திற்கு வலது பக்கத்தில் கண்டிருக்கிறது.

இதில் கண்ட எல்லா விதிகளையும் அந்த அந்த பிரிவின் கீழ் சேர்க்கப் பட்டிருக்கிறது. அவைகளை அறிய இடது பக்கத்தில் முதலில் கொடுத்து இருக்கும் இந்த புத்தகத்தின் பொருளடக்கத்தில் பார்க்கவும். **இது வரையில் செய்யப்பட்ட எந்த விதிகளையும் விடவில்லை என்பதை அறியவும்.**

விதிகள் பி. 178 (1) இந்த பிரிவு 178-ன் கீழ் அல்லாமல் இன்னும் இதன் அடியில் கண்ட பிரிவுகள் கீழேயும் அரசாங்கம் விதிகளை செய்யலாம்.

எண்	பிரிவு	எண்	பிரிவு	எண்	பிரிவு	எண்	பிரிவு
1.	2 (9)	26.	40 6)	51.	71 (2)	76.	121 (2)
2.	3 (3)	27.	42	52.	72 (2)	77.	122
3.	10 (1)	28.	44 (3)	53.	74 (1)	78.	,,
4.	12 (1)	29.	,, (5)	54.	82 (1)	79.	123
5.	14	30.	47	55.	85 (2)	80.	124 (4)
6.	15 (1)	31.	50 (1)	56.	,, ,,	81.	125
7	16	32.	51 (1)	57.	86 (1)	82.	126
8.	17 (1)	33.	52 (2)	58.	,, (4)	83.	127
9.	,, (3)	34.	53 (1)	59.	,, (5)	84.	129
10.	18 (2)	35.	53 (3)	50.	87 (1)	85.	139
11.	19 (7)	36.	54	61.	87 (2)	86.	140 (2)
12.	20 (4)	37.	55 (1)	62.	93	87.	,, (5)
13.	21	38.	,, (3)	63.	99 (2)	88.	144 (2)
14.	26 (d)	39.	58 (1)	64.	106	89.	145 (2)
15.	,, (i)	40.	,, (2)	65.	109	90.	148
16.	28	41.	59	66.	110 (1)	91.	157 (4)
17.	30	42.	61	67.	111 (1)	92	,, (5)
18.	34 (2)	43.	63	68.	112 (b)	93.	159 (2)
19.	,, (3)	44.	64	69.	113	94.	162 (1)
20.	,, (4)	45.	65	70.	116	95.	164
21.	35	46.	66	71.	117	96.	167
22.	37 (5)	47	67	72.	119 (3)	97.	180
23.	38	48.	68	73.	120 (1)		
24.	40 (2)	49.	70	74.	,, (4)		
25.	,, (5)	50.	71 (1)	75.	121 (1)		

அதிகபடி விதிகள்

இதனடியில் அச்சிட்டிருக்கும் விதிகள் எந்த பிரிவின் கீழும் வரவில்லை. ஆகையால் அவைகளை தனியாக இதனடியில் சேர்க்கப் பட்டிருக்கிறது.

விதிகள். பி. 178 (2) (XLII) படிக்கு

பொது பாட்டைகள், சந்தைகள், திருவிழாக்கள் சத்திரங்கள், டிஸ்பென்ஸரிகள் நூல் நிலையங்கள் முதலியவற்றைத் தரம் பிரிப்பது (L-VI-6)

1. யாதொரு பஞ்சாயத்துப் பிரதேசத்திலிருக்கிற பொது பாட்டைகள் சந்தைகள், திருவிழாக்கள், சத்திரங்கள், டிஸ்பென்ஸரிகள், நூல் நிலையங்கள் ஆகிய இவை ஜில்லா போர்டைச்சேர்ந்தவை என்றோ பஞ்சாயத்தைச் சேர்ந்தவை என்றோ தரம் பிரிப்பது சம்பந்தமாக, இன்ஸ்பெக்டரானவர்.—

(i) பொதுப் பாட்டைகள் விஷயத்தில், கலெக்டருடனும் (ஹைவேஸ்) பிரதான என்ஜினீருடனும்.

(ii) சந்தைகளின் விஷயத்திலும் திருவிழாக்கள் விஷயத்திலும் பொது சுகாதார டைரெக்டருடனும்.

(iii) சத்திரங்களின் விஷயத்தில், ரெவினியு போர்டாருடனும்.

(vi) நவீன மருத்துவ டிஸ்பென்ஸரிகள் விஷயத்தில், மெடிகள் ஸெர்விஸஸ் டைரெக்டருடனும்.

(v) நவீன மருத்துவ டிஸ்பென்ஸரிகள் அல்லாத இதர டிஸ்பென்ஸரிகள் விஷயத்தில், இன்டிஜீனஸ் மெடிஸின் ஹானரரி டைரெக்டருடனும்.

(vi) நூல் நிலையங்கள் விஷயத்தில், பொது நூல் நிலையங்களின் டைரெக்டருடனும்.

கலந்தாலோசித்து உத்திரவு பிறப்பிக்க வேண்டும்.

2. 1-வது பிரிவின்படி எவ்விதமாகவேணும் தரம் பிரிவினை செய்வதற்கு உத்தரவு பிறப்பதற்கு முன், சம்பந்தப்பட்ட ஜில்லா போர்டும் பஞ்சாயத்தும் தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்கு அவைகளுக்கு நியாயமான அவகாசம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

3. 1-வது விதியின்படி இன்ஸ்பெக்டரால் உத்தரவான யாதொரு சப் பிரிவினையை மாற்றி அமைக்க அரசாங்கத்தாருக்கு அதிகாரம் உண்டு.

93. Measurement and Check measurement of Panchayat Works
பஞ்சாயத்து வேலைகளை அளப்பதுவும் தணிக்கை அளப்பதுவும்

1. கண்டிராக்ட் மூலமாகிலும் அல்லது இலாகா மூலமாகிலும் சேகரிக்கப்பட்ட சாமான்களையும், செய்யப்பட்ட வேலைகளையும் அளக்கவும், தணிக்கை அளவு பார்க்கவும் அடியிற்கண்ட அதிகாரிகள் அருகதை யுள்ளவர்களாவார்கள்.

வேலையின் பெயர்	அளக்கும் உத்தியோகஸ்தர்	தணிக்கை அளவு பார்க்கும் உத்தியோகஸ்தர்
(1)	(2)	(3)
(1) ரூ. 1500க்கு உட்பட்ட பழுது பார்க்கும் அல்லது (பராமரிக்கப்படும் ரோட்டு வேலைகள்) உள்பட வேலைகள். (2) ரூ. 1000க்குட்பட்ட ரோட்டு வேலைகள் (புது) (3) ரூ. 500க்குட்பட்ட ரோட்டு வேலையில்லாத இதர புதுவேலைகள்.	அந்த வேலைகளை நடத்த பிரத்தியேக திறமையுள்ள உத்தியோகஸ்தர், அவர் இல்லா விட்டால் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி.	டிபுடி பஞ்சாயத்து உத்தியோகஸ்தர்
(4) ரூ. 2000-க்கு மேற்படாததும் (1) முதல் (3) வரையில் குறிப்பிட்டுள்ளவைகளின் அளவுக்கு அதிகமாக பிடிக்கும் வேலைகள்	அந்த வேலையில் பிரத்தியேக திறமையுள்ள உத்தியோகஸ்தர் அல்லது ஷெ உத்தியோகஸ்தர் இல்லாத இடத்தில் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி அல்லது பிரத்தியேக திறமையுள்ள அதிகாரியும் நிர்வாக அதிகாரியும் இல்லாத இடத்தில் பஞ்சாயத்து ஓவர்ஸியர்	ஜில்லாவில் பஞ்சாயத்து வேலைகளை மேற்பார்வை செய்வதற்காகவுள்ள மேற்பார்வையாளர் (சூபர்வைஸர்)

வேலையின் பெயர்	அமைக்கும் உத்தியோகஸ்தர்	தணிக்கை அளவு பார்க்கும் உத்தியோகஸ்தர்
(1)	(2)	(3)
5) ரூ. 2000-க்கு மேற்பட்டதும் ரூ. 5000-க்கு மேற்படாததுமான வேலைகள்	அந்த வேலையில் பிரத்தியேக திறமையுள்ள உத்தியோகஸ்தர் அல்லது மேற்படி உத்தியோகஸ்தரில்லாத இடத்தில் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி அல்லது மேற்படி இருவரும் இல்லாத இடத்தில் பஞ்சாயத்து ஓவர்ஸீயர்	ஹைவேஸ் உதவி இன்ஜினீயருக்கு வேண்டிய யோக்ய தாம்சங்கள் உள்ள ஜில்லாவில் பஞ்சாயத்து வேலைகளை மேற்பார்வை செய்யவுள்ளவர் (சூப்பர்வைஸர்) அல்லது மேற்பார்வையாளருக்கு யோக்கியதாம்சம் இல்லாவிட்டால் ஹைவேஸ் உதவி இன்ஜினீயர்.
(6) ரூ 5000-க்கு மேற்பட்ட வேலைகள்	பஞ்சாயத்து ஓவர்ஸீயர்	

2. ஒப்படைக்கப்பட்ட வேலையை நடத்த பிரத்தியேக திறமை உள்ள உத்தியோகஸ்தர் இல்லாவிட்டாலும், பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி இல்லாவிட்டாலும், ஜில்லாவில் பஞ்சாயத்து வேலைகளை மேற்பார்வையிட உள்ள மேற்பார்வையாளருக்கு உதவிசெய்ய ஓவர்ஸீயர் இல்லாவிட்டாலும் 1-வது விதியில் கண்டுள்ள (4) (5) (6) இனவேலைகளை அந்த பஞ்சாயத்தின் மேல் அதிகாரம் செலுத்தக்கூடிய உதவி பஞ்சாயத்து ஆபீஸர் (டிபுடி பஞ்சாயத்து) அளக்கவேண்டும்.

(ஜி. ஓ. நெ. 2085 எல். ஏ. 12-10-1953)

(ஜி. ஓ. நெ. 1611 எல். ஏ. 18-11-1954)

119. வேலைகளை அளவெடுப்பது :— அளக்கப்படாத வேலைகளுக்கு பணம் கொடுப்பது தடுக்கப்பட்டது. இலாகாவால் செய்யப்படாத சில்லரை பலவகைப்பட்ட வேலைகள் விஷயத்திலும் அளவு கொடுக்க இயலாத இதர வேலைகள் விஷயத்திலும், நிர்வாக அதிகாரி ஒவ்வொரு அம்சத்திலும் விலை பட்டியல் (bill) கொடுக்கப்பட்ட பணத்திற்கு போதுமான வேலை நடந்திருக்கிறதென்று அத்தாக்ஷி பத்திரம் கொடுக்க வேண்டும்.

(யூனியன் மான்யூல் விதி 56)

120. அளவெடுப்பு பதிவு புத்தகம் :—செய்யப்பட்ட எல்லா வேலைகளையும், சேகரிக்கப்பட்ட எல்லா வஸ்துக்களையும் அளவெடுக்கும் புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

(யூனியன் மான்யூல் குறிப்பு 175)

121. அளவெடுக்கப்பட்ட வேலையின் இடத்தையும் மற்றைய முழுவிவரங்களையும், சடுதியில் கண்டுபிடித்து அளவுகளை சரிபார்க்கவும் போதுமானவகையில் அளவுகளை பதிவு செய்யும் புத்தகத்தில் எழுதப்படவேண்டும். அளவு எடுப்புகளின் சுருக்கம் செய்யப்பட்ட வேலையின் பட்டியல் தயார்செய்யும்போது கடைசியில் அதன் சாரத்தை குறிக்கப்பிடவேண்டும். விவரமாகவும், சுருக்கமாகவும் எழுதப்பட்டுள்ள விவரங்கள் சிவப்பு இங்கியினால் குறுக்குகோடு இடப்படவேண்டும் ; அதே அளவினங்களுக்கு இரண்டாம் முறை பணம் கொடுக்காமலிருக்க ஒப்பந்த சர்டிபிகேட் தேதி அல்லது பணம் பட்டுவாடா செய்யப்பட்ட தேதி எழுதப்படவேண்டும்.

(யூனியன் மான்யூல் பக்கம் 176)

122. அளவுகளை சரிபார்க்கப்படு முன் வேலைக்கு முடிவாக பணம் பைசல் செய்யக்கூடாது.

(யூனியன் மான்யூல் பக்கம் 177)

கண்டிராக்டர்களுக்கு பணம் கொடுத்தல்

123. ஒப்பந்த உறுதி சீட்டு :— செய்தவேலைக்கோ, கண்டிராக்டர்களால் சேகரிக்கப்பட்ட பொருள்களுக்கோ ஒப்பந்த உறுதி சீட்டின் பேரில் பணம் கொடுக்கப்படும். ஒப்பந்த காரர் நேரிலாவது அல்லது அவருடைய அனுமதியின் பேரில் வேலையைப் பார்த்துக் கொள்ளும் நபராவது பெற்றுக்கொள்ளலாம். இரண்டு அம்சத்திலும் ஒப்பந்தக் காரர் கையொப்பம் இடவேண்டும். உறுதி சீட்டு அது பொருத்த மட்டில் நாளது தேதி வரையில் நிறைவேற்றப்பட்ட வேலை பூராவையும் கண்டிருக்கவேண்டும். ஒப் பந்தக்காரரிடமிருந்து பாதுகாப்பு பணம் (Security) ரொக்கமாக வாங்கப்படாவிட் டால் வேலை பூர்த்தியாகும் வரைக்கும் முடிவாக தணிக்கையளவு செய்து நிகர தொகைக்கு உறுதி சீட்டு தயாரிக்கும் வரைக்கும்] வேலை செய்யப்பட்டிருக்கும் பூராதொகையில் 10 சதம் ஒப்பந்த காரரிடமிருந்து கழித்துக் கொள்ளவேண்டும்.

(யூனியன் மான்யூல் குறிப்பு 179)

124. ஒப்பந்ததாரர்களுக்கு சாதாரணமாக முன் பணம் கொடுக்கக்கூடாது. ரூ. 50-க்கு உட்பட்ட சுகாதார வேலைகளுக்கு அத்தியாவசியமாகத் தேவையென்று ஏற்பட்டநிலை யில் மட்டும் முன் பணம் கொடுக்கலாம். அம்மாதிரி முன்பணம் கொடுக்கப்பட்ட இனங்களில் அதற்கென ஏற்படுத்தப்பட்ட நமூனுவில் சவிஸ்தாரமான பட்டியல் தயாரித்து வேலைமுடிந்த உடனே கணக்கு பரிசோதகரின் ஆபீஸிற்கு அனுப்பவேண்டும்.

(யூனியன் மான்யூல் குறிப்பு 180)

125. மதிப்பீட் (Estimate) டில் சில்லரைச் செலவுகளுக்காகவும் பலவகைப்பட்ட செல வினங்களுக்காகவும் ஒதுக்கிவைக்கப்பட்ட தொகையிலிருந்து நடை முறை வழக்கமாக ஒப்பந்ததாரருக்கு பூராவேலையும் வாஸ்தவத்தில் நடந்திருந்து பட்டியலில் சவிஸ்தார மாகக் கண்டிருந்தாலொழிய கொடுக்கக் கூடாது.

(யூனியன் மான்யூல் குறிப்பு 181.)

126. ஒப்பந்தவேலை பூர்த்தியான உடன் யாதொரு தவக்கமில்லாமல் ஒப்பந்ததாரருடைய கணக்கை முடிவுகட்டவேண்டும். முடிவான உறுதி சீட்டு (certificate) ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு ஒரு மாதத்திற்கு மேல் ஒப்பந்ததாரர் தொகை பெற்றுக்கொள்ளா மல் தவக்கம் செய்தால் அவருடைய தொகை கணக்கு முடிவுகட்டப்பட்டு நிலுவை தொகையை "பாதுகாப்பு தொகை" (Deposit) என்னும் தலைப்பில் வரவு வைக்கப் படவேண்டும். அத்தொகை மூன்று வருடங்களுக்கு கேள்வி முறையில்லாத தொகை யிலிருந்து அடுத்து வரும் மார்ச் 31–தேதியன்று பஞ்சாயத்தின் வருமானத்திற்கு மாற்றப்படும்.

(யூனியன் மான்யூல் குறிப்பு 182.)

127. தினத்தொழில் முறையில் வேலை செய்யப்படும்பொழுது மதராஸ் பொதுவேலை இலாகா வினல் பராமரித்து உபயோகிக்கப்படும் பட்டியல் அடிப்படையாக இருக்கவேண்டும். தொழிலில் ஈடுபட்டிருப்போர் (Establishment) என்னும் தலைப்பின் கீழ் சம்பளம் பட்டு வாடா செய்யப்படும் நபர்களும் வேலைக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கும் நபர்களும் தவிர மற்றைய வேலைக்காரர்கள் தினத்தொழிலாளிகள் எனக் கருதப்படுவார்கள். அவர்கள் ஊதியம் எந்த வேலைக்காக அவர்கள் அமர்த்தப்பட்டார்களோ அந்த நபர் பட்டியலின் கீழ் கொடுக்கப்படவேண்டும். அந்த வேலையை நெருங்கி அடுத்து பார்க்கும் கீழ் உத்தியோகஸ்தர் நபர் பட்டியலை பிரதிதினமும் எழுதவேண்டும்.

(ஜி. ஒ, நெ. 1093 எல். ஏ. 26-6-1947)

128. நிர்வாக அதிகாரி அல்லது பஞ்சாயத்து அங்கத்தினர் முன்போ அல்லது அவர்க ளுடைய சாக்ஷியத்தின்பேரிலோ நபர் பட்டியல் படிதொகை கொடுக்கப்படவேண்டும். ஒவ்வொரு தனிப்பட்ட தொகைக்கும் அதற்கென குறித்திருக்கும் காலத்தில் சுருக்கு கையெழுத்து அல்லது பகுத்து காட்டக்கூடிய (distinction) குறிபோட்டு உறுதி கூறவேண்டும். நபர் பட்டியலில் பல பாகங்களின் அடியில் தினம் கொடுக்கப்பட்ட தொகையை எழுத்தாலும் எண்ணாலும் எழுதவேண்டும்.

(யூனியன் மான்யூல் குறிப்பு 184.)

அதிகபடி விதிகள்

129. ரூ. 20-க்கு மேற்பட்ட ஒவ்வொரு தனிப்பட்ட பட்டுவாடா தொகைக்கும் சம்பந்தப்பட்ட நபரிடமிருந்து தபால் (பத்திர) தலை ஒட்டப்பட்ட ரசீது பெறவேண்டும்.

(யூனியன் மான்யூல் குறிப்பு 185.)

130. முடிவான அறிக்கை:—வேலை முடிவுபெற்ற உடன் கணக்கு பரிசோதகர் ஆபீஸிற்கு நபர் பட்டியலுடன் வேலை முடிந்ததற்கு கடைசியாகக் கொடுக்கப்பட்ட தொகைக்கு ஒப்பந்த அத்தாட்சி பத்திரமும் முடிவான அறிக்கையும் நிர்வாக அதிகாரி அனுப்ப வேண்டும்.

(யூனியன் மான்யூல் விதி 58)

131. வேலை முடிந்தபின் வேலை நடந்த இடத்தில் சாமான்கள் மிகுதியாக இருந்தால் அவைகளை விற்பனைக்காக வேண்டிய வழிகளில் ஸ்பஷ்டமாக அனுப்புவதுடன், தீர்க்கப்படாத கொடுக்க வேண்டிய பொறுப்பு இருந்தால் அறிக்கையின் கடைசி பக்கத்தில் பூரா விவரங்களையும் கொடுக்கவேண்டும். பொது ஜனங்களால் கொடுக்கப்பட்ட தொகையிலிருந்து செய்யப்பட்ட வேலைகளின் விஷயத்தில், செலவு செய்யப்படாத மிச்சத்தொகை இருந்தால் அதை எப்படி பயன்படுத்த வேண்டுமென்பதை தெரிவிக்கவேண்டும்.

(யூனியன் மான்யூல் குறிப்பு 186)

132. தண்ணீர் கொடுபடு வேலையும், வடிகால்வேலையும் பஞ்சாயத்தில் தண்ணீர் கொடுபடுவேலைக்கும் வடிகால் வேலைக்கும் தயாரிக்கப்பட்ட திட்டத்திற்கு நிர்வாக அதிகாரம் கொடுக்கக்கூடிய அதிகாரிகள் கீழே குறிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீட்டின் இயல்பு (1)	அனுமதி கொடுக்கக் கூடிய அதிகாரி (2)
ரூ. 250-க்கு மேற்படாத எல்லா மதிப்பீடுகளுக்கு	பஞ்சாயத்து
ரூ. 250-க்கு மேற்பட்டு ரூ. 2500-க்கு மேற்படாததுமான முதலாவதான வேலைகளின் மதிப்பீடுகள்.	ஜில்லா பஞ்சாயத்து அதிகாரி
ரூ. 2500-க்கு மேற்பட்ட முதலாவதான வேலைகளின் மதிப்பீடு.	அரசாங்கம்.
ரூ. 250-க்கு மேற்பட்டதும் ரூ. 10,000-க்கு மேற்படாமல் பராமரிப்பு மான்யத்தில் ஒதுக்கப்படாத பழுது பார்க்கும் அல்லது பராமரிக்கப்படுவதுமான மதிப்பீடுகள்	ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர்.
பராமரிப்பு மான்யத்தில் ஒதுக்கப்பட்ட பழுது பார்க்கும் வேலை அல்லது பராமரிப்பு வேலை ரூ. 250-க்கு மேற்பட்ட மதிப்பீடுகள்	ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர்

(மீமோராண்டம் நெ. 35437/46-4—எச் 1. பி. எச். 16-8-1946)

(ஜி. ஓ. நெ. 4099 சுகாதாரம் 30-12-1952.)

(மீமோராண்டம் நெ. 9306 டப்லுயூ-3/153-3 சுகாதாரம் 2—3—1953)

89. Authorities to accord Administrative and Technical Sanction to Works of Panchayats

பஞ்சாயத்து வேலைகளுக்கு நிர்வாக அனுமதியும் முறைப்படியான அனுமதியும் அளிக்கக்கூடிய அதிகாரிகள்.

1. இவ்விதிகள் குடி தண்ணீர், வடிகால் சம்பந்தப்பட்ட வகைகள் தவிர மற்றைய வேலைகளுக்கு இவ்விதிகள் பொருந்தும்.

2. சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து ரோட்டுகளுக்கு கல் பரப்புவது தவிர மற்றைய புது வேலைகளின் ரூ. 500-க்கு மேற்படாத மதிப்பீடுகளுக்கும். பழுதுபார்த்தல், பராமரித்தல் ரோட்டுக்கு கல் பரப்புதல் உட்பட ரூ. 875-க்கு மேற்படாத மதிப்பீடுகளுக்கும் அனுமதி அளிக்கலாம். இந்த மதிப்பீடுகளுக்கு வெளி அனுமதி வேண்டியதில்லை.

3. 2-வது விதியில் கூறியுள்ள மதிப்பீடுகள் தவிர மற்றைய மதிப்பீடுகளுக்கு நிர்வாக, முறைப்படியான அனுமதிகள் அளிக்கக்கூடிய உத்தியோகஸ்தர்கள் கீழ் கண்டவாறு:—

I. ரோட்டுகளுக்கு கல் பரப்புதல் அல்லாத முதல்வதான (ஒரிஜினல்) வேலைகள்.

மதிப்பீடுகளின் இனம்	அனுமதிக்கக்கூடிய அதிகாரி.	
	நிர்வாக	முறைபடியான
(1)	(2)	(3)
(1) ரூ. 500-க்கு மேற் பட்டும் ரூ. 1000–க்கு உட்பட்ட மதிப்பீடுகள்	(1) 1-வதுவகுப்பை சேர்ந்த பஞ்சாயத்து. (2) 2-வது வகுப்பைசேர்ந்த பஞ்சாயத்து ஜில்லா பஞ்சாயத்து ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர் அனுமதி.	ஜில்லாவில் பஞ்சாயத்து வேலைகளை மேற் பார்வையிடும் அதிகாரி. உதவி இன்ஜினீருக்கு போதுமான யோக்கியதாம்சம் இல்லாத பஞ்சாயத்து வேலைகளை பார்வையிடும் பார்வையாளர் ரூ. 2000-க்கு மேற்பட்ட மதிப்பீடுகள் ரூ. 2000-க்கு மேற்பட்ட மதிப்பீடுகளுக்கு ஹைவேஸ் உதவி என்ஜினீர் அனுமதிக்கவேண்டும்.
(2) ரூ. 1000-க்கு மேற் பட்டும் ரூ. 5000-க்கு உட் பட்ட மதிப்பீடுகள்.	1-வது அல்லது 2-வது வகுப்பை சேர்ந்த பஞ்சாயத்துகள் ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர்.	(2) ஜில்லாவில் பஞ்சாயத்துகளின் வேலைகளை பார்ப்பதற்கு பார்வையாளர் (Overseer) மட்டும் இருந்தால் ஹைவேஸ் உதவி என்ஜினீர்.
(3) ரூ. 5000–க்கு மேற்பட்டும் ரூ. 25000-க்கு மேற்படாத மதிப்பீடுகள்.	1-வது அல்லது 2-வது வகுப்பைச் சேர்ந்த பஞ்சாயத்துகள் பிரதேச அதிகாரியின் அனுமதி.	ஹைவேஸ்ஸின் பகுதி இன்ஜினீர்.
(4) ரூ. 25000-க்கு மேற்பட்ட மதிப்பீடுகள்.	1-வது 2-வது வகுப்பை சேர்ந்த பஞ்சாயத்துகள் இன்ஸ்பெக்டரின் அனுமதி.	ஹை வேஸ் மேற் பார்வை செய்யும் இன்ஜினீர்.

II. பழுது பார்க்கும் அல்லது பராமரிக்கும் வேலைகள் - ரஸ்தாக்களுக்கு கல் பரப்புவது உட்பட

மதிப்பீடுகளின் இனம் (1)	நிர்வாக (2)	முறைபடியான (3)
(1) ரூ. 875-க்கு மேற் பட்டும் ரூ. 1000-க்குட் பட்டது மான மதிப்பீடுகள்.	1-வது, 2-வது வகுப்பை சேர்ந்த பஞ்சாயத்து.	ஜில்லாவில் பஞ்சாயத்து வேலைகள் பார்வையிடுபவர் அல்லது மேல் பார்வை.
(2) ரூ. 1000-க்கு மேற் பட்டும் ரூ. 2000-க்குட் பட்டது மான மதிப்பீடுகள்.	(1) 1-வது வகுப்பு பஞ்சாயத்து.	ஜில்லாவில் பஞ்சாயத்து வேலைகளை மேற்பார்வை யிடுபவர் (Supervisor).
	(2) 2-வது வகுப்பு பஞ்சாயத்தில் ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸரின் அனுமதி.	ஜில்லாவில் பஞ்சாயத்து வேலைகளைப் பார்வையிடுபவர் மட்டு மிருந்தால் ஹை வேஸ் உதவி இன்ஜினீர்.
(3) ரூ. 2000-க்கு மேற் பட்டும் ரூ. 5000-க்குட்பட்ட மதிப்பீடுகள்.	1-வது, 2-வது வகுப்பு பஞ்சாயத்துகள் ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர் அனுமதி.	(1) உதவி இன்ஜினீருக்கு தேவையான யோக்கிய தாம்சங்கள் உள்ள பஞ்சாயத்து வேலைகளை பார்க்கும் மேற்பார்வையாளர். (2) இதர சந்தர்ப்பங்களில் உதவி இஞ்ஜீனர்.
(4) ரூ. 5000-க்கு மேற்பட்டு ரூ. 8000-க்கு உட் பட்ட மதிப்பீடுகள்.	1-வது, 2-வது வகுப்பு பஞ்சாயத்துகள் பிரதேச இன்ஸ்பெக்டர் அனுமதி.	ஹைவேஸ் பகுதி இன்ஜினீர். (Divisional Engineer.)
(5) ரூ. 8000-க்கு மேற் பட்ட மதிப்பீடுகள்.	ஷை	

(4) 1-வது, 2-வது பஞ்சாயத்துகளுக்கு 2-வது விதியின் கீழும், 3-வது விதி II (1) இனத்தின் கீழும் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள், 1-வது வகுப்பு பஞ்சாயத்துகள் விதி 3ல் II (2) இனம், I (1) இனத்தின் கீழும் 1955-ம் வருஷம் மார்ச் மாதம் 31-தேதி வரையில் செலுத்தப்படலாம். பஞ்சாயத்துகள் மேற்படி அதிகாரங்களை செலுத்தும் காலத்தை அப்போதைக் கப்போது அரசாங்கம் உத்திரவின் மூலம் நீடிக்கலாம்.

(5) ஹைவேஸ் பகுதி இன்ஜீனீரால் தயாரிக்கப்படும் மதிப்பீடுகள் விஷயத்தில் 3-வது விதியில் குறிப்பிட்டுள்ள புது வேலைக்கான மதிப்பீடுகள், ரோட்டுக்கு கல் பரப்புவது தவிற, ரூ. 25,000-க்கு மேற்பட்ட மதிப்பீடுகளுக்கு முறைப்படியான (Technical) அனுமதி அவசியமில்லை.

(6) சுகாதார வேலைகள் சம்பந்தப்பட்ட வரையில், திட்டத்தின் நிர்வாக பார்வை வகையில் சுகாதார டைரெக்டரின் அனுமதிபெற வேண்டும்; இவ்வனுமதி பெறுமுன் ஜில்லா பஞ்சாயத்து ஆபீஸர் (அவசியமானல்) பிரதேச இன்ஸ்பெக்டர், 3-வது விதியின் கீழ் இன்ஸ் பெக்டரின் அனுமதி பெறவேண்டும். (II) பஞ்சாயத்து அல்லது 3-வது விதி (3) கலத்தில் கண்டுள்ள அதிகாரி முறைப்படியான அனுமதி பெறுமுன் சுகாதார இன்ஜினீரின் அனுமதி பெறவேண்டும்.

(ஜி. ஓ. நெ. 2085-எல்-எ-12-10-1953).

91. Execution and Maintenance of District Board Works by Panchayats.

ஜில்லா போர்ட் வேலைகளை பஞ்சாயத்துகள் நடத்துவதும், பராமரிப்பதுவும்.

1. எந்த பஞ்சாயத்தும் அந்த பஞ்சாயத்தின் நிர்வாக அதிகார பிரதேச எல்லைக்கு வெளியேயுள்ள எந்த ஜில்லா போர்ட் வேலைகளை எடுத்து நடத்தவோ அல்லது பராமரிக்கவே அல்லது எடுத்து நடத்த அனுமதி கோரவோ கூடாது.

ஆனல் அந்த வேலையின் பாகம் கொஞ்சம் பஞ்சாயத்துக்குள்ளும், கொஞ்சம் பஞ்சாயத்துக்கு வெளியிலு மிருந்தால், அந்த வேலைக்காக லோகல் போர்ட், முனிஸிபல் கௌன்ஸில் இன்ஸ்பெக்டரின் விசேஷ அனுமதி பெற்றதற்கு பிறகு பஞ்சாயத்து அனுமதி கோர, எடுத்து நடத்த பராமரிக்கலாம்.

2. ஒவ்வொரு பஞ்சாயத்தும் தான் நடத்தும், பராமரிக்கும் ஜில்லா போர்ட்டாரால் ஒப்படைக்கப்படும் ஒவ்வொரு வேலைக்கும் தனியாக சரியானதும், தவறில்லாததுமான கணக்கு கள் வைக்கப்பட வேண்டும். அந்த கணக்குகளை கணக்கு பரிசோதகர் வேண்டும் போது ஆஜர்படுத்த வேண்டும்.

(ஜி. ஓ. நெ. 2157 எல்.-ஏ. 10-ஜூன் 1938)

97. Prohibition or Regulation of the use of Public or Private Springs, etc.

பொதுவான அல்லது சொந்தமான நீர் ஊற்றுகளை உபயோகிப்பதினின்றும் தடுப்பது அல்லது ஒழுங்கு செய்வது.

1. பஞ்சாயத்துகள் பொதுஜன சுகாதாரத்தை உத்தேசித்து எந்த பொது நீர் ஊற்று குளம், கிணறு அல்லது ஜல போக்கு பூராவிலாகிலும், ஒரு பாகத்திலாகிலும் பிராணிகளை கழுவுவது அல்லது துணிகளை துவைப்பது அல்லது இதர வஸ்துகளை கழுவுவது, மீன் பிடிப் பது முதலியவைகளுக்கு ஒழுங்கு ஏற்படுத்தலாம்; அப்படிப்பட்ட இடங்களை பிரத்தியேகமாக குடி தண்ணீருக்காகவும், ஸ்நானம் செய்வதற்காகவும், பிராணிகள் துணிகள் கழுவுவதற் காகவும், அல்லது குறிப்பிட்ட இதரவேலைகளுக்கு ஒதுக்கி வைக்கலாம்.

2. ஒரு நபருக்கு சொந்தமான நீர் ஊற்று, குளம், கிணறு அல்லது ஜலம் போக்கு விஷயத்தில் அவைகளுடைய சொந்தக்காரருடைய அனுமதியின் பேரில் 1-வது விதியில் சொல்லியுள்ள அதிகாரத்தை பஞ்சாயத்து செலுத்தலாம்.

3. பொதுஜன சுகாதாரத்தை உத்தேசித்து பொது ஜனங்கள் குடி தண்ணீர் எடுத் துக்கொள்ளும் பாத்தியதையுடைய தனிப்பட்ட நபருக்கு சொந்தமான ஜல ஊற்று, குளம் கிணறுகளில், பிராணிகள், துணிகள் இதரவஸ்துகள் கழுவுவதை பஞ்சாயத்து தடுக்கலாம் அல்லது ஒழுங்கு ஏற்படுத்தலாம்.

4. அரசாங்கத்தில் உத்தியோகம் வகிக்கும் வைத்திய அதிகாரி (Medical officer,) பஞ்சாயத்து அல்லது ஜில்லா போர்டிட மிருந்து எந்த கிணறு, குளம், நீர் ஊற்றுள்ள தண்ணீர் கிராமத்திலுள்ள பொது ஜனங்கள் உபயோகிப்பதால் அபாயகரமான வியாதிகள் பரவுவதற் கும் உண்டாக்குவதற்கும் காரணமாயிருப்பதாக அத்தாக்ஷி பத்திரம் கொடுத்தால் பொது அறிவிப்பு மூலம் உபயோகப்படுத்தாமல் தடுக்கலாம். அத்தகைய அறிவிப்பு நீர் எடுக்கும் இடத்திற்கு அருகில் ஒட்டப்பட்டும் தண்டோரா மூலமாகவும் எத்தனை தினங்களுக்கு தடுக்கப் பட்டிருக்கிற தென்பதை அறிவிக்க வேண்டும். நிர்வாக அதிகாரி வேறு அத்தாட்சி பத்திர மின்றி அறிவிப்பை நீடிக்கவும், அல்லது திருத்தவும் கூடும்.

5. எந்த நபரும்.

(a) பஞ்சாயத்தினுடையாவது அல்லது தனிப்பட்ட நபர் சொத்து விஷயத்தில் அத னுடைய சொந்தக்காரரினுடையாவது குடி தண்ணீர் அல்லது சமையல் காரியத்திற்காக பிரத்தி யேகமாக ஏற்படுத்தப்பட்ட தண்ணீர் அல்லது இடத்தில் குளிக்கவாவது அசுத்தம் செய்ய வாவது.

அதிகபடி விதிகள்

(b) குடி தண்ணீருக்காக ஒதிக்கி வைக்கப்பட்ட இடத்தில் உலர்ந்த படுக்கையின் மேல் அருவெறுக்கக் கூடியதுமானதும், காலக்கிரமத்தில் கெட்டுப்போகக்கூடிய வஸ்துகளை சேகரித்தல் அல்லது,

(c) குடி தண்ணீருக்காக அல்லது குளிப்பதற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட இடத்தில் துணிகளை சுத்தப்படுத்துவது அல்லது,

(d) குடி தண்ணீருக்காக அல்லது குளிப்பதற்காக அல்லது துணிகளை சுத்தம் செய்வதற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட இடத்தில் பிராணிகளை கழுவுவது அல்லது பாத்திரங் களை கழுவுவது அல்லது கம்பளம், தோல் அல்லது கெட்ட வாசனை அறுவெறுக்கக்கூடிய வஸ்துகளை சேகரித்து வைப்பது அல்லது,

(e) குடி தண்ணீருக்காக, குளிப்பதற்காக, துணிகளை சுத்தம் செய்வதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் இடத்தில் சாக்கடை குழி, சாக்கடை வடிகால், எந்திரம், தண் ணீர் கொதிக்கும் பாத்திரம் இவைகளின் தண்ணீர் கட்டிடத்தினின்றும், தன் ஸ்வாதீனத்தி லுள்ள நிலத்தினின்றும் புகவிடக் கூடாது.

6. விதி 1 முதல் 3 வரையில் கண்டுள்ள அம்சங்களின் மேல் விடுக்கப்பட்டுள்ள உத் திரவு, அல்லது 4-ம் விதி படிக்கு கொடுக்கப்பட்ட நோடீஸ், அல்லது 5 வது விதியில் கண்ட அம்சங்கள் அல்லது சட்ட பூர்வமாக கொடுக்கப்பட உத்திரவு, இதில் எந்த விதியின் கீழாவது கொடுக்கப்பட்டுள்ள வேண்டுதல் இவைகளை, எந்த நபராவது மீறி நடந்தால் அபருத தொகை **ஐம்பது வரையில் விதித்து தண்டிக்கப்படலாம்.** தொடர்ச்சியாக மீறி நடக்கும் ஒவ்வொரு சந்தா பத்திலும் பிரதிதினத்திற்கு **ரூபாய் பத்துக்கு மேற்படாத அபராத தண்டனை** முதலில் மீறியதற்குண்டான தண்டனை விதிக்கப்பட்ட பிறகு மீறிய தினங்களுக்கு விதிக்கப்படலாம்.

(ஜி. ஓ. நெ. 520-எல். ஏ. 24-3-1957)

105 Illicit Cutting of Trees.

மரங்களை சட்டத்தால் அனுமதிக்கப் படாத வகையில் வெட்டுவது.

கிராமத்தின் பெரிதனக்காரர் ரோட்டு ஓரங்கள் அல்லது பஞ்சாயத்துக்கு ஒப்படைக் கப்பட்ட நிலங்களிலுள்ள மரங்களை சட்டத்தால் அனுமதிக்கப்படாத வகையில் வெட்டும் ஒவ் வொரு அம்சத்தையும் சம்பந்தப்பட்ட ரெவின்யூ இன்ஸ்பெக்டர் மூலமாக தாசில்தாரருக்கு அறிக்கை அனுப்பி அதன் நகல் ஒன்றை நிர்வாக அதிகாரிக்கு அனுப்பவேண்டும். நிர்வாக அதிகாரி அம்மாதிரி அறிக்கை கிடைத்த 15-தினங்களுக்குள் சட்ட விரோதமாக மரத்தை வெட்டிய நபர் அல்லது நபர்களின் எடுத்த அல்லது எடுக்க எத்தனிக்கும் நடவடிக்கையைப் பற்றி தாசில்தாரருக்கு தெரிவிக்க வேண்டும். நிர்வாக அதிகாரியிட மிருந்து குறிப்பிட்ட காலத்துக்குள் யாதொரு தகவலும் கிடைக்கா விட்டால் பஞ்சாயத்து இது சம்பந்தமாக யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கருதி தாசில்தார் குற்றத்தை கவனிக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

(ஜி. ஓ. நெ. 1521 எல்.-ஏ.-1-11-54.)

179. **(1)** இச் சட்டத்தின் படி யாதொரு விதியைச் செய்கையிலே, அதை மீறி நடந்தால், நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத மாவது அப்படி மீறி நடந்து கொண்டே போகும் விஷயத்தில் முதல் தடவை மீறி நடந்ததற்காக குற்ற ஸ்தாபனை யான பிறகு அப்படி மீறி நடந்து கொண்டே போகிற ஒவ்வொரு தினத்துக்கும் பதினைந்து ரூபாய்க்கு மேற்படாமல் அபராதமாவது விதிக்கப்படத் தக்க தாகுமென்று அரசாங்கத்தார் ஷரத்து ஏற்படுத்தலாம்.

விதிகளை மீறி நடந் தால் தண்டனைகள்

(2) இச் சட்டத்தின்படி விதிகள் செய்வதற்கான அதிகாரமானது அது செலுத்தப்படும் முதல் தடவை தவிர மற்ற சமயத்தில் முன்னதாக பிரசித்தம் செய்யப் பட வேண்டும் என்னும் நிபந்தனைக்கு உட்பட்டதாகும்.

(3) இச் சட்டத்தின்படிச் செய்யப்படுகிற சகல விதிகளையும் ஸெய்ண்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட்டில் பிரசித்தம் செய்ய வேண்டும் ; அந்தப்படிப் பிரசித்தம் செய்யப்படுவதன்மேல் அவை இச் சட்டத்தில் ஏற்படுத்தப் பட்டிருந்தால் எப்படியோ அப்படியோ செலாவணியாகும்.

(4) இச் சட்டத்தின்படிச் செய்யப்பட்ட சகல விதிகளும், விளம்பரங்களும், உத்தரவுகளும் அவை செய்யப்பட்ட பிறகு கூடிய சீக்கிரத்தில் சட்ட மன்றத்தின் இரு சபைகளின் முன்பும் வைக்கப்படவேண்டும் ; மேலும், அவை அதே கூட்டத் தொடரிலாவது ஒன்றிற்கு மேற்பட்ட கூட்டத் தொடரிலாவது திருத்தம் அல்லது ரத்து மூலமாகச் செய்யக்கூடிய மாறுதல்களுக்கும் உட்பட்டவையாகும்.

குறிப்பு

பி. 179. விதிகளை மீறி நடந்தால் அது குற்றமாகும், இந்தியன் பினல் கோட் பிரிவு 40யை பார்க்கவும். பிராது தொடர அதிகாரம் பெற்ற நபர்களைப்பற்றி அறிய பி. 166-யையும் தண்டனைகளைக் குறித்து அறிய பி. 181-யையும் பார்க்கவும்.

சகாய சட்டங்கள்

சகாயச் சட்டங்களும் அவைகளை மீறி நடந்தால் தண்டனைகளும்

180. (1) இந்தச் சட்டத்திலும், வேறே யாதொரு சட்டத்திலும் கண்ட ஷரத்துக்களுக்கும் நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளுக்கும் உட்பட்டு, யாதொரு பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில், இன்ஸ்பெக்டரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு அது எந்தக் காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்தக் காரியங்களில் எதையாகிலும் நிறைவேற்றுவதற்காகச் சகாயச் சட்டங்கள் செய்யலாம்.

(2) யாதொரு சகாயச் சட்டத்தைச் செய்கையில் எவராகிலும் அதை மீறி நடந்தால் அவர் பதினைந்து ரூபாய்க்கு மேற்படாமல் அல்லது அப்படி மீறி நடந்து கொண்டே போகும் விஷயத்தில் முதல் தடவை மீறி நடந்ததற்காக ஓர் அபராதம் விதிக்கப்பட்டான பிறகு அப்படி மீறி நடந்து கொண்டே போகிற ஒவ்வொரு தினத்துக்கும் ஐந்து ரூபாய்க்கு மேற்படாமல் பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் நிச்சயிக்கக்கூடிய தொகையை அபராதமாகச் செலுத்துவதற்கு உள்ளவர் ஆவார் என்று அப் பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் ஷரத்து ஏற்படுத்தலாம்.

(3) சகாயச் சட்டங்களைச் செய்யும்போது அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறையைக் குறித்தும், அவைகளைப் பிரசித்தம் செய்வதைக் குறித்தும், அவைகள் செலாவணியாகத் தொடங்கவேண்டிய தேதியைக் குறித்தும் விதிகள் செய்ய அரசாங்கத்தாருக்கு அதிகாரம் உண்டு.

குறிப்பு

துணை விதிகள்.—இவைகள் சட்டத்திற்கு ஒத்து இருப்பதல்லாமல், மீதி இதரச் சட்டங்களுக்கும் ஒத்து இருக்க வேண்டும். துணை விதியானது நியாயத்துக்கும் விரோதமாக இருந்தால் அதை கோர்ட்டார் தள்ளி விடலாம். [சாமல் கோட்டா பஞ்சாயத்து போர்டு -எ.-யோர்கி, I. R. 1933 M. 17 = An L. R. 1933 M. 717 = A. I R. 1933 M 148] கவர்ன்மெண்டோ இன்ஸ்பெக்டரோ ஒரு துணை விதியை சரி என்று ஒத்துக்கொண்டதினாலேயே அது சட்ட சம்மதமாக மாட்டாது. அது தன்வரையிலும் சட்ட சம்மதமாகவும் இருக்கவேண்டும். பொதுவாக ஒரு சட்டத்தை ரத்து செய்துவிட்டால் துணை விதியையும் ரத்து செய்து விட்டதாகக் கருதவேண்டும். கோர்ட்டுகள் அவசரமாக ஒரு துணை விதியை சட்டவிரோதம் என்று எண்ணக்கூடாது. [நடேசன் குறித்து 40 Mad. 125 = 31 I. C. 847 [868)] ஒரு துணை

விதி பார்ப்பதற்கு அனுகூலமாய் தென்பட்டாலும் அது சட்டவிரோதமாய் இருந்தால் அது ஒத்துக்கொள்ளப்படமாட்டாது. [ரங்கூன் முனிஸிபாலிடி-எ.-சுராதி பாரா பஜார், A. I. R. 1927 R. 83] கூடியவரையில் துணைவிதிகளை பிரதேச நன்மைக்கென்று கோர்ட்டார் உத்தேசிக்க வேண்டும், [பிள்ளை எ. மோல்மீன் முனிசிபாலிடி 59 I. C. 545.] ஒரு துணை விதியை ஒரு மீடிங்கில் ஒரு விதமாக வியாக்யானம் செய்தால் மற்றெரு சபையில் அதாவது அடுத்த மீடிங்கில் அந்த வியாக்யானத்தை ஒத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை அந்த வியாக்யானத்தை ஒத்துக்கொள்ளாமல் அடுத்த மீடிங்கில் உள்ள அங்கத்தினர்களின் (Members) அபிப்பிராயப்படி விவகாரத்தை மாற்றிக் கொள்ளலாம் [A. I. R. 1941 N. 364.]

பஞ்சாயத்துக்கள் சகாயச் சட்டங்களைச் செய்வது. (ச—X—10)
விதிகள் பிரிவு 180 படிக்கு

1. பிரஸ்தாப பஞ்சாயத்து சகாயச் சட்டங்களைச் செய்வதற்கு அல்லது மாற்றுவதற்கு முன், உத்தேசிக்கப்பட்ட சகாயச் சட்டங்களுக்கும் மாறுதல்களுக்கும் ஒரு மசோதாவை இன்ன தேதியன்று அல்லது இன்ன தேதிக்குப்பிறகு அம் மசோதா ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப் படுமென்று குறிப்பிட்டுள்ள ஒரு நோட்டிஸ் சகிதமாகப் பிரசுரிக்கவேண்டும்; மேலும் மேற்படி சகாயச் சட்டங்களையோ மாறுதல்களையோ செய்வதற்முன், அதில் பற்றுள்ள ஒருவர் அம்மசோதா விஷயமாய் மேலே குறிப்பிட்ட தேதிக்குமுன் செய்யக்கூடிய யாதொரு ஆட்சேபனையையாவது சொல்லக்கூடிய யாதொரு அபிப்பிராயக் குறிப்பையாவது பெற்றுக்கொண்டு அதைக் குறித்து ஆலோசிக்க வேண்டும்.

2. இவ் விதியின்படிக்கான நோட்டிஸை 3-வது விதியில் கண்டுள்ள விதமாகப் பிரசித்தம் செய்யவேண்டும். ஆட்சேபனைகளையோ அபிப்பிராயக் குறிப்புகளையோ பெற்றுக் கொள்வதற்காக வென்று குறிப்பிடப்பட்ட **காலம் முப்பது தினங்களுக்குக் குறையாமலிருக்கலாகாது.** யாதொரு சகாய சட்டத்தையாவது மற்றெரு சகாய சட்டத்தை ரத்து செய்யப் பட்டதையாவது சம்பந்தப்பட்ட ரீஜனல் இன்ஸ்பெக்டர் அங்கீகரித்து ஊர்ஜிதம் செய்கிற வரையில் அது செல்லுபடியாகாது.

3. யாதொரு சகாயச் சட்டத்தையாவது யாதொரு சகாயச் சட்டம் ரத்து செய்யப் படுவது அல்லது மாற்றப்படுவது கிரமப்படி ஊர்ஜ்ஜிதம் செய்யப்பட்டிருந்தால், அதை பிரஸ்தாப பிரதேசத்தின் முக்கியமான பாஷையில் எழுதி அல்லது மொழி பெயர்த்து, பஞ்சாயத்தின் ஆபீஸில் வைத்திருக்க வேண்டும். அதன் பிரதி ஒன்றை மேற்படி பஞ்சாயத்தில் எல்லாருக்கும் நன்ருகத் தெரியும் படியான ஓரிடத்திலும் பஞ்சாயத்து கட்டளை யிடக்கூடிய வேறு இடங்களிலும் ஒட்டிவைக்கவேண்டும். அத்தகைய பிரதி அவ்வாறு ஒட்டிவைக்கப்பட்டிருக்கிற தென்றும், அதன் அசலை பஞ்சாயத்தின் ஆபீஸில் பார்வையிடலாமென்றும் கண்டுள்ள பொதுப்பிரகடனம் ஒன்றையும் தண்டோரா போடுவது மூலமாகவேனும் மற்றப்படியேனும் அந்தக் கிராமம் முழுவதிலும் அறிவிக்கவேண்டும்.

4. யாதொரு சகாயச் சட்டம் அல்லது ஒரு சகாயச் சட்டம் ரத்து செய்யபடுவது அல்லது மாற்றப்படுவது 3-வது விதியின்படி பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து **மூன்று மாதம் முடிவடைந்ததும் அமுலுக்கு வரத் தொடங்கும்.**

தண்டனைகள்

II, III ஷெட்யூல்களில் குறிப்பிடப்பட்ட தண்டனைகளைக் குறித்த புதிய ஷரத்துக்கள்

181. (1) எவராகிலும்—(a) இச்சட்டத்தைச் சேர்ந்தவைகளும், தண்டனைகள் II-வது ஷெட்யூலின் முதலாவது, இரண்டாவது பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுமான ஷரத்துக்களில் எதை யாவது மீறினுலும்,

(b) அப்படிக் குறிப்பிடப்பட்டுள்ள ஷரத்துக்களில் எதன்படியாவது செய்யப்படும் யாதொரு விதி அல்லது உத்தரவை மீறினுலும்; அல்லது

(c) மேற்படி ஷரத்துக்களில் எதன்படியாகிலும் அல்லது அதை அனுசரித்தாகிலும் சட்டப்பிரகாரம் தமக்கு இடப்படுகிற யாதொரு கட்டளையின்படியாவது செய்யப்படும் யாதொரு உத்தரவின்படியாவது நடக்கத்தவறி

ணுலும், நடக்கத்தவறிக்கொண்டே வந்தாலும், அவருக்கு மேற்படி ஷெட்யூலின் 4-வது பத்தியில் இது விஷயமாகக் கண்டுள்ள தொகைக்கு மேற்படாமல் அபராதத் தண்டனை விதிக்கப்பட்டதாகும்.

(2) எவராகிலும்—

(a) இச் சட்டத்தைச் சேர்ந்தவைகளும். III-வது ஷெட்யூலின் முதலாவது, இரண்டாவது பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளவையுமான ஷரத்துக்களில் எதையாவது மீறினதற்காகவாகிலும், அல்லது

(b) அப்படிக் குறிப்பிடப்பட்டுள்ள ஷரத்துக்களில் எதன்படியாவது செய்யப்படும் யாதொரு விதி அல்லது உத்தரவை மீறினதற்காகவாகிலும்,

(c) ஷி ஷரத்துக்களில் எதன்படியாவது அதை அனுசரித்தாவது சட்டப்பிரகாரம் தமக்கு இடப்படுகிற யாதொரு கட்டளையின்படியாகிலும் அல்லது செய்யப்படுகிற யாதொரு உத்தரவின்படியாகிலும் நடக்கத் தவறினதற்காகவாகிலும், குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்ட பிறகு மேற்படி ஷரத்தை, அல்லது மேற்படி விதியை அல்லது உத்தரவை மீறிக்கொண்டே வந்தாலும், மேற்படி கட்டளை அல்லது உத்தரவை அனுசரித்து நடக்கத்தவறிக் கொண்டே வந்தாலும் அவருக்கு, இதற்கு முன் அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு அந்தப்படி அவர் நடந்து கொண்டு வருகிற ஒவ்வொரு தினத்துக்கும் மேற்படி ஷெட்யூலின் நான்காவது பத்தியில் அது விஷயமாகக் கண்டிருக்கும் தொகைக்கு மேற்படாமல் அபராதத் தண்டனை விதிக்கப்படத்தக்கதாகும்.

விளக்கம்:—II-வது, III-வது ஷெட்யூல்களில், "விஷயம்" என்னும் தலைப்புள்ள மூன்ருவது பத்தியிலிருக்கும் பதிவுகள், அதன் முதலாவது, இரண்டாவது பத்திகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஷரத்துக்களில் விவரித்துள்ள குற்றங்களின் அர்த்தமாகவாவது, அந்த ஷரத்துக்களின் சுருக்கமாவது கூடஇருக்க வேண்டுமென்று உத்தேசிக்கப்படவில்லை ; ஆனுல், அவைகளில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் விஷயத்தை விவகரிப்பதற்காக மட்டுமே சேர்க்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பு

பொது :—இந்த பிரிவின் கீழ் யார் பிராது தொடர அதிகாரம் பெற்றவர்கள் என்பதை அரிய பிரிவு 166-யையும் ராஜி செய்து கொள்வது பற்றிபிரிவுகள் 167, 168யையும் பார்க்கவும்.

பி. 181. தண்டனைகள்.—II-வது ; III-வது ஷெட்யூல்களில் சொல்லியுள்ள குற்றங்களுக்கு தண்டனைகள் இந்த பிரிவில் அடங்கியிருக்கிறது. இந்த சட்டத்தின் இதரமான பிரிவுகள், விதிகள், உபவிதிகள் இவைகளை மீறி நடப்பதாகிய குற்றங்களுக்கும் தண்டனை விதிக்கப்படுவதையும் இந்த பிரிவு கூறுகிறது.

நியாயமான அதிகாரியால் கொடுக்கப்பட்ட நோட்டீஸை மீறியதற்கு 82, 161, 181, பிரிவுகளின்படி வியாஜ்ஜியம் தொடரப்பட்டது. ஏற்கனவே அதே குற்றத்திற்காக அந்த நபர் விடுதலை அடைந்தது இதற்கு தடையாகாது. [மாயிடிபியார்-எ.-மங்களூர் தாலுக்கா போர்ட், பிரஸிடென்ட், 138 I. C. 488 = A. I. R. 1932 Mad. 535.]

லைசென்ஸ் கட்டணம் அதிகமாயிருப்பதுபற்றி பஞ்சாயத்தால் செய்யப்பட்ட உபவிதி சட்ட சம்மதமற்றதாய் ஆகிவிடாது. சட்டப்படி லைசென்ஸ் பெற வேண்டியது அவசியமா என்பதும், கட்டணம் அதிகமாயிருப்பது என்பதும் இரண்டு தனி ப்ரசனைகள். ஒன்றிற்கொன்று சம்பந்தமற்றவை. 111, 113 பிரிவுகள்படி கட்டணத்தை வசூல் செய்யுமுன் லைசென்ஸ் வாங்கவேண்டியது அவசியமானதா என்பதையும், கைத்தொழிலுக்கு லைசென்ஸ் பெற வேண்டிய தொழிலா என்பதையும் முடிவு செய்யவேண்டும் [எ. எச். ஆர். யார்க், குறித்து 140 I. C., 524 = A. I. R. 1933 Mad. 148.]

பிராது தொடர காலவரை:—166-வது பிரிவின் குறிப்பில் "மூன்று மாதத்திற்குள்" என்னும் தலைப்பை கீழ் பார்க்கவும்.

தண்டனை விதிக்கும் சட்டமும் பின்னோக்கும் பயனும்:—தண்டனை விதிக்கும் சட்டத்திலுள்ள தண்டனை விதி அந்த விதி செய்வதற்கு முந்தி நடந்துபோன காரியத்திற்கு பொருந்தாது. [நகர. பீ. நாக். வி.-எ.-அரசன், A. I. R. 1929 R. 278]

நியாயஸ்தலங்கள் (கோர்டுகள்).—கிரிமினல் வழக்க சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட கோர்டுகளே இந்த வியாஜ்யங்களை விசாரிக்கலாமே தவிர 1895 வருஷம் மதருஸ் பொது கிளாஸெஸ் சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட கிராம கோர்ட்டுகள் விசாரிக்க கூடாது. இந்த சட்டத்தில் கிரிமினல் பிராதுகளை யார் விசாரிக்கவேண்டுமென்று ஸ்பஷ்டமாய் கூறப்படாததினால் சாதாரணமாய் மாஜிஸ்ரேட்டுக்கள்தான் விசாரிக்கவேண்டும். கடினமான விஷயங்களை சட்ட கலப்புமுள்ள வியாஜ்ஜியங்களையும், கௌரவ மாஜிஸ்ரேட்டுகள் விசாரிக்கவிடுவது சரியானதல்ல. [பப்ளிக் ப்ராசிக்யூட்டர்-எ.-வரதராஜுலு, A. I. R. 1925 Mad. 64]. ஜாதி, மதம், ராஜீயக்கக்ஷி யோசனையுண்டாயின் இதைவிட கேவலமானது கிடையாது. (அரசர்-எ-வில்ஸன், A. I. R. 1926 Cal. 895).

குற்றவாளிகள் உரிமை.—"குற்றம் சாட்டப்பட்ட விஷயம்" எழுத்தளவே சரியானதாயினும், சட்டத்தின் பொருளுக்கும் நடை முறைக்கும் பொருத்தமானதல்ல என்று எதிர்வாதாடலாம். [ராமசந்தரர்-எ.-கௌரிநாத், 53 Cal. 492 = A. I. R. 1926 Cal. 927].

பொது ஜன திரேக ஆரோக்யம் அல்லது சௌகரியங்களை ஆலோசித்து செய்யப்பட்ட சட்டங்கள், விதிகள், உபவிதிகள் இவைகளை மீறி நடப்பது பஞ்சாயத்து ஆக்டின் கீழ் குற்றமாகுமே யன்றி உண்மையில் கெட்ட நடவடிக்கையான கிரிமினல் (criminal) குற்றமாக மாட்டாது. [ரௌதகன்னி, 9 M. 432 (437)]

யோக்கியதை அற்றிருக்கும்போது யாதொரு பஞ்சாயத்தின் அங்கத்தினராக, தலைவராக, உப தலைவராக, அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அங்கத்தினராக, அக்கிராசனராக, அல்லது உப அக்கிராசனராக, செயல்பட்டால் தண்டனை. அந்த அதிகாரத்தை ஒப்புவிக்க தவரி போனால் தண்டனை

182. (1) எவராகிலும், இச் சட்டத்தின்படியாவது, அதன் பிரகாரம் செய்யப்படும் விதிகளின்படியாவது யாதொரு பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத் யூனியன் கவுன்ஸிலின் அங்கத்தினராகப் பதவி வகிக்கத் தமக்குப் பாத்தியதையில்லை யென்றாகிலும் அந்தப் பதவி வகிப்பதற்காகத் தமக்குள்ள பாத்தியதை அற்றுப்போய் விட்டதென்றாகிலும் தெரிந்திருந்தும் அப்படிப்பட்ட அங்கத்தினராகச் செயல்பட்டால், அவருக்கு அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்திற்காகவும் இருநூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதத் தண்டனை விதிக்கப்படத்தக்கதாகும்.

(2) எவராகிலும் இச்சட்டத்தின்படியாவது, அதன்படிச் செய்யப்படும் விதிகளின்படியாவது யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அக்கிராசனராக அல்லது தற்காலிகமான அக்கிராசனராக அல்லது உப அக்கிராசனராக அல்லது கமிஷனராகச் செயலாற்றினாலும் அல்லது அவர் நிர்வாக அதிகாரியாகவுமிருந்தால் அந்த நிர்வாக அதிகாரிக்குள்ள எவையேனும் அலுவல்கள் உட்பட அந்த உத்தியோகத்தின் அலுவல்களைச் செய்வதற்கோ தமக்குப் பாத்தியதையில்லை யென்றாகிலும் தமக்குள்ள பாத்தியதை அற்றுப்போகிவிட்டதென்றாகிலும் தெரிந்திருந்தும் அந்த முறைமையில் செயலாற்றினாலும் அல்லது அந்த அலுவல்களைச் செய்தாலும் அவருக்கு அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்திற்காகவும் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் அபராதத் தண்டனை விதிக்கப்படத்தக்கதாகும்.

(3) யாதொரு பஞ்சாயத்தின் தலைவராகவோ, தற்காலிகமான தலைவராகவோ, உப தலைவராகவோ அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அக்கிரா

சனராகவோ தற்காலிகமான அக்கிராசனராகவோ, உப அக்கிராசனராகவோ இருந்த யாதொரு நபர்—,

(a) அப்படிப்பட்ட தலைவராக அல்லது தற்காலிகமான தலைவராக அல்லது உப தலைவராக அல்லது அத்தகைய அக்கிராசனராக, தற்காலிகமான அக்கிராசனராக அல்லது உப அக்கிராசனராக தம்முடைய பதவிகாலம் முடிவாகிற ஒவ்வொரு விஷயத்திலும் அப்படி முடிவானவுடனும்,

(b) உப தலைவராக யிருந்த யாதொரு நபரின் விஷயத்தில் தலைவர் கேட்பதன் பேரிலும்

(c) உப அக்கிராசனராக யிருந்த யாதொரு நபரின் விஷயத்தில் அக்கிராசனர் கேட்பதின் பேரிலும்,

அந்தப் பஞ்சாயத்தைச் சேர்ந்ததாய் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலைச் சேர்ந்ததாய் தம்முடைய சுவாதீனத்தில் அல்லது மேல் விசாரணையிலிருந்து வந்திருக்கிற எந்த தஸ்தாவேஜுகளையாவது அதனிடம் நிலை பெற்றிருக்கும் அதற்குச் சொந்தமாயிருக்கும் எந்தப் பணத் தொகையையாவது வேறே சொத்துக்களையாவது உத்தியோகத்தில் தமக்குப் பின் வருபவரிடத்தியாகிலும் நிர்ணயிக்கப்பட்ட அவரே அதிகாரியினிடத்திலாகிலும் ஒப்புவிக்கத் தவறிப் போனால், அவருக்கு அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்திற்காகவும் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படத் தக்கதாகும்.

குறிப்பு

பொது.—இந்த குற்றங்களை செய்யப்பட்டதாக என்றைக்கு அறியப்படுகிறதோ அந்தேதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கிரிமினல் கேஸ் தாக்கல் செய்ய வேண்டும். பி. 169 படிக்கு இவர்கள் பேரில் பிராது தொடர அரசாங்கத்தாரின் முன் அனுமதி பெற வேண்டும். (1)-வது உப பிரிவின்படி எப்போது ஒருவர் மெம்பராக ப்ரவர்த்திக்கிறாரே (2)-வது உப பிரிவின்படி எப்போது ஒருவர் ப்ரஸிடென்டாகவோ; வைஸ் ப்ரசிடென்டாகவோ நிர்வாக அதிகாரியாகவோ ப்ரவர்த்தித்தால் அந்த தேதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கிரிமினல் கேஸ் செய்யலாம் (3)-வது உப பிரிவின்படி ஒரு பிரஸிடென்ட் அல்லது வைஸ்பிரஸிடென்ட் தன்னிடமுள்ள தஸ்தா வேஜிகளை அல்லது பணத்தொகையை விதியில் கண்ட உத்யோகஸ்தரிடம் கொடுக்க தவறிப்போனால் அதுவும் ஒரு குற்றமாகும். இதில் ப்ரஸிடென்டை தேர்ந்து எடுத்த தேதியிலிருந்து 3 மாதகால அளவை கணக்கிடுவதா, அதன்பிறகு தேதியிலிருந்து கணக்கிடுவதா என்று ப்ரஸ்னை கிளம்புகிறது. அறிந்து ஒப்பிக்காதது பிரஸிடென்டின் தவறு தலே ஆகும். அவர் எதுவரையில் ஒப்புவிக்க வில்லையோ அதுவரையில் நாளுக்கு நாள் குற்றம் செய்து வருகிறார் என்று எங்களுடைய அபிப்ராயம். இம்மாதிரி கேசுகள் இருந்தால் அவைகளை ஹைகோர்ட்டுக்கு கொண்டுபோய் ரிவிஷனில் பரிஷ்கரித்து கொள்ளவேண்டும். மேலும் கவர்ன்மெண்டார் 3-வது சப்செக்ஷனில் ''ஒப்புவிக்க தவறிப்போனால்'' என்பதற்கு முந்தி ''அவர் நோடீஸ் கொடுத்து அது சேர்ந்த பதினைந்து தினங்களுக்குள் ஷ தஸ்தாவேஜுகளையும், பணத் தொகையையும், சொத்துக்களை சேர்ப்பிக்க'' என்னும் சொற்களை சேர்த்தால், அப்போது நோடீஸ் சேர்ந்த 16 ம் நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் வியாஜ்யங்களையும் கேசுகளையும் செய்யலாம்.

ஒரு மெம்பர், பிரசிடெண்டு முதலானவர்கள் இந்தியன் பினல் கோடு 21-வது செக்ஷன் படிக்கு பொது ஊழியர்கள் (Public Servants) ஆவார்கள். மெம்பர் அல்லாதவர், மெம்பர் மாதிரி நடந்துக்கொண்டால் அது இந்தியன் பினல் கோடு 207-வது படிக்கு குற்றமாகும். பிரசிடெண்டு தன் உத்தியோகத்தை இழந்த பிறகு பிரசிடெண்டானவர் அந்தப் பஞ்சாயத்து போர்டைக் கலைத்த பிறகு அந்தப் பஞ்சாயத்து போர்டுக்கென்று ஏற்படுத்திய ஸ்பெஷல் ஆபீசரிடம் (தனி உத்தியோகஸ்தரிடம்) ரிகார்டுகளைக் கொடாமலிருந்தால் அது இந்தச் செக்ஷனின் கீழ் குற்றமாகும். அதற்கு தாவா செய்ய வேண்டுமென்றால் அதற்கு 169-வது பிரிவின் படிக்கு யாதொரு அனுமதியும் வேண்டியதில்லை. ஏனெனில் அவர் ரிகார்டுகளைக் கொடுக்காமல்

இருந்த காலத்தில் அவருக்கு யாதொரு உத்தியோக பதவியும் கிடையாது. [செங்கையா குறித்து, A. I. R. 1942 M. 745] இதற்கு விரோதமாக அடுத்த கேசுகளைப் பார்க்கவும். [சுப்பையா-எ.-நரஸய்யா, A.I.R. 1939 M. 598 :: சுப்ரமண்யா குறித்து A.I.R 1940 M. 297].

அபராதம் :—இந்த செக்ஷனின் கீழ் குற்றத்திற்கு 1000-ரூபாய் அபராதமாகும்.

பி. 182. (1) ருஜுப் படுத்த வேண்டிய விஷயங்கள் :—(1) எதிரி மெம்பரல்ல அல்லது மெம்பராக இருந்து, அந்த யோக்யதை இல்லாமல் போய்விட்டார் (2) அப்படி இருந்தும் மெம்பர் மாதிரி நடித்தார் என்றும்,

பி 182. (2) ருஜுப் படுத்தவேண்டிய விஷயங்கள் :—(1) எதிரி பிரசிடெண்ட் அல்ல அல்லது பிரசிடெண்ட் பதவியிலிருந்து நீங்கிவிட்டார் (2) அவர் பிரசிடெண்டாகவோ, டெம்பரரி பிரசிடெண்டாகவோ, வைஸ் பிரசிடெண்டாகவோ நடந்துக் கொண்டார்.

பி 182. (3) ருஜுப் படுத்தவேண்டிய விஷயங்கள் :—(1) எதிரியினுடைய பிரசிடெண்டாக இருந்த உத்தியோகம் நீங்கிவிட்டது (2) அவர் தன்னிடத்தில் தஸ்தாவேஜுகளை வைத்துக் கொண்டிருந்தார் (3) அவர் தன் பின் வந்தவருக்கு அந்த தஸ்தாவேஜுகளை கொடுக்காமல் போனார் என்றும் வைஸ் பிரசிடெண்ட் விஷயத்தில் (1) எதிரி வைஸ் பிரஸிடெண்டென்றும், தன்னிடத்தில் தஸ்தாவேஜு வைத்திருந்தார் என்றும் பிரசிடெண்ட் அவைகளை ஒப்புவிக்கும்படி கேட்டார் என்றும் எதிரியான வைஸ் பிரசிடெண்ட் அந்த தஸ்தாவேஜுகளைக் கொடுக்க மறுத்தார் என்றும் ருஜுப்படுத்த வேண்டும்.

விதிகள் பிரிவு 182 (3) படிக்கு.

பதவியை விட்டு நீங்குகிற ப்ரெசிடெண்டுகள் முதலியவர்களிடமிருந்து பஞ்சாயத்துக்களின் சொத்துக்களைச் சுவாதீன மெடுத்துக்கொள்வதற்குரிய அதிகாரி (க L 50).

ஷை சட்டத்தின் 182 (3) பிரிவின் காரியங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியானவர் விசாரணை அதிகாரமுள்ள ஜில்லா பஞ்சாயத்து உத்தியோகஸ்தர் அல்லது டெப்டி பஞ்சாயத்து உத்தியோகஸ்தராவார்.

ஒப்பந்த வேலையில் யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் சுயப் பிரயோசனம் அடைந்தால் தண்டனை

183. யாதொரு பஞ்சாயத்தின் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் உத்தியோகஸ்தராவது ஊழியராவது தாமேயாகிலும் பாகஸ்தர் மூலமாகவாகிலும் தம்மை வேலைக்கு வைத்துக் கொண்டிருப்பவர் அல்லது தம்முடைய ஊழியர் மூலமாக வாகிலும் நேராகவேனும் மற்றப்படியேனும் அந்தப் பஞ்சாயத்தோடாவது, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலோடாவது அதனுலாவது அதன் சார்பாகவாவது செய்யப்படும் யாதொரு ஒப்பந்தத்திலாவது அல்லது வேலையிலோ யாதொரு சுயப் பிரயோசனத்தையேனும், சுயப் பிரயோசன சம்பந்தமான பங்கையேனும் தெரிந்திருந்தும் அடைவாராகில் அவர் (1860-ம்ஞுத்து 45-வது மத்திய சட்டமாகிய) இந்திய தண்டனை சட்டத்தின் 168–வது பிரிவின்படிக்கான ஒரு குற்றம் செய்திருப்பதாக எண்ணப்படுவார்.

ஆனல், எந்த நபரும் அவர் யாதொரு கம்பெனியில் பங்குதார ராகவாவது அங்கத்தினராகவாவது இருக்கும் காரணத்தால் அவர் அந்தக் கம்பெனியின் டைரெக்டராக இருந்தாலொழிய, அந்தக் கம்பெனிக்கும் பஞ்சாயத்துக்கும் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கும் ஏற்பட்டிருக்கிற யாதொரு ஒப்பந்தத்தில் பற்றுள்ளவராய் இருப்பதாக எண்ணப்படக் கூடாது.

மேலும், இன்ஸ்பெக்டரின் அனுமதியைப் பெற்று ஷை பஞ்சாயத்துடன் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் யாதொரு நபருக்கு இந்தப் பிரிவில் கண்டதெதுவும் பிரயோகப்பட மாட்டாது.

குறிப்பு

பி. 183. யாதொரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரராவது எவ்விதமாகவோ, யாதொரு பஞ்சாயத்து ஒப்பந்தத்தில் கலந்து இருந்தால் அவர் இந்தியன் பினல் கோடு 168-வது செக்ஷன் படிக்கு குற்றவாளியாவார். 168-வது பிரிவின் முக்கிய கருத்து யாதெனில் ஒரு பொது உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரர் வியாபாரம் செய்யும் பக்ஷத்தில் அவரை ஒரு வருஷம் வரையில் வெறும் சிறைச்சாலையில் வைக்கலாம். அவருக்கு அபராதமும் விதிக்கலாம். ஒரு கம்பெனியில் வெறும் ஷேர் உள்ளவராக இருந்தால் அவரை இந்த பிரிவு பாதிக்காது, டைரக்டராக இருந்தால் பாதிக்கும். ஒரு பிரசிண்டோ, வைஸ் பிரசிடெண்டோ, ஒரு பஞ்சாயத்தின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரர் ஆகமாட்டார் கள். [பழனியப்பா. எ. கிருஷ்ணப்பா. A. I. R. 1925 M 877] ஒரு வைஸ்-பிரசிடெண டானவர் முனிசிபல் வேலைகளுக்காக ஒரு கண்டிராக்டருடைய பில் பாஸ்செய்து (ஒத்துக் கொண்டு) முனிசிபாலிடி பண்டிலிருந்து செக்கின் மூலம் பணம் கொடுக்க அதிகாரம் உள்ளவ ராய் இருந்தார். அந்த கண்டிராக்டருக்கு அந்த கண்டிராக்டுக்காக பண உதவி செய்தார் பில்லை பாஸ் செய்ததும் அந்த கண்டிராக்டர் பேரில் செக் கொடுத்து, தான் கொடுத்த செக்கின் பணத்தை தனக்குச் சேரவேண்டிய பாக்கிக்காக பிடித்துக்கொண்டார். இதனல் அவருக்கு அந்த கண்டிராக்டில் பாத்தியம் உள்ளதாகக் கருதப்பட்டது. அதனல் பிரிவுகள் 25, 26 படிக்கு அவர் அபேக்ஷகர் அல்லது அங்கத்தினராகவும் இருக்க யோக்யதை இல்லாதவர் ஆவர் [A. B. குறித்து (1911) 10. I. C. 578 = 10 Cr L.J. 281]

நிர்வாக அதிகாரியை யாவது கமிஷனரை யாவது அவருடைய பிரதிநிதியையாவது அக்கிரமமாய்த் தடுப்பது

184. நிர்வாக அதிகாரியையாவது. கமிஷனரையாவது, அல்லது எவருக்கு அந்த நிர்வாக அதிகாரி அல்லது கமிஷனர் யாதொரு இடம் அல்லது கட்டிடம் அல்லது நிலத்தின் மேலாகிலும் அதற் குள்ளாகிலும் பிரவேசிப்பதற்குத் தமக்குள்ள அதிகாரத்தைச் சட்டப்படி கொடுத்திருக்கிருரோ அப்படிப்பட்ட யாதொரு நபரையாவது அதன் மேலாயினும் அதற்குள்ளாயினும் பிரவேசிப்பதற்கு அவருக்குள்ள சட்டப்படிக்கான அதிகாரத் தைச் செலுத்தவொட்டாமல் தடுக்கிற யாதொரு நபர் 1860-ம் ஹ் த்து XLV-வது மத்தியச் சட்டமாகிய) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 341-வது பிரிவின்படி ஒரு குற்றம் செய்திருப்பதாகக் கருதப்படுவார்.

குறிப்பு

பொது — இந்தப் பிரிவில் கண்ட விஷயங்களைக் குறித்து பி. 162ன் குறிப்புகளை பார்க் கவும் ஒருவர் போய்க்கொண்டிருந்த வண்டியைத் தடுத்தால், அது இந்தியன் பீனல்கோட் 341-வது செக்ஷன் படிக்கு குற்றமாகும், [முகம்மது யூசுப் குறித்து 1948-2 M.L.J. 583 : : கோபாலா, ஏ. லக்ஷ்மி, A. I. R. 1947 Mad. 124] ஜங்கம சொத்தை வீட்டுக்குள் நுழைந்து ஜப்தி செய்ய ஒரு உத்தியோகஸ்தர் பிரவேசிக்கும் சமயத்தில் கதவை மூடி விட்டால் அது இந்த செக்ஷனின் கீழும் இந்தியன் பினல்கோடு 186-வது செக்ஷன் கீழும் குற்றமாகும். [திம்மகா குறித்து A I.R. 1942 Mad. 552] அதற்கு எதிரியை ஒரு வருஷத்திற்கு ஜயிலில் வைக்கலாம். ரூபாய் 1000 வரையில் அபராதம் போடலாம். பி. 123-ன் கீழ் விதிகள் 24, 25 களின் கீழுள்ள குறிப்புகளை பக்கங்கள் 318, 319களில் யுள்ளதை பார்க்கவும்

பஞ்சாயத்துகள், பஞ்சா யத்து யூனியன் கவுன் ஸில் முதலியோரைத் தடுப்பது கூடா தென்பது

185. யாதொரு பஞ்சாயத்தையாவது, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலையா வது பஞ்சாயத்தின் தலைவரையாவது, நிர்வாக அதிகாரியை யாவது, ஓர் பஞ்சாயத்து அங்கத்தினரையாவது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அக்கிராசனர் அல்லது அங்கத்தினர் அல்லது கமிஷனர் பஞ்சாயத்தால் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலினல் வேலைக்கு வைத்துக்கொள்ளப்பட்ட யாதொரு நபரையாவது, யாருடன் ஷ பஞ்சாயத்தால் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலினல் அல்லது பஞ் சாயத்துக்காக அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்காக யாதொரு ஒப்பந்தம்

செய்து கொள்ளப்பட்டிருக்கிறதோ அந்த நபரையாவது, அவர்கள் தங்களுடைய வேலையைச் செய்யும்போதாகிலும், இச் சட்டத்தை அனுசரித்தாயினும் அதன்படிச் செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச் சட்டம், ரெகுலேஷன் அல்லது உத்தரவை அனுசரித்தாயினும் அவைகள் காரணமாகவாயினும் அவர்கள் செய்ய அதிகாரம் பெற்றிருக்கும் அல்லது செய்யவேண்டியவர்களாயிருக்கிற யாதொரு காரியத்தைச் செய்யும்போதாகிலும் தடுக்கிற அல்லது தொந்தரவு செய்கிற யாதொரு நபருக்கு **ஐம்பது ரூபாய் வரையில் அபராத** தண்டனை விதிக்கப்படும்.

குறிப்பு

பி. 185. பிரிவுகள்162, 184 களைப் பார்க்கவும். ஒரு பஞ்சாயத்துக்கு கட்ட வேண்டி தொகையை மற்றொருவர் கட்டவேண்டும் தான் கட்டவேண்டியது அவசியம் இல்லை என்று சொன்னதாலேயே இந்தச் செக்ஷனின் கீழ் மற்றொருவர் குற்றம் செய்தவராக கருதப்படமாட்டாது. [பால்தேவ், பாண்டே குறித்து 64. I. C. 130 (A)] ஒரு பஞ்சாயத்தினிடத்தில் இடத்தை வாடகைக்கு வாங்கிக்கொண்டு குடித்தனக்காரன் வாடகையை கொடுக்க மாட்டேன் என்று சொன்னதினலேயே இந்தச் செக்ஷனின் கீழ் குற்றவாளி ஆகமாட்டான். [பாஸங்தராய்-எ -லாலாகானராம், I. R. 1932 A. 385] ஒரு பில் கலெக்டரானவர் வசூலுக்கு போனபோது திட்டிவிட்டால் திட்டிய குற்றமானது இந்த செக்ஷனின் கீழ் வராது [ஷேஹீ முகம்மது A. I. R. 1941 Mad. 834.]

கண்டிராக்டர்.—ஒரு நிலத்தின் சொந்தக்காரருக்கும், முனிசிபல் கமிட்டிக்கும் நிலத்தின் சுவாதீனத்தைப்பற்றி தகராறு இருந்தது. முனிசிபல் கமிட்டி ஒரு கண்டிராக்டரை ஏற்படுத்தி அந்த நிலத்தில் பிரவேசித்து அதை சமமாகச் செய்ய உத்திர விட்டார்கள். நிலத்தின் சொந்தக்காரர் அந்த நிலம் தன்னுடைய தென்றும் அதில் கண்டிராக்டர் பிரவேசிக்கக்கூடாது என்றும் தடுத்தார். அம்மாதிரி தடுத்தது இந்த செக்ஷனின் கீழ் குற்றமாகாது என்று தீர்மானிக்கப்பட்டது. [வாஜீத் குறித்து A. I. R. 1935 Pesh. 16]

நோட்டீஸை எடுத்து விடுவதை அல்லது கலைத்து விடுவதைத் தடுப்பது

186. யாதொரு பஞ்சாயத்தால் அல்லது அதனுடைய நிர்வாக அதிகாரியாலாவது அவர்களுடைய உத்தரவுகளின்படியாவது அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் அல்லது கமிஷனரின் உத்தரவுகளின் படியாவது அவர்களது உத்தரவுகளினலாவது காட்டி வைக்கப்படுகிற யாதொரு நோட்டீஸையாகிலும், நாட்டப்படுகிற யாதொரு குறி அல்லது அடையாளத்தையாகிலும் அது விஷயத்திற்கென்று அதிகாரம் பெற்றுக் கொள்ளாமல் எடுத்துவிடும் அல்லது அழித்துவிடும் அல்லது கெடுத்துவிடும் அல்லது மற்றப்படிக் கலைத்து விடும் யாதொரு நபருக்கு **ஐம்பது ரூபாய் வரையில் அபராத** தண்டனை விதிக்கப்படத்தக்கதாகும்.

குறிப்பு

பொது.—நோடீசை குறித்து பிரிவு 161-யை பார்க்கவும். அதின் விதிகளை குறித்து பி, 8-ன் கீழ் குறிப்புகளில் பக்கம் 54-ல் 36-ம் ஐடம் பார்க்கவும்.

அபராதம்.—ரூபா 50 வரையில் விதிக்கலாம். **ருஜூப்படுத்த வேண்டிய விஷயங்கள்,**—(1) பஞ்சாயத்து அல்லது நிர்வாக அதிகாரியால் இச்சட்டத்தின் படிக்கு நாட்டப்பட்ட நோடீசு அழித்து அல்லது எடுத்துவிடப்பட்டது (2) இதனல் யாதொரு கஷ்டமும் உண்டாச்சுதென்று ருஜூபடுத்தவேண்டியதில்லை.

சங்கதி தெரிவிக்காவிட்டாலும் பொய்யான சங்கதி தெரிவித்தாலும் அதற்கு தண்டனை

187. இச் சட்டத்தின்படியாவது அதன் பிரகாரம் பிறப்பிக்கப்பட்ட யாதொரு நோட்டீஸ் அல்லது வேறே நடவடிக்கைகளின் படியாவது யாதொரு சங்கதி தெரிவிக்க வேண்டிய எந்த நபராகிலும் அந்த சங்கதி தெரிவிக்காவிட்டாலும், தெரிந்திருந்தும் பொய்யான சங்கதி தெரிவித்தாலும், அவருக்கு நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கதாகும்.

குறிப்பு

பி. 187.—ஒருவரை சட்டபடிக்கு சில தகவல்களைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டதற்கு அவர் தெரிவிக்காவிட்டால், ஒளித்து வைத்ததாக அபிப்ராயப்படப்படும் [நம்பூதிரி பாட் குறித்து, 21 I. C. 843 = 1915 M. W. N. 276 = 16 M L. J. 219.] இந்த செக்ஷன் இந்தியின் பீனல் கோட் செக்ஷன் 177-க்கு சமான மானது இந்தச் செக்ஷனின் கீழ் அபராதம் ரூ. 100 ஆகும்.

ருஜூப்படுத்தவேண்டிய விஷயங்கள்:—(1) எதிரிச் சட்டத்தின்படிக்கு விஷயங்களைத் தெரிவிக்கவேண்டும் என்று கேட்கப்பட்டார். (2) எதிரி தகவல்களைத் தெரிவிக்கவில்லை. அல்லது பொய் சங்கதியைத் தெரிவித்தார்.

பலவகைப்பட்டவை

188. (1) இச் சட்டத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதக மில்லாமலே, யாதொரு பஞ்சாயத்து முதல் தடவையாக அமைக்கப்படும்போது, இந்தப் பிரிவில் கண்ட நிபந்தனைகள் பிரயோகப்படும்.

புதிய பஞ்சாயத்துகளின் விஷயத்தில் பிரத்தியேகமான நிபந்தனைகள்

(2) தேர்தல் அதிகாரியானவர், தேர்தலில் புதியதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள், பஞ்சாயத்தை அமைப்பதற்காகச் சந்தர்ப்பத்திற்கேற்றபடி 3-வது பிரிவில் கண்ட (1) உட்பிரிவின்படி இன்ஸ்பெக்டரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி யன்று உத்தியோகம் வகிக்கக்கூடியவர்களாயிருக்கும் பொருட்டு, பஞ்சாயத்து அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக ஏற்பாடுகள் செய்ய வேண்டும் :

ஆனால், இன்ஸ்பெக்டரானவர், யாதொரு காரணத்தால் தேர்தல்களை நடத்தி முடிப்பது சாத்தியமில்லையெனத் தெரிந்துகொண்டால், மேலே கண்டபடி குறிப்பிடப்பட்ட தேதியை அவ்வப்போது தள்ளி வைக்க அதிகாரமுள்ளவராவர்.

(3) (2) உட்பிரிவின்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுடைய அல்லது அவர்களது ஸ்தானங்களில் தற்செயலாய் நேரிட்டகாலி ஸ்தானங்களில் அந்த அங்கத்தினர்களுக்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களின் பதவிக்கால அளவானது, இன்ஸ்பெக்டரால் நிச்சயிக்கப்படக்கூடிய வருஷத்திலும் அப்படி நிச்சயிக்கப்படக்கூடிய தேதியன்றும் முடிவடையும்.

குறிப்பு

பி. 188. புது. பஞ்சாயத்துகளை முதல் தடவையாக அமைக்கப்படும்போது மாத்திரம் இந்த பிரிவில் கண்ட நிபந்தனைகளை உபயோகிக்கலாம்; பிறகு அவைகளை உபயோகிக்கக்கூடாது. அடுத்த எலக்ஷன்கள் வரும் வரையில் மெம்பர்களுக்கு பூர்த்தியாக ஐந்து வருஷ உத்தியோகம் இருக்க வேண்டும் என்று கட்டாயம் கிடையாது. அந்த காலத்தைக் குறைக்கவோ, அதிகமாக்கவோ, இன்ஸ்பெக்டருக்கு அதிகாரம் உண்டு, இன்ஸ்பெக்டர் ஏற்படுத்திய காலத்தில் தான் தேர்தல்கள் நடக்கவேண்டும், இந்த பஞ்சாயத்துகள் இந்த ஆக்டின்படி நடந்துகொள்வது அல்லாமல் பி. 190 ஷெட்யூல் IV படிக்கும் நடந்துக்கொள்ளவேண்டும்.

189. (1) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஒன்றை பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதிக்கு விஸ்தரிக்கப்படுவதன்பேரில், அந்த விஸ்தரிப்புக்கு அடுத்து முன்பாக மாற்றலாகியுள்ள மேற்படி பிரதேசத்தில் அமுலிலிருந்து வருகிற (1950-ம் ஆண்டு திருவாங்கூர்-கொச்சி II-வது சட்டமாகிய) 1950 ம் ஆண்டு திருவாங்கூர்-கொச்சி பஞ்சாயத்துக்கள் சட்டம், (1) உட்பிரிவின் கீழ் இச்

மாற்றப்பட்ட பிரதேசத்திற்கு இச் சட்டத்தை விஸ்தரிப்பது

சட்டம் மாற்றலாகியுள்ள பிரதேசத்தில் அல்லது அதன் பாகத்தில் எதற்கு விஸ்தரிக்கப்படுகிறதோ அங்கே ரத்தாகிவிடும்.

(2) இச் சட்டம் (1) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள தேதியன்று அந்த உட்பிரிவின்படி, மாற்றலாகியுள்ள பிரதேசத்தில் அல்லது அதன் பாகத்தில் எதற்கு விஸ்தரிக்கப்படுகின்றதோ அங்கே அமுலிலிருந்து வராத யாதொரு சட்டம் பற்றி அந்த பிரதேசம் அல்லது பாகம் சம்பந்தமாக இச் சட்டத்தில் ஏதாகிலும் குறிப்பீடு வருமாஞல் அதற்கு அந்தத் தேதியன்று அப்பிரதேசத்தில் அல்லது பாகத்தில் அமுலிலிருந்து வந்த ஏதாகிலும் நிகரான சட்டத்துக்குரிய யாதொரு குறிப்பீடு யென்று அர்த்தம் பண்ணவேண்டும்.

(3) அந்த உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள தேதிக்குப் பிறகு அந்த உட்பிரிவில் கீழ் இச் சட்டம் விஸ்தரிக்கப்படுகிற மாற்றலாகியுள்ள பிரதேசத்தில் அல்லது அதன் பாகத்தில் தொடர்ந்து அமுலிலிருந்து வருகிற யாதொரு சட்டத்திலே (1950-ம்ஞூத்து திருவாங்கூர்-கொச்சி II-வது சட்டமாகிய) 1950ம்ஞூத்திய திருவாங்கூர்–கொச்சி பஞ்சாயத்துக்கள் சட்டத்துக்குரிய யாதொரு குறிப்பீடுக்கு அந்த பிரதேசம் அல்லது பாகம் சம்பந்தமாய் இச் சட்டம் சம்பந்தமான யாதொரு குறிப்பீடு என்று அர்த்தம் பண்ணவேண்டும்.

(4) (1) உட் பிரிவின்கீழ் இச் சட்டம் விஸ்தரிக்கப்படுகிற மாற்றலாகியுள்ள பிரதேசத்தில் அல்லது அதன் பாகத்தில் எவையேனும் அதிகாரங்களேச் செலுத்த அல்லது எவையேனும் அலுவல்களேச் செய்ய ஏற்கெனவே அங்கிருந்து வருகிற யாதொரு சட்டம் நிறைவேற்றப்பட்ட தேதியன்று தகுதி பெற்றிருந்த யாதொரு அதிகாரி சம்பந்தமாய் அந்தச் சட்டத்தில் எந்த விதமான சொற்களிலாவது சொல்லப்படுகிற யாதொரு குறிப்பீட்டுக்கு, இந்தச் சட்டத்தில் அல்லது அதன்கீழ் மேற்படி அதிகாரிக்கு நிகராக புதிய அதிகாரி ஒருவர் அமைக்கப்பட்டிருந்தால், அது அந்தப் புதிய அதிகாரியைக் குறிப்பிடுவதாயிருந்தால் எப்படியோ அப்படியே அமுலுக்கு வரத்தொடங்கும்.

(5) (1950ஞூத்து திருவாங்கூர்-கொச்சி II-வது சட்டமாகிய) 1950-ம் ஞூத்திய திருவாங்கூர்-கொச்சி பஞ்சாயத்துக்கள் சட்டம் (1) உட்பிரிவிஞல் ரத்து செய்யப்படுவதிஞலேயே—

(a) அந்தச் சட்டம் இதற்குமுன் செலாவணியாகி வந்தமையும் அதன் கீழ்ச் செய்யப்பட்ட யாதொரு காரியமும் அல்லது கிரமமாய் மேற்கொண்ட சிரமங்களும் அல்லது,

(b) அச் சட்டத்தின்படி அடைந்த யாதொரு உரிமை அல்லது சுதந்திரம், சேர்ந்து வந்த யாதொரு கடமை அல்லது ஏற்பட்ட யாதொரு பொறுப்பும் அல்லது,

(c) அந்தச் சட்டத்துக்கு விரோதமாகச் செய்த யாதொரு குற்றம் சம்பந்தமாய் பெற்ற யாதொரு அபராத தண்டனே, பறிமுதல் அல்லது தண்டனேயும், அல்லது,

(d) மேலே சொன்ன பிரகாரம் அத்தகைய யாதொரு உரிமை, சுதந்திரம், கடமை, பொறுப்பு அபராத தண்டனே, பறிமுதல் அல்லது தண்டனே சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட யாதொரு பரிசீலனே, சட்ட நடவடிக்கை அல்லது பரிகாரமும்

பாதிக்கப்பட்டுவிடமாட்டாது ; அத்தகைய யாதொரு பரிசீலனே, சட்ட நடவடிக்கை அல்லது பரிகாரமும் இச் சட்டம் நிறைவேற்றப்படாமலிருந்தால் எப்படியோ அப்படியே செய்யப்படலாம் ; தொடர்ந்து நடத்திக்கொண்டு போகப்படலாம் அல்லது அமுலுக்குக் கொண்டுவரப்படலாம். மேலும், அந்தப் பிரகாரமே அத்தகைய யாதொரு அபராத தண்டனே, பறிமுதல் அல்லது தண்டனே விதிக்கப்படலாம்.

(6) (5) உட்பிரிவில் கண்ட ஷரத்துக்களுக்குட்பட்டு (1950-ம் ஆண்டின் திருவாங்கூர்-கொச்சி II-வது சட்டமாகிய) 1950-ஆம் ஆண்டின் திருவாங்கூர்-கொச்சி பஞ்சாயத்துக்கள் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட யாதொரு நியமனம் அல்லது அதிகாரப் பிரிவினை, பிரிக்கப்பட்ட விளம்பரம், உத்தரவு, விதி அல்லது கட்டளை, வகுக்கப்பட்ட விதி, ரெகுலேஷன், நமூனா, சகாயச் சட்டம் அல்லது திட்டம், கொடுக்கப்பட்ட ஸெர்டிபிகேட் பர்மிட் அல்லது லைஸென்ஸ் அல்லது செய்யப்பட்ட பதிவு ஆகியவையுட்பட செய்த எந்தக் காரியமும் அல்லது மேற்கொண்ட எந்த நடவடிக்கையும் இச் சட்டத்தில் கண்ட நிகரான ஷரத்துக்களின்கீழ் செய்யப்பட்டிருப்பதாக அல்லது மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கருதப்பட்டு இச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட யாதொரு காரியம் அல்லது மேற்கொள்ளப்பட்ட யாதொரு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டாலொழிய அல்லது அவ்வாறு ரத்து செய்யப்படுகிற வரையில் அதன் பிரகாரமே தொடர்ந்து அமுலிலிருந்து வரும்.

(7) (2) உட்பிரிவின்கீழ் இச்சட்டம் விஸ்தரிக்கப்படுகிற மாற்றலாகியுள்ள பிரதேசத்தில் அல்லது அதன் பாகத்தில் இச்சட்டத்தைப் பிரயோகப்படுத்துவதற்காக யாதொரு கோர்ட்டார் அல்லது இதர அதிகார சபையார் தங்கள் முன்புள்ள விஷயத்துக்கு இச் சட்டத்தை இணக்குவிப்பதற்கு அவசியமாய் அல்லது தகுதியாயிருக்கக் கூடிய பிரகாரம் அதன் பொருளை மாற்றுமல் அதில் திருத்தங்கள் செய்து அந்த கோர்ட்டார் அல்லது இதர அதிகார சபையார் அதற்கு அர்த்தம் பண்ணலாம்.

விளக்கம்.—இந்தப் பிரிவின் காரியத்துக்காக—

(1) "மாற்றலாகியுள்ள பிரதேசம்" என்பது கன்னியாகுமரி ஜில்லாவும், திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த செங்கோட்டை தாலூக்காவும் எனப் பொருள்படும்.

(2) "ஏற்கெனவே யிருந்து வருகிற சட்டம்" என்பது இச் சட்டத்தின் தொடக்கத்துக்கு முன்பு யாதொரு சட்டம், அவசரச் சட்டம், பிரகடனம், ரெகுலேஷன், உத்தரவு, சகாயச் சட்டம் அல்லது விதியைச் செய்வதற்கு அதிகாரமுடைய சட்டம் நிரூபண அதிகார சபையார் அல்லது நபர் ஒருவரால் நிறைவேற்றப்பட்ட அல்லது செய்யப்பட்ட சட்டம், அவசரச் சட்டம், பிரகடனம், ரெகுலேஷன், உத்தரவு சகாயச் சட்டம் அல்லது விதி எனப் பொருள்படும்.

மசோதா விவரணம்

பகுதி 189.—கன்னியாகுமாரி ஜில்லாவுக்கும், திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த செங்கோட்டைத் தாலூகாவுக்கும், பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில் ஏற்படுத்தியவுடன் இச் சட்டத்தை அந்தப் பிரதேசங்களுக்கு விஸ்தரிப்பதற்காகவும், 1950-ம் ஆண்டின் திருவாங்கூர், கொச்சி பஞ்சாயத்துச் சட்டத்தை ரத்து செய்வதற்காகவும், இப் பகுதி வகை செய்கிறது. அவசியமான விலக்குநிபந்தனைகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன.

பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்கள் முதலியவற்றை முதல் தடவையாக மீண்டும் அமைப்பதை IV-வது ஷெட்யூலுக் குட்பட்டு இச் சட்டத்தை வாசிக்கவேண்டும்

190. (1) இச் சட்டத்தின் தொடக்கத்தின்போது இருந்து வருபவையும், அதன் ஷரத்துக்களை அனுசரித்து முதல் தடவையாக அமைக்கப்படுகிற பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்கள் சம்பந்தமாகவும், பஞ்சாயத்துக்களை இந்த சட்டத்தின்படிக்கு திருப்பி மாற்றுகிற சம்பந்தமாகவும் மற்றப்படி மேற்சொன்ன ஷரத்துக்களை முதல் தடவையாக அமுலுக்குக் கொண்டு வரும்போதும் அவற்றை IV-ம் ஷெட்யூலில் கண்டுள்ள விதிக்களுக்குட்பட்டு வாசிக்கவேண்டும்.

(2) அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக மேற்படி ஷெட்யூலில் கண்ட விதிகளில் திருத்தம் செய்யவும் அவற்றுடன் சிலவற்றைச் சேர்க்கவும் அல்லது அவற்றை ரத்து செய்யவும் அதிகாரமுடையவர்களாவார்கள்.

பஞ்சாயத்து கோர்ட் அலுவல்கள் நின்று போய்விடும்

மசோதா விவரணம்

பகுதி 190.— ஷெட்யூல் IV.—இந்தப் புதிய சட்டத்தின் ஷரத்துக்களை அமுலுக்குக் கொண்டுவருவதற்காக அவசியமான இடைக்கால ஷரத்துக்கள் IV-ம் ஷெட்யூலில் சொல்லப் பட்டுள்ளன, 190–வது பகுதியைச் சேர்ந்த (2) உட்பகுதி IV-ம் ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள விதிகளைத் திருத்த அல்லது அவைகளுடன் புதிய விதிகளைச் சேர்க்க அல்லது அவைகளை ரத்து செய்ய அரசாங்கத்தாருக்கு இந்த பிரிவு அதிகாரம் கொடுக்கிறது.

பஞ்சாயத்து கோர்டுகள் அலுவல்களை பஞ்சாயத்துகள் செய்வது நின்று போகும்

191. இச் சட்டத்தின் படிக்கான யாதொரு பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதி சம்பந்தமாக பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் ஒன்று அமைக்கப்படுவதன்பேரில் —

(i) யாதொரு கிராமம் சம்பந்தமாக (சென்னை 1950-ம் வருஷத்து X வது சட்டமாகிய) 1950–வருஷத்திய சென்னை கிராமப் பஞ்சாயத்துகள் சட்டத்தின்படி அமைக்கப் பட்ட அல்லது அமைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட்ட ஒவ்வொரு பஞ்சாயத்தும் (சென்னை 1889-ம் வருஷத்து I-வது சட்டமாகிய) 1888–ம் வருஷத்திய சென்னை கிராம கோர்ட்டுகள்; சட்டத்தின் 9 (1) பிரிவின் காரியங்களுக்காக அந்த கிராமம் அல்லது பட்டணம் நிமித்தமாய் ஒரு பஞ்சாயத்துக் கோர்ட்டாக செயலாற்றி வருவதுநின்றுபோகும். (மேலும் அந்த பஞ்சாயத்தின் தலைவர், உப தலைவர் உட்பட) அங்கத்தினர்கள் மேற்படி தேதியிலிருந்து அந்த பஞ்சாயத்துக் கோர்ட்டின் உத்தியோக பூர்வமான அங்கத்தினர்களாயிருந்து வருவதும் நின்று போகும். மேற்சொன்ன, தலைவரும் உப தலைவரும் கூட அந்த தேதி முதற்கொண்டு முறையே மேற்படி பஞ்சாயத்துக் கோர்ட்டின் உத்தியோக பூர்வமான தலைவராக, உபதலைவராக இருந்து வருவதும், அற்றுப் போகும்.

(ii) மேற்சொன்ன தேதியன்று மேற்படி பஞ்சாயத்தின் பைசலாகாமலுள்ள சகல சிவில் அல்லது கிரிமினல் வழக்குகளும் நடவடிக்கைகளும் (சென்னை 1889-ம் வருஷத்து I-வது சட்டமாகிய) 1888-ம் வருஷத்திய சென்னை கிராம கோர்ட்டுகள் சட்டத்தில் கண்ட 9 (1) பிரிவின் கீழ் சம்பந்தப்பட்ட மேற்படி பிரதேசத்துக்காக வென்று அமைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்துக் கோர்ட்டுக்கு மாற்றலாகிவிடும். மேற்படி பஞ்சாயத்துக் கோர்ட்டு அவற்றை விசாரித்துத் தீர்மானிக்க அதிகார வரம்பு உடையதாகும்; மேற்சொன்ன தேதிக்குமுன் மேற்படி பஞ்சாயத்து பிறப்பித்த அல்லது செய்த தீர்ப்புகளும் உத்தரவுகளும் (சென்னை 1889-ம் வருஷத்து I-வது சட்டமாகிய) 1888–ம் வருஷத்திய சென்னைக் கிராமக் கோர்ட்டுகள் சட்டத்தின் படிக்கான பஞ்சாயத்துக் கோர்ட்டால் பிறப்பிக்கப்பட்டிருந்தால் அல்லது செய்யப் பட்டிருந்தால் என்ன பலனையும் அமுலையும் பெற்றிருக்குமோ அதே பலனையும் அமுலையும் அவை பெற்றிருக்கவேண்டும்.

மசோதாவின் விளக்கம்

பகுதி 191.—1950-ம் ஞூத்திய சென்னை கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 132-வது பிரிவின்படி ஒவ்வொரு பஞ்சாயத்தும், 1888-ம் ஞூத்திய சென்னை கிராமக் கோர்ட்டு கள் சட்டத்தின். 9 (1) பிரிவின்படி ஒரு பஞ்சாயத்துக் கோர்ட்டாகக் கருதப்படவேண்டும். யாதொரு பஞ்சாயத்துக் கோர்ட்டுக்கு அரசாங்கத்தார், 1888-ம் ஞூத்திய சென்னை கிராமக் கோர்ட்டுகள் சட்டத்தில் ஏற்பாடு செய்திராத சிவில் அல்லது கிரிமினல் அதிகார வரம்பைக் கூட அளிக்கலாம். கிராமக் கோர்ட்டுகளுக்குள்ள அதிகாரங்களை பஞ்சாயத்துக்களின் மீது சுமத்தக் கூடாதென்று கருதப்படுவதால் மேற்சொன்ன 132-வது பிரிவு தற்போதையச் சட் டத்தில் எடுத்து எழுதப்படவில்லை. ஆனால், பைசல் ஆகாமல் உள்ள எவையேனும் வழக்கு கள் அல்லது நடவடிக்கைகளை சென்னை கிராமக் கோர்ட்டுகள் சட்டப்படி அமைக்கப் பட்டுள்ள தகுதி வாய்ந்த கோர்ட்டுகளில் எவற்றுக்கேனும் மாற்றி விடுவதற்காக ஷரத்து ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

மதருஸ் ஜில்லா முனிசிபாலிடிகள் சட்டம் பஞ்சாயத்து யூனியனுக்கு பிரயோகப்படும்

192. இச் சட்டத்தின்படிக்கான யாதொரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதி சம்பந்தமாய் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் ஒன்று அமைக்கப்படுவதன்பேரில் (சென்னை 1920-ம் வருஷத்து V-வது சட்டமாகிய) 1920-ம் வருஷத்திய சென்னை ஜில்லா முனிசிபாலிட்டிகள் சட்டம், அந்தப் பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதிக்குக் கீழ்கண்ட மாறுதல்களுக்குட் பட்டுப் பிரயோகப்படும். அவையாவன :—

(a) 4-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவு "இந்த ராஜ்ய அரசாங்கத்தார்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "1958-ம் வருஷத்திய சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 5-வது பிரிவில் கண்ட ஷரத்துக்களுக்குட் பட்டு இந்த ராஜ்ய அரசாங்கத்தார்" என்னும் சொற்களை அமைத்துக்கொள்ள வேண்டும்.

(b) 249-வது பிரிவிலே

(i) (1) உட்பிரிவிலே—

(a) அல்லது மேற்படி எல்லைகளிலிருந்து "மூன்று மைலுக்குட் பட்ட தூரத்திலுள்ள" என்னும் சொற்களை விட்டுவிடவேண்டும்;

(b) விலக்கு நிபந்தனைக்குப் பதிலாக, அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது:—

"ஆனல், அத்தகைய விளம்பரம் எதுவும் அது பிரசுரமான தேதி யிலிருந்து அறுபது தினங்கள் வரையில் அமுலுக்கு வரத் தொடங்காது";

(ii) (6) உட்பிரிவை விட்டுவிட வேண்டும்.

குறிப்பு

மதராஸ் ஜில்லா முனிசிபாலிடிகள் சட்டம்:—இதில் 370 பிரிவுகளும், 9 ஷெட்யூல் களும் நூறுகள் கணக்குள்ள விதிகளும், சகாயசட்டங்களும் இருக்கின்றன. இதன் படிக்கு பஞ்சாயத் யூனியன் கவுன்சில்கள் நடந்துகொள்ள வேண்டும், ஆனல் பஞ்சாயத்து யூனி யன் கவுன்சில்கள் அங்கத்தினர்கள் பஞ்சாயத்துகள் அங்கத்தினர்களால் தேர்ந்து எடுக்கப் படவேண்டும். [பிரிவு 12யை பார்க்கவும்]. சாதாரணமாக அவர்களுடைய காலம் 5 வருஷங் களாக இருக்கும். (பிரிவு 17யை பார்க்கவும்) அந்த மொத்த மதராஸ் ஜில்லா முனிசிபாலிடி கள் சட்டத்தை இங்கே அச்சிடுவதென்ருல் அது, இம்மாதிரி 3 அத்தனை கனத்த புத்தகம் ஆகும், ஆகையால் அதை இங்கே சேர்க்கவில்லை.

மதருஸ் ஆரம்ப கல்வி சட்டம் பஞ்சாயத்து யூனியனுக்கு பிர யோகப்படும்

193 இச் சட்டத்தின்படிக்கான பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதி யொன் றின் சம்பந்தமாக பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் ஒன்று அமைக்கப்படுவதன் பேரில் (சென்னை 1920-ம் ஹூத்து VIII-வது சட்டமாகிய) 1920-ம் ஹூத்திய சென்னை ஆரம்பக் கல்வி சட்டம் அந்தப் பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதிக்கு அடியிற்கண்ட மாறுதல்களுக்குட்பட்டு பிரயோகப் படும் ; அவையாவன:—

(i) 3-வது பிரிவிலே—

(a) (iv) பகுதியை விட்டு விட வேண்டும்.

(b) (ix) பகுதியில் "ஜில்லா போர்டு" என்னும் சொற்களுக்கு பதிலாக "பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்" என்னும் சொற்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

ஆரம்ப கல்வி சட்டம்

(c) (x - b) பகுதிக்கு பதிலாக அடியிற் கண்ட பகுதியை அமைத்துக்கொள்ள வேண்டும் ; அதாவது :—

(x - b) '' பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்'' என்பது 1958-ம் ஹ்லத்திய பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட யாயொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் எனப் பொருள்படும் '' ;

(ii) 32-வது பிரிவிலே—

(a) '' பிரதேச அதிகார சபையார் '' என்னும் சொற்களுக்குப் பதிலாக, '' முனிசிபல் கவுன்ஸில் '' என்னும் சொற்களை அமைத்துக்கொள்ள வேண்டும்

(b) '' மேற்படி அதிகார சபையார் '' என்னும் சொற்கள் வருமிடங்களி லெல்லாம் அவைகளுக்குப் பதிலாக, ''மேற்படி முனிசிபல் கௌன் ஸில் '' என்னும் சொற்களை அமைத்துக் கொள்ள வேண்டும் ;

(iii) 33-வது உட்பிரிவிலே, '' (2) உட்பிரிவில், '' பிரதேச அதிகார சபையார் என் னும் சொற்களுக்குப் பதிலாக, " முனிசிபல் கௌன்ஸில் " என்னும் சொற்களை அமைத்துக்கொள்ள வேண்டும் ;

(iv) 34-வது பிரிவிலே (2) உப பிரிவை விட்டுவிட வேண்டும்,

(v) 35-வது பிரிவிலே—

(a) '' பிரதேச அதிகார சபையார் '' என்னும் சொற்கள் வருமிடங்களிலெல் லாம் அவர்களுக்குப் பதிலாக '' முனிசிபல் கௌன்ஸில் '' என்னும் சொற்களை அமைத்துக்கொள்ளவேண்டும் ;

(b) (1) உட்பிரிவிலே கண்ட கடைசி விலக்கு நிபந்தனையை விட்டு விடவேண்டும்;

(vi) 36-வது பிரிவிலே—

(a) (1) உட்பிரிவில், அதன் ஆரம்பத்தில் வருகிற ''(1)'' என்கிற நக வளைவுக் குறிகளையும் இலக்கத்தையும் விட்டு விட வேண்டும், மேலும் '' அல்லது சந்தர்ப்பத்துக்கேற்ப லோகல் போர்டுகள் '' என்னும் சொற் களையும் விட்டு விடவேண்டும்.

(b) (2) உட்பிரிவை விட்டுவிட வேண்டும்.

(vii) 37-வது பிரிவிலே

(a) (2) உட்பிரிவை விட்டு விட்டு (3) (4) உட்பிரிவுகளுக்கு முறையே (2) (3) உட்பிரிவுகளென்று மீண்டும் இலக்கமிடவேண்டும்.

(b) அவ்வாறு மீண்டும் இலக்கமிடப்பட்ட (2) உட்பிரிவில் ''அல்லது (2) உட் பிரிவு '' என்கிற சொற்களையும் நகவளைவுக் குறிகளையும் இலக்கத்தையும் விட்டுவிட வேண்டும் ;

(c) அவ்வாறு மீண்டும் இலக்கமிடப்பட்ட (3) உட்பிரிவில் '' 1 முதல் (3) வரையிலுள்ள உட்பிரிவுகள் '' என்னும் நகவளைவு குறிகளுக்கும் இலக்கங்களுக்கும சொற்களுக்கும் பதிலாக, ''(1), (2) உட்பிரிவுகள் '' என்னும் நகவளைவுக் குறிகளையும், இலக்கங்களையும், சொற்களையும் அமைத்துக்கொள்ள வேண்டும் மேலும். '' அல்லது சந்தர்ப்பத்துக்கேற்ப மேற்படி ஜில்லா போர்டு பிரதேசம் " என்கிற சொற்களை விட்டுவிட வேண்டும் ;

(viii) 38-வது பிரிவிலே (1), (2) உட்பிரிவுகளில் "பிரதேச அதிகார சபையார்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "முனிஸிபல் கௌன்ஸில்" என்னும் சொற்களை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(ix) 39-வது பிரிவிலே, "பிரதேச அதிகார சபையார்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "முனிசிபல் கௌன்ஸில்" என்னும் சொற்களை அமைத்துக்கொள்ள வேண்டும்.

(x) 40.வது பிரிவில், "அல்லது 1920-ம்ஆஸ்த்திய சென்னை லோகல் போர்டுகள் சட்டத்தில்" என்கிற சொற்களுக்கும் இலக்கங்களுக்குப் பதிலாக, "அல்லது 1958ம்ஆஸ்த்திய சென்னை பஞ்சாயத்துக்கள் சட்டத்தில்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

(xi) 47-வது பிரிவிலே, (1) உட்பிரிவிலே "பஞ்சாயத்து" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்" என்கிற சொற்களை அமைத்துக்கொள்ளவேண்டும்;

(xii) 51-வது பிரிவிலே, (3) உட்பிரிவில் "ஜில்லா போர்டு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்" என்னும் சொற்களை அமைத்துக்கொள்ளவேண்டும்'

(xiii) 56-வது பிரிவிலே, (2) உட்பிரிவைச் சேர்ந்த (f) பகுதியில் "பஞ்சாயத்துக்களால்" என்னும் சொற்களை விட்டு விடவேண்டும்;

குறிப்பு

மதராஸ் ஆதார கல்வி சட்டம்:—இது மதராஸ் ராஜ்யத்தின் 1920-ம் வருடத்திய 8-வது சட்டம். இது கட்டாயமாக ஆதாரகல்வியை குழந்தைகளுக்கு கொடுப்பதற்கு என்று ஏற்படுத்திய ஆக்ட்டு. இங்கிலீஷ்காரர் இந்த சட்டம் சுமார் 26 வருடமும், நம்முடைய தேசத்தாரே ஆளவந்த பிறகு 12 வருடமும் இருந்து வருகிறது. மொத்தத்தில் 38 வருடங்களுக்கு மேல் இந்த சட்டப்படி ஆளப்பட்டு வருகிறது. இது வரையில் ஒரு கணிசமான பலன் அடையவில்லை. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் மூலம் இந்த சட்டம், செலாவணி ஆகப் போகிறது. இது வரையில் டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் ஆதார கல்வியை பார்த்து வந்ததில் அது பார்வையிடும் இடங்கள் விஸ்தரிப்பில் அதிகமாய் இருப்பதாலும் பணகுறைவினாலும் வேண்டிய அளவுக்கு குழந்தைகளுக்கு படிப்பு சொல்லி கொடுக்க முடியவில்லை என்று ஒரு காரணம் கூறி வந்தார்கள். அதற்கு தக்கவாறு, வேண்டிய கட்டடங்களும் சொல்லி கொடுக்க தக்க வாத்யார்களும் இல்லை. இப்போது 2-வது, 3-வது ஐந்தாண்டு திட்டங்கள் மூலமாக வேண்டிய பணம் கிடைக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது. அதன் படிக்கு வாத்யார்களையும் பாடசாலைகளையும் அதிகமாக ஏற்படுத்தி உடனே எல்லா குழந்தைகளுக்கும் கட்டாயமாக படிப்பு சொல்லி கொடுப்பார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

மதராஸ் ஆதார கல்வி சட்டத்தின் சுருக்கம்

பிரிவு 32.—32-வது பிரிவின் படிக்கு ஆதாரகள்வி நிதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமாக ஒன்றை கவனிக்க வேண்டும். பகுதி (IV) படிக்கு தனிப்பட்ட நபர்கள் ஆதார கல்விக்கு என்று தர்ம சொத்து எழுதி வைக்கலாம்.

பிரிவு 33.—அந்த நிதியை எங்கு வைப்பது. செலவு செய்வது பற்றி கூறுகிறது.

பிரிவு 34.—ஆதார கல்விக்காக என்று சொத்தின் பேரிலும், தொழிலின் பேரிலும், கம்பெனிகளின் பேரிலும் ஆதார கல்வி வரியை போடலாம்.

பிரிவு 35.—அந்த ஆதார கல்வி வரி விதிப்பு இவ்வளவுக்கு இப்படிக்கு விதிக்க வேண்டும் என்பதை குறிக்கிறது.

பிரிவு 36.— முனிசிபல் வரிகளை வசூலிக்கிறபடிக்கு ஆதார கல்வி வரியையும் வசூலிக்கப்படும்.

பிரிவு 37.—அரசாங்கம் இந்த நிதிக்கு 100-க்கு 50-வீதம் 34-வது பிரிவின் கீழ் முனிசிபாலிடி வசூலிக்கும் ஆதாரகல்வி நிதிக்கு மான்யமாக கொடுப்பார்கள்.

ஆரம்ப கல்வி சட்டம்

பிரிவு 38.- பட்ஜெட்டு (வெகுசாவாய் ஆகும் வரவு-செலவு) திட்டமும் ஆடிட்டு (கணக்கு தணிக்கையும்.)

பிரிவு 39-40:—இவைகளும் 38-வது பிரிவை குறித்தது.

பிரிவு 44.—பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஆதார கல்வியை கட்டாய படுத்த தீர்மானம் செய்யலாம்.

பிரிவு 45.—அரசாங்கம் மேற்படி தீர்மானத்தை ஒத்துக் கொண்டால் பி. 34-ன் படிக்கு ஆதார கல்விக் கென்று வரிவிதிக்கலாம்.

பிரிவு 45-A—அரசாங்கமும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் கட்டாய ஆதார கல்வி திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று உத்தரவிடலாம்.

பிரிவு 46.—மேறபடி தீர்மானத்தை பிரசித்தம் செய்யவேண்டும்.

பிரிவு 47-48.—கட்டாய கல்வி திட்டம் உள்ள பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் பிரதேசத்தில் படிப்பு சொல்லி கொடுப்பதற் கென்று ஸ்கூல் சம்பளம் வாங்கக் கூடாது.

பிரிவு 49.—குழந்தைகளின் போஷகர்கள் தங்கள் வசத்தில் உள்ள குழந்தைகளை எப்போது கட்டாயமாக படிக்கவைக்க ஜவாப்தாரிகளாக உள்ளார்.

பிரிவு 50.—சில சந்தர்ப்பங்களில் போஷகர்கள் அதை நிறை வேற்றுமலும் இருக்கலாம்.

பிரிவு 51.—49-வது பிரிவின்படி போஷகர் பையனை அனுப்பாவிட்டால் அவருக்கு அபராதம் விதிக்கலாம்.

பிரிவு 56.—அரசாங்கம் இந்த சட்டத்தை குறித்து விதிகளை செய்யலாம்.

விதிகள்

ஆதாரகல்வி இன்னது என்பதும் ப்டிப்பு சொல்லி கொடுக்கும் நேரங்களும் பிரிவு 3 (V)ன் கீழ் விதிகள்

ஆதாரகல்வி :— ஆதார கல்வி என்பது 1 முதல் 5 வகுப்புகள் வறைக்கும் கட்டாய மாக படிப்பு சொல்லி கொடுப்பதும், 6, 7, 8 வகுப்புகளில் பாடம் சொல்லிக் கொடுக்கிறதும் ஆகும்.

1 முதல் 5 வகுப்புகளில் ஆதாரகல்விக்காக சொல்லிக் கொடுக்கவேண்டிய படிப்பு அம்சங்கள் (பகுதிகள்)—

முக்கியமானவை:— (1) பாஷை (மொழி) (2) கணக்கு (3) இயற்கை பாடமும், தோட்டமும் உண்டாக்கி பணிசெய்வது (4) தேக வலிவுக்காக பயிற்சி (5) (a மக்களுடைய வளர்ப்பின் வரலாறும் (b) நாம் இருக்கும் பூமியின் விளக்கம் — சரித்திரமும், பூகோளமும் — (History and Geography) (6) சிவிக்ஸ் — தேசத்தின் பரிபாலன முறை, சுகாதார நூல் சாஸ்திரம்) (இதில் பெண்குழந்தைகளுக்கு வீடுகளை நன்றுக வைத்துக் கொள்வது சேரும்.) (7) சங்கீதம் (இதில் இசையும் பரத நாட்டியமும்) சேரும். (8) கைவேலைகள்.

விரும்பி எடுத்துக் கொள்ளப்பட்டவை :- (1) சித்திரங்கள், பிளான்கள் எழுதுவது. (2) முதல் சிகிச்சை (3) இரு பாஷைகள் இருக்கும் இடத்தில் மற்ருெரு பாஷை கற்பது. (4) மதம் அல்லது நீதியைப் பற்றி போதிப்பது.

6, 7, 8, வகுப்புகளில் ஆதாரகல்விக்காக சொல்லி கொடுக்க வேண்டிய அம்சங்கள் (பகுதிகள்)

மூக்கியமானவை (1) பாஷை (மொழி) (2) கணக்கு (3) விஞ்ஞானமும் (Physics) பௌதிக சாஸ்திரம் — Chemistry ரசாயன சாஸ்திரம் அதாவது பொருள்களில் உள்—நோக்கும் சாஸ்திரம், பெண் குழந்தைகளுக்கு வீட்டு சம்மந்தமான விஞ்ஞானம்) (4) மனுஷ்ய சமூக வாழ்க்கையை குறித்த படிப்பினை. (5) தேக வலிவுக்காக பயிற்சி. (6) கைவேலைகளுக்காக ஆரம்ப திட்டங்களை கற்பித்தல். இதிலே தோட்டங்களை அபிவிருத்தி செய்வதும் சேரும்.

விரும்பி எடுத்துக்கொள்ளப் பட்டவை.—(1) இங்கிலீஷ் பாஷை கற்றுக்கொள்வது (2) சங்கீதம் (இதில் இசையும், பரத நாட்டியமும் சேரும்.) (3) இரு பாஷைகள் இருக்குமிடத்தில் மற்ருெரு பாஷை கற்பது (4) சித்திரங்கள் பிளான்கள் எழுதுவது (5) மதம் அல்லது நீதியைப் பற்றி போதிப்பது.

ஆரம்ப கல்வி சட்டம் — மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு சட்டம்

ஆதாரபள்ளிக் கூடத்திற்கு இடம். பிரிவு 3 (VII)படிக்கு விதி

ஒவ்வொரு ஆதார பள்ளி கூடத்திற்கும் அங்கே படிக்கிற மாணவருக்கு குறைந்தது $9\frac{1}{2}$ சதுர அடி கணக்கிட்டு மொத்த மாணவர்களுக்கு எவ்வளவு இடம் ஆகுமோ, அவ்வளவு சதுர அடி இடம் இருக்கவேண்டும்.

ஸ்கூல் (பள்ளிகூடத்தின்) வயது — பிரிவு 3 (XIII) படிக்கு விதி

ஆதாரபள்ளி கூடத்தின் வயது 6 வருஷம் முதல் 12 வருஷம் வரையில் உள்ளது.

படிப்பு வரியை விதித்து வசூலிக்கும் வழி-பிரிவு 36 (1)-ன் படிக்கு

இதற்கு ஜில்லா முனிசிபாலிடி சட்டம் உபயோகிக்கப்படாது. அரசாங்கம் வசூலிக்குமாகில் அதன் சிலவுக்காக 100க்கு 5 வீதம் பிடித்து கொள்ளலாம்.

பட்ஜெட் வெகுசாவான வரவு செலவு பிரிவு 38 (1) படிக்கு விதி

இவை 5 விதிகள் பட்ஜெட்டில் உள்ளதொகைக்கு மேல் உத்திரவின்றி செலவு செய்யக் கூடாது.

கட்டாய ஆதார கல்வி விதிகள்—பிரிவு 44-படிக்கு

1. ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு ரிகார்டை ஹெட்மாஸ்டர் மாதத்திற்கு ஒரு முறை தயாரிக்க வேண்டும். அதில் தவருதல் ஆனவர்கள் பெயர்களை குறிக்க வேண்டும்.

2. டிப்டி இன்ஸ்பெக்டர் கமிட்டியை ஏற்படுத்த வேண்டும். டிப்டி இன்ஸ் பெக்டர் கமிட்டியின் தலைவர் ஆவார்.

பாதுகாப்புகாரர்கள் (கார்டியன்கள்) கடமை-பிரிவு-49-படிக்கு

3. மாதங்கள் ஒரு முறை (1) ஜனவரி—1-ம் தேதி. (2) ஏப்ரல். 1-ம் தேதி. (3) ஜுலை. 1-ம் தேதி. (4) அக்டோபர். 1-ம் தேதி. கணக்கு எடுப்பதில் முறை.

குழந்தைகளை பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பாமல் இருக்க விளக்கு (மன்னிப்பு)—பிரிவு-50 (V)-படிக்கு

அபராதம்—கட்டாய படிப்பை அமுலாக்குவது—பிரிவு— 51 (1)—படிக்கு

கடைசியில் ஜில்லா எடுகேஷனல் ஆபீசர், கார்டியன் செய்த காரியம் நிந்திக்க தக்கது என்று ஹெச்சரிக்கை செய்வார். 2-ம் தப்பிதத்திற்கு 0-75 நயாபைசா முதலும், 6-வது தப்பிதத்திற்கு ரூபா 6 முதல் ரூபா $7\frac{1}{2}$ வரையில் போடலாம். இதை பட்டணம் பஞ்சாயத்துகளில் நிர்வாக உத்யோகஸ்தரும் மீதி கிராம பஞ்சாயத்து கிராமங்களில், கிராம முனிசீபும் வசூலிக்க வேண்டும்.

1-ம் அனுபந்தம்-பட்ஜெட் —பிரிவு 56 (f)ன் படிக்கு இருக்க வேண்டும்.

2-ம் அனுபந்தம்.—ஸ்கூலில் (பள்ளியில்) சேர்க்க மனு.

3-ம் அனுபந்தம் பிரிவு 44 (5) படிக்கு விதி.—ஒரு மாணவன் பள்ளியை விட்டு போகும் போது கொடுக்கும் சர்டிபிகேட்.

4-ம் அனுபந்தம் (பிரிவு-44-விதி (1).—பள்ளிக்கு வராமலே தவர்தல்கள் செய்த மாணுக்கர்கள் ஜாபிதா.

மதராஸ் மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு சட்டம் பஞ்சாயத்து யூனியனுக்கு பிரயோகப்படும்

194. இந்த சட்டத்தின் படிக்கான யாதொரு பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதி சம்பந்தமாக பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில் ஒன்று அமைக்கப்படுவதன் பேரில், (சென்னை 1931-ம் ஆண்டு III-வது சட்டமாகிய) 1931-ம் ஆண்டிய சென்னை மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம் அடியிற் கண்ட மாறுதல்களுக்குட்பட்டு அந்த அபிவிருத்தி தொகுதிக்கு பிரயோகப்படும் ; அவையாவன :

(i) 2-வது பிரிவிலே, (iii) பகுதியில், “ அல்லது யாதொரு ஜில்லா போர்டு ” என்கிற சொற்களை விட்டுவிட வேண்டும்;

மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு சட்டம் — கேளிக்கை வரி சட்டம்

(ii) 10-வது பிரிவிலே, (1) உட்பிரிவைச் சேர்ந்த (a) பகுதியில்—

(a) (iv) உட்பகுதிக்குப் பதிலாக, அடியிற்கண்ட உட்பகுதியை அமைத்துக்கொள்ள வேண்டும், அதாவது

" (iv) நான்காவதாக (சென்னை 1938 ம்ஷூத்து V-வது சட்டமாகிய) 1938-ம்ஷூத்திய சென்னை வண்டிப் போக்குவரத்துக் கட்டுப் பாட்டுச் சட்டத்தின் தொடக்கத்துக்கு அடுத்து முந்தியுள்ள மார்ச்சுமீ 31-ம் தேதியோடு முடிவடைகிற மூன்று வருஷகால அளவில் மேற்படி முனிஸிபல் கௌன்ஸில் (சென்னை 1920-ம் ஷூத்து V-வது சட்டமாகிய) 1920-ம்ஷூத்திய சென்னை ஜில்லா முனிஸிபாலிட்டிகள் சட்டத்தின் 174-A பிரிவின் கீழ் மோட்டார் வண்டிகளுக்குக் கொடுக்கப்பட்ட லைஸென்ஸுகளின் பேரிலான கட்டணங்களின் மூலம் பெற்றுக்கொண்ட சராசரி வருஷ வருமானத்துக்குச் சமமான ஒரு தொகையை அந்த முனிஸிபல் கௌன்ஸில் ஒவ்வொன்றுக்கும் கொடுக்க வேண்டும் ;

ஆனால் 1938-ம்ஷூத்து ஏப்ரல்மீ முதல் தேதியன்றுவது அதற்குப் பிறகாவது யாதொரு முனிஸிபாலிட்டி அமைக்கப்பட்டால் அந்த முனிஸிபல் கௌன்ஸிலுக்கு, இந்த ராஜ்ய அரசாங்கத்தார் உத்தரவு மூலமாகத் தீர்மானிக்கக்கூடிய தொகை கொடுக்கப்படும்.

(b) (v) உட்பகுதிக்குப் பிறகு வருகிற விலக்கு நிபந்தனையை விட்டு விட வேண்டும்.

குறிப்பு

1939-ம் வருடத்திற்கு முந்தி மோடார் வண்டி பஸ், லாரி முதலியவைகளுக்கு ஒன்றுக்கு அநேக முனிசிபாலிடிகளும், டிஸ்ட்ரிக்ட் போர்டுகளும் வரிகள் போட்டு வசூலித்து கொண்டு இருந்தன. இவைகளை எல்லாம் ஒன்று சேர்த்து மதராஸ் அரசாங்கம் மோடார் வண்டிகளுக்கு வரி விதித்து வசூல் செய்து அதை 1939ஷூத்திய சட்டபடிக்கு வசூலித்த வரி துகையிலிருந்து தனி தனி முனிசிபாலிடிக்கும் டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கும் கொஞ்சம் பாகத்தை கொடுப்பது என்று சட்டம் ஏற்படுத்தப்பட்டது. இந்த 1958ஷூத்திய 35-வது சட்டத்தின் 194-வது பிரிவின் படிக்கு டிஸ்ட்ரிக்ட் போர்ட் எடுத்து விடப்பட்ட நேரத்தில் அது பெற்று இருந்த மோடார் வண்டி வரியின் பாகத்தில் ஒரு பாகத்தை பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அடையும். அதை அரசாங்கம் நிர்ணயிக்கும்.

மதராஸ் கேளிக்கை வரி சட்டம் பஞ்சாயத்து யூனியனுக்கு பிரயோகப்படும்

195. இச் சட்டத்தின் படிக்கான யாதொரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதி சம்பந்தமான பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில் ஒன்று அமைக்கப்படுவதின் பேரில் (சென்னை 1939-ம்ஷூத்து X-வது சட்டமாகிய) 1939-ம்ஷூத்திய சென்னை கேளிக்கை வரிச் சட்டம் கீழ்க் கண்ட மாறுதல்களுக்குட்பட்டு அந்த பஞ்சாயத்து அபிவிருத்தி தொகுதிக்குப் பிரயோகப்படும் ;

(i) 3-வது பிரிவிலே (6) பகுதிக்கு பதிலாக அடியிற்கண்ட பகுதியை அமைத்து கொள்ள வேண்டும் ; அதாவது

(a) சென்னை நகரத்திலே. சென்னை நகராண்மைக் கழகம் என்றும்

(b) வேறு யாதொரு முனிசிபல் பிரதேசத்தில் சம்பந்தப்பட்ட முனிசிபல் கவுன்சில் என்றும்

(c) 1958-ம் ஷூத்திய சென்னை பஞ்சாயத்துகள் சட்டத்தில் அர்த்தம் சொல்லப்பட்டுள்ள யாதொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் என்றும், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துகள் என்றும் பொருள்படும்.

குறிப்பு

(ii) 13-வது பிரிவுக்கு பதிலாக அடியிற் கண்ட பிரிவை அமைத்துக்கொள்ள வேண்டும் ; அதாவது :—

ஷ 13-வது பிரிவை அடியில் அச்சிட்டு இருக்கும் மதராஸ் கேளிகை வரிகள் சட்டத்தில் 13-வது பிரிவாக சேர்க்கப்பட்டிருக்கிறது.

மதராஸ் கேளிக்கை வரி சட்டம்

என்னும்

மதராஸ் விநோதங்களுக்கும் — வேடிக்கைகளுக்கும் வரி விதிப்பு சட்டமும் — விதிகளும்

1939 ௵த்திய 10-வது சட்டம்

சட்டத்தின் - பொருளடக்கம்

பீடிகை

பிரிவு

1. சுருக்கமான பெயரும், வியாபகமும்,
2. 1927 வருடத்திய 5-வது சட்டம் ரத்து செய்யப்பட்டது.
3. அர்த்தம்.
   - (1) " உள்ளே விடுவது "
   - (2) " யாதொரு வேடிக்கைக்கு உள்ளே விடுவது "
   - (3) " விவசாயம் "
   - (4) " வேடிக்கை "
   - (5) " ஸ்தாபனம் "
   - (6) " பிரதேச அதிகார சபை "
   - (7) " உள்ளே விடுவதற்காகக் கொடுக்கும் தொகை "
   - (8) " நிர்ணயிக்கப்பட்ட "
   - (9) " சொந்தக்காரர் "
4. வேடிக்கைகளுக்கு உள்ளே விடுவதற்காக கொடுக்கப்படும் தொகைகளின் மேல் வரி.
5. வரி விஷயமாய் ராஜி ஏற்பாடு செய்வதும் வரித்தொகையை மொத்தமாகச் செலுத்துவதும்.
6. வேடிக்கைகளுக்கு உள்ளே விடுவது.
7. வரி செலுத்தும் விதம்.

பீடிகை

பிரிவு

8. வரி செலுத்துவதனின்றும் நிவாரணை செய்யப்பட்டுள்ள வேடிக்கைகள்.
9. சில விஷயங்களில் வாபிஸ் செய்வது.
10. வரி வசூலிக்கும் விதம்,
11. பார்வையிடுவது.
12. உள்ளே விடுவதற்காகத் தொகை கொடுப்பதனின்றும் நிவாரணை.
13. பிரதேச அதிகார சபைகளுக்கு பிரதி பலன் தொகை கொடுப்பது.
14. தண்டனை.
15. குற்றங்களை ராஜி செய்ய அதிகாரம்
16. விதிகள் செய்ய அதிகாரம்.
17. சில நடவடிக்கைகளுக்கு தடை.
18. சில வியாஜ்யங்களுக்கும் பிராதுகளுக்கும் காலவரையறை:
19. யாதொரு பிரதேச அதிகார சபையை சேர்ந்தவர்களாய், வரி வசூலிக்கும் உத்யோகஸ்தர்கள், ஊழியர்கள் ஆகிய இவர்கள் மீது நடவடிக்கை நடத்துவது முதலியவை.
20. அரசாங்கத்தாருக்குள்ள சில அதிகாரங்கள்.

விதிகளின் - பொருளடக்கம்

பாகம்

விதிகள் (1 முதல் 54 வரை)

- I. பீடிகை **விதிகள்** 1 முதல் 4 வரை.
- II. முத்திரைகளின் மூலமாய் வரி செலுத்துவது **விதிகள்** 5 முதல் 19 வரை.
- III. ரிடர்ன்களை அனுசரித்து மொத்த வரவின் மேல் குறிப்பிட்ட ஒரு சத வீதப்படி வரியை செலுத்துவது. **விதிகள்** 20 முதல் 32 வரை.
- IV. ராஜி யேற்பாடு மூலம் வரியை செலுத்துவது. **விதிகள்** 33 முதல் 34 வரை.

பாகம்

- V. யந்திர சாதனத்தின் மூலமாக உள்ளே விடப்படும் விஷயங்களில் வரி செலுத்துவது. **விதிகள்** 35 முதல் 42 வரை.
- VI யாதொரு ஸ்தாபனத்திற்கு சந்தா தொகைகள் அல்லது நன்கொடை தொகைகள் செலுத்துவதின் மேல் வேடிக்கைகளுக்கு உள்ளேவிடுவது விஷயமாய் வரி செலுத்துவது. **விதிகள்** 43 மாத்திரம்.
- VII. நிவாரணைகளும் வரியை வாபஸ் செய்வதும் **விதிகள்** 44 முதல் 47 வரை,

மதராஸ் கேளிக்கை வரி சட்டம்

பாகம்
VIII. பலவகைப் பட்ட விஷயங்கள் **விதிகள்** 48 மாத்திரம்.
IX. நிர்வாகம் **விதிகள்** 49 முதல் 54 வரை.

நமூனுக்கள் (I முதல் X வரை)

I. வேடிக்கை வரி முதலியவைகளை குறித்து. **ரெஜிஸ்டர்**
II. விற்கப்பட்ட டிக்கட்டுகளை குறித்த **ரெஜிஸ்டர்**
III. வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதை குறித்து ரிடர்ன்களை அனுசரித்து வேடிக்கை வரி செலுத்துவதற்கு அனுமதிதரும்படிக்கு செய்து கொள்ளும் **விண்ணப்பம்**
IV. ரிடர்ன்களை அனுசரித்து வரிசெலுத்துவதற்கு **அனுமதிச் சீட்டு**.
V. விற்கப்பட்ட ஸீஸன் டிக்கெட்டு களைக் குறித்து ...யோடு முடிவாகும் கால அளவுக்காக **அனுப்பப்படும் ரிடர்ன்**

பாகம்
VI. வேடிக்கை வரி சம்பந்தமாய் ராஜி ஏற்பாடு செய்து கொண்டதைப் பற்றிய **ஸெர்டிபிகேட்**.
VII. யந்திர சாதனத்தைக் கொண்டு பதிவு செய்யப்பட்ட படியுள்ள ரிடர்ன்களை அனுசரித்து வரி செலுத்து வதற்குரிய **அனுமதிச்சீட்டு**
VIII. யந்திர சாதனத்தை கொண்டு உள்ளே விடப்பட்டவர்களின் எண்ணிக்கை பற்றிய ரெஜிஸ்டர்.
IX வேடிக்கை வரியை செலுத்துவதினின்று நிவாரணை செய்வதற்கான சர்டிபிகேட்.
X. வேடிக்கை வரி செலுத்துவதினின்றும் (செலுத்துவதின் இருந்து) நிவாரணை செய்வதற்கான சர்டிபிகேட் பிரித்து கொடுப்பது

கேளிக்கைகளுக்கு அரசாங்க உத்தரவுகள்

மதராஸ் ராஜ்யத்தில் விநோதங்களுக்கும் இதர வேடிக்கைகளுக்கும் வரி விதிப்பதற்கான சட்டம்

மதராஸ் 1939-ம் ஹூத்திய 10-வது சட்டம்

இது 1947 ஹூத்திய 27-வது, 1953 ஹூத்திய 67-வது, 13-வது 1958 ஹூத்திய 38-வது சட்டங்களினுல் திருத்தப்பட்டது

1-8-1939ல் அமுலுக்கு வந்தது.

இப்போது வரி விதித்துக் கொண்டிருக்கும் பிரதேச அதிகார சபைகளுக்குப் பிரதி பலன் கொடுப்பதற்காக ஏற்பாடு செய்வதும் யுக்தமா யிருக்கிறபடியால், இதனுல் விதிக்கப் படுவது என்னவென்ருல் :—

சுருக்கமான பெயரும் வியாபகமும்

1. (1) இந்த ஆக்டை, வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்து 1939-ம் ஹூத்திய சென்னபட்டணத்து ஆக்ட் என்று சொல்லலாம்.

(2) இது மதராஸ் ராஜ்யம் முழுமைக்கும் வியாபிக்கும்.

1927-ம் ஹூத்திய 5-ஆக்ட் ரத்து

2. பிரதேச அதிகார சபைகள் வேடிக்கைகளுக்கு வரிவிதிப்பதைக் குறித்த 1926-ம் வருடத்திய சென்னப்பட்டணத்து ஆக்ட் இதனுல் ரத்து செய்யப் படுகிறது.

அர்த்தம்

3. இந்த ஆக்டிலே, சங்கதியினுலாவது சந்தர்ப்பத்தினுலாவது விரோதமொன்றும் இராவிட்டால்,—

(1) "உள்ளேவிடுவது" என்பதில் வேடிக்கை பார்ப்பவராகவோ சங்கீதம் (முதலியவை) கேட்பவர்களில் ஒருவராகவோ உள்ளே பிரவேசிக்கவிடுவது என்பதும், யாதொரு வேடிக்கையில் கலந்து கொண்டு உல்லாசமாயிருக்கும் பொருட்டு உள்ளே விடுவது என்பதும் அடங்கும் ;

(2) "யாதொரு வேடிக்கைக்கு உள்ளே விடுவது" என்பதில், யாதொரு வேடிக்கை நடத்தப்படும் எந்த இடத்திலாகிலும் உள்ளே போகவிடுவது என்பதும் அடங்கும் ;

(3) " விவசாயம் " என்பதில் தோட்டவேலை என்பதும், பலவகைகளையுஞ் சேர்ந்த பிராணிகளை விருத்திபண்ணி வளர்ப்பதென்பதும் அடங்கும் ;

(4) " வேடிக்கை" என்பதில், தொகை செலுத்தப்படுவதன்மேல் ஜனங்கள் உள்ளே விடப்படும் யாதொரு பொருட்காட்சி, நாடகம் முதலியவை, விநோதம், ஆட்டம், விளையாட்டு அல்லது ஓட்டப்பந்தயம் என்பதும் அடங்கும் ;

(5) " ஸ்தாபனம்" என்பதில், யாதொரு கம்பெனி, சங்கம், க்ளப் அல்லது ஜனங்களின் வேறே யாதொரு கூட்டத்துக்கு எந்தப் பெயர் வழங்கினாலுஞ்சரி அப்படிப்பட்ட யாதொரு கூட்டம் என்பதும் அடங்கும் ;

(6) " பிரதேச அதிகார சபை" என்பது சென்னை கார்ப்பொரேஷன் என்னும் நகர் விசாரணைச் சங்கமென்றாவது, அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும். எந்த சட்ட திட்டத்தின்படியாகிலும ஏற்படுத்தப்பட்டுள்ள யாதொரு மியூனிஸிபல் கௌன்ஸில் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில், அல்லது பஞ்சாயத்து

(7) "உள்ளே விடுவதற்காகக் கொடுக்கும் தொகை" என்பதில்—

(a) வேடிக்கை நடக்கும் யாதொரு இடத்தின் ஒரு பாகத்தில் யாதொரு நபரை உள்ளே போகவிட்டிருந்து அந்த இடத்தின் வேறே எந்த பாகத்தில் பிற்பட்டு அவை உள்ளே போகாவிட்டால் வரியாவது அதிகப்படியான வரியாவது செலுத்தவேண்டியிருக்குமோ அந்த பாகத்தில் அவரை உள்ளே போக விடுவதற்காக அவர் கொடுக்கும் யாதொரு தொகை என்பதும்,

(b) வேடிக்கை நடக்கும் யாதொரு இடத்தில் உட்காருமிடங்களுக்காகவாவது வேறேவசதியிடத்துக்காகவாவது கொடுக்கப்படும் யாதொரு தொகை என்பதும்,

(c) யாதொரு வேடிக்கைக்கு உள்ளே விடுவதற்காகச் செலுத்தப்படும் தொகை ஏதேனுமிருந்தால் அந்தத் தொகையோடுகூட, மேற்படி வேடிக்கை பார்ப்பதற்காகிலும் பின்னும் பார்த்துக்கொண்டே இருப்பதற்காகிலும் உரிய ஒரு திட்டமாக அந்த வேடிக்கைக்குச் சம்பந்தப்பட்ட எந்தக் காரியத்துக்காகவாவது ஒருவர் செலுத்த வேண்டியிருக்கும் யாதொரு தொகை என்பதும் அடங்கும் ;

(8) " நிர்ணயிக்கப்பட்ட" என்பது இந்த ஆக்டின்படிச் செய்யப்படும் விதிகளினால் நிர்ணயிக்கப்பட்ட என்று அர்த்தமாகும் ;

(9) யாதொரு வேடிக்கை சம்பந்தமாய் " சொந்தக்காரர்" என்பதில் அதன் நிர்வாகத்துக்கு உத்தரவாதமான யாதொரு நபர் என்பதும் ; அடங்கும்.

வேடிக்கைகளுக்கு உள்ளே விடுவதற்காகக் கொடுக்கப்படும் தொகைகளின்மேல் வரி.

4. இந்த ஆக்டில் வெளிப்படையாக வேறே விதமாய் நிபந்தனை கண்டிருக்கிறபடிக் கன்றி மற்றப்படி, யாதொரு வேடிக்கைக்கு உள்ளே விடுவதற்காகக் கொடுக்கப்படும் சகல தொகைகளின்மேலும் அடியிற்கண்ட வீதங்களின்படி இதன் பின்னால் வேடிக்கை வரி என்று குறிப்பிடப்படும் ஒரு வரி விதிக்கப்பட்டு, மாகாண கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தப்படும்; அந்த வீதங்களாவன :—

(வரித்தொகை உள்ளிட்ட மேற்படி தொகையானது—	வரி வீதம்
(i) இரண்டணாவுக்கு மேற்பட்டிராவிட்டால்	... காலணா.
(ii) இரண்டணாவுக்கு மேற்பட்டு ஆறணாவுக்குத் குறைவாயிருந்தால்	... அரை அணா.
(iii) ஆறணாவாகவாவது அதற்கு மேற்பட்டு பன்னிரண்டு அணாவுக்குக் குறைவாகயிருந்தால்	... ஒரு அணா
(vi) பன்னிரண்டு அணாவாகவாவது அதற்குமேற்பட்டு ஒரு ரூபாய் எட்டணாவுக்குக் குறைவாகவாவதிருந்தால்	... இரண்டணா.
(v) ஒரு ரூபாய் எட்டணாவாகவாவது அதற்கு மேற்பட்டு இரண்டு ரூபாய் எட்டணாவுக்குக் குறைவாகவாவதிருந்தால்	... நாலணா.

மதராஸ் கேளிக்கை வரி சட்டம்

(vi) இரண்டு ரூபாய் எட்டணுவாகவாவது அதற்கு மேற்பட்டு மூன்று ரூபாய் எட்டணுவுக்குக் குறைவாகவாவதிருந்தால் ... எட்டணு.

(vii) மூன்று ரூபாய் எட்டணுவாகவாவது அதற்கு மேற்பட்டு நாலு ரூபாய் எட்டணுவுக்குக் குறைவாகவாவதிருந்தால் ... பன்னிரண்டு அணு.

(viii) நாலு ரூபாய் எட்டணுவாகவாவது அதற்கு மேற்பட்டு ஆறு ரூபாய் எட்டணுவுக்குக் குறைவாகவாவதிருந்தால் ... ஒரு ரூபாய்

(ix) ஆறு ரூபாய் எட்டணுவாகவாவது அதற்கு மேற்பட்டு ஒன் பது ரூபாய் எட்டணுவுக்குக் குறைவாகவாவதிருந்தால் .. ஒரு ரூபாய் எட்டணு

(x) ஒன்பது ரூபாய் எட்டணுவாகவாவது அதற்கு மேற்பட்டு பத்து ரூபாய்க்குக் குறைவாகவாவதிருந்தால் ... இரண்டு ரூபாய்.

(xi) பத்து ரூபாயாகவாவது அதற்கு மேற்பட்டாவது இருந்தால் .. முதல் பத்து ரூபாய் விஷயத்தில் இரண்டு ரூபாயும், முதல் பத்து ரூபாய்க்கு மேற்பட்டு பத்து ரூபாய் கொண்ட ஒவ்வொரு தொகைக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் இரண்டு ரூபாயும்.

வரி விஷயமாய் ராஜி ஏற்பாடு செய்வதும் வரித் தொகையை மொத்த மாய்ச் செலுத்துவதும்.

5. மாகாண கவர்ன்மெண்டார், எந்த வேடிக்கை விஷயமாய் 4-வது பிரிவின்படி வேடிக்கை வரி செலுத்தப் படத்தக்கதாயிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு வேடிக்கையின் சொந்தக்காரர் விண்ணப்பம் செய்து கொள்வதன்மேல், தாங்கள் விதிக்கக்கூடிய திட்டங்களுக்குட் பட்டு,—

மேற்படி வேடிக்கை விஷயமாய்ச் செலுத்தப்படத்தக்க வரியின் பொருட்டு நிஷ்கரிஷையான ஒரு தொகை செலுத்துவதாக ராஜி ஏற்பாடு செய்துகொள்ள சொந்தக்காரருக்கு அனுமதி கொடுக்கலாம் ;

வேடிக்கைகளுக்கு உள்ளே விடுவது

6. (1) 5-வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களில் தவிர மற்ற விஷயங் களில், யாதொரு வேடிக்கைக்காக கொடுக்கப்படும் தொகையானது வேடிக்கை வரி செலுத்துவதற்கு உட்பட்டதாயிருந்தால், எந்த நபரையும்—

(a) மாகாண கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்டு, அச்சிடப்பட்ட அல்லது உபுக்கலாயிருக்கும்படி அழுத்தப்பட்ட அல்லது பொறிக்கப்பட்ட அல்லது ஒட்டக் கூடிய (ஏற்கெனவே உபயோகிக்கப்படாத) முத்திரை உடையதாயும், அந்த டிக்கெட் டுக்குரிய சரியான வரியைக் குறிப்பிடுவதாயுமுள்ள ஒரு டிக்கெட்டுடனன்றி மற்றப் படியும்,

(b) விசேஷ விஷயங்களில், மாகாண கவர்ன்மென்டாரின் அங்கீகாரத்தைப் பெற்று உள்ளே விடப்படும் நபர்களின் சங்கியைத்தானுகவே ரெஜிஸ்டர்செய்யும் ஒரு பாரியர் (தடை) மூலமாக வன்றி மற்றப்படியும் அல்லது அந்தப்படி ரெஜிஸ்டர்செய்யும் ஒரு யந்திர சாதனத்தைக்கொண்டன்றி மற்றப்படியும்,

தொகை பெற்றுக்கொண்டு அந்த வேடிக்கைக்கு உள்ளே விடக்கூடாது ; ஆனல், மேற்படி வேடிக்கைக்கு உள்ளே விடுவதற்காகக் கொடுக்கப்படும் தொகைகளைக் குறித்த ரிடர்ன்களை (விவரக்கணக்குகளை)க் கொடுப்பதற்காக மாகாண கவர்ன்மென்டாரால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளை அந்த வேடிக்கையின் சொந்தக்காரர் செய்திருந்து, வேடிக்கை வரி செலுத்து வதற்காக மாகாண கவர்ன்மென்டாரால் அங்கீகரிக்கப்பட்ட தொகையுள்ள ஜாமீனை அவர் களால் அங்கீகரிக்கப்பட்ட விதமாகக் கொடுத்திருந்தால், மேலே கண்ட நிபந்தனைகள் அனுசரிக்கப்படவேண்டியதில்லை.

(2) வேறே யாதொரு விஷயத்தில் வேடிக்கை வரி செலுத்தப்படுவதற்காக யாதொரு வேடிக்கையின் சொந்தக்காரரை ஜாமீன் கொடுக்கும்படிக் கேட்பதனின்றும் மாகாண கவர்ன் மென்டார் (1) உட்பிரிவில் சொல்லியிருப்பதெதனுலும் தடுக்கப்படுவதாகக் கருதப்பட மாட்டாது.

பிரிவு 4-A விட்டுபோய் விட்டது அவத இதனடியில் அச்சிட்டு இருக்கிறோம். இந்த பிரிவு 1949-ம் வருடத்திய 27-வது சட்டத்தினுல் சேர்க்கப்பட்டது.

பையாஸ்கோப் காட்சி களுக்கு அதிகப்படி யான வரி

4-A. (1) பையாஸ்கோப் காட்சிகளுக்கு 4-வது பிரிவின் படி விதிக்கும் வரியுடன் ஒரு அதிகப்படி வரியை அடியில்கண்ட வீதப்படி வசூலித்து அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும் அதாவது

காட்சி நடக்கும் இடம்	காட்சி ஒன்றுக்கு வரி வீதம் ரூ.	ந.பை.
(i) மதராசில் நடந்தால் — —	2	50
(ii) பிரசுரிக்கப்பட்ட முனிசிபாலிடிஎிளில் —	2	00
(iii) மீதி முனிசிபாலிடிகளில் — —	1	00
(iv) மீதி இடங்களில் — —	1	00

கெ. 613— பி. 20 படிக்கு உத்தரவு

அடியிற்கண்ட ஷெட்யூலின் (1) காலத்தில் கண்டுள்ள அதிகாரங்களை, அதன் (2 கலத்தில் அதற்கு நேரேயுள்ள பதிவில் கண்டிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு இதனுல் பிரித்துக் கொடுக்கப்பட்டது.

ஷெட்யூல்.

அதிகாரங்கள். (1)	அதிகாரங்கள் பிரித்துக்கொடுக்கப் பெறும் உத்தியோகஸ்தர்கள் (2)
(1) 5-வது பிரிவைச் சேர்ந்த (a) பகுதியின்படி, வரி சம்பந்தமாய் ராஜி ஏற்பாடு செய்துகொள்ள ஒரு சொந்தக்காரரை அனுமதிப்பதற்கான அதிகாரம்.	சென்னை நகரத்தில் சென்னை நகர விசாரணை சங்கத்தின் கமிஷனர், இதர மியுனிஸிபல் பிரதேசங்களில் ரெவினியு டிவிஷனல் ஆபீஸர்; மற்ற இடங்களில் டெப்யுடி வியாபார வரி உத்தியோகஸ்தர்.
(2) 5-வது பிரிவைச் சேர்ந்த (b) பகுதியின்படி, சேர வேண்டிய வரித்தொகையை மொத்தமாகச் செலுத்த ஒரு சொந்தக்காரரை அனுமதிப்பதற்கான அதிகாரம்.	வேடிக்கை வரி உத்தியோகஸ்தர்.
(3) 6-வது பிரிவைச் சேர்ந்த (1) பகுதியின் (b)உபபகுதியின்படி, உள்ளே விடப்படுபவாகளின் எண்ணிக்கையை உடனுக்குடன் தானே பதிவு செய்யும் ஒரு பாரியர் (தடைக்கருவி) அல்லது யந்திர சாதனத்தை அமைப்புதை அங்கீகரிப்பதற்கான அதிகாரம்.	வேடிக்கை வரி உத்தியோகஸ்தர்.
(4) 6-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி, ரிடர்ன்களை அனுசரித்து வரி விதிப்பதற்காகச் செய்யப்படும் ஏற்பாடுகளை அங்கீகரிப்பதற்கான அதிகாரம்.	வேடிக்கை வரி உத்தியோகஸ்தர்.
(5) 6-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்படி, ஒரு வேடிக்கையின் சொந்தக்காரரிடமிருந்து ஜாமீன் கேட்பதற்கான அதிகாரம்.	வேடிக்கை வரி உத்தியோகஸ்தர்.
(6) 7-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழ் வரும் விஷயங்களில் எந்தத் தொகையின்மேல் வரி விதிக்கவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்கான அதிகாரம்.	வேடிக்கை வரி உத்தியோகஸ்தர்.
(7) 8-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி, வேடிக்கைகளை வரி செலுத்துவதனின்றும் நிவாரணை செலுத்துவதற்கான அதிகாரம்.	சென்னை நகரத்தில் சென்னை நகர விசாரணைச் சங்கத்தின் கமிஷனர். இதர மியுனிஸிபல் பிரதேசங்களில் ரெவினியு டிவிஷனல் ஆபீஸர்; மற்ற இடங்களில் டெப்யுடி வியாபார வரி உத்தியோகஸ்தர்.
(8) 9-வது பிரிவின்படி, வரியை வாபஸ்செய்வதற்கான அதிகாரம்.	மேற்படி

நெ. 614.— **பிரிவு 5-பகிக்கு உத்தரவு**

யாதொரு வேடிக்கையின் விஷயத்தில், அந்த வேடிக்கைக்கு உள்ளே விடுவலற்காகக் கொடுக்கப்படும் தொகைகளாகவும் வேடிக்கை வரியாகவும் சொந்தக்காரர் வாங்கிய மொத்த தொகையில் 20 சதவீதத்தை வேடிக்கை வரியாகச் செலுத்தவேண்டுமென்று இதனல் கட்டளையிடப்பட்டிருக்கிறர்கள்.

நெ. 616.— **விதி 3 (b) படிக்கு**

வேடிக்கை வரி கமிஷனருக்குள்ள அதிகாரங்களைச் செலுத்த வியாபார வரி கமிஷனருக்கு இதனல் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நெ. 617.— **விதி 3 (c) படிக்கு உத்தரவு**

சகல உதவி வியாபார வரி உத்தியோகஸ்தர்களையும் (சென்னை ராஜதானிப் பட்டணமாகவோ இதர மியுனிஸிபல் பிரதேசங்களாகவோ இராத) தங்கள் தங்களுக்குரிய விசாரணை அதிகாரப் பிரதேசங்களுக்குள் மேற்படி விதிகளின் பிரகாரம் வேடிக்கை வரி உத்தியோகஸ்தருக்குள்ள அதிகாரங்களைச் செலுத்தும்படி இதனல் நியமிக்கட்டிருக்கிறர்கள்.

நெ. 711.— **பிரிவுகள் 10 (1) 11 (1) படிக்கு [கெஜட், 29—7—1939]**

(2) இந்த வரியை சொந்தக்காரரிடமிருந்து வசூலிக்க வேண்டும்.

(3) இந்த சட்டத்தின் 4, 6, 7, 13 பிரிவுகள் தவிர, கூடியவரையில் மற்ற ஷரத்துகள்படிக்கு (1)-வது உபவரியின் கீழ் விதிக்கப்சட்ட வரிகளுக்கு பிரயோகப்படும்.

நெ. 615.— பி. 11 (1) (a) படிக்கு உத்தரவு

தங்கள் தங்களுக்குரிய விசாரணையை அதிகாரப் பிரதேசங்களில் செலுத்த அடியிற்கண்ட உத்தியோகஸ்தர்களுக்கு இதனல் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருகிறர்கள் :—

(1) வேடிக்கை வரி உத்தியோகஸ்தர்கள்.

(2) போலீஸ் இலாகாவில் ஹெட் கான்ஸ்டபிளின் அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்துள்ள உத்தியோகஸ்தர்கள்.

(3) நில வருமான இலாகாவில் ரெவினியு இன்ஸ்பெக்டரின் அந்தஸ்துக்குக் குறையாக ந்தஸ்துள்ள உத்தியோகஸ்தர்கள்.

(4) மியுனிஸிபாலிடி இராத பிரதேசங்களில் கிராம பெரியதனக்காரர்கள்.

நெ. 618.— **விதி 63 படிக்கு உத்தரவு**

(i) அடியிற்கண்ட பிரதேச அதிகார சபைகளாகிய சென்னை நகர விசாரணைச் சங்கத்துக்கும் சகல மியுனிஸிபல் கௌன்ஸில்களுக்கும் தங்கள் தங்களுக்குரிய விசாரணை அதிகாரப் பிரதேசங்களிலுள்ள விஸ்தீரணத்தில் சென்னை கவர்ன்மென்டின் சார்பாக வேடிக்கை வரி வசூலிக்க இதனல் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறர்கள் ;

(ii) சம்பந்தப்பட்டபிரதேச அதிகார சபையாரால் வசூலிக்கப்படும் வரித்தொகையில் வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த 1939-ம்வருஷத்திய சென்னபட்டணத்து ஆக்டில் கண்ட 13-வது பிரிவின்படி அவர்களுக்கு கொடுக்கப்படத்தக்க தொகை எதேனுமிருந்தால் அதற்கதிகமாயுள்ள பாகத்தில் 10 சதவீதத்துக்குச் சமமான ஒரு தொகையை கமிஷனுக அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று இதனல் கட்டளையிடப்பட்டிருக்கிறர்கள்.

ஆனல், ஷை ஆக்டில் கண்ட 13-வது பிரிவின்படி யாதொரு பிரதேச அதிகார சபையாருக்குத் தொகை எதுவும் கொடுக்கப்படத்தக்கதாயிராவிட்டால், அவர்களுக்குக் கொடுக்கப்படத்தக்க கமிஷனுனது அவர்களால்வசூலிக்கப்படும் வரியில் 10 சதவீதத்துக்குச்சமமாயிருக்கவேண்டும்.

வரி செலுத்தும் விதம்

7. (1) தொகை கொடுப்பதன்மேல் உள்ளே விடப்படும் ஒவ்வொரு நபரின் விஷயத்திலும் வேடிக்கை வரி விதித்து வாங்கப்படும் ; முத்திரை போட்ட டிக்கெட் மூலமாய் உள்ளே விடப்படும் விஷயத்தில், மேற்படி வரி டிக்கெட்டின் மேலுள்ள முத்திரை மூலமாகச் செலுத்தப்பட வேண்டும் ; முத்திரைபோட்ட டிக்கெட்டின் மூலமாகவன்றி மற்றப்படி உள்ளே விடப்படும் விஷயத்தில், அந்த வரி உள்ளே விடப்படுபவர்களின் சங்கியைக் கணக்கிட்டுச் செலுத்தப்படவேண்டும்.

(2) முத்திரைபோட்ட டிக்கெட் மூலமாகவன்றி மற்றப்படி உள்ளே விடப்படும் விஷயத்தில், வேடிக்கை வரியானது சொந்தக்காரரிடமிருந்து வசூலிக்கப்படத்தக்கதாகும்.

(3) யாதொரு வேடிக்கைக்கு உள்ளே விடுவதற்காகக் கொடுக்கப்படும் தொகையானது எந்த ஸ்தாபனத்துக்காகிலும் முழுவதுமாயினும் சிறிது மட்டிலுமாயினும் சந்தாத் தொகையாகவோ சகாயத்தொகையாகவோ, ஒரு ஸீஸன் (பருவ முழுவதுக்குமான) டிக்கெட்டுக்காகவோ, தொடர்ச்சியாய் நடக்கும் வேடிக்கைகளுக்காவது குறித்த காலத்தில் நடக்கும் எந்த வேடிக்கையாவது உள்ளே விடப்படும்உரிமைக்காகவோ ஒரு மொத்த தொகையாகக் கொடுக்கப்பட்டால், அந்த மொத்தத் தொகையின் அளவை அனுசரித்து வேடிக்கை வரியைச் செலுத்தவேண்டும் ; ஆனல், யாதொரு மொத்தத் தொகையாவது டிக்கெட்டுக்காகக் கொடுக்கப்படும் யாதொரு தொகையாவது யாதொரு வேடிக்கைக்கு உள்ளே விடுவதற்கு மாத்திரமேயல்லாமல், இதர சுதந்தரங்கள், உரிமைகள் அல்லது காரியங்களுக்காகவும் கொடுக்கப்படும் தொகையாகுமென்ருகிலும், பிரஸ்தாப வரி விதித்துவாங்கப்பட்டிராத யாதொரு கால அளவில் யாதொரு வேடிக்கைக்கு உள்ளே விடுவதற்காகவும் கொடுக்கப்பட்டதென்ருகிலும் மாகாண கவர்ன்மெண்டார் அபிப்ராயப்பட்டால், எந்த வேடிக்கைகளின் விஷயத்தில் வேடிக்கை வரி செலுத்தப்படத்தக்க தாகுமோ அந்த வேடிக்கைகளுக்கு உள்ளே விடப்படும் உரிமைக்காகச் செலுத்தப்பட்டதென்று மாகாண கவர்ன்மெண்டாருக்குத் தோற்றும் தொகையின் மேல் மேற்படி வரி விதித்து வாங்கப்படும்.

வரி செலுத்துவதன் நிவாரணை செய்யப்பட்டுள்ள வேடிக்கைகள்

8. (*1*) கவர்ன்மெண்டார்—

(a) யாதொரு வேடிக்கையிலிருந்து கிடைக்கும் மொத்த தொகை முழுவதும், அந்த வேடிக்கைக்குப் பிடித்த எவையேனும் செலவுகளை மேற்படி தொகையிலிருந்து கழித்துக் கொள்ளாமல், பரோபகாரமான அல்லது மத சம்பந்தமான அல்லது தருமசம்பந்தமான காரியங்களுக்காக உபயோகிக்கப்படுகிறதென்ருவது.

(b) அந்த வேடிக்கையானது முழுவதும் கல்வி போதிக்கும் இயல்புள்ளதாயிருக்கிறதென்ருவது,

(c) அந்த வேடிக்கையானது லாபத்துக்காக நடத்தப்படாத அல்லது ஸ்தாபிக்கப்படாத யாதொரு ஸ்தாபனத்தாரால் சிறிது மட்டில் கல்வி, கலை, அல்லது விஞ்ஞான சாஸ்திர சம்பந்தமான காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்ருவது,

(d) அந்த வேடிக்கையானது லாபத்துக்காக நடத்தப்பட்டதாயும், பொதுஜன ஆரோக்கியத்தையாவது விவசாயத்தின் நன்மையையாவது சாமான்களைத் தயார் செய்யும், யாதொரு கைத்தொழிலின நன்மையையாவது விருத்திசெய்வதற்காகவென்றே ஸ்தாபிக்கப்பட்டதாயுமுள்ள யாதொரு ஸ்தாபனத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருந்து, பொதுஜன ஆரோக்கியத்தைக் குறித்து அல்லது விவசாயத்தைக் குறித்த பிரசினைகள் சம்பந்தமாக முக்கியமாய்க் கவனிக்கப்படத்தக்க வஸ்துக்களையாகிலும், எந்தக் கைத்தொழிலின் நன்மையை விருத்திசெய்யும்பொருட்டு மேற்படி ஸ்தாபனம் ஏற்பட்டிருக்கிறதோ அந்தக் கைத்தொழிலின் மூலமாய்த் தயாரிக்கப்படும் பொருள்களையாகிலும், அந்தப் பொருள்களை உற்பத்திசெய்கையில் உபயோகிக்கப்படும் சாமான்கள், யந்திரங்கள், உபகரணங்கள் அல்லது உணவுப்பொருள்களையாகிலும் காட்டிவைக்கும் பொருட்காட்சியாக மாத்திரமே யிருக்கிறதென்ருவது,

சந்தேகமறத் தெரிந்துகொண்டால், மேற்படி வேடிக்கைக்கு உள்ளே விடுவதற்காகக் கொடுக்கப்படும் தொகைகளின்மேல் வேடிக்கை வரி விதித்து வாங்கப்படமாட்டாது.

மதராஸ் கேளிக்கை வரி சட்டம்

(2) மாகாண கவர்ன்மெண்டார் எந்த வேடிக்கையையாவது அல்லது எந்த வகையை யாகிலுஞ் சேர்ந்த வேடிக்கைகளையாவது வேடிக்கை வரி செலுத்தும் பொறுப்பினின்றும் பொதுவான அல்லது விசேஷ உத்தரவுமூலமாய் நிவாரணைசெய்யலாம்.

சில விஷயங்களில் வாபஸ் செய்வது

9. யாதொரு வேடிக்கையிலிருந்து கிடைக்கும் நிகர தொகை முழுவதும் பரோப காரமான அல்லது மதசம்பந்தமான அல்லது தரும சம்பந்தமான காரியங்களுக்காக உபயோகிக்கப்படுகிறதென்றும், மேற்படி நிகர தொகையைக் கணக்கிடுகையில், கிடைத்த மொத்த தொகையில் கால் பங்குக்கு மேற்படாத தொகைதான் மேற்படி வேடிக்கை நடத்து வதற்குரிய செலவுகளுக்காகக் கழித்துக்கொள்ளப்பட்டிருக்கிறதென்றும் மாகாண கவர்ன் மெண்டார் சந்தேகமறத் தெரிந்துக்கொள்ளும் விஷயத்தில், அவர்கள் மேற்படி வேடிக்கை சம்பந்தமாய்ச் செலுத்தப்பட்ட வேடிக்கை வரித் தொகையை சொந்தக்காரருக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

வரி வசூலிக்கும் விதம்

10. வேடிக்கை வரியின் நிமித்தம் சேரவேண்டிய யாதொரு தொகையானது நில வரி பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே அதை மாகாண கவர்ன்மெண்டார் வசூலிக்கலாம்.

பார்வையிடுவது

11. (1) (a) மாகாண கவர்ன்மெண்டாரிடமிருந்து இது விஷயமாய் அதிகாரம் பெற்றி ருக்கும் யாதொரு உத்தியோகஸ்தர் இந்த ஆக்டில் கண்ட நிபந்தனை களாவது அதன்படிச் செய்யப்பட்ட எவையேனும் விதிகளாவது அனுசரிக்கப்பட்டு வருகின்றனவா என்று பார்க்கும் பொருட்டு, வேடிக்கை நடக்கும் யாதொரு இடத்தில் வேடிக்கைநடந்து கொண்டிருக்கும்போது, வேடிக்கை நடத்துமிடமாக சாதாரணமாய் உபயோகிக்கப்படும் யாதொரு இடத்தில் நியாயமான யாதொரு காலத்திலும் பிரவேசிக்கலாம்.

(b) அந்தபடி அதிகாரம் கொடுக்கப்பெற்ற ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் இந்தி யன் பினல் கோடில் கண்ட 21-வது பிரிவின் தாற்பரியப்படி ஸர்க்கார் உத்தியோகஸ்தராகக் கருதப்படுவார்.

(2) ஒவ்வொரு வேடிக்கையின் சொந்தக்காரருமாவது, வேடிக்கை நடக்கும் இடமாக சாதாரணமாய் உபயோகிக்கப்படும் யாதொரு இடத்தின் சொந்தக்காரராவது அதன் விஷய மாய் மேல் விசாரணை வகிப்பவராவது பார்வையிடும் உத்தியோகஸ்தர் (1) உட்பிரிவின்படி தமது கடமைகளைச் செய்கையில் அவருக்கு நியாயமான எல்லா உதவியையும் செய்ய வேண்டும்.

(3) எந்த நபராவது பார்வையிடும் உத்தியோகஸ்தரைப் பிரவேசிக்க வொட்டாமல் தடுத்தாலும், அவர் பிரவேசிப்பதற்குத் தடை ஏற்படுத்ினாலும் அவர், அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு சட்டத்தின்படி தாம் உள்ளாகக்கூடிய வேறே யாதொரு தண்டனையோடுகூட, **ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாத அபராத தண்டனையும்** விதிக் கப்படுவார்.

உள்ளே விடுவதற்காகத் தொகை கொடுப்பதனின்றும் நிவாரணை

12. 11-வது பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தரையாவது, இந்த ஆக்டி னுலாகிலும் அதன்படியாகிலும் வேறே யாதொரு சட்டத்தினுலா கிலும் அதன்படியாகிலும் தமக்கு விதிக்கப்பட்டுள்ள கடமையை அனுசரித்து வேடிக்கை நடக்கும் யாதொரு இடத்தில் பிரவேசிக்க வேண்டியிருக்கும் வேறே யாதொரு உத்தியோகஸ்தரையாவது மேற்படி வேடிக்கைக்கு உள்ளே விடுவதற்காகத் தொகை கொடுக் கும்படிக் கேட்கக்கூடாது.

பிரதேச அதிகார சபைகளுக்குப் பிரதி பலன் தொகை செலுத்துவது

13. (1) யாதொரு பிரதேச அதிகார சபையின் வரம்பிற்குள் நடைபெறுகிற கேளிக்கைகள் சம்பந்தமாக 4-வது பிரிவின் கீழ் ஒவ்வொரு வருஷமும் வசூலிக்கப்படுகிற மொத்தம் வரித் தொகையில் பத்து சத வீதம் இந்த ராஜ்ய அரசாங்கத்தாருக்கு வரவு வைக்கப்படவேண்டும். மீதி தொண்ணூறு சத வீதத்தை பிரதேச அதிகார சபையாருக்குக் கொடுக்க வேண்டும்.

ஆனல் மேற்படி மீதி தொகை மேற்சொன்ன பிரதேச அதிகார சபையாருக்கும் பக்கத்திலுள்ள வேறு யாதொரு பிரதேச அதிகார சபை அல்லது அதிகார சபையார்களுக்குமிடையே இந்த ராஜ்ய அரசாங்கத்தார் நிச்சயிக்கக்கூடிய விகிதாசாரங்களில் விநியோகிக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

மேலும், யாதொரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதிக்குள் நடைபெறுகிற கேளிக்கைகள் சம்பந்தமாக, மேற்சொன்ன மொத்த வரித் தொகையில் மீதி தொண்ணூறு சத வீதத்தைப் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலுக்கும், மேற்படி பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதிக்கும் செயலாற்றி வருகிற பஞ்சாயத்துக்களுக்குமிடையே இந்த ராஜ்ய அரசாங்கத்தார் நிச்சயிக்கக்கூடிய விகிதாசாரங்களில் விநியோகிக்க வேண்டும் :

அன்றியும் இந்தப் பிரிவில் சொல்லியிருப்பது எதுவும், மேற்படி வரித் தொகையின் மீதி தொண்ணூறு சத வீதம் முழுவதையும் யாதொரு பிரதேச அதிகார சபைக்காவது யாதொரு பஞ்சாயத்துக்காவது வகுத்துக் கொடுக்கிற அல்லது சந்தர்ப்பத்துக்கேற்ப மேற்படி மீதி தொகையை பிரதேச அதிகார சபைகளுக்கும் பஞ்சாயத்துக்களுக்கு மிடையே இன்ன விகிதாசாரங்களில் விநியோகிக்க வேண்டும் என்று நிச்சயிக்கிற யாதொரு உத்தரவு—

(a) ஷை உத்தரவு உண்மைக் குறித்த அல்லது சட்டப் பிரச்சினைக் குறித்த யாதொரு பிழை காரணமாக பிறப்பிக்கப்பட்ட தென்றுவது,

(b) மேற்படி உத்தரவு முக்கியமான யாதொரு உண்மைக் கருத்தில் கொள்ளாமல் அல்லது அந்த உண்மை தெரியாமல் இருக்கும்போது பிறப்பிக்கப்பட்ட தென்றுவது,

(c) மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதிலிருந்து அதை மாற்றி அமைப்பதை யுத்தமாக்கும்படிக்கான புதிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றுவது

இந்த ராஜ்ய அரசாங்கத்தார் கருதினல் அந்த உத்தரவை அவர்கள் எப்போதாகிலும் மாற்றுவதற்கு அவர்களுக்கு தடை உண்டாக்குவதாகக் கருதப்படமாட்டாது :

மேலும், அந்த கால அளவு முடிவடைந்ததிலிருந்து இரண்டு வருஷம் பூர்த்தியான பிறகு எந்த கால அளவு சம்பந்தமாகவும் அத்தகைய மாறுதல் எதையும் செய்யக்கூடாது.

(2) (1) உட்பிரிவிலே கண்ட மூன்றுவது விலக்கு நிபந்தனையின் கீழ் யாதொரு கால அளவு சம்பந்தமாக மாறுதல் ஒன்று செய்யும் போதெல்லாம், இந்த ராஜ்ய அரசாங்கத்தார் மாற்றியமைக்கப்பட்ட மேற்படி உத்தரவை அனுசரித்து யாதொரு பிரதேச அதிகார சபை அல்லது யாதொரு பஞ்சாயத்து எவ்வளவு தொகை பெற உரிமையுள்ளதாய் இருந்து இருக்குமோ அதற்குமேல் அதற்கு செலுத்தப்பட்ட யாதொரு தொகையை அதனிடமிருந்து வசூலித்துக்கொள்ளலாம்.''

குறிப்பு

இந்த 13-வது பிரிவை 1958 ஷுத்திய 35-வது மதருஸ் பஞ்சாயத்துகள்சட்டத்தின் 195-வது பிரிவால் திருத்தப்பட்டது.

மதராஸ் கேளிக்கை வரி சட்டம்

14. யாதொரு வேடிக்கையின் சொந்தக்காரரானவர்—

தண்டனை

(a) தொகை கொடுக்கப்படுவதன்மேல் வேடிக்கை நடத்தப் படும் யாதொரு இடத்திலே 6-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாக எந்த நபரையாவது உள்ளே விட்டாலும்,

(b) அவரிடமிருந்து சேரவேண்டிய வரியை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்த தவறினாலும்,

(c) இந்த ஆக்டின்படிச் சேரவேண்டிய யாதொரு வரியைச் செலுத்துவதினின்றும் மோசடியாய்த் தப்பித்துக்கொள்ள யத்தனித்தாலும்,

(d) இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளில் எதையாவது மீறி நடந்தாலும்,

அவர், யாதொரு மாஜிஸ்ட்ரேட்டால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல், அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றம் விஷயமாகவும் ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாத அபராத தண்டனை விதிக்கப்படுவதற்குள்ளாவது மல்லாமல், செலுத்தப்பட்டிருக்கவேண்டிய யாதொரு வரியைச் செலுத்துவதற்கும் உள்ளாவார்.

15. நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியானவர், இந்த ஆக்டுக்கு விரோதமாக யாதொரு குற்றம் செய்திருக்கும் அல்லது செய்திருப்பதாக நியாயமாய் அனுமானிக்கப்படும் யாதொரு நபரிடமிருந்து—

குற்றங்களை ராஜிசெய்ய அதிகாரம்

(a) மேற்படி குற்றமானது இந்த ஆக்டின்படிச் செலுத்தப் படத்தக்க யாதொரு வரியைச் செலுத்தத் தவறியதாகவோ அதைச் செலுத்துவதினின்றும் தப்பித்துக்கொள்ள எத்தனித்ததாகவோ இருக்கும் பட்சத்தில், அந்தப்படிச் செலுத்தப்படத்தக்க வரியோடுகூட, ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாத ஒரு தொகை அல்லது செலுத்தப்படத்தக்க வரியைப்போல் இரண்டு மடங்குள்ள ஒரு தொகை ஆகிய இவைகளில் எது அதிகமாய் இருக்கிறதோ அந்தத் தொகையையும்,

(b) இதர விஷயங்களில், ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாத ஒரு தொகையையும்,

மேற்படி குற்றத்துக்கு ராஜியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

16. (1) மாகாண கவர்ன்மெண்டார் வேடிக்கை வரி செலுத்தப்படும்படிச் செய்வதற்காகவும் பொதுவாய் இந்த ஆக்டில் கண்ட காரியங்களை நிறைவேற்றுவதற்காகவும் விதிகள் செய்யலாம்.

நிதிகள் செய்ய அதிகாரம்

(2) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத் தன்மைக்குப் பாதகமில்லாமலும், அவர்கள்—

(a) முத்திரைகளையாவது முத்திரைபோட்ட அல்லது உபுக்கலாயிருக்கும்படி முத்திரை அழுத்தப்பட்ட டிக்கெட்டுகளையாவது சர்பரா செய்வதற்காகவும் உபயோகிப்பதற்காகவும், அல்லது முத்திரைபோடவோ உபுக்கலாயிருக்கும்படி முத்திரை அழுத்தவோ அனுப்பப்பட்ட டிக்கெட்டுகளுக்கு முத்திரைபோடுவதற்காகவும் அல்லது உபுக்கலாயிருக்கும்படி முத்திரை அழுத்துவதற்காகவும், முத்திரைகள் உபயோகிக்கப்பட்டதும் அவைகளை அடிக்கும்படிச் செய்வதற்காகவும்,

(b) பல நபர்களை உள்ளே விடுவதற்கான டிக்கெட்டுகளை உபயோகிப்பதற்காகவும் அவைகளின்மேல் வரியைக் கணக்கிடுவதற்காகவும், வேடிக்கை நடக்கும் இடத்தின் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்துக்கு மாற்றப்படுவதன்மேலும், உட்காருமிடங்களுக்காகவாவது வேறே வசதி இடத்துக்காகவாவது தொகைகள் கொடுக்கப்படுவதன்மேலும், வரி செலுத்தப்படுவதற்காகவும்,

(c) (வெவ்வேறான தொகைகள் கொடுக்கும்போது ஒரே பாரியர் என்னும் தடை அல்லது யந்திர சாதனத்தை உபயோகிக்காமல் தடுப்பது உட்பட) பாரியர்களை அல்லது யந்திர சாதனங்களை உபயோகிப்பது விஷயமாய் மேல்விசாரணை செய்வதற்காகவும், பாரியர்கள் அல்லது யந்திர சாதனங்கள் மூலமாய் உள்ளே விடுவதைக் குறித்துச் சரியான ரெகார்டுகள் கிடைக்கும்படிச் செய்வதற்காகவும்,

(d) உள்ளே விடப்படுபவர்கள் விஷயமாய் தணிக்கை செய்வது, கணக்குகள் வைத்து வருவது, 5-வது பிரிவில் கண்ட நிபந்தனைகள் பிரயோகிக்கப்படுகிற வேடிக்கைகளின் சொந்தக்காரர்களாவது எந்த வேடிக்கைகளின் விஷயத்தில் ரிடர்ன்கள் கொடுப்பதற்காக மாகாண கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் 6-வது பிரிவின்படிச் செய்யப்படுகின்றனவோ அந்த வேடிக்கைகளின் சொந்தக்காரர்களாவது ரிடர்ன்கள் சவதரிப்பது ஆகிய இவைகளுக்காகவும்.

(e) சேதமான அல்லது கெட்டுப்போன முத்திரைகளைப் புதுப்பிப்பதற்காகவும், இந்த ஆக்டின்படியாவது அதன் பிரகாரம் செய்யப்பட்ட விதிகளின்படியாவது தொகையை வாபஸ் பண்ணும்படிக் கொடுத்துக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் விஷயமாய் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறையைக்குறித்தும்.

(f) இந்த ஆக்டின்படி உபயோகிக்கப்படும் சகல முத்திரைகளைக் குறித்தும் கணக்குகளை வைத்துவருவதற்காகவும்,

(g) வேடிக்கை வரி செலுத்துவதனின்றும் நிவாரணை செய்யும்படியாவது அதை வாபஸ் செய்யும்படியாவது இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படிச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களைக் கொடுத்துக்கொள்வதற்காகவும் அவைகளைப் பைசல் செய்வதற்காகவும்,

(h) இந்த ஆக்டின்படி வேடிக்கை வரியை வசூலிப்பதற்காகவும், அதுவிஷயத்தில் மாகாண கவர்ன்மெண்டாரின் உத்தியோகஸ்தர்கள் செலுத்தவேண்டிய அதிகாரங்களைக் குறித்தும்,

(i) யாதொரு பிரதேச அதிகார சபையாரின் விசாரணை அதிகாரப் பிரதேசத்திற்குள் இருக்கும் விஸ்தீர்ணத்திலாவது அந்த விஸ்தீர்ணத்தின் யாதொரு பாகத்திலாவது வேடிக்கை வரியை வசூலிக்க ஷை பிரதேச அதிகார சபையாருக்கு அதிகாரம் கொடுப்பதற்காகவும், அந்தப்படி வசூலிப்பது சம்பந்தமாய் ஷை பிரதேச அதிகார சபையாரின் உத்தியோகஸ்தர்கள் செலுத்தவேண்டிய அதிகாரங்களைக் குறித்தும்,

(j) வேடிக்கைகள் சம்பந்தமாக யாதொரு கடமையையாவது சட்டப்படித் தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வேறே யாதொரு கடமையையாவது செய்யவேண்டியிருக்கும் உத்தியோகஸ்தர்களை உள்ளே விடுவதற்காக ஷை வேடிக்கைகளின் சொந்தக்காரர்கள் அனுமதிச் சீட்டுகளைக் கொடுப்பதற்காகவும்,

(k) வேறே யாதொரு விஷயத்தைக்குறித்து இந்த ஆக்டில் நிபந்தனை எதுவும் இல்லாதிருந்து அல்லது போதுமான நிபந்தனை யில்லாதிருந்து, இந்த ஆக்டில் கண்ட காரியங்களை நிறைவேற்றுவதற்காக அதற்கு நிபந்தனை ஏற்படுத்துவது அவசியமென்று மாகாண கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டால் அப்படிப்பட்ட யாதொரு விஷயத்துக்காகவும்

விதிகள் செய்யலாம்.

(3) (1) உட்பிரிவின்படியாவது (2) உட்பிரிவின்படியாவது யாதொரு விதியைச் செய்கையில், மாகாண கவர்ன்மெண்டார் அந்த விதியை எவராகிலும் மீறிநடந்தால் அவருக்கு **ஐந்நூறு ரூபாய்க்கு** மேற்படாத அபராத தண்டனை விதிக்கத்தக்கதாகுமென்று நிபந்தனை ஏற்படுத்தலாம்.

(4) இந்தப் பிரிவின்படி விதிகள் செய்யக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரமானது, முதல் தடவை செலுத்தப்படும்போது தவிர மற்றக் காலங்களில், ஷை விதிகள் ஒரு மாதத்திற்குக் குறையாத காலம் முன்னதாகவே பிரசுரிக்கப்பட்ட பிறகு செய்யப்படவேண்டுமென்னும் திட்டத்திற்குட்பட்டதாகும்.

(5) இந்தப் பிரிவின்படிச் செய்யப்படும் சகல விதிகளும் ஸர்க்கார் கெஜட்டில் பிரசித்தம் செய்யப்படவேண்டும்; அந்தப்படிப் பிரசித்தம் செய்யப்படுவதன்மேல், அவை இந்த ஆக்டில் சேர்க்கப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே செலாவணியாகும்.

சில நடவடிக்கைகளுக்கு தடை

17. (1) இந்த ஆக்டின்படிச் செய்யப்பட்ட அல்லது செய்யப்படுவதாகப் பொருள்படும் யாதொரு காரியத்துக்காக, மாகாண கவர்ன்மெண்டாரின் அனுமதியை முன்னதாகவே பெற்றுக்கொள்ளாமல், மாகாண கவர்ன்மெண்டாரின் எந்த உத்தியோகஸ்தர்மீதாவது ஊழியக்காரர்மீதாவது வியாஜ்ஜியமோ பிராதோ இதர நடவடிக்கையோ தொடரலாகாது.

மதராஸ் கேளிக்கை வரி சட்டம்

(2) அப்படிப்பட்ட யாதொரு காரியம் இந்த ஆக்டினாலாவது அதன்படியாவது விதிக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுகையிலாயினும் அலுவல்களைச் செய்கையிலாயினும் நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில், அந்தக் காரியம் சம்பந்தமாக மாகாண கவர்ன்மெண்டாரின் உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரர் எவரும் யாதொரு ஸிவில் அல்லது கிரிமினல் நடவடிக்கையில் உத்தரவாதியாகமாட்டார்.

சில வியாஜ்ஜியங்களுக்கும் பிராதுகளுக்கும் காலவரையறை.

18. இந்த ஆக்டின்படிச் செய்யப்பட்ட அல்லது அதன்படிச் செய்யப்படுவதாகப் பொருள்படும் யாதொரு காரியம் விஷயமாகத் தொடரப்படும் யாதொரு வியாஜ்ஜியம், பிராது அல்லது இதர நடவடிக்கையானது எந்தக் காரியத்தைக் குறித்து பிராது செய்யப்படுகிறதோ அந்தக் காரியம் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதத்திற்குள் தொடரப்பட்டாலொழிய, அந்தக் காரியம் சம்பந்தமாய் துரைத்தனத்தாருக்கு விரோதமாக எந்த வியாஜ்ஜியமும் தொடரவுங்கூடாது. மாகாண கவர்ன்மெண்டாரின் யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரர்மீது எந்த வியாஜ்ஜியம், பிராது அல்லது இதர நடவடிக்கையும் தொடரவும் கூடாது.

யாதொரு பிரதேச அதிகார சபையைச் சேர்ந்தவர்களாய், வரி வசூலிக்கும் உத்தியோகஸ்தர்கள், ஊழியக்காரர் ஆகிய இவர்கள் மீது நடவடிக்கை நடத்துவது முதலியவை

19. மாகாண கவர்ன்மெண்டார் சார்பில் வேடிக்கை வரியை வசூலிக்க இந்த ஆக்டின்படி எந்தப் பிரதேச அதிகார சபைக்காகிலும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தால், 17-வது, 18-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகள் மாகாண கவர்ன்மெண்டாரின் உத்தியோகஸ்தர்கள் சம்பந்தமாகவும் ஊழியக்காரர்கள் சம்பந்தமாகவும் என்ன விதமாகப் பிரயோகப்படுகின்றனவோ அவ்விதமாகவே மேற்படி பிரதேச அதிகார சபையின் உத்தியோகஸ்தர்கள் சப்பந்தமாகவும் ஊழியக்காரர்கள் சம்பந்தமாகவும் பிரயோகப்படும்.

மாகாண கவர்ன்மென்டாருக்குள்ள சில அதிகாரங்களைப் பிரித்துக் கொடுப்பது

20. (1) மாகாண கவர்ன்மெண்டார், ஸர்க்கார் கெஜட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய், 1-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்படியும் 16-வது பிரிவின்படியும் இந்தப் பிரிவின்படியும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைத் தவிர, இந்த ஆக்டின்படி அவர்களுக்குள்ள மற்றெல்லா அதிகாரங்களையுமாவது அவைகளில் எதையாவது மாகாண கவர்ன்மென்டாருக்குக் கீழ்ப்பட்டுள்ள யாதொரு நபருக்காகிலும் அதிகார சபைக்காகிலும் பிரித்துக் கொடுக்கலாம்; அம்மாதிரியாகவே அவர்கள் மேலே கண்டபடிப் பிரித்துக் கொடுக்கப்பட்ட எந்த அதிகாரிகளையாகிலும் திரும்ப வாங்கிக்கொள்ளலாம்.

(2) (1) உட்பிரிவின்படிப் பிரித்துக் கொடுக்கப்படும் எந்த அதிகாரங்களையாகிலும் செலுத்துவதானது மாகாண கவர்ன்மெண்டார் விதிக்கும் நிர்ப்பந்தங்களும் வரையறைகளும் திட்டங்களும் எவையேனுமிருந்தால் அவைகளுக்குட்பட்டதாகும்; மேலும், அது அவர்களுடைய மேல் விசாரணைக்கும் புனர் விசாரணைக்கும்கூட உட்பட்டதாகும்.

வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த 1939-ம் ஷூத்திய 10-வது சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட—விதிகளும் விளம்பரங்களும்

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ், 1939-ம் ஷூ ஜுலைமீ 15உ
(1774-ம் நெ. கவர்ன்மென்ட் உத்தரவு)

நெ. 612—16-வது பிரிவின்படிக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, செய்யப்பட்ட விதிகள்.

I-ம் பாகம்—பீடிகை

1. இந்த விதிகளை " வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த 1939-ம் ஷூத்திய சென்னப்பட்டணத்து விதிகள் " என்று சொல்லலாம்.

2. இதை 1939-ம்ஷூ ஆகஸ்ட்மீ முதல் தேதியன்று செலாவணியாகத் தொடங்கும்.

3. இந்த விதிகளிலே, சங்கதியினுலாவது, சந்தர்ப்பத்தினுலாவது விரோதமொன்றும் இல்லாவிட்டால்,—

(a) "ஷை ஆக்ட்" என்பது வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த 1939-ம் ஆண்டு சென்னப்பட்டணத்து ஆக்ட் என்று அர்த்தமாகும் ;

(b) "வேடிக்கை வரி கமிஷனர்" என்பது இந்த விதிகளின்படி வேடிக்கை வரி கமிஷன ருக்குள்ள அதிகாரங்களைச் செலுத்த கவர்ன்மெண்டாரிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கும் ரெவினியு போர்ட் மெம்பர் அல்லது இதர உத்தியோகஸ்தர் என்று அர்த்தமாகும்;

(c) "வேடிக்கை வரி உத்தியோகஸ்தர்" என்பது இந்த விதிகளின்படி யாதொரு வேடிக்கை வரி உத்தியோகஸ்தருக்குள்ள அதிகாரங்களைச் செலுத்தும்படி பெயர் குறிப்பிட்டோ உத்தியோக முறைமையிலோ கவர்ன்மென்டாரால் நியமிக்கப்படும் யாதொரு உத்தியோகஸ்தர் என்றும், அப்படிப்பட்ட எந்த உத்தியோகஸ்தராவது நியமிக்கப்பட்டிராத பட்சத்திலே,—

(i) பிரஸ்தாப வேடிக்கை நடத்தப்படும் இடத்தில் விசாரணை அதிகாரமுடைய தாலூகா தாசில்தாரர் அல்லது உப தாலூகா டெப்டி தாசில்தாரர் என்றும்,

(ii) கவர்மென்டார் சார்பாக மேற்படி வரியை வசூலாக ஒரு பிரதேச அதிகார சபையாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தால், சந்தர்பத்துக்கேற்றபடி சென்னை கார்ப்பொ ரேஷன் என்னும் நகர் விசாரணைச் சங்கத்தின் ரெவினியு ஆபிஸர் என்றும், மியூனிஸிபாலிடியின் நிர்வாக அதிகாரி என்றும், லோகல் போர்டின் ப்ரெஸிடென்ட் என்றும்

அர்த்தமாகும் .

ஆனல், யாதொரு ரெவினியு ஆபிஸருள்ள மியுனிஸிபாலிடியின் விஷயத்திலே, மேற்படி மியுனிஸிபாலிடியின் நிர்வாக அதிகாரி இந்த விதிகளின்படித் தமக்குள்ள அதிகாரங்களை மேற் படி உத்தியோகஸ்தருக்குப் பிரித்துக் கொடுக்கலாம் ;

(d) "நமூனு" என்பது இந்த விதிகளுடன் சேர்த்துள்ள யாதொரு நமூனு என்று அர்த்தமாகும் ;

(e) "கவர்ன்மெண்டார்" என்பது மாகாண கவர்ன்மென்டார் என்று அர்த்தமாகும் ;

(f) "ஸர்க்கார் கஜானு" என்பது கவர்ன்மென்டாரைச் சேர்ந்த யாதொரு கஜானு அல்லது கீழ்க் கஜானு என்று அர்த்தமாகும் ;

(g) "ஸீஸன் டிக்கெட்" என்பது எந்த டிக்கெட்டைப் பெற்றிருந்தால் அதில் கண்டி ருக்கும் ஒரு குறிப்பிட்ட கால அளவில் தொடர்ச்சியாய் நடக்கும் வேடிக்கைகளுக்குப் போக லாமோ அப்படிப்பட்ட யாதொரு டிக்கெட் என்று அர்த்தமாகும்.

4 இந்த விதிகளிலே, "வேடிக்கைக்கு உள்ளே விடுவது" என்பதிலும் அதற்கு இனமான சகல சொற்றொடர்களிலும், வேடிக்கை நடக்கும் யாதொரு இடத்தில் உள்ளே விடப்பட்ட யாதொரு நபர் தொகை செலுத்துவதன்மேல் அவரை

(a) பிற்பட்டு அதன் மற்றொரு பாகத்துக்கும்,

(b) வேடிக்கை நடக்கும் இடத்திலுள்ள யாதொரு உட்காருமிடம் அல்லது இதர வசதியிடத்துக்கும்

போகவிடுவது என்பதும் அடங்கும்.

II-ம் பாகம்—முத்திரைகளின் மூலமாய் வரி செலுத்துவது

5. இந்த பாகத்திலுள்ள விதிகள் எந்த வேடிக்கைகளுக்கு மேற்படி ஆக்டின் 6-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கண்ட (உ) பகுதியில் சொல்லியிருப்பதைப்போன்ற டிக்கெட்டு களைக்கொண்டு உள்ளே விடவேண்டியதாயிருக்கிறதோ அப்படிப்பட்ட சகல வேடிக்கைகளுக் கும் பிரயோகப்படும்.

6. இந்த பாகத்திலுள்ள விதிகளில் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி. எந்த நபராகிலும் மேற்படி ஆக்டின் 6-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கண்ட (உ) பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் யாதொரு முத்திரையில் எவ்விதமாகவாவது அடையாளம் போடவும் கூடாது, போட செய்யவுங்கூடாது, அடையாளம் போடவிடவுங்கூடாது.

7. யாதொரு வேடிக்கைக்கு உள்ளேபோக ஒரு நபருக்கு அனுமதி கொடுக்கும் டிக்கெட் டாயுள்ள யாதொரு டிக்கெட்டில் உள்ளே விடுவதற்காக கட்டணமும் இதில் பின்னல் சொல்லப்

பட்டுள்ள ஸ்டேட்மென்டும் நன்ருய்த் தெரியும்படி அச்சிடப்பட்டாவது முத்திரையிடப்பட்டாவது வேறேவிதமாய் அடையாளமிட்டாவது இருந்தாலொழிய, சொந்தக்காரரானவர் அந்த டிக்கெட்டைக் கொடுக்கவுங்கூடாது, கொடுக்கும்படி செய்யவும் கூடாது, கொடுக்க விடவுங்கூடாது.

இந்த விதியின் காரியத்துக்காக, "உள்ளே விடுவதற்கான கட்டணம்" என்பது வேடிக்கை வரி நீங்கலாக உள்ள கட்டணம் என்று அர்த்தமாகும்; மேலும், அப்படிப்பட்ட ஒவ்வொரு டிக்கெட்டின்மேலும் குறிப்பிடப்பட்டிருக்கும் கட்டணத் தொகையில் வேடிக்கை வரி அடங்கவில்லை என்று அந்த டிக்கெட்டின்மேல் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும்.

8. சொந்தக்காரரானவர், மேற்படி ஆக்டின் 6-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கண்ட (a) பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் யாதொரு முத்திரையை ஒரு வேடிக்கைக்கு உள்ளேபோக அனுமதி கொடுப்பதற்காக அளிக்கப்படும் யாதொரு டிக்கெட்டில் பத்திரமாய்ப் போட்டாலல்லாமல் மற்றப்படி யாதொரு நபருக்குக் கொடுக்கவுங்கூடாது கொடுக்கச் செய்யவுங்கூடாது, கொடுக்க விடவுங்கூடாது.

9. சொந்தக்காரரானவர், யாதொரு வேடிக்கைக்கு உள்ளே விடுவதற்காக எந்தத் தொகையாகிலும் செலுத்தப்படுவதன்மேல், அந்தப் படித்தொகை செலுத்தியது விஷயமாய் விதிக்கப்படத்தக்க வேடிக்கை வரியின் சரியான தொகையைக் காட்டும் முத்திரை போடப்பட்டுள்ள டிக்கெட்டாயிராமல், மேற்படி வேடிக்கைக்கு உள்ளேபோக அனுமதி கொடுப்பதாயுள்ள வேறே எந்த டிக்கெட்டையாயினும் அந்தப்படித் தொகை செலுத்தியதற்காகக் கொடுக்கவுங் கூடாது, கொடுக்கும்படிச் செய்யவுங்கூடாது, கொடுக்கவிடவுங்கூடாது.

10. (1) இந்த பாகத்திலுள்ள விதிகளில் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, யாதொரு டிக்கெட்டில் போடப்பட்டு, அது சம்பந்தமாய்ச் செலுத்தப்படத்தக்க சரியான வேடிக்கை வரியைக் காட்டும் முத்திரையானது அந்தப்படிப் போடப்பட்டுள்ள டிக்கெட் கொடுக்கப்படுகிறவரையில், அப்படிப்பட்ட முத்திரை எதையும் அடிக்கவுங்கூடாது, வெட்டவுங்கூடாது கிழிக்கவுங்கூடாது, குறைக்கவுங்கூடாது; மேலும் சொந்தக்காரரானவர் அடிக்கப்பட்டிருக்கும், வெட்டப்பட்டிருக்கும், கிழிக்கப்பட்டிருக்கும் அல்லது குறைக்கப்பட்டிருக்கும் யாதொரு முத்திரை போடப்பட்டுள்ள டிக்கெட் பெற்றிருப்பது காரணமாக எந்த நபராகிலும் மேற்படி வேடிக்கைக்கு உள்ளே போக அனுமதிக்கவுங்கூடாது, அனுமதிக்கச் செய்யவுங்கூடாது, அனுமதிக்க விடவுங்கூடாது.

(2) யாதொரு வேடிக்கைக்கு உள்ளே போக அனுமதிப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருந்து, யாதொரு முத்திரை போடப்பட்டுள்ள ஒரு டிக்கெட்டைப் பெற்றிருப்பவர் எவரும் மேற்படி முத்திரையை அடிக்கவுங்கூடாது, வெட்டவுங்கூடாது, கிழிக்கவுங்கூடாது குறைக்கவுங்கூடாது அடிக்கவோ வெட்டவோ கிழிக்கவோ குறைக்கவோ செய்யவுங்கூடாது அந்தப்படி செய்யவிடவுங்கூடாது.

(3) சொந்தக்காரரானவர் மேற்படி வேடிக்கைக்கு உள்ளே செல்லப்போகும் சகல நபர்களுடைய டிக்கெட்டுகளையும் வசூலிக்கும்படிச் செய்யவேண்டும்; மேலும், முத்திரையிடப்பட்ட டிக்கெட்டைக்கொண்டு உள்ளே செல்லப் போகும் ஒவ்வொரு நபரும் வேடிக்கைக்கு உள்ளே போவதற்கு அடுத்து முந்தி டிக்கெட்டுகளை வசூலிப்பவரிடத்தில் மேற்படி டிக்கெட்டை அதில் போடப்பட்டுள்ள முத்திரையுடன் ஒப்புவிக்கவேண்டும்.

(4) யாதொரு டிக்கெட் அந்தப்படி வசூலிக்கப்படும்போது, சொந்தக்காரரானவர், மேற்படி முத்திரைக்குக் குறுக்கே அந்த டிக்கெட்டைஇரண்டு பாகங்களாகக் கிழிப்பது மூலமாக அந்த டிக்கெட்டின்மேலுள்ள முத்திரையை உடனே அழிக்கும்படிச் செய்யவேண்டும் அந்த டிக்கெட்டின் ஒரு பாகத்தை மேற்படி வேடிக்கைக்கு உள்ளே செல்லப்போகும் நபரிடத்தில் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும்; மற்ற பாகத்தைச் சொந்தக்காரர் தம்மிடத்தில் நிறுத்திக் கொண்டு, மேற்படி வேடிக்கை முடிந்தபின் வரும் நடுப்பகல் வரையில் வைத்திருக்கவேண்டும். அந்தப்படி நிறுத்திவைத்துக்கொண்ட பாகத்தை அதற்குப் பிறகு அழித்துவிடவேண்டும்.

11. (1) ஒருவருக்கு மேற்பட்டு மேற்படி வேடிக்கைக்கு உள்ளே போக அனுமதிப்பதாகப் பொருள்படும் அல்லது அனுமதிக்க உத்தேசிக்கப்படும் யாதொரு டிக்கட் கொடுக்கப்பட்டால், அந்தப்படி உள்ளே போக அனுமதிக்கப் படுவர்களின் சங்கியையும் மேற்படி டிக்கெட்டுக்காக விதிக்கப்படும் மொத்த கட்டணத்தையும் அந்த டிக்கெட்டில் தெளிவாய்க் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்; மேலும் சொந்தக்காரரானவர் அந்த டிக்கெட்டில் எத்தனை

நபர்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறார்களோ அதற்கு மேற்பட்ட நபர்களை அந்த டிக்கெட் காரணமாக மேற்படி வேடிக்கைக்கு உள்ளே விடவுங்கூடாது; உள்ளே விடச்செய்யவுங்கூடாது, உள்ளே விட அனுமதிக்கவுங்கூடாது.

(2) அப்படிப்பட்ட யாதொரு விஷயத்தில் விதிக்கப்படத்தக்க வேடிக்கை வரியைக் கணக்கிடும் காரியத்துக்காக, மேற்படி டிக்கெட்டின்படி உள்ளே போக எத்தனை பேர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்களோ அத்தனை பேரை உள்ளே விடுவதற்காகத் தொகைகள் செலுத்தப்பட்டிருப்பதாகக் கருதப்படும்; மேலும் இந்தப்படிச் செலுத்தப்பட்ட தொகைகளில் ஒவ்வொன்றும் மேற்படி டிக்கெட்டுக்காக விதிக்கப்பட்ட மொத்த கட்டணத்தை மேற்சொன்னபடி அனுமதிக்கப்பட்டுள்ள நபர்களின் மொத்த சங்கியையால் வகுத்தால் கிடைக்கும் ஈவுத் தொகைக்குச் சமமாயிருப்பதாகக் கருதப்படும்.

இந்த விதியின் காரியத்துக்காக, மூன்று வயதுக்கு மேற்பட்டும் பன்னிரண்டு வயதுக்குக்குறைவாயுமுள்ள இரண்டு சிறுவர்களை ஒரு நபருக்குச் சமமாயிருப்பதாகக் கருதவேண்டும்.

12. (1) யாதொரு ஸீஸன் டிக்கெட்டுக்காகவாவது ஏதேனும் ஒரு கால அளவில் நடக்கும் யாதொரு வேடிக்கைக்கு உள்ளே போக அனுமதி கொடுப்பதற்கான யாதொரு டிக்கெட்டுக்காகவாவது கொடுக்கப்படும் ஒரு மொத்த தொகையின்மேல் வேடிக்கைவரி கணக்கிடப்பட்டால், அந்த டிக்கெட்டைக் கொடுப்பதற்கு முன், அது யாருக்குக் கொடுக்கப்படப்போகிறதோ அவருடைய பெயரை அதில் குறிப்பிடவேண்டும்.

(2) அப்படிப்பட்ட யாதொரு ஸீஸன் டிக்கெட்டாவது இதர டிக்கெட்டாவது கொடுக்கப்படுவதற்கு முன், அதன்மேல் விதிக்கப்படத்தக்க சரியான வேடிக்கை வரித்தொகையைக் காட்டும் ஒரு முத்திரையை அதில் போடவேண்டும்; மேலும், சொந்தக்காரரானவர் மேற்படி டிக்கெட் கொடுக்கப்பட்ட தேதியை அந்த முத்திரையின் முகப்பில் இங்கியால் எழுதுவது மூலமாக அந்த முத்திரையை அடிக்கவேண்டும் அல்லது அடிக்கும்படிச் செய்யவேண்டும்; அந்தப்படி அடிக்கப்பட்ட யாதொரு முத்திரையை, மேற்படி வேடிக்கைக்கு உள்ளே விடப்படும் காலத்தில் 10-வது விதியைச் சேர்ந்த (4) உபவிதியில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விதமாக மறுபடியும் அடிக்கும்படி உத்தரவு செய்யக்கூடாது.

13. தொகை செலுத்தாமல் உள்ளே போக யாதொரு நபருக்குப் பாத்தியதையுண்டாக்குவதாயிருந்து "இலவசம்" என்று தெளிவாய்க் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பாஸை (அனுமதிச் சீட்டை) அவர் பெற்றிருந்தாலொழிய, சொந்தக்காரரானவர் சரியான வரித் தொகைக்குரிய முத்திரை போடப்பட்டுள்ள யாதொரு டிக்கெட்டில்லாமல் மேற்படி நபரை அந்த வேடிக்கைக்குள்ளே விடவுங்கூடாது, உள்ளே விடும்படிச் செய்யவுங்கூடாது, உள்ளே அனுமதிக்கவுங் கூடாது.

14. யாதொரு சொந்தக்காரர் பிரஸ்தாப வேடிக்கை நடக்கும் இடத்தையும் தேதியையும் காலத்தையும் அது இன்ன விதமானதென்பதையும் குறித்து வேடிக்கை வரி உத்தியோகஸ்தருக்கும், எந்தப் பிரதேசங்களில் கவர்ன்மெண்டார் சார்பாக வேடிக்கை வரி வசூலிக்க சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபையாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கவில்லையோ அந்தப் பிரதேசங்களில் கிராமப் பெரியதனக்காரருக்கும், பிரஸ்தாப இடத்தில் விசாரணையதிகாரமுடைய போலீஸ் ஸ்டேஷனின் விசாரணை வகிக்கும் உத்தியோகஸ்தருக்கு கூட மூன்று தினங்களுக்குக் குறையாமல் முன்னதாகவே நோடிஸ் கொடுக்கவேண்டும்.

15. சொந்தக்காரரானவர் வாங்கி உபயோகிக்கப்பட்ட வேடிக்கை வரி முத்திரைகளைக்குறித்த ரெஜிஸ்டர் ஒன்றை I-ம் நமூனாப்படியும், விற்பனை செய்யப்பட்ட டிக்கெட்டுகளைக் குறித்த ரெஜிஸ்டர் ஒன்றை II-ம் நமூனாப்படியும் வைத்துவரவேண்டும்.

16. சொந்தக்காரரானவர் நியாயமான எல்லாக் காலங்களிலும், யாதொரு வேடிக்கை சம்பந்தமாய் மேற்படி சொந்தக்காரரால் வைத்துவரப்படும் சகல புஸ்தகங்களையும் ரெகார்டுகளையும் அந்தந்த காலத்தில் அவருடைய சுவாதீனத்தில் இருக்கும் சகல டிக்கெட்டுகளையும் டிக்கெட்டுகளின் சகல பாகங்களையும் சகல முத்திரைகளையும் வேடிக்கை வரி உத்தியோகஸ்தர் கேட்பதன்மேல் அந்த உத்தியோகஸ்தர்முன் ஹாஜர்படுத்தவேண்டும், அல்லது ஹாஜர்ப்படுத்துவிக்கவேண்டும்; மேலும் அவர், அவைகளைப் பார்வையிட்டு ஒரு குறிப்பு எழுதிக் கொள்ளவாவது பரிசீலனை செய்வதற்காகவாகிலும் விசாரணை செய்வதற்காகவாகிலும் அவைகளை எடுத்து கொண்டுபோகவாவது மேற்படி உத்தியோகஸ்தருக்கு அனுமதி கொடுக்கவேண்டும்.

மதராஸ் கேளிக்கை வரி சட்டத்தின் விதிகள்

17. யாதொரு வேடிக்கைக்கு உள்ளே விடப்பட்டிருக்கும் யாதொரு நபர் எந்த டிக்கெட்டைப் பெற்றிருப்பது காரணமாக அவர் உள்ளே விடப்பட்டாரோ அந்த டிக்கெட்டில் இந்தப் பாகத்தில் கண்ட விதிகளின் பிரகாரம் அடித்துவிடப்பட்ட முத்திரையடங்கிய பகுதியை யாவது எந்தப் பாஸ் பெற்றிருப்பது காரணமாக தொகை செலுத்தாமல் உள்ளே விடப்படுவ தற்கு அவருக்கு பாத்தியதையுண்டாயிற்ரோ அந்தப் பாஸையாவது இந்த ஆக்டில் கண்ட 11-வது பிரிவின்படி வேடிக்கை நடக்கும் யாதொரு இடத்தில் பிரவேசிக்க அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தர் மேற்படி வேடிக்கை நடக்கும்போதாகிலும் அது நடப்ப தற்கு அடுத்து முந்தியாகிலும் பிந்தியாகிலும் கேட்பதன்மேல், அந்த உத்தியோகஸ்தர்முன் ஹாஜர்ப்படுத்தவேண்டும்.

16. (1) யாதொரு சொந்தக்காரர் பிரதேச அதிகார சபைகள் வேடிக்கைக்கு வரி விதிப்பதைக்குறித்த 1926-ம் ஹூத்திய சென்னப்பட்டணத்து ஆக்டில் கண்ட நிபந்தனைகளை அனுசரித்து யாதொரு பிரதேச அதிகார சபையாரிடமிருந்து ஏற்கெனவே பெற்றுக்கொள்ளப் பட்டிருந்து, தம் வசத்தில் உபயோகிக்கப்படாமல் இருக்கும் எந்த முத்திரைகளையாகிலும் மேற்படி ஆக்டின் 6-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கண்ட (a) பகுதியின் காரியத்துக் காக உபயோகிக்கக்கூடாது.

(2) யாதொரு சொந்தக்காரரானவர் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபையாரிட மிருந்து தாம் ஏற்கெனவே வாங்கியிருப்பவைகளாய், 1939ம்ஹூ ஆகஸ்டுமீ 7உயன்று இன்னும் உபயோகிக்கப்படாமலிருக்கும் எந்த முத்திரைகளையாகிலும் மேற்படி தேதிக்குமுன் அவர்க ளிடம் திருப்பிக் கொடுத்துவிடலாம். அதன்மேல், மேற்படி பிரதேச அதிகார சபையார் அந்த முத்திரைகளின்மேல் கண்டிருக்கும் மதிப்புத் தொகையை, அதிலிருந்து எதையும் கழித்துக் கொள்ளாமல், மேற்படி சொந்தக்காரருக்கு வாபஸ் செய்யவேண்டும்.

19. யாதொரு பிரதேச அதிகார சபையார், 18-வதுவிதியின்படி யாதொரு சொந்தக் காரரால் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ள முத்திரைகளையும், பிரதேச அதிகாரசபைகள் வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக்குறித்து 1926-ம் ஹூத்திய சென்னப்பட்டணத்து ஆக்டின் படி விற்பனைக்காகத் தங்கள் ஆபீஸிலேயே கையிருப்பில் வைத்துவைக்கப்பட்டு, 1939-ம்ஹூ ஆகஸ்ட்மீ 15உவரையில் இன்னும் விற்பனை செய்யப்படாமலிருக்கும் முத்திரைகளையும் அந்தத் தேதிக்கு முன் அதிக சமீபத்திலுள்ள கீழ்க் கஜானுவில் திருப்பிக் கொடுத்துவிடலாம். அதன் மேல், அந்த முத்திரைகளை ரத்துசெய்து விலை வீதாசாரப்படி சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகளுக்கு வாபஸ் செய்யப்படும்.

III-ம் பாகம்—ரிடர்ன்களை அனுசரித்து மொத்த வரவின்மேல் குறிப்பிட்ட ஒரு சதவீதப்படி வரியைச் செலுத்துவது.

20. எந்தச் சொந்தக்காரராகிலும் மேற்படி ஆக்டின் 5-வது பிரிவைச் சேர்ந்த (b) பகுதி யிலாவது 6-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவிலாவது நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விதமாக மேற்படி வரியைச் செலுத்துவதற்காக ஒரு ஏற்பாடு செய்துகொள்ள விரும்பினுல், அவர் பிரஸ்தாப வேடிக்கை நடக்கும் இடத்தையும், தேதியையும், காலத்தையும் அது இன்னவித மானதென்பதையும் குறித்த விவரங்களையும் அதற்கு உள்ளே விடுவதற்காக செலுத்த வேண்டிய கட்டண வீதங்களையுங்கூடக் குறிப்பிட்டு மேற்படி வேடிக்கை நடப்பதற்கு மூன்று தினங்களுக்குக் குறையாமல் முன்னதாக வேடிக்கை வரி உத்தியோகஸ்தருக்கு III-ம் நமூனுப்படி ஒரு விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும். வேடிக்கை வரி உத்தியோகஸ்தர் எழுதியுள்ள ஒரு உத்தரவு மூலமாய் சொந்தக்காரரை அடியிற்கண்டபடிச் செய்வதினின்றும் நிவாரணை செய்திருக்கிற விஷயங்களிலன்றி மற்ற விஷயங்களில், மேற்படி விண்ணப்பத்தோடு கூட, கொடுக்க உத்தேசிக்கப்படும் சகல வகுப்புகளையும் சேர்ந்த டிக்கெட்டுகளையும் அனுப்ப வேண்டும். ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த டிக்கெட்டுகளை வெவ்வேறு நிறத்தில் அச்சிட்டு; அவைகளுக்குப் பிரத்தியேகமாய் வரிசைக் கிரமமான நம்பர்கள் கொடுக்கவேண்டும். வேடிக்கை வரி உத்தியோகஸ்தர் மேற்படி விண்ணப்பத்தைக் கொடுத்துக் கொள்வதில் நேரிட் டிருக்கும் ஆலசியத்தைப் போதுமான காரணங்களுக்காக மன்னிக்கலாம்; ஆனுல், அது மேற்படி வேடிக்கை தொடங்குவதற்குக் குறைந்தது 24-மணி நேரம் முன்னதாகக் கொடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

21. வேடிக்கை வரி உத்தியோகஸ்தரானவர் சொந்தக்காரர் எவ்வளவு தொகை ஜாமீனாகக் கொடுக்கவேண்டுமென்பதையும் அந்த ஜாமீனை என்ன விதமாகக் கொடுக்கவேண்டுமென்பதையும் அதை என்ன காலத்துக்குள் கொடுக்கவேண்டுமென்பதையும் நிஷ்கரிஷை செய்யவேண்டும். மேற்படி ஜாமீன் கொடுக்கப்படும்போது, வேடிக்கைவரி உத்தியோகஸ்தர் IV-ம் நமூனாப்படியுள்ள அனுமதிச் சீட்டொன்றைச் சொந்தக்காரருக்குக் கொடுக்கவேண்டும்.

22. யாதொரு அனுமதிச்சீட்டு கொடுக்கப்படும்போது, வேடிக்கை வரி உத்தியோகஸ்தரானவர், சொந்தக்காரரால் அவருடைய விண்ணப்பத்தோடுகூட அனுப்பப்பட்ட சகல டிக்கெட்டுகளுக்கும் தம்முடைய ஆபீஸ் முத்திரையைப் போட்டு, அவைகளைச் சொந்தக்காரரிடம் திருப்பிக் கொடுக்கவேண்டும். சொந்தக்காரரால் பிற்பட்டுக் கொடுக்கப்படும் டிக்கெட்டுகளின் விஷயமாகவும் இதே நடவடிக்கை முறையை அனுசரிக்க வேண்டும்; இதுகாரியத்துக்காக, வேடிக்கைவரி உத்தியோகஸ்தர் மேற்படி டிக்கெட்டுகளைத் தாம் நிஷ்கரிஷை செய்யக்கூடிய காலம் விட்டு விட்டுத் தமக்கு அனுப்பும்படிச் சொந்தக்காரருக்கு உத்தரவு செய்யலாம்.

23. மேற்படி டிக்கெட்டுகளுக்கு வரிசைக் கிரமமாய் நம்பர் போடவேண்டும். மேலும், அவைகள் தொடர்ச்சியாய் நடக்கும் வேடிக்கைகள் முடிகிற வரையில் ஒரு வேடிக்கையிலிருந்து மற்றொன்றுக்குத் தொடர்ந்து போய்க் கொண்டிருக்கவேண்டும்.

24. கீழ்ப்பட்ட ஒரு வகுப்பிலிருந்து உயர்ந்த ஒரு வகுப்புக்கு விடுவது விஷயத்தில் செலுத்தப்பட்ட கட்டண வித்தியாசத்துக்குரிய டிக்கட்டுகளுக்குங்கூட 23-வது விதியில் சொல்லியிருக்கிற விதமாக வரிசைக்கிரமமாய் நம்பர் போடவேண்டும். இந்த டிக்கெட்டுகளை II-ம் நமூனாப்படியுள்ள டிக்கெட்டுகளைக்குறித்த ரெஜிஸ்டரிலும் IV-ம் நமூனாப்படியுள்ள அனுமதிச்சீட்டில் குறிப்பிட்டிருக்கும் டிக்கெட்டுகளைக்குறித்த ரிடர்னிலும் பிரத்தியேகமாய் காட்டவேண்டும்.

25. 21-வது விதியின்படிக் கொடுக்கப்படும் ஜாமீன் முழுவதையும் மேற்படி அனுமதிச் சீட்டு செலாவணியாய்க் கொண்டிருக்கிறவரையில் அப்படியே வைத்திருக்கவேண்டும்; வரித் தொகைக்குறிய ரசீதோடுகூட ரிடர்ன்களைச் கிரமமான தேதியில் அனுப்பாவிட்டாலும், அந்த ரிடர்ன்கள் தவறானவையென்று தெரியவந்தாலும், மேற்படி ஜாமீன் பறிமுதல் செய்யப்படுவதற்குள்ளாகும். சேரவேண்டிய வரியைச் செலுத்தத் தவறிப்போகும் பட்சத்தில், மேற்படி ஜாமீன் முன்னதாகத் தெரிவிக்கப்படாமலேயே அந்த வரித் தொகைக்காக எப்போதாகிலும் சரிக்கட்டப்படுவதற்கும் உள்ளாகும்.

26. (1) சொந்தக்காரரானவர் IV-ம் நமூனாப்படியுள்ள அனுமதிச் சீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிற விதமாக, உண்மையானவைகளும் சரியானவைகளுமான கணக்குகளை வைத்துவரவேண்டியதுமல்லாமல், அந்த விதமாக ரிடர்ன்களை அனுப்பவும் வேண்டும்; மேலும் அவர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல திட்டங்களின்படியும் அவைகளை அனுசரித்துங்கூட நடக்கவேண்டும்.

(2) சொந்தக்காரரானவர் வேடிக்கை நடக்குமிடம் சென்னை நகரத்துக்குள்ளிருந்தால் சென்னை நகர் விசாரணைச் சங்கத்தாரின் கஜானாவிலும், அந்த இடம் வேறெங்காவது இருந்தால் ஒரு ஸர்க்கார் கஜானாவிலும் சேரவேண்டிய வரித்தொகையைச் செலுத்தவேண்டும். மேற்படி வரிக்குச் சம்பந்தப்பட்ட ரிடர்னோடுகூடஅவர் கஜானாரசீதைச் சேர்த்தனுப்பவேண்டும்.

27. பிரஸ்தாப வேடிக்கைக்கு உள்ளே போக ஒரு நபருக்கு அனுமதி கொடுக்கும் டிக்கெட்டாயுள்ள யாதொரு டிக்கெட்டில் உள்ளே விடுவதற்கான கட்டணமும் இதில் பின்னால் சொல்லப்பட்டிருக்கும் ஸ்டேட்மெண்டும் நன்றாய்த் தெரியும்படி அச்சிடப்பட்டாவது முத்திரையிடப்பட்டாவது வேறே விதமாய் அடையாளமிடப்பட்டாவது இருந்தாலன்றி மற்றபடியும், மேற்படி டிக்கெட்டில் வேடிக்கை வரி உத்தியோகஸ்தரின் ஆபீஸ் முத்திரை போடவேண்டியிருந்தால் அதில் அந்த முத்திரை போடப்பட்டிருந்தாலன்றி மற்றப்படியும், சொந்தக்காரர் அந்த டிக்கெட்டைக் கொடுக்கவுங்கூடாது, கொடுக்கும்படி செய்யவுங்கூடாது, கொடுக்க விடவுங்கூடாது.

இந்த விதியின் காரியத்துக்காக "உள்ளே விடுவதற்கான கட்டணம்" என்பதில் உள்ளே விடுவதற்காகச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையின் மேல் சேரவேண்டிய வரி என்பதும் அடங்கும்; மேலும், அப்படிப்பட்ட ஒவ்வொரு டிக்கெட்டின்மேலும், அதன்மேல் குறிப்பிட்டுள்ள கட்டணத்தில் வரியும் அடங்கியிருக்கிறதென்று குறிப்பிட்டிருக்கவேண்டும்.

மதராஸ் கேளிக்கை வரி சட்டத்தின் விதிகள்

28. சொந்தக்காரரானவர் இத்தனை ஸீஸன் டிக்கட்டுகள் கொடுக்கப்பட்டன என்பதையும் அவை இன்ன வகுப்புக்களைச் சேர்ந்தவை என்பதையும், இன்ன காலஅளவில் உபயோகிக்கப்படுவதற்காக அவை கொடுக்கப்பட்டனவென்பதையும் அவைகள்மூலமாக இன்ன மொத்தத்தொகை கிடைத்ததென்பதையும், காட்டுவதாய், V-ம் நமூனுப்படியுள்ள ரிடர்ன் ஒன்றையும், தொடர்ச்சியாய் நடக்கும் எந்த வேடிக்கைகளுக்கு உள்ளே விடுவது விஷயத்தில் ஷை ஸீஸன் டிக்கெட்டுகள் செலாவணியாகுமோ அவைகளில் முதல் வேடிக்கைக்குரிய ரிடர்னேடுகூட, வேடிக்கை வரி உத்தியோகஸ்தருக்கு அனுப்ப வேண்டும். சேரவேண்டிய வரித் தொகையைச் செலுத்தியதற்காக ஷை வேடிக்கை நடக்கும் இடம் சென்னை நகரத்தில் இருந்தால் சென்னை நகர விசாரணைச் சங்கத்தாரின் கஜானுவிலிருந்தாவது அந்த இடம் வேறெங்காவது இருந்தால் ஒரு ஸர்க்கார் கஜானுவிலிருந்தாவது பெற்றுக்கொள்ளப்பட்ட ரசீதையும் ஷை ரிடர்னேடுகூட அனுப்பவேண்டும். தொடர்ச்சியாய் நடக்கும் எந்த வேடிக்கைகளின் விஷயத்தில் யாதொரு ஸீஸன் டிக்கெட் செலாவணியாகுமோ அப்படிப்பட்ட வேடிக்கைகள் நடந்துகொண்டிருக்கையில் பிறப்பட்டு ஷை ஸீஸன் டிக்கெட் கொடுக்கப்பட்டால், அந்த டிக்கெட் கொடுக்கப்பட்ட பிறகு அடுத்து நடக்கும் வேடிக்கைக்காக அனுப்பவேண்டிய ரிடர்னில் அதைக் காட்டவேண்டும்.

29. (1) தொகை செலுத்தாமல் உள்ளே போக யாதொரு நபருக்கு பாத்தியதையுண்டாக்குவதாயிருந்த, "இலவசம்" என்று தெளிவாய்க் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பாஸை அவர் பெற்றிருந்தாலொழிய, சொந்தக்காரரானவர் அவரை டிக்கெட்டில்லாமல் வேடிக்கைக்கு உள்ளே விடவுங்கூடாது, உள்ளே விடும்படிச் செய்யவுங்கூடாது, உள்ளே விட அனுமதிக்கவுங்கூடாது.

(2) சொந்தக்காரரானவர் வேடிக்கைக்கு உள்ளே செல்லப்போகும் சகல நபர்களின் டிக்கெட்டுகளையும் வசூலிக்கும்படிச் செய்யவேண்டும்; அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும், ஷை வேடிக்கைக்கு உள்ளே போவதற்கு அடுத்து முந்தி, டிக்கெட்டுகளை வசூலிப்பவரிடத்தில் டிக்கெட்டைக் கொடுத்துவிடவேண்டும். அந்தப்படி ஒரு டிக்கெட் வசூலிக்கப்படும்போது, ஷை வேடிக்கைக்கு உள்ளே செல்லப்போகும் நபரிடத்தில் அந்த டிக்கெட்டின் ஒரு பாகத்தைக் கொடுத்துவிட்டு, மற்ற பாகத்தைச் சொந்தக்காரர் நிறுத்திக்கொண்டு, ஷை வேடிக்கை முடிந்தபின் வரும் நடுப்பகல் வரையில் வைத்திருக்கவேண்டும். அந்தப்படி நிறுத்தி வைத்துக்கொண்ட பாகத்தை அதன் பிறகு அழித்துவிட வேண்டும்.

(3) யாதொரு வேடிக்கைக்கு உள்ளே விடப்பட்டிருக்கும் யாதொரு நபர் எந்த டிக்கெட்டைப் பெற்றிருப்பது காரணமாக அவர் உள்ளே விடப்பட்டாரோ அந்த டிக்கெட்டின் பகுதியையாவது எந்தப் பாஸ் பெற்றிருப்பது காரணமாகத் தொகை செலுத்தாமல் உள்ளே விடப்படுவதற்கு அவருக்கு பாத்தியதையுண்டாயிற்றோ அந்தப் பாஸையாவது ஷை ஆக்டில் கண்ட 11-வது பிரிவின்படி வேடிக்கை நடக்கும் யாதொரு இடத்தில் பிரவேசிக்க அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தர் மேற்படி வேடிக்கை நடக்கும்போதாகிலும் அது நடப்பதற்கு அடுத்து முந்தியாகிலும் பிந்தியாகிலும் கேட்பதன்மேல், அந்த உத்தியோகஸ்தர் முன் ஹாஜர்ப்படுத்தவேண்டும்.

30. சொந்தக்காரரானவர் உள்ளே போவதற்காகக் கொடுக்கப்படும் தொகைகளைக் குறித்த ரெஜிஸ்டர்களை II-ம் நமூனுப்படி வைத்துவரவேண்டும்.

31. சொந்தக்காரரானவர் நியாயமான எல்லாக் காலங்களிலும், யாதொரு வேடிக்கை சம்பந்தமாய் மேற்படி சொந்தக்காரரால் வைத்துவரப்படும் சகல புஸ்தகங்களையும் ரெக்கார்டுகளையும், அந்தந்த காலத்தில் அவருடைய சுவாதீனத்தில் இருக்கும் சகல டிக்கட்டுகளையும் டிக்கெட்டுகளின் சகல பாகங்களையும் வேடிக்கை வரி உத்தியோகஸ்தர் கேட்பதன்மேல் அந்த உத்தியோகஸ்தர் முன் ஹாஜர்ப்படுத்த வேண்டும் அல்லது ஹாஜர்படுத்துவிக்க வேண்டும்; மேலும் அவர் அவைகளைப் பார்வையிட்டு ஒரு குறிப்பு எழுதிக்கொள்ளவாவது பரிசீலனை செய்வதற்காகவாகிலும் விசாரணை செய்வதற்காகவாகிலும் அவைகளை எடுத்துக் கொண்டுபோகவாவது மேற்படி உத்தியோகஸ்தருக்கு அனுமதி கொடுக்கவேண்டும்.

32. மேற்படி அனுமதிச் சீட்டை நன்ருய்த் தெரியும்படியான ஒரு இடத்தில் மாட்டி வைக்கவேண்டும்; மேலும் பார்வையிடும் உத்தியோகஸ்தர்கள் கேட்பதன்மேல் அதை அவர்கள்முன் ஹாஜர்ப்படுத்தவேண்டும்.

IV-ம் பாகம்—ராஜி ஏற்பாடு மூலம் வரியைச் செலுத்துவது.

33. ஷை ஆக்டின் 5-வது பிரிவைச் சேர்ந்த ( ) பகுதியின்படி வரி சம்பந்தமாய் ராஜி ஏற்பாடு செய்து கொள்ள விரும்பும் யாதொரு சொந்தக்காரரானவர், வேடிக்கை ஆரம்பிப்பதற்கு ஏழு தினங்களுக்குக் குறையாமல் முன்னதாக, ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக கவர்ன்மென்டார் மேற்படி பகுதியின் பிரகாரம் தங்களுக்குள்ள அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்கக்கூடிய உத்தியோகஸ்தருக்கு, விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும். அதில் வேடிக்கை, நடக்கும் இடத்தையும், தேதியையும். காலத்தையும், வேடிக்கை இன்ன விதமான தென்பதையும், சகல வகுப்புக்களிலும் கொடுக்க உத்தேசித்துள்ள டிக்கெட்டுகளைக்குறித்த விவரங்களையும் அவைகளுக்குச் செலுத்த வேண்டிய கட்டண வீதங்களையும் ஒவ்வொரு வகுப்பின் விஷயத்திலும் எவ்வளவு பேருக்கு மேற்படாமல் உட்காரலாம் என்பதையும் ஒவ்வொரு வகுப்பிலும் உத்தேசமாய்க் கட்டணம் வாங்கிக்கொண்டு எத்தனைபேர் உள்ளே விடப்படக்கூடும் என்பதையும் வரி சம்பந்தமான ராஜி ஏற்பாட்டுக்காக விண்ணப்பதாரர் செலுத்துவதாகச் சொல்லும் தொகையையும் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

34. (1) 33-வது விதியில் சொல்லப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்என்னதொகைக்கு வேடிக்கைவரி சம்பந்தமாய் ராஜி ஏற்பாடுசெய்து கொள்ளலாம் என்பதை நிஷ்கரிஷைசெய்து, அந்த ராஜி ஏற்பாட்டை எந்த திட்டங்களுக்காவது உட்பட்டு ஒப்புக்கொள்வதாயிருந்தால் அந்தத் திட்டங்களைக் குறிப்பிட வேண்டும். அப்படி நிஷ்கரிஷை செய்யப்படும் தொகையை யாவது அதில் மேற்படி உத்தியோகஸ்தர் குறிப்பிடக்கூடிய பாகத்தையாவது செலுத்திய பிறகுதான் வேடிக்கையை நடத்தவேண்டும்.

(2) மேலே சொன்ன உத்தியோகஸ்தர் சொந்தகாரருக்கு VI-ம் நமூனுப்படி ஒரு ஸெர்டிபிகேட் கொடுக்கவேண்டும். சொந்தக்காரர் அதில் விதிக்கப்பட்டுள்ள சகல திட்டங்களையும் அனுசரித்து நடக்கவேண்டும்.

(3) அந்த ஸெர்டிபிகேட்டை, ஜனங்களை உள்ளே விடும்போதும் வேடிக்கை நடந்து கொண்டிருக்கும்போதும் வேடிக்கை நடக்கும் இடத்திற்குள் ஜனங்கள் பிரவேசிப்பதற்கான வழியில் நன்ருய்த் தெரியும்படியான ஒரு இடத்தில் காட்டிவைக்கவேண்டும் அந்த ஸெர்டிபிகேட்டில் எவ்வித திருத்தமோ அடித்தலோ செய்யவுங்கூடாது.

V-ம் பாகம்—யந்திர சாதனத்தின் மூலமாக உள்ளே விடப்படும் விஷயங்களில் வரி செலுத்துவது.

35. கேட்கப்படும் ஜாமீனைக் கொடுப்பதன்மேல் ஒரு சொந்தக்காரரானவர் மேற்படி ஆக்டின 6-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவிலுள்ள (b) பகுதியில் கண்ட நிபந்தனைகளிலுலேற்படும் அனுகூலங்களையடைய அவருக்கு வேடிக்கைவரி உத்தியோகஸ்தர் அனுமதி கொடுக்கலாம். VII-ம் நமூனுப்படி அவருக்கு ஒரு அனுமதி சீட்டு கொடுக்கப்படவேண்டும்.

36. யாதொரு நபர் இலவசம் என்று தெளிவாய் அடையாளமிடப்பட்டுள்ள பாஷை வைத்திருந்தாலொழிய, அவரை எந்த வேடிக்கை விஷயமாய் 35-வது விதியின்படி ஒரு அனுமதிச்சீட்டு கொடுக்கப்படுகிறதோ அந்த வேடிக்கைக்கு யந்திரசாதனத்தின் மூலமாகவன்றி மற்றபடியும் வரியுட்பட உள்ளே விடுவதற்கான கட்டணம் செலுத்துவதன்மேலன்றி மற்றபடியும் உள்ளே விடக்கூடாது.

37. 35-வது விதியின்படிக் கொடுக்கப்படும் ஜாமீன் முழுவதையும் மேற்படி அனுமதிச்சீட்டு செலாவணியாய்க்கொண்டிருக்கிறவரையில் அப்படியே வைத்திருக்கவேண்டும்; வரித்தொகைக்குரிய ரசீதோடுகூட ரிடர்ன்களைக் கிரமமான தேதியில் அனுப்பாவிட்டாலும் அந்த ரிடர்ன்கள் தவருனவையென்று தெரியவந்தாலும், மேற்படி ஜாமீன் பறிமுதல் செய்யப்படுவதற்குள்ளாகும். சேரவேண்டிய வரியை செலுத்தத் தவறி போகும் பட்சத்தில், மேற்படி ஜாமீன் முன்னதாகத் தெரிவிக்கப்படாமலேயே அந்த வரித்தொகைக்காக எப்போதாகிலும் சரிகட்டப்படுவதற்கும் உள்ளாகும்.

38. ஒரு சொந்தக்காரர் உள்ளே விடப்படுபவர்களைப் பற்றிய ரெஜிஸ்டர் ஒன்றை VIII-ம் நமூனுப்படி வைத்துவரவேண்டும்.

மதராஸ் கேளிக்கை வரி சட்டத்தின் விதிகள்

39. (1) சொந்தக்காரரானவர் VII-ம் நமூனுப்படியுள்ள அனுமதிச் சீட்டில் குறிப்பிட்டிருக்கிற விதமாக உண்மையானவைகளும் சரியானவைகளுமான கணக்குகளை வைத்துவர வேண்டியதுமல்லாமல், அந்த விதமாக ரிடர்ன்களை அனுப்பவும் வேண்டும்; மேலும் அவர், அதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல திட்டங்களின்படியும் அவைகளை அனுசரித்துங்கூட நடக்க வேண்டும்.

(2) சொந்தக்காரரானவர் வேடிக்கை நடக்குமிடம் சென்னை நகரத்திற்குள்ளிருந்தால் சென்னை நகர் விசாரணைச் சங்கத்தாரின் கஜானுவிலும், அந்த இடம் வேறெங்காவது இருந்தால் ஒரு ஸர்க்கார் கஜானுவிலும் சேரவேண்டிய வரித்தொகையைச் செலுத்தவேண்டும். மேற்படி வரிக்குச் சம்பந்தப்பட்ட ரிடர்னேடுகூட அவர் கஜனு ரசீதைச்சேர்த்தனுப்பவேண்டும்.

40. வேடிக்கை நடக்கும் யாதொரு இடத்திலுள்ள ஒவ்வொரு யந்திர சாதனமும், வேடிக்கை வரி உத்தியோகஸ்தராவது அவரால் நியமித்தனுப்பப்படக்கூடிய யாதொரு உத்தியோகஸ்தராவது, வேடிக்கை வரி உத்தியோகஸ்தர் எவருக்குக் கீழ்ப்பட்டவரோ அந்த உத்தியோகஸ்தராவது நியாயமான எல்லாக் காலங்களிலும் பார்வையிடக்கூடியபடி இருக்க வேண்டும்.

41. சொந்தக்காரரானவர் நியாயமான எல்லாக் காலங்களிலும், யாதொருவேடிக்கை சம்பந்தமாய் மேற்படி சொந்தக்காரரால் வைத்து வரப்படும் சகல புஸ்தகங்களையும் ரெகார்டுகளையும் வேடிக்கை வரி உத்தியோகஸ்தர் கேட்பதென்மேல் அந்த உத்தியோகஸ்தர் முன் ஹாஜர் படுத்தவேண்டும் அல்லது ஹாஜர்ப்படுத்துவிக்க வேண்டும்; மேலும் அவர், அவைகளைப் பார்வையிட்டு ஒரு குறிப்பு எழுதிக்கொள்ளவாவது பரிசீலனை செய்வதற்காகவாகிலும் விசாரணை செய்வதற்காகவாகிலும் அவைகளை எடுத்துக்கொண்டுபோகவாவது மேற்படி உத்தியோகஸ்தருக்கு அனுமதி கொடுக்கவேண்டும்.

42. 35-வது விதியின்படிக் கொடுக்கப்படும் அனுமதிச் சீட்டை நன்ருய்த் தெரியும்படியான ஒரு இடத்தில் மாட்டி வைக்கவேண்டும், மேலும், பார்வையிடும் உத்தியோகஸ்தர்கள் கேட்பதன்மேல் அதை அவர்கள்முன் ஹாஜர்ப்படுத்தவேண்டும்.

VI-ம் பாகம்—யாதொரு ஸ்தாபனத்துக்கு சந்தாத் தொகைகள் அல்லது நன்கொடைத் தொகைகள் செலுத்துவதன்மேல் வேடிக்கைகளுக்கு உள்ளே விடுவது விஷயமாய் வரி செலுத்துவது.

43. (1) யாதொரு வேடிக்கைக்கு அல்லது தொடர்ச்சியாய் நடக்கும் வேடிக்கைகளுக்கு உள்ளே விடுவதற்காகச் செலுத்தப்படும் தொகையானது யாதொரு ஸ்தாபனத்துக்குச் சந்தாவாகவோ நன்கொடையாகவோ மொத்தமாகச் செலுத்தப்பட்ட ஒரு தொகையாயிருந்து, அப்படிச் செலுத்துவதனுல் அதைச் செலுத்துபவர்கள் அந்த ஸ்தாபனத்தில் இதர உரிமைகள் அல்லது பாத்தியதைகளையும் அனுபவிப்பது சாத்தியமாயிருந்தால், அந்த வேடிக்கைக்கு அல்லது தொடர்ச்சியாய் நடக்கும் அந்த வேடிக்கைகளுக்கு உள்ளே விடுவதற்கான பாத்தியதைக்கு ஈடாயிருப்பதாக வேடிக்கை வரி உத்தியோகஸ்தர் கருதும் தொகையையும் அந்தப் பாகத்தின்மீது செலுத்தப்படத்தக்க வரித் தொகையையும் நிஷ்கரிஷை செய்யும்படி வேடிக்கை வரி உத்தியோகஸ்தருக்குச் சொந்தக்காரர் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும்.

(2) அந்த விண்ணப்பத்தோடு கூட, அப்படிச் சந்தா அல்லது நன்கொடை செலுத்துபவர்களின் எண்ணிக்கை, வரப்பெற்ற தொகை, வேடிக்கைகள் எத்தனை என்பதும் எப்படிப்பட்டவை என்பதும், அப்படிச் சந்தா அல்லது நன்கொடை செலுத்தாதவர்கள் உள்ளே போவதற்காகச் செலுத்தவேண்டிய கட்டண வீதங்கள், மேற்படி ஸ்தாபனத்துக்குச் சந்தா அல்லது நன்கொடை செலுத்தும் ஒரு நபருக்குள்ள இதர பாத்தியதைகள், உரிமைகள் முதலியவைகளின் தன்மை ஆகிய இவைகளைப்பற்றிய விவரங்களையும் அந்த ஸ்தாபனத்தின் சட்டதிட்டங்கள் எவையேனுமிருந்தால் அவைகளின் பிரதி ஒன்றையும் சொந்தக்காரர் அவதரிக்கவேண்டும்.

(3) வேடிக்கை வரி உத்தியோகஸ்தரானவர், மேற்படி வேடிக்கைக்கு அல்லது தொடர்ச்சியாய் நடக்கும் மேற்படி வேடிக்கைகளுக்கு உள்ளே விடுவதற்கான பாத்தியதைக்கு

ஈடாயிருப்பதாகத் தாம் கருதும் தொகையையும் அதன்மீது செலுத்தப்படத்தக்க வரித் தொகையையும் நிர்ணயிக்கவேண்டும். மேலும் அவர் தாம் தகுதியாகக் கருதக்கூடிய ஜாமீனைச் செலுத்தும்படிச் சொந்தக்காரரைக் கேட்கலாம்.

(4) சொந்தக்காரரானவர், சேரவேண்டிய வரித் தொகையை நிஷ்கரிஷை செய்து வேடிக்கை வரி உத்தியோகஸ்தர் பிறப்பித்த உத்தரவைத் தாம் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து ஏழு தினங்களுக்குள். மேற் சொன்ன உத்தியோகஸ்தர் நிஷ்கரிஷை செய்யும் வரித் தொகையைச் செலுத்தவேண்டும்.

VII-ம் பாகம்—நிவாரணைகளும் வரியை வாபஸ் செய்வதும்

44. மேற்படி ஆக்டில் கண்ட 8-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி வரி செலுத்துவதனின்றும் நிவாரணை செய்யப்படவேண்டுமென்று கேட்கும் யாதொரு சொந்தக்காரரானவர் வேடிக்கை நடக்கும் தேதிக்கு ஸ்பஷ்டமாய் ஏழு தினங்களுக்குக் குறையாமல் முன்னதாக, அப்படி நிவாரணை செய்யும்படிக் கோரி, ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாக கவர்ன்மெண்டார் மேற்படி உட்பிரிவின் பிரகாரம் தங்களுக்குள்ள அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்கக்கூடிய உத்தியோகஸ்தருக்கு ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டும்.

மேற்சொன்ன உத்தியோகஸ்தர். தாம் யுக்தமென்று கருதினுல், தாம் அவசியமாகக் கருதும் ஜாமீனைக் கொடுக்கும்படிச் சொந்தக்காரரைக் கேட்கலாம்.

45. மேற்படி ஆக்டைச் சேர்ந்த 8-வது பிரிவின்படிச் செய்யப்படும் யாதொரு நிவாரணை, சந்தர்ப்பத்துக்கேற்றபடி IX-ம் நமூனு அல்லது X-ம் நமூனுப்படியுள்ள ஒரு ஸெர்டிபிகேட் ரூபத்திலிருக்கவேண்டும். சொந்தக்காரர் அதில் குறிப்பிட்டுள்ள திட்டங்களை அனுசரித்து நடக்கவேண்டும்.

46. அந்த ஸெர்டிபிகேட்டை நன்ருய்த் தெரியும்படியான ஒரு இடத்தில் மாட்டிவைக்க வேண்டும்; மேலும், பார்வையிடும் உத்தியோகஸ்தர்கள் கேட்பதன்மேல் அதை அவர்கள் முன் ஹாஜர்ப்படுத்தவேண்டும்.

47. (1) மேற்படி ஆக்டில் கண்ட 9-வது பிரிவின்படி யாதொரு தொகை தமக்கு வாபஸ் செய்யப்படவேண்டுமென்று கேட்க விரும்பும் யாதொரு நபர், வேடிக்கை ஆரம்பிப்பதற்குமுன் தமது உத்தேசத்தைப்பற்றி வேடிக்கை வரி உத்தியோகஸ்தருக்குத் தெரிவிக்கவேண்டும். மேலும் அவர், அப்படித் தொகை வாபஸ் செய்யப்படவேண்டுமென்று கோரி, கவர்ன்மென்டார் ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக மேற்படி பிரிவின் பிரகாரம் தங்களுக்குள்ள அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்கக்கூடிய உத்தியோகஸ்தருக்கு, வேடிக்கை நடந்த தேதியிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் விண்ணப்பஞ் செய்துகொள்ள வேண்டும். அந்தக் கால அளவுக்குள் செய்துகொள்ளப்படாத யாதொரு விண்ணப்பம் தள்ளி விடப்படும்.

(2) மேற்சொன்ன உத்தியோகஸ்தரானவர் தமக்குத் தகுதியாகத் தோற்றும் விசாரணையை நடத்திய பிறகு, தொகையை வாபஸ் செய்யும்படிக் கேட்கும் விண்ணப்பத்தின் மீது உத்தரவு பிறப்பிக்கவேண்டும்.

VIII-ம் பாகம் –பலவகைப்பட்ட விஷயங்கள்.

48. யாதொரு நாடகசாலை, ஹால் அல்லது இதர வளவின்சொந்தக்காரர் அல்லது அதைத் தம் வசம் வைத்திருக்கும் இதர நபர் ஒவ்வொருவரும், மேற்படி ஆக்டின்படி விதிக்கப் படத்தக்க யாதொரு வேடிக்கையின் காரியங்களுக்காக அதைத் தாம் வாடகைக்கு விட்டால் அந்த வேடிக்கையைப்பற்றி வேடிக்கை வரி உத்தியோகஸ்தருக்கும், சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபையாருக்கு கவர்ன்மெண்டார் சார்பில் வேடிக்கை வரியை வசூலிக்க அதிகாரங் கொடுக்கப்பட்டிராத பிரதேசங்களில் கிராமப் பெரியதனக்காரருக்கும் அந்த இடத்தின் விஷயமாய் விசாரணை அதிகாரமுடைய போலீஸ் ஸ்டேஷனின் விசாரணை வகிக்கும் உத்தியோகஸ்தருக்குங்கூட நோடீஸ் கொடுக்கவேண்டும். அந்த நோடீஸை வேடிக்கை நடப்பதற்குக்

குறைந்தது மூன்று தினங்கள் முன்னதாகக் கொடுக்கவேண்டும். அதில் வேடிக்கை இப்படிப் பட்டதென்பதையும் சொந்தக்காரரின் பெயரையும், மேல்விலாசத்தையும், வேடிக்கை நடத்தப் படப்போகும் தேதியையும், காலத்தையும், கண்டிருக்கவேண்டும்.

IX-ம் பாகம்—நிர்வாகம்

49. (1) இந்த விதிகளின்படி யாதொரு வேடிக்கை வரி உத்தியோகஸ்தராவது 34, 44 அல்லது 47-வது விதியின்படி வேறே யாதொரு உத்தியோகஸ்தராவது பிறப்பித்த உத்தரவி ஞல் எந்த நபராகிலும் துன்பமடைந்திருந்தால், அவர்—

(a) அந்த உத்தரவு சென்னை நகர் விசாரணைச் சங்கத்தின் கமிஷனரால் பிறப்பிக்கப் பட்டிருக்கும் விஷயத்தில், 3-வது விதியைச் சேர்ந்த (b) பகுதியில் அர்த்தம் சொல்லப்பட்டபடி யுள்ள வேடிக்கை வரி கமிஷனருக்கும்,

(b) அந்த உத்தரவு வேறே யாதொரு மியுனிஸிபாலிடியின் நிர்வாக அதிகாரியால் பிறப்பிக்கப்பட்டிருக்கும் விஷயத்தில், பிரஸ்தாப ஜில்லாவின் கலெக்டருக்கும்,

(c) வேறே யாதொரு விஷயத்தில், அந்த உத்தரவைப் பிறப்பிக்கும் உத்தியோ கஸ்தர் எவருக்கு அடுத்துக் கீழ்ப்பட்டவராயிருக்கிருரோ அந்த உத்தியோகஸ்தருக்கும் அந்த உத்தரவின் தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள் அப்பீல் செய்துகொள்ளலாம்.

(2) (a) மேற்படி ஆக்டின்படி நடக்கும் நிர்வாகத்தையும் அதன்படி வரி வசூலிக்கப் படுவதையும் மேற்பார்வையிட, கவர்ன்மென்டாரின் மேல்விசாரணைக்குட்பட்டு, வேடிக்கை வரி கமிஷனரானவர், அதிகாரம் உடையவர் ஆவார்.

(b) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின்பொது தன்மைக்கு பாதகம் இல்லாம லும், வேடிக்கைவரி கமிஷனரானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி தாமாகவேயாவது விண்ணப்பம் செய்து கொள்ளப்படுவதன்மேலாவது, மேற்படி ஆக்டின்படியாகிலும் இந்த விதிகளின்படியாகிலும் யாதொரு வேடிக்கை வரி உத்தியோகஸ்தர் அல்லது வேறே யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது நபர் பிறப்பித்த யாதொரு உத்தரவு சட்ட சம்மதமானதா என்ரு யினும் நியாயமானதா என்ருயினும், அவரால் நடத்தப்பட்ட எவையேனும் நடவடிக்கைகள் ஒழுங்கானவையாவென்ருயினும் தாம் சந்தேகமறத் தெரிந்துகொள்வதற்காக அந்த உத்தரவு அல்லது நடவடிக்கைக் குறிப்புகளைப்பற்றிய தஸ்தாவேஜை எப்போதாகிலும் வரவழைத்துப் பரிசீலனை செய்து, அவைகள் சம்பந்தமாய் தமக்குத் தகுதியாகத் தோற்றும் உத்தரவைப் பிறப்பிக்கலாம்.

50. மேற்படி ஆக்டில் கண்ட 11-வது பிரிவின்படி, வேடிக்கை நடக்கும் எந்த இடத்திலா கிலும் பிரவேசிக்க அதிகாரம் கொடுக்கப் பெற்றுள்ள யாதொரு உத்தியோகஸ்தராவது, மேற்படி ஆக்டினுலாகிலும் அதன்படியாகிலும் வேறே யாதொரு சட்டத்தினுலாகிலும் அதன்படி யாகிலும் தமக்கு விதிக்கப்பட்டுள்ள கடமையை நிறைவேற்றும்பொருட்டு வேடிக்கை நடக்கும் யாதொரு இடத்தில் பிரவேசிக்கவேண்டியிருக்கிற வேறே யாதொரு உத்தியோகஸ்தராவது, அந்தப்படிப் பிரவேசிப்பதற்குமுன், கட்டணம் செலுத்தாமல் உள்ளே போக தமக்கு பாத்தி யதையுண்டாகும் ஒரு பாஸ் கொடுக்கும்படிச் சொந்தக்காரரைக் கேட்கவேண்டும். அந்தப் படிக் கேட்பதன்மேல், கட்டணம் செலுத்தாமல் உள்ளே போக அவருக்கு பாத்தியதை உண் டாக்குவதாயும் இலவசம் என்று தெளிவாய்க் குறிப்பிடப்பட்டிருப்பதுமான ஒரு பாஸை சொந் தக்காரர் அந்த உத்தியோகஸ்தருக்குக் கொடுக்கவேண்டும்.

ஆனல், அந்தப்படிக் கேட்கப்பட்ட பாஸை சொந்தக்காரர் கொடுக்கத் தவறிப்போவதை ஞல் மேற்படி உத்தியோகஸ்தர் கட்டணம் எதுவும் செலுத்தாமல் வேடிக்கை நடக்கும் இடத் தில் பிரவேசித்துத் தம்முடைய கடமையை நிறைவேற்றுவதற்குத் தடை ஏற்படமாட்டாது.

51. கவர்ன்மென்டார் எந்த உத்தியோகஸ்தருக்கு மேற்படி ஆக்டைச் சேர்ந்த 5-வது பிரிவில் கண்ட (a) பகுதியின்படித் தங்களுக்குள்ள அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்திருக்கி ருர்களோ அந்த உத்தியோகஸ்தர் மேற்படி ஆக்டில் கண்ட 15-வது பிரிவின் காரியத்துக்காக நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியாவார்.

52. (1) கவர்ன்மென்டாரால் அங்கீகரிக்கப்படக்கூடிய மதிப்புகளும் மாதிரிகளுமுள்ள ஒட்டக்கூடிய முத்திரைகளை முத்திரை விற்கும் எல்லா இடங்களிலும் விற்பனைக்காக வைத் திருக்கவேண்டும்.

(2) (1) முத்திரைகளை வாங்குவது, விற்பது ஆகிய இவைகள் சம்பந்தமாகவும், (2) சேதமான அல்லது கெட்டுப்போன ஒட்டக்கூடிய கோர்ட் கட்டண முத்திரைகளைப் புதிப்பிப்பது சம்பந்தமாகவும், (3) மேற்படி முத்திரைகளின் மதிப்புத் தொகையை வாபஸ்செய்வது சம்பந்தமாகவும், (4) உபயோகத்துக்கு வேண்டியிராத அப்படிப்பட்ட முத்திரைகளின் மதிப்புத் தொகையை வாபஸ்செய்வது சம்பந்தமாகவும் இந்த மாகாணத்திலே அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் விதிகள் இந்த விதிகளின்படிக் கொடுக்கப்படும் ஒட்டக்கூடிய முத்திரைகளுக்குப் பிரயோகப்படும்.

53. (1) கவர்ன்மெண்டார் விளம்பர மூலமாய், யாதொரு பிரதேச அதிகார சபையாரின் விசாரணை அதிகாரத்துக்குள்ளிருக்கும் விஸ்தீரணத்திலாவது அந்த விஸ்தீரணத்தைச் சேர்ந்ததாய் மேற்படி விளம்பரத்தில் குறிப்பிட்டிருக்கக்கூடிய யாதொரு பாகத்திலாவது கவர்ன்மென்டார் சார்பில் வேடிக்கை வரியை வசூலிக்க மேற்படி பிரதேச அதிகார சபையாருக்கு அதிகாரம் கொடுக்கலாம்.

(2) (1) உபவிதியின்படி எந்தப் பிரதேச அதிகார சபையாருக்காகிலும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தால், மேற்படி வரியை வசூலிப்பதற்காக அப்போதைக்கப்போது கவர்ன்மென்டார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய கமிஷனை மேற்படி பிரதேச அதிகார சபையாருக்குக் கொடுக்கவேண்டும்.

54. எவராகிலும் அடியிற்கண்ட விதிகளில் எதையாவது அல்லது IV-ம், VII-ம் நமூனுக்களின்படியுள்ள அனுமதிச்சீட்டில் கண்ட திட்டங்களில் எதையாவது அல்லது VI-ம். IX-ம், X-ம் நமூனுக்களின்படியுள்ள ஸெர்டிபிகேட்டுகளில் எதையாவது மீறிநடந்தால், அவர் யாதொரு மாஜிஸ்ட்ரேட்டால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல், அவருக்கு **500 ரூபாய்க்கு மேற்படாத அபராத தண்டனை விதிக்கத்தக்கதாகும் ; அந்த விதிகள் எவையென்றால் :—**

6, 7, 8. 9, 10, 11 (1), 12, 13, 14, 15, 16, 17, 18 (1), 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32 36, 37. 38, 39, 41, 42, 46, 48-வது விதிகள்.

I-ம் நமூனு.

(15-வது விதியைப் பார்க்கவும்)

வேடிக்கை வரி முத்திரைகளைக் குறித்த ரெஜிஸ்டர்.

(வேடிக்கை நடக்கும் இடம்

முத்திரையின் மதிப்பு

தேதி. (1)	வாங்கின முத்திரைகளின் சங்கியை. (2)	டிக்கெட்டுகளில் ஒட்டுவதற்காகக் கொடுத்த முத்திரைகளின் சங்கியை. (3)	கையிருப்பில் உள்ளது (4)	ஷரா. (5)

(கையெழுத்து)

சொந்தக்காரர்.

மதராஸ் கேளிக்கை வரி சட்டத்தின் நமூனுக்கள்

II-ம் நமூனு.

(15-வது, 24, 30-வது விதிகளைப் பார்க்கவும்)

விற்கப்பட்ட டிக்கட்டுகளைக் குறித்த ரெஜிஸ்டர்.

வேடிக்கை நடக்கு மிடம்.

வேடிக்கை. தேதி

உள்ளே விடுவதற்கான கட்டணம்.	கொடுக்கப்பட்ட டிக்கெட்டுகளின் வரிசைக் கிரமமான நம்பர் (இன்ன நம்பர்கள் முதல் இன்ன நம்பர்கள் வரையில் என்பது.)	விற்கப்பட்ட டிக்கெட்டுகளின் சங்கியை.	கொடுக்கப்பட்ட இலவச பாஸுகளின் (அனுமதிச் சீட்டுகளின்) சங்கியை.	டிக்கெட்டு விற்றதனால் கிடைத்த தொகை.	வேடிக்கை வரித் தொகை.	ஷரா.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
			மொத்தம் ...			

(கையெழுத்து)

சொந்தக்காரர்.

III-ம் நமூனு.

(20-விதியைப் பார்க்கவும்)

வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த 1939-ம் வருஷத்திய சென்னப் பட்டணத்து ஆக்டைச் சேர்ந்த 5 (b) பிரிவின்படிக்கான / 6 (1) பிரிவின் பின்பாகத்தின்படிக்கான ரிடன்களை அனுசரித்து வேடிக்கை வரி செலுத்துவதற்கு அனுமதி தரும்படி க்குச் செய்துகொள்ளும் விண்ணப்பம்.

விண்ணப்பதாரர் (சொந்தக்காரர்) பெயர்.

வாசஞ்செய்யும் இடத்தின் விலாசம்.

வேடிக்கைகளின் வகை.

அவை நடத்தப்படப்போகும் இடம்.

ஒரு வாரத்தில் எத்தனை தடவை யென்பதும் எந்த தினங்களில் என்பதும்.

உள்ளே விடுவதற்கான கட்டணங்கள்.

ஐயா

வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த 1939-ம் வருஷத்திய சென்னபட்டணத்து ஆக்டைச் சேர்ந்த 5 (b) பிரிவின்படிக்கான / 6 (1) பிரிவின் பின்பாகத்தின்படிக்கான ரிடர்ன்களை அனுசரித்து வேடிக்கை வரி செலுத்துவதற்கு அனுமதி தரும்படி வினயமாய் விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

என்னிடமிருந்து சேரவேண்டிய வேடிக்கை வரியைச் செலுத்துவதற்காகக் கேட்கப் படும் ஜாமீனைச் சவதரிக்கவும், ஒவ்வொரு வகையையும் சேர்ந்த டிக்கெட்டின்படி வேடிக்கை களுக்கு உள்ளே விடுவதற்காகக் கொடுக்கப்பட்ட தொகைகளைப்பற்றிய உண்மையான ரிடர்ன்களை நிர்ணயிக்கப்படக்கூடிய நமூனுப்படியும் காலத்திலும் சவதரிக்கவும் நான் ஒத்துக் கொள்ளுகிறேன்.

ஒவ்வொரு வேடிக்கையின் விஷயமாகவும் சேரவேண்டிய வரித்தொகைகளை ரிடர்ன் களோடுகூட அடுத்த வேடிக்கை ஆரம்பிப்பதற்குமுன் செலுத்த நான் ஒத்துக் கொள்ளு கிறேன். மேலும், அதிகப்படியாய் ஏதாவது சேரவேண்டியதாக ஏற்பட்டால், அதை அது கேட்கப்பட்ட பின் ஏழு தினங்களுக்குள் செலுத்திவிடுகிறேன்.

அனுமதிச்சீட்டில் கண்ட சகல திட்டங்களையும் நான் ஒத்துக்கொள்வதுடன், அந்தத் திட்டங்களின்படியும் நடந்துகொள்வேன்.

உண்மையான ரிடர்ன்களை அனுப்ப நான் தவறினுல்,

ரானவர், சவதரிக்கப்பட்டிருக்கும் ஜாமீனைப்பறி முதல் செய்வதுடன் கூட, என்னிடமிருந்து சேரவேண்டிய வரித்தொகைகளையும் வசூலித்துக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

தேதி தங்கள் பணிவுமிக்க ஊழியன்,

IV-ம் நமூனு.

(21-வது, 24-வது, 26-வது விதிகளைப் பார்க்கவும்)

ரிடர்ன்களை அனுசரித்து வரி செலுத்துவதற்கு அனுமதிச்சீட்டு

அடியிற்கண்ட வேடிக்கை விஷயமாய் (சொந்தக்காரர்) ....இடமிருந்து வந்த தேதியுள்ள விண்ணப்பம் **வாசிக்கப்பட்டது :—**

(சொந்தக்காரர்)

அனுப்பவேண்டிய ரிடர்ன்களை அனுசரித்து மேலே கண்ட வேடிக்கைகளுக்காகச் சேர வேண்டிய வேடிக்கை வரியைச் செலுத்த அவருக்கு அனுமதியளிக்கப்படுகிறது. இந்த அனுமதி அடியிற்கண்ட திட்டங்களுக்குட்பட்டதாகும் :—

(1) இந்த அனுமதியானது எப்போதாகிலும் காரணம் சொல்லப்படாமலே ரத்து செய்யப்படலாம். அப்படி ரத்து செய்யப்படுவது காரணமாகச் சொந்தக்காரருக்கு ஏற்படும் எந்த நஷ்டத்துக்காகவாகிலும் கவர்ன்மெண்டாரால் ஈடு எதுவும் கொடுக்கப்படத்தக்கதாக மாட்டாது.

(2) வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த 1939-ம் வருஷத்திய சென்னப் பட்டணத்து ஆக்டில் கண்ட நிபந்தனைகளையும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளையும் இந்த அனுமதிச்சீட்டின் திட்டங்களையும் அப்போதைக்கப்போது குறிப்பிடப்படக்கூடிய இதர திட்டங்களையும் அனுசரித்து நடக்க வேண்டுமென்பதற்கு இது உட்பட்டதாகும்.

(3) சரியானதும் பூர்த்தியானதுமான கணக்கொன்றை வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த 1939-ம் வருஷத்திய சென்னபட்டணத்து விதிகளுடன் சேர்க்கப்பட்டுள்ள II-ம் நமூனுப்படி வைத்துவரவேணடும். அதில், வேடிக்கை நடக்கும் ஒவ்வொரு தடவையும் கொடுக்கப்பட்டவைகளும் விற்கப்பட்டவைகளுமான ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த டிக்கெட்டுகளின் நம்பர்களும், அந்த டிக்கெட்டுகளுக்காக வாங்கப்பட்ட தொகையும், அவைகளின்மீது செலுத்தவேண்டிய மொத்த வேடிக்கை வரியும் காட்டப்பட்டிருக்கவேண்டும்

மதராஸ் கேளிக்கை வரி சட்டத்தின் நமூனுக்கள்

இந்தக் கணக்கையும் மிச்சமாய்க் கையிருப்பிலிருக்கும் டிக்கெட்டுகளையும் சரிபார்ப்பதற்காகக் கேட்கப்படும்போது சம்பந்தப்பட்ட இதர தஸ்தாவேஜுகளோடு பார்வையிடும் உத்தியோகஸ்தர்களுக்குக் காட்டவேண்டும். இந்த அனுமதிச்சீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ள யாதொரு வேடிக்கை நடந்துகொண்டிருக்கையில் வேடிக்கை பார்ப்பவர்களையாவது (சங்கீதம் முதலியவை) கேட்பவர்களையாவது எண்ணி தஸ்தவேஜுகள் சரியாயிருக்கின்றனவாவென்று பார்க்க பார்வையிடும் உத்தியோகஸ்தர்களுக்குப் பூரண வசதிகள் அளிக்க வேண்டும்.

(4) திங்கட்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை வரையில் (இவ்விரண்டு தினங்களும், உட்பட) பிரஸ்தாப வாரத்தில் / ஒவ்வொரு தினத்திலும் வேடிக்கை நடக்கும் எல்லா தடவைகளுக்கும் வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த 1939-ம் வருஷத்திய சென்னபட்டணத்து விதிகளுடன் சேர்த்துள்ள II-ம் நமூனுவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விவரங்கள் விஷயமாய் மொத்தங்களைக் காட்டும் ரிடர்ன் ஒன்றை அடுத்தாற்போல் வரும் செவ்வாய்க்கிழமைக்குள் / வேலை செய்யும் அடுத்த தினத்துக்குள் வேடிக்கை வரி உத்தியோகஸ்தருடைய ஆபீஸில் வந்துசேரும்படியாக அனுப்பவேண்டும். செலுத்தப்பட்ட வரித்தொகைக்குரிய கஜானு ரசீதை மேற்படி ரிடர்னுடன் சேர்த்தனுப்பவேண்டும்.

(5) என்ன தொகை செலுத்தியதற்கான ரசீது ரிடர்னுடன் அனுப்பப்படுகிறதோ அதற்கு மேற்பட்டுச் சேரவேண்டியதாக ஏற்படும் யாதொரு வரியை அது விதிக்கப்படும் தேதியிலிருந்து ஏழு தினங்களுக்குள் செலுத்திவிடவேண்டும்.

(உத்தியோகஸ்தரின் கையெழுத்து).

V-ம் நமூனு.

(28-வது விதியைப் பார்க்கவும்)

விற்கப்பட்ட ஸீஸன் டிக்கெட்டுகளைக் குறித்து.........................யோடு முடிவாகும் கால அளவுக்காக அனுப்பப்படும் ரிடர்ன்

டிக்கெட்டுகளின் வகுப்பு	விற்கப்பட்ட டிக்கெட்டுகளின் சங்கியை.	எந்தக் கால அளவுக்குச் செல்லும் என்பது.	கிடைத்த மொத்தத் தொகை.	சேரவேண்டிய வரி.	ஷரா.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)

VI-ம் நமூனு.

[34 (2) விதியைப் பார்க்கவும்)

வேடிக்கைவரி சம்பந்தமாய் ராஜி ஏற்பாடு செய்துகொண்டதைப்பற்றிய ஸெர்டிபிகேட்

கீழே குறிப்பிட்டுள்ள வேடிக்கையின் சொந்தக்காரர் ராஜி ஏற்பாடு மூலம் வரியைச் செலுத்திவிட்டதாக இதனுல் உறுதி கூறப்படுகிறது :—

1. சொந்தக்காரரின் பெயர்.
2. வேடிக்கையின் விவரம்.
3. தேதி.
4. இடம்.

மதராஸ் கேளிக்கை வரி சட்டத்தின் நமூனுக்கள்

2. இந்த ஸெர்டிபிகேட்டை மேலே குறிப்பிடப்பட்டுள்ளதைத் தவிர வேறே எந்த வேடிக்கைக்காகவும் உபயோகிக்கக் கூடாது. மேலும், ஜனங்களை உள்ளே விடும்போதும் வேடிக்கை நடந்துகொண்டிருக்கும்போதும் வேடிக்கை நடக்கும் இடத்திற்குள் ஜனங்கள் பிரவேசிப்பதற்கான வழியிலே நன்ருய்த் தெரியும்படியான ஒரு இடத்தில் அதைக் காட்டி வைக்கவேண்டும்.

இந்த ஸெர்டிபிகேட்டில் எவ்விதமான திருத்தமோ அடித்தலோ செய்யவுங்கூடாது.

இடம் தேதி (உத்தியோகஸ்தரின் கையெழுத்து)

VII-ம் நமூனு. [35, 39 (1) விதிகளைப் பார்க்கவும்]

யந்திர சாதனத்தைக்கொண்டு பதிவு செய்யப்பட்டபடியுள்ள ரிடர்ன்களை அனுசரித்து வரி செலுத்துவதற்குரிய அனுமதிச்சீட்டு,

அடியிற் கண்ட வேடிக்கைகள் விஷயமாய் இடமிருந்து வந்த தேதியுள்ள விண்ணப்பம் **வாசிக்கப்பட்டது :—**

வேடிக்கை நடக்குமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள யந்திர சாதனத்தைக் கொண்டு பதிவு செய்யப்பட்ட ரிடர்ன்களை அனுசரித்து மேலே கண்ட வேடிக்கைகளுக்காகச் சேரவேண்டிய வேடிக்கை வரியைச் செலுத்த க்கு (சொந்தக்காரருக்கு) அனுமதி யளிக்கப்படுகிறது.

(1) இந்த அனுமதியானது எப்போதாகிலும் காரணம் சொல்லப்படாமலே ரத்து செய்யப்படலாம். அப்படி ரத்துசெய்யப்படுவது காரணமாகச் சொந்தக்காரருக்கு ஏற்படும். எந்த நஷ்டத்துக்காகவாகிலும் கவர்ன்மெண்டாரால் ஈடு எதுவும் கொடுக்கப்படத்தக்கதாக மாட்டாது.

(2) வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த 1939-ம் ஆண்டின் சென்னபட்டணத்து ஆக்டில் கண்ட நிபந்தனைகளையும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளையும் இந்த அனுமதிச்சீட்டின் திட்டங்களையும் அப்போதைக்கப்போது குறிப்பிடப்படக்கூடிய இதர திட்டங்களையும் அனுசரித்து நடக்கவேண்டுமென்பதற்கு இது உட்பட்டதாகும்.

(3) சரியானதும் பூர்த்தியானதுமான கணக்கொன்றை வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த 1939-ம் ஆண்டின் சென்னப்பட்டணத்து விதிகளுடன் சேர்க்கப்பட்டுள்ள VIII-ம் நமூனுப்படி வைத்து வரவேண்டும். மேலும் அதில், ஒவ்வொரு வகுப்பிலும் உள்ளே விடப்பட்டவர்களின் எண்ணிக்கையும் வாங்கப்பட்ட தொகையும் அதன்மீது செலுத்த வேண்டிய மொத்த வேடிக்கை வரியும் காட்டப்பட்டிருக்கவேண்டும். இந்தக் கணக்கை சரி பார்ப்பதற்காகக் கேட்கப் படும்போது சம்பந்தப்பட்ட இதர தஸ்தாவேஜுகளோடு பார்வையிடும் உத்தியோகஸ்தர்களுக்குக் காட்டவேண்டும். இந்த அனுமதிச்சீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ள யாதொரு வேடிக்கை நடந்து கொண்டிருக்கையில் வேடிக்கை பார்ப்பவர்களையாவது (சங்கீதம் முதலியவை) கேட்பவர்களையாவது எண்ணி தஸ்தாவேஜுகள் சரியாயிருக்கின்றனவாவென்று பார்க்க பார்வையிடும் உத்தியோகஸ்தர்களுக்குப் பூரண வசதிகள் அளிக்க வேண்டும்.

(4) திங்கட்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை வரையில் (இவ்விரண்டு தினங்களும் உட்பட) ஒருவாரத்தில் / ஒவ்வொரு தினத்திலும் வேடிக்கை நடக்கும் எல்லாத் தடவைகளுக்கும் உள்ளே விடப்பட்டதற்காகக் கொடுக்கப்பட்ட தொகைகளைக் கண்டுள்ள ஒரு ரிடர்னை வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த 1939-ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து விதிகளுடன் சேர்க்கப்பட்டிருக்கும் VIII-ம் நமூனுப்படி அடுத்தாற்போல் வரும் செவ்வாய்க்கிழமைக்குள் / வேலை செய்யும் அடுத்த தினத்துக்குள் அடியிற் கையெழுத்து செய்திருப்பவரின் ஆபீஸில் வந்துசேரும்படி அனுப்பவேண்டும். செலுத்தப்பட்ட வரித் தொகைக்குரிய கஜானு ரசீதை மேற்படி ரிடர்னுடன் சேர்த்தனுப்ப வேண்டும். இலவச

மதராஸ் கேளிக்கை வரி சட்டத்தின் நமூனுக்கள்

பாஸுகளின்மேலாவது குறைந்த கட்டணங்களுக்காவது உள்ளே விடப்பட்டவர்களின் எண்ணிக்கையை வேடிக்கை நடக்கும் ஒவ்வொரு தடவைக்கும் தனித்தனியாக ரிடர்ன்களில் எப்போதும் காட்டவேண்டும்.

(5) என்ன தொகை செலுத்தியதற்கான ரசீது ரிடர்னுடன் அனுப்பப்படுகிறதோ அதற்கு மேற்பட்டுச் சேரவேண்டியதாக ஏற்படும் யாதொரு வரியை அது விதிக்கப்படும் தேதியிலிருந்து ஏழு தினங்களுக்குள் செலுத்தி விடவேண்டும்.

(உத்தியோகஸ்தரின் கையெழுத்து.

VIII-ம் நமூனு (38-வது விதியைப் பார்க்கவும்)

யந்திர சாதனத்தைக்கொண்டு உள்ளே விடப்பட்டவர்களின் எண்ணிக்கையைப் பற்றிய ரெஜிஸ்டர்.

வேடிக்கை நடக்குமிடம் தேதி.

உள்ளே விடுவதற்கான கட்டணம். (1)	தொகை செலுத்திய தன்மேல் உள்ளே விடப்பட்டவர்களின் சங்கியை (2)	இலவச பாஸுகளின் மேல் உள்ள விடப் பட்டவர்களின் சங்கியை. (3)	மொத்த வரவு. (4)	வசூலிக்கப் பட்ட வரித் தொகை. (5)	ஷரா. (6)
			ரூ. ந.பை	ரூ. ந.பை	
		மொத்தம் ...			

(சொந்தக்காரரின் கையெழுத்து.)

IX-ம் நமூனு, (45-வது விதியைப் பார்க்கவும்)

வேடிக்கை வரி செலுத்துவதனின்றும் நிவாரணே செய்வதற்கான ஸர்டிபிகேட்

அடியிற் கண்ட வேடிக்கையை வேடிக்கை வரி செலுத்தாமல் நடத்த அனுமதியளிக்கப்படுகிறதென்று இதனுல் உறுதி கூறப்படுகிறது ; ஆனுல், அதிலிருந்து கிடைக்கும் மொத்த வரவையும் அடியிற் கண்டிருக்கிறபடி பரோபகாரமான, மதசம்பந்தமான அல்லது தரும சம்பந்தமான காரியங்களுக்கு உபயோகிக்கவேண்டும் :—

விவரம் இடம் தேதி

கிடைக்கும் தொகை எந்தக் காரியத்துக்காக உபயோகிக்கப்படப்போகிற தென்பது,

இந்த ஸெர்டிபிகேட்டானது அடியிற் கண்ட திட்டங்களுக்குட்பட்டுக் கொடுக்கப்படுகிறது :—

(1) மேற்படி வேடிக்கையிலிருந்து கிடைக்கும் மொத்த வசூலேயும் செலவுகளுக்காக ஒன்றும் கழித்துக்கொள்ளாமல்
ரிடம் செலுத்திவிடவேண்டும்.

(2) சொந்தக்காரரானவர் மொத்த வசூலேப்பற்றி பூர்த்தியானதும் சரியானதுமான கணக்கொன்றை கிடைக்கும் மொத்த தொகையோடுகூட (1) திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஸ்தாபனத்துக்குச் சவதரிக்கவேண்டும். அப்படிச் செய்யப்பட்டதாகக் கண்டு மேற்படி ஸ்தாபனத்தார் கொடுக்கும் சீட்டு ஒன்றை வேடிக்கை நடந்த தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் அடியிற் கையெழுத்து செய்திருப்பவர்முன் தாக்கல் செய்யவேண்டும்.

(3) மொத்த வசூலும் செலவுகளுக்காக ஒன்றும் கழித்துக்கொள்ளப்படாமல் மேற்சொன்ன ஸ்தாபனத்துக்கு வாஸ்தவத்தில் செலுத்தப்பட்டிருப்பதாக அடியிற் கையெழுத்து

செய்திருப்பவருக்குத் திருப்திகரமாய்த் தெரியவராவிட்டால், சொந்தக்காரர் சரியான வரியைச் செலுத்துவதற்கு உட்பட்டவராவார்.

(4) இந்த ஸெர்டிபிகேட்டை மேலே குறிப்பிடப்பட்டுள்ளதைத் தவிர வேறே எந்த வேடிக்கைக்காகவும் உபயோகிக்கக்கூடாது. மேலும், ஜனங்களை உள்ளே விடும்போதும் வேடிக்கை நடந்துகொண்டிருக்கும்போதும் வேடிக்கை நடக்கும் இடத்திற்குள் ஜனங்கள் பிரவேசிப்பதற்கான வழியிலே நன்ருய்த் தெரியும்படியான ஒரு இடத்தில் அதைக் காட்டி வைக்கவேண்டும். இந்த ஸெர்டிபிகேட்டில் எவ்விதமான திருத்தமோ அடித்தலோ செய்யவுங் கூடாது. செய்யவிடவுங்கூடாது.

(5) மேலே கண்டுள்ள தேதியிலாவது இடத்திலாவது வேடிக்கை நடத்தப்படாவிட்டால், அதை நடத்துவதற்காக நிச்சயிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு ஒரு வாரத்துக்குள் சொந்தக்காரரானவர் அந்த விஷயத்தைப்பற்றி எழுத்து மூலமான நோட்டிஸ் கொடுக்கவேண்டும்.

(6) கிடைக்கும் மொத்தத் தொகையையும் வேடிக்கை எந்தக் காரியங்களை உத்தேசித்து நடத்தப்படுகிறதோ அந்தக் காரியங்களுக்காக உபயோகிப்பதற்கு ஜாமீனுக சொந்தக்காரராகிய (பெயர்) கட்டிவைத்த ரூபாயுள்ள டேவணித் தொகையானது மேற்படி மொத்தத் தொகை அப்படியே உபயோகிக்கப்பட்டதென்பதற்குத் திருப்திகரமான ருஜு காட்டப்படுவதன்மேல் திருப்பிக் கொடுக்கப்படும்.

(ஸெர்டிபிகேட் கொடுக்கும் உத்தியோகஸ்தரின் கையெழுத்து.)

X-ம் நமுனு. (45-வது விதியைப் பார்க்கவும்)

வேடிக்கை வரி செலுத்துவதனின்றும் நிவாரணசெய்வதற்கான ஸெர்டிபிகேட்.

கீழே பின்னும் விவரமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் வேடிக்கையானது—

(a) முற்றிலும் கல்வி போதிக்கும் இயல்புள்ளதென்றும்,

(b) லாபத்துக்காக நடத்தப்படாத அல்லது ஸ்தாபிக்கப்படாத ஒரு ஸ்தாபனத்தாரால் சிறிது மட்டில் கல்வி, கலை அல்லது விஞ்ஞான சாஸ்திர சம்பந்தமான காரியங்களுக்காக நடத்தப்படுகிறதென்றும்,

(c) லாபத்துக்காக நடத்தப்படாத ஒரு ஸ்தாபனத்தாரால் நடத்தப்படுவதுடன். வேடிக்கைகளுக்கு வரி விதிப்பதைக் குறித்த 1939-ம் வருஷத்திய சென்னப்பட்டனத்து ஆக்டில் கண்ட 8 (1) (d) பிரிவின் வியாபகத்தில் அடங்குகிறதென்றும்,

அதனுல் வேடிக்கை வரி விதிப்பதனின்றும் நிவாரணை செய்யப்பட்டிருக்கிறதென்றும் இதனுல் உறுதி கூறப்படுகிறது :—

(மேலே (a) (b) (c) பாபத்துகளில் பொருத்தமாயிராதவைகளை அடித்துவிடவும்)

விவரம் தேதி இடம்

இந்த ஸெர்டிபிகேட் அடியிற்கண்ட திட்டங்களுக்கு உட்பட்டதாகும் :—

(1) இந்த ஸெர்டிபிகேட்டானது மோசடியாகவோ பொய்யாகச் சங்கதி தெரிவித்தோ வாங்கப்பட்டிருக்கிறதென்று தெரியவந்தாலும், நடத்தப்படும் வேடிக்கையானது எப்படிப்பட்ட இயல்புள்ளதாயிருப்பது காரணமாக நிவாரணையளிக்கப்படுகிறதோ அப்படிப்பட்டதா இராவிட்டாலும் அது ரத்து செய்யப் படுவதற்கு உட்பட்டதாகும். அப்படிப்பட்ட விஷயங்களில் நடத்தப்பட்டிருக்கக்கூடிய அப்படிப்பட்ட யாதொரு வேடிக்கையினின்றும் கிடைத்த வருமானத்தின் மீது வேடிக்கை வரி விதிக்கப்படும்.

(2) இந்த ஸெர்டிபிகேட்டை மேலே குறிப்பிடப்பட்டுள்ளதைத் தவிர வேறே எந்த வேடிக்கைக்காகவும் உபயோகிக்கக்கூடாது. மேலும், ஜனங்களை உள்ளே விடும்போதும் வேடிக்கை நடந்துகொண்டிருக்கும்போதும் வேடிக்கை நடக்கும் இடத்திற்குள் ஜனங்கள் பிரவேசிப்பதற்கான வழியிலே நன்ருய்த் தெரியும்படியான ஒரு இடத்தில் அதைக் காட்டிவைக்க வேண்டும். இந்த ஸெர்டிபிகேட்டில் எவ்விதமான திருந்தமோ அடித்தலோ செய்யவுங்கூடாது; செய்யவிடவுங்கூடாது.

உத்தியோகஸ்தரின் கையெழுத்து.

அரசாங்கத்தாரின் உத்தரவுகள் - பக்கம் 452 A–B களை பார்க்கவும்

196. (சென்னை 1957-ம்ஷூத்து XIII சட்டமாகிய) 1957-ம்ஷூத்திய சென்னை ஜில்லா போர்டுகள் (திருத்தப்பட்டச்) சட்டம், பிரிவு 2 கிலாஸ் (i) க்கு பதிலாக அடியில் கண்ட கிளாஸை சேர்த்துக்கொள்ளவும், அதாவது :—

மதாரஸ் ஜில்லா போர்டுகள் தேர்தல்களை 2—10—1961 வரையில் தள்ளி வைக்கலாம்.

"(i) அரசாங்கத்தார் நியமனபடிக்கு 1961 ஷூத்திய அக்டோபர் மாதம் 2-ம் தேதிக்குமேற்படாமல் ஒவ்வொரு ஜில்லா போர்டின் தேர்தல்களை தள்ளி வைக்கலாம். இன்னும்"

குறிப்பு

ஜில்லா போர்டுகளை 1957-வருஷத்திய 13-வது சட்டபடிக்கு 1958-ம் வருஷத்திய அக்டோபர் மாதம் 31-ம் தேதிக்குள் எடுத்து விடவேண்டும் என்று அரசாங்கம் ஏற்பாடு செய்தது. அது அப்படி செய்ய காலதாமதம் ஆய்விட்டபடியால் 1961-வருஷத்திய அக்டோபர் மாதம் 2-ம் தேதிக்குள் ஜில்லா போர்டுகளை இந்த பிரிவின் படி எடுத்துவிட ஏற்பாடு செய்து இருக்கிறது. இதையே தான் 1-ம் பிரிவின் (3)-வது உபபிரிவில் கண்டிருக்கிறது.

இந்த பூராசட்டமும் இதுவரையில் ஆசாரத்திற்கு வரவில்லை. இனி எப்போது வருமோ தெரியாது.

ஆனால் இந்த சட்டத்தின் 1-ம் பிரிவும் இந்த 196-ம் பிரிவும் மாத்திரம் 31—1—1959-ல் இருந்து அமுலுக்கு கொண்டுவரப்பட்டன. இந்த பிரிவை பின்பற்றி ஜில்லா போர்டு தேர்தல்களை 1961-ம் வருடம் அக்டோபர் மாதம் 2-ம் தேதிவரையில் ஒத்திவைக்கப்பட்டது. இந்த புத்தகம் பக்கம் 20-ல் யுள்ள ஜி. ஓ. களையும், S. R. O. களையும் பார்க்கவும்.

197 இச் சட்டத்தில் அடியிற்கண்டதற்கு முரணான ஓர் உத்தேசம் இல்லா விட்டாலும் அரசாங்கத்தார் வேறே விதமாய் கட்டளையிட்டாலன்றி மற்றப்படியும் இந்த ராஜ்யத்தில் அமுலில் இருந்து வருகிற யாதொரு விதி, சகாயச் சட்டம், ரெகுலேஷன், விளம்பரம், திட்டம், நமூனா அல்லது உத்திரவில்—

"லோகல் போர்டுகள் -ஜில்லா போர்டுகள் சட்டம்" ஆகியவை சம்பந்தமான குறிப்பீடுகளுக்கு அர்த்தம் பண்ணுவது

(i) யாதொரு பஞ்சாயத்து சம்பந்தமாக வருகிற குறிப்பீடு ஒன்று இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அல்லது மீண்டும் அமைக்கப்பட்ட ஒரு பஞ்சாயத்துக்குரிய குறிப்பீடாகக் கருதப்படும் ;

(ii) லோகல் போர்டுகள் சம்பந்தமாய் யாதொரு குறிப்பீடு ஜில்லா போர்டுகள், பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்கள், பஞ்சாயத்துக்கள் சம்பந்தமான யாதொரு குறிப்பீடாகக் கருதப்படும் ;

(iii) 1920-ம் ஷூத்திய சென்னை லோகல் போர்டுகள் சட்டம் சம்பந்தமான யாதொரு குறிப்பீடு (சென்னை 1920ம்-ம் ஷூத்து XIV-வது சட்டமாகிய) 1920-ம்ஷூத்திய சென்னை ஜில்லா போர்டுகள் சட்டம் (சென்னை 1950-ஷூத்து X-வது சட்டமாகிய) 1950-ம் ஷூத்திய சென்னை கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டம், 195৩-ஷூத்திய சென்னை பஞ்சாயத்துக்கள் சட்டம் ஆகிய சம்பந்தமான யாதொரு குறிப்பீடு என்று கருதப்படும் ;

(iv) யாதொரு ஜில்லாவில் போர்டு அல்லது அதன் தலைவர் சம்பந்தமான யாதொரு குறிப்பீடு இச் சட்டம் பொருத்தமான காலத்தில் அமுலில் இருந்து இருந்தால் மேற்படி பிரதேசம் விஷயமாய் விசாரணை அதிகாரமுள்ள பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில் விசாரணை அதிகாரம் வகுத்து இருக்குமோ அந்த யூனியன் கௌன்ஸிலுக்கும் அல்லது சந்தர்ப்பத்துக்கேற்ப அதன் அக்கிராசனருக்கும் மேற்சொன்ன தேதி முதற்கொண்டு சம்பந்தப்படுகிற யாதொரு குறிப்பீடு எனக் கருதப்படும்.

198. இச் சட்டத்தின் தொடக்கத்துக்குப் பிறகு இதன் ஷரத்துகளை முதன் முதலாக அமுலுக்குக் கொண்டு வருவதிலேனும் அல்லது யாதொரு பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலை முதன் முதலாக அமைப்பதிலேனும் யாதொரு கஷ்டம் நேரிட்டால் அரசாங்கத்தார் சந்தர்ப்பத்துக்குத் தேவையா யிருக்கக்கூடிய பிரகாரம் அந்தக் கஷ்டத்தை நீக்கு வதற்குத் தங்களுக்கு அவசியமாகத் தோற்றக்கூடிய எதை யாவது உத்தரவு பிறப்பித்து அதன் மூலமாகச் செய்யலாம்.

கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கான அரசாங்கத்தாரின் அதிகாரம்

(2 1-வது பிரிவின் கீழ் செய்யப்பட்ட உத்தரவுகளை அவைகள் செய்யப் பட்ட பிறகு கூடிய சீக்கிரத்தில் சட்ட மன்றத்தின் இரு சபைகள் மேஜையின் பேரில் வைக்க வேண்டும். அவைகளை அதே கூட்டத்தோடாவது அல்லது அதற்கு அடுத்த கூட்டத்திலாவது அவைகளை சட்ட மன்றங்கள் திருத்தி விடலாம் அல்லது ரத்து செய்து விடலாம்.

I-ம் ஷெட்யூல்

[120 (3) பிரிவைப் பார்க்கவும்]

வீட்டு வரி விதிப்பின் அடிப்படை		பிரதி அரை வருஷம் ஒன்றுக்குக் குறைந்த பட்ச வீதம்.		பிரதி அரை வருஷம் ஒன்றுக்கு அதிக பட்ச வீதம்.
(a) மூலதன மதிப்பின்பேரில் வரி விதிக் கப்பட்டால்.		மூலதன மதிப்பில் 1/16 சத வீதம்.		மூலதன மதிப்பில் 1/2 சத வீதம்.
(b) வருஷாந்தர மதிப்பின்பேரில் வரி விதிக்கப்பட்டால்.		வருஷாந்தர மதிப்பில் ஒரு சத வீதம்.		வருஷாந்தர மதிப்பில் 10 சத வீதம்.
(c) வகைப்படுத்தப்பட்ட குறடு விஸ்தீர ணத்தின் (plinth area) பேரில் வரி விதிக்கப்பட்டால்—				
	ரூ. ந.பை.		ரூ. ந.பை.	
(i) மேல்தளம் போட்ட வீடு.	0 75	குறடு விஸ்தீரணத் தின் பிரதி 100 சதுர அடி அல்லது அதன் பாகத்துக்கு.	3 00	குறடு விஸ்தீர ணத்தின் பிரதி 100 சதுர அடி அல்லது அதன் பாகத்துக்கு.
	ரூ. ந.பை.		ரூ. ந.பை.	
(ii) ஓரளவு மேல் தளம் போட்டும், ஓரளவு ஓடு வேய்ந்தும் அல்லது கூரை வேய்ந்தும் உள்ள வீடு.	0 50	மேற்படி	1 50	மேற்படி
(iii) ஓடு போட்ட வீடு —	0 40	மேற்படி	1 00	மேற்படி
(iv) ஓரளவு ஓடு போட்டும் ஓரளவு கூரை வேய்ந்தும் உள்ள வீடு.	0 25	மெற்படி	0 75	மேற்படி
(v கூரை வேய்ந்த வீடு —	0 20	மேற்படி	0 50	மேற்படி

II-ம் ஷெட்யூல்.

சாதாரண அபராத தண்டனைகள்

[181 (1) பிரிவைப் பார்க்கவும்]

பிரிவு (1)	உட்பிரிவு அல்லது பகுதி (2)	விஷயம் (3)	விதிக்கப்படக் கூடிய அபராத தண்டனை (4)
79	(1)	அபாயம் விளைவிக்கத்தக்க கட்டிடம் ஒன்றுக்கு வேலி போடும்படி அல்லது அதை எடுத்துவிடும்படி அல்லது அதைப்பத்திரமாகப் பாதுகாக்கும்படி அல்லது அதற்கு மராமத்து செய்யும்படி கேட்கிற உத்தரவைக் கீழ்ப்படியத் தவறுதல்.	ஐந்நூறு ரூபாய்
80	(1)	அபாயம் விளைவிக்கத்தக்க மரங்களைப் பத்திரமாகப் பாதுகாக்கும்படி அல்லது கிளைகளை வெட்டித் தள்ளும்படி அல்லது அதை வெட்டி வீழ்த்தும்படி பிறப்பிக்கிற உத்தரவைக் கீழ்படியத் தவறுதல்.	ஐம்பது ரூபாய்
81	—	கட்டிடம் அல்லது நிலத்துக்கு வேலி போடும்படி முட்புதர்கள், மரங்கள் இவற்றைக் கத்தரித்து விடும்படி அல்லது வெட்டித் தள்ளும்படி அல்லது வெட்டி வீழ்த்தும்படி அல்லது அடைப்புச் சுடர்வொன்றின் உயரத்தைக் குறைக்கும்படிப் பிறப்பிக்கிற உத்தரவைக் கீழ்ப்படியத் தவறுதல்.	மேற்படி
82	(a)	பொதுச் சாலையில் அல்லது அதற்கு மேல் சட்ட சம்மதமின்றி கட்டிடம் அல்லது சுவற்றை எழுப்புதல் அல்லது வேலி போடுதல்.	நூறு ரூபாய்
82	(b)	பொதுச் சாலையில் அல்லது அதன்மேல் சட்ட சம்மதமின்றி துளை போடுவதும் அல்லது அதில் குப்பை கூலங்களைக் கொண்டு வந்து போடவும்.	ஐம்பது ரூபாய்
82	(c)	பொதுச்சாலை முதலியவற்றிற்கு அருகிலுள்ள ஓரிடத்தில் சட்ட சம்மதமின்றி கல்வெட்டி எடுத்தல்.	மேற்படி
82	(d)	வடிகால் மீது சட்ட சம்மதமின்றி கட்டிடம் எழுப்புதல்.	இருநூறு ரூபாய்
82	(e)	யாதொரு பஞ்சாயத்தில் அவரது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலில் சங்கரமிக்கிற யாதொருபொதுச் சாலை அல்லது இதர சொத்தின் மீது அனுமதியின்றி மரங்களை வைத்துப் பயிரிடுதல்.	மேற்படி
82	(f)	யாதொரு பஞ்சாயத்தில் சங்கரமித்துள்ள பொதுச் சாலை அல்லது இதரச் சொத்தின் மீது அல்லது 85-வது பிரிவு அல்லது 86-வது பிரிவின்கீழ் எந்தப் புறம்போக்கு அல்லது நிலத்தை உபயோகிப்பது விஷயமாய் முறைபடுத்தப்பட்டுள்ளதோ அந்த புறம்போக்கில் அல்லது நிலத்தின் மீது வளர்ந்துவருகிற மரங்களை அனுமதியின்றி வெட்டுதல் முதலியவை.	மேற்படி
91	—	பொதுக் கேளிக்கை இடத்தை மூடத் தவறுதல்.	மேற்படி
92	—	தொத்து வியாதியுள்ள குழந்தையைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புதல்.	ஐம்பது ரூபாய்

பிரிவு (1)	உட்பிரிவு அல்லது பகுதி (2)	விஷயம் (3)	விதிக்கப்படக் கூடிய அபராத தண்டனை (4)
94	—	பெரியம்மை கண்டிருப்பதைப்பற்றித் தகவல் கொடுக்க தவறிப்போதல்.	ஐப்பது ரூபாய்
95	(1)	பொது சுகாதாரத்துக்கு அல்லது பாதுகாப்புக்கு அபாயகரமான குளம் அல்லதுஇதர இடத்தை நிரப்பும்படி பிறப்பிக்கிற உத்தரவுக்குக் கீழ்ப்படியத் தவறுதல்.	மேற்படி
96	(1)	மிக மோசமான நிலையிலுள்ள அல்லது புல் பூண்டு முளைத்துள்ள கட்டிடம் அல்லது நிலத்தை சுத்தமாக்கும்படி அல்லது சுத்தி செய்யும்படி பிறப்பிக்கிற உத்தரவுக்குக் கீழ்ப்படியத் தவறுதல்.	மேற்படி
100	(1)	லைசென்ஸின்றி அல்லது லைசென்ஸுக்கு முரணாக புதிய தனிப்பட்ட மார்க்கெட் ஒன்றை ஏற்படுத்துதல் அல்லது தொடர்ந்து வைத்துவருதல்.	ஐந்நூறு ரூபாய்
100	(3)	தனிப்பட்ட மார்க்கெட்டில் ஸெர்டிபிகேட்டின்றி கட்டணங்கள் விதித்து வாங்குதல்.	நூறு ரூபாய
102	—	பொது அல்லது தனிப்பட்ட மார்க்கெட்டில் அனுமதியின்றி யாதொரு பிராணியை அல்லது பொருளை விற்றல் அல்லது விற்பனைக்காக வைத்திருத்தல்	இருபது ரூபாய்
103	—	தடை உத்தரவுக்குப் பிறகு அல்லது லைஸென்ஸில்லாமல் அல்லது ரெகுலேஷன்களுக்கு முரணாக பொதுச் சாலைகள் அல்லது இடங்களில் பொருள்களை விற்பனை முதலியவை செய்தல்.	பத்து ரூபாய்
106	(b)	தடைப் பிறப்பிக்கப்பட்ட தூரத்துக்குள் யாதொரு பொது இடத்தை அல்லது சாலையோரத்தை வண்டி நிற்குமிடமாக அல்லது தங்குமிடமாக அல்லது வண்டி ஸ்டாண்டாக உபயோகித்தல்.	ஐம்பது ரூபாய்
107	(1)	லைஸென்ஸில்லாமல் அல்லது லைஸென்ஸுக்கு முரணாகத் தனிப்பட்ட வண்டி ஸ்டாண்டு ஒன்றைஏற்படுத்துதல் அல்லது அதைத் தொடர்ந்து வைத்து வருதல்.	இருநூறு ரூபய்
109	(a)	விதிகளை மீதி ஆடு மாடு அடிக்கும் பொதுத் தொட்டிகளுக்கு வெளியே பிராணிகளை அடித்தல் அறுத்தல் அல்லது தோல்உரித்தல் முதலியவை.	மேற்படி
109	(b)	லைஸென்ஸில்லாமல் அல்லது லைஸென்ஸுக்கு முரணாகப் பிரயாணிகளை விற்பனைக்காக அடித்தல்.	இருபது ரூபாய்
110	(2)	கட்டத்தின் மேல் உள்ள இலக்கத்தைச் சட்ட சம்மதமின்றி அழித்துவிடுதல்.	ஐந்து ரூபாய்
110	(3)	(வீட்டு) இலக்கத்தைப் புதிப்பிக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்து அதைச்செய்யத்தவறிப்போதல்.	இருபது ரூபாய்
111		லைசென்ஸில்லாமல் அல்லது லைஸென்ஸுக்கு முரணாக ஓரிடத்தைத் தீங்கு விளைவிக்கத்தக்க அல்லது அபாயகரமான வியாபாரம் செய்வதற்காக உபயோகித்தல்	நூறு ரூபாய்

பிரிவு (1)	உட்பிரிவு அல்லது பகுதி (2)	விஷயம் (3)	விதிக்கப்படக் கூடிய அபராத தண்டனை (4)
112	—	தொழிற்சாலே ஒர்க்ஷாப் முதலியவற்றை சட்ட சம்மதமின்றி எழுப்புதல்.	ஆயிரம் ரூபாய்
175	—	பொதுச்சாலே, மார்க்கெட், கிணறு குளம் முதலியவற்றை ஒருவர் உபயோகித்துக்கொள்ள அல்லது அனுபவிக்கத் தடை உண்டாக்குதல்.	நூறு ரூபாய்

III-ம் ஷெட்யூல்

தொடர்ந்து செய்துவருகிற குற்றங்களுக்கான அபராத தண்டனைகள்

[182 (2) பிரிவைப் பார்க்கவும்]

79	(1)	அபாயகரமான கட்டிடத்துக்கு வேலி போடும்படி அல்லது அதை எடுத்துவிடும்படி அல்லது அதை பத்திரமாய்ப் பாதுகாக்கும்படி அல்லது அதை மராமத்து செய்யும்படி பிறப்பிக்கிற உத்தரவுக்குக் கீழ்ப்படியத் தவறுதல்.	ஐம்பது ரூபாய்
80	(1)	அபாயகரமான மரங்களேப் பத்திரமாகப் பாதுகாக்கும்படி அல்லது வெட்டித் தள்ளும்படி அல்லது வெட்டி வீழ்த்தும்படி பிறப்பிக்கிற உத்தரவுக்குக் கீழ்ப்படியத் தவறுதல்.	பத்து ரூபாய்
81	—	கட்டிடம் அல்லது நிலத்துக்கு வேலி போடும்படி அல்லது முட்புதர் அல்லது மரங்களேக் கத்தரித்து விடும்படி அல்லது வெட்டித் தள்ளும்படி அல்லது வெட்டி வீழ்த்தும்படி அல்லது அடைப்புச் சுவர் ஒன்றின் உயரத்தைக் குறைக்கும்படி பிறப்பிக்கிற உத்தரவுக்குக் கீழ்படியத் தவறுதல்.	பத்து ரூபாய்
82	(a)	பொது சாலேயில் அல்லது அதன்மீது சட்ட சம்மதமின்றி சுவர் எழுப்புதல், அல்லது வேலி போடுதல்	இருபது ரூபாய்
82	(b)	பொதுச் சாலேயில் அல்லது அதன்மீது சட்ட சம்மத மின்றி தூளே போடுதல் அல்லது குப்பை கூளங்களேக் கொட்டுதல்.	பத்து ரூபாய்
82	(c)	பொதுச்சாலே முதலியவற்றிற்கு அருகிலுள்ள ஓரிடத்தில் சட்ட சம்மதமின்றி கல் வெட்டி எடுத்தல்.	பத்து ரூபாய்
82	(d)	வடிகால்மீது சட்ட சம்மதமின்றி கட்டிடம் எழுப்புதல்.	ஐம்பது ரூபாய்
91	—	பொதுக் கேளிக்கையிடத்தை மூடத் தவறுதல் —	நூறு ரூபாய்
95	(1)	பொதுச் சுகாதாரம் அல்லது பாதுகாப்புக்கு அபாயகரமான குளம் அல்லது இதர இடத்தை, நிரம்பும்படிப் பிறப்பிக்கிற உத்தரவுக்குக் கீழ்ப்படியத் தவறுதல்.	பத்து ரூபாய்
96	(1)	மோசமான நிலேயிலுள்ள கட்டிடம் அல்லது நிலத்தை அல்லது புல் பூண்டு முளேத்துள்ள கட்டிடம் அல்லது நிலத்தைச் சுத்தமாக்கும்படி அல்லது சுத்தி செய்யும்படி பிறப்பிக்கிற ஓர் உத்தரவுக்குக் கீழ்ப்படியத் தவறுதல்.	பத்து ரூபாய்

பிரிவு (1)	உட்பிரிவு அல்லது பகுதி (2)	விஷயம் (3)	விதிக்கப்படக் கூடிய அபராத தண்டனை (4)
100	(1)	லைசென்ஸில்லாமல் அல்லது லைசென்ஸுக்கு முரணாகத் தனிப்பட்ட மார்க்கெட் ஒன்றை வைத்து வருதல்.	நூறு ரூபாய்
100	(3)	ஸெர்டிபிகேட் இல்லாமல் தனிப்பட்ட மார்க்கெட்டில் கட்டணங்கள் வசூலித்து வாங்குதல்.	ஐம்பது ரூபாய்
102	—	தனிப்பட்ட மார்க்கெட்டில் அனுமதியின்றி பிராணி அல்லது பொருளை பகிரங்க விற்பனைக்காக காட்டி வைத்தல் அல்லது விற்றல்.	பத்து ரூபாய்
107	(1)	தனிப்பட்ட வண்டி ஸ்டாண்டு ஒன்றை லைஸென்ஸில்லாமல் அல்லது லைஸென்ஸுக்கு முரணாக வைத்து வருதல்.	இருபது ரூபாய்
111	—	லைஸென்ஸில்லாமல் அல்லது லைஸென்ஸுக்கு முரணாக ஓரிடத்தை தீங்கு விளைவிக்கத்தக்க அல்லது அபாயகரமான வியாபாரத்துக்காக உபயோகித்து வருதல்.	இருபது ரூபாய்
112	...	தொழிற்சாலை வொர்க் ஷாப் முதலியவற்றைச் சட்ட சம்மதமின்றி எழுப்புதல்.	நூறு ரூபாய்

IV ம்—ஷெட்யூல் — (190-வது பிரிவைப் பார்க்கவும்)

இடைக்கால ஷரத்துக்கள்

1. இந்த விதிகளிலே—

(i) “ **மேற்படி தேதி** ” என்பது இச் சட்டத்தின்படி ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலை ஏற்படுத்தி 11-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள தேதி எனப் பொருள்படும் ;

(ii) “ **பழைய சட்டம்** ” என்பது (சென்னை 1950-ம் வருடத்து X-வது சட்டமாகிய) 1950-ம் வருடத்திய சென்னைக் கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டம் எனப்பொருள்படும் ;

(iii) “ **பஞ்சாயத்து** ” என்பது பழய சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டதும் மேற்படி தேதியன்று இருந்துவருவதுமான ஒரு பஞ்சாயத்து எனப் பொருள்படும் ;

(iv) “ **கிராமம்** ” என்பது பழய சட்டத்தின்படி ஒரு கிராமமாக அறிவிக்கப்பட்டிருந்த யாதொரு பிரதேச விஸ்தீரணமெனப் பொருள்படும்.

I-ம் வகுப்பு பஞ்சாயத்தை “ பட்டணம் பஞ்சாயத்தாகவும்” II-ம் வகுப்பு பஞ்சாயத்தை “ கிராமப் பஞ்சாயத்தாகவும் ” மாற்றப்பட்டது

2. பழய சட்டத்தின்கீழ் I-ம் வகுப்புப் பஞ்சாயத்தென வகைப் படுத்தியிருந்த ஒவ்வொரு பஞ்சாயத்தும் இச் சட்டத்தின் கீழ் மேற்படி தேதியன்று பட்டணப் பஞ்சாயத்தாக வகைப்படுத்தப்பட்டிருப்பதாகக் கருதப்படும் ; மேற்படி தேதிக்கு முன் II-ம் வகுப்புப் பஞ்சாயத்துக்கள் என்றழைக்கப்பட்ட சகல பஞ்சாயத்துக்களும் மேற்படி தேதிக்குப் பிறகு கிராம பஞ்சாயத்துக்களென அழைக்கப்படும்.

இடைக்கால ஷரத்துக்கள்

I-ம் வகுப்பு பஞ்சாயத்து பிரதேசம் "பஞ்சாயத்து பட்டணம்" எனவும் II-ம் வகுப்பு பஞ்சாயத்து பிரதேசம் "பஞ்சாயத்து கிராமம்" எனவும் கருதப்படும்.

3. மேற்படி தேதிக்கடுத்து முன்னதாக I-ம் வகுப்பு பஞ்சாயத்தின் விசாரணை வரம்புக்குள்ளிருந்த ஒவ்வொரு பிரதேச விஸ்தீரணமும் இச் சட்டத்தின் கீழ் ஒரு பஞ்சாயத்துப் பட்டணமாக அறிவிக்கப்பட்டிருப்பதாய்க் கருதப்படும்; மேலும் மேற்படி தேதிக்கு முன்னதாக II-ம் வகுப்பு பஞ்சாயத்தின் விசாரணை வரம்புக்குள்ளிருந்த ஒவ்வொரு பிரதேச விஸ்தீரணமும் இச்சட்டத்தின்கீழ் ஒரு பஞ்சாயத்துக் கிராமமாக அறிவிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

அரசாங்கத்தினர்களின் எண்ணிக்கை முன் மாதிரியே இருக்கும்

4. பழய சட்டத்தின் கீழ் நிச்சயிக்கப்பட்டு மேற்படி தேதியன்று அமுலிலிருந்துவந்த ஒரு பஞ்சாயத்தின் அங்கத்தினர்களுடைய மொத்த எண்ணிக்கையானது இச்சட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அதன் அங்கத்தினர்களுடைய மொத்த எண்ணிக்கையெனக் கருதப்படும்.

இடைக் காலத்தில் மெம்பர்களின் நிலை

5. மேற்படி தேதியன்று பதவி வகித்து வருகிற பஞ்சாயத்து அங்கத்தினர்கள் இச் சட்டத்தின்படிக்கான பஞ்சாயத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் எனக் கருதப்படுவார்கள்; மேற்படி அங்கத்தினர்கள் இது விஷயமாய்அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய் நியமிக்கக்கூடிய தேதிவரையில் அல்லது அத்தகைய தேதி எதுவும் நியமிக்கப்படாவிட்டால் இச் சட்டம் அமுலுக்கு வராதிருந்தால் அவர்களுடைய பதவிக்கால அளவு முடிவடைந்திருக்கக்கூடிய தேதி வரையில் தொடர்ந்து பதவி வகித்துவருவார்.

ஒதுக்கி வைக்கப்பட்ட ஸ்தானங்கள்

6. பழய சட்டத்தின்கீழ் அனுபந்த ஜாதியார்களுக்கென்று ஒதுக்கப்பட்டவையும் மேற்படி தேதியன்று அமுலிலிருந்தவையுமான ஸ்தானங்கள் இச் சட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

வார்டுகள்

7. (1) பழைய சட்டத்தின்கீழ் I-ம் வகுப்பு பஞ்சாயத்துக் கிராமம் ஒன்றை அல்லது II-ம் வகுப்பு பஞ்சாயத்துக் கிராமமொன்றை வார்டுகளாகப் பிரித்து ஷெ தேதியன்று அது அமுலிலிருந்தால் அப் பிரிவினையானது மேற்படி தேதியன்றும் அது முதற்கொண்டும் இச் சட்டத்தின்கீழ் யாதொரு பஞ்சாயத்துப் பட்டணத்தை அல்லது யாதொரு பஞ்சாயத்துக் கிராமத்தை வார்டுகளாகப் பிரித்திருப்பதாகக் கருதப்படும்.

(2) மேற்படி தேதிக்குப் பிறகு கூடிய விரைவில் இன்ஸ்பெக்டர் 5-வது விதியின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததாக கருதப்படுகிற அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் எந்த வார்டுக்குப் பிரதிநிதியாக இருப்பதாய்க் கருதவேண்டுமென்பதைத் தீர்மானிக்கவேண்டும்.

தலைவர்–உபதலைவர்

8. மேற்படி தேதியன்று பதவி வகித்துவருகிற ஒரு பஞ்சாயத்தின் தலைவரும் உப தலைவரும் இச் சட்டத்தின் ஷரத்துக்களுக்குட்பட்டு, 5-வது. விதியில் குறிப்பிட்டுள்ள தேதி வரையில் மேற்படி தலைவர் அல்லது உப தலைவராகத் தொடர்ந்து பதவி வகித்துவரவேண்டும்.

தலைவர் – உப தலைவர்களின் – காலி ஸ்தானங்கள்

9. (1) ஒரு பஞ்சாயத்தின் தலைவர் அல்லது உப தலைவர் பதவியில் மேற்படி தேதியன்று ஏதாவது காலி ஸ்தானம் ஏற்பட்டால் அல்லது 5-வது விதியில் குறிப்பிட்டுள்ள தேதிக்குமுன் அந்த காலி ஸ்தானம் ஏற்பட்டால் அதை இச் சட்டத்தில் கண்ட ஷரத்துகளின்கீழ் தேர்தல் மூலமாக நிரப்பவேண்டும்.

(2) ஒரு பஞ்சாயத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் பதவியில் அத்தகைய காலிஸ்தானம் ஏற்பட்டால் அதை இச் சட்டத்தில் கண்ட ஷரத்துக்களின்கீழ் தேர்தல் மூலமாக நிரப்பவேண்டும்.

(3) (1) அல்லது (2) உப விதியின்கீழ் ஒரு பஞ்சாயத்தின் தலைவர், உப தலைவர் அல்லது அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் 5-வது விதியில் குறிப்பிட்டுள்ள தேதி வரையில் மட்டுமே பதவி வகித்து வரவேண்டும்.

விளக்கம்:—இப் பிரிவின் காரியங்களுக்காக ஒரு பஞ்சாயத்தின் தலைவர், உப-தலைவர் அங்கத்தினர் பதவிக்கு மேற்படி தேதிக்கு முந்திய எந்தக் காலத்திலும் யாரும் தேர்ந்தெடுக்கப் படவில்லையென்றால்; அந்தப் பதவி மேற்படி தேதியன்று காலியாயிருப்பதாகக் கருதப்படும்.

கலைக்கப்பட்ட பஞ்சாயத்துகளை மீண்டும் அமைப்பது

10. பழைய சட்டத்தின்கீழ் கலைக்கப்பட்டு மேற்படி தேதியன்று மீண்டும் அமைக்கப்படவேண்டியுள்ள ஒரு பஞ்சாயத்தை இச் சட்டத்தில் கண்ட ஷரத்துகளை அனுசரித்து மீண்டும் அமைக்க வேண்டும்.

ஜில்லா போர்டுகளின் - பஞ்சாயத்துகளின் - ஆரம்ப பள்ளிக்கூடங்கள்—ஜங்கம் சொத்துகள்—பிராவிடெண்டு பண்டு முதலியன

11. (1) இந்தச் சட்டத்தில் கண்ட ஷரத்துக்களையனுசரித்து பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களுக்கு மாற்றப்பட்டுள்ள ஜில்லா போர்டுகளாலும் பஞ்சாயத்துக்களாலும் வைத்துவரப்பட்ட ஆரம்பப் பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த ஆஸ்திகளில் அந்தப் பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் எவையாயிருந்தாலும் அத்தகைய சகல சொத்துக்களும் சகல உரிமைகளும் அதிகாரங்களும் அடங்குவதாகக் கருதப்படும். முக்கியமாக அவற்றில் ரொக்கக் கையிருப்பும், சேமிப்பு நிதிகளும், முதலீடுகளும், டிபாஸிட்டுகளும் சந்தர்ப்பத்துக்கேற்ப மேற்படி பஞ்சாயத்துக்கள் அல்லது ஜில்லா போர்டுகள் வசமிருக்கக்கூடிய அத்தகைய சொத்து விஷயமாய் அல்லது அதன் காரணமாக ஏற்படக்கூடிய மற்றெல்லா பற்றுகளும் உரிமைகளும், அந்த பள்ளிக்கூடங்களுக்குச் சம்பந்தப்பட்ட சகல கணக்குப் புஸ்தகங்களும் தஸ்தவேஜிகளும் அடங்கும்; பொறுப்புகள் என்பதில், அப்போது இருந்து வருபவையும் மேற்படி பள்ளிக்கூடங்களுக்குச் சேர்ந்தவையான சகல விதமான கடன்கள், பொறுப்புகள் இது எதுவாயிருந்தபோதிலும் அவை எல்லாம் அடங்கும்.

(2) மேற்படி பள்ளிக்கூட வேலையாட்களின் நன்மைக்காக யாதொரு பஞ்சாயத்து அல்லது ஜில்லா போர்டு ப்ராவிடெண்ட் பண்டு அல்லது சூபர் ஆனுவேஷன் பண்டு என்கிற ஓய்வுக்கால நிதி அல்லது வேறு யாதொரு வகையான நிதி ஒன்றை ஏற்படுத்தியிருந்து ஷை தேதியிலிருந்து அத்தகைய யாதொரு நிதிக்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகைகளும் அந்த நிதிக்குச் சேர்ந்த வேறு எவையாகிலும் ஆஸ்திகளும் மேற்படி தேதியன்று பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு மாற்றலாகிவிடுவதுடன் அதில் சங்கிரமித்திருக்கும்.

(3) பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு மாற்றப்பட்டு அதில் சங்கிரமித்துள்ள யாதொரு பஞ்சாயத்து அல்லது ஜில்லா போர்டு ஆரம்பப் பள்ளிக்கூடம் ஒன்றைச் சேர்ந்தவராய் மேற்படி தேதிக்கு அடுத்து முன்னதாய் முழுவதும் அல்லது முக்கியமாய் அந்தப் பள்ளிக்கூடம் சம்பந்தமாக மேற்படி பஞ்சாயத்து அல்லது ஜில்லா போர்டால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள முழு நேர ஆசிரியர் அல்லது இதர வேலையாள் ஒவ்வொருவரும், அது தேதியன்றும் அது முதற்கொண்டும் மேற்படி பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் வேலையாளாகிவிடுவார்; மேலும், இச் சட்டம் நிறைவேற்றப்படாமலிருந்தால் மேற்சொன்ன தேதியன்று எந்த வேலைத் தரத்திலும் எந்த ஊதியத்திலும் அதே வேலை நிபந்தனைகளின்பேரிலும் பென்ஷன் கிராட்யுடி என்னும் நன்கொடை இதர விஷயங்கள் சம்பந்தமாக எந்த உரிமைகளையும் பாத்தியதைகளையும் பெற்றிருப்பாரோ அதே நிலைமையில் அவர்தமது வேலையை வகித்து வருவார்; மேலும் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் தமது வேலை இறுதி செய்யப்படுகிறவரையில் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அவருடைய ஊதியம் வேலை நிபந்தனைகள் முதலியவற்றை கிரமமாக மாற்றியமைக்கிறவரையில் அவர் அவ்வாறு தொடர்ந்து வேலைபார்த்துவரவேண்டும்.

(4) இந்த விதியின்படிக்கான நியமனங்களை முறைபடுத்துவதற்காகவும் மற்றப்படி அதன் ஷரத்துக்களை கிரமமாக அமுலுக்குக் கொண்டு வருவதற்காகவும் தாங்கள் அவசியமெனக் கருதக்கூடிய பொதுவான அல்லது விசேஷ கட்டளைகளை அரசாங்கத்தார் பிறப்பிக்கலாம். அத்தகைய கட்டளைகளை மீறி பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் கீழ் யாதொரு பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருந்தால், அது செல்லுபடியாகும் முறையில் செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படமாட்டாது.

இடைக்கால ஷரத்துக்கள்

(5) யாதொரு நபர் ஒரு பஞ்சாயத்து அல்லது ஜில்லா போர்டின் முழுநேர ஆசிரியரா அல்லது இதர வேலையாளா என்பது பற்றியாவது அல்லது மேற்சொன்ன தேதிக்கு அடுத்து முன்னதாக யாதொரு பஞ்சாயத்து அல்லது ஜில்லா போர்டு முழுவதும் அல்லது முக்கியமாக சம்பந்தப்படுகிறவரையில் யாதொரு ஆசிரியர் அல்லது இதர வேலையாள் வேலையில் அமர்த்திக் கொள்ளப்பட்டார் என்பதைப்பற்றியாவது யாதொருபிரச்னை எழுந்தால், பஞ்சாயத்து பள்ளிக் கூடங்களின் விஷயத்தில் மேற்படி பிரசினையின்பேரில் இன்ஸ்பெக்டரின் தீர்மானம், ஜில்லா போர்டு பள்ளிக்கூடத்தின் விஷயத்தில் அரசாங்கத்தாரின் தீர்மானமும் முடிவானவையாகும்.

ஜில்லா போர்டுகள் சிப்பந்திகள்

12. (ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் ஆசிரியர்கள் இதர வேலையாள்கள் நீங்கலாக) யாதொரு ஜில்லா போர்டைச் சேர்ந்த எந்த அதிகாரிகளும் ஊழியர்களும் அரசாங்கத்தாரால் அல்லது இது விஷயமாய் அவர்களிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கக்கூடிய உத்தியோகஸ்தர்களால் தகுதியானவர் என்று கருதப்படுகிறுர்களோ அந்த அதிகாரிகளும் ஊழியர்களும் எந்தப் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின்கீழ் உள்ள ஆபீஸ்களுக்கு நியமிக்கப்பட தகுதி பெற்றவர்களென அரசாங்கத்தாரால் அல்லது மேற்படி உத்தியோகஸ்தரால் அவர்களுடைய யுக்தானுசாரப்படி கருதப் பெறுகிருர்களோ அவர்களை மேற்படி ஆபிஸ்களுக்கு நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பெறுபவர்களின் ஊழிய நிபந்தனைகள் அரசாங்கத்தார் அவ்வப்போது செய்கிற விதிகளால் முறைப்படுத்தப்படவேண்டும்.

இந்த விதியினுல் பாதிக்கப்படுகிற அல்லது தமக்குக் கொடுக்கப்படும் ஏதாவது பரிகாரம் வித்தியாசப்படுவதால் பாதிக்கப்படுகிற ஜில்லா போர்டு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியர் ஒருவர் தொடருகிற யாதொரு வழக்கு அல்லது நஷ்ட விமோசன மனு அல்லது பிரதிபலன் மனு எதையும் எந்தக் கோர்ட்டாரும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

சத்திரம்—மருந்துசாலை பிரசவ ஆஸ்பத்திரி—சிசு சம்ரக்ஷணசாலை—வாசகசாலை.

13. ஷை தேதிக்குள் முன் ஒரு பஞ்சாயத்தினுல் ஏற்படுத்தி வைத்து வரப்படுகிற சத்திரம் ஒவ்வொன்றும், ஒவ்வொரு மருந்து சாலையும் சிசு சம்ரக்ஷணசாலை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வாசகநிலையம் அல்லது நூல் நிலையமும் ஷை தேதியன்றும் அதுமுதற்கொண்டும் பிரஸ்தாப பிரதேசம் விஷயமாக விசாரணை அதிகாரம் வகிக்கிற பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலிடம் சங்கிரமிக்க வேண்டியதுமன்றி அதனுல் அவை வைத்துவரப்படவும் வேண்டும்.

ஜனன - மரண பதிவு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு மாற்றப்பட்டது.

14. மேற்சொன்ன தேதிக்கு முன்பு யாதொரு பஞ்சாயத்து ஜனன-மரணப் பதிவு சம்பந்தமான எவையேனும் ரெஜிஸ்டர்களையும் கணக்குகளையும் வைத்துவந்தால் அவை ஷை தேதியன்று இன்ஸ்பெக்டர் பொதுவான அல்லது விசேஷ உத்தரவு பிறப்பித்து அதன்மூலம் குறிப்பிடக் கூடிய அதற்குப் பிற்பட்ட ஒரு தேதியன்று விரைவில் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு மாற்றலாகிவிடும்.

பஞ்சாயத்துகளின் வாசகசாலைகள் பஞ்சாயத்தின் யூனியன் கவுன்சில்களுக்கு மாற்றப்பட்டன

15. ஷை தேதிக்கு அடுத்து முன்னதாக யாதொரு பஞ்சாயத்து அல்லது ஜில்லா போர்டு நடத்திவந்த சகல நூல் நிலையங்களும் அவற்றைச் சேர்ந்த புஸ்தகங்கள், சாமான்கள் இதரஆஸ்திகள் இவையெல்லாம் ஷை தேதியன்றும் அது முதற்கொண்டும் அரசாங்கத்தார் பொதுவான அல்லது விசேஷ உத்திரவுமூலம் குறிப்பிடக்கூடிய அதிகார சபையாருக்கு மாற்றலாகிவிடுவதுடன் அவர்களால் வைத்துவரப்படவும் வேண்டும்; ஆனுல், அத்தகைய ஓர் உத்தரவை அவ்வப்போது மாற்றியமைக்க அரசாங்கத்தாருக்கு அதிகாரம் உண்டு. மாற்றியமைக்கப்பட்ட ஷை உத்தரவை ஷை அதிகாரி அமுலுக்குக்கொண்டுவருவார்.

இடைக்கால ஷரத்துக்கள்

லாண்டு செஸ்ஸை பஞ்சாயத்துகளுக்கும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கும் பங்கிட்டு கொடுக்கப்படும்

16. இச்சட்டத்தின்படி யாதொரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதியென்று அறிவிக்கப்பட்டிருக்கின்ற யாதொரு பிரதேசத்திலே 11-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அமைக்கப்பட்டிருக்கிற பசலி வருஷத்திற்காக (சென்னை 1920-ம் வருடத்து XIV-வது சட்டமாகிய) 1920-ம் வருடத்திய சென்னை ஜில்லா போர்டுச் சட்டத்தின் 78-வது பிரிவின்கீழ் அத் தொகுதி சம்பந்தமாக விதிக்கப்படுகிற நிலவரியானது அந்தத் தொகுதியுள்ள பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்கள், பஞ்சாயத்துகள் இடையே அரசாங்கத்தார் பொதுவான அல்லது விசேஷ உத்தரவுகள் மூலமாகக் கட்டளையிடக்கூடிய விதமாய் வினியோகிக்கப்படவேண்டும்.

ஆரம்ப கல்வி நிதி பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலை சேரும்

17. (சென்னை 1920-ம் வருடத்து VIII-வது சட்டமாகிய) 1920-ம் வருடத்திய சென்னை ஆரம்பக் கல்விச் சட்டத்தின் கீழ் ஒரு ஜில்லா போர்டுக்காக அமைக்கப்பட்டுள்ள ஆரம்பக் கல்வி நிதியானது, ஷை தேதிக்கு அடுத்து முன்னதாக ஷை ஜில்லா போர்டு விசாரணை அதிகாரம் செலுத்தி வந்த பிரதேசம் விஷயமாய் இப்போது விசாரணை அதிகாரம் வகிக்கிற பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் விஷயங்களுக்காக அமைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன் (கல்வி) நிதியின் பாகமாக அமைவதுமன்றி அரசாங்கத்தார் உத்தரவு மூலம் குறிப்பிடக்கூடிய வீதாச்சாரங்களின்படி அவ்வாறு அமையும்.

ஆரம்ப கல்வி நிதியை பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் வசூலிக்கும்

18. மேற்சொன்ன தேதிக்கு முன் யாதொரு ஜில்லா போர்டு 1920-ம் வருடத்திய சென்னை ஆரம்பக் கல்விச் சட்டத்தின் கீழ் விதித்து வாங்கிய யாதொரு வரி ஷை தேதியன்து அத்தேதி முதற் கொண்டும் இச் சட்டத்தின்படிக்காக பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலால் விதிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

ரயில்வே செஸ் முதலியன பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு சேரும்

19. (சென்னை 1920-ம் வருடத்து XIV-வது சட்டமாகிய). 1920-ம் வருடத்திய சென்னை ஜில்லா போர்டுகள் சட்டத்தில் கண்ட 236-வது பிரிவின் கீழ் அந்த ஜில்லா போர்டு உபயோகித்துக் கொள்ளலாமென்று அனுமதிக்கப்பட்டவையும், ஆனல் மேற்படி தேதிக்குஅடுத்து முன் அவ்வாறு உபயோகிக்கப்படாமல் நிற்பவையுமான எவையேனும் தொகைகள் சம்பந்தப்பட்ட பிரதேசம் விஷயமாய் விசாரணை அதிகாரம் வகிக்கிற பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களுக்கு, அரசாங்கத்தார் பொதுவான அல்லது விசேஷ உத்தரவுகள் மூலமாய் குறிப்பிடக்கூடிய அளவுவரையிலும் நிபந்தனைகளுக்குட்பட்டு மாற்றப்பட்டுவிடும்

ஜில்லா போர்டுகளின் பொது நிதி பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலை சேரும்

20. இச் சட்டத்தின் கீழ் யாதொரு பஞ்சாயத்து அபிவிருத்தித் தொகுதி என்று அறிவிக்கப்படுகிற ஒரு பிரதேசத்தின் விஷயமாய் விசாரணை அதிகாரம் வசித்து வருகிற ஜில்லா போர்டைச் சேர்ந்தவையும் இது விஷயமாய் அரசாங்கத்தார் குறிப்பிடக் கூடியவையுமான பொது நிதிகளின் பாகமானது ஷை தேதியன்றும் அது முதற்கொண்டும் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் பொது நிதிகளுக்கு மாற்றலாகி விடுவதுடன் அவற்றின் பாகமாய் அமைய வேண்டும்.

ஜில்லா போர்டின் ஒப்பந்தங்கள் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் ஒப்பந்தங்களாகும்.

21. பழைய சட்டத்தின்படியாவது (1920-ம் வருடத்து XIV-வது சட்டமாகிய) 1920-ம் வருடத்திய சென்னை ஜில்லா போர்டுகள் சட்டத்தின் படியாவது தனக்குள்ள அதிகாரங்களைக் கொண்டு யாதொரு பஞ்சாயத்து அல்லது ஜில்லா போர்டு ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்தால் அந்த ஒப்பந்தம் இச்சட்டத்தின்படி, தனக்குள்ள அதிகாரங்களைக் கொண்டு பொருத்தமான காலத்தில் இச் சட்டம் செலாவணியில் இருந்திருந்தால் எந்த பிரதேசம் விஷயமாய் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் விஷயமாய் விசாரணை அதிகாரம்

வகித்து வந்திருக்குமோ அந்தப் பிரதேசம் விஷயமாய் விசாரணை அதிகாரம் வகிக்கிற ஷை கவுன்ஸிலால் செய்து கொள்ளப்பட்டிருப்பதாகக் கருதப்படும்; அத்தகைய ஒரு ஒப்பந்தத்தின்படி சேர்ந்து வந்த அல்லது சேர்ந்து வரக்கூடிய சகல உரிமைகளும் பொறுப்புகளும் ஷை பஞ்சாயத்து அல்லது ஜில்லா போர்டு உரிமைகள் அல்லது பொறுப்புகளாய் இருந்திருக்கக்கூடிய வரையில் மேற் சொன்ன பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் உரிமைகள் அல்லது பொறுப்புகளாயிருக்க வேண்டும்.

இந்த விதியின் காரியங்களுக்காக யாதொரு ஒப்பந்தத்தின் கீழ் சேர்ந்திருக்கிற அல்லது சேர்ந்து வரக்கூடிய பொறுப்புகளில் கீழ்க்கண்டவையும் அடங்குவதாகக் கருதப்படும் :—

(a) ஷை ஒப்பந்தம் சம்பந்தமான நடவடிக்கைகளில் யாதொரு கோர்ட்டாரால் அல்லது இதர நியாய சபையாரால் பிறப்பிக்கப்பட்ட ஓர் உத்தரவு அல்லது தீர்ப்பை நிறைவேற்றுவதன் நிமித்தமாக ஏற்படுகிற யாதொரு பொறுப்பு.

(b) அத்தகைய நடவடிக்கைகளுக்குப் பிடித்த அல்லது அவை சம்பந்தமான செலவுகள் நிமித்தமாக ஏற்படுகிற யாதொரு பொறுப்பு.

பழைய கட்டடங்களின் கீழ் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டு போகலாம்.

22 (1) பழைய சட்டத்தின் கீழ் யாதொரு பஞ்சாயத்தால் அல்லது இதர அதிகார சபையால் அல்லது அதற்கெதிராக எடுத்துக்கொள்ளப்பட்ட சகல நடவடிக்கைகளும் இச் சட்டத்துக்குப் பொருத்தமற்றவையாயிராதவரையில், இச் சட்டத்தின் கீழ் மேற்படி பஞ்சாயத்தால் அல்லது அதிகார சபையால் அல்லது அதற்கெதிராகத் தொடர்ந்து நடத்திக்கொண்டு போகப்படலாம்.

(2) (சென்னை 1920-ம் வருடத்து XIV-வது சட்டமாகிய) 1920-ம் வருடத்திய சென்னை ஜில்லா போர்டுகள் சட்டத்தின்கீழ் யாதொரு ஜில்லாபோர்டால் அல்லது இதர அதிகார சபையால் எடுத்துக் கொள்ளப்பட்ட சகல நடவடிக்கைகளும் இச் சட்டத்திற்குப் பொருத்தமற்ற வையாயிராதவரையில், இச் சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலால் அல்லது தகுதிவாய்ந்த இதர அதிகார சபையால் அல்லது அதற்கெதிராகத் தொடர்ந்து நடத்திக்கொண்டு போகப்படலாம்.

பழைய சட்டங்களின்கீழ் உள்ள மனுக்கள் விஷயங்கள், அப்பீல்கள் இந்த ஆக்டின் படிக்கும் கிடைக்கும்

23. மேற்படி தேதிக்கடுத்து முன்னதாக விசாரணையதிகாரம் செலுத்தி வந்த யாதொரு I-ம் வகுப்பு பஞ்சாயத்து அல்லது II-ம் வகுப்பு பஞ்சாயத்து அல்லது ஜில்லா போர்டுக்கு அல்லது அதற்கெதிராக மனு, வழக்கு அல்லது அப்பீல் மூலமாகக் கிடைக்கத்தக்க யாதொரு பரிகாரம் மேற்படி தேதிக்குப்பிறகு சம்பந்தப்பட்ட பட்டணப் பஞ்சாயத்து, கிராமப் பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்குக் கிடைக்கத்தக்கதாகும்.

முன் நடவடிக்கைகள் வியவஹாரங்கள் கிரமமாக நடத்தப்பட்டவையாக கருதப்படும்.

24. மேற்படி தேதிக்கடுத்து முன்னதாக விசாரணையதிகாரம் வகித்து வந்த யாதொரு I-ம் வகுப்பு பஞ்சாயத்து அல்லது II-ம் வகுப்பு பஞ்சாயத்து அல்லது ஜில்லா போர்டு மேற்கொண்ட யாதொரு நடவடிக்கை, இது விஷயமாய் அரசாங்கத்தார் பொதுவான அல்லது விசேஷ உத்திரவு மூலமாகப் பிறப்பிக்கக்கூடிய கட்டளைகளுக்குட்பட்டு, சம்பந்தப்பட்ட பட்டணபஞ்சாயத்தால் அல்லது கிராமப் பஞ்சாயத்தால் அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கருதப்படும்; ஆனால், அந்த பட்டணப் பஞ்சாயத்து, கிராம பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் மேற்கொள்ளுகிற நடவடிக்கையின் மூலம் அது ரத்து செய்யப்பட்டாலும் ரத்து செய்யப்படுகிற வரையிலும் அவ்வாறு கருதப்படமாட்டாது.

25. அனுமத்தாக விடப்பட்டுள்ள யாதொரு இனமிது முடிவில் இந்த ஷெட்யூலில்கண்ட ஷரத்துக்களில் சொல்லியிருக்கிற தன்மையுள்ள யாதொரு ஆஸ்தி அல்லது பொறுப்பைப் பாதிக்குமென்று தெரிய வந்தால், அந்த ஷரத்தையனுசரித்துஅது விஷயமாய் விவரிக்கவேண்டும். இந்த ஷெட்யூலில் கண்ட மேற்சொன்ன ஷரத்துக்களில் விவகரிக்கப் பட்டிராதவையும் யாதொரு ஜில்லா போர்டைச் சேர்ந்தவையுமான எவையேனும் ஆஸ்திகளின் அல்லது பெறுப்புகளின் பயன் அல்லது பொறுப்பு அரசாங்கத்தார் உத்தரவு பிறப்பித்து அதன் மூலம் கட்டளையிடக்கூடிய நீதிச் சரிக்கட்டுதல்களுக்குட் பட்டவையாகும்.

நிறுத்தி வைத்த பாபத்துகளை அரசாங்கம் சரிபடுத்தும்

26. இந்த விதிகளின் அல்லது இச் சட்டத்தினல் திருத்தப்பட்டுள்ள எவையேனும் சட்டங்களின் ஷரத்துக்களை, அமுலுக்குக்கொண்டுவருவதில் ஏதேனும் கஷ்டமேற்பட்டால், அரசாங்கத்தார், அந்த கஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்காக அவசியமெனத் தங்களுக்குத் தோற்றக்கூடிய எவையாகிலும் சந்தர்ப்பத்துக்குத் தேவையாயிருக்கக்கூடிய பிரகாரம் உத்தரவு பிறப்பித்து அதன் மூலமாகச் செய்யலாம்.

இந்த இடைக்கால விஷயங்களில் கஷ்டம் இருந்தால் அரசாங்கம் சரிப்படுத்தும்

1958 ஆம் வருஷத்திய மதராஸ் பஞ்சாயத்துக்கள் 35-வது சட்டம் முற்றிற்று.

இதன் பொருள் அகராதியை 498-ம் பக்கத்தில் பார்க்கவும்

இந்த மதராஸ் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் சுருக்கத்தின்

பொருளடக்கம்

1. இந்த சட்டத்தின் முக்கிய நோக்கம்
2. இந்த சட்டம் எப்படி எப்பொழுது அமுலுக்கு வரும்
3. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்
4. பஞ்சாயததுகளைகுறித்த சிறந்த ஏற்பாடுகள் : மேலும் செய்ய வேண்டியவை
5. இன்ஸ்பெக்டரும், கிராமங்களும், பஞ்சாயத்துகளும்
6. பஞ்சாயத்துகள்
7. வாக்காளர்கள், (வோட்டர்கள்) அபேக்ஷகர்கள், மெம்பர்கள் தெரிந்தெடுப்பது
8. மெம்பர்கள் ; யோக்கியதை குறைவுகள் பாத்யதைகள்
9. பிரெஸிடெண்டுகள். வைஸ் - பிரஸிடெண்டுகள்
10. அரசாங்கம், இன்ஸ்பெக்டர், பஞ்சாயத்து ஆபீஸர்கள்
11. ப்ரஸிடெண்டு, நிர்வாக அதிகாரி, நிர்வாக உத்தியோகஸ்தர்
12. கூட்டங்கள் (மீட்டிங்குகள்)
13. கமிட்டிகள்
14. சிப்பந்திகள்
15. மதராஸ் கவர்ன்மெண்டு
16. டிஸ்டிரிக்ட் கலெக்டர்
17. பண வருமானமும், செலவும்
18. வரிகள்
19. வீட்டு வரி
20. தொழில் வரி
21. வண்டி வரி
22. சொத்துகள் - பொதுக்காரியங்களுக்காக சொத்து சம்பாதிப்பது
23. உபசாரப் பத்திரங்களும் (அட்ரஸ்) சட்டங்களும்
24. பொது ஜன சௌக்கியம்
25. பொது பாட்டைகளும் சொந்த பாட்டைகளும்
26. கல் வெட்டியெடுப்பது முதலியவை
27. மார்கெட்டுகளும், வண்டித் தொட்டிகளும்
28. ஆடு மாடுகளை அடிக்கும் தொட்டிகள்
29. தொழில்களும் தொழிற்சாலைகளும்
30. லைசென்ஸும் அனுமதியும் பொதுவாக
31. மேற்பார்வையிடல்
32. நிறுத்தல் முகத்தல், அளவு கருவிகள் அதாவது படி, வீசை முதலியன
33. ஜனங்கள் வழக்கமாய் கூடும் இடங்களைக் குறித்த சட்டம்
34. அப்பீல்கள்
35. விதிகளும் உபசட்டங்களும்
36. தண்டனைகளும், வியாஜ்யம் தொடர்தலும்
37. பஞ்சாயத்துகளின் மீது வியாஜ்யம்
38. பஞ்சாயத்துகளின் தோஷம் இருந்தால் அதற்கு சிவில் கோர்ட்டுகள் பரிகாரம் கொடுக்கலாம்
39. முடிவு

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் சுருக்கம்

1960ஆ ஜனவரி மாதம் 1-ம் தேதி அன்று பூரா சட்டமும் அமலுக்கு வரும்

1. பீடிகையின் படிக்கு "உணவு உற்பத்தியை அதிகரிப்பதும்" "ஜனத்தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்துவதும்" ஆகும். இதில் "நில உச்ச வரம்பு திட்டமும்" "உணவுத் தானியவர்த்தகத்தை அரசாங்கம் நடத்த வேண்டும்" முதலியவை சேரும், இவைகளை குறித்து பக்கங்கள் 15, 181 களில் பார்க்கவும்.

இந்த சட்டத்தின் முக்கிய நோக்கம்

2. இந்த சட்டத்தை அரசாங்கத்தார் 30-1-1959ல் கெஜட்டில் அச்சிட்டார்கள். இதில் 198 பிரிவுகளும் 4 ஷெட்டியூல்களும் உண்டு. பிரிவுகள் 1,196 மாத்திரம் உடனே அமுலுக்கு கொண்டு வரப்பட்டன. அதனல் ஜில்லா போர்டுகளின் தேர்தல்களை 1961-ம் வருடம் அக்டோபர் மாதம் 2-ம் தேதி வரையில் ஒத்திவைக்கப்பட்டது. இதற்குள்ளாக இந்த மொத்த சட்டத்தையும் தமிழ் நாடு பூரா வுக்கும் பரவச் செய்ய வேண்டும். அப்படி அது பரவியதும் ஜில்லா போர்டுகள் எடுத்துவிடப்படும். அவைகளுக்கு பதி லாக 1958-ம் வருடத்திய 18-வது சட்டத்தின்கீழ் அமைக்கப் பட்ட ஜில்லா அபிவிருத்தி சபைகள் அமைக்கப்பட்டு அவை பரிபாலனம் செய்யும். அந்த சட்டத்தை இந்த புத்தகத்தின் முடிவில் பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது காணவும் [பிரிவு 1 (3)]

இந்த சட்டம், எப்படி எப்பொழுது அமுலுக்கு வரும், ஜில்லா போர்டுகள் எப்போது எடுத்துவிடப்படும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் எப்போது வரும்

இந்த புத்தகத்தில் உள்ள புதிய சட்டம் பஞ்சாயத்து யூனியன்கள் உள்ள பிரதே சங்களில் மாத்திரம் உபயோகப்படும். பஞ்சாயத்து யூனியன்கள் இல்லாத இடங் களிலும் அரசாங்கம் இஷ்டப்பட்டால் இந்த சட்டத்தை மீதி பஞ்சாயத்துகளுக்கும் பர வச் செய்யலாம், அல்லது மீதி பஞ்சாயத்துகள் 1950-ம் வருடத்திய 10-வது சட்ட மாகிய மதராஸ் கிராம பஞ்சாயத்துகள் சட்டத்தினல் ஆளப்படும். 1959ஆ முதலில் இந்த 1958ஆத்திய 35-வது சட்டமாகிய மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தையும் மொத்த பட்டண பஞ்சாயத்துகளுக்கும் கிராம பஞ்சாயத்துகளுக்கும் உடனே பரவும் படியாக செய்யவேண்டும் என்று மனு போட்டிருக்கிறேன். அதையும் மதராஸ் அரசாங்கத்தார் தீவிரமாக கவனித்து வருகிறார்கள்.

3. இதை குறித்து 7-வது 11வது பிரிவுகளையும் 56-60, பக்கங்களையும் பார்க் கவும். இந்த சட்டம் அமலுக்கு வருவதற்கு முந்தியிலிருந்து சில இடங்களில் பிளாக் (அபிவிருத்தி) டிவலெப்மெண்ட் தொகுதிகள் இருந்து வருகின்றன. அவைகளுக்கு என்று இந்தியா அரசாங்கமும், மதராஸ் அரசாங்கமும் கோடி கணக்கில் ரூபாய்கள் செலவு செய்தார்கள். அவைகளில் அங்கிருக்கும் பிரதேச மக்களுக்காகவாவது அவர்களுடைய பிரதிநிதிகளுக்காவது யாதொரு வாய்ப்பும் இல்லா மல் இருந்தது. அவைகளை இந்த சட்டத்தின் படிக்கு பஞ்சாயத்துகளின் பிரதிநிதி அங்கத்தினர்களாலும், பட்டண பிரதேச கமிட்டி பிரதிநிதி அங்கத்தினர்களாலும் நிறுவப்படும். அப்போது அவைகளின் பெயர்கள் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் எனப்படும். இவைகளில் மதராஸ் சட்ட அசெம்பளி மெம்பர்களுக்கும் கவுன்சில் மெம்பர்களுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனல் அவர்கள் யோசனைகள் கூறலாமே ஒழிய வோட்டு கொக்கலாகாது.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள்

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலும் ஒரு அக்ராசனரையும். உப அக்ராசனரையும் தேர்ந்து எடுத்து கொள்ளவேண்டும். ஒரு கமிஷனரையும் தன்

காரியங்களை நிறைவேற்ற வைத்து கொள்ளவேண்டும். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் இந்த சட்டத்தில் கண்ட பிரிவுகள் படிக்கு நடந்து கொள்ளவேண்டும். மீதி விஷயங்களில் மதராஸ் டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடிகளின் சட்டத்தின் படிக்கு நடந்து கொள்ளவேண்டும்.

பஞ்சாயத்துக்களைக் குறித்த சிறந்த ஏற்பாடு கள் மேலும் செய்ய வேண்டியவை

4. இந்தச் சட்டமானது 1949ஹூத்திய இந்திய அரசியல் அமைப்பு 40 வது ஆர்டிகள் படிக்கு ஒத்ததாக இருக்கிறது. அதாவது அரசாங்கம் பஞ்சாயத்துகளை ஏற்படுத்த வேண்டு மென்றும் அவைகள் சுய ஆட்சி முறையில் நடந்து கொள்வதற்கு அவைகளுக்கு வேண்டிய அதிகாரங்களை ராஜாங்கம் அளிக்கவேண்டு மென்பதுதான் அதனுடைய நோக்கம். கிராமங்களில் கக்ஷிகள் இருக்கின்றன அவைகளைப் போக்கடிக்க கிராமத்தாருக்கு அதிக சுதந்திரங்கள் கொடுக்கவேண்டும். ஆனல் அப்படி கிராமவாசிகளை தற்கால கவர்ன்மெண்டார் பூர்ணமாக நம்பியுள்ளதாக இல்லை. இந்த ஆக்ட்டுகள் ஆசாரத்திற்கு வந்து 9 வருடங்கள் ஆயினும் இதுவரையிலும், கிராம யாவத்து புரம்போக்குகளை அவைகளிடம் ஒப்படிக்கவில்லை. கிராமங்களிலுள்ள சகலமான கிராம நடவடிக்கைகளை கடைசியாக கிராமவாசிகளுக்கே ஒப்புவிப்பது அவசியமாகும். அதற்கு ஐயமில்லை. இன்னும் வீட்டு வரியை அனேகமான பஞ்சாயத்துக்கள் விதிக்காமல் இருக்கின்றன. நாங்கள் இதன் முன் பதிப்பில் குறிப்பில் தெரிவித்தப்படிக்கு சிறிய கிராமவாசிகள் இந்த வீட்டு வரி, தொழில் வரி, வண்டி வரியை வெறுக்கிருர்கள், அதை கவர்ன்மெண்டார் உடனே கவனிக்க வேண்டும். கிராமங்களில் யாதொரு காரியம் செய்ய வேண்டு மென்ருலும், அந்த வேலையை முதலில் கிராம பஞ்சாயத்தின் இடத்தில் ஒப்புவித்துப் பார்க்க வேண்டும். இன்னும் பஞ்சாயத்து பணத்தை சாப்பிட்டும், சாப்பிட சில யத்னம் செய்யும் சில பஞ்சாயத்து பிரசிடெண்டுகளும், மெம்பர்களும் அடியோடே இல்லாமல் போகவில்லை. அந்தக் காரணத்தைக் கொண்டு மொத்தத்தில் யாவத்து பஞ்சாயத்துகளுக்கும் அதிகாரம் கொடாதது ஜனநயகத்துக்கும், இந்தியன் அரசியலுக்கும் (Constitution of India) க்கும் ஒத்ததன்று.

இன்ஸ்பெக்டரும்: கிராமங்களும், பட்டணங்களும், பஞ்சாயத்துகளும்

5. பஞ்சாயத் என்பது இந்த சட்டத்தின் கீழ் இன்ஸ்பெக்டர் அவர்களால் பிரசித்தஞ் செய்யப்பட்ட விஸ்தீரணம் அல்லது இடம் ஆகும். [பி. 2 (30)]. இன்ஸ்பெக்டர் ஆனவர் மதரூஸ் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தபட்டவர் ஆவார். [பி. 2 (15)] ஒரு பஞ்சாயத்தை இன்ஸ்பெக்டர் செக்ஷன்கள் 3, 8 படிக்கு ஒவ்வொரு கிராமத்திற்கும், சிறிய பட்டணத்திற்கும் ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் கட்டாயமாக ஒவ்வொரு கட்டடத்திற்கும் ஒரு நெம்பர் போட்டிருக்க வேண்டும். அதை யாரும் அழிக்கக்கூடரது. அழித்தால் குற்றமாகும். [பி. 110].

பஞ்சாயத்துகள்

6. புதிய பஞ்சாயத்துகளை ஏற்படுத்தும் விஷயத்தில் பிரத்யேகமான நிபந்தனைகளைக் குறித்து பி. 188ஐ பார்க்கவும். ஒருஷீ பஞ்சாயத்தை முதல் தடவையாக ஏற்படுத்தும் போது இந்த சட்டத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் அதற்கு சம்பந்தமில்லாமல் ஏற்படுத்தலாம். "பஞ்சாயத்து பட்டணம்" அல்லது "பஞ்சாயத்து கிராமம்" பரிபாலனமானது பஞ்சாயத்தில் சங்கிரமிக்கும். அதாவது பஞ்சாயத்திற்கு உள்பட்டதாகும். ஏற்கனவே அநேக பஞ்சாயத்துகள் இருந்து வருகின்றன. இந்தச் சட்டத்தை மாற்றுவதினல் மேற்படி பழைய பஞ்சாயத்துகளை கிரமப்படி ஏற்படுத்தியதாக 4-வது ஷெட்யூல் வெளிப்படுத்தியிருக்கிறது. அவைகளின் வார்டுகள் மெம்பர்களைக் குறித்து பின்னிட்டு சொல்லப்படும். பஞ்சாயத்துகளை கிராம பஞ்சாயத்தென்றும், பட்டண பஞ்சாயத்தென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பட்டணம் பஞ்சாயத்

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் சுருக்கம்

திற்கு குறைந்தது 5,000 ஜனத் தொகையும் 10,000 ரூபா வருமானமும் இருக்க வேண்டும். இந்த இரண்டு அம்சங்களும் இல்லாவிட்டால் அது கிராம பஞ்சாயத்தாகும். இதைக் குறித்து இன்ஸ்பெக்டர் அவர்கள் தான் தீர்மானிக்க வேண்டும். பட்டணப் பஞ்சாயத்துக்கு குறைந்தது 5 வார்டுகள் இருக்கவேண்டும். கிராம பஞ்சாயத்தில் குறைந்தது 2 வார்டுகளாவது இருக்க வேண்டும் பஞ்சாயத்திற்காக மெம்பர்களைத் தேர்ந்தெடுக்கும் காரியத்திற்காக பிரிவினை செய்யும் இடங்களுக்கு வார்டு என்று பெயராகும். பஞ்சாயத்திற்கு 5 மெம்பர்களுக்கு குறையாமலும் 15 மெம்பர்களுக்கு அதிகப்படாமலும் இருக்க வேண்டும். பஞ்சாயத்தானது செய்ய வேண்டிய விஷயங்களை அறிய பிரிவுகள் 63, 64, பார்க்கவும். பஞ்சாயத்துக்கு வேண்டிய வருமானத்தைக்குறித்து 135, 137 பிரிவுகளிலும், செலவைக் குறித்து 139-வது செக்ஷனிலும் கண்டிருக்கிறது. பஞ்சாயத்தானது ஒரு சபையாக இருக்க வேண்டும். மேலும் அது இடைவிடாமல் ஒன்றன் பின் ஒன்றாய் வந்து கொண்டு பொதுவான முத்திரையுடையதாயும் இருக்கும். அதனுடைய பெயரால் வியாஜ்ஜியம் தொடரவும், பொருளை அடையவும், ஒப்பந்தங்கள் (கண்ட்ராக்டுகள்), செய்துக்கொள்ளவும் பாத்தியதையுள்ளதாகும்.—பிரிவு 8ஐ பார்க்கவும். அரசாங்கம் பட்டணம் பஞ்சாயத்துகளுக்குமாத்திரம் எக்ஸிகூடிவ் ஆபீஸர்ஸ் அதாவது நிர்வாக உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்த வேண்டும். அதனால் பட்டணம் பஞ்சாயத்துக்களுக்கு நிர்வாக உத்தியோகஸ்தர்கள் தனியாக உண்டு. கிராம பஞ்சாயத்துகளுக்கு இல்லை. அதனால் எக்ஸிகூடிவ் உத்யோகஸ்தர்கள் உள்ள பஞ்சாயத்துகளாகவும் எக்ஸிகூடிவ் உத்தியோகஸ்தர்கள் இல்லாத பஞ்சாயத்துகளாகவும் இருவகைப்படுகிறது. பஞ்சாயத்து தன்னுடைய காரியங்களை மெம்பர்கள் சேர்ந்து சபை கூடினால்தான் அந்த சபையில் செய்யக்கூடும். தனிப்பட்ட எக்ஸிகூடிவ் ஆபீஸராவது, ப்ரெஸிடென்டாவது, மெம்பராவது ஒரு காரியம் செய்தால் அது அந்த தனிப்பட்ட நபருடையதேயாகும். அது பஞ்சாயத்தினுடைய காரியமாகாது. பஞ்சாயத்து சபையில் செய்யும் தீர்மானங்களை பட்டணம் பஞ்சாயத்துகளில் நிர்வாக உத்தியோகஸ்தர்களே நிறைவேற்ற வேண்டும். கிராம பஞ்சாயத்துகளில் எல்லாக் காரியங்களையும் ப்ரெஸிடென்டு நிறைவேற்ற வேண்டும். இவைகளை குறித்து அடியில் "ப்ரெஸிடெண்டு' நிர்வாக அதிகாரி, நிர்வாக உத்தியோகஸ்தர்' என்னும் தலைப்பின் கீழ் விசிதமாக எழுதப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துகள் இந்தச் சட்டத்தின்படிக்கு நடந்துகொள்ள வேண்டும். இந்தச் சட்டத்தில் இல்லாத யாதொன்றையும் செய்யக்கூடாது. இவைகள் மதராஸ் கவர்ன்மெண்டுக்கு கீழ் அடங்கிய ஸ்தாபனங்கள். [செ. 8 (2) பார்க்கவும்].

வாக்காளர்,(வோட்டர்கள்,) அபேக்ஷகர்களை தெரிந்து எடுப்பது, தேர்தல்கள் அங்கத்தினர்கள்

7. மொத்த இந்தியாவுக்கும் (இதற்கு பராத் என்றும் பெயர். இந்திய அரசியல் அமைப்பானது (Constitution of India) 326–வது ஆர்டிகில் படிக்கு அதாவது இந்தியா தேசத்தின் ஆளுகைக்காக ஏற்படுத்திய நிபந்தனையின் 326-வது ஆர்டிகில் படிக்கு 21–வயது அதற்கு மேலுள்ள ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் தங்களுடைய பிரதிநிதிகளை ஏற்படுத்திக்கொள்ள அதிகாரமுண்டு. இவர்களின் பெயர்கள் ஒரு ஜாபிதாவில் பதிந்தபிறகு இவர்கள் வோட்டர்களாகிறார்கள். இம்மாதிரி தங்களுடைய பெயர்கள் பதிக்கப்பட்டிருக்கிறவர்கள் பஞ்சாயத்து அத்துக்குள்ளிருப்பாராகில் அவர்கள் அந்த பஞ்சாயத்து வோட்டர்களாவர்கள் வோட்டர்கள் ஆகவேண்டுமென்றால் பஞ்சாயத்து அத்துக்குள் 120-நாள் குடியிருந்து இருக்கவேண்டும். அம்மாதிரி வோட்டரானவர்கள் ஊமை-செவிடாகவும், குஷ்டரோகியாகவும் இருக்கக்கூடாது. இம்மாதிரி வோட்டர்களை இந்த ஆக்டின்படிக்கு தனித்தனியாக ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் வார்டுக்கும் ஏற்படுத்தி அச்சிட்டிருக்கும். ஜாபிதாவில் பதிவுள்ளவர்கள் தவிர மீதிபேருக்கு வோட்டு கொடுக்க அதிகாரம் கிடையாது. 20-வது பிரிவை பார்க்கவும். வார்டுகள் என்பது பஞ்சாயத்தை பங்கிட்டபோது, பங்கிட்ட ஒவ்வொரு பாகத்திற்கும் பெயராகும். பஞ்சாயத்துகளுக்கும் மேற்படி வார்டுகளுக்கும் மெம்பர்களை மேற்படி வோட்டர்கள்தான் தேர்ந்

தெடுக்க அதாவது எலக்ஷனில் எடுக்கவேண்டும். அம்மாதிரி தேர்ந்தெடுப்பதில் மெம்பர்களாக எண்ணங்கொண்டவர்கள் முதலில் அபேக்ஷகர்களாக இருக்க வேண்டும். கிராம உத்தியோஸ்தர்கள் அபேக்ஷகர்களாகவும் மெம்பர்களாகவும் இருக்கக்கூடாது. அந்த அபேக்ஷகர்களுக்கு செக்ஷன் 25–ல் கண்ட யோக்யதைக் குறைவு இருக்கக்கூடாது. அந்த அபேக்ஷசகர்களை தேர்ந்தெடுப்பதைக் குறித்து மதராஸ் கவர்ன்மெண்டார், ஏற்படுத்தும் விதிகள் படிக்கு நடந்துகொள்ளவேண்டும். செக்ஷன் 178 (2) (i) பார்க்கவும். தேர்ந்தெடுக்கும் காலத்தில் எந்த அபேக்ஷகருக்கு அதிக வோட்டுகள் கிடைக்குமோ அவர் மெம்பராகிருர். தோற்றுவிட்ட அபேக்ஷகர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை யென்ருல் அவைகளை தீர்ப்பு செய்ய எலக்ஷன் கோர்ட்டுகளை விதிகள்படிக்கு ஏற்படுத்தியிருக்கிறது. அவைகள் தான் எலக்ஷன் சம்பந்தமான தீர்ப்புகள்தரவேண்டும். சிவில் கோர்ட்டுகள் தீர்ப்பு செய்யக்கூடா தென்றும் தடுக்கப்பட்டிருக்கிறது. செச்ஷன் 172-பார்க்கவும். தேர்தல் விதிகள் எங்களால் தனியாக அச்சிடப்பட்டிருக்கிறது. அதன் விலை ரூபா 2-50 அதை வாங்கி வாசிக்கவும்

மெம்பர்கள் : யோக்கியதை குறைவுகள் : ஹாக்குகள் : பாத்தியதைகள்

8. மெம்பர்களாக ஏற்படுத்திய பிறகு அவர்களுக்கு 26–வது செக்ஷன் படிக்கு குறைவுகள் ஏற்படும் பக்ஷசத்தில் அவர்கள் மெம்பர் ஸ்தானத்திலிருந்து நீக்கப்படுவார்கள். நீங்கியும் விடுவார்கள். மெம்பர்கள் தனிப்பட்ட ஓதாவில் ரிகார்டுகளை பார்க்கலாம்: அவைகள் தங்களுக்கு கிடைக்காதபக்ஷத்தில் பஞ்சாயத்து சபையில் தீர்மானத்தைப் போட்டு அதன் மூலமாக ரிகார்டுகளை வரவழைத்துக் கொள்ளலாம். செக்ஷன்கள் 38, 51களை பார்க்கவும். பஞ்சாயத்துக்கென்று ஏற்படுத்தப்பட்ட நிறைவேற்றும் உத்தியோகஸ்தர் (Executive Officer)களை பஞ்சாயத்துகளின் காரிங்யகளைக் குறித்து கேள்வி கேட்கலாம். மெம்பர்கள் பஞ்சாயத்து சபையில்தான் வேலை செய்யக் கூடும். அங்கே தீர்மானங்கள் போட்டு அவைகளை நிறைவேற்றும்படி பார்க்கவேண்டும். 38-ம் பிரிவை பார்க்கவும். ஒரு மெம்பரை பஞ்சாயத்து வேலை செய்யவும், யோசனை சொல்லவும் பஞ்சாயத்தாரால் நியமிக்கப்படலாம். செக்ஷன் 35ன் படிக்கு ப்ரெஸிடெண்டுகளின் சில அலுவல்களை தனிப்பட்ட மெம்பர்களுக்கு நிர்வகிக்கக் கொடுக்கலாம். சாதாரணமாக மெம்பரின் காலம் ஐந்து வருடங்கள் தான் ஆகும். செக்ஷன் 17 பரர்க்கவும். ஒல்வொரு பஞ்சாயத்திலும் ஒரு ஸ்திரீ அங்கத்தினர் இருக்க வேண்டும். பி. 10, பி. 15 (4)ஐ ப்பார்க்கவும்.

ப்ரெஸிடெண்டுகள்: வைஸ்-பிரஸிடெண்டுகள்.

9. ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு ப்ரெஸிடெண்டு, ஒரு வைஸ்–பிரெஸிடெண்டு இருக்கவேண்டும். இவர்களை பஞ்சாயத்து மெம்பர்களிலிருந்து பஞ்சாயத்து மெம்பர்களே தேர்ந்தெடுக்கவேண்டும். ப்ரஸிடெண்ட் இல்லாத காலங்களில் அவருடைய காரியங்களை செய்ய வைஸ்–பிரஸிடெண்டு பாத்தியஸ்தராவர். செக்ஷன் 34 பார்க்கவும் ப்ரஸிடெண்டினுடைய அதிகாரத்தைக் குறித்து இதனடியில் "ப்ரெஸிடெண்டு – நிர்வாக அதிகாரி — நிர்வாக உத்தியோகஸ்தர்" தலைப்பின் கீழ் எழுதப்பட்டிருக்கிறது. சாதாரணமாக ப்ரெஸிடெண்டு வைஸ்–ப்ரெஸிடெண்டுகளுடைய காலம் ஐந்து வருடங்களாகும்.

அரசாங்கம்; இன்ஸ்பெக்டர்; பஞ்சாாத்து ஆபீஸர்கள் வகையரு.

10. மதராஸ் அரசாங்கம் இன்ஸ்பெக்டரை நியமிப்பார்கள். அவர்கள் தமிழ் நாட்டின் பிரதேசத்திலுள்ள கிராமங்களுக்கு "கிராம பஞ்சாயத்துகளை"யும் சிறிய பட்டணங்களுக்கு "பட்டணம் பஞ்சாயத்துகளை"யும் ஏற்படுத்த அதிகாரமுள்ளவர் ஆவார். செக்ஷன்கள் 3, 8களை பார்க்கவும். அரசாங்கம் இன்ஸ்பெக்டரையும் ரீஜனல் இன்ஸ்பெக்டர்களையும், டிஸ்திரிக்ட்டு பஞ்சாயத்து ஆபீஸர்களையும், டிப்டி.பஞ்சாயத்து ஆபீஸர்களை

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் சுருக்கம்

யும், எக்ஸிகூடிவ் ஆபீஸர்களையும், கணக்கு பார்க்க, கணக்குப் பரிசோதகர்களையும் (Auditors) ஏற்படுத்துவார்கள். கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளங்களை மதராஸ் கவர்ன்மெண்டே கொடுக்கும். ஆனால் நிர்வாக உத்தியோகஸ்தரின் சம்பளத்தை பட்டணம் பஞ்சாயத்துதான் கொடுக்கவேண்டும்.

ப்ரஸிடெண்டு: நிர்வாக அதிகாரி; நிர்வாக உத்தியோகஸ்தர்:

11. ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ப்ரெஸிடெண்டும், வைஸ்-ப்ரெஸிடெண்டும் இருக்கும் மாதிரி எக்ஸிகூடிவ் ஆபீஸர் இருக்க வேண்டுமென்று கட்டாயம் கிடையாது. நிர்வாக உத்தியோகஸ்தர்களை பட்டணம் பஞ்ஞாயத்துகளில்தான் ஏற்படுத்துவார்கள், நிர்வாக உத்தியோகஸ்தர்கள் இல்லாத பஞ்சாயத்துகளில் நிர்வாக வேலையையும், பஞ்சாயத்து மீட்டிங் நடத்தல் வேலையையும் ப்ரெஸிடெண்டே பார்த்து வருவார். நிர்வாக உத்தியோகஸ்தர் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பஞ்சாயத்துகளில் நிறைவேற்ற வேண்டிய வேலைகளை நிர்வாக ஆபீஸர் செய்வார். ப்ரெஸிடெண்டானவர் அந்தக் காரியங்களை செய்யக்கூடாது. நிர்வாக ஆபீஸர்கள் உள்ள பஞ்சாயத்துகளில், பிரெஸிடெண்டுகள் முக்கியமாக செய்ய வேண்டிய காரியங்களைக் குறித்து செக்ஷன் 33-ல் தெரியபடுத்தியிருக்கிறது. நிறைவேற்றவேண்டிய காரியங்களை நிர்வாக ஆபீஸர் இருக்கும் பஞ்சாயத்துகளில் நிர்வாக ஆபீஸர் செய்தாலும், நிர்வாக ஆபீஸர்கள் இல்லாத பஞ்சாயத்துகளில் ப்ரெஸிடெண்டுகளே செய்தாலும் அந்த நிர்வாக ஆபீஸருக்கும். ப்ரெஸிடெண்டுக்கும் (Executive Authority) “ எக்ஸிகூடிவ் அதகாடி ” அதாவது நிர்வாக அதிகாரி என்று பெயராகும். எக்ஸிகூடிவ் ஆபீஸர் உள்ள பஞ்சாயத்துகளில் எக்ஸிகூடிவ் ஆபீஸர் இருக்கும்போது ப்ரெஸிடெண்டுக்கு எக்ஸிகூடிவ் அதாரடி அதாவது நிர்வாக அதிகாரி என்ற பெயர் கிடையாது. எக்ஸிகூடிவ் ஆபீஸருக்கு எக்ஸிகூடிவ் அதிகாரி என்று பெயர் எப்போதும் உண்டு. நிர்வாக ஆபீஸர் தான் இல்லாத சமயத்தில் தன்னுடைய அதிகாரங்களை ப்ரெஸிடெண்டு நடத்த ஏற்படுத்த வேண்டும்.

கூட்டங்கள்: (மீட்டிங்குகள்)

12. பஞ்சாயத்துகளின் கூட்டங்கள் கூடியவரையில் அடிக்கடி நடக்கவேண்டும், அல்லது ஒவ்வொரு மாதத்திற்கும், குறைந்தது ஒருதடவை பஞ்சாயத்து கூட்டத்தை நடத்தவேண்டும். பஞ்சாயத்தின் கூட்டத்தை நடத்த அதன் மெம்பர்களின் மொத்த எண்ணிக்கையில் குறைந்தது மூன்றில் ஒருபாகத்தினராவது அக்கூட்டத்தில் ஆஜராக யிருக்க வேண்டும். இந்த எண்ணை க்வோரம் எனப்படும். கூட்டத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட காலத்திலிருந்து அரைமணி நேரத்திற்குள்ளாக க்வோரம் ஏற்படாவிட்டால் கூட்டம் இல்லை என்று எண்ணவேண்டும். பஞ்சாயத்து கூட்டங்களைப்பற்றி 3 (மூன்று) நாட்கள் முன்னதாகவே நோட்டீசுகள் அனுப்பவேண்டும். கூட்டங்களில் மெம்பர்கள் ப்ரெஸிடெண்டை கேள்வி கேட்கலாம், தீர்மானங்களை நிறைவேற்றலாம். ப்ரெஸிடெண்டு, வைஸ்-ப்ரெஸிடெண்டு உள்பட யாராவது ஒரு மெம்பர் தொடர்ச்சியாக மூன்று மாத கால பரியந்தம், அல்லது செக்ஷன் 26 (k)ல் விவரிக்கப்பட்ட காலத்திற்காவது கூட்டங்களுக்கு வராமல் போனால் அவர் மெம்பர்ஸ்தானத்தை காலிசெய்தவராவர். ஆனால் அவர் மீண்டும் மெம்பராக நியமிக்கப்படலாம். எலக்ஷன் தேதியிலிருந்து அவருக்கு ஏற்பட்டகாலம் இதனால் அதிகப்படாது. தான் மெம்பராக யிருக்கக்கூடிய மொத்தகாலத்தில் இரண்டு தடவையே நியமிக்கப்படலாம்—செக்ஷன் 27-யை பார்க்கவும்.

கமிட்டிகள்

13. பஞ்சாயத்துகளால் கொடுக்கப்படும் அதிகாரங்களை நிர்வகிப்பதற்காக கமிட்டிகள் ஏற்படுத்தப்படலாம். ப்ரெஸிடெண்டு அந்தக் கமிட்டியில் ஒரு மெம்பராகவும் அதன் தலைவராகவும் (சேர்மனாகவும்) இருப்பார்.

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் சுருக்கம்

சிப்பந்திகள்

14. இன்ஸ்பெக்டர் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் இத்தனை உத்தியோகஸ்தர்கள் இருக்கவேண்டுமென்றும் அவர்கள் சம்பளம் இவ்வளவு என்றும் ஏற்படுத்துவார். நிர்வாக ஆபீஸர் உள்ள இடங்களில் தன்கீழ் உள்ள உத்தியோகஸ்தர்களை அவர் அதிகாரம் செய்வார். அதில் பிரஸிடெண்டுக்கு யாதொரு அதிகாரமும் கிடையாது. 2, 3 பஞ்சாயத்துகளுக்கு ஒரு சுகாதார உத்தியோகஸ்தரையும் ஏற்படுத்தி கொள்ளலாம். 2, 3 பஞ்சாயத்துகளுக்கு ஒரு பொதுவான இன்ஜினீர் உத்தியோகஸ்தரை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

மதராஸ் கவர்னமெண்டு, இன்ஸ்பெக்டர்

15. பஞ்சாயத்துகளின் சம்பந்தமாக ஏற்பட்ட கடமைகளை நிறைவேற்றுமல் போவது காரணமாக ப்ரெஸிடெண்டுகளை நீக்கிவிட மதராஸ் கவர்ன்மெண்டுக்கு அதிகாரமுண்டு குழப்பம் முதலியவைகளை உண்டு பண்ணக்கூடிய பஞ்சாயத்துகளின் தீர்மானங்களை, லைசென்சுகளை இன்ஸ்பெக்டர் நிறுத்திவைக்கலாம். ரத்து செய்யலாம். அவசரமான விஷயங்களில் பஞ்சாயத்துகளின் காரியங்களை அவர் செய்துவைக்கலாம்; பிரிவு. 147ஐ பார்க்கவும்.

டிஸ்ட்ரிக்ட் கலெக்டர்

16. கலகம் அல்லது குழப்பம் முதலியவைகளை யுண்டாக்கக்கூடிய தீர்மானங்கள், முதலியவைகளை ரத்து செய்வதில் இன்ஸ்பெக்டருக்குள்ள அதிகாரங்கள் யாவும் ஒரு டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்கும் உண்டு; ஆனல் அவர் அது விஷயத்தை உடனே மதராஸ் கவர்ன்மெண்டுக்கு ரிபோர்ட் செய்யவேண்டும். ப்ரெஸிடெண்ட், வைஸி-ப்ரெஸிடெண்டு முதலியவர்களை, அவர் அலுவலிலிருந்து நீக்கமுடியாது. நிலத்தீர்வையை வசூல் செய்ய அவர் உத்திரவாதியாயிருக்கிருர்.

பண வருமானமும் செலவும்

17. பண வருமானங்களைக் குறித்து பி.137–ல் ஒரு பஞ்சாயத்துக்குச் சேரவேண்டிய 22 தொகுப்புகளை விசிதமாக கண்டிருக்கிறது. வாசகர்கள் அதைக் கட்டாயம் படித்துத் தீர வேண்டும். அதேமாதிரியாக பஞ்சாயத்து பணத்தை எடுத்து செலவு செய்யலாமென்று 139–வது செக்ஷனில் கண்டிருக்கிறது. செக்ஷன்கள் 63, 64, 65, 66, 67 களையும் பார்க்கவும்.

வரிகள்

18. செக்ஷன் 120 படிக்கு, ஒரு பஞ்சாயத்தானது கட்டாயமாக வீட்டு வரியும், தொழில் வரியும், வண்டி வரியும், போட்டாகவேண்டும். இதுவுமன்றி 124–வது பிரிவு படிக்கு ஸ்டாம்புகள் மூலமாகவும் பஞ்சாயத்துகளுக்குப் பணம் சேரும்.

வீட்டுவரி

19. சாதாரணமாக கிராமங்களில் வீடுகளுக்கு வாடகை கொடுத்து குடியிருப்பது கிடையாது. ஒருவேளை வாடகை கொடுத்தால் அது ரொம்ப குறைவாக விருக்கும். ஆகையால் ஆரம்பத்தில் விட்டு வரி ரொம்பவும் குறைவாக இருக்கவேண்டும். வீட்டு வரி அதிகமாக போடும் பக்ஷத்தில் பெரிய வீடுகள் கட்டுவது குறைந்துவிடும்; ஆகையால் வீட்டு வரி போடுவதை சில காலம் வரையில் கவர்ன்மெண்டு நிறுத்திவைக்கலாமென்பது எமது அபிப்பிராயம். அதற்கு சட்டத்தை மாற்றவேண்டும். செக்ஷன் 120யைப் பார்க்கவும். இந்த செக்ஷனில் எந்தெந்த கட்டங்களுக்கு வரி செலுத்தவேண்டியதில்லை என்று கண்டிருக்கிறது.

தொழில் வரி

20. தொழில் வரியை பிரிவு 124 படிக்கு விதிக்கவேண்டும் அந்த பிரிவை பார்க்கவும்.

வண்டி வரி

21. கிராமங்களிலே இருந்து வெளியூர்களுக்கு போகாத வண்டிகளுக்கு வரி போடக் கூடாதென்று கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்க வேண்டும். அப்படி செய்யாவிட்டால் எரு ஒட்டுவது, கழனிகளிலிருந்து தான்யங்கள் முதலியவைகளை கொண்டு வருவ

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் சுருக்கம்

தற்கு கஷ்டம் உண்டாகும். இந்த வரியானது ஒரு பஞ்சாயத்துப் போட்டால் அதன் பேரில் அதற்கடுத்த முனிசிபாலிடியோ வேறு பஞ்சாயத்தோ யாதொரு வரியும் போடக் கூடாதென்று கவர்ன்மெண்டு தெளிவாக பிரசுரம் செய்யவேண்டும். அப்படி செய்யா விட்டால் வண்டி வரி விஷயமாக அநாவசியமாய் சச்சரவுகள் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கும்.

சொத்துக்கள்—பொது காரியங்களுக்காக சொத்து சம்பாதிப்பது

22. கிராம எல்லைக்குள் அடங்கிய பொதுப் பாதைகள், கல் கட்டு தளங்கள் (பேவ்மெண்ட்ஸ்), சேகரிக்கப்பட்ட வஸ்துக்கள்; நிறைந்த இடங்கள் (ஸ்டோர்ஸ்), பாதைகளுக்குரிய இதர வஸ்துக்கள் யாவும் பஞ்சாயத்துகளுக்கு உரியன. அரசாங்க ரோட்டுகள் பஞ்சாயத்து யூனியன் ரோட்டுகள் இனத்தில் சேராத பொதுப் பாதைகள் பஞ்சாயத்துக்குரியவை. யாதொரு பஞ்சாயத்தாரால் சேகரிக்கப்படும் குப்பைகள், சாக்கடைக் கழிவுகள், மலம் முதலியவைகள் அந்த பஞ்சாயத்துக்கே உரியன. பஞ்சாயத்துகளுக்குரிய கட்டடங்கள் முதலியவை பஞ்சாயத்துகளுக்கே உரியவை. தர்ம சம்பந்தமான மான்யங்களை மேற்பார்வைக்காக வும் காப்பாற்றுவதற்காகவும் ரெவின்யூ போர்டார் பஞ்சாயத்துகளுக்குக் மாற்றிவிட லாம். தான சம்பந்தமான இனம்களினால் வரும் வரும்படியை அந்த தானத்திற்குரிய காரியங்களுக்கே செலவிடவேண்டும் எனும் நிபந்தனை பேரில் அத்தகைய இனம் களை அரசாங்கம் பஞ்சாயத்துகளுக்கு மாற்றலாம். பஞ்சாயத்துகள் தர்ம பரிபாலனங் களையும் (டிரஸ்ட்களையும்) ஒப்புக்கொள்ளலாம். ஆக்டினால் தமக்கென விதிப்பெருத ஸ்தாபனங்களையும் தொழில்களையும் அரசாங்கம் பஞ்சாயத்துகளுக்கு மாற்றுவார் களானால் அவைகளுக்காக ஏற்படும் செலவுகளை அரசாங்கமே கொடுக்கவேண்டும். லாண்ட் அக்விஸீஷன் ஆக்டின்படி பொதுக் காரியங்களுக்கு தேவையாயிருக்கும் நிலம், கட்டடங்கள் முதலியவைகளை அவைகளின் சொந்தக்காரர்களுக்கு உரிய பிரதி பலனைக் கொடுத்துப் பஞ்சாயத்துகள் சம்பாதிக்கலாம். பி. 89 பார்க்கவும்.

உபசார பத்திரங்களும் (அட்ரெஸ்)களும்

23. பொது நன்மைக்காக பாடுபடுபவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கலாம். ஆனால் அது சம்பந்த மான செலவுகள் அரசாங்கத்தாரால் அனுமதிக்கப்படவேண் டும். அல்லாவிடில் பஞ்சாயத்துகளின் மெம்பர்களே அந்தச் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொதுஜன சௌக்கியம்

24. கிணறுகளைத் தோண்டலாம். வெட்டலாம். வேறுபடுத்திவைக்கலாம், சுத்தி செய்யலாம். சௌக்கியத்திற்குப் பாதகமாயிருந்நால் கிணறு கள், குளங்கள், குட்டைகள், சிறு குட்டைகள், வடி கால்கள், சகதிகள், சதுப்பு நிலங்கள், கல் வெட்டுக் குழிகள், ஜலதாரை கள். சாக்கடைக் குழிகள், நீர்க்கால்கள், நீர் நிலங்கள் முதலிய வைகளை நிறப்பலாம். அவைகளை மராமத்து செய்யலாம். குப்பை வாறுவது (எடுப்பது) மலத்தை அப்புறப்படுத்துவது முதலிய காரியங்களைச் செய்யலாம். அபாயகரமான வியாதியஸ்தர்களை நடமாட்டத்திலிருந்து தடுக்கலாம். பெரிய அம்மை கண்டிருந்தால் அதை உடனே கிராமத் தலைவருக்கு அல்லது ப்ரெஸிடெண்டுக்கு அல்லது நிர்வாக உத்தியோகஸ்தருக்கு ரிபோர்ட் செய்யவேண்டும். ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதிகளை யனுசரித்து அம்மை குத்துதலை கட்டாயப்படுத்தலாம். தனிப்பட்ட நபர்களுக்குரிய தும் பொதுஜனங்களுக்குரியதுமான எல்லா சுடுகாடுகளும் புதைக்குமிடங்களும் பதிவு (ரிஜிஸ்டர்) செய்யப்படவேண்டும். இந்த ஒவ்வொரு இடத்திலும் எச்சரிக்கை செய் யக்கூடிய நோடீஸ் போர்டு (பலகை) கள் வைக்கவேண்டும். வேறு இடங்களில் சவங்களை அடக்கம் செய்வதாவது தகனம் செய்வதாவது கூடாது

பொதுப் பாட்டைகளும் சொந்த பாட்டைகளும்

25. சொந்த பாட்டைகள் பொதுப் பாட்டைகள் என இருவித பாட்டைகள் இருக்கின்றன. இந்த ஆக்டை பொதுப் பாட்டைகளைப் பற்றியே பிரஸ்தாபிக்கிறது. தனி நபர்களின் சொந்த பாட்டைகளில் என்ன நேரிட்டாலும் பஞ்சாயத்துகள் எந்த காரணத்தைக் கொண்டும் தலையிட (சம்பந்தப்பட) அதிகார மில்லை. தனி நபர்களுக்கு தங்கள் சொந்த பாட்டைகளில் இருக்கும் அதிகாரத்தைவிட பஞ்சாயத்துகளுக்கு பொதுப் பாட்டைகளில் விசேஷ அதிகார முண்டு. பொதுப் பாட்டையில் மதம் அல்லது ஜாதி பிறப்பு இவைகளைக் கொண்டாடகூடாது. பி. 175ஐப் பார்க்கவும். பொதுப் பாட்டைகளை பஞ்சாயத்துக்கள் விற்கவோ, மாற்றவோக் கூடாது.

கல் வெட்டியெடுப்பது முதலியவை

26. பொதுப்பாட்டைகளிலிருந்து 20 கெஜ தூரத்துக்குள்ளடங்கிய நிலத்திலிருந்து மண், கல் முதலிய வஸ்துக்களை பஞ்சாயத்தின் லைசென்ஸ் இல்லாமல் அப்புரபபடுத்தக் கூடாது. கல், மண் முதலியவைகளை வெட்டி யெடுப்பதனுல் அண்டையிலிருக்கும் ஜனங்களுக்கு அபாயம் உண்டாவதாக இருந்தால் அந்த வேலையை நிறுத்திவிடும்படி சொந்தக்காரருக்கு பஞ்சாயத்தார் உத்திரவிடலாம். கல் வெட்டுவதற்கு பஞ்சர்யத்து லைசென்ஸ் கொடுக்கலாம். கல் வெட்டுவதற்கு பணமும் பெறலாம். அதன் மூலமாக கிடைக்கும் தொகை பஞ்சாயத்திற்கு சேரவேண்டும் பி. 82 விதி 1 பக்கம் 203 பார்க்கவும்.

மார்கெட்டுகளும், வண்டி தொட்டிகளும்

27. அவசியமான நிபந்தனைகளை நிறைவேற்றி வைப்பதில் திருப்தி ஏற்படாத பக்ஷத்தில் மார்க்கெட்டுகளுக்கும் வண்டி தொட்டிகளுக்கும் லைசென்ஸ் கொடுக்கப்படமாட்டாது. இவ்விரண்டும் சுத்தமாக வைக்கப்படவேண்டும் தரைகள் எளிதாக உலருகிறதாக இருக்கவேண்டும் ஜனங்கள் போகவரவும் சாத்தியமானுல் வண்டிகள் போகும் படிக்கும் வாயில்கள் பெரிதாக இருக்கவேண்டும். தனிப்பட்ட நபர்களின் மார்க்கொட்டுகளுக்கும் கொடுக்கப்படும் லைசென்ஸுகளுக்காக விதிக்கப்படும் கட்டணம் அவைகளின் மொத்த வருமானத்தில் 100க்கு 15 வீதத்திற்கு இருக்கவேண்டும். லைசென்ஸ் பெருத மார்க்கெட்டுகளும் வண்டித் தொட்டிகளும் இருக்கக்கூடாது அப்படியாராவது உண்டு பண்ணினுல் அவர்கள் தண்டனைக் குள்பட வேண்டியதாகும். பிரிவுகள் 100, 107களை பார்க்கவும்.

ஆடு மாடுகளை அடிக்கும் தொட்டிகள்

28. பஞ்சாயத்துகள் ஆடு மாடுகளை அடிக்கும் தொட்டிகளைக் ஏற்படுத்தலாம். அவைகளுக்கு வெளியே ஜந்துக்களை அடிக்கக்கூடாதென உத்திரவிடலாம். கவர்ன்மெண்டாரின் மேற்பார்வையிலிருக்கும் இடங்களுக்கு இந்த நிபந்தனை பொருந்தாது. விற்பனைக்காக அல்லாமல் மதசம்பந்தமான உபயோகத்திற்காகவாவது ஜந்துக்களை அடிப்பதற்கு லைசென்ஸ்வேண்டியதில்லை. திருவிழாக் காலங்களில் ஆடு மாடுகளை அடிக்கும் தொட்டிகளுக்கு வெளியே ஒரு இடத்தைக் குறிப்பிட்டு பிரசித்தப் படுத்தி அந்த இடத்திலே ஜந்துக்களை அடிக்கும்படி ப்ரெஸிடெண்டு செய்யலாம். பி. 108ஐ பார்க்கவும்.

தொழில்களும் தொழிற் சாலைகளும்

29. தொழிற்சாலைகளை அல்லது மின்சார சக்தி அல்லது இதரயந்திர சக்தி (மெஷின் பவர்)யைக் கொண்டு நடைபெறும் தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டுமாயின் நிர்வாக அதிகாரி, உத்தியோகஸ்தர் அனுமதிகள் அல்லது லைசென்ஸுகள் அவசியம் வேண்டும் மற்றப்படி அவைகளை ஏற்படுத்தக்கூடாது லைசென்ஸ் அல்லது அனுமதி இல்லாமல் அவைகளை ஏற்படுத்துகிறவர்கள் தண்டிக்கப்படுவார்கள். லைசென்ஸுக்காகவாவது உத்திரவுக்காகவாவது மனுசெய்து கொண்ட நாள் முதல் 30 நாள்களுக்குள் லைசென்சுக் கொடுப்பது அல்லது கொடாதது

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் சுருக்கம்

தெரிவிக்காவிட்டால் லைசென்சுக் கொடுத்ததாக பாவிக்கப்படும். பி. 111 112 113களை பார்க்கவும். கிராமவாசிகளுக்கு பழக்க வழக்கத்திலிராத லைசென்ஸுகளுக்கு மனு செய்துக் கொண்டிருப்பது ஒரு கஷ்டமான காரியமே. பெரிய உற்பத்தித்தொழில் முதலியவைகளுக்கும் வருஷப் பிரதி வருஷம் லைசென்ஸுகளைப் பெறுவது அத்தியாவசியமாகும்.

லைசென்கள்ஸ் அல்லது பரிமிதிள

30. பிரிவுகள் 111, 112, 114, 159, 160, 176. 195, லைசென்ஸ்களை பற்றி குறிக்கின்றன. சாதாரணமாக பட்டணம் பஞ்சாயத்துகள் தங்கள் பஞ்சாயத்து பட்டணங்களில் லைசென்ஸ்களை கொடுக்கும். இந்த சட்டம் அமலுக்கு வராததற்கு முந்தி கிராம பஞ்சாயயத்துகள் அதாவது 2-ம் வகுப்புகளாக இருந்தவை தங்கள கிராமங்களில் லைசென்ஸ்கள் கொடுத்துவந்தன. அந்த அதிகாரத்தை இந்த சட்டத்தினல் மறுத்து விடப்பபட்டது. அதற்கு பதிலாக பஞ்சாயத்து கிராமங்களுக்கு லைசென்ஸ்களை பஞ்சரயத்து யூனியன் கவுன்சில்கள் கொடுக்கும். லைசென்ஸ்கள் மூலம்வரும் வரும்படியை பஞ்சாயத்துயூனியன் வசூலிப்பதற்கும், பார்வையிடுவதற்கும் வேண்டியதை எடுத்து கொண்டு மீதியை கிராம பஞ்சாயத்துகளுக்கு பிரித்து கொடுக்கும்

மேல்பார்வையிடல்

31. எக்ஸிகுடீவ் உத்தியோகஸ்தர்கள் பிரெஸிடெண்டுகள், அவர்களால் நியமிக்கப் பெற்றவர்கள், அவர்களுக்கு உதவி செய்பவர்கள், அவர்களின் சிப்பந்திகள் முதலியவர்கள் லைசென்ஸ் பெற்ற எந்த கட்டடம் அல்லது தொழிற்சாலையில் தொழில் நடைபெறும் எந்த சமயத்திலும் பிரவேசிக்கலாம். லைசென்ஸ் பெருமல் தொழில் நடைபெறும் அத்தகைய இடங்களிலும் பிரவேசிக்கலாம். ஆறு மணி நேரம் நோட்டீசு கொடுத்து சாதாரண வீடுகளிலும் எக்குஸிடீவ் ஆபீஸர்கள் பிரெசிடெண்டுகள் பிரவேசிக்கலாம். அவர்களைத் தடுப்பது குற்றமாகும்.

நிறுத்தல் முகத்தல் அளவு கருவிகள், அதாவது படி, வீசை முதலியன

32. இந்தியன் பீனல் கோடில் கண்டுள்ள குற்றங்கள் நேரிடாதபடி தடுப்பதற்காக எக்ஸ்குடீவ் உத்யோகஸ்தர்கள் ப்ரெசிடெண்டுகள் வீசை, படி முதலிய கருவிகளையும் பரீட்சிக்கலாம். தப்பு அளவுகளை வைத்திருப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

ஜனங்கள் வழக்கமாய் கூடும் இடங்களைக் குறித்த சட்டம்

33. இந்த ஆக்டை அனுசரித்து நாடகம், கச்சேரி முதலியவைகள் எந்தபஞ்சாயத்து பிரதேசத்திலாவது நடக்கவேண்டுமானல் அதற்கு பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியின் உத்திரவேபோதும்.

அப்பீல்கள்

34. நிர்வாக உத்தியோகஸ்தர் லைசென்ஸ் கொடுக்க மறுத்துவிட்டாலும், விதிக்கப்பட்ட வீட்டு வரி மிக அதிகமாக இருந்தாலும், இன்னும் அனேக இதர விஷபங்களிலும், உத்திரவு முதலியவை பிறந்த 30 நாட்களுக்குள் அபீல் செய்துகொள்ளலாம் லைசென்ஸுகளுக்கும் இதர சில தஸ்தாவேஜுகளுக்கும் பிரதிகளை பெற்றுக்கொள்ளும் காலத்தை மேற்படி 30 நாட்களில் கணக்கிடப்படமாட்டாது

விதிகளும் உப-விதிகளும்

35. விதிகள் மதராஸ் கவர்ன்மெண்டாலும் உப-விதிகள் பஞ்சாயத்துகளாலும் ஏற்படுத்தப்படுகின்றன. விதிகள் மொத்த பஞ்சாயத்துகளை அனுசரித்தவை. உப-விதிகள் ஒரு பஞ்சாயத்தின் அதிகார எல்லைக்குள்ளடங்கிய குறிப்பிட்ட ஸ்தல விஸ்தீரணத்தில் மாத்திரம் அனுசரித்திருக்கும். விதிகளும் உப-விதிகளும் லாவைப்போல செல்லுபடியாகக்கூடியது, அவைகளை மீறி நடப்பது குற்றமாகும்.

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் சுருக்கம் முற்றிற்று

பஞ்சாயத்து ஆக்டும் விதிகளும் : ஜர்னலும்

36. செ. 178 படிக்கு 47 விஷயங்களுக்கும், மீதி செக்ஷன்கள் மூலமாக 97 விஷயங்களுக்கும் கவர்ன்மெண்டாருக்கு விதிகளே செய்ய அதிகாரமுண்டு இந்த ஆக்டில் 198 செக்ஷன்கள் இருந்த போதிலும் இந்த ஆக்டின்படி செய்யப்படும் விதிகள் மூன்று மடங்கு இருக்கும் என்று தோன்றுகிறது. விதிகளும் ஆக்டின் அவ்வளவு அதிகாரமுள்ளவை; ஆகையால். அவைகளுக்கும் விரோதமில்லாமல் நடந்துகொள்ள வேண்டும்.

தண்டனேகளும் வியாஜ்யம் தொடர்தலும்

37. "தண்டனே" களுக்காக செக்ஷன் 116 'வியாஜ்ஜியம் தொடர்ந்த" லுக்காக செக்ஷன் 107 பார்க்க. இவ்விஷயங்களைக் குறித்த எல்லாவற்றையும் அவைகள் முறையே விவரிக்கின்றன. இந்த ஆக்டின்படி குற்றங்களேப் பற்றிய தீர்ந்த ஞானம் இருக்கவேண்டு மென்கிற அவசியமில்லே. இந்த பஞ்சாயத்து குற்றங்கள் தீமையுண்டாக்கும் (கிரிமினல்) குற்றங்கள் ஆக மாட்டா. வியாஜ்யம் தொடரும்போது சம்மன்ஸ் விஷயமான முறையாவும் குற்றம் நடந்த அல்லது கிரமம் தவறிய தேதி முதல் மூன்று மாதங்களுக்குள்ளாகவே ஆரம்பிக்கவேண்டும். ஒரு லேசென்ஸை எடுத்துவிடுகிற விஷயமாக தவறிய குற்றங்கள் விஷயத்தில் ஒரு வருஷத்திற்குள் வியாஜ்யம் தொடரலாம். குறித்த காலத்திற்குள் வியாஜ்யங்கள் தொடரப் பெருவிடில் அவைகளே ஆரம்பத்திலேயே தள்ளிவிடலாம்.

பஞ்சாயத்துகளின் மீது வியாஜ்யம்

38. பஞ்சாயத்துகள், அவைகளின் ப்ரெஸிடெண்டுகள், மெம்பர்கள் ஆகியவர்களால் நடத்தப்படும் ஏதாவது காரியங்கள் விஷயமாக மான நஷ்ட தாவா செய்ய வியாஜ்யம் தொடரப் பெறுமாயின் அப்படி செய்வதற்குமுன் பஞ்சாயத்துக்கள் தகுத்த திருத்தங்களேச் செய்து கொள்வதற்காக இரண்டு மாதங்களுக்கு முன்னுகை நோடீஸ் கொடுக்கவேண்டும். நோடீஸ் கொடுத்தப் பின் ஆறுமாத கால வாந பொருத்தப்பின் வியாஜ்யம் தொடரப்படக் கூடாது. செக்ஷன் 170 பார்க்கவும். மான நஷ்டம், அல்லது நஷ்ட ஈடு இவைகளுக்காக வல்லாத வியாஜ்யங்களுக்கு, இரண்டு மாத தவணே நோட்டிஸை அல்லது காலவரை கிடையாது.

பஞ்சாயத்துக்களின் தோஷம் இருந்தால் அதற்கு சிவில் கோர்டுகள் பரிகாரம் கொடுக்கலாம்

39. ஒரு வரியோ லேஸென்ஸை கட்டணமோ, மற்ற ஏதாவது காரியமோ சட்டப்படி செய்திருந்தால் அந்த விஷயங்களே சிவில் கோர்டுகள் விசாரிக்கக்கூடாது, சட்ட விரோதமாக காரியங்கள் நடத்தும் பட்சத்தில் அந்தக் காரியங்களே சிவில் கோர்டுகள் பரிசீலித்து நஷ்ட ஈடுகட்டிக் கொடுக்கலாம், விஷயங்களுக்கு செக்ஷன், 8, 170களே பார்க்கவும்.

முடிவு

40. மொத்தத்தில் இச்சட்டம் திருப்திகரமானது. போதுமான தொகை பஞ்சாயத்துகளுக்கு இல்லாவிட்டால் போதுமான சௌகரியத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் இடையூறு உண்டாகும். பஞ்சாயத்துகள் சரிவர பரிபாலிக்கப்படவேண்டுமானல் கவர்ன்மெண்டின் உதவியில்லாமல் முடியாது. தேக ஆரோக்கியமும், சுகமும் குறையுமானல், பலஹீனமும் அயர்வும் உண்டாகி பொதுஜனக் கஷ்டம் அதிகரிக்கும். தற்கால ஆட்சி முறையினிடம் பொது ஜன அபிப்பிராயம் எவ்வாறு இருப்பினும் பஞ்சாயத்துகள் சரிவர நடைபெறுகிறதா என்றுகவனித்து வரவேண்டும்.

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் சுருக்கம் முற்றிற்று.

1959 ஆம் வருஷத்திய 35-வது சட்டமாகிய

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின்

பொருள் அகராதி

அக்கிராசனர்
அர்த்தம் பி. 2 (3)
அலுவல்கள் பி. 36 37.

அக்கிரமமாய்த் தடுப்பது
நிர்வாக அதிகாரியை, கமிஷனரை பி. 162, 184.

அங்கத்தினர்கள்
மெம்பர்களை பார்க்க

அசுத்தத்தை அப்புறப்படுத்தல்
பஞ்சாயத்து கடமை பி. 63, (d)

அசையாப் பொருள்கள்
1894-ம் வருஷம் ஆக்டின் கீழ் எடுத்துக் கொள்ளலாம் பி. 88.
மாற்றுவதின்பேரில் ஸ்டாம்பு வரி பி. 124

அசையும் பொருள் விற்பனை
விதிகள் 26. பக்கம் 326

அதிகப்படியான வரி வசூலித்தல்
நிர்ணயிக்கப்பட்டபடி பி. 116.

அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்தல்
இன்ஸ்பெக்டர், கலெக்டர் முதலியோர் கவர்ன்மெண்டாரால் பி. 144.

அதிகாரம்
அரசாங்கத்துக்கு கஷ்டங்களை நீக்க பி. 198

அபராதங்கள்
பஞ்சாயத்து நிதிப் பகுதியில் சேரும் பி. 137 (xx)

அபேட்சகர்கள்
யோக்யதாம்சங்கள் பி. 22, 25
யோக்கியதைக் குறைவுகள் பி. 25

அரசாங்கம் (கவர்ன்மெண்டு)
வரையறை பி. 2 (12)
பஞ்சாயத்துக்களின் மேல் விசாரணை பி. 144 முதல் 158 வரை.
நிர்வாகஉத்தியோகஸ்தர்களை நியமிக்கிறது பி. 40
இன்ஸ்பெக்டரின் உத்திரவுகளைத் திருப்புவதற்கு, கலெக்டர் பி. 158.
கமிஷனர்களை நியமிப்பது பி. 44,

அருகதையுள்ளவர்கள்
அபேட்சகர்கள் பார்க்க
மெம்பர்களை பார்க்க

அருகதையற்றவர்கள்
ஊழியர்கள், கிராம அதிகாரிகள் மெம்பர்களாக இருக்க பி. 23.
எலெக்ஷன் சம்பந்தமாகக் குற்றஞ் செய்த குற்றவாளிகள், மெம்பர்கள் பி. 24.

அலுவல்களைப் பிரித்துக் கொடுத்தல்
விதிகள் பி. 157

அலுவல்கள்
பஞ்சாயத்தினுடையது பி, 8, 63, 64.
பஞ்சாயத்து யூனியனுடைய; பி. 11, 65, 66
நிர்வாக அதிகாரியினுடைய, பி. 43.
கமிஷனுடையது பி. 4
தலைவருடைய பி. 33
அக்கிராசனருடைய பி. 36.
இன்ஸ்பெக்டருடைய பி. 144, 149.
கலெக்டருடைய பி. 148.

அவசர அதிகாரங்கள்
நிர்வாக அதிகாரியின் பி. 45,
இன்ஸ்பெக்டரின், கலெக்டரின் பி. 148.

அறிவிப்புகள் பிரசித்தம்
விதிகள் பி. 178 (2), (47)

அனுபோகக்காரர்
வீட்டு வரிசெலுத்தினல் பிறகு, அதை சொந்தக்காரரிடமிருந்து திரும்பிப் பெறலாம் பி. 120 (5)

அனுமதி
லைசென்ஸ் பார்க்கவும்
விதிகள் பி. 178 (2) (24)
தொழிற்சாலைகள் கட்ட பி. 112.
லைஸென்ஸுகள், உத்திரவுகளை அரசாங்கம் விதிகள் செய்துள்ளன பி. 113.
பொது பி. 159.
லைஸென்ஸ் பார்க்கவும்

ஆடிட்டர்களின் விசாரணை
விதிகள் பக்கம் 362

ஆடிட்டர்கள்
நியமித்தல் பி. 141

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருள் அகராதி

ஆடு, மாடுகளை அடிக்குந்தொட்டிகள்
பொது பி. 108.

இஞ்செங்க்ஷன்
எலெக்ஷன்களில், கொடுக்கக் கூடாது பி. 172

இனம்கள்
பஞ்சாயத்துக்களின் மேல்விசாரணை பி. 73.
பஞ்சாயத்து நிதிகள், வரிகள் பி. 137 (x)

இன்ஸ்பெக்டர்
அர்த்தம் பி. 2, (15)
அரசாங்கத்தால் இவர் உத்தரவுகள் திருத்தப்படலாம் பி, 158.
கிராமங்களை அமைத்தல் பி. 3.
ஆபீஸர்கள், ஊழியர்கள்மேல் மேல் விசாரணை பி, 144, 145, 146
நடவடிக்கை குறிப்புகளைச் சோதிக்கலாம் பி. 145.
அவசர அதிகாரம் பி. 148.
'பஞ்சாயத்துக்களை கலைத்துவிடுவதும் மீண்டும் அமைப்பதும், பி. 154.

உத்திரவாதம்
சொத்தை இழந்தாலும், பாழ் பண்ணலும் பிரஸிடெண்டும், நிர்வாக அதிகாரியும் மெம்பர்களும் உத்திரவாதிகள் பி. 173.

உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள்
சிப்பந்திகளை பார்க்கவும்
கண்ராக்ட்டில் பற்றுக்கு தண்டனை பி. 183

எடைகளும், முகத்தலளவைகளும்
பரீட்சை செய்வது பி. 163.

எலக்ஷன், தேர்தல்
தலைவருடைய உபதலைவருடைய பி. 30
மெம்பர்களுடைய பி. 14

எலெக்ஷன் அதிகாரி, தேர்தல் அதிகாரி
அர்த்தம்—பி 2 (9)

எலெக்ஷன்கள், தேர்தல்கள்
விதிகள் பி. 178 (2) (1)

எலெக்ஷன் டிபாஸிட் (தொகை)கள்
விதிகள். பி. (78) (2) (1)

எலெக்ஷன் நடவடிக்கைகள்
இஞ்செங்க்ஷனால் தடை செய்யக்கூடாது பி. 172

எலெக்ஷன் விவாதங்கள்
அனுபந்தம் பார்க்கவும், விலை ரூபா 3

எலெக்ஷன் விதிகள்
இவைகளை தனியாக அச்சிட்டு இருக்கிறது: அதின் விலை ரூபா 3.

ஒப்பந்தக்காரர்
தடுக்கப்பட கூடாது பி. 185

ஒப்பந்தம்
விதிகள். செ. 8 (3)
விஷயம் 23 பக்கங்கள் 43, 44

கம்பெனியின் டைரக்டர்
அபேட்சகராய் நிற்கலாமா என்பது பி. 25
மெம்பராக இருக்கலாமா என்பது பி 26

குறிப்பிட்ட காரியத்திற்காக வரி போடலாம்
வரி பார்க்கவும்

ஓடத் துறைகள்
வருமானம் பஞ்சாயத்து நிதியில் சேரும் பி. 137

ஓட்டர்கள் ஜாபிதாக்கள்
தயாரிப்பும், வெளியிடலும் பி. 20, 21

கக்குஸு
வரையறை பி. 2 (16)
புதிதாக வோடர் ஆகுவது பக்கம் 70

கடன்கள்
அரசாங்கம் திரும்பப் பெறுதல். பி. 138

கடமை
நடவடிக்கை எடுக்க அதிகாரம்—செ. 46.
பஞ்சாயத்தால் நிர்ப்பந்தத்துடன் செய்யப்பட்ட சில விஷயங்கள் பி. 63
பஞ்சாயத்து நிதியிலிருந்து செலவுகள் பி. 137
பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின், பி. 65, 66, 67.

கட்டணங்கள்
லைசென்ஸ்கள் பரிமிதிகளை பார்க்க.

கட்டிடம்
வரையறை—பி. 2 (1)
இலக்கமிடுதல் பி. 110

கமிட்டி
நடவடிக்கைகள் பி. 51, 52

கமிட்டிகளின் வெளியார்கள்
விதிகள் பி. 52

கம்பெனி
வரையறை பி. 2 (6)

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருள் அகராதி

கலெக்டர்
வரையறை பி. 2 (4)
அவசர சமயங்களில் இவர்களுக்குள்ள அதிகாரம் பி. 148
இவருடைய உத்திரவுகள் திருத்தப்படலாம். பி. 158

கலைக்கப்பட்ட பஞ்சாயத்துகள்
இச்சட்டத்தில் மீண்டும் அமைக்கப்படும் பி. 185, ஷெட்யூல் IV

கலைத்து விடுதல்
பஞ்சாயத்துகளை பி. 154

களத்துமேடுகள்
பஞ்சாயத்துகளை சேர்ந்தவை பி. 86

கஷ்டங்கள்
அரசாங்கம் நிவர்த்திக்க பி. 198

காப்பாற்றிக் கொள்ளப்படாத காடுகள்
வரையறை பி. 2 (34)
மாற்றுதல், பஞ்சாயத்துகளுக்கு பி. 72

கால்நடைகள், கொட்டில்கள்
பார்க்க 64 (e)

கால்நடைகள் நிற்குமிடங்கள்
பஞ்சாயத்துகளை சேர்ந்தவை பி. 63

கிணறுகள்
உபயோகமற்றதை தூர்ப்பது பி. 63 (d)
மூழ்குதல் பி. 63 (g)
சரிபடுத்துதல், பி. 95
பொதுவானவை பி. 176

கிரண்டுகள்
அரசாங்கத்திடமிருந்து பி. 135, 137

கிராம அதிகாரி—கர்ணம்
மெம்பர்களாயிருக்க அருகதையற்றவர்கள் பி. 23
வரி வசூல் செய்ய பி. 126
தகவலுக்காக அழைத்தல் பி. 165

கிராம நத்தங்கள்
விஸ்தரிப்பது பி. 65 (i)

கிராம பாசன ஆதாரம்
குடிமராமத்து பி. 85

கிராம மீன் துறைகள்
பஞ்சாயத்து நிதியின் ஒரு பாகம் பி. 135 (xv)

கிராமம்
வரையறை பி. 2 (35)
இன்ஸ்பெக்டரால் அமைக்கப் பட்டது பி. 3
ஜனத்தொகையைப் பார்க்க.

குடிக்கும் தண்ணீர்
கடமைகள் பி. 63 (g)

குடிசை
வரையறை பி 2 (14)
இதன்மேல் வரி வசூலிக்கக்கூடாது பி. 120

குடிசைக் கைத்தொழில்கள்
விருத்தி பி. 65 (ii)

குடிமராமத்து
நீர்ப்பாசனக்கட்டு வேலையை நிறைவேற்ற பி. 85
கட்டணங்களின் தொகுதி பி. 85

குட்டைகள், வடிகால்கள், குழிகள்
சுகாதாரப்படி தூர்த்தல், கடமை பி. 95
மராமத்துச் செய்தல் பி. 63 (g)

குத்தகைக்கு விடுதல்
அதிகாரம் பி. 175

குப்பை
அப்புறப்படுத்தல் கடமை பி. 63 (d)
பஞ்சாயத்தில் சங்கிரமித்தல் பி. 88

குழப்பம்
தீர்மானங்களை லைசென்ஸ்களை நிறுத்தி வைக்கலாம் பி. 147

குளங்கள்
யாவர்க்கும் பொதுவானவை பி. 175
சரிபடுத்துவது, பி. 95

குறைபாடு
நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பி. 149

குற்றங்களும், ஊழியக்காரர்களும்
இது பற்றி பி. 57
மேல் நடவடிக்கைக்கு நோட்டிஸ் பி. 170.
நல்லெண்ணெம் பாதுகாப்பது பி. 171.
நஷ்டத்துக்கு உத்திரவாதம் பற்றுதல் கொள்ள பி. 173.

குற்றங்கள் மாஜிஸ்ரேட்டுகளால்
விசாரிக்கப்படுதல் பி. 181

குற்றங்கள்
தண்டனைகள் பி. 186,
ராஜி செய்தல் பி. 167,
பஞ்சாயத்திற்கு ராஜி தகவல் தெரிவிக்க வேண்டும், பி. 168

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருள் அகராதி

கூட்டுக் கமிட்டிகள்
நிர்ணயிக்கப் பட்டபடி நியமித்தல் பி. 52.

கேள்வி கேட்பது
பி. 38.

கைத்தொழில்களும் தொழிற்சாலைகளும்
லைசென்ஸ் பி. 111.
கட்ட அனுமதி பி. 112.
அரசாங்கம் விதிகள் செய்யலாம் பி. 113.

சங்கிரமிப்பு
பஞ்சாயத்து பரிபாலனம் பஞ்சாயத்தில் பி. 8,
பஞ்சாயத்து யூனியன் பரிபாலனம் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் பி. 11.

சச்சரவு
தீர்மானம் லைசென்ஸ் இவைகளை நிறுத்தி வைத்தல் பி. 147.

சத்திரங்கள்
பி. 178, 65, (i)

சந்தைகளும், உற்சவங்களும்
பஞ்சாயத்துக்களுக்கு பி, 64 (d)

சந்தைகளையும், உற்சவங்களையும் தரம்பிரிப்பது
விதிகள் பி. 178, (2) (42)

சபைகளில் வோட்டுச் செய்தல்
பி. 48.

சபைகள்
கூட்ட பிரசிடெண்டு—செ. 24.
அக்கிராசனம் வகிக்க பிரசிடெண்டு பி. 46
ஓட்டுப்போடுதல் பி. 46, 48.

சப்பாத்தி, கள்ளி
இவற்றை நீக்குதல் பி. 63. (d)

சமுதாய அபிவிருத்தி திட்டம்
இது தேசீய விஸ்தரிப்பு திட்டம்
பீடிகை III, பக்கங்கள் 17, 18, 19 பார்.
இவைகளை குறித்து பி. 11ன் கீழ் பக்கங்கள் 57—60களில் பார்.
பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலிடம் ஒப்படைக்கப்படும், பி. 66
இதின் அதிகாரங்களை அரசாங்கம் அதிகப்படுத்தலாம், பி. 74.
இதற்காக பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் பெரும் துகை வரவு ஆகும், பி. 135 (xx)

சமுதாயத்து சொத்து நிலங்கள்
பஞ்சாயத்தில் சங்கிரமிப்பது பி. 83.

சம்பளங்கள், பென்ஷன்கள் முதலியவைகள்
பஞ்சாயத்து நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது பி. 139. (2) (ii)

சாக்கடை
பஞ்சாயத்தில் சங்கிரமித்தல் பி. 88.

சாக்கடைக் கால்கள்
பொது பாட்டை பி. 2. (28) (c)
சங்கரமிப்பு பி. 76, 82.
கட்டும் கடமை பி. 63 (c)
பொது பாட்டையில் பி. 82.

சாட்சிகளும் சம்மன் அனுப்புதலும்
விதிகள் பி. 141. பக்கம் 363.
பி. 111 பக்கம் 247.

சாதாரண காலிஸ்தானமும், சாதாரண எலெக்ஷனும்
வரையறை பி. 2. (38)

சிசு சம்ரக்ஷண சாலைகள்
பி. 64.
பொதுவானவை
சிப்பந்திகள், பி. 57—62

சுகாதார ஏற்பாடுகள்
பஞ்சாயத்து நிதியிலிருந்து செலவுகள் பி. 137.

சுய ஊழியத்தால் வரியைக்கழித்தல்
விதிகள் பி. 178, (2) (20),

செலவு
பஞ்சாயத்து நிதியிலிருந்து செய்யப்படுபவை பி.137,
45 விதிகள் பக்கங்கள் 343 - 355

சென்னை கட்டாயவேலை வாங்கும் சட்டம்
பி 85

சென்னை கிராம கோர்ட்டுகளின் சட்டம்
எடுத்துவிடப்பட்டது, பி. 191

சென்னைப்பட்டணத்து பொது ஜன சுகாதாரச் சட்டம் :
வரிகளும், சங்கங்களும் பஞ்சாயத்தின் ஒரு பகுதி—செ. 70 (vi)
பொதுஜன சுகாதார ஸ்தாபனத்தோடு பஞ்சாயத்தின் கீழ் இது பொருந்தாது.—செ. 34 (7)
பொருத்தமாய் திருத்தம் - செ. 135

சென்னை லோகல் போர்டுகள் சட்டம் :
செ. 136-ன் தொடர்பான திருத்தங்கள்.

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருள் அகராதி

பழைய ஆக்டு என்கிறது--ஷெட் III விதி 1

சென்னை ஜில்லா முனிஸிபாலிடிகள் சட்டம்:
பஞ்சாயத்துகளுக்கு, வியாபிக்கச் செய்தல்—செ. 125

சொந்த பாதை :
அர்த்தம் பி. 2 (27)

சொந்த மார்க்கெட்டுகள் :
லைசென்ஸ் கொடுத்தல் பி. 100
தகராறுகள் பற்று பி. 101
லைசென்ஸில்லாமல் விற்கக் கூடாது பி. 102

சொந்த மார்க்கெட்டுக்காரர் கணக்குகள் வைக்கவேண்டும் :
விதிகள். பி. 178 (2) (46)

சொந்தவண்டி நிற்குமிடம் :
இது பற்றி பி. 107

சௌகரியம் :
பி. 65, 66

டிஸ்பென்ஸரிகள் :
விதிகள் பி. 178
திறந்துவைத்தல்— பி. 65

ட்ரஸ்ட்டுகள் :
பஞ்சாயத்து ஒப்புக்கொள்ளலாம் – பி. 75

தடங்கள் உண்டாக்குவது :
பொது பாட்டையின்மேல்—பி. 182

தடுத்தல் :
நிர்வாக அதிகாரி,—பி. 184
பஞ்சாயத்து,—பி. 185

தண்டனைகள் :
விதிகளுக்குக் கீழ்ப்படியாததற்கு—பி. 179
குற்றங்களுக்கு—181
மெம்பர், ப்ரஸிடெண்டு, வைஸ்-பிரஸிடெண்டுபோல் நடித்தால்—பி. 182
உத்தியோகஸ்தர் பற்றுதல் கொண்டிருந்தால் பி. 183
தெரிவிக்காத அல்லது பொய் செய்திகளைத் தெரிவித்தல் பி. 187

தரம் பிரிப்பது :
பாட்டைகள், சத்திரங்கள், டிஸ்பென்சரிகள் இவைகளை குறித்து விதிகள் பக்கம் 422

தற்காலிக உத்தியோகஸ்தர்கள்
நிர்வாக அதிகாரியால் நியமிக்கப்படலாம்—பி. 43

தற்காலிக பிரஸிடெண்டு :
நிர்ணயிக்கப்பட்டபடி நியமிக்கப்படல் பி. 34

தற்செயலாய் ஏற்படும் காலி ஸ்தானத் தேர்தல் .
அர்த்தம் - செ. 2 (2)
இதுவும் மெம்பர்களும் - பி. 19.
நிர்வாக அதிகாரியால் ரிபோர்ட் செய்யப்படுதல், பி. 17 (3)

தஸ்தாவேஜுகள் :
பஞ்சாயத்தால் அழைக்கப்படல் - பி. 50
நகல் கொடுப்பது விதி 15 ப. 121

தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் :
அர்த்தம் - 2 (31)
சேமிப்பு - பி. 15

திருத்துவது :
எவ்விஷயத்தையும் அரசாங்கம் பி. 158

தீர்மானம் ;
விதிகள் பி. 38
கொண்டுவர மெம்பர்க்குள்ள உரிமை - பி. 38 (2)
நிறுத்தி வைத்தல் அல்லது ரத்து செய்தல் - பி. 147

துணைவிதிகள் :
மீறியதற்கு தண்டனை - 147

தேர்தல்கள்
மெம்பர்கள், தலைவர், உப தலைவர், அக்ராசனர், உப அக்ராசனர், கமிட்டிகள் பார்க்கவும் சிவில் கோர்டு தடை செய்ய கூடாது - பி. 172
விதிகளை, அனுபந்தத்தில் பார்க்கவும் ரூபா 3.

தொழில் சாலைகள்
கட்ட லைசென்ஸ் வேண்டும், பி. 112

தொழில் வரி
இதுபற்றி - விதிகள் பி. 121
பஞ்சாயத்து நிதியின் ஒரு பாகம் - பி. 137

தோப்புகள் :
பஞ்சாயத்து. இவையும் - பி. 86

நகல்கள் :
விதி. 15 பி. 51 ப. 121

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருள் அகராதி

நடவடிக்கைக் குறிப்புகள் :
3 நாளைக்குள் இன்ஸ்பெக்டருக்கு பிரஸிடெண்டு சமர்ப்பிக்கவேண்டும். பி. 51
விதிகள். 13 பக்கம் 120

நத்தங்கள் :
கட்டணங்கள், பஞ்சாயத்து நிதியின் ஒரு பாகம் பி. 135

நாய்கள், பன்றிகள், இவற்றுக்கு லைசென்ஸுகள் கொடுத்தல் :
விதிகள் பி, 178 (2) (32)

நிர்வாக அதிகாரி :
அர்த்தம் பி. 2 (10) தற்காலிக, சாதாரண காலிஸ்தானங்களின் ரிபோர்ட் பி. 17
அலுவல்கள் பி. 43
அவசரக் காலங்களில் அதிகாரங்கள் பி.45
உத்தியோகஸ்தர்களையும் அமர்த்தலாம் 52
பரிபாலன அறிக்கை தயாரித்தல் பி. 54
அக்கிரமமாய் தடுத்தல். அநியாயம்-செ. 169, 182
விதிகள் பி. 178 (2)

நிர்வாக அதிகாரிகளால் ஸம்மன் அனுப்பி யழைக்கப்பட்ட சாட்சிகள் :
பி. 43 பக்கம் 98
விதிகள் பி. 178 (2) (xxv)

நிர்வாக உத்தியோகஸ்தர் :
வரையறை செ. 2 (11)
பட்டணம் பஞ்சாயத்துக்கு நியமனம் பி. 40
மற்றவற்றில் பிரஸிடெண்டே இவர் யாவும் பற்றி பி. 42
அவர்கள் வேலைகள் பி. 43
நிர்வாக அதிகாரியும் இவரே - பி. 44

நிலவருமானம் :
அதிகமாகவும் வசூலிக்கப்படலாம் பி. 119

நிற்கும் இடங்கள் :
பஞ்சாயத்துகள் இஷ்டப்படி பி. 64 (e)

நீர் :
சுத்தப்படுத்தி விநியோகித்தல். வயல்களுக்காகக் கட்டு வேலைகள் பி. 68

நீர் நிலைகள் :
எல்லோருக்கும் பொதுவானவை பி. 175

நீர் போகும் வழி :
பி. 2 (36)

நீர்ப்பாசனக் கட்டு வேலை :
குடிமராமத்து பி. 85

நோட்டீஸ்கள் :
அமுலுக்குக் கொண்டுவர அதிகாரமும் அவர்களுக்குத் தண்டனையும் பி. 161

பஞ்சாயத்துகள் :
மெம்பர்களின் சங்கியை பி. 10
தாழ்த்தப்பட்ட ஜாதியாருக்கு சேமிப்பு பி. 15
ஒரு மெம்பரையும் தேர்ந்து எடுக்காவிட்டால், பஞ்சாயத்தே தேர்ந்தெடுக்கும் - பி. 18
பிரஸிடெண்டு கூட்டங்கூட்டவும், ரிகார்டுகள் எழுதவும் பி. 33
நடவடிக்கைகள் பி 51
கலைத்தல் : மீண்டும் அமைத்தல் பி. 154
கட்டாயமான கடமைகள் பி, 63
கட்டாயமில்லாத அலுவல்கள் பி. 64
சாதாரண டிஸ்பென்ஸரிகள், வைத்திய சாலை முதலியன பி. 65
நிதியேற்பாடுகள் பி. 115-119
நன்கொடைகள், ட்ரஸ்ட் பி. 76
பொதுப்பாதைகள், சங்கிரமிப்பு பி. 76
புறம் போக்குகள் பி. 85
புது பஞ்சாயத்துகள் பி. 188

பஞ்சாயத்துகளின் அதிகாரங்கள் :
பி. 63, 64 முதலியன

பஞ்சாயத்து நிதி :
விசாரணை பி.137
செலவுகள் பி. 138

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் :
அர்த்தம் பி 2 (24)
பஞ்சாயத்து யூனியனை ஆளும் சபை பி: 11
இதின் அலுவல்களை பக்கங்கள் 57-60களில் பார்க்க.
அலுவல்கள் பி. 65, 66. 67, 74, 130
இவைகளுக்கு பிளாக் அபிவிருத்தி சபைகள் மாற்றப்படும், பி 66, 74, 130
அங்கத்தினர்கள் பி. 19
அக்ராசனர், உப அக்ராசனர் பி. 46, 47

பட்ஜெட்கள் :
தயாரித்து, அனுமதி அளிப்பது பி. 140
நிர்ணயிக்கப்பட்டபடி அனுப்புவதும் மாற்றுவதும் பி 140

பணம் பெற்றப்பற்றுதல் :
இதுகொண்ட நபர்கள் சபைகளில் ஓட்டிட மாட்டார்கள் பி. 48

பரவலான நோய்
தடுக்கும் அளவுகள் பி. 65 (f)

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருள் அகராதி

பரவலான நோய்களின் ஜாபிதா

அபாயகரமான நோய்களின் ஜாபிதா பி. 94
அபாயகரமான இன்புளுயன்சா, நிமோனியா.
ஆன்த்ராக்ஸ் என்னும் அடைப்பான்.
சின்னம்மை.
வாந்திபேதி.
(டிப்திரியா) கண்டக்கரப்பான் என்னும் தொத்துவியாதி.
என்டெரிக் என்னும் குடல் சம்பந்தகான சுரம்.
தகிரகோளங்கள் சம்பந்தமாய்க் குதிரைகளுக்குக் காணும் வியாதி.
குஷ்டம்.
(ப்ளேக்) மஹாமாரி.
வைசூரி.
க்ஷயம்.
கக்குவான்.

[மதராஸ் லோகல் போர்டுகள் சட்டம், 1920-ஷூத்திய 14-வது சட்டம், 6-வது ஷெட்யூல் 130-வது பிரிவு.]

பறிபாலன அறிக்கை :

நிர்ணயிக்கப்பட்டபடி பி. 54

பள்ளிக்கூடங்கள் :

திறப்பதும், நடப்பதும் இஷ்டப்படி பி. 64

பன்றிகள்; நாய்களுக்கு லைசென்ஸ் கொடுப்பது

விதிகள் பி. 178 (2) (32)

பாட்டைகளில் தடங்கல் உண்டாகலாகாது என்று தடுப்பது

விதிகள் மூலம் நிர்ணயிக்கப்பட்டபடி. பி. 82

பாட்டைகள்

பொது பாட்டைகள் பார்க்க.
சொந்தபாட்டைகள் பார்க்க.
எல்லோருக்கும் பொதுவானவை பி. 173

பாதுகாக்கப்படாத காடுகள்

ரெவினியு டிவினிஷனல் ஆபீஸரின் அதிகாரங்கள் பி. 72

பாதுகாப்பு நிதி

பாஞ்சாயத்து திரவிய சாகயம் அளிக்கலாம் பி. 135 137

பார்வையிடுதல்

பலவகைப் பட்டண பி. 162
அதிகாரம் பி. 113

பிசகான நடவடிக்கைக்கு நோட்டீஸ்

அதிகாரம் பி. 170

பிரசவ வைத்திய சாலை

இஷ்டப்படி ஏற்படுத்துதல் பி. 64, 65
பொது பி. 70

பிரஸிடெண்டு

பஞ்சாயத்தின் பிரஸிடெண்ட் பி. 2.(26)
ஒருவர் இருக்க வேண்டும் பி. 29.
உத்தியோக முறைமையில் வோட்டுக் கொடுக்க உரிமையுடையவர் பி. 51; விதி 6. ப, 116
உத்தியோகம் அற்றுப் போதல் பி. 32.
இவரது அலுவல்கள் பி. 33
சபை கூட்டல் பி. 33
பிரஸ்டெண்டு வராதபோது அவர், அலுவல்களை வைஸ்பிரஸிடெண்டு செய்ய பி. 34.
அதிகாரங்களை பிரித்து கொடுப்பது பி. 35.
நடவடிக்கை. குறிப்புகள் அளிக்க பி. 51
நீக்குதல் பி 150
மேல் நம்பிக்கை இல்லாத தீர்மானம், பி. 152
நல்லெண்ணங்களுடன் செய்வது காப்பாற்றுவது பி. 171.
நஷடத்திற்கு உத்திரவாதி பி. 173,
தப்பு நடவடிக்கைக்கு தண்டனை பி. 182

பிரதேச ஸ்தாபனங்களிடையே தகராறுகள்

பி. 177

பிரவேசித்தல்

பிரவேசிக்க அதிகாரம் பி. 162.

பிரயாணிகள் தங்குமிடங்கள்

யாவும் பற்றி பி. 106

பிராது செய்தல் பிராது

பிராது தொடர அதிகாரம் பெற்றுள்ள நபர்கள் பி. 166

பிராது தொடர்ந்து வரி பெறல்

விதிகள் 24, ப. 318

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருள் அகராதி

பிளாக்கு அபிவிருத்தி குழுகள்

1960 ஆம் ஆண்டு ஜனவரி முதலி லிருந்து

பஞ்சாயத்து மெம்பர்களாக ஏற்றிகொண்டு பரிபாலிக்கும்—கெஜட், பாகம் 2-B
30-XI-1959—பி. 7. 11.

பஞ்சாயத்து யூனியன்களை பார்க்கவும்

பில்லு, நோட்டீஸ் கொடுப்பது
விதி 23, ப. 317.
நிர்ணயிக்கப்பட்டபடி செ. 17, (i)

புது பஞ்சாயத்துகள்
பிரத்தியேக நிபந்தனைகள் பி. 188.

புதைக்கிற தகனம்செய்கிற இடங்கள்
பராமரிப்பு, கடமை பி. 63, (f)
இவையும் பஞ்சாயத்தும் பி. 86.
விதிகள் பக்கம் 173

புஸ்தகங்களும் கணக்குகளும் வரிசெலுத்து வோர் சோதிக்கலாம்
விதிகள் பி. 119.

பொது நிற்குமிடங்கள்
யாவும் பற்றி பி. 106

பொதுப் பாட்டை
அர்த்தம் பி. 2, (28)
அமைத்தல் கடமை பி. 63 (a)
பஞ்சாயத்தில் சங்கிரமித்தல் பி. 77
இவைகளில் விற்ககூடாதது பி. 103
எல்லோருக்குக் பொது பி 175.

பொது பாட்டையை தரம் பிரித்தல்
விதிகள் பி. 178, (42)

பொதுப் பாட்டையை ஆக்கிரமித்ததற்குத் தண்டனை
பி. 82, விதிகள் 13, மக்கம் 211

பொது ஜனங்கள் கூடுமிடங்களை குறித்த சட்டம்
பி. 114, பார்க்கவும்

மரங்கள்
நடுவது பி. 64 (a)

மலேரியா
தடுக்க ஏற்பாடுகள் பி. 65, (f)

மறுபடியும் அமைக்கப்பட்ட பஞ்சாயத்துகள்
இந்த ஆக்டின் கீழ் திரும்ப அமைக்கப் பட்டது.ஷெட் iv

மார்கெட்டுகள்
பிரிவுகள் பி. 99 - 104
எல்லோருக்கும் உரியவை பி. 175
பஞ்சாயத்து நடத்துவது பி, 64 (c)
பொதுஜன மார்க்கட்டுகளையும் சொந்த மார்க்கெட்டுகளையும் தரம்பிரித்தல் பி. 104

மார்க்கெட் கட்டணங்கள்
பஞ்சாயத்து நிதியின் ஒருபாகம் பி. 137 (vi)

மாஜிஸ்டிரேட்டுகள்
விதிகள் பி. 166, 181

மிருக வைத்திய பரிகாரம்
இஷ்டபடி வைத்துக் கொள்ளல் பி. 65, (h)

மீன் பிடிக்கும் துறைகள்
பஞ்சாயத்து நிதி கிராமங்களிலிருந்து வருமானம் பி,1 37 (xiii)

முத்திரைக் கடுதாசி-கடமை
சொத்து மாற்றப்படுகிறதின் பேரில் பி. 124

முன் பணத்தொகைகள்
கவர்ன்மெண்டு திரும்பப்பெறுதல், பி. 143.

மூலாதாரப் பாடசாலைகள்
ஏற்படுத்துதல் பி. 63

மெம்பர்கள்
மெம்பர்கள் பி. 2 (17)
பஞ்சாயத்தில் சங்கியை பி. 10
ஷெட்யூல் ஜாதிகளுக்கு ஒதுக்கி வைப்பது பி. 15
ஆபீஸின் கால அளவு பி. 17
தற்செயலான, சாதாரண காலிஸ்தானம் பி. 18
ஒருவரும் தேராவிட்டால் பஞ்சாயத்தே தேர்ந்தெடுக்கும் பி. 18
பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலின் மெம்பர் கள் பி. 19
அருகதையற்ற தன்மை பி. 26
மறுபடியும் ஆபீஸுக்கு வருதல்—பி. 27
மெம்பர்களின் யோக்யதை, யோக்யதை யற்றவற்றை தீர்மானிக்க அதிகாரி பி. 28
பிரசிடெண்டு, வைஸ்பிரஸிடெண்டாக வரலாம் உரிமைகள் பி. 30, 38
பிரதிபலன் கிடையாது பி: 39
பிராது தொடர அநுமதி பி, 169

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருள் அகராதி

மேல் நடவடிக்கை நோட்டிஸ் பி. 170
பிரவர்த்தியை பாதுகாப்பது பி. 171
நஷ்டத்திற்கு உத்திரவாதி பி. 173
பிரவர்த்தித் தவருக்குத் தண்டனை பி. 182
புது பஞ்சாயத்துகளில் பி. 122

மேயும் தரைகள்
பஞ்சாயத்தை சேரும் பி. 83

மோட்டார் வண்டிகள்
கட்டணம் செலுத்த பி. 106
பொதுவான நிற்குமிடங்கள் பி. 87

யந்திரங்கள்
— ஸ்தாபிக்க லைசென்ஸ் பி. 112

ராஜிநாமா
பிரஸிடெண்டு, வைஸ் பிரஸிடெண்டு மெம்பர்கள் முதலியவரின் விதிகள் பி. 32 பக்கம் 81

ராஜி விஷயங்கள்
குற்றங்களின் பி. 167, 168

ரேடியோ உபகரணங்கள்
வைத்தல் பி. 64 (h)

லைசென்ஸு அல்லது அனுமதி
கைத்தொழில், தொழிற்சாலைகளுக்கு பி. 111
தொழிற்சாலைகள் கட்ட பி. 112
பொது பி. 159
அரசாங்கமும், மார்க்கெட் கமிட்டிகளும் பெறவேண்டியதில்லை பி. 113
30 நாளுக்கும், அதற்கு மேற்பட்டும் தெரிவிக்கப்படாவிட்டால் செ. 159 (3)
நிறுத்தி வைத்தல் அல்லது ரத்து செய்தல் பி. 147
சொந்த மார்க்கெட்டுகளுக்கு பி. 100

லைசென்ஸ் விதிகள்
பி. 111—114, 159 களின் கீழ் பார்க்கவும்

வண்டிகள் வரி
விதிகள் பி. 122 பக்கம் 311

வண்டி நிற்குமிடங்கள்
பி. 106, விதிகள் பக்கம் 311
தனி வண்டி நிற்குமிடங்கள் பி. 107

வரி
பி. 115—123
பொது விஷயங்கள்—பக்கம் 269—271
கனை விதிக்க கோர்டுகளுக்கு அதிகாரமில்லை, பக்கம் 276
வீட்டு வரி பார்க்க பி. 120
தொழில் வரி பி. 121
வண்டி வரி பி. 122
சொத்தினை மாற்றுவதின்பேரில் வரி பி. 124
கணக்கிலிருந்து அடித்து விடுதல் பி. 127
ரிவின்யூ இலாகா வசூலிக்கவும் பி. 126
பஞ்சாயத்து நிதியின் ஒரு பாகம் பி. 127

வரிகள் மேல் அப்பீல்கள்
பி. 123

வரிக்காக ஜப்தி செய்தல்
விதிகள்—பி- 123, பக்கம் 318 (2) **(xxi)**

வரியைக்கழிக்க வேலை செய்தல், வண்டியிலேற்றிச் செல்லுதல்
விதிகள்—178 (2), (xxi)

வரி விதிகளைத் திருத்தி யமைப்பது
விதிகள்—பி. 178 (2), (xx)

வரி விதிப்பு குறித்துத் தோஷம் சொல்லக்கூடாது
பி. 174

வரி விதிப்பும், திரவிய விஷயமும்
வசூலிக்கத்தக்க வரிகள் பி. **115—143**

வருஷம்
அர்த்தம் பி. 2 (37)

வாக்காளர் (வோட்டர்கள்) ஜாபிதா
தயாரிப்பதும், வெளியிடுவதும் பி. 20. 21

வாசகசாலைகள்
இஷ்டப்படி திறத்தல் பி. 64 (g)
விதிகள் பி. 178 (2)

வாசஸ்தலம், வாசம்
வரையறை—செ 3 (29)

வார்டுகள்
பஞ்சாயத்தை வார்டுகளாக பிரிக்க பி. 1
ஒவ்வொரு வார்டுக்கும் வாக்காளர் ஜாபிதா பி. 20 (3)

வானெலிகள்
கிராமங்களில் வைத்துக் கொள்ளல் பி. 64 (h)

விதிகள்
லைசென்ஸுகளையும், அனுமதிகளையும் குறித்து பி. 111—114, 159, 176

மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பொருள் அகராதி

விவசாய கண் காட்சிகள்
பி. 65 (m

விவசாயத்தை சீர்திருத்துவது
பி- 65 (m)

விவசாய நிலம்
இதற்கு வரி பி. 116 பக்கம் 273

விளக்கு போடுவது
பி. 63 (b), 64 (b), 69

விளையாடும் இடங்கள்
இஷ்டப்படி தயாரிக்கலாம் பி. 64 (h)

விளையாட்டுச் சங்கங்கள்
அமைத்துக்கொள்ளுதல் பி. 64 (h)

விற்பனை
தோஷம் சொல்லக்கூடாது பி. 174

விற்பனை மூலமாக வரி பெறல்
விதிகள் 317—323 பக்கங்கள்

வீடு
அர்த்தம் பி. 2 (13)

வீடுகளும் பண்ணை முற்றங்களும்
விதிகள் பி. 178 (2) (xxxix)

வீட்டு வரி
விவரம் பி. 120
குடிசைகள் பேரில் வசூலிப்பதில்லை பி- 120 (1)
மொத்தம் அல்லது வருஷ தொகையுடன் சேர்க்கப்படும், முதலாய்ச் செலுத்தல் பி. 120 (2)
அனுபோகதாரர் செலுத்தினல். அவர் அதை சொாதக்காரரிடமிருந்து திரும்பி பெறலாம் பி. 120 (5)
விதிக்கும் விதிகள் பக்கங்கள் 286, 287
அபீல் பி. 123
வசூலிக்கும் விதிகள், பக்கங்கள் 317-323
பஞ்சாயத்து நிதியில் ஒரு பகுதி பி.130 (v)
I-ம் ஷெட்யூல்படி குறைந்தபக்ஷ, அதிக பக்ஷ வரிகளின் கட்டணங்கள் பி. 120

வேலைகளுக்கு எஸ்டிமேட்டுகள்
விதிகள் பி. 178 (2) (xv)

வேலை செய்து வரியைக் கழித்தல்
விதிகள் பி. 178 (2) (xxi

வைத்திய அப்பியாசிகள்
சகாயவர்த்தனைகள் பி. 65 (c)

வைஸ்பிரஸிடெண்டு
இருக்கவேண்டும் பி. 29
மெம்பர்களுக்குள்ளேயே தேர்தல் பி. 30
பிரஸிடெண்டு இல்லாதபோது அவரைப் போல் ஆவார் பி. 34
வரும்படி கிடையாது பி. 39
நீக்குதல் பி. 150
நம்பிக்கை இல்லாத தீர்மானம் பி. 152
பிராதிற்கு அனுமதி பி. 169
நடவடிக்கைக்கு நோட்டீஸ் பி. 170
நல்லெண்ண நடத்தையே காப்ப பி. 171
நஷ்டத்திற்கு உத்திரவாதி பி. 173
ஆக நடித்ததற்கு தண்டனை பி. 182
புது பஞ்சாயத்துகளில் பி. 188

ஸ்தாபனங்கள்
மற்ற பஞ்சாயத்துகளுக்கு மாற்றலாம் பி. 71

ஜப்தி
தோஷம் சொல்லக்கூடாது பி. 174
விதிகள் 25 - 30 பக்கங்கள் 318 - 322

ஜப்தி பண்ணி வரி பெறல்
விதிகள் பி. 120, 123
வீட்டு வரியும், மின்சார மான்யமும், பக்கம் 285

ஜல சூத்திரங்கள்
அமைப்பு, கடமை பி. 63 (g)
பஞ்சாயத்தில் சங்கிரமித்தல் பி. 68

ஜனத்தொகை
... ஜனத்தொகை குறைப்பது யை பஞ்சாயதத்தின் முதல்ர்மம், பீடிகை ப. 12
ஒரு பஞ்சாயத்து அமைக்க குறைந்தது 5,00 பேராவது இருக்கவேண்டும் பி. 3 (1) (b)
பட்டணம் பஞ்சாயத்து குறைந்தது 5,000 பேராவது இருக்கவேண்டும் பி 3 (1) (a) யின்படி மெம்பர்களின் தொகை எற்படுத்தப்படும் பி 10

ஜனனமரணங்கள்
பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் பதிவு செய்ய பி. 65 (k)

க்ஷேமம்
பி. 65, 67

MADRAS DISTRICT DEVELOPMENT COUNCILS ACT
MADRAS ACT NO XVIII (18 of 1958)

மதராஸ் ஜில்லா அபிவிருத்தி சபைகள் சட்டம்

1958-ம்ஹூத்திய தமிழ் நாட்டின் 18-வது சட்டம்

1—12—1959-ல் இந்த சட்டம் அமுலுக்கு வந்தது

சென்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட் பாகம் I-A எக்ஸ்ட்ரா ஆர்டினரி S. R. O. No. B. - 1123/59
G.O. Ms. No. 1994, L. A. தேதி 27—11—1959

பொருளடக்கம்

பிடிகை பிரிவு	பக்ககம்
1. சிறு பெயரும், வியாபகமும், தொடுக்கமும்.	509
2. அர்த்தம்	
(1) ஜில்லா	
(2) அரசாங்கம்	
(3) பஞ்சாயத்து	
(4) வாசஸ்தலம் வசிப்பவர்.	
(5) ரெவின்யூ ஜில்லா	
(6) வருஷம்	
3. ஜில்லாக்கள்.	509
விதிகள்.—21 ஜில்லாக்களாக பிரிக்கப்பட்டன	510
4. ஜில்லா அபிவிருத்தி சபைகளை அமைப்பது	512
விதிகள்.—பாராளுமன்ற மெம்பர்களும், ராஜ்ய சபைகள் மெம்பர்களும் அங்கீகாரம் தெரிவிப்பது	513
விதிகள்.—பஞ்சாயத்து தலைவர்கள் பஞ்சாசாயத்துகள் பிரதேசத்தில் யுள்ள ஒருவரை அங்கத்தினராக தேர்ந்து எடுக்க	514

பிரிவு	பக்கம்
5. ஜில்லா அபிவிருத்தியின் சபையின் அலுவல்கள்	517
6. ஜில்லா அபிவிருத்தி சபையின் கூட்டங்கள்.	518
7. ஜில்லா அபிவிருத்தி சபையில் காலி ஏற்பட்டிருப்பது முதலியவை காரணமாகவே அச்சபை மேற்கொண்ட செயல்கள் அல்லது நடவடிக்கைகள் செல்திறன் அற்றவை ஆகிவிடாதென்பது.	
8. கமிட்டிகளை நியமிப்பது.	
9. ஜில்லா அபிவிருத்தி சபையின் சிப்பந்தியினர்.	519
10. ஜில்லா அபிவிருத்தி சபையின் பொது அதிகாரங்கள்	520
11. வருடாந்திர அறிக்கை.	
12. விவர கணக்குகளும் அறிக்கைகளும்.	
13. நல்ல எண்ணத்துடன் எடுத்துக்கொண்ட நடவடிக்கைக்கு பாதுகாப்பு.	
14. விதிகள் செய்ய அதிகாரம்.	

இந்த சட்டத்தின் சுருக்கம் – 521

இசன் ஏற்றுகளும் நோக்கங்களும் இதன் நிதி யதாஸ்து அதிகாரங்களை பிரித்துக் கொடுப்பது 523

THE MADRAS DISTRICT DEVELOPMENT COUNCILS ACT
MADRAS ACT XVIII OF 1958

மதராஸ் ஜில்லா அபிவிருத்தி சபைகள் சட்டம்

1958 ஹூத்து 18-வது மதராஸ் சட்டம்

AN ACT TO PROVIDE FOR THE CONSTITUTION OF DISTRICT DEVELOPMENT COUNCILS IN THE STATE OF MADRAS.

சென்னை ராஜ்யத்தில் ஜில்லா அபிவிருத்திச் சபைகளை அமைப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கான சட்டம்

சென்னை சட்ட மன்றத்தின் அடியிற்கண்ட சட்டமானது 1958-ம்ஷு ஸெப்டம்பர்மீ 19-ம் தேதியன்று ராஜ்யபாலரால் (கவர்னர் அவர்களால்) அங்கீகரிக்கப்பட்டு, எல்லாருக்குந் தெரியும்பொருட்டு பிரசித்தம் செய்யப்பட்டது. மதருஸ் ஸெய்ன்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட்டில் பாகம் IV-Bல் 1958ஷு அக்டோபர் மீ 15ந் தேதி தமிழில் பிரசுரம் செய்யப்பட்டது.

இந்தியக் குடியரசின் ஒன்பதாம் ஆண்டில் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாக :-

சிறு பெயரும், வியாபகமும் தொடக்கமும்

1. (1) இச் சட்டம், 1958-ம்ஷுத்திய சென்னை ஜில்லா அபிவிருத்திச் சபைகள் சட்டம் எனப்பெயர்பெறும்.

(2) இது, சென்னை ராஜ்ய முழுவதும் வியாபிக்கும்.

(3) இது இந்த அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலம் நிச்சயிக்கக்கூடிய தேதியன்று அமுலுக்கு வரத் தொடங்கும்.

குறிப்பு : – இந்த சட்டம் 1—12—1959 ல் அமுலுக்கு வந்தது

2. **அர்த்தம் :** இச் சட்டத்திலே, சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி—

(1) "ஜில்லா" என்பது 3-வது பிரிவின் (1) உட்பிரிவில்குறிப்பிட்டுள்ள ரெவினியு ஜில்லா என்றாவது, அப் பிரிவின் (2) உட்பிரிவின்கீழ் ஜில்லாவாக அமைக்கப்பட்டு, அதேபிரிவின் (3) உட் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட எவையேனும் விளம்பரங்களினால் மாற்றப்பட்டுள்ள பிரதேச விஸ்தீர்ணம் என்றாவது பொருள்படும் ;

(2) **அரசாங்கத்தார்** "அரசாங்கத்தார்" என்பது, ராஜ்ய அரசாங்கத்தார்என்று பொருள்படும் ;

(3) **பஞ்சாயத்து : : பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்** "பஞ்சாயத்து", "பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்" ஆகியவற்றிற்கு அவைகளின் அமைப்பு பற்றி பிரஸ்தாப காலத்தில் அமுலிலிருந்து வருகிற சட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள அர்த்தத்தையே இங்கும் உடையனவாகும்;

(4) **வாசஸ்தலம் வாசிப்பவர்** யாதொரு நபர் யாதொரு வீட்டின் எந்தப் பாகத்தையாகிலும் தூகுங்வதற்கான அறையாகச் சில காலம் உபயோகித்தால், அவர் அந்த வீட்டில் தம்முடைய "வாசஸ்தலத்தை" உடையவராகஅல்லது அதில் "வசிப்பவராக" எண்ணப்படுவார்; மேலும்யாதொரு நபர் எப்போதாகிலும் அப்படிப்பட்ட யாதொரு வீட்டுக்கு இஷ்டப்பட்டால்திரும்பி வரக்கூடியவராயிருந்து, அப்படித் திரும்பிவரும் உத்திதேசத்தை விட்டுவிடாதிருந்தால், அவர் அந்த வீட்டிலிராத காரணத்தினாலேயாவது, வேறே இடத்திலுள்ள இன்னொரு வீட்டில் அவர் வசிப்பதனாலேயாவது, அவர் முதலில் சொன்ன வீட்டிலே வாசம் செய்வது அற்றுப் போய்விட்டதாகக்கருதக்கூடாது ;

(5) **ரெவினியூ ஜில்லா** "ரெவினியு ஜில்லா" என்பது, ரெவினியு நிர்வாகக் காரியங்களுக்காக ஜில்லாகலெக்டர் ஒருவரின் பொறுப்பிலிருக்கிற யாதொரு பிரதேச விஸ்தீர்ணம் என்று பொருள்படும் ;

(6) **வருஷம்** "வருஷம்" என்பது, "நிதி வருஷம்" என்றுபொருள்படும்.

ஜில்லாக்கள்

3. (1) இப் பிரிவிலே வேறுவிதமாக ஏற்பாடு செய்திருந்தாலன்றி மற்றப்படி, இச் சட்டம் செலாவணியாகும் தேதியன்று ரெவினியு ஜில்லாவாகயிருக்கிற ஒவ்வொரு பிரதேச விஸ்தீர்ணமும் இச் சட்டத்தின் காரியங்களுக்காக ஒரு ஜில்லா எனக் கருதப்படும்.

(2) ஒரு ரெவினியு ஜில்லாவில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ரெவினியு ஜில்லாக்களில் அமைப்பாகவுள்ள யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தை இந்த அரசாங்கத்தார், விசேஷ சந்தர்ப்பங்களில், விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக, இச் சட்டத்தின் காரியங்களுக்காக ஒரு ஜில்லாவாகுமென அறிவிப்பதுடன் அந்த ஜில்லாவின் பெயரைக் குறிப்பிடலாம்.

(3) அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக, —

(i) யாதொரு ஜில்லாவில் அடங்கியுள்ள யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தை அந்த ஜில்லாவிலிருந்து விலக்கலாம் ; அல்லது

(ii) யாதொரு ஜில்லாவை அடுத்திருக்கிற யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தை அந்த ஜில்லாவில் சேர்க்கலாம் ; அல்லது

(iii) உட்பிரிவின்கீழ் பிறப்பித்த விளம்பரத்தை ரத்து செய்யலாம் அல்லது மாற்றியமைக்கலாம் ; அல்லது

(iv) யாதொரு ஜில்லாவின் பெயரை மாற்றலாம்.

(4) (2) உட்பிரிவு அல்லது (3) உட்பிரிவின்கீழ் விளம்பரம் ஒன்றைப் பிறப்பிப்பதற்குமுன் அந்த விளம்பரம் பிறப்பிக்கப்படுவதனல் பிரதிகூலமாகப் பாதிக்கப்படும் ஜில்லா அபிவிருத்திச் சபை அல்லது ஜில்லா அபிவிருத்திச் சபைகள் அந்த உத்தேசத்திற்கு எதிராகக் காரணங் காட்டுவதற்காக அரசாங்கத்தார் நியாயமான வாய்ப்பொன்றை அந்தச் சபை அல்லது சபைகளுக்கு அளிப்பதுடன், அந்தச் சபை அல்லது சபைகள் எவையேனும் விளக்கங்களையும் ஆட்சேபனைகளையும் கொடுத்திருந்தால் அவற்றை ஆலோசனை செய்யவும் வேண்டும்.

(5) (2) உட்பிரிவின்கீழ் அல்லது (3) உட்பிரிவின்கீழ் பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு விளம்பரத்திலும் அதற்கான காரணங்களைப் பற்றிய ஸ்டேட்மென்ட் ஒன்று இருக்கவேண்டும்.

ஜில்லா அபிவிருத்தி சபைகள் – பிரிவு 3-ன் கீழ் விதிகள்

(சென்ட் ஜார்ஜ் கோட்டை) கெஜட்டு பாகம் I-A எக்ஸ்டரா ஆர்டினரி தேதி 30 – 11—1959
S: R. O. No. B. 1122—1959 G. O. Ms. No. 2013 L. A. 28—11—1959

கிராம அபிவிருத்தி நடவடிக்கைகள் சம்பந்தமாக ரெவின்யூ ஜில்லாகள் அளவைவிட சிறியதான விஸ்தீர்ணமுள்ள பகுதிகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய சமயம் ஏற்பட்டு இருக்கிறது. ஜில்லாவில் ஒவ்வொரு முனிசிபாலிடி தேசீய நலப் பரப்புத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படாத இடங்கள் உள்பட எல்லா இடங்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்க சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தவிரவும் கவுன்சிலில் அந்த குறிப்பிட்ட ஜில்லாவுக்கு உரிய ராஜ்ய சட்டமன்ற உறுப்பினர்கள் பார்லிமெண்டு மத்திய சட்டமன்ற உறுப்பினர்கள் திட்ட அபிவிருத்தி வேலைகள் சம்பந்தப்பட்ட அரசாங்க கெஜட் பதிவு அதிகாரிகள் ஆகியோர் இருப்பார்கள். இந்த அடிப்படையில், ரெவின்யூ ஜில்லா பூராவுக்குமாக ஜில்லா அபிவிருத்திச் சபைகள் அமைப்பதென்ருல் அது அளவு மீறிப் பெரியதாகவும் லகுவாகப் பணியாற்ற இயலாததுமான சபைகளாகிவிடும். இந்தச்சட்டம் சம்பந்தமாக ரெவின்யூ ஜில்லா குள்ளே ஒரு அடக்கமான பகுதியை அபிவிருத்தி ஜில்லாவாக நிர்ணயித்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. சென்னை நகரம், இந்தச் சட்டத்தில் வருவதில்லை. செங்கல்பட்டு, கன்னியா குமரி நீலகிரி ஆகிய மூன்று ரெவின்யூ ஜில்லாக்களும் இச்சட்டத்தின் கீழ் அபிவிருத்தி ஜில்லாக்களாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மீதியுள்ள ஒன்பது ஜில்லாக்களும் ஒரு ரெவின்யூ ஜில்லாவுக்கு இரண்டு வீதமாக 18 அபிவிருத்தி ஜில்லாக்களாகவும் ஆகமொத்தம் 21 அபிவிருத்தி ஜில்லாக்களின் விவரம் வருமாறு :

21 ஜில்லா அபிவிருத்தி சபைகளின் பெயர்கள்

மதராஸ் அபிவிருத்தி சபைகள் சட்டம் பிரிவு 3 (2) (S. R. O. NO) B. 1124 — 1959

G. O. No. 1995 L. A. 27—11—1959

மதராஸ் நகரம் நீங்கலாக 12 ரிவின்யூ ஜில்லாகளை இந்த சட்டத்துக்கு என 21 ஜில்லாக்களாக பிரிக்கப்பட்டன, அப்படி செய்யாவிட்டால் ஜில்லா அபிவிருத்தி சபைகள் ரொம்பவும் பெரியவைகளாய் சமாளிக்க முடியாமல் போய்விடும்

ஜில்லாக்களுடையவும் ரெவின்யூ டிவிஷன்கள் உடையவும், ரெவின்யூ தாலுக்கா களுடையவும் பிரிவினை விவரங்கள் வருமாறு

ஜில்லாவின் நெம்பரும் பெயரும்	ரெவின்யூ டிவிஷன்	ரெவின்யூ தாலுக்காக்கள்
(1)	(2)	(3)
1. வடக்கு வேலூர்	திருபத்தூர்	திருபத்தூர் குடியாத்தம்
	ராணிபேட்டை	வேலூர் வாலாஜாபேட் அரக்கோணம்
II. தெற்கு வேலூர்	ஆரணி	செய்யார் ஆரணி வந்தவாஷ்
	திருவண்ணாமலை	திருவண்ணாமலை செங்கம் போலூர்
III. வடக்கு கடலூர்	திருக்கோயிலூர்	திருக்கோயிலூர் விளுப்புரம்
	திண்டிவனம்	திண்டிவனம் ஜிஞ்ஜி
IV. தெற்கு கடலூர்	சிதம்பரம்	கடலூர் சிதம்பரம்
	விருத்தாசலம்	விருத்தாசலம் கள்ளக்குறிச்சி
V. செங்கல்பட்டு	திருவள்ளூர்	திருவள்ளூர் பொன்னேரி
	சைதாபேட்டை	ஸ்ரீபெரும்பூதூர் சைதாபேட்டை
	செங்கல்பட்டு	காஞ்சீபுரம் செங்கல்பட்டு மதுராந்தகம்
VI. கிழக்கு கொயம்பத்தூர்	கோபி செட்டிபாளையம்	கோபி செட்டிபாலெயம் பவானி
	ஈரோட்	தாராபுரம் ஈரோடு

ஜில்லாவின் நெம்பரும் பெயரும்	ரெவின்யூ டிவிஷன்	ரெவின்யூ தாலுக்காக்கள்
(1)	(2)	(3)
VII. மேற்கு கொயம்புத்தூர்	கொயம்புத்தூர்	கொயம்புத்தூர் அவனாசி
	பொள்ளாச்சி	பொள்ளாச்சி பல்லாடம் உடுமால்பெட்
VIII. கன்னியா-குமரி	பத்மநாபபுரம்	அகத்தீஸ்வரம் தொபலா கல்குளம் வில்லவன்கோடு
IX. வடக்கு-மதுரை	திண்டுக்கல்	திண்டுக்கல் கோடைக்கானல் பழனி நிலக்கோட்டை
X. தெற்கு-மதுரை	மதுரை	மதுரை மேலூர்
	உசிலம்பட்டி	பெரியகுளம் திருமங்கலம்
XI. நீலகிரி	உதகமண்டலம்	கூடலூர் உதகமண்டலம் கூனூர்
XII. கிழக்கு-ராமநாதபுரம்	தேவகோட்டை	திருப்பத்தூர் சிவகங்கா திருவதனை
	ராமநாதபுரம்	பரமகுடி முதுகளத்தூர் ராமநாதபுரம்
XIII. மேற்கு-ராமநாதபுரம்	சிவகாசி	சாத்தூர் சிறுவில்லிபுத்தூர்
	அருப்புக்கோட்டை	அருப்புக்கோட்டை

21 ஜில்லா அபிவிருத்தி சபைகளின் பெயர்கள்

ஜில்லாவின் நெம்பரும் பெயரும் (1)	ரெவின்யூ டிவிஷன் (2)	ரெவின்யூ தாலுக்காக்கள் (3)
XIV. வடக்கு சேலம்	ஓசூர்	ஓசூர்
		கிருஷ்ணகிரி
	தர்மபுரி	தர்மபுரி
		அரூர்
		ஓமலூர்
		மேட்டூர்
XV. தெற்கு சேலம்	சேலம்	ஆத்தூர்
		சேலம்
	நாமக்கல்	நாமக்கல்
		ராசிபுரம்
		திருச்செங்கோடு
		சங்கரி
XVI. கிழக்கு தஞ்சாவூர்	மயூரம்	மயூரம்
		சீர்காளி
	நாகப்பட்டினம்-	நாகப்பட்டினம்
		நன்னிலம்
	மன்னார்குடி	மன்னார்குடி
		திருத்துரைப்பூண்டி
XVII. மேற்கு-தஞ்சாவூர்	தஞ்சாவூர்-	தஞ்சாவூர்
		ஒர்தநாடு
	கும்பகோணம்-	கும்பகோணம்
		பாபநாசம்
	பட்டுக்கோட்டை	பட்டுகோட்டை
		அரந்தாங்கி
XVIII. வடக்கு திருச்சிராப்பள்ளி	முசிறி -	முசிறி
		லால்குடி
	அரியலூர் -	பெரம்பலூர்
		உடையார்பாளையம்
	திருச்சிராப்பள்ளி-	திருச்சிராப்பள்ளி
XIX. தெற்கு திருச்சிராப்பள்ளி	- கருவூர் -	கருவூர்
		குளித்தலை
	புதுக்கோட்டை	குளத்தூர்
		ஆலங்குடி
		திருமயம்
XX. வடக்கு திருநெல்வேலி-	தூத்துக்குடி	---
		ஸ்ரீவைகுண்டம்
		திருச்செந்தூர்
	கோவில்பட்டி-	சங்கரன்கோயில்
		கோவில்பட்டி
XXI. தெற்கு திருநெல்வேலி-	திருநெல்வேலி	
		திருநெல்வேலி
		தென்காசி
		செங்கோட்டா
	சேரன்மகாதேவி-	நான்குநேரி
		அம்பாசமுத்திரம்

இந்தப் பிரிக்கும் ஏற்பாடு அபிவிருத்தி வேலைகள் சம்பந்தப்பட்ட காரியங்களுக்கு மட்டுமே ஆகும். நிலத்தீர்வை, பொது நிர்வாகம் ஆகியவைகளில் ரெவின்யூ ஜில்லா தற்போதுள்ளபடியே இருந்துவரும் ரெவின்யூ ஜில்லாவின் தலைமை நகரமே இரண்டு ஜில்லா அபிவிருத்திகவுன்சிலர்களுக்கும் பொது தலைமை இடமாக இருக்கும்.

ஜில்லா அபிவிருத்திச் சபைகளை அமைப்பது

4. (1) அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாகவும் அதில் குறிப்பிடக்கூடிய தேதியிலிருந்தும் யாதொரு ஜில்லாவுக்கு ஜில்லா அபிவிருத்திச் சபை ஒன்றை அமைக்கச் செய்யலாம்; அச்சபையில் அடியிற்கண்டவர்கள் அங்கத்தினர்களாயிருப்பார்கள் ; அவர்களாவன :—

(a) தமது உத்தியோக முறைமையில் ஜில்லாக் கலெக்டர் ;

(b) எந்தத் தேர்தல் தொகுதி மேற்படி ஜில்லாவாக அல்லது அதன் யாதொரு பாகமாக அமைந்திருக்கிறதோ அல்லது எந்தத் தொகுதியில் அந்த ஜில்லா அதன் யாதொரு பாகம் அடங்கியிருக்கிறதோ அல்லது சம்பந்தப்படுகிறதோ அந்தத் தொகுதிக்குப் பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது அந்த ஜில்லாவில் வசித்துவருகிற பார்லிமெண்ட் அங்கத்தினர்களும் ராஜ்யச் சட்ட மன்ற அங்கத்தினர்களும் ;

(c) மேற்படி ஜில்லாவில் உள்ள பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களின் சகல அக்ராசனர்களும், மேற்படி ஜில்லாவில் யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்திற்காக ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அமைக்கப்படுகிற வரையில் அந்தப் பிரதேசத்திலுள்ள பஞ்சாயத்துக்களின் தலைவர்களால் நிர்ணயிக்கப்பட்ட முறையில் தெரிந்தெடுத்த நபர் :

ஆனல் அப் பிரதேசத்தில் எந்த பஞ்சாயத்துக்கேனும் உரிய வாக்காளர் பட்டியலில் ஒருவருடைய பெயர் கண்டிருந்தாலன்றி அவரை அவ்வாறு தேர்ந்தெடுக்கக் கூடாது ;

(d) மேற்படி ஜில்லாவில் உள்ள முனிசிபல் கவுன்ஸில்களின் சகல அக்ராசனர்களும் ;

(e) மேற்படி ஜில்லாவில் உள்ள மத்தியக் கூட்டுறவுப் பாங்குகளின் தலை வர்கள் ;

(f) மேற்படி ஜில்லாவில் அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து நிறை வேற்றுவதில் சம்பந்தமுள்ளவர்களாய் அரசாங்கத்தாரால் நேமகம் செய்யப்பட்டு கெஜெட் பதிவுள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்கள்.

மேற்படி ஜில்லாவில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ரெவினியு ஜில்லாப் பகுதிகள் அடங்கியிருந்தால், இச் சட்டத்தின் காரியங்களுக்காக அந்த ஜில்லா விஷயமாக எந்த உத்தியோகஸ்தர் ஜில்லாக் கலெக்டரென கருதப்படவேண்டு மென அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக அறிவிக்கலாம்.

(2) (1) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள ஜில்லா கலெக்டர் ஜில்லா அபி விருத்திச் சபை அக்கிராசனராவர்.

(3) (a) பார்லிமென்ட் அங்கத்தினர் எவரும், ராஜ்யச் சட்ட மன்ற அங்கத்தினர் எவரும் ஒன்றுக்கு மேற்பட்ட ஜில்லா அபிவிருத்திச் சபையில் அங்கத் தினராக இருக்கக்கூடாது ;

(b) தாம் குடியிருக்கும் ஜில்லா அல்லாத இதர ஜில்லா அல்லது அதன் யாதொரு பாகம் தேர்தல் தொகுதியாக அமைந்துள்ள அல்லது அந்த ஜில்லா அல்லது அதன் யாதொரு பாகம் அடங்கியுள்ள அல்லது அதற்குச் சம்பந்தப்படுகிற ஒரு தேர்தல் தொகுதிக்குப் பிரதிநிதியாயிருப்பதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட பார்லிமென்ட் அங்கத்தினர் ஒருவர் அல்லது ராஜ்யச் சட்டமன்ற அங்கத்தினர் ஒருவர் தாம் எந்த ஜில்லாவில் ஜில்லா அபிவிருத்திச் சபை அங்கத்தினராகச் சேவை செய்ய விரும்புகிருர் என தீர்மானித்து, நிர்ணயிக்கப்படக்கூடிய கால அளவுக்குள் தமது தீர்மானத்தை சம்பந்தப்பட்ட ஜில்லாக் கலெக்டருக்குத் தெரிவிக்கவேண்டும்.

(4) பார்லிமென்ட் அங்கத்தினராக, அல்லது ராஜ்யச் சட்ட மன்ற அங்கத் தினராக, அல்லது ஒரு ஜில்லாவில் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலின் அக்கி ராசனராக, அல்லது மத்தியக் கூட்டுறவுப் பாங்கியொன்றின் தலைவராக, அல்லது முனிசிபல் கவுன்ஸிலின் அக்கிராசனராக, ஒருவரிருப்பது அற்றுப்போனல், அவர் எந்தத் தேதியிலிருந்து அத்தகைய அங்கத்தினராக, அல்லது அக்கிராசனராக, அல்லது தலைவராக, இருப்பது அற்றுப்போனதோ அந்தத் தேதியிலிருந்து அவர் ஜில்லா அபிவிருத்திச் சபையின் அங்கத்தினராக இருப்பதும் அற்றுப்போகும்.

குறிப்பு

1—1—1960ல் 21 ஜில்லா அபிவிருத்தி சபைகள் ஏற்படுத்தப்பட்டது.

[S.R.O. No. B. 1282 - 1959.　　G.O. No. 2190 L. A. 30—12—1959.]

பார்லிமெண்டு மெம்பர்களுடையவும், ராஜ்ய சபைகள் அங்கத்தினர்களுடைய அங்கீகாரத்தை குறித்தது பிரிவு 4 (1) (b), 3 (b) படிக்கு விதிகள்

(S. R. O. No. B–1126–1959— G. O. No. 1997 L. A. 27—11—1959)

பார்லிமெண்டு (பாராளும் மன்றம்) அல்லது மதராஸ் அரசாங்க சட்ட சபை களின் அங்கத்தினர்கள், அவர்கள் வாசம் செய்யும் ஜில்லா தவிர மற்றொரு ஜில்லா விலும் அவர் சட்ட சபையின் (இதில் பார்லிமெண்டும் அடங்கும்) தொகுதி மற்றொரு ஜில்லாவுக்கு பரவுமாகில் அவர் எந்த ஜில்லா அபிவிருத்தி சபைக்கு அங்கத்தினராக இருக்க விரும்புகின்றாரோ அதை பிரிவு 3 (2)ன் கீழ் அறிக்கையை பிரசித்தம் செய்த 15 தினங்களுக்குள் சம்பந்தப்பட்ட ஜில்லா கலெக்டருக்கு தெரிவிக்க வேண்டும்.

பஞ்சாயத்துகள் தலைவர்கள் ஒரு அங்கத்தினரை தேர்ந்து எடுக்க விதிகள்

ஜில்லா அபிவிருத்தி சபைக்கு பஞ்சாயத்து தலைவர்களால் பஞ்சாயத்துகள் பிரதேசத்திலுள்ள ஒருவரை அங்கத்தினராக ஏற்படுத்தி கொள்வதை குறித்த பிரிவு 4 (1) (c) படிக்கு விதிகள்-17.

கெஜட் பாகம் 1-A எக்ஸ்ட்ரா ஆர்டினரி—30-11—1959, S R. O.

No. B. 1125—1959. G.O. No. 1996 L. A. 27-11—1959

எல்லா பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் அக்ராசனர்களும் ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்களில் அங்கத்தினர்களாக இருப்பார்கள். பஞ்சாயந்து யூனியன் கவுன்சில்கள் அமைக்கப்படும் வரை ஒரு குறிப்பிட்ட இடத்தில் பஞ்சாயத்துகளின் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் நபரே ஜில்லா அபிவிருத்தி சபையின் உறுப்பினராக வேண்டும் என்று சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் இன்னும் அமைக்கப்படவில்லையாகையால் ஒவ்வொரு அபிவிருத்தி இடத்துக்கும் ஒரு பிரதிநிதியை அந்த பிரதேசத்தின் பஞ்சாயத்துகளின் தலைவர்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

1. இந்த விதிகளில்

(i) 'தேர்தல் அதிகாரி' என்றால் அபிவிருத்தி தொகுதியுள்ள இடங்களில் அபிவிருத்தி தொகுதி உத்தியோகஸ்தர்: மீதி இடங்களில் ஒரு தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தார் ஆவார்

(ii) 'குறிப்பிட்ட (லோகல்) பிரதேசம்' என்றால் சமுதாய அபிவிருத்தி திட்டத்தின்கீழ் அபிவிருத்தி தொகுதி என்று குறிப்பிடப்பட்ட பிரதேசம்.

2 (1) யாதொரு குறிப்பிட்ட பிரதேசத்தில் ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் இல்லாத சமயத்தில், ஜில்லா அபிவிருத்தி சபைக்கு பஞ்சாயத்து தலைவர்கள் ஒரு அங்கத்தினரை ஏற்படுத்தி கொள்ளக்கூடும் மீடிங் (சபை)யை தேர்தல் அதிகாரியால் கூட்டப்படவேண்டும்.

(2) ஒரு ஜில்லா அபிவிருத்தி சபைக்கு ஒரு அங்கத்தினரை ஏற்படுத்தி கொள்ள நிச்சயிக்கப்பட்ட தேதிக்கு பூர்த்தியான 10 நாட்களுக்கு முன்பு தேர்தல் உத்தியோகஸ்தர்

(a) ஜில்லா அபிவிருத்தி சபைகளுக்கு ஒரு அங்கத்தினரை ஏற்படுத்த அபேக்ஷகர்களின் நேமத்துக்காக அழைப்பதுவையும்

(b) இன்ன நேரத்தில், இடத்தில் அந்த பிரதேசத்தின் பஞ்சாயத்து தலைவர் கூடவேண்டு மென்பதையும், இங்கிலீஷிலும் தமிழிலும் ஒரு நோட்டீஸ் தயாரித்து பிரசித்தம் செய்யவேண்டும்.

(3) ஒவ்வொரு பஞ்சாயத்தின் பிரதேசத்தில் ஒரு அலுவலகம் இருந்தால் அங்கேயும், மேலும் அந்த பிரதேசத்தில் இரண்டுகவனத்திற்கு இழுக்கக்கூடிய இடங்களிலும், அந்த நோட்டீசை பிரசித்தம் செய்யவேண்டும். அந்த பிரதேசத்தில் தண்டோரா மூலம் பிரசித்தம் செய்யவேண்டும்.

(4) (1)-ம் உபவிதியில் குறிப்பிட்டுள்ள சபையில் தேர்தல் அதிகாரி தலைமை வாங்கவேண்டும்.

3. ஒவ்வொரு அபேக்ஷகரையும் எழுத்து மூலம் நேமகம் செய்யவேண்டும். அந்த நேமக சீட்டில், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து தலைவர்களில் இரண்டு பேர் பிரேரேபிப்பவராகவும், ஆமோதிப்பவராகவும் கைஎழுத்து செய்யவேண்டும். அபேக்ஷகரும் தான் தேர்தலுக்கு நிற்க விரும்பியதாகத் தெரிவிக்கும் உறுதிமொழி ஒன்றில் கை எழுத்து செய்யவேண்டும்.

3-A யாதொரு குறிப்பிட்ட பிரதேசத்தில் ஒரே ஒரு பஞ்சாயத்து இருந்தால் அந்த பஞ்சாயத்தின் தலைவர் அந்த பிரதேசத்திற்காக ஜில்லா அபிவிருத்தி சபை அங்கத்

பஞ்சாயத்துகள் தலைவர்கள் ஒரு அங்கத்தினரை தேர்ந்து எடுப்பது

தினராக ஏற்படுத்தியவராகிருர். ஒரு பிரதேசத்தில் இரண்டே பஞ்சாயத்துகள் இருக்கு மாகில் அந்த இரண்டு பஞ்சாயத்துகளுடைய தலைவர்களில் யாரை ஜில்லா அபிவிருத்தி சபை அங்கத்தினராக ஏற்படுத்துவது என்பதில் ஒற்றுமை இல்லாவிட்டால், தேர்தல் அதிகாரி சீட்டு குலுக்கி போட்டு அதன் மூலம் ஒருவரை ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் அங்கத்தினராக ஏற்படுத்த வேண்டும். [கெஜட் பாகம் 1-A. ரூல்ஸ் ஸப்ளிமெண்ட் 16-12-1959—S. R. O. No. B-1222 of 1959 பின்னிட்டு சேர்க்கப்பட்டது.]

4 இந்த விதியில் மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டத்தின் பிரிவுகள் 23, 24, 25 களில் சொல்லியுள்ள அபேக்ஷகர்களின் யோக்யதாம்சங்களைக் கண்டிருக்கிறது.

குறிப்பு.—இந்த புத்தகத்தில் 71 — 74 பக்கங்களை பார்க்கவும்.

5. தேர்தல் உத்தியோகஸ்தர் ஒத்துகொண்ட நேமக சீட்டுகளிலுள்ள அபேக்ஷகர்களின் பெயர்களை படித்து காண்பிக்கவேண்டும். அடியில் கண்ட ஷரத்து கள் அம்மாதிரியான அபேக்ஷகர்களுக்கு பொருந்தும்

6. கிரமப்படி ஒரே ஒரு அபேக்ஷகர் நேமிக்கப்பட்டிருந்தால், அதற்கு தேர்தல் வேண்டியதில்லை. மேலும் அத்தகைய அபேக்ஷகரை ஜில்லா அபிவிருத்தி சபையின் அங்கத்தினராக கிரமப்படி எடுத்து கொண்டதாக தேர்தல் உத்தியோகஸ்தர் பிரசித்தம் செய்யவேண்டும்

7. ஒரு அபேக்ஷகருக்கு மேல் இருந்தால், கூட்டத்தில் (மீடிங்கு)யிருக்கும் பஞ்சாயத்து தலைவர்களின்(இனிமேல் வோடர்கள் என்று வழங்கட்படுவார்கள்)வோட்டு களை அடியில் கண்ட விதிகளுக்கு உட்பட்டு ரகசியமாக வாங்கப்படவேண்டும்.

8. மீடிங்கு நடக்கும் இடத்தில் வேட்டர்கள் யாரும் பார்க்காமல் ரகசியமாக வோட்டு செய்ய ஒரு அரையை ஏற்படுத்தவேண்டும். வோடர்கள் தேர்தல் உத்யோ கஸ்தர், எதிரில் வோட்டு சீட்டுகளை பெற ஒரு வோட்டுபொட்டியை வைக்கவேண்டும். வோட்டு பொட்டியிலிருந்து அதில் போட்டு இருக்கும் வோட்டு சீட்டுகளை அந்த பெட்டியை திரக்காமலோ அல்லது சாவி போட்டு பூட்டை திரக்காமலோ எடுக்க முடி யாமல் இருக்கவேண்டும்.

9. வோட்டுகள் எடுப்பதற்கு முந்தி தேர்தல் உத்தியோகஸ்தர் வோட்டு பெட் டியை அங்கிருக்கும் வோட்டர்களுக்கு காலி என்று அவர்களுக்கு தெரியும்படியாக காட்டவேண்டும். பிறகு அதை பூட்டி அதன் மேல் ஒரு சீலை (முத்திரை)ஐ வைக்க வேண்டும். அந்த சீலை ஒடிக்காமல் அந்த பெட்டியை திறக்கமுடியாத விதமாக இருக்க வேண்டும்.

10. ஒவ்வொரு வோட்டு சீட்டியிலும் இங்கிலீஷிலும்; தமிழிலும் அபேக்ஷ கர்களுடைய பெயர்களை தெரியும்படி அடியில் கண்டமாதிரி எழுதி, வோட்டு செய்ய இஷ்டம் உள்ள வோட்டருக்கு ஒரு வோட்டு சீட்டை கொடுக்கவேண்டும்.

வோட்டு சீட்டு

ஜில்லா அபிவிருத்தி சபை

ஜில்லா அபிவிருத்தி சபையின் அங்கத்தினராக தேர்தல் நடக்க கிரமமாக நேமிக்கப் பட்ட அபேக்ஷகர்களின் பெயர்கள்.

அ

ஆ

இ

தேர்தல் உத்தியோகஸ்தர்

வோட்டருக்கு வோட்டு சீட்டியை கொடுப்பதற்கு முந்தி அதில் தேர்தல் உத்தியோகஸ்தர் கையெழுத்து போடவேண்டும்.

11. வோட்டர் வோட்டு சீட்டை பெற்று கொண்டு வோட்டு செய்ய தனியாக யுள்ள வோட்டு அரைக்குள் சென்று வோட்டு சீட்டில் தான் எந்த அபேக்ஷகருக்கு தன் வோட்டை கொடுக்க இஷ்டபடுகிருரோ, அவர் பெயருக்கு எதிராக ஒரு × கிராஸ் குறியை வைக்கவேண்டும். அந்த வோட்டு செய்யும் அறையிலிருந்து வெளியேராமல், உள்ள பொழுதே தான் போட்ட குறியை தெரியாமல் இருக்கும்படிக்கு மடித்து

பஞ்சாயத்துகள் தலைவர்கள் ஒரு அங்கத்தினரை தேர்ந்து எடுக்க விதிகள்

தேர்தல் உத்தியோகஸ்தர் நேரில் வோட்டு பொட்டியில் வோட்டு சீட்டை போட வேண்டும்.

12. தேர்தல் உத்யோகஸ்தர் தேர்தல் விஷயம் ரகசியமாய் இருப்பதற்காக வோட்டு செய்த வோட்டர்களை வோட்டு செய்யாத வோட்டர்களுடன் கல்லக்காமல் இருக்க கட்டாயமான ஏற்பாடுகளை செய்யவேண்டும்

13. (1) படிக்க தெரியாமையாலோ, குருடாக இருப்பதினுலேயோ, அல்லது சரீர பலஹீனத்தினுலேயோ ஒருவோட்டர் வோட்டு சீட்டை படிக்க வோட்டு சீட்டின் பேரில் குறியை வைக்கவும் சக்தி அத்தவராய் இருந்து, வோட்டு செய்ய உதவியதை செய்ய கோருவாராகில் தேர்தல் உத்யோகஸ்தர், வோட்டரின் இஷ்டப்படிக்கு வோட்டு சீட்டில் குறியிட்டு, அந்த குறியை தெரியாத படிக்கு அந்த வோட்டு சீட்டை படிக்கவேண்டும்.

(2) வோட்டர் பிறகு தானுகவோ, அல்லது தேர்தல் உத்தியோகஸ்தரின் உதவினுலேயோ, அந்த வோட்டு சீட்டை வோட்டு பெட்டியில் போடவேண்டும்.

(3) இத்த விதியின் கீழ் தேர்தல் அதிகாரி நடந்து கொள்ளும் போது எவ்வளவுக்கு எவ்வளவு ரகசியமாக தேர்தல் விஷயத்தை மர்மமாக வைத்து கொண்டு அதன் விஷயத்திற்காக ஒருரிகார்ட் (எழுத்து மூலமாக) வைத்துக்கொள்ள வேண்டும். ஆனுல் அந்த ரிகார்டில் வோட்டு எப்படிக்கு கொடுக்கப்பட்டது என்பது கண்டிருக்கக் கூடாது.

குறிப்பு:—இம்மாதிரி நடப்பது ஆயிரத்தில் ஒன்ருக இருக்கும். சக்தி அத்தவர்களை வோட்டர்களாக இல்லாமல் செய்வது நலமாக இருக்கும். அல்லது அம்மாதிரியான வோட்டர்கள் அபேக்ஷகர்கள் அவர்களுடைய ஏஜன்டுகள் முன்னிலும் சொல்லும் படியாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் தேர்தல் உத்தியோகஸ்தர்கள் பேரில் சந்தேகங்கள் உண்டாக்கத்தான் செய்யும். தேர்தல் விஷயங்களில் யாரையும் நம்பி விடக்கூடாது என்று எமது அபிப்பிராயம்.

14. வோட்டர்கள் வோட் செய்த பிறகு தேர்தல் உத்தியோகஸ்தர் வோட்டு பெட்டியை வோட்டர்கள் எதிரில் திறந்து வோட்டு சீட்டுகளை அதிலிருந்து எடுத்து ஒரு ஜாபிதாவில் (ஸ்டேட்மெண்டில்) ஒவ்வொரு அபேக்ஷகரும் பெற்றவோட்டுகளில் எண்ணிக்கையை ரிகார்டு செய்து (எழுதி வைத்து கொள்ள) வேண்டும்.

15. எந்த வோட்டு சீட்டில்

(a) ஒரு × கிராஸ் மார்க் குறி இல்லேயோ,

(b) ஒரு அபேக்ஷகருக்கு அதிகமாக மற்ரெரு அபேக்ஷகருக்கும் ஒரு குறி போட்டிருக்கிறதோ அல்லது எந்த அபேக்ஷகருக்கு அந்த குறி போடப்பட்டதென்று சந்தேகமாகயிருக்கிறதோ,

(c) ஒரு கிராஸ் குறியும் மற்ரெரு குறியும் ஒரு அபேக்ஷகருடை ய பெயருக்கு எதிரில் இருந்தாலும்

(d) யாதொரு குறியினுல் ஒரு வோட்டரை கண்டுபிடிக்க முடியுமோ அம்மாதிரியான குறி இருந்தாலும், அந்த மாதிரியான வோட்டு சீட்டு செல்லத்தக்கின தல்ல.

16. எந்த அபேக்ஷகருக்கு அதிகமான வோட்டுகள் கிடைத்தனவோ, அவர் தேர்ந்து எடுக்கப்பட்டதாக பிரசித்தம்செய்யப்படவேண்டும், 2, 3 அபேக்ஷகர்களுக்கு சமவோட்டுகள் இருக்கும் போது, இவர்களில் ஒருவருக்கு ஒரு வோட்டு அதிகமாக சேர்ந்தால் அவர் தேர்ந்த எடுக்கப்பட்டவராக கருதப்படுவாரோ, அதற்காக தேர்தல் உத்தியோகஸ்தர் வோட்டர்கள் முன்னிலேயில் பெயர்களை குலுக்கி (லாட்டுகள்) போட்டு எந்த அபேக்ஷகருக்கு (முதல்) லாட்டு வருகிறதோ அவர் தேர்ந்து எடுக்கப்பட்டவராக கருதப்படுவார்

17. கூட்டம் (மீட்டிங்) ஆன உடன், தேர்தல் உத்தியோகஸ்தர் கூட்டத்தின் நடவடிக்கைகளின் விஷயத்தை (ரிகார்டை) தயார் செய்து, கையெழுத்து இட வேண்டும். அதில் திருத்தங்கள் இருந்தால் முதல் எழுத்துகள் (இனிஷியல்ஸ்) அங்கே வைக்கவேண்டும். ஏதாவது ஒரு வோட்டர் அந்த ரிகார்டில் கையெழுத்து போட விரும்பினல் அவர் அதில் கையெழுத்துசெய்ய அனுமதிக்க வேண்டும். அதன் நகலை ஜில்லா கலெக்டர் அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

குறிப்பு

இந்த அங்கத்தினர்கள் மதராஸ் டிஸ்ட்ரிக்ட் போர்டின் ஸ்பெஷல் ஆபீசருக்கு ஆலோசனை கமிட்டி அங்கத்தினர்களாகவும் இருப்பார்கள். [கெஜட் பாகம்—I-A-E—13-1-1960—ஜி. ஓ நெ. 72 L.A.—12-1-1960 S.R.O. No. B.—85—1960]

பி. 4 (1) (2) ஜில்லா கலெக்டர்அங்கத்தினர் ஆகவும், அக்ராசனராகவும்இருப்பது — அங்கத்தினர்கள் ஆலோசகர்கள் ஆக மாத்திரம் இருப்பது பிரிவு:—4(1),(2) படிக்கு ஜில்லா அபிவிருத்தி சபைக்கு ஜில்லா கலெக்டர் உத்தியோக முறைமையில் அங்கத்தினராகவும், அக்கிராசனராகவும் இருப்பார். இவர் அரசாங்கத்தின் சாசுவத உத்தியோகஸ்தர். பொது மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் உத்திரவுகளை நிறைவேற்ற வேண்டியவர். தன்னிஷ்டப்படிக்கு நடந்து கொள்வதற்கில்லை.

ஜில்லா அபிவிருத்தி சபை ஜில்லா போர்டுகளைப் போன்றது. முன்னிருந்த ஜில்லா போர்டுகளில் மக்களின் பிரதிநிதிகள் அங்கத்தினர்களாக இருந்தார்கள். அவர்களே ஒரு பிரசிடெண்டை (தலைவர்) யும் ஒரு வைஸ் பிரசிடெண்டை (உபதலைவர்) யும் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலமாக ஜில்லா போர்டின் காரியங்களை நடத்தி வந்தார்கள். அது ஜனநாயகத்துக்கு ஒத்ததாக இருந்தது.

ஆந்திர பிரதேசத்தில் ஜில்லா அபிவிருத்தி கௌன்சில் என்பதற்கு பதிலாக "ஜில்லா பரீஷத்" என்று பெயரிடப்பட்ட ஸ்தாபனங்களை 1959-ம் வருடத்திய 35-வது சட்டம் பிரிவுகள் 36, 37 படிக்கு ஏற்படுத்தி அதின் அங்கத்தினர்கள் சேர்மென் (அக்கிராசனர்) ஒருவரையும் வைஸ்சேர்மென் (உபஅக்கிராசனர்) ஒருவரையும் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். அந்த ஜில்லா பரீஷத்தில் ஜில்லா கலெக்டரும் ஒரு மெம்பராக இருந்து வருகிறார். இதுதான் நடைமுறையில் ஜனநாயகம் என்று சொல்லக்கூடியது.

நம்முடைய தமிழ் நாட்டில் சாஸ்வத உத்தியோகஸ்தர் ஜில்லா கலெக்டர் அவர்களை ஜில்லா பிரதிநிதிகளுக்கெல்லாம் நாயகராகவும், அக்கிராசனாதிபதியாகவும் ஏற்படுத்தியது ஜனநாயகத்துக்கு ஒத்ததல்ல.

இதை இம்மாதிரி இருக்கக்கூடாது என்று சுமார் 100 வருடங்களாக நம் நாட்டில் பொது மக்கள் கோரி வந்தார்கள். அதற்காக என்று படிப்படியாக ஜில்லா போர்டுகளிலும், தாலூக்கா போர்டுகளிலும், முனிசிபாலிட்டிகளிலும் உத்தியோகஸ்தர்கள் தலைவர்களாகவும், அக்கிராசனர்களாகவும் உள்ளதை நீக்கி பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தில் இல்லாதவர்களை தலைவர்களாகவும், அக்கிராசனர்களாகவும் ஏற்படுத்திக் கொண்டு ஆளும்படியாக சட்டங்கள் ஏற்படுத்தினார்கள். அம்மாதிரி ஜனநாயகத்துக்கு ஒத்த தாயுள்ள ஷரத்துக்களை எல்லாம் புறக்கணித்துவிட்டு (அலட்சியம் செய்துவிட்டு) வெள்ளையர்கள் காலத்தில் உத்தியோகஸ்தர் மூலமாக ராஜ்யம் ஆண்டுவந்த மாதிரியாக கலெக்டரையே அக்கிராசனாதிபதியாகவும், நாயகராகவும் செய்திருப்பது அல்லாமல் அந்த ஜில்லா அபிவிருத்தி சபையின் மெம்பர்களின் தீர்மானங்களை வெறும் ஆலோசனை விஷயங்களாக எண்ணப்படும் என்பதை பிரிவு 5-ல் கண்டிருக்கிறது. அது ஜனநாயகத்துக்கு விரோதமானது என்று கூறலாகும். இதை எடுத்துவிட்டு ஆந்திரா சட்டத்தில் உள்ளமாதிரி அரசாங்க உத்தியோகத்தில் இல்லாதவர்களை ஜில்லா அபிவிருத்தி சபைகளுக்கும் அக்கிராசனர்களாக இருக்கும்படி செய்ய வேண்டும். ஜில்லா கலெக்டரை ஒரு சாதாரண அங்கத்தினராக ஏற்படுத்துவது அவசியம் என்று தானாகவே விளங்குகிறது. அங்கத்தினர்களின் தீர்மானங்களை ஆலோசனைமட்டில் விட்டுவிடாமல் நிறைவேற்றப்படவேண்டும் என்று இருக்கவேண்டும்.

ஜில்லா அபிவிருத்திச் சபையின் அலுவல்கள்

5. (1) ஜில்லா அபிவிருத்திச் சபையானது மேற்படி ஜில்லாவிலுள்ள பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்கள், முனிசிபல் கவுன்ஸில்கள் ஆகியவற்றின் செயல்களுக்குச் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களிலும் அந்த ஜில்லாவின் பொருளாதார ஆதாரங்களின் அபிவிருத்தி, அந்த ஜில்லா வாசிகளின் பண்பாட்டினையும், நலனையும் பேணுவதற்காக அங்கு வைத்து வரப்படுகிற சேவைகள் ஆகியவற்றிற்குச் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களிலும் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறவேண்டும்.

(2) முக்கியமாக, அடியிற்கண்ட அலுவல்களைச் செய்வது ஜில்லா அபி விருத்திச் சபையின் கடமையாகும் ; அவ் வலுவல்களாவன :—

(a) மேற்படி ஜில்லாவின் சகலஸ்தல அதிகாரிகளாலும் அடியிற்கண்ட அரசாங்க இலாகாக்களின் நிர்வாக ஆதிக்கத்தின்கீழ் அந்த ஜில்லாவில் இயங்கி வருகிற ஏஜென்ஸிகளாலும் வைத்துவரப்படுகிற சேவைகளுக்கும் அவர்கள் மேற் கொள்ளுகிற சகல அபிவிருத்தித் திட்டங்களுக்கும் சம்பந்தப்படுகிற சகல விஷயங் களிலும் அரசாங்கத்தாருக்கு ஆலோசனை கூறுவது ; மேற்சொன்ன அரசாங்க இலாகாக்கள் அடியிற்கண்டவையாகும் :—

(i) உணவு-விவசாய இலாகா,

(ii) கைத்தொழில்-தொழிலாளர்-கூட்டுறவு இலாகா,

(iii) பொது மராமத்து இலாகா,

(iv) சுகாதாரம்-கல்வி-தல நிர்வாக இலாகா,

(b) அரசாங்கத்தார், ஸ்தல அதிகாரிகள், இலாகா ஏஜென்ஸிகள் ஆகியவர்கள் மேலே சொன்ன சேவைகள் விஷயமாகவும், அபிவிருத்தித் திட்டங்கள் விஷயமாகவும் மேற்கொண்டுள்ள ஏற்பாடுகளின் முன்னேற்றத்தைக் கவனித்து வருவது ;

(c) கீழே சொல்லியுள்ளவைபோல யாதொரு சட்டத்தின் ஷரத்தை அல்லது யாதொரு உத்தரவை நிறைவேற்றுவது சம்பந்தமாக ஜில்லா அபிபிருத்திச் சபைக்கு அரசாங்கத்தார் பிரத்தியேகமாக அனுப்புகிற விஷயங்களில் அரசாங்கத்தா ருக்கு ஆலோசனை கூறுவது :–

(i) மார்கெட்டுகளை பஞ்சாயத்து மார்க்கெட்டுகளெனவும், பஞ்சாயத்து யூனியன் மார்க்கெட்டுகளெனவும் வகைப்படுத்துவதும், ஓர் அதிகார சபையார் மற் றொரு அதிகார சபையாருக்குச் செலுத்தத்தக்க பங்குத் தொகை வீதங்களை நிச்ச யிப்பதும் ;

(ii) சந்தைகளையும், திருவிழாக்களையும் பஞ்சாயத்து சந்தைகள் பஞ்சா யத்துத் திருவிழாக்கள் எனவும், பஞ்சாயத்து யூனியன் சந்தைகள், பஞ்சாயத்து யூனியன் திருவிழாக்கள் எனவும் வகைப்படுத்துவது ;

(iii) (தேசீயப் பெருவழிகள், ராஜ்யப் பெருவழிகள், பெரிய ஜில்லாச் சாலைகள் என அரசாங்கத்தார் வகைப்படுத்தியுள்ள சாலைகள் அல்லாத பொதுச் சாலை களைப் பஞ்சாயத்து யூனியன் சாலைகளெனவும், பஞ்சாயத்து சாலைகளெனவும் வகைப்படுத்துவது ;

(d) சாலை போக்குவரத்து அபிவிருத்தி பற்றிய சகல விஷயங்களிலும் அரசாங்கத்தாருக்கு ஆலோசனை கூறுவது.

ஜில்லா அபிவிருத்திச் சபையின் கூட்டங்கள்

6. (1) ஜில்லா அபிவிருத்திக் கவுன்ஸில் அவசியமாயிருக்கிறபோதெல்லாம் கூட்டம் கூடலாம் ; (அக் கூட்டங்களில் இருக்கவேண்டிய க்வோரம் என்னும் நிர்வாகச் சிற்றெண் உட்பட) அக் கூட்டங்களில் அலுவல் நடத்துவது விஷயமாய் அரசாங்கத்தார் இச் சட்டத்தின்கீழ் நிர்ணயிக்கக்கூடிய நடைமுறை விதிகளை (2), (3) உட்பிரிவுகளின் ஷரத்துக்களுக்குட்பட்டு அவை அனுசரிக்க வேண்டும். ஜில்லா அபிவிருத்திச் சபை ஒரு முறை கூட்டங்கூடுவதற்கும், மறு முறை கூட்டங்கூடுவதற்கும் நடுவில் மூன்று மாதங்களுக்கு மேல் இடையீடு இருத்தலாகாது.

(2) ஜில்லா அபிவிருத்திச் சபை அக்கிராசனர் அல்லது அவர் இராதபோது இது விஷயமாய் அவர் நியமனம் செய்துள்ள யாதொரு அங்கத்தினர் ஜில்லா அபிவிருத்திச் சபையின் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கவேண்டும்.

(3) ஜில்லா அபிவிருத்திச் சபையின் கூட்டமொன்றில் வருகிற சகல விஷயங்களையும், கூட்டத்திற்கு வந்திருந்து வாக்களிக்கிற அங்கத்தினர்களின் பெரும்பான்மையான வாக்குகளின் மூலம் முடிவு செய்யவேண்டும். வாக்குகள் சமமாயிருந்தால், ஜில்லா அபிவிருத்திச் சபையின் அக்கிராசனருக்கு அல்லது அவர் இராதபோது தலைமை வகிப்பவருக்கு இரண்டாவது வாக்கு அல்லது நிர்ணயிக்கும் வாக்கு ஒன்று உண்டு :

ஆனால், ஜில்லா அபிவிருத்திச் சபையின் அங்கத்தினராக அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவர் இருந்தால் அவர் அந்த விவாதங்களில் கலந்துகொள்ள உரிமையுள்ளவராவார் ; அந்த சபையின் கூட்டத்தில் வாக்களிக்க அவருக்கு உரிமையில்லை. அவர் வேறெந்தக் காரியத்துக்காகவும் அச் சபையின் அங்கத்தினராயிருக்கக்கூடாது.

ஜில்லா அபிவிருத்திச் சபையில் காலி ஏற்பட்டிருப்பதுனலேயே அச்சபையின் செயல்கள் நடவடிக்கைகள் செல்திறன் அற்றவை ஆகிவிடாது.

7. ஜில்லா அபிவிருத்திச் சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அந்த ஜில்லா அபிவிருத்திச் சபையில் யாதொரு காலி ஸ்தானம் ஏற்பட்டிருக்கிறது அல்லது அந்த காலி ஸ்தானத்திற்கு யாதொரு அங்கத்தினரை நேமகம் செய்வதில் யாதொரு குறைபாடு இருக்கிறது என்னும் காரணத்தினலேயே செல்திறன் அற்றதெனக் கருதப்பட்டுவிடமாட்டாது.

நிலைக் கமிட்டிகளை நியமிப்பது

8. (1) (a) அரசாங்கத்தார் குறிப்பிடக்கூடிய அதிகாரங்களைச் செலுத்துவதிலும், கடமைகளைச் செய்வதிலும், அலுவல்களை நிறைவேற்றுவதிலும் ஜில்லா அபிவிருத்திச் சபைக்கு உதவி செய்யும் காரியத்துக்காக அடியிற்கண்டவற்றை விவகரிக்க நிலைக் கமிட்டிகளை ஜில்லா அபிவிருத்திச் சபை அமைக்கலாம் ; அவ்வாறு அமைக்கவேண்டுமென அரசாங்கத்தார் உத்தரவிட்டால் அவ்வாறு அமைக்க வேண்டும் :—

(i) உணவு—விவசாயம்,

(ii) கைத்தொழில்—தொழிலாளர்,

(iii) பொது மராமத்து,

(iv) கல்வி,

(v) மதுவிலக்கு உட்பட சுகாதாரம், க்ஷேம நலம் ;

(b) ஜில்லா அபிவிருத்திச் சபையார் தாங்கள் தகுதியெனக் கருதுகிற காரியங்களுக்காக நிலைக் கமிட்டிகள் மேலும் சிலவற்றை அமைக்கலாம்.

(2) (1) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள நிலைக் கமிட்டி ஒவ்வொன்றிலும் ஜில்லா அபிவிருத்திச் சபை அங்கத்தினர்களிலிருந்து அரசாங்கத்தார் நேமகம் செய்கிற எண்ணிக்கை உள்ள கெஜெட் பதிவான அரசாங்க உத்தியோகஸ்தர்கள் இருக்க வேண்டும் :

ஆனால், அரசாங்கத்தார் ஒரே நபரை ஒன்றுக்கு மேற்பட்ட நிலைக் கமிட்டி களுக்கும் நேமகம் செய்யலாம்.

(3) ஜில்லா அபிவிருத்திச் சபையின் இதர அங்கத்தினர்கள் நிர்ணயிக்கப் படக்கூடிய முறையில் நிலைக் கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் :

ஆனால், ஒரே நபர் ஒன்றுக்கு மேற்பட்ட நிலைக் கமிட்டிகளில் அங்கத்தின ராயிருக்கக்கூடாது :

அன்றியும், ஒரு நிலைக் கமிட்டியின் அங்கத்தினராகத் தெரிந்து எடுக்கப்பட் டிருக்கிற ஒரு நபர் வேறு யாதொரு நிலைக் கமிட்டியில் ஓர் அங்கத்தினருக்குப் பதிலாக அந்த அங்கத்தினரின் சம்மதத்துடனும், பரஸ்பரமாய் ஒப்புக்கொள்ளப்படக்கூடிய கால அளவுக்கும் அக் கமிட்டியின் அங்கத்தினராக சேவை செய்ய முன்வரலாம்.

(4) (2) உட்பிரிவின் கீழ் நேமகம் செய்யப்பட்ட அல்லது (3) உட்பிரிவின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைத் தவிர ஜில்லா அபிவிருத்திச் சபைக்கு முன் வருகிற விஷயங்களில் விசேஷ அறிவும் அனுபவமும் உள்ளவரெனத் தாங்கள் கருதுகிற யாதொரு நபர் ஜில்லா அபிவிருத்திச் சபையின் அங்கத்தினராயிராதபோதி லும், அந்த நபரை நிலைக் கமிட்டியொன்றின் அங்கத்தினராக அரசாங்கத்தார் நியமிக்கலாம்; அல்லது நிலைக் கமிட்டி ஒன்றின் அங்கத்தினராகச்சேவை செய்யு மாறு ஜில்லா அபிவிருத்தி சபை அந்த நபரைக் கேட்டுக்கொள்ளலாம் :

ஆனால், எந்த நிலைக் கமிட்டி விஷயமாகவும் அரசாங்கத்தார் அவ்வாறு நியமிக்கிற அங்கத்தினர்களின் எண்ணிக்கை இரண்டிற்கு மேற்படக்கூடாது.

(5) ஜில்லா அபிவிருத்திச் சபையின் அங்கத்தினராயிராமல், நிலைக்கமிட்டி ஒன்றின் அங்கத்தினர்களாயிருப்பவர்கள் நிலைக் கமிட்டியின் கூட்டங்களுக்கு வந்திருக் கவும், அங்கு விவாதங்களில் கலந்து கொள்ளவும் உரிமையுள்ளவர்களாவர்; அத் தகைய கூட்டங்களில் வாக்களிக்க அவர்களுக்கு உரிமையில்லை.

(6) நிலைக் கமிட்டி ஒவ்வொன்றும், ஜில்லா அபிவிருத்திச் சபையின் அங் கத்தினர்களாயிருக்கிற தனது அங்கத்தினர்களிலிருந்து தனக்கெனத் தனியான அக்கிராசனரைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

(7) இப் பிரிவின்கீழ், சந்தர்ப்பத்திற்கேற்ப நேமகம் செய்யப்பட்ட, தெரிந் தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட நிலைக் கமிட்டி அங்கத்தினர்கள் பதவி வகித்து வருவது ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் அற்றுப் போகும்; அந்த நிலைக் கமிட்டியில் அடுத்த வருஷத்துக்கான அங்கத்தினர்கள் அவ்வருஷ முடிவுக்குள் சந்தர்ப் பத்திற்கேற்ப நேமகம் செய்யப்படவேண்டும், தெரிந்தெடுக்கப்படவேண்டும் அல்லது நியமிக்கப்படவேண்டும்; ஆனால், அடுத்த வருஷம் ஆரம்பமாவதற்கு முன் அவர்கள் பதவி வகிக்கத் தொடங்கக்கூடாது.

(8) நிலைக் கமிட்டிகள் செயலாற்றுவதற்கான நடைமுறையை ஜில்லா அபிவிருத்திச் சபை ரெகுலேஷன்கள் மூலம் விதிக்கவேண்டும்.

ஜில்லா அபிவிருத்திச் சபையின் சிப்பந்தியினர்

9. நிர்ணயிக்கப்படக் கூடிய மேல் விசாரணைக்கு உட்பட்டு ஜில்லா கலெக்டர், ஜில்லா அபிவிருத்திச் சபை இச் சட்டத்தின்கீழ் தனக்குள்ள அலுவல்களைச் சித்திகரமாகச் செய்ய அல்லது அதிகாரங் களைச் செலுத்த, யுக்தமெனத் தாம் கருதக்கூடிய உத்தியோ கஸ்தர்களை நியமித்து அவர்களது அலுவல்களை நிச்சயிச் கலாம்.

ஜில்லா அபிவிருத்திச் சபையின் பொது அதிகாரங்கள்

10. இச்சட்டத்தின்கீழ் தனக்குள்ள அலுவல்களைச் செவ்வனே நிறைவேற்றும் காரியத்துக்காக, ஜில்லா அபிவிருத்திச் சபை ஒவ்வொன்றும், தனது அதிகார வரம்புக்குள் அடியிற்கண்டவற்றைச் செய்யலாம் :—

(a) தான் அவசியமெனக் கருதுகிற திட்டங்களை மேற்கொள்ளலாம் ;

(b) தான் அவசியமெனக் கருதுகிற புள்ளி விவரங்களைச் சேகரிக்கலாம்;

(c) அந்த ஜில்லாவிலுள்ள முனிசிபல் கவுன்ஸில்கள், பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றின் செயல்களை ஒழுங்குபடுத்துவது அல்லது அபிவிருத்திச் செய்வது பற்றிய பல்வேறு அம்சங்கள் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களை அல்லது இதர தகவல்களைப் பிரசுரிக்கலாம் ;

(d) யாதொரு முனிசிபல் கவுன்ஸில், பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில், அல்லது பஞ்சாயத்து அதன் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துவது அல்லது அபிவிருத்திசெய்வது சம்பந்தமாக மேற்கொண்ட திட்டங்கள், நிர்ணயிக்கப்படக்கூடிய இதர விஷயங்கள் ஆகியவைபற்றித் தனக்கு வேண்டியிருக்கிற தகவலைக்கொடுக்க வேண்டுமென அந்த முனிசிபல் கவுன்ஸிலுக்கு, பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு அல்லது பஞ்சாயத்துக்கு உத்தரவிடலாம்.

வருஷாந்தர அறிக்கை

11. ஜில்லா அபிவிருத்திச் சபை கடந்த வருஷத்தில் தனது நடவடிக்கைகளைப் பற்றிய சரியானதும் பூரணமானதுமான வருஷாந்தர அறிக்கை ஒன்றை நிர்ணயிக்கப்படக்கூடிய விதத்திலும் ஒவ்வொரு வருஷத்திலும் நிர்ணயிக்கப்படக்கூடிய காலத்திலும் தயாரித்து அதன் பிரதிகளை அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

(2) அரசாங்கத்தார் அத்தகைய அறிக்கைகளையும் அவற்றின்மேல் தங்களது கருத்துக்களையும் சட்ட மன்றத்தின் இரு சபைகளின் முன்பும் வைக்கவேண்டும்.

விவரக் கணக்குகளும் அறிக்கைளும்

12. ஒவ்வொரு ஜில்லா அபிவிருத்திச் சபையும் தனது செயல்கள் விஷயமாய் அரசாங்கத்தார் அவ்வப்போது கேட்கக்கூடிய விவரக் கணக்குகளையும் புள்ளிவிவரங்களையும் இதர தகவல்களையும் அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும்.

நல்ல எண்ணத்துடன் எடுத்துக்கொண்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு

13. இச்சட்டத்தை அனுசரித்து நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்ய உத்தேசிக்கப்பட்ட எக்காரியம் விஷயமாகவும் ஜில்லா அபிவிருத்திச் சபை ஒன்றின் அல்லது அதன் நிலைக் கமிட்டி ஒன்றின் யாதொரு அங்கத்தினர் அல்லது உத்தியோகஸ்தர் மீது வியாஜ்ஜியம் அல்லது இதர சட்ட நடவடிக்கைகள் எதுவும் தொடரக்கூடாது.

விதிகள் செய்ய அதிகாரம்

14. (1) இச் சட்டத்தின் காரியங்களை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்தார் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக விதிகள் செய்யலாம்.

(2) முக்கியமாகவும், முந்திய அதிகாரத்தின் பொதுத் தன்மைக்குப் பாதகமில்லாமலும், அவ் விதிகளில் அடியிற்கண்ட விஷயங்கள் எல்லாவற்றிற்காகவும் அல்லது அவற்றில் எதற்காகவாகிலும் ஏற்பாடு செய்திருக்கலாம் ; அவ் விஷயங்களாவன :—

(a) ஜில்லா அபிவிருத்திச் சபை அங்கத்தினர்களின் படிகள் :

(b) ஜில்லா அபிவிருத்திச் சபை, முனிசிபல் கவுன்ஸிலிடமிருந்து, பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலிடமிருந்து அல்லது பஞ்சாயத்திடமிருந்து, தகவல் கேட்கக்கூடிய விஷயங்கள் ;

(c) ஜில்லா அபிவிருத்திச் சபையின் வருஷாந்தர அறிக்கையை இன்ன விதத்திலும் இன்ன கால அளவுக்குள்ளும் தயாரித்து அரசாங்கத்தாருக்கு அனுப்ப வேண்டுமென்பது ;

(d) ஜில்லா அபிவிருத்திச் சபை இன்ன விவரக் கணக்குகளேயும் தகவலேயும் அரசாங்கத்தாருக்கு அனுப்ப வேண்டுமெனக் கேட்கலாமென்பது ;

(e) ஜில்லா அபிவிருத்திச் சபை ஒன்றின் உத்தியோகஸ்தர்களே வேலேக்கு எடுக்கும் முறையும், அந்த உத்தியோகஸ்தர்களின் ஊழிய நிபந்தனேகளும் ஷரத்துக் களும் ;

(f) ஜில்லா அபிவிருத்திச் சபைக் கூட்டங்களேயும் அக் கூட்டங்களே நடத்துவது பற்றிய நடைமுறையையும் ஒழுங்குபடுத்துவது ;

(g) நிலேக் கமிட்டிகள் இன்ன முறைப்படியும் இன்ன காரியங்களுக்காகவும் நியமிக்கப்படலாமென்பதை முறைப்படுத்துவது ;

(h) நிர்ணயிக்கப்படவேண்டிய அல்லது நிர்ணயிக்கப்படக்கூடிய வேறு யாதொரு விஷயம்

(3) இச் சட்டத்தின்படிச் செய்யப்பட்ட சகல விதிகளும் விளம்பரங்களும், அவை செய்யப்பட்ட பிறகு கூடிய சீக்கிரத்தில் சட்டமன்றத்தின் இரு சபைகளின் முன்பும் வைக்கப்படவேண்டும். மேலும் அவை, சட்டசபை அதே கூட்டத்தொடரிலாவது ஒன்றுக்கு மேற்பட்டக் கூட்டத் தொடர்களிலாவது வாஸ்தவமாகச் சபை கூடுகிற பதினன்கு தினங்களுக்குள் திருத்தங்கள் அல்லது ரத்து மூலமாகச் செய்யக் கூடிய மாறுதல்களுக்கும் உட்பட்டவையாகும்.

மதராஸ் ஜில்லா அபிவிருத்திகள் சட்டம் முற்றிற்று.

மதராஸ் ஜில்லா அபிவிருத்தி சபைகள் சட்டத்தின் சுருக்கம்

1. இந்த சட்டம் அமுலுக்கு வரும் தேதி.
2. ஜில்லாக்கள்.
3. ஜில்லா அபிவிருத்தி சபையும் அதன் மெம்பர் (அங்கத்தினர்) களும்
4. ஜில்லா அபிவிருத்தி சபையின் அலுவல் கள்.
5. ஜில்லா அபிவிருத்தி சபையின் கூட்டங் களும், அதன் கார்யங்கள் அல்லது நட வடிக்கைகளின் செலாவணி.
6. ஜில்லா அபிவிருத்தி சபையின் ஸ்டேன் டிங் (நிலேயான) கமிட்டிகள்.
7 ஜில்லா அபிவிருத்தி சபையின் போது அதிகாரங்களும் - வருடாந்திர அறிக்கை களும்.
8. விதிகள்.

இந்த சட்டத்தின் சுருக்கம் இச்சட்டம் அமுலுக்கு வரும் தேதி

1. இந்த சட்டம் மதராஸ் கவர்ன்மெண்டாரால் 1-12-59ல் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

ஜில்லாக்கள்

2. மதராஸ் நீங்கலாக இப்போது இருக்கும் 12 ஜில்லாக்களே 21 ஜில்லா அபிவிருத்தி சபைகளாக பிரிக்கப்பட்டன. ஆனல் ரிவின்யூ விஷயங்களுக்கு 12 ஜில்லாக்கள் தான் இருக்கும். 511, 512 பக்கங்களே பார்க்கவும்.

3. ஜில்லா அபிவிருத்தி சபையின் மெம்பர்கள்.

ஜில்லா அபிவிருத்தி சபையும் அதின் மெம்பர் (அங்கத்தினர்) களும்.

(1) ஜில்லா கலெக்டர் தன் உத்தியோக ஹோதாவில் தனிப்பட்ட மெம்பர். மேலும் சேர்மேன் (அக்ராசனர்) ஆகவும் இருப்பார்.

(2) பார்லிமெண்டு (மக்கள் சபை) மதராஸ் அசெம்பிளி (ராஜ்ய சட்ட மன்றம்) மெம்பர்களும் (அங்கத்தினர்களும்).

(3) ஜில்லாவிலுள்ள பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் சகல சேர்மேன் (அக்ராசனர்)களும்.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் அமைக்கப்படும் வரையில் அந்த பிரதேசங்களில் உள்ள பஞ்சாயத்துகளின் தலைவர்களால் நிர்ணயிக்கப்பட்ட முறையில் தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களும் (514, 515, 516 பக்கங்களை பார்க்கவும்.)

(4) ஜில்லாவிலுள்ள சகல முனிசிபல் சேர்மேன் (அக்ராசினர்)களும்.

(5) ஜில்லா சென்ட்ரல் கூட்டுறவு பாங்கிகளின் பிரசிடெண்டுகளும்.

(6) நியமிக்கப்பட்ட கெஜட் உத்தியோகஸ்தர்களும் ஆக இருப்பார்கள் (பிரிவு - 4.)

ஜில்லா அபிவிருத்தி சபையின் அலுவல்கள்

4. (1) பஞ்சாயத்துகள் (2) பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்கள் (3) பட்டண பிரதேசங்கள் (4) முனிசிபல் கவுன்சில்கள் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு குறித்து ஜில்லா அபிவிருத்தி சபை கவர்ன்மெண்டுக்கு (அரசாங்கத்திற்கு) ஆலோசனை கூறும். அவைகளை ஜில்லா கலெக்டர் நிறைவேற்ற வேண்டும் என்கிற கட்டாயம் கிடையாது.

முக்கியமாக (1) உணவு - விவசாயம் (2) கைத்தொழில் தொழிலாளர் - கூட்டுறவு (3) பொது மராமத்து (4) கல்வி (5) சுகாதாரமும் க்ஷேம நலமும் அலுவல்களும் செய்வது ஜில்லா அபிவிருத்தி சபையின் கடமையாகும்.

மேலும் (1) மார்கெட்டுகளை பஞ்சாயத்து மார்கெட்டுகள் என்றும் பஞ்சாயத்து கவுன்சில்கள் மார்க்கெட்டுகள் என்றும் பிரிக்கலாம். (2) சந்தைகள் (3) திருவிழாக்கள் (4) ரோட்டுகள் (5) அவைகளின் போக்குவரத்து ஆகியவைகளை குறித்தும் பிரிவினை செய்யலாம். (பிரிவு 5.)

ஜில்லா அபிவிருத்தி சபையின் கூட்டங்களும். அதன் காரியங்கள் அல்லது நடவடிக்கைகளின் செலாவணி

5. ஜில்லா அபிவிருத்தி சபைகள் அடிக்கடிக்கும் கூடலாம். குறைந்த 3 மாதத்திற்கு ஒரு முறையாவது கூடவேண்டும். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு அக் கூட்டங்களில் பேச உரிமையுண்டு. ஆனல், வோட்டு செய்ய உரிமை இல்லை, (பிரிவு-6.)

ஒரு மெம்பர் ஸ்தானம் காலியாக இருப்பதினுலேயே அந்த கூட்டத்தின் காரியங்கள் செலாவணியாகாமல் போகாது. அவை செல்ல தக்கினவைகளே ஆகும் (பிரிவு - 7.)

ஜில்லா அபிவிருத்தி சபையின் ஸ்டேண்டிங் (நிலையான) கமிட்டிகள்

6. இவைகளை "முக்கியமாக..." என்று சொல்லப்பட்ட 5 விஷயங்களுக்கும் 5 நிலையான கமிட்டிகளை ஏற்படுத்தலாம். (பிரிவு - 8, பக்கம் 518.)

ஜில்லா அபிவிருத்தி சபையின் பொது அதிகாரங்களும் வருஷாந்திர அறிக்கைகளும்

7 ஸ்தல ஸ்தாபனங்களாகிய பஞ்சாயத்துகள் முதலியவற்றின் பொது விஷயங்களை ஜில்லா அபிவிருத்தி சபை சேகரிக்க வேண்டும். (பிரிவு - 10.) அவைகளை ஒரு வருஷாந்திர அறிக்கையாக கோர்த்து அரசாங்கத்துக்கு அனுப்ப வேண்டும் (பிரிவுகள் - 11, 12.) இந்த ஜில்லா அபிவிருத்தி சபை செய்யும் காரியங்களுக்கு அங்கத்தினர்கள் ஜவாப்தாரிகள் அல்ல. (செக்ஷன் - 13.) அதற்கு ஜில்லா அபிவிருத்தி சபையே பொறுப்பாளியாகும்.

விதிகள்

8. கவர்ன்மெண்டு இந்த ஆக்டின்படிக்கு பிரிவு 14-இல் கண்ட விஷயங்களுக்கு விதிகள் செய்யலாம்.

ஜில்லா அபிவிருத்தி சபைகள் சட்டத்தின் சுருக்கம் முற்றிற்று.

மதராஸ் ஜில்லா அபிவிருத்தி சபைகளின் சட்டம் 1958 ஆகிய மதராஸ் 18-வது சட்டம் ஏதுக்களையும் நோக்கங்களையும் பற்றிய விவரணம்.

1. இப்போதுள்ள ரெவின்யு ஜில்லாக்களை அபிவிருத்தி ஜில்லாக்களாக வரையறுக்க வேண்டுமென்பதும், அரசாங்க இலாகா ஏஜென்ஸிகளுக்கு உள்ளூர் மக்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் ஆலோசனை கூறுவதற்காக நிலையான ஸ்தாபனமாக அத்தகைய அபிவிருத்தி ஜில்லா ஒவ்வொன்றுக்காகவும் ஜில்லா அபிவிருத்திச் சபை ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்பதும் சென்னை நகராண்மைக் கழகம் உட்பட, சென்னை ராஜ்ய தல நிர்வாக சீர்திருத்தம் பற்றிய வெள்ளை அறிக்கையில் அரசாங்கத்தார் செய்துள்ள தற்காலிக முடிவுகளில் ஒன்றாகும். திட்டக் கமிஷன் நிறுவியுள்ள திட்ட ஏற்பாட்டுக் கமிட்டியும் தல நிர்வாக மூன்று பிரிவு திட்டத்தின் பாகமாக ஜில்லா அளவில் அத்தகைய ஆலோசனைச் சபை ஒன்றை அமைக்க வேண்டுமென சிபாரிசு செய்திருக்கிறது. அபிவிருத்தி ஜில்லாக்களை தற்காலிகமாக வரையறுப்பதற்கான உத்தேசங்கள் வெள்ளை அறிக்கையில் கண்டிருக்கின்றன.

2. இப்போதிருக்கிற ஜில்லா போர்டுகளில் உள்ளவர்களே அனேகமாய் ஜில்லா அபிவிருத்திச் சபைகளிலும் இருப்பார்கள். ஜில்லாவில் உத்தேசித்துள்ள பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில்களின் அக்கிராசனர்களும் இச் சபைகளில் இருப்பார்கள். இப்போது ஜில்லாக்களில் செயல்பட்டு வருகிற ஜில்லா திட்ட போர்டுகள் உட்பட சில ஆலோசனைச் சபைகளை எடுத்துவிட்டு அவற்றின் அலுவல்களை யெல்லாம் ஜில்லா அபிவிருத்திச் சபைகளுக்கு மாற்ற உத்தேசித்திருக்கிறது. ஜில்லா அபிவிருத்திச் சபைகள் தங்கள் அதிகாரங்களைச் செலுத்துவதிலும் தங்கள், கடமைகளையும், அலுவல்களையும் செய்வதிலும் அவைகளுக்கு உதவியாயிருக்க நிலையான கமிட்டிகள் அமைக்கப்படும்.

3. இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதே இம் மசோதாவின் உத்தேசமாகும்.

நிதி யாதாஸ்து

இம் மசோதாவின் 9-வது பகுதி ஜில்லா அபிவிருத்திச் சபை தன் அலுவல்களை நிறைவேற்றுவதில் அதற்கு உதவி செய்வதற்காக உத்தியோகஸ்தர்களை நியமிக்க கலெக்டருக்கு அதிகாரம் கொடுக்கிறது. ஜில்லா அபிவிருத்திச் சபை அங்கத்தினர்களுக்கு படிகள் கொடுப்பது விஷயமாய் விதிகள் செய்ய 14 (2) (a) பகுதி ஏற்பாடு செய்கிறது. எனவே, இந்தச் சட்ட நிரூபணத்தினால் ராஜ்ய சஞ்சித நிதியிலிருந்து செலவு செய்ய வேண்டி வருகிறது. எனினும், இந்தத் திட்டத்தை நிர்வகிப்பது சம்பந்தமாய் ஏற்படக்கூடிய செலவைப் பற்றி இத் தசையில் துல்லியமாய் மதிப்பிடுவது சாத்தியமல்ல.

அதிகாரம் பிரித்துக் கொடுப்பது சம்பந்தமான சட்ட நிரூபணம் பற்றிய யாதாஸ்து

இம் மசோதாவின் சில ஷரத்துக்களை இன்ன முறைப்படியும் இன்னவிதப்படியும் அமுலுக்குக் கொண்டுவருவது என்பதை அதன்கீழ் பொருத்தமான விதிகள் செய்வது மூலமாக நிர்ணயிப்பதற்கு இம் மசோதவின் 4 (1) (c), (3) (b); 6 (1), 8 (3), 9, 10 (d), 11, 14-வது பகுதிகள் அரசாங்கத்தாருக்கு அதிகாரமளிக்கின்றன. 8 (8) பகுதியானது நிலையான கமிட்டிகள் செயல்படுவதற்கான நடைமுறையை ஒழுங்குமுறைகள் மூலம் விதிப்பதற்கு ஜில்லா அபிவிருத்திச் சபைக்கு அதிகாரமளிக்கிறது. பிரித்துக்கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சாதாரண மானவை.

Jyothi Printers, 7, K. N. Agraharam St., Madras-1.

மதராஸ் பஞ்சாயத்துகள்

நாட்டுத் தொழில்களை

அபிவிருத்தி

செய்ய வேண்டும்.

அயல் நாட்டு சாமான்களை

வாங்கக் கூடாது.